லெனினியமும் தேசிய இனப் பிரச்சினையும்

லெனினியமும் தேசிய இனப் பிரச்சினையும்

சோ. க. க. ம. க. யின்
மார்க்சிய-லெனினிய
ஆராய்ச்சிக் கழகம்

SEELAN BOOKS
SIGNATURE
NORWAY

நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்,
41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்,
சென்னை-600 098.

முதற்பதிப்பு : டிசம்பர், 1985
உரிமை பதிவு

தமிழாக்கம் :
கே. ராமநாதன்
எல். ஜி. கீதானந்தன்
உமாதாணு

Tamil Translation of
LENINISM AND THE NATIONAL QUESTION
by
A Group of Authers

Original Published by
PROGRESS PUBLISHERS, MOSCOW

விலை : ரூ. 45-00

அச்சிட்டோர்:
பாவை பிரிண்டர்ஸ் பிரைவேட் லிமிடெட்,
சென்னை-600 014.

பொருளடக்கம்

பக்கம்

முன்னுரை ... 1

அத்தியாயம் ஒன்று—தேசங்கள் மற்றும் தேசிய உறவுகள் பற்றிய மார்க்சிய-லெனினிய போதனை ... 15

1. தேசங்கள் பற்றிய தத்துவம் ... 16
2. தேசிய இனங்கள் மற்றும் தேசிய இனக் குழுக்கள் ... 69
3. தேசிய இனம் ... 81
4. தேசிய உறவுகள் பற்றிய தத்துவம். சர்வதேசியமும், தேசியமும் ... 89
5. தேசங்களினதும் தேசிய உறவுகளினதும் வளர்ச்சிக்கான புறநிலை அடிப்படைகள் ... 126

பாகம் 1

முதலாளித்துவ சமுதாயத்தில் தேசிய இனப் பிரச்சினை ... 141

அத்தியாயம் இரண்டு—தொழிலாளி வர்க்கமும் தேசியப் பிரச்சினையும். முதலாளித்துவத்தின் கீழ் அதன் தீர்விற்கான வரம்புகள் ... 163

அத்தியாயம் மூன்று—முதலாளித்துவ உலகில்,முதலாளித்துவ பொது நெருக்கடியின் முதலாவது, இரண்டாவது கட்டங்களில் தேசியப் பிரச்சினையும் அதன் தீர்விற்கான போராட்டமும் ... 206

1. அக்டோபர் புரட்சிக்குப் பிந்திய கட்டத்தில் தேசிய மற்றும் காலனிப் பிரச்சினைகளின் தத்துவம் மீதான லெனின் பணிகள் ... 206

2. அக்டோபர் புரட்சியின் வெற்றி. முதலாளித்துவ உலகில் தேசியப் பிரச்சினையின் உள்ளடக்கத்தில் ஏற்பட்ட மாற்றங்கள் ... 226

3. சோவியத் யூனியனில் சோஷலிச நிர்மாணமும், முதலாளித்துவத்தின் கீழ் தேசியப் பிரச்சினையின் உள்ளடக்கத்தில் ஏற்பட்ட மாற்றங்களும் ... 268

4. முதலாளித்துவத்தின் பொது நெருக்கடியின் இரண்டாவது கட்டத்தில் தேசங்கள், தேசிய உறவுகளின் வளர்ச்சியிலான சிறப்பு அம்சங்கள் ... 299

பாகம் 2

தேசியப் பிரச்சினைக்குத் தீர்வு, சோஷலிசத்தின் கீழ் தேசங்களின் வளர்ச்சியும் சங்கமிப்பும் ... 329

அத்தியாயம் நான்கு—சோஷலிசத்தின் கீழ் தேசங்களும் தேசிய இனங்களும் ... 344

1. தேசங்களின் சோஷலிச வளச்சியில் தீர்மானகரமான அம்சங்கள் ... 345

2. சோஷலிச தேசங்களின் அம்சங்களும் அவற்றின் வளர்ச்சிப் போக்குகளும் ... 356

3. சர்வதேசியம்-தேசங்களின் சோஷலிஸ்டு வளர்ச்சிக்குரிய சித்தாந்த அடிப்படை ... 367

அத்தியாயம் ஐந்து—சோஷலிஸ்டு தேசங்கள், தேசிய இனங்களின் வளர்ச்சி மற்றும் சங்கமிப்பு தொடர்பாக அடிப்படையாயுள்ள பொருளாதாரக் காரணிகள் ... 375

1. சோஷலிசத்தின்—பொருளாயத தொழில்நுட்ப அடித்தளத்தினைக் கட்டி வரும் தேசங்கள் இடையிலான பொருளாதார ஒத்துழைப்பு ... 376
2. வளர்ச்சியடைந்த சோஷலிஸ்டு சமுதாயத்தில் தேசங்கள், தேசிய இனங்கள் இடையே பொருளாதார பந்தங்கள் மேலும் வலுப்படுதல் ... 390
3. தேசங்களின் வளர்ச்சி மற்றும் உலக சோஷலிஸ்டு கூட்டமைப்பினுள் சங்கமிப்பதற்குமான பொருளாதார அடிப்படைகள் ... 400

அத்தியாயம் ஆறு—சோஷலிசத்தின்கீழ் தேசிய அரசு ... 407

1. தேசிய அரசுப் பிரச்சினையில் லெனினது தலைமை ... 413
2. லெனினியமும் சோஷலிஸ்டு அரசுகள் இடையிலான உறவுகளும் ... 446

அத்தியாயம் ஏழு—சோஷலிசமும் தேசியக் கலாசாரங்களின் பரஸ்பர செல்வாக்கும் அவை செழுமையுறலும் ... 467

1. கலாசார வளர்ச்சியும் தேசியக் கலாசாரமும் ... 467

2. சோஷலிஸ்டு தேசியக் கலாசாரங்களின் வளர்ச்சியும் நல்லிணக்கமும் ... 477

3. தேசியக் கலாசாரத்தின் உருவம் மற்றும் உள்ளடக்கத்தின் இயக்கவியல் ... 490

4. தேசிய மற்றும் சர்வதேசியத் தகவல் போக்குவரத்து மொழிகள். கலாசார வளர்ச்சியிலும் தேசங்களின் நல்லிணக்கத்திலும் அவற்றின் ஸ்தானம் ... 499

அத்தியாயம் எட்டு—சோஷலிஸ்டு தேசபக்தியும் சர்வதேசியக் கல்வியும் ... 518

1. சோஷலிஸ்டு தேசபக்தியின் சர்வதேச சாரம் ... 519

2. சர்வதேசியக் கல்வி போதனையில் பிரதான போக்குகள் ... 533

3. தேசங்கள், வர்க்கங்கள் மற்றும் சமுதாயப் பிரிவுகளின் தனி இயல்புகளும் சர்வதேசியக் கல்வி மீதான அவற்றின் உறவுகளும் ... 552

அத்தியாயம் ஒன்பது—சோவியத் மக்கள்—ஒரு புதிய வரலாற்று சமுதாயம் ... 563

1. தேசங்கள் தேசிய இனங்களின் சமூக மற்றும் சர்வதேசிய ஒற்றுமை-சோஷலிஸ்டு சமுதாயத்தின் முக்கியமான புறநிலை நியதி ... 565

2. இன்றைய கட்டத்தில் சோவியத் மக்கள் ... 573

பாகம் 3

தேசியப் பிரச்சினையும் புரட்சி இயக்கமும் ... 592

அத்தியாயம் பத்து—உலக சோஷலிஸ்டு அமைப்பும் தேசியப் பிரச்சினையின் உள்ளுறை மீதான அதன் செல்வாக்கும் ... 656

1. சர்வதேசியவாதம்—சோஷலிஸ்டு நாடுகளின் மக்களினங்கள் இடையிலான உறவுகளை நிர்ணயிக்கும் சமூகக் காரணி ... 656
2. நவீன உலகில் தேசங்கள், தேசிய உறவுகளின் வளர்ச்சிமீது உலக சோஷலிஸ்டு அமைப்பு வகிக்கும் செல்வாக்கு ... 719

அத்தியாயம் பதினொன்று—சர்வதேசத் தொழிலாளி வர்க்க இயக்கமும் வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளில் தேசியப் பிரச்சினையும் ... 749

1. உலகப் புரட்சி இயக்கத்தில் தொழிலாளி வர்க்க இயக்கமும் தேசியப் பிரச்சினையும் ... 749
2. முதலாளித்துவ நாடுகளில் தேசியப் பிரச்சினை கடுமையுறல் ... 764
3. தொழிலாளி வர்க்கத்தின் சர்வதேச ஒற்றுமைக்கான போராட்டம் ... 789

அத்தியாயம் பனிரெண்டு—தேச விடுதலை இயக்கத்திலும் வளர்முக நாடுகளிலுமான தேசியப் பிரச்சினை ... 802

1. இன்றைய தேசிய விடுதலைப் புரட்சியில் தேசிய சமூக அம்சங்களின் தொடர்பாடு ... 802

2. தேசிய ஒருமைப்பாட்டு நடப்புகள் ... 824

அத்தியாயம் பதின்மூன்று—தேசியப் பிரச்சினை மீதான சித்தாந்தப் போராட்டம் ... 860

1. தேசியப் பிரச்சினைக்கு இரு நேர் எதிரான அணுகு முறைகள் ... 860

2. பாட்டாளி வர்க்க சர்வதேசியத்தின் வெல்லற்கரிய சக்தியும் இதனை விமர்சிப் போரின் உதவாக்கரைத்தனமும் ... 885

முடிவுரை ... 912

முன்னுரை

ஏகாதிபத்திய சகாப்தத்திலும், சோஷலிசத்திற்கு மாறிச் செல்லும் சகாப்தத்திலும், காணப்பெறும் மனிதகுல வரலாறு, லெனினிய தத்துவத்துடனும், நடைமுறையுடனும் நெருக்கமாக பிணைக்கப்பட்டுள்ளது. சமூகத்தின் பல பிரச்சினைகளுக்கு மத்தியில், தேசங்களினதும், தேச உறவுகளினதும் வளர்ச்சி ஒரு பிரதான இடத்தை பெற்றுள்ளது. அப்பிரச்சினையின்பால் லெனின் தன்னை முழுமையாக அர்ப்பணித்துக் கொண்டார். அவரது போதனையின் தீர்மானகரமான செல்வாக்கின்கீழ், அப்பிரச்சினை இன்னமும் தீர்வுகாணப்பட்டு வருகின்றது. தேசியப் பிரச்சினையின் தீர்விற்கான நடைமுறை ரீதியான வழிவகைகளையும், தத்துவ பூர்வமான அணுகுமுறையினையும், அவரது பேராற்றல் நிறைந்த மேதைமை, தொழிலாளி வர்க்கத்திற்கு எடுத்துக் காட்டியது.

கார்ல் மார்க்ஸ், பிரெடரிக் எங்கெல்சின் கருத்துக்களை ஒருவிரிவான போதனையாக லெனின் வளர்த்தார். தேசியப் பிரச்சினை மீதான சர்வதேச தொழிலாளி வர்க்கத்தினதும், கம்யூனிஸ்ட் இயக்கத்தினதும் கொள்கை மற்றும் திட்டத்திற்கான, விஞ்ஞான பூர்வமான கோட்பாடுகளை அவர் வரையறுத்தார். புதிய சரித்திர ரீதியான சூழ்நிலைமைகளில், தொழிலாளி வர்க்கத்தின் வர்க்கப் போராட்டம், தேசிய ஒடுக்குமுறைக்கு எதிரான போராட்டத்துடனும், சோஷலிசத்திற்கான போராட்டத்துடனும், ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலைக்கான ஏகாதிபத்திய எதிர்ப்பு போராட்டத்துடனும் இணையும் எனும் கருத்தினை லெனின் நிலைநாட்டினார்.

தேசங்கள் மற்றும் தேசிய உறவுகள் பற்றிய லெனினது போதனை, சமுதாய வளர்ச்சிவிதிகள், மக்களின் உள்ளார்ந்த வாழ்க்கை, அவர்களின் பரஸ்பர உறவுகள் ஆகியவை பற்றிய ஒரு விரிவான ஆய்வின்மீது உருவாக்கப்பட்டிருக் கிறது. தேசங்கள் மற்றும் தேசிய உறவுகள் பற்றிய அவரது பிரேரணைகள், மார்க்சிய-லெனினிய விஞ்ஞானத் தின் பகுதியாக இருக்கின்றன. தனிப்பட்ட மக்களினதும், மனிதகுலம் முழுமையினதும் வாழ்க்கையில் தோன்றும் பிரச்சினைகளின் தீர்வின்மீது, அவை ஒரு பிரம்மாண்டமான செல்வாக்கைச் செலுத்துகின்றன. தொழிலாளி வர்க்க இயக்கத்தின் மிக உறுதிவாய்ந்த சர்வதேச பிணைப்பாக மார்க்சிய தத்துவம் விளக்குகிறது என்று, 1885-ல் எங்கெல்ஸ் குறிப்பிட்டார்.

தேசங்கள் மற்றும் தேசிய உறவுகள் பற்றிய லெனினது போதனை, விஞ்ஞான பூர்வமான அடிப்படையையும், வர்க்க திசையமைவையும் கொண்டதாகும். ''தொழிலாளிவர்க்க கண்ணோட்டத்திலிருந்து எழும் ஒரு தேசியத் திட்டம்'' * என்று அதனை லெனின் வர்ணித்தார்.

மார்க்சிய-லெனினியக் கட்சிகளின் திட்டத்திலும், கொள்கையிலும் ஓர் உண்மையை கணக்கிலெடுத்துக் கொள்ள வேண்டும். அது என்ன? தேசிய சர்வதேசிய இயக்கங்கள் மிகப் பல மட்டங்களில் நிகழ்கின்றன. சமுதாயத்தின் அனைத்துத் துறைகளையும் சார்ந்தே அவை இருந்திடவேண்டும் என்பதே அவ்வுண்மை. தேசியப் பிரச்சினையின் தீர்விற்கு தேவைப்படுவதென்ன என்பதை லெனின் தெளிவுபடுத்தியுள்ளார். சோஷலிஸ்ட் கண்ணோட் டத்தை அடிப்படையாகக்கொண்ட, ஒரு தெளிவான அணுகு முறையும், தீர்வும் அதற்குத்தேவை என்பதை அவர் எடுத்துக் காட்டியுள்ளார். தேசியப் பிரச்சினையின் அனைத்து பகுதி களிலும் அதன் முன்னேற்றத்திற்காக தொழிலாளி வர்க்கம் போராடியாக வேண்டும். தேசங்கள் மற்றும் தேசிய உறவு

* வி. இ. லெனின், ''நூல் திரட்டு'', தொகுதி 20, பக்கம் 41.

களுடன் சம்பந்தப்பட்ட அனைத்து புறவயச் சூழ்நிலைகளையும் கணக்கிலெடுத்துக் கொள்ள வேண்டும். பொருளாதாரத்தின் மீதான அவற்றின் பிரதிபலிப்புகள், வர்க்கங்களின் கொள்கைகள், கட்சியின் வாழ்க்கைமுறை, அரசாங்க யந்திரம், வர்க்க உணர்வு, கலாசாரம், மனோநிலை, அன்றாட வாழ்க்கை முறை, மக்களது பாரம்பர்யங்கள் ஆகிய அனைத்தையும் கணக்கிலெடுத்துக் கொள்ளவேண்டும். *

அனைத்து மார்க்சிய-லெனினிய விஞ்ஞானங்களைப் போன்றே, தேசங்கள் மற்றும் தேசிய உறவுகள் பற்றிய லெனினது போதனையும், ஒரு படைப்பாற்றல்மிக்க அணுகு முறையின் மூலம் சிறப்புற்று திகழ்கின்றது. அறிவார்ந்த மார்க்ஸ், எங்கெல்சினது கோட்பாடான மார்க்சியம் ஒரு வாழும் தத்துவமாகும்—அது ஒரு வெற்றுச் சூத்திரமல்ல—ஆனால் செயலுக்கோர் வழிகாட்டியாகும்—என்பதை மனதில் கொண்ட லெனின் காலகட்டங்களின் விசேட கடமைகளுடன் அதனை இணைப்பதில் என்றுமே அசட்டையாக இருந்ததில்லை. வரலாற்றில் நிகழும் ஒவ்வொரு புதிய திரும்பு முனைக்கு ஏற்ப' தோன்றும் மாற்றங்களுக்கு ஏற்ப "_மைகளை வரையறுப்பதில், அவர் என்றுமே தவறியதில்லை.

கடந்த ஓர் அரை நூற்றாண்டிற்கும் மேலான காலம் அத்தகைய ஒரு திரும்புமுனையாக இருந்து வந்துள்ளது. உலகப் புரட்சிகர இயக்கத்தின் அதிதீவிர வளர்ச்சி, சோஷலிசத்தை நோக்கிய மாற்றம், விஞ்ஞான தொழில்நுட்பப் புரட்சி, நவீன சமுதாயம் சர்வதேசமயமாகி வருதல் ஆகியவை மக்களின் கதி விதியில் பல அம்சங்களை மாற்றியமைத்துக் கொண்டிருக்கின்றன. எனவே, சமுதாயத்தின் புரட்சிகர மாற்றத்தின் விதிகளை செயல்படத் தூண்டு

* வி.இ. லெனினது "நூல்திரட்டு" காண்க. தொகுதி 19, பக்கங்கள் 91, 115, 116, 118, 243; 249; 428, 429; தொகுதி 20—பக்கங்கள் 22, 34-35, 36; தொகுதி 19—பக்கங்கள் 504, 539, 540, 541; தொகுதி 20—பக்கங்கள் 224, 396, 400, 411; தொகுதி 19—பக்கம் 499.

வதற்கேற்ப மார்க்சிய-லெனினியம், தேசங்கள் மற்றும் தேசிய உறவுகள் பற்றிய ஒரு ஆய்வினை மிகப்பெருமளவிற்கு மேற்கொண்டுள்ளது. ஏனென்றால், பொதுவாக தேசங்களுக் கிடையிலான தேசியப் பிரச்சினைகள், தேசிய உறவுகளை, நடைமுறை ரீதியாகக் கொண்டுவரவில்லையானால், தீவிர மான சமுதாய மாற்றம் நினைத்துக்கூட பார்க்க முடியா தாகும்.

தேசியப் பிரச்சினையின் தீர்வுபற்றிய, தேசங்கள் மற்றும் தேசிய இனங்களை ஒன்றுபடுத்துவதுபற்றிய, அவற்றின் வளர்ச்சி பற்றிய தத்துவமும், நடைமுறையும் என்ற விஷயத்தில், லெனினது பங்கு மகத்தானதாகும். தேசியத் திற்கும், சர்வதேசியத்திற்கும் உள்ள உறவு, வர்க்கத்திற்கும் தேசியத்திற்குமுள்ள உறவு சமுதாயத்தில் தேசங்கள் மற்றும் தேசிய உறவுகள் ஆகியவற்றின் இடத்தையும், பாத்திரத் தையும் மறுத்துரைக்கவியலாத அளவு நுட்பத்துடன் லெனின் எடுத்துக்காட்டியுள்ளார். ஏகாதிபத்திய சகாப்தத் தில் வர்க்கப் போராட்டங்களும், தொழிலாளிவர்க்கப் புரட்சிகளும் நிகழ்ந்துகொண்டிருந்தநேரத்தில், முதலாளித் துவத்திலிருந்து சோஷலிசத்திற்கு கடந்துசெல்லும் நேரத் தில், அவை மிகமிக உச்சஸ்தாயியில் இருந்தன. சகாப்த தின் உள்ளடக்கத்துடனும், அவர்களது நாட்டி விசேட அம்சங்களுடனும், வளர்ச்சிக் கட்டத்துடனும் தேசிய உறவுகளை இணைப்பதற்கு, தொழிலாளி வர்க்கத் திற்கும், அதன் கட்சிகளுக்கும் அவருடைய போதனை இன்னமும் தத்துவார்த்த ஆயுதமாக திகழ்கின்றது. நடை முறை ரீதியான வழிகாட்டியாக இன்னமும் உதவிக்கொண் டிருக்கின்றது. சமுதாயமானது முன்னேற்றம், சோஷலிசம் ஆகியவற்றை நோக்கிச் செல்ல வழி சமைக்கின்றது.

தேசங்கள் மற்றும் தேசிய உறவுகள் பற்றிய, தேசியப் பிரச்சினையில் முதலாளித்துவத்தின் இருவகை போக்குகளைப் பற்றிய, தொழிலாளிவர்க்க சர்வதேசியத்தின் வடிவங்கள் மற்றும் உள்ளடக்கம் பற்றிய (தேசங்கள் மற்றும் தேசிய உறவுகள் பற்றிய போதனையின் இதர பல அம்சங்களைப்

போன்றே) லெனினது கொள்கை, சர்வதேச தொழிலாளி வர்க்க மற்றும் கம்யூனிஸ்ட் இயக்கத்தின் ஆதாரநெறி, போர்த்தந்திரங்கள் வரைவதில் மிகவும் அடிப்படையான தாகும். தொழிலாளிவர்க்க சர்வதேசியக் கோட்பாடுகள் பற்றிய அவரது விரிவாக்கமும், அவற்றை அமுலாக்குவது பற்றிய அவரது வலியுறுத்தலும், சர்வதேசியத்தை, இன்றைய கட்டத்தில் சமுதாய வளர்ச்சியின் முடிவான காரணியாக மாற்றிவிட்டன. தேசிய விடுதலை மற்றும் ஜனநாயக இயக்கங்களின்பால், தொழிலாளி வர்க்க சர்வதேசியத்தின் செல்வாக்கைப் பரப்பும் வழிமுறைகளை முதன்முதலாக தீர்மானகரமாக எடுத்துரைத்தவரும் அவரே. உலக சோஷலிச வளர்ச்சியில் அதன் இடத்தை, முதன்முதலாக எடுத்துக்காட்டிவரும் அவரே.

உலக புரட்சிகர இயக்கம் முழுமைக்கும், தேசிய இயக்கங்களுக்குமிடையிலான இணைப்பினைக் குறித்த லெனினது பகுப்பாய்வு, முதலாளித்துவ சூழ்நிலைமைகளின் கீழ், தேசியப் பிரச்சினையின்பாத்திரத்தை நீர்மானிப்பதில் மிகப்பெருமளவு உதவியது. விடுதலைக்கான மக்களின் போராட்டத்தின் புதிய கட்டத்தினுல் இது நிரூபணமாகிறது. கம்யூனிஸ்ட் மற்றும் தொழிலாளர் கட்சிகளின் 1969-ம் ஆண்டு கூட்டத்தினுல் இது மிக விரிவாக பரிசீலிக்கப்பட்டது. இந்தக் கட்டத்தோடு மிக முக்கியமாக சம்பந்தப்பட்டது என்ன என்பதை லெனின் எடுத்துரைத்துள்ளார். அதாவது, தேசியப்புரட்சிகளையும், சமுதாயப் புரட்சிகளாக பரிணமிக்கும் அவற்றின் வளர்ச்சியினையும் ஆராயும்பொழுது, ஏகாதிபத்திய நுகத்தடியை தூக்கியெறியும் நாடுகள் ஒவ்வொன்றினதும் வளர்ச்சி மட்டங்களையும், விசேட தன்மைகளையும் நாம் கவனத்தில் கொள்ளவேண்டும் என்பதே அது.

சுயநிர்ணய உரிமை அனைத்து மக்களுக்கும் பொருந்தும். குறிப்பாக காலனி மற்றும் சார்பு நாடுகளிலுள்ள மக்களுக்கு பொருந்தும்("நாகரீகமடைந்த" மக்களுக்குமட்டுமே பொருந்தும் என்று சமூக-சந்தர்ப்பவாதிகள் கட்டுப்படுத்திய பொழுதும்)தேசங்களாக இன்னமும் பரிணும வளர்ச்சிபெருத

தேசிய இனமக்கள் உட்பட அனைத்து மக்களுக்கும் இது பொருந்தும். லெனினது இந்தக் கருத்து, மனிதகுலம் முழுமைக்கும் மிகப் பிரதானமானது என்று வர்ணிப்பது நிச்சயமாக மிகைப்படுத்துதலல்ல, சுயநிர்ணய உரிமைக்கோஷத்தின் புதிய உள்ளடக்கமும்கூட லெனினது பெயருடன் இணைக்கப்பட்டே இருக்கின்றது, அவர் வெறுமனே தேசிய அரசுத்துவம் அளவுக்கு மட்டும் சுருக்கிக் கொள்ளவில்லை. அவரைப் பொறுத்தவரை, மக்களின் வளர்ச்சி பற்றிய உள்ளார்ந்த அனைத்துப் பிரச்சினைகளையும் தழுவியதாகும் அது. அவர்களது சொந்த சமுதாய மற்றும் அரசியல் அமைப்பை தேர்ந்தெடுப்பதற்குள்ள உரிமையையும் உள்ளக்கியதாகும். தேசங்களின் சுயநிர்ணய உரிமையை செய்துபடுத்துவதென்பது, சுதந்திரமான தேசிய வளர்ச்சியைப் போன்றே, படிப்படியாக மக்களை ஒன்றுபடுத்துவதற்கும், உண்மையில் பிரதான காரணியாக மாறிவிட்டது.

ஏகாதிபத்திய சகாப்தத்தின் தேசியப் பிரச்சினையினையும், வர்க்கப் போராட்டத்திலான அதன் இடத்தினையும் பகுப்பாய்வு செய்கையில், ஒடுக்கும் மற்றும் ஒடுக்கப்படுகின்ற தேசங்கள் மத்தியிலுள்ள உலகப் பிரிவினையின் சமுதாய விளைவுகளை லெனின் பரிசீலித்தார். நடப்பிலுள்ள சூழ்நிலைமைகளில், தொழிலாளிவர்க்க கட்சிகளின் வேலைத்திட்டங்கள் ஜனநாயகத்தை நிலைநிறுத்துவதற்காக பணியாற்றவேண் என்பதை கவனத்தில் கொண்டிருக்கவேண்டும் என்று அ எடுத்துக்காட்டினார். தொழிலாளி வர்க்கத்தைச் சுற்றி ஜனநாயக சக்திகளை அணிதிரட்டுவதற்காக, தேசியப் பிரச்சினையின் தீர்விற்கு தேவைப்படும் அனைத்து அம்சங்களையும் பயன்படுத்தவேண்டும் என்பதையும் அவர் எடுத்துக்காட்டினார்.

சோஷலிசத்தின் கீழ் தேசியப் பிரச்சினையின் தீர்விற்கான வழிமுறைகள் சம்பந்தப்பட்ட லெனினது கருத்துக்கள், அனைத்து மக்களுக்கும் தற்காலத்திலும் எதிர்காலத்திலும் உண்மையில் மதிப்பிடற்கரியவையாகும்.

முதலாளித்துவ சமுதாயத்தில், தேசியப் பிரச்சி என்பது சமுதாயத்தின் எதிர்மறை வளர்ச்சிக்கு சான்று

இருக்கின்றது என்பது மட்டுமல்ல. ஆனால், அத்துடன் தேசிய முரண்பாடுகளை நீக்குவதற்குரிய அதனுடைய தெளிவான இயலாமையையும் காட்டுகிறது என்பதை மார்க்சியமும் லெனினியமும் எடுத்துக் காட்டுகின்றன. தேசியப் பிரிவினையின் மூலம் இந்த முரண்பாடுகளுக்கு தீர்வுகாண முயலும் முதலாளித்துவ முயற்சிகளுக்கு மாறாக தொழிலாளிவர்க்கம் முற்றிலும் புதிய போக்கை மேற்கொள்கின்றது. சமுதாயத்தை சோஷலிச முறையில் புனரமைக்கும் அடிப்படையைக் கொண்டது அது—ஒற்றுமை, ஒத்துழைப்பு, பரஸ்பர உதவி, முன்னேற்றத்திற்கான ஒன்றுபட்ட போராட்டம் என்ற போக்கை அடிப்படையாகக் கொண்டது அது. சர்வதேச கோட்பாடுகளின் அடிப்படையில் பரஸ்பர மரியாதை, சமத்துவம், சுயவிருப்பத்தின் மீதும் நாடுகளை ஒன்றாக நெருங்கிவரச் செய்கின்ற, இயற்கையான சரித்திர ரீதியான வளர்ச்சிக்கு, சோஷலிசம் மட்டுமே தூண்டுவிசை அளிக்க முடியும் என்பதை லெனின் எடுத்துக்காட்டினார்.

சோவியத் சோஷலிசக் குடியரசுகளின் ஒன்றியத்தின் உருவாக்கமும், அதனுட்பட்ட தேசங்கள், தேசிய மற்றும் இனக் குழுக்கள் ஆகியவை ஒன்றுபட்டிருப்பதும், அவற்றின் பூரணமலர்ச்சியும், தேசங்கள் மற்றும் தேசிய உறவுகளின் பிரச்சினையின்பால் மார்க்சிய-லெனினிய அணுகுமுறையினை ஒருங்குபடுத்தியதும்—இவையனைத்தும், சோஷலிசத்தின் பிரம்மாண்டமான சாதக முன்னேற்றத்திற்கு சான்றாகத் திகழ்கின்றன. சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்தியக் கமிட்டி அதனை பின்வருமாறு தெளிவுபட கூறியுள்ளது. **‘‘தேசிய இனப் பிரச்சினையின் மீதான மார்க்சிய லெனினிய போதனை, நடைமுறை ரீதியான சோதனையில் உறுதிபட நின்றுள்ளது. லெனினிய தேசிய இனக் கொள்கை முழுமையான வெற்றியினை ஈட்டி விட்டது.’’***

---

* சோவியத் சோஷலிசக் குடியரசுகளின் ஒன்றிய உருவாக்கத்தின் 50-வது ஆண்டு விழாவிற்கான தயாரிப்புகள் பற்றி, சோவியத் கம்யூனிஸ்ட் கட்சி மத்தியக் கமிட்டியின் தீர்மானம்’’, மாஸ்கோ, 1972, பக்கம். 19.

சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியினுல் தேசிய இனப் பிரச்சினைக்கு அளிக்கப்பட்டுள்ள தீர்வும், கடந்த 50 ஆண்டுகளுக்கு மேலான பல்தேசிய இனங்களைக் கொண்ட சோவியத் அரசின் வெற்றிகரமான வளர்ச்சியும், மார்க்சிய சமுதாயத்தை சோஷலிச அடிப்படையில் புனரமைப்பதின் மூலம் மட்டுமே, தேசிய இனப் பிரச்சினைக்கு இறுதியாக தீர்வு காணலாம் என்ற மார்க்சிய-லெனினிய கருத்துக்கள் சரியானவை என்பதை உறுதிசெய்துள்ளன; முதலாளித்துவ ஜனநாயகம் தேசிய இனங்களின் சமத்துவத்தை பிரகடனம் செய்கின்றது. ஆனுல் அமுலாக்குவதில்லை. பெயரளவிலான முதலாளித்துவ ஜனநாயகத்தைப் போன்றில்லாமல், சோஷலிச ஜனநாயகம், அனைத்து மக்களுக்கும் சம உரிமைகளையும், வாய்ப்புகளையும் உறுதி செய்கின்றது. பல்வேறு தேசிய இனங்களைச் சார்ந்த உழைக்கும் மக்களின் ஜீவாதார நலன்களைக் கருத்தில் கொண்டு, தேசியப் பிரச்சினைகளின் தீர்விற்கான சூழ்நிலைமைகளை உருவாக்குகின்றது; சோவியத் ஒன்றியத்தின் அனைத்து தேசங்களும் தேசிய இனங்களும் ஒன்றுபட்டிருப்பதும், அனைத்து துறைகளிலும் பூரண மலர்ச்சி பெற்றிருப்பதும், நெருக்கமாக இணைந்திருப்பதும் எதனடிப்படையில் அமைந்திருக்கின்றன? சோவியத் ஒன்றிய அமைப்பின் சோஷலிசத் தன்மையில் அவற்றின் வேர் நிலை கொண்டுள்ளது. சோஷலிச வளர்ச்சியின் ஒன்றிணைந்த புறநிலை விதியாக அவை திகழ்கின்றன; சோஷலிசக் குடியரசுகளின் ஒன்றியம் மிகவும் நிலைத்த தன்மையுடைய, செம்மையான பல்வேறு தேசிய இனங்களைக் கொண்ட அரசமைப்பை உடையதாக விளங்குகிறது. இது ஒவ்வொரு தேசிய இனத்தினுடையவும், சமுதாயம் முழுமையினுடையவும் நலன்களை மிகவும் சீராக இணைக்கின்றது.*

* சோவியத் சோஷலிசக் குடியரசுகளின் ஒன்றிய உருவாக்கத்தின் 50-வது ஆண்டு விழாவிற்கான

பல்வேறு தேசிய இனங்களைக் கொண்ட சோஷலிச அரசுகளினதும், சோஷலிச உலக குடும்பத்தினதும் ஒற்றுமை மற்றும் நட்புறவு பற்றிய கோட்பாடுகளை லெனின் வரையறுத்தார். சோஷலிசத்தின்கீழ், தேசங்கள் மற்றும் தேசிய உறவுகள் பற்றிய அவரது போதனையின் மைய அம்சங்களில் ஒன்றே இது. சோஷலிச சர்வ தேசியத்தை அடிப்படையாகக் கொண்ட உறவுகள், ஒரு புதிய சமுதாய, காரணியை உருவாக்குகின்றன, சமுதாய வளர்ச்சிக்கான ஒரு புதிய உந்துசக்தியை உருவாக்கு கின்றன என்று அவர் குறிப்பிட்டார்; பல்வேறு தேசிய இனங்களைச் சேர்ந்த உழைக்கும் மக்களின் நட்புறவு, அவைகளுக்கிடையேயான ஒத்துழைப்பு, முன்னேற்றம் சோஷலிசம் ஆகியவற்றிற்கான பரஸ்பர உதவி இவையே அந்தப் புதிய உந்துசக்திகள் சோவியத் ஒன்றியத்தின் ஒற்றுமையும், வலிமையும், இதனை முழுமையாக உறுதி செய்கின்றன.

சோஷலிச நாடுகளின் தோழமை பூர்வமான குடும் பத்தில், தேசியப் பிரச்சினையின் தீர்விற்கான பிரதான கொள்கைகள் சம்பந்தப்பட்ட மிக முக்கிய ஆலோசனையை யும் லெனின் வழங்கியுள்ளார். முதலாளித்துவ உலகில் மக்களினங்களின் தேசியப் பிரச்சினையின்பாலான அணுகு முறையில், சோஷலிச உலகின் அனுபவம் எவ்வாறு செல்வாக்கு செலுத்துகின்றது என்பதையும் லெனின் எடுத்துக் காட்டினார்.

லெனினது போதனை தேசியவாதத்தையும், தேசிய வெறியையும், எல்லா ஜனங்களும் ஒன்றாக வாழ்வது போன்று, போலித்தனம் செய்யும் காஸ்மாபாலிட்டனி ஸத்தையும், தேசிய சூனியவாதத்தையும் லெனினது போதனை எதிர்த்து மறுத்துரைக்கின்றது. முதலாளித்துவ

தயாரிப்புகள் பற்றி, ''சோவியத்ஒன்றிய கம்யூனிஸ்ட் கட்சி மத்தியக் கமிட்டியின் தீர்மானம்'', மாஸ்கோ, 1972, பக்கம். 9.

தேசியவாதம் சுயம் தனிமைப்படுவதை தீவிரப்படுத்து கின்றது. அதன் மூலம் முன்னேற்றத்தைத் தடுக்கின்றது. பரஸ்பர விரோத-குரோதத்தை வளர்க்கின்றது. பலசமயங் களில் யுத்தங்களுக்கு இட்டுச்செல்கின்றது; நாசநஷ்டம் விளைக்கும் காஸ்மாபாலிட்டனிஸமும், தேசிய சூனிய வாதமும், தேசங்களின் சீரழிவு பற்றிய நம்பிக்கையற்ற கருத்துக்களை உற்பத்தி செய்கின்றன. நட்புறவான உறவு களையும் ஒத்துழைப்பையும் நிலைநாட்டும் அனைத்து முயற்சி களையும் பயனற்றவை என்று தள்ளி விடுகின்றது. இதர நாடுகளை ஒடுக்குவதற்கும், உலக மேலாதிக்கத்திற்குமான அவர்களது போராட்டத்தில், ஏகாதிபத்தியவாதிகளால், தேசிய உணர்வு புரட்டப்பட்டுப் பயன்படுத்தப்படுகின்றது. அதற்கு மாறாக, லெனியம், சோஷலிசத்தின்கீழ் மக்கள் பெற்றுள்ள அரிதிலும் அரிதான பேராற்றல்களை எடுத்துக் காட்டுகின்றது. தேசங்கள் ஒன்றுபட்டு வருவதின்மூலமும், அவை பூரண மலர்ச்சி பெற்றிருப்பதின் மூலமும், கம்யூனி சத்தை ஒன்றாக நிர்மாணித்தலின் மூலமும், பொதுவான கலாச்சார மதிப்புகளை உருவாக்குவதின் மூலமும் உருவாக் கப்படும் நம்பிக்கையை லெனினியம் புலப்படுத்துகிறது.

முதலாளித்துவ தத்துவவியலாளர்கள், லெனினையும், அவரது ஆதரவாளர்களையும், நடப்பிலுள்ள அனைத்தையும் நிராகரிக்கும் எதிர்மறைவாதிகளான சூனியவாதிகள் என்று சித்திரிக்கின்றனர். தேசியப் பிரச்சினையை பின்னுக்குத் தள்ளி சமுதாயப் பிரச்சினைகளுக்கு முன்னுரிமை வழங்கு பவர்களாகச் சித்திரிக்கின்றனர். தேசங்கள் மற்றும் தேசிய உறவுகள் சம்பந்தப்பட்ட விஷயங்களில் மார்க்சிய-லெனினிய வாதிகள், வர்க்க கண்ணோட்டத்திற்கே தீர்மானகரமான முக்கியத்துவத்தை அளிக்கின்றனர் என்பதே முழு உண்மை யாகும். ஆனால், தேசியப் பிரச்சினையின்பாலான அவர் களது அக்கறையிலிருந்தும், சோஷலிசத்தின் கீழ் அதன் தீர்வில் அவர்கள் பெற்றுள்ள அவர்களது சர்வப் பொது வாக அங்கீகரிக்கப்பட்ட வெற்றியிலிருந்தும் இது தடம் புரட்டவில்லை.

சோஷலிச நாடுகளில், மக்களின் பரஸ்பர உறவுகள் மற்றும் வளர்ச்சியில் தோன்றியுள்ள பல பிரச்சினைகளுக்கு வெற்றிகரமான தீர்வைக் கண்டுள்ளனர். அத்தீர்வானது லெனினியப் போதனையின் வன்மையையும், நிலைநிற்பையும் எடுத்துக்காட்டும் சான்ருகத் திகழ்கின்றது. மேற்கொண்டும் சான்றுகள் தினசரி வந்த வண்ணமிருக்கின்றன. தேசங்கள் மற்றும் தேசிய உறவுகளின் வளர்ச்சியில் ஏற்பட்டுள்ள விஞ்ஞான பூர்வமான மாற்றங்கள் சம்பந்தப்பட்டவரை லெனினியம் மட்டுமே அதற்குள்ள ஆதாரங்களை அளித்துள்ளது எனலாம். முதலாளித்துவ நாடுகள், சோஷலிச நாடுகள் ஆகிய இரண்டிலும் நிகழ்ந்துவரும் விஞ்ஞான தொழில்நுட்ப புரட்சியின் பிரதிபலிப்பாக ஏற்படும் மாற்றங்களுக்கான ஆதாரங்களை லெனினியம் மட்டுமே அளித்துள்ளது எனலாம். பக்குவமுற்ற சோஷலிச சமுதாயம் என்ற கட்டத்தை எட்டிக் கொண்டிருக்கின்ற சில நாடுகளில், கம்யூனிசத்தை நிர்மாணித்துக் கொண்டிருக்கின்ற சோவியத் ஒன்றியத்தில், ஏற்பட்டுவரும் மாற்றங்களுக்கும் கூட, அந்த மாற்றங்களுக்கான ஆதாரங்களை லெனினியம் மட்டுமே அளித்துள்ளது எனலாம்.

உலகசோஷலிச அமைப்பினதும், சர்வதேச தொழிலாளி வர்க்கத்தினதும், தேசிய விடுதலை இயக்கங்களினதும் வெற்றிகளில், தேசங்கள் மற்றும் தேசிய உறவுகள் பற்றிய லெனினது போதனை உருக்கொண்டுள்ளது. ஒவ்வொரு காலகட்டங்களுக்கும் ஏற்ப, படிப்படியாக, தொடர்ச்சியாக, உலக கம்யூனிஸ்ட் இயக்கம் அதனை முன்னேற்றிக் கொண்டிருக்கின்றது. அதன் விளைவாக தொழிலாளிவர்க்க சர்வதேசிய சித்தாந்தம் புதிய தோற்றம் பெற்றுள்ளது. அதன் அமுலாக்கத்திற்கான புதிய வழிமுறைகளை விரிவுபடுத்திக் கொண்டே வருகின்றது. சர்வதேச தொழிலாளி வர்க்க மற்றும் தேசிய விடுதலை இயக்கங்களிலும், சோஷலிச நாடுகளின் வளர்ச்சியிலும், தேசியப்பிரச்சினைக்குரிய இடம், மிகவும் விசேடமாக வரையறுக்கப்பட்டு வருகின்றது. அத்துடன் சோவியத் சோஷலிசக் குடியரசுகளின்

ஒன்றியத்தில், கம்யூனிச நிர்மாணத்தின் லெனினிய திட்டத்துடன் தேசியப் பிரச்சினைகளை பொருத்தமாக இணைத்து, மகத்தான தெளிவுடன் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

தேசங்கள் மற்றும் தேசிய உறவுகள் பற்றிய லெனினது கருத்துக்களின்பால் முழுவிசுவாசத்துடன், அதே நேரத்தில் காலத்தின் தேவைகளுக்கேற்ப அவற்றை விரிவாக்கி, 1969-ல் நடைபெற்ற கம்யூனிஸ்ட் மற்றும் தொழிலாளர் கட்சிகளின் மாஸ்கோ மாநாட்டுத் தீர்மானம் பின்வருமாறு கூறியது: ''தேசங்கள் மற்றும் தேசிய சிறுபான்மையினர் மீதான அனைத்து ஒடுக்குமுறை வடிவங்களையும் கம்யூனிஸ்ட்களாகிய நாங்கள் எதிர்க்கிறோம். ஒவ்வொரு தேசமும் அல்லது தேசிய இனக்குழுவும் அதன் சொந்த மொழியையும் கலாச்சாரத்தையும் வளர்த்து வளம்பெறச் செய்வதையே நாங்கள் காண விரும்புகிறோம், அனைத்து நாடுகளினதும் சுயநிர்ணய உரிமையை நாங்கள் உறுதியாக ஆதரிக்கிறோம்.'' * உலக புரட்சிகர இயக்கம் தொடர்ந்து வெளிப்பாடாகி வருகிறது. இரு உலக அமைப்புகளின் போராட்டம் கூர்மையடைந்து கொண்டு வருகின்றது. இக்காரணத்தினாலேயே, தொழிலாளி வர்க்க சர்வதேசியத்தின் லெனினியக் கோட்பாடுகளை அம்மாநாடு விரிவிளக்கம் செய்தது. அதாவது, புரட்சிகரப் போராட்டத்தில் தேசிய சக்தியின்பால் வர்க்க சக்திக்குள்ள உறவு, தொழிலாளி வர்க்கத்தின் மற்றும் அதன் மார்க்சிய-லெனினியக் கட்சிகளின் சர்வதேசிய, தேசியக் கடமைகள் ஆகியவைபற்றிய லெனினியக் கோட்பாடுகளை விரிவுபடுத்தியது.

கம்யூனிச நிர்மாண காலகட்டத்தில், தேசங்கள் மற்றும் தேசிய உறவுகள் சம்பந்தப்பட்ட பிரச்சினை பற்றி, சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் 24-வது காங்கிரஸ் ஆழமாக பரிசீலித்தது. சோவியத் சோஷலிசக் குடியரசுகளின் ஒன்றியத்

* ''கம்யூனிஸ்ட் மற்றும் தொழிலாளர் கட்சிகளின் சர்வதேச மாநாடு'', மாஸ்கோ, 1969, பிராக், 1969, பக்கம். 35.

திலுள்ள தேசங்கள் மற்றும் தேசிய இனங்கள் மேலும் ஒற்றுமைப்படுவதற்கும், அவை மேலும் பூரண மலர்ச்சியுறுவதற்கும், அவற்றின் நட்புறவும் ஒத்துழைப்பும் அரண் செய்யப்படுவதற்கும், சோவியத் மக்களை ஒரு புதிய சரித்திர ரீதியான சமுதாயமாக ஒருமுகப்படுத்தப் படுவதற்கும், சோவியத் தேசபக்தி மற்றும் சோஷலிச சர்வதேசிய உணர்வில் சமுதாயம் முழுமையையும் பயிற்றுவிப்பதற்கும், இதையனைத்தையும் உறுதி செய்வதற்கான திட்டவட்டமான வழிவகைகளை காங்கிரஸ் வரையறுத்தது.

சோவியத் சோஷலிசக் குடியரசுகளின் ஒன்றியத்தினது 50-வது ஆண்டு விழா பற்றிய கட்சி தஸ்தாவேஜுகளும், அதனைக் குறித்த சோவியத் கம்யூனிஸ்ட் கட்சி மத்தியக் கமிட்டியினது தீர்மானமும், லியனித் பிரெஷ்நேவின் அவ்விழா பற்றிய அறிக்கையும், தேசங்கள் மற்றும் தேசிய உறவுகள் பற்றிய மார்க்சிய-லெனினிய போதனைக்கு வழங்கப்பட்ட மதிப்பிடற்கரிய பங்குப் பணியாகும்.

பல்வேறு தேசிய இனங்களைக் கொண்ட சோவியத் நாட்டில், கடந்த 50 ஆண்டுகளுக்கும் மேலாக சோவியத் மக்கள் சாதித்துள்ள முனைப்பான சாதனைகள், மார்க்சிய-லெனினியம் மென்மேலும் வளர்ச்சியுறுவதற்கான சிறந்த அடித்தளத்தை அளித்துள்ளன. லியனித் பிரெஷ்நேவ் அவரது அறிக்கையில் கூறியுள்ளதாவது: ''லெனினது முன்முயற்சியினால் உருவாக்கப்பட்ட சோவியத் சோஷலிசக் குடியரசுகளின் ஒன்றியம், கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையின்கீழ், மனிதகுல வரலாற்றிற்கு, அரை நூற்றாண்டு காலத்தில் செய்துள்ள பங்கினை மிகைப்படுத்தி மதிப்பீடு செய்வது சாத்தியமல்ல. ஒரு சோஷலிச சமுதாயத்தை முதன்முதலாக நிறுவியது சோவியத் சோஷலிசக் குடியரசுகளின் ஒன்றியம்தான் என்ற உண்மையும், மக்களுக்கிடையில், உண்மையான சமத்துவமான தோழமை உறவுகளை நடைமுறையில் முதன்முதலாக எடுத்துக் காட்டியது சோவியத் சோஷலிசக் குடியரசுகளின் ஒன்றியம் தான் என்ற உண்மையும், எல்லாக் காலத்திலும் அனைத்து

மக்களாலும் போற்றப்படும், நினைவுகூரப்படும் என்பதில் சந்தேகத்திற்கிடமில்லை.''*

தேசங்கள் மற்றும் தேசிய உறவுகள் பற்றிய போதனை உட்பட, மார்க்சிய-லெனினியத்தின் வளர்ச்சி, இருவகையில் குறிப்பிடத்தக்கதாகும். ஒன்று, உலக புரட்சிகர இயக்கத்தின் எதிர்கால வெற்றிகளுக்கான ஒரு உத்தரவாதமாக அது திகழ்கின்றது. இரண்டாவதாக, அமரர் லெனினுக்கு அது ஒரு நினைவுச் சின்னமாக திகழ்கின்றது.

* * *

தற்போதைய கட்டத்தில் தேசியப் பிரச்சினையின் உள்ளடக்கத்தை எடுத்துரைக்கவும், தேசங்கள் மற்றும் தேசிய உறவுகளின் வளர்ச்சியினது பல்வேறு அம்சங்களை மதிப்பீடு செய்வதில் லெனினது போதனையின் வல்லமையினையும், பேராற்றலினையும் எடுத்துக் காட்டவும் இந்நூல் முயல்கின்றது. கம்யூனிஸ்ட் மற்றும் தொழிலாளர் கட்சிகளினால் அது மேலும் செழுமையுற்றுள்ளதை எடுத்துக் காட்டவும் இந்நூல் முயல்கின்றது. எடுத்துக் கொண்ட பொருளின் அனைத்து அம்சங்களையும் பற்றிய ஒரு மிக விரிவான ஆய்வு என்று இது உரிமை கொண்டாடவில்லை. சில விஷயங்கள் மேம்போக்காக எடுத்துக் கூறப்பட்டுள்ளன, வேறு சில வெறுமனே குறிக்கப்பட்டுள்ளன.

---

* வி. இ. பிரேஷ்நேவ், "சோவியத் சோஷலிசக் குடியரசுகளின் ஒன்றியத்தினது ஐம்பதாம் ஆண்டு விழா", மாஸ்கோ, 1972, பக்கம் 87.

அத்தியாயம் ஒன்று

தேசங்கள் மற்றும் தேசிய உறவுகள் பற்றிய மார்க்சிய-லெனினிய போதனை

மனிதகுல செயற்பாட்டின் இதர அனைத்துத் துறைகளிலும் போன்றே, மார்க்சிய—லெனினியம், நமது காலத்தின் மிக முன்னேறிய புரட்சிகர தத்துவமாக விளங்கி தேசங்கள் மற்றும் தேசிய உறவுகளின் வளர்ச்சி பற்றிய பிரச்சினைகளின் தீர்விலும், ஒரு தீர்மானகரமான பாத்திரத்தை வகிக்கின்றது. தேசங்கள் மற்றும் தேசிய உறவுகளின் உருவாக்கம் மற்றும் வளர்ச்சி ஆகியவற்றை இயக்கும் விதிகள் வெளிப்படையானவை என்ற உண்மையை அது நிலைநாட்டியுள்ளது. தேசியப் பிரச்சினையின் தீர்விற்கான ஒரு விஞ்ஞானபூர்வ அடிப்படையைக் கொண்ட கொள்கையை தொழிலாளி வர்க்கம் உருவாக்க இயலும் என்பதை அது நிலைநாட்டியுள்ளது. தேசங்களை ஒன்றுபடுத்தவும், பூரண மலர்ச்சிபெறச் செய்யவும் அது உத்தரவாதமளித்துள்ளது. தொழிலாளி வர்க்க சர்வதேசியத்தின் அடிப்படையில், அனைத்து தேசிய இன மக்களையும் அணிதிரட்ட இயலும் என்பதையும் அது நிலைநாட்டியுள்ளது. பழைய உலகை புரட்சிகரமாக மாற்றியமைப்பதிலும், ஒரு புதிய வர்க்க பேதமற்ற சமுதாயத்தை உருவாக்குவதிலும் இவை ஒரு தீர்மானகரமான காரணியாக இருந்தன.

தேசங்கள் மற்றும் தேசிய உறவுகள் பற்றிய மார்க்சிய-லெனினிய போதனை எவற்றையெல்லாம் உள்ளடக்கியிருக்கின்றன? தேசங்கள் மற்றும் தேசிய உறவுகள் பற்றிய கொள்கை, தேசியப் பிரச்சினை மற்றும் அதன் தீர்வு பற்றிய ஆய்வு தொழிலாளி வர்க்க சர்வதேசியத்தினதும், அதன் எதிர்நிலையான முதலாளித்துவ தேசிய வாதத்தினதும், சாராம்சம் பற்றிய பிரச்சினை ஆகியவற்றை உள்ளடக்கியிருக்கின்றன. சமுதாய வளர்ச்சியில், வர்க்கத்திற்கும் தேசியப் பிரச்சினைக்குமிடையிலான உள் இணைப்பை அது நிரூபித்துள்ளது. சோஷலிசப் புரட்சியின் வெற்றிக்கும், சோஷலிசம், கம்யூனிசம் ஆகியவற்றின் நிர்மாணத்திற்குமான இதன் முக்கியத்துவத்தை அது நிரூபித்துள்ளது.

1. தேசங்கள் பற்றிய தத்துவம்

மனித குலத்தின் முன்னேற்றம் எப்பொழுதும் அடுத்தடுத்து வரும் அல்லது இணைவரையான மக்கட் சமுதாயங்களை தோற்றுவித்துள்ளது—வர்க்கம், தேசிய இனம், மற்றுமிதர வகைகள் அவற்றின் தோற்றமும், தொடர்ச்சியும் சமுதாயத்தின் வளர்ச்சியினாலும், அதன் பல்வேறு துறைகளின் வளர்ச்சியினாலும் உந்தப்படுகின்றன.

சமூக-வரலாற்றியல் சமுதாயங்களின் மத்தியில், ஒரு முக்கிய இடத்தை, பூர்வகுடிகள், தேசிய இனம், தேசம் ஆகியவை பெற்றுள்ளன. தேசங்களும், தேசிய இனங்களும் வாழ்நிலையில் உள்ளவரை, அவற்றின் வளர்ச்சியும் அவை ஒன்றுபட்டு வருவதும் தீவிரமாகின்றன. பல தேசிய இனங்கள் இணைந்து வாழ்கின்ற பல்வேறு சமுதாயங்களை அவை தோற்றுவிக்கின்றன. சோஷலிச, கம்யூனிச சகாப்தத்தில் சோவியத் சோஷலிசக் குடியரசுகளின் ஒன்றியத்தில் உள்ள சோவியத் மக்கள் சமுதாயம் போன்றவற்றைத் தோற்றுவிக்கின்றன. உலகம் முழுமையிலும் சோஷலிசம் நிறுவப்பட்டு விட்டால், முதலில் இந்த சமுதாயங்கள் ஒன்றிற்கொன்று கலந்து பலவாகவும் பின்னர் ஒரே ஒரு சர்வதேச சமுதாயமாகவும் மாறும், தேசங்களின்

கலந்திணைவுக்கு ஓர் முன்னேடியாக அது விளங்கும். மனிதகுல வரலாற்றில் தேசிய இனபேதமற்ற ஒரு சகாப்தத்தின் முன்னேடியாக அது திகழும்.

ஏறத்தாழ 2000-ஆண்டுகளுக்கு முன்பு பல்வேறு மக்கட் சமுதாயங்களின் இன தனிச் சிறப்புகளை பிரதிபலிப்பதற்கு **நேட்டியோ** (லத்தீன் மொழிச் சொல்) என்ற கருத்துரு உபயோகத்திற்கு வந்தது. சமுதாயத்தின் ஆரம்ப வடிவங்களை அச்சொல் பொருட்படுத்தியது—அதாவது சமுதாயத்திலிருந்த குடும்பம், மொழி, பழக்கவழக்கங்கள் நம்பிக்கைகள் போன்றவை. ஆரம்பத்தில் புராதன குழுக்களாக இருந்த சமுதாயங்களுக்கு மட்டுமே அது பயன் படுத்தப்பட்டது. பின்னர் அந்த கருத்துரு பிரதேசங்களின், மாநிலங்களின், தனிப்பட்ட தேசிய இனங்களின் மக்கட் பகுதிகளுக்கு விஸ்தரிக்கப்பட்டது. நிலவுடைமையின் சீரழிவுடன் முதலாளித்துவம் தோன்றியது. அத்துடன் ஒரு குணும்சரீதியான புதிய உருவாக்கம்—தேசம் என்பது உருவாயிற்று, மார்க்சிய-லெனினிய அடிப்படை நூல் களிலும் இதே பொருளில்தான் “தேசம்” என்ற பதம் பயன் படுத்தப்பட்டுள்ளது.

ஒரு சரித்திர ரீதியான மக்கள் சமுதாயம் என்ற முறையில், தேசம் என்பது ஒரு மிகமிக சிக்கலான சமுதாய அமைப்பாகும். அதன் சாராம்சமும், தனித்தன்மையும், சமுதாய மற்றும் இனத்தன்மையிலிருந்தும்,* அக, புற

* இனத்தன்மை என்பது எப்போதுமே சமுதாயத் தன்மை வாய்ந்ததுதான் என்பது உண்மையே. ஆனுல், தேசியத் தன்மையை வரையறுக்கின்ற பொழுது, தேசங்கள் மற்றும் தேசிய இன உறவுகள் பற்றிய கொள்கை, வழக்கமாக, சமுதாயத் தன்மையினையும், இனத்தன்மையினையும் வேறு படுத்திப் பார்க்கின்றது. சமுதாயத் தன்மையின் மூலம் அது எப்பொழுதும் வர்க்கரீதியான காரணிகளை பொருட்படுத்துகின்றது. இனத்தன்மையின் மூலம் பிரதானமாக அதன் வடிவம் என்னவோ அதன் ஒரு பிரதிபலிப்பாகத்தான் இருக்கின்றது. சமுதாய

காரணிகளிலிருந்தும் எழுந்தனவாகும். முதலாளித்துவ சகாப்தத்தில் திட்டவட்டமாக தேசங்கள் உருவானதை, மார்க்சிய-லெனினியம் குறிப்பிடுகின்றது. "முதலாளித்துவ சகாப்தத்தின் சமுதாய வளர்ச்சியில் ஒரு தவிர்க்கவியலாத உற்பத்தியாக ஒரு தவிர்க்கவியலாத வடிவமாக[1] தோன்றிய போதிலும், சோஷலிசத்தின் கீழும்கூட அவை நிலவுகின்றன. உலகம் முழுமையிலும் கம்யூனிசம் முதிர்ச்சியுறும் வரையில் அவை மறையா. இந்தக் காலகட்டங்கள் முழுமையிலும் தேசிய இன வடிவம், ஒரு குறிப்பிடத்தக்க செல்வாக்கை மனிதகுல வளர்ச்சியின்மீது செலுத்தியது, செலுத்துகின்றது, செலுத்தும்.

வளர்ச்சிப் போக்குகளின் சாராம்சத்தை அது பிரதி பலிப்பதில்லை.

சமுதாயத்தன்மை என்று எடுத்துக் கொண்டால், தேசங்களின் உருவாக்கமும் வளர்ச்சியும், மக்களின் பொருளாதார உறவுகளை அடிப்படையாகக் கொண்டிருக்கின்றன. வர்க்கங்கள் மற்றும் சமுதாயப் பிரிவுகளின் இயற்கையான ஒற்றுமை இந்த உறவுகளை உருவாக்குகின்றது. சமுதாயம் என்பதின் பொருள் தேசியஇனம் என்பதிலேயே கூட வர்க்க அடிப்படையிலேயே வேர் கொண்டுள்ளது. வர்க்க நலன்கள் குறிக்கோள்களின் அடிப்படையில் சமுதாயப் பிரிவும், அதற்கேற்ற அரசியலும் உள்ளன.

தேசிய இனம் என்பதில் இனத்தன்மை என்பது பிரதானமாக மொழியாகும். பிரதேசம், கலாச்சார அம்சங்கள் (ஆனால், இதில் முழு உள்ளடக்கமும் உட்படாது), வாழ்க்கைமுறை, நம்பிக்கைகள், பாரம்பர்யங்கள், அறிவு வளர்ச்சி, மனோநிலை போன்றவை, பூகோளரீதியான சூழல்களால் உருக் கொடுக்கப்பட்டன. பொதுவான பூர்வீகம், மற்றும் பல நூற்றுண்டு சரித்திரரீதியான வளர்ச்சி ஆகியவற்றினால் உருக்கொடுக்கப்பட்டன. இந்த இனத் தன்மை என்பது இன்னமும் இனக்குழுக்கள் அல்லது பூர்வகுடிகளிடம் அடிக்கடி காணலாம். அவற்றின் உள்ளடக்கத்தில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் ஏற்பட்ட பின்னரும், இந்தக் குணவியல்புகள், பிரதானமாக சமுதாய வளர்ச்சியினது வடிவத்தில்

மார்க்ஸ், எங்கல்ஸ், லெனின் ஆகியோர், ஒவ்வொரு கோணத்திலும், தேசங்கள் பற்றிய இயக்கவியல் பொருள் முதல்வாதக் கொள்கையை ஆதரப்படுத்தி முன்னிறுத்தினர். முதலாளித்துவ தத்துவ வாதிகளின் கருத்தியலான இயக்க மறுப்புக் கொள்கையை எதிர்த்தனர்.

தேசங்கள் மற்றும் தேசிய உறவுகள் பற்றிய இயக்கவியல் பொருள்முதல்வாதக் கொள்கையின் அடிப்படைகள், மார்க்ஸ், எங்கெல்ஸ் ஆகியோரால் வரையறுக்கப்பட்டன. உச்சத்திலிருந்த முதலாளித்துவ சூழ்நிலைகளின் அடிப்படையில், அவர்கள் வகுத்து உருவரை செய்தனர்.

(அ) முதலாளித்துவத்தின் தோற்றம் மற்றும் அது உறுதிப்படுதல் ஆகியவற்றைத் தொடர்ந்து ஏற்பட்ட, சமுதாய வளர்ச்சியின் விதிகளை உள்ளடக்கிய தேசிய வடிவத்தின் தோற்றம், தேசிய இன சமுதாயங்களின்

பிரதிபலிப்பது தொடர்ந்தது (இன்னமும் பிரதிபலிக்கின்றது). இயற்கையாகவே, ஒரு எதிர்மறையான சமுதாயத்தில், ஒரு தேசத்தின் இனத்தன்மைகளில் சில இன்னமும் நீடிக்கவே செய்கின்றன—தேசிய கலாசாரம், அறிவு வளர்ச்சி, மனோவியல், ஓரளவிற்கு பழக்கவழக்கங்கள், பாரம்பர்யங்கள் முதலியன—ஒரு முரண்பாடான வர்க்கத் தன்மையைப் பெற்றுள்ளன. பொருளாதார, அரசியல், கலாச்சார செல்வாக்குகளிலிருந்து இதனைக் கண்டறியலாம். இதனைக் கொண்டுதான் அதனை கணக்கிட வேண்டும். தேசங்கள் மற்றும் தேசிய உறவுகளின் சாராம்சத்தில், சமுதாய மற்றும் இனத் தன்மைகள் இயக்கவியல் ரீதியில் இணைப்புக் கொண்டுள்ளன, பிரிக்கவியலாத வாறு ஒன்றுபட்டுள்ளன. சமுதாய (வர்க்க) காரணிகளைக் கொண்டிருந்த போதிலும், அவை அவ்வாறுள்ளன. அக்காரணிகள் எப்பொழுதும் தீர்மானகரமான பாத்திரத்தை வகித்த போதிலும் அவை அவ்வாறே உள்ளன.

[1] வி. இ. லெனின், நூல் திரட்டு, தொகுதி 21, பக்கம் 72.

சரித்திரபூர்வமான தற்காலிகத்தன்மையை வலியுறுத்துவது.*

(ஆ) தேசங்களின் உருவாக்கத்திலும் முன்னேற்றத்திலும், தேசிய உறவுகளின் வளர்ச்சியிலும், பொருளாதாரக் காரணிகள், குறிப்பாக பொதுவான பொருளாதார வாழ்க்கையின் தீர்மானகரமான பாத்திம்**

(இ) தேசிய மற்றும் சர்வதேசிய இயக்கங்களின் வளர்ச்சியின்மீது வர்க்க காரணிகளின் வலிமையான அழுத்தம், தொழிலாளி வர்க்க சர்வதேசியத்தினதும், முதலாளித்துவ தேசிய வாதத்தினதும் செல்வாக்கு;***

(ஈ) ஒரு பொதுவான மொழியும், பொதுவான பிரதேச அமைப்பும் கொண்ட தேசங்கள் உருவாதலின் முக்கியத்துவம்;****

(உ) தேசங்களின் வளர்ச்சி, தேசிய கலாச்சாரம் சம்பந்தப்பட்டவரை அவற்றிற்கிடையேயான பரஸ்பர உறவுகள், தேசிய மனோபாவம், தன்மை ஆகியவற்றின்

---

* கார்ல் மார்க்ஸ், பிரெடரிக் எங்கல்ஸ், "தேர்வு நூல்கள்" (மூன்று தொகுப்புகளில்), தொகுதி 1, மாஸ்கோ, 1973, பக். 112 காண்க.

** மேற்கண்ட தொகுதியில், பக்கம் 111-212; மார்க்ஸ், எங்கெல்ஸ், பெர்லின், 1968, தொகுப்பு 4, பக். 416 காண்க.

*** கார்ல்மார்க்ஸ், பிரெடரிக் எங்கெல்ஸ், "தொகுப்பு நூல்கள்,"மாஸ்கோ 1976, தொகுப்பு 6, பக் 6, பக். 390; கார்ல்மார்க்ஸ். பிரெடரிக் ஏங்கெல்ஸ், தேர்வு நூல்கள் (3 தொகுப்புகளில்), மாஸ்கோ 1973, தொகுதி 2, பக்கம் 17-18; மார்க்ஸ், ஏங்கல்ஸ், பெர்லின், 1968, தொகுதி 16, பக்கம் 388; மார்க்ஸ், எங்கெல்ஸ்,பெர்லின் 1962, தொகுதி 21, பக். 362.

**** கார்ல் மார்க்ஸ், பிரெடரிக் எங்கல்ஸ், "ஜெர்மானிய தத்துவம்", மாஸ்கோ, 1968, பக். 480; மார்க்ஸ், எங்கெல்ஸ், பெர்லின் 1973, தொகுதி 5, பக். 353-56; மார்க்ஸ், எங்கெல்ஸ், "வெர்கி",பெர்லின், 1962, தொகுதி 21, பக்கம் 396.

வலிமையான செல்வாக்கு. பகைமை சமுதாயங்களில் சமுதாய முரண்பாடாக (வர்க்க) அவை திகழ்கின்றன.*

தேசங்கள் பற்றிய மார்க்சியத் தத்துவம் குறித்த லெனினது பங்கு, ஒரு புதிய கட்டத்தை சேர்ந்ததாக இருந்தது. அதனுடைய வளர்ச்சியில் இறுதிக்கட்டமாக இருந்தது. ஏகாதிபத்திய கட்டத்தில், முதலாளிகளுக்கும் தொழிலாளர்களுக்குமிடையிலான வர்க்க பகைமைகள் பகிரங்கமாக கூர்மையடைதலே, தொழிலாளி வர்க்க ஆட்சி அதிகாரத்திற்கான போராட்டம், கணக்கிலெடுத்துக் கொள்ள வேண்டும் என்று அவர் கருதினர். தேசங்கள் மற்றும் தேசிய உறவுகளின் வளர்ச்சி, பொதுவாக சமுதாயத்தில் ஒரு முக்கிய இடத்தைப் பெற்றுள்ளது. குறிப்பாக தத்துவார்த்தப் போராட்டத்தில் ஒரு முக்கிய இடத்தைப் பெற்றுள்ளது. அதனுல்தான், இந்தத் துறையில் மார்க்சியவாதிகளின் தத்துவார்த்த ஆயுதத்தின் செம்மைத் தன்மை மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது.

அவரது விஞ்ஞானபூர்வ மற்றும் சமுதாய-அரசியல் நடவடிக்கையின் வெகு ஆரம்பத்திலேயே, தேசங்கள் மற்றும் தேசிய உறவுகள் பற்றியபிரச்சினையின்பால் லெனின் கவனம் செலுத்தினுர்.

---

* கார்ல்மார்க்ஸ், பிரெடரிக் எங்கெல்ஸ், தொகுப்பு நூல்கள், மாஸ்கோ, 1975, தொகுதி 3, பக். 473; கார்ல் மார்க்ஸ், பிரெடரிக் எங்கெல்ஸ், ஜெர்மானிய தத்துவம், பக்கம் 43; கார்ல் மார்க்ஸ், பிரெடரிக் எங்கெல்ஸ், தேர்வு நூல்கள் (3 தொகுப்புகளில்), தொகுதி 1, பக்கம் 117-118; மார்க்ஸ், எங்கெல்ஸ், பெர்லின் 1968, தொகுப்பு 16, பக். 158;கார்ல் மார்க்ஸ்,பிரெடரிக் எங்கெல்ஸ்,அயர்லாந்தும் ஐரிஷ் பிரச்சினையும், மாஸ்கோ 1974, பக்கம் 124; பிரெடரிக் எங்கெல்ஸ், டூரிங்குக்கு மறுப்பு, மாஸ்கோ, 1975, பக்கம் 220; கார்ல் மார்க்ஸ், பிரெடரிக் எங்கெல்ஸ், தொகுப்பு நூல்கள்,மாஸ்கோ, 1975, தொகுதி 2, பக்கம் 139.

நரோதியம் பற்றி அவர் போராட முன்வந்தபோது அதனுடைய சித்தாந்தவாதிகளின் தத்துவார்த்த பித்துக்குளித்தனங்களை அவர் வெளிப்படுத்தினார். தேசங்கள் பற்றிய **பொருள் முதல் வாத** மார்க்சிய கருத்தோட்டத்தை விரிவடையச் செய்தார், உயர்த்திப் பிடித்தார்.

தேசங்கள் பற்றிய மார்க்சியத் தத்துவம் பொறுத்த வரை, அவர் ஆற்றியுள்ள பங்கு, தேசங்களின் **சமுதாய** சாராம்சத்தை கூர்மையாக எடுத்துக் காட்டியதிலேயே அடங்கியுள்ளது. குறிப்பாக, சமுதாயத்தன்மைக்கும், இனத் தன்மைக்கும் இடையிலான சரியான உறவு நிலையை கூர்மையாக எடுத்துக் காட்டியதிலேயே அடங்கியுள்ளது. நரோதியத்தின் தாராளவாத சித்தாந்தவாதியான என் மிகைலோவ்ஸ்கி, சுத்தமாக ஒரு இனவகையினைச் சேர்ந்ததாக, தேசத்தை சித்திரித்தார். தேசிய பிணைப்புகள் பூர்வ இனக்குழு மக்களின் பிணைப்புகளது தொடர்ச்சியே என்றும், அவற்றின் பொதுவான சாராம்சமே என்றும் அவர் கருதினார்.

அவரது கருத்துக்கள் விஞ்ஞானக் கேடானவையாகவும், அரசியல் ரீதியில் ஊறுவிளைவிப்பதாகவும் இருந்தன. தேசங்களின் முரண்பாடான வர்க்கத்தன்மையை தடம் புரட்டும் பொருட்டு, நரோதியவாதிகள் தேசங்களின் சாராம்சத்தை, இன புலப்பாடாகத் தரங்குறைத்தனர். அவை சமுதாய வளர்ச்சிப் போக்குகளிலிருந்து முற்றிலும் வேறுபட்ட சுதந்திரமான தனித்த நிலையுடையவை என்று அவர்கள் கூறினர். வர்க்கங்களும், வர்க்கப் போராட்டமும், அவற்றின் உருவாக்கத்திலும் வளர்ச்சியிலும் வகிக்கும் தீர்மானகரமான பாத்திரத்தையும் இடத்தையும் அவற்றின் மிகுந்த முக்கியத்துவத்தையும் லெனின் எடுத்துக் காட்டினார். நரோதியவாதிகளின் தவறான கருத்தை மறுத்தும், தேசங்களின் சமுதாய சாராம்சத்தை அங்கீகரித்தும், லெனின் இவ்வாறு எடுத்துக்காட்டினார். தேசிய பிணைப்புகளை படிப்படியாக முன்னேற்றுவதென்பது, உண்மையில், முதலாளித்துவத்தை, சமுதாய பிணைப்புகளை படிப்படியாக

முன்னேற்றுவதாகவே இருந்தது என்பதை லெனின் வலியுறுத்தினர். தேசமாக உருவாகும் வர்க்கங்களுக்கிடையிலான முரண்பாடுகளைப் பாராமல் ஒருவர் கண்மூடியிருக்க முடியாது. அதனுல்தான் நரோட்னிக்குகளின் கருத்து தவறுனது என்று அவர் கூறினர்.*

தேசிய உறவுகளின் சாராம்சத்தை ஆய்வதில், இயக்கவியல் பொருள்முதல்வாத அணுகுமுறையை லெனின் பேராற்றலோடு பயன்படுத்தினர். உதாரணமாக, தேசிய உணர்வுகள் தன்னிச்சையாக தீர்மானிக்கப்படுபவையல்லவென்றும், ஆனுல், அவை, வர்த்தக மற்றும் தொழில் முதலாளிகளின் நலன்களை அடிப்படையாகக் கொண்டவை என்றும் அவர் எடுத்துக்காட்டினர்.** பல்வேறு நாடுகளின் சமுதாய இயைபின் வேறுபாட்டினுலும்கூட தேசிய உறவுகள் பாதிக்கப்பட்டுள்ளன என்று அவர் சுட்டிக் காட்டினர்.***

தொழிலாளி வர்க்கத்திற்கும், முதலாளி வர்க்கத்திற்குமிடையிலான வர்க்கப் போராட்டங்கள் பெருமளவிற்கு வளரும்பொழுது, தேசங்கள் மற்றும் தேசிய உறவுகளின் சாராம்சம், பொருள்முதல்வாதிகளுக்கும், கருத்துமுதல்வாதிகளுக்கும்,புரட்சியாளர்களுக்கும் சந்தர்ப்பவாதிகளுக்குமிடையிலான தத்துவார்த்தப் போராட்டத்தில் ஒரு மையப் பிரச்சினையாக மாறிவிடுகிறது; ஒரு சர்வதேசப் போராட்டமாக மாறி விடுகின்றது.

1914-ன் ஆரம்பத்தில்,அக்காலத்திய மார்க்சியவாதிகள் **தத்துவார்த்த அடிப்படைகளின்பால்** **** மிகக்குறைந்த கவனத்தையே செலுத்திவந்தனர். அதனுல்தான், தேசிய

* வி.இ.லெனின்,"நூல் திரட்டு", தொகுதி 2,பக். 227, தொகுதி 1, பக் 155.

** வி. இ. லெனின், "நூல் திரட்டு", தொகுதி 1, பக். 155-56.

*** "லெனின் மஞ்சரி 30", பக். 30 (ரஷ்ய மொழியில்).

**** வி. இ. லெனின் "நூல் திரட்டு", தொகுதி 41, பக். 315.

இனப்பிரச்சினையில் சந்தர்ப்பவாதிகள் அடிக்கடி மார்க்சிய கொடியை எடுத்து அசைத்துக்கொண்டிருந்தனர் என்பதை லெனின் அழுத்தமாக கூறினர். அப்போது "இரண்டு தத்துவங்களிருந்தன" என்று அவர் குறிப்பிட்டார். ஒன்று, உண்மையான மார்க்சிய இயக்கவியல்—பொருள்முதல் வாதத் தத்துவம். மற்றொன்று ஒட்டோ பாயரின் "தேசம் பற்றிய கருத்தியல் தத்துவம்" *

தேசியப் பிரச்சினைபற்றி உண்மையான மார்க்சிய இலக்கியத்தில் காணப்பட்ட மதிப்பிடற்கரிய அனைத்து அம்சங்களையும் லெனின் விரிவுபடுத்தினர். மார்க்சியத்திலிருந்து வழுவிச்சென்ற திரிபுகளின் சாராம்சத்தை அவர் பகுப்பாய்வு செய்தார்.

அவரது பல நூல்களில், "தேசிய இனம் என்ற கருத்துப் பற்றி ஒரு விஞ்ஞானபூர்வமான இலக்கணத்தை அளிப்பதற்கு"**மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளை அவர் குறிப்பாக ஆராய்ந்தார். அதாவது தேசம் பற்றிய கருத்தினை ஆராய்ந்தார். "தேசம் என்பது கலாச்சார அடிப்படையைக் கொண்ட சமுதாயமே" என்பதுதான் ஒட்டோ பாயரின் கருத்தாகும் என்று லெனின் எழுதினர்: முதலாளித்துவத்தின் துவக்க மற்றும் தோற்ற காலத்தில் தேசியகலாச்சாரம் என்ற கோஷம், அதன் முதலாளித்துவ உள்ளடக்கத்தை *** கடந்துவிடக் கூடியதாக தோன்றிய போதிலும், பாயரின் வியாக்கியானத்தின்படி அது முற்றிலும் முதலாளித்துவ அடிப்படையைக் கொண்டதாகவே இருந்தது என்பதை லெனின் எடுத்துக்காட்டினர். அதேபொழுதில், தேசியத்தன்மை பற்றிய பாயரின் கருத்தோட்டங்கள் "ஒரு கருத்தியல் அடிப்படையைக்

---

* அதே நூல்.

** வி. இ. லெனின், "தொகுப்பு நூல்கள்", தொகுப்பு 7, பக்கம் 99.

*** "லெனின் மஞ்சரி 30", பக்கம் 53 (ரஷ்யமொழியில்) ; வி. இ. லெனின் "தொகுப்பு நூல்கள்", தொகுப்பு 19, பக்கம் 380.

கொண்டதாகும்''* என்றும் லெனின் எடுத்துக்காட்டினர். ஒரு கலாச்சார சமுதாயமாக தேசத்தை தரம் தாழ்த்தும் பாயரின் முயற்சிகளை முறியடிக்கவும், தேசம்பற்றிய விளக்கத்தில் பிரதான அம்சமாக திகழ்வது தேசிய இனத் தன்மையே என்பதை சுட்டிகாட்டவும் முயன்றபொழுதே லெனின் இவ்வாறு எடுத்துக்காட்டினர்.

தேசங்கள் மற்றும் தேசிய உறவுகளின் சமுதாய சாராம்சத்தை லெனின் ஆராய்ந்தார். முதலாளித்துவத்தின்கீழ் அவற்றின் முரண்பாடான வர்க்கத்தன்மையை கூர்மையாக எடுத்துக்காட்டினர். அப்பொழுது, அவற்றின் வளர்ச்சியில் சர்வதேசியம் முக்கிய இடத்தை வகிக்கிறது என்பதையும் தேசியவாதத்தை எதிர்த்துப் போராடுவதின் தேவையையும் வலியுறுத்தினர். அது ஏன் என்பதற்கு முதலாவதாக, சர்வதேசியத்தையும் தேசியத்தையும் எடுத்துக்கொள்வோம். முதலாளி வர்க்கத்திற்கும் தொழிலாளி வர்க்கத்திற்கு மிடையிலான தத்துவார்த்தப் போராட்டத்தில், இவை இரண்டும் பிரசித்தமானவை. இரண்டாவதாக, பாயர் தனது வியாக்யானத்தை வைத்துக்கொண்டு சில்லறை சர்ச்சைகளில் ஈடுபட்டார். அவருடைய வியாக்யானம் ஒரு கருத்தியல் தன்மையினதாக திகழ்ந்தது அல்லது, லெனின் குறிப்பிட்டது போன்று, பாயருடைய விளக்கம் தேசங்கள்பற்றிய ''மனேவியல்'' தத்துவமேயாகும். அதை ஒரு மார்க்சிய தத்துவம் போன்று அவர் காட்டமுயன்றார்.

தேசங்கள்பற்றிய பாயரின் கருத்துரு, முதலாளித்துவ தேசியவாதத்தில் ஊறியதாகும் என்பதை லெனின் எடுத்துக் காட்டினர். இனகாரணிகளின் (முதலாளித்துவ தேசியவாதத்தின் சாராம்சமாக அது இருக்கின்றது) ஒரு மிகைப்படுத்துதலின்மீது அது தளம் கொண்டிருந்தது என்பதையும் அவர் எடுத்துக்காட்டினர். சமுதாயரீதியிலான, குறிப்பாக வர்க்கரீதியிலான முதலாளித்துவ தேசங்களில்

* ''லெனின் மஞ்சரி 30'', பக். 53 (ரஷ்ய மொழியில்).

உள்ள முரண்பாடுகளை, பாயரின் கருத்து புறக்கணித்து விட்டது என்பதையும் அவர் எடுத்துக்காட்டினார். வரலாற்றுத்தன்மையற்ற ஒரு வகையினமாக தேசத்தை சித்திரிக்க பாயர் முயன்றார். தேசம் என்பது சோஷலிசத்தின்கீழ் எப்பொழுதுமே மகத்தான வளர்ச்சியைப் பெற்று வந்துள்ளது. விசேடமான தேசியகுணவியல்புகள் தொடர்ச்சியாக வலிமைப்பட்டு வருவதை இதில் காணலாம். "தேசியவாதம் தூய்மைப்படுத்தப்பட்டதாகவும், சுத்திகரிக்கப்பட்டதாகவும், பரிபூரணத்துவம் வாய்ந்ததாகவும், சோஷலிசத்திற்கு ஏற்றதாகவும்" மற்றும் "சோஷலிசத்தில் தேசியவாதம்" கொடிகட்டிப் பறப்பதாகவும் பாயரின் கருத்துக்கள் இருந்தன என்று லெனின் எழுதினார். பாயர், முற்றிலுமாக சர்வதேசியத்தை மறந்துவிட்டார் * என்று லெனின் குறிப்பிட்டார். தேசங்களின் வளர்ச்சியில் தேசியவாதத்தின் பாத்திரத்தை புகழ்ந்துரைக்கும் பாயரை கண்டிக்கத் தயங்கிய கார்ல் கவுட்ஸ்கிகூட, "தேசிய காரணியை **மிகைப்படுத்துவதையும்** சர்வதேசிய காரணியை ** **மிகமிகக் கடுமையாக குறைத்து** மதிப்பிடுவதையும் பதிவு செய்ய நிர்ப்பந்திக்கப்பட்டார். பாயரது "கொள்கை" சாராம்சத்தில் "**தேசியவாத சந்தர்ப்பவாதமாக**" *** இருந்தது.

தேசிய சமுதாயத்தின் பிரதான சிறப்புகளை லெனின் விவரித்துள்ளார். தேசங்கள் பற்றிய மார்க்சிய தத்துவத்துக்கு அது மற்றுமொரு முக்கிய பங்குப் பணி. சிறப்பியல்புகளின் ஒரு சாதாரண பட்டியலாக, தேசங்களின் சாராம்சத்தை அவர் குறைத்திடவில்லை. அவற்றின் உள்ளடக்கத்திலும், உள் இணைப்புகளிலும் அவர் ஆழ்ந்த கவனம் செலுத்தினார். தேசங்களின் சாராம்சத்தை புரிந்து கொள்வதற்கு

---

* வி. இ. லெனினின், "நூல் திரட்டு" தொகுப்பு 41, பக்கம் 315.

** "அதே நூல்", தொகுதி 19, பக். 117.

*** "அதே நூல்", தொகுதி 41, பக். 315.

அவற்றின் சிறப்பியல்புகளின் சந்தேகத்திற்கிடமற்ற முக்கியத்துவத்தை அவரது ஆய்வு எடுத்துக்காட்டியது. அவை பற்றி பாயரினுல் அளிக்கப்பட்ட சந்தர்ப்பவாத விளக்கத்தையும் கவுட்ஸ்கியினது துல்லியமற்ற கணிப்புகளையும் (அன்று அவர் ஒரு மார்க்சியவாதியாக இருந்த போதிலும்) முறியடித்ததின் விளைவாக அவரது படைப்பு சிறப்புற்று விளங்கியது.

தேசம் என்பது ஒரு வரலாற்றுத்தன்மை கொண்ட வகையினம் என்பதை பாயர் மறுத்தார். அதற்கு மாருக, லெனின், தேசங்களின் வரலாற்றுத் தன்மையை வலியுறுத்திஞர். அவை தோன்றி வளர்வதற்கான சூழ்நிலைகளை அவர் எடுத்துக்காட்டிஞர். எதிர்காலத்தில்* தேசங்களின் ஒன்றிணைப்பு தவிர்க்கவியலாதது என்ற கருத்தின்பால் அவர் கவனத்தை ஈர்த்தார்.

ஒரு தேசத்தின் அத்தகைய சிறப்பியல்புகள் என்பதில் பிரதேசம், மொழி, ஆகியவை பாயராலும், கவுட்ஸ்கியாலும் எடுத்துரைக்கப் பட்டிருக்கின்றன. ஆஞல், லெனின் இன்னமும் அந்த சிறப்பியல்புகளின் உள்ளடக்கத்தின் ஆழத்திற்கே சென்று ஆய்வு நடத்தியுள்ளார்.

கவுட்ஸ்கியின் விளக்கவுரையில், ஒரு தேசத்தின் மிக முக்கிய சிறப்பியல்பாக காணப்படுவது உண்மையில் மொழியே என குறிப்பிடப்பட்டுள்ளது. ஒரு சுத்தமான இனக் காரணியாக மொழியை கவுட்ஸ்கி பார்த்தார். என்ருலும் லெனின், ஒரு இனக் காரணியாக மொழிக்கு முக்கியத்துவம் அளித்தபோதிலும், தேசங்களின் தோற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் காரணமான அதன் சமுதாய ரீதியான முக்கியத்துவத்தை பிரதானமாகப் பார்த்தார்.**ஒரு தேசிய

* "லெனின் மஞ்சரி 30", பக்கம் 53 (ரஷ்யமொழியில்); வி. இ. லெனின், "நூல்திரட்டு", தொகுதி 22, பக். 147; தொகுதி 20, பக். 125; தொகுதி 23, பக்கம். 196.

**வி. இ. லெனின், "நூல் திரட்டு", தொகுதி 20, பக்கம் 48.

இனம், ஒரு தேசமாக வளரும் பொழுது, மொழியானது மாற்றவியலாததாக இருந்திருக்குமானுல், அதன் சமுதாய ரீதியான பாத்திரத்தை மொழி வகித்திருக்க முடியாது. எனவேதான் லெனின், நிலவுடைமையிலிருந்து முதலாளித் துவத்திற்கு மாறிச்சென்ற காலகட்டத்தில், மொழிகளில் ஏற்பட்ட மாற்றங்களைப்பற்றி ஒரு முழுமையான ஆய்வினைச் செய்தார். மொழியானது இலக்கியமாக மாறியதைத் தொடர்ந்து,* ஒரு குணவியல் ரீதியான மாற்றம் ஏற்பட்டது என்றும், வார்த்தையின் முழுப் பொருளில் நிலை கொண்டதாக மொழி மாறியது என்றும், பல விஷயங் களுக்கு மத்தியில் இதனையும் லெனின் கண்டறிந்தார்.

தேசங்களின் உருவாக்கத்திலும், வளர்ச்சியிலும், பிரதேசத்தினுல் வகிக்கப்பட்ட பாத்திரத்தைப்பற்றி எடுத்து ரைப்பதிலும் கூட லெனினது அணுகுமுறை, பாயரி லிருந்தும், கவுட்ஸ்கியிலிருந்தும் சாராம்சத்தில் மிகவும் வேறு பட்டதாக இருந்தது. தேசத்தை பிரதேசத்திற்கு அப்பாற் பட்ட வகையினைச் சேர்ந்ததாக சித்திரிக்க பாயர் எடுத்துக் கொண்ட முயற்சிகளை லெனின் நிராகரித்தார். தேசரீதியில் உறுதிப்படும் வளர்ச்சிக் காலகட்டத்தில், "ஒருதிட்டவட்ட மான பிரதேசத்தில் குடியேற்றம்" என்பதைவிட மேலதிக மாக எதுவுமில்லை என்று உறுதிபடக் கூறிய கவுட்ஸ்கி கூற்றினையும் லெனின் ஒப்புக்கொள்ளவில்லை. நாடுகளாக வடிவுறுதலிலும், அவற்றின் வளர்ச்சியிலும், பிரதேச ரீதி யாக இனஇயல்பு வகிக்கும் பாத்திரத்தை லெனின் மறுக்க வில்லை, ஆனுல் அத்துடன் கூடவே அவற்றின் உருவாக்கத் திலும், சோஷலிஸ்டு வளர்ச்சியிலும்** அதன் பாத்திரத்தை காணவேண்டுமென்ருர்.

இறுதியாக அதன் விளைவென்ன? தேசத்தின் பொருளா தார சமூக அமைப்பை கவுட்ஸ்கி குறைத்து மதிப்

* வி.இ. லெனின்,"தொகுப்பு நூல்கள்",தொகுதி 19, பக். 499; தொகுதி 41, பக். 314.

** வி. இ. லெனின், "நூல்திரட்டு",தொகுதி 41,பக். 314.

பிட்டார். அதேசமயம், பாயர் அதனைப் பற்றி குறிப்பிடக் கூட இல்லை. லெனினைப் பொறுத்தவரை இன்னமும், ''பொருளாதார சிறப்பியல்பு'' மிகப் பிரதானமான ஒன்றாக உள்ளது என்பதே அவர் கருத்து. ஒரு உள்நாட்டு சந்தையின் தோற்றத்தினாலும், பொருளாதார இணைப்புகளின் பெருக்கத்தினாலும் உருவாக்கப்பட்டதே தேசம் என்பது லெனினது கருத்து. அவரைப் பொறுத்தவரை, இதர அனைத்து சிறப்பியல்புகளும், சாராம்சத்தில், சமுதாயத்தின் பொருளாதார வாழ்க்கையினின்று பெறப்பட்டவைகளே அல்லது குறைந்தபட்சம் அதற்கு கீழ்ப்பட்டவைகளே. இந்த சமுதாயத்தின் நெறியாண்மை செய்த காரணிகளாக அவை இருந்தன என்பதே.

தேசத்தின் தோற்றத்திற்கும் வளர்ச்சிக்குமான முக்கிய நிபந்தனைகளிலொன்றாக தேசிய இன அரசு என்பது திகழ்கின்றது. அவ்வாறிருக்கின்ற நிலையில் லெனினைப் பொறுத்தவரை, பொருளாதாரவாழ்க்கைஅமைப்புத்தான்தேசத்தின்உருவாக்கத்திற்கு பின்னணியிலுள்ள காரணி. இதனால்தான், தேசம் பற்றிய அவரது வரையறுப்புகளில் ஒன்றாக, ''அதன் பொருளாதார அடித்தளங்களை (உள்நாட்டுச்சந்தை)'' பட்டியலின் உச்சியில் அவர்வைத்தார். அதேசமயத்தில் தேசிய அரசு என்பதை இவர் குறிப்பிடக்கூட இல்லை. ''தேசிய பிராந்தியங்களின் இணைப்பு'' * என்ற மிகவும் பொதுவான காரணியினை ஒரு மேம்போக்கான மேற்கோளாக மட்டுமே (''செய்தித் தொடர்பின் பிரதான கருவி மொழியே'' என்ற முடிவினைத் தொடர்ந்து) கையாண்டுள்ளார்.

"உலக வரலாற்றுப் பதிவேட்டில், தேசிய அரசு ஒரு பொதுவிதியாக இருக்கின்றது''** என்று பலசந்தர்ப்பங்களில் அவர் குறிப்பிட்டுள்ளார். அவரைப் பொறுத்தவரை

---

* ''லெனின் மஞ்சரி 30'', பக்.53 (ரஷ்ய மொழியில்).

** வி. இ. லெனின் ''நூல் திரட்டு'', தொகுதி 41, பக். 314; தொகுதி 20, பக். 400.

இன்னமும் அது, பொருளாதாரத் தேவைகளிலிருந்து பெறப்பட்ட ஒன்றேயாகும். மேலும், குறிப்பாய் அதன் பொருளாதார தேவையினை* அவர் வலியுறுத்தினார். ஒரு நாட்டின் அரசுத்துவம் கூட பிரதான விஷயமல்ல, ஆனால், ஒரு அரசிற்கான போராட்டத்தில் நாட்டின் ஒற்றுமையே பிரதானமானது. தேசத்தின் உருவாக்க காலகட்டத்தின் பொழுது, சமுதாய வளர்ச்சியின் பல அம்சங்கள் உள்ளன. அவற்றில் ஒன்றை மட்டும் தனியாக பிரித்தெடுத்து லெனின் விளக்கினார், "பொருளாதாரத்தின் மீதான அரசியல் மேல்கட்டுக்கோப்பு. ஜனநாயக, தேசத்தின் சுயாதிபத்திய உரிமை" என்பதே அது. எனவேதான் தேசிய அரசு.......** என்பதை தனித்து தெளிவுபட எடுத்துரைத்தார். **தேசியத்தன்மையும் சர்வ தேசியத்தன்மையும்** என்ற கவுட்ஸ்கியின் நூலைப்பற்றிய அவரது குறிப்பில், இந்த விசேட அம்சத்தை அவர் குறிப்பிட்டார்: "தேசிய அரசாங்கதிற்கான அவாவை பாயர் **குறைத்து மதிப்பிட்டார்.**"***

முதலாளித்துவ நாட்டின் சிறப்பியல்புகள் லெனினால், பின்வருமாறு மிகச் சிறப்பாக பட்டியலிடப்பட்டது: "மொழியும் பிரதேசமும், பிரதான விஷயம் (பொருளாதார சிறப்பியல்பு). சரித்திர ரீதியான தன்மை."**** தேசத்தை உருவாக்குகின்ற பிரதான அம்சங்களை, சமூக ரீதியான்-சரித்திர ரீதியான இதர வகை சமூகங்களிலிருந்து மாறுபட்டதாக அமைந்த தேசத்தின் பிரதான அம்சங்களை, லெனினது மேதாவிலாசம் பிழையற்ற முறையில் கண்டறிந்தது.

---

* வி. இ. லெனின், "நூல்திரட்டு" தொகுதி 41, பக் 314; தொகுதி 20, பக்கம் 400.

** "அதே நூல்", தொகுதி 41, பக். 314; தொகுதி 20, பக்கம் 400.

*** "அதே நூல்".

**** "லெனின் மஞ்சரி 30", பக். 53 (ரஷ்ய மொழியில்).

மார்க்சிய–லெனினியக் கட்சிகளும், சோவியத் ஒன்றிய கம்யூனிஸ்ட் கட்சி உட்பட,அனைத்து, மார்க்ஸ், எங்கெல்ஸ், லெனின் ஆகியோரால் வரையப்பட்ட தேசங்கள் பற்றிய இயக்கவியல் பொருள் முதல்வாதக் கொள்கையை எப்பொழுதும் தங்களது வழிகாட்டியாகக் கொண்டுள்ளன.

தேசங்களின் புத்தி பூர்வமான சிறப்பியல்புகளையும், அவற்றின் சேர்மானங்களையும், மார்க்சிய-லெனினிய மூல நூல்களில் எடுத்துரைத்துள்ளன. இவற்றை மனதிற்கொண்டு 1913-ல் தேசம் பற்றிய பின்வரும் வரையறுப்பை ஸ்டாலின் வழங்கினார்: **"ஒரு தேசம் என்பது சரித்திர பூர்வமாக நிறுவப்பட்ட, நிலையான மக்கட் சமுதாயமாகும். ஒரு பொதுவான மொழி, பிரதேசம், பொருளாதார வாழ்க்கை, ஒரு பொதுவான கலாசாரத்தில் பிரதிபலிக்கப்படும் மனோதத்துவ ரீதியான ஒழுங்கமைப்பு ஆகியவற்றின் அடிப்படையின் மீது அது அமைந்துள்ளது."***

சோஷலிச நாடுகளின் அம்சங்கள், முதலாளித்துவத்திலிருந்து மாறுபட்டு அமைந்தவை** என்று 1929-ல் அவர் விளக்கினார். தேசம் பற்றிய ஸ்டாலினது வரையறுப்பு, அதன் சாராம்சத்தை மதிப்பீடு செய்ய உதவியது. தேசங்களின் தன்மை பற்றிய கருத்தியலான, இயக்க மறுப்பு விளக்கத்திற்கெதிரான போராட்டத்தில், அது தொடர்பான திட்டங்களை எதிர்ப்பதில் பெரிதும் பயன்பட்டது. "தேசிய-கலாசார சுயாட்சி" போன்ற படு மோசமான திட்டத்தை எதிர்ப்பதில் பெரிதும் பயன்பட்டது. ஸ்டாலினது நூல்கள் வெளியிடப்பட்டு இப்பொழுது பல பத்தாண்டுகளாகின்றன. எவ்வாறாயினும், அதன் பின் பல புதிய உண்மைகள் வெளிவந்துள்ளன என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். தேசங்களின் உருவாக்கம், வளர்ச்சி சம்பந்தப்பட்ட, அவற்றின் சிறப்பியல்புகளது இணையுறவு சம்பந்தப்பட்ட, சமுதாய

* ஜே. வி. ஸ்டாலின், "நூல்கள்", மாஸ்கோ, 1953, தொகுதி 2, பக். 307.

** "அதே நூல்", தொகுதி 11, பக். 348, 354-56.

வளர்ச்சியில் தேசத்தின் பாத்திரம் பற்றிய பல புதிய உண்மைகள் வெளி வந்துள்ளன. அவற்றையும் நாம் நினைவில் கொள்ள வேண்டும். சோஷலிச நாடுகளின் வாழ்வு மற்றும் வளர்ச்சியின் மூலம் பெறப்பட்டுள்ள பரந்த அனுபவமும், வளர்முக நாடுகளில் தேசங்களின் அலாதியான உருவாக்கத்தின் மூலம் பெறப்பட்டுள்ள பரந்த அனுபவமும் மிகவும் குறிப்பாக முக்கியத்துவமுமுடையதாகும். பரஸ்பர செல்வாக்கும், செழுமைப் படலும் மிகவும் ஆழமானவையாக மாறிவிட்டன. இந்த உண்மையும் கூட, தேசங்கள் பற்றிய தத்துவம் குறித்த இந்த விவரம் நமது கவனத்தில் இடம் பெறும்படி பார்த்துக் கொள்ள வேண்டும்.

தேசங்கள் பற்றிய தத்துவத்தின் பல்வேறு அம்சங்கள் மீதான விவாதம் பின்வரும் விஷயங்களை எடுத்துக் காட்டியுள்ளது. தேசம் பற்றி வரையறுக்கையில், பின்வரும் விஷயங்களையும் கூட நாம் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும்.

முதலாவதாக, தேசம் என்பது ஒரு **சரித்திர** பூர்வமான சமுதாயம் என்பதை மிகவும் திட்டவட்டமாக வலியுறுத்த வேண்டியது அவசியமாகும். சரித்திர ரீதியான சமுதாயம் என்ற விளைவினுலேயே, அது மாறாத வகையைச் சேர்ந்தது என்பதைவிட, ஒரு மாறும் தன்மை கொண்டது என்பதை வலியுறுத்துவதும் மிகவும் அவசியமாகும்;

இரண்டாவதாக, ஒரு தேசத்தின் சிறப்பியல்புகள் அனைத்தும் சமதையானவையல்ல என்ற வரையறுப்பிலிருந்து நாம் விஷயங்களை கவனிக்க முற்பட வேண்டும். அதாவது அவற்றில் மிகவும் பிரதானமானதும், நிர்ணயிக்கக் கூடியதுமான சிறப்பியல்பு, சமுதாயத்தின் பொருளாதார வாழ்க்கையே என்ற வரையறுப்பிலிருந்து நாம் விஷயங்களை கவனிக்க முற்பட வேண்டும். பல சிறப்பியல்புகள் இருக்கின்றன. அவை தேசத்தைப் பற்றிய பொதுவான விளக்கத்தினுள் அமைகின்றன. அவற்றில் பரமமானது என ஏதொன்றும் இருக்கவில்லை;

மூன்றுவதாக, தேசிய மனோதத்துவவியலின் இடம், பாத்திரம் ஆகியவை பற்றி இன்னும் மிகத் தெளிவாக வரையறுக்கப்பட வேண்டும். ''ஒரு தேசத்தின் மனோதத்துவ ரீதியான ஒழுங்கமைப்பு'' என்ற பழைய கருத்தோட்டத்தை எடுத்துக் கொள்வோம். அதனுடைய முழு அர்த்தத்தில் அதனை எடுப்பதானால், சமூக மனோதத்துவவியலின் அனைத்து துறைகளையும் பிரதிநிதித்துவப் படுத்துகின்ற முழு அர்த்தத்தில் அதனை எடுக்க வேண்டும். பொதுவாக அதன் தேசிய சிறப்பியல்புகளை மட்டும் கணக்கில் கொண்டால் போதாது. ''மனோதத்துவ ரீதியான ஒழுங்கமைப்பு'' என்ற கருத்தை, இந்த சிறப்பியல்புகளோடு மட்டும் நாம் நிறுத்திக் கொள்வதாக வைத்துக் கொள்வோம். அவ்வாறு வைத்துக் கொண்டாலும் கூட, பல விஷயங்களை நாம் கண்டறிந்தாக வேண்டியிருக்கும். அந்த சிறப்பியல்புகள் கலாசாரத்தில் மட்டும் உருக்கொண்டிருக்கவில்லை, ஆனால் அத்துடன் உணர்விலும், வாழ்க்கை முறையிலும், அறநெறிகளிலும், பாரம்பர்யங்களிலும் கூட அவை உருக்கொள்கின்றன. அவற்றை நாம் கண்டறிந்தாக வேண்டும். இறுதியாக, மனோதத்துவ ஒழுங்கமைப்பு என்பதை, வர்க்கம் மீறிய கருத்தோட்டமெனக் கருதலாம். எவ்வாறாயினும் அது, ஒரு வர்க்க சமுதாயத்தில் இருக்க முடியாது.

முதலாளித்துவத்திலிருந்து சோஷலிசத்திற்கு மாறிச் செல்லும் காலகட்டம் இது. இதில், இரு வேறுபட்ட சமுதாய அமைப்புகளுக்கிடையில் தத்துவார்த்தப் போராட்டம் அளப்பரிய விதத்தில் மிகவும் கூர்மையடைந்துள்ளது. அத்தத்துவார்த்தப் போராட்டத்தில், முதலாளித்துவ தத்துவவியலாளர்கள், தேசங்கள் மற்றும் தேசிய உறவுகள் பற்றிய வரையறுப்பிற்கு ஒரு முக்கிய இடம் உண்டு என வாதிடுகின்றனர். பொதுவாக இனக் காரணிகளை அவர்கள் பெரிதுபடுத்துகின்றனர். அவர்களது பிரச்சாரத்தில் குறிப்பாக தேசிய அம்சத்தை பெரிதுபடுத்துகின்றனர். தேசிய வளர்ச்சியிலும், இதர நாடுகளின் சாதனையினால்

டும் அதன் தொடர்ச்சியான செழுமையிலுமான க்கக் காரணிகளை அவர்கள் புறக்கணிக்கின்றனர்.

தேசங்களின் சாராம்சம் பற்றிய முதலாளித்துவ விளக்கங்களில், இருபோக்குகளிருக்கின்றன. அவற்றில் ஒன்று, புறநிலை கருத்தியலை அடிப்படையாகக் கொண்டது. தேசங்கள் நிலவுதலை ஒத்துக் கொள்ளும் அதே பொழுதில் அவற்றின் சமுதாய சாராம்சத்தை அது நிராகரிக்கிறது. அதன் அனைத்து சிறப்பியல்புகளையும், அறவே இனக்காரணி களாக தரம்தாழ்த்தி விடுகிறது. ஒரு சித்தாந்த கலாச்சார வாழ்க்கையை, வர்க்க சூழல்களிலிருந்து பிரித்து தரம் தாழ்த்தி விடுகிறது. வெறும் உணர்வு சம்பந்தப்பட்ட, மனோதத்துவம் சம்பந்தப்பட்ட, உணர்ச்சிகள் சம்பந்தப் பட்ட விஷயமாக தரம்தாழ்த்தி விடுகிறது. ஒரு புறநிலை உண்மையாக தேசங்கள் நிலவுதலை முற்றிலுமாக ஒப்புக் கொள்ள மறுப்பது மற்றொரு போக்கு. ஒரு அகநிலையான கருத்தியல் கோணத்திலிருந்து நிரூபிக்க அது முயல்கின்றது. மனித மனதின் சுத்தமான ஒரு படைப்பே தேசம் என்று நிரூபிக்க அது முயல்கின்றது.

தேசங்கள் பற்றிய மார்க்சிய -லெனினிய தத்துவத்தின் எதிராளிகள், தேசிய சமுதாயத்தின் சாராம்சத்தை, உண்மை நிலையிலிருந்து தனிமைப்படுத்த விரும்புகின்றனர் அதனை அறிய இயலாத ஒன்றாக நிரூபிக்க விரும்புகின்றனர். அதனை ஒரு கருத்தாக, மனஉணர்வாக, மனோதத்துவவிய லாக எடுத்துரைக்க விரும்புகின்றனர். உதாரணமாக ஹான்ஸ்கோன் என்பார், சித்தமும், தேசியக் கருத்துமே தேசங்களின் வளர்ச்சியில் தீர்மானகரமான காரணிகளாக இருக்கின்றன என்று வாதிடுகிறார். ஒரு மனோதத்துவ புலப்பாடே தேசம், மக்களது சரித்திரபூர்வமான அனுபவத் தின் ஒரு வெளியீடே தேசம் என, எஸ். எம். லிப்செட் என்பார் கருத்துரைத்துள்ளார். மற்றொரு புறம் கே. போல்டிங் என்பார், தேசிய உணர்வின் உருவாக்கமே தேசம் என்கிறார். அந்த தேசிய உணர்வு, 20-ம்

நூற்றுண்டு சமுதாயத்தின் மிகவும் செயலூக்கமுள்ள உந்துசக்தி என அவர் விவரிக்கிறுர். *

தேசம் என்பது ஒரு, சமுதாய வகையினம் ஒரு சரித்திர ரீதியான சமுதாயம் எனும் இக்கருத்தினை முதலாளித்துவ நிபுணர்கள் மறுக்கின்றனர். உதாரணமாக, மாக்ஸ் சாவிலி என்பார், பல பகுதி மக்களால் பகிர்ந்து கொள்ளப்படும் ஒரு கருத்துரு என்ற அளவிலேயே தேசம் உள்ளது என கருத்துரைத்துள்ளார். பீட்டர் லாஸ்லெட் என்பார் தேசம் என்பது வெறுமனே ஒரு உருவணியே எனக் கருதி வாதமிடுகிறுர் மாரிஸ் கிரான்ஸ்டன் என்பவரைப் பொறுத்த வரை, தேசம் என்பதின் அடிப்படை, தேசிய சித்தமேயாகும். அவருடைய கருத்து தேசியவாத சித்தாந்தத்தில் வேர் கொண்டுள்ளது. அதாவது, சித்தத்தின் மீது, மக்களின் பொதுவான விருப்பத்தின் மீது ஒரு நாட்டின் வாழ்நிலை சார்ந்துள்ளது என்பதே அக்கருத்து. ஒன்றுசேர்ந்து வாழ்வது என்ற விருப்பத்திஞல் உருவாக்கப்பட்டிருப்பதே ஒரு தேசம் என்ற அகவய கருத்துருமீது இது அமைக்கப்பட்டுள்ளது. இவ்வாறு தனது கருத்தை ஜாக்யுஸ் சிவாலியர் எழுதுகிறுர். *

தேசங்கள் பற்றிய மார்க்சிய - லெனினியக் கொள்கை, அதன் விஞ்ஞான பூர்வமான முக்கியத்துவத்தோடு நின்று விடவில்லை. மற்ருெருபுறம், மகத்தான நடைமுறை ரீதியான முக்கியத்துவத்தையும் பெற்றுள்ளது. உலகைப் பற்றிய புரட்சிகர விளக்கத்திற்கும், மாற்றத்திற்கும் ஒரு கருவியாக விளங்குகிறது. முதலாளித்துவ சித்தாந்தத்திற்கு எதிரான போராட்டத்தில் ஒரு கருவியாக விளங்குகிறது. தேசங்கள் பற்றிய மார்க்சியக் கொள்கை, அனைத்து

---

* எச். ஹான், தேசியவாதக் கருத்து, நியூயார்க் 1961; எஸ்.எம். லிப்செட், "முதலாவது புதிய நாடு", நியூ யார்க் 1967; கே. போல்டிங், "20—ம் நூற்றுண்டின் பொருள்", நியூ யார்க் 1965.

** "அமெரிக்க சரித்திர பலகணி", 1962, தொகுதி 47, எண் 4; L'idea de Nation, பக். 1969.

முதலாளித்துவ தத்துவச் சீர்கேடுகளையும் நிர்மூலமாக்கி, அவற்றின் வர்க்கத் தன்மையை அம்பலப்படுத்த வேண்டும்.

நாம் பின்வரும் வரையறுப்பை முன் வைக்க முடியும்: **''தேசம் என்பது ஒரு நிலையான சரித்திர பூர்வமான மக்கட் சமுதாயத்தை உள்ளடக்கியதாகும். சமுதாயத்தின் மொழி, பிரதேசம், கலாசாரம், உணர்வு, மனோதத்துவம் ஆகிய வற்றின் இணைப்பு சமுதாய பொருளாதார வாழ்க்கையின்மீது அடித்தளம் கொண்ட ஒரு சமுதாய வளர்ச்சி வடிவமாகும்.''**

முதலாவதாக, தேசம் என்பது சமுதாய வளர்ச்சியின் ஒரு வடிவமாகும் என்ற லெனினது ஆராய்ச்சியுரைக்கு இந்த வரையறுப்பு அழுத்தம் தருகின்றது. இரண்டாவ தாக, தேசத்தின் தோற்றத்திலும், வளர்ச்சியிலும் தீர்மானகரமான காரணியாக இருப்பது, ஒரு சமுதாய கூட்டு நடவடிக்கையான — சமுதாயத்தின் பொருளாதார வாழ்க்கையே என்பதனை இது தெளிவுபட எடுத்துக்காட்டு கின்றது. மூன்றாவதாக, தேசத்தின் இதர சிறப்பியல்புகள் தாமாகவே முன்னணிக்கு வந்து செயல்படுவதில்லை என் பதனையும் தாமாகவே நிலவவில்லை என்பதனையும், ஆனால் சமுதாயத்தின் பொருளாதார வாழ்க்கையுடனான இணைப் பிலேயே அவை நிலவுகின்றன என்பதனையும் இது வலியுறுத்துகிறது. நான்காவதாக தேசத்தின் சிறப்பியல்பு கள் மத்தியில், அதன் கலாசாரம், உணர்வு, மனோதத் துவம் போன்ற விசேட அம்சங்களையும் இது உட்படுத்தி யிருக்கின்றது. இது, மக்களின் உணர்வில் காணப்படும் பிரத்தியேக தேசியத்தன்மையை, முன்னைய வரையறுப்பைக் காட்டிலும் மிகவும் துல்லியமாக விளக்குகின்றது.

முதலாளித்துவத்தின் கீழ், சோஷலிசத்தின் கீழும் ஒரே தேசத்தின் சமுதாயத்தன்மை முற்றிலும் வேறுபட்டதாக இருக்கின்றது எனும் இந்த உண்மை, புதியதை தெளிவாக எடுத்துரைப்பதை மிகமிக கஷ்டமானதாக செய்கிறது. புதியது என்று இங்கு கூறப்படுவது சோஷலிசத்தின்கீழ் ஏற்படும் மாற்றமாகும். அதாவது, ஒருமுறை வர்க்க முரண்பாடுகள் நீக்கப்பட்டு விட்டால் ஏற்படும் சமுதாய வளர்ச்சியின் இவ்வடிவத்தில் தோன்றும் புதியதை குறிக்

கிறது. இன்னமும் தேசங்கள் அப்படியே தொடர்ந்து நீடிப்பது மட்டுமல்ல, ஆனல், அத்துடன், சோஷலிசச் சூழலில் அனைத்து வகையான முன்னேற்றத்தையும் பெறுகின்றன. ஏனென்ருல், இங்கு, முதலாளித்துவத்தின்கீழ் இருப்பதை விட, மக்களின் நெருக்கமான ஒற்றுமை, தொடர்ச்சியாகவும், குறிப்பிடத்தக்க அளவிலும் சமுதாயத்திற்கு தேவைப்படுகின்றது. சமுதாய, பொருளாதார வளர்ச்சியின் பல்வேறு கட்டங்களில் இந்த தேவையின் விளைவு என்ன என்று பார்ப்போம். இதர பல சரித்திர ரீதியான சமுதாய அமைப்புகளுக்கு மத்தியில், இதுவும் ஒரு சமுதாய அமைப்பு என்ற முறையில், தேசத்தின் ஸ்திரத் தன்மையையும், அதேபோன்று நீண்ட வாழ்வையும் பாதுகாக்கின்றது.

ஒருதேசத்தின் நிலையானதன்மை, எல்லா கட்டங்களிலும் ஒரு சமதையான ஒற்றுமை அளவை ஏற்படுத்துவதில்லை. ஒரே சமுதாய பொருளாதார வடிவமைப்பினுள் இருந்த போதிலும்கூட, ஒரு தேசத்தின் ஒற்றுமையினளவு, ஒரு சமுதாயம் என்ற முறையில், அதன் வளர்ச்சியில் ஒரு கட்டத்திலிருந்து மறுகட்டம்வரை பலவேறு விதமாக இருக்கும். இதனை, மார்க்ஸ், எங்கெல்ஸ், லெனின் ஆகியோர் வலியுறுத்திக் கூறியுள்ளனர். உண்மையில் ஒவ்வொரு தேசத்திலும் இரண்டு தேசங்கள் இருந்தன * என்று முதலாளித்துவ சூழ்நிலைகளை மேற்கோள்காட்டி லெனின் இதனை இன்னும்கூட விபரமாக எடுத்துரைத்துள்ளார். முதலாளித்துவ தேசங்களின் சாராம்சத்தை புரிந்துகொள் வதற்கான, ஒரு உயர்வான மிகமுக்கியமான விஷயமாகுமிது. உண்மையில், ஒரு மோதிக் கொண்டிருக்கும் முரண்பாடான முழுமையாக, முதலாளித்துவ தேசங்களின் இருத்தலை கேள்விக்குறியாக்கவில்லை லெனின். முதலாளித்துவ நாடுகளின் தன்மையான சிக்கலையும் ஆழத்தையும் புரிந்து கொள்ள உதவக்கூடியதாகவே அவரது சூத்திரம் இருந்தது.

* வி.இ. லெனின், நூல் திரட்டு, தொகுதி 20, பக். 32.

ஒரே தேசிய இன சமுதாயத்தில் காணப்படும் இரு எதிரிடையான வர்க்கத்தரப்புக்களே, லெனினது ''இருதேசங்கள்'' என்ற விளக்கமாகும் (தனி ஒரு தேசிய இனம் என்ற பொருளில் அல்ல). அத்துடன், அவரது சூத்திரம், முதலாளி வர்க்கத்தினதும், தொழிலாளி வர்க்கத்தினதும் குறிக்கோள்கள், அடிப்படை வர்க்க நலன்களின் முரண்பாட்டிலிருந்து எழுந்ததாகும். அம்முரண்பாடு குறிப்பாக அரசியல், பொருளாதார, கலாசாரத் துறைகளில் நிகழ்வதாகும், முதலாளித்துவத்தின்கீழ், தேசிய ஒற்றுமையின் சார்நிலைத் தன்மையினையும், மரபொழுங்குத்தன்மையினையும் சிறப்பாக எடுத்துரைக்கின்றது.

சோஷலிசத்தின்கீழ் தேசிய ஒற்றுமை என்பது, அளவிடற்கரிய வலிமையோடு இருக்கின்றது. ஏனெனில், அனைத்து உழைக்கும் மக்களின் பிரதான, வர்க்க, தேசிய நலன்கள் ஒன்ருக இணைகின்றன—சோஷலிசமும், கம்யூனிசமும் நிறுவப்படுகின்றன. ஆனுல், சமுதாய மாற்றத்தின் பின்னே அதனை வழிநடத்தும் சக்தியாக தொழிலாளிவர்க்கம் இருப்பதால், அதன் வர்க்கநலன் தனியானதல்ல. அதன் வர்க்கநலன்களும், உழைக்கும் விவசாயிகளினதும், மக்களின் அறிவுஜீவிகளினதும் வர்க்க மற்றும் தேசிய நலன்களும் ஒன்றேயாகும். இயற்கையாகவே, தேசிய நலன்களின் வெளிப்பாட்டில் தீர்மானகரமான பாத்திரத்தை வகிப்பது வர்க்க நலன்களேயாகும். ஒரு நாட்டின் மக்கட்தொகை தேசிய இனரீதியில் ஒன்ருகவே இருந்தாலும் அல்லது பல தேசிய இனங்களைக் கொண்டதாக இருந்தாலும், இருநிலையிலும், இதுவே மெய்நடப்பாகும்.

மனிதகுல முன்னேற்றமென்பது, மிகநீண்ட காலமாக, தேசத்தின் வாழ்வுடனும், வளர்ச்சியுடனும் பிணைக்கப்பட்டுள்ளது— பொருள் வகை உற்பத்தியின் வளர்ச்சியை ஊக்குவிக்கும் ஒரு சமுதாய வடிவத்துடன் பிணைக்கப்பட்டுள்ளது. அத்துடன் பல தலைமுறைகளாக ஒன்று திரட்டப்பட்டுள்ள பொருளாயத, கலாச்சார மதிப்புகளை

தேசம் தாங்கி நிற்கிறது. அந்த மதிப்புகளை பாதுகாத்திடவும், அவற்றை பன்மடங்காக பெருக்கிடவுமான பொறுப்புணர்வை அது உருவாக்குகின்றது. தேசியப் பெருமை என்ற உணர்வை அது ஊட்டுகின்றது. மென்மேலும் முன்னேற்றத்தை உத்திரவாதப்படுத்திட, அதிகபட்ச ஒற்றுமையை அது உருவாக்குகின்றது.

ஒரு கூட்டுச் சமுதாயமாக தேசம் அதன் நிலைத்த தன்மையினை பரிணும வளர்ச்சியினூடே பெற, நீண்ட காலம் பிடித்திருக்கும் என்பதை இதுவே எடுத்துக் காட்டுகின்றது. தேசம் என்பது ஒரு சரித்திர ரீதியான வகையினம் என்பதனையும் இதுவே எடுத்துக் காட்டுகின்றது. மார்க்சிய-லெனினிய மூலநூல்கள். திரும்பத் திரும்ப எடுத்துரைத்தவை சரி என்பதை இதுவே எடுத்துக் காட்டுகின்றது.* இது ஒரு முக்கியமான விஷயமாகும். குறிப்பாக, நாடுகளின் "என்றும் நிலைத்திருக்கும் தன்மை'' பற்றிய முதலாளித்துவக் கருத்துக்களை மறுத்துரைப்பதில் முக்கியமானதாகும். மனித வளர்ச்சியின் தேசிய வடிவத்தின் சமுதாயத் தேவை கைவிடுவதற்கான ஒரு காலம் இனிமேல் வரப்போவது உறுதி. அதன்பின், அனைத்து தேசங்களும் ஒன்ருக இணையும்.

முதலாளித்துவமோ அல்லது சோஷலிசமோ எத்தகைய மாதிரியைச் சார்ந்ததாயினும் சமுதாய பிணைப்புகளிலேயே சமுதாயக் குழுக்கள் உருவெடுக்கின்றன. அதுவே தேசங்களின் சாரமாகும். இன உறவுகளின் நெருக்கமான ஒற்றுமையிலேயே இவை தோன்றுகின்றன. ஆனுல், பின்னதின் உறவிலேயே (அதாவது சோஷலிசத்தின் கீழ் உள்ள உறவிலேயே) வழி நடத்தும் பாத்திரம் வகிக்கப் படுகின்றது, இரண்டு வகையான உறவுகளின் ஒற்றுமைக்கு துல்லியமாயும், இது ஒரு மிகவும் முக்கியமான அம்சமாகும். இரண்டு வகையான உறவுகளின் ஒற்றுமை தேசிய உறவு

---

* மார்க்ஸ், எங்கெல்ஸ், "நூல்கள்'', பெர்லின், 1969, தொகுப்பு 11, பக். 195; தொகுதி 13, பக். 253; வி. இ. லெனின். நூல் திரட்டு, தொகுதி 20, பக். 125; தொகுதி 23, பக். 196.

களின் சாராம்சத்தையும், தேசிய ஒருமைப்பாட்டின் சாராம் சத்தையும் பிரதிபலிக்கின்றது.

சமுதாய உறவுகளின் முரண்பட்ட அமைப்பில், சமுதாயத்தின் பொருளாதார வாழ்க்கை தேசங்களின் உருவாக்கத்தில் தீர்மானகரமான அம்சமாகி விட்டது. மார்க்ஸ், எங்கெல்ஸ் ஆகியோரால் இது நிலைநாட்டப் பட்டிருந்தது, உற்பத்தியை எடுத்துக்கொண்டாலும், சொத்துடைமையை எடுத்துக் கொண்டாலும், மக்கட் தொகையை எடுத்துக் கொண்டாலும் அனைத்தும் சிதறடிக்கப்பட்ட நிலைமையில் இருந்தன. **கம்யூனிஸ்ட் அறிக்கையில்** அவர்கள் கூறியதாவது, அவற்றின் தீவிரத் தன்மை, அரசியல் ரீதியில் மையப்படுத்துதலை கட்டாயப் படுத்தியது வெறும் கூட்டணிகளாக இருந்தவற்றை "ஒரே தேசமாக சேர்த்துப் போடப்பட்டு, சுதந்தரமான மாநிலங்களை இணைத்தன.*

"சமுதாய வாழ்க்கை, மனிதகுல பெருவிருப்பங்கள், கருத்துக்கள், சட்டங்கள் ஆகிய எல்லாப் புலப்பாடு களுக்குமான விளக்கத்தை"** உள்ளடக்கியிருப்பது உற்பத்தி உறவுகளே என்பது லெனினது கருத்து. மனிதகுல வளர்ச்சியில் ஒரு புதிய ஆதார சக்தியை, முதலாளித்துவ உற்பத்திமுறை அறிமுகப்படுத்தியது—புதிய சமூக உழைப்புப் பிரிவினை, பல்வேறு மாநிலங்கள் சேர்த்து ஒன்றுபடுத்தல் (குறிப்பாக, தனியொரு சந்தை தோன்றியதின் விளைவாக), நகரமும், கிராமமும் பொருளாதாரத் துறையில் மிக நெருக்கமாக ஒன்றையொன்றைச் சார்ந்திருத்தல், இவை போன்றவை. இந்த புதிய ஆதாரசக்தி, தேசிய உறவுகளைத் தோற்றுவித்தது. இந்த முதலாளித்துவ பொருளாதார உறவுகள், அவற்றின் தேசிய வடிவத்தை தாங்களாகவே

* கார்ல் மார்க்ஸ், பிரெடரிக் எங்கெல்ஸ், "தெரிவு செய்யப்பட்ட நூல்கள்" (மூன்று தொகுப்புகளில்), தொகுதி 1, பக். 113.

** வி. இ. லெனின், "நூல் திரட்டு", தொகுதி 2, பக். 22.

பெற்றிடவில்லை. சில, அவற்றின் தனித்தன்மையால்
பெற்றிருந்தன. ஆனால்,ஏற்கெனவே நடப்பிலிருந்தஇனஉறவு
களுடன் அவற்றின் விசேட இணைப்பின் விளைவாக, தேசிய
வடிவத்தை பெறத்துவங்கின. அதிலும் கூட, முதலாளித்துவ
சகாப்தத்தின் வருகையைத் தொடர்ந்து சில மாற்றங்கள்
ஏற்பட்டன. தேசிய உறவுகளின் தோற்றத்தைக் கட்டாயப்
படுத்தியவற்றை விடவும், இன்னும் கூட அதிகமாக ஏற்படுத்
தியவை பலவித பொருளாதார உறவுகளே. ஆனால் அந்தப்
பொருளாதார உறவுகள்,இனக்காரணிகளுடன் உள்ளிணைப்பு
கொள்ளாதவரை, தேசிய உறவுகளின் உருவாக்கத்தில்
அவற்றிற்கு எவ்வித பங்கும் இராது.

தேசிய ரீதியிலான விசேட அம்சத்தினாலும், இதர
மக்களின் மிகச் சிறந்த சாதனைகளை இரவல் பெற்றதினாலும்
உருவான தேசிய உறவுகளை முதலாளித்துவத்தின் தோற்றத்
துடன் இணைந்த பொருளாதார உறவுகளின் தன்மையி
லிருந்தே கண்டறிய வேண்டும் முதலாளித்துவக் கட்டத்தில்,
பொருளாதார இணைப்புகளின் பெருக்கம், கலாசார உறவு
களின் ஒரு பெருக்கத்தோடு பிணைக்கப்பட்டிருக்கின்றது.
உள்நாட்டு தேசிய உறவுகளின் வலிமை, சர்வதேச
உறவுகளுடனான அவற்றின் உட்ச் செயல்பாட்டின் மூலம்
உறுதி செய்யப்படுகின்றது. சோஷலிச நாடுகளில், தேசங்கள்
மற்றும் தேசிய இனங்களின் பரஸ்பர செல்வாக்கும்,
அவற்றின் செழுமையும் மிகவும் குறிப்பிடத்தக்க முறையில்
விரிவடைந்திருக்கின்றன. ஏனென்றால், அவை, ஒரு புதிய
சமூக-பொருளாதார அடித்தளத்தைப் பெற்றிருக்கின்றன.
தொழிலாளி வர்க்கமும், அதன் மார்க்சிய-லெனினியக்
கட்சிகளும், அங்கு ஒரு நிரந்தரமான புறநிலை எதார்த்தமாக
மாறியுள்ளன. தேசங்களின் தோற்றம் ஒருபுறமிருக்க, மனித
குலத்தின் பரஸ்பர சார்நிலையின் மீது, உலகளாவிய
இடைத் தொடர்பு அடித்தளம் கொண்டுள்ளது. அந்தத்
தொடர்பினைக் கருவியாகக் கொண்டு''* ஏற்பட்டுள்ள

* கார்ல் மார்க்ஸ்,பிரெடரிக் எங்கெல்ஸ்"தெரிவுசெய்யப்பட்ட நூல்கள்'' 3 தொகுப்புகளில், தொகுதி 1, பக். 499.

வளர்ச்சியினுல், முதலாளித்துவ காலகட்டம் குறிக்கப்படுகின்றது என மார்க்ஸ் கூறினுர்.

அதன் மிகப் பெருமளவிலான யந்திரத் தொழிலோடு விளங்கும், முதலாளித்துவ சகாப்தம் பற்றி லெனின் குறிப்பிட்டார். தேசிய இனங்களின் லட்சணமான சமுதாய உறவுகளது குறுகிய இயல்பை அது அழித்திட முனைகிறது என லெனின் குறிப்பிட்டார். தேசிய உறவுகளையும், அதற்கு எவ்விதத்திலும் முக்கியத்துவம் குறையாத சர்வதேச உறவுகளையும்* அது உருவாக்குகின்றது என அவர் குறிப்பிட்டார். இதனுல்தான் முதலாளித்துவ சகாப்தத்தின் தொடக்கத்திலிருந்தே ஒரு கலவையான ஒற்றுமையாக தேசம் என்பது வளர்கின்றது. மிகவும் குறிப்பான தேசியத் தன்மையினதும் இதர நாடுகளின் சாதனைகளினின்று இரவல் பெற்றவற்றினதும் கொண்ட ஒரு கலவையான ஒற்றுமையாக தேசம் என்பது வளர்கின்றது. மேலும், பின்னதின் முக்கியத்துவம் எல்லாக் காலங்களிலும் அதிகரித்திருக்கின்றது. குறிப்பாக சோஷலிச சகாப்தத்திலும் இது ஒரு மறுக்கவியலாத உண்மையாகும். ஏனெனில் ஒற்றைத் தனிநாடு என்பது போன்ற தனிமைப்பட்ட வளர்ச்சியின் மூலம், இந்த புதிய அமைப்பு தன்னை உறுதிப்படுத்திக்கொள்ள இயலாது.

அதன் விளைவாக, இதர சமுதாயங்களுடனை ஒரு நெருக்கமான ஒற்றுமையில், தேசம் தனது வாழ்நிலையைப் பெறுகின்றது. மனிதகுல முன்னேற்றத்தின் படைப்பாகவும், ஒரு நிபந்தனையாகவும் அது திகழ்கின்றது. மனிதகுலம் முழுமையினதும், ஒவ்வொரு நாட்டினதும் வளர்ச்சிக்கிடையில் இணைப்பு உள்ளது. அனைத்து நாடுகளினதும் முன்னேற்றத்தில் ஆளுமை செலுத்தும் ஒரே மாதிரியான விதிகளையும், ஒரே மாதிரியான அமைப்பையும் கொண்டு அதனைக் கண்டறியலாம். இன்னமும் ஒரு பெருமளவிற்கு இதனைக் கண்டறியலாம். ஒருபுறம், இதர நாடுகளின் சாதனைகளிலிருந்து இரவல் பெற்றும், மறுபுறம், உலக

---

* வி. இ. லெனின், ''நூல் திரட்டு'', தொகுதி 30, பக். 211.

சமுதாயத்திற்கு தனது சொந்த காணிக்கையின் மூலம் இதர நாடுகளின் செழுமைக்கு துணை நின்றும் செயல்படுவதி னின்று இதனைக் கண்டறியலாம்.

தேசங்கள் பற்றிய ஆய்வினை, ஒரு தேசத்தை மற்றொன்றிலிருந்து இனம்பிரித்துக் காட்டும், மிகவும் பிரத்தியேக தேசியக்கூறுகள் அளவிற்கு குறுக்கி விடலாகாது. மிகவும் பெரிதும் வேறுபட்ட தேசங்கள் பல பொதுத் தன்மைகளை கொண்டுள்ளன—முன்னேற்றத்திற்கான போராட்டத்தில், வெவ்வேறு தேசங்களின் முன்னேறிய சக்திகளின் ஒற்றுமைக்கான அடிப்படையாக அவை இருக் கின்றன.

ஒரு தேசத்தின் உருவாக்கம், பொருளாதார சமுதாயத்தின் பரிணாம வளர்ச்சியினால் ஏற்படுத்தப்படு கின்றது. அத்துடன், ஒரு குணவியல் ரீதியான உள்ளார்ந்த அரசியல் வாழ்வின் புதிய பாணியும் இணைக்கப்பட்டிருக் கின்றது. என்றபோதிலும், அதன் உள்ளடக்கம், வர்க்க உறவுகளால் உருவாக்கப்படுகின்றது. ஆனால் இவற்றுடன் கூடவே, இவற்றுடன் சேர்த்து அனைத்து வர்க்கங்களுக்கும், அனைத்து சமுதாய அடுக்குகளுக்குமான ஒரு தேசிய அரசின் முக்கியத்துவத்தையும் நாம் கண்டிப்பாக கணக்கில் எடுத்தாக வேண்டும். ஒவ்வொரு வர்க்கத்திற்கும் ஒவ்வொரு சமுதாய அடுக்குக்கும் இதன் முக்கியத்துவம் சமமானதல்ல. ஆனால், அனைத்துடனும் ஒரே விதமாக மதிப்பீடு செய்யப்படவேண்டும். ஒரு தேசிய அரசின் உருவாக்கம் திட்டவட்டமானதாகும். தேசம் எனும் கட்டத்தில் ஏற்படும் இதர பல சமுதாய நடப்புக் களின் தோற்றமும் (அதாவது தேசிய இனம் எனும் கட்டத் துடன் ஒப்பிடத்தக்கது போன்றே) திட்டவட்டமான தாகும். அது தனிப்பட்ட வர்க்கங்களின் வரம்பிற்குள் அரசியல் உறவுகளின் ஒரு ஒருமைப்பாட்டை நோக்கி இட்டுச் செல்கின்றது. இது, அரசியல் கட்சிகளினாலும், பொது ஸ்தாபனங்களினாலும் பாதுகாக்கப்படுகின்றது. ஒரேவித நலன்கள், குறிக்கோள்களின் அடிப்படையில், ஒரு பெருமள

விற்கோ அல்லது குறைந்த அளவிற்கோ அவை மக்களை ஒன்றுபடுத்துகின்றன.

அந்நிய ஒடுக்கு முறைக்கு எதிரான, அல்லது நிலவுடமைக்கு எதிரான ஒரு வெகுஜன தேசிய இயக்கம், ஒரு நாட்டின் உருவாக்கத்தோடு இணைந்து செல்கிறது என்று வைத்துக் கொள்வோம். அவ்வாறு ஏற்பட்டால், ''தனி'' ஒரு தேசிய கலாசாரம், ''அனைத்து தேசிய இனங்களின்'' ஒரு அரசு என்பன போன்ற கோஷங்களை முதலாளிகள் முன்வைக்க முடியும். அத்தகைய கோஷங்கள் மூலம், ஒரு ஒற்றுமைத் தோற்றத்தை கூட அவர்களால் ஏற்படுத்திவிட முடியலாம். ஆனால் அத்தகைய ''ஒற்றுமை'' எப்பொழுதும் சார்நிலையுடையதாகும். ஏனெனில், முதலாளிகளால் ஆட்சி கைப்பற்றப்பட்டுள்ள ஒரு புதிய கட்டத்தையே அது குறிக்கின்றது. அது வர்க்க முரண்பாடுகளின், வர்க்கப் போராட்டத்தின் மோதுதலின் ஒரு புதிய கட்டமேயாகும். அறிவொளியாளர்கள் இதனைப் புரிந்து கொள்ளவில்லை. அவர்களைப்பற்றி லெனின்குறிப்பிட்ட தாவது: ''அவர்கள், பொதுவாக மக்களைப்பற்றி மட்டும் பேசவில்லை. ஆனால், பொதுவாக தேசத்தைப் பற்றியும்கூட பேசினர்.'' மக்கட் தொகையில் எந்த குறிப்பிட்ட வர்க்கத் தையும் தனியாக பிரித்தெடுத்து, விசேட கவனத்தைச் செலுத்தக் கூடிய ஒரு செயல் இலக்கைப் பார்க்க அவர்கள் தவறி விட்டனர்.* இன்னமும்கூட, பொருளாதார வளர்ச்சியில் ஏற்பட்டுள்ள புதிய கட்டத்தின் முக்கியத்துவம் என்ன? வர்க்கங்களின் முழுமையான புதிய பாத்திரத்தை திட்டவட்டமாக அது முன்வைத்துள்ளது. வர்க்கங்களின் உறவு நிலையில் முழுமையாக அவற்றின் புதிய பாத்திரத்தை அது திட்டவட்டமாக முன்வைத்துள்ளது. முதலாவதாக, நிலவுடமையை அடிப்படையாகக் கொண்ட ஒரு தேசிய இனத்துடன் ஒப்பிடும்பொழுது, ஒரு முதலாளித்துவ நாடு, புதிய வர்க்கங்களை உட்கொண்டதாக இலங்குகின்றது

* வி. இ. லெனின், ''நூல் திரட்டு'', தொகுதி 2, பக். 526.

இரண்டாவதாக, வர்க்கங்களின் இணையுறவும், மக்களின் வாழ்க்கையிலான அவற்றின் பாத்திரமும்கூட புதியவையாக இருக்கின்றன.

முதலாவதாக, முதலாளிகளால் தலைமை தாங்கப்படும் தேசங்களை எடுத்துக் கொள்வோம். "தேசம் முழுமையினதுமான செல்வாக்கு பெருக்கத்தை அதன் சொந்த செல்வாக்குப் பெருக்கத்திற்கு ஓர் நிபந்தனையாக"* செய்வதை பார்க்கின்றோம். மேலும், முதலாளித்துவ நாடு உருவாகும்பொழுது, முதலாளிகளுக்கும் பாட்டாளிகளுக்கும் இடையிலான பகைமை அதிகரிக்கின்றது. முதலாளித்துவம் பற்றி லெனின் கூறியதாவது: "மேலும் மேலும் அது தேசிய கட்டுகளை தகர்த்தெறிகின்றது. தேசியத் தனிமையை அகற்றுகிறது. தேசிய முரண்பாடுகளுக்கு பதிலாக வர்க்க முரண்பாடுகளை தோற்றுவிக்கின்றது."** முதலாளித்துவ சமுதாயத்தில் ஏற்கனவே, தொழிலாளி வர்க்கமானது, தேசத்தின் அகநிலைச் சக்தியாக மாறியிருக்கின்றது. பல துறைகளில் அது வழி நடத்தும் சக்தியாக மாறியிருக்கின்றது. "தேசத்தின் வளர்ச்சியில் ஆற்றலும் வலிமையும் கொண்ட அடித்தளமாக"*** அந்த வர்க்கம்தான், தொழிலாளி வர்க்கம்தான் இருக்கின்றது. எதிர்கால தேசிய வளர்ச்சியை தொழிலாளி வார்க்கம்தான் நிர்ணயிக்கின்றது. தேசத்தின் மிகப் பெரும்பான்மையான மக்களின் பிரதான நலன்களையும், உண்மையான தேசிய குறிக்கோள்களையும் எடுத்துச்செல்லும் சக்தியாக அது மாறியிருக்கின்றது.

---

* மார்க்ஸ் எங்கல்ஸ், "தொகுப்பு நூல்கள்", பெர்லின், 1969, தொகுதி 4, பக். 51.

** வி. இ. லெனின், "நூல் திரட்டு", தொகுதி 21, பக்கம் 73.

*** கார்ல் மார்க்ஸ், பிரெடரிக் எங்கெல்ஸ், "பிரிட்டனைப் பற்றி", மாஸ்கோ 1962, பக் 277.

அதனைத் தொடர்ந்து வர்க்க உறவுகளை எடுத்துக் கொண்டால் அவையும் பொருளாதார உறவுகளால் நெறிப்படுத்தப்படுகிறது. அவை பல்வேறு வர்க்கங்களைச் சார்ந்த மக்களின் தேசிய உறவுகளை நிர்ணயிப்பதிலும் தீர்மானகரமான பாத்திரத்தை வகிக்கின்றன.

ஒவ்வொரு தேசமும்,தேசிய இயக்கத்தின் ஒருகட்டத்தை கடக்க வேண்டும் என்ற அவசியமில்லை. அதன் உருவாக்கம் அல்லது வளர்ச்சி ஆகியவற்றின் திட்டவட்டமான சரித்திர ரீதியான சூழ்நிலையினை அது சார்ந்துள்ளது. ஒரு காரணத்தாலோ அல்லது பிறிதொரு காரணத்தாலோ, ஒரு தேசிய அரசு தோன்றாமலேகூடப் போகலாம். எவ்வாறு யினும், **ஒரு தேசத்தின் சமூக-அரசியல் செயல்பாடு தேவை யானதாகும்.** அது இல்லையென்றால், சுதந்திரமான படைப் பிற்கோ, வளர்ச்சிக்கோ ஆன ஆற்றலோ, முயற்சியோ அங்கிருக்காது. முதலாவதாகவும் முக்கியமாகவும், தேசிய ரீதியான, சரித்திர ரீதியான செயல்பாட்டிற்கான அவற்றின் அவாவின் வலிமையுடனும், அவற்றின் **அரசியல் ரீதியான** பரிணும வளர்ச்சி அளவுடனும், தேசங்களின் நிலைநிற்புப் பாங்கை மார்க்சும், எங்கெல்சும் இணைத்தனர்.* பொருளா தாரக் காரணிகளால் இந்த அவா தூண்டப்படுகின்றது. ''தேசிய அரசுகளை உருவாக்குவதின் அவாவைத் தோற்று விக்கும் சக்திபொருந்திய **பொருளாதாரக்** காரணிகளை மார்க்சியவாதிகள் பார்க்காமலிருந்துவிட முடியாது''** என லெனின் எச்சரித்ததை உதாரணமாகக் குறிப்பிடலாம்.

தேசிய வளர்ச்சியில் சமுதாயக் காரணிகளுக்கு நாம் முன்னுரிமை அளித்துள்ளோம். அதன் மூலம், இனக் காரணிகளின் பாத்திரத்தை எவ்விதத்திலும் நாம் குறைத்து மதிப்பிடவில்லை. சமுதாய மற்றும் இனக் காரணிகளின்,

---

* மார்க்ஸ்-எங்கெல்ஸ்,''நூல்கள்'', பெர்லின், 1968, தொகுப்பு 16, பக். 157-58.

** வி. இ. லெனின், ''நூல் திரட்டு'', தொகுதி 20, பக்கம் 400.

சிக்கலான ஒற்றுமையே தேசம் என்பது. ஆனால், முன்னது தான் (அதாவது சமுதாயக் காரணிதான்) தீர்மானகரமான பாத்திரத்தை வகிக்கின்றது.

சோஷலிச மற்றும் அதேபோன்று முதலாளித்துவ நாடுகள் பற்றிய வரையறுப்பில், இரு மிக உயர்ந்த முக்கியமான இனக்கூறு அம்சங்கள் இருக்கின்றன. ஒரு பொதுவான மொழியும் ஒரு பொதுவான பிரதேச அமைப்புமே அவை, ஆனால், இதர அம்சங்களைவிட இவ்விரண்டு காரணிகள் மிகவும் நிலையானவை என்ற போதிலும்கூட, "முடிவற்றவை'' என்ற தலைப்பின் கீழேயே பொதுவானவையாக மட்டுமே அவை உள்ளன. ஏனெனில், உண்மையில், அவை ஒரு தொடர்ச்சியான மாறும் நிலையிலும், வளர்ச்சி நிலையிலும் உள்ளன. இன்னும் சற்று அதிகமாக இது. அவற்றின் சமுதாய பாத்திரத்திற்கும், தேசிய வளர்ச்சியில் அவற்றின் முக்கியத்துவத்திற்கும் பொருந்துகின்றது.

ஒரு தேசத்தின் சிறப்பியல்புகளிலொன்றாக, மொழியைப் பற்றி நாம் கூறும்பொழுது, பொதுவான அர்த்தத்தில் மொழி என்று நாம் கூறவில்லை. தேசம் முழுமையினாலும் பயன்படுத்தப்படுகின்ற ஒரு தரமான மொழியைப் பற்றியே நாம் கூறுகிறோம். ஒரு குறிப்பிட்ட பிரதேசத்தில் மட்டுமே பேசப்படுகிற தன்மையைக் கடந்த மொழியினையே நாம் கூறுகிறோம். ஒரு செழுமைப்பட்ட அருஞ் சொல்லகராதியை அடிப்படையாகக் கொண்ட மொழியினைப் பற்றியே நாம் கூறுகிறோம். அந்த மொழி, அதன் சமுதாய நடவடிக்கைகளில் பெருக்கமுற்றதாக இருக்க வேண்டும். மொழிநடையில் ஒரு வளர்ச்சி பெற்ற அமைப்புப் பரிணமிக்கப் பெற்றதாக இருக்கவேண்டும். அதுபோன்ற மொழியினைப் பற்றியே நாம் கூறுகிறோம். முதலாளித்துவ மற்றும் சோஷலிச சகாப்தத்தில், பொருளாதார உறவுகளின் தேவைகளை அத்தகைய தகுதிபெற்ற மொழியினால் மட்டுமே நிறைவேற்ற இயலும் (தேசிய இன வளர்ச்சிக் கட்டத்தில் இந்த மொழித்திறன் மிகவும் வரம்பிற்குட்பட்டதேயாகும்). சமுதாய கலாச்சார வாழ்க்கையை

மொழி உறுதி செய்கின்றது என்பது மற்றுமொரு முக்கிய, விஷயமாகும். அந்த சமுதாயத்தின் வர்க்க உள்ளடக்கம் எவ்வளவு முரண்பாடு கொண்டதாயினும் அதைப்பற்றி கவலே இல்லே. ஆனுலும், பொருளாதார அரசியல் துறைகளில் அவற்றின் தோற்றுவாயைக் கொண்டுள்ள இதர அம்சங்களுடனுன ஒரு ஒற்றுமையில் இதுவும் பொருந்தியிருக்கின்றது. உண்மையில், பொருளாதார சமுதாயத்தின் தோற்றமும், தேசிய வளர்ச்சியில் அதன் தீர்மானகரமான பங்கும், ஒரு தேசத்தின் கலாச்சார வாழ்க்கையில், மொழியின் குணவியல் ரீதியான புதிய பாத்திரத்தை முன்னதாகவே தீர்மானிக்கின்றது. குறிப்பாக, தேசிய ரீதியான விழிப்புணர்வை ஏற்படுத்துவதில் மொழியின் புதிய பாத்திரத்தை அதுமுன்னதாகவே தீர்மானிக்கின்றது- தேசிய ரீதியான கருத்துக்களின் உருவாக்கத்திலும், அவற்றைப் பரப்புதலிலும், செல்வாக்கை ஏற்படுத்துதலிலும் மொழியின் பாத்திரத்தை அது முன்னதாகவே தீர்மானிக்கின்றது. பொதுவாக, தேசிய ரீதியான ஒருமைப்பாட்டின் அனைத்து வளர்ச்சிகளிலும், மொழியின் புதிய பாத்திரத்தை அது முன்னதாகவே தீர்மானிக்கின்றது. கலாச்சார உருவாக்கத்தில் தலேயாய காரணிகளிலொன்ருக ஒருமொழி மாறுவதற்கு முன்னுல், "மனிதகுல வர்த்தக உறவுகளின் பிரதான கருவியாக"* அது ஏற்கனவே மாறியிருக்க வேண்டும் என லெனின் எழுதினுர். "பொருளாதார உறவுகளில் முழு சுதந்திரத்தைப் பெறவும், உள்நாட்டுச் சந்தையில் முழு வெற்றி பெறவும் ஒரு முக்கிய காரணியாக" ** தேசிய இனமும் மொழியின் தனித்தன்மையும் இருக்கின்றன என்று லெனின் எழுதினுர். பொது மொழியும், அதன் தங்குதடையற்ற வளர்ச்சியும், தேசிய ஒருமைப்பாட்டிற்கான தீர்மானகரமான நிபந்தனேயாகும். "மொழி

* வி. இ. லெனின், "நூல் திரட்டு", தொகுதி 41, பக். 314.

** "அதே நூல்", தொகுதி 20, பக். 48.

யினை மீட்டமைத்தல்'' என்று விவரிக்கப்படுவதாக இருக்க லாம். அல்லது புதியப்படைப்பு என்றும் அர்த்தப்படுத்த லாம் என்றார் லெனின். சில பிரதேசங்களில் பேசப்படும் ஒரு தொகுப்பு என்பதிலிருந்து, எழுதப்பட்ட மொழி என்பதிலிருந்து அதன் வளர்ச்சி ஒரு புதிய தன்மையைப் பெற வேண்டும்—ஒரு தரமான தேசிய மொழி என்ற தன்மையைப் பெற வேண்டும். *

எவ்வாறாயினும், தேசிய மொழியின் இப்பாத்திரம் இரண்டாந்தரமானதே, நாம் ஏற்கெனவே எடுத்துக் காட்டியது போல், தேசத்தின் பொருளாதார கூட்டு அமைப்பின் செல்வாக்கிலிருந்தே அது தொடர்ந்து இயங்குகின்றது. மொழியின் சுயமுக்கியத்துவத்திலிருந்தல்ல அல்லது ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக இருந்துவரும் அதன் அழியாத் தன்மையிலிருந்தல்ல.

பல்வேறு காரணங்களால் சில பகுதி மக்கள், தங்களை தேசங்களாக அமைத்துக் கொண்டு, ஒரு இரவல் மொழியை அடிப்படையாகக் கொண்டு தொடர்ந்து அவ்வாறே இருந்து வருகின்றனர். ஆனால் இது, ஒரு தேசிய சமுதாயம் என்ற முறையில் அதன் வழக்கமான சிறப்பம்சங் களையும், குணவியல்புகளையும் பறிப்பதில்லை. மொழியானது சரித்திர கதியோடு சேர்ந்து மாற்றமுற்ற போதிலும்கூட (மிக அதிகமாக அவ்வாறு நிகழ்கின்றது) மக்களின் ஒற்றுமைக்கான தேவையினையும், மக்களின் இதரபல தேவைகளையும், அவர்களது முன்னேற்றத்தையும் முழுமை யாக பூர்த்தி செய்வதாக இருக்கவேண்டும். அதுதான் மிகவும் முக்கியமான விஷயம்.

தேசம் என்ற கட்டத்தில், பிரதேசம் என்ற அமைப்பு இல்லாவிட்டால், மக்களின் வாழ்க்கையின் ஒருங்கிணைப்பு கற்பனைகூட செய்யவியலாது. ஒரு தேசத்தின் பொருளா தார வாழ்க்கை, அதன் மொழியின் புனரமைப்பு, பொதுவாக அதன் தேசிய விழிப்புணர்வு ஆகியவற்றுடன்,

* வி. இ. லெனின், ''நூல்திரட்டு'', தொகுதி 20, பக். 314.

தேசியப் பிராந்தியங்களின் பிரதேச ரீதியான ஒருங் கிணைப்பும் சேர்ந்திருக்க வேண்டியது மிகவும் இன்றியாமை யாததாகும். இந்த பொருளில், பிரதேசம் என்பது இன ரீதியில் முக்கியத்துவமுடையதாகும். ஒரு குடியிருப்பு இடம் என்ற சாதாரண அர்த்தத்திலல்ல. ஆனால், அத்துடன் தாய்நாடு என்ற அடிப்படையில் தேசபக்த உணர்வினை தூண்டிவிடக்கூடிய அடிப்படையில், மக்களை ஒரு சமுதாயம் என்ற முறையில் இணைக்கக்கூடிய அடிப் படையில் முக்கியமானது—எனவே, பிரதேசம் என்பது தேச வளர்ச்சிக்கும் ஒரு ஒன்றுபட்ட சமுதாய அமைப்பிற்கும் இன்றியமையாததாகும். அதற்கான ஒரு தீர்மானகரமான இயற்கையான, பூகோள ரீதியான நிபந்தனையாகும்.

மொழி, பிரதேசம் என்பவற்றை ஒருபுறம் ஒதுக்கி வைத்து, இதர முக்கிய காரணிகளை பார்ப்போம். தேசத்தின் தோற்றத்திலும், வளர்ச்சியிலும், தேசிய கலாச்சாரம், தேசிய உணர்வு, தேசிய மனோதத்துவம்,* தேசிய

---

* ''தேசிய கலாசாரம்'', ''தேசிய உணர்வு'', ''தேசிய மனோதத்துவம்'' ஆகிய கருத்துக்களை எடுத்துக் கொள்வோம். அவை வழக்கமாக எதற்கு உபயோகப்படுத்தப் படுகின்றன? தேசங்களினது கலாச்சார வாழ்க்கையின் வடிவங் களையும் சாராம்சத்தையும் ஆராய்வதற்கு உதவியாக பயன்படுத்தப் படுகின்றன. முதலாவதாக, அவற்றை புரிந்து கொள்வதற்கு. எதிர்மறையான சமுதாயங் களில் அவற்றின் முரண்பாடான வர்க்கத் தன்மையை நாம் நிச்சயமாக கணக்கிலெடுத்துக் கொள்ள வேண்டும். இரண்டாவதாக, அவற்றின் சார்நிலையான சுயேச்சைத் தன்மையினை கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும். ஒரு வர்க்க சமுதாயத்தின் வளர்ச்சியின் சிலகட்டங்களைப் புரிந்து கொள்ள அவை உதவுகின்றன (சுதந்திரத்திற்கான தேசிய இயக்கங்கள் தற்காப்பு யுத்தங்கள் போன்ற கட்டங்களை) ஆதிக்க வர்க்கத்தின் நலன்களையே அவை பிரதானமாக பிரதி பலிக்கின்றன. தேசிய நலன்களை பிரதிபலிப்பதைவிட அவற்றையே பிரதானமாக பிரதிபலிக்கின்றன. பொருள்வய, அகவய கலாச்சாரம் முழுமையி

பாரம்பர்யங்கள், பழக்கங்கள் முதலியன மிக முக்கிய இதர காரணிகளாகும். இவையனைத்தும் ஒரு விசேடமான பாத்திரத்தை வகிக்கின்றன. நெருக்கமாக இணைந்துள்ளன. ஒரு ஒற்றுமை இணைப்பாக அமைந்துள்ளன, ஆனால் அவை, வர்க்கக் கண்ணோட்டத்திலிருந்து பார்க்கும் பொழுது, முரண்படும் காரணிகளாகவும் கூட இருக்கின்றன. ஒரு விசேடமான தேசியத் தன்மையினையும், அதே சமயம், பல தேசங்களிலிருந்து இரவல் பெற்ற ஒரு கலவையினையும் உள்ளடக்கியிருக்கின்றன.

மார்க்ஸ், எங்கெல்ஸ், லெனின் ஆகியோர், பொதுமொழி, பிரதேசம் ஆகியவை பற்றி வரிசைப்படுத்தி குறிப்பிட்டுள்ளனர். முதலாளித்துவ நாடுகளின் சிறப்பியல்புகளின் மத்தியில், பொதுவான பொருளாதார வாழ்க்கையை, பிரதான காரணியாக குறிப்பிட்டுள்ளனர். ஆனால், பொது வான தேசிய கலாச்சாரம் பற்றி குறிப்பிடவில்லை. இதன் பொருள், அது நிலவுவதை அவர்கள் மறுத்துள்ளனர் என்பதல்ல. அதன் முரண்பாடான வர்க்கத் தன்மையின்

னின்றும் தேசிய கலாச்சாரத்தை தனிமைப்படுத்திப் பார்ப்பது நகைப்பிற்கிடமானதாகும். பொதுவான உணர்விலிருந்து தேசிய உணர்வை தனிமைப்படுத்திப் பார்ப்பதும், சமூக மனோதத்துவவியலிலிருந்து தேசிய மனோதத்துவவியலை தனிமைப் படுத்திப் பார்ப்பதும் நகைப்பிற்கிடமானதாகும். எனவே, தேசிய கலாச்சாரம், தேசிய உணர்வு, தேசிய மனோதத்துவவியல் ஆகியவை, தேசிய கலாசாரம், மக்களின் உணர்வு, மனோதத்துவவியல் ஆகியவற்றின் சிறப்பம்சங்களை பிரதிபலிக்கின்றன எனலாம். தேசங்கள் மற்றும் தேசிய உறவுகளின் வளர்ச்சியில், மேலே கூறப்பட்ட புலப்பாட்டின் 'விசேட முக்கியத்துவத்தை பிரதி பலிக்கும் கருத்துக்களாக அவை நிலைகொண்டிருக் கின்றன. முதலாளித்துவம் சோஷலிசம் ஆகிய இரண்டின்கீழும் நிகழும் சமுதாய வளர்ச்சிப் போக்குகள் பற்றிய எந்த பகுப்பாய்விலும், அவற்றை கணக்கிலெடுத்துக் கொள்ளவேண்டியது அவசிய மாகும். அந்த அடிப்படையில் அவை நிலைகொண் டிருக்கின்றன.

காரணமாக, அவர்கள் அதனை கைவிட்டனர். தேசத்தினுள் வர்க்க சமரசத்திற்கு ஒரு கருவியாக தேசிய கலாச்சாரம் என்ற கோஷத்தை முன்னுக்கு கொண்டுவருவதில், மறைமுக மாகக் கூட முதலாளிகளுக்கு உதவ அவர்கள் விரும்ப வில்லை. அத்துடன், மிகக்கூர்மையான வர்க்க முரண்பாடுகள் நிறைந்த ஒரு காலமாகவும் அது இருந்தது. ஓட்டோ பாயரின் தேசங்கள் பற்றிய ''கொள்கைகள்'' போன்றவை அக்காலத்தில் தோன்றின. ஓட்டோ பாயரின் கொள்கையில், பொதுவான தேசிய கலாச்சாரம் ஒரு முழுமை என்ற அளவிற்கு உயர்த்தப்பட்டிருந்தது. அதனுடைய பாத்திரம் தீர்மானகரமான தன்மையுடையதாகச் சித்திரிக்கப்பட்டி ருந்தது. தேசிய கலாச்சாரம், தேசங்களின் பிரதான சிறப்பியல்பாக வரையறுக்கப்பட்டிருந்தது. அத்துடன் அது பொதுவான கதி விதியாகவும் வரையறுக்கப்பட்டிருந்தது. பாயரது கருத்துக்களின் பிழைபாட்டை லெனின் எடுத்துக் காட்டி நிரூபித்தார்.*

பொதுவான கலாச்சாரம் முதலாளித்துவ அல்லது சோஷலிச நாடுகளின் ஒரு பொதுவான கலாசார குறியீடு அல்ல என பொருள் கொள்ள இயலுமா? இல்லை. அவ்வாறு பொருள் கொள்ளவியலாது. ''ஒவ்வொரு நவீன தேசத்திலும் இரண்டு தேசங்கள் இருக்கின்றன'' என்ற லெனினது அறிக்கை, முதலாளித்துவ நாடுகள் நிலவுவதை மறுக்க வில்லை. இதனிலும் வேறு ஏதேனும் அதிகமாக அவர் குறிப்பிட்டுள்ளாரா என்று பார்ப்போம். அவரது பிறிதொரு அறிக்கையில், ''ஒவ்வொரு தேசிய கலாசாரத்தி லும், இரண்டு தேசிய கலாசாரங்கள் இருக்கின்றன''** என குறிப்பிட்டுள்ளார். அதன் மூலம், இந்த தேசங்களின் தேசிய கலாசாரம் என்று ஒன்று இருப்பதாக கூறப்படுவதை மறுத்துள்ளார். லெனினது இந்த அறிக்கை, முதலாளித்துவ

---

* வி. இ. லெனின், ''நூல் திரட்டு'', தொகுதி 41, பக். 316.

** வி. இ. லெனின், ''நூல்திரட்டு'', தொகுதி 20, பக். 32.

நிலை[illegible]ன்கீழ், தேசிய கலாசாரத்தின் இரட்டைத் தன்மை[illegible] எடுத்துக்காட்டி, அதன்பால் பொதுவான கவனத்[illegible]ர்த்துள்ளது. அதன் முரண்பாடான வர்க்கத் தன்மை[illegible]டுத்துக் காட்டியுள்ளது. தேசம் என்பதைவிட, அதற்கு மே[illegible]கமாக அதில் வேறெந்த ஒற்றுமையும் இல்லை என்ற உண்[illegible]மயை எடுத்துக் காட்டியுள்ளது. வளர்ந்து வரும் வர்க்க முரண்பாடுகளின் பின்னணியில் தேசிய கலாசாரம் என்ற கோஷம் பயன்படும் என்ற ஒரு கோஷத்தின் உறுதியான எதிர்ப்பாளராக லெனின் விளங்கினர். ஆனல் அவர் ஒரு விஷயத்தை அங்கீகரித் துள்ளார் (1913-இலேயுதிர் காலத்தில்) அதாவது, ''ஒரு நூற்றி இருபத்தைந்து வருடங்களுக்கு முன்பு, முதலாளி, தொழிலாளி என்று தேசம் பிளவுபடாமலிருந்தபொழுது நிலவுடைமைக்கும், மதபீடங்களின் ஆதிக்கத்திற்கும் எதிரான போராட்டம் நிகழ்ந்தது. அப்போராட்டத்தில், தேசிய கலாசாரம் என்ற கோஷம் ஒரு தனியொரு கோஷமாகவும், ஒருங்கிணைந்த கோஷமாகவும் இருந்திருக்க முடியும்''* என்று.

தேசிய கலாசாரத்தின் பொருள்வய, அகவய மதிப்புகளை எடுத்துக்கொள்வோம். அவை தேசிய கலாசாரத்தின் உருவமும், உள்ளடக்கமும் ஒன்றிலிருந்து மற்றொன்று தனிமைப்பட்டிருக்கவில்லை. அதன் சமுதாய மற்றும் இனக்கூறு அம்சங்கள் ஒன்றிலிருந்து மற்றொன்று தனிமைப்பட்டிருக்கவில்லை அவ்வாறே தேசிய கலாசாரத்தின் பொருள்வய, அகவய மதிப்புகள் ஒன்றிலிருந்து மற்றொன்று தனிமைப்பட்டிருக்கவில்லை. அவை எப்பொழுதும் இரண்டறக் கலந்துள்ளன. ஆனல், நாம் உதாரணமாக, ''தேசிய கலாசாரம்'' என்று கூறும்பொழுது, வழக்கமாக அகவய ரீதியிலான கலாசாரம் என்றே பொருள் கொள்கிறோம்.

தேசிய உணர்வு, தேசிய மனோதத்துவம் ஆகியவற்றைப் பரிசீலிப்போம். அவை முறையே சமுதாய உணர்விலும்,

* வி. இ. லெனின், ''நூல்திரட்டு'', தொகுப்பு 19, பக். 380.

சமுதாய மனோதத்துவத்திலும், தேசிய சமுதாயத்தை பிரதிபலிக்கின்றன. ஆனால், அத்துடன், வர்க்க உள்ளடக்கத்தில் முரண்பாடாகவும் உள்ளன.

தேசிய உணர்வு மற்றும் மனோதத்துவம் ஆகியவற்றை குறைத்து மதிப்பிடுவது எதிர்விளைவைத்தோற்றுவித்துள்ளது. குறிப்பாக, சோஷலிச ரீதியிலான மாற்றம் ஏற்படும் சூழ் நிலைமைகளில், மக்களுக்கு சர்வதேசிய உணர்வை ஊட்டும் கல்வியைப் பொறுத்தவரை எதிர்விளைவைத் தோற்றுவித் துள்ளது. இதனை வரலாறு எடுத்துக்காட்டியுள்ளது. ஆசியா விலும் ஆப்பிரிக்காவிலும் தேசங்களின் உருவாக்கத்தில், அவற்றின் விசேட பாத்திரம் குறிப்பிடத்தக்கதாகும். அவற்றின் சாராம்சத்தை நாம் ஏன் கண்டிப்பாக ஆராய வேண்டும் என்பதற்கு அது மற்றுமொரு காரணமாகும். ஆசியாவையும், ஆப்பிரிக்காவையும் பொறுத்தவரை, அரசியல் ரீதியான, பொருளாதார ரீதியான சமுதாயம் உருவாவதற்கு முன்னரே அவை பரிணமவளர்ச்சி பெற்றிருந்தன. கலாச்சார சமுதாயம் உருவாவதற்கு முன்னரே அவை ஓரளவு பரிணம வளர்ச்சி பெற்றிருந்தன என்பதேயாகும்.

மிகவும் முக்கியமான, இன்னும் சொல்லப்போனால் தீர்மானகரமான உண்மையை இவ்விஷயத்தில் நாம் கவனத் தில் கொண்டாகவேண்டும். அவ்வுண்மையை நாம் கவனத் தில் கொள்ளத்தவறினால், தேசிய உணர்வைப் பற்றியோ தேசிய மனோதத்துவம் பற்றியோ நாம் ஆராயவும் முடியாது, புரிந்துகொள்ளவும் முடியாது. அந்த உண்மை என்னவெனில், அவை வர்க்க உணர்வோடும், வர்க்கரீதி யான மனோதத்துவத்தோடும் சகவாழ்வு நடத்துகின்றன என்பதே. ஆதிக்கம் செலுத்தும் வர்க்கத்தினது உணர்வின லும், மனோதத்துவத்தினாலும் அவை ஆளுமை செய்யப் படுகின்றன என்பதே.

தேசிய உணர்வின் இருத்தலை மார்க்சும், எங்கெல்ஸும் அங்கீகரித்தனர். அவர்களது ஆரம்பகால நூல்களில்,

''தேசிய உணர்விற்கும் இதர தேசிய இனங்களின் நடைமுறைக்கும் இடையிலான, அதேபோன்று, ஒரு தேசத்தின் தேசிய மற்றும் பொது உணர்வுகளுக்கிடையிலான''* முரண்பாட்டின்பால் கவனத்தை செலுத்துமாறு அறைகூவினர். ''தேசத்தின் மனோநிலை''** என்ற கருத்தை தாராளமாக உபயோகிப்பது குறித்து, 1870-ம் ஆண்டிற்கு இடைப்பட்ட காலத்தில் எங்கெல்ஸ் ஒரு கருத்தினை வலியுறுத்திக் கூறினார். அதில், எதிர்மறையான கருத்துக்கள் ஊடுருவிட ஏற்ற நிலையிலிருந்தது என்பதை அவர் வலியுறுத்திக் கூறினார்.***

அதன் முக்கியமான பாத்திரத்தைப் பற்றி லெனின் குறிப்பிட்டுள்ளார். சிறியதும், பெரியதுமான பல ''புதிய'' நாடுகளுக்கு வாழ்வையும், உணர்வையும் முதலாளித்துவம் அளித்துக்கொண்டிருக்கின்றது என அவர் குறிப்பிட்டார்.**** அத்துடன், ''மக்களின் மனோநிலை'', ''தேசிய சித்தாந்தம்'' என்பன போன்ற பதங்களை அவர் அடிக்கடி உபயோகித்தார். ''தேசிய உணர்வு'' என்ற அர்த்தத்தில் அது முழுமையாகவும் திட்டவட்டமாகவும்***** இருந்தது.

தேசிய உணர்வு என்பது, சமுதாய உணர்வின் பகுதியாகும். உள்நாட்டில் நிலவும் தேசிய உறவுகளின் தொகுப்பினை உள்ளடக்கிய ஒரு தேசத்தின் அறிவுணர்வை அது பிரதிபலிக்கின்றது. தேசிய மனோதத்துவமும் அதில் உட்படும். சர்வதேச உறவுகளின் அனைத்து துறைகளும் சம்பந்தப்பட்ட அறிவுணர்வும் அதில் உட்படும். புரிந்துகொள்ளத்

---

*கார்ல் மார்க்ஸ், பிரெடரிக் எங்கெல்ஸ், ''ஜெர்மானிய தத்துவம்'', பக். 43.

**மார்க்ஸ், எங்கெல்ஸ், ''தொகுப்பு நூல்கள்'', தொகுதி 2, பக். 148, 149; தொகுதி 3, பக். 473.

***பிரெடரிக் எங்கெல்ஸ், ''டூரிங்கிற்கு மறுப்பு'', பக். 211

****வி. இ. லெனின், ''நூல் திரட்டு'', தொகுதி 21, பக். 103.

***** அதே நூல், தொகுதி 20, பக். 237, தொகுதி 21, பக். 160, 313.

தக்க வகையில் கூறவேண்டுமானால், ஒரு பெருமளவிற்கோ அல்லது சிறு அளவிற்கோ, தேசிய உணர்வு என்பது, வர்க்க உணர்வினால் முன்கூட்டியே தீர்மானிக்கப்படுகின்றது எனவே, தேசிய உணர்வு என்பது, எப்பொழுதுமே ஒரு வர்க்கத்தன்மையைக் கொண்டிருக்கிறது.

தேசியஉணர்வின் ஒரு பகுதியேதேசியசுயவிழிப்புஎன்பது. ஒரு தேசம் தனது அறிவுணர்வை அதன் இருத்தலை அதில் பிரதானமாக பிரதிநிதித்துவப் படுத்துகின்றது. அது, ஒரு சாராம்சமான சமுதாய வர்க்க உள்ளடக்கத்தை முன் வைக்கின்றது. அதே சமயம், இனரீதியான சுயவிழிப்பு என்பது முதலாவதாகவும் முக்கியமாகவும் இனச்சிறப்பியல்புகளை அடித்தளமாகக் கொண்டிருக்கின்றது என்பதையும் நாம் கவனத்தில் கொள்ளவேண்டும்.

தேசிய உணர்வு என்பது மூன்று காரணிகளை அடிப்படையாகக்கொண்ட ஒரு பன்முகக் கட்டமைப்பு: வர்க்க நலன்கள், தேசிய பிணைப்புகள், சர்வதேசிய உறவுகள்.

பிரதான ஆதார அம்சங்களாவன:

(அ) ஒரு பன்முகக் கட்டமைப்புடைய தேசிய சுயவிழிப்பு அது, மற்ற விஷயங்களுக்கு மத்தியில் இன ரீதியிலான சுய விழிப்பையும் தழுவியுள்ளது. தேசிய சமுதாயத்தின் தேவை மற்றும் தேசிய பிணைப்பு குறித்த விழிப்புணர்வு ஆகிய வற்றின் ஒரு பொதுவான வடிவத்தில் அது பிரதிபலிக்கின்றது;

(ஆ) தேசிய கருத்துக்கள், தேசிய நலன்கள், தேசிய பெருமிதம் (தேசபக்தியில் திளைத்த தேசியம் உட்பட), தேசிய உணர்வுகள், தேசிய பாரம்பரியங்கள், வாழ்க்கை முறையின் தேசிய அம்சங்கள்;

(இ) வரலாற்றைப் படைக்கும் தேசத்தின் ஆற்றல் மிகவும் குறிப்பிடத்தக்கதாகும். அது, அதன் தேசிய ஆக்கக் கூறினை மதிப்பதிலிருந்து பிரதிபலிக்கப்படுகின்றது. அது அரசாங்கத்தைப் பெற்றிருந்தால், அந்த அரசின் சுயாதிபத்திய உரிமையின் மதிப்பிலிருந்து பிரதிபலிக்கப்படுகின்றது.

உலக சமுதாயத்திற்கு அதன் பங்கினை செலுத்தும் முயற்சியிலிருந்து பிரதிபலிக்கப்படுகின்றது.

(ஈ) தேசங்கள், தேசிய இனங்கள், தேசிய மற்றும் இனக்குழுக்களுடனான, உறவுகளின் அனைத்து அம்சங்கள் குறித்த விழிப்புணர்வு.

தேசம் என்பது தனித்து நிலவிட முடியாது, குறிப்பாக சோஷலிசத்தின்கீழ் அது சாத்தியமல்ல. தேசிய இனங்களின் முற்போக்கான வளர்ச்சியில் மக்கள் அனைவருக்கும் பொதுவானஒரு எதிர் காலமே உள்ளது. இதர தேசிய இனமக்களின் சுதந்திரமான வளர்ச்சிக்கான உரிமையை மதிக்கவேண்டும், அவர்களது சாதனைகளை மதிக்கவேண்டும். தேசியத்தோடான உறவில் சர்வதேசியக் கூறின் தலைமைப் பாத்திரத்தை அங்கீகரிக்கவேண்டும். சர்வப் பொதுவான மனிதகுல விருப்பங்களைப் புரிந்துகொண்டு அங்கீகரிக்க வேண்டும். தேசபக்தியின் ஒரு ஆதாரசக்தியாக சர்வதேசியத்தை உணர்ந்து அங்கீகரிக்கவேண்டும். மேலே கூறியுள்ள உண்மைகளைப் பற்றிய தனிநபர்களின் பிரிவில் தேசிய உணர்வு மட்டத்தின் பிரதிபலிப்பைக் காணலாம்.

தேசத்தின் வழி நடத்தும் சக்தியாக இருக்கின்றபொழுது, முதலாளித்துவத்தின் தேசிய உணர்வில், பல தற்காலிக அம்சங்கள் காணப்படலாம்: நிறவெறியின் பல்வேறு இணைப்புகள், வடிவங்கள், தேசியவாதம் அல்லது குறுகிய தேசிய வெறி, ஒரு மிகைப்படுத்தப்பட்ட தேசியப் பெருமித உணர்வும் தேசபக்தியும், உலக வரலாற்றில் தேசத்தின் பங்கினைப் பொறுத்தவரை, அல்லது இதர மக்களைப் பொறுத்தவரை காணப்படும், தேசிய விரோத குரோதங்கள், விருப்பு வெறுப்புகள், ஆத்திரங்கள் போன்றவை.

இருவழிகளில் தேசிய உணர்வு உருப்பெறுகின்றது: (அ) தேசத்தின் வாழ்க்கை மற்றும் சாதாரண உணர்வு மட்டத்திலான அதன் உறவுநிலைகள் ஆகியவற்றின் பிரதிபலிப்பை அடிப்படையாகக் கொண்டு முன்செல்லுதல்; (ஆ) தேசத்தின் வளர்ச்சி மற்றும் இதரநாடுகளுடனான

அதன் உறவுகள் ஆகியவைபற்றிய விஞ்ஞான பூர்வமான பொதுமைப் படுத்துதலை மக்களின் அங்கீகாரத்தின் மூலம் முன்னுக்குக் கொண்டு செல்லுதல்.

தேசிய உணர்வு, தேசிய மனோதத்துவத்துடன் ஒரு பன்முக ஒற்றுமையைக் கொண்டுள்ளது. ஆனால் அவை முற்றிலும் இணைந்து சேர்ந்து இருக்கவில்லை. அவற்றில் எதுவும் இயல்பாகவே முற்றொருமையுடையனவல்ல. முன்னது, பிரதானமாக ஒரு சித்தாந்தக் காரணியாக திகழ்கின்றது. அதேசமயம் பின்னது, மனித நடவடிக்கையின் உள்ளுணர்வினது ஒரு வெளிப்பாடாக திகழ்கின்றது.

தேசிய உணர்விற்கும், தேசிய மனோதத்துவத்திற்கு மிடையிலான பிரிகோடு, சில சமயங்களில் பிறழ்ந்து காணப்படுவது உண்மைதான். உதாரணமாக, தேசியப்பெருமிதம், தேசபக்தி, பாரம்பர்யங்கள் இவற்றைப்பற்றிப் பேசுவதும் அதேசமயம், தேசிய உணர்வின் இந்த முக்கிய அம்சங்களுக்கும், தேசிய மனோதத்துவத்தின் முக்கிய பாகமாக இருக்கின்ற தேசியத் தன்மை, தேசிய உணர்ச்சிகள் போன்றவற்றிற்கும் இடையிலான உறவைப் புறக்கணிப்பதும் முட்டாள்தனமானதே.

தேசிய மனோதத்துவம் எவற்றையெல்லாம் உள்ளடக்கியிருக்கின்றது? (அ) தேசியத்தன்மை; (ஆ) தேசிய உணர்ச்சிகள்; (இ) கிளர்ச்சி உணர்ச்சியிலும், மனோநிலையிலும், பழக்க வழக்கங்களிலும் காணப்படும் தேசிய அம்சங்கள்; (ஈ) தேசிய பாரம்பர்யங்கள் பழக்கங்களின் மனோதத்துவ ரீதியான அடிப்படை. தேசிய மனோதத்துவம், தேசத்தின் சமுதாய, பொருளாதார, அரசியல், சித்தாந்த வாழ்க்கையினால் உருக்கொடுக்கப் படுகின்றது. அத்துடன் பொதுவான வரலாறு, பொதுவான இயற்கை, பூகோள ரீதி சூழ்நிலைகள் ஆகியவற்றினாலும் உருக்கொடுக்கப்படுகின்றது.

முன்மாதிரி பகைமை சமுதாயங்கள் அத்துடன் வர்க்க முரண்பாடான சமுதாயங்களில், தேசங்களின் சிறப்பு

அம்சங்கள் என்பவை, தேசிய பழக்க வழக்கங்களும், பாரம்பர்யங்களுமேயாகும். அவை ஒரு தேசத்தின் வாழ்க்கையை எடுத்துக்காட்டுகின்றன—அதன் உற்பத்தி நடவடிக்கை, வாழ்க்கை முறை, வரலாறு, இதர மக்களுடனுன உறவுகள் இவை போன்றவற்றை எடுத்துக்காட்டுகின்றன. தேசிய கலாசாரம், உணர்வுகள் ஆகியவற்றின் பல்வேறு அம்சங்களைக் கொண்ட, மக்களது வாழ்க்கையின் மனுேதத்துவ ரீதியான, அறநெறி ரீதியான பல்வேறு அம்சங்களைக் கொண்ட ஒரு கலவையாக பழக்க வழக்கங்களும், பாரம்பர்யங்களும் உருக்கொண்டுள்ளன. சில தொழில்களின் வழக்கங்கள், பாரம்பர்யமான திருவிழாக்கள் மற்றும் கொண்டாட்டங்கள், குடும்ப மரபுகள், ஸ்தல உடையணி முறைகள், குழந்தைகளின் கல்வி, விருந்தினர்களை உபசரித்தல், திருமணம் மற்றும் இறுதிச் சடங்குகள் போன்றவற்றில் இவற்றைக் காணலாம்.

தேசிய பழக்கவழக்கங்களும், பாரம்பர்யங்களும் நிலையான தன்மையுடையவையே என்றபோதிலும், அவை உண்மையில் மாற்றமுடியாதவையோ அல்லது உறுதியான தேசியத்தன்மை கொண்டவையோ அல்ல. தேசத்தின் வாழ்க்கையில் ஏற்படும் மாற்றங்களால் அவை வன்மையாக பாதிக்கப்படுகின்றன. குறிப்பாக சமுதாய-பொருளாதாரத் துறைகளில் ஏற்படும் மாற்றங்களால் பாதிக்கப்படுகின்றன. சரித்திர ரீதியான திருப்பங்களாலும், இதர மக்களுடனுன உறவுகளாலும் பாதிக்கப்படுகின்றன. இதர தேசிய இனங்களின் வெளிச் செல்வாக்கினுலும்கூட, பழக்க வழக்கத்திலும், பாரம்பர்யங்களிலும் மாற்றங்கள் ஏற்படுகின்றன.

ஒரு சரித்திர ரீதியான சமுதாயம் என்ற முறையில், அதன் சாராம்சத்தைப்பற்றிய அதன் மிகவும் மென்மையான அம்சங்கள் பற்றிய ஒருவிரிவான படத்தை, ஒரு தேசத்தின் சிறப்பியல்புகளின் பட்டியில் அளிப்பதில்லை. சிறப்பியல்புகளின் அம்சங்களின் பக்குவப்பட்ட தன்மையின் அளவு, அவற்றின் விசேடமான இணைப்பு ஆகியவற்றின்மீதே

முழு விஷயமும் சார்ந்துள்ளது. உதாரணமாக, ரஷ்ய உக்ரேனிய மக்கள் பிரதான அம்சங்களில் ''மொழி, பிரதேசம், குணவியல், வரலாறு ஆகியவற்றில், ஒன்று மற்றென்றுடன் மிகவும் நெருக்கமாக இருக்கின்றது,''* என்று அதனைப் பற்றி லெனின் குறிப்பிட்டுள்ளார். ரஷ்ய, உக்ரேனிய தேசியஇன மக்கள், ஏறத்தாழ அதிகபட்சம் ஒரே மாதிரியாக இருக்கின்றனர். என்றபோதிலும், இன்னமும், ரஷ்யர்களும் உக்ரேனியர்களும் இருவேறுபட்ட தேசிய இனங்களாகவே அமைந்துள்ளன.

பல்வேறு தேசங்களின் வரலாற்றில், பலவித சிறப்பியல்புகள் இருக்கின்றன. அவற்றின் முக்கியத்துவம் ஒரே மாதிரியாக இருப்பதில்லை. ஒரு விஷயத்தை முதலில் எடுத்துக்கொண்டு பரிசீலிப்போம். ஒவ்வொரு பிரதேசமும், ஒரு தேசத்தின் உருவாக்கத்திற்கான, இயற்கையானபூகோள ரீதியான சூழ்நிலையைக் கொண்டிருக்கவில்லை. ஒவ்வொரு பொருளாதார சமுதாயக்கூட்டும் ஒரு தேசமாக அமைந்துவிடுவதில்லை. கலாசார வளர்ச்சியின் எந்த ஒரு அளவும் இவ்வாறுக ஒருதேசத்தை உருவாக்கபோதுமானதாக இல்லை. ஒரு தேசத்தை உருவாக்கும் பிரதானமான அம்சங்கள் அவற்றின்வளர்ச்சியின் சரித்திர ரீதியான அம்சங்களின்மீதே சார்ந்துள்ளன. எந்த சகாப்தத்தில் அது உருவாகின்றதோ அதன் மீதே அவை சார்ந்துள்ளன. மார்க்சிய—லெனினிய மூல நூல்கள் இவ்வாறுக இதனை தெளிவுபடக் கூறியுள்ளன.

ஒரு தேசத்தின் பொருளாதார அடிப்படைக்கு அதன் ''பொருளாதார சிறப்பியல்பிற்கு'', லெனின் மகத்தான முக்கியத்துவத்தை அளித்தார் என்பது உண்மையே. ஏற்கெனவே தயாராக உள்ள ஒரு பொருளாதார சமுதாயத்தின் அடித்தளத்தின் மீது ஒரு தேசம் தோன்றுகின்றது என்பதல்ல. பொருளாதார சமுதாயம் வடிவுற்ற பிறகு மாத்திரமே ஒரு தேசம் தோன்றுகின்றது என்பதே அதன் பொருள். பல்வேறு வட்டாரங்கள், பிரதேசங்களி

*வி. இ. லெனின், ''நூல்திரட்டு'', தொகுதி 25, பக். 91.

லுள்ள மக்கள் ஒரு தேசமாக ஒருங்கிணைவதற்கு பின்னு லுள்ள காரணி எது? பொருளாதார உறவுகளே என்பது லெனினது கருத்து. லெனினது இந்த கருத்திற்கு மேலாக வேறொன்றையும் அதிலிருந்து பொருள்கொள்ள முடியாது. ஆனால், உண்மையில், பல இடங்களில் இதற்கு முற்றிலும் மாறான நிலைகளும் உள்ளன.

காலனி நாடுகளிலுள்ள பொருளாதார பிரிப்பு நடவடிக்கைகள் பற்றியும், அங்குள்ள அரை நிலவுடமை அமைப்பு பற்றியும் லெனின் குறிப்பிட்டுள்ளார். பல ஒடுக்கப்பட்ட நாடுகளின் மக்களும் தேசங்களாகவே தங்களை அமைத்துக் கொண்டிருப்பதை அப்போது அவர் கருத்தில் கொண்டிருந்தார். 1916-ல் அவர் எழுதியதாவது, ''காலனிகளை விடுதலை என்பதின் பொருள், தேசங்களின் சுயநிர்ணய உரிமை என்பதாகும். காலனி மக்கள் இனங்களும் கூட தேசங்களும் என்பதே ஐரோப்பியர்கள் அடிக்கடி மறந்து விடுகின்றனர். ஆனால், நாம் இந்த ''மறதியை'' பொறுத்துக் கொள்வதென்பது, குறுகிய தேசிய வெறியை பொறுத்துக்கொள்வதாகும்.''*

சில நாடுகளில், பொருளாதார நடவடிக்கையை அடிப்படையாகக் கொண்ட சமுதாயத்தின் தோற்றமும், தேசத்தின் தோற்றமும் ஒருசேர நிகழ்ந்துள்ளன. ஒன்றிற்கொன்று பக்கத்துணையாகவும் இருந்துள்ளன. பொருளாதார கூட்டு சமுதாயம், தன்னை உறுதிப்படுத்திக் கொள்ளவும், வளர்க்சுவுமான வடிவமே தேசமாகத்தான் இருந்தது. மறுபுறம், தேசம் தன்னை ஒற்றுமைப்படுத்திக் கொள்ளவும், ஒருங்கிணைக்கவும், முன்னேற்றத்தை உறுதிப்படுத்தவும், பொருளாதார கூட்டு நடவடிக்கைச் சமுதாயம் ஒரு கருவியாக இருந்தது. பல மேற்கு ஐரோப்பிய நாடுகளின் விஷயத்தில் இது உண்மையாகவே இருந்தது. அதே வளர்ச்சிப் போக்கு, பல ஆசிய, ஆப்பிரிக்க நாடுகளில் இப்பொழுது நிகழ்ந்துகொண்டிருக்கக் காணலாம்

* வி. இ. லெனின், ''நூல்திரட்டு'', தொகுதி 23, பக். 63.

அங்கெல்லாம், விசேடமான சரித்திர சூழ்நிலைமைகளின் காரணமாக, பொருளாதார கூட்டு சமுதாயம் இன்னமும் ஏற்படவில்லை. ஆனல், தேசவிடுதலை, தேசிய அரசுத்துவம் போன்ற பெருவிருப்பங்கள், தேசத்தை உருவாக்கும் காரணி களிலொன்ருக செயல்படுகின்றன. அரசியல், கலாசார வளர்ச்சி இரண்டிற்கும் ஒரு வடிவமாக தேசம் மாறியிருக்கின்றது. அத்துடன், பொருளாதார ஒற்றுமைக்கும் முன்னேற்றத்திற்குமான ஒரு வடிவமாகவும் மாறி இருக்கின்றது.

* * *

வேறுபாடான அம்சங்கள், குறியீடுகள் ஆகியவற்றைக் கொண்டு, தேசங்களின் வர்க்கப்பிரிவினைகளை ஆய்ந்தறி கிரேம்—அதனை **தேசங்கள் பற்றிய லட்சண இயல்** என அழைக்கிரேம்—அது தேசங்கள் பற்றிய மார்க்சிய-லெனினியக் கொள்கையின் ஒரு பகுதியாகும்.

மார்க்சிய-லெனினிய மூலநூல்கள், தேசங்களை எவ்வாறு வரையறை செய்துள்ளன? உற்பத்திமுறை அல்லது வளர்ச்சியின் கட்டம் ஆகியவற்றை பிரதிபலிக்கும் லட்சணத்தைக் கொண்டு வரையறை செய்துள்ளன. தேசிய சமுதாயம் என்பதில், இருவகைகளை அம் மூல நூல்கள் குறிப்பாக எடுத்துக் காட்டியுள்ளன—**முதலாளித்துவ நாடுகள், சோஷலிச நாடுகள்** என்பவைகளே அவை.

மூலதனம் ஆதிக்கம் செலுத்தும் நாடுகளை, முதலாளித்துவ நாடுகள் என அழைக்கிரேம். எதைக் கொண்டு அவ்வாறு அழைக்கிரேம்? அந்நாடுகளின் உருவாக்கத்திலும், வளர்ச்சியிலும் முதலாளிகள் வகிக்கும் பாத்திரத்தைக் கொண்டு அவ்வாறு அழைக்கிரேம். ஆனல், முதலாளித்துவம் ஏறுமுகமாக இருந்த காலகட்டத்தில், பிரதானமாக அவ்வாறு கூறுவது நியாயமாக இருந்தது. ஏகாதிபத்தியம் தோன்றிய ஆரம்ப கட்டத்தில், இது பகுதியளவிற்கு மட்டுமே உண்மையாக இருந்தது.

முதலாளித்துவப் பொது நெருக்கடியின், படிப்படியான கட்டங்களில் தோன்றிய ஆழமான சமுதாய மாற்றங்கள், அதேபோன்று அக்டோபர் புரட்சியினது தாக்கம், அதிலும் குறிப்பாக உலக சோஷலிச அமைப்பின் தோற்றமும் வளர்ச்சியும் ஆகியவை குறிப்பிடத்தக்கனவாகும். அவை, கணிசமான அளவிற்கு முதலாளித்துவ நாடுகளின் உள்நாட்டு வாழ்க்கையை பாதித்தன. அதன் விளைவாக மிகமிக அதிகமாக குறிப்பிடத்தக்க பாகுபாடு தோன்றியது. அதாவது, ஒருபுறம், தொழிலாளி வர்க்கத்திற்கும், இதர அனைத்து உழைக்கும் மக்களுக்கும், மறுபுறம் தேசத்தின் ஏகாதிபத்திய முதலாளிகளுக்கும் இடையிலான வேறுபாடு தோன்றியது. அகவளச் செல்வாக்கின் பொதுவான ஆரம்ப அம்சங்கள் அழிந்தொழிந்தன. தேசத்தின் வாழ்விலும், வளர்ச்சியிலும் முதலாளிகளின் தலைமைப் பாத்திரம் இறங்கி விட்டது. ஒரு உறுதியான, நிலையான பெரும் பாத்திரத்தை தொழிலாளி வர்க்கம் வகிக்கத் துவங்கிவிட்டது. அந்நிய சக்திகளுக்கு எதிராக தேசிய நலன்களைப் பாதுகாப்பதில் மட்டுமல்ல. ஆனல், அத்துடன், தேசியத் தன்மையின் அனைத்து உண்மையான அம்சங்களையும்—அதாவது, மொழி, கலாசாரம், பாரம்பர்யம்—வளர்ப்பதிலும் அது முன்னணிப் பாத்திரம் வகிக்கத் துவங்கிவிட்டது. அதேபோன்று, தேசத்தின் அனைத்து பொருளாயத, கலாசார மதிப்புகளை வளர்ப்பதிலும் முன்னணிப் பாத்திரம் வகிக்கத் துவங்கி விட்டது.

சமுதாய வளர்ச்சியின் புறநிலை ரீதியான வளர்ச்சிப்போக்கு லெனினது கருத்தை உறுதிசெய்து விட்டது. அக்டோபர் புரட்சிக்கு சற்று முன்னதாக லெனின் அக்கருத்தினை முன்வைத்தார். அதாவது, ஒரு தேசத்தின் ஒற்றுமையை நிர்மானிக்கும் காரணியாக, முன்னேறிய முதலாளித்துவ நாடுகளில், தேசிய சமுதாயம் என்ற கோஷம் விளங்கியது. ஆனல், முதலாளித்துவ நாட்டிலுள்ள வர்க்கங்களுக்கிடையிலான உறவு நிலைமை, ''நீண்ட காலத்திற்கு முன்பே அதன் குறிக்கோளின் எல்லை கடந்தது மிகையாகி விட்டது;

புறநிலை ரீதியாக எடுத்துக் கொண்டால், நிறைவேற்றத்தக்க 'பொதுவான தேசியக் கடமைகள்' எதுவும் அங்கே இருக்கவில்லை''* சமுதாய வளர்ச்சியில் தலைமை இடம், வர்க்க முரண்பாடுகளுக்கு சென்று விட்டது. அதன் விளைவாக, பல்வேறு வர்க்கங்களைக் கொண்ட மக்களின் தேசிய சமுதாயம் என்பதைவிட, பல்வேறு தேசிய இனங்களைக் கொண்ட மக்களின் வர்க்க சமுதாயம் என்பது மிகவும் முக்கியமானதாக மாறிவிட்டது. இதனைப் பற்றி லெனின் கூறியதாவது, ''ஒருநாட்டில், எந்த உண்மையான, கடுமையான தெளிவான அரசியல் பிரச்சினை எழுந்தாலும் தேசிய இனம் என்ற அடிப்படையில் இல்லாமல், வர்க்கங்கள் என்ற அடிப்படையிலேயே நிலைகள் எடுக்கப் படுகின்றன.''**

ஆனால், மேலே விவரிக்கப்பட்டுள்ள வளர்ச்சிப் போக்குகள் தவிர்க்கமுடியாதவை எனக் கண்டு முதலாளித்துவம் உச்சகட்டத்தில் ஏறிக்கொண்டிருந்த காலகட்டத்தில், தேசங்களின் வளர்ச்சி பற்றிய அவர்களது பகுப்பாய்விலும் தத்துவத்திலும், ''முதலாளித்துவ நாடு''*** என்ற ஒரு கருத்துருவை, மார்க்சும் எங்கெல்சும் ஏறத்தாழ மிக விரிவாக உபயோகித்தனர். லெனினும்கூட, அந்த பதத்தை திரும்பத்திரும்ப பயன்படுத்தியுள்ளார்.****''முதலாளித்துவ

* வி. இ. லெனின், ''நூல்திரட்டு'', தொகுதி 23, பக். 59.

** வி. இ. லெனின், ''நூல்திரட்டு'', தொகுதி 20, பக். 36.

*** மார்க்ஸ், எங்கெல்ஸ், ''நூல்கள்'', பெர்லின், 1962, தொகுதி 19, பக். 111; காரல் மார்க்ஸ், பிரெடரிக் எங்கெல்ஸ், ''தெரிவு செய்யப்பட்ட நூல்கள்'' (மூன்று தொகுதி 1), பக். 107; கார்ல் மார்க்ஸ், மூலதனம், மாஸ்கோ, 1972, பக். 256.

**** வி. இ. லெனின், ''நூல்திரட்டு'', தொகுதி 1, பக். 102, 393; தொகுதி 3, பக். 64, 66; தொகுதி 13, பக். 77; தொகுதி 15, பக். 229; தொகுதி 23, பக். 60; தொகுதி 29, பக். 190.

நாடுகள்''* ''ஏகாதிபத்திய நாடுகள்'' என்ற அவருடைய மேற்கோள்கள் மிகச் சிலவேயாகும்—அந்த முன்னைய கருத்தோட்டமும்கூட, மத்திய காலத்திலிருந்து முதலாளித்துவ காலகட்டத்திற்கு மாற்றமுற்ற கட்டத்தில் தேசங்களைப் பற்றி குறிப்பிட்டவையாகும். பின்னைய கருத்தோட்டம், ஏகாதிபத்திய சகாப்தத்தின் துவக்க காலத்தில் எழுந்ததாகும். அல்லது, மேலும் துல்லியமாக கூறுவதாயின், முதலாவது உலக யுத்த காலகட்டத்தில் எழுந்ததாகும். ''பூர்ஷுவா தேசம்'' என்பதுடன் ஒப்பிடும் பொழுது ''முதலாளித்துவ நாடு'' என்ற பதம் மிகவும் பலதை உள்ளடக்கியதாக உள்ளது. அது மாத்திரமல்ல, அத்துடன், லெனினால் அறிமுகப்படுத்தப்பட்ட ''சோஷலிஸ்டு தேசம்'' என்ற பதத்துடன் இணையாக பார்த்தால், மிகவும் பொருத்தமாக இருப்பதை காணலாம்.

தேசங்கள் தோன்றி மிக நீண்ட காலமாகின்றது. பலவித கட்டங்களை கடந்து அவை பக்குவமடைந்துள்ளன. அவை ஒரே வகையினவாக இருந்தாலும்கூட, தன்மையில் மாறுபடலாம். முதலாளித்துவ தேசங்களைப்பற்றி குறிப்பிடுகையில், உதாரணமாக, மார்க்ஸ், எங்கெலஸ், லெனின் ஆகியோர், வெறுமனே ''முதலாளித்துவ தேசம்'' என்ற பதத்தை உபயோகிக்கவில்லை. அதற்கு மாறாக, ''உயர்ந்த வளர்ச்சி பெற்ற முதலாளித்துவ தேசம்'' ''முதலாளித்துவ ரீதியில் வளர்ச்சியடைந்துவிட்ட தேசம்'', அல்லது ''ஏகாதிபத்திய தேசம்'' என்ற பதத்தையே அவர்கள் உபயோகித்தனர். சோஷலிச தேசம்கூட, ஒவ்வொரு கட்டத்திற்கேற்ப, தனது வேறுபாடான தன்மைகளைக் கொண்டிருக்கின்றது. சோஷலிசம் நிர்மாணிக்கப்பட்டுவரும் வளர்ச்சியடையாத கட்டத்திலும், சோஷலிசம் வளர்ச்சி பெற்றுவிட்ட கட்டத்திலும் அதன் தன்மைகள் வெவ்வேறாக இருக்கின்றன. வளர்ச்சிபெற்ற சோஷலிசம், சாராம்சத்தில் கம்யூனிசத்தை

* லெனின், ''நூல்திரட்டு'', தொகுதி 21, பக். 440.

நோக்கி வளரும்பொழுது, சந்தேகத்திற்கிடமின்றி, புதிய குணவியல் ரீதியான மாற்றங்களை பெறும்.

ஒரே மாதிரியான தேசங்களில்கூட வேறுபாடான அம்சங்கள் இருக்கின்றன. ஆனல் அவற்றைவிட, வேறுபட்ட வகைகளைச் சேர்ந்த தேசங்களுக்கிடையிலான வேறுபாடு, அதாவது முதலாளித்துவ சோஷலிச நாடுகளுக்கிடையிலான வேறுபாடு, மிகமிக முக்கியமானதாகும். அவற்றின் மூலஸ்தானம், சமுதாய, பொருளாதார, அரசியல் மற்றும் அகவளர்ச்சி அம்சங்களின் சாராம்சத்திலும், சமுதாய கட்டமைப்பிலும், வர்க்க உறவுகளின் தன்மையிலும் கடைப்பிடிக்கப்படும் எதிர்மறையான கொள்கைகளில் துல்லியமாக காணப்படுகின்றது. சமுதாய-பொருளாதார, அரசியல் மற்றும் கலாசார வளர்ச்சி மட்டத்தில், சோஷலிச தேசம், முதலாளித்துவ தேசத்தைவிட மேலுயர்ந்து வருகின்றது. இது முதலாளித்துவத்தைவிட, சோஷலிசம் பெற்றுள்ள சாதகங்களால் பெறப்பட்டுள்ளதாகும். அத்துடன், முதலாளித்துவ சகாப்தத்தில் ஒன்றுதிரட்டப் பட்ட, மக்களின் பொருளாதார, கலாச்சார சாதனைகளை பாதுகாக்கவும், பெருக்கவும் முடிந்துள்ளதின் விளைவாகும்.

சோஷலிச மாற்றத்தைத் தொடர்ந்து ஒரு தேசம் அதன் முதலாளித்துவ வளர்ச்சிக் கட்டத்தில் பெற்ற எந்த சிறப்பியல்புகளையும் இழப்பதில்லை. ஒரு தேசத்தின் தனித்தனி மாநிலங்கள் என்ற முறையில் அல்ல, பல்வேறு தேசிய இனங்களைக்கொண்ட ஒரு சோஷலிச அரசின் பகுதியாக வளர்ச்சி பெற்றுள்ளன. அவ்வாறு வளர்ச்சி பெற்றுள்ள போதிலும், தேசங்களின் சிறப்பியல்புகள் அவ்வாறே தொடர்ந்து இருந்து வருகின்றன. வர்க்க உள்ளடக்கத்தில், குணம்சரீதியில், அவை தீவிரமான மாற்றமடைந்துள்ளன என்பது உண்மையே. அதிலும் குறிப்பாக, இதர தேசங்களி லிருந்து பெறப்பட்டுள்ள சிறப்பியல்புகளுக்கும், தேசிய ரீதியான விசேட தன்மைக்குமிடையிலான உறவு நிலை மையைப் பொறுத்தவரை, அவை தீவிரமான மாற்றமடைந் துள்ளன. சோஷலிசத்தை அடைவதற்கு முன்னல் ஒரு

தேசம் தனது சிறப்பியல்புகளில் சிறிது மாற்றத்தை கொண்டிருந்தது. அதன்பின், புதிய சிறப்பியல்புகளும் கூட தோன்றலாயின. முதலாளித்துவ தேசங்களிலிருந்து சோஷலிச தேசத்தை அடிப்படையில் வேறுபடுத்திக் காட்டும் காரணி இதுவே. அதன் விளைவாக, வளர்ச்சியுற்று வரும் நடவடிக்கையில், சோஷலிச தேசம் சாதாரண பழைய தேசிய சமுதாயமாக இல்லை என்பது தெளிவு. ஆனால், குணம்சரீதியில் ஒரு புதிய சமுதாய மக்களைக் கொண்டதாக இயங்குகின்றது. மக்களுக்கிடையிலான உறவுகளிலும், பிணைப்புகளிலும், ஒரு புதிய வடிவத்தை கொண்டிலங்குகின்றது.

முதலாளித்துவ தேசங்கள் வர்க்கப் பகைமைகளால் சிதைந்து கிடக்கின்றன. அவற்றோடு ஒப்பிடுகையில், சோஷலிச தேசம், அடிப்படையான வர்க்க நலன்களிலும், குறிக்கோள்களிலும் ஒன்றுபட்டு திகழ்கின்றது. அந்த ஒற்றுமையின் காரணமாக அவற்றிலிருந்து வேறுபட்டு காட்சியளிக்கின்றது. அதன் விளைவாக, தேசிய ஒற்றுமை என்பது, சர்வதேசியத்திலும் அதே போன்று தேசியக் காரணிகளிலும் வேர் கொண்டுள்ளது. இந்த தேசிய ஒற்றுமை, முன்னைய தன்மையிலிருந்து முற்றிலும் வேறுபட்டதாகவும், குறிப்பிடத்தக்க அளவிற்கு மிக நீடித்த தன்மையுடையதாகவும் திகழ்கின்றது. சோஷலிச சர்வதேசியம், தொழிலாளி வர்க்கத்தின்—அதாவது சோஷலிச தேசங்கள் வழிநடத்தும் வர்க்கத்தின்—கொள்கை, தத்துவம், சமுதாய நடைமுறை ஆகிய அனைத்தின் சாரம்சத்திலும் செயல்படுகின்றது. அத்துடன் அதன் நேச சக்திகளையும், உழைக்கும் விவசாயிகளையும், மக்களின் அறிவு ஜீவிகளின் சாரத்தையும் அது குறிக்கின்றது.

தேசிய கலாசாரம், தேசிய உணர்வு, மனோதத்துவம், பழக்கவழக்கங்கள், பாரம்பர்யங்கள் ஆகியவை தொடர்ந்து நீடிப்பதற்கு, சோஷலிசம் உத்திரவாதம் அளிக்கின்றது. அவற்றின் தீவிரமான அடுத்தகட்ட மாற்றத்திற்கும் வழி வகுத்துள்ளது. அவற்றின் முன்னேற்றகரமான, வளர்ச்சிக்

கான; முன்னென்றும் கண்டிராத வாய்ப்புகளையும் அளித்துள்ளது. மக்களின் வாழ்க்கையில் தேசியத்திற்கு முரணானதாக சோஷலிசம் இருக்கிறதென்றும், இந்த தேசியத்திற்கு மாற்றாக சர்வதேசியத்தை முன்வைக்கிறதென்றும் கூறப்படும், கம்யூனிச எதிர்ப்புப் பிரசாரங்கள், முற்றிலும் ஆதாரமற்றவையாகும். உண்மையில், தேசிய காரணிகள் சற்று மாற்றமடைந்து, மிகவும் முன்னேறிய வடிவத்தில் தொடர்ந்து நீடிக்கவே செய்கின்றன. சமுதாயத்தின் ஒற்றுமையை செழுமைப்படுத்தி அதன்கூட்டுவலிமை விருத்தி செய்யப்படுகின்றது. மேலும், தேசிய சமுதாயங்களின் பாத்திரமும், முக்கியத்துவமும் மிக திட்டமானவையாக மாறிவிடுகின்றன. ஏனெனில், தேசிய வடிவம், வர்க்க உள்ளடக்கத்தோடு பிணைக்கப்பட்டுள்ளது.

சோஷலிசத்தின்கீழ், கடந்த காலத்தின் மிச்சசொச்சமாக தேசியம் குறைக்கப்படவில்லை. அது ஒரு பன்முக மாற்றமும், வளர்ச்சியும் பெறுகின்றது. தேசிய உணர்வு, கலாசாரம், பழக்கவழக்கங்கள், பாரம்பர்யங்களில் பல புதிய ஆதார அம்சங்கள் தோன்றுகின்றன. சோஷலிசத்தை நிர்மாணிப்பதிலான, தேசத்தின் சாதனைகளால், இந்த புதிய அம்சங்கள் பாதுகாக்கப்படுகின்றன. இதர தேசிய இனமக்களின் சாதனைகளை உட்கொண்டு வளர புதிய வாய்ப்புகள் அளிக்கப்படுகின்றன. தேசியத்தின் முழு உள்ளடக்கமும், சர்வதேசியத்துடன் இரண்டற கலக்கப்படுகின்றது. எனவே, முதலாளித்துவ சித்தாந்தவியலாளர்கள் கூறுவது போன்று, தேசியத்திற்கு முரணாக சர்வதேசியத்தை சோஷலிசம் எதிராக நிறுத்துகிறது என்றோ, தேசிய வளர்ச்சியை இது பாதிக்கிறது என்றோ கூறுவது முற்றிலும் தவறான வாதமாகும். அவர்கள் கூறுவதற்கு நேர் எதிராகவே உண்மை நிலை உள்ளது: சோஷலிச சமுதாயத்தில், தேசியத்தை சர்வதேசியம் தடைப்படுத்துவதில்லை; சோஷலிச சர்வதேசியத்தின் அடிப்படையில், இதர மக்களினங்களின் சாதனைகளோடு சேர்ந்து தேசியம் வளர்

கின்றது, செழுமைப்படுகின்றது. தேசியத்தை சர்வதேசியத் தினளவிற்கு உயர்த்துவதே இதன் விளைவு.

2. தேசிய இனங்கள், தேசிய மற்றும் இனக்குழுக்கள்

மார்க்ஸ், எங்கெல்ஸ், லெனின் ஆகியோர், ''தேசிய இனம்'' என்பதை இருபொருளில் உபயோகித்துள்ளனர். பூர்வகுடி அமைப்பு சிதைந்து, முதலாளித்துவம் துவங்கிய, தேசங்களின் உருவாக்கம் தோன்றிய காலகட்டத்தில் எழுந்த சரித்திர ரீதியான சமுதாயங்களை குறிப்பிடவே அதிகமாக அவர்கள் அதனை உபயோகித்தனர். ஆனால், அத்துடன், மக்களை பொதுவாக குறிப்பிடவும், ஒரு தேசம் ஒரு தேசிய இனம், ஒரு தேசிய அல்லது இனக்குழு ஆகிய வற்றை குறிப்பிடவும் அந்தப் பதத்தை பயன்படுத்தினர். 20-ம் நூற்றாண்டின் துவக்கத்திலேயேகூட, பல சந்தர்ப்பங் களில் லெனின் ருஷ்யர்களை ஒரு தேசிய இனம் என்றே அழைத்தார்.

மார்க்சிய-லெனினிய மூல நூல்கள், தேசிய இனங் களின் தோற்றத்திற்கு பின்னிருந்த, பிரதானமான, குணும்ச ரீதியான புதிய சிறப்பியல்புகளில் ஒன்றாக எதனை குறிப்பிட்டன? பூர்வகுடி உறவுகளிலிருந்து, பிரதேச ரீதியான சமுதாயத்தை அடிப்படையாக் கொண்ட உறவுகளைநோக்கி ஏற்பட்ட மாற்றத்தையே குறிப்பிட்டன.* ஒரு தேசிய இனம் என்பது, பூர்வகுடி போன்றதல்ல. ரத்த உறவுகளும், பொதுவான வம்சாவளியும் மிகச்சிறிய பாத்திரத்தையே அதில் வகிக்கின்றன, அல்லது அவ்விதமான எதுவுமே இல்லையென்றும்கூட கூறலாம். பாரம்பர்யங்களும்கூட, அவற்றின் தீர்மானகரமான முக்கியத்துவத்தை இழந்து விடுகின்றன. சட்டத்திற்கே

*கார்ல் மார்க்ஸ், பிரெடரிக் எங்கெல்ஸ், ''தெரிவு செய்யப்பட்ட நூல்கள்'' (மூன்று தொகுதிகளில்), பக்.192, 327; வி. இ. லெனின், ''நூல் திரட்டு'', தொகுதி 1, பக். 154.

முக்கிய இடம் அளிக்கப்படுகின்றது. இயல்பாகவே தன்னியல்பாக கருத்தில் இடம் பெற்றிருந்த மதங்கள் ஒரு புறம் வீழ்ச்சியுறலாயின. புதிய மதங்கள் அதற்கு பதிலாக இடம்பெறத் துவங்கின. இதர பல தேசிய இனங்களால் உலகுதழுவிய ரீதியில் அனுஷ்டிக்கப்பட்ட மதங்கள் எனப்படுபவை பிரதானமாக இடம் பெறத் துவங்கின. சமுதாயத்தின் வர்க்கப் பிரிவினையை அவை உறுதிப்படுத்தி நிலைகொள்ளச் செய்தன. ஒவ்வொரு தேசிய இனமும் ஒரு திட்டவட்டமான சமுதாய மொழியைக் கொண்டிருந்தன. என்றாலும் தேசிய இனங்களுக்கு முன்னிருந்த பூர்வகுடிகளின் மொழியுடன், அதன் பிறப்பு ரீதியான தொடர்பை கண்டறிவது மிகவும் கடினமானதாக இருக்கின்றது. அத்துடன், தேசிய இனங்கள் தாமாகவே வளர்ந்தபொழுது, மொழிகளில் அடிப்படையான மாற்றங்கள் ஏற்பட்டன.

சோஷலிசத்திற்கு முந்திய தேசிய இனங்கள், இப்போதுள்ள தேசங்களைவிட, மனிதகுல முன்னேற்றத்தின் பொதுவான நீரோட்டத்தில் மிகமிகக் குறைவான அளவிலேயே சாதாரணமாக பங்குபெற்று வந்தன. ''வட்டாரத்திலிருந்து தேசத்தை நோக்கி''* என்ற ஒரு கட்டமாக, தேசிய சமுதாயத்தின் உருவாக்கத்தை எங்கெல்ஸ் விவரித்தார். நிலவுடமை சகாப்தத்தில் அதன் சுய தேவைப் பூர்த்தி தன்மையிலிருந்து, விவசாய உற்பத்தியின் விசேட அம்சங்களிலிருந்து, தேசிய இனத்தின் ஸ்தல தனி மனப்பான்மை மிகப் பெருமளவிற்கு விடுபடலாயிற்று. மார்க்ஸ் இதனைப் பற்றி விசேடமாக குறிப்பிட்டுள்ளார்: ''இந்த சிறு உடமை விவசாயிகள் மத்தியில் ஒரு வட்டார ரீதியான உட்தொடர்பு பெயரளவிலேயே இருக்கின்றது. அவர்களது நலன்களை எடுத்துக்காட்டும் எந்த சமுதாயமும் உருவாகவில்லை. எந்த தேசிய பிணைப்பும் இருக்கவில்லை.

---

*கார்ல் மார்க்ஸ், எங்கெல்ஸ், ''ஜெர்மானிய தத்துவம்'', பக். 65.

அவர்கள் மத்தியில் எந்த அரசியல் ஸ்தாபனமும் இருக்க வில்லை.''*

அவற்றின் இனச் சிறப்பியல்புகள் போதுமான அளவு தெளிவானதாக இருந்தபோதிலும், அவற்றை தொடர்ந்து வந்த தேசிய இனங்களும், தேசங்களும், சமுதாய வளர்ச்சி யின் உற்பத்தியில் முதன்மையானதும் முக்கியமானது மாகும். உழைப்பின் ஒரு உயர்ந்தபட்ச உற்பத்தித்திறன், குலமரபு உறவுகள் நெகிழ்வுறுவதையும், அவற்றிற்கு பதிலாக பிரதேச ரீதியான இணைப்புகள் உருவாவதையும் தீவிரப்படுத்தியது. அத்துடன் அது தனிச் சொத்துட மையை தோற்றுவித்தது. குலமரபு, கணங்கள் ஆகிய வற்றில் அது வர்க்கப் பிரிவினையைஉண்டாக்கியது,எங்கெல்ஸ் இதுபற்றி எழுதினார்: ''பால் உறவுகளை அடிப்படையாகக் கொண்டு அமைந்த குழுக்களால் உருவான பழைய சமுதாயம் புதிய-வளர்ச்சிபெற்ற சமுதாய வர்க்கங் களுடன் மோதுற்று மிகப் பெருமளவிற்கு உடைந்து சிதறியது. அதனுடைய இடத்தில் ஒரு புதிய சமுதாயம் தோன்றியது. ஒரு அரசாக உருப்பெற்றது. அதன்கீழ் அமைப்புகள், பால் உறவை அடிப்படையாகக் கொண்ட குழுக்களாக நீடித்திருக்கமுடியவில்லை. ஆனால், அவை பிரதேச ரீதியான குழுக்களாக பரிணமித்தன. சொத்துடமை முறையால் முழுமையாக ஆதிக்கம் செலுத்தப்பட்ட குடும்ப அமைப்புகள் தோன்றின. அத்தகைய குடும்ப அமைப்பை அடிப்படையாகக்கொண்ட ஒரு சமுதாயம் தோன்றியது.''**

இந்த வளர்ச்சிப்போக்குகள்—பழமையான, அடிமைச் சொந்தக்கார தேசிய இனத்தை தோற்றுவித்தன. ஆனால், சரித்திர ரீதியான முதல் தேசிய இன வடிவமாகும் இது. அதன்பின், அடிமைச் சமுதாயத்தின் முட்டுக்கட்டையான

---

*மார்க்ஸ், எங்கெல்ஸ், ''தெரிவுசெய்யப்பட்ட நூல்கள்'' (மூன்று தொகுப்புகளில்), தொகுதி 1, பக். 479.

**கார்ல்மார்க்ஸ், எங்கெங்ஸ், ''தெரிவுசெய்யப்பட்ட நூல்கள்'', தொகுதி 3, பக். 192.

நிலை நீக்கப்பட்டு, அதன் வாழ்நிலை முடிவுக்கு கொண்டு வரப்பட்டு, அதன்விளைவாக, மத்திய காலத்து, நிலவுடமை தேசிய இனங்கள் தோன்றின. அவை அனைத்தும் தேசங்களாக வளர்ச்சி பெறவில்லை. நிலவுடமை அமைப்பு சிதைந்து, முதலாளித்துவத்திற்கு வழி திறந்து விட்டபொழுது, அத்தேசிய இனங்களில் பல கூட்டாக இணைந்து ஐக்கிய தேசங்களாக, முதலாளித்துவ தேசிய இனங்களாக பரிணும வளர்ச்சிபெற்றன எனலாம்.

தேசிய இனத்திற்கும், தேசத்திற்கும் இடையிலான வேறுபாடு என்ன? ஒரு தேசிய இனம், ஒரு தேசமாக மாறுவதற்கு தேவைப்படுவதென்ன?

தேசியத்தின் நிலவுதலுக்கான, பிரதான சூழ்நிலைகள் யாவை என்பது குறித்து எங்கெல்ஸ் குறிப்பிட்டுள்ளார். அவரது கருத்தின்படி, தேசிய இன மக்கள் குறிப்பிடத்தக்க அளவிற்கு எண்ணிக்கையில் மிகுந்திருக்கவேண்டும். ஒரு பிரதேசத்தைக் கொண்டிருக்கவேண்டும். சமுதாய-பொருளாதார அடிப்படையில் ஒரு வளர்ச்சிபெற்ற தேசிய உணர்வைக் கொண்டிருக்க வேண்டும். அந்த உணர்வு ஒற்றுமைக்கும், சுதந்திரத்திற்கும் முயலும் ஒரு கருவியாக திகழவேண்டும். மக்கள் பெருமளவு எண்ணிக்கையில் கண்டிப்பாக இருக்கவேண்டும். அவர்கள் ஒன்றுபட்டும் இருக்கவேண்டும். தேசிய வாழ்நிலைக்கான ஆற்றலையும் அந்த மக்கள் பெற்றிருக்கவேண்டும். போதுமான வலிமையும், ஒற்றுமையும், தேசிய வளர்ச்சியை உத்தரவாதப் படுத்தும் வாய்ப்பும், ஆற்றலும் ஒரு தேசிய இனம் பெற்றிருக்க வேண்டும். அப்படி பெறும்பொழுதுதான், ஒரு தேசிய இனத்தின் சரித்திர ரீதியான நடவடிக்கை (ஒரு தேசமாக மாறுவதற்கு அவசியமான நடவடிக்கை) ஆரம்பமாகின்றது. தேசங்களை உருவாக்கும் உலக ரீதியான, சரித்திர ரீதியான போக்கிற்கேற்ப அமைந்த அம்சங்களையே மேலே குறிப்பிட்டோம். இந்த பெரு விருப்பங்களை ஒரு போக்காக லெனின் சித்திரித்தார். அதுபற்றி அவர் எழுதினர். தேசிய

வாழ்வில், தேசிய இயக்கங்களின் விழிப்புணர்வை அந்த போக்கு பிரதிபலிக்கின்றது என்ருர். தேசிய அரசுகளாக அமைவதற்கான, தேசிய ஒடுக்குமுறைக்கு எதிரான போராட்டத்தின் விழிப்புணர்வை அந்த போக்கு பிரதிபலிக்கின்றது என்று அவர் எழுதினுர்.*

தேசத்தைப் போன்றே ஒரு தேசிய இனமும், பொருளாயத உறவுகள், நலன்களின் அடிப்படையில் பிரதானமாக ஒன்றுபடுகின்றன. ஆனுல், குறிப்பாக முதலாளித்துவத்தின்கீழ், ஒரு தேசத்தைவிட, அதன் உற்பத்தி சக்திகள் மிகவும் குறைந்த மட்டத்தில் இருக்கின்றன. எனவே, அந்த அளவிற்கேற்பத்தான், உழைப்புப் பிரிவினையும், உட்புற, வெளிப்புறத் தொடர்புகளும் அமைகின்றன. ஒரு தேசிய இனத்தின் பொருளாதார, அரசியல் உறவுகள்—மறுக்க முடியாத அளவுக்கு, முதலாளித்துவ கட்டம் உட்பட, அனைத்துக் கட்டங்களிலும் அவ்வுறவுகளைப் பெற்றிருந்தன—இன்னமும் மிக நெகிழ்ந்துபோய் காணப்படுகின்றன. வேறு எதனையும்விட மிகவும் குறுகியதாகக் காணப்படுகின்றன. ஒரு தேசிய இனத்தின் சிறப்பியல்புகள் எவ்வாறு முன்கூட்டியே காணப் படவேண்டும் என்பதற்கு இது எடுத்துக் காட்டாகும்: ஒரு தேசத்தின் அம்சங்களோடு அவை ஒத்திருக்கின்றன. ஆனுல், அவற்றின் குணும்ச ரீதியிலும், முதிர்ச்சி அளவிலும் வேறுபட்டிருக்கின்றன. அவற்றின்முக்கியத்துவம் வரிசைப்படி கொடுக்கப்படுகின்றன: **மொழி மற்றும் பிரதேசத்தை அடிப்படையாகக் கொண்ட சமுதாயம், பொருளாதார, அரசியல், கலாசார வாழ்க்கை மற்றும் இன ரீதியான சுய விழிப்புத்தன்மையும், பழக்கவழக்கங்களும் வளரத் துவங்கியுள்ள சமுதாயம்.**

இதன் விளைவாக, ஒரு தேசிய இனத்தின் சாராம்சம், வரிசைப்படுத்தியுள்ள சிறப்பியல்புகளின் எண்ணிக்கையினுள் மட்டுமே விரிவாக உள்ளடங்கியிருக்கவில்லை. அவற்றின்

*வி. இ. லெனின், "நூல்திரட்டு", தொகுதி 20, பக். 27.

முதிர்ச்சி அளவுகளிலிருந்து வருகின்றது. ஒரு தேசிய இனத்தின் சாரம்சத்தை பிரதானமாக நிர்ணயிப்பவை சமூக ரீதியில் ஏற்படும் மாற்றங்களே. தேசிய இனத்தின் சாராம்சத்தை, இனத்தன்மையும், உணர்வும் ஒரு மிகச் சிறிய அளவில் மட்டுமே பாதிக்கின்றன. மேலும், தேசிய இனத்தோடு சம்பந்தப்பட்டவையுட்பட, இந்த சிறப்பியல்பு களின் பாத்திரம், அவற்றின் பிரத்தியேக இணைப்பை பொறுத்தே அமைந்துள்ளது. வெறும் சிறப்பியல்புகளின் தொகுப்பினுல் மட்டுமல்ல. இறுதியாக கூறுமிடத்து, தேசிய இனம் வளருகின்ற திட்டவட்டமான சரித்திர சூழ்நிலைதான் மிகவும் முக்கியமானது: அதனுடைய வளர்ச்சி சுதந்திர மானதாக இருக்கின்றதா? அல்லது அடக்கி ஒடுக்கப்பட்டிருக் கின்றதா? அதனுடைய அரசை அமைத்துக் கொள்ள இயலுமா? அல்லது அதில் ஒரு பகுதியாக மட்டுந்தான் இருக்க இயலுமா? அல்லது பல தேசிய இனங்களைக் கொண்ட ஒரு அரசாகத்தான் இருக்க இயலுமா? என்பன போன்றவை.

யந்திரத் தொழிலின் ஆரம்ப நிலையும்,தேசிய பூர்ஷுவா வர்க்கம்,தொழிலாளி வர்க்கம்,அறிவு ஜீவிகளினதும் தோற்ற நிலையும் ஒருபுறமிருக்கட்டும்.அவற்றின்ஒற்றுமையின்அளவும், ஒன்றுபட்ட வலிமையும் இன்றைய முதலாளித்துவ தேசிய இனங்கள் தேசங்களாக மாறுவதற்கு சாதாரணமாக இவை போதுமானவையல்ல. சில சமயங்களில், சுதந்திரமான தேசிய வாழ்வுக்கான அவர்களது ஆற்றல், தெளிவாகத் தோன்றவில்லை. எங்கே பகுதியளவுக்கு மட்டுமே இந்த விழிப்புணர்வு உள்ளதோ, அங்கே, தேசிய வளர்ச்சியில் அது நிறைவாக்கம்பெறும் சூழ்நிலைகள் எப்பொழுதும் ஏங்படுவதில்லை. இதரவற்றிற்கும் இது பொருந்தும் உதாரணமாக, அமெரிக்காவிலுள்ள நீக்ரோ தேசிய இனத்தைக் குறிப்பிடலாம்.

சோஷலிசச் சூழ்நிலைமையில், தேசிய இனங்களின் வளர்ச்சி என்பது முற்றிலும் வேறுபட்டதாகும். ஒரு இருபதிற்கு மேற்பட்ட தேசிய இனங்கள், சோவியத்

ஒன்றியத்தில் ஏற்கெனவே தேசங்களாக வளர்ச்சி பெற்று விட்டன: ஒரு அடிப்படையான, பொதுவான பொருளாதார வாழ்க்கையை அவை பெற்றுள்ளன. அவற்றின் தேசிய கலாசாரங்கள் வளர்ந்து கொண்டிருக்கின்றன. அவை தங்களுக்கென்று அரசுத்துவத்தைப் பெற்றுவிட்டன.

வளர்முக நாடுகளிலுள்ள பல தேசிய இனங்களும்கூட, முற்றிலும் படுவேகத்தில் தேசங்களாக மாறி வருகின்றன. இது நிகழ்வது அல்லது குறைந்தபட்சம் பிரகடனப் படுத்துவது, அரசியல் சுதந்திரம் பெற்றவுடனேயே சாத்தியம். அநேகமாக பெரும்பாலும் ஒரு தேசிய இனம், அதன் புறவயச் சூழ்நிலைகள் வலிமையுறுவதற்கு முன்பே பிரதானமாக பொருளாதார, அரசியல், அகவளப் பிணைப்புகள் வலிமையுறுவதற்கு முன்பே ஒரு தேசமாக பிரகடனம் செய்யப்பட்டு விடுகின்றது. ஒரு நாட்டின் மக்கட்தொகையில் தேசிய இனங்களும், பூர்வகுடிகளும் இரண்டறக் கலப்பதற்கு முன்னரே, பிரதான சமுதாய அம்சங்களுக்கு ஏற்ப, ஒரு முழுமையாக ஒன்றுபடுவதற்கு முன்னரே, ஒரு தேசமாகப் பிரகடனம் செய்யப்பட்டு விடுகின்றது.

எனவே அதன் விளைவாக, தேசிய இனங்களின் வளர்ச்சி பற்றிய கண்ணோட்டம், அதன் இன்றைய கட்டம் ஆகியவை பற்றி ஒரு மிக நெருக்கமான ஆய்வு தேவைப்படுகின்றது. குறிப்பாக, ஒரு சோஷலிச சமுதாயத்தில் அல்லது ஒரு பக்குவமுற்ற முதலாளித்துவ சமுதாயத்தில் உள்ள தேசிய இனங்கள்பற்றி இந்த நெருக்கமான ஆய்வு தேவைப்படு கின்றது. ஒருபுறம், அவற்றின் எண்ணிக்கை, மற்றுமிதர காரணிகளின் விளைவாக தேசங்களாக மாறவியலாமல் உள்ளன. மறுபுறம், முதலாளித்துவ சூழ்நிலைமைகளில், தேசிய ஒடுக்குமுறையினலும், சமத்துவமின்மையினலும், தேசிய இனங்கள் தேசங்களாக மாறவியலாதநிலை அதிகரிக்கப்படுகின்றது. இந்த தேசிய இனங்கள் ஏற்கெனவே பெற்றுள்ள உயர்வின் அளவு, பலவிஷயங்களில் அவற்றை பரிசீலித்தால், அவை மிக உயர்ந்த அளவிற்கு வளர்ச்சி

பெற்றிருப்பதை அவற்றின் **தேசிய** வளர்ச்சியைக் காணலாம். அடிமையுடைமை மற்றும் மத்தியகால தேசிய இனங்களைப் பொறுத்தவரை, அவை தேசங்களாக வளர்ச்சி பெறும் வரை, புரிந்து கொள்ளத்தக்க காரணங்களால், இது அன்றைக்கு எடுத்துரைக்கபட்டிருக்கமுடியாது என்பது தெளிவு.

வளர்ச்சிபெற்ற முதலாளித்துவ நாடுகளிலும், சோஷலிச நாடுகளிலும் காணப்படும். இன்றுள்ள பல தேசிய இனங்கள், தேசிய உறவுகளை அடிப்படையாகக் கொண்டு சமுதாயங்களாக வடிவுற்றிருக்கின்றன. இந்த முடிவு, பின்வரும் காரணிகளிலிருந்து பெறப்பட்டதாகும்:

—தேசங்களாக வளர்ச்சி பெறும் செயலில் ஏற்கெனவே பல தேசிய இனங்கள் ஈடுபட்டிருக்கின்றன: இதர தேசிய இனங்கள், உதாரணமாக அமெரிக்காவிலுள்ள நீக்ரோ மக்கள் இந்த திசையில் ஏற்கெனவே வளர்ச்சி பெற்று விட்டனர். ஆனல்,தற்போது இந்த வளர்ச்சி செயற்கையாக தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது ஏகபோக ஒடுக்குமுறையால்;

—சில தேசிய இனங்களின் மொழிகள், எழுத்து வடிவம்பெற்ற மொழிகளாக ஏற்கெனவே வளர்ச்சி பெற்று விட்டன (உதாரணமாக அப்காஸ், காகஸ் முதலிய மொழிகள்). அதன் பிரதேச ரீதியான பேசு மொழித்தன்மையை அவை கடந்து விட்டன;

—உற்பத்தி சக்திகள், உள்நாட்டு செய்தித் தொடர்பு, உழைப்புப் பிரிவினை, கலாச்சார முன்னேற்றம் ஆகியவற்றின் வளர்ச்சியின் அளவை பரிசீலிப்போம். அவை, தேசிய இனங்கள் தேசங்களாக பரிணமித்துக் கொண்டிருக்கின்றன என்பதை எடுத்துக்காட்டுகின்றன;

—சாதாரணமாக முன்பு போதுமான வளர்ச்சி வடிவத்தை பெற்றிராத தேசிய உணர்வுகூட, ஏற்கெனவே வடிவம் பெற்றுவிட்டது;

—அரசியல் ரீதியிலும், கலாச்சார ரீதியிலும், பொருளாயத ரீதியிலும், இதர நாடுகளுடனும், தேசிய இனங்

களுடனும் தொடர்புகொள்ள வேண்டிய தேவை மிகவும் தெளிவாக வெளிப்பட்டது. இதரநாடுகளிலிருந்து அவற்றின் சாதனைகளை கிரகித்து, உலக கலாசார வளர்ச்சிக்கு தனது பங்கை செலுத்த வேண்டிய கடமைக்கேற்ப, அத்தேவை தெளிவாக வெளிப்பட்டது.

சோஷலிச சூழ்நிலைமைகளில் இவை அனைத்தும், பிரதானமாக, ஒப்பீட்டில் மிகவும் சிறியதாக இருக்கும் தேசிய இனங்களையே சாரும். உண்மையில், சோஷலிசத்தின் கீழ், தேசிய உறவுகளைப் பொறுத்தவரை, தேசத்திற்கும், தேசிய இனத்திற்குமிடையில் அடிப்படையான வேறுபாடு எதுவுமில்லை. ஒரு தேசத்திற்குள்ள அதே மாதிரியான சமுதாய சூழ்நிலைகளையே தேசிய இனத்திற்கும், சோஷலிச அமைப்பு வழங்குகிறது. அது ஒரு தேசமாக மாறுவதை தடுப்பது என்ன?—சில தேசிய இனங்களைப் பொறுத்தவரை தடைகளை கடக்க முடியாதவைகளாக அவை இருக்கின்றன—அதன் வரையறைக்குட்பட்ட மூலவலிமை, தேசியவளர்ச்சிக் குப்போதுமானதாக இல்லாததே காரணமாகும்: பிரதான மாக சிறிய எண்ணிக்கையும், பல இடங்களில் சிதறி வாழ் வதும் காரணமாகும். முதலாளித்துவ சூழ்நிலைமைகளின் கீழ், மக்களின் சமுதாய, தேசிய வளர்ச்சிக்கான வாய்ப்பு களில் காணப்படும் வேறுபாடு, ஒரு கருத்தரங்கப் பிரச்சினை யல்ல என்பது எவ்விதத்திலும் தெளிவான விஷயமேயாகும். ஏனென்றால், முதலாளித்துவ சூழ்நிலைமைகளில், பொதுவாக ஒவ்வொரு தேசிய இனமும், பலதேசங்களும், சுதந்திரமான வளர்ச்சியையும், ஏகாதிபத்திய ஒடுக்குமுறையையும் ஒரு பிரச்சினையாகவே அங்கு எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

மிகவும் அரிதான சிறிய குழுக்கள் (பல ஆயிரம் பேர் உள்ளனர். சில சமயங்களில் பல நூறுபேர்களாகக்கூட இருக்கலாம்), அவற்றின் இனக்குழு சிறப்பியல்புகள் படிப் படியாக முக்கியத்துவத்தை இழந்து வருகின்றன. இவற்றை தேசிய இனங்கள் என்று வகுக்கலாமா என்பதைப் பரிசீலிக் காமல் நாம் இருந்துவிடக்கூடாது. இந்த பரிசீலனை, இனக் குழுக்களுக்கு மட்டுமே பொருந்தும்.

இனக்குழுக்கள் எண்ணிக்கையில் மிகச் சிறிய சமுதாயங்களாக இருக்கின்றன. வழக்கமாக பல ஆயிரம் பேர்கள் அல்லது பலநூறு பேர்களாகக்கூட இருக்கலாம். பல சமயங்களில் அவர்கள் சிதறி வாழ்கின்றனர். எனவே, சமூக ஒற்றுமை என்ற பதத்தில் மிகவும் நெகிழ்ந்த தொடர்பு நிலையினை மட்டுமே கொண்டுள்ளனர். இனக்குழு சிறப்பியல்புகளை பொறுத்தவரை—மொழி, பிரதேசம், பொதுவான வமிசாவளி உணர்வு, கலாசார கூட்டுறவு, வாழ்க்கை முறை, பாரம்பர்யங்கள்—ஆகியவற்றின் தடயங்களே ஏறத்தாழ அற்றுப்போன நிலையில் காணப்படுகின்றன. சோவியத் ஒன்றியத்தில் உள்ள இனக்குழுக்கள் பிரதானமாக, புராதன கால கணக்குழுக்கள் என்ற அடிப்படையில் அமைந்த சமூகங்களாகவே இருக்கின்றன.

அவற்றின் பிரதேசத்துடன், ஒரு இனக்குழு உறவை, இனக்குழுக்களில் பல கொண்டிருந்த போதிலும், அந்த பிரதேச மக்கட்தொகையில், அவர்கள் மிகச் சிறுபான்மையினராகவே உள்ளனர். அவர்களுடைய மொழியும் (இது வழக்கமாக பேசும் மொழியாக குடும்பங்களினுள் மட்டுமே பேசப்படுகின்றது), கலாசார அம்சங்களும், அவர்களது வாழ்க்கையில், ஒரு மிகக்குறைந்த பாத்திரத்தையே வகிக்கின்றன. தேசிய இனங்களோடு ஒப்பிடுகையில், அவற்றில் உள்ளதைவிட மிகக்குறைந்த பாத்திரத்தையே வகிக்கின்றன. புராதன கால சடங்குகள், பாரம்பர்யங்களைப் பொறுத்தவரை, இனக்குழு சிறப்பியல்புகள் என்பவை, குடும்பத்தோடு மட்டும் மிகவும் நிலைகொண்டவையாக உள்ளன.

சோவியத் ஒன்றியத்தில் 20 புராதன இனக்குழுக்கள் உள்ளன. அவை பிரதானமாக வடக்கு காக்கேசியப் பகுதி, தூரவடக்கு, சைபீரியா, தூரகிழக்கு போன்ற பகுதிகளில் அமைந்துள்ளன—ஒரோசிஸ், ஒல்சிஸ், அலியுத்ஸ் என்பன அவ்வினக் குழுக்களின் சில பெயர்கள்.

ஆரம்ப இனக்குழுக்கள் என்பவை, விஞ்ஞான ரீதியான வரையறைக்குட்பட்ட வளர்ச்சிபெற்ற இனக்குழுக்கள்

என்பவற்றோடு பல வழிகளிலும் ஒத்தவையேயாகும். அவை, தேசங்கள் மற்றும் தேசிய இனங்களின் பகுதிகளே என மானிட இனவியல் ஆராய்ச்சியாளர்கள் வரையறுத்துள்ளனர். குறிப்பாக சோஷலிசத்தின் கீழ், பல அம்சங்களில், தேசிய இனங்கள் இனக்குழுக்களை இணைத்துக் கொண்டுவிட்டன. ஆனால் இன்னமும் சில வேறுபாடான இனக்குழு சிறப்பியல்புகளை அவை கொண்டிருக்கின்றன. இதுவும்கூட ஒரு குழு உறுப்பினர் களுக்கிடையிலான தொடர்புகளிலும், குடும்ப உறவு களிலுமே பிரதானமாக காணப்படுகின்றன. நாம் அத்தயை சில இனகுழுக்களின் பெயர்களைக்கூட குறிப்பிடமுடியும். ஸ்வான்ஸ், லேசஸ், மிங்ரல்ஸ் மற்றும் இதுபோன்றவை. இந்த இனக்குழுக்கள் இப்பொழுது ஜார்ஜிய தேசத்துடன் இணைந்துவிட்டன; வெர்க்கோவின்ட்சி, கட்சல்ஸ், புக்கோ வின்ட்சி போன்ற இனக்குழுக்கள் உக்ரேனியன் தேசத்துடன் இணைந்துவிட்டன; லாட்கல்ஸ் இனக்குழு லாத்வியன் தேசத்துடன் இணைந்துவிட்டது; போமோரஸ், காம்சாடல்ஸ் போன்ற இனக்குழுக்கள் ரஷ்ய தேசத்துடன் இணைந்து விட்டன.

இனக்குழுக்கள் என்பவையும், விஞ்ஞான ரீதியான வரையறைக்குட்பட்ட அனைத்து அம்சங்களையும் கொண்ட வளர்ச்சிபெற்ற இனக்குழுக்களும், அவற்றின் எண்ணிக்கை யிலும், அவற்றின் வேறுபாடான சிறப்பியல்புகளின் முக்கியத்துவத்திலும் ஒரே மாதிரியாகவே இருக்கின்றன. ஆனல், நாம் முன்னதாக குறிப்பிட்டுள்ள ஆரம்ப இனக்குழு என்பது எத்தகைய சூழ்நிலையின் கீழ் வாழ்கின்றது என்று பார்ப்போம். சமூக ரீதியான, இனக்குழு ரீதியான பல அம்சங்களில் அவற்றின் இயல்பான தன்மைகளிலிருந்து சற்று வேறுபட்டுள்ள சூழ்நிலையின் கீழ் அது வாழ்நிலையைக் கொண்டிருக்கின்றது. ஆனல் அதே சமயம், பின்னதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்பது, மிகமிக சிறப்புடையதாக, இனக்குழுவின் அனைத்து அம்சங்களும் கொண்டதாக திகழ் கின்றது. அதற்கு ஒரு பிறந்த இடச்சூழலும்கூட நன்கு அமைந்துள்ளது. அதாவது அந்த இனக்குழு பிறந்த இடம்

தெளிவாக இருக்கின்றது, பிறந்த இடச்சூழலில் அது நன்கு வளர்ந்துள்ளது என்பதாகும். இதனால்தான், ஆரம்ப இனக்குழுக்களுக்கும், விஞ்ஞான ரீதியான வரையறைக்குட்பட்ட வளர்ச்சிபெற்ற இனக்குழுக்களுக்கும் இடையிலான வளர்ச்சி வேறுபட்டதாக இருக்கின்றது. முன்னது மிகவும் நிலையானதாகவும், நீண்டகாலம் தனது தனித்தன்மையுடன் இன்னமும் வாழ்ந்திருக்கக் கூடியதாகவும் இருக்கின்றது. பின்னது அதன் வளர்ச்சிபெற்ற தன்மையினால், மிக விரைவில் தனது தன்மையை இழந்துவிடக்கூடியதாக இருக்கின்றது. ஏற்கெனவே அத்தகைய நிலையை அடையத் துவங்கி விட்டது. தேசங்கள் மற்றும் தேசிய இனங்களோடு கலந்துவிடுகின்றது.

தேசிய குழுக்கள், அந்நிய தேசங்கள் மற்றும் தேசிய இனங்களின் சிறு பகுதிகளாக இருக்கின்றன. எங்கெல்ஸ் அவற்றை சிதறல்கள் என அழைத்தார். ஏனெனில், அவை வாழ்ந்துவந்த தேசங்கள் மற்றும் தேசிய இனங்களின் மத்தியில், அவை மென்மேலும் இரண்டறக் கலந்தன. அதன் காரணமாக தலைமுறைக்கு தலைமுறை, அதன் உறுப்பினர்களது தேசியத் தன்மைகள் மாறலாயின. தங்களது சொந்த தேசத்துடனும் அல்லது தேசிய இனத்துடனும் கொண்டிருந்த அவற்றின் சமூக ரீதியான, இனக்குழு ரீதியான உறவுகள், தற்காலிகமாகவே இருந்தன எனலாம். 1970-ம் ஆண்டின் ஜனக் கணக்கெடுப்பு அதனை உறுதிப்படுத்திவிட்டது. அதன்படி, சோவியத் ஒன்றியத்தில் கொரியன், ஸ்லோவக், துர்க்கிஷ் போன்ற 30-க்கு மேற்பட்ட தேசியகுழுக்கள் இருப்பது தெரிய வந்தது.

தேசியக்குழுக்கள் ஆரம்ப இனக்குழுக்கள் என்பவை, தேசங்கள் மற்றும் தேசிய இனங்களின் மத்தியில் வாழ்ந்து வருகின்றன. அத்தகைய குழுக்களில் மிகப் பெரும்பான்மையானவை, தேசங்கள், தேசிய இனங்களிலிருந்து பல வழிகளிலும் பிரிக்கவியலாதவையாக உள்ளன. எல்லாவற்றிற்கும் முதலாவதாக, அவை மிகச்சிறிய எண்ணிக்கை

யுடையவையாக இருக்கின்றன. மேலும், சமூகரீதியில், பொருளாதார மற்றும் அரசியல் ரீதியில் மட்டுமன்றி அத்துடன் கலாச்சார ரீதியிலும் சிதறுண்டிருக்கின்றன. எனினும், தேசங்கள், தேசிய இனங்களுடன் அவற்றை இணைத்தே பார்க்கவேண்டும்; அவற்றின் முக்கியத்துவத்தை எவ்விதத்திலும் குறைத்து மதிப்பிட அனுமதிக்கவியலாது— தேசங்கள் மற்றும் தேசிய இனங்களுடன் சேர்ந்து, மனிதகுலத்தின் பொதுவான முன்னேற்றத்திற்கு அவை தமது பங்கை ஆற்றியுள்ளன. இந்த உண்மை எல்லாவற்றிற்கும் முதன்மையானதாகும். அதேபோன்று, தேசியக் குழுக்கள், இனக்குழுக்களை எவ்வாறு நடத்துகின்றன என்பது, ஒரு தேசத்தின் அரசியல் அமைப்பின் பக்குவத்தைப்பற்றிய ஒருவகை அளவுகோலாகும். பொதுவாக சமுதாய உறவுகளின் பக்குவத்தைப் பற்றிய ஒருவகை அளவு கோலாகும். தேசியக் குழுக்கள், இனக்குழுக்கள், விஞ்ஞான ரீதியான வரையறைகளைக் கொண்ட வளர்ச்சி பெற்ற இனக்குழுக்கள் சம்மந்தமாக பின்வரும் அம்சத்தை எங்கல்ஸ் குறிப்பிட்டுள்ளார்: "அரசியல் ரீதியில் முழுமையாக அமைந்துள்ள பல்வேறு நாடுகள், வழக்கமாகவே சில பிறநாட்டு அம்சங்களை கொண்டுள்ளன. அவை அண்டை நாடுகளுடன் ஒரு இணைப்பை உருவாக்குகின்றன. முற்றிலும் ஒரே மாதிரியான உள்ளியைபுடைய தேசியத் தன்மையினுள் பல்வகைத் தன்மையை புகுத்துகின்றன."*

3. தேசிய இனம்

தேசிய இனம் என்ற பதம், பலவித அர்த்தங்களைக் கொடுக்க கூடியதாகும். பல சமயங்களில் விஷயங்களை முரண்படுத்தி விடவும் கூடும். எனவே, அதனை மிகவும் நெருக்கமாக பரிசீலிப்பது பயனுள்ளதாக இருக்கும்.

---

* மார்க்ஸ்-எங்கெல்ஸ், "நூல்கள்", பெர்லின், 1968, தொகுதி 16, பக். 158.

மார்க்சிய-லெனினிய மூலநூல்கள் இப்பதத்தை, பல பொருள்களில் உபயோகப்படுத்தியுள்ளன— ஒரு தேசத்தின், தேசிய இனத்தின், ஒரு தேசியக் குழுவின், அல்லது இனக் குழுவின் ''மக்களை'' குறிக்கும் பொருளில் உபயோகப் படுத்தியுள்ளன. இரண்டாவதாக, ''ஒரு சிறிய தேசத்தை'' குறிப்பிடவும், இப்பதத்தை அவைகள் உபயோகித்துள்ளன. மூன்றாவதாக, மக்களுக்கிடையிலான தேசிய உறவுகளை சித்திரிக்கவும் அப்பதமானது பயன்படுத்தப்பட்டது. இவ்வாறாக அவற்றின் தேசிய தோற்றுவாயை வரையறுப்ப தற்கு பயன்படுத்தப்பட்டது. நான்காவதாக, அவற்றின் தனிநபர்களின் தோற்றுவாயை வரையறுப்பதற்கு பயன் பட்டது. இப்பொழுதும்கூட இப்பதம், இந்த அர்த்தங்கள் அனைத்திலும் பயன்படுத்தப்படுகின்றது. ''தேசிய இனம்'' என்ற பதத்தை இன்னமும் எந்த அர்த்தத்தில் நாம் பயன் படுத்துகிறோம்? இங்கே மிக அதிகமாக, தனித்தன்மை வாய்ந்த மக்களின் தேசிய பிணைப்புகளை எடுத்துக்காட்ட, அதனை நாம் பயன்படுத்துகிறோம். ஒரு தேசமாக, தேசிய இனமாக, தேசிய அல்லது இனக்குழுவாக தங்களை இனம் காட்டும், சிறப்பியல்புகள், சிறப்பு அம்சங்களின் ஒருங்கிணைப்பை எடுத்துக்காட்ட ''தேசிய இனம்'' என்ற பதத்தை நாம் பயன்படுத்துகிறோம்.

மக்களின் தேசிய அடையாளத்தை தீர்மானிக்கும் பிரதான சிறப்பியல்புகள் என்பவை தேசிய உறவுகளே யாகும். அவற்றின் சாராம்சம் பிரதானமாக சமுதாய காரணிகளால் உருவாக்கப்படுகின்றது. ஆனால், இனக் காரணிகளையும்கூட நாம் கணக்கில் எடுத்தாக வேண்டும். சமுதாயக் காரணியைவிட, இனக்காரணி வரலாற்றில் முன்னதாகவே தோன்றி விட்டதாகும் (புராதன இனக்குழு அல்லது தேசிய இனம் தோன்றிய கட்டம்). அவை மிகவும் விடாப்பிடித் தன்மையுள்ளவையாகும். மக்களின் பிரதான அமைப்பிலிருந்து பிரிக்கப்பட்டவையாக மாறிவிட்ட பின்னும்கூட, ஒரு நீண்டகாலத்திற்கு அவை மக்கள்மனதில் நீடித்திருக்கக் கூடியவையாகும். அதன் விளைவாகத்தான்,

பல சந்தர்ப்பங்களில் ஒரு தேசிய இனத்தைச் சேர்ந்தவர்கள், தங்களது சொந்த தேசிய இன அடையாளத்தோடு விளங்கி வருகின்றனர். மிகவும் அகநிலைத் தன்மை வாய்ந்த ரீதியில், குடும்ப பாரம்பர்யங்கள் அல்லது பூர்வீகம் என்ற அடிப்படையில் வாழ்ந்து வருகின்றனர் (அமெரிக்காவிலுள்ள இத்தாலியர்கள், கனடாவிலுள்ள உக்ரேனியர்கள் போன்றவர்களை குறிப்பிடலாம்). எவ்வாறுயினும், புறநிலை ரீதியாக பார்த்தால், மக்களின் தேசிய ரீதியான அடையாளம் பல வழிகளில் தீர்மானிக்கப்படுகின்றது. மொழியாலோ அல்லது பிரதேச அடிப்படையினாலோ, கலாச்சாரத்தையொட்டிய இனக்குழு அம்சங்களாலோ, பழக்கவழக்கங்கள், பாரம்பர்யங்களினாலோ அல்லது இனக்குழு ரீதியான சுய அடையாளம் காட்டுதலினாலோ தீர்மானிக்கப்படுகின்றது. ஆனால், அவற்றையெல்லாம்விட, பல ஆண்டுகளாக உருப்பெற்றுள்ள சமுதாய, பொருளாதார, அரசியல் உறவுகளால் தீர்மானிக்கப்படுகின்றது. சில சமயங்களில் முற்றிலும்ாக இக்காரணங்களால் தீர்மானிக்கப்படுகின்றது.

பல்வேறுபட்ட தனித்தனியான மாநிலங்களின் மக்கள் ஒரே தேசமாக வடிவுறுதல்பற்றி மார்க்சும், எங்கெல்சும் பகுப்பாய்வு செய்தனர். இனக்குழு அடிப்படையைவிட, ஒரு சமுதாய ரீதியான அடிப்படையிலேயே தேசிய பிணைப்புகள் தோன்றுகின்றன என்று அவர்கள் அந்த பகுப்பாய்வின் முடிவில் வலியுறுத்திக் கூறினர்—பொதுவான நலன்கள், ஒழுக்கத் தரங்கள், கருத்தோட்டங்கள் என்பன போன்ற வடிவங்களில் தோன்றுகின்றன என்று வலியுறுத்திக் கூறினர்.*

தேசங்கள்; தேசிய இனங்களின் ஒதுக்கப்பட்ட பகுதிகளின் தேசிய அடையாளத்தை, ''தேசிய இனத்தன்மை,

* மார்க்ஸ்-எங்கெல்ஸ், ''நூல்கள்'', பெர்லின், 1968, தொகுதி 4, பக். 397.

மொழி, சார்நிலை"* ஆகியவற்றின் மூலம் வரையறுப்பதே சிறந்ததாகும் என எங்கெல்ஸ் கருதினார். தேசிய சுயவிழிப்புத் தன்மையினையே இங்கு அவர் ''தேசிய இனத்தன்மை'' என குறிப்பிடுகிறார். அதாவது, தனது தேசிய பிணைப்புகள் பற்றிய தனிநபரின் சொந்த அறிவாற்றலையே குறிப்பிடுகிறார். அதில்தான் சமுதாய ரீதியான காரணிகள் தீர்மானகரமான பாத்திரத்தை வகிக்கின்றன. ஒரு பெரிய தேசத்தின் இந்த சிதறிய பகுதிகள் ''அதன் தேசிய வாழ்விலிருந்து பிரிக்கப் பட்டு வந்துள்ளன. வேறு சில மக்களின் தேசிய வாழ்க்கையில், அவை மிகப் பெருமளவிற்கு இணைக்கப்பட்டுள்ளன.''** முதலாவதாகவும் முக்கியமாகவும் இயற்கையாகவே இந்த இணைப்பு சமுதாய சூழலில் நிகழ்கின்றது. என்றாலும், இனக்குழு சிறப்பியல்புகள் நீண்டகாலத்திற்கு அதே மாதிரியாகவே நீடிக்கின்றன. உதாரணமாக, ஹங்கேரிய ஜெர்மானியர்களைப்பற்றி குறிப்பிடலாம். அவர்கள் இன்னமும் ஜெர்மன் மொழியையே பயன்படுத்திய போதிலும், ''உணர்விலும், தன்மையிலும், பழக்க வழக்கத்திலும் உண்மையான மாக்யார்களாக மாறி விட்டனர்.''***

பிரெஞ்சுப் புரட்சியின்மீது, ஜெர்மன் சர்வாதிகாரம் யுத்தப் பிரகடனம் செய்தபொழுது, ஜெர்மன் பூர்வீகத்தைச் சேர்ந்த அல்சாஸ்-லோரைன் மக்களின் தேசிய அடையாளம் எங்கோ போயொழிந்தது என்று எங்கெல்ஸ் எழுதினார். கடந்த கால வரலாறு, மொழி இவற்றைப்பற்றி கவலையின்றி, இந்த ஜெர்மானிய பிரெஞ்சுக்காரர்கள், சுதேசி பிரெஞ்சுக் காரர்களோடு இரண்டற கலந்து, புரட்சியின் போர்க் களங்களில் ஒரே இனமக்களாக காட்சியளித்தனர் என்று

* மார்க்ஸ்-எங்கெல்ஸ், ''தெரிவு செய்யப்பட்ட நூல்கள்'' (மூன்று தொகுப்புகளில்), தொகுதி 1, பக் 343.

** மார்க்ஸ்-எங்கெல்ஸ், ''நூல்கள்'', பெர்லின், 1968, தொகுதி 16, பக். 157.

*** மார்க்ஸ்-எங்கெல்ஸ், ''நூல்கள்'', பெர்லின், 1968, தொகுதி 6, பக். 170.

அவர் கூறினர்.* இனக்குழு காரணிகளோடு ஒப்பிடுகையில், சமுதாய காரணிகளின் பாத்திரமே தீர்மானகரமானது என்று எதிர்வாதம் செய்ய முடியாத அளவிற்கு எங்கெல்ஸ் இன்னும் மிகத் தெளிவாக எடுத்துக்காட்டியுள்ளார். உதாரணமாக, சவோயார்டு மக்களை எடுத்துக் கொள்வோம். அவர்கள், பிரெஞ்சு இன மக்களுடன் "ஒரு பொது மொழித் தொடர்பும், இனக்குழு ரீதியிலான ரத்த உறவும் கொண்டிருந்தபோதிலும்"** இத்தாலியில் இணைந்திருப்பதையே அவர்கள் தேர்ந்தெடுத்தனர். இத்தாலியுடனன அவர்களது நீண்டகால இணைப்பின் விளைவாக, அவர்கள் ஒரு மாறுபட்ட தேசிய உணர்வை பெற்றனர். ஒரு இனக்குழு ரீதியான சிறப்பியல்பாக மொழியைப் பற்றி குறிப்பிட்டு எங்கெல்ஸ் கூறியது கவனிக்கத்தக்கது. "தேசிய இனப் பிரச்சினையின் தீர்விற்கான ஒரு அளவுகோலாக மொழி விளங்க முடியாது",*** அதாவது, மொழியைக் கொண்டு மட்டும் ஒரு தேசமாக தன்னை அடையாளம் காட்ட முடியாது என்று அவர் கூறினர்.

தேசிய ரீதியான அடையாளத்தைப் பொறுத்தவரை, அதேபோன்ற கருத்துக்களையே லெனின் கொண்டிருந்தார். அல்சாஸ்—லோரைன் தேசிய இனத்தைப்பற்றி லெனின் குறிப்பிட்டுள்ளார். அவ்வினத்தின் பெரும்பகுதி பிரெஞ்சு இனத்தோடு இரண்டற கலந்து நிற்க தயராக இருந்தனர். ஆனல்; அதில் ஒரு பகுதி, "சந்தேகத்திற்கிடமின்றி ஜெர்மனியின் பக்கம் சாய்ந்திருந்தது. மொழியின் காரணமாக மட்டுமல்ல. ஆனல் அத்துடன் பொருளாதார நலன்கள், அனுதாபங்கள் ஆறியவற்றின் அடிப்படையிலும்

* மார்க்ஸ்-எங்கெல்ஸ், "தெரிவு செய்யப்பட்ட நூல்கள்" (மூன்று தொகுப்புகளில்), தொகுதி 3, பக். 411.

** மார்க்ஸ்-எங்கெல்ஸ், "நூல்கள்", பெர்லின், 1968, தொகுதி 13, பக். 581.

*** மார்க்ஸ்-எங்கெல்ஸ், "நூல்கள்", பெர்லின், 1968, தொகுதி 13, பக். 596.

கூடத்தான்"* என்று லெனின் குறிப்பிட்டார். அல்சாஸ்-லோரைன் மக்கட் தொகையின் இந்த பகுதியினது தேசிய அடையாளப் பிரச்சினை சமூதாயக் காரணிகளால்தான் தீர்க்கப்பட்டன என்பது இங்கு மிகவும் திட்டவட்டமாக எடுத்துக்காட்டப்பட்டிருக்கின்றது. மக்களின் வாழ்வில் சந்தேகத்திற்கிடமின்றி இணைப்புடைய காரணிகளாக இருந்தபோதிலும், அவற்றின் பூர்வீகமும், அடையாள முத்திரையும் சுதந்திரமானவை என்று லெனின் கருதினார். ஸ்வீடன், நார்வே நாடுகளை எடுத்துக்கொள்வோம். ஒரு காலத்தில் அவை ஒரே நாடாக திகழ்ந்தன. பின்னர் அவை தாமாகவே இரு நாடுகளாக பிரிந்துவிட்டன. இதனை உறுதிபட கூறிய லெனின், ஆனால், "பொருளாதார, அரசியல், கலாச்சார, சமூக ரீதியில் இருநாடுகளும் ஒன்றிற்கொன்று ஈர்ப்புடையன வாக இருக்கின்றன" என்று குறிப்பிட்டார்.** என்றபோதிலும், ஒரு தேசிய இன மக்களுக்கு இந்த காரணிகள் இரு மடங்கு மதிப்புடையவையாக திகழ்கின்றன. தேசிய அடையாளம் மக்களின் தேசிய உறவுகளின் மீது அடித்தளம் கொண்டுள்ளது. அத்துடன் இந்த உறவுகள் சாராம்சத்தில் முதலாளித்துவ உறவுகளாக இருக்கின்றன. முதலாளித்துவ சகாப்தத்தை குறிப்பிட்டு லெனின் இவ்வாறுகூறினார். அவற்றைத் தீர்மானிக்கும் சமுதாய உள்ளடக்கம் (இனக் குழுத் தன்மையினைவிட) பற்றி இனி எவ்வித சர்ச்சைக்கும் இடமில்லை என்றார் அவர்.

தனி நபர்கள் இனம் காட்டிக் கொள்ளும் தேசிய சுய—அடையாள முத்திரை என்பதை எடுத்துக் கொள்வோம். இது தேசம் சம்பந்தப்பட்ட அடையாளத்தை பிரதிபலிப்பதாக அர்த்தமாகாது. பொதுவாக தேசிய சமுதாயத்தின் நேரடியானபகுதியாகமக்கள்இருக்கின்றனர். எவ்வாறாயினும்,

*வி. இ. லெனின், "நூல் திரட்டு", தொகுதி 23, பக். 274.

**வி. இ. லெனின், "நூல் திரட்டு", தொகுதி 24, பக். 338.

தேசிய ரீதியில் ஒரு அன்னியச் சூழலில் பலபேர் வாழ்ந்து வருகின்றனர். சில சமயங்களில் வேறு நாட்டில் கூட வாழநேரிடுகிறது. அத்தகைய நிலையில், இன்ன தேசிய இனத்தை சேர்ந்தவர் என்ற பெயரை ஒருவர் தாங்கி நின்ருலும், உண்மையில் அவருக்கும் அந்த தேசிய இனத்திற்கும் எவ்வித சம்பந்தமுமில்லை. இத்தகைய சந்தர்ப்பங்களில், தேசிய இனம், வெளியே அதனை எடுத்துக்காட்டும் அடையாளம் என்பதைவிட, பூர்வீகம் என்ற முறையிலேயே நிலைகொண்டுள்ளது (பல தலைமுறைகளுக்கு பிறகும்கூட).

எனவே, தேசிய ரீதியான அடையாளத்தை நிலைநாட்டுவதில், மக்களின் பூர்வீகம், எப்பொழுதும் சமதையான முக்கியத்துவத்தைக் கொண்டிருப்பதில்லை ஒருவர் தனது சொந்த நாட்டில் வாழும்போது, அதன் அனைத்து நடவடிக்கைகளிலும் பங்குபெறும்பொழுது, நிலைமை வேறுவிதமாக இருக்கின்றது. அதாவது, அப்பொழுது, அவருடைய சமுதாய மற்றும் தேசிய பிணைப்புகளாலும், தேசிய சுய உணர்வாலும் அவரது தேசிய இனம் இன்னது என்று தீர்மானிக்கப்படுகின்றது. அதேசமயம், அவரது பூர்வீகம், இனக்குழு சிறப்பம்சங்கள் பின்னுக்கு போய்விடுகின்றன. ஆனுல், ஒருவர் தனது சொந்த நாட்டிலிருந்து பிரிந்து வாழும்போது, தனது சொந்த தேசிய மற்றும் இனக்குழுவிலிருந்து பிரிந்து வாழும்போது நிலைமை வேறுபடுகின்றது. எவ்வாருயினும், அத்தகைய நிலையில், முன்னுரிமை வகிப்பது அவரது பூர்வீகமேயாகும். அவரது தேசிய இனத்தை நீண்டகாலத்திற்கு தீர்மானிப்பது அவரது பூர்வீகமேயாகும். இங்கு பிரதான பகுதி, இனக்குழு காரணிகளை சார்ந்திருக்கின்றன—மொழி, இனக்குழு சுய உணர்வு, தனது சொந்த கலாச்சாரத்தின் மீதுள்ள பிடிமானம், பழக்க வழக்கங்கள், பாரம்பர்யங்கள் முதலியன.

மக்களின் தேசிய அடையாள முத்திரையை, இன்ன இனம் என்ற எடுத்துக்காட்டினை முற்றிலும் தீர்மானிப்பது

இனக்குழு அளவைதான் என்ற கருத்து, தத்துவார்த்த ரீதியில் தவறானது என்பது இதனுல் பெறப்படும் கருத்தாகும். நடைமுறைரீதியான அரசியல் அர்த்தத்திலும் கூட இது முற்றிலும் தவறானதாகும். தேசியவாதிகள், வேண்டுமென்றே திட்டமிட்டு, தேசம் என்பதற்கு தேசிய இனம் என்று பொருள் கூறி குழப்பிவருகின்றனர். இவ்வாறாக, அத்தேசிய இனத்துடன் ஒரு காலத்தில், சமீப அல்லது தொலைநோக்கான கடந்த காலத்தில், தொடர்புகளைக் கொண்டிருந்த அனைத்து மக்களையும் தங்கள் தேசத்தை சேர்ந்தவர்களாக உட்படுத்துகின்றனர். அந்த மக்கள் தற்போது இதர பிரதேசங்களிலோ, இதர நாடுகளிலோ கூட வாழக்கூடும். இவ்வாறுதான் ஜெர்மன் நாஜிகள் செய்தனர். பொதுவான சரித்திரரீதியான பூர்வீக அமைப்பினை அடிப்படையாகக் கொண்டு, ஜெர்மன் நாட்டிலிருந்த அனைத்து மக்களையும், அருகாமையிலிருந்த நாடுகளின் முழு மக்கட் தொகையினையும் தங்களுடைய நாட்டவர் என உட்படுத்தினர். பல்வேறு கண்டங்களிலும், பல்வேறு நாடுகளிலும் வாழும் யூத இனத்தைச் சேர்ந்த அனைத்து மக்களையும், தங்களது தேசத்தைச் சேர்ந்தவர்களாக யூதவெறியர்கள் பிரகடனப் படுத்திக் கொண்டிருக்கின்றனர். சாராம்சத்தில் இது ஒரு குறுகிய தேசிய வெறியும், இனவெறியும் கொண்ட அணுகுமுறையாகும்.

அத்துடன், தேசிய அடையாள முத்திரை முற்றிலும் இனக்குழு சிறப்பியல்புகளாலேயே தீர்மானிக்கப்படுவதாக இருந்தால், பிறகு, பலதேசிய இனங்களைக்கொண்ட சமுதாயங்களிலும், பெரும் எண்ணிக்கையிலான மக்கட்த் தொகையைக் கொண்ட நாடுகளிலும், அந்த மக்களை ஒன்று படுத்தும் காரணிகளைவிட, அவர்கள் என்ன இனம் என்பதை வெளிப்படுத்தும் காரணிகளுக்கே அழுத்தம் அதிகமிருக்கும். இன்னும் தெளிவாகக் கூறவேண்டுமானுல், ரஷ்ய மற்றும் அமெரிக்க பூர்வீகத்தைச் சேர்ந்த மக்கள் சில மூன்ருவது உலக நாடுகளில் சேர்ந்து வாழும்போது சோவியத் ஒன்றியத்தைச் சேர்ந்த ஒரு ரஷ்யருடன், ஒரு

அமெரிக்க ரஷ்யர் சேர்ந்து வாழ்வதை விட, அல்லது ஒரு ஆங்கிலேயருடன் ஒரு அமெரிக்கர் சேர்ந்து வாழ்வதைவிட, அவர்கள் மிகவும் பொதுத் தன்மையைக் கொண்டு விளங்குகின்றனர். தேசிய அடையாள முத்திரையை இனக்குழு காரணிகளே முற்றிலும் தீர்மானிக்கின்றன என்ற கருத்து சரியல்ல என்பது இதிலிருந்து புலனாகின்றது.

4. தேசிய உறவுகள் பற்றிய தத்துவம். சர்வதேசியமும் தேசியமும்

தேசிய உறவுகள் பற்றிய தத்துவம் தேசிய உறவுகளின் வடிவங்களையும், உள்ளடக்கத்தையும் வரையறை செய்கின்றது. அவற்றின் திட்டவட்டமான வகைகளையும், அமைப்புகளையும் பரிசீலனை செய்கின்றது. அவற்றின் வளர்ச்சியை ஆளுமை செய்யும் புறநிலை விதிகளையும் பரிசீலனை செய்கின்றது.

தேசிய உறவுகளில் இருவடிவங்கள் இருக்கின்றன. உள் நாட்டு உறவுகள் அவற்றில் முதலாவதாகும். ஒரு தேச ஒற்றுமையின் அடித்தளத்தை அவை உருவாக்குகின்றன. தேசங்கள் மத்தியில் நிலவும் பரஸ்பர உறவுகள் இரண்டாவது வடிவமாகும். என்றாலும் அவை, தேசங்கள் மற்றும் தேசிய இனங்கள் மத்தியிலான, தேசிய மற்றும் இனக் குழுக்கள் மத்தியிலான பரஸ்பர உறவுகளையும் உட்கொண்டிருக்கின்றன.

சோஷலிசத்திற்கும் முதலாளித்துவத்திற்குமிடையிலான சித்தாந்த மோதுதல் நடைபெறும் இடங்களில் மிகவும் முக்கியமான ஒன்று தேசிய உறவுகளின் களமாகும்.

தேசிய உறவுகள் பற்றிய இயக்கவியல் பொருள் முதல்வாதக் கருத்தோட்டமொன்றுள்ளது. அது, அவற்றின் வடிவங்களையும் உள்ளடக்கத்தையும் தீர்மானிக்கும் அனைத்து காரணிகளையும் கணக்கில் எடுத்துக் கொள்கிறது—அதாவது, பொருளாதாரம், அரசியல், சட்டம், உணர்வு,

கலாச்சாரம், ஒழுக்கநெறி மற்றும் மனோதத்துவம் போன்றவை.

தேசிய உறவுகள் என்பவை, உற்பத்தி, விநியோகம், நுகர்வு ஆகியவை பற்றிய உறவுகளின் மீது அடித்தளம் கொண்டுள்ளன. உற்பத்தி உறவுகளில் வடிவங்கள், உள்ளடக்கம் என இரு அம்சங்கள் உள்ளன. அவை மக்களின் பொருளாயத அடிப்படையைச் சார்ந்துள்ளன. அம்மக்களின் உற்பத்தி சக்திகளின் வளர்ச்சி அளவை சார்ந்துள்ளன. மார்க்சும், எங்கெல்சும் வலியுறுத்திக் கூறியதாவது: "தங்களுக்குள் பல்வேறு நாடுகள் ஏற்படுத்திக் கொள்ளும் உறவுகள், ஒவ்வொரு நாடும் தனது உற்பத்தி சக்திகளை எந்த அளவிற்கு வளர்ச்சி பெறச் செய்துள்ளன என்பதைப் பொறுத்தே அமைந்துள்ளன. உள்நாட்டுச் சேர்க்கை, உழைப்புப் பிரிவினை ஆகியவற்றைப் பொறுத்தே அமைந்துள்ளன."*

தேசிய உறவுகள் தொடர்ச்சியாக மாறும் நிலைமையில் உள்ளன. உற்பத்தி முறையில் ஏற்படும் மாற்றங்களைப் பொறுத்து அவை மாறுகின்றன. வர்க்கங்கள் மற்றும் வர்க்க உறவுகளின் கொள்கையினதும் தத்துவத்தினதும் அழுத்தத்திற்கேற்ப மாறுகின்றன. சர்வதேசச் சூழ்நிலை மற்றுமிதர காரணிகளுக்கேற்ப மாறுகின்றன.

இது சம்மந்தமாக பல கற்பனுவாதக் கோட்பாடுகள் இருக்கின்றன. எவ்வாறாயினும், அத்தகைய கோட்பாடுகளின் பிரச்சாரகர்கள், பொருள் முதல்வாதக் கருத்தோட்டத்திற்கு முரணான கருத்துக்களை பரப்பி வருகின்றனர். தேசிய உறவுகளின் சாரம்சத்தை, முற்றிலும் மனோதத்துவரீதியான காரணிகளாக குறைத்து மதிப்பீடு செய்ய முயல்கின்றனர். மார்க்சிய- லெனினியவாதிகள் இக்காரணிகளின் பாதிப்பை மறுக்கவில்லை.** ஆனால்,

* மார்க்ஸ்-எங்கெல்ஸ், ஜெர்மானிய தத்துவம், பக். 32.

** வி. இ. லெனின், "நூல் திரட்டு", தொகுதி 36, பக். 606, தொகுதி 19, பக். 499.

அவர்கள் கருத்து என்ன? தேசிய உறவுகளை சமுதாயம் முழுமைக்குமாக பொருத்தி பார்க்க வேண்டும், வெறும் மனோதத்துவ இயல் பிரச்சினை மட்டுமல்ல என்பதே அவர்கள் கருத்து. ஆனால், இன்னமும் மனோதத்துவ இயல் பிரச்சனையாக்கி வரும் அத்தகைய கொள்கையாளர்கள் செய்து வருவதென்ன? தேசிய உறவுகளை அவற்றின் பொருளாயத அடித்தளத்திலிருந்து பிரித்து எடுத்து விடுகின்றனர்.

நிலவுடமையிலிருந்து முதலாளித்துவத்திற்கு மாறிச் செல்லும் காலகட்டத்தில், தேசிய உறவுகள் தோன்றின. உள்நாட்டு தேசிய பிணைப்புகள் என்ற வடிவத்தில் அவை தோன்றின. தேசங்கள் வாழும் காலம்வரை அவைகளும் நீடித்திருக்கும் என்பதில் ஐயமில்லை. வேறுபட்ட தேசிய அம்சங்களை மக்கள் கொண்டிருக்கும்வரை அவை நீடித்திருக்கும்.

நிலவுடமை அமைப்பு இன்னமும் முடிவுறாத நிலையில், தேசிய உறவுகளைப் பற்றி, அதன் உண்மையான அர்த்தத்தில் பேசுவதென்பது மிகவும் கடினமானதேயாகும் என்று லெனின் எழுதினார். புராதன குழு உறவுகளை வெற்றி கொண்டு தோன்றியதல்ல தேசிய உறவுகள். ஆனால், பிரதேச அமைப்புகள் தோன்றி, அவற்றிற்கிடையிலான பரிவர்த்தனைகள் வளர்ந்து, அதன் விளைவாக பிரதேச ஒன்றியங்கள் உருவானபொழுது தோன்றியவையே தேசிய உறவுகள்.* விற்பனைச்சரக்கு உற்பத்தி தோன்றியதைக் குறிப்பிட்டு லெனின் எழுதியதாவது, "விற்பனைச் சரக்கு உற்பத்தியானது, அனைத்து தனிநபர்களையும், சமுதாயத்திலிருந்த வர்க்கங்களையும் ஒன்றுபட முயலுமாறு நிர்ப்பந்திக்கின்றது ஒரு கிராம சமுதாயம் என்ற குறுகிய வாம்பிற்குள்ளோ, அல்லது ஒரு மாவட்டத்திற்குள்ளோ மட்டும் இந்த ஒற்றுமை நீடிக்க முடியாது. ஆனால், அதற்குப் பதிலாக, ஒரு குறிப்பிட்ட வர்க்கத்தைச் சேர்ந்த அனை

* வி. இ. லெனின், "நூல்திரட்டு", தொகுதி 1, பக். 154–155.

வரையும், ஒரு முழுமையான தேசம் என்பதற்குள் ஒற்றுமைப் படுத்த, விற்பனை சரக்கு உற்பத்தி நிர்ப்பந்திக்கின்றது''*. சர்வதேச உறவுகளையும் புறக்கணித்து விடக்கூடாது** என்று அவர் எடுத்துரைத்தார்.

அடிப்படையான இருவகை தேசிய உறவுகளுக்கிடையில் மார்க்சியமும் - லெனினியமும் வேற்றுமையினைக் காண்கின்றன-அதாவது முதலாளித்துவ மற்றும் சோஷலிச தேசிய உறவுகள் எவ்வாறுயினும், தேசிய உறவுகளின் உள்ளடக்கம், ஒரு பெருமளவிற்கு, சம்பந்தப்பட்ட சமுதாய அமைப்புகளின் (சமுதாய உருவாக்கங்களின்) பக்குவத்தின் அளவையும் சார்ந்துள்ளது எனலாம். நாடுகளின் சமுதாய அமைப்புகள், அவற்றிலும், அவற்றின் பரஸ்பர உறவுகளிலும் தலைமைப் பாத்திரம் வகிக்கும் வர்க்கம் ஆகியவற்றையும் சார்ந்துள்ளது எனலாம்.

தேசங்களுக்கிடையிலான உறவுகள் இடம்பெறும் பல துறைகள் இருக்கின்றன— பொருளாதாரம், வர்க்கம், அரசியல் (அரசு சம்பந்தப்பட்டது), கலாச்சாரம், தத்துவம், மனோதத்துவ இயல் ஆகிய துறைகளைக் குறிப்பிடலாம். இத்துறைகளால், தேசிய உறவுகளின் கட்டமைப்பு முன்னதாகவே தீர்மானிக்கப்படுகின்றது.

எவ்வாறுயினும், தேசிய உறவுகளின் வடிவங்களும் உள்ளடக்கமும், மனிதகுல முன்னேற்றத்தையும், மக்களின் தலைவிதியையும் எவ்விதத்திலும் தீர்மானிக்கும் ஒரு செயலூக்கமுள்ள காரணியல்ல, தேசிய உறவுகள் பற்றிய கொள்கையை வரையறுக்கையில், மார்க்சும், எங்கெல்சும் பின்வரும் உண்மையின்பால் கவனத்தைச் செலுத்துமாறு கோரினர். மக்கள் மத்தியிலான உண்மையான, நட்புறவு ரீதியிலான உறவுகள், சமாதான பூர்வமான, அண்டை வீட்டுக்காரர் என்ற தன்மையிலான நெருக்கமான இணைப்பிற்கு சாதாரணமான ஓர் உத்தரவாதம் என்பது

* வி. இ. லெனின் ''நூல் திரட்டு'', தொகுதி 2, பக். 213-14.

** வி.இ. லெனின், ''நூல் திரட்டு'', தொகுதி 2, பக். 227.

மட்டுமல்ல. ஆனால் அத்துடன், முன்னேற்றத்திற்கான பிரதான நிபந்தனைகளிலொன்றுமாகும். மார்க்ஸ் எழுதினார்: "ஒரு தேசம் மற்ற தேசங்களிடமிருந்து கற்றுக்கொள்ள முடியும். கற்றுக்கொள்ளவும் வேண்டும்." * பரஸ்பர நம்பிக்கையின் விசேட முக்கியத்துவம்பற்றி லெனின் குறிப்பிட்டார். பல்வேறு மொழிகளைப் பேசும் தொழிலாளர்கள் விவசாயிகளிடையில், மிகவும் குறிப்பாக இந்த பரஸ்பர நம்பிக்கை இருக்கவேண்டும். அத்தகைய நம்பிக்கையில்லாவிட்டால் என்ன ஏற்படும் என்பதுபற்றி லெனின் எழுதியதாவது: "மக்களுக்கிடையிலான சமாதானபூர்வமான உறவுகள் அறவே அங்கு இருக்க முடியாது என்ற நிலை ஏற்படும். அல்லது, தற்கால நாகரிகத்தில் மதிப்புடையன எல்லாவற்றிலும் ஒரு வெற்றிகரமான வளர்ச்சி என்பது இராது."**

சமுதாய உள்ளடக்கத்திலிருந்து பார்த்தால், முதலாளித்துவ, சோஷலிச தேசிய உறவுகள் நேர் எதிரிடையானவைகளாக இருக்கின்றன.

முதலாளித்துவத்தின்கீழ், தேசிய உறவுகளின் எதிர்மறையான தன்மைக்கான பிரதான காரணம், மக்களின் மனோதத்துவப் போக்கு அல்ல. முதலாளித்துவ சித்தாந்தவாதிகள் நாம் அவ்வாறு நம்பவேண்டுமென எதிர்பார்க்கின்றனர். ஆனால், அதற்குரிய பிரதான காரணம், தனிச்சொத்துரிமையேயாகும். மார்க்ஸ் இது விஷயத்தில் எடுத்துக்காட்டியதென்ன? மக்களை ஒன்றுபடுத்த வேண்டுமானால், அவர்கள் பொதுவான நலன்களைக் கொண்டிருக்க வேண்டும். இதர மக்களை சுரண்டுவதற்கு மூலாதாரமாக விளங்குகின்ற தனிச்சொத்துரிமை ஒழிக்கப்படாதவரை அது சாத்தியமல்ல. தனிச்சொத்துரிமையை அழித்தலும், உற்பத்தி கருவிகளையும், சாதனங்களையும் பொதுவுடமை

* கார்ல் மார்க்ஸ், "மூலதனம்", மாஸ்கோ, 1974, தொகுதி 1, பக். 20.

** வி. இ. லெனின், "நூல் திரட்டு", தொகுதி 33, பக். 386.

யாக்குவதும் இன்றியமையாதனவாகும். மக்கள் மத்தியில் பரஸ்பர உதவி, ஒத்துழைப்பிற்கான அடித்தளத்தை அவை ஏற்படுத்துகின்றன. அதன் மூலமாக, தேசிய உறவுகள் நட்புறவுடையனவாக மாறுகின்றன.

எனவே, முதலாளித்துவ வகையைச் சேர்ந்த தேசிய உறவுகளின் சாராம்சத்தின் பிரதான வெளிப்பாடுகளி லொன்ருக, தேசியப் பிரச்சினை விளங்குகின்றது.

* * *

முதலாளித்துவம் வளரத் துவங்கியபொழுது, தேசிய வாழ்வின் முதல் சுவடுகள் வெளிப்படுத்தப் பட்டன. அச்சமயத்தில், அதாவது, மத்திய காலத்தின் கடைசிப் பகுதியில் தேசியப் பிரச்சினை தோன்றியது. தேசங்கள் மற்றும் தேசிய அரசுகளின் தோற்றத்திற்கு தடைகளாக விளங்கிய, எதேச்சாதிகார நிலப்பிரபுத்துவத் தளைகளை தகர்ப்பதை ஆரம்பநோக்கமாகக் கொண்டு, தேசிய இயக்கம் கோடிக்கணக்கான மக்களை அதில் ஈடுபடுத்தியது. பின்னுல், முதலாளித்துவ வளர்ச்சிமனிதகுலத்தில் விரல்விட்டுஎண்ணத் தக்க ஒடுக்குமுறையாளர்கள் என்றும், ஒரு மிகப் பெரும் பான்மையான ஒடுக்கப்பட்ட மக்கள் என்றும் மனித குலத்தில் பிளவினை ஏற்படுத்தியது. அப்பொழுது, தேசிய விடுதலை இயக்கம், ஒடுக்கப்பட்ட மக்களின் பெரு விருப்பங்களை பிரதிபலித்தது. ஒடுக்குமுறையாளர்களை துரத்தியடிப்பது, சுதந்திரமான தேசிய மற்றும் சமுதாய வளர்ச்சியை பாதுகாப்பது என்ற பெருவிருப்பங்களை பிரதிபலித்தது.

தேசிய விடுதலை இயக்கங்கள், தேசிய பிரச்சினையின் தீர்விற்கு ஒரு சக்தி பொருந்திய கருவியாக எப்பொழுதுமே திகழ்ந்து வந்துள்ளன. அத்துடன், சமுதாய விடுதலைக்கான உழைக்கும் மக்களின் போராட்டத்துடன் அவை எப்பொழுதுமே மிக நெருக்கமாக இணைந்து வந்துள்ளன. உண்மையில், அவற்றின் கடைசிக் கட்டங்களில், சமுதாய

சாராம்சம், அவற்றின் உள்ளடக்கத்தில் முன்கூட்டியே ஆதிக்கம் செலுத்த துவங்கியிருக்கின்றது.

ஒரு விமர்சனரீதியான வழியில் கறாராக தேசிய இயக்கத்தை அணுகவேண்டும், சரித்திர ரீதியாக நெறியாண்மை செய்யப்பட்டுள்ள அதன் முக்கியத்துவத்தை அங்கீகரிக்க வேண்டும் என்பது, மார்க்சிய லெனினிய மூலநூல்களின் வரையறுப்பாகும். அவ்வரையறுப்பின் இன்றியமையாத் தேவையினை தேசிய இயக்கங்கள் தெளிவாக உறுதிசெய்துள்ளன. *

தேசியப் பிரச்சினையின்பால் ஒரு சரியான அணுகுமுறையின் முக்கியத்துவத்தை, மார்க்சியமும் லெனினியமும் வலியுறுத்தியுள்ளன. அதன் வெற்றிகரமான தீர்வினை இது முன்கூட்டியே தீர்மானிக்கின்றது.

தேசியப் பிரச்சினையில் முதலாவதாகவும், முக்கியமானதாகவும் திகழ்வது, சமுதாய வளர்ச்சியின் ஜீவாதாரப் பிரச்சினைகளுக்கு தீர்வுகாணும் விஷயமாகும். சமுதாய வளர்ச்சியின் பிரதான பிரச்சினைகள் யாவை? தேசிய ஒடுக்குமுறையினையும், சமத்துவமின்மையினையும் ஒழிப்பது; தேசங்களின் உருவாக்கத்திற்கு தடைக்கற்களாக இருப்பவற்றை நீக்குவது; மக்களின் வளர்ச்சிக்கான சுதந்திரத்தை உறுதிப்படுத்துவது; உண்மையான சமத்துவத்தை சாதிப்பது உட்பட, தேசிய உறவுகளில் சர்வதேசியத்தை கடைப்பிடித்தல் என்பவையாகும். முதலாளித்துவ சகாப்தத்தில், தேசியப் பிரச்சினை என்பது, மிகவும் சிக்கலான பிரச்சினைகளிலொன்ருக இருந்துவந்துள்ளது. அது, கடுமையாக உள்நாட்டு தேசிய வளர்ச்சியைப் பாதித்தது. ஒடுக்கும் நாடுகளினதும், ஒடுக்கப்பட்ட நாடுகளினதும் உருவாக்கத்தையும் வளர்ச்சியையும் கடுமையாக பாதித்தது. ஒடுக்கப்பட்ட நாடுகளின் தேசிய மற்றும் சமூக விடுதலைக்கான வாய்ப்புகளையும் கடுமையாக பாதித்தது. தேசங்கள்

* வி. இ. லெனின், “நூல் திரட்டு”, தொகுதி 20, பக். 435.

மத்தியிலான உறவுகளை எடுத்துக்கொண்டு பார்த்தால், முதலாளித்துவ சகாப்தத்தின் செல்வாக்கு இன்னமும் பெருமளவிற்கு நீடித்து வருவதைக் காணலாம். சர்வதேச வளர்ச்சிப் போக்குகளின்மீதும் அதன் செல்வாக்கு நீடித்து வருகிறது. வர்க்கங்கள், கட்சிகள், ஏன் மக்கள் அனைவரின் உணர்விலும் இந்த வளர்ச்சிப் போக்கின் பிரதிபலிப்பை காணலாம். சமுதாயத்தின் அனைத்து அம்சங்களும் சர்வதேச மயமாக்கப்பட்டதின் மூலம், சர்வதேசிய இயக்கப் போக்குகள் உந்தித்தள்ளப்பட்டன. உலகுதழுவிய இயக்கங்களாக அவை மாறிவிட்டன. தொழிலாளி வர்க்கத்தின் வழிகாட்டலின் கீழ் வந்தபொழுது அத்தகைய நிலைமை ஏற்பட்டது. ஆனால், இன்னமும் அவை, அதாவது சமுதாயத்தின் அனைத்து அம்சங்களும், தேசியப் பிரச்சினையின் செல்வாக்கின்கீழ் ஆட்பட்டிருக்கின்றன. தேசியப் பிரச்சினை இறுதியாக தீர்க்கப்படும்வரை இந்நிலைமை நீடிக்கவே செய்யும்.

தேசிய மற்றும் சர்வதேசிய இயக்கப் போக்குகள், சாராம்சத்தில் புறநிலை ரீதியானவைகளேயாகும். ஏனெனில், அவை சமுதாய அமைப்பின் தன்மையினால், குறிப்பாக சொத்துடைமையின் ஆதிக்க வடிவத்தால் நெறியாண்மை செய்யப்படுகின்றன. ஆனால் அத்துடன் அவை அகநிலைக் காரணிகளோடும் இணைப்புக் கொண்டுள்ளன. தேசிய உணர்வு, தேசிய மனோதத்துவம், சர்வதேசிய சித்தாந்தம் போன்றவற்றோடும் சில சூழ்நிலைமைகளில் தேசியவாதத்தின் வெளிப்பாடுகளோடும் இணைப்புக் கொண்டுள்ளன.

தேசங்களின் வாழ்வில் காணப்படும் அனைத்து உள்நாட்டு அம்சங்களுக்கும், அவற்றின் பரஸ்பர உறவுகளுக்கும், பலவழிகளிலும் ஒரு அளவுகோலாக தேசியப் பிரச்சினை திகழ்கின்றது. முதலாளித்துவ சகாப்தத்திலும், சோஷலிசத்தை நிர்மாணித்துவரும் காலகட்டத்திலும், தனிப்பட்ட மக்கட் பிரிவுகளை எடுத்துக் கொண்டாலும் சரி, மனிதகுலம் முழுமையினையும் எடுத்துக் கொண்டு

பார்த்தாலும் சரி ஒரு விஷயம் மிகத்தெளிவாக இருக்கின்றது. மனிதகுலம் அனைத்தினதும், பொருளாதார, அரசியல், கலாசார வளர்ச்சியின் மீது, ஒரு வலிமையான செல்வாக்கினை தேசியப் பிரச்சினை செலுத்துகின்றது என்பதே அது. முதலாளித்துவ சுற்றுச் சார்புகளின் கீழ், தேசியப் பிரச்சினையின் சாராம்சம், நாடுகளிடையே காணப்படும் பகையுணர்வுகொண்ட எதிர்மறையேயாகும். ஒடுக்குபவர், ஒடுக்கப்படுபவர் என்ற அவற்றிற்கிடையேயான பிரிவினையேயாகும். தேசிய வாதத்தையும், குறுகிய தேசிய வெறியையும் நடைமுறைப் படுத்தலேயாகும். தேசிய ஒடுக்குமுறையும், சமத்துவமின்மையும் சமுதாய முன்னேற்றத்தை தடைப் படுத்துகின்றன. உற்பத்தியின் மீதும், பரிவர்த்தனை மீதும் ஒரு பெரும் தடையாக அவை செயல்படுகின்றன. தேசிய கலாசாரங்கள் செழுமைப் படுவதற்கும், பரஸ்பரம் செல்வாக்கினை செலுத்துவதற்கும் ஒரு பெரும் தடையாக அவை செயல்படுகின்றன. தேசங்கள் அனைத்திலும் மக்கள் மத்தியில் பெரும்பிளவை அவை ஏற்படுத்துகின்றன, விரோத குரோதத்தையும், பகைமையினையும், யுத்தங்களையும் அவை தோற்றுவிக்கின்றன.

தேசியப் பிரச்சினை மிகவும் முக்கியமானதாக இருந்த போதிலும், அது ஒரு சுயேச்சையான, சுயநிறைவு கொண்ட பிரச்சினையல்ல என்பதே மார்க்சிய-லெனினிய வாதிகளின் கருத்து. சமுதாய வளர்ச்சியில் வர்க்கப் பிரச்சினைகளுக்கு முற்றிலும் கீழ்ப்பட்டதேயாகும் அது. உறுதியான மனிதாபிமானிகளும், ஜனநாயகவாதிகளுமான மார்க்சிய-லெனினியவாதிகள், தங்களது கொள்கையை, தேசிய ஒடுக்கு முறையையும், சமத்துவமின்மையையும் நீக்குவது என்ற அடிப்படையிலிருந்து மட்டும் உருவாக்க வில்லை. ஆனால், பிரதானமாக தொழிலாளி வர்க்க நல உரிமைகளின் அடிப்படையிலேயே உருவாக்குகின்றனர்.

மக்களின் வாழ்விலும், சமுதாய வாழ்விலும் காணப்படும் தேசிய அம்சங்கள் சமுதாய வளர்ச்சியின் ஒரு வடிவம் மட்டுமேயாகும். முதலாளித்துவ அல்லது கம்யூனிச

(தேசங்களும், தேசிய தன்மைகளும் பின்னதிலும் தொடர்ந்து நீடிக்குமாயினும்)—உருவாக்கத்திற்கு ஏற்ப பெறப்பட்டுள்ள உற்பத்தி முறையைச் சார்ந்தே அவற்றின் உள்ளடக்கம் இருக்கின்றது. இதனால்தான், தேசியப் பிரச்சினையும், தேசங்கள் மற்றும் தேசிய உறவுகளின் வளர்ச்சிபற்றிய அனைத்து பிரச்சினைகளும், மிகத்தெளிவாக, வர்க்கப் பிரச்சினைக்கு கீழ்ப்பட்டவையாக திகழ்கின்றன. எனவேதான், ஆழமான சமுதாய மாற்றங்கள் இல்லாமல், தேசியப் பிரச்சினையின் தீர்வு சாத்தியமில்லாமலிருக்கின்றது.மார்க்சிய-லெனினிய வரையறுப்பு ஒன்றுண்டு: "தேசியப் பிரச்சினை சரித்திர ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் பரிசீலிக்கப்படவேண்டும்."* இவ்வாறு லெனின் எழுதியுள்ளார்.

தேசிய உறவுகளின்பால், ஒரு உண்மையான புரட்சிகரமான கொள்கையை உருவாக்க வேண்டியது தொழிலாளி வர்க்கத்தின் பிரதான பொறுப்பாகும். முதலாளித்துவ சகாப்தத்தின் தேசிய, சர்வதேசிய நடப்புக்கள் பற்றிய ஒரு சரியான பகுப்பாய்வின் அடிப்படையில் அக்கொள்கையை உருவாக்க வேண்டும். இவ்வாறாக, அனைத்து தேசிய இனங்களையும் சேர்ந்த உழைக்கும் மக்கள் மத்தியில் பரஸ்பர நம்பிக்கைக்கு உத்திரவாதம் ஏற்படுத்தவும் விடுதலைக்கும், சோஷலிசத்திற்குமான வர்க்கப் போராட்டத்தில் அவர்களது இணக்கமான நல்லுறவுகளை மீண்டும் நிலைநாட்டவும் ஒற்றுமையைக் கட்டவும் உத்தரவாதம் செய்ய வேண்டும்.

தன்மையாலும், நலன்களாலும், குறிக்கோள்களாலும் புறநிலை ரீதியில் தொழிலாளி வர்க்கம் சர்வதேசியத் தன்மை வாய்ந்ததாகத் திகழ்கின்றது. இவ்வாறு குறிப்பிடுவதினால், மார்க்சிய- லெனினியக் கட்சிகளைப் பொறுத்தவரை, அவை, தொழிலாளி வர்க்கத்திற்கும், அனைத்து உழைக்கும் மக்களுக்கும் சர்வதேசிய உணர்விலான கல்வியை அளிக்க வேண்டிய அவசியத்தை இது எவ்விதத்திலும் குறைக்கவில்லை.

---

* வி. இ. லெனின், "நூல் திரட்டு", தொகுதி 41, பக். 313.

அத்தகைய கல்வியளிப்பதை மேலும் இருமடங்காக்க வேண்டும். ஏனெனில், பரந்துபட்ட மக்கள் மத்தியில் தேசியவாத தத்துவத்தை ஊன்றிவளர்க்கவும், சர்வ தேசியத்தின் பங்கினைக் குறைத்து மதிப்பிடவும் முதலாளிகள் முயன்று கொண்டிருக்கின்றனர். ஒடுக்கப்பட்ட தாழ்த்தப் பட்ட அனைத்து மக்களின் சுதந்திரமான தேசிய வளர்ச்சியை பாதுகாத்தாக வேண்டும். தேசிய ஒடுக்கு முறையினையும் சமத்துவமின்மையினையும் களைந்தெறியும் தொடர்ச்சியான முயற்சிகளுடன் கல்வியறிவூட்டும் பணியினையும் தொழிலாளி வர்க்கக் கட்சிகள் இணைத்துச் செய்கின்றன. மார்க்சிய—லெனினிய இயக்கவியலின் அடிப்படையில், தேசியப் பிரச்சினையின்பாலான அணுகுமுறை இருக்கவேண்டும். அந்த அடிப்படையில் பிரச்சினையை அணுகுவது குறித்து, சோவியத் ஒன்றிய கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய குழு பொதுச் செயலாளர் தோழர் லியனித் பிரேஷ்நெவ் கூறிய தாவது: "ஒவ்வொரு தேசத்தினதும் வளர்ச்சிக்கு மிகவும் சாதகமான சூழ்நிலைகளை உருவாக்குவதின் மூலம், சமுதாம் மற்றும் தேசிய ஒடுக்கமுறையிலிருந்து அவர்களது பூரண விடுதலையை ஏற்படுத்துவதின் மூலம், அனைத்துத் துறை யிலும் தேசங்கள் ஒன்றிணைவதையும், பரஸ்பர நல்லுறவை யும், ஒற்றுமையையும் முன்னேற்றுவிக்க வேண்டும்." *

மக்களின் வாழ்வில் காணப்படும் தேசிய அம்சங்களை அணுகுகின்ற பொழுது, சூனியவாதத்தோடு சர்வதேசி யத்தை ஒப்பிடும் முயற்சிகளை லெனின் வன்மையாக கண் டித்தார். உண்மையான சர்வதேசியம் என்றால் என்ன என்பது பற்றி குறிப்பிட்டு லெனின் விளக்கியுள்ளார். தனிமைப்பட்டுபோகக்கூடிய அனைத்து போக்குகளின்வடிவங் களையும், தேசிய அசாதாரண தன்மையையும் எதிர்த்துப் போராடியாக வேண்டும். சகோதர பூர்வமான ஒற்றுமை யினையும் ஒத்துழைப்பினையும், பரஸ்பர உதவியினையும்

---

* லி. இ. பிரெஷ்நெவ், "சோவியத் சோஷலிசக் குடியரசு கள் ஒன்றியத்தின் ஐம்பதாம் ஆண்டு நிறைவு விழா", பக். 10-11.

முன்கொண்டுசெல்ல வேண்டும். அதே சமயத்தில், சமுதாய வளர்ச்சியில் தேசிய காரணிகளின் பங்கிளே முழுமையாக கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும். இதுதான் உண்மையான சர்வதேசியத்தின் தெளிந்த பொருளாகுமென்று லெனின் எடுத்துரைத்தார்.

தேசிய அசாதாரணத் தன்மை என்ற கருத்தினை தேசிய வெறியர்கள் பெரிதுபடுத்தி எடுத்துரைக்கின்றனர். இதர இன மக்களைவிட தங்களது இனம் மிக மேன்மையானது என வாதிடுகின்றனர். அவர்கள் குறுகிய தேசிய வெறியை யும், இனவெறியையும் பரப்புகின்றனர். விரோத குரோதங் களை மக்கள் மத்தியில் விதைக்கின்றனர். ஆயுதந்தாங்கிய மோதல்களையும் முரண்பாடுகளையும் தயார் செய்கின்றனர். சமுதாய, பொருளாதார முன்னேற்றத்திற்கு இவை அனைத் துமே மிகப்பெரும் தடையாகும்.

எங்கு நோக்கினும் தேசியப் பிரச்சினையின் சாராம்சம் ஒரே விதமாகவே இருக்கின்றது. இருந்த போதிலும், அதன் வடிவங்கள் மிகவும் வேறுபட்டவைகளாக இருக் கின்றன. முதலாளித்துவ சமுதாய உறவுகளின் பக்குவத் தன்மையினது அளவையும், நாட்டின் வேறுபாடான அம்சங்கள் போன்றவற்றையும் அவை சார்ந்திருக்கின்றன. முதலாவது தேசங்களின் உருவாக்கத்திற்காக எதேச்சாதி கார நிலவுடமைத் தடைகள், தகர்த்தெறியப்பட்ட நாளிலிருந்து வரலாற்றில் தேசியப் பிரச்சினை இருந்து வரு கிறது. சோஷலிசத்தின் பரிபூரண வெற்றி வளர அது நீடித்திருக்கும். சோஷலிச நிர்மாணப் போக்கில் முதலாளித்துவ நாடுகள் சோஷலிச நாடுகளாக மாறும் வரை அது நீடித்திருக்கும்.

அனைத்து வகையான தேசிய ஒடுக்குமுறைகளையும் களைந்தெறிவதின் மூலம், பெயரளவிலான சமத்துவமல்ல, ஆனால் உண்மையான நடைமுறை சமத்துவத்தை உறுதிப் படுத்துவதின் மூலம், தேசங்கள், தேசிய இனங்கள், தேசிய மற்றும் இனக்குழுக்களின் சுதந்திரமான சர்வாம்ச

வளர்ச்சியின் மூலம், சுதந்திரமான விருப்பத்தினடிப்படையிலான தேசிய உறவுகளின் கோட்பாட்டின் மூலம், வளர்ச்சிக்காக முயன்று கொண்டிருக்கும் மக்களுக்கு மிகவும் முன்னேறிய நாடுகள் உதவுவதின் மூலம், புறநிலை ரீதியான சமுதாய முன்னேற்றத்திற்கேற்ப, தேசிய சர்வ தேசிய வளர்ச்சிப் போக்குகளின் வடிவத்தையும் உள்ளடக்கத்தையும் சமநிலைப்படுத்துவதின் மூலம், தேசியப் பிரச்சினை தீர்வு காணப்படுகின்றது.

தொழிலாளி வர்க்கம் மட்டுமே தேசியப் பிரச்சினைக்கு முழுமையான தீர்வு காணமுடியும். வேறுயாராலும் அது சாத்தியமல்ல. முதலாளிகளும்கூட சில நடவடிக்கைகளை, முதலாவதாக தங்கள் சொந்த குறிக்கோள்களுக்கேற்ப எடுக்கின்றனர். பரந்துபட்ட மக்களின் நிர்பந்தத்தின் கீழும்கூட சில நடவடிக்கைகளை எடுக்கின்றனர். முதலாளித்துவ சகாப்தத்தின் விடியலின் பொழுது, முதலாளிகள் தேசிய இயக்கங்களின் முன்னணியில் நின்றனர். தேசங்களையும், தேசிய அரசுகளையும் அணி திரட்டினர். மக்களின் தேசிய வளர்ச்சியை முன்கொண்டு சென்றனர். அதன் சொந்த நிலைபாடுகளுக்கு ஆதாயமாக இருந்த வரையில், தேசங்களின் வளர்ச்சிக்கு முதலாளித்துவம் நின்றது, செயல்பட்டது.

ஏகாதிபத்திய கட்டத்தில் சூழ்நிலை தீவிரமாக மாறி விட்டது. பூர்ஷுவாக்கள் தமது சொந்த தேச முன்னேற்றத்தையே கண்டு அஞ்சத்துவங்கினர். ஏனெனில், தேசிய தொழிலாளி வர்க்கத்தின் செல்வாக்கினையும், நிலைபாட்டையும் இது வலிமைப்படுத்தி வளர்த்தியது. ஆனால், தேசமானது எல்லாதுறையிலும் நல்ல முன்னேற்றத்தைப் பெற்றபொழுது, இதர இனமக்களை அடிமைப்படுத்தவும் சுரண்டவுமான குறிக்கோளாடு, முதலாளிகள் அதனை பயன்படுத்த முயன்றனர். இதற்காக முதலாளித்துவம் தனது சொந்த நாட்டையே, தேசிய வாதம் குறுகிய தேசிய வெறி ஆகியவற்றைக் கொண்டு ஊழல் மயமாக்கியது.

தேசிய சூனியவாதத்தைக் கொண்டு அது மக்களை ஒடுக்கியது.

முதலாளித்துவத்தின் ஏகபோக காலகட்டத்தில், காலனி நாடுகளிலும், சார்புநாடுகளிலுமிருந்த தேசிய முதலாளிகள், தேசியப் பிரச்சினையின் ஓர் தீர்விற்கான பரந்துபட்ட மக்களின் போராட்டத்தில் பிரதான இடத்தை வகித்தனர். அதேசமயம், வளர்ச்சிபெற்ற நவீன நாடுகளிலிருந்த முதலாளிகள், தொழிலாளி வர்க்கத்தினதும் அதன் கூட்டாளிகளினதும் புரட்சிகர நடவடிக்கைகளால் அஞ்சி நடுங்கினர். பிற்போக்கான நடவடிக்கைகளை மேற் கொள்ளத் துவங்கினர். குறிப்பாக தேசிய இயக்கங்கள் சம்மந்தப்பட்ட பிரச்சினைகளில் அவ்வாறு நடந்து கொண்டனர். ஆசிய மக்களின் விடுதலைப் போராட்டத்தை பரிசீலித்த பொழுது, 1912, கோடைகாலத்தில் லெனின் அதுபற்றி எழுதினர். எவ்வாருயினும், காலனி நாடுகளிலும் மற்றும் சார்பு நாடுகளிலும் "அம்மக்களின் விடுதலைப் போராட்டத்தில் தலைமைதாங்கும் தகுதிபடைத்த, உணர்வு பூர்வமான, கட்டுப்பாடான, தொடர்ச்சியான ஜனநாயகத் தன்மைவாய்ந்த ஒரு பூர்ஷ்வா வர்க்கம் இன்னமும் நீடித்து வருகிறது" * எனக்குறிப்பிட்டார். பல ஆசிய, ஆப்பிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகள் சம்மந்தப் பட்டவரை, இந்தக் கருத்து இன்னமும் கூட சரியானதாகவும் பொருந்தக் கூடிய தாகவும் இருக்கின்றது. அந்நாடுகளில் நடைபெறும் பல போராட்டங்களில் தேசிய முதலாளிகள் இன்னமும் பங்கு பெற்று வருகின்றனர். ஏகாதிபத்தியத்தின் பொருளா தார, அரசியல் மற்றும் கலாசார ஆதிக்கத்திற்கெதிரான போராட்டத்தில், புதிதாக விடுதலைபெற்ற அல்லது விடுதலைக்காக போராடிக்கொண்டிருக்கின்ற காலனி நாடு களில் நடைபெறும் அத்தகைய போராட்டத்தில், தேசிய முதலாளிகள் இன்னமும் பங்குபெற்று வருகின்றனர்.

முதலாளித்துவம் அழிக்கப்படாத காலம் வரை, ஆளும் வர்க்கங்கள் தேசியப் பிரச்சினையை சமாளிக்க முயல்வது

* வி. இ. லெனின், "நூல் திரட்டு", தொகுதி 18, பக். 165.

சாராம்சத்தில் முதலாளித்துவத் தன்மையுடையதே. அதில் எவ்வளவு சாதகமான அம்சங்கள் இருக்கின்றன என்பது பிரச்சினையே அல்ல. தீர்வுகள் முழுமையற்றவைகளாக இருக்கின்றன. தேசத்தை பிரிவினைக்கு இட்டுச் செல்லக்கூடிய, பொதுவாக மக்களை பிரிக்கக்கூடிய, எதிர் மறையான அம்சங்கள் அதில் நிறைந்து காணப்படுகின்றன. லெனின் குறிப்பிட்டதாவது, "முதலாளித்துவம் நீடிக்கும் காலம் வரை, அனைத்து ஜனநாயகக் கோரிக்கைகளும்—அக் கோரிக்கைகளின் விளைவாக அத்துடன் ஏற்படும் தேசியப் பிரச்சினையின் தீர்வும் — "ஒரு விதிவிலக்காக மட்டுமே அது சாதிக்கப்பட்ட முடியும். அதன் பின்னரும்கூட அத்தீர்வு ஒரு முழுமை பெறுத, புரட்டப்பட்ட வடிவத்திலேயே இருக்கும்."*

தேசியப் பிரச்சினையைப் பொறுத்தவரை, தொழிலாளி வர்க்கத்தின் தீர்விற்கும், முதலாளித்துவ சமுதாயத்தின் சமனப்படுத்தும் தீர்வுகளுக்குமிடையே அடிப்படையான வேறுபாடு உண்டு. முன்னது, அதாவது தொழிலாளி வர்க்கத் தீர்வு, மிக மகத்தான சாத்தியப்பாடு நிரம்பிய ஒற்றுமையை அடிப்படையாகக் கொண்டது. மேலும், மக்களின் சுயவிருப்பத்தைச் சார்ந்த சங்கமிப்பை அடிப் படையாகக் கொண்டதாகும். முதலாளித்துவத்திலிருந்து சோஷலிசத்திற்கு கடந்து செல்லுகின்ற மனிதகுலத்தின் அடுத்த கட்டத்தை ஊர்ஜிதப் படுத்துவதின் ஒரு பகுதியே தேசிப் பிரச்சினையின் தீர்வாகும். முதலாளித்துவத்தை அழித்தொழிக்கும் தொழிலாளி வர்க்கத்தின் சரித்திர ரீதியான கடமையின் ஒரு பகுதியே, தேசிய பிரச்சினையின் தீர்வாகும். தேசியமே அசாதாரண தன்மை என்ற போக்கை முழுமையாக அழித்தொழிக்கும் ஆற்றல் பெற்றது தொழிலாளி வர்க்கமேயாகும். அதனைக் காட்டிலும் வேறு எந்த வர்க்கமும் அதனைச் செய்துவிட முடியாது; பல்வேறு பட்ட தேசங்களுக்கு மத்தியில், பூரணமான சகோதரத்

* வி. இ. லெனின், "நூல் திரட்டு", தொகுதி 21, பக். 408.

தன்மையை நிலைநாட்டக் கூடியது விழிப்படைந்த தொழிலாளி வர்க்கமேயாகும் என்று எங்கெல்ஸ் எழுதினார்.*

தொழிலாளர்களுக்கும், அனைத்து உழைக்கும் மக்களுக்கும், சர்வதேசிய உணர்விலான கல்வியை அளிப்பதில், மார்க்சிய-லெனினிய மூலநூல்கள் ஒரு விசேடமான கவனத்தைச் செலுத்தியுள்ளன. தேசியப் பிரச்சினையின் தீர்விற்கான வழிவகைகளை அவை வரையறுத்துள்ளன. அம்மூல நூல்கள் சுட்டிக்காட்டியுள்ள முக்கிய அம்சம் என்ன? பலதேசிய இனங்களைக் கொண்ட ஒரு நாட்டில், ஒடுக்குகின்ற தேசிய இனங்களைச் சேர்ந்த புரட்சியாளர்கள், ஒடுக்கப்பட்டுள்ள இனங்கள் "**பிரிந்து செல்லும்** சுதந்திரத்தை" வலியுறுத்த வேண்டும். அதேசமயம், ஒடுக்கப்பட்ட தேசிய இனங்களைச் சார்ந்த புரட்சியாளர்கள், "மறுபுறம் இணைவதற்கான சுதந்திரம்" என்ற கருத்தை திட்டவட்டமாக வலியுறுத்த வேண்டும். லெனின் இது குறித்து எழுதியதாவது: "தேசங்களின் ஒருங்கிணைப்பிற்கும், சர்வதேசியத்திற்கும் இதைவிட சிறந்த பாதை வேறு இல்லை, இருக்கவும் முடியாது. **குறிப்பிட்ட சூழ்நிலையில்** இந்த குறிக்கோளை அடைய வேறு எந்த பாதையும் இல்லை, இருக்கவும் முடியாது."**

பொதுவான போராட்டத்தில், தொழிலாளி வர்க்கத்தினதும், அனைத்து உழைக்கும் மக்களினதும் ஒற்றுமை சாதிக்கப் படுகின்றது. பழைய அமைப்பு, புரட்சிகரமான முறையில் தூக்கியெறியப்படும் பொழுது, அந்த வெற்றிக்குப் பிறகு, தேசிய ஒடுக்குமுறை முற்றிலுமாக களைந்தெறியப் படுவதன்மூலமும் ஸ்தாபனரீதியானஒற்றுமையின் மூலமும் அது உறுதிசெய்யப் படுகிறது. சர்வதேசரீதியான ஒத்துழைப்பு என்பது, "சமதையானவர்களுக்***

---

*மார்க்ஸ்-எங்கெல்ஸ், "நூல்கள்", பெர்லின், 1969, தொகுதி 2, பக். 614.

** வி. இ. லெனின், "நூல் திரட்டு", தொகுதி 22, பக். 347.

*** மார்க்ஸ்-எங்கெல்ஸ், "நூல்கள்", பெர்லின், 1967, தொகுதி 35, பக். 270.

கிடையே மட்டுமே சாத்தியமாகும்.' முன்னுளைய ஒடுக்கப் பட்ட மக்களின் உண்மையான சுதந்திரமான தேசிய வளர்ச்சி தேசங்களின் சுய நிர்ணய உரிமையை உறுதியாக அமுல்படுத்துவதின் மூலம், தேசிய நலன்களை மதித்து போற்றிவளர்ப்பதின் மூலம், தேசிய சிறுபான்மையினருக்கு சரியான பாதுகாப்பை அளிப்பதின் மூலம், வளர்ச்சி குன்றிய அம்மக்களின் வளர்ச்சிக்காக உதவுவதின் மூலம் சாத்தியம் என்பதை இது குறிக்கிறது.

முன்னேறி வருகிற சோஷலிசம், நாடுகள் மத்தியிலான எதிர்மறைப் போக்கினையும், அதற்கு காரணமான சமுதாய காரணிகளையும் நீக்கிவிடுகின்றது. சமுதாய முன்னேற் றத்தைப் பாதிக்கக்கூடிய, தேசிய உறவுகளை அத்தகைய அளவிற்கு ஒரு பிரச்சினையாக்கி சீர்குலைக்கக்கூடிய அனைத்தும், சோஷலிசத்தின் கீழ் மறைந்து விடுகின்றன.

மகத்தான அக்டோபர் சோஷலிசப் புரட்சியின்விளைவாக வும், சோஷலிச சோவியத் குடியரசுகளின் ஒன்றிய உருவாக்கத்திஞலும், அக்குடியரசுகளின் மக்களால் சோஷலிசம் நிர்மாணிக்கப்பட்டதிஞலும், வரலாற்றில் முதல் தடவையாக தேசியப் பிரச்சினைக்குத் தீர்வு காணப் பட்டுள்ளது.

லியனித் பிரெஷ்நெவ் வலியுறுத்திக் கூறியுள்ளதாவது: ''கடந்த அரை நூற்ருண்டுகால வீரம் பொருந்திய சாதனைகளை தொகுத்துப் பார்க்கையில் கடந்த காலத்தில் இருந்த எம்மிடம் வந்ததான தேசியப்பிரச்சினை முழுமையாக தீர்க்கப்பட்டு விட்டது என்பதை நாங்கள் மிகவும் அழுத்தம் திருத்தமாக கூறமுடியும். அதற்குரிய சரியான காரணங்கள் எங்களிடமுள்ளன. அதற்கு மிகச்சிறந்த முறையில், இறுதியாக தீர்வுகாணப் பட்டுள்ளது. இது ஒரு மகத்தான சாதனையாகும். சமத்துவ உரிமைகளின் அடிப்படையிலேயே இதனை சாதிக்க முடியும் என்பது தெளிவு. சோவியத் சோஷலிச குடியரசுகளின் ஒன்றியத்தில் புதிய சமுதாயத்தை நிர்மாணிப்பதில் அடைந்துள்ள தொழில் மயமாக்க, கூட்டுறவின் வளர்ச்சி கலாச்சாரப்

புரட்சி போன்ற வெற்றிகளையும் இத்துடன் இணைத்துப் பார்க்க வேண்டும்.''*

தேசியப் பிரச்சினை தீர்வு காணப்பட்டு வந்த தருணத்தில் தேசிய உறவுகளில் பல சாதகமான அம்சங்கள் புகுத்தப் பட்டன (ஒத்துழைப்பு, பரஸ்பர உதவி, கலாச்சாரங்களுக் கிடையேயான பரஸ்பர செல்வாக்கு என்பன போன்றவை) உண்மையில், தேசியப் பிரச்சினை இறுதியாக தீர்வுகாணப் பட்ட பிறகும்கூட, அச்சாதகமான அம்சங்கள் இன்னமும் நீடிக்கின்றன. மேலும், அவற்றின் வளர்ச்சிக்கு தடையாக இருந்த காரணிகளை சோஷலிசம் நீக்கிவிட்டது. அவை இப்பொழுது மிகவும் வலிமையுடையனவாக வளர்ச்சி பெற்றுவிட்டன. சோஷலிச சமுதாய உறவுகளின் ஒரு மிக பிரதானமான பாகமாக அவை மாறிவிட்டன. கம்யூனிஸத்தை நோக்கிய மனிதனின் முன்னேற்றத்திற்காக அவை பாடுபடுகின்றன.

* * *

தேசங்களின் உறவுகள் பற்றிய தத்துவத்தினை உருவாக்குவதில் கணிசமான பங்கினை மார்க்ஸ், எங்கெல்ஸ், லெனின் ஆகியோர் செலுத்தியுள்ளனர். தேசங்களின் சுய நிர்ணய உரிமை என்ற கோஷத்தின் புரட்சிகர உள்ளடக் கத்தை முன்னேற்றுவதில் தங்களது விடா முயற்சியின் மூலம் பாடுபட்டுள்ளனர். ஒரு சுதந்திரமான தேசிய அரசை அமைப்பது என்ற அளவுக்குப் பிரிந்துசெல்லும் உரிமை என்ற கோஷத்தை முன்வைத்து லெனின் இதை முழுமைப் படுத்தியுள்ளார்.

தேசங்களின் சுயநிர்ணய உரிமை என்ற கோஷம், முதன் முதலாக, 17-வது நூற்றுண்டில் முதலாளிகளால் முன்வைக்கப் பட்டது. நிலவுடமையின் மீதான முதலாளித் துவத்தின் வெற்றியை உறுதிப் படுத்துவதின்மீதும் தேசிய உறவுகளின் துவக்கம், வளர்ச்சி ஆகியவற்றின் மீதும் அக்கோஷம் பலமாக சார்ந்திருந்தது. லெனின் கூறியதாவது:

* லி.இ. பிரெஷ்நெவ், ''சோவியத் சோஷலிசக் குடியரசு கள் ஒன்றியத்தின் ஐம்பதாம் ஆண்டு நிறைவு விழா'', பக். 17.

"தேசிய உறவுகளின் கருத்தோட்டத்திலிருந்து பார்த்தால் முதலாளித்துவ வளர்ச்சிக்கான மிகச்சிறந்த சூழல்களை, தேசிய அரசு, சந்தேகத்திற்கிடமின்றி அளித்துள்ளது."* அதன் முக்கியத்துவத்திற்கேற்ப, சுயநிர்ணய உரிமையின் முற்போக்கான உள்ளடக்கத்தை தொழிலாளி வர்க்கம் விரிவுபடுத்தி செழுமைப்படுத்தியது. சுயநிர்ணய உரிமைக் கோஷம், தொழிலாளி வர்க்கத்திற்கும், உழைக்கும் மக்களுக்கும் சர்வ தேசியத் தன்மையிலான கல்வியை புகட்டு வதற்கு அளப்பரிய உதவியினைச்செய்துள்ளது என்று லெனின் திரும்பத் திரும்ப வலியுறுத்திக் கூறினார். அக்கோஷம், ஏகாதிபத்திய முதலாளிகளின் தேசிய வாத மூலபலத்தையே தாக்கி பலவீனப் படுத்தியது. அத்துடன், பல்வேறு தேசிய வாத கருத்துக்கள், கொள்கைகளை ஒரு சோஷலிசப் போர்வையுடன் கடைபரப்பிக் கொண்டிருந்த போக்கு களையும் அம்பலப்படுத்தியது. வடிக்கட்டிய தேசிய வாதத்தின் தத்துவரீதியான பொய்மையினை லெனின் அம்பலப் படுத்தினார். தேசிய வாதத்தின் சண்டைப் போக்கினது பிற்போக்கான சாராம்சத்தையும் அவர் தோலுரித்துக் காட்டினார். இவ்வாறாக, தேசிய உறவுகள் பற்றிய கருத் தாழத்தை தெளிவாக எடுத்துக்காட்டியதில், லெனினது மகத்தான சிறப்பு ஓங்கியுள்ளது.

இதரபல விஷயங்களுக்கு மத்தியில், மிக உயர்ந்த முக்கியமான ஒரு முடிவை அவர் மேற்கொண்டார். அது என்ன? "தேசியப் பிரச்சினையில் சந்தர்ப்ப வாதத்தைக் கையாளுவதென்பது, ஒடுக்கும் நாடுகளிலுள்ளதை விட வேறு வகையில் ஒடுக்கப்பட்ட நாடுகளிலும்கூட காணப் படும்"** என்று எடுத்துரைத்துள்ளார். பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் நிறுவப்பட்டு விட்டால் ஒரு வர்க்க பேதமற்ற சமுதாயத்தை நிர்மாணிக்கும் அதே போன்ற சரித்திர

* வி. இ. லெனின், "நூல் திரட்டு", தொகுதி 20, பக். 400.

** வி. இ. லெனின், "நூல் திரட்டு", தொகுதி 20, பக். 411.

ரீதியான செல்வழியை பல்வேறு நாடுகளும் பின்பற்றத் துவங்கிவிடும். அவ்வாறு பின்பற்றுகையில், "மிகவும் வேறுபட்ட பாதைகள் மூலமும், நெளிவு சுழிவுகள் மூலமும் அவை சாதிக்கப்பட வேண்டியிருக்கும்"* என்பதை லெனின் எடுத்துக் காட்டினார். தங்களது சுயநிர்ணய உரிமையை மக்கள் பயன்படுத்துகையில் ஏற்படும் குணவியல் ரீதியான புதிய கட்டத்தின் ஒரு வெளிப்பாடு என்றுகூட இதனைக் கூறலாம். தேசிய அரசை அமைத்துக் கொள்வதற் குரிய மக்களின் உரிமையைப் பொறுத்த வரையிலும்கூட, அது ஏறத்தாழ தனி முக்கியமுள்ள நிலையிலேயே முதலாளித் துவத்தின் கீழ் இருந்தது. சோஷலிசப் புரட்சிக்குப் பிறகு, எவ்வாறாயினும் விஷயத்தின் சாராம்சம் முற்றிலும் மாறி விட்டது என்பதை லெனின் கண்டறிந்தார். சோஷலிசத்தை நிர்மாணிப்பதில் மிகவும் தீர்மானகரமான வடிவங் களையும், வழிமுறைகளையும் இதர மக்களுடனான அதன் உறவு களையும் ஒவ்வொரு இனமக்களும் அவ்வாறே சுதந்திரமான விருப்பத்தினடிப்படையில் தேர்ந்து கொள்ளமுடியும்.

சோஷலிசத்தின் கீழ், தேசிய உறவுகளின் புதிய உள்ளடக்கம், மிகப்பெருமளவிற்கு மக்களது வாழ்க்கையில் காணப்படும் உண்மையானதேசிய அம்சங்கள் அனைத்தினதும், சுதந்திரமான, பன்முகமான வளர்ச்சியினால் முன்கூட்டியே தீர்மானிக்கப்படுகின்றது. பொதுவாக தேசிய இன வளர்ச்சி பற்றிப் பறைசாற்றும் முதலாளித்துவ தேசியவாதம் அசாதாரணத்தன்மை பற்றிய கருத்துக்களை விதைக்கின்றது, தேசிய பூசல்களைத் தீவிரப்படுத்துகின்றது என லெனின் குறிப்பிட்டார், மறுபுறம் தொழிலாளி வர்க்கம், முதலாளித்துவச் சூழ்நிலைமைகளிலும்கூட, தேசியப் பிரச்சினையின் தீர்விற்காகவும், உண்மையான, சுதந்திரமான தேசிய வளர்ச்சிக்காகவும் போராடுகின்றது. ஆனால், அதேசமயம், அனைத்து தேசிய இனங்களையும் சேர்ந்த உழைக்கும் மக்களைக் கொண்ட, ஒரு ஒன்றுபட்ட

* வி. இ. லெனின், ''நூல் திரட்டு'', தொகுதி 29, பக். 195.

புரட்சிகரமான முதலாளித்துவ எதிர்ப்பு அணிக்காக தொடர்ச்சியாக பணியாற்றுகின்றது. பின் வருமாறு பிரகடனம் செய்ய அது தயங்குவதே இல்லை. ''அனைத்து வகையான தேசங்களின் தன்வய ஒருமைப்பாடு சலுகையின் பலத்தை அடிப்படையாகக் கொண்டுள்ளவற்றைத் தவிர, அனைத்தையும் நாங்கள் வரவேற்கிறோம்.''*

சோஷலிசத்தின்கீழ் தேசிய உறவுகளின் புதிய தன்மை, தேசங்களின் முன்னேற்றத்தின் மீது பலமான விளைவை ஏற்படுத்தின, முதலாளித்துவத்தின்கீழ்தேசங்களின் வளர்ச்சி, அவற்றின் பிரதான உள் ஆற்றல்கள் — முதலாளித்துவ சமுதாயத்தில் இது எந்த அளவிற்கு சாத்தியமோ அந்த அளவிற்குகூட — கட்டவிழ்த்து விடப்படும் அளவுக்கு உண்மையில் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. அதே சமயத்தில் சோஷலிசம் இதர இரண்டு பிரதான காரணிகளை அளித்துள்ளது. முதலாவதாக, சுதந்திர மக்களின் வாழ்க்கையில் காணப்படும் அனைத்து தேசிய அம்சங்களின் வளர்ச்சியில் பரஸ்பர செல்வாக்கையும், செழுமையினையும் பலன்தரச் செய்கிறது. தேசம் அல்லது தேசிய இனம் சம்பந்தப்பட்ட தேவைகள், மற்றும் விசேட அம்சங்களுக்கு ஏற்ப, தேசியக்கூறுகள் மாறுபடுகின்றன. இரண்டாவதாக, அனைத்துவகையான, தன்னலமற்ற பரஸ்பர பொருளாதார உதவிக்கு மிகுந்த முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. ஊழியர்கள் உதவுதல், அனுபவத்தினடிப்படையில், கலாசார மதிப்புகளினடிப்படையில் அளிக்கப்படும் உதவி போன்றவற்றிற்கு மிகுந்த முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது.

பாட்டாளி வர்க்க சர்வாதிகாரமும், சோஷலிசம் நிர்மாணிக்கப்படுதலும், தேசிய உறவுகளின் சாராம்சத்தை அடிப்படையிலேயே மாற்றுகின்றன. சோஷலிச தேசிய உறவுகளின் சாராம்சத்தில் காணப்படும் விசேடமான அம்சங்கள் இங்கே கொடுக்கப்படுகின்றன:

---

* வி. இ. லெனின், ''நூல் திரட்டு'', தொகுதி 20, பக். 35.

—தேசிய உறவுகளின் தன்னியலான வளர்ச்சிக்கு பதிலாக, வேருெரு வகையான வளர்ச்சியை, மார்க்சிய—லெனினிய விஞ்ஞானத்தை அடிப்படையாகக் கொண்டு, தொழிலாளி வர்க்கத்தினுலும், அதன் கட்சியினுலும் உணர்வுபூர்வமான வழிகாட்டுதல் செய்யப்படும் அடிப் படையில் அமைந்த ஒரு வளர்ச்சியை சோஷலிசம் முன்வைக்கின்றது;

—தேசங்களுக்குள் உள்ள தேசிய உறவுகளின் உள்ளடக் கத்திலும், அளவிலும், சோஷலிச நிர்மாண காலகட்டத்தில் அடிப்படையான மாற்றங்கள் நிகழ்கின்றன. ஒவ்வொரு தேசத்தின் ஒற்றுமையை வலிமைப்படுத்துவதற்கும், வர்க்க பேதமற்ற சமுதாயத்தின் வெற்றிக்கும் தேவையான தேசிய உறுதிப்பாட்டின் புதிய கட்டத்திற்கான அடிப் படையாக, அத்தேசிய உறவுகள் திகழ்கின்றன; தெளிவாக கூறுமிடத்து, சோஷலிச சமுதாய நிர்மாணமும், மென் மேலும் அது பெற்றுவரும் வெற்றிகளும், தேசிய உறுதிப் பாட்டினையும், தேசத்தின் ஒற்றுமையினையும் ஊக்குவிக் கின்றன;

—சோஷலிச சமுதாய உறவுகள் தோன்றி, அவை உறுதி யான தளத்தைப் பெறவும் செய்கின்றன. தேசங்களுக்கிடை யிலான உறவுகளும்கூட, மிகவும் வளர்ச்சி பெற்றவையாக மாறிவிடுகின்றன; மக்களிடையிலான நட்புறவு தோன்று கின்றது. தேசங்களும், தேசிய இனங்களும் உறுதியாக சங்கமிக்கும் போக்கு துவங்கி வலிமையுடையதாக மாறு கின்றது;

—தேசங்களுக்கும் அரசுகளுக்குமிடையிலான உறவு களில், சுதந்திர சித்தம் எனும் கோட்பாட்டினையும், சமத்து வத்தினையும் சோஷலிசம் உறுதி செய்கின்றது. தேசிய ஒடுக்கு முறையினையும், சுரண்டலேயும் ஒழிப்பதின் மூலமும், உற்பத்திச் சாதனங்களை பொதுவுடமையாக்குவதின் மூலமும் சோஷலிசம் உறுதி செய்கின்றது;

— சோஷலிசத்தின் கீழ் தேசிய உறவுகள், ஒரு வர்க்க பேதமற்ற சமுதாயத்தை கூட்டாக நிர்மாணிக்கும் குறிக்

கோளோடு செயல்படுகின்றன. அக்குறிக்கோளோடு, விடுதலை பெற்ற மக்களிடையே நெருக்கமான ஒத்துழைப்பினையும், சகோதர பூர்வமான பரஸ்பர உதவியினையும் தீவிரப்படுத்துகின்றன;

— பழைய காலத்திலிருந்து வழிவழி வந்துள்ள, பெரிய மற்றும் சிறிய இனங்களைச் சேர்ந்த மக்களிடையேயான நடைமுறை சமத்துவமின்மையை நீக்குதலை, சோஷலிச அமைப்பு உறுதி செய்கின்றது. பொருளாதார மற்றும் கலாச்சார மட்டங்களை உயர்த்துதலை உறுதி செய்கின்றது;

— மக்களது வாழ்க்கையில் காணப்படும் அனைத்து தேசிய அம்சங்களுக்கும் (தேசிய அரசுத்துவம், கலாசாரம், மனோதத்துவம் போன்றவை), தேசிய உறவுகளுக்கும் சித்தாந்த பூர்வமான, தத்துவார்த்த ரீதியான, ஒழுக்க ரீதியான, மனோதத்துவவியல் ரீதியான அடிப்படையாக தொழிலாளி வர்க்க சர்வதேசியம் விளங்குகிறது;

— சோஷலிசத்தின் கீழ், தேசங்கள் மற்றும் தேசிய உறவுகளின் வளர்ச்சி மகாவல்லரசு தேசிய வெறி, முதலாளித்துவ தேசியவாதம், மற்றும் தேசிய சூன்யவாதம் போன்றவற்றை உறுதியாக களைந்தெறிவதை அடிப்படையாகக் கொண்டு அமைந்துள்ளது;

— தேசிய உணர்வுகளின்பால் பரிவான தோரணையையும் தேசிய நலன்களை மதித்து நடப்பதையும் சோஷலிசம் உத்தரவாதப் படுத்துகின்றது; சுதந்திரமான மக்களின் தேசிய நலன்களுக்கிடையே, விஞ்ஞான பூர்வமாக தீர்மானிக்கப்பட்ட இசைவான போக்கை நிலைநாட்டுகின்றது. அடிப்படையான, நீண்டகால நலன்களை முதன்மைப்படுத்தி செயல்படுத்துகின்றது. அதற்கு அடுத்தபடி இரண்டாவதாக உள்ள, மாறும் தன்மை வாய்ந்த நலன்களை கவனித்து செயல்படுத்துகின்றது;

— சோஷலிசம், தேசியப் பிரிவினைகளை முடிவுக்குக் கொண்டுவருவதை உறுதி செய்கின்றது. தேசங்களின் சங்கமிப்பை உறுதி செய்கின்றது. அவற்றின் கலாசாரங்கள்

பரஸ்பர செல்வாக்கு செலுத்துவதனையும், பரஸ்பரம் செழுமைப்படுதலையும் உறுதி செய்கின்றது. தேசிய ரீதியான சமத்துவமின்மையின் சமூக காரணங்களை நீக்குவதின் மூலமும், பொருளாதார, கலாச்சார, தேசியத் தன்மையின் தீவிர வளர்ச்சியை முன்னேற்றுவிப்பதின் மூலமும், சோஷலிசம் இதனையெல்லாம் உறுதி செய்கின்றது.

இந்த புறநிலை ரீதியான நடப்புக்கள் தேசிய உறவுகளின் வடிவங்களிலும், உள்ளடக்கத்திலும் தீவிரமான மாற்றங்களுக்கு இறுதியாக இட்டுச்செல்கின்றன. இதனை, சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் லெனினிய தேசியக் கொள்கை தெளிவாக எடுத்துக் காட்டி விட்டது. "வர்க்க நலன்களையும் குறிக்கோள்களையும் அடிப்படையாகக் கொண்ட ஒரு சமுதாயம் என்ற முறையில், அவர்களது தேசிய இன பூர்வீகங்களைப் பற்றி எவ்வித கவலையுமின்றி, ஒரு மகத்தான சகோதரத்துவத்தின் அடிப்படையில், உழைக்கும் மக்கள் ஒன்றுபட்டனர்'' என்று சுட்டிக்காட்டினர் லியனித் பிரெஷ்நெவ். மேலும் அவர் குறிப்பிட்டதாவது: "இந்த நாட்டில் அத்தகைய ஒற்றுமை தோன்றி விட்டது. அது உறுதிப்படுத்தப்பட்டும் வந்துள்ளது; சோவியத் மக்களிடையே காணப்படும் உறவுகள், வரலாற்றில் முன்னென்றும் இதற்கிணையாக இருந்ததில்லை எனும்படிக்கு அமைந்துள்ளன. இந்த உறவுகளை, மக்களின் லெனினிய நட்புறவு என அழைக்க நமக்கு எல்லா வகையான உரிமையும் உண்டு.''* இது உண்மையில் விலைமதிப்பற்ற வெற்றிச் சாதனையாகும். தீவிரமான சோஷலிச நிர்மாணத்திற்கு பின் நிற்கும் உந்து சக்திகளில் இதுவும் ஒன்றாகும். கம்யூனிச நிர்மாணத்தின் வெற்றியிலும் இது ஒரு தீர்மானகரமான விளைவினை ஏற்படுத்தும்.

* * *

---

* லி. இ. பிரெஷ்நெவ், "சோவியத் சோஷலிச குடியரசுகள் ஒன்றியத்தின் ஐம்பதாமாண்டு நிறைவு விழா'', பக். 17–18.

தேசிய உறவுகளின் சாராம்சத்தை தெளிவாக எடுத்துக்காட்ட, பல சிந்தனையாளர்கள் முயன்றனர். அவற்றில் சிலர், ஓரளவிற்கு, தேசிய உறவுகளின் பொரு ளாயத அடிப்படையைப் புரிந்து கொள்ளவும்கூட தலைப் பட்டனர். ஆனால், தேசிய உறவுகளின் பொருளாதார, அரசியல், கலாசார, சட்டபூர்வ மற்றுமிதர துறைகளின் சமுதாய மற்றும் வர்க்க ரீதியான அம்சங்களை, மார்க்ஸ், எங்கெல்ஸ், லெனின் ஆகியோரே இனங்கண்டு கூறியவர் களாவர். சமுதாய, வர்க்க அம்சங்களை மூன்று வகையாக பிரிக்கலாம்: அ) ஒரு தேசத்தினுள் காணப்படும் வர்க்கங் களின் உறவுநிலை; ஆ) வெவ்வேறு தேசங்களிலுள்ள ஒரே மாதிரியான வர்க்கங்களுக்கிடையிலான உறவுநிலை; இ) வெவ்வேறு தேசங்களிலுள்ள வெவ்வேறு வர்க்கங்களின் உறவுநிலை (உதாரணமாக, ஒடுக்கும் நாடுகளின் ஆளும் வர்க்கங்களும், ஏகாதிபத்தியத்தால் ஒடுக்கப்பட்ட நாடு களின் உழைக்கும் மக்களும்; பெரிய வளர்ச்சிபெற்ற நாடுகளின் தொழிலாளி வர்க்கத்திற்கும், ஒடுக்கப்பட்ட நாடுகள் உட்பட, வளர்ச்சி குறைந்த நாடுகளின் விவசாயிகளுக்கும் இடையிலான அரசியல் கூட்டணி).

முதலாளித்துவ சமுதாயத்தில் காணப்படும், தேசிய உறவுகளின் சமுதாய மற்றும் வர்க்க ரீதியான அம்சங்கள், நேர் எதிரான இரு உலக கண்ணோட்டங்களால்—பாட்டாளி வர்க்க சர்வதேசியம், முதலாளித்துவ தேசியவாதம்— தத்துவார்த்த ரீதியில் பிரதிபலிக்கப்பட்டிருக்கின்றது. அதன் பிரதான உள்ளடக்கத்தை லெனின் எவ்வாறு வரை யறுத்துள்ளார் என்பது இங்கே தரப்பட்டுள்ளது: "முதலாளித்துவ தேசியவாதமும், பாட்டாளி வர்க்க சர்வதேசியமும்— இரண்டு மிகப்பெரும் வர்க்க முகாம் களுக்கு ஏற்ப, முதலாளித்துவ உலகம் முழுமையிலும், இந்த இரு சமரசத்திற்கிடமற்ற முரண்பட்ட கோஷங்கள் நிலவி வருகின்றன. தேசியப் பிரச்சினையில், இரு கொள்கை களை (இரு உலக கண்ணோட்டங்கள் என்றும் கூறலாம்)

அவை பிரதிபலிக்கின்றன''*. முதலாளித்துவ சித்தாந்த வாதிகள் தேசியத்தையும், சர்வதேசியத்தையும், சாதாரண உணர்வுகளாக குறைத்துக் காட்ட முயல்கின்றனர். மனோதத்துவத்தின் பரப்பளவிற்குள் சுருக்கிவிட முயல் கின்றனர். ஆனால், அதற்கு மாறாக மார்க்சிய-லெனினியம், இரண்டு எதிர்மறைகளையும் சமுதாய காரணிகளாக கருதுகின்றது. சமுதாய வாழ்க்கையின் பொருளாயத மற்றும் கலாசார வளர்ச்சிப் போக்குகளிலிருந்து எழுந்துள்ள சமுதாய காரணிகளாக கருதுகின்றது. அந்த வளர்ச்சிப் போக்குகள் மறுபுறம் வர்க்க மற்றும் தேசிய உறவுகள் துறைமூலம் செல்வாக்கு செலுத்துகின்றன என்று கருதுகின்றது.

முற்றும் தேசியத்தின் மீதிருப்பதைவிட வர்க்கத்தின் மீதான அதன் செல்வாக்கே, பாட்டாளி வர்க்க சர்வதேசி யத்தின் பிரதான அம்சமாகும். அவற்றின் தேசிய இனத்தைப்பற்றி கவலையின்றி, அனைத்து உழைக்கும் மக்களினதும், தொழிலாளி வர்க்கத்தினதும் உறவுகள் சம்பந்தப்பட்டவரை, அவை வர்க்கப் போராட்டத்தில், புதிய சமுதாயத்தை நிர்மாணிப்பதில், பெற்றுள்ள நலவுரிமைகளை பாதுகாப்பதில் ஒருமைப்பாடு என்ற வடிவத் தில் பிரதிபலிக்கின்றன. அதேசமயத்தில் அவை நிச்சய மாக தேசியத் துறைக்குட்பட்ட உறவுகளாகவும் இருக் கின்றன. ஆனால் அவற்றின் சாராம்சம் வர்க்க உறவு களால் தீர்மானிக்கப்படுகின்றது.

பாட்டாளி வர்க்க சர்வதேசியத்தின் தற்கால மற்றும் எதிர்கால நிலைகள் எப்பொழுதும் சமுதாய வர்க்கங் களிலேயே மிகவும் முன்னேறிய தொழிலாளி வர்க்க சித்தாந்தமே எனும் மெய்நடப்பை சார்ந்திருந்தது, சார்ந்திருக்கின்றது, சார்ந்திருக்கும்.

தேசங்களின் வாழ்வில், தொழிலாளி வர்க்க சர்வ தேசியத்தின் முக்கியத்துவத்தை குறைத்திடுவதற்கு,

---

* வி. இ. லெனின், ''நூல் திரட்டு'', தொகுதி 20, பக். 26.

முதலாளித்துவ சித்தாந்தவாதிகள் தேசியவாதத்தின் தாக்கத்தை மிகைப்படுத்துகின்றனர். தேசிய ஒற்றுமைக்கான மக்களின் இயற்கையான முயற்சியைக்கூட, தேச விடுதலை, சுதந்திரமான வளர்ச்சி ஆகியவற்றை பாதுகாக்க வேண்டுமென்ற மக்களின் விருப்பத்தைக்கூட, தேசிய வாதமென அவர்கள் சுட்டுகிறார்கள்.

சமுதாய ஒற்றுமையை தேசியமென அடையாளம் காட்டல், சமுதாய ஒற்றுமையின் உயர்ந்த வடிவமே தேசியமென சித்திரிப்பது, வர்க்க உறவுகளிலிருந்து வேறுபட்டதாக தேசிய உறவுகளை படம்பிடித்துக் காட்டுவது என்பன போன்றவை முதலாளிகளால் திட்டமிட்டு செய்யப்படுபவையாகும். அவர்களின் இத்தகைய விழைவுகளிலேயே தேசியவாதத்தின் சாராம்சம் வேர் கொண்டுள்ளது.

பல்வேறு தேசங்களைச் சேர்ந்த ஒரே வர்க்கங்களுக்கிடையிலான உறவுகளைகூட, தேசிய உறவுகளின் சமுதாய மற்றும் வர்க்க இயல்பு உள்ளடக்கியிருக்கின்றது. பல்வேறு தேசங்களைச் சேர்ந்த ஒரே வர்க்கங்கள் என்பது, பிரதானமாக,அந்நாடுகளிலுள்ள முதலாளி வர்க்கத்தையும், தொழிலாளி வர்க்கத்தையும் குறிப்பதாகும். பல்வேறு தேசிய இனங்களைச் சேர்ந்த முதலாளிகளின் அடிப்படையான நலன்கள் ஒரே மாதிரியாக இருப்பதில்லை. முதலாளி வர்க்கத்தின் ஆட்சி அதிகாரம் நெருக்கடிக்குள்ளாயிருக்கும் பொழுதுதவிர, வேறெப்பொழுதும் ஒரே மாதிரியாக இருப்பதில்லை. ஏனெனில், கொள்ளை லாபத்திற்கான தீவிர முயற்சியில், அவர்கள் மோதிக்கொண்டிருக்கின்றனர். பல்வேறு தேசங்களின் தொழிலாளி வர்க்கத்தினது நிலைமை இதிலிருந்து மாறுபட்டதாகும். குறிப்பாக விடுதலைக்கான மற்றும் புதிய சமுதாயத்தை நிர்மாணிப்பதற்கான போராட்டத்தில், அவர்களது அடிப்படை நலன்கள் ஒரே மாதிரியாகவே இருக்கின்றன. மாறத்தக்க, தற்காலிகப் பிரச்சினைகளில் மட்டுமே வேறுபாடுகள் தோன்றலாம். அதுவும்கூட, பாட்டாளிவர்க்க சர்வதேசியத்தின் வலிமை

யினது, முதலாளித்துவ தேசிய வாதத்தின் பலவீனம் மற்றும் அதோகதியின் முக்கியமான ஆதாரக் கூறுகும்.

தனியுடைமை ஆட்சியினுல், முதலாளித்துவ வர்க்க நலன்களால். பூர்ஷ்வா சேசியவாதம் போற்றி வளர்க்கப் படுகின்றது. இதனை தேசிய நலன்களுக்கு விசுவாசமாக இருப்பதன், தேசபக்தியின் பிரதான அளவுகோல்களி லொன்ருக எடுத்துக்காட்ட அது முயல்கின்றது. ஆனுல், பல்வேறு காரணிகளைச் சார்ந்து பிரதானமாக, முதலாளி களின் உடனடி அரசியல் குறிக்கோள்களைச் சார்ந்துள்ள இந்த தேசியவாதம் அதனைப் பொறுத்தே குறுகிய தேசிய வெறியின் வடிவத்தை எடுக்கலாம் அல்லது தேசிய சூன்ய வாதத்தினது வடிவத்தை எடுக்க போலி பொதுநலம் பேசும் காஸ்மோபாலிடன் முறையை ஏற்கலாம்.

தேசிய வாதம்,பலவிதசமுதாயப்பணிகளை செயல்படுத்து கின்றது. சில சந்தர்ப்பங்களில், ஒரு முதலாளித்துவ பூர்ஷு வாக்கள் தம்மை வலிமை பொருந்திய மற்ெருரு முதலாளித் துவ நாட்டின் பூர்ஷுவாக்களிடமிருந்து பிரித்துக்கொள்ள உதவுகின்றது. வேறுசில சந்தர்ப்பங்களில், அந்நிய நாட்டு பிரதேசத்தின் மீது படையெடுப்பு நடத்தி கைப்பற்றுவதற்கு உதவுகின்றது. அல்லது, முதலாளித்துவ ஆட்சியை மீண்டும் திணிக்கவும், தொடர்ந்து நிலைநாட்டவுமான முயற்சியில், பரந்துபட்ட மக்களை திரட்டுவதற்கு ஒரு கருவியாக செயல் படுகின்றது. சில சமயங்களில், அனைத்து தேசிய இனங்களையும் சேர்ந்த தொழிலாளர்களின் ஒன்றுபட்ட வர்க்க அணியை சீர் குலைப்பதற்கு ஒரு கருவியாக பயன் படுத்தப்படுகின்றது.

ருஷ்யாவினதும், இதர ஏகாதிபத்திய மற்றும் ஒடுக்கும் நாடுகளினதும் வரலாற்றிலிருந்து பல சான்றுகளை எடுத்துக் காட்டி லெனின் விளக்கியுள்ளார். எவ்வாறு முதலாளித்துவம் தனது மக்களின் தேசிய நலன்களுக்கு துரோகமிழைத் துள்ளது என்பதை அவற்றின் மூலம் விளக்கியுள்ளார். புரட்சிகர தொழிலாளி வர்க்கம் பொது சுதந்திர லட்சியத் திற்கும், நாட்டிற்கும் மொழிக்கும் முதலாளிகள் துரோக

மிழைத்துள்ளனர் என்பதை மீண்டும் மீண்டும் தெளிவு படுத்தி லெனின் எழுதியுள்ளார்.

குறுகிய தேசிய வெறி என்ற பதாகையின்கீழ், பல்வேறு முதலாளித்துவ நாடுகளுக்கிடையில், பகைமைச் சூழ்நிலைகள் நிலவிவரும் ஒரு உலகத்தில், "**தனது சொந்த தேசத்தின்** குறுகிய தேசிய வெறிக்கு எதிராக" தொழிலாளி வர்க்கம் உறுதியாகப் போராடவேண்டும் என்ற லெனினது எச்சரிக்கை மிகவும் முக்கியத்துவமும் மதிப்பும் வாய்ந்த தாகும்.* இது பெரிய, சிறிய தேசங்கள் இரண்டிற்கும், ஒடுக்குகின்ற ஒடுக்கப்படுகின்ற தேசங்கள் இரண்டிற்கும் பொருந்துவதேயாகும்.

பட்டாளி வர்க்க சர்வதேசியம், முதலாளித்துவ தேசிய வாதத்திற்கு நேர் எதிரான கொள்கையாகும். சமுதாய உள்ளடக்கத்திலும், வடிவத்திலும் மட்டுமல்ல. ஆனுல் அத்துடன், மக்களின் வாழ்க்கையிலும், ஏன் மனிதக் குல வாழ்வு முழுவதிலும் முரண்நிலையாக இருப்பதாகும். தேசிய வாதம் ஒரு தடையாக செயல்படும் அதே வேளையில்,(தேசிய விடுதலைப் போராட்டத்தில் மக்களின் ஒற்றுமையை எளிதாக்கும்பொழுது பாதுகாப்பாக திகழ்கிறது) சர்வ தேசியம் மக்களின் வளர்ச்சியை துரிதப்படுத்துகின்றது.

பாட்டாளி வர்க்க சர்வதேசியம், சமுதாய வளர்ச்சியின் தேவைகளிலிருந்து எழுந்ததாகும். தேசிய இனத்தைப்பற்றி கவலையின்றி, பொருளாயதச் சூழ்நிலைகளாலும், வர்க்க நலன்களாலும் ஒரே தன்மை வாய்ந்த தொழிலாளி வர்க்கத் தின் மத்தியில் ஒற்றுமைக்காக முதலாவதாக, அது சதா முயல்கின்றது. அந்த முயற்சி பற்றி இன்னமும் கூட அரை குறையாகவே புரிந்து கொள்ளப்பட்டுள்ளது. மார்க்சும், எங்கெல்சும், பாட்டாளி வர்க்க சர்வதேசியத்தின் பிரதான, கோட்பாடுகளையும், சமுதாய சாராம்சத்தையும் நிலை நாட்டினர். லெனினும் அவரது ஆதரவாளர்களும், குறிப் பாக, உலக கம்யூனிஸ்ட் இயக்கத்தின் தோற்றத்திற்குப்

* வி. இ. லெனின், "நூல் திரட்டு", தொகுதி 39, பக். 741.

பிறகு, மார்க்சிய கருத்துக்களை ஒருவிரிவான அமைப்பினுள் கொணர்ந்து வளர்ச்சிபெறச் செய்துள்ளனர். சர்வதேசியக் கோட்பாடுகளை மட்டும் அதனுட்படுத்தினார்கள் என்பதல்ல. ஆனால், அத்துடன் அதன் வடிவங்களையும், செயல்துறைகளையும் உருவாக்கியுள்ளனர்.

பாட்டாளி வர்க்க சர்வதேசியமென்பது, முதலாவதாகவும் முக்கியமாகவும் ஒரு சித்தாந்தமாகும். அதன் தலைமையின்கீழ், உழைக்கும் மக்களினதும், தொழிலாளி வர்க்கத்தினதும் ஒற்றுமையை தத்துவத்திலும், நடைமுறையிலும் அது நிலை நாட்டியுள்ளது. சமுதாய வளர்ச்சியின் மூன்று திசைகளில் அது தன்னை நிலை நாட்டிக் கொண்டுள்ளது: அ) சுரண்டலிலிருந்தும் ஒடுக்கு முறையிலிருந்தும் விடுதலைக்கான வர்க்கப்போராட்டம்; ஆ)சமுதாயத்தை புரட்சிகரமாக மாற்றியமைத்தல், சோஷலிசம் கம்யூனிசத்தை நிர்மாணித்தல்; இ) தேசங்களுக்கிடையிலும் அரசுகளுக்கிடையிலுமான உறவுகள். தத்துவ இயல் ரீதியான கருத்துக்களும் கோட்பாடுகளும் ஒருபுறமிருக்க, பாட்டாளி வர்க்க சர்வதேசியத்தின் சாராம்சம், அரசியல் ரீதியான, ஒழுக்கரீதியான, ஏன் மனோதத்துவரீதியான தொழிலாளிவர்க்க உறவுகளையும்கூட உள்ளடக்கியிருக்கின்றது. மேலே கூறப்பட்டுள்ள மூன்று திசைகளிலும், ஒரு தேசிய இனத்தைச் சேர்ந்த தொழிலாளி வர்க்கம், இதர தேசிய இன தொழிலாளிவர்க்கப் பிரிவுகளுடன் சேர்ந்து நிறைவேற்ற வேண்டிய கடமைகளை பொறுத்து ஏற்படும் உறவுகளே, தொழிலாளி வர்க்கத்தின் உறவுகள் என குறிப்பிட்டுள்ளோம். பாட்டாளிவர்க்க சர்வதேசியமென்பது, ஒரே சமயத்தில் தொழிலாளிவர்க்கத்தின் கொள்கையும், மனோதத்துவமுமாகும். உதாரணமாக, லெனின், ''சர்வதேசிய உணர்வினையும், இயல்பினையும்'' பற்றி குறிப்பிட்டுள்ளதை காண்க. தொழிலாளி வர்க்கக் கொள்கையின் சாராம்சமே அதுவென லெனின் விவரித்துள்ளார். பாட்டாளி வர்க்கத்தின் உயிர் நாடியும் நடைமுறையுமே பாட்டாளி வர்க்க சர்வதேசியமாகும். தொழிலாளிவர்க்க கூட்டாளிகளுக்கும் அதுவே நிலை. இவ்வாறாக

தொழிலாளி வர்க்க சர்வதேசியமென்பது, மனிதகுல முன்னேற்றத்தின் ஒரு பிரதான சமுதாயக் காரணியாக மாறியிருக்கின்றது.

சமுதாய வளர்ச்சியின் பல்வேறு கட்டங்களில், தொழிலாளிவர்க்க சர்வதேசியம், பல்வேறு வடிவங்களை எடுத்துள்ளது—ஒரு தொழிலைச் சேர்ந்த தொழிலாளர்களால் மேற்கொள்ளப்படும் கூட்டு நடவடிக்கைக்கு, மற்றொரு தொழிலைச் சேர்ந்த தொழிலாளர்கள் காட்டும் ஒருமைப்பாட்டிலிருந்து, நாடு முழுமையுமாகச் சேர்ந்து, சர்வதேச பாட்டாளிவர்க்க ஒருமைப்பாட்டு நடவடிக்கையில் பங்கு பெறுவதுவரை பல வடிவங்களை எடுத்துள்ளது; முதலில் அது தொழிலாளர்களை மட்டும் உள்ளடக்கியிருந்தது. பின்னர், வர்க்கப் போராட்டத்திலும், ஒரு வர்க்கபேதமற்ற சமுதாயத்தை நிர்மாணிப்பதிலும் அதன் கூட்டாளிகளுக்கும் அதன் செல்வாக்கை விரிவுபடுத்தியுள்ளது; அன்றாட வாழ்க்கையில் தோன்றும் உணர்வின் ஒரு காரணி என்பதிலிருந்து, மார்க்சிய-லெனினிய விஞ்ஞானத்தின் தூண்களிலொன்றாக பாட்டாளி வர்க்க சர்வதேசியம் வளர்ச்சியடைந்துள்ளது. நமது காலத்தின் மிகவும் முன்னேறிய தத்துவம் என்ற முறையில் பாட்டாளி வர்க்க சர்வதேசியம் என்பது கம்யூனிஸ்ட் மற்றும் தொழிலாளி வர்க்க இயக்கத்தையும் உலக புரட்சிகர இயக்கத்தையும் ஒன்றுபடுத்தி, வழிகாட்டும் ஒரு கருவியாக மாறிவிட்டது.

தொழிலாளி வர்க்கத்தின் வாழ்விலும், தொழிலாளர்களின் சர்வதேச நலனிலும் காணப்படும் தேசிய அம்சங்களின் புறநிலை முற்றொருமையின் பிரதிபலிப்பே அது. பாட்டாளி வர்க்க சர்வதேசியமென்பது, தேசியத்தில் காணப்படும் வர்க்கக்கூறேயாகும். இதனால்தான் இது, முதலாளித்துவ தேசிய வாதத்தின் ஊழல்மயமான செல்வாக்கை எதிர்த்துப் போராடுவதற்கான ஒரு கருவியாக செயல்படுகின்றது. அதேசமயம் அது, சர்வதேச கம்யூனிஸ்ட் இயக்கத்திலும், உலக சோஷலிச அமைப்பிலும், ஏகாதிபத்திய எதிர்ப்பு இயக்கத்திலும், சர்வதேச தொழி

லாளிவர்க்க அணிகளிலும் ஒற்றுமை என்ற மிகச் சிரமமான பிரச்சினைக்கு தீர்வுகாண்பதிலும் ஒரு சாதனமாகச் செயல் படுகின்றது.

பாட்டாளி வர்க்க சர்வதேசியத்தின் உயர்ந்துவரும் பாத்திரத்தின் பின் மூன்று காரணிகள் இருக்கின்றன: அ) உற்பத்தி சக்திகள், விஞ்ஞானம், தொழில்நுட்பம் ஆகிய வற்றின் வளர்ச்சியின் விளைவாக சர்வதேசிய மயமாக்கலின் தொடர்ச்சியான நடப்பு ஒரு புறம். உறவுகள் சம்பந்தப் பட்ட அனைத்துத் துறைகளிலும் மக்களை நேரடியாக ஒன்று படுத்துவது மறுபுறம்; ஆ) தொழிலாளிவர்க்க சர்வதேசிய சித்தாந்தத்தின் தொடர்ச்சியான அதிகரித்துவரும் செல் வாக்கு. இதனைப்பற்றி லெனின் குறிப்பிடுகையில், புதிய சகாப்தத்தின் மையத்தினுள் அது இயங்க துவங்கிவிட்டது என்றார்; இ) மக்களின் நட்புறவையும், சகோதரத்துவத் தையும் சார்ந்து நின்று, உலகில் சோஷலிசத்தை உறுதி யாக வலுப்படுத்துதல். அவ்வாறு சோஷலிசத்தை உறுதிப் படுத்துதலானது, பாட்டாளி வர்க்க சர்வதேசியத்தின் பாத்திரத்தையும் செல்வாக்கையும் மிகப் பெருமளவிற்கு அதிகரிக்கின்றது. பாட்டாளி வர்க்க உலகப் புரட்சியின் வெற்றிக்கான, புறநிலை ரீதியான முற்சூழ்நிலைகள் பக்குவப் பட்டதின் விளைவாக, அகநிலைக் காரணிகளின்பால் மிகவும் நெருக்கமான கவனத்தைச் செலுத்த வேண்டியதை அவசியமாக்குகின்றது. அந்த அகநிலைக் காரணிகளில் மிகவும் முக்கியமான ஒன்று என்னவென்றால், அனைத்து ஏகாதிபத்திய எதிர்ப்பு சக்திகளது ஒற்றுமையேயாகும். தொழிலாளி வர்க்கத்தின் சர்வதேசியத் தலைமையின்கீழ் மட்டுமே இந்த ஒற்றுமை சாத்தியம்.

பாட்டாளிவர்க்க சர்வதேசியம்,தன்னியல்பாகவேரூன்ற முடியாது என்பதற்கு பல காரணங்களிருக்கின்றன. அது வேரூன்றுவதற்கு கடுமையான சிரமங்களை சந்திக்க வேண்டி யுள்ளது. ஏனெனில், பிற்போக்கு தத்துவமாகிய முதலாளித்துவ தேசியவாதம் முற்றிலுமாக முறியடிக்கப் படாதவரை, அதன் வெற்றி சாத்தியமல்ல.

நிலவுடமையின் வீழ்ச்சியின்பொழுது, ஆட்சி அதிகாரத்திற்கான முதலாளிகளின் தீவிர முயற்சியில், தேசியவாதம் ஒரு வலிமையான ஆயுதமாக இருந்தது. லெனின் வலியுறுத்திக் கூறியதாவது, "மிகவும் பின்தங்கிய நாட்டில், சிறு அளவிலான விவசாய உற்பத்தியின் பிடிப்பே பலயாக இருக்கிறது. குல மரபு தலைமையின் பிடிப்பும், தனிமைப் பட்ட போக்குமே அங்கு வலிமையாக இருக்கின்றன. அது தவிர்க்கவியலாதபடி, வலிமையும் உறுதியும் கொண்ட, ஆழமான குட்டி முதலாளித்துவ காழ்ப்புணர்வுகளுக்கு இட்டுச் செல்கிறது. அதிலிருந்து, தேசிய தற்பெருமை வாதம் மற்றும் குறுகிய தேசிய வெறி போன்றவைகளுக்கு இட்டுச் செல்கிறது."*

"எந்த ஒரு தருணத்திலும், பூர்ஷ்வா நாட்டில் ஆதிக்கம் செலுத்தி வந்த வர்க்கங்களுக்கு ஏற்ப, பல கட்டங்களை தேசியவாதம் கடந்து வந்துள்ளது"** என்று லெனின் எடுத்துக் காட்டினார். தற்போது தேசியவாத சித்தாந்தத்தின் வெளிப்பாடுகள், லெனின் பரிசீலனை செய்த காலகட்டத்திலிருந்ததைவிட, அநேகமாக இன்னும் கூட மிக அதிக வகைகளில் இருக்கின்றன எனலாம். உதாரணமாக அமெரிக்காவை எடுத்துக் கொள்வோம். அங்கு, ஏகாதிபத்திய குறுதேசிய வெறி, ஏகபோக மூலதனத்தின் (போலி பொதுநலவாத) காஸ்மோ பாலிடன் பெரு விருப்பங்கள், தேசிய சூனியவாதக் கருத்துக்கள், "வெள்ளை குறுதேசிய வெறி" அடிப்படையிலமைந்த படு மோசமான இனவெறி ஆகியவற்றை ஒருபுறம் நாம் காண லாம். மறுபுறம், கருப்பர் மத்தியிலான அதிதீவிரவாதச் சக்திகளை பிரதிபலிக்கும் "கருப்பர் தேசியவாதம்", தேசிய ரீதியில் தனிமைப்பட்ட போக்கும் குரோத உணர்வுகளும் கொண்ட இந்தியர்கள், போர்ட்டோ ரிக்கன்கள் போன்றோர்.

---

*வி. இ. லெனின், "நூல் திரட்டு", தொகுதி 31, பக். 150.

**வி. இ. லெனின், "நூல் திரட்டு" தொகுதி 20, பக். 452.

அதன் விளைவாக, பிற்போக்கான முதலாளித்துவ தேசியவாதம், காஸ்மோ பாலிடன் வாழ்வு என்ற வடிவத்தைக்கூட எடுத்துள்ளது. முதலாளித்துவ சித்தாந்தத்தின் தற்போதைய தோற்றப் பொலிவு இதுவே. தற்போது மேலைய நாடுகளின் இது ஒரு முன் மாதிரியாகி விட்டது. சாராம்சத்தில், ஏகபோக மூலதனத்தின் பிற்போக்கு தேசியவாதத்தின் பின் பக்கமாக, காஸ்மாபாலிட்டனிசம் திகழ்கின்றது. சிறுபான்மை மக்களை கட்டுப்படுத்தும் ஒரு முயற்சியின் பகுதியாக, பிரதான ஏகாதிபத்திய நாடுகளைச் சேர்ந்த ஆளும் முதலாளிப் பகுதியினர் இத் தந்திரத்தை கையாளுகின்றனர். இதர நாடுகளிலுள்ள உழைக்கும் மக்களை கவரவும் இத் தந்திரத்தை பயன்படுத்துகின்றனர். சுதந்திரம், விடுதலை என்பதும், தேசிய மதிப்புகளை பற்றிக் கொண்டிருப்பதும் அர்த்தமற்றது என்று எடுத்துரைக்கும் முயற்சியின் ஒரு பகுதியே இது. காஸ்மா பாலிட்டனிசம் என்பது உண்மையில், அந்நிய பேராதிக்கத்திற்கான சித்தாந்த முகமூடியேயாகும். சுரண்டப்படும் மக்களின் எதிர்த்தாக்குதலை சமாளிப்பதற்காக இதன் ஆதரவாளர்கள் நடத்தும் முயற்சியே இது. ஆனல், தனது சகதேசவாசிகளின் சேவையின் மூலம், ஏகபோக பூர்ஷுவாக்கள் இதர மக்களை அடக்குகின்ற பொழுது, காஸ்மா பாலிட்டனிசம் அவர்களுக்கு இசைவாக இருக்கிறது. இதனுல்தான் ''உலக அரசு'' ''உலக அரசாங்கம்'' என்பன போன்ற கோஷங்கள் அவ்வளவு தீவிரமாக அமெரிக்காவில் பரப்பப்பட்டன. ஐரோப்பாவில், தேசங் கடந்த அரசுடன்கூடிய ஒரு ''ஒன்றிணைந்த ஐரோப்பா'' என்ற கோஷத்தை, பிற்போக்கு சக்திகள் முடுக்கி விட்டன. பூர்ஷ்வா விஞ்ஞானிகள், அரசியல்வாதிகள், வங்கியுடைமையாளர்கள், தொழில் அதிபர்கள், இறைஞானிகள் அனைவரும் ஒன்று சேர்ந்து குரல்கிளப்ப ஆரம்பித்தனர். ''பரிபூரண தேசிய சர்வ உரிமையின் கட்டம் முடிந்து விட்டது'' என்று கூக்குரலிடத் துவங்கினர். தேசிய அரசுத்துவத்தைப்பற்றி நிற்பது அர்த்தமற்றது என

அவர்கள் வாதிட்டனர். முன்னாள் காலனிகளைச் சேர்ந்த மக்கள் தாங்களே துவக்கத்திலிருந்து ஒன்றைப் படைக்க வேண்டுமெனக் கோரினர்.

காஸ்மா பாலிட்டனிசவாதிகள், உண்மையில், தேசிய சூன்யவாதத்தின் போதகர்களேயாவர். மனிதகுல வரலாற்றின் தற்போதைய கட்டத்தில், தேசிய மதிப்புகளைப் போற்றி ஆதரிப்பதில் எவ்வித அர்த்தமுமில்லை என்றும், அவை காலத்திற்கொவ்வாததாகி விட்டதாகவும் அவர்கள் வாதிடுகின்றனர்.

சாக்ரட்டீஸின் காஸ்மாபாலிட்டனிசத்தை (நான் ஏதேனியனுமல்ல, அல்லது கோரின்தியனுமல்ல, ஆனால் ஒரு காஸ்மாபாலிட்டன்), முதலாளித்துவப் பிரச்சாரம் புகழ்ந்துரைக்கின்றது. சமாதானத்திற்கான உலகுதழுவிய விருப்பத்தை (தேசிய சர்வவுரிமை வேட்டலே யுத்தத்திற்கு காரணம்), என தவருக விளக்கம்கூறி பயன்படுத்துகின்றனர். பொருளாதார அரசியல் ஒருங்கிணைப்பைவிட (பொருளதார கூட்டுக் குடும்பங்களில் இணைந்த தேசம் இல்லை) இயல்பானது வேறு எதுவும் இல்லை என்று அடித்துரைக்கின்றனர்.

காஸ்மாபாலிட்டனிசமும், தேசிய சூன்ய வாதமும், வாழ்க்கையிலிருந்து விடுபட்டவர்களால், கற்பனையாக செய்யப்படும் மனப்பயிற்சி அல்ல. உலக முதலாளித்துவத்தின் தற்போதைய கட்டத்தினது முற்றிலும் உண்மையான காரணிகளை அவை சார்ந்துள்ளன. மிகவும் துல்லியமாக கூறவேண்டுமாயின், ஏகபோக மூலதனத்தின் நலன்களையே அவை சார்ந்துள்ளன. முதலாவதாக, பிரதான ஏகாதிபத்திய நாடுகளிலிருந்து மூலதனமும் விற்பனைச் சரக்குகளும் சுதந்திரமாக கடந்து செல்வதற்கு, தேசிய சுயாதிபத்திய உரிமையும், சுங்க வரிகளும் பெருந்தடையாக இருக்கின்றன. தங்களது கொள்ளை லாபத்திற்குப் பெருந்தடையாக இருக்கின்றன. இரண்டாவதாக, தனிப்பட்ட பல நாடுகளில் பல ஏகபோகங்கள் இருந்ததுடன்கூட, தற்போது பன்னாட்டு கூட்டு நிறுவனங்களும் சேர்ந்துள்ளன.

அதன் விளைவாக அவை, மிகப்பல சிறிய நாடுகளின் பொருளாதாரத்திலும், அரசியலிலும் ஆதிக்கம் செலுத்து கின்றன. மூன்ருவதாக, காலனி ஆதிக்கம் நொருங்கி விழத்துவங்கியதிலிருந்து, ஏகாதிபத்திய வாதிகள் காஸ்மா பாலிட்டனிசத்தையும், சூன்யவாதத்தை பயன்படுத்தி, புதிய தேசிய அரசுகளின் சுயாதிபத்திய உரிமையைக் குலைக்கவும், அம் மக்களின் தேசிய ஒற்றுமையை சீர்குலைக்கவும், அதன்மூலம் நவீன காலனி ஆதிக்கத்தை பலப்படுத்தவும் முயன்று கொண்டிருக்கின்றனர். நான்காவதாக ஒரு சிரழிந்து கொண்டிருக்கும் முதலாளித்துவ உலகத்தில் பிற்போக்கு சக்திகள், தேசியப் பிரிவினைகளின் மூலம் தற்போது பிளவுபட்டுள்ள அதன் சக்திகள் அனைத்தையும் ஒன்றுபடுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளன. அத்தகைய இடங்களில்,காஸ்மாபாலிட்டனிசத்தையும், தேசிய சூன்ய வாதத்தையும் தங்கள் கருவிகளாக பயன்படுத்துகின்றனர். உலக புரட்சிகரப் போக்கின் வளர்ந்துவரும் சக்திகளுக்கு எதிரான போராட்டத்திற்காக இவ்வாறு செயல்படுகின்றன.

காஸ்மா பாலிட்டன்களும், சூன்யவாதிகளும், தேசியப் பிரச்சினையில் பாட்டாளிவர்க்க சர்வதேசியத்துடன் "உறவு" கொண்டிருப்பதாக உரிமை கொண்டாட முயல்கின்றனர். எவ்வாருயினும், சாராம்சத்தில், மார்க்சிய-லெனினிய சித்தாந்தத்திற்கு அவர்கள் விரோதிகளாகவே இருக்கின்றனர். மக்களின் முன்னேற்றத்தை தடைசெய்வதே அவர்களது நோக்கமாகும். இப்போதே, இக்கட்டத்திலேயே, நிர்பந்தத்தின் மூலம், தன்வயப்படுத்த வேண்டுமென்று காஸ்மா பாலிட்டனிசமும், சூன்யவாதமும் வலியுறுத்துகின்றன. தேசிய தனி இயல்புகளும், தேசங்களும் "அழிக்கப்படவேண்டுமென" அவை வலியுறுத்துகின்றன. மார்க்சியமும் - லெனினியமும், அதற்குமாருக, தேசங்கள் ஒன்றுபடுவதை ஒரு இயற்கையான நடப்பாக கருதுகின்றது. ஆனல் இது தொலை எதிர்காலத்தில் நிகழக்கூடியதாகும்

எனவும் முழுமையான, சுதந்திரமான தேசிய வளர்ச்சியின் அடிப்படையிலேயே அது சாத்தியம் எனவும் கருதுகிறது.

பாட்டாளி வர்க்கத்திற்கும் முதலாளி வர்க்கத்திற்கு மிடையிலான வர்க்கப் போராட்டமாக, முதலாளித்துவ மற்றும் சோஷலிச சமுதாயங்களின் வளர்ச்சியினது தவிர்க்கவியலாது தொடரும், தேசியத்திற்கும் சர்வதேசியத் திற்கும்மிடையிலான போராட்டம் திகழ்கின்றது. எவ்வாறு யினும், லெனின் சுட்டிக்காட்டியது போன்று, "தேசியப் பிரச்சினையின்பால் முன்பிருந்ததைக் காட்டிலும் மிக அதிகமான கவனத்தை செலுத்த வேண்டியதை" பல்வேறு காலகட்டங்களில் ஏற்படும் சூழ்நிலைகள் அவசியமாக்கு கின்றன. "அனைத்து தேசிய இனங்களையும் சேர்ந்த பாட்டாளி வர்க்கத்தின் ஒற்றுமை, முரணற்ற சர்வதேசியம் ஆகியவற்றின் உணர்வில் இப்பிரச்சினையின் மீதான உறுதியான மார்க்சிய அடிப்படையிலான முடிவுகளின்" * விரிவாக்கத்தை, அச்சூழ்நிலைகள் அவசியமாக்குகின்றன. முதலாவது உலக யுத்தத்துக்கு முந்திய காலகட்டத்திலும், யுத்தத்தின் பொழுதும் இது முற்றிலும் உண்மையாக இருந்தது. இன்றைக்கும் அது பொருத்தமுடைய உண்மை யாகவே திகழ்கின்றது. பட்டாளிவர்க்கப் புரட்சிகளைத் தடுப்பதும், ஒரு ஏகாதிபத்திய யுத்தத்தின் மூலம் பிரதேசங்களை திரும்பவும் மறுபங்கீடு செய்வதும் முதலாளி களின் நோக்கமாக இருந்தது. இந்நோக்கத்தை சிறப்பாக நிறைவேற்றுவதற்கேற்ப,மக்கள் மத்தியில் ஒருவருக்கெதிராக மற்றவரை தூண்டிவிடுவதில், முதலாளிகளின் கையில் ஒரு முக்கியமான ஆயுதமாக, முற்கால கட்டங்களில் தேசிய வாதம் திகழ்ந்தது. இன்றும்கூட, ஏகாதிபத்திய பூர்ஷ்வாக்கள் உலகப்புரட்சிகர இயக்கத்தை பலவீனப் படுத்தவும் அதன் ஒற்றுமையை சீர்குலைக்கவும், முதலாளித்து வத்திலிருந்து சோஷலிசத்திற்கு மனிதகுலம் மாறிச் செல்வதை தடுக்கவும், தேசியவாதத்தை நாடுகின்றனர்.

---

* வி. இ. லெனின், "நூல் திரட்டு", தொகுதி 19, பக். 250.

ஆனல், தேசியவாத சித்தாந்தத்தைப் பயன்படுத்துவதின் மூலம், பூர்ஷ்வாக்கள் தற்காலிகமான தனிப்பட்ட வெற்றிகளைப் பெற்ருலும், அவர்கள் முதலாளித்துவ அமைப்பை பாதுகாத்துவிட முடியாது. பாட்டாளி வர்க்க சர்வதேசிய பதாகையின்கீழ், புதிய, சோஷலிச அமைப்பு பீடுநடை போடுகிறது. அதன் வெற்றி சர்வ நிச்சயமானது.

5. தேசங்களினதும் தேசிய உறவுகளினதும் வளர்ச்சிக்கான புறநிலை அடிப்படைகள்

தேசிய சமுதாயங்களின் வளர்ச்சியில் ஆளுமை செலுத்தும் விதிகள் பற்றிய வரையறுப்பு, தேசங்கள் சம்பந்தமான மார்க்சிய-லெனினியத் தத்துவத்தின், ஒரு முக்கியமான பகுதியாகும். தேசங்கள் மற்றும் தேசிய உறவுகளின் ஒப்பளவான சுதந்திரம் பற்றிய மார்க்சிய-லெனினிய அடிக்கோளே இதன் துவக்க நிலையாகும். தேசிய அம்சம் என்பது, சமுதாய வளர்ச்சியின் ஒரு வடிவம் மட்டுமேயாகும். அதன் சாராம்சம், சமுதாய-பொருளாதார அமைப்பினுல் முன்னதாகவே தீர்மானிக்கப்படுகின்றது. அல்லது, இன்னும் தெளிவாகக் கூற வேண்டுமானல் இது பல்வேறு கட்டங்களில் தேசத்தில் நிலவும் பொருளாதார உருவாக்கம் எனலாம். முதலாளித்துவம் சோஷலிசம் ஆகிய இரண்டும், தேசங்கள் மற்றும் தேசிய உறவுகளின் வளர்ச்சியில் ஆளுமை செலுத்தும், அவற்றின் சொந்த சர்வப் பொது விதியினைக் கொண்டிருக்கின்றன.

ஒரு முதலாளித்துவ சர்வப் பொதுவிதி இருப்பதை ஆதாரப்படுத்திய முதல் நடவடிக்கை, மார்க்ஸ்-எங்கெல்ஸ் ஆகியோரால், கம்யூனிஸ்ட் அறிக்கையிலும், இதர பல நூல்களிலும் செய்யப்பட்டது. ஒரு புறம் தேசங்களின் உருவாக்கத்திற்கு இட்டுச் செல்லும், தேசிய இயக்கங்களின் வடிவங்களையும், உள்ளடக்கத்தையும், அவற்றின்வளர்ச்சியின் சாராம்சத்தில் அடங்கியிருப்பவற்றையும் அவர்கள் எடுத்துக் காட்டினர். மறுபுறம், தேசங்களுக்கிடையிலான வளர்ந்து வரும் உறவுகளின் தன்மையில் ஆளுமை செலுத்தும் விதி

களையும், அதன் விளைவாக சர்வதேச நடப்புகளில் ஏற்படும் சங்கமிப்பினையும் அவர்கள் நிலைநாட்டினர்.

மார்க்ஸ், எங்கெல்ஸினது கருத்துக்களை முன்நிறுத்தி, புதிய சூழ்நிலைமைகளுக்கேற்ப உலக நாடுகளின் வளர்ச்சியை ஆராய்ந்த லெனின், தேசங்கள் மற்றும் தேசிய உறவுகளின் வளர்ச்சியில், சர்வப் பொதுவான ஒரு முதலாளித்துவ விதி இருப்பது பற்றிய ஓர் இறுதிமுடிவிற்கு வந்தார். அவர் எழுதியதாவது:

''தேசியப் பிரச்சினையில் இரு சரித்திர ரீதியான போக்குகள் இருப்பதை வளர்ந்துவரும் முதலாளித்துவம் அறிந்திருக்கின்றது. தேசிய இயக்கங்களினதும் தேசிய வாழ்வினதும் விழிப்புணர்ச்சி தேசிய அரசுகளின் உருவாக்கம் அனைத்து தேசிய ஒடுக்குமுறைகளுக்கும் எதிரான போராட்டம் ஆகியவை முதலாவது போக்கினை குறிக்கின்றது. ஒவ்வொரு வடிவத்திலும் அடிக்கடி ஏற்படும் சர்வதேச உறவுகள் வளர்ச்சி, தேசியத் தடைகள் தகர்வது, பொதுவாக மூலதனம் பொருளாதார வாழ்க்கை, அரசியல், விஞ்ஞானம் போன்றவற்றின் சர்வதேச ரீதியான ஒற்றுமையின் உருவாக்கம் ஆகியவை இரண்டாவது போக்கினைக் குறிக்கின்றது.

''இரு போக்குகளும், முதலாளித்துவத்தின் ஒரு சர்வப் பொது விதியாக இருக்கின்றன. முன்னது, அதன் வளர்ச்சி யின் ஆரம்பத்தில் ஆதிக்கம் செலுத்துகின்றது. பின்னது சோஷலிச சமுதாய மாற்றம் நோக்கி முன்செல்லும் பக்குவமுற்ற ஒரு முதலாளித்துவத்தை குணநிர்ணயம் செய்கிறது.*

மார்க்ஸ், எங்கெல்ஸ், லெனின் ஆகியோரது கால கட்டங்களுக்குப் பிறகு, சோஷலிசத்தின்கீழ் தேசங்கள் மற்றும் தேசிய உறவுகளின் வளர்ச்சியைத் தொடர்ந்து, இந்த முக்கியமான சமுதாயத் துறையில், இன்று, சோஷ லிசத்தின் ஒரு சர்வப் பொதுவிதியும், திகழ்கிறது.

---

* வி.இ.லெனின், ''நூல் திரட்டு'',தொகுதி 20 பக்.27.

சோவியத் ஆட்சியின் ஆரம்ப வருடங்களில், முன்னாள் ஒடுக்கப்பட்ட ருஷ்ய மக்களின் தேசிய விழிப்புணர்வை, லெனின் உறுதிபட எடுத்துரைத்தார். தேசிய காலனி பிரச்சினைமீது கம்யூனிஸ்ட் அகிலத்தின் இரண்டாவது மாநாட்டில் சமர்ப்பித்த அறிக்கையில், சோவியத் அனுபவங்களை சான்றாக எடுத்துக்காட்டி முதலாளித்துவத்திற்கு முன்னைய சமுதாய உறவுகள் நிலவி வந்த பிரதேசங்களில் கூட, "சுதந்திரமான அரசியல் சிந்தனைக்கான, சுதந்திரமான அரசியல் நடவடிக்கைக்கான ஒரு பெருவிருப்பத்தை மக்கள் மத்தியில்"* சோஷலிச அமைப்பு தூண்டியுள்ளது என குறிப்பிட்டுள்ளார். சோஷலிசத்திற்கான பெருவிருப்பமே, தேசிய விடுதலை இயக்கங்களின் அடிப்படையாக அமைந்திருந்தது. அக்டோபர் புரட்சியினது வெற்றிக்கான போராட்டத்தின் பொதுவான நிலைக்களனில், சோஷலிசத்திற்கான பெருவிருப்பம் முகிழ்த்தது. அதன் விளைவாக, பெருமளவிலான மக்கள் பங்குபெற்று நிர்மாணிக்கும் தேசிய அரசுத்துவம் வளர்ச்சி பெறலாயிற்று. ஒவ்வொரு மக்களின் சுதந்திரமான வளர்ச்சியையும் உறுதிப்படுத்தும் சோஷலிசத்தின் போக்கை அமலாக்குகின்ற விதத்தில், சோவியத் தேசிய அரசுத்துவம் பாலான அவர்களின் பெருவிருப்பங்களை கம்யூனிஸ்ட்கட்சி ஆதரித்தது. அக்டோபர் புரட்சியின் நான்காவது ஆண்டு விழாவில் லெனின் கூறினார்: "நாங்கள், ருஷ்யனல்லாத அனைத்து தேசிய இனங்களுக்கும், அவற்றின் சொந்த குடியரசுகளை அல்லது சுயாட்சி பெற்ற பிரதேசங்களை அமைத்துக்கொள்ள அனுமதி வழங்கி விட்டோம்."** சோஷலிசத்தினால் முன்வைக்கப்படும்பலவித அரசியல் வடிவங்களும், அரசுத்துவ அனுபவமும், மக்களின் உறுதியான முன்னேற்றத்திற்கான அடிப்படையாக திகழும் என்றார் லெனின். புரட்சிக்கு முன்பு கூறப்பட்ட லெனினது

---

* வி. இ. லெனின், "நூல் திரட்டு", தொகுதி 31, பக். 243.

** வி. இ. லெனின், "நூல் திரட்டு", தொகுதி 33, பக். 53.

இந்த தீர்க்கதரிசனம், பிந்தைய வளர்ச்சிப் போக்குகளால் உறுதி செய்யப்பட்டுவிட்டது. தேசங்கள் மற்றும் தேசிய இனங்களின் சகலதுறை வளர்ச்சிக்கும் உதவக்கூடிய தன்மையே சோஷலிசத்தின் இயல்பாகும். தேசங்களின் ஒரு முழுமையான மலர்ச்சிக்கு அது உருக்கொடுத்துள்ளது. இது இன்று உலகளாவிய முறையில் அங்கீகாரம் பெற்றுள்ளது. சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநாடுகள், கட்சியின் மத்தியகுழுவினது விரிவுபட்ட கூட்டங்கள் ஆகியவற்றின் தீர்மானங்களில் இது பதிவு செய்யப்பட்டுள்ளது.

தேசங்கள் மற்றும் தேசிய இனங்களின் புனருத்தாரணத்திற்கான ஊக்குவிப்பை சோஷலிசம் வழங்கியுள்ளது. தேசிய அரசுத்துவத்தின் உருவாக்கத்திற்கு (அல்லது மாற்றத்திற்கு) இட்டுச் செல்லக்கூடிய உள்நாட்டு தேசிய நடப்புக்களின் சுதந்திரமான வளர்ச்சிக்கான ஊக்குவிப்பை சோஷலிசம் வழங்கியுள்ளது. குடியரசுகளின் பொருளாதார முன்னேற்றத்திற்கும்தேசிய கலாச்சாரங்களின் முன்னேற்றத்திற்கும் அது உறுதியளித்துள்ளது. தேசிய உணர்வில், சோஷலிச உள்ளடக்கத்தை அது உறுதி செய்துள்ளது. பழமையை மாற்றி புதிய சோஷலிச நாடுகளின் உருவாக்கத்தையும் அவற்றின் ஒற்றுமையின் உறுதியான ஒருமைப்பாட்டினையும் அது உறுதி செய்துள்ளது.

தேசங்கள் மற்றும் தேசிய உறவுகளின் வளர்ச்சியில் சோஷலிசத்தின் அணுகுமுறையை, சோஷலிசத்தின் இரண்டாவது போக்கு எனலாம். அது சம்பந்தமான லெனினது கருத்துக்களையும், மதிப்பீடுகளையும் சோஷலிசத்தின் நடைமுறை முழுமையாக உறுதி செய்துவிட்டது.

''தேசியப் பூசல்களை முடிவுக்குக் கொண்டுவரும் சக்தி படைத்தது சோஷலிசம் மட்டுமே''* என்று புரட்சிக்கு முன்னரேகூட, லெனின் சுட்டிக்காட்டினார். சோஷலிசப் புரட்சி முடிந்து, இரண்டரை ஆண்டுகளுக்குப் பிறகு புதிய அமைப்பின் உதவியால் சோவியத் நாட்டில் தேசியப் பூசல்

* வி. இ. லெனின், ''நூல் திரட்டு'', தொகுதி 19, பக். 251.

ஏறத்தாழ முற்றிலுமாக ஒழிந்துவிட்டன என லெனின் குறிப்பிட்டார். புரட்சிக்கு முன்னால் வரையறுக்கப்பட்ட லெனினது கருத்துக்களில் மேலும் ஒன்றை காண்போம்—அதாவது, தேசங்கள் தனிமைப்பட்டிருப்பதையும், சிறுசிறு அரசுகளாக மனிதகுலம் பிரிந்து சிதறுண்டு போவதையும் முடிவுக்கு கொண்டுவருவது தேசங்களை சங்கமிக்கவைத்து ஒன்றிணைப்பதும் சோஷலிசத்தின் குறிக்கோளாகும் என்பதே அவ்வரையறுப்பு—வரலாற்றின் ஒரு மிகக்குறுகிய கால கட்டத்திற்குள் உறுதி செய்யப்பட்டுவிட்டது. ஆனால், சோவியத் ஆட்சி ஏற்பட்டு மூன்றுண்டுகளுக்கு பிறகு, வெகு சமீபம் வரை "மக்களின் சிறைக் கூடமாக" இருந்த ருஷ்யாவில் மக்கள் மத்தியில் ஒரு தீவிர சங்கமிப்புப் போக்கு ஏற்பட்டு வருவதை, லெனினால் காண முடிந்தது. 1920-ன் ஆரம்பத்தில், துருக்கியின் முஸ்தாபா கமாலுக்கு அவர் ஒரு தந்தி கொடுத்திருந்தார். சமத்துவம், சகோதரத்துவம், சுய விருப்ப இணைப்பு என்ற கொள்கை "ஒரு மகத்தான, சக்தி பொருந்திய குடும்பமாக ரஷ்யாவின் அனைத்து குடியரசுகளையும் ஒற்றுமைப்படுத்தி வலிமைப் படுத்தியுள்ளது", "ஒரு மகத்தான முழு அமைப்பை உருவாக்கியுள்ளது"* என்று அத்தந்தியில் குறிப் பிட்டுள்ளார்.

சோவியத் ஆட்சியின் முதலாவது சில வருடங்களில் ஏற்பட்ட சோஷலிசத்தின் வளர்ச்சி லெனினது முன்னறி திறனை முழுமையாக நிரூபித்தது. நாடுகள் சங்கமிப்பதையும் கலந்திணைவதையும் சோஷலிசம் தீவிரப்படுத்தும், செழுமைப்படுத்தும் எனவும், முன்னர் அடக்கி ஒடுக்கப் பட்டுப் பின்தங்கியிருந்த மக்களினங்கள், மிகவும் முன்னேறிய பெரிய சோஷலிச நாடுகளுடன் அணி வகுக்கவும், இணையவும் முயலக்கூடும் எனவும் குறிப்பிட்ட அவரது கருத்துக்கள், ஓர் ஆரூடம் தவிர மேலதிகமாக ஒன்றுமில்லை என்றே முதலில் தோன்றின. ஆனால் 1918-ல்

---

* வி. இ. லெனின், "நூல் திரட்டு", தொகுதி 52, பக். 301 (ரஷ்ய மொழியில்).

அவர் வெளியிட்ட அறிக்கை, சோஷலிசத்தின் உறுதிப் படுத்தப்பட்ட அனுபவத்தை அடிப்படையாகக் கொண்டிருந்தது. மக்கள், ருஷ்யாவின் தொழிலாளி வர்க்கத்துடன் உறுதியான ஒற்றுமையை பலமாக விரும்புகின்றனர் என்றும், ஜீவாதார நலன்களாலும், அவர்களது வர்க்க உணர்விலும் அவர்கள் ஒன்றுசேர்ந்து வந்துள்ளனர் என்றும் அதில் அவர் குறிப்பிட்டிருந்தார்.

ஒரு புதிய பல்தேசிய இன கூட்டுக்குடும்பமாக சோவியத் மக்கள் உருவாகி வளர்ந்திருப்பதும், சக்திமிக்க சோவியத் சோஷலிசக் குடியரசுகளின் ஒன்றியம் உறுதிப்பட்டிருப்பதும் சோஷலிசத்தில் ஆளுமை செலுத்தும் பிரதான விதிகளின் சாராம்சத்திற்கேற்ப அமைந்த லெனினதும், கம்யூனிஸ்ட் கட்சியினதும் முடிவுகளின் அடிப்படையில் ஏற்பட்டன.

கம்யூனிஸ்ட் கட்சி தனது புதிய திட்டத்தில், தேசங்கள் மற்றும் தேசிய உறவுகளின் வளர்ச்சியில், சோஷலிசத்தின் ஒன்றிணைந்த இருபோக்குகள் செயல்படுகின்றன என்ற அம்சத்தையும், கம்யூனிச சமுதாயத்தை நிர்மாணிக்கும் பொழுது, அவற்றை கணக்கிலெடுத்துக் கொள்ள வேண்டியதின் முக்கியத்துவத்தையும் விசேடமாக வலியுறுத்திக் கூறியுள்ளது.

தேசங்களின் முழுமையான சமத்துவம், அவற்றின் சுய விருப்பமான நெருக்கமான இணைப்பு, அவற்றின் பரஸ்பர நம்பிக்கை, சோஷலிச சர்வதேசியத்தின் அடிப்படையில் அவை ஒன்றுசேர்ந்து வருவது, தேசிய வேறுபாடுகள் படிப்படியாக ஒழிக்கப்படுவது, இறுதியாக, முதிர்ந்த கம்யூனிச சமுதாய கட்டத்தில் தேசங்கள் இரண்டறக் கலந்திணைவது என்ற தொடர்ச்சியான போக்கினை, சோஷலிசம் அதன் சாராம்சத்திலேயே உருவாக்குகின்றது.

முதலாளித்துவம் மற்றும் சோஷலிசத்தின் சர்வப் பொது விதியின் செயல்பாட்டுத் தன்மை குறித்தும்

அவற்றின் போக்குகளது வெளிப்பாடுகள் பற்றியும் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது. அப்பகுப்பாய்வுகள் முதலாளித்துவமும் சோஷலிசமும் தனியொரு விதியாக அமைவன அல்ல என்ற முடிவிற்கே இட்டுச் செல்கின்றன.

முதலாளித்துவத்தின் இருபோக்குகள்பற்றி லெனின் குறிப்பிட்டு அவ்விரு போக்குகளும் ஒருங்கிணைந்தால் மட்டுமே ஒரு விதியாக அது அமைகிறது என்று சுட்டினர். மேலும், அவற்றின் ஒட்டுமொத்த போக்கு, தேசங்கள் மற்றும் தேசிய உறவுகளின் வளர்ச்சியினது அனைத்து அம்சங்களையும் அரவணைப்பதாகும் என்று அவர் குறிப்பிட்டார்.

முதலாளித்துவத்தினதும் சோஷலிசத்தினதுமான இந்த போக்குகள், சாராம்சத்தில் முற்போக்கானவையாக இருக்கின்றன. உள்ளடக்கத்தின் புறத்தே ஒரே மாதிரியாக இருக்கின்றன; முதலாளித்துவம் மற்றும் சோஷலிசம் ஆகிய இரண்டு சூழல்களிலும், முதலாவது போக்கு, நாடுகளின் சுதந்திரமான வளர்ச்சியை உறுதி செய்வதை நோக்கமாகக் கொண்டிருக்கின்றன. இரண்டாவது போக்கு, சமுதாய அமைப்புகள் வேறுபட்டவையாக இருந்தபோதிலும், தேசங்களின் சங்கமிப்பிற்கு இட்டுச்செல்கின்றது. முதிர்ந்த கம்யூனிச கட்டத்தில், அது இணைந்து நிறைவுபெறும். இந்த போக்குகளின் செயல்பாடு, முதலாளித்துவத்தின் கீழும், சோஷலிசத்தின் கீழும் ''ஆச்சர்யப்படத்தக்க விதத்தில் ஒரே மாதிரியானதாகவே'' காணப்படுகின்றது போலும் என்று மார்க்ஸ் கூறியபடி இதன் மிகநெருக்கமான ஆய்வும் இதனை எடுத்துக்காட்டும். வேறுபட்ட சரித்திர சூழ்நிலைகளில் நிகழ்வதால், அது மிகவும் வேறுபட்ட விளைவுகளை அளிக்கின்றது.*

இந்த போக்குகளின் புறவயத் தன்மை ஒருபுறமிருக்க, சரித்திர ரீதியான சூழ்நிலை ஒருபுறமிருக்க, அவற்றின் விளைவுகள், ஆட்சியிலிருக்கும் வர்க்கத்தால் பாதிக்கப்படுகின்றன.

---

* மார்க்ஸ்-எங்கெல்ஸ்,''தொகுப்பு நூல்கள்'', பெர்லின், 1962, தொகுதி 19, பக். 112.

உதாரணமாக, என். மிகைலோவ்ஸ்கி*, தேசிய உணர்வும், தேசிய பகைமையும் ஒரு சுதந்திரமான காரணி என்றும், தேசம் முழுமையின் நலன்களை அது பிரதிபலிக்கின்றதென்றும் நிலைநாட்ட முயற்சித்தார். இந்தக் கருத்து, பிரச்சினையின் சாரம்சத்தையே மங்கடித்து மறுக்கக் கூடியதாகுமென்றும் அதுமட்டுமே அக்கருத்தின் நோக்கமென்றும் லெனின் சுட்டிக் காட்டினார். ஏனென்றால், "இந்த தேசியப் பகைமையின் பிரதான அடிப்படையாக அமைந்திருப்பது, வர்த்தக, தொழில் பூர்ஷுவாக்களின் மிகவும் உண்மையான நலன்களே"** என்பதை லெனின் மிகத்தெளிவாக சுட்டிக் காட்டினார்.

முதலாளித்துவத்தின் இருபோக்குகளைவிவரித்து லெனின் கூறியதை நாம் மீண்டும் நினைவுகூரலாம். தேசியப் பிரச்சினையின் இருபக்கங்கள், அதாவது, தேசங்கள் மற்றும் தேசிய உறவுகளின் முழுவளர்ச்சி என்பன அவற்றில் உள்ளடங்கியுள்ளன என்று அவர் கூறினார். இந்த போக்குகள் செயல்படுவதன் பிரதான திசைவழிகள் இவையே என்பது திண்ணம் ஆனால், அத்துடன், நாம் ஒன்றை நிச்சயமாக கவனத்தில் கொண்டிருக்க வேண்டும். தேசிய உறவுகள் சம்பந்தப்பட்ட, அல்லது தேசங்களின் வளர்ச்சி சம்பந்தப் பட்ட, இந்த அல்லது அந்த அம்சத்தின்மீது, இந்த இரு

---

* மிகைலோவ்ஸ்கி நிக்கோலாய் கான்ஸ்டான்டி நோவிச் (1842-1904) — தாராளவாத நரோதியத்தின் தலையாய கொள்கை வீரன், பிரசுரகர்த்தா, தத்துவ மேதை, சமுதாயவியலில் தன்னிலை வாதத்தின் மிகச்சிறந்த பிரச்சாரகர் மார்க்சியத்திற்கெதிரான ஒரு கடும்போராட்டத்தை அவர் நடத்தினார்.
"மக்களின் நண்பர்கள்" யார்? அவர்கள் எவ்வாறு சமூக ஜனநாயக வாதிகளை எதிர்த்து போராடினர்? என்பனபோன்ற இதரபல லெனினது நூல்களைக் காண்க. அவற்றில், மிகைலோவ்ஸ்கியின் கருத்துக்கள் பற்றிய விமர்சனம் காணக்கிடக்கின்றது.

** வி. இ. லெனின், "நூல் திரட்டு", தொகுதி 1, பக். 155.

போக்குகளின் வெளிப்பாடும், அவற்றின் சாத்தியமான கூட்டு செல்வாக்கும் ஒரு பிரிக்கவியலாத ஒற்றுமையை பிரதிநிதித்துவப் படுத்துகின்றன. இந்த இரு போக்குகளின் இணையுறவு சம்பந்தமான ஒரு மிகச்சிறந்த கருத்தினை, இத்தகைய ஒரு அணுகு முறை நமக்கு அளிக்கும்.

ஏறுமுகமாக இருந்த முதலாளித்துவ கட்டத்தில் முதலாவது போக்கு மேலாதிக்கம் செலுத்தியதென்றும், அதன் ஏகாதிபத்திய கட்டத்தில் இரண்டாவது போக்கு மேலாதிக்கம் செலுத்தியதென்றும், முதலாளித்துவ சகாப் தத்தை மேற்கோள்காட்டி, லெனின் வரையறுத்தார். ஒரு போக்கு மற்றொன்றின்மீது மேலாதிக்கம் செலுத்திய தென்பது, அவற்றின் சாராம்சத்தின் விளைவாக ஏற்பட்ட தல்ல. ஆனல், அதுவே முதலாளித்துவத்தின் விசேட அம்ச மாகும். அதன் ஏறுமுகக் கட்டத்தில், உற்பத்தி சக்திகளின் வளர்ச்சியும், அதன் விளைவாக சமுதாய முன்னேற்றமும் ஏற்பட்டது. அவ்வளர்ச்சிகளும், முன்னேற்றங்களும் மக்கள் தேசிய ரீதியில் ஒன்றுபடுவதுடனும், பிரதேசங்கள் ஒருங்கிணை வதுடனும், ஒரு உள்நாட்டு தேசிய சந்தையின் உதயத் துடனும் பெருமளவிற்குப் பின்னிப் பிணைந்திருந்தன.

ஏகாதிபத்திய கட்டத்தில், இந்த அம்சங்களின் தாக்கம் பெருமளவுக்கு குறைவாக இருக்கின்றது. தேசங்களுக்கிடை யிலான அனைத்து வகையான பொருளாதார, விஞ்ஞான, தொழில்நுட்ப, கலாசார தொடர்புகளும் ஒரு மிகப்பெரிய பாத்திரத்தை வகிக்கின்றன. மிகப்பெரும்பாலான மக்களின் தேசிய வளர்ச்சி, உண்மையில் ஏகபோகம் உறுதிப்படுவதையும், அதன் லாபவேட்டையினையும் தடை செய்வதோடுதான் ஆரம்பமாகின்றது. மேலும் இது, முதலாளித்துவத்தின் இரண்டாவது போக்கை மேலோங்கச் செய்கின்றது. முதலாவது போக்கு, அடிக்கடி தேசிய வாதத்தால் வலிமையாக செல்வாக்கு செலுத்தப்படு கின்றது. இரண்டாவது போக்கு, பெரிய நாடுகளின் ஏகபோகங்களினது குறுகிய தேசியவெறி, காஸ்மாபாலிட் டனிஸம் போன்ற அதன் பல்வேறு வகையினங்களால்

பிரதிநிதித்துவப் படுத்தப்படுகின்றது. அது, சிறிய நாடுகளின்மீது தேசிய சூன்யவாதத்தை திணிக்க முயல்கின்றது.

சோஷலிசத்தின் கீழ் இந்த போக்குகளின் இணையுறவின் பின்னுலுள்ள காரணிகள், முற்றிலும் வேறுபட்டவையாக இருக்கின்றன. ஓர் இயக்கவியல் ஒற்றுமையோடு இங்கு அவை செயல்படுகின்றன: சங்கமிப்பின் அடிப்படையில் வளர்ச்சி ஏற்படுகின்றது, மேலும் அது சங்கமிப்பை நோக்கி இட்டுச் செல்கின்றது; நாடுகளின் வளர்ச்சியினது அடிப்படையின்மீதே இது நிகழ்கின்றது. அதுவே இந்த வளர்ச்சிப் போக்குகளை மேலும் ஊக்குவிக்கின்றது. இருபோக்குகளும் ஒத்திசைவாக வளர்கின்றன,ஒன்றுடன் ஒன்று இணைப்புண்டிருக்கின்றன, ஒன்றிற்கொன்று உட்செயல்பாட்டினையும் கொண்டிருக்கின்றன.

சோஷலிசத்தின் இயல்பான தன்மையினுலும், அதன் விளைவாக அவ்விருபோக்குகளின் ஒத்திசைவான செயல்பாட்டினுலும், தேசங்களின் பூரணமலர்ச்சி என்பது, சுதந்திரமான தேசிய வளர்ச்சியின்மூலம் முழுமையாக சாதிக்கப்பட்டிருக்கின்றது. அதில் எல்லாவற்றிலும் மகத்தானது என்னவென்ருல், தேசங்கள் ஒரே சமயத்தில் ஒன்றிணைந்து வருவதாகும். அதிலும் குறிப்பாக, பல தேசிய இனங்களைக் கொண்ட ஒரு நாட்டின் விஷயத்தில் இது மிகவும் பொருந்தும். தேசங்கள் ஒன்றுபடுவதை எடுத்துக்கொண்டால் அதனைப் பொறுத்தவரை, சமத்துவம், சுதந்திர சித்தம் எனும் பின்னணியிலேயே அந்த ஒற்றுமைப் போக்கு இடம்பெறுகின்றது, மேலும் — அதிமுக்கிய தேவையாக இருப்பதென்னவென்ருல்—தேசங்கள், தேசிய இனங்களின் பூரண மலர்ச்சியும், சுதந்திரமான தேசிய வளர்ச்சியும் என்ற அடிப்படையின்மீது இது அமைந்திருப்பதேயாகும்.

தேசங்கள் மற்றும் தேசிய உறவுகளின் வளர்ச்சியில், சோஷலிசத்தின் போக்குகளினது இணையுறவை பரிசீலனை செய்கையில், அப்போக்குகளின் செயல்பாடு, எவ்வித

பரிபூரணத்துவமான "சமபலாபலத்தை"யும் சுட்டிக்காட்ட வில்லை என்று வலியுறுத்திக் கூறுவது மிகவும் முக்கியமான தாகும். அவ்வாறு அங்கே தோற்றமளிக்கலாம், ஆனல் அது எடுத்த எடுப்பில் காட்சியளிக்கும் தோற்றம் மட்டுமே யாகும். எவ்வாருயினும், உண்மை என்ன என்று காண்போம். இவ்விரு போக்குகளின் இணையுறவில் நாடு களுக்கிடையிலான உறவுகளின் பெருக்கத்தை நோக்கிய, ஒன்றிணைவை நோக்கிய போக்கே தலையாய பாத்திரத்தை வகிக்கின்றது. ஆனல், சுதந்திரமான சர்வாம்ச தேசிய வளர்ச்சியை நோக்கிச் செல்லும் போக்கின்மீது இப்போக்கு மேலாதிக்கம் செலுத்தவுமில்லை. அதனல் ஏற்பட்ட விளைவு மல்ல இது. சோஷலிசத்தின்கீழ், சுதந்திரமான தேசிய வளர்ச்சியை நோக்கிய போக்கு, தேசங்கள் ஒன்றிணை வதை உறுதி செய்கின்றது. அப்போக்கின் செயல்பாட்டின் நெறியாக்கத்திஞல் மட்டுமல்ல, ஆனல் வேறு பல வழிகளி லும் அதன் சாராம்சத்தைக் கொண்டும் அவ்வாறு உறுதி செய்கின்றது.

ஒரு சர்வப் பொதுவிதி என்ற முறையில், சோஷலிசத் தின் இவ்விரு போக்குகளினது வெளிப்பாடுகளுக்கும் இவை அனைத்தும் பொருந்தும் என்பதை வலியுறுத்தி கூறியாக வேண்டும். ஆனல், இப்போக்குகளின் செயல்பாடு, எல்லா பிரச்சினைகளுக்கும் பொருந்தும் என்பதல்ல. இவ்விருபோக்கு களும் எப்பொழுதுமே சமமான வன்மையுடன் செயல் படத்தான் வேண்டுமென்ற அவசியமில்லை.அது சூழ்நிலையைப் பொறுத்தது. தேசங்களின் தகுதி, வளர்ச்சி ஆகியவற்றை பொறுத்தது. அவற்றின் உள்நாட்டு, வெளிநாட்டு உறவு களின் விரிவையும், இதர பல காரணிகளையும் பொறுத்தது.

மார்க்ஸ், எங்கெல்சினது அடிக்கோள்களை விரித்துரைக் கையில் லெனின் குறிப்பிட்டதை கவனிப்போம். தேசிய பிரிவினைகள் தகர்வது, தேசிய வேறுபாடுகள் நீங்குவது, தேசங்கள் தன்வயமாகி ஒன்றிணைவது என்ற உலகளாவிய போக்கு, ஒவ்வொரு பத்தாண்டுகள் கடக்கும் பொழுதும் மென்மேலும் வலிமையடைகின்றது என்று அவர் குறிப்

பிட்டார். சமுதாய மாற்றத்தின் மிகவும் சக்தி பொருந்திய அம்சங்களில் இதுவும் ஒன்று என அவர் குறிப்பிட்டார். எவ்வாருயினும், தேசங்கள் மற்றும் தேசிய உறவுகளின் வளர்ச்சியில் ,சோஷலிசத்தின் உலகளாவிய விதியினது இரண்டாவது போக்கின் ஒரு வெளிப்பாடாக, தேசங்களின் சங்கமிப்பை அடையாளபடுத்திவிடக் கூடாது. தேசிய வேறுபாடுகளை நீக்குவது, தேசங்கள் தன்வயமாகி ஒன்றிணைவது என்ற சரித்திர ரீதியான போக்கு, தேசங்கள் ஒன்று சேர்வதிலிருந்து மட்டும் எழவில்லை. ஆனுல் அத்துடன், மக்களின் தேசிய வளர்ச்சியிலிருந்தும் எழுவதாகும். இன்னும்கூட அந்த உண்மை சற்று அதிகப்படியான கூர்மையுடையதாகும். தேசிய பிரிவினைகள் தகர்வதும், தேசிய வேறுபாடுகள் நீக்கப்படுதலும் என்ற சரித்திர ரீதியான போக்கினது அடித்தளம், தேசங்கள் மற்றும் தேசிய உறவுகளின் வளர்ச்சியை மட்டும் உள்ளடக்கியதல்ல. ஆனுல் அத்துடன், இடைவிடாத விதத்தில் மக்கள் பொருளாதார, அரசியல், கலாச்சாரத் துறைகளை சர்வதேசியமயமாக்கலும் அதனுட்படுவதாகும். சமுதாயத்தின் முழுப் போக்கும் தேசங்களின் ஒருங்கிணைவையும், தேசங்கள் என்ற தளைகள் இல்லாதொழிவதையும் நோக்கியே செல்கின்றது. இக்கருத்தினை லெனின் குறிப்பாக வலியுறுத்தி கூறியுள்ளார்.

சர்வதேசியமயமாதல் என்றபோக்கின் வடிவங்களையும், உள்ளடக்கத்தையும் பார்க்கும்பொழுது, அதன் பன்முகத் தன்மையினையும் நாம் நினைவில் கொண்டிருக்க வேண்டும். ஒருபுறம், பொருளாயத, கலாச்சார மதிப்புகளின் உற்பத்தியையும், பரிவர்த்தனையையும், சர்வதேசியமயமாக்கல் என்பதைப் பொறுத்தவரை—விஞ்ஞானம், தொழில்நுட்பம், கலாசாரம் ஆகியவற்றை சர்வதேசியமயமாக்குதல் உட்பட, குறிப்பாக விஞ்ஞான, தொழில்நுட்பப் புரட்சியிலும், குறுகிய தேசியமனப்போக்கை தீவிரமாக களைந்தெறிதலிலும்கூட, புறநிலையில் தனியான வளர்ச்சிப் போக்குகளை அது கொண்டிருக்கின்றது. மறுபுறம்,

மக்கள் மத்தியிலான அரசியல் உணர்வை ஒரு உயர்ந்த மட்டத்திற்கு உயர்த்துவதின் மூலம், தேசங்கள் மத்தியிலான சங்கமிப்பு நடப்புக்கு விஞ்ஞான பூர்வமான வழிகாட்டுதலை சோஷலிசம் வழங்குகின்றது. தேசங்களுக்கிடையிலான சோஷலிச உறவுகளின் பிரதான நீரோட்டமாக இவை மாறிவிட்டன. பல சமுதாயக் காரணிகளால் சங்கமிப்பு தூண்டப்படுகின்றது. துவக்கத்தில், சுதந்திரமான தேசிய வளர்ச்சி என்ற போக்கினதும், தேசங்கள், தேசிய இனங்களை எல்லாவகையிலும் படிப்படியாக ஒன்று சேர்ப்பது என்ற போக்கினதும் இணையுறவை ஒழுங்கு படுத்துவதற்கான வாய்ப்பினை சோஷலிசம் வழங்குகின்றது. மேலும், தேசிய வளர்ச்சித் தன்மையும், தேசங்களின் மலர்ச்சியும் தொடர்ச்சியாக அவற்றின் சர்வதேசிய அடிப்படையினை தீவிரப்படுத்துகின்றன. சங்கமிப்பையும் இறுதியாக ஊக்குவிக்கின்றன. சோஷலிசம், மிக ஆழமான பரஸ்பரம் புரிந்துகொள்ளும் சூழலை உருவாக்குகின்றது. சோஷலிசத்தின் கீழும் முதலாளித்துவத்தின் கீழும் தேசங்கள் மற்றும் தேசிய உறவுகளின் வளர்ச்சிமீது ஆளுமை செலுத்தும் விசேட விதிகளை மேலும் தீர்க்கமாகப் புரிந்துகொள்ளவும், பயன்படுத்தவும் வகைசெய்கிறது.

* * *

தேசங்கள் மற்றும் தேசிய உறவுகள் பற்றிய மார்க்சிய-லெனினிய போதனை சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியினதும், உலக கம்யூனிஸ்ட் இயக்கத்தினதும் அனுபவத்தால் செழுமைப்படுத்தப்பட்டுள்ளது. அது ஒரு வாழும் உண்மையாகும். உலக சோஷலிசத்தினதும், சர்வதேச தொழிலாளி வர்க்க இயக்கத்தினதும், தேசிய விடுதலை இயக்கத்தினதும் நடைமுறை அனுபவத்தில் அது உருக்கொண்டுள்ளது. மனிதகுலம் முழுமையும் முதலாளித்துவத்திலிருந்து சோஷலிசத்திற்கு இறுதியாக மாறிச்செல்ல வகைசெய்யும் உலக புரட்சிகர இயக்கம் சமீபத்தில் ஈட்டியுள்ள புதிய முன்னேற்றங்கள் மார்க்சிய-லெனினிய விஞ்ஞானம் ஈட்டியுள்ள வெற்றியைப்போன்றே இதிலும் வெற்றி சூடுவது திண்ணம்.

பாகம் 1

முதலாளித்துவ சமுதாயத்தில் தேசிய இனப் பிரச்சினை

முதலாளித்துவ சகாப்தத்தில், தேசிய இனப் பிரச்சினையின் உள்ளடக்கம், உற்பத்தி மற்றும் விநியோக முறையிலிருந்து எழுந்துள்ள முதலாளித்துவப் பொருளாதார அமைப்பின், சுரண்டும் தன்மையினால் உருக்கொடுக்கப்பட்டிருக்கின்றது; மக்களின் சரித்திர ரீதியான வளர்ச்சியினது மட்டம் விசேடத் தன்மைகள் ஆகியவற்றை சார்ந்துள்ளது. நிலவுடமைச் சமுதாய அமைப்புகளோடு ஒப்பிடுகையில், உற்பத்தி சக்திகளின் வளர்ச்சி, வாழ்க்கையின் இழையோட்டத்தை தீவிரப்படுத்தியிருக்கின்றது. அந்நியமாதலை முடிவுக்கு கொண்டுவந்திருக்கின்றது. பல்வேறு தேசிய இன மக்களுக்கிடையில், தொடர்புகளையும், உறவுகளையும் விரிவுபடுத்தியிருக்கின்றது. இருப்பினும் முதலாளித்துவம்தான் உக்கிர தேசிய வாதத்தையும் தேசிய வெறியையும் புகுத்தியது. தேசிய விரோத குரோதங்களை கட்டவிழ்த்து விட்டது. தனிச்சொத்துடமையை பங்கிடவும், மறுபங்கிடவும் மட்டுமல்ல, ஆனால் அத்துடன், செயற்கையாக தேசிய உறவுகளை தீவிரப்படுத்தவும் வேண்டி ரத்தவெறி யுத்தங்களை கட்டவிழ்த்து விடுகிறது.

மார்க்சும் எங்கெல்சும்தான், அ) தேசிய இனப் பிரச்சினையின் சாராம்சம்; ஆ) சமுதாய வளர்ச்சியில் அதன் இடம் குறிப்பாக வர்க்கப் போராட்டத்தில் அதன் இடம்;

இ) முதலாளித்துவ மற்றும் சோஷலிச சூழலில்,தேசிய இனப் பிரச்சினை பற்றிய பாட்டாளி வர்க்க திட்டம், கொள்கை ஆகியவற்றின் அடிப்படை அம்சங்கள். குறித்த தீர்மான கரமான முடிவுகளை முதன் முதலாக நிலைநாட்டியவர்கள்.

அவர்களது பணியினை லெனின் தொடர்ந்தார். அவற்றின் கோட்பாடுகளை அவர் விரிவுபடுத்தினார். ஏகாதிபத்திய சகாப்தத்திலும், சோஷலிச உதயத்திலும், மக்களின் உறவுகளிலும், உள்ளார்ந்த வாழ்விலும் நிகழ்ந்த மாற்றங்களின்பால் கவனத்தை ஈர்த்தார். தேசங்கள் மற்றும் தேசிய உறவுகளினது வளர்ச்சியின் புறநிலை விதிகளை தீர்மானகரமாக வரையறுப்பதின்மீது அவரது முயற்சிகள் மையம் கொண்டிருந்தன. தேசிய பிரச்சினையில் முதலாளித்துவத்தின் இரு போக்குகள் ஒரு தேசிய-காலனி பிரச்சினையாக மாறிடும் அதன்தன்மை, பாட்டாளி வர்க்க சர்வ தேசியத்தின் சாராம்சம், மக்களுக்கும் அவர்களின் தேசிய விடுதலைப் போராட்டத்திற்கும் உரிய அதன் முக்கியத்துவம், சோஷலிசத்தின்கீழ் தேசங்கள் மற்றும் தேசிய உறவுகளின் வளர்ச்சி ஆகியவற்றிற்கு அவர் மிகுந்த முக்கியத்துவத்தை அளித்தார்.

சமுதாய வளர்ச்சி விதிகளை நினைவில்கொண்டு, தேசிய பிரச்சினையின் இடத்தையும் பாத்திரத்தையும் நிர்ணயிப்பதில் பின்வரும் காரணிகளை லெனின் வலியுறுத்திக் கூறினார்: அ) சகாப்தத்தின் அலாதித்தன்மையும், மக்களினதும் தேசிய உறவுகளினதும் வளர்ச்சியின் சரித்திர கட்டமும்; ஆ) தேசிய சர்வதேசிய இயக்கங்களின் பொருளாதார அடிப்படையின் பிரதான முக்கியத்துவம்; இ) சகாப்தத்தின் புறநிலைத்தன்மைகளுக்கேற்ப தேசிய இயக்கங்களில் மாற்றமுறும் உள்ளடக்கம்; ஈ) முதலாளித்துவ தேசியவாதமும், சமரசத்திற்கிடமற்ற அதற்கெதிரான பாட்டாளிவர்க்க சர்வதேசியமும், சமுதாய உறவுகளில் அவற்றின் செல்வாக்கும்; உ) தேசம் அல்லது தேசிய இனத்தின் வாழ்க்கையில் வர்க்கங்கள் மற்றும் வர்க்கப் போராட்டத்தின் பாத்திரம், தேசிய உறவுகளின் கட்டமைப்

பிலும், உள்ளடக்கத்திலும்" வர்க்கங்கள் மற்றும் வர்க்கப் போராட்டத்தின் பாத்திரம்; ஊ) தேசிய அம்சத்தின்பால், வர்க்க அம்சத்தின் உறவு.

தங்களின் நிலப்பிரபுத்துவ மந்த உறக்கத்திலிருந்து விடுபட்டு மக்கள்பெற்ற விழிப்புணர்வையும் தேசிய இயக்கத்தின் வேக முடுக்கத்தையும் முற்போக்கானது என லெனின் வர்ணித்தார். இது தேசங்களின் உருவாக்கத்தை கொணர்ந்தது, சுயாதிபத்தியஉரிமைக்கான போராட்டத்தை தூண்டியது என அவர் விவரித்தார். சிதைந்து கொண்டிருந்த நிலவுடைமைச் சமுதாயத்தின் கருப்பையில், உற்பத்தி சக்திகள் படுவேகமாக வளர்ச்சியுற்றதானது முதலாளித்துவ வளர்ச்சியின் தலைமை பீடத்தில், பூர்ஷுவாக்களை அமர்த்தியது. ஆட்சி அதிகாரத்திற்கான போராட்டத்தில், புறநிலை ரீதியான பொருளாதார இயக்கங்களிலிருந்து முதலாளிகள் பலன்பெற்றனர். அதேசமயத்தில் அவற்றின் வளர்ச்சியை ஊக்குவிப்போராகவும் காட்சியளித்தனர். தேசங்களின் பிறப்பிற்கு காரணமான தேசிய நடப்புக்களாவன: ஒரு புதிய உழைப்புப் பிரிவினையும், உற்பத்தியில் ஏற்பட்ட முன்னேற்றங்களும்; ஒரு ஒருங்கிணைந்த பொருளாதார பிரிவாக வளர்ச்சியுற்ற ஒரு திட்டவட்டமான தேசிய இனம் வாழ்ந்துவந்த பிரதேசத்தின் வளர்ச்சியும், வர்த்தக வளர்ச்சியும்; உருவாகி வந்த சந்தையில் பொருளாதார, வர்த்தக தகவல் தொடர்பின் ஒரு கருவியாக, மகத்தான முக்கியத்துவத்தை மொழி பெற்றுவிட்ட நிலையும், பல்வேறு வழக்கு மொழிகள் ஒரு பொதுவான தேசிய மொழியாக தீவிர மாற்றமடைந்து வந்த நிலையும்; எழுத்து வடிவம் கொண்ட தேசிய மொழியின் தோற்றம்; நிலப்பிரபுக்களிடமிருந்து அதிகாரத்தை பறிப்பதற்கான மிகவும் சாதகமான வாய்ப்புகளை (''மக்களின் சித்தப்படி'' பணியாற்றுவது என்ற வேடத்தில்) முதலாளிகள் லாவகமாக பயன்படுத்தியதும், தேசிய உணர்வின் வளர்ச்சியும், ஒரு தேசிய அரசின்மூலம் தனது மேலாண்மையை முதலாளித்துவம் உறுதிப்படுத்திக் கொண்டதும்

இதிலடங்கும். நிலவுடமையின் தீவிரமான எதிர்த்தாக்குதலை ஒட்டி, நிலவுடமைத் தளைகளை களைந்தெறியவும், தேசங்கள் துண்டாடப்படுவதை நிறுத்தவும் தேசிய இயக்கங்கள் தோன்றின. முதலாளித்துவத்தின் பொருளாதார, அரசியல் ஒற்றுமையை நிலைநாட்டவும் கலாச்சாரத்தின் சுதந்திர மான வளர்ச்சியை உறுதிப்படுத்தவும் இவை உதவின. தேசிய இயக்கங்கள் என்பவை கேள்விக்குஇடமற்ற வகையில் முற்போக்கான காரணிகளாக இருந்தன. நிலவுடமையுடன் ஒப்பிடும்பொழுது, சமூக-பொருளாதார வளர்ச்சியின் ஒரு உயர்ந்த கட்டத்தை முதலாளித்துவம் பிரதிபலித்தது.

தேசிய அரசுகளை உருவாக்குவதே தேசிய இயக்கங் களின் குறிக்கோளாக இருந்தது. சக்திமிக்க பொருளா தார காரணிகளால் அவை தூண்டப்பட்டன. ஆனால் அத்துடன் இதரபல காரணிகளும் இருந்தன. அதில் குறிப்பிடத்தக்கது அரசியல் ரீதியான காரணியாகும். நிலவுடமைக்கு எதிரான போராட்டத்தில் பூர்ஷுவாக் களுக்கு மக்களின் பின்பலம் தேவைப்பட்டது. ஒப்பளவில் அதிக அரசியல் சுதந்திரத்தை வழங்கிய தேசிய அரசின் மகத்தான ஜனநாயகத் தன்மையுடன் பழைய அமைப்பை (ஏறத்தாழ ஏதேச்சாதிகார மன்னராட்சிகளாக அவை இருந்தன) பூர்ஷுவாக்கள் எதிர்த்தனர். பொதுவாக தேசிய ஒற்றுமையை உருவாக்க இது உதவியது. ஆனால் அத்துடன் இது (பொருளாதார காரணிகளுடன் இணைந்து) ஒரு சுதந்திரமான சமுதாய சக்தியாக தொழிலாளி வர்க்கம் உருவாவதை விரைவுபடுத்தியது. தொழிலாளர்களின் விடுதலைக்கான வர்க்கப் போராட்டத்தை இது தூண்டியது.

17-வது 18-வது நூற்றுண்டுகளின் பொருளாதார வளர்சசி அன்றே முன்னேற்றமடைந்திருந்த பூர்ஷு வாக்கள் தேசங்களின் சுயநிர்ணய உரிமைபற்றி பிரகடனம் செய்ய ஊக்குவித்து, "மக்களுடன் ஒன்று சேர்ந்து உழைக்கும் மக்கள் அனைவருடனும் ஒன்று சேர்ந்து பூர்ஷுவா வர்க்கம் சுதந்திரத்திற்காக போராடிக் கொண்டிருந்த பொழுது, தேசங்களின் முழுசுதந்திரத்திற்காகவும், சமத்துவ

உரிமைகளுக்காகவும் அது நின்றது'' என்று லெனின் எழுதினர். மேற்கு ருஷ்யாவுக்கு மேற்கிலான ஐரோப்பிய நாடுகளிலும் ஆஸ்திரியாவிலும் நடைபெற்ற, தேசிய இயக்கங்களின் விளைவுபற்றிய அவரது பரிசீலனையின்மூலம், இக்கருத்தினை லெனின் வெளிப்படுத்தினர். இந்தப் பகுதியின் 17 நாடுகளில் ஏழு பெரிய நாடுகளும் ''அளவிலும் மக்கட் தொகையிலும் மிகச்சிறிய குட்டி''நாடுகள் ஐந்தும் ''அறவே ஒரே மாதிரியான தேசிய இயைபை கொண்டவை'' என அவர் வர்ணித்தார். (இத்தாலி, ஹாலந்து, போர்ச்சுகல், ஸ்வீடன், நார்வே, ஸ்பெயின், டென்மார்க், லக்சம்பர்க், மொனுக்கோ, மாரினே, லிச்டென்ஸ்டீன் மற்றும் அன்ட்டோரா) மற்றும் மூன்று நாடுகளை ''சற்றே ஒரே மாதிரியான தேசிய இயைபு கொண்ட நாடுகள்'' என அவர் வர்ணித்தார் (பிரான்ஸ், பிரிட்டன், ஜெர்மனி). இரண்டு நாடுகளை மட்டும் பலதிறப்பட்ட இயைபுள்ளன என அவர் வர்ணித்தார் (சுவிட்சர்லாந்து, பெல்ஜியம்).*

ஐரோப்பாவின் கிழக்கிலும், மத்தியப் பகுதியிலும் சூழ்நிலை வேருக இருந்தது. வெளி ஆபத்துகளை எதிர்கொள்ள வேண்டிய நிலையில், மையப்படுத்தப்பட்ட பெரிய நாடுகள், பலதிறப்பட்ட மக்களைக் கொண்டவையாக வளரத் துவங்கின. அந்நாடுகள் உறுதிப்பட துவங்குவதின் முன்னரே கூட இத்தகுநிலை அங்கே நிலவியது. மேலும் அங்கே மேற்கு ஐரோப்பாவைவிட பின்னர்தான் முதலாளித்துவம் வளரத் துவங்கியது. அதன் விளைவாக, தேசங்களின் உருவாக்கமும் பின்னர்தான் துவங்கியது. இந்த வளர்ச்சிப் போக்குகளின் சூழ்நிலைமைகள், சில நாடுகள் விஷயத்தில், நீண்டநாள் சாதகமாக நீடிக்கவில்லை. வழக்கமாக மையப்படுத்தப்பட்ட எதேச்சாதிகார அரசுகளின் கட்டமைப்புகளால், அவை தடைப்படுத்தப்பட்டுவருகின்றன; பல தேசிய இன மக்கள் ஒன்ருக ஒடுக்கப்பட்டு வந்தனர் அல்லது சார்நிலையில் வைக்கப்பட்டிருந்தனர். அத்தேசிய இனங்கள் முதலாளித் துவத்தை நோக்கி முன்னேறுவதற்கு இது ஒரு தடையாக

* வி. இ. லெனின், ''நூல் திரட்டு'', தொகுதி 19, பக். 91.

இருந்தது; இத்தேசிய இனங்கள் பலவற்றின் தேசிய இயக்கங்களை தடுத்திட, ஒடுக்கும் நாடுகளின் பூர்ஷ்வாக்கள் நடவடிக்கைகளை மேற்கொண்டனர். ஆஸ்திரியா-ஹங்கேரி, ருஷ்யா மற்றும் பால்கன் நாடுகளைச் சேர்ந்த, பல தேசிய இனங்களின் கதி இதுவாகத்தான் இருந்தது.

இந்த பிரதேசங்களை பிரதானமாக மேற்கோள்காட்டி லெனின் குறிப்பிட்டதைக் காண்போம். மேற்கு ஐரோப்பா வில் நிலவிய, தேசங்கள் மற்றும் தேசிய உறவுகளின் சுதந்திரமான வளர்ச்சியோடு ஒப்பிடுகையில், அதற்கு முற்றிலும் முரணாகவே, இப்பிரதேசங்களில் நிலைமை இருந்தது. வளர்ச்சி குன்றிய தேசிய இயக்கங்களும்கூட அங்கே இருந்தன. பல சிறிய தேசங்களைக் கொண்டு பெரிய தேசங்கள் அமைந்தன. அவை முன்னவற்றுக்குப் பாதகமாக அமைந்தன— தேசங்களை தன்வயம்செய்த நடப்புகளும் உண்டு. ஒரு தேசிய அரசை அமைப்பதுதான், ஒவ்வொரு தேசிய இயக்கத்தினதும் இறுதி லட்சியமாக இருந்த போதிலும், சில தேசிய இயக்கங்கள் இதற்கு விதிவிலக்கா வும்கூட இருந்திருக்கின்றன. குறிப்பாக, தேசிய ஒடுக்கு முறையால் தூண்டப்படும் பட்சத்தில், சுதந்திர விழைவுகளை அவை தோற்றுவிக்கவில்லை. பின்தங்கிய பொருளாதார காரணிகளின் விளைவே இது. அத்தகையவற்றில், அதாவது பல தேசிய இனங்களைக்கொண்ட ஒரு நாட்டில், தேசிய ஒடுக்குமுறைகளுக்கு எதிராக மக்கள் போராடுகின்ற பொழுது, அவர்கள் சுதந்திரத்தை விரும்பாதிருக்கலாம். காரணம் தங்கள் அருகாமையிலுள்ள பலசாலி நாடுகளால் அடிமைப்படுத்தப்படுவோம் என்று அவர்கள் அஞ்சு கின்றனர். இதனைப்பற்றி லெனின் கூறியுள்ளதைக் காண் போம். ''முதலாளித்துவ வளர்ச்சி, அனைத்து நாடுகளிலும் சுதந்திரமான வாழ்க்கைக்கான விழிப்புணர்வை தூண்டும் என்ற அவசியமில்லை''* என லெனின் கூறினார். இன்னமும் அவை தேசிய இயக்கங்களினுள் வந்து கொண்டிருக்கின்றன.

* வி. இ லெனின், ''நூல் திரட்டு'', தொகுதி 20, பக். 437.

தொழிலாளி வர்க்கம், அவர்களது அனைத்து முற்போக்கான குறிக்கோள்களையும் ஆதரிக்க வேண்டும். ஒருதேசிய அரசை அமைப்பது அவர்களது குறிக்கோள் அல்ல என்பதை முன்னதாகவே தொழிலாளி வர்க்கம் புரிந்துகொள்ள வேண்டும். ஆனால், அவர்களது தேசிய வளர்ச்சிக்கான மேலும் சிறந்த சூழ்நிலைமைகளை உருவாக்கத் தனது ஆதரவை தொழிலாளி வர்க்கம் அளிக்க வேண்டும்.

சக்தி பொருந்திய தேசிய இயக்கங்களையும், தேசங்களின் உருவாக்கத்தையும் போற்றி வளர்த்த அதே பொருளாதார காரணிகள் அத்துடன், தேசங்களுக்கிடையிலான முதல் கட்ட வளர்ச்சிப் போக்குகளையும் இயக்குவித்தன. பூர்ஷ்வாக்களின் ஆட்சி அதிகாரத்திற்கான போராட்டமும், தேசங்கள் உருப்பெற்று உறுதிப்படுவதற்கு பின்னாலிருந்த பிரதான சக்தியாக அது இருந்ததும்தான், தேசிய இனப் பிரச்சினை என்பதை தோற்றுவித்தது. சுயநிர்ணய உரிமையை நோக்கி தேசிய இயக்கங்களை நடத்துவதற்கான பூர்ஷுவாக்களின் விருப்பம், வேறொரு பிரச்சினையையும் முற்றிலும் இயற்கையாகவே தோற்றுவித்தது. யாரிடமிருந்து தனது தேசத்தை தனிப்பிரிக்க வேண்டுமென்று அது கருதியதோ, அந்த மக்களுடனான உறவுகள் பற்றிய பிரச்சினை எழுந்தது. ஆனால் அதோடு எல்லாம் தீர்ந்துவிடவில்லை. அவர்களது தேசியப் பின்னணிபற்றிக் கவலையின்றி, பல்வேறு பிரதேசங்களுக்கிடையில் பொருளாதார இணைப்புகளை முதலாளித்துவம் உருவாக்குகின்றது. உற்பத்தி சக்திகளின் வளர்ச்சிமட்டம் சமுதாய உழைப்புப் பிரிவினையால் பிரதானமாக மதிப்பிடப்பட்டது. பல்வேறு பிரதேசங்களைச் சேர்ந்த மக்களுடனான தேசிய உறவுகளின்மீது அது ஒரு தீர்மானகரமான பாதிப்பை ஏற்படுத்துகிறது. தேசங்களுக்கிடையில் உறவுகளை ஏற்படுத்தியும் அவை ஒன்றை ஒன்று சார்ந்திருக்கும்படி செய்தும் சுரண்டும் முதலாளித்துவ அமைப்பு ஒரு தேசத்தை மற்றொரு தேசம் ஒடுக்குவதற்குங்கூட ஏதுவாக இருக்கிறது.

நிலவுடமை தேசிய இயக்கங்களைத் தடங்கல் செய்தது எனும் உண்மையே இரு சமுதாயப் பொருளாதார

உருவாக்கங்கள் இணைந்த கட்டத்தில் தேசிய இயக்கங்களின் மூலகாரணமாக இருந்தது. அதற்குரிய இரண்டாவது காரணம், பெருங்கொள்ளை லாபத்திற்காக, முதலாளி வர்க்கத்தால் மக்கள் அடிமைப்படுத்தப்பட்டதாகும். ஆதிக்கம் செலுத்துவதற்கும், அடிமைப்பட்டிருப்பதற்கும் இடையிலுள்ள உறவு, முதலாளித்துவ தேசிய உறவுகளின் மையமாக மாறிவிட்டது. எவ்வாறுயினும், பலவீனமான மக்களை அடிமைப்படுத்துவதற்கு, லாபநோக்கம் ஒன்று மட்டும் காரணமாக இருக்கவில்லை. தனது சொந்த மக்களின் மீது தனது பிடிப்பை வலிமைப்படுத்தும் நோக்கத்தையும்கூட பூர்ஷுவா வர்க்கம்கொண்டிருந்தது என்பதை மார்க்சும், எங்கெல்சும் அவதானித்தனர். காரணம், பூர்ஷ்வா சமுதாயம், தேசிய தொழிலாளி வர்க்கத்தின் உழைப்பினுல் மட்டும் நிலை நிறுத்தப்பட்டிருக்கவில்லை. ஆனுல் அத்துடன், இதர மக்களை ஒடுக்குவதிலிருந்து பெறும்கொள்ளை லாபங்களாலும் பராமரிக்கப்பட்டிருந்தது. இது, சாம்ராஜ்ய நாட்டின் தொழிலாளிவர்க்கத்தை ஊழல் மயப்படுத்தியது. முதலாளிவர்க்கத்திற்கு எதிரான அதன் போராட்டத்தை பலவீனப்படுத்தியது. இக்கருத்தினை துல்லியமாக விளக்க, இங்கிலாந்தின் உதாரணத்தை மார்க்சும் எங்கெல்சும் கையாண்டனர். அதன் சொந்த முதலாளித்துவ ஒடுக்குமுறையிலிருந்து தமது மக்கள் விடுதலை பெறுவதற்கும் இதர மக்கள் விடுதலைக்கும் இடையிலான நேரடி உறவை அவர்கள் எடுத்துக்காட்டினர். இதர தேசங்களை ஒடுக்கும் எந்த தேசமும் சுதந்திரமாக இருக்க முடியாது என எங்கெல்ஸ் சுட்டிக்காட்டினுர்.* இதே சிந்தனையோட்டத்தை மார்க்சும் எதிரொலித்தார்: ''இன்னெரு தேசத்தை ஒடுக்குகின்ற எந்த தேசமும் தனது சொந்ததளைகளை உருவாக்கிக் கொள்கிறது''** என்றுர்அவர்

* மார்க்ஸ்—எங்கெல்ஸ், ''தொகுப்பு நூல்கள்'',தொகுதி 4, பக். 417.

** கார்ல் மார்க்ஸ், பிரடெரிக் எங்கெல்ஸ், ''தெரிவு செய்யப்பட்ட நூல்கள்'' (மூன்று தொகுப்புகளில்), தொகுதி 2, பக். 176.

தேசிய ஒடுக்குமுறையும், சமத்துவமின்மையும், தனிச்சொத்துடமை ஆதிக்கத்திலிருந்தும், முதலாளித்துவ அமைப்பிலிருந்தும், அதன் வர்க்க கட்டமைப்பிலிருந்தும் எழுந்தவையாகும். இதனை மார்க்சும், எங்கெல்சும் கண்டனர். ஒரு மக்களை இன்னொரு மக்கள் சுரண்டுவதை தோற்றுவித்தது, முதலாளியத்தின்கீழ் நீடித்து நிலவும் சொத்துடமை உறவுகளேயாகும் என்று மார்க்ஸ் குறிப்பிட்டார். எனவே தான் மார்க்ஸ், எங்கெல்ஸ், லெனின் ஆகியோர் ஒரு முடிவுக்கு வந்தனர். தேசிய ஒடுக்குமுறைக்கும், சமத்துவமின்மைக்கும் எதிரானபோராட்டம், தனிச்சொத்துடமையினையும், சுரண்டலையும் அழிப்பதற்கானபொதுவான போராட்டத்தின்பகுதியாக நிச்சயம் இருக்க வேண்டும் என்பதே அவர்களின் முடிவு. தொழிலாளி வர்க்கத்தையும், அதன் கட்சியையும் பொறுத்தவரை, முதலாளித்துவ ஆட்சியை தூக்கியெறிவதற்கான பொதுவான போராட்டத்தின் பகுதியாகவே தேசியப் பிரச்சினை இருக்கிறது. வேறு வார்த்தைகளில் கூறுவதானால், இது ஒரு சுதந்திரமான அல்லது தனித்து நிலைத்திருக்கும் பிரச்சினை அல்ல. சோஷலிசப் புரட்சியினது வெற்றிக்கான, ஒரு வர்க்க பேதமற்ற சமுதாயத்தை நிர்மாணிப்பதற்கான போராட்டத்தின் நலன்களுக்கு இது உட்பட்டதேயாகும்.

முதலாளித்துவத்தின் கீழுள்ள தேசிய உறவுகளின் மற்றொரு முக்கியமான பக்கம், காலனியாதிக்கத்தின் தோற்றமாகும். முதலாளித்துவ சகாப்தத்திற்கு முன்னும்கூட, பலவீனமான மக்கள் வலிமை கொண்டவர்களால் படையெடுக்கப்பட்டும், அடிமைப்படுத்தப்பட்டும் வந்துள்ளனர். "முதலாளித்துவத்தின் சமீபத்திய கட்டத்திற்கு முன்பும், முதலாளித்துவத்திற்கு முன்பேகூட",* காலனியாதிக்கக் கொள்கை நிலவிவந்துள்ளது. ரோமானியர்களின் "காலனியாதிக்கக் கொள்கையை" அவர் உதாரணமாக எடுத்துக்காட்டினார். ஆனால், அடிமைப்படுத்துதலின் அளவு, முதலாளித்துவ காலகட்டத்தில் அளப்பரிய அளவுக்கு

* வி. இ. லெனின், "நூல் திரட்டு", தொகுதி 22, பக். 260.

அதிகமானதாக இருந்தது. உலகின் மிகவும் பின்தங்கிய பிரதேசங்களில், முதலாளித்துவத்தின் தோற்றமும், அதன் ஊடுருவலும், மனிதகுல வரலாற்றில் பேரழிவால் பொறிக்கப்பட்டுள்ளன. கொடூரமான கொள்ளையின், படுநாசம் மற்றும் சுரண்டலின் பல்வேறு வடிவங்கள், முதலாளித்துவத்தால் திட்டமிடப்பட்டன. அத்திட்டங்களே, பல நூற்றுண்டுகளாக இப்பிரதேசங்கள் பின் தங்கிய நிலையில் நீடிப்பதற்கான அடிப்படையாகி விட்டன. ஆசிய, ஆப்பிரிக்க, லத்தீன் அமெரிக்க மக்களின் வரலாற்றை எடுத்துப் பார்த்தால், அங்கு நிலவுடமையை பாதுகாப்பதிலும் புராதன இனக்குழு உறவுகளை அப்படியே வைத்திருக்கவும் முதலாளித்துவம் அதன் கையாளாக இருந்தது. மனிதகுல முன்னேற்றத்தின் பொதுவான நடைமுறையிலிருந்து பல நாடுகளும், கண்டங்களுமே கூட இதனுல் விலக்கி வைக்கப்பட்டிருந்தன. அந்த அளவிற்கு தேசிய, சர்வதேசிய நடப்புக்களை இது தாமதப்படுத்தியது.

காலனி ஆதிக்க சகாப்தத்தின் துவக்கத்தில், அதாவது 16-வது நூற்றுண்டின் துவக்கத்தில், இனவெறித் தத்துவங்கள் முதன் முதலாக தோன்றலாயின. அதிலிருந்து பின்தங்கிய மக்களின் தாழ்நிலையை ஊகித்தறியலாம். கிருத்துவ மத பீடமும் அரசுகளும், பூர்ஷ்வா சட்டமும் இனவெறிக் கொள்கையை புனிதப்படுத்தத் துவங்கி விட்டன. பூர்ஷ்வா சித்தாந்தம் அதற்குப் பின் துணையாக நின்றது. அவர்களது பொருளாயத, அகவயக் கலாசாரத்தை வளர்க்க தங்களது திறமையை பயன்படுத்தவும்கூட, அடிமைப்படுத்தப்பட்ட மக்கள் அனுமதிக்கப்படவில்லை. அதற்குரிய வாய்ப்புகள் அவர்களுக்கு அளிக்கப்படவில்லை. இனவெறிப் போக்கினை பூர்ஷ்வா சித்தாந்தம் ஆதரித்தது.

முதலாளித்துவத்தின் தோற்றத்தின் பொழுது, நிலவிய தேசியப் பிரச்சினையின் சாராம்சம் பற்றிய ஒரு பொதுவான உருவரை இதுவே.

தேசியப் பிரச்சினையின் உள்ளடக்கம் மாருததல்ல என்பதற்கான காரணத்தை இதிலிருந்து அறியலாம்.

ஆஸ்திரியாவின் உதாரணத்தை எடுத்துக்கொள்வோம். 1848 முதலாளித்துவப் புரட்சியின் ஆரம்ப கட்டத்தில், அது பல ஐரோப்பிய நாடுகளை வளைத்திருந்தபோதில் செக்களும், ஹங்கேரியன்களும் தேசிய சுதந்திரத்திற்காகப் போராடினர். செக் இனமக்கள் தங்கள் முயற்சியில் தோல்வியடைந்தனர். ஏனென்றால், ஐரோப்பாவில் அன்றைய போலீஸ்காரனாக விளங்கிய, ரஷ்ய ஜாரிடமிருந்து பெற்ற உதவியின் மீது அவர்கள் தங்கள் எதிர்காலத்தையே பணயம் வைத்திருந்தனர். உண்மையில் அவர்கள் அன்றைய ரஷ்ய ஜாரின் கூட்டாளியாகவே மாறிவிட்டனர். இதன் விளைவாக, அவர்களது தேசிய இயக்கம், தங்களது புரட்சியின் வெற்றிக்காக முயன்று கொண்டிருந்த இதர பல தேசிய இன மக்களின் முற்போக்கான போராட்டத்தை எதிர்த்து மோதியது. மறுபுறம், ஹங்கேரிய மக்களின் போராட்டம் ஜாரிஸ ரஷ்யாவினால் ரத்த வெள்ளத்தில் மூழ்கடிக்கப்பட்டது.

அதன் பிறகு மிக விரைவிலேயே, ஆஸ்திரியாவில் தங்களுக்கு ஒரு மேலாதிக்கமான இடம் உண்டு எனக்கோரி வந்த ஜெர்மானியர்கள், ஒரு சுதந்திரமான தேசிய அரசினை அமைத்தனர். இது ருஷ்யாவுடன் சேர்ந்து கொண்டு மத்திய ஐரோப்பியா, கிழக்கு ஐரோப்பா ஆகியவற்றைச் சேர்ந்த மிகச் சிறிய நாடுகளது மக்களின் தேசிய நிலை நிற்பிற்கு அபாயம் விளைத்தது. இது அலாதியான சூழ்நிலையை உருவாக்கியது என்று லெனின் சுட்டிக் காட்டினார்: முதலில் ஹங்கேரியன்களும், பிறகு செக் இன மக்களும் தங்களது பிரிவினைக் கோரிக்கை சம்பந்தமான அனைத்து எண்ணங்களையும் கைவிட்டனர். ஆஸ்திரியாவின் ஒருமைப்பாட்டையும் அதனுடன் தங்களது ஒற்றுமையினையும் வலியுறுத்தி பிரச்சாரம் நடத்தினர்— குறிப்பாயும் அவர்கள் தங்களது தேசிய நிலை நிற்பை பாதுகாக்க விரும்பினர். ஏனென்றால், அது மிகவும் கொள்ளைக்காரத்தனம் கொண்ட, வலிமையற்ற வேறு அண்டை அயலவர்களால் அழித்தொழிக்கப்படக் கூடிய நிலைமையில் இருந்தது.

முதலாளித்துவ-ஜனநாயகப் புரட்சிகளின் சகாப்தத்திற்குப் பின் சம்பந்தப்பட்ட தேசிய இயக்கங்கள், மேற்கு ஐரோப்பாவைவிட கிழக்கு ஐரோப்பாவில் மிகவும் காலங் கடந்த பின்னரே தோன்றிய நிலையில் போலந்து, ரஷ்யாவினுலும், ஆஸ்திரியா, பிரஷ்யாவினுலும் ஒடுக்கு முறைக்குள்ளாக்கப்பட்டது—அவை அதன் பிரதேசங்களை பங்கு போட்டுக் கொண்டன—அதன் பிறகு 19-வது நூற்ருண்டில் ஏற்பட்ட முதலாளித்துவப் புரட்சிகளில் இந்த ஒரே ஒரு நாடுதான் தொடர்ந்து ஈர்க்கப்பட்டது. முதலாளித்துவ ஜனநாயக-விவசாயப் புரட்சி, அங்கு தேசிய இனப்பிரச்சினையுடன் மிகவும் நெருக்கமாக இணைக்கப்பட்டிருந்தது. தேசிய விடுதலைக்கான போலந்து மக்களின் அர்ப்பணிப்பான போராட்டத்தை மார்க்சும் எங்கெல்சும் ஆதரித்தனர். அப்போராட்டத்தில், போலந்தின் மேற்குடிகள், முதலாளிகளும், உழைக்கும் மக்களும் எந்தப் பக்கம் இருந்தனரோ,அப்பக்கமே அணி திரண்டனர்.

ஆனுல், 1890-ம் ஆண்டின் இறுதிக்குள் ஐரோப்பாவில் புரட்சிகர புயல்கள் தணிந்தன. தன்னை சோஷலிஸ்ட் என்றும், மார்க்ஸிஸ்ட் என்றும்கூட வெளிப்படையாக அறிவித்த போலந்து சோஷலிஸ்ட் கட்சி, போலந்தின் சுதந்திரத்திற்காக ரஷ்யாவை எதிர்த்துப் போராட வேண்டுமென தொடர்ச்சியாக மக்களை அறைகூவி அழைத்தது. ஆனுல் அப்பொழுது அக்கட்சி, போலந்து, ரஷ்ய தொழிலாளர்களின் கூட்டுப் போராட்டத்திற்கு அழைப்பு விடவில்லை. மார்க்சீய உணர்வுக்கு இது விரோதமானதென்று உண்மையான மார்க்சீயவாதிகளும், குறிப்பாக லெனினும் அக்கொள்கையை எதிர்த்தனர். தேசியப் பிரச்சினையின் சரித்திர ரீதியான, வர்க்க ரீதியான பின்னணியில் ஏற்பட்ட மாற்றங்களுக்கு இது மாறுபட்டது என்று அத்தவறுன கொள்கையை எதிர்த்தனர். எதில் மாற்றம் ஏற்பட்டுவிட்டது? சகாப்தத்தின் உள்ளடக்கத்திலேயே அந்த மாற்றம் துவங்கிவிட்டது. ஐரோப்பாவில் புரட்களின் காலகட்டம் முடிவுக்கு வந்துவிட்டது. பிற்போக்கு வெற்றி

பவனி வந்து கொண்டிருந்தது. ஏறுமுக முதலாளித்துவம், சீரழிந்து கொண்டிருந்த முதலாளித்துவத்திற்கு வழிவிட்டு விட்டது. போலந்திலிருந்த சரித்திர ரீதியான சூழ்நிலையும்கூட மாறிவிட்டது. ஐரோப்பிய ஜனநாயகத்தின் காவல் அரணுக அது நீண்டநாள் நிலைத்திருக்க முடியவில்லை. மக்களோடு சேர்ந்துநின்று ஆரம்பத்தில் போலந்தின் ஆதிக்க வர்க்கங்கள் தேசிய சுதந்திரத்திற்காகப் போராடின. ஆனுல் அவை இப்பொழுது, ஒடுக்கும் நாடுகளின் ஆளும் வர்க்கங்களுடன் உண்மையில் கை கோர்த்துவிட்டன—ருஷ்யா, ஜெர்மனி, ஆஸ்த்திரியா போன்றவைகளே அவ்வொடுக்கும் நாடுகளாக அக்காலத்தில் திகழ்ந்தன.

19-வது நூற்றுண்டின் இறுதியில், ருஷ்யாவிலிருந்து போலந்தைப் பிரிப்பதுபற்றிய முயற்சி, மிகத் தவருக திட்டமிடப்பட்டிருந்தது. ஏனெனில், போலந்து பிரச்சினையின் சரித்திர ரீதியான கட்டமைப்பு மாறிவிட்டது. அதன் முன் முயற்சியாளர்கள் வர்க்க நிலையை கைவிட்டு விட்டனர். குறுகிய தேசிய வெறியைக் கொண்டு அதனை அழித்தொழித்து அரசியல் போராட்ட ஒற்றுமையை சீர்குலைத்தனர். போலந்து சோஷலிஸ்ட் கட்சி அதன் ஆரம்ப மார்க்சிய கோஷங்களின்பால் பற்றுதலை வெளிப்படுத்தும் முறையில், ருஷ்யாவிலிருந்து போலந்தைப் பிரிப்பதற்கான போராட்டத்தைத் தொடர வேண்டிய அவசியத்தை வலியுறுத்தியது. அது ஜாரிஸத்தை பலவீனப்படுத்தும் என்றும் அக்கட்சி கூறியது. ஆனுல், ஜார் மன்னனை கீழிறக்கும் பொறுப்பை, ரஷ்ய தொழிலாளர்களிடம் மட்டுமே விட்டுவிட்டது. புதிய மிகவும் முக்கியமான உண்மையை, இம்முறை ருஷ்யாவில் ஒருபுரட்சி பக்குவமடைந்துவிட்டது என்பதையும் புரட்சியின் மையமாக, வார்சாவைவிட பீட்டர்ஸ்பர்க் மாறி விட்டது என்பதையும், இதன் தேசியவாதத் தலைவர்கள் அங்கீகரிக்க மறுத்துவிட்டனர். போலந்து மக்களின் தேசிய விடுதலை, போலந்தில் தீர்க்கக்கூடிய பிரச்சினையாக இனி இல்லை என்பதையும், ஆனுல் அது போலந்து மற்றும் ருஷ்ய தொழிலாளர்களது புரட்சிகர ஒற்றுமையின் மூலம் மட்டுமே சாத்தியம் என்பதையும், எல்லாவற்றிற்கும் முதலாவதாக

ருஷ்யப் புரட்சியின் வெற்றியின் மூலம் மட்டுமே அது சாத்தியம் என்பதையும், அவர்கள் அங்கீகரிக்க மறுத்து விட்டனர். தேசிய சுதந்திரம் பற்றிய அதன் முதலாளித்துவ-ஜனநாயகக் கருத்தோட்டத்தின் விளைவாக, தொழிலாளி வர்க்கத்தின் ஜீவாதார நலன்களை, போலந்து சோஷலிஸ்ட் கட்சி பலியிட்டுக் கொண்டிருந்தது என லெனின் தெளிவாக எடுத்துக் கூறினார்.

ஏறுமுக முதலாளித்துவ கட்டத்தில், தேசியப் பிரச்சினையின் சரித்திர ரீதியான உள்ளடக்கம் மாறியிருந்த போதிலும், பெரும் வல்லரசுகளால் காலனிகள் கைப்பற்றப் பட்டிருந்த போதிலும், மிகவும் நாகரீகமடைந்த உலகில் ஒரு பகுதி மக்களால் வேறு பகுதி மக்கள் அதேபோன்று அடிமைப்படுத்தப்பட்டாலும் இவை தேசியப் பிரச்சினை இன்னமும்கூட ஒரு பெருமளவிற்கு **உள்நாட்டுப் பிரச்சினையாகவே** இருந்தது. மேலும், முதலாளித்துவத்தின் இருவகை போக்குகளின் சூழலில், சர்வதேசியத்தின்பாலான தேசியத்தின் உறவு, தேசிய நட்புக்களுக்கே முன்னுரிமை அளித்தது. அவை சர்வதேசியமாக மாறுவதற்கு முன்னால், தேசியமாக இருக்க உரிமை படைத்தவை மட்டுமல்ல, கடமையுடையவையுமாகும் என்று தேசங்களைப் பற்றி எங்கெல்ஸ் குறிப்பிட்டார்.*

ஏகாதிபத்திய காலகட்டத்தில் சூழ்நிலை மாறிவிட்டது. தேசியப் பிரச்சினை ஒரு **உலகப் பிரச்சினையாக** மாறிவிட்டது. ஏகாதிபத்தியம் தேசிய அரசின் அடிப்படையினை பலவீனப் படுத்தியது என்று லெனின் கருதினார். தேசிய ரீதியில் அதனை தனிமைப்படுத்தி வைக்க அது விரும்பியது. குறிப்பாக, வலிமைமிக்க அரசுகளிடமிருந்து தனிமைப் படுத்த விரும்பியது ஏகாதிபத்தியம். அப்போதுதான், அந்நாட்டின் உள்நாட்டுச் சந்தையில் ஊடுருவ முடியு மென்றும், அதன் மக்களை சுரண்ட முடியுமென்றும் நம்பியது. ஆனால், அது அர்த்தமற்றதாகி விட்டது என

---

* மார்க்ஸ்-எங்கெல்ஸ், ''நூல்கள்'', தொகுதி 35, பக். 271.

லெனின் ஆய்ந்துரைத்தார். அதன் பொருளாதார மற்றும் அரசியல் தன்மையின் காரணமாக, ஏகாதிபத்திய சகாப் தத்தின் முதலாளித்துவம், தேசிய அரசு என்ற அதன் கட்டமைப்பை கடந்து காஸ்மாபாலிட்டனுக மாறுகின்றது. அத்தகையதொரு பொருளாதாரத்தின்மீதே அது சார்ந் திருக்கின்றது. அதற்கேற்ப ராணுவத்துறையைப் பொறுத்த வரை, மேலும் பல நாடுகளை அடிமைப்படுத்தும் முயற்சி தொடர்கின்றது. ஒடுக்கும் நாடுகள், ஒடுக்கப்பட்ட நாடுகள் என்ற பிரிவினை ஏற்பட்டுவிட்டது, தேசிய இனப் பிரச்சினையில் ஏகாதிபத்தியத்தின் சாராம்சமே இதுதான் என்று அதனால்தான் லெனின் கூறினார். விரல்விட்டு எண்ணத்தக்க வல்லரசுகளால் மேற்கொள்ளப்பட்ட ஒடுக்கு முறை உறுதியாக அதிகரித்துக் கொண்டிருந்தது என்பதை லெனின் அழுத்தமாக எடுத்துக்கூறினார்.

ஏகாதிபத்திய சகாப்தத்தில், ஒரு மிகப்பெரிய காலனி சாம்ராஜ்யத்தை முதலாளித்துவம் உருவாக்கியது. காலனி நாட்டு மக்களை சுரண்டுவதிலிருந்து கொள்ளை லாபங்களைப் பெற்று அது செழித்தது. தேசிய இனப் பிரச்சினை, ஒரு தேசிய-காலனிப் பிரச்சினையாக மாறியது. ஏகாதிபத்தியம், உள்ளடக்கத்தில், ஒரு புதிய சரித்திர ரீதியான அடிப் படையின்மீது நாடுகளை ஒடுக்குகிறது என்பதை குறித்தது.

தேசிய இயக்கங்களின் இருப்பிடம் மேற்கு ஐரோப்பாவி லிருந்து, கிழக்கு ஐரோப்பாவிற்கு மாறிவிட்டது. ஆசியா விலெழுந்த பேரெழுச்சியுடன் அது இரண்டறக் கலந்தது. ஏகாதிபத்திய சகாப்தத்தின்கீழ், தேசியப் பிரச்சினையின் உள்ளடக்கத்தில் புதிய ஆதார சக்தியாக இது விளங்கியது. 1905–1907 காலகட்டத்தில் முதலாவது ருஷ்யப்புரட்சி நிகழ்ந்திருந்ததும், உலக புரட்சிகர இயக்கத்தின் மையமாக ருஷ்யா மாறியிருந்ததும் இக்காலகட்டத்தில் நிதர்சன உண்மையாகும். அது குறிப்பிடத்தக்க முறையில் மகத்தான உத்வேகத்தை, இப்பிரதேசங்களிலிருந்த தேசிய இயக்கங் களின் வளர்ச்சிக்கு அளித்தது. 1916-ல் லெனின் எழுதிய தாவது, ''மேற்கத்திய நாடுகளில், தேசிய இயக்கம் என்பது

ஒரு தொலை தூரக் கடந்தகால விஷயமாக இருக்கிறது. இங்கிலாந்து, பிரான்ஸ், ஜெர்மனி முதலிய நாடுகளில் ''தந்தையர் நாடு'' என்ற கோஷம் காலம் கடந்ததாக இருக்கிறது. அது அதன் சரித்திர ரீதியான பாத்திரத்தை வகித்து முடித்துவிட்டது. இங்கே இனி எவ்வித முற்போக்கான அம்சத்தையும் தேசிய இயக்கம் அளிக்க முடியாது. ஒரு புதிய பொருளாதார மற்றும் அரசியல் வாழ்க்கை என்ற முறையில் எதனையும் புதிய தலைமுறைக்கு அளித்து மேன்மைப்படுத்தவும் இயலாது......ஆனால், கிழக்கு ஐரோப்பாவிலுள்ள நிலைமை இதிலிருந்து வேறுபட்டதாகும். உதாரணமாக, உக்ரேனியர்கள், பிலோ ரஷ்யர்களை எடுத்துக் கொள்வோம், அங்கே இன்னமும் தேசிய இயக்கம் நிறைவு பெறவில்லை என்று யார் மறுக்கக் கூடும்? ஒரு பொறுப்பற்ற பகற்கனவாள் மட்டுமே அவ்வாறு மறுக்கக்கூடும். அவர்களது தாய்மொழியையும், இலக்கியத்தையும் முழுமையாக பயன்படுத்துவதில், அம்மக்களின் எழுச்சி... அங்கே **இன்னமும்** முன்னேக்கி சென்றுகொண்டிருக்கின்றது.''*

ஏகாதிபத்திய காலனி ஆதிக்க அமைப்பினைப் பற்றியும் முதலாளித்துவ சமுதாயத்தில் தேசிய உறவுகளின்மீதும், தேசங்களின் வளர்ச்சியின்மீதும் அதன் பாதிப்பினைப் பற்றியும், லெனின் ஒரு முழுமையான பகுப்பாய்வினைச் செய்துள்ளார். **ஏகாதிபத்தியம் முதலாளித்துவத்தின் உச்ச கட்டம்** என்ற அவரது நூலில் இம்முழுமையான பகுப்பாய்வினைச் செய்துள்ளார். வல்லரசுகள் காலனி உடைமைகள் பட்டியலை பின்வரும் அட்டவணையில் அளித்துள்ளார். (மக்கட் தொகையும், சதுர கிலோ மீட்டர் பரப்பளவுகளும் மில்லியன் வரிசைக் கணக்கில் கொடுக்கப்பட்டுள்ளன):

---

* வி. இ. லெனின், ''நூல் திரட்டு'', தொகுதி 23, பக். 39.

வல்லரசுகளின் காலனி உடைமைகள்*

	காலனிகள்		சாம்ராஜ்ய நாடுகள்	மொத்தம்
	1876 பரப்பளவு-மக்கட்த் தொகை	1914 ப—ம	1914 ப—ம	1914 ப—ம
கிரேட் பிரிட்டன்	22.5—251.9	33.5—393.5	0.3— 46.5	33.8—440.0
ரஷ்யா	17.0— 15.9	17.4— 33.2	5.4—136.2	22.8—169.4
பிரான்ஸ்	0.9 — 6.0	10.6— 55.5	0.5— 39 6	11.1— 95.1
ஜெர்மனி	— —	2.9— 12.3	0.5— 64.9	3 4— 77.2
அமெரிக்கா	— —	0.3— 9.7	9.4— 97.0	9.7—106.7
ஜப்பான்	— —	0.3— 19.2	0.4— 53.0	0.7— 72.2
ஆறு வல்லரசுகளின் மொத்தம்	40.4—273.8	65.0—523.4	16.5—437.2	81.5—960.6
இதர வல்லரசுக் காலனிகள் (பெல்ஜியம், ஹாலந்து போன்றவை)				9.9— 45.3
அரைக் காலனி நாடுகள் (பெர்சியா, சைனு, துருக்கி)				14.5—361.2
இதர நாடுகள்				28.0—289.9
உலக ரீதியில் மொத்தம்:......				133.9—1,657.0

* வி. இ. லெனின், "நூல் திரட்டு", தொகுதி 22, பக். 258.

ஆசிய மக்களின் பேரெழுச்சிக்கு, லெனின் விசேட முக்கியத்துவமளித்தார். "உலக முதலாளித்துவமும், ரஷ்யாவில் ஏற்பட்ட 1905 இயக்கமும், ஆசியாவை இறுதியாக கிளர்ந்தெழச் செய்துவிட்டன"* என 1913 மே மாதத்தில் லெனின் எழுதினர். எங்கு நோக்கினும், தேசிய விடுதலை இயக்கத்தின் ஒரு படுவேக எழுச்சி உலகமெங்கணும் காணப்பட்டது. அதன் "எதிரொலி" ஐரோப்பாவிலும் பரவியது என லெனின் குறிப்பிட்டார்.**

தேசியப் பிரச்சினையின் உள்ளடக்கத்தில் காணப்பட்ட முதலாளித்துவத்தின்இருவகைப்போக்குகளின்செயல்பாடும், தேசிய மற்றும் சர்வதேசியத்தின் இணையுறவும், ஏகாதிபத்திய காலகட்டத்தில் குறிப்பிடத்தக்க மாற்றங்களை அடைந்தன. உற்பத்தி சக்திகளின் வளர்ச்சியும், பரிவர்த்தனையின் தேவைகளும், மக்கள் இயல்பாகவே சங்கமிக்கும் ஒரு போக்கை துரிதப்படுத்தின. தேசியத் தடைகளை அழித்தன. இந்தச் சங்கமிப்பை, பலாத்காரத்தின் மூலம் முதலாளித்துவம் திணித்தது. இதனல், சமத்துவமான கூட்டுறவிற்கு பதிலாக, வலிய தேசிய இனங்கள் எளிய மக்களை அடிமைப்படுத்துதலும், மேலாதிக்கமும், ஒடுக்குமுறையும், சூறையாடலும் நிகழ்ந்தன. மிகப்பெரிய நாகரிகமடைந்த நாடுகளுக்கிடையிலான தேசிய உறவுகளும்கூட, சமரசத்திற்கிடமற்ற எதிர்ப்பு என்ற அளவிற்கு தாழ்ந்துவிட்டன. இரத்த வெறிகொண்ட யுத்தங்களில் சென்று முடிந்தன.

தேசியப் பிரச்சினையில் முதலாளித்துவத்தின் முதலாவது போக்கினது செயல்பாடு, நடைமுறையில் அப்படியே முரண்பாடானதாக மாறியிருந்தது (அதாவது முதலாவது போக்கு என்பது, மக்களின் எழுச்சியும், வளர்ச்சியுமாகும். மற்றும், அவர்களது தேசியத் அரசுத்துவமும் சுயாதிபத்திய உரிமையும் உருவகப்படுதலும், உறுதிப்படுதலு

* வி. இ. லெனின், "நூல் திரட்டு", தொகுதி 19, பக். 86.

** வி. இ. லெனின், "நூல் திரட்டு", தொகுதி 18, பக். 584.

மாகும்). ஏகாதிபத்திய கட்டத்தில், தேசிய வளர்ச்சிப் போக்குகள் மிகவும் சுணக்கமாகவே இருந்தன—பொதுவான சமுதாய வளர்ச்சியின் வேகமுடுக்கத்துடன் ஒப்பிடுகையில்—அவ்வாறு காட்சியளித்தன. மற்றும் பல சந்தர்ப்பங்களில், அவற்றின் வளர்ச்சிப் போக்குகள் சிதைக்கப்பட்டன (ஒருதலைப்பட்சமான பொருளாதார வளர்ச்சி, கலாசாரத்தில் மிகவும் பிற்போக்கான போக்குகள் தலையெடுத்த நிலை, ஆதிக்க வர்க்கங்களால் ஏறத்தாழ முற்றிலுமாக கலாசாரம் ஏகபோகமாக்கிக் கொள்ளப்பட்ட நிலை முதலியன).

தேசிய அரசுத்துவத்தை எடுத்துக்கொள்வோம். ஆஸ்த்திரியாவில் முதலாளித்துவப் புரட்சியைத் தொடர்ந்து (1840–1867), பொதுவான முதலாளித்துவ வளர்ச்சி எதுவும் ஏற்படவில்லை. அல்லது சமுதாயக் களத்தில் பாய்ச்சல் வேகத்தைத் தூண்டும் புதிய தேசிய ரீதியில்-சுதந்திர அரசுகளை தோற்றுவிக்கக் கூடியதான தேசிய வளர்ச்சிப் போக்குகள் எதுவும் அச்சிறிய மக்களினங்களிடம் ஏற்படவில்லை.

முதலாளித்துவத்தின் மிகவும் முரண்பட்ட வளர்ச்சி என்ற நோக்கிலிருந்து, தேசிய இயக்கத்தில் மந்த கதியினால் இந்நிலை ஏற்பட்டது என்றுகூட கூறலாம். ஆனால் அதற்குமேல் இதன் விளைவாக பல தேசிய இனங்கள் கலந்து வாழும் நாடுகளில், புரட்சிகர மாற்றம் என்பது பிரதான பிரச்சினையாக மாறிவிட்டது. பொதுவாக சர்வ தேசக் காரணிகளின் அழுத்தமும், குறிப்பாக உலகச் சூழ்நிலையின் அழுத்தமும், மகத்தான சக்தியாக மாறி விட்டிருந்தன. எனவே, தேசிய இயக்கப் போக்குகளின் மீது அவற்றின் செல்வாக்கும் மேலதிகமாக இருந்தது.

ஏகாதிபத்தியம், தேசிய முரண்பாடுகளை மிகமிகத் தீவிரமாக உக்கிரமாக்கியது. தேசிய இயக்கப் போக்குகளை அது மந்தப்படுத்தியது. மக்களின் சுதந்திர வேட்கையை அடக்கியது. தேசிய அரசுகளின் உருவாக்கத்தை அது தடுத்தது. ஏகாதிபத்தியம் தேசியத் தடைகளை உடைத்

தெறிந்தது. தேசங்களை சின்னுபின்னப்படுத்தியது. தன் வயமாக்களை உந்தித் தள்ளியது. அதேசமயம் அது, வேறுபட்ட தேசிய இனங்களின் உழைக்கும் மக்களுக்கிடையில் உறவுகள் ஏற்படுவதைத் தடுக்க, தன்னுலான அனைத்தையும் செய்தது. நாடுகளுக்கிடையிலும், மக்களுக்கிடையிலும் திட்டமிட்ட மோதல்களைத் தூண்டிவிட்டது.

தேசியப் பிரச்சினையின் உள்ளடக்கத்தில் ஏகாதிபத்தியம் புகுத்திய முரண்பாடுகள், மக்களின் வாழ்க்கையில் அரசுத்துவம் வகித்த பங்கினை மாற்றியது. மக்களின் ஆதரவுடன் ஆட்சிக்கு வந்த முதலாளித்துவம் ஒரு கட்டத்தில் ஜனநாயக கோட்பாடுகளைப் புகுத்தியது—சர்வஜன வாக்குரிமை, பாராளுமன்ற முறை போன்றவை. ஆனுல் ஏகபோகத்திற்கு முந்திய முதலாளித்துவத்தை மாற்றீடுசெய்ய, ஏகாதிபத்தியம் இவை அனைத்தையும் தள்ளிவிட்டு, மிருகத்தனமான பிற்போக்குப் பாதையைப் பின்பற்றியது. பூர்ஷ்வாக்கள் உழைக்கும் மக்களை விட்டு வெகுதூரம் விலகிச் சென்று விட்டனர். அவர்களது ஏகபோகப் பகுதி, பூர்ஷ்வாக்களின் மத்தியதரப் பகுதியிலிருந்தேகூட வெகு தூரம் விலகிச்சென்று விட்டது. இதன் விளைவாக, தேசம் இரண்டாக பிளந்தது. பிற்போக்கான முதலாளிகள் ஒருமுனையில் நின்றனர். ஏகபோகங்கள், தொழில் வர்த்தக இணைப்புக்கள் அரசதிகாரம் அப்பிரிவின் தலைமையில் இருந்தன. மறுபுறம், பெரும்பான்மையான மக்கள்திரள் அதிலிருந்த முற்போக்கான சக்திகள்— முதலாவதாக அறியாது அரசாங்கத்தின் ஜனநாயக அமைப்புகள் மூலம், ஏகபோகத்தை எதிர்த்துப் போராட முயன்றனர். ஆனுல், வெகு விரைவில் ஏகபோகம், அரசாங்க அதிகாரம் முழுமையினையும் தங்களுடையதாக்கிக் கொண்டது. அதன் மூலம், அரசாங்க ஏகபோக முதலாளித்துவம் தோன்றலாயிற்று.

ஏகாதிபத்திய சகாப்தத்தில், தேசங்கள் சமுதாய ரீதியில் பல வேற்றியல்புகளைக் கொண்டிருந்தன என்பது மட்டுமல்ல. ஆனுல் அத்துடன் கலாசார ரீதியில் இருவகைப் போக்கினைக் கொண்டிருந்தன. தேசியவாதம் மற்றும் பிற்

போக்கு என்ற பதாகையின்கீழ், பூர்ஷ்வா வர்க்கமும் அதைச் சார்ந்த மத்தியதரப் பகுதியும் ஒன்றுபட்டும் நின்றன. அதே சமயம், தொழிலாளி வர்க்கமும் பெருகி வந்த இதர உழைக்கும் மக்களும், சர்வதேசியம் ஜனநாயகம் என்ற பதாகையின்கீழ் ஒன்று திரண்டனர்.

நவீன முதலாளித்துவ சமுதாயத்தின் இரு பிரதான வர்க்கங்களான பாட்டாளி வர்க்கத்தினதும், பூர்ஷ்வா வர்க்கத்தினதும் முரண்நிலை அம்சங்களை லெனின் ஆராய்ந்தார். ஒவ்வொரு தேசத்தினதும் தேசிய கலாசாரத்தில் காணப்பட்ட இருவகைப் போக்குகளையும் அவர் பரிசீலித்தார்.

ஏகாதிபத்திய சூழ்நிலைமைகளின்கீழ் காணப்படும் தேசங்களின் இருவகைத் தன்மை என்பதின் பொருள், தேசங்கள் வரலாற்றுக் கட்டத்தை கடந்து செல்லத் துவங்கி விட்டன என்பதல்ல. தேசங்களையும், தேசிய இனத்தினையும் ஒரு ''காலங்கடந்த காழ்ப்புணர்வாக'' பால் லஃபார்க்கும் (Paul Lafargue), அவரது ஆதரவாளர்களும் சித்திரித்தனர். அதனை, 1866-ல் மார்க்ஸ் கேலி செய்தார். "விபர்யாடு" குழுவினர் (Vperyod) தேசங்களின் சரித்திரரீதியான தன்மை பற்றி எதையுமே புரிந்திருக்கவில்லை என்று 1916-ல் லெனின் குறிப்பிட்டார்.

வர்க்க ரீதியான அம்சத்தோடு தொடர்புபடுத்துகையில், தேசியப் பிரச்சினையின் முக்கியத்துவத்தை மிகைப் படுத்துதலுக்கு எதிராக லெனின் எச்சரித்தார். அதே சமயத்தில் அவர், குறிப்பாக ஒடுக்கப்பட்ட மக்கள் விஷயத்தில், அதனை குறைத்து மதிப்பிடலுக்கு எதிராகவும் எச்சரித்துள்ளார். உதாரணமாக, முதலாவது உலக யுத்தத்தின் ஆரம்பத்தில், ருஷ்யாவின் புரட்சிகர மார்க்சியவாதிகளைப் பொறுத்து அவர் கூறியதாவது: ''தேசியப் பிரச்சினையின் அளப்பரிய முக்கியத்துவத்தை மறப்பதென்பது......... அழகல்ல.''* ருஷ்யா, ஒரு ''மக்களினங்களின் சிறைக்கூடமாக'' இருந்ததினால் மாத்திரமல்ல, தேசிய இனப் பிரச்சினை

* வி. இ. லெனின், ''நூல் திரட்டு'', தொகுதி 21, பக். 102.

யின்பால் ருஷ்ய தொழிலாளி வர்க்கம் நடத்திய போராட்டத்தினுலும், கிழக்கத்திய ஒடுக்கப்பட்ட மக்களின் பேரெழுச்சியின் மீது அது ஒரு விசேட முத்திரையைப் பதித்தது. முதலாளித்துவப் பொது நெருக்கடியின் முதலாவது கட்டம் ஏற்கனவே துவங்கிவிட்ட பொழுது, 1916-ல் சிதைவுற்றுவரும் முதலாளித்துவத்தின் கால கட்டத்தில் தேசியப் பிரச்சினையின் முக்கியத்துவத்தை லெனின் மீண்டும் வலியுறுத்தினுர். அதனைப் பற்றி அவர் பின்வருமாறு கூறினுர், "அது தானுகவே மிக மிக முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தது. அதே போன்று, ஏகாதிபத்தியத்துடனுன அதன் உறவு விஷயத்திலும் மிக மிக முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தது." *

ஏகாதிபத்திய கால கட்டத்தில் தேசியப் பிரச்சினை, ஒரு வாழ்க்கைத் துறையாகவும் வளர்ச்சியாகவும் திகழ்ந்தது. ஒரு முற்போக்கான வளர்ச்சியின் முழு சகாப்தமும் அதனை இன்னும் எதிர்கொண்டிருந்தது. மேலும் இது தொழிலாளி வர்க்கத்தினுல் உறுதிப்படுத்தப்படும். ஏன் அவ்வளவு அதிகமான அக்கறையையும், கவனத்தையும் அதன்பால் லெனின் செலுத்தினுர் என்பதற்கான காரணத்தை இதன்மூலம் நாம் அறியலாம். சோஷலிசத்தை முன்கொண்டு செல்வது என்ற குறிக்கோளோடு தேசிய இயக்கங்களை பயன்படுத்துவது என்ற ஒரு பிரச்சினை மிகவும் முக்கியமானதாக இருந்தது. உதாரணமாக, தேசிய விடுதலை இயக்கங்கள் ஒரு "நடப்பு வாழ்வின் முற்போக்கான எதார்த்தமாகும்" என்று லெனின் குறிப்பிட்டதை சான்ருகக் கொள்ளலாம். தொழிலாளி வர்க்கத்தின் வர்க்கப் போராட்டத்துடன் அவை இரண்டறக் கலந்து, காலனி நாடுகளிலும், வளர்ச்சி பெற்ற நாகரீக நாடுகளிலும் சோஷலிசப் புரட்சியின் வெற்றிக்குப் பாதை சமைக்கின்றன என்று லெனின் சுட்டிக் காட்டினுர். ஆசியாவின் பேரெழுச்சியும், ஐரோப்பாவில் ஆட்சி அதிகாரத்திற்கான தொழிலாளி வர்க்கப் போராட்டத்தின் ஆரம்பமும், உலக வரலாற்றில் ஒரு புதிய கட்டத்தின் துவக்கமாக இருந்தது என்று லெனின் கூறினுர்.

* வி. இ. லெனின், "நூல் திரட்டு", தொகுதி 22, பக். 268.

அத்தியாயம்-2

தொழிலாளி வர்க்கமும் தேசியப் பிரச்சினையும். முதலாளித்துவத்தின் கீழ் அதன் தீர்விற்கான வரம்புகள்

தேசியப் பிரச்சினையின் தீர்வில், தொழிலாளி வர்க்கம் தீர்மானகரமான பாத்திரத்தை வகிக்கும் என மார்க்சும், எங்கெல்சும் எழுதினர். அனைத்து நாடுகளிலும் தொழிலாளி வர்க்கம் ஒரே விதமான நலன்களைக் கொண்டுள்ளது. எனவே அது, இயல்பாகவே தேசிய காழ்ப்புணர்விலிருந்து விடுபட்டதாகும். அந்த வர்க்கம் மட்டுமே ''தேசிய அசாதாரணத் தன்மையை அழிக்கவல்லதாகும்......பல்வேறு தேசங்களிடையே தோழமையுறவை நிலைநாட்டவல்லதாகும்'' என்று 1945-ன் இறுதியில் எங்கெல்ஸ் கூறினார்.* ஆனால் ஒரு புறம், தொழிலாளி வர்க்கம், முதலாளித்துவ சமுதாய வளர்ச்சி விதிகளின்கீழ் அதனை எந்த அளவிற்கு செய்யமுடியும் என்பதனை தெளிவாக அறிந்திருக்க வேண்டும். மறுபுறத்தில் மக்களின் சித்தத்தை மதித்து இடமளிக்க, பூர்ஷ்வாக்களை நிர்ப்பந்திப்பதற்கான வழிவகைகளையும் தெளிவாக அறிந்திருக்கவேண்டும்.

முதலாளித்துவ சமுதாய வளர்ச்சிதான் தேசியப் பிரச்சினையை உருவாக்கியது. முதலாளித்துவத்தின் கீழ்

* மார்க்ஸ்-எங்கெல்ஸ், ''தொகுதி நூல்கள்'', தொகுதி 2, பக். 614.

தேசங்கள் மற்றும் தேசிய உறவுகளின் வளர்ச்சி சிக்கலான தாகவும் முரண்பாடானதாகவும் இருக்கின்றது. என்ற போதிலும்கூட அதன் தீர்விற்கான கணிசமான முன்னேற்றத்தை உருவாக்கவும் மக்களுக்கு அது வாய்ப்பளித்துள்ளது. ஒரு நாட்டில் தேசிய உறவுகள் எவ்வாறு இருக்கும் என்பது அங்கு எந்த அளவிற்கு உறுதியாக பூர்ஷ்வா ஜனநாயகம் அமுலாக்கப் படுகிறது என்பதனையே பெருமளவிற்கு சார்ந்துள்ளது. சுவிட்சர்லாந்து, நார்வே மற்றுமிதர சிலநாடுகளை மேற்கோள் காண்பித்து, 1913-மே மாதத்தில் லெனின் எழுதினார், இந்த முன்னேறிய நாடுகள், ''ஓர் உண்மையான ஜனநாயக அமைப்பின்கீழ் சுதந்திர நாடுகள் எவ்வாறு சமாதானமாக ஒன்றுபட்டு வாழமுடியும், அல்லது ஒருவருக்கொருவர் எவ்வாறு சமாதான பூர்வமாக பிரிந்து செல்லமுடியும் என்பதற்கு ஒரு சிறந்த உதாரணத்தை நமக்கு அளித்துள்ளன''* என்று எழுதினார். சமுதாயத்தில் தேசியப் பிரச்சினையின் இடம் எது என்பதை உருவரை செய்து தொழிலாளி வர்க்கம் தேசிய உறவுகள் பற்றிய அதன் கொள்கையை வரையறுத்துக்கொள்ள உதவினார் லெனின். லெனின் பின்வரும் கருத்தினை அழுத்தமாக எடுத்துரைத்தார், ''தேசியப் பிரச்சினைக்கு ஒரே ஒரு தீர்வு தான் இருக்கின்றது (பொதுவாக முதலாளித்துவ உலகத்தில், கொள்ளை லாபமும், அற்பச்சண்டைகளும், சுரண்டலும் கொண்ட உலகத்தில், தீர்க்கமுடியக்கூடியதாக உள்ள தீர்வு ஒன்று உண்டு), அத்தீர்வு முரணற்ற ஜனநாயகம் என்பதேயாகும்.

''அதன் ஆதாரம்—ஒரு பழைய கலாசாரத்தைக் கொண்ட நாடான மேற்கு ஐரோப்பாவிலுள்ள சுவிட்சர்லாந்து, மற்றும் ஒரு இளம் கலாசாரத்தைக் கொண்ட நாடான கிழக்கு ஐரோப்பாவிலுள்ள பின்லாந்து.''** ஒரு

* வி. இ. லெனின், ''நூல் திரட்டு'', தொகுதி 19, பக். 91.

** அதே நூல், தொகுதி 20, பக். 22.

சர்வப் பொது மாதிரியாக அல்லவென்றாலும், சுவிட்சர்லாந்து, பெல்ஜியம், பின்லாந்து மற்றுமிதர சில நாடுகள் ''பூர்ஷ்வா சமுதாயத்தில்''* தேசியப் பிரச்சினைக்கான தீர்வின் ஒரு மாதிரியை அளித்துள்ளன என்று அவர் சுட்டிக்காட்டினார்.

முதலாளித்துவத்தின் கீழ் தேசியப் பிரச்சினையின் ஒரு ''தீர்விற்கான'' லெனினது ஆலோசனைகள், எல்லா சமயங்களிலும் நிபந்தனையுடன் கூடவே இருந்தன. அவர் கூறியதன்பொருள் யாதெனில், தேசங்களின் பிரதானமான ஒருமைப்பாடு அவசியம், தேசியரீதியில் ஒரேமாதிரியான அரசுகள் உருவாக்கம் பெறவேண்டும், தேசிய உறவுகள் ஜனநாயகமாக்குவதில் சில முன்னேற்றங்களாவது ஏற்படவேண்டும் என்பதே: நிலவுடைமையிலிருந்து முதலாளித்துவத்திற்கு மாறிச்செல்லும் பொழுது எழும் இப்பிரச்சினைகளுக்கு ஒரு தீர்வு காண்பது அவர் சுட்டிக்காட்டிய அத்தகைய நாடுகளில், புரட்சியின் உடனடிக்கட்டத்தில் பிரதான பிரச்சினையாக தேசியப் பிரச்சினை இராது என அவர் எடுத்துக்கூறினார். தேசிய சர்வதேசிய வளர்ச்சிப் போக்குகளின் சுதந்திரமான வளர்ச்சிக்காக, முதலாளித்துவ சமுதாயத்தில் சாத்தியமான சிறந்த சூழ்நிலைகளை ஏற்படுத்துவதற்கான முற்போக்கு சக்திகள் போராடுவதற்கான போராட்டக்களம் இன்னமும் அங்கே இருக்கிறது என்று அவர் எடுத்துக்கூறினார்.

தேசங்களுக்கிடையிலான உறவுகள் பற்றிய பிரச்சினையின் தீர்வில், ஏற்பட்டிருந்த முன்னேற்றங்கள் மிகவும் சொற்பமாகவே இருந்தன. காரணம் முதலாவதாக, ஒரு சில நாடுகளில் மட்டுமே, முரணற்ற ஜனநாயக மாற்றங்கள் ஏற்பட்டிருந்தன (சுவிட்சர்லாந்து, ஸ்வீடன், பெல்ஜியம்); அவை விதிவிலக்கானவையாகவும், முற்றுப்பெறுதவையாகவும், புரட்டப்பட்டவையாகவுமிருந்தன. இரண்டாவ

* வி. இ. லெனின், ''நூல் திரட்டு'', தொகுதி 41 பக். 320.

தாக, லெனின் சுட்டிக்காட்டியது போன்று, சமாதான பூர்வமான, உண்மையான ஜனநாயகத்தன்மை வாய்ந்த தேசிய உறவுகளை நோக்கிய ஒரு சிறிய நடவடிக்கையாக மட்டுமே இது இருந்தது. மேலும் இது இப்பிரச்சினை வேறுவிதமாக கையாளப்பட்டு வரும் மற்ற நாடுகளுடன் ஒப்பிடும்பொழுது ஒரு சிறிது பரவாயில்லை என்ற நிலைமையில் மட்டுமே உள்ளது. மேற்கு ஐரோப்பாவில், எவ்வாறாயினும் ஒரு குறைந்த அளவிற்கேனும் ஜனநாயக பூர்வமான பூர்ஷ்வா தீர்வின் அறிகுறிகள் இருந்தன. ஆனால், அதே சமயம் ருஷ்யாவின் ஆளும் வர்க்கங்களோ மிகத்தெளிவாக நிலவுடமை அமைப்பிற்காக் நின்றன. அதாவது வெளிப் படையான பிற்போக்குத்தனத்தோடு அல்லது பூர்ஷ்வா மிதவாதம் போன்று காட்சியளித்தன. ஆனால், இது ஜனநாயகத் திரையால் மிகமிக அற்பமான அளவுக்கே மறைக்கப்பட்டிருந்தது. முதலாளித்துவச் சூழ்நிலைகளில், தேசியப் பிரச்சினையின் தீர்வு எந்த அளவிற்கு சாத்தியம் என்பது புரட்சிகர மாற்றங்கள் நிகழவிருக்கும் கட்டத்தின் பிரதான பிரச்சினையோடு அது எந்த அளவிற்கு ஒத்துவருகிறது என்பதனைச் சார்ந்தே உள்ளது. இந்த உண்மையான நிலவரத்தை லெனின் வலியுறுத்தினார். உதாரணமாக, 1848—முதலாளித்துவப் புரட்சி ஜெர்மனி யில் ஏற்பட்டபோது, அங்கு பிரதானப் பிரச்சினையாக துல்லியமாயும் தேசியப்பிரச்சினையே முன்னுக்கு வந்திருந்தது: நிலவுடமை அமைப்பால் 39—பாகங்களாக பிளவுண்டிருந்த ஜெர்மனியை ஒரே நாடாக்க வேண்டியிருந்தது. மறுபுறம், ருஷ்யாவை எடுத்துக் கொண்டால் அதன் முதலாளித்துவ முன்னேற்றத்தின் பிரதான பிரச்சினையாக விவசாய அல்லது முற்றிலும் சரியாகச் சொல்ல வேண்டுமானால், விவசாயிகள் பிரச்சினையே இருந்தது.

பூர்ஷ்வா ஜனநாயகம் எங்கும் எப்பொழுதும், இனங்களின், தேசிய இனங்களின் சமத்துவத்தை வழங்க வாக்குறுதியளித்து வந்துள்ளது என்பதை லெனின் சுட்டிக்காட்டினார். ஆனால், அத்தகைய சமத்துவத்தை

அது நடைமுறையில் நிறைவேற்றவில்லை. முதலாளித்துவ ஆதிக்கத்தின் காரணமாக அவ்வாறு செய்திடவும் இயலாது.

மார்க்சிய-லெனினிய போதனையை வழிகாட்டியாக ஏற்றுக்கொண்டு, தேதியப் பிரச்சினையின் தீர்விற்கான ஒரு உண்மையான புரட்சிகரத் திட்டத்தை தொழிலாளி வர்க்கக் கட்சி உருவாக்கியது. முதலாளித்துவம் இன்னும் ஆதிக்கத் திலிருந்தபோதிலும்கூட, அதனை அமுல் படுத்துவதற்காக போராடுகிறது. மார்க்ஸ், எங்கெல்ஸ் ஆகியோரது அடிக் கோளிலிருந்த பிரதான அம்சம் என்னவெனில், தேசியப் பிரச்சினையை வர்க்கப் போராட்டம் என்ற பட்டகத் திலிருந்து ஆராயப்பட வேண்டும் என்பதேயாகும். லெனின் நோக்கத்தினை மேலும் செழுமைப்படுத்தினர்: "சோஷலிசத் திற்கான புரட்சிகரப் போராட்டத்தை, தேசியப் பிரச்சினை பற்றிய ஒரு புரட்சிகர திட்டத்துடன் நாம் கண்டிப்பாக இணைக்கவேண்டும்."*

முதலாளித்துவக் கட்டமைப்பிற்குள், தேசியப் பிரச்சினை யின் தீர்வு என்பது, பூர்ஷ்வா ஜனநாயகத் தன்மையதாக மட்டுமே இருக்கமுடியும். ஆனாலும்கூட, சமுதாய மற்றும் தேசியப் பிரச்சினைகளின் அடுத்தகட்ட தீர்விற்கு எடுத்துச் செல்லக்கூடிய தன்மைபெற்றதாக அது உள்ளது. எனவே "சோஷலிசப் புரட்சியை குறிக்கோளாகக் கொண்டு, ஏகாதிபத்தியத்திற்கெதிரான **அனைத்து** தேசிய இயக்கங் களையும் பயன்படுத்துவதற்காக".** மார்க்சிய-லெனினிய வாதிகள் போராடவேண்டும்.

தேசிய ஒடுக்குமுறையை களைந்தெறிவதற்காக தொழி லாளி வர்க்கம் போராடுகிறது. அனைத்து தேசங்களுக்கும், தேசிய இனங்களுக்கும் சமத்துவ உரிமைக்காக, பிரதானமாக முரணற்ற ஜனநாயகத்தின் நலன்களைப் பேணிக்காக்க போராடுகிறது. பொதுவாக அனைத்து ஒடுக்குமுறைகளையும்

---

* வி. இ. லெனின், "நூல் திரட்டு", தொகுதி 21, பக். 408.

** அதே நூல், தொகுதி 22, பக். 343.

முடிவிற்கு கொண்டுவரும் போராட்டத்தின் ஒரு பகுதியாக, அதன் தேசியத் திட்டம் திகழ்கின்றது. அத்துடன், தேசியப் பிரச்சினையின் சாத்தியமான மிகச்சிறந்த தீர்விற்கான அதன் போராட்டம், அதனுடைய சொந்த விடுதலைக்கான போராட்டத்துடன் இணைக்கப்பட்டிருக்கிறது. லெனின் கூறியதாவது: "நெருக்கடியை தீவிரப் படுத்தவும், விரிவுபடுத்தவும் வேண்டி ஏகாதிபத்தியம் கொண்டுவரும் ஒவ்வொரு தனி பேரழிவிற்கும் எதிராக, ஒவ்வொரு மக்கள் இயக்கத்தையும் எவ்வாறு பயன் படுத்துவது என்பது நமக்குத் தெரியாவிட்டால், சோஷலிசத்திற்கான பாட்டாளி வர்க்கத்தின் மகத்தான விடுதலைப் போரில், நாம் மிகவும் மோசமான புரட்சியாளர்களாகவே இருப்போம்."*

முதலாளித்துவத்திற்கெதிரான மக்கள் போராட்டத்தின் ஒரு பகுதியாக மாத்திரமே, தேசிய விடுதலை இயக்கங்கள் இருக்கின்றன. பழைய அமைப்பிற்கெதிரான தனது சொந்த தாக்குதலைத் தொடுப்பதற்கு அவற்றை பாட்டாளி வர்க்கம் பயன்படுத்தியாக வேண்டும். பல சந்தர்ப்பங்களில், தேசிய விடுதலைப் போராளிகள், சோஷலிசத்திலிருந்து வெகுதூரம் விலகியவர்களாக இருக்கின்றனர். சிறிய மக்களினங்களின் நடவடிக்கைகள் முதலாளித்துவத்தை அழித்துவிடவில்லை. ஆனாலும், வரலாற்றின் இயக்கவியலில் லெனின் சுட்டிக்காட்டியதாவது, "ஏகாதிபத்தியத்திற்கெதிரான போராட்டத்தில், ஒரு சுதந்திரமான காரணி என்ற முறையில் பார்த்தால், சிறிய தேசங்கள் சக்தியற்றவையே. ஆனால், அவை, உண்மையான ஏகாதிபத்திய எதிர்ப்பு சக்தி, சோஷலிச பாட்டாளி வர்க்கம், அரங்கத்தில் தோன்ற உதவுகின்ற ஜீவாணுக்களில் ஒன்றாக, தூண்டுவிசைகளிலொன்றாக ஒரு பங்கினை வகிக்கின்றன."** மேலும் அவர் கூறியதாவது

* வி. இ. லெனின், "நூல் திரட்டு", தொகுதி 22, பக். 357.

** அதே நூல், தொகுதி 22, பக். 357.

ஐரோப்பாவிலும், காலனி நாடுகளிலும் சிறிய நாடுகளின் பேரெழுச்சிகளின்றி சமுதாயப் புரட்சி நினைத்தற்கரிய தாகும். அனைத்து வகையான ஒடுக்குமுறைகளுக்கும் எதிராக, பாட்டாளி வர்க்கமல்லாத இதர பகுதி மக்கள் கிளர்ந்தெழாமல், சமுதாயப் புரட்சி நினைத்தற்கரியதாகும். இதனால்தான், தேசியப் பிரச்சினை சம்பந்தப்பட்ட தொழிலாளர்களின் கோரிக்கைகள், பொதுவான ஜனநாயகத் திட்டத்தின் பகுதியாக மாறியுள்ளன.

ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலைப் போராட்டத்திற்கான பட்டாளி வர்க்கத்தின் ஆதரவு, முதலாளித்துவத்திற்கெதிரான மக்களின் போராட்டத்திற்கு உத்வேகமளித்துள்ளது. அத்துடன், விவசாயிகள் பாட்டாளி வர்க்கத்தின் இயல்பான கூட்டாளிகள், தேசிய இயக்கங்களில் ஒரு பிரதானமான பங்கினை வகிக்கின்றனர் என்பதையும் கவனத்தில் கொண்டிருக்க வேண்டும்.

முதலாளித்துவ சூழ்நிலைமைகளின்கீழ், பாட்டாளி வர்க்கக் கட்சியின் தேசியத் திட்டத்தின் பிரதான குறிக்கோள் அனைத்து தேசிய இனங்களையும் சேர்ந்த உழைக்கும் மக்களின் ஒரு ஒன்றுபட்ட புரட்சிகர அணியைக் கட்டுவது என்பதே. பல்வேறு வழிகளில் அது சாதிக்கப் படுகின்றது. முதலாவதும் மிக முக்கியமானதும் என்னவெனில்,பாட்டாளி வர்க்கத்தின் சர்வதேச ஒற்றுமையாகும். ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலைப் போராட்டத்தில், அதன் தலைமைப் பாத்திரத்தை உறுதிப் படுத்துவதுமாகும். தேசியப் பிரச்சினையில் தத்துவார்த்தப் பூர்வமாக பக்குவப்பட்ட ஒரு திட்டத்துடன், அணிதிரட்டக்கூடியவர்கள் என்ற முறையில் தொழிலாளி வர்க்கத்தின் பாத்திரம் அரண்படுத்தப்பட வேண்டும். பாட்டாளி வர்க்கத்தின் பதாகையின்கீழ் போராடுவதற்கு, ஒடுக்கப்பட்ட மக்களை அறைகூவி அழைக்கும் சரியான அரசியல் கோஷங்களுடன் அரண்படுத்தப்படவேண்டும்.

முதலாளித்துவத்தின்கீழ் தேசியப் பிரச்சினையில் செய்யப் படும் தீவிர ஜனநாயக மாற்றங்கள், ஒடுக்கப்பட்ட

மக்களின் வாழ்க்கை நிலைமையில் கடுமையைக் குறைக்கும் என்பது உண்மையே. ஆனால், உறுதியான ஜனநாயகத்தைப் பாதுகாப்பதுடன் அதேபோன்ற இன்னொரு மிகமுக்கியமான காரியம் என்ற முறையில் ஒரு சோஷலிசப் புரட்சிக்காக மக்களைத் தயார் செய்ய, அதற்காக உழைக்கும் மக்களுக்கு கல்வியறிவூட்டக்கூடிய, அவர்களை ஸ்தாபன ரீதியில் திரட்டக்கூடிய, அதற்கு சாதகமான சூழ்நிலைகளை பேணி உருவாக்கவும் வேண்டும்.

ஒரு முதலாளித்துவ சமுதாயத்தில் உள்ள உற்பத்திச் சாதனங்கள் மீது உரிமையற்ற, ஒடுக்கப்பட்ட தொழிலாளி வர்க்கம், தேசியப் பிரச்சினையின்மீது, பிரதானமாக, தேசிய பிரச்சினையின் சித்தாந்த, அரசியல் களத்தில், ஒரு வரம்புக் குட்பட்ட செல்வாக்கை மட்டுமே செலுத்த இயலும். அங்கே இன்னமும்கூட முதலாளித்துவ ஆதிக்கமே மேலோங்கி யுள்ளது. அரசாங்க யந்திரத்தின் மூலம் அல்லது பொருளாயத உற்பத்தியின் மூலம் தேசிய, சர்வதேசிய இயக்கங்கள்மீது செல்வாக்கினைச் செலுத்துவதற்கான பாட்டாளி வர்க்கத் தின் திறன் இன்னமும் குறைவாகவே இருக்கிறது. இன்னமும் சில வாய்ப்புகள் இருக்கின்றன. அவற்றை நன்கு உபயோகப்படுத்துவது மிகவும் முக்கியமானதாகும். லெனின் கூறியதாவது, முதலாவதாக, தொழிலாளி வர்க்கம் விடுதலைக்கு முன்னரேகூட "பொருளாதார ரீதியில் முதலாளித்துவத்தின் பொருளாதார அமைப்பு முழுமையின் மையத்திலும் செயல் கூறிலும் ஆதிக்கம் செலுத்துகிறது."* அதாவது, பெரும்பாலான பொருளாயத மதிப்புகளின் உற்பத்தியாளர் என்ற முறையில், யந்திரத் தொழிலில் ஈடுபட்டுள்ள மிகவும் முன்னேறிய, அணி திரட்டப்பட்ட வர்க்கம் என்ற முறையில், பொருளாதாரத்தின் தலையாய, தொடர்ச்சியாக புதுப்பிக்கப்படும் கிளை என்ற முறையில் பாட்டாளி வர்க்கம் தனது ஆதிக்கத்தைச் செலுத்துகின்றது. இரண்டாவதாக,

* வி. இ. லெனின், "நூல் திரட்டு", தொகுதி 30, புக். 274.

''முதலாளித்துவத்தின் கீழ், மிக அறுதிப் பெரும்பான்மை யான உழைக்கும் மக்களின் உண்மையான நலன்களை பொருளாதார ரீதியிலும் அரசியல் ரீதியிலும், பாட்டாளி வர்க்கம் பிரதிபலிக்கின்றது.'' * மூன்றாவதாக, உழைக்கும் மக்களின் சர்வதேச அமைப்புகள் மூலம், தேசியப் பிரச்சினை யின் தீர்விற்கு உதவ, புரட்சிக்கு முன்னரேகூட, தொழிலாளி வர்க்கம் சக்தியுடையதாக இருக்கின்றது.**

தேசியப் பிரச்சினையின் தீர்விற்கு ஏதாவதொரு பங்கினை தொழிலாளி வர்க்கம் ஆற்றமுடியும் என்பதற்கு முன்னால், அது தன்னை ஒரு வர்க்கமாக அமைத்துக்கொள்ள வேண்டும். லெனின் வலியுறுத்திக் கூறியதாவது, ''எந்த ஒரு குறிப் பிட்ட நாட்டிலுமான பாட்டாளி வர்க்கத்தின் சுயநிர்ணய உரிமையின்பால், முதலாவதாகவும் முக்கியமாகவும் நாம் அக்கறை கொண்டிருக்கிறோம்,''*** அதுவரையிலும், அதிகாரத்திலிருந்து பூர்ஷுவாக்களை நீக்குவதற்காக தொழிலாளி வர்க்கம் போராட்டத்தை தீவிரமாக நடத்த முடியாது. அதன்பின் பலவேறு கட்டங்கள் பின்தொடர் கின்றன. இந்த மிகமுக்கியமான அம்சம் பற்றி மார்க்சும், எங்கெல்சும் பெருமளவு கவனத்தை ஈர்த்தினர். 1844-45-ல் அக்கால கட்டத்தில் மிகவும் பூர்ஷுவா தன்மை பெற்றிருந்த ஆங்கில நாட்டை மேற்கோள் காட்டி, எங்கெல்ஸ் குறிப் பிட்டதைக் காண்போம். அந்நாட்டின் முதலாளி வர்க்கமும் தொழிலாளிவர்க்கமும் ''இருதீவிரமான வேறுபட்ட தேசங் களாக''**** இருந்தன என்று அவர் குறிப்பிட்டார். வர்க்கப் போராட்டமும், தேசத்தின் தலைமைக்கான போராட்ட மும் மிகவும் தீவிரமடைந்திருந்தன.

---

* வி. இ. லெனின், ''நூல் திரட்டு'', தொகுதி 30, பக். 274.

** அதே நூல், தொகுதி 35, பக். 85.

*** அதே நூல், தொகுதி 20, பக். 478.

**** கார்ல் மார்க்ஸ்-பிரடெரிக் எங்கெல்ஸ், ''தொகுப்பு நூல்கள்'', தொகுதி 4, பக். 420.

இங்கிலாந்தில், தொழிலாளி வர்க்க இயக்கத்தின் அலாதி வளர்ச்சியின் காரணமாக அக்காலத்தில் தலைமையை வென்றெடுப்பதில் தொழிலாளிவர்க்கம் மிகவும் தாமதித்து விட்டது.

இதர நாடுகளில், அப்போராட்டம் மிகவும் அதிகமான செயலூக்கத்துடன் நடந்து வந்தது. 1848 புரட்சிக்குப் பிறகு உடனடியாக அல்லது இன்னும் மிகத் தெளிவாகக் கூறவேண்டுமானால் 1851 டிசம்பரில் லூயி போனப் பார்ட்டின் ஆட்சிக் கவிழ்ப்பின் விளைவாக, பிரான்சில் பூர்ஷுவாக்கள் "ஏற்கெனவே தோற்று விட்டனர். தொழிலாளி வர்க்கம் நாட்டை ஆளும் கலையை இன்னமும் பெற்றிருக்க வில்லை"* என்று மார்க்ஸ் சுட்டினார்.

இருபதாண்டுகளுக்குப் பிறகு சூழ்நிலை மாறியது. வரலாற்றில் முதலாவது தொழிலாளிவர்க்கப் புரட்சியான பாரீஸ் கம்யூன் நிகழ்ந்தது. ஆட்சியைக் கைப்பற்றும் ஒரு திரமிக்க முயற்சியாகவே அது இருந்தது. பூர்ஷுவாக்களை அகற்றி தொழிலாளி வர்க்கப் பதாகையின் கீழ் தேசத்தின் ஒற்றுமையை நிலைநாட்டும் ஒரு உறுதிமிக்க முயற்சியாகவே அது இருந்தது. மார்க்ஸ் கூறியதாவது "பாரீஸ் கம்யூனது விளைவாக, ஆட்சி அதிகாரத்தை தகர்த்ததின் மூலம்: தேசத்தின் ஒற்றுமை ஒரு எதார்த்த உண்மையாக மாறியது, ஆனால் முன்னைய அரசு, தேசத்தை விடவும் சுதந்திரமான அதைவிட உயர்ந்த ஒற்றுமையின் உருவகமாக தன்னைத் தான் உரிமைபாராட்டியது."**

நிலவுடமைக்கெதிரான அதன் போராட்டத்தின் பொழுது பூர்ஷுவா வர்க்கம் சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் என்று பிரகடனப்படுத்தியது வர்க்க நலன்களுக்கும்

* கார்ல் மார்க்ஸ்-பிரடெரிக் எங்கெல்ஸ் "தெரிவு செய்யப்பட்ட நூல்கள்" (3-தொகுதிகளில்), தொகுதி 2, பக். 219.

** கார்ல் மார்க்ஸ்-பிரடெரிக் எங்கெல்ஸ், "தெரிவு செய்யப்பட்ட நூல்கள்" (3-தொகுதிகளில்), தொகுதி 2, பக். 221.

மேலானதாக தேசிய நலன்களை அது பிரகடனப்படுத்தியது. (அதனுடைய சொந்த நலன்களோடு, குறைந்த பட்சம் அவை ஒத்திருந்தவரையில், அதன் ஆட்சியை உறுதிப் படுத்துவதற்கு தேச ஒற்றுமை எந்த அளவிற்கு தேவைப் பட்டதோ அதுவரை) ஆனல், பாட்டாளி வர்க்கத்திட மிருந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்வதிலுள்ள வளர்ந்து வரும் ஆபத்தைப் புரிந்து கொண்டவுடன், அது மறு சிந்தனையை துவக்கியது. உதாரணமாக பிரெஞ்சு பூர்ஷுவா வர்க்கத்தை எடுத்துக்கொள்வோம். 1870 இலையுதிர் காலத்தில் பாரிசில் புரட்சி அலை வீசியபோது, அது தனது நடத்தையை மாற்றியது. லெனின் கூறியதாவது, ''பிரெஞ்சு பூர்ஷுவாக்கள் ஒரு கணம்கூட தாமதியாமல், தேசத்தின் முழுமையான எதிரியுடன், தமது நாட்டை அழிவுக் குளளாக்கிய அந்நிய ராணுவத்துடன் சேர்ந்துவிட்டனர். பாட்டாளி வர்க்க இயக்கத்தை நசுக்குவதற்காக அவ்வாறு செய்தனர்.''* பிரெஞ்சு பூர்ஷுவாக்கள் பிரஷ்யன் ராணுவ வெறியர்களுடன் கூட்டணி வகுத்து பாரீஸ் கம்யூனை வீழ்த்தினர்.

அதன் பின்னரும் கூட இந்தப் பூர்ஷுவாக்கள் தேச நலன்களைவிட தங்கள் வர்க்க நலன்களே மேலானவை என மீண்டும் பலமுறை எடுத்துக்காட்டியுள்ளனர்.

''மூலதனம் மிகவும் எந்தளவுக்கு சர்வதேசியத்தன்மை வாய்ந்ததாக'' மாறியதோ அந்த அளவுக்கு பூர்ஷுவா ஆட்சியும் ஆட்டங்காணத் துவங்கியது. அதன் தேச நலன் களுக்கு துரோகம் செய்ய எவ்விதக் கூச்சமும் இருக்கவில்லை. ஏகாதிபத்திய சகாப்தத்தில் காலனி நாடுகளிலும், சார்பு நாடுகளிலும் மட்டுமே தேசிய முதலாளிகள் தொடர்ந்து முற்போக்கான பங்கினை வகித்தனர். லெனின் சுட்டிக் காட்டுகையில், மேற்கத்திய பூர்ஷுவாக்கள்—தங்களுக்கு சவக்குழி தோண்டுவோரை, பாட்டாளி வர்க்கத்தை

---

* வி. இ. லெனின், ''நூல் திரட்டு'', தொகுதி 15, பக். 37.

எதிர்த்து—சீரழிவின் இறுதிக்கட்டத்தை அடைந்து விட்டனர். அதேபொழுதில், காலனி நாடுகளிலிருந்த பூர்ஷுவாக்கள், அந்நாட்டு மக்கள் ஜனநாயக வளர்ச்சிக்காக நடத்திய போராட்டத்தில் தொடர்ந்து பங்குபெற்றுக் கொண்டிருந்தனர். ஆனால், காலனி நாடுகள் முதலாளித்துவப் பாதையில் வளர்ச்சியுற்ற பொழுது, அதன் ஜனநாயகம் படிப்படியாக மங்கியது. அங்கு ஒருவகை தரகு பூர்ஷுவாக்கள் தோன்றலாயினர். இன்னமும் அத்தகைய ஜனநாயகம் நிதர்சனமாக நீடிக்கும்வரை அதனை காலனி நாடுகளிலுள்ள தொழிலாளி வர்க்கமும் சாம்ராஜ்யத் தலைமை நாடுகளிலுள்ள தொழிலாளிவர்க்கமும் தேசியத் தலைமைக்கான அதன் போராட்டத்தில் கணக்கிலெடுத்துக் கொள்ளவேண்டும்.

தேசத்தின் பெருவாரியான மக்களின் ஆதரவை வென்றெடுப்பதற்கும், பூர்ஷுவாக்களை தனிமைப்படுத்துவதற்கும், பாட்டாளி வர்க்கம் முழுமையாக தயார் செய்யப்படுகிறது. ஆனால் வழக்கமாக அதற்கு காலமும் பிடிக்கும். முயற்சியும் அதிகம் தேவைப்படுகிறது. மிக நீண்ட வர்க்கப் போராட்டத்தின் மூலம், பாட்டாளி வர்க்கமல்லாத இதர பகுதி மக்களுக்கு தொழிலாளி வர்க்கம் உண்மையான தேசிய விடுதலைப் போரில், பூர்ஷுவாக்களைவிடத் துணிந்து நிற்பவர்கள் தொழிலாளிகளே என்பதை நிரூபித்து விட்டது. 20-ம் நூற்றாண்டின் ஆரம்ப கட்டம்வரை தொழிலாளி வர்க்கம், அதன் பின்னாலிருந்த ஜனநாயகப் பகுதியான விவசாயிகளுக்கு தலைமையேற்று ஒடுக்கப்பட்ட மக்களின் சுதந்திர விழைவுகளை எதிர்த்த பகைவர்களை முறியடிக்கக் கூடிய சக்தியாக தொழிலாளிவர்க்கம் முன்வருவது நிகழவில்லை என லெனின் கூறினார்.

மிகவும் கொடூரமான வகையைச் சார்ந்த பிற்போக்கே ஏகாதிபத்தியம் என்பது. அந்த ஏகாதிபத்திய சகாப்தத்தில், மக்கள் ஆதரவை வென்றெடுப்பதில் தொழிலாளி வர்க்கத்தின் முயற்சி விசேட தீவிரத்தன்மையைப் பெற்றது.

ஜனநாயகத்திற்கான போராட்டம் சமுதாயத்தில் மிகவும் மையமான பிரச்சினையாக முன்னுக்கு வந்தது. ஏகபோக பூர்ஷுவாக்களுக்கும், மக்கட்பகுதி முழுமைக்குமிடையிலான மோதல். பரவலாக இருந்த பல்வேறு பகுதியினரையும், குட்டி பூர்ஷுவாக்கள், ஏன் மந்தியதர பூர்ஷுவாக்களின் ஒரு பகுதியினரையும்,அறிவாளிகளையும், இதர குழுக்களையும், ஏகபோக முதலாளிகளுக்கு எதிரான ஓர் ஐக்கிய முன்னணியில் ஒன்றுசேர நிர்ப்பந்தித்தது. முரணற்ற ஜனநாயகத்தின் கோஷங்கள், பாட்டாளி வர்க்கத்தையும், அனைத்து தேசிய இனங்களையும் சேர்ந்த மிகவும் முன்னேறிய ஜனநாயக சக்திகளையும் ஒன்றுபடுத்தின. போராட்டத்தில், பாட்டாளி வர்க்கம் இதர ஜனநாயக கோஷங்களுடன் கூடவே, தேசிய இனப் பிரச்சினைபற்றிய அதன் சொந்த புரட்சிகர திட்டத்தையும் முன்னுக்குக் கொண்டு வந்தது. வர்க்கப் போராட்டத்தில், அனைத்து தேசிய இனங்களையும் சேர்ந்த உழைக்கும் மக்களின் ஒற்றுமையே அதன் பிரதான உள்ளடக்கமாம்; சமத்துவமின்மையினையும் தேசிய ஒடுக்கு முறையினையும் இறுதியாகக் களைந்தெறிவதே அதன் பிரதான உள்ளடக்கமாகும்; தேசங்களினதும் தேசிய இனங்களினதும் சுதந்திரமான வளர்ச்சியே அதன் பிரதான உள்ளடக்க மாகும்.

எய்தப்பெற்று, சோஷலிசப் புரட்சியின் தறுவாய் இறுதியாக தொழிலாளி வர்க்கம், ஒரு புரட்சிகர அரசியல் படையினை பெற்றிடும் பொழுது, பொதுவான ஜனநாயகப் போராட்டம்,பெரும்பான்மை மக்கள் பங்குபெறக்கூடியதாக பேரளவை எட்டும் பொழுதுதான் தேசிய வாழ்வில் அதன் தலைமைப் பாத்திரத்தை பூர்ஷுவாக்கள் இழந்து விடுவது சாத்தியமாகும். ருஷ்யாவில், 1917 - செப்டம்பரில் அக்டோபர் புரட்சிக்கு சற்று முன்னதாக இது நிகழ்ந்தது. 1917 - அக்டோபர் 1-ம் நாள், லெனின் இதனைப்பற்றிக் குறிப்பிடுகையில், அனைத்து முக்கிய விஷயங்களிலும், ''பாட்டாளி வர்க்கம் தேசம் முழுமையினையும், அனைத்து

வர்க்கங்களிலுமிருந்த நேர்மையான மக்கள் அனைவரையும் உண்மையில் பிரதிபலிக்கின்றது''* என்றார்.

பூர்ஷுவாக்களும் பாட்டாளி வர்க்கமும் மக்கள் ஆதரவைப் பெறுவதற்கு நேரெதிரான வழிமுறைகளை பயன் படுத்துகின்றனர். சர்வதேசியப் பதாகையின் கீழ் தேசிய நலன்பேணும் சக்திகளை தொழிலாளி வர்க்கம் அணிதிரட்டும் அதேவேளையில், முதலாளிகள் தேசிய வாதத்திலும் குறுகிய தேசிய வெறியிலும் நிற்கின்றனர்.

அறவே பிற்போக்கு சித்தாந்தம் எனும் முறையில் பூர்ஷுவா தேசியவாதத்தை எதிர்த்துப் போராடும் அதே பொழுதில் பாட்டாளி வர்க்கம் விடுதலைப் போராட்டத் திற்கு தேசிய பூர்ஷுவாக்கள் தலைமை தாங்கிய போதிலும் அது தேசிய ஒடுக்குமுறைக்கு எதிராக முடுக்கப்படுமாயின் தேசியத்திலும் ஜனநாயக உள்ளுறை இருக்கலாம் என்பதை அங்கீகரிக்கிறது. தொழிலாளி வர்க்கம், தேசியவாத இயக்கங்களைக்கூட ஆதரிக்கவேண்டி நேரிடலாம். ஆனால், அது, பொதுவான ஜனநாயக குறிக்கோள்களை அடைவதற் கான முயற்சியில், அவர்களது தேசிய வாதம் எவ்வளவு காலத்திற்கு ஒரு சாதகமான பங்கினை செலுத்துகிறது என்பதனையே சார்ந்துள்ளது. தொழிலாளி வர்க்கம் அதை விட மேலதிகமாக சென்றுவிடக்கூடாது என லெனின் கூறினார். ஏனெனில், அந்தக் கட்டத்திலிருந்துதான் பூர்ஷுவாக்கள் தேசிய வாதத்திற்கு புத்துயிரூட்டத் துவங்கு கின்றனர். மக்களையும், தொழிலாளர்களையும் பிரிக்கத் துவங்குகின்றனர். மேலும் அவர் கூறுகையில், பொதுவான தேசிய இயக்கங்களின்போது, முதலாளிகள்பால் அனுசரிக்க வேண்டிய பாட்டாளி வர்க்கக் கொள்கை, கறாராக ஒரு வர்க்க அடிப்படையிலான கொள்கையாகத்தான் இருந்திட வேண்டும் என கூறினார். தொடர்ந்து அவர் அதனை விரிவு படுத்திக் கூறுகையில், "தேசிய இனப்பிரச்சினையில் பாட்டாளி வர்க்கத்தின் கொள்கை (இதர அனைத்து பிரச்சினை

---

* வி.இ. லெனின்,"நூல் திரட்டு",தொகுதி 26,பக். 99.

களிலும் போன்றே) ஒரு குறிப்பிட்ட திசைவழியில் மட்டுமே பூர்ஷுவாக்களை ஆதரிக்கின்றது. ஆனால், அது ஒருபொழுதும் பூர்ஷுவாக்கள் கொள்கையுடன் ஒத்திருப்பதில்லை.'' சுருங்கக் கூறின், அதன் ஆதரவு நிபந்தனையுடன் கூடியதே.*

ஒடுக்கப்பட்ட தேசங்களின் தேசியவாதத்திலுள்ள, பொதுவான ஜனநாயக உள்ளடக்கத்தை பயன்படுத்துவதன் மூலம், தொழிலாளி வர்க்கம், தேசிய ஒடுக்குமுறைக்கு எதிராக அனைத்து போராளிகளையும் ஒன்றுபடுத்துகின்றது. ஜனநாயகத் தன்மைவாய்ந்த தேசிய கோஷங்களின்கீழ் தேசிய விடுதலை மற்றும் தொழிலாளி வர்க்கத்தினது இயக்கங்களினது ஒற்றுமையைக் கட்டுகின்றது. அது மிகுந்த முக்கியத்துவமுடையதாகும். மேலும், ஒடுக்கப்பட்ட மக்களின் தேசிய ஒருமைப்பாட்டிலிருந்தும், தேசியரீதியில் சுதந்திர நாடுகளின் தோற்றத்திலிருந்தும், ஏகாதிபத்தியத்திற்கெதிரான பாட்டாளி வர்க்கத்தின் போராட்டம் பயன் பெறுகின்றது.

பூர்ஷுவாக்களினதும், பாட்டாளி வர்க்கத்தினதும் தேசியக் கோரிக்கைகள், குறிப்பாக பிரிவினைப் பிரச்சினை சம்பந்தப்பட்ட கோரிக்கைகள் முற்றிலும் வேறுபட்டவையாகும். உழைக்கும் மக்களின் மீது இக்கோரிக்கைகளை நிபந்தனையற்ற முறையில், முதலாளிகள் திணிக்கின்றனர். உழைக்கும் மக்களைப் பொறுத்தவரை, இவை வர்க்கப் போராட்டத்தின் நலன்களுடன் இணைந்திருக்கின்றன. லெனின் அதனை விளக்குகையில், ''மற்றொரு நாட்டிலிருந்து ஒரு குறிப்பிட்ட நாட்டை பிரிப்பதிலோ அல்லது பின்னதனுடன் அதன் சமத்துவம் நிலைக்கும் முறையிலோ பூர்ஷுவா ஜனநாயகப் புரட்சி முடிவுறும் என்று முன்னதாகவே, தத்துவார்த்த ரீதியில் நீங்கள் கூறிட இயலாது; எதுவாயினும் சரி, பாட்டாளி வர்க்கத்தைப் பொறுத்தவரை அதற்கு மிகவும் முக்கியமானது, அதன் வர்க்க வளர்ச்சியை உறுதிபடுத்துதலேயாகும். பாட்டாளி வர்க்கத்தின் அக்குறிக்கோள்கள் நிறைவேறும் முன்னர்,

* வி. இ. லெனின், ''நூல் திரட்டு'', தொகுதி 20, பக். 409.

தனது 'சொந்த' தேசத்தின் குறிக்கோள்களை முன் தள்ளுவதின் மூலம், இந்த வளர்ச்சியை தடை செய்வதே, முதலாளிகளைப் பொறுத்தவரை மிகவும் முக்கியமானதாகும்''* என்று தெளிவுப்படக் கூறியுள்ளார்.

தேசிய இயக்கங்களின் ஜனநாயக அம்சங்களை தொழிலாளி வர்க்கம் பயன்படுத்துகின்றது. பொதுவான தேசியக் குறிக்கோள்களின் மீது விசேஷ அழுத்தம் கொடுக்கிறது. ஏகாதிபத்தியம் தோன்ற ஆரம்பித்த பொழுது, அனைத்து காலனி நாடுகளிலும், அரைக் காலனி நாடுகளிலும், கிழக்கு ஐரோப்பாவிலும் (ஆஸ்திரியா, பால்கன் நாடுகள், ருஷ்யா) இருந்த தேசிய இயக்கங்களால் இக்குறிக்கோள்கள் பின்பற்றப்பட்டன. ''இன்னமும் ஒடுக்கப்பட்ட, முதலாளித்துவ ரீதியில் வளர்ச்சி குன்றிய நாடுகளில், அப்பிரதேசங்களில், அது ஒரு பொது விதியாகவே உள்ளது'' என்று 1916-ல் லெனின் எழுதினர். ''புறநிலை ரீதியில், இந்நாடுகள் இன்னமும் பொதுவான தேசியக் கடமைகளை நிறைவேற்ற வேண்டியுள்ளன. அதாவது ஜனநாயகக் கடமைகளை, அந்நிய ஒடுக்குமுறையை தூக்கியெறிய வேண்டிய கடமைகளை நிறைவேற்ற வேண்டியுள்ளன.''**

ஏகாதிபத்திய சகாப்தத்தில், தொழிலாளர்களின் விடுதலைப் போராட்டத்திற்கு மிகவும் சாதகமாக இருந்த தேசிய இயக்கங்கள் எவை என லெனின் தனக்குள்ளேயே கேள்வியை எழுப்பிக் கொண்டார். அதற்கான பதிலை அவர் திட்டவட்டமான சரித்திர சூழலில் கண்டறிந்தார். அச்சமயத்தில், அப்போதுதான் காலனி நாட்டு மக்கள் விழிப்புறத் தொடங்கியிருந்தனர். முதலாளித்துவ காலனி சாம்ராஜ்யத்தில், எப்போதேனும் இங்குமங்குமாக சில தனித்த எழுச்சிகள் மட்டுமே காணப்பட்டன. ஐரோப்பாவின்

* வி இ. லெனின், ''நூல் திரட்டு'', தொகுதி 20, பக். 410.

** வி. இ. லெனின், ''நூல் திரட்டு'', தொகுதி 23, பக். 59.

ஒடுக்கப்பட்ட மக்களின் தேசிய இயக்கங்கள் போல இவை அவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தவையாக இருக்க முடியவில்லை. அக்காலத்தில் குறிப்பாக அயர்லாந்தில் நிகழ்ந்தவை, முதலாளித்துவக் கோட்டையிலேயே நிலையை மிகவும் தெளிவாக புரட்சிகரமாக்கியது எனலாம். லெனின் இதனைப்பற்றிக் கூறினர்: "அயர்லாந்தில் நிகழ்ந்த ஒரு எழுச்சியின் மூலம், ஆங்கில ஏகாதிபத்திய முதலாளி களின் ஆட்சி அதிகாரத்திற்கெதிராக தொடுக்கப்பட்ட ஒரு தாக்குதல் ஆசியாவிலோ அல்லது ஆப்பிரிக்காவிலோ அதே வலிமையுடன் தொடுக்கப்பட்ட ஒரு தாக்குதலைவிட அரசியல் ரீதியில் நூறு மடங்கு மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்ததாகும்."*

ஆனால், தொழிலாளி வர்க்கத்திற்கும், அதன் கூட்டாளி களுக்கும் எதிரான போராட்டத்தில், ஏகாதிபத்தியம் தோல்வியுற்றதோடு காலனி நாடுகளிலும், சார்பு நாடுகளிலும் இங்கொன்றும் அங்கொன்றுமாக நிகழ்ந்து கொண்டிருந்த ஒடுக்கப்பட்ட மக்களின் எழுச்சிகள் ஒரு வலிமை பொருந்திய தேசிய விடுதலை இயக்கமாக பரிணமித்ததோடு, வளர்ச்சிப்பெற்ற நாடுகளிலிருந்து தொழிலாளி வர்க்க விடுதலைப் போராட்டத்துடன், இந்த இயக்கம் மிகவும் நெருக்கமான பிணைப்புகளை வளர்த்துக் கொண்டதோடு நிலைமை மாறிவிட்டது. தேசிய விடுதலை இயக்கத்தின் முக்கியத்துவத்தை இது பிரதானமாக குறித்தது.

அக்டோபர் புரட்சி முடிந்தவுடனேயே, லெனின் இதுபற்றி குறிப்பிட்டார்: "உலகப் புரட்சியில் நிகழவிருக் கின்ற தீர்மானகரமான போராட்டங்களில், உலக மக்கட் தொகையின் மிகப் பெரும்பான்மையினரது இந்த இயக்கம், ஆரம்பத்தில் தேசிய விடுதலையை நோக்கிச் சென்றாலும், பின்னர் இது, முதலாளித்துவத்திற்கும், ஏகாதிபத்தியத் திற்கும் எதிரானதாக திரும்புவது நிச்சயம். சில சமயங்

* வி. இ. லெனின், "நூல் திரட்டு", தொகுதி 22, பக். 357.

களில் இது, நாம் எதிர்பார்ப்பதைவிட, மிக அதிகமான புரட்சிகர பங்கினை வகிக்கக்கூடும்.''*

முதலாளித்துவத்தைப் பொறுத்தவரை, அதன் ஆட்சி அதிகாரத்தை தாங்கி நின்று தூக்கி நிறுத்தக்கூடிய வகையிலேயே, அதன் தேசிய சித்தாந்தம் எப்பொழுதும் இருந்து வந்துள்ளது. தேசியக் கொடியின்கீழ் அது நிலவுடமையை எதிர்த்துப் போராடியுள்ளது, பின்னர் அது பல்வேறு தேசிய இனங்களைச் சேர்ந்த உழைக்கும் மக்களை பிளவுபடுத்துவதற்கு அதனைப் பயன்படுத்தியது. தனிச் சொத்துடமையுடன் இணைந்துள்ள வர்க்கங்களும், சமுதாயக் குழுக்களும், முதலாளிகளின் தேசியவாத செல்வாக்கிற்கு இரையாகியுள்ளன. ஆனால், பாட்டாளி வர்க்கம் மட்டுமே அதினின்று முற்றிலும் விடுபட்டுள்ளது. எங்கெல்ஸ் இது குறித்து எழுதினார்: ''இயல்பாகவே, தேசிய காழ்ப்புணர்விலிருந்து தொழிலாளி வர்க்கம் விடுபட்டுள்ளது. தொழிலாளர்களின் உளப்பாங்கு ரீதியான வளர்ச்சி, சாராம்சத்தில் தேசிய வாதத்திற்கு எதிரானதும், மனித நேயம்மிக்கதுமாகும்.''**

தேசியவாத விஷயத்தை, உழைக்கும் மக்களிடம் பரப்ப, பூர்ஷுவாக்கள் எடுக்கும் முயற்சிகளை தொழிலாளி வர்க்கம் தகர்த்தெறிகின்றது. அதே சமயம், தேசியப் பிரச்சினையின் தீர்விற்கும், வர்க்கப் போராட்டத்தின் வெற்றிக்குமான நடவடிக்கைகளையும் எடுக்கின்றது. அவ்வாறு, தொழிலாளி வர்க்கம் தனது முதலாவதான, மிகவும் முக்கியமான பணியைச் செய்கிறது என மார்க்சும், எங்கெல்சும் சுட்டிக் காட்டினர். ஒடுக்குமுறைக்கும், சுரண்டலுக்கும் எதிராக ஒருமைப்பாட்டையும், பரஸ்பர ஆதரவையும் தெரிவிப்பதும் தொழிலாளர்களினதும், அனைத்து உழைக்கும் மக்களினதும் சர்வதேச ஒற்றுமையை நிலைநாட்டுவதும் ஒரு

* வி. இ. லெனின், ''நூல் திரட்டு'', தொகுதி 32, பக். 482.

** மார்க்ஸ்-எங்கெல்ஸ், ''தொகுப்பு நூல்கள்'', தொகுதி 2, பக். 614.

கடினமான கடமையேயாகும். எந்த முனையில் தலை காட்டினாலும் தேசியவாதத்திற்கும் குறுகிய தேசிய வெறிக்கும் எதிராக, மார்க்சும், எங்கெல்சும், லெனினும் போராடினர். பாட்டாளி வர்க்க சர்வதேசியக் கோட்பாடுகளை அவர்கள் வரையறுத்தனர். அனைத்து தேசிய இனங்களையும் சேர்ந்த உழைக்கும் மக்களது ஒற்றுமையின் சின்னமாக அதனை அவர்கள் உருவாக்கினர்.

பல்வேறு தேசிய இனங்களைச் சேர்ந்த தொழிலாளர்கள் அனைவரும், ஒரேவிதமான ஜீவாதார நலன்களையும், வர்க்க ரீதியான குறிக்கோள்களையும் கொண்டுள்ளனர். அவர்களது போராட்டத்தில் வெற்றியீட்ட வேண்டுமானால், தோழமை பூர்வமான ஒருமைப்பாடும், பரஸ்பர ஆதரவும் அவர்களிடை நிலவிடவேண்டியது இன்றியமையாததாகும். இதுவே தொழிலாளி வர்க்க சர்வதேசியத்தின் பொருள் என, மார்க்சும், எங்கெல்சும் முதல் முதலாக வரையறுத்தனர். எங்கெல்ஸ் எழுதினார்: ''அனைத்து நாட்டுத் தொழிலாளர்களும் ஒரே விதமான நலன்களையும், ஒரே விதமான எதிரியினையும் கொண்டுள்ளனர். மேலும், ஒரே விதமான போராட்டத்தையே அவர்கள் நடத்தவும் வேண்டியுள்ளது.''*

தொழிலாளி வர்க்க கட்சிகளது சித்தாந்த அடிப்படையாகவும், தேசியப் பிரச்சினைபற்றிய திட்டங்களாகவும், தொழிலாளி வர்க்க சர்வதேசியம் மாறிவிட்டது. தொழிலாளி வர்க்கத்தின் கொள்கையிலும் சித்தாந்தத்திலும் தீர்மானகரமானதாக தொழிலாளி வர்க்க சர்வதேசியத்தை அங்கீகரிப்பதென்பது, எவ்விதத்திலும் தேசிய நலன்களை கைவிடுவதாகாது. தொழிலாளி வர்க்கத்தின் தேசிய, சர்வதேசிய கடமைகளுக்கிடையிலான புறநிலை ரீதியான இணைப்பை, மார்க்சும், எங்கெல்சும் சுட்டிக்காட்டினர். அவை இரண்டறக் கலந்தவை என்பதையும் எடுத்துக் காட்டினார். எங்கெல்ஸ் எழுதினார்: ''தொழிலாளி வர்க்க இயக்கத்தில், உண்மையான

---

* மார்க்ஸ்-எங்கெல்ஸ், ''தொகுப்பு நூல்கள்'', தொகுதி 2, பக். 614.

தேசிய கருத்துக்கள், விவசாயம், தொழில் ஆகிய இரண்டிலு முள்ள பொருளாதார காரணிகளுடன் உறுதியான பிணைப் புடைய கருத்துக்கள், ஒரு குறிப்பிட்ட தேசத்தில் மேலோங் கியுள்ள காரணிகள் பற்றிய கருத்துக்கள் ஆகியவை காணக்கிடக்கின்றன. ஆனல் அவை அதே சமயம் எப்பொழுதும் உண்மையான சர்வதேசியக் கருத்துக் களாகவும் திகழ்கின்றன.''*

பாட்டாளி வர்க்க சர்வதேசியத்தின் மார்க்சியக் கோட்பாடுகளுக்கு லெனின், ஒரு மிகமுக்கியமான பங்கினை செலுத்தியுள்ளார். அவர் தீவிரமாக பணியாற்றிய ஏகாதிபத்திய சகாப்தத்தின் பொழுது, தொழிலாளர்கள் மற்றும் உழைக்கும் மக்களின் விடுதலை இயக்கத்தைப் பொறுத்தவரை, பொதுவாக முற்போக்கான இயக்கங்களைப் பொறுத்தவரை, தொழிலாளி வர்க்க சர்வதேசியத்தின் முக்கியத்துவம் பிரம்மாண்டமான அளவிற்கு வளர்ந்து இருந்தது. ஒருபொழுதும் வழக்கத்திலிருந்திராத, ஒரு பொழுதும் கண்டிராத, அனைத்து நாட்டுத் தொழிலாளர் களின் சர்வதேசியப் பிணைப்பின் அடிப்படையாக பாட்டாளி வர்க்க சர்வதேசியம் ''சிதைந்து கொண்டிருந்த முதலாளித்துவ உலகில், உண்மையில் அதுவே எல்லாமும் என்பதாக திகழ்ந்தது''** என்ருர் லெனின்.

சோஷலிசப் புரட்சி என்ற பிரச்சினை, உண்மை வாழ்வில், ஒரு நடைமுறை ரீதியான பிரச்சினையாக மாறிவிட்டது. அதுபற்றி லெனின் கூறினர்: ''அனைத்து முன்னேறிய நாட்டுத் தொழிலாளர்களையும் பொறுத்த வரை, புரட்சிகர நடவடிக்கையில் சாத்தியமான, மகத்தான ஒற்றுமையினையும், நெருக்கமான தோழமை பூர்வமான பிணைப்பினையும், முழுமையான நம்பிக்கையினையும் கைக் கொள்ள வேண்டும். சோஷலிசப் புரட்சியின் வெற்றி

* மார்க்ஸ்-எங்கெல்ஸ், ''தொகுப்பு நூல்கள்'', தொகுதி 33, பக். 444.

** வி. இ. லெனின், ''நூல்திரட்டு'', தொகுதி 30, பக். 449.

கோருவது இதுவே.''* முதன் முதல், ஒரு நாட்டிலோ அல்லது சில முன்னேறிய நாடுகளிலோ புரட்சி வெற்றிபெற இது சாத்தியம் என்று லெனின் கருதினார். சர்வதேச தொழிலாளி வர்க்க இயக்கம் முழுமையின் ஆதரவும் தேவை.

பாட்டாளி வர்க்க சர்வதேசியத்தின் முக்கியத்துவம் அளப்பரிய முறையில் அதிகரித்தது.ஏனென்றால்,தேசியப்பிரச்சினையில் ஏகாதிபத்தியத்தின் சாராம்சம், நாம் ஏற்கெனவே எடுத்துக்காட்டியது போன்று, ஒடுக்கும் நாடுகள் மற்றும் ஒடுக்கப்படும் நாடுகள் என்று உலகை கூறு போடுவதாகவே இருந்தது. இரண்டு புதிய அம்சங்களை இது தோற்றுவித்தது. முதலாவதாக, ஒரு நாட்டின் ஏகபோக முதலாளித்துவம் தனது சொந்த நாட்டுத் தொழிலாளர்களிடமிருந்து சுரண்டுவதைவிட, காலனி மற்றும் சார்பு நாட்டு மக்களிடமிருந்து கொள்ளையடிக்கும் லாபம் மிகுந்திருக்கும் பொழுது, வளர்ச்சி பெற்ற நாட்டுத் தொழிலாளி வர்க்கத்திடம் காலனி ஆதிக்க வெறியைத் தோற்றுவிப்பதற்காக லெனின் விவரித்தது போன்ற, பொருளாயத அல்லது பொருளாதார அடிப்படை தோன்றுகின்றது. இரண்டாவதாக, தொழிலாளி வர்க்கத்திடம் படிந்துள்ள பூர்ஷுவாக்களின் தேசியவாத செல்வாக்கை, பாட்டாளி வர்க்க சர்வதேசியத்தின் மூலம் களைந்தெறிந்து வெற்றி கொள்ளாவிட்டால், காலனி நாடுகளிலுள்ள தேசிய விடுதலை இயக்கத்துடன், வளர்ச்சி பெற்ற நாடுகளில் ஏற்படும் தொழிலாளி வர்க்கப் புரட்சி இணைய முடியாமல் தடை செய்யப்படலாம். இதனால்தான் லெனினியம், தொழிலாளி வர்க்க சர்வதேசியத்தைப் பரப்புவதில் அவ்வளவு ஒருமுக அக்கறை செலுத்துகின்றது இதனால்தான், காலனி நாடுகளிலும், சார்பு நாடுகளிலுமுள்ள தேசிய விடுதலைப் புரட்சிகளினூடே சர்வதேசியக் கோட்பாடுகளைப் பரப்புவதின் அவசியத்தை லெனினியம் ஆதாரப்படுத்துகின்றது.

* வி. இ. லெனின், ''நூல்திரட்டு'', தொகுதி 29, பக். 103.

அத்துடன், ஏகாதிபத்திய சகாப்தத்தில், இதர விசேட அம்சங்களும் இருக்கின்றன. அவை, சர்வதேசியத்தின்பால் மிகவும் நெருக்கமான கவனம் செலுத்துதலை அவசியமாக்கியுள்ளன. பூர்ஷுவா வர்க்கம் தேசிய வாதத்தையும், குறுகிய தேசிய வெறியையும் ஊக்குவித்துக் கொண்டிருந்தது. அதன் அதிகாரத்தை நிலை நிறுத்துவதற்காக, தொழிலாளி வர்க்கத்தின் மேல்தட்டுப் பகுதிக்கு, லஞ்சம் தர, அதன் கொள்ளை லாபத்தின் ஒரு பகுதியை செலவிடவும் கூட தயாராக இருந்தது. எத்தகைய ஜனநாயகமிருந்தாலும் அதை ஒழித்திடவும், புரட்சிகர சக்திகளைத் தாக்கிடவும் எதையும் செய்யத் தயாராக இருந்தது. உண்மையில், அதற்கான இணையற்ற வெறியார்வத்தை அது வெளிப்படுத்தியது. எனவேதான், இதில் மார்க்சினது எச்சரிக்கை விசேட முக்கியத்துவம் வாய்ந்ததாகத் திகழ்கின்றது. அவர் கூறினார்: ''பல்வேறு நாடுகளைச் சேர்ந்த தொழிலாளர்களிடை இருக்க வேண்டிய சகோதர பந்த உறவைப் புறக்கணித்தலும், விடுதலைக்கான அவர்களது அனைத்துப் போராட்டத்திலும் ஒருவருக்கொருவர் உறுதுணையாக நிற்க அவர்களை தூண்டுதலைப் புறக்கணித்தலும் அவர்களது முரண்பட்ட முயற்சிகளின் பொதுவான முட்டுக்கட்டையால் ஒறுக்கப்படும்.''*

முதலாளித்துவ சமுதாயத்தில் வர்க்கப் போராட்டம் கடுமையடையும் பொழுது, பூர்ஷுவாக்கள் தேசிய வாதத்தையும், குறுகிய தேசிய வெறியையும் பரப்ப கடினமாக முயல்கின்றனர். தேசியப் பிரச்சினையின் உள்ளடக்கத்தை திட்டமிட்டு புரட்டுகின்றனர். லெனின் கூறியது போன்று, தேசியப் பிரச்சினை முழுமையினையும்—தத்துவம் நடைமுறை இரண்டையும்—தொழிலாளி வர்க்கமும் அதன் கட்சிகளும் கற்றுத் தேற வேண்டியது மிகவும் உடனடிக் கடமையாகும்.

---

* கார்ல் மார்க்ஸ்-பிரடெரிக் எங்கெல்ஸ், ''தெரிவு செய்யப்பட்ட நூல்கள்'' (மூன்று தொகுப்புகளில்), தொகுதி 2, பக். 17.

தத்துவத்தைப் பொறுத்தவரை, அதன் உள்ளடக்கம், சமுதாய வளர்ச்சியில் அதன் இடம், பங்கு ஆகியவைபற்றி சரியாக வரையறுக்கப்பட வேண்டும். எனவே, அதன் பிரதானமான, பொதுவான, மிகவும் குறிப்பான விதிகளை அறிய வேண்டும். தொழிலாளி வர்க்கக் கட்சிகளின் திட்டத்தில் சேர்ப்பதற்கான, உண்மையான விஞ்ஞான கோட்பாடுகளை வரையறுப்பதற்கு அவை மிகவும் அவசிய மானவையாகும். தேசியப் பிரச்சினையில் முதலாளித் துவத்தின் இரு போக்குகளையும், போல்ஷ்விக் திட்டம் கணக்கிலெடுத்துக் கொள்ள வேண்டுமென்று லெனின் விசேடமாக வலியுறுத்தினர். முதலாவதாக, தேசிய இனங்கள், மொழிகளின் சமத்துவம் பற்றிப் பிரகடனப் படுத்தவும் எவ்வித தனி சலுகைகளையும் எதிர்ப்பதுமாகும். இரண்டாவதாக, சர்வதேசியத்தின் கோட்பாட்டை உயர்த்திப் பிடித்தலாகும். முதலாளித்துவ தேசிய வாதத்தில் தொழிலாளி வர்க்கம் பாதிக்கப்படும் ஆபத்திற்கெதிராக சக்தி பொருந்திய, உறுதியான நடவடிக்கைகளை மேற் கொள்வது அவசியத் தேவையாகிறது. குறிப்பாக முதலாளித் துவத்தின் மிகவும் நயமான தேசிய வாத வடிவங்களினுல் தொழிலாளி வர்க்கம் கேடுருது பாதுகாத்திட வேண்டும்.

நடைமுறையைப் பொறுத்தவரை, தேசியப் பிரச்சினையில் தொழிலாளி வர்க்கத்தின் நிலைபாட்டிலிருந்து கூறுவ தாயின், கொள்கையை நடைமுறைப்படுத்த வேண்டும் எனலாம். பல்வேறு தேசிய இனங்களைச் சேர்ந்த உழைக்கும் மக்களினதும், தொழிலாளர்களதும் ஒரு ஒன்றுபட்ட அணியை உருவாக்க வேண்டும். அதற்கேற்ப ஸ்தாபன ரீதியான, கல்வி ரீதியான பணியினை நடைமுறைப்படுத்த வேண்டும். அது இறுதியாக முதலாளித்துவத்தை தூக்கி யெறிவதை நோக்கி இட்டுச் செல்ல வேண்டும். மார்க்சிய சர்வதேசிய திட்டத்திற்கும், இதர கட்சிகளின் திட்டத்திற்கு மிடையிலான அடிப்படை வேறுபாடு மார்க்சிய சர்வதேசிய திட்டம் "தேசிய இனங்களினதும் மொழிகளினதும் மிகவும் முழுமையான முரணற்ற, நிறைப் பிரயோக சமத்துவத்தை மட்டும் கோரவில்லை. ஆனல் அத்துடன், அனைத்து வகை

யான ஒன்றுபட்ட தொழிலாளி வர்க்க ஸ்தாபனங்களிலும், பல்வேறு தேசிய இனங்களைச் சேர்ந்த தொழிலாளர்கள் ஒருங்கிணைவதைக் கோருகின்றது''* என்றார் லெனின். பிற்பகுதியில் அவர் குறிப்பிட்டுள்ளவை கட்சிகள், தொழிற்சங்கங்கள், தொழிலாளி வர்க்கத்தினதும் அனைத்து உழைக்கும் மக்களினதும் பல்வேறு இதர வெகுஜன ஸ்தாபனங்களுக்கும் பொருந்துவதாகும்.

கட்சியின் கட்டமைப்பிற்குள்ளேயே சர்வதேசியக் கோட்பாடுகள் செயல்படுகின்றன. ருஷ்யாவில் தொழிலாளி வர்க்கக் கட்சி பிறப்பெடுக்கையிலேயே, பாட்டாளி வர்க்க சர்வதேசியத்தை பிரகடனப்படுத்தியது. அம்மெய்ம்மையில் லெனின் பெருமிதம் கொண்டார். இது, அதன் பெயரிலேயே வலியுறுத்தப்பட்டிருந்தது: அனைத்து ரஷ்ய (ருஷ்ய என்று போடுவதைவிட) சமூக-ஜனநாயக தொழிலாளர் கட்சி என அது அழைக்கப்பட்டது. கட்சி கூட்டமைப்புத் தன்மை வாய்ந்த கட்டமைப்போடு இருக்க வேண்டும் என பண்டிஸ்ட்டுகளால் கூறப்பட்ட ஆலோசனையை கட்சி நிராகரித்தது. பல்வேறு தேசிய இனங்களைச் சேர்ந்த ஸ்தாபனங்களும், தனித்திருந்த அனைத்து சமூக-ஜனநாயக கட்சிகளும், ஒரே தொழிலாளி வர்க்கக் கட்சியாக ஒன்றுபட வேண்டுமென்று கட்சி வலியுறுத்தியது. அதற்காக இயக்கமே நடத்தியது. குட்டி பூர்ஷுவா செல்வாக்கில் ஆட்படுவதிலிருந்து லெனினியவாதிகள் கட்சியை மீட்டனர். ருஷ்யாவிலிருந்த தேசிய ரீதியான சமூக-ஜனநாயகக் கட்சிகளில் மிகப் பெரும்பாலானவற்றை, கூட்டமைப்புத் தன்மை வாய்ந்த கோட்பாட்டை அங்கீகரிக்காமல் தடுப்பதில் கட்சி வெற்றியடைந்தது. அனைத்து-ரஷ்ய சமூக-ஜனநாயகத் தொழிலாளர் கட்சியின் 4-வது காங்கிரசில் இது நிகழ்ந்தது. அனைத்து தேசிய இனங்களையும் சேர்ந்த தொழிலாளர்களின் விருப்பத்தை தெளிவாக பிரதிபலித்து இம்மாநாடு அதனை உறுதி செய்தது. ருஷ்யாவில் 1905-ல் நிகழ்ந்த புரட்சியைத் தொடர்ந்து பல பிரதிபலிப்புகள் ஏற்பட்டன. அக்காலத்தில்

* வி. இ. லெனின், ''நூல் திரட்டு'', தொகுதி 20, பக். 289-90.

ஒரு கலைப்புவாதக் கொள்கையை மென்ஷிவிக்குகள் மேற் கொண்டனர். கட்சிகளை ஒன்றுபடுத்தி புனருத்தாரணம் செய்கின்ற முழுமையான அனைத்து முயற்சிகளையும் பாழ் படுத்த பல சக்திகள் வேலை செய்த நேரமது, பல்வேறு தேசிய சமூக-ஜனநாயகக் கட்சிகளினுள்ளும் தேசியவாதம் தலையெடுத்தாடிய நேரமது. அந்நேரத்தில், அத்தகைய தேசியவாத சக்திகளோடு சேர்ந்து மென்ஷிவிக்குகள் அப்பட்டமான துரோகமிழைத்ததற்கு இது ஒரு முக்கிய எடுத்துக்காட்டாகும். ஆனால், தொழிலாளி வர்க்கக் கட்சி யின் மீது கூட்டமைப்பு முறையைத் திணிப்பதற்கான சமரசவாதிகளின் தேசியவாதத் திட்டங்கள் தோல்வி யடைந்தன. அவர்கள் தேசியவாதக் கோட்பாடுகளுக்கு உருவளித்தனர் (1912 ஆகஸ்ட்டில் நடைபெற்ற கலைப்பு வாதிகளின் மாநாட்டில் இறுதியாக அது அங்கீகரிக்கப் பட்டது). இவையனைத்தும், லெனினியக் கோட்பாடுகளின் சரியான தன்மைக்கு சிறந்த சான்றுகளாகும். ருஷ்ய தொழிலாளி வர்க்கத்தின் சர்வதேசிய ஒருமைப்பாட்டிற்கு சிறந்த சான்றாகும்.

முதலாவது உலக யுத்தத்தின் பொழுது, குறுகிய சமுதாய வெறி, ஐரோப்பிய சமூக ஜனநாயகவாதிகளின் அணியில் தலைகாட்டியது. தொழிலாளி வர்க்க சர்வதேசியக் கோட்பாடுகள், மிகப் பெரும்பான்மையான சமூக ஜன நாயகக் கட்சிகளால் உடைப்பில் போடப்பட்டன. அக்கட்சி கள் சந்தர்ப்பவாதத்தால் ஊழல் மயமாகியிருந்தன. அம் மேற்கத்திய சமூக-ஜனநாயக கட்சிகள், தங்கள் நாட்டு பூர்ஷுவாக்கள் பக்கம் மென்மேலும் நெருக்கமாக சென்றன. தேசியவாத தத்துவத்தைக் கொண்டு, உழைக்கும் மக்களி னதும், தொழிலாளர்களதும் உள்ளத்தில் நச்சுக் கருத்துக் களை பரப்பிட, நடைமுறையில் முதலாளி வர்க்கத்திற்கு உதவினர், குறுகிய சமுதாய வெறியை எதிர்த்திட, லெனினும் அவரைப் பின்பற்றியவர்களும் தயங்கவே இல்லை. உலகம் முழுமையிலுமிருந்த தொழிலாளி வர்க்க சமூக-ஜனநாயக இயக்கங்கள் மத்தியிலும், தொழிலாளி வர்க்க

சர்வதேசிய மார்க்சிய கோட்பாடுகளை அவர்கள் இடைவிடாமல் பிரச்சாரம் செய்தனர்.

அத்தருணத்தில் கிழக்கு ஐரோப்பாவிலும் மத்திய ஐரோப்பிய பகுதியிலும் (ருஷ்யா, ஆஸ்திரியா, பால்கன் நாடுகள்) தேசியப் பிரச்சினை ஏன் அவ்வளவு முக்கியத்தும் பெற்றிருந்தது என்பதற்கான விசேட காரணங்கள் இருந்தன. அதில் பிரதானமான ஒரு காரணம், தேசிய இயக்கங்கள் வலிமையாக வளர்ந்திருந்தன என்பதாகும். முதலாவது ருஷ்யப் புரட்சியின் வீச்சினைத் தொடர்ந்து, தேசிய விடுதலைக்காக போராடுவதிலும், அதேபோன்று சமுதாய விடுதலைக்காகப் போராடுவதிலும் ஒடுக்கப்பட்ட மக்கள் மிகவும் செயலூக்கமுள்ளவர்களாக மாறிவிட்டனர். அடிமை முறையின் மிச்ச சொச்சங்களின்மீது இந்த புரட்சி தொடுத்த தாக்குதல், முதலாளித்துவ வளர்ச்சியை துரிதப் படுத்தியது. தேசிய உணர்வின் வளர்ச்சியினையும், அத்துடன் தேசிய ஒருமைப்பாட்டையும் ஊக்குவித்தது. இதனால் கலக்கமடைந்த ஜாரிஸக் கொடுங்கோன்மையும் பூர்ஷுவாக் களும், ரஷ்ய தேசிய ஒடுக்குமுறையை இருமடங்காக்கினர். சுதந்திர தாகங்கொண்டு விழிப்புற்ற மக்களுக்கெதிராக, ஒரு குறு தேசியவெறித் தன்மை வாய்ந்த நரவேட்டையைத் துவக்கினர். தேசிய ரீதியிலான போக்குகளை இது உத்வேகப் படுத்தியது. அப்போக்குகள், தேசிய சமூக-ஜன நாயகக் கட்சிகளிலும், அமைப்புகளிலும்கூட பரவலாயின.

கலாசார-தேசிய சுயஆட்சியெனஅழைக்கப்பட்ட திட்டத்தோடு சம்பந்தமுடைய தேசியவாதக் கருத்துக்கள் மேலோங்கின. இது பிரதானமாக, தங்கள் மொழியிலேயே குழந்தைகள் பள்ளியில் பயிற்றுவிக்கப்படவேண்டும் எனக் கோரியது. இது மிகவும் குறிப்பாயும் பாதகமாக இருந்தது. ஆஸ்திரிய சமூக-ஜனநாயகவாதிகளை ஊழல்மயமாக்குவதில், இந்த திட்டம் பெருமளவிற்கு பங்குவகித்தது. யூத இனத்தார் விஷயத்திலும், ருஷ்யாவின் எல்லையோரப் பிரதேசங் களிலிருந்த இதர சில தேசிய பூர்ஷுவாக் கட்சிகள், மற்றும் குட்டி-பூர்ஷுவாக் கட்சிகள் விஷயத்திலும், இது மிகப்

பெரிய எதிர்விளைவுகளை தோற்றுவித்தது கலாசார—தேசிய சுய ஆட்சித் திட்டம்என்பது, நம்பிக்கையிழந்துபோன குட்டி பூர்ஷுவாகருதுக்களின் ஒரு வெளியீடேயென லெனின் வர்ணித்தார். முதலாளித்துவ சூழ்நிலைமைகளின் கீழ்,தேசியப் பிரச்சினைதீர்க்கப்பட முடியாது என்பதனை,அவர்கள்தங்களது சொந்தஅனுபவத்திலிருந்துகற்றுக்கொண்டனர்.ஆனால்தமது கையாலாகத்தன்மை காரணமாக, ஒடுக்கப்பட்ட மக்கள் தங்களைத் தாங்களே தனிமைப் படுத்தும் கொள்கையை நாடினர்—இதர அனைத்து உழைக்கும் மக்களிடமிருந்தும் ஒன்றுபட்ட சர்வதேசியப் பாட்டாளி வர்க்க அணியி லிருந்தும் முழுமையாக பிளந்துசெல்கின்ற ஒருகொள்கையை அவர்கள் நாடினர். தேசிய கலாசாரத்தை பாதுகாப்பது என்ற கோஷம், தீங்கு பயக்காததுபோல தோன்றினாலும், ஏன் ஜனநாயக பூர்வமானதாக தோன்றினாலும்கூட, நடை முறையில், அது ஒரு துல்லியமான தேசியவாதத்தின் வகை யினைச் சார்ந்ததேயாகும். அது, உழைக்கும் மக்களை தங்கள் பூர்ஷுவாக்களோடு சேருமாறு தூண்டியது. இதர தேசிய இனங்களைச் சேர்ந்த பாட்டாளிகளிடமிருந்து எதார்த்தத்தில் பிரிக்கக்கூடிய ஒரு நடைமுறைக்கு இது இட்டுச்சென்றது.*

மன்னராட்சி ஆதரவாளர்களின் சண்டைக்குணமும் ருஷ்ய மற்றும் வட்டார பூர்ஷுவாக்கள் இருவகையினரின் தேசியவாதப்போக்குகளின் புத்தாக்கமும் குறித்து லெனின் எச்சரித்தார். 1913-ஜூனில் லெனின் எழுதினார்: ‘‘ருஷ்யாவின் அனைத்து பகுதிகளிலுமுள்ள சமூக-ஜனநாயக அமைப்புகள், தேசியப் பிரச்சினையின்பால் முன்னைக் காட்டி லும் மிகப் பெரிய அளவிற்கு கவனத்தைச் செலுத்த வேண்டியது குறிப்பான அவசரத் தேவையாக உள்ளது. இந்தப் பிரச்சினையின்மீது, உறுதியான மார்க்சியத் தீர்வுகளை வரையறுத்தாக வேண்டும், அனைத்து நாடுகளைச் சேர்ந்த பாட்டாளிகளின் ஒற்றுமை மற்றும் முரணற்ற சர்வதேசியம் என்ற உணர்விலிருந்து அதனை உடனடியாகச் செய்தாக

* வி. இ. லெனின், ‘‘நூல் திரட்டு’’, தொகுதி 19, பக். 503—07, 541.

வேண்டும்."* பிரதானமாக இது, கட்சி அமைப்பின் சர்வ தேசியக் கோட்பாடுகளோடு சம்பந்தப்பட்டதாகும். பல்வேறு தேசிய இனங்களைச் சேர்ந்த பாட்டாளிகளின், ஏற்கெனவே நடப்பிலுள்ள புரட்சிகர செயலொற்றுமையை உறுதிப் படுத்துவது சம்பந்தப்பட்டதாகும். லெனினும், அவரைப் பின்பற்றியவர்களும்—ஜே வி.ஸ்டாலின்,எஸ் ஜி. ஷகும்யான், என். ஏ. ஸ்கிரிப்னிக், பி. ஐ. ஸ்டுச்கா மற்றும் பலர்—தேசியப் பிரச்சினை மீதான மார்க்சிய போதனையையும் பாட்டாளி வர்க்க சர்வதேசியத்தின் அடிப்படைக் கோட்பாடுகளையும் பாதுகாத்து வளர்த்தனர்.**வட்டார கட்சி அமைப்புகளின்நடைமுறைப்பணியில்,பாட்டாளிவர்க்க சர்வதேசியம் முக்கியத்துவம் பெற்றிருந்தது. ஒருபுறம், ருஷ்யாவின் உள்ளும், அதன் எல்லைப்பகுதிகளிலும், பூர்ஷுவா தேசியவாதப் பிரசாரமும் ஜாராட்சியின் துர்ச்செயல்களும் நிரம்பிய சூழலில், **தேசியப் பிரச்சினை குறித்த பாட்டாளி வர்க்கத்தின் தீர்வாக** இது விளங்கியது என லெனின் வர்ணித்தார். மாக்ஸிம் கார்க்கிக்கு இதுபற்றி லெனின் ஒரு கடிதம் எழுதியிருந்தார். அதில் காகஸஸ் பிரதேசத்தில், ஒன்றுபட்ட கட்சி அமைப்புகளின்கீழ், ஜார்ஜிய, ஆர்மீனிய, தாதார் மற்றும் ருஷ்ய தேசிய இனங்களைச் சேர்ந்த சமூக-ஜனநாயகவாதிகள் பத்து ஆண்டுகளுக்குமேலாக ஒன்றிணைந்து பணிபுரிந்தனர் எனவும் ரிகா, வில்னு (இப்பொழுது வில்னியஸ் என அழைக்கப்படுகிறது) போன்ற பிரதேசங்களிலும்கூட இதுவே நிகழ்ந்தது என்று அவர் குறிப்பிட்டார். மேலும் அவர் எழுதியதாவது: "இது வெறும் ஒரு சொற்றொடரல்ல. ஆனால், தேசிய

* வி. இ. லெனின், "நூல் திரட்டு", தொகுதி 19, பக். 250.

** ஜே. வி. ஸ்டாலின் 'நூல்கள்', மாஸ்கோ, 1953, தொகுதி 2, பக். 300—81, எஸ். ஜி. ஷகும்யான், "தெரிவு செய்யப்பட்ட நூல்கள்" மாஸ்கோ, தொகுதி 1, 1957, பக். 417-60(ருஷ்ய மொழியில்).

இனங்களின் பிரச்சினைக்கு பாட்டாளி வர்க்கத்தின் தீர்வே இது, இந்த ஒரே ஒரு தீர்வு மட்டுமே உள்ளது.''*

பாட்டாளி வர்க்க சர்வதேசியம் பற்றிய மார்க்சிய—லெனினிய போதனை மீதான பற்றுறுதிக்கு ஒரு சோதனையாக முதலாவது உலக யுத்தம் இருந்தது. முதலாளித்துவ பொது நெருக்கடியின் ஒரு ஆரம்ப கட்டமாக அது இருந்தது. முதலாளித்துவ சமுதாயத்தில், சித்தாந்தத் துறை உட்பட அனைத்து துறைகளையும், அது அமர்த்தியிருந்தது. ஆளும் வர்க்கங்கள் ஒரு புரட்சி ஏற்படுவதைத் தடுப்பதில் உறுதியாக இருந்தனர். இரண்டாவது அகிலத்தைச் சேர்ந்த, பெரிய சமூக-ஜனநாயக கட்சிகளின் மீது செல்வாக்குப் பெறத் தீவிரமாக முயன்றனர். நாம் வருந்தத் தக்க வகையில், அவர்கள் அதில் வெற்றியும் ஈட்டினர். சமூக-குறுகிய தேசியவெறி, சந்தர்ப்பவாத மண்ணில் ஆழமாக வேரோடியிருந்தது. இது இரண்டாவது அகிலத்தைச் சேர்ந்த, பெரும்பாலான கட்சிகளின் நடவடிக்கைகளை முடமாக்கியது. அதன் விளைவாக இரண்டாவது அகிலமும் சிதைந்து போயிற்று. பாட்டாளி வர்க்க சர்வதேசியத்திற்கு விசுவாசமான ஒரு உணர்வை, லெனினால் ஊட்டிவளர்க்கப் பட்டிருந்த போல்ஷிவிக் கட்சி ஒன்றே ஒன்று மட்டும் அனைத்து நாட்டு பாட்டாளிகளது தோழமை உறவின்பால் தொடர்ந்து விசுவாசமாக இருந்து வந்தது. போல்ஷிவிக்குகளைக் குறித்தும்,ருஷ்ய தொழிலாளர்களைக் குறித்தும் பெருமிதத்தோடு லெனின் எழுதினார்: "போல்ஷிவிக் கட்சி அகிலத்தின்பால் அதன் கடமையை சரிவர நிறைவேற்றியுள்ளது, சர்வதேசிய பதாகையை அதன் கைகளிலிருந்து நழுவ விட்டதேயில்லை.''**

லெனினது முன் முயற்சியினால் போல்ஷிவிக்குகள், சமூக-ஜனநாயக் கட்சிகளிலிருந்த, சர்வதேசிய உணர்வு மிக்க சக்திகளை ஒன்றுபடுத்தலாயினர். ஏகாதிபத்திய

* வி. இ. லெனின், ''நூல் திரட்டு'', தொகுதி 35, பக். 85.

** வி. இ. லெனின், ''நூல் திரட்டு'', தொகுதி 21, பக். 319.

யுத்தத்தின் துவக்கத்திலேயே ஒரு மூன்ருவது அகிலத்தை அமைப்பதற்கான தயாரிப்புப் பணிகள் துவங்கிவிட்டன. போல்ஷிவிக்குகள், ஜெர்மானிய ஸ்பார்ட்டகோவிட்கள், பல்கேரிய டிஸ்ன்யாக்குகள் மற்றும் இதர பல நாடுகளிலிருந்த சர்வதேசிய உணர்வுடைய புரட்சியாளர்கள் ஆகியோர் லெனினது தலைமையின்கீழ் ஒன்றுபட்டு பணிபுரிந்தனர். கின்ட்டால் மற்றும் ஸிம்மர்வால்டு ஆகிய இடங்களில் நடைபெற்ற மாநாடுகளில் அவர்கள், ஒரு ஒன்றுபட்ட புரட்சிகர அணியை புனரமைப்பதற்காக லெனின் தலைமையில் ஒன்றுபட்டு பணிபுரிந்தனர். அதிகார வர்க்கத்திஞல் இடைவிடாது தாக்கப்பட்ட போதிலும், சமூக-குறு தேசிய வெறியர்களாலும், மையவாதிகளாலும் (அவர்களில் கார்ல் கவுட்ஸ்கியைப் போன்ற, ஜார்ஜி பிளக்கனேவைப் போன்ற மதிப்புக்குரிய நபர்களும் இருந்தனர்) சிறுமைப்படுத்தப்பட்டபோதிலும், அப்புரட்சியாளர்கள் பிரசாரவெளியீடுகளையும் தத்துவார்த்த நூல்களையும் வெளியிட்டனர். இது மதிப்பிடற்கரிய முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தது. ஏனென்ருல், லெனின் சுட்டிக்காட்டியதுபோன்று அப்போது, "மிக நெருங்கிய அண்மை எதிர்காலத்தில் சோஷலிசப் புரட்சி துவங்கிவிடும் போலிருந்தது."*

சமூக-குறு தேசிய வெறிக்கு எதிரான லெனினதும், போல்ஷிவிக் கட்சியினதும் நிலைபாடு, யுத்தத்திலீடுபட்டிருந்த நாடுகளைச் சேர்ந்த புரட்சியாளர்களின் ஒற்றுமைக்காக அவர்கள் எடுத்த நிலைபாடு, இரண்டாம் அகிலத்தைச் சேர்ந்த கட்சிகளில் இருந்த இடதுசாரி சமூக ஜனநாயகவாதிகள் மத்தியிலிருந்து பல ஆதரவாளர்களை தம் பக்கம் வென்றெடுத்தது. அக்டோபர் புரட்சிக்குப் பிறகு புதிய கம்யூனிஸ்ட் கட்சிகளின் உட்கருவை உருவாக்கியவர்களை ஒன்றுபடுத்த அது பெரிதும் உதவியது. அப்புதிய கம்யூனிஸ்ட் கட்சிகள்தான் மூன்ருவது கம்யூனிஸ்ட் அகிலத்தை அமைத்தன.

---

* வி. இ. லெனின், "நூல்திரட்டு", தொகுதி 22, பக். 153.

சர்வதேசியத்திற்கு விசுவாசமாக இருக்குமாறும் தேசியப் பிரச்சினையின் தீர்விற்காக செயலூக்கமுடன் பணியாற்றுமாறும் அனைத்து நாட்டுத் தொழிலாளர்களுக்கும் அழைப்பு விடுத்தபொழுதே, லெனின் தேசிய ரீதியில் நாடுகள் உருவாதலின் தத்துவார்த்த அம்சம் பற்றியும் கவனம் செலுத்தினர்.

ஒரு காலத்தில் பூர்ஷ்வாக்களால் பிரகடனப்படுத்தப் பட்ட, தேசிய சுய நிர்ணய உரிமை என்ற கோஷம், அதே பூர்ஷ்வாக்களிடமிருந்து ஏகாதிபத்திய சகாப்தத்தில் வந்த பொழுது, நிறைவுடையதுபோல் தோன்றியது. ஆனல் அதனை, "ஒரு மோசடி என்பதிலிருந்து ஒரு உண்மையாக"* மாற்ற தொழிலாளி வர்க்கத்தால் மட்டுமே முடியும், வேறு எவராலும் முடியாது என லெனின் கூறினர். ஒரு சர்வதேசிய உள்ளடக்கத்தோடு, சுய நிர்ணய உரிமைக் கோஷத்தை லெனினியம் வழங்கியது. தேசிய மற்றும் சர்வதேசியக் காரணிகளின் ஒரு ஒற்றுமையின் பிரதிபலிப்பை அது எடுத்துக் காட்டியது.

விரல்விட்டு எண்ணத்தக்க ஆதிக்க சக்திகள் ஒருபுறமும், ஒடுக்கப்பட்ட மற்றும் சார்பு நாட்டு பெருவாரியான மக்கள் மறுபுறமுமாக உலகம் பிளவுபட்டிருந்தது. அத்தகைய ஒரு உலகத்தில், தேசங்களின் சுய நிர்ணய உரிமைக்கான பாட்டாளி வர்க்கத்தின் முரணற்ற போராட்டம், விசேட' முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தது. 1915-ம் ஆண்டின் இறுதியில், தேசியப் பிரச்சினை பற்றிய அவருடைய புதிய கட்டுரையின் ஆதார விஷயத்திற்கு லெனின் பின்வரும் தலைப்பினைச் சூட்டினர்: "ஏகாதிபத்தியமும், தேசங்களின் சுய நிர்ணய உரிமையும்."

முதலாளித்துவம் ஏறுமுகத்திலிருந்த காலத்தின் தேசிய இயக்கங்கள், ஒரு முற்றிலும் வேறுபட்ட சரித்திர காலகட்டத்தை தோற்றுவித்தன. தேசிய அரசுகள் உருவாதலை அக்கால கட்டம் கண்டது. லெனின் எழுதினர்:

---

* வி. இ. லெனின், "நூல் திரட்டு", தொகுதி 39, பக். 737.

''மேற்கு ஐரோப்பா முழுமையிலும், ஏன் நாகரிக வளர்ச்சிபெற்ற உலகம் முழுமையிலும்,தேசிய அரசு என்பது **தனி மாதிரியாக** இருக்கின்றது. முதலாளித்துவ கால கட்டத்தில் அது சகஜமானது''.* அது சகஜமாகத்தான் இருந்தது. ஏனெனில், ஒரு மக்களின் சுதந்திர அரசுத் துவம் முதலாளித்துவ வளர்ச்சியை வேகப்படுத்துகின்றது. மேலும் அதன் விளைவாக—ஆரம்ப கட்டத்தில்—தேசத் தின் முன்னேற்றத்தையும்கூட அது வேகப்படுத்தியது. முதலாளித்துவம் அதிகாரத்திலிருந்த போதிலும் தேசிய, சர்வதேசிய இயக்கங்களின் ஒரு தடையற்ற வளர்ச்சிக்கு அது உத்தரவாதமளித்தது.

அதன் சொந்த தேசிய ரீதியிலான-சுதந்திர அரசை அமைத்துக்கொள்ள ஒவ்வொரு மக்களுக்கும் உள்ள உரிமையை ஆதரிக்கும் அதே பொழுதில், ''என்ன விலை கொடுத்தும் சுதந்திரம்'' என்பது போன்ற கோரிக்கைகளை மார்க்சிய லெனினியவாதிகள் எதிர்க்கின்றனர்.உதாரணமாக ருஷ்ய சமூக-புரட்சிகர கட்சி‘ ‘தேசிய சுய நிர்ணய உரிமைக்கு முழுமையான,நிபந்தனையற்ற அங்கீகாரம்'' என அறைகூவல் விடுத்தபொழுது, அந்தக் கோரிக்கையின் ''நிபந்தனையற்ற'' தன்மையை போலந்து சமூக-ஜனநாயகவாதிகள் வரவேற்று அங்கீகரித்தபொழுது, லெனின் அதனை சுத்தமான பூர்ஷுவா ஜனநாயக சொற்சிலம்பம் என வர்ணித்து உடனடியாக தனது பிரதிபலிப்பை வெளியிட்டார். தங்களது அறிக்கையின் மூலம், ருஷ்ய சமூக-புரட்சிகர கட்சியினர் தங்களை வாய்ச்சவடால் பேர்வழிகளாக காட்டிக் கொண்டு விட்டனர் எனவும், அரசியல் செயல்பாட்டிலும், தத்துவார்த்தக் கண்ணோட்டத்திலும் நிகழ்ந்துவரும் வர்க்கப் போராட்டத்துடன் போலந்து சமூக-ஜனநாயக வாதிகளின் பிணைப்புகளின் பலவீனத்தை அவர்களது அறிக்கை வெளிப்படுத்தி விட்டதாகவும் லெனின் கூறினர். வர்க்கப் போராட்டத்தைக் குறிப்பிட்டு அவர் கூறியதாவது:''இந்தப்

---

* வி. இ. லெனின், ''நூல் திரட்டு'', தொகுதி 20, பக். 397.

போராட்டத்தின் நலன்கருதி, தேசிய சுய-நிர்ணய உரிமைக் கோரிக்கையை **இதற்கு கீழடங்கியதாக** நாம் செய்ய வேண்டும். தேசியப் பிரச்சினையின்பால், பூர்ஷுவா-ஜனநாயக அணுகுமுறைக்கும், நமது அணுகுமுறைக்கும் இடையிலான மிகப்பெரிய வேறுபாட்டையும்இதுவே ஏற்படுத்துகின்றது.''* சில சூழ்நிலைமைகளில், ''சுதந்திர'' அரசுகளின் உருவாக்கம் ஏகாதிபத்தியத்தை பலப்படுத்துகின்றது என்று அவர் மேலும் விளக்கிக் கூறினர்.

மார்க்ஸ், எங்கெல்ஸ் கருத்துக்களை லெனின் எவ்வாறு விரிவுபடுத்தினர் என்பதையும், தேசங்களின் சுய நிர்ணய உரிமைக் கோஷத்திற்கு பின்னிருந்த அடிப்படை எண்ணங்களையும், குறிக்கோள்களையும் எவ்வாறு வரையறுத்தார் என்பதையும் இப்பொழுது நாம் காண்போம். ருஷ்யாவில், ருஷ்ய மற்றும் ருஷ்யரல்லாத பாட்டாளி வர்க்கத்தைப் பொறுத்தவரை, ''தேசியப் பிரச்சினையில் (இப்பொழுது) இதுவே பிரதான குறிக்கோளாக'' விளங்குகிறது என லெனின் விளக்கினர். 1914-ன் ஆரம்பத்தில், சில தேசிய அரசுவகைத் தனிச்சலுகைகள் வழங்குவதற்கு எதிராகவும் தங்களது தேசிய அரசை அமைத்துக் கொள்வதற்கான அனைத்து தேசங்களின் சம உரிமைக்காகவும் தினசரி கிளர்ச்சியும், பிரசாரமும் நடத்தக் கோரி அவர் அறை கூவல் விடுத்தார். வேறுவிதமாகக் கூறுவதாயின், இந்த உரிமையை **பிரகடனப்படுத்தும்** ஒரு பிரச்சனையாக இது இருந்தது. அதனை **நடைமுறைப்படுத்தலின்** ஒரு பிரச்சினையாக இன்னும் மாறவில்லை. தேசிய சுதந்திரத்தை ஒரு நிபந்தனையற்ற கோரிக்கையாக முன் வைப்பதும், ஜாராட்சிக்கும், முதலாளித்துவத்திற்குமெதிரான ஒன்றுபட்ட தொழிலாளி வர்க்க அணியைப் பிளவுபடுத்தும் ஒரு திட்டமிட்ட செயலாகவே இருக்கும். சிறிய ஆகவே பலவீனமான அரசுகளாகப் பிளவுறுத்தும் செயலாகும். ஒரு பெரிய அரசு முதலாளித்துவம் மேலும் வேகமாக வளர்வதற்கான

* வி. இ. லெனின், ''நூல் திரட்டு'', தொகுதி 6, பக். 456.

போல்ஷிவிக்குகள் எப்பொழுதும் மேற்கொள்வர் எனலெனின் வலியுறுத்தினார். தேசியப் பிரச்சினையின் சாராம்சத்தை ஆராயவேண்டுமாயின், சமுதாய வாழ்வின் வேறு சிக்கலான அம்சத்தையும் போலவே முதலாளித்துவ நாடுகளிலுள்ள பொருளாதார சூழ்நிலைகளிலிருந்தே திளேக்கும் வர்க்க ரீதியான காரணிகளை மிகவும் நெருக்கமாக ஆராய்திடவேண்டும். தேசத்திலுள்ள சமுதாய அடுக்குகளினதும், வர்க்கங்களினதும் "தேசிய ஏட்டிலையின் வலிமையை" தீர்மானிப்பதற்கும், வர்க்கம் மற்றும் தேசிய சக்திகளின் தொடர்பாட்டை அளவிடுவதற்கும் தேசியவிடுதலை போராட்டத்தின் பின்னுள்ள உந்து சக்திகளை வரையறுப்பதற்குமான விஞ்ஞான ரீதியான ஆதாரங்களை இது வழங்குகின்றது.

உலக மக்கட்த் தொகையில் பாதிக்குமேற்பட்ட மக்களைச் சுரண்டிவரும் தலைமை ஏகாதிபத்திய வல்லரசுகள் பின்வரும் பொருளாதார காரணியைக் கொண்டு குறிக்கப்படத்தக்கவை என்று லெனின் தரம்பிரித்துக் காட்டினார்: அவற்றின் பூர்ஷுவாக்கள் காலனி நாடுகளிலிருந்து அபகரித்த மிகை லாபங்களிலிருந்து,தொழிலாளி வர்க்கத்தின் மேல்தட்டுப் பகுதிக்கு லஞ்சம் கொடுத்தனர். தொழிலாளி வர்க்கத்தின் ஒரு பகுதிக்கு குறுகிய தேசிய வெறியூட்டி ஊழல் மயமாக்கியதுடன் இந்த லஞ்சமும் சேர்ந்து முதலாளித்துவ நாடுகளில் வர்க்கப் பாகுபாட்டைத் தடுக்கின்ற பிரதான காரணிகளிலொன்ருக இது இருந்தது. பூர்ஷுவாக்களுக்கெதிரான போராட்டத்தில், பாட்டாளி வர்க்கத்திற்கு இது ஒருபெரும் தடையாக இருந்தது. லெனின் அதிலிருந்து தெளிவான ஒரு முடிவிற்கு வந்தார் (அக்டோபர் புரட்சி முடிந்த உடனேயே). அவர் கூறியதாவது, "சுலபமாக கொள்ளையடிக்கின்ற வாய்ப்புக்களை பெற்று தமது தொழிலாளர்களது மேல்தட்டுப் பகுதிக்கு லஞ்சம் வழங்குகின்ற நிலையிலுள்ள இந்த சுரண்டும் நாடுகளைச் சேராத நாடுகளில், இயக்கத்தை துவக்குவது மேலும் சுலபமாக இருக்கின்றது."*

* வி. இ. லெனின், "நூல் திரட்டு", தொகுதி 26, பக். 471-72.

ருஷ்யாவில் தொழிலாளி வர்க்க பிரபுக்குலம் எண்ணிக்கை பலத்தை பொறுத்தவரை அதிகமாக இல்லை எனலாம்; அங்கு பெருந்திரளான பாட்டாளி வர்க்கத்தின் நலன்கள், பூர்ஷுவா நலன்களுக்கு நேரெதிராக இருந்தது மாத்திர மல்ல, ஆனால்—அதிலும் மிகமுக்கியமாக—விவசாயி மக்கள் முழுமையினது நலன்களுடன் ஒத்திருந்தன. அந்த விவசாயி மக்கள் பண்ணை அடிமை முறையின் மிச்சசொச்சங்களுக்கு எதிராகப் போராடிக் கொண்டிருந்தனர். உண்மையில், வர்க்கங்களின் உறவில், இது ''அடிப்படையான பொருளா தார விஷயமாக'' இருந்தது. அதன் விளைவாக ஏற்பட்ட நிலைமையை லெனின் பின்வருமாறு சுட்டிக்காட்டினார், ''இந்த விதிவிலக்கான சூழ்நிலைமைகளின்கீழ், பல மாதங்கள் வரை, அனைத்து விவசாயிகளின் ஆதரவினைச் சார்ந்து இருப்பது எங்களுக்கு சாத்தியமாயிற்று.''* பின் விளைவாக தேசத்தில் ஏற்பட்ட பாகுபாடு ஒரு குறிப்பிட்ட கட்டத்தை அடைந்தது, அவர் குறிப்பிட்டது போன்று, தேசத்தின் ஜீவாதார சக்திகளனைத்தும் போர் அரணின் ஒரு முனையில் ஒன்றுபட்டன. அதேசமயம், தேசத்தின் கட்டமைப்பில் ஒரு மிகைப்பாடான வர்க்கமாக நின்ற முதலாளிகள் மறுமுனையில் நின்றனர்.

ஆனால் அதேசமயம், வேறு பல நாடுகளிலும், பிரதேசங் களிலும் (உலக மக்கட் தொகையில் பெரும்பகுதி கொண்டவை இவை) இந்தப் பாகுபாடு இன்னும் ஏற்படாம லிருந்தது, அல்லது நிலவ ஆரம்பித்திருந்தது. ஏனெனில், உலகின் பல பகுதிகளில், முதலாளித்துவம் அப்போதுதான் வளரத் துவங்கியிருந்தது (இது ஏறத்தாழ அனைத்து ஆசிய ஆப்பிரிக்க நாடுகளுக்கும், லத்தீன் அமெரிக்க நாடுகளில் சிலவற்றிற்கும், ஏன்? ருஷ்யாவின் ஒரு பகுதிக்கும் பொருந்தும்). இங்கு இன்னமும் ஆரம்ப நிலையிலான வர்க்கப் பாகுபாடு மட்டுமே இருந்தது என்பது ஒருபுறம். ஏகாதிபத்திய வல்லரசுகளுக்கு பொருளாதார மற்றும்

---

* வி. இ. லெனின், ''நூல்திரட்டு'', தொகுதி 29, பக். 190.

அரசியல் துறையில் கீழடங்கிய நிலை மறுபுறம் இருந்ததால் சமுதாய விடுதலைக்கான போராட்டம் பின்னுக்குத் தள்ளப் பட்டது. பொதுவான தேசியக் குறிக்கோள்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டது: அந்நிய ஒடுக்குமுறையி லிருந்து விடுதலை, அரசியல் சுயநிர்ணய உரிமை, தேசிய அரசுகள் நிறுவுதல், தேசிய ஒருமைப்பாட்டு வளர்ச்சிக்கான சுதந்திரம் என்பவையே அத்தேசியக் குறிக்கோள்கள்.

முதலாளித்துவ உலகிலும், அதன் காலனி சுற்று வட்டத்திலும் நிலவிய பல்வேறு சூழ்நிலைமைகளில், தேசியப் பிரச்சினையின் உள்ளடக்கத்தில், பொருளாதார ரீதியில் முழு நிறையாக இருந்த வர்க்க அம்சங்கள் பற்றிய பகுப்பாய்வினை லெனின் மேற்கொண்டார். அவரது பகுப்பாய்வு தத்துவார்த்த ரீதியான முடிவிற்கு இட்டுச் சென்றது. அதன்படி, அனைத்து நாடுகளும், இரு அடிப்படை யான பிரிவுகளிலொன்றைச் சார்ந்திருந்தன: சில நாடுகள் மத்தியகால நிலையிலிருந்து பூர்ஷுவா ஜனநாயகத்திற்கு வளர்ச்சி பெற்றிருந்தன. வேறு சில நாடுகள் பூர்ஷுவா ஜனநாயகத்திலிருந்து பாட்டாளி வர்க்க ஜனநாயகத்திற்கு வளர்ச்சி பெற்றிருந்தன. இக்கருத்து, நடைமுறை ரீதியான செயல்பாடுகளுக்கு மிகுந்த முக்கியத்துவமுடையதாகும்— எல்லாவற்றிலும் முதலாவதாக, தொழிலாளிகளின் வர்க்கப் போராட்டம் சம்பந்தப்பட்ட ஆதார நெறி மற்றும் போர்த் தந்திரங்களை வரையறுப்பதற்கும், ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலைப் போராட்டத்திற்கும் மிகுந்த முக்கியத்துவமுடைய தாகும். இதனால்தான் அக்டோபர் புரட்சியைத் தொடர்ந்து லெனின் பூர்ஷுவா உலகில் தேசியப் பிரச்சினையின் உள்ளடக்கம், அதன் தீர்விற்கான வழிவகைகள் என்பன வற்றில் தாமே முழுக்க ஈடுபட்டார். உலகப் புரட்சி பற்றிய முழு கருத்தோட்டத்தின் தத்துவார்த்த விரிவிளக்கத்துடன், இதுபற்றிய அவரது ஆய்வை இணைத்தார்.

அக்டோபர் புரட்சிக்குப் பிறகு வந்த லெனின் நூல் களில், முதலாவதாக உலக புரட்சிகர இயக்கத்திலும் இரண்டாவதாக, வளர்ச்சி பெற்ற முதலாளித்துவ நாடு

களிலும், மூன்றாவதாக காலனி நாட்டு மக்களின் வாழ்க்கையிலும் தேசியப் பிரச்சினை வகிக்கும் இடம் பற்றிய மதிப்பிடற்கரிய விவரங்கள் உள்ளடங்கியுள்ளன. இந்த அம்சங்களைப் பற்றி ஆய்வு செய்கையிலேயே "ஒரு புதிய சகாப்தம் உலக வரலாற்றில் துவங்கிவிட்டதை"* ஒருபொழுதும் அவர் மறக்கவில்லை. முதலாவதாக, ஒரு நாட்டில் தொழிலாளி வர்க்க சர்வாதிகாரம் நிறுவப் பட்டதையும் தொடர்ந்து, சர்வதேச தொழிலாளி வர்க்க இயக்கத்தின் முன்னென்றும் கண்டிராத ஒரு முன்னேற்றமும் இதனைக் காணவேண்டும். மக்கட் சமுதாயத்தின் இதர அனைத்து பிரிவுகளின் மீதும் தொழிலாளி வர்க்கத்தின் செல்வாக்கு மேம்பாடுறுவதும், புதிய வரலாற்று சகாப்தத்தின் மையத்தில் அது கொண்டு சென்று அமர்த்தியதையும் இது குறிப்பிட்டது. அத்துடன் மிகவும் முக்கியமான உண்மை என்னவென்றால், உலகில் முதலாளித்துவத்தின் முழுமையான தொடர்ந்த ஆட்சி முடிவுக்கு வந்துவிட்டது என்பதே. உலகின் முதலாவது சோஷலிச தொழிலாளி—விவசாய அரசு உதயமாகி முன்னேறிக் கொண்டிருந்தது. மேலும், அக்டோபர் புரட்சிக்குப் பின் லெனின் கூறினார்: "மக்களினங்களுக்கும், உலக அரசியல் அமைப்பு முழுமைக்கும் இடையிலான பரஸ்பர உறவுகள் சோவியத் ருஷ்யாவினால் தலைமை தாங்கப்படும் சோவியத் அரசுகளுக்கும், சோவியத் இயக்கத்திற்கும் எதிராக, ஏகாதிபத்திய நாடுகளின் சிறு பிரிவினால் நடத்தப்படும் போராட்டத்தினால் தீர்மானிக்கப் படுகின்றன. அதனை நாம் கவனத்தில் கொள்ளாவிட்டால், தனியொரு தேசிய அல்லது காலனிப் பிரச்சினையைக் கூட அது உலகின் வெகு தொலைவான பகுதி சம்பந்தப்பட்டதாக இருப்பினுங்கூட நாம் சரியாக முன்வைக்க முடியாது."**

முதலாளித்துவத்தின் பொது நெருக்கடியின் விளைவாக, ஒடுக்கப்பட்ட மக்களின் போராட்டத்தில் அசாதாரணமான

---

* வி. இ. லெனின், "நூல்திரட்டு", தொகுதி 29, பக். 307.

** வி. இ. லெனின், "நூல்திரட்டு", தொகுதி 31, பக். 241.

பேரெழுச்சி ஏற்பட்டது. அக்டோபர் புரட்சியின் தாக்கத்தினால் அது மேலும் அதிகமாக தீவிரப்பட்டது. அதன் விளைவாக, உலகப் புரட்சிகர இயக்கத்தில் ஒருசெயலூக்க முள்ள சக்தியாக தேசிய விடுதலை இயக்கம் மாறிவிட்டது. இந்த மாற்றம் 20-ம் நூற்றண்டின் ஆரம்பத்திலேயே துவங்கி விட்டது. ஆனால் அது அக்டோபர் புரட்சியின் வெற்றி வரை முழுமை பெருமலிருந்தது. முதலாவது உலக யுத்தமும், ருஷ்யாவில் சோவியத் ஆட்சி நிறுவப்பட்டதும் ஒடுக்கப்பட்ட மக்களின் தேசிய விடுதலை இயக்கத்தை செயலூக்கமுள்ள கூறுக முற்றுக மாற்றியதோடு ஏகாதிபத்தியத்தை புரட்சிகரமாக அழித்தொழிக்கவும் வகை செய்தது'' என்று லெனின் சுட்டினார்.*

லெனின் குறிப்பிட்டது போன்று, இப்பொழுது வரலாறு, இன்னும் மிக வேகமாக முன்னேக்கி நடைபோடும் நிலையில், ''தேசிய விடுதலை போக்குகளும், இயக்கங்களும், அபிலாஷைகளும் ஏகாதிபத்திய போக்குகளுடன் பின்னிநிற்கும் நிலைமை''** ஒரு புறமும், முதலாவது சோஷலிச நாட்டின் வளர்ச்சியுடனும், சர்வதேச தொழிலாளி வர்க்க இயக்கம் முழுமையுடன் தேசிய விடுதலை இயக்கம் மிக நெருக்கமாக இணைவது மறுபுறமும் ஏற்பட்டன. இப்பொழுது [உலகப் புரட்சி இயக்கத்தை பற்றிய கருத்தாக்கம் பெறும் பொருட்டு, இந்த காரணிகளின் தொடர்பாட்டை ஒரு கறாரான விஞ்ஞான அடிப்படையில் நிறுவுவது முக்கியமானதாக இருந்தது. 1918 ஆரம்பத்தில் லெனின் அழுத்தந்திருந்தமாக கூறியதென்னவெனில், தேசிய விடுதலை இயக்கங்கள், ஏகாதிபத்தியத்தைவிட, எண்ணவியலாத அளவுக்குப் பலவீனமாக இருந்தன.

---

* வி. இ. லெனின், ''நூல் திரட்டு'', தொகுதி 132, பக். 454-55; தொகுதி 33, பக். 499.

** வி. இ. லெனின், ''நூல்திரட்டு'', தொகுதி 27, பக். 52.

"அனைத்து முன்னேறிய நாடுகளின் அகத்துவம்"* சோஷலிசப் புரட்சி பக்குவப்படும்வரை, அவை வெற்றி பெற இயலாது என்பதே.

இந்தக் கருத்து முக்கியமானதாகும். ஏனெனில், அக்டோபர் புரட்சிக்குப்பிறகு உடனே பலவேறுபட்ட கருத்துக்கள், பல்வேறு நாடுகளிலிருந்த புரட்சியாளர்கள் மத்தியில் தோன்றின. பாட்டாளி வர்க்கப் புரட்சிகளின் சகாப்தத்தில், தேசிய இயக்கங்கள் பிற்போக்கானவை என சிலர் வாதிட்டனர். அதே சமயம் வேறுசிலர், ஒடுக்கப்பட்ட மக்களின் தேசியவிடுதலை இயக்கம், ஏகாதிபத்திய காலனி அமைப்பை அதன் சொந்த பலத்தில் வீழ்த்திவிடும் என்றும் மேலும் அது, சாம்ராஜ்ஜியத் தலைமை நாடுகளிலுள்ள முதலாளித்துவ அமைப்பிற்கெதிராக, அங்குள்ள தொழிலாளி வர்க்கம் அதன் சொந்த முதலாளிகளை எதிர்த்துப் போராட போதிய வலிமையின்றி இருப்பதாகக் குறைகூறி, அதனை உலுக்கிவிடக்கூடிய அளவிற்கு வலிமை மிக்கதாக உள்ளது என்றும் செப்பினர். தேசிய-காலனிப் பிரச்சினை சம்பந்தமான மார்க்சிய-லெனினிய கொள்கைக்கும் இத்தகைய கருத்துக்களுக்கும் எவ்வித சம்பந்தமுமில்லை.

உலகப்புரட்சிகர இயக்கத்துக்கு தேசியவிடுதலை இயக்கம் தலைசிறந்த முக்கியத்துவம் உடையது என திரும்பத்திரும்ப லெனின் வலியுறுத்திக் கூறினர். உலக முதலாளித்துவத் திற்கும், உலக சோஷலிசத்திற்குமிடையிலான போராட் டத்தின் விளைவின் மீதும், சோஷலிசத்தின் இறுதி வெற்றி யின்மீதும் அது சார்ந்துள்ளது என அவர் குறிப்பிட்டார்.** சர்வதேச தொழிலாளிவர்க்கம், உலகப்புரட்சியில் வகிக்கும் தீர்மானகரமான பாத்திரத்தை இக்கருத்து மறுக்கவில்லை. கம்யூனிஸ்ட் அகிலத்தின் இரண்டாவது மாநாட்டின் பொழுதும், அதற்குமுன்பும், ஒரு அதீத இடதுசாரிநிலையை

---

* வி. இ. லெனின், "நூல் திரட்டு", தொகுதி 27, பக். 52.

** அதேநூல், தொகுதி 33, பக். 500.

எம். என். ராய் மேற்கொண்டார்.* தேசிய விடுதலை இயக்கத்திற்கு ஒரு சோஷலிசத்தன்மை கற்பிதம் செய்து ஐரோப்பாவின் புரட்சிகர இயக்கத்தின் எதிர்காலம் கீழ்த் திசை புரட்சியின் செல்வழியைச் சார்ந்துள்ளது எனவும் கீழ்த்திசையில் கம்யூனிசம் வெற்றியீட்டுவதைப் பொறுத்தே உலக் கம்யூனிச இயக்கத்தின் எதிர்காலம் உள்ளது என்று கூட அவர் வாதிட்டார். இவ்வாறு அவர் வாதிட்டபொழுது, இக்கருத்துக்களை லெனின் மறுத்துரைத் தார். எல்லாவற்றிற்கும் முதலாவதாக, ''பின்தங்கிய நாடு களிலிருந்த பூர்ஷுவா ஜனநாயக விடுதலைப் போக்குகளுக்கு, ஒரு கம்யூனிஸ்ட் சாயமளிக்கும் முயற்சிகளுக்கு எதிராக ஒரு தீர்மானகரமான போராட்டத்தை நடத்துமாறு''** அவர் அறைகூவினர், இரண்டாவதாக, கிழக்கத்திய நாடுகளி லுள்ள புரட்சிகர இயக்கத்தின் வலிமை, வளர்ச்சி ஆகிய வற்றின் அளவைப்பொறுத்தே, மேற்கத்திய நாடுகளின் எதிர்காலம் முற்றிலும் சார்ந்துள்ளது என்று கருதுவதற்கு அறவே எவ்வித காரணமுமில்லை என அவர் எடுத்துக் காட்டினர். லெனினது கருத்துப்படி, உலகப்புரட்சி இயக்கம் என்பது ஒரு முழுமையாகும். அதன் ஆக்கக் கூறுகள் சர்வதேச தொழிலாளி வர்க்கத்திற்கு தலைமைப் பாத்திரம் இருக்கும் பட்சத்தில் மிக நெருக்கமாக சேர்ந்து செயல்பட்டு இவ்வாருக உலக முதலாளித்துவத்தின் வீழச்சியிலும் சோஷலிசத்தின் இறுதி வெற்றியிலும் சென்று முடியும் என்பதேயாகும். அவர் எழுதினர், ''உலகப்புரட்சி என்பது ஒவ்வொரு நாட்டிலுமுள்ள புரட்சிகரபாட்டாளிகள்

* மனபேந்திர நாத்ராய் (1892-1948)—1920 ஆம் ஆண்டுகளின் காலகட்டத்தில் கம்யூனிஸ்ட் அகிலத் தின் பணிகளில் தீவிரமாக பங்குகொண்ட இந்திய அரசியல் பிரமுகராவார். கம்யூனிஸ்ட் அகிலத்தின் நிர்வாகக்குழு உறுப்பினராக இருந்தார் அதன்பின் கம்யூனிஸ்ட் இயக்கத்தை விட்டு விலகிச் சென்று விட்டார்.

** வி. இ. லெனின், ''நூல்திரட்டு'', தொகுதி 31, பக். 149.

தமது முதலாளிகளுக்கு எதிராக நடத்தும் ஒரு போராட்டத்துடன் மாத்திரம் அதுவே பிரதானம் என்று நின்றுவிடுவதல்ல. ஆனால் அத்துடன், ஏகாதிபத்தியத்தால் ஒடுக்கப்பட்டுள்ள அனைத்து நாடுகளிலும், காலனிகளிலும் அனைத்து சார்பு நாடுகளிலும், சர்வதேச ஏகாதிபத்தியத்திற்கெதிராக நடத்தும் ஒரு போராட்டமுமாகும்.* அக்டோபர் புரட்சியைத் தொடர்ந்து உலகப்புரட்சி இயக்கத்தின் சாராம்சத்தை லெனின் கண்டார். அதில், அனைத்து முன்னேறிய நாடுகளிலுமுள்ளசுரண்டலாளர்களுக்குஎதிரான வர்க்கப்போராட்டம்,காலனியாதிக்க வாதிகளுக்கு எதிரான ஒடுக்கப்பட்ட மக்களின் தேசியப் போருடன் இணையத் துவங்கிவிட்டது என்பதை அவர் கண்டார்.**

காலனி நாட்டு மக்களுக்கு தீர்மானகரமான இடம் கற்பிக்கப் பட்டிருந்தால், சாம்ராஜ்யத் தலைமை நாடுகளின் தொழிலாளி வர்க்கம்; அவர்கள் வெற்றி பெறும் வரை காத்திருக்க வேண்டும். அத்துடன், காலனி மற்றும் சார்பு நாடுகளிலுள்ள மக்கள், சர்வதேச தொழிலாளி வர்க்க இயக்கத்துடனே, அல்லது சோவியத் நாட்டுடனே கூட்டணி நாட வேண்டிய அவசியமில்லை என்றாகிவிடும். உலகப் புரட்சிக்குத் தீர்மானகரமான, உலக புரட்சி இயக்கத்தின் பிரதான நீரோட்டங்களின் சேர்க்கையை இது பலவீனப் படுத்தும். எனவேதான், தேசிய விடுதலை இயக்கத்தின் இடம், பாத்திரம் ஆகியவை பற்றிய சரியான நிர்ணயிப்பு என்பது ஒரு வெறும் ஏட்டு விவகாரமல்ல என்று எடுத்துரைக்கப் படுகின்றது.

உலகப் புரட்சி இயக்கத்தின் சாராம்சம் பற்றிய, மற்றும் அதற்கிணையான பிரதான நீரோட்டங்களின் முக்கியத்துவம் பற்றிய லெனினது மதிப்பீடு, மிகுந்த முக்கியத்துவமுடையதாக இருந்தது, இன்னமும் மிகுந்த முக்கியத்துவமுடையதாகத் திகழ்கின்றது. படிப்படியாக, அனைத்து நாடு

* வி. இ. லெனின், ''நூல் திரட்டு'', தொகுதி 30, பக். 158.

** பார்க்க அதே நூல்.

முழுமையும், அதன் அனைத்து தேசிய இனங்களும் "இரு மாபெரும் முகாம்களாக பிளவுபட்டிருந்தன."*

வர்க்க பாகுபாட்டின் நடப்புக்களை புரட்சியாளர்கள் புறக்கணித்திருந்தால், அல்லது, தேசத்திலுள்ள "உழைக்கும் மக்களின் சுயநிர்ணய உரிமையை" மட்டுமே கோரினால், அதன்மூலம் அவர்கள் தேசியப் பிரச்சினையைப் புறக்கணித்தவர்களாவார்கள்" என லெனின் கூறினார். "பிரத்தியேக தேசிய அம்சங்கள் எதுவுமில்லாத மக்களாக இருந்தால் இதனைச் செய்திடலாம்." ஆனால், "அத்தகைய மக்கள் எங்குமே இல்லை, எனவே, சோஷலிச சமுதாயத்தை, வேறு எந்தவழியிலும் கட்டிவிடமுடியாது"** என்று லெனின் கூறினார். புரட்சிகர தத்துவம் "தேசங்களினுள் ஆழமாக" ஏற்படும் அனைத்து வளர்ச்சிகளையும், ஒரு தேசம் வளருகின்ற அனைத்துக் கட்டங்களையும், கண்டிப்பாக கணக்கிலெடுத்துக் கொள்ள வேண்டுமென அவர் கூறினார். சோஷலிசப் புரட்சி வெற்றி பெற வேண்டுமானல், "சம்பந்தப்பட்ட நாடு வளர்ச்சி பெறும்வரை நாம் காத்திருக்க வேண்டும். முதலாளித்துவ சக்திகளிடமிருந்து பாட்டாளி வர்க்க சக்தி பாகுபடுத்தப்படும் வரை நாம் காத்திருக்க வேண்டும், அது தவிர்க்கவியலாதது, நிகழ்ந்துமிருக்கிறது"*** என அவர் கூறினார்.

அக்டோபர் புரட்சியைத் தொடர்ந்து முதலாளித்துவ உலகில் ஏற்பட்ட நடப்புக்களைப் பரிசீலனை செய்த லெனின் ஒரு உண்மையின்பால் கவனத்தைச் செலுத்துமாறு அறைகூவினார். முதலாளித்துவ தேசங்களினுள் உழைக்கும் மக்களின் சுயநிர்ணய உரிமை என்பது ஒரு சிக்கலான, கடினமான சுற்றி வளைத்த பாணியாக உள்ளது. பல காரணிகளையொட்டி, சில நாடுகளில் அது மிகவும் மெதுவாக இருந்தது. இதர சில நாடுகளில் மிகவும்

* வி. இ. லெனின், "நூல் திரட்டு", தொகுதி 26, பக். 369.

** அதே நூல், தொகுதி 29, பக். 196.

*** அதே நூல், தொகுதி 29, பக். 172.

படுவேகமாக இருந்தது. உதாரணமாக பின்லாந்தை எடுத்துக் கொண்டால், ஒரு தருணத்தில் பாகுபாட்டு நடைமுறை ''மிகவும் குறிப்பிடத்தக்க அளவிற்கு தெளிவாகவும், ஆழமாகவும், வலிமை மிக்கதாகவும்'' இருந்தது. அதே சமயம் ஜெர்மனியில், ருஷ்யாவைவிடவும் கூட மிகப் படுவேகமான அளவிற்கு சில அம்சங்களில் வளர்ந்திருந்தது. ஆனால் அதேசமயம், வேறுசில இடங்களில் ''ஒரு மிகவும் மந்தமான, மிகவும் ரத்தவெறி தோய்ந்த பாதையில்''* இருந்தது என்று லெனின் கூறினார்.

பாகுபாட்டின் நடைமுறை பற்றிய அறிவு, நாட்டினுள் நடைபெறும் தொழிலாளர்களின் வர்க்கப் போராட்டத்திற்குமட்டும் பயனுடையதல்ல. ஆனால் அத்துடன் சர்வதேசிய இயக்கங்கள் பற்றியும் நாடுகளுக்கிடையிலான உறவுகள் பற்றியும் ஒரு சரியான மதிப்பீட்டிற்கு வருவதற்கும் அது பயனுடையதாகும். இந்தப் பின்னணியில், தேசங்களின் சுயநிர்ணய உரிமையின் பாலான சரியான தோரணை, விசேட முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கிறது. ''பல்வேறு தேசங்கள் சம்பந்தப் பட்டவரை நாம் குறிப்பாக எச்சரிக்கையாக இருக்க வேண்டும்'' என லெனின் சுட்டிக் காட்டினார். ''ஒரு தேசத்தைப் பொறுத்தவரை நம்பிக்கையின்மை என்பதை விட படுமோசமானது வேறொன்றுமில்லை.''** மேலும் அப் பாகுபாடு ஏற்படாத காலம் வரை புரட்சியாளர்கள் தேசங்களினுள் உழைக்கும் மக்களின் சுயநிர்ணயக் குறிக்கோளை முன்வைப்பது, விபரீதமாகும். மேலும் லெனின் அழுத்தந்திருத்தமாகக் கூறியதாவது, ''எந்த பின்லாந்து தேசத்தையும் நாங்கள் அங்கீகரிக்கப் போவதில்லை. ஆனால், உழைக்கும் மக்களின் பின்லாந்தைத்தான் ஆதரிப்போம் என்று நாம் பிரகடனப்படுத்தினால், அது படுமுட்டாள்த்தனமாகவே

* வி. இ. லெனின், ''நூல் திரட்டு'', தொகுதி 29, பக். 173.

** வி. இ. லெனின், ''நூல் திரட்டு'', தொகுதி 29, பக். 174.

இருக்கும்.'' மேலும் அவர் கூறியதாவது, ''எது உண்மையில் நிலவுகிறதோ அதனை அங்கீகரிக்க நாம் மறுக்கவியலாது; அதனை அங்கீகரிக்குமாறு அதுவே நம்மை நிர்ப்பந்திக்கும்.''*

ஒவ்வொரு தேசமும் சுயநிர்ணய உரிமையைக் கண்டிப்பாக பெற்றிருக்க வேண்டும் என லெனின் கூறினர்; இதுவும்கூட உழைக்கும் மக்களின் சுயநிர்ணய உரிமையை எளிதாக்கும். ஆனால் அவசரமோ எதிர்மறையான மாற்றங்களை மட்டுமே ஏற்படுத்தும். மேலும், இதர பல விளைவுகளுடன், முதலாளித்துவ தேசியவாதத்தையும், குறு தேசிய வெறியையும் தீவிரப்படுத்துவதில் கொண்டு போய் விடும். லெனினும், ரு.சோ.கூ.சோ. குடியரசின் மக்கள் கமிசார்களது குழுவும் (அதில், லெனின் தலைவராக இருந்தார்), அண்டை நாட்டு மக்களுடன் நட்புறவுகளை நிலைநாட்டுவதில் மிகுந்த சாதுர்யத்துடனும், எச்சரிக்கையுடனும் செயல்பட்டனர். தேசங்களின் சுயநிர்ணய உரிமையை நாம் அங்கீகரித்ததன் விளைவே இது என லெனின் சுட்டிக்காட்டினர். பின்லாந்து நாட்டில் வர்க்க பாகுபாட்டின் நடைமுறை மிகவும் எளிதாகவே நிகழ்ந்தது என அவர் எடுத்துரைத்தார். ஆனால் அத்துடன் அவர் பிறிதொன்றையும் எடுத்துக்காட்டினர். ஜெர்மனியிலும், போலந்திலும், பின்லாந்திலுமிருந்த பிற்போக்கான பூர்ஷுவாக்கள் வர்க்கப் பாகுபாட்டை வளராமல் தடுக்கவும், தேசியவாத சித்தாந்தத்தைப் பரப்பவும் ஆவல் கொண்டிருந்தனர். அனைத்து தேசிய கடமைகளும் இருந்தாயும் தேசிய ஒற்றுமை வர்க்க ஒற்றுமையை அகற்றி மாற்றி விட்டது என ஒரு தோற்றத்தை உருவாக்க அவர்கள் முயன்று கொண்டிருந்தனர் என்பதையும் அவர் எடுத்துக் காட்டினர்.

தேசிய உணர்வுகள் சம்பந்தப்பட்ட விஷயங்களில் எச்சரிக்கையாக இருக்குமாறு அவர் மீண்டும் மீண்டும் கோரினர். ஒடுக்கும் நாடுகளுக்கும், ஒடுக்கப்படும் நாடுகளுக்கும் இடையிலுள்ள வேற்றுமை விஷயத்தில், எப்பொழுதும்

* வி. இ. லெனின், ''நூல் திரட்டு'', தொகுதி 29, பக். 174.

போதிய கவனத்துடன் இருக்குமாறு லெனின் வலியுறுத்தினர். சோவியத் நாட்டு மக்களினங்களிடையேயான உறவுகள், முதலாளித்துவ உலகிலுள்ள தேசிய உறவுகளின்மீது ஒரு வலிமையான செல்வாக்கை செலுத்தியது என்பதை அவர் எடுத்துக் கூறினர். இக்கருத்தின் அடிப்படையில், ருஷ்ய தேசிய இனத்துக்கும் துர்க்கிஸ்தான் மக்களினங்களுக்குமிடையேயான உறவு மகத்தானதென்றும், உண்மையில் சரித்திர ரீதியான முக்கியத்துவமுடையதென்றும் அவர் சித்திரித்தார். ''மிகவும் பலவீனமான இதுவரையில் ஒடுக்கப்பட்டிருந்த தேசிய இனங்களின்பால், தொழிலாளர்களதும், விவசாயிகளதும் சோவியத் குடியரசின் தோரணை மிகுந்த நடைமுறை ரீதியான முக்கியத்துவமுடையதாகும் ஆசியா முழுமைக்கும், உலகெங்குமுள்ள அனைத்து காலனி நாடுகளுக்கும், கோடிக் கணக்கான மக்களுக்கும் இது மிகுந்த நடைமுறை ரீதியான முக்கியத்துவமுடையதாகும்''* என அவர் கூறினர்.

பூர்ஷுவா உலகிலுள்ள, ஒடுக்கும் நாடுகளுக்கும், ஒடுக்கப்படும் நாடுகளுக்கும் இடையிலான உறவு நிலைப் பிரச்சினை தங்கள் தேசியக் கொள்கையில் கம்யூனிஸ்ட் கட்சிகளால் பின்பற்றப்படும் கோட்பாடுகளிலும்கூட பிரதிபலிக்கப்பட்டிருக்கிறது. இரண்டாவது கம்யூனிஸ்ட் அகில மாநாட்டில், தேசிய மற்றும் காலனிப் பிரச்சினை மீதான அவரது கொள்கை அறிக்கையில் லெனின் வலியுறுத்திக்கூறியதென்னவெனில், ஒவ்வொரு கட்சியும், ''அதன் கொள்கையை...... கருத்தியலான சம்பிரதாயமான கோட்பாடுகள் மீது இல்லாமல், ஆனல், முதலாவதாக, விசேடமான சரித்திர சூழ்நிலை பற்றிய பிரதானமாக, பொருளாதார நிலைமைகள் பற்றிய ஒரு தெளிவான மதிப்பீட்டின் மீது வரையறுக்க வேண்டும். இரண்டாவதாக, ஒடுக்கப்படும் வர்க்கங்களினது நலன்கள் சுரண்டப்படும் உழைக்கும் மக்களினது நலன்கள் ஆளும் வர்க்கத்தின் நலன்களைப்

* வி. இ. லெனின், ''நூல் திரட்டு'' தொகுதி 30, பக். 138.

பிரதிபலிப்பதாயினும் ஒரு முழுமையான தேசிய நலன்களின் பொதுவான கருத்தின் அடிப்படைக்கும் இடையிலான தெளிவான வேறுபாடு மீது, மூன்ருவதாக, ஒடுக்கப்பட்ட, சார்பு நிலையிலுள்ள, சுரண்டப்படும் தேசங்களுக்கும் ஒடுக்கும், சுரண்டும், சுயாதிபத்திய நாடுகளுக்கும் இடையில் அதே அளவுக்கான தெளிவான வேறுபாட்டின் அடிப்படையில் வரையறுக்க வேண்டும்."*

இரண்டாவது கம்யூனிஸ்ட் அகில மாநாட்டிற்கு சமர்ப்பிக்கப்பட்ட லெனினது அறிக்கை ஏகாதிபத்திய சகாப்தத்தில், தேசியப் பிரச்சினையின் உள்ளடக்கத்தை தீர்மானிப்பதற்கு, ஒரு சரித்திர ரீதியான திட்டவட்டமான சூழ்நிலையை எவ்வாறு பகுப்பாய்வு செய்ய வேண்டும் என்பதற்கு ஒரு மாதிரியாக இருந்தது. தேசிய மற்றும் காலனிப் பிரச்சினை பற்றிய அவரது ஆராய்ச்சியுரையின் மிகவும் பிரதானமான கருத்து ஒடுக்கும் மக்களுக்கும், ஒடுக்கப்படும் மக்களுக்கும் இடையிலான வேறுபாடே என அவர் வலியுறுத்திக் கூறினர். மேலும் 1922 இறுதியில். அப்பிரச்சினை குறித்து மீண்டும் லெனின் எழுதினர், **தேசிய இனங்களின் பிரச்சினை அல்லது "சுய ஆட்சிமயப் படுத்துதல்''** என்ற தலைப்பில் அவர் எழுதினர். முன்னைய ஒடுக்கப்பட்ட மக்களுக்கும், ஒடுக்கிய மக்களுக்கும் இடையிலான தோழமை பூர்வமான உறவுகளை நிலைநாட்டுவதில், ஒரு உண்மையான தொழிலாளி வர்க்க சர்வதேசிய அணுகுமுறையின் முக்கியத்துவத்தை அதில் அவர் வலியுறுத்தினர். பெயரளவிலான சமத்துவத்தை அனுசரித்தால் மட்டும் போதாது. ஆனல், முன்னுளில் இதர தேசிய இனங்களை ஒடுக்கி வந்த தேசிய இனம், சமத்துவமின்மையை இன்று ஏற்றுக் கொள்ள வேண்டும். அது, உண்மையில் தற்போது நடைமுறையிலுள்ள சமத்துவமின்மைக்கு பரிகாரம் செய்வதாக இருக்கும். ...

* வி. இ. லெனின், ''நூல் திரட்டு'', தொகுதி 31, பக். 145.

** வி. லெனின், அதே நூல், தொகுதி 36, பக். 608.

அக்டோபர் புரட்சிக்குபிறகு, ஒடுக்கிய மற்றும் ஒடுக்கப்பட்ட தேசிய இனங்களுக்கிடையிலான உறவு களின்பால், லெனின் மிகுந்த கவனத்தைச் செலுத்தினர். ஏனெனில், பல விஷயங்களுக்கு மத்தியில், பாட்டாளி வர்க்க சர்வதேசிய சின்னத்தின்கீழ் உலகம் புதிய சகாப்தத் திற்கு வந்துவிட்டது. சர்வதேசியம் என்பது வெறும் சித்தாந்தமாகவும், பாட்டாளி வர்க்கத்தின் கண்ணோட்ட மாகவும் மட்டும் நீடித்திருக்கவில்லை. ஆனல், உலகப் புரட்சி இயக்கத்தில் அது ஒரு பிரதான சமூக காரணியாகும். சர்வதேச தொழிலாளிவர்க்க இயக்கமும், உலகின் முதலாவது தொழிலாளி— விவசாயி சோவியத் அரசும், அதன் இயற்கையான செல்வாக்கு மண்டலமாக இருந்தன. ஆனல், அது இப்பொழுது தேசிய விடுதலை இயக்கத்திற்கும் பரவி விட்டது. இது முற்றிலும் ஒரு புதிய காரணியாக இருந்தது. முதலாவது கம்யூனிஸ்ட் அகில மாநாடு பின்வரும் இந்த கோஷத்தை வரையறுத்தது: ''ரஷ்யாவினதும் மற்றும் ஐரோப்பாவினதும் சோஷலிஸ்ட் தொழிலாளர்களுடன், ஒடுக்கப்பட்ட கிழக்கத்திய மக்களின் புரட்சிகர கூட்டணி நீடூழி வாழ்க!'' மேலும் இதிலிருந்து, தொழிலாளி வர்க்க சர்வதேசியக் கருத்து, உள்ளடக்கத்தில் நிறைவுபெற்று விட்டது. ''உலகத் தொழிலாளர்களே ஒன்று சேருங்கள்!'' என்ற கம்யூனிஸ்ட்டுகளின் போர்க்குரலை, காலனி மற்றும் சார்பு நாடுகளின் மக்களுக்கான அறைகூவலுடன் சேர்த்து, லெனின் பின்னர் விரிவுபடுத்தினர், அனைத்து நாடுகளின் தொழிலாளர்களே, ஒடுக்கப்பட்ட மக்களே, ஒன்று சேருங்கள்!''

மார்க்சியம்-லெனினியம், தொழிலாளி வர்க்க சர்வ தேசியத்தின் உறிப்பதிய வைத்து அதன் முழு உள்ளடக்கமும் சர்வதேச தொழிலாளி வர்க்க இயக்கமும், முதலாவது சோஷலிச அரசும் தேசிய விடுதலை இயக்கத்துடன் மிகவும் நெருக்கமாக இணைய வைக்கும் கலவையாக விளங்கியது. இது மிகவும் முக்கியமானதாகும். ஏனெனில், தேசிய விடுதலை இயக்கம், ஏற்கனவே, உலகப் புரட்சிகர இயக்கத்தின் பிரதான நீரோட்டங்களிலொன்ருக மாறியிருந்தாலும் அது

சோஷலிசத் தன்மை கொண்டதல்ல. காலனி சமுதாயத்தின் கட்டமைப்பிலும், காலனி உலகிலும் செயல்பட்டுக் கொண்டிருந்த பொருளாதார விதிகள் பற்றி ஒரு விரிவான பகுப்பாய்வை லெனின் மேற்கொண்டார். அவரது அப் பகுப்பாய்வு பின்வரும் முடிவுக்கு அவரை இட்டுச் சென்றது. ஒடுக்கப்பட்ட மக்களின் தேசிய விடுதலைப் போராட்டம் பொதுவாக முதலாளித்துவத்திற்கெதிரான ஒரு போராட்ட மாக இராது. ஆனால், அந்நிய ஒடுக்குமுறைக்கு எதிரான, மத்திய கால மிச்ச சொச்சங்களுக்கு எதிரான ஒரு போராட்டமாகவேஇருக்கும் என்ற முடிவுக்குஅவர் வந்தார். ஒரு ஒன்றுபட்ட ஏகாதிபத்திய எதிர்ப்பு அணி அமைக்கும் குறிக்கோள், காலனி நாடுகளிலும், சார்பு நாடுகளிலும் முற்றிலும் சாத்தியமே என்ற தத்தவார்த்த ரீதியான மற்றும் நடைமுறை ரீதியான லெனினியப் பிரேரணையின் அடிப்படை இதுவே. மேலும் தொழிலாளர்கள், விவசாயிகள் மற்றும் தேசிய அறிவாளிப் பகுதியினர் ஆகியோருடன் ஏகாதிபத்திய-எதிர்ப்பு ஐக்கிய அணியில், தேசிய பூர்ஷுவாக்களும் கூட சேருவது சாத்தியமே. வர்க்கப் பாகுபாடு இன்னும் தெளிவாக ஏற்படாத நிலை, உழைக்கும் மக்களும் பூர்ஷுவாக்களும் சந்தேகத்திற்கிடமின்றி பொதுவான தேசிய குறிக்கோள்களைக் கொண்டிருந்தனர். தேசிய ஒருமைப்பாட்டின் நடைமுறை இன்னும் பூர்த்தி யாகாதவரை, சுதந்திரத் தேசிய அரசுத்துவத்தையும், சுய நிர்ணய உரிமையினையும் அந்நிய ஒடுக்குமுறை தடை செய்யும் வரை முதலாளித்துவம் இன்னமும் முழுமையாக வளர்ச்சி பெற்றிராத வரை, மக்களின் வாழ்க்கை முறை யிலும், பொருளாதாரத்திலும் மத்திய காலத்தின் பல அம்சங்கள் நீடித்திருக்கும் வரை இந்த நிலை தொடரும். இவையனைத்தும், ஒரு ஒன்றுபட்ட ஏகாதிபத்திய எதிர்ப்பு அணிக்கான ஒரு பலமான அடிப்படையாக இருந்தன.

லெனினது இந்த அரிய முடிவு, ஏகாதிபத்திய ஒடுக்கு முறைக்குள்ளாகியுள்ள மக்களின் தேசிய விடுதலைப் போராட்டத்திற்கு, இன்னமும் உச்சபட்சத் தகைமை யுடையதாக விளங்குகிறது. ஆனால், அதே சமயம்

இம் முடிவுக்கு ஒடுக்கப்பட்ட நாடுகளிலிருந்த புரட்சியாளர் களின் அங்கீகாரம்கிட்டவில்லைஎன்பதுமட்டுமல்ல,முன்னேறிய முதலாளித்துவ நாடுகளிலுள்ள பல புரட்சியாளர்களின் அங்கீகாரமும் கிட்டவில்லை. சமுதாய வளர்ச்சிப் போக்குகளை அவர்கள் கவனிக்காததின் விளைவே இது. மேலும் விடுதலைப் போராட்டத்தில் காணப்பட்ட அகநிலை, புறநிலைக் காரணி களினதும், வர்க்க மற்றும் தேசியக் காரணிகளினதும் பரஸ்பரச் செயற்பாட்டை அவர்கள் காணத் தவறினார்கள்.

காலனி நாடுகளிலும், சார்பு நாடுகளிலும் ஒரு ஏகாதிபத்திய எதிர்ப்பு அணி அமைப்பது பற்றிய லெனினது கருத்துக்களுடன் முதலில் உடன்பட மறுத்தவர்கள் அரும்பி வரும் பாட்டாளிகள் மற்றும் பொதுவான உழைக்கும் மக்களின் நலன்களும், தேசியப் பதாகையின் கீழ் தேசிய விடுதலை இயக்கத்தில் பங்கு பெற்ற பூர்ஷுவா வர்க்கத்தின் நலன்களும் இரண்டறக் கலக்க முடியும் என்பதை அவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. இருப்பினும் லெனின் இந்த இரு பிரதான காரணிகளையும் கணக்கில் எடுத்துக் கொண்டார். காலனி நாடுகளிலும், பின்தங்கிய நாடுகளிலுமிருந்த பூர்ஷுவா ஜனநாயகத்துடன் ஒரு தற்காலிக கூட்டணிக்குச் சாதகமாக அவர் வாதிட்டார் என்பது உண்மையே. என்ற போதிலும், அவர் வலியுறுத்திக் கூறியதாவது: தொழிலாளி வர்க்கம், ''அதனுடன் இரண்டறக் கலந்து விடக் கூடாது. அதன் மிகவும் ஆரம்ப வடிவத்திலிருந்த போதிலும் கூட, பாட்டாளி வர்க்க இயக்கம் தனது சுதந்திரமான தன்மையை அனைத்து சூழ்நிலைகளிலும் உயர்த்திப் பிடிக்க வேண்டும்.''* ஒடுக்கப்பட்ட மக்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தில் தேசிய வாதத்தின் இடம் மற்றும் பங்கு பற்றி கிழக்கத்திய மக்களின் கம்யூனிஸ்ட் அமைப்புகளினது இரண்டாவது காங்கிரஸ் பிரதிநிதிகளுக்கு அவர் விளக்கிக் கூறினார்: இந்த மக்கள் மத்தியில் ''விழிப்புணர்வு பெற்று வருகிற,நிச்சயமாக பெற வேண்டிய சரித்திர நியாயம் கொண்டதான பூர்ஷுவா

* வி. இ. லெனின், ''நூல் திரட்டு'', தொகுதி 31, பக். 150.

தேசிய வாதத்தையே நீங்கள் அடிப்படையாக எடுத்துக் கொள்ள வேண்டும்.''*

ஆனால், ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலையை எளிதாக்கு வதற்கு பதிலாக, முதலாளித்துவ ஆட்சிக்கு வக்காலத்து வாங்கும் ஒரு கொள்கையாக மாறிவிடும் அளவுக்கு தேசியக் கோரிக்கைகளை ஆதரிப்பதின் பின்னுள்ள தவறு விஷயத்தில் தொடர்ச்சியான எச்சரிக்கையுடன் இருக்க வேண்டியது அவசியமானதாகும் என அவர் கூறினார்.

தேசிய மற்றும் காலனிப் பிரச்சினை சம்பந்தமான தத்துவத்தை உருவாக்குவதில் லெனின் ஆற்றியுள்ள பங்கு முதலாளித்துவ நாடுகளிலும், அதே போன்று காலனி நாடு களிலும் உள்ள, கம்யூனிஸ்ட் மற்றும் தொழிலாளர் கட்சி களுக்குப் பெரிதும் உதவியுள்ளது. தேசியப் பிரச்சினை பற்றி அவற்றின் ஆதார நெறி மற்றும் போர்த் தந்திரங்களில் சரியான தொலைநோக்கினைக் கொள்ளவும், சமுதாய மற்றும் தேசிய விடுதலைக்கான மக்களின் புரட்சிகர இயக்கத்தை வழி நடத்தவும் அது பெரிதும் உதவியுள்ளது.

2. அக்டோபர் புரட்சியின் வெற்றி. முதலாளித்துவ உலகில் தேசியப் பிரச்சினையின் உள்ளடக்கத்தில் ஏற்பட்ட மாற்றங்கள்

முதலாளித்துவ பொது நெருக்கடியின் முதலாவது கட்டம் முழுமையிலும், பூர்ஷுவா உலகில் ஏற்பட்ட தேசங்கள் மற்றும் தேசிய உறவுகளின் வளர்ச்சி பற்றிய நமது பரிசீலனைக்கு தேசிய மற்றும் காலனிப் பிரச்சினை பற்றிய லெனினது தத்துவம் அடிப்படையானதாகும். அத் தத்துவம் முதலாவது உலக யுத்தத்தின் சமுதாய விளைவுகள் பற்றிய ஒருபகுப்பாய்வை அடித்தளமாகக் கொண்டதாகும். ஒரு சிறிய எண்ணிக்கையிலான சலுகை பெற்ற ஒடுக்கும் தேசங்களென்றும், ஒரு மிகப் பெரும்பான்மையான ஒடுக்கப்

* வி. இ. லெனின், ''நூல் திரட்டு'', தொகுதி 30, பக். 162.

பட்ட, சார்பு நிலையிலுள்ள, அரை சார்பு நிலையிலுள்ள தேசங்களென்றும் மக்கள் பிரிவுபட்டிருந்த நிலை; இன்னும் மிகவும் தீர்மானகரமாக மாறியிருந்தது. 1919-ன் இறுதியில் லெனின் கூறியதாவது, ''மிகவும் கொலை பாதகமான, மிகவும் பிற்போக்கான 1914-1918-ம் ஆண்டு யுத்தம், "இந்தப்பிரிவினையை இன்னும் அதிகமாக தீவிரப்படுத்தியது. அதன் ஓர் விளைவாக விரோதமும் குரோதமும் உக்கிர மடைந்தன''*

இரண்டாவது கம்யூனிஸ்ட் அகில காங்கிரசின் தயாரிப்புகளின் பொழுது, ஒடுக்கப்பட்ட மற்றும் ஒடுக்கும் நாடுகளின் உறவுகளில் ஏற்பட்ட புதிய அம்சங்களைப் பற்றி, லெனின் விசேடமாயும் மிக நெருக்கமான ஆராய்ச்சியை செய்தார். குறிப்பாக, அக்டோபர் புரட்சியின் விளைவாக ஏற்பட்ட நிலைமைகளை அவர் ஆராய்ந்தார். ஆனால், அத்துடன் அவர், வளர்ச்சிபெற்ற முதலாளித்துவ நாடுகளின் மக்கள் மத்தியிலான உறவுகள் விஷயத்திலும் கவனம் செலுத்தினார். தேசிய மற்றும் காலனிப்பிரச்சினை சம்பந்தமான அவரது அறிக்கையின் சுருக்கம் ஏற்கனவே எழுதப்பட்டு, சுற்றுக்கு விடப்பட்டிருந்தது. என்றாலும் அவரிடமிருந்த குறிப்புக்கள் ,விவரங்களைவைத்து அவருடைய ஆய்வினை அவர் மேலும் தொடர்ந்தார். ''அனைத்துத் தோழர்களும், குறிப்பாக, இந்த மிகவும் சிக்கலான பிரச்சினைகளில் எதனைப்பற்றியாவது திட்டவட்டமான செய்தியை வைத்திருப்பவர்கள், தங்களது கருத்துக்களை, திருத்தங்களை, சேர்க்கைகளை, ஸ்தூலமான குறிப்புகளை (அவருக்கு) தெரிவிக்குமாறு'' அவர் கேட்டுக்கொண்டார். அவர் விசேட அக்கறை கொண்டிருந்த பிரதேசங்கள், நாடுகள், மக்களைப்பற்றி அவர் மேலும் விவரித்திருந்தார்.**

புதிய சூழ்நிலையில் தேசியப் பிரச்சினையின் உள்ளடக்கம் பற்றிய பகுப்பாய்வினை அவர் மேற்கொண்டார். அவரது

* வி. இ. லெனின் ''நூல் திரட்டு'', தொகுதி 30, பக். 293.

** வி. இ. லெனின், ''நூல் திரட்டு'', தொகுதி 31, பக். 144.

பகுப்பாய்வில், ஒடுக்கும் மற்றும் ஒடுக்கப்படும் தேசங்களாக முதலாளித்துவ உலகம் பிளவுபட்டதற்கான பொருளாதார காரணங்களின்பால், முன்னைவிட மிகுந்த கவனத்தை லெனின் செலுத்தினார். லெனின், அதன்படி, முதலாவதாக பொருளாதார அம்சங்களை ஆராய்வது அதன்பின்தான் தேசிய அம்சங்களையும், தேசிய உறவுகள் பற்றிய அம்சங் களையும் ஆராய்வது எனும் மார்க்சீய விதியின்பால் விசுவாசத்துடனும் அவர் வலியுறுத்திக் கூறியதாவது, "இந்த ஏகாதிபத்திய யுகத்தில் அனைத்து காலனி மற்றும் தேசியப் பிரச்சினைகளிலும் ஆய்வினை மேற்கொள்கையில், திட்டவட்டமான பொருளாதார உண்மைகளை நிறுவி வெறும் கருத்தியலான அடிக்கோள்களிலிருந்தன்றி, திட்ட வட்டமான உண்மை நிலைகளிலிருந்து ஆராயவேண்டுவது குறிப்பாயும் முக்கியமானது."*

உலக மக்கட் தொகையின் மறுபகிர்வு பற்றியும், பிரதேச ரீதியான மாற்றங்கள் பற்றியும் லெனின் விசேட கவனம் செலுத்தினார்.

சோவியத் நாட்டின் பிரதேசமும், பொருளாதாரமும், மக்கட்தொகையும் முதலாளித்துவ அமைப்பிலிருந்து விடுபட்டுவிட்டது. யுத்தத்திற்குப் பிந்திய உலகில் இது பிரதான மாற்றமாக இருந்தது. உலக அமைப்பில் பதினாறு சதவீத நிலப்பரப்பும், ஏறத்தாழ எட்டு சதவீத மக்கட் தொகையும் உலக சோஷலிசத்தை துவக்கி விட்டன. இரு வர்க்கங்களுக்கும், இரு உலகங்களுக்கும், இரு சரித்திர ரீதியான உலக சகாப்தங்களுக்குமிடையிலான ஒரு ஈவிரக்க மற்ற ஜீவ மரணப் போராட்டம் துவங்கிவிட்டது.**

முதலாளித்துவத்தின் முழுநிறை ஆட்சி முடிவுக்கு வந்து விட்டது என்ற உண்மை, அடிப்படை முக்கியத்துவமுடைய தாக இருந்தது. உலக முதலாளித்துவ வளர்ச்சிப் போக்கு

---

* வி. இ. லெனின், "நூல் திரட்டு", தொகுதி 31, பக். 240.

** வி. இ. லெனின், "நூல் திரட்டு", தொகுதி 30, பக். 355.

களின் மீது மனிதகுல வாழ்வு இனிமேல் முற்றிலுமாக சார்ந்திருக்க வேண்டியதில்லை, மாறாக அத்துடன், முன்னிலும் அதிகரித்த அளவுக்கு, பெருகிவரும் சோஷலிசத்தின் வலிமை வாய்ந்த நிலைகளை, புதிய சமுதாய அமைப்பினை சார்ந்து நிற்கும் நிலைமை வந்து விட்டது. தேசத்திற்கு தேசம், அரசிற்கு அரசு என்ற முறையிலிருந்த உறவுகளிலும், உலக அளவிலும், பழமைக்கும் புதியதிற்குமிடையிலான வர்க்கப் போராட்டம் தீவிரமாக பரவி விட்டது— முன்னுளில் ஏகாதிபத்தியம் முழுநிறை ஆட்சி செலுத்திய பிரதேசங் களிலும் பரவி விட்டது.

எடுத்த எடுப்பில் முதலாவது உலக யுத்தத்திற்குப் பிறகு முதலாளித்துவ உலகில் பிரதேச ரீதியில், மக்கட்தொகை ரீதியில் ஏற்பட்ட மாற்றங்களுக்கு அதிக அர்த்தமேதுமில்லை என்பதை அறியலாம். ஏனெனில், அந்த மறு பங்கீடு, ஒடுக் கும் நாடுகளுக்கும், ஒடுக்கப்படும் நாடுகளுக்குமிடையில் ஏற் படவில்லை. ஒடுக்கும் நாடுகளுக்கிடையிலேயே பிரதான மாக நிகழ்ந்தது, ஜெர்மன் காலனிகளில் 2,000000 சதுர கிலோ மீட்டர் பரப்பளவையும், துருக்கியின் வசமிருந்த காலனியில், 8,75,000 சதுர கிலோ மீட்டர் பரப்பளவை யும் பிரிட்டன் கைப்பற்றியது. அதே சமயம் பிரான்ஸ், தோற்றுப்போன அதே இருநாடுகளின் காலனிகளில் முறையே 7,45,000 மற்றும் 2,05,000 சதுர கிலோ மீட்டர் பரப்பளவுகளை "தனதாக்கிக் கொண்டது". இரண் டாவது கம்யூனிஸ்ட் அகில காங்கிரசுக்கான அவரது அறிக் கையில் லெனின் கூறியதாவது, "துருக்கி, பாரசீகம், மெஸபடோமியா மற்றும் சீனு ஆகியவற்றை பங்கு போடு வதில், ஜப்பான், பிரிட்டன், அமெரிக்கா, பிரான்ஸ் ஆகிய வற்றிற்கிடையே மூர்க்கத்தனமான சச்சரவு நிலவியது."* அந்த காலனிகளிலிருந்த மக்கள் மீதான ஒடுக்கு முறை முடிவுக்கு வரவில்லை. அதற்கு மாறாக, லெனின் கொடுத்த மேற்கோள்களின் அடிப்படையில் அடிமைப்படுத்தப்பட்ட

* அதே நூல், தொகுதி 32, பக். 226.

நாடுகளில் போடப்பட்ட மூலதனங்களின் மீது பெறப்பட்ட லாபங்கள் யுத்தத்தின் பொழுது மூன்று மடங்கு, நான்கு மடங்காக அதிகரித்தன.

இயற்கையாகவே, இது தேசிய உறவுகளை பாதித்தது, மக்களினங்களிடை பிளவை தீவிரப்படுத்தியது. ஆனால், தேசிய உறவுகள் உக்கிரமடைந்ததன் பின்னால், இதர இரு முக்கிய காரணிகளும் இருந்தன. முதலாவதாக, ஏகாதிபத்திய நாடுகளின் தலைமைக்குழுவில் காணப்பட்ட மாறிய சூழ்நிலையைக் குறிப்பிடலாம். ஒரு கடனாளி என்ற நிலைமையிலிருந்து பிரதானமாக கடன் வழங்குபவர் என்ற நிலைமைக்கு அமெரிக்கா வளர்ந்து விட்டது. பிரிட்டன், பிரான்ஸ், இத்தாலி ஆகியவற்றின்மீது ஒரு பொருளாதாரப் பிடிப்பை அது பெற்றிருந்தது. இந்த மாற்றத்தின் அறிகுறிகள் யுத்தத்தின் பொழுதே தோன்றி விட்டன. நேசநாடுகளுக்குள்ளிருந்த கடன் எழுமடங்காக பெருகியது. அவர்களது தேசிய செல்வாதாரத்தில் பிரிட்டன், பிரான்ஸ் ஆகியவை 52-54 சதவீதம் கடன் பட்டிருந்தன. அதே சமயம் இத்தாலி மிக உயர்ந்த அளவான 65—70 சதவீதம் கடன்பட்டிருந்தது. இதுவும், செல்வாக்கு மண்டலங்களையும் காலனிகளையும் மறுபங்கீடு செய்ததன் விளைவுகள்மீது ஏகாதிபத்திய வல்லரசுகளிடையே நிலவிய அதிருப்தியும் "வெற்றியாளர்களிடையே சிதைவு" இருக்கிறது என்ற முடிவுக்கு லெனினை இட்டுச் சென்றது.

பொதுவாக கொள்ளைக்கார யுத்தமும், குறிப்பாக மிக பெரும் கடன் சுமையும் முன்னென்றும் கண்டிராத அளவிற்கு பேரழிவை ஏற்படுத்தின. பூர்ஷுவாக்கள் தங்களது மக்கள் விரோதக் கொள்கையை நியாயப்படுத்த பெரிதும் முயன்றனர். இதர மக்கள்மீது பழிசுமத்தவும் தேசிய வாதத்தையும், குறுகிய தேசிய வெறியையும் ஊட்டி வளர்க்கவும் முயன்றனர்.

தோல்வியடைந்த நாடுகள் மீது வெற்றியாளர்களின் கொள்ளைச் சுரண்டல் இரண்டாவது காரணியாக இருந்தது. இது சமாதான உடன்படிக்கைகளில் முறையாக வரையறுக்

கப்பட்டது. உதாரணமாக ஜெர்மனி, அதன் காலனி சொத்துகள் மற்றும் அதன் வர்த்தகக் கப்பல்கள் உட்பட, அதன் அனைத்து காலனிகளையும் இழந்தது. இதற்கும் மேல் 42-ஆண்டுகளில் அதாவது 1963, மே 1-ம் தேதிக்குள்,— 2,26,000 மில்லியன் தங்க மார்க்குகளை ஜெர்மனி தர வேண்டுமென நிர்ப்பந்திக்கப்பட்டது. அந்தக் காலகட்டம் முழுமையிலும் வருடாவருடம் அதன் ஏற்றுமதி மதிப்பீட்டில் 12 சதவீதம் அளவுக்கு ஆண்டுதோறும் 43 மில்லியன் டன் நிலக்கரியை வெற்றியாளர்களுக்கு அளித்திடவேண்டும். அங்கே நிறுத்தப்பட்டுள்ள பட்டாளத்தின் செலவையும் ஜெர்மனியே அளித்திட வேண்டும். ஜெர்மனியின் கூட்டாளிகளும் இதேபோன்ற தாக்குப்பிடிக்க முடியாத நிலைக்கே ஆளாயினர். இதுபற்றி லெனின் குறிப்பிடுகையில், ''ஜெர்மனி, மற்றும் இதர தோல்வியடைந்த நாடுகளின் மீது திணிக்கப்பட்ட, வார்செயில் உடன்படிக்கை, அவற்றின் பொருளாதார நிலைமையை அறவே சாத்தியமற்ற தாக்குவதாகும். அவைகளது அனைத்து உரிமைகளையும் பறித்து, அவற்றை அவமானப் படுத்துவதாகும்''* என்றார்.

முதலாளித்துவ பொது நெருக்கடியினால் மக்களின் பொருளாதார உறவுகளில் மாற்றங்கள் விளைந்தன. அவை தேசியப் பிரச்சினையின் புறநிலை ரீதியான சூழ்நிலைகளிலும், அதன் உள்ளடக்கத்திலுமான மாற்றங்களாகவும் இருந்தன. அப்பாதை நெடுகிலும், பிரதான போக்கு அரசியல் பிற்போக்குத் தனத்தை நோக்கியதாகவே அமைந்திருந்தது. தேசியப் பிரச்சினையின் சூழலில், இதர பல விஷயங்களுக்கு மத்தியில் இது காணப்பட்டது. அரசியல் சுதந்திரம் வெளியே தக்கவைக்கப்பட்டுள்ள அத்தகைய இடங்கள் உட்பட, பல இடங்களிலும் சார்பு நிலையிலிருந்து மாறும் தன்மையதான வடிவங்களின் பெருக்கத்திலும் இது காணப்பட்டது என்ற போதிலும், சாதாரணமாக, புதிய ஆதாயங்களுக்காக பெருமளவிற்கு செலுத்தப்பட்ட அரசியல் ஒடுக்கு முறை

* வி. இ. லெனின், ''நூல் திரட்டு'', தொகுதி 31 பக். 217.

மாத்திரமல்ல இது. சந்தேகத்திற்கிடமின்றி அப்போக்கும் நிலவியது மெய்யே. பல நாடுகளில், புறநிலை ரீதியாக தொழிலாளி வர்க்கப் புரட்சி அடுத்து வந்துவிட்ட சந்தர்ப்பத்தில் முதலாளித்துவ ஆட்சிக்கு அது ஒரு உடனடியான ஆபத்தாக மாறியிருந்த நிலையில் லெனினது அவதானிப்பு விசேட முக்கியத்துவம் வாய்ந்ததாக விளங்கியது. அடிமைப்படுத்தப்பட்ட மக்கள் மீதான சமுதாய ஒடுக்குமுறை பற்றி அவர் மதிப்பிடுகையில், ''உலகை ஆதிக்கம் செலுத்திய ஏகாதிபத்திய நாடுகளில் சமூக—இறு தேசிய வெறியினையும், சந்தர்ப்ப வாதத்தினையும் ஒசயற்கையான முறையில் ஆதரிப்பதற்கும், முதலாளித்துவத்தின் வீழ்ச்சியை செயற்கையான முறையில் தாமதப்படுத்துவதற்கான ஒரு ஆதாரமாகவும் அது விளங்கியது''* என அவர் குறிப்பிட்டார்.

தேசியப் பிரச்சினையின் புறநிலை உள்ளடக்கத்தில் ஏற்பட்ட மாற்றங்கள், அரசுகளின், வர்க்கங்களின், கட்சிகளின் கொள்கைகளிலும், தனி நபர்களின் சிந்தனையிலும், குணும்ச ரீதியிலான புதிய அகநிலை மாற்றங்களைத் தோற்றுவித்தன.

தேசிய மற்றும் சர்வதேசிய இயக்கங்களின் சாராம்சம் மற்றும் வடிவங்கள்பற்றி, பல்வேறு விதங்களில் அவர்கள் பிரதிபலிக்கத் துவங்கினர். மக்களின் தேசிய உணர்வு, தங்களது தேசிய அரசுத்துவத்தை வடிவுறச் செய்ய வேண்டும், உறுதிப்படுத்த வேண்டும் என்ற அவர்களின் பெருவிருப்பம், மிகவும் வேகமாக வ்ளர்ச்சி பெற்றது, பிரதான போக்குகளில் ஒன்ருக இது இருந்தது. சமுதாய விடுதலைக்கான போராட்டத்தில், பல்வேறு தேசிய இனங்களைச் சார்ந்த உழைக்கும் மக்களுக்கிடையிலான ஒரு அதிகரித்து வந்த நெருக்கமான உறவு, மற்ருெரு பிரதான போக்காக இருந்தது. இது ஒருபுறம், மற்ருெரு புறம், புரட்சிகர இயக்கத்தை எதிர்ப்பதற்காக கைகோர்த்திருந்த,

* வி. இ. லெனின், ''நூல் திரட்டு'', தொகுதி 22, பக். 342.

பல்வேறு தேசங்களைச் சேர்ந்த ஆதிக்க வர்க்கங்களிடை ஏற்பட்டுவந்த நெருக்கமான உறவைக் குறிப்பிடலாம்.

உழைக்கும் மக்களிடை வளர்ந்த இத்தேசிய சிந்தனையும், தேசிய உணர்வும் ஒரு மறுக்கவியலாத ஆக்கக் காரணியாக இருந்தது. உதாரணமாக, தேசியப் பிரச்சினையில் ஏற்பட்ட அவர்களது தவறுகளைத் திருத்திக் கொள்வதற்கு போலந்து கம்யூனிஸ்டுகளுக்கு உதவிட லெனின் தயங்கவில்லை. தொழிலாளர்களின் தேசிய உணர்வுகள் போன்றவற்றை கையாள்வதில் செக்கோஸ்லோவாக்கிய கம்யூனிஸ்ட்டுகளால் வலியுறுத்தப்பட்ட நயத்திறனை லெனின் வரவேற்றார். உலக ரீதியிலான புரட்சியின் வளர்ச்சி, தானாகவே தேச–அரசு கட்டமைப்புகளை ஒழித்துவிடும் என்று சில மேற்கு ஐரோப்பிய நாடுகளில் நிலவிய கருத்தை நீக்கவும் அவரது செல்வாக்கு உதவியது.

மேற்கு ஐரோப்பாவிலிருந்து புரட்சியாளர்கள்,மக்களின் தேசிய உணர்வின் இயல்பான வளர்ச்சியை கவனத்தில் எடுத்துக் கொண்டனர்; அதன் விளைவாக, பல புதிய தேசிய அரசுகளின் உருவாக்கத்தில் ஒரு முக்கிய பங்கினை வகிக்க தகுதி படைத்தவர்களாக இருந்தனர். அவர்களது முயற்சிகள் இருந்தபோதிலும் இந்த அரசுகள் பூர்ஷுவா அரசுகளாகவே மாறின என்பது உண்மையே. ஆஸ்திரிய-ஹங்கேரியின் இடிபாடுகளில் எழுந்த அரசுகளுக்கு இது முதலாவதாகவும் முக்கியமாகவும் பொருந்துவதாகும்: ஆஸ்திரியா, ஹங்கேரி, செக்கோஸ்லோவாக்கியா முடியாட்சிகளான செர்ப்ஸ், க்ரோட்ஸ் மற்றும் ஸ்லோவன்ஸ் முன்னைய ரஷ்ய சாம்ராஜ்யத்தின் பிரதேசத்தில், பல பூர்ஷுவா அரசுகள் அமைக்கப்பட்டன: போலந்து, பின்லாந்து, லாத்வியா, லிதுவேனியா, எஸ்தோனியா முதலியன.

ஒப்பந்த அண்டாண்டு சக்திகளின் நலன்களுக்கு முரணாக சில அரசுகள் தோன்றின, வேறு சில அவற்றின் நேரடியான எதிர் நடவடிக்கை இருந்த போதிலும் தோன்றின. பாட்டாளி வர்க்கப் புரட்சியின் சாத்தியப்பாடு மங்கத்

தொடங்கிய உடனே, இந்தப் புதிய நாடுகள் சிலவற்றின் பூர்ஷுவாக்கள், பெரிய ஏகாதிபத்திய வல்லரசுகளைக்கூட எதிர்த்திடத் தயங்கவில்லை. ஏனெனில், சோவியத் குடியரசுடன் நல்லுறவுகள் கொண்டிருப்பது, அவர்கள் மென்னியை இறுக்கி கொள்ளையிடுகிற அண்டாண்டுக்கு ஒப்பந்தத்திற்கு கீழடங்கியிருப்பதைக் காட்டிலும் அதிக சாதகம் மிக்கதாகும் என்பதை அவர்கள் சரியாகவே கணித்தனர். "இது தேசியப் பிரச்சினையில் பின்லந்து பூர்ஷுவாக்கள் மீது நாம் ஈட்டிய பிரம்மாண்டமான வெற்றியாகும்"* என்றார் லெனின். பூர்ஷுவா பின்லந்து தனது பாதையை மாற்றி சோவியத் ரஷ்யாவுடன் சமாதான உடன்படிக்கையை நாடியது எனும், நிலைமை தெட்டத் தெளிவாகிவிட்டபொழுது, லெனின் இதனைக் கூறினார்.

உழைக்கும் மக்களின் சர்வதேசிய ஒற்றுமை, மேலும் உறுதியாக இருந்தது கண்கூடு. தங்களது சொந்தநிலைபாட்டை முட்டுக் கொடுத்து நிறுத்துவதற்கு வேண்டி இந்த ஒற்றுமையை பலவீனப்படுத்த பூர்ஷுவாக்கள் முனைந்தனர். அதற்காக, தேசிய வாதத்தினையும், குறு தேசிய வெறியினையும் பரப்பிட முயன்றனர். மக்களினங்களின் வாழ்க்கையில் தீர்மானகரமான காரணியாக, தேசிய ஒற்றுமை சித்தரிக்கப்பட்டது; அதே சமயம், பல்வேறு தேசிய இனங்களைச் சேர்ந்த உழைக்கும் மக்களின் வர்க்க ஒற்றுமை, புரட்சிகர கிளர்ச்சியாளர்களின் ஒரு "புனைவு" என்பதாக இழிவு படுத்தப்பட்டது. தேசிய வாதப் பிரச்சாரம் மக்களது கவனத்தை திசை திருப்பியது. இதர மக்களுக்கு எதிராக அப்பிரச்சாரம் ஒருமுனைப்படுத்தப்பட்டிருந்தது. "ஒவ்வொரு நாட்டிலுமுள்ள தங்களது சொந்த தொழிலாளர்களை தோற்கடிப்பதற்காக"** முதலாளிகளுக்கு விட்டு வைக்கப்பட்ட ஒரே புகலிடமாக இது இருந்தது என லெனின் சுட்டிக்காட்டினார்.

---

* வி. இ. லெனின், "நூல் திரட்டு", தொகுதி 29, பக். 194.

** வி. இ. லெனின், "நூல் திரட்டு", தொகுதி 28, பக். 150.

புரட்சியின் பிரதான தளமாக இருந்த சோவியத் ருஷ்யாவின் மீது, தேசிய வாதத்தையும் குறு தேசிய வெறியையும் கிளறிவிட முதலாளி வர்க்கம் பெரு முயற்சி செய்தது. போலந்து, பின்லந்து மற்றும் பால்டிக் நாடுகளில் இப் பிரச்சாரம் கட்டவிழ்த்து விடப்பட்டது. ருஷ்ய தொழிலாளர்களும், விவசாயிகளும், போல்ஷிவிக் கட்சியும் சகல தீமைகளும் புரிந்தவர்களாகக் குற்றம் சாட்டப் பட்டனர். மானிட உணர்வுகள், குறிப்பாக தேசிய உணர்வுகள், ருஷ்யாவின் சகல அம்சங்களுக்கும் எதிரான தேசியப் பகைமையாக ஒருமுனைப் படுத்தப்பட்டு வந்தன. 1919 வசந்த காலத்தில், போலந்து பாட்டாளி வர்க்க இயக்கத்தின் சிக்கலான, முரண்பாடான நடப்பினைக் குறிப்பிட்டு லெனின் கூறியதாவது, "மாஸ்கோ வாசிகள் மகா-ருஷ்யர்கள், எப்பொழுதுமே போலந்து மக்களை ஒடுக்கி வந்தவர்களாவர். அவர்கள் தங்களது மகா-ருஷ்ய குறுகிய தேசிய வெறியை கம்யூனிசம் எனும் போர்வைக்குள் போலந்தினுள் கொண்டு வர விரும்புகின்றனர் என்பது போன்ற அறிக்கைகளால் அங்கு தொழிலாளர்கள் அச்சுறுத்தப்படுகின்றனர்."* பின்லந்து பூர்ஷுவாக்களைக் குறிப்பிட்டு லெனின் கூறினார்,அவர்கள் "மக்களை ஏமாற்றிக் கொண்டிருந்தனர். மாஸ்கோவாசிகள் குறு தேதிய வெறியினர்,மகா—ருஷ்யர்கள் பின்லந்தை நசுக்க விரும்புகின்றனர் என்று குற்றம் சாட்டுவதின் மூலம், உழைக்கும் மக்களை அவர்கள் ஏமாற்றிக் கொண்டிருந்தனர்."**

ஒவ்வொரு நாட்டிலும் நிலவிய தேசிய உறவுகளின் சாராம்சம் பற்றி, தேசங்களின் வளர்ச்சி பற்றி, ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் லெனின் சோதனை செய்தார். தொழிலாளர்களின் வர்க்கப் போராட்டத்தின் மீதும் பொதுவாக

---

* வி. இ. லெனின், "நூல் திரட்டு", தொகுதி 29, பக். 175.

** வி. இ. லெனின், "நூல் திரட்டு", தொகுதி 29, பக். 171.

புரட்சிகர இயக்கத்தின் மீது அவை செலுத்திய பாதிப்பினைப் பற்றியும் அவர் ஆராய்ந்தார்.

அக்டோபர் புரட்சியின் தாக்கத்தின் கீழ் ஐரோப்பாவில் ஏற்பட்ட, புரட்சியின் ஏற்ற இறக்க போக்குகளில் தேசியப் பிரச்சினையின் இடம், பாத்திரம் ஆகியவை பற்றிய ஒரு முழு நிறைவான பகுப்பாய்வு அவரது நூல்களில் அடங்கி யுள்ளது. அதனுடைய ஆட்சிக்கு அரண் செய்து கொள்வ தற்காக, தேசிய வாதத்தை பூர்ஷுவா வர்க்கம் நாட முயலும் பொழுது, எந்த நாடாயினும் அதன் நடத்தையை தேசிய முரண்பாடல்ல, மாறாக வர்க்க முரண்பாடுகளே என்பதை அவர் கண்டறிந்தார். 1918-லும், 1919-லும் ஜெர்மனியில்நிகழ்ந்தசம்பவங்களும்,1919-ன் கோடையிலும் வசந்தத்திலும் சோவியத் ஹங்கேரியில் நிகழ்ந்த சம்பவங் களும், இதனை மிகவும் தெளிவாக எடுத்துக் காட்டும் சான்று களாகும். தேசிய வாதம், அனைத்து எதிர்ப் புரட்சி சக்தி களையும் அணி திரட்டும் பதாகையாக இருந்தது. 1920-ல் பொங்கியெழுந்த புரட்சி அலையை தடுத்து நிறுத்த துணிகர மாக முயன்ற பொழுது, போலந்து பூர்ஷுவாக்களின் பிரதான கருவியாகவும்கூட இது இருந்தது. குறு தேசிய வெறியைத் தூண்டுவதற்கு மிகவும் பொருத்தமான சூழலாக யுத்தம் இருந்ததால், பல ஐரோப்பிய நாடுகளிலிருந்த பூர்ஷுவாக்கள் சோவியத் குடியரசின் சமாதான முயற்சிகளை திட்டமிட்டு சீர்குலைத்தனர். 1920-ஜனவரியில், போலந்திடம் சமர்ப்பித்த சோவியத் சமாதான பிரேரணைகள் பற்றி குறிப்பிட்டு லெனின் கூறியதாவது, "அது போலந்திலும், பிரான்சிலும், மற்றுமிதர நாடுகளிலும், ஒரு மிருகத் தனமான தேசிய வெறி வெடித்துக் கிளம்புவதை மட்டுமே தூண்டியது. நம்மை தாக்குவதற்கு போலந்தை அது தூண்டியது."*

சில இடங்களில் தேசிய இயக்கம் ஒரு உயர் அளவிலான தேசிய உணர்வினை உண்டாக்கி, அதன் விளைவாக தேசிய

---

* வி. இ. லெனின், "நூல் திரட்டு", தொகுதி 31, பக். 275.

அரசுகளின் உருவாக்கம் ஏற்பட்டது. உண்மையில் இது சாதகமான காரணியாக இருந்தது. வேறு சில இடங்களில், எவ்வாருயினும், இம் மகா தேசிய உணர்விலிருந்தும், மக்களின் தேசபக்தியிலிருந்தும் பூர்ஷுவாக்கள் ஆதாய மடைந்தனர். இந்தப் போக்கை திசை திருப்பினர், அதில் தேசிய வாதத்தையும், குறுகிய தேசிய வெறியையும் விதைப் பதில் வெற்றியடைந்தனர். சுரண்டுவோரும், சுரண்டப் படுவோரும் தேசிய ரீதியில் ஒன்றுபட்ட சக்தியாக மாறு வதை தடுத்து வெற்றி கொள்வதில் தொழிலாளி வர்க்கம் தோல்வியடைந்தது. இதற்கான பிரதான காரணங்களி லொன்ருக இப்பின்னர் கூறப்பட்ட மெய்நடப்பைக் கருதலாம். முதலாளித்துவ தேசங்களிலுள்ள பெருவாரியான மக்களை தொழிலாளி வர்க்கத்தைச் சுற்றி அணி திரட்டவும் சோஷலிசப் பாதையில் தேசத்தை வழிநடத்தவும் தற்போது நிலவி வரும் வர்க்கப் பாகுபாடு போதுமானதாக இல்லை என்பது நிரூபணமாயிற்று.

இருப்பினும் முதலாளித்துவ உலகில் சர்வதேசிய நடப்புக்கள் அங்குள்ள கோடிக் கணக்கான மக்களை அரவணைத்து நின்று முன்னென்றும் கண்டிராத வகையில் ஒரு தன்மையைப் பெற்றுள்ளன. அவைகளும்கூட, சோஷ லிசப் புரட்சியின் வெற்றிக்கு இட்டுச் செல்லும் அவற்றின் பின்னுள்ள உந்துசக்திகள் பலவிதமாகும். முதலாவதாக, கூர்மையான வர்க்க முரண்பாடுகள், அதன் பலனுக, வளர்ச்சி பெற்ற முதலாளித்துவ நாடுகளில் ஏற்படும் புரட்சிகர சூழ்நிலைகள், பாட்டாளி வர்க்கத்தின் தலைமையில் முதலாளித்துவத்திற்கெதிரான ஒரு சர்வதேச அணியில் ஒன்றுபடுவதற்கான, அனைத்து தேசிய இனங்களையும் சேர்ந்த உழைக்கும் மக்களின் விருப்பம் என்பன போன்ற உட்காரணிகளைக் குறிப்பிடலாம். இரண்டாவதாக அக்டோபர் புரட்சியின் சக்தி பொருந்திய சர்வதேசிய தாக்கமும் சோவியத் நாட்டில் மேற்கொள்ளப்படும் ஆரம்ப சோஷலிச நடவடிக்கைகளும் இருந்தன.

சர்வதேசிய நடப்புக்களைப் பின் தொடர்ந்து(அவற்றின் பின்னுள்ள பிரதான காரணிகளிலொன்றாக பின்னர் மாறியது), திண்மையான சர்வதேசிய புரட்சியாளர்களது பிரிவுகள் முதலாவது ஏகாதிபத்திய உலக யுத்தத்தின் ஆரம்ப மாதங்களில் தோன்றின. வளர்ச்சி பெற்ற பல முதலாளித்துவ நாடுகளில் எதிர்கால கம்யூனிஸ்ட் கட்சிகளுக்கான அடித் தளத்தை இட்டன. அவர்களது செயல்பாடு லெனினோடு மிகவும் நெருக்கமாக இணைப்புண்டிருந்தது. அப்பொழுது லெனின், மேற்கு ஐரோப்பாவில் தங்கியிருந்தார். ஸிம்மர் வால்டு இடதுசாரிகளின் அமைப்பாளராக அவர் இருந்தார்.

சர்வதேசிய புரட்சியாளர்களைப் பற்றி குறிப்பிடுகையில் லெனின் அழுத்தந் திருத்தமாக கூறினார், ''அத்தகையவர் களின்மீது **மட்டுமே** சோஷலிசத்தின் எதிர்காலம் சார்ந் துள்ளது.''* அதனால்தான், யுத்தம் துவங்கிய வெகுசில வாரங்களுக்குப் பிறகு, சந்தர்ப்ப வாதத்தின் தாக்கத்தால் இரண்டாவது கம்யூனிஸ்ட் அகிலம் உடைந்த பொழுது, மூன்றாவது கம்யூனிஸ்ட் அகிலத்திற்கான அடித்தளத்தை அமைத்த அனைவருக்கும் லெனின் தலைமை தாங்கினார். பல நாடுகளில் முளைவிட்ட சோஷலிசப் புரட்சியின் சர்வ தேசியத் தன்மையும், சர்வதேசிய தொழிலாளி வர்க்க இயக்க மும்அதற்கான அடித்தளமாகஇருந்தது. லெனினது பிரேரணை யின் அடிப்படையில், புதிய கம்யூனிஸ்ட் அகிலத்தின் கோட் பாடுகள் அமைந்திருந்தன. அவற்றை ஏற்றுக் கொள் வதென்பது, ஒவ்வொரு கட்சியும் அதன் அணியில் சேரு வதற்கான, நிபந்தனையாகும். பாட்டாளி வர்க்க சர்வதேசியமும் இதிலுட்பட்டுப், லெனினால் வரையறுக்கப் பட்டிருந்த கம்யூனிஸ்டுகளின் சர்வதேசியக் கடமைகளுக்கு மத்தியில், ''எதிர்ப் புரட்சி சக்திகளுக்கு எதிரான போராட் டத்தில் எந்த ஒரு சோவியத் குடியரசிற்கும் தன்னலமற்ற முறையில் உதவுவது''** என்ற அவசியத் தேவைக்கு விசேட

* வி. இ. லெனின், ''நூல் திரட்டு'', தொகுதி 24, பக். 80

** வி. இ. லெனின், ''நூல் திரட்டு'', தொகுதி 31, பக். 210.

முக்கியத்துவம் அளிக்கப்பட்டிருந்தது. மற்றும், "காலனி களிலிருந்து தனது சொந்த நாட்டு ஏகாதிபத்தியங்களை வெளியேற்றுவதென்ற கோரிக்கைக்காக, ஒவ்வொரு காலனி விடுதலை இயக்கத்தையும்—வெறுமனே சொல்லிலன்றி, செயலில்—ஆதரிப்பது"* என்ற உறுதிமிக்க கடமையின்பால் விசேட முக்கியத்துவம் அளிக்கப்படடிருந்தது.

உலகம் முழுமையிலும் உழைக்கும் மக்களின் முன்னணிப் படையினர் மத்தியில், பாட்டாளி வர்க்க சர்வதேசியம் ஆழமாக வேரோடியிருந்தது. 1919 மார்ச்சில் நடைபெற்ற கம்யூனிஸ்ட் அகிலத்தின் முதலாவது காங்கிரசுக்கு, 21-ஐரோப்பிய, அமெரிக்க, ஆசிய நாடுகளிலிருந்து, முப்பதைந்து கம்யூனிஸ்ட் மற்றும் இடதுசாரி-சோஷலிஸ்ட் ஸ்தாபனங்கள் வந்திருந்தன. பின்னுல், சர்வதேசிய இயக்க மானது இன்னும் சடவேகமானதாக இருந்தது: ஏறத்தாழ 48 நாடுகளிலிருந்து கம்யூனிஸ்ட் கட்சிகளும், 28-இளைஞர் அமைப்புகளும்,இதரபல பாட்டாளி வர்க்க அமைப்புகளும்—எல்லாமாகச் சேர்ந்து 52 நாடுகளின் பிரதிநிதிகள்—1921-ஜூனில் நடைபெற்ற, கம்யூனிஸ்ட் அகிலத்தின் மூன்றுவது காங்கிரசில் பங்கு பெற்றனர். அத்தருணத்தில், முதலாளித்துவ நாடுகளிலிருந்த 15-லட்சத்திற்கும் அதிக மான உறுப்பினர்கள் உட்பட, 22-லட்சத்து 30-ஆயிரம் உறுப்பினர்களை, உலக கம்யூனிஸ்ட் இயக்கம் பெற்றிருந்தது.

பாட்டாளி வர்க்க சர்வதேசிய பதாகையின்கீழ், முன்னென்றும் கண்டிராத அளவிற்கு, உழைக்கும் மக்களின் உலகுதழுவிய விடுதலை இயக்கம் வளர்ந்தோங்க அக்டோபர் புரட்சியும், முதலாளித்துவப் பொது நெருக்கடியும் துணை செய்தன: உதாரணமாக ஜெர்மனியில், 1918-ஜனவரி வேலை நிறுத்தத்தில் பத்து லட்சத்திற்கும் மேற்பட்டவர்கள் பங்கு பெற்றதைக் குறிப்பிடலாம். இவ்வேலைநிறுத்தம் யுத்த தளவாடத் தொழிற்சாலைகளில், ஸ்பார்டகஸ் லீக்கினுல் நடத்தப்பட்டது. 1918-ல், பிரிட்டனில் நடைபெற்ற

* வி. இ. லெனின், "நூல் திரட்டு", தொகுதி 31, பக். 209.

வேலை நிறுத்தங்களில், ஏறத்தாழ 15-லட்சம் பேர் பங்கு பெற்றனர். 1919-ம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் பிரான்சில் 213-வேலை நிறுத்தங்கள் நடைபெற்றன. மே, ஜூன் மாதங்களில் ஏறத்தாழ 1050 வேலை நிறுத்தங்கள் நடைபெற்றன. வேலை நிறுத்தம் செய்தோர் எண்ணிக்கை எட்டு மடங்காக உயர்ந்தது. அமெரிக்காவில், 1917-ல் நடைபெற்ற வேலை நிறுத்தங்களில் 12 லட்சத்து 27-ஆயிரம் பேர் பங்கு பெற்றனர். 1919-ல் 41-லட்சத்து 60-ஆயிரம் பேர் பங்கு பெற்றனர்.

பல நாடுகளில் வேலை நிறுத்த இயக்கம் புரட்சியாக உருவெடுத்தது: 1918 ஜனவரியில், பின்லந்தில் இவ்வாறு நிகழ்ந்தது; 1918-இலையுதிர் காலத்தில் ஜெர்மனியிலும் ஆஸ்திரியா-ஹங்கேரியிலும் நிகழ்ந்தது (முடியாட்சிகள் வீழ்ந்தன). 1919-வசந்தத்தில், விரைவாகவும் வரிசை யாகவும், ஹங்கேரியிலும், பவேரியாவிலும், ஸ்லோவாக்கி யாவிலும் சோவியத் குடியரசுகள் பிரகடனப்படுத்தப் பட்டன.

முதலாளித்துவ உலகம் நெருக்கடியில் ஆழ்ந்திருந்தது. தேசியத் தடைகள் வீழ்ந்தன. யுத்தத்திற்கு முந்திய பல வருடகால முதலாளித்துவப் பிரச்சாரம் ஒரு புறம் இருந்த போதிலும், குறு தேசிய வெறி பின்னுக்குத் தள்ளப் பட்டது. அனைத்து தேசிய இனங்களையும் சேர்ந்த தொழிலா ளர்கள் ஒருவருக்கொருவர் கைகோர்த்துக் கொண்டு, தங்களது சுரண்டலாளர்களை எதிர்க்க ஒரு மனிதனைப் போல் எழுந்தனர்.

ருஷ்யாவில் நிகழ்ந்த அக்டோபர் புரட்சியின் அளப்பரிய சர்வதேசிய செல்வாக்கும், சோஷலிச புனர் நிர்மாணத்தின் துவக்கமும், லெனின் கூறியபடி, ''ஐரோப்பா முழுமை யிலும் அமெரிக்காவிலும் ஒரு கிளர்ச்சிப் பெருந்தீயை துவக்கிவிட்டது.''*

* வி. இ. லெனின், ''நூல் திரட்டு'', தொகுதி 26, பக். 513.

அக்டோபர் புரட்சியின் தாக்கம், சமுதாய களத்தில், வர்க்க முரண்பாடுகளை தீவிரப்படுத்தியது என்பது மிகத் தெளிவாகவே புரிந்துகொள்ளக் கூடியதாகத்தான் இருந்தது. ஆனால் அத்துடன் அது, தேசிய மற்றும் சர்வதேசிய நடப்புகளின் மீதும் ஒரு வலிமையான செல்வாக்கைக் கொண்டிருந்தது.

உதாரணமாக, ஜெர்மனி மீதான அக்டோபர் புரட்சியின் சர்வதேசிய செல்வாக்கு அதனை முழுமையாக கவ்வியிருந்தது. அத்தருணத்தில் ஜெர்மன் புரட்சி பக்குவமடைந்திருந்தது என்பதில் நம்பகம் வைத்த லெனின் கூறினார், சோவியத் தொழிலாளி வர்க்கம், "எந்த அளவிற்கு முடியுமோ அந்த அளவிற்கு தனது பணியாலும், பிரச்சாரத்தாலும், தோழமை பூண்டதாலும் உதவ வேண்டும்... புரட்சிகர பாட்டாளி வர்க்க சர்வதேசியம் என்பதின் பொருள் அதுதான்."*

பாட்டாளி வர்க்கப் புரட்சியும் ஓடுகாலி கவுட்ஸ்கியும் என்ற நூலில், அக்டோபர் புரட்சியும் சர்வதேச செல்வாக்கு பற்றியும், முதலாளித்துவ உலகம் சம்பந்தமான போல்ஷிவிக் கட்சியினது கொள்கையைப் பற்றியும், லெனின் தெளிவாக பரிசீலித்துள்ளார். மேலும், "பாட்டாளி வர்க்க சர்வ தேசியமென்றால் என்ன?" என்ற தலைப்பில் ஒரு விசேஷ அத்தியாயம் அந்நூலில் உள்ளது. அதில், சர்வ தேசியத்தின் புதிய சக்திகளை அவர் அந்நூலின் ஒவ்வொரு பக்கத்திலும் உள்ளபடியே தேடுகிறார். எவ்வாறு சோஷலிசத்திற்கும், சர்வதேசியத்திற்கும், கவுட்ஸ்கியைப் போன்ற சந்தர்ப்பவாதிகள் துரோகமிழைத்தனர் என்பதையும், அவர்களது குட்டி பூர்ஷுவா தேசியவாத வரம்புகளை எவ்வாறு வெளிப்படுத்தினர் என்பதையும் அவர் எடுத்துக் காட்டியுள்ளார். எந்த நாட்டுத் தொழிலாளர்களாயினும், அவர்களது அடிப்படை நலன்கள், சர்வதேசிய தொழிலாளி வர்க்க இயக்கத்தின் நலன்களோடு ஒத்திருக்க வேண்டும்,

* வி. இ. லெனின், "நூல் திரட்டு", தொகுதி 27, பக். 23.

இந்த மார்க்சிய அடிக்கோளை எடுத்து விளக்குவதற்காக, ருஷ்யாவில் நிகழ்ந்த புரட்சிகர புனர் நிர்மாணத்தின் பின்னணியினது உண்மை விபரங்களை லெனின் பயன் படுத்தினார். ருஷ்யாவில் தொழிலாளி வர்க்க சர்வாதிகாரம் நிலைநாட்டப்பட்டதைத் தொடர்ந்து போல்ஷிவிக் கட்சி பின்பற்றிய போர்த் தந்திரங்கள் பற்றி குறிப்பிட்டு, அவர் திட்டவட்டமாகக் கூறினார், "அவை மட்டுமே சர்வதேசியத் தன்மை வாய்ந்த போர்த் தந்திரங்களாக இருந்தன. ஏனென்றால் அவை ஒரு நாட்டில், அனைத்து நாடுகளிலும் புரட்சிகர விழிப்புணர்வு ஏற்படவும், புரட்சி வளம் பெறவும் ஆதரவினைப் பெறவும், அதிகப்பட்ச வழிவகைகளை வகுத்தன."* இது பிரம்மாண்டமான வெற்றியாகும் என லெனின் கூறினார். ஏனென்றால், போல்ஷிவிசம் உலகு தழுவியதாக மாறி விட்டது. சர்வதேச தொழிலாளி வர்க்க இயக்கத்திற்கு ஒரு சித்தாந்தத்தை, தத்துவத்தை, வேலைத் திட்டத்தை, போர்த் தந்திரங்களை அது அளித்துள்ளது— ருஷ்ய போல்ஷிவிக்குகளின் தகுதியினாலும் மட்டும் இது ஏற்படவில்லை. ஆனால் அத்துடன், இந்த உண்மையான புரட்சிகர போர்த் தந்திரங்களை மக்கள்திரளினர் மிகவும் தீர்க்கமாயும் சர்வப் பொதுவாயும் மிகவும் அங்கீகாரம் செய்ததன் விளைவாகவும் ஏற்பட்டது.

1918-இலையுதிர் காலத்தில், போல்ஷிவிக்குகளின் போர்த் தந்திரங்களின், சர்வதேசிய இயல்பை லெனின் மிக வலிமையாக வலியுறுத்தினார். அத்தருணத்தில் ஜெர்மனியில் ஒரு வெற்றிகரமான சோஷலிசப் புரட்சி பிரம்மாண்டமாக காணப்பட்டது. ஜெர்மனி ஆக்கிரமித்திருந்த உக்ரேய்ன் பகுதிகள் பிலோரஷ்யா, பால்டிக் நாடுகள் ஆகியவற்றில், திரும்பவும் சோவியத் ஆட்சியைக் கொண்டு வருவதைக் கூட, சற்று நிறுத்தி வைக்குமாறு லெனின் ஆலோசனை கூறினார். ஜெர்மனியில் சோஷலிசப் புரட்சி கனிவுறுவதில் ஒரு எதிர் விளைவை அது ஏற்படுத்தலாம் என அவர்

* வி. இ. லெனின், "நூல் திரட்டு", தொகுதி 28, பக். 292.

கருதினர். 1918-இலேயுதிர் காலத்தில் நிலவிய சூழ்நிலையைக் குறிப்பிட்டு லெனின் கூறினர், உலகப் புரட்சிகர இயக்கம் எனும் சங்கிலியில், ஜெர்மன் கண்ணியே பிரதான கண்ணி யாகும். ''ஜெர்மன் புரட்சி ஏற்கனவே கனியும் நிலேயடைந் திருக்கிறது; உலகப் புரட்சியின் வெற்றி மிகவும் பெருமளவு அதனைச் சார்ந்தே இருக்கிறது.''*

ஜெர்மன் துருப்புகளால்கைப்பற்றப்பட்டிருந்த பிரதேசங் களிலிருந்த கம்யூனிஸ்டுகளே லெனின் மிகவும் பாராட்டினர். ஒரு குறு தேசிய வெறியின் அடிப்படையில், அனேத்து எதிர் புரட்சி சக்திகளேயும், குட்டி பூர்ஷுவா சக்திகளேயும் ஒன்றுபடுத்துவதற்கான ஒரு வாய்ப்பை ஜெர்மன் பிற்போக்குவாதிகளுக்கு அளிப்பதை தவிர்ப்பதற்காக, ஆக்கிரமிப்புத் துருப்புகளே தாக்குவதை அவர்கள் நிறுத்தி வைத்திருந்தனர். அவர்கள் கூறினர்: "...நாம் சர்வ தேசியவாதிகள், ருஷ்யா மற்றும் ஜெர்மனி இரண்டினதும் நோக்கு நிலேயிலிருந்து, நாம் விஷயங்களே பார்க்க வேண்டும்."** மேலும்,ஜெர்மன் புரட்சி மெய்யாக வெடித்த தருணம் தொழிலாளி-விவசாயி ஆட்சி இன்னமும் பிரகடனப் படுத்தப்படவில்லை என்ற போதிலும்-எதிர்கால சோஷலிச அரசுடன் சோவியத் ருஷ்யாவின் உறவை வரையறுப்பது பற்றி லெனின் ஒரு கணத்தைக்கூட வீணுக்காமல் திட்ட மிட்டார் என்பதை அதனே ஆதரிப்பதற்கு ஏற்பாடு செய்த நடவடிக்கைகள் வாயிலாக நாம் காண முடியும். புரட்சிகர ஜெர்மனியுடன் ஒரு நீடித்த உறவும், அதன் வெற்றியை உறுதிப்படுத்துவதில் உதவுவதுமே இந் நடவடிக்கைகளின் நோக்கமாக,இருந்தது. பல பணிகளுக்கு மத்தியில், எதிர் கால ஜெர்மன் தொழிலாளர்-விவசாயி அரசிற்காக,ஜெர்மன் எல்லேயில் 15-ரயில் பாரமுள்ள தானியங்களே கொண்டு போய் கொடுக்குமாறு லெனின் உத்தரவிட்டார். சோவியத்

---

* வி. இ. லெனின், ''நூல் திரட்டு'', தொகுதி 28, பக். 123.

** வி. இ. லெனின், ''நூல் திரட்டு'', தொகுதி 28, பக். 122.

ரஷ்யாவே பட்டினியால் வதைபட்டுக் கொண்டிருந்தது என்ற மெய்நிலை ஒரு புறமிருக்க, அப்படியும் இதனைச் செய்யுமாறு லெனின் உத்தரவிட்டார். "**கோதுமை உதவி யளிக்கவும், ராணுவ உதவியளிக்கவும், ஒரு தோழமை பூர்வமான கூட்டணிக்கான தயாரிப்பினை துவங்கிக் கொண்டிருக்கிறோம்.** ஜெர்மனியில் வெடித்துக் கிளம்பியுள்ள புரட்சியின் முன்னேற்றி நடந்த ஜெர்மன் தொழிலாளர் களுக்கு உதவுவதற்காக, நாம் அனைவரும் மடியத் தயார்,"* என முதலாளித்துவ நுகத்தடியிலிருந்து விடுதலை பெற்ற ஒரு தொழிலாளிவர்க்கம் கடைப்பிடிக்க வேண்டிய உண்மையான சர்வதேசியத்திற்கு ஒரு இணையற்ற உதாரணத்தை எடுத்துக் காட்டியிருப்பதாகவும், அதன் தேசிய நலன்களை சர்வதேசிய குறிக்கோளுக்கு கீழ்ப்படுத்தியிருப்பதாகவும் லெனின்கூறினார்.

1919-கோடையிலும், வசந்தத்திலும் 133-நாட்கள் வாழ்ந்திருந்த ஹங்கேரிய சோவியத் குடியரசின்பாலும், தனது சர்வதேசியக் கடமையை நிறைவேற்ற சோவியத் ருஷ்யா தவறவில்லை. ஹங்கேரிய சோவியத் அரசிற்கு முதன் முதலாக வாழ்த்துச் செய்தி அனுப்புகையில் லெனின் எழுதினார், "உங்களுக்கு உதவிட வருவதற்காக எல்லாவித முயற்சிகளையும் ருஷ்ய தொழிலாளி வர்க்கம் செய்து கொண்டிருக்கிறது."** ஹங்கேரிக்கு மிகவும் நெருக்கமாக இருந்த சோவியத் உக்ரைன் படைப்பிரிவுகளுக்கு, அடுத்து வந்த மாதங்களில் ஆதார நெறிக் கடமைகளை வரையறுத்த அவர் ஹங்கேரிய சோவியத் குடியரசிற்கு உதவுவதற்கு வேண்டி புக்கோவின மற்றும் கலிசியப் பகுதிகளை தகர்த்து முன்னேற வேண்டிய அவசியத்தை வலியுறுத்தினார். எதிர்ப் புரட்சி வெள்ளைப்படையின் தளபதி டெனிகின், உக்ரைனின் ஒரு பெரும் பகுதிக்குள் ஊடுருவிவிட்ட பிறகும்கூட, சோவியத் ஹங்கேரிக்கு ராணுவ உதவி அளிக்கும்

* வி. இ. லெனின், "மஞ்சரி" 21, பக். 252 (ரஷ்ய மொழியில்).

** வி. இ. லெனின், "நூல் திரட்டு", தொகுதி 29, பக். 197.

காரியத்தை அன்றைய பிரதான கடமையாக லெனின் வைத்திருந்தார்.

உலகப் புரட்சிகர இயக்கத்திற்கும், அனைத்து ஒடுக்கப்பட்ட, சுரண்டப்பட்ட மக்களுக்கும், சோவியத் தொழிலாளி வர்க்கமும், கம்யூனிஸ்ட் கட்சியும் ஆற்ற வேண்டிய சர்வதேசியக் கடமையின் ஓர் உருவமாகவே, சோவியத் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுக் கொள்கை எல்லா வகைகளிலும் அமைந்திருந்தது. அதற்கு பதிலாக, உலகமெங்குமிருந்த உழைக்கும் மக்கள்—முன்னேறிய முதலாளித்துவ நாடுகளின் தொழில் மையங்களிலிருந்து காலனிகளையும், சார்பு நாடுகளையும் சேர்ந்த தொலைதூர மூலைமுடுக்குகள் வரை—சோவியத் நாட்டின்பால் தங்களது ஆழமான பரிவுணர்வைப் பிரதிபலித்தனர், தங்கள் ஒருமைப்பாட்டை வெளிப்படுத்தினர், அந்நியத் தலையீட்டுப் படைகளுக்கு உடந்தையாக பணியாற்ற மறுத்தனர். சோவியத் ருஷ்யா அண்டாண்டின் முற்றிகையிடலுக்கு எதிராக, அதன் மிகவும் முக்கியமான வெற்றியைப் பெற முடிந்தது என்றால், அது எவ்வாறு சாத்தியமாயிற்று? செம்படையின் வலிமையினால் மட்டுமல்ல. ஆனால் அத்துடன், தலையீட்டுப் படைப்பிரிவுகளில் இருந்த புரட்சிகரப் போர்வீரர்களின் வீரத்தினாலும், சர்வதேசிய உணர்வினாலும் சாத்தியமாயிற்று என லெனின் சுட்டிக்காட்டினார். இதனால் முற்றுகையாளர்களுக்கு படைவீரர்கள் இல்லாமல் போயிற்று—அக்டோபர் புரட்சியை நசுக்குவதற்காக கப்பல் கப்பலாக கொண்டு வரப்பட்ட படை வீரர்கள் அக்டோபர் புரட்சிக்கு எதிராக போராட மறுத்து விட்டனர்.

முதலாளித்துவ நாடுகளிலிருந்த உழைக்கும் மக்களின் சர்வதேசிய ஒருமைப்பாடு, இவ்விஷயத்தில் எவ்விதத்திலும் குறைந்த முக்கியத்துவமுடையதல்ல: சோவியத் குடியரசிற்கெதிரான ஏகாதிபத்திய சதிகளை நிலை குலைத்திட அவர்கள் உதவினர். ஒடுக்குமுறையிலிருந்தும், சுரண்டலிலிருந்தும் தங்களது சொந்த விடுதலைக்காக அவர்கள் நடத்திய போராட்டத்தின் மூலம் உருப்படியான உதவியை

அளித்தனர். ''ருஷ்யாவின்மீது கை வைக்காதே!'' என்ற இயக்கம் மிகவும் பிரசித்தமானதாகும். சோவியத் நாட்டிற் கெதிராக ஏகாதிபத்தியம் தனது கரங்களை உயர்த்தும் போதெல்லாம், அதன் சொந்தத் தொழிலாளர்களாலேயே கைவிலங்கிடப்பட்டது என லெனின் அதனைப் பற்றி குறிப்பிட்டார். ''...நாம் வேறொரு வகையான ஆதரவையும் பெற்றிருந்தோம். அது நேரடியானதோ, உடனடியாக தோன்றி மறைவதோ அல்ல—உலகம் முழுமையிலுமிருந்த தொழிலாளர்கள், விவசாயிகள், பண்ணைத் தொழிலாளர்கள் ஆகியோரது ஆதரவையும், அனுதாபத்தையுமே குறிப்பிடு கிறேன். நமக்கு மிகவும் விரோதமாக இருந்த நாடுகளி லிருந்துங்கூட இவ்வாதரவினைப் பெற்றோம். அந்த ஆதரவும் அனுதாபமும், முற்றான மிகவும் தீர்மானகரமான ஆதாரமாக இருந்தது. நமக்கு எதிராக திருப்பிவிடப்பட்ட அனைத்து தாக்குதல்களும், முற்றாக தோல்வியுறுவதற்கான தீர்மானகரமான காரணமாகுமிது,''* என்று லெனின் கூறினார்.

பல நாடுகளில் சோவியத்துகள் அமைக்கப்பட்டதும், சோவியத் குடியரசுகள் பிரகடனப்படுத்தப்பட்டதும், பாட்டாளி வர்க்க சர்வதேசிய நடவடிக்கைகளாக இருந்தன. சோவியத் ருஷ்யாவிற்கு உதவுவதற்கான தயார்நிலைச் செயல் களாக இருந்தன. சோவியத் ஹங்கேரி அரசியல் சட்டத்தின் ஒரு பிரிவு ''சர்வதேசிய தொழிலாளி வர்க்க ஒருமைப் பாட்டு கோட்பாட்டை பிரகடனப்படுத்துகிறோம்'' எனக் கூறியது. மற்றொரு பிரிவு, ஹங்கேரிய சோவியத் குடியரசு, ''ஒற்றுமையை, அனைத்து நாட்டுத் தொழிலாளர்களது கூட்டணியை, உழைக்கும் மக்களின் ஒரு உலக சோவியத் குடியரசின் உருவாக்கத்தை விரும்புகிறது'' எனக் கூறியது. ஹங்கேரிய சோவியத்துக்களின் ஒரு மாநாட்டில் பேசுகையில் ஹங்கேரி சோவியத் அரசாங்க உறுப்பினரான டி. சாமுலி என்பார் குறிப்பிட்டதாவது, ''ருஷ்ய சோவியத் குடியரசுடன்

* வி. இ. லெனின், ''நூல் திரட்டு'', தொகுதி 33, பக். 145.

தனது ஒருமைப்பாட்டை வெளிப்படுத்துவது, ஹங்கேரிய சோவியத் குடியரசின் கடமையாகும்.'' அவரது அறிக்கை, பலத்த கையொலியுடன் வரவேற்கப்பட்டது. ''அதுதான் சரி!'' என்ற கோஷங்களுடனும் அது வரவேற்கப்பட்டது. அவர் கூறினர்: ''ஒரு விஷயம் மிகவும் தெளிவானது— சோவியத் பாட்டாளி வர்க்கம் ஆபத்திலிருக்கும்வரை, போராட்டத்தை நிறுத்துவதற்கு நமக்கு உரிமையில்லை.'' ரஷ்ய பாட்டாளி வர்க்கத்தின் உதாரணத்தைத் தொடர்ந்து, சோவியத் ஹங்கேரியின் உழைக்கும் மக்களும், பாட்டாளி வர்க்க சர்வதேசியத்திற்குத் தங்களது விசுவாசத்தை செலுத்தினர். தங்களது தேசிய நலனை மிக உயர்ந்த சர்வதேசிய நலனுக்குக் கீழடக்கினர்.

இரு சமூக அமைப்புகளுக்கிடையிலான போராட்டம், அரசின் ஒரு பிரதான அம்சமாக மாறிவிட்டது. அதன் விளைவாக தேசிய உறவுகளின் முக்கிய அம்சமாகிவிட்டது. பாட்டாளி வர்க்க சர்வதேசியத்தின் உள்ளடக்கத்திலும், வடிவங்களிலும் இதன் விளைவு இருந்தது. அக்டோபர் புரட்சிக்குப் பிறகு புதிய அம்சங்களைத் தோற்றுவித்தது.

பாட்டாளி வர்க்க சர்வதேசியம் பற்றிய முந்திய மார்க்சிய-லெனினிய அறுதியுரைகள் இரண்டை புரட்சி இயக்கத்தின் நடைமுறை உறுதிப்படுத்தியது.

முதலாவதாக, இதர மக்களினங்களை ஒடுக்குமானல், ஒடுக்கும் அம்மக்களினங்களும் சுதந்திரமாக இருக்க முடியாது என்ற அடிப்படையான கோட்பாட்டை உறுதிப் படுத்தியது. சமூக-சீர்திருத்தவாதத்திற்கு இது ஒரு மரண அடியாக இருந்தது. வளர்ச்சிபெற்ற முதலாளித்துவ நாடுகள் தங்கள் காலனிகளை வைத்துக்கொண்டே, இதர மக்களை ஒடுக்கிக்கொண்டே சோஷலிசத்திற்கு செல்ல முடியுமென்று சமூக-சீர்திருத்தவாதம் வலியுறுத்துகிறது, இன்னமும் வலியுறுத்தி வருகிறது. ஏனெனில், பின்னது. நாகரீகமடைவதற்கு இது ''உதவியது'' என ஒரு சாக்கு. ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலை அவசியமானது, ஏனெனில், தங்கள் சொந்த விடுதலைக்கே அது ஒரு நிபந்தனையாக

இருந்தது என்பதை, சோவியத் உதாரணத்திலிருந்து கண்ட வளர்ச்சி பெற்ற ஏகாதிபத்திய நாடுகளின் தொழிலாளர்கள் காலனிகளிலும், சார்பு நாடுகளிலும் நிகழ்ந்து வந்த தேசிய விடுதலைப் போராட்டத்தின் வளர்ச்சியில் மிக அதிகமான கவனத்தைச்செலுத்த ஆரம்பித்து விட்டனர். இயல்பாகவே இது சாம்ராஜ்ய நாடுகளிலிருந்த தொழிலாளி வர்க்க இயக்கத்துடன் கூட்டணி நாடுமாறு, காலனிகளிலிருந்த புரட்சியாளர்களின் ஆர்வத்தை இது இரு மடங்காக்கியது. தேசிய விடுதலை இயக்கத்தின் உறுப்பினர்கள், பாட்டாளி வர்க்க சர்வதேசியத்தை அங்கீகரிப்பதை இது துரிதப் படுத்தியது.

இரண்டாவதாக, ஒரு வெற்றிகரமான பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின்கீழ் வாழும் உழைக்கும் மக்கள், தங்களது சாதனைகளை, பாட்டாளி வர்க்க உலகப் புரட்சிக் கான ஒரு களமாக கருதவேண்டும். எனவே, தங்களது சொந்த தேசிய நலன்களுக்கு மேலாக சர்வதேசிய நலன் களுக்கு இடமளிக்க வேண்டும் என்பதனை அக்டோபர் புரட்சி உறுதிப்படுத்திவிட்டது. தொழிலாளி வர்க்கம், முதலாளிகள் உடைமைகளைப் பறிமுதல் செய்து, சோஷலிச உற்பத்தியை ஒழுங்கமைக்கும்போது—சோஷலிசப் புரட்சியை நசுக்க உலக முதலாளித்துவம் முயல்வது நிச்சயம் என்பதால்—எஞ்சிய முதலாளித்துவ உலகத்தோடு **மோதியே** தீரும். இதர நாட்டு ஒடுக்கப்பட்ட வர்க்கங்களை அது கவர்ந்தே தீரும், முதலாளிகளுக்கு எதிராக கலகப்புரட்சி நடத்துமாறு அவர்களுக்கு அது அறைகூவல் விடுக்கும் என்று 1915 ஆகஸ்டில் லெனின் வெளியிட்ட தீர்க்கதரிசனத்தை மெய்நடப்புக்கள் சரியென நிரூபித்துவிட்டன.*

சோவியத் அரசின் ஆரம்ப வரலாறு, லெனினது கருத்துக்களை உறுதிப்படுத்தியுள்ளது. ருஷ்யப் புரட்சியாளர் களின் வீரம் பொருந்திய செயல்களும், சோஷலிசத்தின் ஆரம்ப நிர்மாணிகளது மறக்கவியலா சாகசங்களும்

---

* வி. இ. லெனின், "நூல் திரட்டு", தொகுதி 21, பக். 342.

மனிதகுலம் முழுமைக்கும் சோஷலிச சமுதாயத்தை அமைப்பதற்கான அடித்தளத்தை அமைக்கும் உன்னதமான சர்வதேசியக் கடமையால் உத்வேகமூட்டப்பட்டிருந்தன. 1918-ஆகஸ்ட்டில் லெனின் கூறினர், "ருஷ்யாவில் ஒரு சோஷலிச அமைப்பிற்காகப் போராடுகையில், நாங்கள், உலகம் முழுமையிலும் சோஷலிசத்திற்காக போராடிக் கொண்டிருக்கிறோம்."*

உத்வேகத்திற்கான விளக்கம் இதுவே. சோவியத் ருஷ்யாவுடனான சக்தி பொருந்திய ஒருமைப்பாட்டு அலை, உலகம் முழுமையிலும் வாரி வீசியது. பாட்டாளி வர்க்க சர்வதேசியத்தின் வளர்ந்துவரும் முக்கியத்துவம் குறித்த துடிப்பான சான்றை அது நல்கியது. லெனின் குறிப்பிட்டதாவது, "ஏகாதிபத்திய பந்தங்களின் இரும்பு வளையத்தை வெறுக்கத்தக்க ஏகாதிபத்திய ஒப்பந்தங்களை, ஏகாதிபத்தியத் தளைகளை உடைத்து நொறுக்கியதற்காக—சுதந்திரத்திற்கு வழிவகுத்ததற்காக—ஏகாதிபத்திய வாதிகளால் துன்புறுத்தப்பட்டு கொள்ளையிடப்பட்ட போதிலும் ஒரு சோஷலிசக் குடியரசுக்காக கடும் தியாகங்களை செய்ததற்காக ஏகாதிபத்திய யுத்தத்தில் சிக்குருது வெளியே நின்றதற்காக, உலகம் முழுமையும் காணத்தக்க விதத்தில், சோஷலிச பதாகையை, சமாதான பதாகையை உயர்த்தியதற்காக, உலகம் முழுமையிலுமுள்ள தொழிலாளர்கள், அவர்கள் எந்த நாட்டில் வாழ்வோராயினும், அவர்கள் நம்மை வாழ்த்துகின்றனர். நம்மீது பரிவு காட்டுகின்றனர். நம்மைக் கைகொட்டி போற்றுகின்றனர்."**

அக்டோபர் புரட்சியின் சாதனைகளைப் பாதுகாத்து நின்றது மூலம், சோவியத் மக்கள் தங்களது சொந்த தேசிய நலன்களுக்காக மட்டும் போராடிக் கொண்டிருக்கவில்லை. ஒடுக்கப்பட்ட, சுரண்டப்பட்ட மக்களின் பொதுவான

---

* வி. இ லெனின், "நூல் திரட்டு", தொகுதி 28, பக். 82.

** வி. இ. லெனின், "நூல் திரட்டு", தொகுதி 28, பக். 65.

சர்வதேசிய லட்சியத்திற்காகவும் போராடிக் கொண்டிருந்தனர். இதனை, உலகத் தொழிலாளர்கள் நன்முக அறிந்திருந்தனர். "இடது" சாரி கம்யூனிஸ்டுகள் புரட்சிகர சொல்லாட்சியில் பொங்கிக் கிளர்ச்சியுற்று, ஜெர்மன் ஏகாதிபத்தியத்திற்கெதிரான யுத்தத்தை நிறுத்துவதைவிட செத்தழிவது சிறப்பாக இருக்கும் என்று கூறியபோது அதற்கு லெனின் பதிலளித்தார்: "...ருஷ்யாவில் சோவியத் ஆட்சி அழிவைவிட சோஷலிஸ்டு லட்சியத்துக்கு வேறு கடுமையான தாக்குதல் இருக்க முடியாது."* ருஷ்ய தொழிலாளர்கள் தங்களது சர்வதேசியக் கடமையை நிறைவேற்ற கடுமையான பிரெஸ்ட் சமாதான உடன்படிக்கையில் கையெழுத்திட்டது மிகச் சிறப்பான பணியாகும் என்று லெனின் பின்னர் இதனைப்பற்றி கூறினார். அவ்வாறு அவர்கள் செய்ததின் மூலம், பாதுகாக்க முடிந்ததைப் பாதுகாத்தனர், இடத்தை விட்டுக் கொடுத்து மாற்றாக கால அவகாசத்தைப் பெற்றனர், பெற்ற அந்த மூச்சுவிடும் நேரத்தின் ஒவ்வொரு கணத்தையும் அவர்கள் பயன்படுத்தினர். அதன் மூலம் பலத்தைத் திரட்டி அனைத்து ஒடுக்கப்பட்ட மக்களுக்கும், உழைக்கும் மக்களுக்கும் அவசியமான நன்மைகளை உறுதிப்படுத்தினர்.

ஒரு காலத்தில் ருஷ்யாவிலிருந்தது போன்றே, வளர்ச்சி பெற்ற முதலாளித்துவ நாடுகளில் தேசியப் பிரச்சினையை மிகவும் கடுமையாக்கிய பிரதான பிரச்சினை ஒடுக்கப்பட்ட தேசங்களது பூர்ஷுவா தேசிய விடுதலை இயக்கங்களுக்கும் ஒடுக்கும் நாடுகளின் பாட்டாளிவர்க்க விடுதலை இயக்கத்திற்கு மிடையிலான தொடர்பாடேயாகும். முதலாளித்துவ பொது நெருக்கடியின் முதலாவது கட்டத்தில், காலனி மற்றும் சார்பு நாடுகளது மக்களின் வாழ்விலும், வளர்ச்சியிலும் ஏற்பட்ட மாற்றங்களை இது குறிப்பிட்டுக் கூற வேண்டிய அளவிற்கு முக்கியத்துவமுடையதாக்கியது. மூன்று காரணிகளைக் கொண்டு அம்மாற்றங்களைக் கண்டறியலாம்: உள்

* வி. இ. லெனின், "நூல் திரட்டு", தொகுதி 27, பக். 61.

நாட்டில் மக்களது வளர்ச்சி; சர்வதேச தொழிலாளி வர்க்க இயக்கத்தின் செல்வாக்கு; அக்டோபர் புரட்சியினதும், சோவியத் நாட்டில் புரட்சிகர புனர் நிர்மாணத்தினதும் செல்வாக்கு.

ஒடுக்கப்பட்ட மக்களினங்களின் தேசிய விடுதலைப் போராட்டம், தேசியக் குறிக்கோள்களுக்கு மட்டும் தலைமை தாங்கவில்லை. ஆனால் அத்துடன், சமுதாய உறவுகளின் முழுக்கட்டமைப்பிலிருந்தும் புரட்சிகரமாக முறித்துக் கொள்வதற்கும் இட்டுச் சென்றது. ஆயினும் தேசிய விடுதலையே அதன் முக்கிய குறிக்கோளாக இருந்தது. தேசிய ஒடுக்குமுறை அதிகரித்ததினால் மட்டும் இது ஏற்பட வில்லை ஆனால் அத்துடன் மக்களின் உறுதிமிக்க தேசிய ஒருமைப்பாட்டின் விளைவாலும் ஏற்பட்டது, காலனி நாடு களில், முதலாளித்துவம் முன்னேறிய அளவுக்கு மக்கள் மிகவும் தேசிய உணர்வு மிக்கவர்களாக மாறினர். மிகவும் மக்களின் பொருளாதார கலாச்சார கூட்டமைப்பு பிணைப் புக்கள் மேலும் திடமடைந்தன. இறுதியாக பகுப்பாய்வு செய்து நோக்குகையில், அரசியல் சுதந்திர வேட்கையை இதுவே தீவிரப்படுத்தியது.

முதலாளித்துவப் பொது நெருக்கடியின் முதலாவது கட்டத்தின் வெகு துவக்கத்திலேயே, தேசிய விடுதலை இயக்கத்தில், குணவியல் ரீதியிலான புதிய அம்சங்கள் தோன்றியிருந்தன என்பது தெளிவு. பல்வேறு நாடுகளில், தனித்தனிச் செயல்பாடு எனும் நடப்பு ஒரு முடிவுக்கு வந்து கொண்டிருந்தது. அனைத்து மக்களின் போராட்டமும் ஒன்றிணையத் துவங்கின. உலக புரட்சிகர இயக்கத்தின் ஒரு ஆக்கக் கூறாக வளர்ந்தன. பெருமளவிற்கு மிகவும் நெருக்கமான பிணைப்புகள் மூலமும் பலஇடங்களில் சர்வதேச தொழிலாளி வர்க்க இயக்கமும், தேசிய விடுதலை இயக்கமும் ஒன்றையொன்று சார்ந்திருப்பது மூலமும் முன்னது ஒரு தீர்மானகரமான பாத்திரத்தை வகித்து, பாட்டாளி வர்க்க சர்வதேசிய சித்தாந்தச் செல்வாக்கைப் பின்னதற்கும் விஸ்தரித்ததன் மூலமும் இந்தச் சாதனை எளிதாக்கப்பட்டது.

முதலாவது உலக யுத்தம் வெடித்ததைத் தொடர்ந்து, ஏகாதிபத்திய காலனி அமைப்பின் பல பகுதிகளில் கலகமுக எழுச்சிகள் தோன்றலாயின. அதிலிருந்து லெனின் பின்வரும் முடிவுக்கு வருவது சாத்தியமாயிற்று, "ஏகாதிபத்திய நெருக்கடியின் **விளைவாக**, காலனி நாடுகளிலும் ஐரோப்பாவிலும் இரு பகுதிகளிலும் தேசிய எழுச்சிக் கனல் கொழுந்து விட்டு எரிந்தது. கொடூரமான பயமுறுத்தல்களும், அடக்குமுறை நடவடிக்கைகளும் இருந்தபோதிலும், தேசிய பரிவுணர்வுகளும் முரண் உணர்வுகளும் தாமாகவே வெளிப்பட்டன.*

தங்களது ஆங்கிலேய ஒடுக்குமுறையாளர்களுக்கு எதிராக அயர்லாந்து பொங்கியெழுந்தது இதற்கு மிகவும் எடுப்பான உதாரணமாக இருந்தது. அவ்வெழுச்சி தங்கு தடையின்றி 1919 வசந்தத்திலிருந்து 1921 இறுதி வரை தொடர்ந்தது. அதன் விளைவாக, அயர்லாந்திற்கு சுயாட்சி உரிமை வழங்க (வடபுலத்து ஆறு மாநிலங்கள் நீங்கலாக), ஆங்கிலேய ஏகாதிபத்திய வாதிகள் நிர்ப்பந்திக்கப்பட்டனர். துருக்கிய மக்களின் தேசிய விடுதலை யுத்தம் 1918-ல் துவங்கி 1922-ல் முடிவுற்றது. அந்நிய வல்லரசு அரசியல் ஆதிக்கத்திற்கு அது ஒரு முடிவை ஏற்படுத்தி, ஒரு குடியரசைப் பிரகடனம் செய்தது. ஈரானில் ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டம் வெடித்தது. தேசிய விடுதலை கணிசமான வெற்றி பெற்றது. ஒரு தேசிய விடுதலை யுத்தத்தின் விளைவாக 1919-ல் ஆப்கானிஸ்தானும் கூட அரசியல் சுதந்திரம் பெற்றது. மங்கோலிய மக்களின் வெற்றி இன்னும் அதிக முக்கியத்துவமுடையதாக விளங்கியது. 1921-ல் அது, உலக முதலாளித்துவ அமைப்பிலிருந்து துண்டித்துக் கொண்டது. லத்தீன் அமெரிக்காவிலும்கூட அரசியல் சுதந்திரத்திற்கான ஒரு போராட்டம் கிளர்ந்தெழுந்திருந்தது. அங்கிருந்த மக்கள் அமெரிக்க ஏகாதிபத்தியத்துடன் மோதின. நிகராகுவாவையும்,

---

* வி. இ. லெனின், "நூல் திரட்டு", தொகுதி 22, பக். 354.

டொமினிகன் குடியரசையும், ஹெய்டியையும் அமெரிக்கா ஆக்கிரமித்திருந்த போதிலும்கூட, மெக்ஸிகோவின்மீது பல முறை படையெடுப்புகள் நடத்தியிருந்த போதிலும்கூட, இந்த மக்கள் தங்கள் சுதந்திரத்தை பாதுகாப்பதில் வெற்றியடைந்துள்ளனர்.

தேசிய விடுதலை இயக்கத்தின் புதிய கட்டத்தில், தேசிய அம்சத்தோடு ஒப்பிட்டுப் பார்க்கையில், சமுதாய அம்சம் மிக அதிகமான முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தது. சீனு, இந்தியா, இந்தோனேஷியா, கொரியா மற்றுமிதர நாடுகளில் சக்தி மிகுந்த தேசிய விடுதலை எழுச்சிகள் ஏற்பட்டதை உதாரணமாக குறிப்பிடலாம். ஒப்பளவில் மிகவும் அமைதியான காலனி பிரதேசங்கள் எனக் கருதப்பட்ட, கிழக்கு அராபிய பகுதி, உஷ்ண மண்டல ஆப்பிரிக்கா போன்றவற்றிலும் கூட, இந்த இயக்கம் பரவியது.

சோவியத் நாட்டில் மேற்கொள்ளப்பட்ட புரட்சிகர சீர்திருத்தங்கள் சுதந்திரத்திற்காகவும் சுயாதீனத்துக்காகவும் போராடிக் கொண்டிருந்த ஒடுக்கப்பட்டமக்களுக்கு அளிக்கப்பட்ட நேரடியான சோவியத் உதவி இவற்றின் தாக்கம், தேசிய விடுதலை இயக்கத்தின் புதிய கட்டத்தில் அடிப்படை முக்கியத்துவமுடையதாக இருந்தது.

காலனி ஆதிக்க ராஜதந்திர ரகசியங்களை—சோவியத் அரசு அம்பலப்படுத்தியது. ஏகாதிபத்திய ஆதிக்கத்தின் கீழிருந்த மக்களின் தேசிய விடுதலைப் போராட்டத்திற்கு, அது வழங்கிய ஆரம்ப சேவைகளிலொன்முக இதுதிகழ்ந்தது. “அனைத்து மக்களின் சகோதரத்துவம் நீடூழி வாழ்க!” என்ற கருத்துமிக்க தலைப்பின்கீழ், நூற்றுக்கு மேற்பட்ட ரகசிய உடன்படிக்கைகளும், ஒப்பந்தங்களும் அம்பலப்படுத்தப்பட்டன. அத்தொகுப்பின் முன்னுரையில் பின்வருமாறு கூறப்பட்டிருந்தது: “தங்களது பணிமனைகளிலிருந்த படியே செயல்படும் அரசியல் சாணக்கியர்களால் எவ்வாறு மக்களின் வாழ்வு அவர்கள் அறியாமலே காட்டித்தரப்படுகிறது என்பதை, உலகம் முழுமையிலுமுள்ள உழைக்கும் மக்கள்

அறிவார்களாக! அவர்கள் பிரதேசங்களை கைப்பற்றிச் சேர்த்தனர். சிறிய நாடுகளை அவர்கள் அடிமைப்படுத்தினர். அவர்கள் அரசியல் ரீதியிலும், பொருளாதார ரீதியிலும் மக்களை மிதித்து நசுக்கி ஒடுக்கினர். அவர்கள் அவமான கரமான உடன்படிக்கைகளைச் செய்தனர்.''*

''ருஷ்யாவினதும் மற்றும் கிழக்கு உலகினதும் அனைத்து உழைக்கும் முஸ்லிம் மக்களுக்கும்'' என்ற தலைப்பில் ருஷ்ய அரசாங்கம் வெளியிட்ட, ருஷ்ய மக்களின் உரிமைகள் பற்றிய பிரகடனமும், உழைக்கும் மக்களினதும், சுரண்டப் பட்ட மக்களினதும் உரிமைகள் பற்றிய பிரகடனமும் மிகுந்த சிறப்புடையனவாகும். அவை, ருஷ்யாவிலிருந்த முன்னைய ஒடுக்கப்பட்ட மக்களின் உள்ளத்திலும், உலகம் முழுமையிலுமுள்ள ஏகாதிபத்தியத்தால் ஒடுக்கப்பட்ட மக்களின் உள்ளத்திலும், ஒரு அழியாத முத்திரையைப் பதித்தன. அதிகாரத்திற்கு வந்ததும், பிரதான சர்வதேசியக் கோட்பாடுகளிலொன்றை போல்ஷிவிக்குகள் நடைமுறைப்படுத்தினர். ரஷ்ய வல்லரசினால் முன்னுளில் ஒடுக்கப்பட்ட மக்களை விடுவிப் பதற்கு உடனடி நடவடிக்கைகளை மேற்கொண்டனர். சீனு, ஈரான், ஆப்கானிஸ்தான் ஆகியவற்றின்மீது ஜாராட்சி யினுல் திணிக்கப்பட்டிருந்த உடன்படிக்கைகளை, சோவியத் குடியரசு ரத்து செய்தது. அந்நாடுகளிலிருந்த விசேட சலுகைகளையும், பல்வேறு சொத்துக்களையும் ருஷ்ய குடியரசு கைவிட்டது. மேலும், அந்நாடுகளுக்கு பொருள்வய உதவி களை வழங்கியது.**

* அயல்துறை அமைச்சகத்தின் ஆவணங்களில் இரகசிய ஒப்பந்தங்கள் பற்றிய தஸ்தாவேஜு, இதழ் 1, பதிப்பு 2, பெத்ரோகிராட், 1917, பக். 2.

** உதாரணமாக, 600 மில்லியன் ரூபிள் தங்க மதிப் புள்ள சொத்துக்களை ஈரானுக்கு கொடுத்தது. அத்துடன் ஏகாதிபத்தியத்திற்கெதிரான அவர்களின் சுதந்திரப் போராட்டத்திற்கு போராடும் மக்களுக்கு கணிசமான உதவிகளை அளித்தது. துருக்கி மக்களுக்கு 11-மில்லியன், ஈரான் மக்களுக்கு 6,20,000 ரூபிள்

அக்டோபர் புரட்சியை உருவாக்கியவர்கள் ருஷ்யத் தொழிலாளர், விவசாயிகளின்பால் பரிவு, அவர்களோடு, போராட்டத்தில் ஒன்றுபட வேண்டுமென்ற உண்மையான விருப்பம், குறிப்பாக பெரும் காலனி நகரங்களில் புரட்சிகர நடவடிக்கை தொடர்ந்து விரைவாக நடந்தது ஆகிய அனைத்தும், அடிமைப்பட்டிருந்த மக்கள் சோவியத் நாட்டின்பால் கொண்டிருந்த உணர்வு பூர்வமான நெருக்கமான தன்மைக்கு மிகத் தெளிவான சான்றுகளாக இருந்தன. 1919-ம் ஆண்டு ஜூலை மாதம் 25-ம் நாள், சீன மக்களுக்கு சோவியத் அரசு விடுத்த வேண்டுகோளுக்கு பதிலளிக்கும் முறையில், சீன உழைப்பாளர் அமைப்பு எழுதியதாவது: ''உங்களது வேண்டுகோளைப் பெற்ற போது சீன மக்களாகிய நாங்கள் மிகுந்த மகிழ்ச்சியுற்றோம்; உங்களது புரட்சி, எங்களது உரிமைகளை, உழைக்கும் மக்களின் உரிமைகளை பாதுகாக்க திட்டமிட்டுள்ளது என்பதை நாங்கள் அறிவோம். சுதந்திரம், சமத்துவம் என்ற பேரின்பத்தைப் பெற உலக மக்களுக்கு உதவிட, உங்கள் புரட்சி திட்டமிடுள்ளது என்பதை நாங்கள் அறிவோம்.'' 1920-ம் ஆண்டு, பிப்ரவரி 17-ம் நாள் இந்தியாவில் நடைபெற்ற புரட்சியாளர்கள் கூட்டமொன்றில் ஓர் தீர்மானத்தை நிறைவேற்றி லெனினுக்கு அனுப்பி வைத்திருந்தனர். அதில் அவர்கள் கூறியதாவது, ''அனைத்து ஒடுக்கப்பட்ட வர்க்கங்களின், மக்களின் விடுதலைக்காக, அதிலும் குறிப்பாக, இந்தியாவின் விடுதலைக்காக நடத்தி வரும் மகத்தான போராட்டத்திற்காக, சோவியத் ருஷ்யாவிற்கு இந்திய புரட்சியாளர்களாகிய நாங்கள் எங்களது ஆழ்ந்த நன்றியினையும் பாராட்டையும் தெரிவித்துக் கொள்கிறோம்.''* அதற்கு லெனின் பதிலனுப்

தங்க மதிப்பிற்கு மேற்பட்ட தொகைகளை அளித்தது. சோவியத் ரஷ்யா துருக்கியின் விடுதலைப் போராட்டத்திற்கு ஆயுத உதவிகளை அளித்தது. அங்கு பல நிறுவனங்களை உருவாக்கி உதவியது. நிபுணர்களை அனுப்பியும் உதவியது.

* பிராவ்தா, மே 20, 1920.

பினர். அப் பதிலில் அவர் கூறியதாவது: ''அந்நிய மற்றும் உள்நாட்டு முதலாளிகளின் சுரண்டலிலிருந்து ஒடுக்கப்பட்ட தேசங்களின் விடுதலை, சுயநிர்ணய உரிமை என்பன போன்ற கோட்பாடுகளை, தொழிலாளர், விவசாயி களின் குடியரசு பிரகடனப்படுத்தியிருந்தது. அப்பிரகடனத்திற்கு, சுதந்திர திற்காக ஒரு வீரமிக்க போராட்டத்தை நடத்திக்கொண்டிருக்கின்ற இந்திய முற்போக்காளர்களிடமிருந்து, இத்தகைய ஒரு உடனடி வரவேற்புக் கிடைத்தது குறித்து நான் மகிழ்ச்சியடைகிறேன்.''*

மகத்தான அக்டோபர் புரட்சியின் புரட்சிகரத் தாக்கம் குறித்து, ஹோ சி மின் எழுதியதாவது, ''வியட்னாமிய தேசபக்தர்களை, சோவியத் யூனியனை திரும்பிப் பார்க்கும்படி அது செய்துவிட்டது. மார்க்சிய-லெனினியமென்னும் மகத்தான போதனையை ஏற்குமாறு செய்துவிட்டது. புரட்சிகர போராட்டத்தில் செயலூக்கமுடன் ஒன்றுபடச் செய்துவிட்டது."**

பாட்டாளி வர்க்க சர்வதேசிய சித்தாந்தத்தைக் கொண்டிருக்கும் கம்யூனிஸ்ட் மற்றும் தொழிலாளர் கட்சிகள் தேசிய விடுதலை இயக்கம், சர்வதேச தொழிலாளி வர்க்க இயக்கம், உலகின் முதலாவது தொழிலாளி-விவசாயி அரசு ஆகியவற்றிற்கிடையிலான பிரதான இணைப்பாக மாறிவிட்டன. கம்யூனிஸ்ட் அகிலத்தின் முதலாவது மாநாட்டில், சீனு, துருக்கி, ஈரான், கொரியா ஆகியவற்றின் உழைக்கும் மக்களின் பிரதிநிதிகள் பங்கு பெற்றனர். 1920-ன் இறுதியில், மெக்ஸிகோ, இந்தோனேஷியா, ஈரான், துருக்கி, உருகுவே, ஆஸ்திரேலியா முதலிய நாடுகளில் கம்யூனிஸ்ட் கட்சிகள் அமைக்கப்பட்டன. அர்ஜன்டைனுவின் சர்வதேச சோஷலிஸ்ட் கட்சி,

---

* வி. இ. லெனின், ''நூல் திரட்டு'', தொகுதி 31, பக். 138.

** ஹோ சி மின், ''தெரிவு செய்யப்பட்ட கட்டுரைகள் மற்றும் சொற்பொழிவுகள்", மாஸ்கோ, 1959, பக். 4 (ரஷ்ய மொழியில்).

கம்யூனிஸ்ட் அகிலத்தில் தான் சேருவதாக பிரகடனப் படுத்தியது. 1921-ல் சீஞ, தென்ஞப்பிரிக்கா, பாலஸ்தீனம், நியூஜிலாந்து ஆகியவற்றில் கம்யூனிஸ்ட் கட்சிகள் அமைக்கப் பட்டன. அதே ஆண்டில், பிரேசில், சிலி ஆகியவற்றிலும் அமைக்கப்பட்டன.

லெனினது தலைமையின்கீழ் கம்யூனிஸ்ட் தொழிலாளர் கட்சிகள், ஒடுக்கப்பட்ட மக்களின் தேசிய விடுதலைப் போராட்டத்துடன் சர்வதேச தொழிலாளி வர்க்க இயக்கத்தை ஒன்று சேர்ப்பதில் கவனம் செலுத்தின. இது விஷயத்தில், கம்யூனிஸ்ட் அகிலத்தின் இரண்டாவது மாநாடு மிகவும் முக்கியத்துவமுடையதாக இருந்தது. அதில் அங்கீகரிக்கப்பட்ட லெனினது தீர்மானத்தில் கூறப்பட்டிருப் பதாவது, "பூர்ஷுவாக்களையும், நிலப்பிரபுக்களையும் முறியடிக்கும், ஒரு ஒன்றுபட்ட புரட்சிகர போராட்டத் திற்காக, அனைத்து தேசிய இனங்களையும், நாடுகளையும் சேர்ந்த உழைக்கும் மக்களினதும், பாட்டாளிகளினதும் ஒரு மிகவும் நெருக்கமான ஒற்றுமையையே பிரதானமாகச் சார்ந்து தேசிய மற்றும் காலனிப் பிரச்சினைகள் சம்பந்தமான, கம்யூனிஸ்ட் அகிலத்தின் முழுக் கொள்கையும் இருக்கும். இந்த ஒற்றுமை மட்டுமே முதலாளித்துவத்தை எதிர்த்து, வெல்வதை உத்தரவாதம் செய்யும். இவ்வொற்றுமையின்றி, தேசிய ஒடுக்குமுறையினையும், சமத்துவமின்மையினையும் ஒழிப்பது சாத்தியமல்ல."* அதே சமயத்தில், அக்டோபர் புரட்சிக்குப் பிந்திய அனைத்து உலக நிகழ்ச்சிகளும், சோவியத் நாட்டிற்கெதிரான உலக முதலாளித்துவத்தின் போராட் டத்தின்மீது, தவிர்க்கவியலாத வகையில் மையம் கொண் டிருந்தன என்பதை லெனின் வலியுறுத்திக் கூறினர். இந்த குறிக்கோளைப் பிரகடனப்படுத்திஞல் மட்டும் போது மானதல்ல என்பதை எடுத்துக்காட்டி மேலும் அவர் கூறியதாவது, "அனைத்து தேசிய மற்றும் காலனி விடுதலை இயக்கங்களும், சோவியத் ருஷ்யாவுடன் மிகவும் நெருக்க

* வி. இ. லெனின், "நூல் திரட்டு", தொகுதி 31, பக். 146.

மாக அணி சேருவதை சாதிக்கக் கூடிய வகையிலான ஒரு கொள்கை உறுதியாக பின்பற்றப்பட வேண்டும்.''*

அதற்கேற்ப, தொழிலாளி வர்க்கத்தின் குறிக்கோள்கள், புதிய சகாப்தத்தின் உள்ளடக்கத்திற்கிசைந்த முறையில் வகுக்கப்பட வேண்டியிருந்தது. லெனின் சுட்டிக்காட்டியதாவது, ''ஏகாதிபத்திய சகாப்தத்தில், புறவயக் காரணங்களால் பாட்டாளி வர்க்கம், இரு சர்வதேசிய முகாம்களாக பிளவுண்டிருக்கிறது, அவற்றிலொன்று, ஆதிக்கம் செலுத்தும் நாட்டின் பூர்ஷுவாக்கள் தரும் சில்லரை சலுகைகளால் ஊழல்பட்டுக் கிடக்கிறது—இதர பல விஷயங்களுக்கு மத்தியில், சிறிய நாடுகளை இரு மடங்கு மும்மடங்கு சுரண்டுவதிலிருந்து இச்சலுகைகளைப் பெற்றது—அதே சமயம் மற்றொரு முகாம், சிறிய தேசங்களை விடுதலை செய்யாமல் குறுகிய தேசிய வெறிக்கு எதிராக, நாடு பிடித்தலுக்கு எதிராக பெருந்திரளான மக்களுக்கு போதமளித்து, 'சுயநிர்ணய உரிமை' உணர்வை ஊட்டாமல், தனது விடுதலையை எய்த முடியாத நிலையில் கிடக்கிறது.** இதுவே ''பிரதானமான'' பிரச்சினை எனக் குறிப்பிட்ட லெனின், சமுதாய-சீர்திருத்த வாதிகளின், சமுதாய குறு தேசிய வெறியர்களின் கொள்கைகளை அம்பலப்படுத்துவதின்பால் விசேட அக்கறை காட்டினார்.

சோஷலிஸ்ட் மற்றும் சமூக-ஜனநாயக கட்சிகள், சமூக குறு தேசிய வெறிக்குப் பலியாகியிருந்தன. அவற்றின் தேசிய-காலனிக் கொள்கையின் மிகவும் தனி மாதிரி அம்சம் என்னவெனில், அவை ஒடுக்கப்பட்ட மக்களின் நலன்களை முழுமையாக புறக்கணித்தன என்பதேயாகும். நன்கு அறியப்பட்ட கவுட்ஸ்கியின் கருத்துதான் என்ன? உச்சகட்ட ஏகாதிபத்திய சகாப்தம் என கவுட்ஸ்கியால் அழைக்கப்பட்டது. அச் சகாப்தத்தில் பிரதான அழுத்தம் தேசிய

* வி. இ. லெனின், ''நூல் திரட்டு'', தொகுதி 31, பக். 146.

** வி. இ. லெனின், ''நூல் திரட்டு'', தொகுதி 22, பக். 343.

சுதந்திரம் மீது இருக்கவில்லை. ஆனால், அதற்கு மாறாக புதிய கட்டத்தில் முதலாளித்துவ வளர்ச்சியின் இயல்பான நடைமுறைப் போக்கு எனப்படுவதுடன் சமரசம் செய்து கொள்வதில் இருந்தது. அது மிகப் பெரிய சாம்ராஜ்யங்களின் தோற்றத்திற்கு இட்டுச் சென்றது, இது முதலாளித்துவம் அதன் இறுதியான மிக உயர்ந்த வளர்ச்சிக் கட்டத்தை அடைவதற்குத் தேவையாக இருந்தது, இதில் தொழிலாளி வர்க்கம் அதன் இறுதிக்குறிக்கோளை அடையும் என கவுட்ஸ்கி கருதினார். 1919–பிப்ரவரியில் நடைபெற்ற இரண்டாவது அகிலத்தின் பெர்ன் மாநாட்டுத் தீர்மானங்கள், இக்கருத்தை அடிப்படையாகக் கொண்டிருந்தன. அதன் விளைவாக, தேசிய விடுதலைக்கான ஒடுக்கப்பட்ட மக்களின் கோரிக்கை புறக்கணிக்கப்பட்டது. இந்த மக்கள், பெரும் ஏகாதிபத்திய நாடுகளின் தயவில் இருக்க வேண்டுமென ஆலோசனை வழங்கப்பட்டது.

வலது சாரி சமூக–ஜனநாயக வாதிகளின் இந்த அணுகுமுறை, தத்துவார்த்த ரீதியிலும் அரசியல் ரீதியிலும் சரி என நிரூபிக்கப்பட முடியாததாக இருந்தது. முதலாளித்துவ ரீதியில் வளர்ச்சி பெற்ற சாம்ராஜ்ய பிராந்தியங்களில்,சிறிய மக்களினங்களின் பாத்திரம் மாற்றமடைந்ததை அவர்கள் புரிந்து கொள்ளவில்லை. பூர்ஷுவாக்களுடன் சேர்ந்து, இந்த சிறிய மக்களினங்களின் சோஷலிஸ்ட்டுகளும் மகாவல்லரசுக் கருத்துக்களுக்கு ஆட்பட்டிருந்தனர், அதன் காரணமாக, பிராந்திய வளர்ச்சியில் தீர்மானகரமான காரணியாக அவர்கள் தமது மக்களை ஒவ்வொரு இடத்திலும் தனிப்பட முன்னணியில் வைத்தனர். அதன் விளைவாக, அவர்கள் எத்னோ சென்ட்ரிஸம்(இன மையவாதம்)எனும் தத்துவத்தை ஆதரித்தனர். முதலாளித்துவப் பொது நெருக்கடி ஒருபுறமிருப்பினும், சிறிய மக்களினங்களின் நிலைமை 1848-1871-ல் பூர்ஷுவாப் புரட்சியின் போது இருந்தது போன்றே இருப்பதாக அவர்கள் கருதினர். அவர்களது பாத்திரம், அவர்கள் பிற்போக்கு சக்திகளுடன் சேர்ந்திருக்கிறார்களா அல்லது புரட்சியுடன் சேர்ந்திருக்கிறார்களா

என்பதைச் சார்ந்தே இருந்தது. தீர்மானகரமான பாத்திரம், பெரிய அல்லது சிறிய தேசங்களுக்கு உரியதாக இனி இருக்கப் போவதில்லை. ஆனால், அதற்கு பதிலாக, சர்வதேச தொழிலாளி வர்க்கத்தில், ஒரு புரட்சிகரமான பகுதி, ஒரு சந்தர்ப்பவாதப் பகுதி என ஏற்படும் பிரிவையே சார்ந்திருக்கிறது என லெனின் எடுத்துக் காட்டினார்.

தேசிய கம்யூனிசம் என்ற கருத்தை லெனின் கடுமையாக எதிர்த்தார். அதிலிருந்தே, தேசிய அம்சத்தைவிட, சர்வ தேசிய அம்சத்திற்கு லெனின் எவ்வளவு மிகுந்த முக்கியத் துவத்தை அளித்தார் என்பதை அறியலாம். தேசிய கம்யூனிசத்தின் வெகு ஆரம்ப வெளிப்பாட்டையே, அவர் கடுமையாக தாக்கினார். பாட்டாளி வர்க்க சர்வதேசியத்தில் ஏற்பட்ட ஒரு பிறழ்வாக அதனை அவர் வர்ணித்தார். முதலாளித்துவத்திலிருந்து சோஷலிசத்திற்கு மாறிச் செல்லும் கட்டத்திலும், சோஷலிசப் புரட்சியிலும் ஆளுமை செலுத்தும் புறநிலை விதிகளை அது புறக்கணித்து விட்டது என்பதை அவர் எடுத்துக் காட்டினார்.

உதாரணமாக, ஜெர்மனியின் கம்யூனிஸ்ட் தொழிலாளர் கட்சியினது ஹாம்பர்க் அமைப்பு, தேசிய கம்யூனிசத்தின் ஆதரவாளராக இருந்தது. சோஷலிஸப் புரட்சிக்குப் பிறகு உடனடியாக வார்சேல் ஒப்பந்தத்தால் திணிக்கப்பட்ட சுமைகளிலிருந்து ஜெர்மனியை விடுவிப்பதுதான் நமது கடமை என்ற கோஷத்திற்கு அதன் நடைமுறைச் செயல் பாட்டில் முன்னுரிமை அளித்தது. நமது வலிமைக்கு அடிப்படையான பொதுவான உறவினையும், சரித்திர ரீதியான சூழ்நிலைமையினையும் முற்றிலும் புறக்கணித்து, இக் கோஷம் பிரகடனப்படுத்தப் பட்டிருந்தது. உலகப் புரட் சியின் வளர்ச்சியின் மீதான இதன் பாதிப்பினைப் பற்றி அது கணக்கிலெடுத்துக் கொள்ளவில்லை.

''தற்போதைய சூழ்நிலையில்'' முதலாவது பாட்டாளி வர்க்க சர்வாதிகாரமான சோவியத் ருஷ்யாவுடன் கூட்டணி சேர "வழி அமைத்து அதனை எளிதாக்கவே'' வெற்றியைச்

சாதித்தவுடன், ஜெர்மன் கம்யூனிஸ்டுகள் பிரதான கவனம் செலுத்த வேண்டிய காரியம் என லெனின் வலியுறுத்திக் கூறினார். ''என்ன நேரிடினும் சரி அல்லது உடனடியாகவும் சரி வர்சேல் ஒப்பந்தத்தை மறுத்துதற வேண்டியது கம்யூனிஸ்டுகளைப் பொறுத்தவரை எவ்விதத்திலும் கட்டாயக் கடமையாக இருக்கவில்லை.''* தேசிய கம்யூனிசத்தை மறுத்துரைப்பதற்கு இது போதுமானதல்ல என்று அவர் கூறினார்; ஏகாதிபத்திய ஒடுக்கு முறையிலிருந்து இதர நாடுகளை விடுதலை செய்வதைக் காட்டிலும் வர்சேல் ஒப்பந்தத்திலிருந்து ஜெர்மனியின் உடனடி விடுதலைக்கு முதலிடம் தருவது குட்டி பூர்ஷுவா தேசிய வாதமாகும். அது புரட்சிகர சர்வதேசியமல்ல. இதனைப் புரிந்து கொள்வது மிகவும் முக்கியமானதாகும் என லெனின் கூறினார்.

லெனினது போல்ஷிவிக் கட்சி, தொழிலாளி வர்க்கம், சோவியத் குடியரசின் மக்கள், உண்மையான புரட்சிகர சர்வதேசியத்திற்கு முன்மாதிரியாக இருந்தனர். முதலாளித்துவ உலகில், தேசங்கள் மற்றும் தேசிய உறவுகள் உட்பட, உள்நாட்டு, வெளிநாட்டுக் கொள்கையின் அனைத்துத் துறைகளின்மீதும், அரசாங்க மற்றும் தேசிய உறவுகளின்மீதும், இந்த ''ரஷ்ய முன்மாதிரி'' ஒரு வலிமையான தாக்கம் செலுத்தியது. அது, அ) சர்வதேசிய ஏகாதிபத்திய முகாமில், பிளவை ஆழப்படுத்தியது, அதனை பலவீனப்படுத்தியது. விடுதலைக்கான தங்களது போராட்டத்தில், தொழிலாளி வர்க்கத்தினதும் அனைத்து உழைக்கும் மக்களினதும் ஒரு நெருக்கமான ஒற்றுமையை ஏற்படுத்த உதவியது. ஆ) ஒரு புதிய வகையிலான சர்வதேசிய உறவுகள் வடிவுற அது உதவியது.

புறநிலை ரீதியான தன்மை இருந்த போதிலும், சோவியத் உள்நாட்டு வெளிநாட்டுக் கொள்கையின் செல்வாக்கு, பூர்ஷுவா உலகில், தேசியப் பிரச்சினையின் உள்ளடக்கம், முற்றிலும் சாரமான மாற்றத்தை எய்தியது.

---

* வி. இ. லெனின், ''நூல் திரட்டு'', தொகுதி 31, பக். 76.

அக்டோபர் புரட்சியின் நலன்களை பாதுகாத்திட, அணி திரண்ட சோவியத் மக்கள் மனித குலம் முழுமையின் நலன்களுக்காக பணியாற்றினர். பிரெஸ்ட் சமாதான உடன்படிக்கை, முதலாளித்துவ உலகில் பிளவுகளை ஆழப் படுத்தியது. சர்வதேசத் தொழிலாளி வர்க்க இயக்கத்தின் கரங்களை அது பலப்படுத்தியது. ஏகாதிபத்திய முகாமின் ஒற்றுமையின்மீது தொடுக்கப்பட்ட பிரதான தாக்குதல் களிலொன்ருக அது திகழ்ந்தது. பூர்ஷுவா நிலப்பிரபுத்துவ போலந்திற்கெதிரான யுத்தத்தில் சோவியத் குடியரசு தனது சொந்த பாதுகாப்பை கருதி மட்டுமே எதிர்கொண்ட போதிலும் அந்த யுத்தமும் கூட, முதலாளித்துவ உலகின் அரசுகளுக்கும், நாடுகளுக்குமிடையிலான உறவுகளின்மீது ஒரு வலிமையான விளைவை ஏற்படுத்தியது. இதனைப் பற்றி லெனின் குறிப்பிடுகையில், செஞ்சேனை ஈட்டிய வெற்றிகள், மேற்கு ஐரோப்பாவிலும், உலகம் முழுமையிலும் நிலவிய சூழ்நிலையின் மீது ஒரு வலிமை பொருந்திய தாக்கம் செலுத்தின. யுத்தத்திலீடுபட்டிருந்த உள்நாட்டு வெளி நாட்டு அரசியல் சக்திகளுக்கிடையிலான இணையுறவை முற்றிலும் தலைகீழாக்கின என்ருர்.* முதலாளித்துவ நாடு களுக்கும் அவற்ருல் ஒடுக்கப்பட்ட காலனி மக்களுக்கும் இடையிலான உறவுகளின் உள்ளடக்கத்தை மாற்றுவதில், சோவியத் ருஷ்யாவின் பங்கினைப்பற்றி, லெனின் பிறதொ ரிடத்தில் குறிப்பிடுகையில் 1920—ம் ஆண்டின் இறுதியில் இது பற்றி அவர் கூறியதாவது, ''ருஷ்யாவிற்கும், கிழக்கத்திய ஒடுக்கப்பட்ட நாடுகளுக்குமிடையிலான நட்பு உறவுகளும், கூட்டணியும் இதன் விளைவாக உறுதியாக பலப்படுத்தப்பட்டது...மக்களுக்கு எதிராக, ஏகாதிபத்திய வாதிகள் பயன்படுத்தும் வன்முறையே இன்றைய அரசியலில் பிரதான அம்சமாகும். அது, இம் மக்களுக்கு வெற்றியாளர் களிடையே இடம் பெறும் பேறு கிட்டவில்லை. ஏகாதிபத்தி யத்தின் இந்த உலகக் கொள்கை, ஒடுக்கப்பட்ட எல்லா

* வி. இ. லெனின் ''நூல் திரட்டு'', தொகுதி 31, பக். 276.

நாடுகளுக்குமிடையே நெருக்கமான உறவுகள், நட்புறவு மற்றும் கூட்டணிக்கு இட்டுச் செல்கிறது.''* மேலும் லெனின் கூறியதாவது, எந்த முதலாளித்துவ நாடாயினும் அவற்றிலுள்ள மக்கள், ''போல்ஷிவிக் எதிர்ப்பு வெறுப்பு ணர்வுகள் முற்றிலும் வேறுபட்ட சர்வதேசிய உறவுகளை போல்ஷிவிக்குகள் நிலைநாட்டிக் கொண்டிருக்கின்றனர் என்பதையும் அது அனைத்து ஒடுக்கப்பட்ட மக்களும், ஏகாதிபத்திய நுகத்தடியிலிருந்து தங்களை விடுவித்துக் கொள்வதற்கான வாய்ப்பினை ஏற்படுத்தியுள்ளது என்ப தையும் காண முடியும்''** சோவியத் குடியரசின் வெளி நாட்டுக் கொள்கையினுல் முன்முயற்சி எடுக்கப்பட்டு, புதிய சர்வதேசிய உறவுகள் உருவாயின. அவை, மக்கள் மத்தியில் புதிய நல்லிணக்க உறவுகளை ஏற்படுத்துமாறு, இயல்பாகவே அதன் விருப்பத்திற்கு எதிராக ஏகாதி பத்தியத்தை நிர்ப்பந்தித்தன. அத்துடன், சர்வதேச பூர்ஷுவாக்களின் அணியில் பிளவையும் ஏற்படுத்தின. லெனின் கூறினர். ''நமது கொள்கை, ஏகாதிபத் தியத்தால் நெறிக்கப்பட்டுவரும் அந்த முதலாளித்துவ நாடுகளை, சோவியத் குடியரசைச் சுற்றித் திரளுமாறு செய்கிறது.''***

முதலாளித்துவ உலகில், தேசியப் பிரச்சினையின் உள்ளடக்கத்தில் ஏற்பட்ட மாற்றங்களே அவை. மக்களின் வாழ்விலும், விடுதலைப் போராட்டத்திலும், தேசிய மற்றும் சர்வதேசியக் காரணிகளுக்கிடையிலான தொடர்பாட்டை முறைப்படுத்திய லெனினது கொள்கையின் சாராம்சம் இதுவே. கம்யூனிஸ்ட் அகிலத்தின் ஐந்தாவது காங்கிரசில் எம். ஐ. காலினின் குறிப்பிட்டார், ''தேசிய கட்டமைப்பி னுள்ளும், அதே சமயம் சர்வதேசிய சம்பவங்களின்

* வி. இ. லெனின் ''நூல் திரட்டு", தொகுப்பு 31, பக். 491.

** வி. இ. லெனின் ''நூல் திரட்டு'', தொகுதி 31, பக். 477-478.

*** வி. இ. லெனின் ''நூல் திரட்டு", தொகுதி 31, பக். 477-478.

போக்கிலும் இருந்து ஒருபோதும் தனிமைப்படாது இருக்கச் செய்யும் இந்த நுட்பமும் திறனும் இந்த அல்லது அந்த தேசக் கட்டமைப்பினுள், முழு இந்த இயக்கத்தை உச்சப் பட்சம் பயன்படுத்த வேண்டும் என்பதுதான் லெனினது தனிச்சிறப்பான அம்சம். திட்டமாக இதுவே அவரை ருஷ்யப் புரட்சியின் தலைவராக, அதேபோன்று சர்வதேசியத் தலைவராக ஆக்கியது எனலாம்.''*

பூர்ஷுவா உலகில் தேசியப் பிரச்சினை பற்றிய லெனினது பகுப்பாய்வு ஒரு முடிவுக்கு இட்டுச் செல்கிறது. அதிலுள்ள புதிய அம்சங்களாவன: முதலாவதாக, வர்க்க மற்றும் தேசிய காரணிகளின் மாறிய தொடர்பாடு, முன்னது பின்னதை மிஞ்சிய நிலை; இரண்டாவதாக, முன்னைக் காட்டிலும் மிகவும் அடிக்கடி தேசிய மற்றும் சர்வதேசிய நடப்புக்கள் நேரடி என்பதைவிட மக்களினங்களின் வாழ்க்கையின் சமுதாய அம்சங்கள் வாயிலாகத் தாமே வெளிப்பட்டன. சர்வதேசியத் தன்மையின் உதாரணங்கள் மூலமும் முதலாளித்துவ நாடுகளினுள் உள்ள சக்திகளின் பாகுபாட்டின் மூலமும் இதைச் சித்திரிக்கலாம். அக்டோபர் புரட்சிக்கு பிறகு, முதலாளித்துவ சமுதாயத்தில், பாட்டாளி வர்க்க சர்வதேசியம், தேசியப் பிரச்சினையின் ஆக்கக்கூறு என்ற நிலை குறைந்து பல்வேறு நாடுகளில் நடைபெறும் பாட்டாளி வர்க்கப் போராட்டத்தின் ஒற்றுமையின் மூலம் அது மிகவும் தெளிவாக தன்னை வெளிப்படுத்திக் கொண்டுள்ளது. ஆனால் இது, தேசிய உறவுகளின் ஒரு காரணியாகத் திகழும் இதன் முக்கியத்துவத்தை எவ்விதத்திலும் குறைக்கவில்லை. உதாரணமாக, ''சோவியத் ருஷ்யாவின் மீது கை வைக்காதே'' என்ற இயக்கம், உழைக்கும் மக்களின் வர்க்க உணர்வின் மீதும் அதேபோன்று அவர்களது தேசிய உறவுகளின் மீதும் ஒரு அழியாத முத்திரையைப் புதித்துள்ளது. தேசங்களினுள் காணப்படும்

---

* எம். ஐ. காலினின், ''தெரிவு செய்யப்பட்ட நூல்கள்,'' தொகுதி 1, மாஸ்கோ, பக். 517 (ருஷ்ய மொழியில்).

வர்க்க சக்திகளுக்கிடையிலான பாகுபாடு இதேபோன்று ஒரு சமுதாய புலப்பாடு மாத்திரமன்று, ஆனால் அத்துடன், ஒரு பிரதான தேசிய நடப்புமாகும். இந்தப் பாகுபாடு ஏற்படும் பொழுது, தேசத்தினது வாழ்க்கையின்மீது ஏற்படும் தொழிலாளி வர்க்கத்தின் மகத்தான செல்வாக்கும் தேசத்தின் நடப்புக்கள் வேகமுடுக்கம் பெறுவதையும் அதன் உள்ளடக்கத்தில் சர்வதேசியம் வலிமைப்படுதலையும் முனைப்பாகக் குறிக்கிறது.

அக்டோபர் புரட்சிக்குப் பிறகு, பாட்டாளி வர்க்க சர்வதேசியத்தின் முக்கியத்துவம் மகத்தான முறையில் அதிகரித்தது. ஏனெனில், இதர பல நாடுகளிலும் கூட பாட்டாளி வர்க்கப் புரட்சிகள் சாத்தியமாக இருந்தன என்பது நிதர்சன உண்மையாக மாறி விட்டது. கம்யூனிஸ்ட் அகிலம் இவ்வாறாக அதனைப் பற்றி குறிப்பிட்டது: ''பல்வேறு நாடுகளைச் சேர்ந்த பாட்டாளி வர்க்கம் தனது அளப்பரிய ஆற்றலை போராட்டத்திற்கான அத்தகைய தயார்நிலையை பேரளவான தன்னலமற்ற தியாகத்தை எடுத்துக் காட்டி விட்டது. ஒரு வெற்றிகரமான புரட்சியை சாதிப்பதற்கு இவை தாராளமாகப் போதும். ஆயினும், அகநிலைக் காரணிகள் தடைக்கல்லாயிருந்தன. முதலாவதாக, புரட்சிகர இயக்கத்தின் எழுச்சி (சோஷலிசப் புரட்சிக்கான புறநிலை முன்நிபந்தனைகள் கனிந்ததின் விளைவாக ஏற்பட்டது), மிகவும் திடுமென ஏற்றமடைந்ததாக 1919 மார்ச்சில் லெனின் கூறினார்.

உழைக்கும் மக்கள் திரளின் உணர்வு மிகவும் அதற்கு பின்னடைந்திருந்தது. லெனினது கவலை சரியென நிரூபிக்கப் பட்டது. இரண்டாவதாக, ஐரோப்பாவின் இதர பகுதிகளில் உண்மையான சர்வதேசிய பாட்டாளி வர்க்கக் கட்சிகள் தோன்றி கிட்டவிருந்த வாய்ப்புகளை பயன்படுத்தி வெற்றியைச் சாதிப்பதென்பது, ருஷ்யாவில் நடந்ததை விட மெதுவாகத்தான் முடியும் என்பதும் நிரூபிக்கப் பட்டிருந்தது. ஏனெனில், வர்க்கப் போராட்டத்தின் தீவிர மான வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில், பாட்டாளி மக்கள்

திரளின் உணர்வு மிகவும் பின்தங்கியிருந்தது. 1918 அக்டோபரில் லெனின் கூறினர், முழுமையாக நன்கமைந்த புரட்சிகர தொழிலாளி வர்க்கக் கட்சிகள் இல்லாத குறை மிகப்பெரும் துரதிர்ஷ்டமாக இருந்தது. ஐரோப்பில் பாட்டாளி வர்க்கப் புரட்சிக்கு அது ஒரு ஆபத்தாகவு மிருந்தது. மேலும் அவர் சுட்டிக்காட்டியதாவது, அவர்களது புரட்சிப்பண்பு, பாட்டாளி வர்க்க சர்வதேசியத்தின் பால் அவர்கள் காட்டிய விசுவாசம் எல்லா வகையிலும் போற்றத்தக்கதாகும். ஏனெனில், இரண்டாவது அகிலத்தின் சந்தர்ப்பவாதக் கட்சிகள் தொழிலாளி வர்க்க லட்சியத்திற்கு துரோகமிழைந்திருந்தன. தங்களது பூர்ஷுவாக்களை மகிழ்விக்கும் முறையில் அவ்வாறு செய்தன. தேசிய வாதத்திலும், சமூக-குறுகிய தேசிய வெறியிலும் தடம் புரண்டிருந்தன.

அக்டோபர் சோஷலிசப் புரட்சியின் வெற்றிக்குப்பிறகு, பாட்டாளிவர்க்க சர்வதேசியத்தின் பாற்பட்ட விசுவாசம், சோவியத் குடியரசின் மீதான தோரணை மூலம் மதிப்பிடப் பட்டது. உலகப் புரட்சியின் தளத்தை பாதுகாப்பதும், உறுதிப்படுத்துவதுமே சர்வதேசியக் கடமையாகும். அக் கடமைக்கு, தேசிய நலன்களை கீழடக்குவதும், அதற்கு நிபந்தனையற்ற ஆதரவளிப்பதும், புரட்சிப் பண்பின் அளவு கோலாக மாறியிருந்தது. கம்யூனிஸ்ட் அகிலத்தின் மூன்ருவது காங்கிரஸ், அதன் தீர்மானத்தில் குறிப்பிட்டதாவது, "**சோவியத் ருஷ்யாவிற்கு நிபந்தனையற்ற ஆதரவளிப்பது** அனைத்து நாடுகளையும் சேர்ந்த கம்யூனிஸ்டுகளின் பிரதான கடமையாக இருந்தது, இருக்கிறது."

முதலாளித்துவ நுகத்தடிக்கு எதிரான விடுதலைப் போராட்டத்தின் வரலாற்றில் முதல் தடவையாக, பாட்டாளிவர்க்க சர்வதேசியம், தேசியவிடுதலை இயக்கத்தின் உள்ளடக்கத்திலும், பரிமாணத்திலும் ஒரு மகத்தான செல்வாக்கினைச் செலுத்தத் துவங்கியது. லெனின் எழுதினர், "ஒவ்வொரு நாட்டிலுமுள்ள சுரண்டப்பட்ட, ஒடுக்கப்பட்ட தொழிலாளர்களின் புரட்சிகரத் தாக்குதல், முடங்கிக்கிடந்த,

இதுவரை வரலாற்றின் எல்லையைத் தொடாமல் அப்பால் அதன் புறநிலைப் பொருளாக மட்டுமே கருதப்பட்டு வந்த லட்சோப லட்சம் மக்களின் புரட்சிகரத் தாக்குதலுடன் சேர்ந்து குட்டி பூர்ஷுவா சக்திகளிடமிருந்து வரும் எதிர்த் தாக்குதலையும் தொழிலாளர் மத்தியில் உருவாக்கியுள்ள பிரபுக்குலத்தின் சிறிய மேல்த்தட்டுப் பகுதியின் செல்வாக்கையும் வென்று அகற்றும்போது உலக ஏகாதிபத்தியம் வீழ்ந்தே தீரும்''* உலக புரட்சிகர இயக்கப் போக்குகளின் ஒற்றுமையும், ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப் போராடுவதில் அவற்றின் பரஸ்பர உதவியும் பாட்டாளி வர்க்க சர்வதேசியம், தேசிய விடுதலை இயக்கத் திற்குப் பரவும்வரை நினைத்துக்கூட பார்க்க முடியா தவையாக இருந்தன. அக்டோபர் புரட்சி இதைத் திட்ட வட்டமாக பெற்றுத் தந்தது.

தேசிய விடுதலை இயக்கத்தினதும், சோஷலிச உலகப் புரட்சியினதும் தொடர்பாடும் கூட மாறிவிட்டது. முதலா வதாக, தேசிய விடுதலை இயக்கம் மேலதிகமான திட்டமான வலிமையை ஈட்டியது. இரண்டாவதாக, அதன் புறநிலை உள்ளடக்கம் மாறியது; அது சோஷலிசத்தன்மை இல்லா திருப்பினும் அது, உலகப் புரட்சியின் பொதுவான செல் போக்குடன் இரண்டறக் கலந்தது, அதன் வெற்றிக்கு துணைபுரிய ஆரம்பித்தது.

இறுதியாக, அக்டோபர் புரட்சியில் பிறந்த தொழிலாளர்கள், விவசாயிகளின் அரசு, பாட்டாளி வர்க்க சர்வதேசியக் கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்ட ஒரு குணவியல் ரீதியான புதியவகை உறவுகளை, நாடுகளுக் கிடையிலும், அரசுகளுக்கிடையிலும் துவக்கி வைத்தது. பூர்ஷுவா உலகில் தேசியப் பிரச்சினையின் உள்ளடக்கத்தில் வலிமையான செல்வாக்கைச் செலுத்தியது.

---

* வி. இ. லெனின், ''நூல் திரட்டு'', தொகுதி 31, பக். 232.

3. சோவியத் யூனியனில் சோஷலிச நிர்மாணமும், முதலாளித்துவத்தின் கீழ் தேசியப் பிரச்சினையின் உள்ளடக்கத்தில் ஏற்பட்ட மாற்றங்களும்

அக்டோபர் புரட்சியின் செல்வாக்கின்கீழ் முதலாளித்துவ உலகில், தேசங்கள் மற்றும் தேசிய உறவுகளின் வளர்ச்சியில் ஏற்பட்ட மாற்றங்கள் முதலாளித்துவப் பொது நெருக்கடி அதிகரித்ததோடு, அவை மிகவும் ஆழமுற்றன. உலக முதலாளித்துவ அமைப்பினுள், பொருளாதார உறவுகளின் உள்ளடக்கத்தில் ஏற்பட்ட விரிவான மாறுதல்களும் அது போலவே சோவியத் யூனியனில் சோஷலிஸ நிர்மாணமும் கூட வலிமையான செல்வாக்கைச் செலுத்தின.

அத் தருணத்தில் முதலாளித்துவ உலகில் ஏற்பட்ட, தேசங்கள் மற்றும் தேசிய உறவுகளின் வளர்ச்சி முதலாவதாகவும் முக்கியமாகவும், உலக முதலாளித்துவ அமைப்பில் ஏற்பட்ட புறநிலை மாற்றங்களால் ஆளுமை செய்யப்பட்டிருந்தது. உலகப் புரட்சியின் ஆரம்பத் தாக்குதலைப் பிரதான முதலாளித்துவ நாடுகள் சமாளிக்கத் தயாரான பொழுது இந்த மாற்றங்களின் மத்தியில் மையமான புதிய போக்குகளை லெனின் கண்டறிந்தார். லெனின் முன்னறிந்து கூறியதாவது, "உலகை இரு முகாம்களாக பிளவுபடுத்துவதில், ஏகாதிபத்தியவாதிகள் வெற்றியடைந்துவிட்டன." அதிலிருந்து, மேற்கு ஐரோப்பிய முதலாளித்துவ நாடுகள், "முன்னர் நாம் எதிர்பார்த்தபடியன்றி சோஷலிசத்தை நோக்கி படிப்படியாக 'பக்குவப்படுவதின்' மூலம்" மட்டுமின்றி, "'சோஷலிசத்தை நோக்கிய அவற்றின் வளர்ச்சியை நிறைவு செய்து கொள்ளும்...'"* இந்தப் பிரதான காரணிகள் நீங்கலாக, தேசியப் பிரச்சினை சம்பந்தப்பட்ட, அதன் இடம்,

* வி. இ. லெனின், "நூல் திரட்டு", தொகுதி 33, பக். 499.

பங்கு பற்றிய மேலும் இரு அம்சங்களை லெனின் குறிப்பிட்டார்: அ) அரசுகளை அரசுகள் சுரண்டுவதின் அதிகரிப்பு—வளர்ச்சிபெற்ற முதலாளித்துவ நாடுகள் மத்தியில், அவற்றிற்கிடையிலான முரண்பாடுகளின் தவிர்க்க வியலாத பெருக்கம் காரணமாக இது நிகழ்தல்; ஆ) காலனி மற்றும் சார்பு நாட்டு மக்கள் மீதான ஒடுக்குமுறையும், சுரண்டலும் மேன்மேலும் தீவிரப்படுதல்.*

முதலாளித்துவ உலகிலான இந்தப் போக்குகள், தேசியப் பிரச்சினையின் பங்கினை மிகவும் தெளிவாக அதிகரித்தது. வர்க்க முரண்பாடுகளுக்கு மாற்றாக, தேசிய முரண்பாடுகளை மாற்றீடாக வைக்க பூர்ஷுவாக்களுக்கு வாய்ப்பளித்தது. தேசிய உறவுகள் மிகவும் கடுமையாயின. ஒடுக்கும் தேசங்களின்பால், ஒடுக்கப்பட்ட மக்களின் தேசிய ரீதியான வெறுப்பு அதிகரித்தது. புதிதாக தோன்றிய போக்குகளின் விளைவாக, ''தேசிய ஒடுக்குமுறையின் காலனியாதிக்கச் சுரண்டலின் முனைப்பும் விரிவாக்கமும்''** ஏகாதிபத்தியத்தின் இனமாதிரி என்ற வகையில் இன்னும் மிக முக்கியமான அம்சமாக மாறியது.

உலக முதலாளித்துவம் பெருநஷ்டமடைந்து தனது அழிவிலிருந்து தற்காலிகமாகத் தப்பித்தது. தேசிய முரண்பாடுகள் கடுமையுறுவது காலனி மற்றும் சார்பு நாடுகளில் தவிர்க்கவியலாமல் தேசிய விடுதலைப் புரட்சிகளுக்கும் சாம்ராஜ்ஜிய தலைமை நாடுகளில் சாத்தியமான தேசியப் போர்களுக்கும் இட்டுச் சென்றன (பெரும் ஏகாதிபத்திய கொள்ளையரால் அடிமைப்படுத்தப்பட்டிருந்த மக்களால் இது நடத்தப்பட்டது). ஆனால் பூர்ஷுவாக்களுக்கும் வேறு வழியே இல்லாமல் போய்விட்டது. அவ்வியக்கத்தை தற்காலிகமாக மட்டும்கூட தடம்புரட்ட எதைக்கொடுக்கவும் தயாராக இருந்தார்கள். அதனைப் பொறுத்தவரை அதற்கு

* வி. இ. லெனின், ''நூல் திரட்டு'', தொகுதி 33, பக். 499.

** வி. இ. லெனின், ''நூல் திரட்டு'', தொகுதி 22, பக். 143.

பிரதான ஆபத்து— தொழிலாளி வர்க்கத்தின், அதன் நேச அணிகளின் ஒரு சோஷலிசப் புரட்சியேயாகும்.

வளர்ச்சியுற்ற முதலாளித்துவ நாடுகளில், சோஷலிசத்தை ''கனிவுறுதல்'' சம்பந்தமான லெனினது முதலுரையைப் பொறுத்தவரை தேசிய முரண்பாடுகளைத் தூண்டுவதின் மூலமும், இதர பல சமுதாய ரீதியான சாணக்கியங்கள் மூலமும், அதனை தடுத்து நிறுத்துவதில் முதலாளிகள் வெற்றியடைந்தனர். "அவர்களது வெற்றியின் காரணமாக"* உண்மை நிலையை லெனின் அழுத்தந் திருத்தமாக எடுத்துக் கூறினர். பல நாடுகள், மேற்கு ஐரோப்பாவிலிருந்த பழைய நாடுகள், தங்களது ஒடுக்கப் பட்ட வர்க்கங்களுக்கு அற்பமான சில சலுகைகளை வழங்கக் கூடிய நிலையில் இருக்கின்றன—அந்த சலுகைகள் போதுமானவை அல்ல என்றபோதிலும், அவை, அந்நாடுகளில் புரட்சிகர இயக்கத்தை தடுத்து மட்டுப்படுத்துகின்றன, 'வர்க்க அமைதி' எனும் ஓரளவு வெளித்தோற்றத்தை உருவாக்குகின்றன.** இது விஷயத்தில்,அனைத்து நாடுகளிலுமிருந்த வலதுசாரி சமூக-ஜனநாயகவாதிகள், முதலாளி வர்க்கத்திற்கு விசுவாசமாக உதவினர். உண்மையில் அவர்களது சமுதாய வாய்ச்சவடால் முதலாளிகளையே பெரும் பாலும் மிஞ்சியது. மிகப்பெருமளவிலான தேசிய ஒடுக்கு முறையின் மூலமும், காலனிக் கொள்ளை மூலமும் பெற்ற ஆதாயங்களிலிருந்து, உழைக்கும் மக்களுக்கு சில சலுகைகள் வழங்கப்பட்டன. குறிப்பாக அவர்களது பொருளாதாரக் கோரிக்கைகள் அந்த வகையில் தீர்க்கப்பட்டன. தொழிலாளர்களை ஊழல் மயப்படுத்தும் கொள்கையைப் பொறுத்தவரை, மார்க்ஸ் ஒருமுறை இங்கிலாந்து சம்பந்தப்பட்டதை மட்டுமே மேற்கோள் காட்டியிருந்தார்.*** ஆனல், அந்தக்

* இந்த மேற்கோள், முதலாவது உலக யுத்தத்தைப் பற்றியதாகும்—ப—ர்.

** வி. இ. லெனின், "நூல் திரட்டு", தொகுதி 33, பக். 498-99.

*** கார்ல்மார்க்ஸ்,பிரடெரிக் எங்கல்ஸ், "தெரிவு செய்யப் பட்ட கடிதங்கள்", மாஸ்கோ, 1965, பக். 140.

கொள்கை, பல வளர்ச்சிபெற்ற முதலாளித்துவ நாடுகளில் குறிப்பாக அமெரிக்காவில் பின்பற்றப்பட்டது. முதலாளித்துவ பிரச்சாரம், தொழிலாளர்களது சிந்தனையை ஊழல்படுத்து வதையும், குறுதேசிய வெறி, இனவெறியைக் கொண்டு களங்கப்படுத்துவதையும், வளர்ச்சி பெற்ற நாடுகளின் தொழிலாளி வர்க்கத்திற்கும், காலனி மற்றும் சார்புநாட்டு மக்களுக்கும் இடையில் முரண்பாடுகளை கூர்மைப்படுத்து வதையும் அடிப்படையாகக் கொண்டிருந்தது.

1917-1923 காலகட்டத்தின் புரட்சிகர எழுச்சி சற்று தணிந்தபின், முதலாளித்துவ உலகிலிருந்த தேசிய உறவுகள், புதிய எழுச்சிகளின் உட்க்கொண்டிருந்த வெர்சேல் கருமூலங்களை ஒப்பந்தத்தில் முறைப்படுத்தப்பட்டிருந்தபடி முதலாவது உலக யுத்தத்தின் அரசியல், பொருளாதார விளைவுகளால் மிகப் பெருமளவிற்கு பாதிப்பிற்குள்ளாகி யிருந்தன. தோல்வியடைந்த நாடுகளிலிருந்த பிற்போக்கு சக்திகள், தோல்வியினுல் ஏற்பட்டிருந்த தார்மீக காரணி களையும் வெற்றி பெற்ற நாடுகள் பொருளாதாரக் கொள்ளை ஆக இரண்டினையும், முதலாளித்துவத்தைப் பாதுகாத்திடு வதற்கான ஒரு கருவியாக பயன்படுத்தின. துல்லியமாயும் அந்த இடத்தில்தான் தேசிய உறவுகளின் வளர்ச்சியில் புதிய சக்திகள் மேலோங்கின. சிறிது காலத்திற்குப் பின்னர், பாசிச சித்தாந்தத்தினதும், கொள்கையினதும் பிரிக்கவியலாத பகுதிகளாக இவை மாறின.

வெர்சேல் சமாதான உடன்படிக்கை முற்றுப் பெறு வதற்கு முன்பே, முதலாவது உலக யுத்தத்தின் துப்பாக்கிச் சத்தம் ஓய்வதற்கு முன்பே குறுகிய தேசிய வெறியினது பேரலை வீச்சிலும், பழிவாங்குவதற்கான தயாரிப்புகளிலும் தோல்வியுற்ற நாடுகள் மூழ்கி விட்டன. குறிப்பாக, ஜெர்மனி அவ்வாறு மூழ்கி விட்டது. யுத்தத்திற்குப் பின்னர் ஏற்பட்ட கடுமையான துயரங்களுடன், வெர்சேல் உடன்படிக்கையினுல் திணிக்கப்பட்ட பொருளாதாரத் தொல்லைகளும் சேர்ந்து கொண்டன. அத்துடன் அரசியல் சூழ்நிலையின் நிலையற்ற தன்மையும் சேர்ந்து, சமுதாயத்தின்

உண்மை நிலவரங்களிலிருந்து மக்களைத் தடம் புரட்டவும், சமுதாயப் பிரச்சினைகளுக்கு மாற்றாக தேசியப் பிரச்சினைகளை முன்னுக்குக் கொண்டு வரவும் பூர்ஷுவாக்களைத் தூண்டின. இவை அனைத்தும் சோவியத் எதிர்ப்புடன் சேர்ந்து கலந்து புரட்சிகர போராட்டத்தின் மிகச் சிறிய அறிகுறி தென்பட்டாலும் அதற்கெதிரான அடக்குமுறைகள் கட்டவிழ்த்து விடப்படலாயின. தோல்வியுற்ற நாடுகளிலிருந்த பூர்ஷுவாக்களின் இக்கொள்கைக்கு வெற்றிபெற்ற நாடுகளின் நிபந்தனையற்ற ஆதரவு கிட்டியது. உதாரணமாக ஜெர்மனியைப் பொறுத்த வரையில், வெர்சேல் ஒப்பந்தத்தின் பொருளாதாரத் தளைகள் படிப்படியாக தளர்த்தி விடப்பட்டன. டாவ்ஸ் திட்டம் என்பது, முதலாவது உலக யுத்தக் குற்றவாளிகளிலொருவருக்கு அளிக்க வேண்டிய தண்டனை என்ற நிலையிலிருந்து மாறிவிட்டது, மேலும் அது, சோவியத் குடியரசை தாக்குவதற்கான ஒரு புதிய ஆக்கிரமிப்பாளரை ஊக்குவிக்கும் கருவியாக மாறி விட்டது, இந்த உண்மை எதில் பிரதிபலித்தது? பாசிசம் இத்தாலியில் தோன்றியிருந்த போதிலும், அதன் அப்பட்டமான வடிவத்தை மிகத் துல்லியமாக ஜெர்மனியில்தான் பெற்றது என்பதிலிருந்து இதனைக் காணலாம், ஆரம்பத்திலிருந்தே தேசிய வெறியும், தேசியவாதமும், பாசிசத்தை உருவாக்குவதில் மையமான பங்கினை வகித்தன. உலக மேலாதிக்கத்தையும், பழி வாங்கலையும் ஏங்கி விழைந்த பிற்போக்காளர்களைக் கொண்டிருந்த ஜெர்மனி விஷயத்தில் மட்டும் இது நடந்தது என்பதல்ல. ஆனல், அத்துடன் இதர, மிகவும் பிற்போக்கான நாடுகளிலிருந்த (ஹங்கேரி, ருமேனியா, பல்கேரியா மற்றுமிதர நாடுகள்) பாசிஸ்டுகளுக்கும் இது பொருந்தும். அங்கிருந்த பாசிஸ்டுகள், ஒரு ''நவீன தேசத்தை'' நிர்மாணிப்பதற்கான ''அபாரமான கொள்கை''யைப் பிரகடனப்படுத்தினர். ஆசியாவில், ஜப்பானியபூர்ஷுவாக்கள் தான் இக் ''கொள்கை'' கோரிப் பெருமூச்சு விட்டனர்.

பாசிசத்தின் முன்மாதிரி அம்சங்கள் யாதெனில், ஒரு புறம் ஜனநாயகத்தை முற்றிலுமாக அடக்கியொடுக்குவது

மறுபுறம் நிதி ஆதிக்க சக்திகளால் அணி திரட்டப்பட்ட வர்க்கத் தன்மை இழந்த நபர்கள் சீரழிவிற்குள்ளாகியிருந்த குட்டி பூர்ஷுவாக்கள் மற்றும் பிறர் பயங்கர சர்வாதிகார ஆட்சியை திணிக்க, நிறவெறியையும், தேசிய வாதத்தையும் பகிரங்கமான தேசிய வெறித் தனத்தையும் கொண்டு செயல் பட்டனர்.

தேசிய அரசுகளின் உருவாக்கத்தை பாசிசம் எதிர்த்தது. தேசிய அரசுரிமை என்ற கருத்தை அது தகர்த்தது. தேசிய உறவுகளின் அடிப்படையாக, இனவெறிக் கோட்பாட்டை அது புகுத்தியது. இன அடிப்படையில் ''தேர்ந்த'' ''தூய்மையான'' மக்களே, இதர அனைவரையும் ஆள வேண்டும் என்ற கோட்பாட்டை உருவாக்கியது, சித்தாந்த ரீதியில் மட்டும் அவர்கள் இதனைச் செய்யவில்லை. ஆனால் அத்துடன் ஜெர்மனியின் அரசாங்கக் கொள்கை என்ற முறையிலும் அனைத்து யூதர்களையும், ஸ்லாவ் இனமக்களையும் இதரர்களையும் அழித்தொழிப்பது அவசியமானது என்பதை ஆதாரப்படுத்தி நாஜிகள் செயல்பட்டனர். பாட்டாளி வர்க்க சர்வதேசியத்தின் பயங்கரப் பகைவர்களாக அவர்கள் திகழ்ந்தனர். அது பரவுவதைக் கண்டு நாஜிகள் வெகுண் டெழுந்தனர். ஆட்சிக்கு வருவதற்கு முன்பே கூட, இட்லர் ஒரு திட்டத்தை சிந்தித்திருந்தான். ஒரு படு பிற்போக்கான தேசிய வெறியின் அடிப்படையில் திட்டவட்டமான, உணர்வு பூர்வமான கல்வியளித்து சர்வதேசிய சித்தாந்தத் திலிருந்து ஜெர்மானியர்களை ''விடுவிப்பதுமே'' அவனது திட்டம். ''தேசங்களுக்கிடையிலான ஒருங்கிணைவு, உலக சமாதானம், சர்வதேச ரீதியான கூட்டுறவு மற்றும் சர்வதேசிய ஒருமைப்பாடு என்பனவற்றில் நம்பிக்கை கொள்வதிலிருந்து'' நமது மக்களை நாம் விடுதலை செய்வோம் என அவன் கூறினான். இக்கருத்துக்கள் அனைத்தையும் அழிப்பதற்கான அவனது உறுதிப்பாட்டை அவன் வெளிப் படுத்தினான்.

யுத்தத்திற்கு பிந்திய பொருளாதார மற்றும் அரசுகளுக் கிடையிலான தேசிய உறவுகளில். பலவழிகளிலும், தேசிய

துள்ளது. ஏகபோக மூலதனத்தின் பிரசார இயந்திரம் நேரம் காலமின்றி வேலைசெய்து கொண்டிருந்தது. தேசியப் பிரச்சினைகளைக் கொண்டு சமுதாயப் பிரச்சினைகளை இருட்டடிக்கவும் சர்வதேசிய அரங்கில் காணப்பட்ட தேசிய முரண்பாடுகளுக்கு பின்னாலிருந்த உள்நாட்டு வர்க்க முரண்பாடுகளை மூடிமறைக்கவும் அதன் வாயிலாக முயற்சி செய்யப்பட்டது.

காலனிப் பிரச்சினைகள் சம்பந்தமாக முதலாளித்துவ நாடுகளுக்கிடையிலிருந்த உறவுகள் ஒருபுறம். முதலாளித்துவ நாடுகளுக்கும், காலனிகளிலும் சார்பு நாடுகளிலுமிருந்த மக்களுக்கும் இடையிலான உறவுகள் மறுபுறம். இவையே தேசியப் பிரச்சினையின் உள்ளடக்கத்தில் முற்றிலும் பிரதானமாக முன்னுக்குவந்திருந்த அம்சங்களாகும். சாம்ராஜ்ய நாடுகளுக்கும் காலனி நாடுகளுக்குமிடையிலான உறவில் பொருளாதாரக் காரணிகளின் பங்கு மிகத்தெளிவாக அதிகரிக்கத் துவங்கியிருந்தது. முதலாளித்துவப் பொது நெருக்கடியின் முதலாவது கட்டத்திலேயே கூட இந்நிலை ஏற்பட்டிருந்தது. காலனிகளில் நேரடியான அரசியல் ஆதிக்கம் பலவீனப்பட்டிருக்கக்கூடும். மற்றும் வேறு சில நாடுகளில் அறவே இல்லாதிருக்கக் கூடும். ஆனால், இது எவ்வதத்திலும் ஒடுக்கப்பட்ட மக்களின் காலனி அடிமைத்தனத்தை குறைத்து விடவில்லை. உதாரணமாக, எகிப்தினதும், ஈராக்கினதும் சுதந்திரத்தை சம்பிரதாயமாக அங்கீகரித்துவிட்ட பின்னரும்கூட, பிரிட்டன் நடைமுறையில் அவற்றின் பொருளாதாரத்தைக் கட்டுப்படுத்துவது தொடர்ந்தது. அதன்மூலம், அவற்றின் உள்நாட்டு, வெளிநாட்டுக் கொள்கைகளிலும் கூட அது செல்வாக்குச் செலுத்தியது, 1920-களின் கடைசியிலும், 1930-களின் ஆரம்பத்திலும், பிரிட்டிஷ் குடியேற்ற நாடுகளைப் பொறுத்தவரை, அவற்றின் உள் நாட்டு வெளிநாட்டுக் கொள்கைகளைப் பொறுத்தவரை, அவை சுதந்திரமானவை என அதிகார பூர்வமாக பிரகடனப்படுத்தப்பட்டிருந்தது. ஆனால், பிரிட்டனது மிகப்பெரிய முதலீடுகளும், பொருளாதார உடன்படிக்கைகளின் கட்டுக்கோப்பும், விசேடமாக உருவாக்

கப்பட்ட ஸ்டெர்லிங் வட்டத்தில் குறிப்பாக அந்நாடுகள் உட்படுத்தப்பட்டிருந்ததும், பல வழிகளில் அவற்றைக் கட்டுப்படுத்த பிரிட்டனுக்கு வாய்ப்பளித்தது, அவற்றை தொடர்ந்து சுரண்ட வாய்ப்பளித்தது.

மேலும் ஒரு அம்சமும் உண்டு. அது என்னவெனில், பிரிட்டன் பிரதானமான காலனிஆதிக்க வல்லரசாக நீடித்த போதிலும், காலனி நாடுகளில் அதன் அரசியல் அதிகாரத்தை அது நீடித்துக் கொண்டிருந்த போதிலும் அங்கிருந்த பொருளாதார நிலைகளை அமெரிக்க ஏகபோகவாதிகள் படிப் படியாக கைப்பற்றிக் கொண்டிருந்தனர். உண்மையில், அதன் குடியேற்ற நாடுகளில் ஒன்றான கனடாவின்மீது, அமெரிக்க ஏகபோகவாதிகள் தங்கள் பிடிப்பை உறுதியாக ஏற்படுத்திக் கொண்டனர். இவை அனைத்துமாகச் சேர்ந்து அமெரிக்காவின் மீது பிரிட்டனது சார்புநிலையை அதிகரித்தது எனலாம். பிரிட்டன் விரைவிலோ பின்னரோ அமெரிக்கா வின் காலனியாக மாறலாம் என்ற கருத்து முற்றிலும் பகிரங்கமாக பத்திரிகைகளில் விவாதிக்கப்பட்டது. 1930-ல் வெளிவந்த, '**அமெரிக்கா இங்கிலாந்தை வெற்றி கொள்கிறது**' என்ற தனது நூலில் லுட்வெல் டென்னி கூறு கிறார்: ''நாங்கள் பிரிட்டனது காலனியாக ஒரு காலத்தில் இருந்தோம். அது முடிவுறும் முன்னால் எங்களது காலனி யாக இருக்கும் பெயரளவிலல்ல, ஆனால் உண்மையாகவே.''*

இதர நாடுகளை கொள்ளையடிப்பதிலும் அடிமைப்படுத்து வதிலும் பிரதான கருவிகளிலொன்றான மூலதன ஏற்றுமதி என்னும் துறையில் அமெரிக்க-பிரிட்டிஷ் போட்டா போட்டி குறிப்பாக மிகவும் கடுமையடைந்திருந்தது. அமெரிக்க ஏகபோகங்கள் தெட்டத் தெளிவாகவே முன்னணியிலிருந்தன; உலக மூலதன ஏற்றுமதியில் பிரிட்டனது, பங்கு 10.3 சதவீதமாக மட்டுமே இருந்தது.

* 1950—ல் நியூயார்க்கில் வெளியான, ரஜனிபாமிதத் தின் 'பிரிட்டனது சாம்ராஜ்ய நெருக்கடி' என்ற நூலில், லுட்வில் டென்னியின் மேற்படி மேற்கோள் கையாளப்பட்டுள்ளது.

அதேசமயத்தில் அமெரிக்காவின் பங்கு 13.5 சதவீதமாக இருந்தது. உள்நாட்டுத் தொழிலாளர்களின் உழைப்புச் சக்தியை சுரண்டுவதின் மூலம் உயர்ந்த லாபங்களை பெறக் கூடிய, காலனி நாடுகளுக்கு மூலதன ஏற்றுமதி என்பது குறிப்பாக மிகவும் சாதகமானதாக இருந்தது. உதாரண மாக பிரிட்டனை எடுத்துக் கொள்வோம்: காலனிகளிலும், குடியேற்ற நாடுகளிலும் அதன் முதலீடுகள், வெளிநாடு களில் செய்யப்பட்டுள்ள அதன் மொத்த முதலீடுகளில் பாதிக்குச் சற்று கூடுதலாக மட்டுமே இருந்தன. ஆனால், அதிலிருந்து அது பெற்ற லாபங்களை எடுத்துக் கொண்டு பார்த்தால், மொத்த லாபத்தில் மூன்றில் இரண்டு பங்கிற்குமேல் காலனிகளிலிருந்தே பெற்றுள்ளது. அது திடமாக வளரவும் செய்தது: 1912-ல் அதன் லாபம் 176 மில்லியன் பவுண்டுகளாக இருந்தது. 1929-ல் ஏறத்தாழ 250-மில்லியன் பவுண்டுகளை எட்டி விட்டது. பிரிட்டனது அரசாங்க வரவு-செலவு அறிக்கையில் செலவினங்களுக்காக காலனி நாடுகளிலிருந்து வந்த வரவு விகிதம் 10.1:1.0 என்ற விகிதத்திலிருந்தது. இந்த உண்மை விபரம், காலனி களில் நிகழ்ந்த சுரண்டலின் தீவிரத்தன்மையை தெள்ளிதின் புலப்படுத்துவதாகும்.

ஆயினும், இந்த விபரங்கள், வரவு செலவினை மட்டும் எடுத்துக் காட்டவில்லை. காலனிகளிலும், சார்பு நாடுகளி லும் உள்ள மக்கள் எந்த அளவிற்கு அரக்கத்தனமாக சுரண்டப்படுகின்றனர், கொள்ளையடிக்கப் படுகின்றனர் என் பதையும் எடுத்துக் காட்டுவனவாகும். கொடூரமான அரசியல் ஒடுக்குமுறையுடன் சேர்த்து, ஒடுக்கப்பட்ட மக்கள் தேசிய ரீதியில் ஒன்றுபடுவதையும், இதர மக்களுடன் கலந்து தேசங்களாக வளர்ச்சி பெறுவதையும், உருவா வதையும் இவர்கள் எந்த அளவிற்கு பின்னுக்குத் தள்ளி யுள்ளனர் என்பதையும் எடுத்துக் காட்டுவனவாகும். இந்தக் கடும் சுரண்டல், உள்நாட்டில் அறிவு ஜீவிகளையும் தொழி லாளர் பிரபுக் கூட்டத்தையும் திருப்தியுடன் வைத்திருப் பதற்கு, பிரிட்டிஷ் முதலாளிகளுக்கு துணை செய்தது.

விடுதலைக்காக போராடிக் கொண்டிருந்த ஒடுக்கப்பட்ட மக்களுக்கெதிரான போராட்டத்தில், பிரிட்டிஷ் மக்களில் பெரும்பான்மையினரை தன் பக்கம் வென்றெடுப்பதற்கு துணை செய்தது. சுரண்டுவோரதும், சுரண்டப்படுவோரதும் தேசிய அடையாளத்தை இது எவ்வாறு செயற்கையான முறையில் முக்கியப்படுத்தியது என்பதையும் "தேசிய சமாதானம்" என்ற வேடத்தை உருவாக்கிக் காட்டியது என்பதையும் காணலாம்.

இயல்பாகவே, மேலே குறிப்பிடப்பட்டுள்ள அம்சங்கள் அனைத்து காலனி ஆட்சிகளுக்கும் பொருந்துவதாகும். பெரிதாயினும் அல்லது சிறிதாயினும்,அமெரிக்கா, பிரான்ஸ், ஹாலந்து, போர்ச்சுகல், பெல்ஜியம், ஸ்பெயின் மற்றும் மிதரர் உட்பட அனைத்திற்கும் பொருந்துவதாகும். காலனிகளிலிருந்தும், சார்பு நாடுகளிலிருந்தும் அவர்கள் லாபமடித்தது நேரடியான அரசாட்சியின் மூலமாகவும், மிகப்பெரிய முதலீடுகளின் மூலம் மட்டுமல்ல. ஆனால் அத்துடன், சமனற்ற வர்த்தகத்தின் மூலமும் ஆகும். உலகின் ஐந்தில் ஒரு பங்கு மக்களையுடைய வளர்ச்சி பெற்ற முதலாளித்துவ நாடுகளின் லாபக்குவிப்பு, உலக மக்கட் தொகையில் நான்கில் மூன்று பங்கினரை கொள்ளை யடித்ததின் விளைவாகும். 1914-ல் 8,500 மில்லியன் டாலர்களாக இருந்த அவர்களது லாபக்குவிப்பு, 1938-ல் 11,000 மில்லியன் டாலர்களாக உயர்ந்தது.

லத்தீன் அமெரிக்க மக்கள் அமெரிக்காவை சார்ந்திருக்கும் நிலை, குறிப்பிடத்தக்க அளவிற்கு அதிகரித்தது. 1940-ல், இந்தப் பிரதேசத்தில் அமெரிக்க ஏகபோகங்களின் முதலீடுகள் 3,700-மில்லியன் டாலர்களாகப் பெருகி விட்டன. அவை கோடிக்கணக்கான டாலர்கள் வருடாந்திர லாபங்களையும் அளித்தன.

கொடூரமான காலனிச் சுரண்டல் இருந்தபோதிலும் ஒடுக்கப்பட்ட மக்களும் தேசிய வளர்ச்சியில் சிறிதளவு முன்னேற்றத்தை சாதித்தனர் என்பதை மறுப்பதற்கில்லை,

தேசிய விடுதலைப் போராட்டம் உறுதியாக வளர்ந்தது. 1920-களில், லத்தீன் அமெரிக்க நாடுகளைச் சேர்ந்த மக்கள், உலக வரலாற்றின் பிரதான நீரோட்டத்தினுள் மிகவும் தெட்டத்தெளிவாக ஈர்க்கப்பட்டனர். அவற்றில் பெரும் பாலான நாடுகள் அதற்கு மிகவும் முன்னரேகூட அரசியல் விடுதலையை ஈட்டிவிட்டன. ஆசியாவிலும் கூட இந்த இயக்கம் படுவேகமாக வளர்ந்தது. 1924-27-ல் சீனவில் நிகழ்ந்த புரட்சி, 1926-ல் இந்தோனேஷியாவில் ஏற்பட்ட பேரெழுச்சி, 1928-1933-ல் இந்தியாவில் நிகழ்ந்த விடுதலைப் போராட்ட எழுச்சி ஆகியவை இதனை எடுத்துக்காட்டின. பல நாடுகளில் காலனி ஆதிக்க வாதிகள் சலுகைகள் வழங்க நிர்ப்பந்திக்கப்பட்டனர்; 1922-ல் எகிப்தின் சுதந்திரத்தை பிரிட்டன் அங்கீகரித்தது. 1930-ல் ஈராக்கின் மேலிருந்த அதன் மேலாதிக்கம் ரத்து செய்யப்பட்டு விட்டது.

லத்தீன் அமெரிக்க நாடுகள் சிலவற்றில், விடுதலைக்காக எழுந்த மக்களின் எழுச்சிகளை, அமெரிக்க ஏகபோக வாதி களால் எதிர்த்து நிற்க முடியவில்லை. அந்த விடுதலை இயக்கங்கள் இடதுசாரி பூர்ஷுவாக் கட்சிகளால் தலைமை தாங்கப்பட்டன. அந்நிய மூலதனத்தின் பிடியைத் தளர்த்து வதும், ஜனநாயக சீர்திருத்தங்களை உருவாக்குவதும் அவற்றின் நோக்கங்களாக இருந்தன. இதுதான் போலிவியா, பராகுவே, மெக்ஸிகோ, சிலி மற்றுமிதர நாடுகளில் நிகழ்ந்தது. உதாரணமாக, 1932-ல் சிலியில் நடைபெற்ற தேசிய விடுதலை இயக்கம், ஒரு ''சோஷலிசக் குடியரசை'' உருவாக்குவதில் கூட வெற்றியீட்டியது. ஆனல், அது 12-நாட்கள்தான் நீடித்தது; 1938-ல் மக்கள் அணி அரசு அமைந்தது. 1934-40-ல், மெக்சிகோவில், அமெரிக்க ஏகபோகங்களுக்கு எதிரான, ஏகாதிபத்திய எதிர்ப்பு தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன, அந்நிய ஏகபோக சொத்துகளை நாட்டுடமையாக்குதல், அரசுக் கடன்களை ஒத்திவைத்தல் உட்பட பல நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டன.

ஆப்பிரிக்க கண்டமும் விழித்தெழத் துவங்கியிருந்தது. 1921-முதல் 1926-வரை மொராக்கோவில் நிலவிய புகழ் மிக்க ரிப் குடியரசு இதற்கோர் தெளிவான சான்ருக திகழ்ந்தது. அதனைத் தொடர்ந்து, 1930-ல் தேசிய விடுதலை இயக்கம் வளரலாயிற்று.

முதலாளித்துவப் பொது நெருக்கடியில் முதலாவது கட்டத்தின் பொழுது, பூர்ஷுவா உலகில் நிகழ்ந்த, தேசங்களினதும், தேசிய உறவுகளினதும் வளர்ச்சியினைப் பற்றி பரிசீலிக்கையில், சமூக ஜனநாயகக் கட்சிகளின் அரசியல் ரீதியான குறுகிய பார்வையினையும், தத்துவார்த்த ரீதியில் அவற்றின் இயலாத் தன்மையினையும் நாம் பார்க்கத் தவறி விடக்கூடாது. ஏறத்தாழ 7-மில்லியன் உறுப்பினர்களையும், 25-மில்லியன் வாக்காளர்களையும் கொண்டிருந்த அச்சமூக ஜனநாயகக் கட்சிகள், கிட்டத்தட்ட முழுமையாகவே பூர்ஷுவாக்களின் தலைமையைப் பின்பற்றின. உதாரணமாக, ஆஸ்திரியாவிலிருந்த, சமூக ஜனநாயக தொழிலாளர் கட்சி, பல நூற்ருண்டுகளாக தேசிய அரசுத்துவம் கொண்டு விளங்கிய ஒரு ஆஸ்திரிய தேசம் இருப்பதையே அப்பட்டமாக புறக்கணித்திருந்தது. ருஷ்யாவில் அக்டோபர் புரட்சி முடிந்து சிறிது காலத்திற்குப் பின்னரும்கூட, வலதுசாரி சமூக ஜனநாயகவாதிகள், ஆஸ்ட்ரோ-ஹங்கேரியன் முடியாட்சியின் கீழிருந்த மக்களுக்கு, ''வரம்புக்குட்பட்ட சுயநிர்ணய உரிமை'' என்ற கொள்கையினையே கடைப்பிடித்தனர். அதன் உண்மையான பொருள், ஒரு ''ஒன்றுபட்ட'' நாட்டை பாதுகாப்பதும், சுயாட்சி உரிமையும் என்பதுமேயாகும். 1918-ன் இறுதி வரையில் சுயநிர்ணய உரிமை பற்றிய தங்களுடைய சித்தத்தை மக்கள் உறுதியாக பிரதிபலித்தபொழுது கூட, சமூக ஜனநாயக தொழிலாளர் கட்சி, அதன் இடதுசாரிகளின் ஆலோசனையையே பின்பற்றி சுயநிர்ணய உரிமை என்ற கருத்தை உத்தரவாதம் செய்யவில்லை (அந்த இடதுசாரி பிரிவினர் ஆட்டோ பாயர் என்பவரால் தலைமை தாங்கப்பட்டனர். அவர் அதன் பிறகு சிறிது காலம் இகழார்ந்த ''கலாச்சார-தேசிய சுயாட்சி''

என்ற திட்டத்தை கைவிட்டிருந்தார்). ஆனால், ஆஸ்ட்ரியன்களைப் பொறுத்தவரையில்கூட, அதன் சமூக-ஜனநாயகக் கட்சித் தலைவர்கள் ஒரு அரைகுறை நடவடிக்கையாக சுயநிர்ணய உரிமையைக் கருதினர். ஒரு வெற்றிகரமான ''அகில-ஜெர்மானியப் புரட்சியின்'' விளைவாக ஜெர்மனியோடு ஆஸ்ட்ரியாவை இணைப்பதுபற்றிக் கனவு கண்டு கொண்டிருந்தனர்.

ஆஸ்திரியாவின் சமூக ஜனநாயக வாதிகள், அவர்களது நாட்டு மக்களின் உண்மையான தேசிய விழைவுகளைப் புரிந்து கொள்ளவில்லை. பிரதானமாக அவர்களது பூர்ஷுவா சித்தாந்த வரம்புகளின் விளைவாகவே அவ்வாறு அவர்கள் புரிந்து கொள்ள முடியாமல் போயிற்று. ''ஜெர்மன் அரசினுள் ஜெர்மன் ஆஸ்திரியாவை இணைப்பது'' என்பது, ''1918 கால கட்டத்தின் தேசியப் புரட்சிகள் நிறைவு பெறுவதற்கான'' ஒரு அவசியமான நிபந்தனையாகும் என, அவர்களது 1926-ம் ஆண்டின் திட்டத்திலேயேகூட வரையறுத்திருந்தனர். 1933-ம் ஆண்டு அக்டோபரிலேதான், ஜெர்மனியில் நாஜிகள் ஏற்கனவே ஆட்சி அதிகாரத்திற்கு வந்துவிட்ட பின்னர்தான், சமூக ஜனநாயகவாதிகளின் ஒரு கட்சி மாநாட்டில், அதனுடைய திட்டத்திலிருந்து, மேற்கூறிய பாகத்தை நீக்குவதென தீர்மானித்தனர். ''ஒரு சுதந்திரமான, சுயசார்புத்தன்மை கொண்ட ஆஸ்திரியாவையே சமூக ஜனநாயகம் கோருகின்றது'' என்று அந்த மாநாட்டில் பிரகடனம் செய்தனர்.

தொழிலாளர் மற்றும் சோஷலிஸ்ட் அகிலம் என அழைக்கப்பட்ட அமைப்பின் மாநாடு, 1925-ல் மார்சேல் என்ற இடத்தில் நடைபெற்றது. அம்மாநாட்டில் காலனி ஆதிக்கம் பற்றிய பிரச்சினை விவாதிக்கப்பட்டது. அந்த விவாதத்தின் பொழுதுதான், வலதுசாரி சமூக ஜன நாயக வாதிகளின், மக்கள் விரோத அடிப்படையைக் கொண்ட கண்ணோட்டமும் செயல்பாடும் அம்பலமாயின. மொராக்கோ மக்களுக்கு எதிரான பிரெஞ்சு-ஸ்பானிஷ் காலனி யுத்தம் பெல்ஜியம் நாட்டு சோஷலிஸ்டான

எல். பிரார்டு என்பார் ஏறத்தாழ மிகவும் பொதுவான கருத்தினைப் பிரதிபலித்தார்: “ ...கம்யூனிஸ்டுகளைப் போன்று மிகவும் பக்குவமற்ற வெள்ளைத்தனமான முறையில் இந்த பிரச்சினையைப்பற்றி எண்ணுபவர்கள் இங்கு யாருமில்லை, கம்யூனிஸ்ட்டு, அவர்களின் தீர்வு, அந்த பிரதேசத்தை உடனடியாக காலி செய்வது என்பதே.''* காலனி ஆதிக்க வாதிகள் வாபசாகி செல்வதற்கு முன்னரேகூட, ஒடுக்கப் பட்ட மக்களின் பொருளாதார விடுதலை சாத்தியம் என டச்சு சோஷலிஸ்டுகள் கூறினர். சுதந்திரத்தின் மிக உயர்ந்த வடிவமாக அரசியல் சர்வ உரிமை பெறுவதையே பிரகடனப் படுத்தும் அளவிற்குக்கூட அவர்கள் சென்றனர். ''ஐரோப்பியர்களுடன் சுதேசிகளின் அரசியல் தன்வய மாக்கம்'' என்றுகூட பிரெஞ்சு சோஷலிஸ்டுகள் ஆலோசனை வழங்கினர். இவ்வாருக அவர்கள், தேசிய சுதந்திரத் திற்கான ஒடுக்கப்பட்ட மக்களின் போராட்டத்தைப் புறக்கணித்தனர். அடிமைப்படுத்தப்பட்டிருந்த நாடுகளில் தேசங்களின் உருவாக்க நடப்புக்களை அவர்கள் காணத் தவறினர். அரசியல் சுதந்திரம் வழங்குவதை ஐக்கிய நாடுகளின் சபையின் முழு உரிமையாக்க வேண்டுமென்று, மார்சேல் மாநாட்டுத் தீர்மானம் கூறியது. அந்த ஐக்கிய நாட்டு சபையில், தீர்மானகரமான வாக்குரிமை காலனி யாதிக்க வாதிகளுக்கே இருந்தது என்பது எல்லோருடைய பொது அறிவுக்கும் எட்டியிருந்த விஷயமாக இருந்தது.

கம்யூனிஸ்ட் அகிலத்தில் ஓரணியில் திரட்டப்பட்டி ருந்த, கம்யூனிஸ்ட் கட்சிகளால் தலைமை தாங்கப்பட்ட தொழிலாளி வர்க்கம் மட்டுமே, தேசியப் பிரச்சினையில், உண்மையிலேயே ஒரு முற்போக்கான நிலையை மேற் கொண்டது. லெனினது அணுகுமுறை—அதாவது, ஏகபோக மூலதனத்திற்கெதிரான போராட்டத்தில், தொழிலா ளர்களின் சர்வதேச ஒற்றுமையின் தேவையை அங்கீகரிக்கும் அதே சமயத்தில், மக்களின் தேசிய நலனையும் கணக்கி

* ஜே. லென்ஸ், ''இரண்டாவது அகிலத்தின் தோற் றமும் வீழ்ச்சியும்'', நியூயார்க், 1932, பக். 249.

லெடுத்துக் கொள்வது—அவர்களது தோரணையை உருவாக்கு வதில் தீர்மானகரமானதாக இருந்தது.

சமுதாய முன்னேற்றத்தை நோக்கிய, தேசிய மற்றும் சர்வதேசிய இயக்கங்களின் முன்னேற்றத்துக்கு துணை புரிவதில், தொழிலாளி வர்க்கமும் அதன் கட்சிகளும் தங்களால் இயன்ற அளவு உதவியுள்ளன. முதலாளித்துவப் பொது நெருக்கடியின் முதலாவது கட்டத்தில் நிலவிய மிகவும் குழப்பான சூழ்நிலைக்கிடையே அவை தமது பங்கை சிறப்புற ஆற்றியுள்ளன. உதாரணமாக, யூகோஸ்லாவியாவில், தேசங்கள் மற்றும் தேசிய இனங்களின் வளர்ச்சிக்கு அதே போன்று, ஆஸ்திரிய மற்றும் அயர்லாந்து தேசங்கள் மேலும் வளர்ச்சி பெறுவதிலும் தொழிலாளி வர்க்கம், தனது ஆழமான அக்கறையை எடுத்துக் காட்டியது. அமெரிக்கக் கம்யூனிஸ்ட் கட்சி கருப்பு நிற மக்களின் பிரச்சினையில் கணிசமான கவனத்தைச் செலுத்தியது குறிப்பிடத்தக்கதாகும். கருப்பு நிற மக்களின் பிரச்சினை முற்றிலும் ஒரு வர்க்கப் பிரச்சினையல்ல என்று உணர்ந்து 1930-ம் ஆண்டில், நாடு முழுமையிலுமுள்ள அமெரிக்க கருப்பு நிற மக்களுக்கு, சமத்துவ உரிமை வேண்டுமென்றும், அவர்கள் வாழும் பிரதேசத்திற்கு சுய நிர்ணய உரிமை அளிக்க வேண்டுமென்றும் கம்யூனிஸ்ட் கட்சி கோரியது. கருப்பு நிற மக்களின் விடுதலைப் பிரச்சினையை, அமெரிக்க வரலாற்றில் முதன் முதலாக கிளப்பியவர்கள் கம்யூனிஸ்டுகளேயாவர். ஒடுக்குமுறைக்கும், சுரண்டலுக்கும் எதிரான முன்னணிப் போர் வீரர்களாக அவர்கள் திகழ்ந்தனர்.

மக்களின் வர்க்க நலன்களை முற்றிலுமாக புறக்கணித்து தேச ஒற்றுமையை பாதுகாத்திட முனைந்த பூர்ஷுவாக்களுக்கு முற்றிலும் மாறாக, கம்யூனிஸ்ட் அகிலத்தின் நான்காவது மாநாடு ஒரு வர்க்க அடிப்படையின் மீது, பாட்டாளி வர்க்கத்தைச் சுற்றி, தேசத்தின் பெரும்பான்மை மக்களை ஒன்றுபடுத்துவதற்கான முறையில் ஒரு திட்டத்தை லெனினது முன் முயற்சியின் அடிப்படையில் மேற்கொண்டது. ஒரு தொழிலாளர்களின் அரசாங்கம் என்ற

கோஷமும் அதனுள் இருந்தது. (தொழிலாளி வர்க்கத்தால் தலைமை தாங்கப்படும்) மக்கள் ஐக்கிய முன்னணிப் போர்த் தந்திரங்களிலிருந்து அது உருப்பெறக் கூடியதாக இருந்தது. மக்கள் ஐக்கிய முன்னணி என்பது, தொழிலாளி வர்க்க சர்வாதிகாரத்தை நோக்கிச் செல்லக் கூடிய வாய்ப்பான வடிவமாக விளங்கியது.பொதுவான ஜனநாயக இயக்கத்தில் பாட்டாளி வர்க்க சர்வதேசிய தத்துவம் பரவியதை இது எடுத்துக் காட்டியது. ஒரு சர்வதேசிய அடிப்படையில், பல்வேறுபட்ட நாடுகளைச் சேர்ந்த உழைக்கும் மக்களை ஒன்றுபடுத்துவதிலும், குறுகிய தேசிய வெறியையும், தேசிய வாதத்தையும் எதிர்த்துப் போராடுவதிலும், முதலாளித்துவ நாடுகளிலுள்ள தொழிலாளி வர்க்கம் மாபெரும் வெற்றிகளை ஈட்டியுள்ளது. அந்த வெற்றிக்கு இளம் கம்யூனிஸ்ட் அகிலத்தின் நடவடிக்கையும், சர்வதேச தொழிற்சங்கம் மற்றுமிதர சர்வதேச அமைப்புகளது நடவடிக்கைகளும் மென்மேலும் துணை செய்தன. ஏகாதிபத்திய காலனி யுத்தங்களுக்கும், பாசிசத்திற்கும் எதிரான போராட்டத்தில், இது மிகவும் தெட்டத் தெளிவாக பிரதிபலித்தது.

சோவியத் யூனியனும், பல தேசிய இனங்களை உள்ளடக்கிய சோவியத் அரசின் சோஷலிச நிர்மாணமும், முதலாளித்துவ நாடுகளிலிருந்த உழைக்கும் மக்களின் சிந்தனையில் ஒரு மகத்தான தாக்கத்தை ஏற்படுத்தின. முதலாளித்துவ உலகில் நிலவிய தேசியப் பிரச்சினையின் உள்ளடக்கத்தின் மீது செல்வாக்கைச் செலுத்தின. இந்த செல்வாக்கு பல வழிகளில் நிலவியது எனலாம்: சோவியத் மக்கள் தங்கள் சர்வதேசக் கடமையை நிறைவு செய்வது, தொழிலாளி வர்க்கத்தின் சர்வதேச ஒற்றுமையுடன் பிணைந்திருந்தது; சோவியத் ஒன்றியத்தில் ஏற்பட்ட தேசியப் பிரச்சினையின் தீர்வு, முதலாளித்துவ நாடுகளிலும், காலனிகள் மற்றும் அரைக்காலனி நாடுகளிலும் வாழ்ந்து வந்த உழைக்கும் மக்களுக்கு, எவ்வாறு தங்கள் மக்களின் உண்மையான தேசிய நலன்களைப் பாதுகாக்க முடியும்

என்பதை எடுத்துக் காட்டியது; மிகவும் வளர்ச்சிபெற்ற சோவியத் தேசிய இனங்கள், முன்னுளில் மிகவும் பின் தங்கிய தேசியப் பிரதேசங்களிலிருந்த மக்களுடன் கொண்ட ஒற்றுமை சாம்ராஜ்ய நாடுகள் மற்றும் காலனி நாடுகளைச் சேர்ந்த உழைக்கும் மக்கள், தொழிலாளி வர்க்கத்தின் தலைமையின்கீழ், ஒரு ஒன்றுபட்ட ஏகாதிபத்திய எதிர்ப்பு அணியை அமைப்பதற்கான போராட்டத்தின் வழிமுறைகளையும், வடிவங்களையும் எடுத்துக்காட்டியது.

முதலாளித்துவ நாடுகளில் உழைக்கும் மக்களின் சர்வதேச ஒற்றுமையை முன்னேற்றுவிக்கும் வழிகளில் ஒன்று— ஏகபோக மூலதனத்திஞல் இயல்பிற்கு விரோதமாக உருவாக்கப்பட்டுள்ள தேசிய விரோத குரோதங்களை வென்று மக்களை ஒன்றுபடுத்துவதின் மூலமே அது சாத்தியம்—சோவியத் ஒன்றியத்தின்பால் ஒரு உண்மையான யான சர்வதேசிய தோரணையை கோடிக்கணக்கான உழைக்கும் மக்கள் மத்தியில் வளர்ப்பதும், சோவியத் மக்கள் ஆற்றிவரும் சர்வதேசக் கடமையைப்பற்றி புரிந்து கொள்ளச் செய்வதும் அதற்கு இன்றியமையாததாகும்.

கடுமையான உள்நாட்டு யுத்தம் நடைபெற்ற ஆண்டு களைப் பின்தொடர்ந்து, சோஷலிசத்தை நிர்மாணிப்பதை, சோவியத் குடியரசு மக்களின் பிரதான சர்வதேசியக் கடமையாக லெனின் வரையறுத்தார். “நமது பொருளாதாரக் கொள்கையின் மூலம், சர்வதேசப் புரட்சியின் மீது நமது பிரதான செல்வாக்கை நாம் இப்பொழுது செலுத்திக் கொண்டிருக்கிறேம்”* என்று 1921 ஜூனில் லெனின் கூறினுர். இது ஒரு மிக முக்கியமான கருத்தாகும். ஏனெனில், லெனினது திட்டத்தின்கீழ், சோவியத் ஒன்றியத்தில் ஒரு சோஷலிசப் பொருளாதாரத்தின் அடித்தளங்களை நிர்மாணிப்பது என்பது டிராட்ஸ்கியவாதிகளால் சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியிலும் கம்யூனிஸ்ட்

* வி. இ. லெனின், “நூல் திரட்டு”, தொகுதி 32, பக். 437.

அகிலத்திலும் ஒரு சர்வதேசியத்தைக் கைவிடும் செயலாக அத்தருணத்தில் சித்தரிக்கப்பட்டது. இது முற்றிலும் அம்மக்களைச் சேர்ந்தது, முற்றிலும் அவர்களது சொந்த நல்வாழ்வு சம்பந்தப்பட்டது என்னும் அதேசமயத்தில், அவர்கள் சோஷலிசத்தை நிர்மாணிக்கும் மக்களின் சர்வதேசியக் கடமையை புறக்கணித்தனர் என்று கூறினர். டிராட்ஸ்கி அத்தருணத்தில் ஒரு "த த் து வ த் தை" உருவாக்கினர். ஒரு சோஷலிசப் புரட்சியின் வெற்றியைத் தொடர்ந்து, ஒரு தேசிய அரசுக் கட்டமைப்பிற்குள், அதாவது ஒரு நாட்டிற்குள் மட்டும் சோஷலிசத்தை நிர்மாணிப்பதென்பது ஒரு முற்றிலும் கவைக்குதவாத முயற்சியாகும் என்று அது குறிப்பிட்டது. உலகளாவிய தனியொரு முழுமை என்பதிலிருந்து தனிப்பட்ட நாடுகளை அத்தகைய முயற்சிகள் பிரித்துத் தனிமைப்படுத்திவிடும் என்றும், உலகின் உற்பத்தி சக்திகளது வளர்ச்சியை அவை பின்னுக்குத் தள்ளிவிடும்மென்றும் டிராட்ஸ்கி வாதிட்டார்.

உலகம் முழுமையிலும், சமூகத்தின் அனைத்துத் துறைகளிலும் சர்வதேசியம்யமாதல் நிகழ்ந்து விட்டது என்பது மறுக்கமுடியாத உண்மை.இது டிராட்ஸ்கியை, தேசியமின்றி சர்வதேசியம் வாழமுடியும்என்ற முடிவுக்கு இட்டுச்சென்றது. எனவே, தேசிய அரசுகளின் உருவாக்கம் என்பது அவரது கருத்துப்படி "அப்பட்டமான பிற்போக்குத்தனமாக" இருந்தது. சுதந்திரமும், தேசிய அரசுரிமையும் அவருடைய பார்வையில் காலங்கடந்தவையாக இருந்தன. தேசிய அரசு என்பது "உற்பத்தி சக்திகளின் வளர்ச்சியின்மீது ஒரு தடையாக மாறிவிட்டது". "அது வளர்ச்சியின் மீதான ஒரு முட்டுக்கட்டை" என்பது அவரது கருத்து. சர்வதேசிய அகிலத்தின் அம்சங்களுடன் தேசிய அம்சங்களை இணைந்து கம்யூனிஸ்ட் திட்டம் உறுதிப்படுத்தியதிலிருந்து, தேசிய கட்டமைப்பினுள் சர்வதேசிய உருவாக்கத்தை பார்க்கத் துவங்கியதிலிருந்து, "சர்வதேசியத்தின் முதுகெலும்பு முறிக்கப்பட்டுவிட்டது" என்று 1928-ல் அவர் எழுதினர். "பிரதானமான வர்க்கக் குறிக்கோள் தேசிய ரீதியான கண்

ளோட்டத்திஞல் சாதிக்கப்பட முடியாது'' என்ற அசைக்க முடியாத நம்பிக்கையே ''புரட்சிகர சர்வதேசியத்தின் பிரதான அம்சம்'' என்றும் அவர் கூறிஞர்.

டிராட்ஸ்கியின் கருத்துக்களை மிக நன்ருகப் புரிந்து கொண்ட சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியும், கம்யூனிஸ்ட் அகிலத்தைச் சேர்ந்த இதர மார்க்சிய-லெனினியக் கட்சிகளும் சோவியத் ஒன்றியத்தில் சோஷலிச நிர்மாணத்தின் சர்வதேசிய சாராம்சத்தை உயர்த்திப் பிடித்தன. கம்யூனிஸ்ட் அகில நிர்வாகக் குழுவின் விரிவுபட்ட ஏழாவது பேரவைக் கூட்டம் 1926-ன் இறுதியில் நடைபெற்றது. அதன் தீர்மானத்தில் கூறப்பட்டிருந்ததாவது: ''......... உண்மையாகவே சர்வதேசப் புரட்சியின் பிரதான ஸ்தாபன மையமாக சோவியத் நாடு திகழ்கிறது.''* மேலும் 1935-ல் நடைபெற்ற கம்யூனிஸ்ட் அகிலத்தின் 7-வது மாநாடு சோவியத் மக்கள் தங்களது சர்வதேசியக் கடமையை இன்னமும் மிகத் தெளிவாக நிறைவேற்றிக் கொண்டிருக்கின்றனர். அதிலும் குறிப்பாக, சோவியத் ஒன்றியத்தில் சோஷலிசத்தை நிர்மாணிப்பதின் மூலம் அவ்வாறு நிறைவேற்றிக் கொண்டிருக்கின்றனர் என்று அம்மாநாடு குறிப்பிட்டது. மேலும் அதன் தீர்மானங்களிலொன்று தெளிவாக குறிப்பிட்டதாவது:

> ''சோஷலிசத்தின் வெற்றியி'லிருந்து, சோவியத் ஒன்றியம் மகத்தான அரசியல், பொருளாதார, கலாச்சார, அரசாங்க சக்தியாக மாறிவிட்டது. அது உலகக் கொள்கைகளின் மீது செல்வாக்கை செலுத்துகின்றது. அது ஒரு கவர்ந்திழுக்கும் மையமாக மாறிவிட்டது. சர்வதேச சமாதானத்தை பேணுவதில் நாட்டங் கொண்ட அனைத்து மக்களையும், நாடுகளையும், ஏன் அரசுகளையுமேகூட அணி திரட்டும் மையமாக மாறி விட்டது. யுத்த அபாயத்துக்கு எதிரான, அனைத்து நாட்டு

*கம்யூனிஸ்ட் அகிலம்! ஆவணங்கள், பக். 680 (ரஷிய மொழியில்).

உழைக்கும் மக்களின் உறுதிமிக்க கோட்டையாக மாறி விட்டது. உலக பிற்போக்கிற்கு எதிராக உலகம் முழுமையிலுமுள்ள உழைக்கும் மக்களை அணி திரட்டு வதற்கான வலிமை பொருந்திய ஒரு ஆயுதமாக அது மாறிவிட்டது.''*

சர்வதேசிய தொழிற்சங்க அமைப்பின் மூலமும், அதே போன்று பல சந்தர்ப்பங்களில் நேரடியாகவும் சோவியத் யூனியம், முதலாளித்துவ நாடுகளிலுள்ள தொழிலாளர் களின் வர்க்கப் போராட்டத்திற்கு செயலூக்கம் நிறைந்த ஆதரவினை அளித்துள்ளது. பிரிட்டிஷ் சுரங்கத் தொழிலாளர் களின் பொது வேலை நிறுத்தத்தின்போது, அதற்கு சகோதர பூர்வமான ஆதரவினை அளித்த சம்பவத்தை இங்கு நினைவு கூர்வது போதுமானதாயிருக்கும். வேலை நிறுத்தம் செய்த தொழிலாளர்களின் நிதிக்கு தங்கமாக 11.5 மில்லியன் ரூபிள்களை சோவியத் தொழிலாளர்கள் திரட்டி அளித்தனர். மொத்தம் அவர்களுக்கு வந்து சேர்ந்த உதவித் தொகைகளில் மூன்றில் இரு பங்கு சோவியத் தொழிலாளர்கள் அளித்த தாகும். 1929-33 காலகட்டத்தில் முதலாளித்துவ அமைப்பையே உலுக்கிய பொருளாதார நெருக்கடி ஏற்பட்ட தருணத்தில், வெளிநாடுகளிலிருந்த லட்சக்கணக்கான தனது வர்க்க சகோதரர்களது வேலை வாய்ப்பினை, சோவியத் ஆர்டர்கள்தான் பாதுகாத்தன. அதாவது சோவியத் நாடு தனக்கு தேவையான பல பொருள்களை உற்பத்தி செய்து தருமாறு முதலாளித்துவ நாடுகளை கோரியதின் மூலம், அந்நாடுகளிலிருந்த லட்சக்கணக்கான தொழிலாளர்களின் வேலை வாய்ப்பினை பாதுகாத்தது. சோவியத் நிறுவனங்கள் மூலம் லட்சக்கணக்கானவர்களுக்கு தற்காலிக உடனடிப் பாதுகாப்பினையும், வேலை வாய்ப்பினையும் அளித்தது.

அதே சமயத்தில் சர்வதேச தொழிலாளி வர்க்கமும், கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையின்கீழ், மக்கள் சோஷலிசத்தை நிர்மாணித்து வரும் சோவியத் யூனியனுக்கு ஆதரவளிப்பது தனது ஓர் புனிதமான கடமையென

*கம்யூனிஸ்ட் அகிலத்தின் 7-வது மாநாடு, மாஸ்கோ, 1939, பக். 602.

கருதியது. சோவியத் ஒன்றியத்தில் சோஷலிச நிர்மாணத்தை தடுப்பதற்கு ஏகாதிபத்தியங்கள் திரும்பத் திரும்பமுயன்றன. தவணைக் கடன், ரொக்கக் கடன் ஆகியவற்றை கொடுத்துதவ அவை மறுத்தன. வளர்ச்சி பெற்ற முதலாளித்துவ நாடுகளுக்கு மூலப் பொருள்களை வழங்கும் ஒரு ஆதாரமாக சோவியத் ஒன்றியத்தை மாற்றிட அவை முயன்றன. சோவியத் எல்லைகளில் அவை ஆத்திரமூட்டும் செயல்களில் ஈடுபட்டன. சோவியத் நாட்டிற்கெதிரான "தாக்குதல்களை" திட்டமிட்டு ஏற்பாடு செய்தன. ஆனால் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும், உலகின் முதலாவது சோஷலிச அரசினை பாதுகாத்திட, சர்வதேச தொழிலாளி வர்க்கம் பொங்கி எழுந்தது.

முதலாளித்துவ நாடுகளிலுள்ள உழைக்கும் வர்க்கத்தின் உறுதிமிக்க சர்வதேச ஒற்றுமையும், சோவியத் ஒன்றியத்தோடு அவர்கள் வளர்த்துவரும் ஒருமைப்பாடும் ஏகாதிபத்தியவாதிகளை தொழிலாளர் நலச் சட்டம், கூலி உயர்வு, வேலை நேரத்திற்கு ஒரு வரையறை போன்ற ஒரு சில சலுகைகளை உழைக்கும் மக்களுக்கு வழங்கிட கட்டாயப் படுத்தியுள்ளன.

இத்தாலிய-ஜெர்மானிய தலையீட்டுக்கு எதிராகவும், உள்நாட்டில் வளர்ந்துவிட்ட பாசிஸ்டு ஜெனரல் பிராங்கோவுக்கு எதிராகவும் நடந்த வீரமிக்க போராட்டத்தில் ஸ்பெயின் குடியரசுக்குக் கிடைத்த ஆதரவு பாட்டாளி வர்க்க சர்வதேசியத் தன்மையின் வலுமிக்க எடுத்துக் காட்டாக அமைந்தது. உலகின் எல்லாப் பகுதிகளிலிருந்தும் உழைக்கும் மக்களும், முற்போக்கு வாதிகளும் தமது வர்க்கச் சகோதரர்களுக்கு உதவிக்கரம் நீட்டினர். ஸ்பெயின் நாட்டின் விடுதலையையும், சுயாதீனத்தையும் பாதுகாக்க 54 நாடுகளிலிருந்து தொண்டர்கள் அங்கே வந்தார்கள். கரிபால்டி, டாம்பிரவுஸ்கி, லிங்கன், செவ்செங்கோ, சப்பயேல், தேல்மான், டிமிட்ரோவ் இன்னும் மற்றவர்களின் பெயரால் சர்வதேச படை அணிகள் ஏற்படுத்தப்பட்டன. இந்த உதவியில் சோவியத் ஒன்றியத்தின் பங்கு

மிகப்பெரிய அளவில் இருந்தது. சோவியத் நாட்டிலி ருந்து ஆயுதங்களும், தொண்டர்களும், உணவுப் பொருட்களும் தொடர்ச்சியாக வந்து கொண்டிருந்தன. ஸ்பெயின் குடியரசு வாதிகளின் குழந்தைகளுக்கு சோவியத் நாட்டில் அடைக்கலம் கொடுக்கப்பட்டது. டோலோரைஸ் இபாருரி கூறியதுபோல் சோவியத் மக்கள் ஸ்பெயின் மக்கள்பால் காட்டிய ஒருமைப்பாடும், குடியரசுக்கும் அதன் இராணுவத்திற்கும் வழங்கிய திறமான பொருள் வகை உதவியும் மிக மிக முக்கியத்துவம் வாய்ந்தாக அமைந்தன. ஸ்பெயின் நாட்டு உழைக்கும் மக்கள் தங்களின் நேரடி அனுபவத்தின் மூலமாக பாட்டளி வர்க்க சர்வதேசியத்தின் உண்மையான பொருளேயும், உலக நாடுகளிலுள்ள உழைக்கும் மக்களின் விடுதலைப் போராட்டங்களுக்கு சோவியத் நாடு எத்தனை முக்கியமானது என்பதையும் நன்கு புரிந்து கொண்டார்கள்.

இவ்வாறு லெனினுடைய ஆதார நெறியும் போர்த் தந்திரங்களும் பாட்டாளி வர்க்க சர்வதேசியத்தின்மீது அவர் கொண்டிருந்த பற்றுதலும் மறக்க முடியாத ஓர் உண்மையை மேலும் உறுதி செய்தன. அதாவது சோவியத் மக்களுக்கும், எனைய சர்வதேச உழைக்கும் வர்க்கத்தின் இயக்கங்களுக்கும் உடனடி குறிக்கோள்கள் வெவ்வெருக இருந்த போதிலும் முடிவாக அவர்கள் எல்லோருமே ஒரே ஒரு நோக்கத்திற்காகத்தான் செயல்பட்டுக் கொண்டிருந் தார்கள். அவர்களுடைய செயல்கள் உலகப் புரட்சிகர இயக்கத்தை மேலும் வளர்ப்பதாகவும், முதலாளித்துவத்தின் அடிப்படைகளை நொறுக்குவதாகவும், சோஷலிசத்தைத் தொடர்ச்சியாக பலப்படுத்தவும் பெரிதும் உதவிடுவதாகவும் அமைந்துள்ளன.

1920 முதல் 1930 வரை உலகப்புரட்சிகர இயக்கத்தில் ஏற்பட்ட கோணல்மாணல் திருப்பங்கள் சர்வதேச தொழிலாளி வர்க்க இயக்கங்களின் வளர்ச்சியை மந்தப் படுத்தின. ஆனால் சோஷலிசத்தை வலுப்படுத்தலும் தேசிய விடுதலை இயக்கமும் திடுமென ஏற்றம் பெற்று வளர்ந்தன.

சோவியத் நாட்டில், உள்நாட்டு எதிர்ப்புரட்சி, அந்நிய சக்திகளின் தலையீடு ஆகியவற்றிற்கு எதிராக ஆயுதப் போராட்டம் நடத்தியபின் சுமார் 15 ஆண்டுகளில் அங்கே சோஷலிசம் கட்டப்பட்டது. தேசிய விடுதலை இயக்கமும் அசாதாரணமான அதி வேகத்தில் வளர்ந்தது. இதைத்தான் முதலாளித்துவ உலகின் அழிவிற்கான முக்கிய சான்றாக லெனின் தீர்க்க தரிசனத்துடன் குறிப்பிட்டார். ''நூறு கோடிக்கும் அதிகமான மக்களைக் கொண்ட ஒடுக்கப்பட்ட காலனிகளிலுள்ள சக்திகளின் மீது தாக்குதல் வாரத்திற்கு வாரம், மாதத்திற்கு மாதம், ஆண்டுக்கு ஆண்டு அதிகரித்து வருகிறது''* என்று 1921 ஜூன் மாதத்தில் அவர் குறிப்பிட்டார்.

அவர்களுடைய விடுதலைப் போராட்டத்திலும், காலனி ஆதிக்க நுகத்தடியைத் தூக்கியெறிந்த பிறகு அமைதியான வாழ்க்கையை நடத்துவதற்கான தமது லட்சியங்களை வகுப்பதிலும், ஒடுக்கப்பட்ட மக்களினங்கள் சோவியத் நாட்டைத்தான் முன்னுதாரணமாகக் கொண்டார்கள். ஏகாதிபத்திய எதிர்ப்பு வீரர்களுக்கு, எதிரிகளை துரத்தி யடித்து புதிய வாழ்வை நிர்மாணித்த சோவியத் மக்களின் தைரியம் உற்சாகத்தை அளிக்கக் கூடிய எடுத்துக் காட்டாக அமைந்துள்ளது.

1930-ம் ஆண்டு இலையுதிர் காலத்தில் சோவியத் நாட்டுக்குச் சென்ற ரவீந்திரநாத் தாகூர் அவர்கள், சோவியத் நாட்டில் சோஷலிசத்தைக் கட்டுவதில் சோவியத் மக்கள், தாம் நீண்ட காலமாக பேணி வைத்திருந்த லட்சியங்களில் ஊறித் திளைத்திருப்பதைக் கண்டு மகிழ்ச்சி அடைந்தார். மேலும் குறுகிய தேசிய நலனைவிட மனிதகுல முழுமைக்கும் பொதுவான நன்மை என்பதே சோவியத் மக்களை மிகப் பெரிய கனவை நனவாக்குவதற்கான முயற்சியில் ஊக்குவித்துள்ளது என்பதையும் கண்டு மிகவும் மகிழ்ச்சியடைந்தார்.

---

* வி. இ. லெனின், ''நூல் திரட்டு'', தொகுதி 32, பக். 436-37

சோவியத் மக்களின் வெற்றியால் உற்சாகம் பெற்று, அவர்களின் உதவியோடு ஒடுக்கப்பட்ட மக்கள் தமது விடுதலைப் போராட்டங்களை விரிவுபடுத்தி ஏகாதிபத்தியத் திற்கு மேலும் பலமான மரண அடி கொடுத்தார்கள்.

தேசியப் பிரச்சினைக்கான சோவியத் கம்யூனிஸ்டு கட்சியின் தீர்வு மிகவும் சிறப்பு வாய்ந்ததாகும். இந்தப் பிரச்சினையில் சோவியத் கம்யூனிஸ்டு கட்சி சரியான தத்துவத்தை ஆதாரமாக வகுத்து நடைமுறையில் அமலாக்கம் செய்தது. சோவியத் அமைப்பின் அடிப்படையில் பின்தங்கிய குலமரபு நிலப்பிரபுத்துவ நிலைமையில் இருந்த மக்களினங்கள் சோஷலிச வடிவிலான தேசங்களாக வும், தேசீய இனங்களாகவும் வளர்ச்சி பெற்று வலுப்பட உதவியது. அதோடு பழைய அமைப்பின்கீழ் உருவாக்கப் பட்ட தேசங்களை மாற்றி அமைத்து சோஷலிச, கம்யூனிச நிர்மாணத்தில் சூழலில் தேசங்கள் தேசீய உறவுகளின் சாரத்தையும் எடுத்துக் காட்டியது.

சோவியத் நாட்டில் தேசியப் பிரச்சினையின் பிரத்தியேக உள்ளடக்கம் எதுவாக இருப்பினும் சரி, சோவியத் கம்யூனிஸ்டு கட்சி கொடுத்த தீர்வு, ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலைப் போராட்டத்திற்கு உதவியாக இருந்தது; அதோடு சகோதர கம்யூனிஸ்டு கட்சிகளின், தொழிலாளர் கட்சிகளின் உரிய தத்துவார்த்த நடைமுறைச் செயல்பாடு களுக்கும் ஊக்கமளிப்பதாக அமைந்தது. தேசிய விடுதலை இயக்கம் பற்றிய கம்யூனிஸ்டு அகிலத்தின் பகுப்பாய்வில் பங்கு கொண்ட சோவியத் கம்யூனிஸ்டுகள், அந்த இயக் கத்தின் தன்மை, உந்து சக்திகள் ஆகியவற்றைக் கணக்கில் எடுத்துக் கொண்டு சகோதரக் கட்சிகள் ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலைப் போராட்டத்தை நெறியாண்மை செய்ய என்ன வடிவங்களையும்,வழிமுறைகளையும் கையாளவேண்டும் என்பதை முடிவு செய்ய வேண்டியதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார்கள். இதை சாதிப்பது மிகவும் கஷ்டமாக இருந்தது; நல்ல முடிவுகளை நாடி மேற்கொள்வதற்கு பல ஆண்டுகள் பிடித்தன.

1935-ல் நடைபெற்ற கம்யூனிஸ்டு அகிலத்தின் 7 ஆம் காங்கிரஸ் வரை அதிகமான கம்யூனிஸ்டுகள் தேசிய, காலனியாதிக்க பிரச்சினைகள் பற்றிய லெனினுடைய கருத்துக்களைச் சரியாகப் புரிந்து கொண்டதாகத் தெரியவில்லை. உதாரணமாக "காலனி நாடுகள் விட்டுக் கொடுக்காமல், அதி வேகத்தோடு அவற்றின் 1905-ஐ நெருங்கிக் கொண்டிருக்கின்றன"* என்று லெனின் கூறிய கருத்தை, தேசிய விடுதலை இயக்கத்தின் அடுத்த கட்டம் 1905-1907-ல் ரஷியாவில் நடந்த பூர்ஷுவா ஜனநாயகப் புரட்சியை ஒத்திருக்கும் என்று அர்த்தப்படுத்தப்பட்டது. மேலும் வெற்றியைத் தொடர்ந்து ஒடுக்கப்பட்ட மக்களால் நிறுவப்படும் ஆட்சி அமைப்புகள் முற்றிலும் சமூகத் தன்மை வாய்ந்தவை என்றும் இறுதியில் நிச்சயமாயும் பாட்டாளிகள் விவசாயி மக்களின் புரட்சிகர-ஜனநாயக சர்வாதிகார அமைப்பிற்கு இட்டுச் செல்லும் என்றும் கருதப்பட்டது. இதன் விளைவாக லெனினுடைய கருத்திலிருந்து சிறிதுவிலகி, பின்தங்கிய நாடுகளிலும், காலனியாதிக்க நாடுகளிலும், பூர்ஷுவா ஜனநாயக வாதிகளுடன் கம்யூனிஸ்டுகள் தற்காலிகக் கூட்டணி ஏற்படுத்திக் கொள்ளலாம் என்ற கருத்து 2-வது கம்யூனிஸ்டு அகிலத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.** அகிலத்தின் சில தலைவர்கள் இந்த தற்காலிகக் கூட்டமும், காலனி நாடுகளிலும், சார்பு நாடுகளிலும் உள்ள குட்டி பூர்ஷுவாக்களுடன் மட்டுமே அமையும் என்னும் அளவுக்கு ஒழுங்குபடுத்தினர். 1928 ஆகஸ்ட்-செப்டம்பர் மாதங்களில், நடைபெற்ற கம்யூனிஸ்டு அகிலத்தில் 6-வது காங்கிரசில் தேசிய பூர்ஷுவாக்கள் ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப் போரிடும் ஒரு சக்தி எனும் முக்கியத்துவம் இல்லாதவர்கள்"*** என்று பிரகடனப்படுத்தப்பட்டது. இந்தக் கருத்துக்கள் பரவலாகின. ஏனெனில் முதலாவதாக லெனின் இறந்தவுடன் சில

* அதே நூல், தொகுதி 33, பக். 350.
** அதே நூல், தொகுதி 31, பக். 150.
*** கம்யூனிஸ்ட் அகிலத்தின் ஆவணங்கள், பக். 850 (ரஷிய மொழியில்).

கம்யூனிஸ்டு தலைவர்கள் காலனி நாடுகள், சார்பு நாடுகள் ஆகியவற்றின் தேசியப் பிரச்சினைகளின் முக்கியத்துவத்தைக் குறைத்து மதிப்பிட்டார்கள்; அதோடு அந்த நாடுகளிலுள்ள ஒடுக்கப்பட்ட மக்களின் போராட்டத்தை முழுக்க முழுக்க சமூக விடுதலைப் போராட்டங்களாகவே கருதினர். இரண்டாவதாக, புதிய கட்டத்தில் உலகப் புரட்சி இயக்கத்தின் தன்மை மிகவும் சிக்கல் கொண்டதாகவும், மோதல்கள் நிறைந்ததாகவும் இருந்தது. எடுத்துக்காட்டாக தேசிய பூர்ஷுவாக்களும், சியாங்கே ஷேக்கும் சீன மக்களுக்கு இழைத்த துரோகமும், மற்ற நாடுகளில் அவர்கள் வலது சாரிப் பக்கம் விலகிச் சென்றதின் காரணமாக சில புரட்சியாளர்களின் தோரணை பாதிக்கப்பட்டது. இதனால்தான் கம்யூனிஸ்டு அகிலத்தின் 6-வது காங்கிரஸ் தனிப்பட்ட சில நிபந்தனைகளை சுட்டி இருந்தபோதிலும், மொத்தத்தில் ஒரு தவறான முடிவை மேற்கொண்டது. அதாவது அந்தக் காலத்திலேயே ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலைப் போராட்டம் சோஷலிசப் புரட்சியின் உடனடியான முன் நடவடிக்கை என்று முடிவு எடுத்தது. எனவேதான் காலனி நாடுகளிலும், சார்பு நாடுகளிலும் உள்ள தேசிய பூர்ஷுவாக்கள் விஷயத்தில் சில கம்யூனிஸ்டு கட்சிகள் தவறாக நடந்து கொண்டன. ஆகவேதான் தேசிய பூர்ஷுவாக்கள் தலைமையில் நடத்திய தேசிய விடுதலைப் போராட்டங்களில் கம்யூனிஸ்டுகள் கலந்து கொள்ள மறுத்தனர்.

இருந்தாலும் கம்யூனிஸ்டு அகிலத்தின் காங்கிரசுகளில் எடுக்கப்பட்ட அநேக முடிவுகள் உள்ளடக்கத்தில் லெனினியத்திற்கு ஏற்பவும், சரியானதாகவும் இருந்தன. சீனப் புரட்சிக்கு உதவியாக, வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளிலுள்ள உழைக்கும் வர்க்கம் அணி திரண்டு நின்றதையும், அவர்களது ஆதார நெறியும் போர்த் தந்திரங்களும் வரையறுக்கப்பட்ட விதமும் கவனிக்கத் தக்கவை. திரும்பத் திரும்ப, அவ்வப்போது கம்யூனிஸ்டு அகிலம் சீனக் கம்யூனிஸ்டு கட்சித் தலைமையைத் திருத்தி

வந்துள்ளது. மேலும் டிராட்ஸ்கி மற்றும் அவருடைய ஆதரவாளர்களால் அவ்வப்போது முன்வைக்கப்பட்ட அபத்தமான யோசனைகளை அது தயவு தாட்சண்யமின்றி நிராகரித்துள்ளது. கம்யூனிஸ்டு அகிலத்தின் ஆருவது காங்கிரசின் வேலைத் திட்டக் கமிஷனை அணுகி சோஷலிசம் தனியே ஒரு நாட்டில் மட்டும் வெற்றி பெருது, மற்றும் எல்லா தேசியப் புரட்சிகளும் சோஷலிசத் தன்மை கொண்டவைதான் என்ற தனது கருத்தை தேசிய விடுதலை இயக்கத்தின் அடிப்படையாகக் கொள்ள வேண்டும் என்றும் டிராட்ஸ்கி கருதி அதற்கான யோசனையை முன்வைத்தார். மாநாட்டுப் பிரதிநிதிகள் டிராட்ஸ்கியினுடைய லெனின் விரோத நிலைபாட்டை வன்மையாகக் கண்டித்ததோடு மட்டுமன்றி, சோவியத் கம்யூனிஸ்டு கட்சிக்கு எதிராக அவர் முன்வைத்த குற்றச்சாட்டுகளையும் நிராகரித்தனர். 1928 ஆகஸ்டு 28-ல் நடந்த அமர்வில், துருக்கி, பாரசீகம், சிரியா, எகிப்து இன்னும் பல நாட்டுப் பிரதிநிதிகள், சோவியத் கம்யூனிஸ்டுகள் மீது ஏவப்பட்டு "குறுகிய தேசீய வாத" குற்றச்சாட்டை மறுத்தனர்; அதோடு அவர்கள் தமது நாட்டு மக்கள் எல்லோரும் சொந்த அனுபவத்தின் வாயிலாக, சர்வதேச தொழிலாளி வர்க்க இயக்கத்தின் மற்றும் காலனி நாடுகளில் நடைபெறும் விடுதலை இயக்கத்தின் காப்புக் கொத்தளமாக சோவியத் சோஷலிசக் குடியரசின் ஒன்றியம் திகழ்வதை வலியுறுத்தினார்கள். சிறப்பாக சீனப் புரட்சிக்கும், எல்லா ஒடுக்கப்பட்ட மக்களுக்கும் அகில ஒன்றியக் கம்யூனிஸ்டு கட்சி (போல்ஷிவிக்கட்சி) காட்டிய அரசியல் ஆதரவைப் பாராட்டிய தென் ஆப்பிரிக்கா, லத்தீன் அமெரிக்கா, நியூசிலந்து, கனடா, வேறு சில நாடுகளின் கம்யூனிஸ்டு பிரதிநிதி குழு மேற்குறிப்பிட்ட அறிவிப்பை ஆமோதித்தார்கள். சீனு, ஜப்பான், இந்தியா, இந்தோனேஷியா மற்றும் பிற கிழக்கு நாடுகளிலிருந்து வந்த பிரதிநிதி குழுக்கள், சோவியத் நாட்டில் நடக்கும் சோஷலிச நிர்மாணம் முதலாளித்துவ நாடுகளிலுள்ள பாட்டாளி வர்க்கத்திற்கும், எல்லா ஒடுக்கப் பட்ட மக்களுக்கும் விடுதலைக்குப் போராட உத்வேக

மளிப்பதாக அமைந்துள்ளது எனக் கூறினர். ஏனெனில் காலனி நாடுகளில் இருக்கும் உழைக்கும் மக்கள், பாட்டாளி வர்க்கத்தோடு கூட்டு சேர்ந்தும், பாட்டாளி வர்க்கத் தலைமையிலும்தான், சோவியத் நாட்டைப்போல், சோஷலிசத்திற்காகப் போராடுவதன் மூலம் தமது விடுதலையைப் பெற முடியும் என்பதை நேரிடையாகவே காண்கின்றனர் என்றும் அவர்கள் குறிப்பிட்டார்கள்.

பல்வேறு நாடுகளிலும் மாகண்டங்கள் முழுவதிலும் நடைபெற்ற தேசிய விடுதலை இயக்கங்களை ஆழ்ந்து பரிசீலனை செய்ததன் மூலம் ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலைப் போராட்டத்தில் உள்ளடங்கிய தேசியப் பிரச்சினையின் இடம், பாத்திரம் ஆகியவை பற்றிய ஒரு சரியான கருத்தை உருவாக்க கம்யூனிஸ்டுகளால் முடிந்தது. 1935 ஜூலை-ஆகஸ்டு மாதங்களில் 13-ல் பெற்ற கம்யூனிஸ்டு அகிலத்தின் 7-வது காங்கிரஸ் இந்தப்பணியில் முக்கியப் பங்கு வகித்தது. முதலாவதாக, தேசியப் பிரச்சினையின் முக்கியத்துவமும், அன்னிய ஏகாதிபத்தியத்திற்கு எதிராக ஒடுக்கப்பட்ட மக்கள் நடத்தும் போராட்டத்தின் முக்கியத்துவமும், சுதந்திரமான தேசிய வளர்ச்சியும், அரசியல் சுதந்திரமும் பலமாக வலியுறுத்தப்பட்டன. இரண்டாவதாக, தேசியப் பிரச்சினை மீது தற்காலிகமான அழுத்தம் தருவது அறிவு ஜீவிகள், தேசிய பூர்ஷுவாக்கள் உள்ளிட்ட பலதரப்பட்ட சமூக சக்திகளை ஒன்றுபடுத்தி ஒரு ஏகாதிபத்திய எதிர்ப்பு தேசிய முன்னுரிமையைக் கட்ட உதவியாக இருந்தது. மூன்றாவதாக வளர்ச்சி குன்றிய, பின்தங்கிய நாடுகள் விஷயத்தில் சோஷலிசத்தை நோக்கிய பாதையில் பல்வேறு மாறுதல் கட்டங்கள் இருப்பது தவிர்க்க முடியாதது என்று ஒப்புக்கொள்ளப்பட்டது. மேலும் முதலாளித்துவமற்ற பாதைக்கு உரிய வாய்ப்புபற்றியத் தனி முக்கியத்துவம் தரப்பட்டது.

சில கட்சிகளில் மேலோங்கி வந்த அதீத இடதுசாரி கருத்துக்களை, கம்யூனிஸ்டு அகிலத்திலிருந்த கட்சிகள் வென்று சமாளித்தன. மேலும் காலனி நாடுகளிலும்,

சார்பு நாடுகளிலும் அன்னிய ஆட்சியை எதிர்த்து புதிய வாழ்க்கை முறையை அமைக்கும் போராட்டத்திற்கு மக்களைத் திரட்டி அமைப்பு ரீதியாக முறைப்படி செயல் படவும் முன்வந்தன.

தேசிய காலனிமுறை பற்றிய லெனினுடைய போதனையை நடைமுறைப்படுத்த அயராது முயற்சி செய்து வந்த தொழிலாளி வர்க்கமும், மார்க்சீய லெனினியக் கட்சி களும் தேசிய, சர்வதேசியக் கூறுகளுக்கிடையேயுள்ள தொடர்பாட்டை அலசி ஆராய வேண்டிய அவசியம் ஏற்பட்டது. தேசியவாதிகளின் நிலைக்கு வந்து தேசியப் பிரத்தியேகத் தன்மைகளை மிகைப்பட வலியுறுத்தியவர்களை கம்யூனிஸ்டு அகிலம் வன்மையாகக் கண்டித்தது. என்றாலும் அந்த மக்களின் தேசிய விடுதலை என்பது கம்யூனிஸ்டு கட்சி களும் தொழிலாளி வர்க்கமும் மிகவும் அக்கறை காட்ட வேண்டிய விஷயமாகவே இருந்தது. கம்யூனிஸ்டு அகிலத்தின் 7-வது காங்கிரஸ் அதன் தீர்மானத்தில், ''கம்யூனிஸ்டுகள் கோட்பாடு ரீதியாக எல்லா வகைப்பட்ட பூர்ஷுவா தேசிய வாதத்திற்கும் சமரசமற்ற எதிரிகளாக இருக்கும் அதே நேரத்தில் தம்மக்கள் கதியைப் பற்றியே கவலைப்படாத தேசிய சூன்ய வாதத்தின் ஆதரவாளர்களும் அல்ல''* என்று குறிப்பிடப்பட்டுள்ளது. தம்மக்களின் தேசிய விடுதலைக்கும், சுயாதீனத்திற்கும், உண்மையாகவும் உறுதியாகவும் போராடக்கூடிய ஒரே போராளி தொழிலாளி வர்க்கம்தான் என்பதை இந்தக் காங்கிரஸ் வலியுறுத்தியது.

கம்யூனிஸ்டு மற்றும் தொழிலாளி வர்க்க இயக்கத்தின் சர்வதேசியப் போர்த்தந்திரங்களின் ஒற்றுமை, தேசியத் தனித் தன்மைகளை இல்லாமல் செய்வதை விரும்பவில்லை. மாறாக தேசிய, தேசிய-அரசுத் தனித் தன்மைகளை கம்யூனிஸ்டுக் கோட்பாடுகளுக்கிணங்க கவனமாக பரிசீலித்துத் திறம்படப் பயன்படுத்தவே வேண்டும் எனும் லெனினுடையக் கருத்தை மனதில் கொண்டுதான்

---

* கம்யூனிஸ்டு அகிலத்தின் 7-வது காங்கிரஸ், பக். 581.

ஜார்ஜ் டிமிட்ரோ கம்யூனிஸ்டு அகிலத்தில், 7-வது காங்கிரசில் வெவ்வேறு நாடுகளில் நடைபெறும் பாட்டாளி வர்க்க போராட்டங்கள், தொழிலாளர் இயக்கங்கள் ஆகியவற்றின் **தேசிய வடிவங்கள்**, பாட்டாளி வர்க்க சர்வதேசியத்திற்கு முரண்பட்டதல்ல; மாறாக இம்மாதிரி தேசிய வடிவங்களின் மூலமாக பாட்டாளி வர்க்க **சர்வதேசிய நலன்களை** வெற்றிகரமாகப் பாதுகாக்க முடியும்''* என்று குறிப்பிட்டார்.

4. முதலாளித்துவத்தின் பொது நெருக்கடியின் இரண்டாவது கட்டத்தில் தேசங்கள், தேசிய உறவுகளின் வளர்ச்சியிலான சிறப்பு அம்சங்கள்

முதலாளித்துவத்தின் பொது நெருக்கடியின் இரண்டாவது கட்டத்தில், அதாவது 1930-லிருந்து 1950 முடிய உள்ள இரு பத்தாண்டு காலத்தில், முதலாளித்துவ உலகில் தேசங்கள், தேசிய உறவுகளின் வளர்ச்சியில் குறிப்பிடத்தக்க மாறுதல்கள் ஏற்பட்டுள்ளன. இந்தக் கட்டத்தின் தொடக்கத்தில், முதலாளித்துவத்தின் முரண்பாடுகள் கடுமையாக உக்கிரமடைந்தன. காலனிகள் சார்பு நாடுகளில் அடக்குமுறையும், சுரண்டலும் தீவிரமடைந்தன, மேலும் பல சுதந்திர மக்களினங்கள் அடிமைப்படுத்தப்பட்டன. ஆனால் அந்தக் காலகட்டத்தின் முடிவில் ஏகாதிபத்திய காலனியாதிக்க அமைப்பு வேகமாகச் சீர்குலையத் தொடங்கியது; உலக சோஷலிச அமைப்பு தோற்றமளித்ததும் தேசிய விடுதலை இயக்கங்கள் வேகமாக எழுச்சியுற்றதுமே இதற்குக் காரணம்.

முதலாவது கால கட்டத்தின் முடிவில்கூட, மக்கள் வாழ்வின் தேசிய அம்சத்தையும், சர்வதேச உறவுகள் அமைப்பு முழுவதையும் நிச்சயம் பாதிக்கக்கூடிய அளவில் முதலாளித்துவ உலகில் புதிய மேலும் கடுமையான பிளவு ஏற்பட்டதற்கான அறிகுறி தென்பட்டது. இவற்றுக்

* கம்யூனிஸ்டு அகிலத்தின் 7-வது காங்கிரஸ், பக். 182.

செல்லாம் முதலாவதாயும் முக்கியமாயும் பழி சாட்டப்பட வேண்டியவர்கள் உலகை மறுபங்கீடு செய்யும் நோக்கோடு, கம்யூனிஸ்டு அகிலத்திற்கு எதிரானது என்று சொல்லப்படுகிற ஓர் உடன்படிக்கையில் கையொப்பமிட்ட ஜெர்மனி, இத்தாலி, ஜப்பான் ஆகிய நாடுகள்தான். அவை-ஆங்கில-பிரஞ்சு-அமெரிக்க கோஷ்டி நாடுகளின் காலனிகளையோ, சந்தைகளையோ அல்லது கச்சாப் பொருட்களின் உற்பத்தி இடங்களையோ எடுத்துக் கொள்வதோடு அமைந்துவிட உத்தேசிக்கவில்லை. மக்களை மேலும் முழுமையாக அடிமைகளாக்குவதிலும், சில இடங்களில் அழித்து நிர்மூலமாக்குவதிலும்கூட அவர்கள் ஈடுபட முனைந்திருந்தார்கள்.

கிழக்குப் பகுதியில், புதிய மறுபங்கீடுக்கான இந்தப் போர் ஏகாதிபத்திய ஜப்பானால் தொடங்கப்பட்டது. ஜப்பானை ஆட்சி செய்து வந்தவர்கள் நீண்டகாலமாக அதற்கான தயாரிப்புகளைச் செய்து வந்திருக்கிறார்கள். மற்ற மக்களுக்கு எதிராக பகைமையை வளர்த்தும், குரோதமான குறுதேசிய வெறி உணர்வைத் தூண்டியும், ஆசியாவில் ஆதிக்கம் செலுத்தும் "உரிமை" ஜப்பானுக்கு மட்டுமே உண்டு எனப் பிரகடனப்படுத்தியும் வந்துள்ளனர். ஜப்பானுடைய இந்த ராணுவ ஆதிக்க வெறிக்கு சீனா இலக்காகியது. 1931-ல் சீனாமீது படையெடுத்துப் பிடிக்கும் ஒரு போர் தொடங்கியது.

இந்தப் போர் ஜப்பான் நாட்டு உழைக்கும் மக்களின் உள்ளங்களில் விகாரமான எண்ணங்களை ஏற்படுத்தியது. தேசிய அம்சத்தை மிகைப்படுத்தி, நிலவில் இருந்த சர்வதேச தொடர்புகளைத் துண்டித்துக் கொண்டார்கள். அதே நேரத்தில் சீனாவில், மாபெரும் அத்தேசத்தின் வாழ்வுக்கே அச்சுறுத்தல் ஏற்பட்ட நிலையில் தேசிய எண்ணங்களும் தேசிய உணர்வுகளும் கிளர்த்திவிடப்பட்டு தேசிய ஒருமைப்பாடு வேக முடுக்கம் பெற்றது. இதர மக்களோடு குறிப்பாக சோவியத் யூனியனோடு ஒற்றுமையை ஏற்படுத்திக் கொள்ள வேண்டுமென்ற ஆர்வம் உருவாகியது.

தேசியம், ஜனநாயகம், வாழ்க்கைத் தேவை எனும் சன்யாட் சன்னுடைய மக்கள் கொள்கைகள் மூன்றின் அடிப் படையில் ஜப்பானிய ஆக்கிரமிப்பாளர்களை எதிர்த்துப் போரிட பொதுமக்கள் அழைக்கப்பட்டார்கள். ஜப்பானுக்கு எதிராக ஒன்றுபட்ட தேசிய அணி அமைப்பதற்கான முயற்சியில் பலமாக இறங்கிய சீனக் கம்யூனிஸ்டு கட்சி இந்தக் கோட்பாடுகளுக்கு ஆதரவு அளித்தது. 1937-ல் ஜப்பானிய ஆக்கிரமிப்பின் விஸ்தரிப்பைத் தொடர்ந்து, சீனக் கம்யூனிஸ்டு கட்சியின் மத்திய கமிட்டியின் 5-வது பிளீனக் கூட்டத்தில், கோமின்டாங்குடன் ஒத்துழைப்பது சம்பந்தமான இரண்டாவது கட்டத்தைப் பற்றிய விசேஷ முடிவு மேற்கொள்ளப்பட்டது. அடுத்த ஆண்டில் நடைபெற்ற 6-வது பிளீனக் கூட்டம் தேசியவாதம் பற்றியும், சீன மக்களின் தேசிய விடுதலை இயக்கத்திலான அதன் பங்கு பற்றியும் சிறப்பாக ஆய்வு செய்தது.

1930-ன் பிற்பகுதியில் ஐரோப்பாவில் அடிப்படையான தீவிர மாற்றங்கள் ஏற்பட்டன. ஆப்பிரிக்காவிலும் அவை அதிக அளவில் ஏற்பட்டன. முதலில் இத்தாலி, அபிசினியாவைப் பிடிப்பதற்குப் போர் தொடுத்தது; பின்னர் ஜெர்மனியும் இத்தாலியும் சேர்ந்து ஸ்பெயின் ஜனநாயகக் குடியரசை நசுக்கினார்கள்; அதன் பிறகு பாசிச ஜெர்மனி ஆஸ்டிரியாவைக் கைப்பற்றியது. செக்கோஸ்லோவேகியாவைக் கீழடக்கியது. இரண்டாவது உலக யுத்தத்திற்கு முன்பே ஜெர்மனியும் இத்தாலியும் காலனி நாடுகளை மறுபங்கீடு செய்ய வேண்டும் என்று கோரின. 1939 தொடக்கத்தில் ஜெர்மன் நாடாளுமன்றத்தில் ஜெர்மனி "காலனிகள் இல்லாமல் வாழ முடியாது" என்று ஹிட்லர் முழங்கினார். எனவே நாஜி ஜெர்மனி, உலக மேலாதிக்கத்திற்காக யுத்தத்தை முடுக்கியது. அதே நேரத்தில் இத்தாலியும் பிரிட்டன், பிரான்சு ஆகிய நாடுகளிடம் பல கோரிக்கைகளை முன்வைத்தது.

இரண்டாவது உலகப் போர் வெடித்தபோது பல மக்களினங்கள் அடிமைகளாக்கப்படும், ஏன் பூண்டோடு

ஒழிக்கப்படும் அபாய நிலையில் இருந்தன. ''தேசம் ஆபத்திலிருக்கும்போது பூர்ஷ்வாக்களால் ஆட்சி செய்ய இயலாது" என்றும் லெனினுடைய சொற்கள் இந்த மெய்நடப்புக்களால் மேலும் உறுதி செய்யப்பட்டன. ஐரோப்பிய நாடுகளில் ஒரு பகுதி பூர்ஷ்வாக்கள் நாஜிகளோடு உடன்பாடு ஏற்படுத்திக் கொண்டார்கள். அதன் மூலம் அவர்களுடைய சொந்த நாடுகளுக்குத் திட்டமிட்டு துரோகம் செய்தார்கள். மற்றப் பகுதியினர் முதலில் பொறுத்துப் பார்க்கலாம் என்ற கொள்கையைக் கடைப்பிடித்தார்கள். பின்னர் ஏதோ ஒரு வடிவில் மக்களுடைய சுதந்திரச் சுயாதீனத்துக்கான போராட்டத்தில் சேர்ந்து கொண்டார்கள். ஆச்சரியப்பட இடமின்றி தேசங்களின் வாழ்வில் பூர்ஷ்வாக்களின் தலைமைப் பாத்திரம் கடுமையாகச் சீரழியத் தொடங்கியது. அது படிப்படியாக தொழிலாளி வர்க்கத்திடம் மாற்றித் தரப்பட்டதோடு விடுதலைப் போராட்டத்தில் அது தலைமை மேற்கொண்டது.

மீண்டும் சோஷலிஸ்டுகளும், சமூக ஜனநாயகவாதிகளும் மக்களின் தேசிய நலன்களின்பாலான தமது அக்கறையின்மையை வெளிக்காட்டினார்கள். அவர்களில் சில தலைவர்கள் பிரான்சு நாட்டைச் சார்ந்த லியோன் புளும் போன்ற பாசிஸ்டுகளுடன் கூட்டுச் சேரத் தொடங்கினார்கள்.எட்வர்டு பெனேஸ் போன்ற மற்றும் சிலர்,விடுதலைக்காகப் போராடுவோம் என்று பேசியபோதும் அவர்களுடைய நாடுகள் கைப்பற்றப்பட்டபோதும் கிஞ்சிற்றும் செயல்படாது அயல் நாடுகளில் சென்று அடைக்கலம் புகுந்தனர். **ஒட்டோ பாயர்** போன்ற இன்னும் சிலர் பாசிசத்தை தார்மிக அளவில் கண்டித்ததோடு அடங்கிவிட்டார்கள். சோவியத் யூனியன் ஒன்றுதான் ஜெர்மனியின் பாசிசத்தை நசுக்கக் கூடிய ஒரே சக்தி என்று அவர் உணர்ந்த பின்னரும், பாயர் கம்யூனிஸ்டுகளோடு நடத்திய வாக்கு வாதத்தில், ஆஸ்திரியாவின் சுதந்திரத்திற்காக ஒரு தேசிய யுத்தம் தேவையற்றது என்றும் பாசிஸ எதிர்ப்புப் போரில் நாட்டின் முற்போக்கு சக்திகளை ஒன்றுபடுத்தும் போர்த்தந்திரத்

தையும் அவர் எதிர்த்தும் செயல்பட்டார். அவருடைய இறுதிநாள் வரை, சமுதாயத்தில் தேசியப் பிரச்சினைக்குரிய உண்மையான இடத்தை அவர் புரிந்து கொள்ளவில்லை. ஆஸ்திரியா தேசம் ஒன்று உண்டு என்பதையும் அவர் மறுத்தார்.

மற்ற சந்தர்ப்ப வாதிகளையும் திருத்தல் வாதிகளையும் போலவே டிராட்ஸ்கிய வாதிகளும், தேசிய சுதந்திரத்தையும் சுயாதீனத்தையும் உறுதிப்படுத்த உதவும் முறையில் தேசிய ஒற்றுமையை உருவாக்குவதற்கு கம்யூனிஸ்டுகள் செய்த முயற்சிகளைத் தகைந்தனர். ஐரோப்பிய தேசங்களை நாஜிகள் அடிமைப்படுத்தியதில் தங்களுக்குச் சாதகமான அம்சம் இருப்பதைக் கண்டார்கள். ஹிட்லரின் படையெடுப்புகள் தேசம்-அரசு என்ற பிரிவுகளை அழித்து விட்டன என்று அவர்கள் வாதித்தார்கள். முற்போக்கு சக்திகளின் ஒற்றுமையில் அவர்களுக்கு அக்கறையில்லை. நாஜிசத்தின் கொடுமைகளும், ஹிட்லரின் மனித விரோதக் கொள்கையும் பாட்டாளி வர்க்கப் புரட்சியை கொளுத்தி விடும் என்றும் இறுதியில் பாட்டாளிவர்க்க தலைமையில் அவர்களை அமரச் செய்யும் என்றும் அவர்கள் நம்பினார்கள்.

தேசியப் பிரச்சினை பற்றியும், பாட்டாளி வர்க்க புரட்சியின் ஆதாரநெறி போர்த் தந்திரங்கள் குறித்தும் டிராட்ஸ்கிய வாதிகள் கொண்டிருந்த வக்கற்ற தன்மை இறுதியானது. அதே நேரத்தில் நிகழ்ச்சிகள், மார்க்சிய லெனினியத்தை கம்யூனிஸ்டுக் கட்சிகளின் வேலைத்திட்ட அடிக்கோள்கள் உறுதி செய்தன.

''ஐரோப்பாவின் மையப் பகுதியில் பல தலைமுறைகளாக மக்கள் எல்லோரும் உண்மையிலேயே ஈடுபட்ட போரை ஒரு மெய்யான யுத்தத்தை நாம் இது வரையிலும் பார்த்ததே இல்லை''* என்று 1870-ல் பிரடெரிக் ஏங்கெல்ஸ் எழுதினார். லெனினும் இக்கருத்தோடு உடன்பட்டார்; மேலும் ஐரோப்பாவிலுள்ள பெரிய முன்பே உருவான சில தேசிய அரசுகளைப் படையெடுத்துப் பிடித்துதான் நெப்போலியன்

* மார்க்ஸ்-எங்கெல்ஸ் நூல்கள், தொகுதி 17, பக். 197.

பிரான்சு சாம்ராஜ்யத்தை நிறுவினர் என்றும், பிரான்சின் தேசீய யுத்தங்கள் நாடு பிடிக்கும் யுத்தங்களாக மாறின என்றும் அவை காலப் போக்கில் தம்மளவில் பிரான்சுக்கு எதிராக விடுதலை இயக்கப் போராகக் கிளர்ந்தன என்றும் லெனின் குறிப்பிட்டார். இந்த ஆராய்ச்சியுரையை ஏகாதிபத்திய சகாப்தத்தோடு தொடர்பூட்டிக் காட்டிய அவர், புதிய நிலைமைகளில் ஏகாதிபத்திய யுத்தம் தேசீய யுத்தமாக மாறுவதற்கான "வாய்ப்பே இல்லை." ஏனெனில் முற்போக்கு வளர்ச்சியைப் பிரதிபலிக்கும் வர்க்கம் பாட்டாளி வர்க்கம். அது வெளிப்படையாகவே முதலாளிகளுக்கு எதிரான உள்நாட்டு யுத்தமாக அதனை மாற்றுவதற்கு முயற்சி செய்து கொண்டிருக்கிறது* என்றும் குறிப்பிட்டார். அது நடப்பதற்கான வாய்ப்பே இல்லை என்ற போதிலும், மாற்றம் என்பது நடக்க முடியாததல்ல. மேலும் 20 ஆண்டு காலத்திற்கு முதலாளித்துவம் நீடித்து இருக்கலாம் என்று 1916-ல் குறிப்பிட்ட லெனின் அதற்குள்ளாக மேலும் சில நிலைப்பாடுள்ள தேசீய அரசுகளை ஏகாதிபத்தியவாதிகள் அடிமைப்படுத்தலாம் என்றும், அதன் விளைவாக தேசிய போராட்டங்கள் குமுறி எழுதல் கூடும் என்றும் குறிப்பிட்டார். "அது ஐரோப்பாவைப் பல தலைமுறைகளுக்கு பின்தள்ளும்" என்றும் கூறினர். (பூர்ஷுவாக்களுக்கு எதிராக பாட்டாளி வர்க்கம் நடத்தும் உள்நாட்டுப் போர் ஒரு முன்னேற்றமான நடப்பே என்ற பொருளில்.) "அது நடக்கக் கூடிய வாய்ப்பின்றி இருக்கலாம். ஆனால் நடக்கவே முடியாது என்பதில்லை. ஏனெனில் உலக வரலாற்றின் செல்வழி என்பது அவ்வப்போது சில பின்னேக்கிய ராட்சச பாய்ச்சல்கள் இன்றி எப்போதும் அமைதியாகவும், முன்னேக்கிய திசையிலுமே இருக்கும் என்பது இயக்கவியலுக்குப் பொருந்தாதது, அறிவியலுக்கு ஒவ்வாதது. மேலும் தத்துவார்த்த முறையில் தவறான முடிவுமாகும்."**

---

* வி. இ. லெனின், "'நூல் திரட்டு'", தொகுதி 22, பக். 309.

** அதே நூல், தொகுதி 22, பக். 310.

லெனினுடைய முன்கணிப்பும் கால வரையறுப்பும் மிகவும் சரியானது என்பதை வரலாறு உறுதி செய்கிறது. துல்லியமாயும் அவர் குறிப்பிட்ட இருபது ஆண்டுகளுக்குப் பின் ஐரோப்பிய மக்கள் பாசிச அடிமைப்படுத்தலுக்கு எதிராக தேசியப் போராட்டங்களைத் தொடங்கி போரிட்டனர். உயர் வளர்ச்சி பெற்ற நிலையான நாடுகளின் இருப்பே அந்தரத்தில் நின்ற போதுங்கூட, பூர்ஷுவாக்கள் தேசிய விடுதலைப் போராட்டங்களில் தலைமை ஏற்கும் ஆற்றல் இல்லாதவர்கள் என்பதை நிரூபித்து விட்டார்கள். மார்க்சிய லெனினியக் கட்சிகளின் தலைமையில் தொழிலாளி வர்க்கம் தான் அவற்றை ஒழுங்கமைத்து நடத்திக்காட்டின. பிரான்சு, கிரீஸ், இத்தாலி, அல்பேனியா, போலந்து, செக்கோஸ்லோ வேகியா, யூகோஸ்லோவியா, நார்வே மற்றும் நாஜிகளின் அடக்கு முறைக்கு உள்ளான அத்தனை ஐரோப்பிய நாடுகளிலும், தொழிலாளி வர்க்கம் அதன் கம்யூனிஸ்டு கட்சிகளின் தலைமையில் நாடு காக்கவும், விடுதலை தேசத்தின் சுயாதீனம் ஆகியவற்றுக்கு முன்னின்று வழி நடத்தினர்.

தொழிலாளி வர்க்கமும், அதன் மார்க்சிய லெனினியக் கட்சிகளும், தேசீய ஒற்றுமையை உருவாக்கும் சக்தியாக விளங்கின. அதே சமயம் பூர்ஷுவாக்கள் தனிமைப்படுவது அதிகரித்தது. மேலும் தேசியத் தலைமை படிப்படியாக தொழிலாளி வர்க்கத்திடம் சென்றது. இரண்டாவது உலகப் போரில் கிட்டிய சோவியத்தின் வெற்றிகளும் பாசிசத்தை முறியடிப்பதில் மக்களின் பங்கேற்பும் காரணமாக, அக்டோபர் புரட்சியின் விளைவாயும் அதன் செல்வாக்காலும் பிறந்த நாடுகள்—யூகோஸ்லோவியா, போலந்து, செக்கோஸ்லோவேகியா, அல்பேனியா, ஹங்கேரி மற்றும் பல—நூற்றுண்டுகளுக்கு மேற்பட்ட இதர நாடுகளோடு சேர்ந்து சுதந்திரத்தையும் சுயாதீனத்தையும் மீண்டும் வென்று பெற முடிந்தது.

இரண்டாவது உலகப் போரின் போது ஐரோப்பிய மக்களுக்கு மட்டுமல்லாது மிகவும் கணிசமான அளவில் மற்ற காலனி நாடுகளுக்கும், சார்பு நாடுகளுக்கும் தேசிய அம்சம்

மேலதிகமான முக்கியத்துவம் பெற்று விளங்கியது. இதுவும் அந்த மக்களினங்களின் வாழ்க்கையிலும், தேசிய உணர்விலும் ஏற்பட்ட அடிப்படை மாற்றங்களால்தான் ஏற்பட்டது. காலனி ஆட்சி தளரத் தொடங்கியது. தேசிய விடுதலைப் போராட்டங்களின் வெற்றி வாய்ப்புகள் பெருகின. சில மக்களினங்களின் அரசியல் பொருளாதார வளர்ச்சி, சமூக கட்டமைப்பில் ஏற்பட்ட நிலை மாற்றங்கள், குறிப்பாக தேசிய பூர்ஷுவாக்கள், தொழிலாளி வர்க்கத்தின் தோற்றம், தேசிய விடுதலை இயக்கப் போராட்ட வீரர்களையெல்லாம் ஒன்றுபடுத்தும் வெகுஜன அமைப்புகளின் உதயம் ஆகிய உள்நாட்டு அம்சங்கள் சுதந்திரத்திற்காகப் போராட அனைத்து சக்திகளையும் திரட்டின. அதோடு போரில் ஹிட்லருக்கு எதிராக அமைந்த கூட்டுகளின் வெற்றி, சோவியத் யூனியனின் வலுவான ஒன்றுபட்ட அமைப்பைத் தொடர்ந்து ஏற்பட்ட உலக சோஷலிச அமைப்பின் பிறப்பு ஆகிய புற அம்சங்களும் உதவிகரமாக அமைந்தன. இது நிலைமைகளை அடிப்படையில் தீவிரமாக மாற்றியமைத்து, தேசிய விடுதலைப் புரட்சிகளுக்குரிய வாய்ப்புக்களை அதிகரித்தது.

1943-ல், அதாவது நாஜிகளின் பிடியில் சிக்குண்ட நாடுகளில் விடுதலைப் போராட்டம் தீவிரமடைந்த அதே ஆண்டில், அதாவது சோவியத்-ஜெர்மன் போர்முனையில் ஒரு பெரிய மாற்றம் ஏற்பட்ட அதே ஆண்டில் லெபனானும், சிரியாவும் பிரான்சின் காலனியாதிக்கத்திருந்து விடுதலை பெற்று தேசிய சுதந்திரத்தை வென்றன. தேசிய பூர்ஷுவாக்கள் மக்களின் ஆதரவோடு ஆட்சிக்கு வந்தார்கள்.

ஏகாதிபத்திய எதிர்ப்பு முன்னணி தொழிலாளி வர்க்கத்தாலும் அதன் கட்சிகளினாலும் தலைமை தாங்கப்பட்டிருந்த சீனா, கொரியா, வியத்நாம் ஆகிய நாடுகளில் தேசிய விடுதலை இயக்கம் சமூக உள்ளடக்கத்தில் சற்று ஆழமாகவும், பங்கேற்பவர்களின் வகைத் தன்மையில் சற்று விரிவாகவும் அமைந்திருந்தது. ஜப்பானிய ஏகாதிபத்தியத்தை எதிர்த்து சோவியத் ராணுவத்தின் வெற்றி, இந்த மூன்று நாடு

களிலும் தேசிய ஜனநாயகப் புரட்சி, சோஷலிசப் புரட்சி களாக வளர்வதற்கு சர்வதேச ஏகாதிபத்தியம் முட்டுக் கட்டைப் போட முடியாதபடி, முற்றிலும் தடுத்து நிறுத்தியது.

இந்தோனேஷியா, இந்தியா, பர்மா மற்றும் சில நாடு களில் நிலைமை அதிக சிக்கலாக இருந்தது. அவற்றின் சமூக-பொருளாதார வளர்ச்சி காரணமாக ஆட்சி மீதான ஆதிக்கம் தேசிய பூர்ஷுவாக்களின் கைகளில் கிட்டியது. அவர்கள் சில நேரங்களில் நிலப்பிரபுக்களோடும், தரகு முதலாளிகளோடும் கைகோர்த்து நின்று செயல்பட்டார் கள். தேசிய விடுதலை என்ற கருத்து பலதரப்பட்ட சமூக அணிகளை ஒன்றுபடுத்தி காலனியாதிக்க வாதிகளை எதிர்த்து வெற்றி பெறுவதை உறுதி செய்தது.

இரண்டாவது உலகப்போருக்குப்பின்னர், தேசிய அம்சத்தின் முக்கியத்துவம் வெகு எடுப்பான முறையில் நிதர்சனப்பட்டது. சிறப்பாக ஆசியாக் கண்டத்தில் தென்பட்டது. ஏற்கெனவே குறிப்பிடப்பட்ட நாடுகளைத் தவிர, ஜோர்டான், பிலிப்பைன்ஸ், இலங்கை, லாவோஸ் ஆகிய நாடுகளும் 1940-ம் ஆண்டுகளின் பிற்பகுதியில் சுதந்திரம் அடைந்தன. முன்னால் பிரிட்டிஷ் காலனி உடைமைகளின் பகுதியாக இருந்த இந்தியக் குடியரசும் பிறந்தது. கூடவே பாகிஸ்தானும் பிறந்தது. பிரித்தாளும் கோட்பாட்டுக்கேற்ப, பிரிட்டிஷ் காலனியாதிக்கவாதிகள் மத வேறுபாடுகளைத் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்தி இந்தத் துணைக்கண்டத்தில் தங்களது செல்வாக்கை தொடர்ந்து நிலைநாட்ட முடியுமென நம்பினர்.

உலக யுத்தம் முடிந்த பின்னர் முதலாளித்துவத்தின் பொது நெருக்கடியின் இரண்டாவது கட்டம் வெளிப்படை யானதும், சர்வதேச அரங்கில் வர்க்க சக்திகளின் புதிய அணி சேர்க்கைக்கு ஒரு பக்கமும், முதலாளித்துவ உலகின் மக்களினங்களின் பொருளாதார உறவுகளில் ஏற்பட்ட மாற்றங்களுக்கு மறுபக்கமும் மேலதிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. ஒடுக்கப்பட்ட நாடுகளுக்கும், ஒடுக்கும்

நாடுகளுக்குமிடையே பிளவு மேலும் அதிக ஆழமாகியது. ஒடுக்கப்பட்ட மக்கள் தங்களுடைய சுயநிர்ணய உரிமையை மிகவும் அழுத்தமாக வலியுறுத்தினார்கள். இந்தக் கோரிக்கை பாலான தோரணையைப் பொறுத்துத்தான் அரசியல் கட்சிகளுக்கும், வெகுஜன அமைப்புகளுக்கும் மக்கள் மத்தியில் இருந்த செல்வாக்கு பெருமளவுக்கு நிர்ணயிக்கப்பட்டது. இவையெல்லாம் ஏகாதிபத்திய காலனி அமைப்பைப் பீடித்திருந்த நெருக்கடியின் முக்கிய அறிகுறிகளாக இருந்தன.

முதலாளித்துவத்தின் பொது நெருக்கடியின் இரண்டாவது கட்டம் முழுவதிலும், ஏகபோக மூலதனம் காலனி நாடுகளையும், சார்பு நாடுகளையும் சுரண்டுவதைத் தீவிரப்படுத்தி, நெருக்கடியின் தோல்விகளிலிருந்து விடுபட முழு முயற்சி மேற்கொண்டது. பிரிட்டன், பிரான்சு, அமெரிக்கா ஆகிய நாடுகளை எடுத்துக் கொள்ளுங்கள். 1940-ல் பிரிட்டன் காலனி வளர்ச்சி மற்றும் நலவாழ்வு என்பது இருந்த போதிலும் தொடர்ந்து அப்படிச் செய்தது. 1939 முதல் 1948 வரை காலனிகளிலிருந்து பொருளாகவும், உதவியாகவும் இலவசமாக 600 மில்லியன் பவுண்டு அளவுக்குப் பெற்றுக்கொண்ட பிரிட்டன், 47 காலனிப் பிரதேசங்களிலும் 25.6 மில்லியன் பவுண்டு மட்டுமே இந்தச் சட்டப்படி செலவு செய்தது.

இரண்டாவது உலகப் போரினால், காலனி உடமைகள் விஷயத்தில் பிரிட்டனின் அந்தஸ்து வெகுவாகக் குலைவுண்டது. 1938-ல் 175 மில்லியன் பவுண்டு வருவாயாக இருந்ததிலிருந்து 1948-ல் 50 மில்லியின் பவுண்டாக வருவாய் குறைவுற்ற நிலையில் வெளி நாட்டில் போட்ட முதலீடுகளில் கால்பாகத்தைச் செலவழிக்கும் நிர்ப்பந்தம் பிரிட்டனுக்கு ஏற்பட்டது. தேசீய விடுதலை இயக்கம் ஒடுக்கப்பட்ட மக்களுக்கு சுதந்திரம் வழங்கவும், பல சலுகைகளைத் தரும்படியும் பிரிட்டனை நிர்ப்பந்தித்தது. ஆனால் இது தொடக்கமாகத்தான் இருந்தது. இருக்கும் நிலைகளைப் பாதுகாத்து, உறுதிப்படுத்துவதற்கு சகல முயற்சிகளும் செய்யப்பட்டன.

இதற்காக பிரிட்டிஷ் அரசாங்கம் எல்லா வழிகளையும் கையாண்டது. பத்தாண்டுகளுக்கு முன்பிலிருந்தது போலல்லாமல் 1948–ல் செலவு மிகவும் அதிகரித்தது. எங்கெல்லாம் தன் அரசியல் பிடிப்பை தக்க வைத்துக் கொள்ள இயலவில்லையோ அங்கெல்லாம் பொருளாதாரச் செல்வாக்கை வலுப்படுத்திக்கொள்ள பிரிட்டன் முயற்சி செய்தது. அதன் விளைவாக 1957-ல் அதன் தேசிய வருமானமான 17,600 மில்லியன் பவுண்டில் 40 சதவீதம் காலனி நாடுகளிலிருந்தும், சார்பு நாடுகளிலிருந்தும்தான் கிடைத்தது.

பிரெஞ்சு ஏகாதிபத்தியத்திடம் நீக்குப் போக்குத் தன்மை குறைவாக இருந்தது. பிரிட்டனைவிட அதிக அளவில் அடிக்கடி ஒடுக்கப்பட்ட மக்களோடு மோதல்களை ஏற்படுத்திக் கொண்டு நீடித்த காலனிப் போர்களைத் தொடுத்தது. வியட்நாமிலும், அல்ஜீரியாவிலும் காலனி யுத்தங்கள் கிட்டத்தட்ட எட்டு ஆண்டுகள் நடந்தன. அதன் விளைவாக, விடுதலைப் போராட்டங்கள் வெற்றிகரமாக முடிந்து-சில காலனி நாடுகளில் முன்னாள் சாம்ராஜ்ய நாடுகளுடன் கொண்டிருந்த பொருளாதார அரசியல் பந்தங்கள் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டன.

லெனின் ஏற்கெனவே ஒரு முறை கூறியதுபோல் அமெரிக்க ஏகாதிபத்தியம் மட்டும் ''மிகவும் அலாதியான" வழியில் காலனி நாடுகளையும் சார்பு நாடுகளையும் தொடர்ந்து கொள்ளையடித்து வந்தது. இது மிகவும் அலாதியானதுதான். ஏனெனில், பிரிட்டனோடு ஒப்பிட்டுப் பார்த்தால் காலனி என்ற சொல்லின் முழு அர்த்தப்படி அமெரிக்கா ஒரு சில நாடுகளை மட்டுந்தான் காலனிகளாக வைத்திருந்தது. பிரெஞ்சு ஏகாதிபத்தியத்தைப் போல் காலனி யுத்தங்களை அமெரிக்கா நடத்தவில்லை. இருந்தாலும் குறிப்பாக இரண்டாவது உலகப் போருக்குப் பின்னர், முதலாளித்துவத்தின் பொது நெருக்கடியின் இரண்டாவது கட்டத்தின்போது, அமெரிக்க ஏகாதிபத்தியம் வேகமாகவும் தேசிய உறவுகளைப் பெரிதும் பாதிக்கிற அளவுக்கும் முதலிடம் பெற்ற காலனியாதிக்க வாதியாக வளர்ச்சியுற்றது.

மாமூலாக பிரிட்டன்தான் இன்னும் பிரதான காலனியாதிக்க சக்தியாக இருந்தது. இரண்டாவது உலகப் போர் முடியும்போது 14 மில்லியன் சதுர மைல் பரப்பளவும், 550 மில்லியன் மக்கள் தொகையும் கொண்ட காலனி சாம்ராஜ்யம் பிரிட்டனிடம் இருந்தது. அமெரிக்க காலனிகள் 1,25,000 சதுர மைல் பரப்பும், 19 மில்லியன் மக்கள் தொகையும் மட்டுமே கொண்டவை. ஆனல் தேசிய விடுதலைப் புரட்சிகள் மேலோங்கும்போது பழங்கால காலனியாதிக்க முறை இனிமேலால் பொருத்தமற்றதாகி விட்டது. அதை மாற்றியமைக்க வேண்டிய நிலை ஏற்பட்டது இதை அமெரிக்க ஏகாதிபத்தியம் மிக நன்கு ஏற்பாடு செய்தது. காலனியாதிக்க ஒடுக்குமுறைக்கு எதிராக நடக்கும் விடுதலைப் போராட்டங்களுக்கு, சொல்லளவில் ஆதரவு கொடுப்பதாகக் கூறிக் கொண்டே, அமெரிக்க ஏகாதிபத்தியம் பொருளாதார அடிப்படையில் பெரிய, சிறிய மக்களினங்களை அடிமைப்படுத்தத் தொடங்கியது. இரண்டாவது உலகப் போர் முடிந்ததோடு அமெரிக்க ஏகபோகங்கள், முதலாளித்துவ உலகின் உற்பத்தித் திறனில் 60 சதவீதத்தை தமதாக்கிக் கொண்டன. மேலும் 73 சதவீதம் முதலீட்டை தமது கட்டுக்குள் கொண்டு வந்தன. அவற்றின் நிலை மேலும் மேலும் வளர்ந்து, பலமடைந்தது என்பதற்கு அமெரிக்க முதலீட்டின் பெருக்கமே அத்தாட்சியாகும். 1938 முதல் 1947 வரை உலகின் ஏற்றுமதி செய்யப்பட்ட மூலதனத்தில் அமெரிக்காவின் பங்கு நாலு மடங்காகப் பெருகியது.

முதலாளித்துவத்தின் பொது நெருக்கடியின் இரண்டாவது கட்டத்தில், அமெரிக்க ஏகாதிபத்தியம் ஈடுபட்டிருந்த களங்களில் கொள்ளை தொடர்ந்து பெருகியதன் அம்சங்களில் ஒன்று, பிரிட்டனை அதன் காலனி நாடுகளிலிருந்தும், டொமினியன்களிலிருந்தும் வெளியேற்றியதுதான். வெளிநாடுகளில் அமெரிக்காவின் மூலதனத்தின் பங்கு பல மடங்காக அதிகரிக்கும் அதே நேரத்தில் பிரிட்டனின் மூலதன ஏற்றுமதி யுத்தத்திற்கு முந்திய அளவி

லேயே இருந்தது. யுத்த காலத்தில் காலனி நாடுகளிலும், சார்பு நாடுகளிலும் பிரிட்டனின் மூலதனம் நாலில் ஒரு பங்காகக் குறைந்ததை ஏற்கெனவே குறிப்பிட்டோம். 1938 முதல் 1947 வரை 10 பிரிட்டிஷ் காலனிகளில் பிரிட்டனின் மூலதன ஏற்றுமதி 3 மடங்காக அதிகரித்த அதே நேரத்தில் அமெரிக்காவின் மூலதனம் 7.5 மடங்காக அதிகரித்தது. லத்தீன் அமெரிக்காவில் அமெரிக்காவின் முதலீடு வளர்ந்த வேகம் மிக குறிப்பிடத்தக்கது.

அயல் நாட்டு வாணிபம் என்ற அடிப்படைத் துறையிலும் ஏகாதிபத்திய வாதிகள் காலனிகளையும் சார்பு நாடுகளையும் கொள்ளையிட்டு வந்தார்கள். காலனி நாடுகளும், சார்பு நாடுகளும் உற்பத்தி செய்த பொருட்களுக்கு செயற்கையாக விலைகளைக் குறைத்தல் வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகள் உற்பத்தி செய்யும் பண்டங்களுக்கு மிகைப்பட அதிகரித்த விலைகளை நிர்ணயம் செய்தல், அதன் விளைவால் எங்கு பார்த்தாலும் டாலர் ‘‘பசி’’யும், இது போன்று இன்னும் பல வடிவங்களில் காலனிகளைக் கொள்ளையடிப்பதும் சர்வ சாதாரணமாகி விட்டன. இவையெல்லாம் காலனி நாடுகளையும், சார்பு நாடுகளையும் எவ்வாறு பாதித்தன என்பதைப் பல உண்மைகளிலிருந்து தெரிந்து கொள்ளலாம். 1952-ல் அவற்றின் ஏற்றுமதிகளின் மதிப்பு முந்திய ஆண்டைவிட 2,900 மில்லியன் டாலர் குறைந்தது. 1951–1952-ல் தனது சேமங்களிலிருந்து பெரிய அளவுக்கு கச்சாப் பொருட்களை அந்த நாடுகளில் கொண்டு குவித்ததன் மூலம், ஓராண்டு கால அளவிற்குள்ளாக, அமெரிக்கா 30-க்கு மேற்பட்ட காலனி, சார்பு நாடுகளின் செலாவணி இருப்புக்களை மூன்றில் ஒரு பங்காக குறைத்துவிட்டது. இது உலக ஏற்றுமதியில் ஆசியா, ஆப்பிரிக்கா, லத்தீன் அமெரிக்கா ஆகிய நாடுகளின் பங்கை 1950-ல் 28.5 சதவீதமாக இருந்ததை 1962-ல் 20.2 சதவீதமாகவும், 1967-ல் 19 சதவீதமாகவும் குறைக்க ஏதுவாயிற்று.

முதலாளித்துவத்தின் பொது நெருக்கடியின் இரண்டாவது கட்டத்தில்தான், முக்கியமாயும் சர்வதேச உழைப்பு பிரிவினையில் சமமற்ற அமைப்பு ஏற்பட்டது. ஆகவே அரசியல் சுதந்திரம் பெற்ற நாடுகள்கூட பொருளாதார சார்பு நிலையில் இருக்க நேர்ந்தது. ஆகவேதான் அந்நிய முதலீடுகளின் அதிகரிப்பு, சமத்துவமற்ற கொடுக்கல் வாங்கல் மட்டுமல்லாமல் வளர்ச்சி குன்றிய நாடுகளுக்கு தரப்பட்ட வெவ்வேறு விதமான கடன்கள், கடனுதவிகள் விளம்பரப்படுத்தப்பட்ட ஏகாதிபத்திய உதவிகள் இவற்றிலிருந்தே இந்த நிலைமை ஏற்பட்டது. காலனியாதிக்கவாதிகளின் ''நாகரிகப்படுத்தும்'' புனிதப் பணி என்பது இயற்கையாகவே ஓர் அப்பட்டமான பொய்யாகும். ஏகாதிபத்திய வாதிகள் ஒடுக்கப்பட்ட மக்களினங்களை உலகப் பொருளாதாரத்திற்குள் இழுத்து விட்டார்கள். அதனால் தங்களுடைய சொந்த என்னும் விருப்பத்திற்கு மாறாக, "உதவி'' கடன் இது போன்ற பிற காலனியாதிக்க முறைகளால் காலனியாதிக்கத்தை எதிர்க்கும் சக்திகளை உசுப்பிவிட்டார்கள் என்னும் மெய்நடப்பை மாற்றிவிட முடியாது. ஏனென்றால் காலனி மற்றும் சார்பு நாடுகளிலெல்லாம், உலக நாடுகளில் ஏற்படும் மாற்றங்களின் சாரத்தைப் புரிந்து கொண்டு, பொருளாதார மற்றும் அரசியல் சுதந்திரத்திற்குப் போராடும் வழி முறைகளை வகுக்கக்கூடிய ஆற்றலுடைய மக்கள் ஏற்கெனவே தோன்றி உள்ளார்கள். 20 லத்தீன் அமெரிக்க நாடுகளுக்கு அமெரிக்கா செய்த ''உதவி''யின் மெய்யான விளைவுகளைத் தெரிந்து கொள்வது அவ்வளவு கடினமானதல்ல: 1946 முதல் 1951 வரை அமெரிக்கா அளித்தஉதவி 210 மில்லியன் டாலர்தான். ஆனால் 1951-ல் மட்டும் இந்த நாடுகளிலிருந்து நேரடி முதலீடுகள் வாயிலாக அமெரிக்க ஏகபோகம் அடைந்த இலாபம் மட்டும் 1,000 மில்லியன் டாலர் ஆகும்.

புதிதாக சுதந்திரம் பெற்ற மக்களினங்களின் மோசமான பொருளாதார நிலைமைகளைப் பயன்படுத்தி சர்வதேச ஏகாதி

பத்தியவாதிகள், கடன்கள் மூலமாகவும், உதவிகள் மூலமாகவும் தங்களது செல்வாக்கைப் பெருக்கிக் கொள் வதில் எந்தவித விவகாரமும் இல்லை என்ற நிலை இருந்தது. 1955-ல் வளர்ச்சி குன்றிய மக்களினங்களின் கடன் சுமை 7,000 மில்லியன் டாலராக இருந்தது. 1973-ல் இது 80,000 மில்லியன் டாலராக உயர்ந்தது. 1973-ல் அவர்கள் கொடுக்க வேண்டிய வட்டி, திருப்பி செலுத்தும் தவணைத் தொகை மட்டுமே 7,000 மில்லியன் டாலராக உயர்ந்தது.

இதற்கெல்லாம் உரிய காரணங்களிடையே தேசிய பூர்ஷுவாக்களின் பலவீனமும் ஒன்றாகும். 1950-ம் ஆண்டு களின் நடுவே அல்ஜீரியாவில் தனியார் முதலீடுகளில் 8 சதவீதம் மட்டுமே உள்நாட்டு முதலாளிகளுக்குச் சொந்த மாக இருந்தது. தொழிற்துறை,வாணிகம் ஆகியவற்றில் 10 சதவீதம்தான் இருந்தது. டூனிஷியாவில் 50க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் பணியாற்றிய 290 தொழிற்சாலைகளில் 33 தொழிற்சாலைகள்தான் டூனிஷியாவைச் சார்ந்த வர்களுக்குச் சொந்தமானவை. விடுதலைக்குப்பின், வெளி நாட்டு மூலதனத்திற்கு தடைவிதித்து, சுயமாக வளர்ச்சியுற விரும்பிய கானா நாடுகூட அதன் பொருளாதார வளர்ச்சிக் கான தொகையில் $\frac{3}{4}$ பங்கு ஏகாதிபத்திய நாடுகளிடமிருந்து கடனாகவும், உதவியாகவும் வாங்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

இப்படித்தான் ஏற்கெனவே முதலாளித்துவத்தின் பொது நெருக்கடியின் இரண்டாவது கட்டத்தில் நவீன காலனியாதிக்கம் வந்து சேர்ந்தது. காலனி நாடுகளையும், சார்பு நாடுகளையும் பொருளாதார ரீதியில் அடிமைப் படுத்துவதுதான் இதன் அடிப்படையாகும். அதோடு, ஒடுக்கப்பட்ட நாடுகளுக்கும், ஒடுக்கும் நாடுகளுக்குமிடையே யான உறவுகளில் பல அரசியல் "புதுமைகள்" தொடர்ந்து ஏற்படாமலில்லை. எடுத்துக்காட்டாக பிரிட்டன் தனது டொமினியன்களை, பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தை பிரிட்டிஷ் காமன் வெல்த்து என்ற புதிய பெயரிட்டழைக்குமாறு நிர்ப்பந்தித்தது. சுரண்டப்பட்டவர்களுக்கும் சுரண்டியவர்

களுக்குமிடையே குறுகிய காலமே இருக்கக் கூடிய ஒற்றுமையை நீடிக்க வேண்டுமென்று விரும்பிய பிரெஞ்சு ஏகாதிபத்தியவாதிகளும் கூட யுத்தத்திற்கு பின்னுல் அவர்களது அரசின் பெயரைப் பொறுத்த அளவில் பல சிக்கலான மாற்றங்களைச் செய்தார்கள். 1946-ல் பிரான்சும், அதன் கீழுள்ள நாடுகளும் சேர்ந்து பிரெஞ்சு யூனியன் என்றும், அதன் காலனி நாடுகள் எல்லாம் கடல் கடந்த பிரதேசங்கள் என்றும் புதிதாகப் பெயரிடப்பட்டன. 1958-ல் பிரான்சும் அதன் காலனி நாடுகளும் ஒருவரையொருவர் சார்ந்திருத்தல் என்ற கொள்கையை பெரிய அளவில் விளம்பரப்படுத்தி, மக்களின் ஆதரவையும் பெற்றது, பிராங்கோ ஆப்பிரிக்கன் சமுதாயம் உருவாகிட உதவியது.

ஒடுக்கப்பட்ட நாடுகளுக்கும் ஒடுக்கும் தேசங்களுக்குமிடையே உள்ள எல்லா உறவுகளின் சாரமே நவீன காலனியாதிக்கம் என்பதல்ல இதன் பொருள். காலனி யுத்தங்கள் ராணுவ ஆட்சிக் கவிழ்ப்புகள், பிரித்தாளும் சூழ்ச்சிகள், திணிக்கப்பட்ட கூட்டணிகள் இன்னும் இது போன்ற அடிமைப்படுத்தலை எளிதாக்கும் பழங்கால முறைகள் இன்னும் பயன்படுத்தப்பட்டன. பிரிட்டன் மலேயாவிலும், ஹாலந்து இந்தோனேஷியாவிலும் நீண்டகால காலனி யுத்தங்களை நடத்தின. லத்தீன் அமெரிக்க நாடுகளில் அமெரிக்க ஏகபோகங்களால் ஆட்சிக் கவிழ்ப்புச் சதிகள் ஏற்படுவது சர்வ சாதாரணமாக இருந்தது. எல்லாவற்றிலும் மிகவும் குறிப்பிடத் தகுந்தது குவாடிமாலா நாட்டில் பூர்ஷுவா ஜனநாயக அமைப்பு அழிக்கப்பட்டதே ஆகும். மக்களின் உண்மையான விருப்பத்திற்கு மாருக பிரிட்டிஷ் காலனியாதிக்கவாதிகள் மலேயா மற்றும் மத்திய ஆப்பிரிக்க கூட்டாட்சிகளை உருவாக்கினுர்கள்.

முதலாளித்துவத்தின் பொது நெருக்கடியின் இந்த இரண்டாவது கட்டத்தில், தேசியப் பிரச்சினைத் துறையில் மிகவும் மேலோங்கி நின்றவை, நவீன காலனியாதிக்கத்தை நியாயம் என ''ஆதாரப்படுத்தவும்'', சித்தாந்த அளவில் பொருளாதார அரசியல் கீழடக்கு

தலுக்கு ஒப்புதலைப் பெறவும் வேண்டிச் செய்த முயற்சிகளே ஆகும். அரசியல் சுதந்திரம் பெற்ற அநேக மக்களினங்கள் அரசியல், பொருளாதாரம், கலாச்சாரம் ஆகியவற்றில் மிகமிகப் பின்தங்கியிருந்த சூழ்நிலையில், முதலாளித்துவ வளர்ச்சிப்பாதையா அல்லது சோசலிச வளர்ச்சிப்பாதையா? எதைத் தேர்ந்தெடுப்பது என்ற நிலையில் இருந்தன. புதிதாக விடுதலையடைந்த இளம் தேசங்களை எல்லாம் பொருளாதார அடிப்படையில் உலக முதலாளித்துவத்துடன் பிணைப்ப தற்குரிய எல்லாவற்றையும் செய்தபின்னர் இப்போது அவர்களைக் கொள்ளையடிப்பது தங்களுடைய "உரிமை" என்பதை ஏகாதிபத்தியவாதிகள் தங்களது சித்தாந்த ரீதியாகப் பெறுவதற்கு பாடுபடுகின்றனர்.

தேசிய சுதந்திரத்தின் காலமெல்லாம் முடிந்துவிட்ட தாகவும், எல்லா மக்களினங்களும் ஒன்றுக்கொன்று தொடர்புள்ளவை என்றும், எனவே தேசிய சுதந்திரத்தைப் பயன்படுத்துவதன் வாயிலாகபோதுமான அளவுவளர்ச்சியை சுயமாகப் பெறமுடியாது என்றும் ஏகாதிபத்தியப் பிரசாரம் சாதித்தது. தேசிய அரசுகள் நிறுவப்படுவதாலும் தேசிய சர்வவுரிமையை செயல்படுத்துவதாலும் எந்த நன்மையும் இல்லை என்றும் கருத்தைத் தொடர்ந்து பரப்பியது.

புதிதாக விடுதலையடைந்த மக்களினங்கள் தேசிய அரசு களாக வளர்ந்து வருவதைக் கண்டு சர்வதேச ஏகாதி பத்தியம் திகிலடைந்தது. ஏனெனில் உலக சோஷலிச அமைப்பு, மற்றும் சர்வதேச தொழிலாளி வர்க்க இயக் கத்தின் செல்வாக்கின் கீழ் இந்த மக்களினங்கள் சோஷலிச பாதையைத் தேர்ந்தெடுப்பதற்கான வாய்ப்பும் இருந்தது. உலக முதலாளித்துவத்திற்கு ஏற்பட்டுள்ள இந்த ஆபத்து, மேற்கத்திய நாடுகள் தமது கவனத்தை மையப்படுத்த வேண்டிய ஒரு மிக முக்கியமான விஷயமாகும் என்று அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் சித்தாந்த நிபுணர் வால்ட் ரஸ்தோவ் கூறினார். வளர்ச்சி குன்றிய மக்களினங்கள், கம்யூனிஸ்டுகளுடைய புகழுரைக்கு மயங்காது சமாளிக்க

முடிந்தால், முதலாளித்துவ அமைப்பின் மூலமாகவே முன்னேற முடியும் என்பதை மேற்கு நாடுகள் எடுத்துக் காட்ட வேண்டும் என்றும் ரஸ்தோவ் மேலும் குறிப்பிட்டார்.

தேசியப் பிரச்சினையை விளக்குவதில் சோஷலிஸ்டுகளும், சமூக ஜனநாயக வாதிகளும் நவீன ஏகாதிபத்திய தத்துவாளர்களும், சித்தாந்தவாதிகளும் காட்டும் வழியையே வழக்கமாகப் பின்பற்றினார்கள். 1940-களிலும் 1950-களிலும் அவர்கள் செய்த பிரகடனங்களும், அளித்த திட்டங்களும் தேனினும் இனியதான சொற்றொடர்கள் நிரம்பியதாக இருந்தன என்பதும், சிலர் சர்வதேசியத்தை ஒப்புக்கொள்ளும் அளவிற்குக்கூடச் சென்றார்கள் என்பது உண்மைதான். ஆனால் மொத்தத்தில் சமூக சீர்திருத்த வாதமே அவர்களுடைய அரசியல் தத்துவார்த்த உள்ளடக்கத்தின் நிர்ணயக் கூறாக இருந்தது. தேசிய நலன்களைப் பாதுகாத்தலை அவர்கள் கைவிட்டார்கள். மாறாக காலனி மற்றும் சார்பு நாடுகளின்பால் அப்பட்டமான ஒரு வெறித்தனமான குரு தேசிய கொள்கையை ஆதரித்தார்கள்.

தேசியப் பிரச்சினையை மிகவும் திறம்பட ஆய்ந்து கொண்டிருந்ததாகக் கூறப்பட்ட இதர ஏகாதிபத்திய தத்துவாளர்களான ஹான்ஸ்கோஹன், ரூபர்ட் எமர்சன், ரிச்சர்டு பைப்ஸ், ஆர். ஸ்டிராஸ் ஹுபே, வால்டர் கோலார்ஸ் போன்றவர்களோடு சேர்ந்து வலதுசாரி சோஷலிஸ்டுகளும் ஏகபோக முதலாளித்துவத்தை வெளிப்படையாக ஆதரித்துப்பேசினார்கள். அமெரிக்க ஏகபோகத்தின் காஸ்மோபாலிடனிசத்தின் செல்வாக்கால் ஈர்க்கப்பட்டுத்தான், அமெரிக்க சோஷலிசக்கட்சி ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தை உலக அரசாங்க சமஷ்டியாக மாற்ற வேண்டுமென அறைகூவல்விட்டது; அதோடு ஏகபோக லட்சியங்களுக்கு சோஷலிசத் திரையிட்டது. ஒன்றுக்கொன்று பொருத்தமற்ற, ஐரோப்பாவின் பழைய ஏகபோக முதலாளித்துவமும், ஆப்பிரிக்காவின் முளைவிட்டுவரும் இளம் முதலாளித்துவமும் இணைந்த ஒரு அமைப்பைப்

யூராப்பிரிக்கா என்று பிரான்சிலுள்ள வலதுசாரி சோஷலிச சித்தாந்தவாதிகள் வானளாவப் புகழ்ந்தனர். மொத்தத்தில் அது, உலக சோஷலிசத்தின் செல்வாக்கையும், அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் உலக மேலாதிக்கத் திட்டத்தையும் ஒருங்கே தடுத்து ''மூன்ருவது சக்தியாக'' உருவாக வேண்டுமென்ற பிரெஞ்சு ஏகாதிபத்தியத்தின் பேராவலேயே பிரதிபலிப்பதாக இருந்தது.

சோவியத் நாட்டின் முன்முயற்சியோடு ஐ. நா. சாசனத்தில் பொறிக்கப் பெற்றுள்ள, மக்களின் சுயநிர்ணய உரிமை, சோவியத் நாட்டில் தேசியப் பிரச்சினைக்கு ஏற்பட்ட தீர்வின் செல்வாக்காலும், உலகப் பொதுஜன அபிப்பிராயத்தின் நெருக்குதலாலும் சர்வப் பொதுவான முறையில் அங்கீகரிக்கப்பட்டது. ஆனல் அந்த வலதுசாரி சோஷலிஸ்டுகள் இந்த முற்போக்குக் கருத்தைப் புரட்ட முயன்ருர்கள் மக்களினங்கள் அக்கருத்தின் சாரத்தை, சுதந்திரமான தேசிய அரசுத்துவம் மற்றும் அரசியல் ரீதியாகப் பிரிந்து செல்லும் உரிமை என்று சரியாகப் புரிந்து கொள்ளும் போது, வலதுசாரி சமூக ஜனநாயகவாதிகள் மட்டும் பொருளாதாரச் சுதந்திரம் சாத்தியமில்லாவிடில் அரசியல் விடுதலை என்பது ''அர்த்தமற்ற ஒன்ருகும்'' என்று வாதிட்டனர். அவர்களுடைய இந்த நிலைபாட்டை ஆதரிக்க பிரிட்டனின் தொழிற்கட்சித் தலைவர்கள், பிரான்சின் சோஷலிஸ்டுகள் மேலும் பலர் விசித்திரமான வழிகளில் இறங்கினுர்கள். ஒடுக்கப்பட்ட மக்களின் தேசியம் பிற்போக்கானது என்றும், அவர்களது பிரிவினை அவர்களுடைய சர்வதேச இணைப்புகளை துண்டித்துவிடும் என்றும், காலனி மண்டலத்தில் சுதந்திர தேசிய அரசுகளை அமைப்பது என்பது சாம்ராஜ்யத் தலைமை நாடுகளிலுள்ள தொழிலாளி வர்க்கத்தின் பொருள்வகை நிலைமைகளை புறக்கணிப்பதாகவே இருக்கும் என்றும் இதுபோன்று பல்வேறு வழிகளில் வலதுசாரி சோஷலிஸ்டுகளின் செய்தித்தாள்கள் பிரச்சாரம் செய்தன. பிரான்சு நாட்டு சமூக சீர்திருத்தவாதியான கை மொல்லே என்பவர் காலனி, அரைக்காலனி

நாடுகளிலுள்ள மக்களினங்களுக்கு, சுதந்திர தேசிய அரசு என்ற எண்ணத்தைப் புறக்கணித்து அவர்களது வளர்ச்சியின் ஒரு கட்டத்தைப் பாதுகாத்துக் கொள்ளு மாறும் ஆலோசனை வழங்கினர். அதற்குப் பதிலாக பிரான்சு தேசத்தோடு ஒரு சமூகமாகச் சேர்ந்து கொள்ளு மாறு அறிவுறுத்தினர். சோஷலிஸ்டு கட்சியின் மற்றொரு தத்துவ வல்லுனரான லூசியன் லாரஸ் என்பவர், உலகந் தழுவிய பொருளாதாரப் பிணைப்புகளும், உலகச் சந்தையும் ஏற்பட்டுள்ள இந்த யுகத்தில் (காலனி நாட்டு மக்களுக்கு), முழு தேசிய சுதந்திரம் என்பது அசம்பாவிதமான மனோராஜ்யமும் காலத்திற்கு ஒவ்வாத நட்புமாகும் என்றார்.

பிரிட்டன், பிரான்சு, பெல்ஜியம், ஹாலந்து இன்னும் இதர நாடுகளின் சமூக சீர்திருத்தவாதிகள் ஒடுக்கப்பட்ட மக்கள் தேசிய சுதந்திரம் அடைந்துவிடாது தடுப்ப தற்காக அரசியல் ஒடுக்குதலையும், பொருளாதார நெருக்கு தலையும் காலனிப் போர்களையும் பயன்படுத்தினர். தேசிய விடுதலைப் போராட்டம் இந்த உரிமையை நிகழ்காலத்தின் அவசியம் என்று முன்வைத்தபோது ஆகக் குறைந்த பட்சத்திற்கு குறுக்கிட முயற்சி மேற்கொள்ளப்பட்டது. இன்னும் சில இடங்களில் சுதந்திரத்தைத் தொடர்ந்து ராணுவப் பற்றுடல் ஏற்பட்டது. மேலும் சில இடங்களில் ஏற்கெனவே இருந்த காலனியாதிக்க ஆட்சி தனது சொந்த நபரையே அரசின் தலைமையில் உட்கார வைத்தது. அல்லது சுதந்திரத்தை வெறும் ஓர் உள்நாட்டு சுயாட்சியாகக் குறைத்தது. அப்படி ஏற்பட்ட உள்நாட்டு அரசாங்கத்திற்கு முந்திய காலனி நாட்டு ஆளுநரையே, தலைவராக இருக்கச் செய்தது.

ஏகாதிபத்திய பிற்போக்கு சக்திகளுடன் கூடிநின்று, வலதுசாரி சோஷலிஸ்டு செய்தி ஏடுகள் அப்பட்டமான காஸ்மோபாலிடன் நிலை மேற்கொண்டு வரம்புடைய அரசுரிமை என்ற ''தத்துவத்தை'' வானளாவ புகழ்ந்து பாராட்டின. 1951 ஜூலையில் சோஷலிஸ்டு அகிலத்தின்

முதலாவது காங்கிரசில் "பூரண தேசிய அரசுரிமை மீறப்பட வேண்டியது* எனப் பிரகடனப்படுத்தப்பட்டது. அதைத் தொடர்ந்து அடுத்த ஆண்டில் இத்தாலிய சமூக ஜனநாயக கட்சி அதனுடைய செயல்பாட்டுத் திட்டத்தில், சர்வதேச அமைப்புக்கு அல்லது தேசத்திற்கு அதீதமான ஒரு மேல் அமைப்புக்கு தங்களுடைய தேசிய ஆதிபத்திய உரிமையில் ஒரு பகுதியை விட்டுக்கொடுக்க விரும்புகின்ற நாடுகளுக்கிடையே, வளரக்கூடிய ஆக்க ரீதியான ஒருமைப்பாடு தேவை என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

விரைவில் அமெரிக்க சோஷலிஸ்டு கட்சியும், அமெரிக்க ஏகபோகத்தின் நோக்கங்களோடு முழு உடன்பாட்டுடன் செயற்கையான பொருளாதாரத் தடைகளை உடைக்க வேண்டுமென்றும், தேசிய ஆதிபத்திய உரிமையைவிட பரந்த நோக்குள்ள லட்சியங்களை** மேம்படுத்த வேண்டுமென்றும் கோரியது. 1957-ல் தன்னுடைய கட்சி மாநாட்டிலும் காய்மொல்லே என்பவர், ஒரு நாட்டின் ஆதிபத்திய உரிமை என்ற எண்ணம் காலப் போக்கில் மறைய வேண்டும் என்றும், எல்லைகளின் யுகம் முடிந்து விட்டது என்றும் கூறினார். அவர் மேலும் குறிப்பிடும்போது, புதிய தேசங்களை உருவாக்குவதும், இல்லாத எல்லைகளை ஏற்படுத்துவதும் பயனற்றவை என்றார். ஏனெனில் அது வரலாற்றின் கடிகாரத்தை பின்னுக்குத் திருப்பி வைப்பது போன்றது என்றார்.

பிரதான ஏகாதிபத்திய அரசுகளிலுள்ள ஆக்கிரமிப்புப் பேராசைப் பிடித்த ஏகபோக மூலதனத்தினால் ஆதரிக்கப்படுகிற "வரம்புள்ள அரசுரிமை" என்ற தத்துவம், ஒடுக்கப்பட்ட மற்றும் ஒடுக்கும் மக்களினங்களிடையிலான தேசிய உறவுகளை மிகவும் பாதித்துள்ளது. மொத்தத்தில் அது காலனியாதிக்கம், நவீன காலனியாதிக்கம் ஆகியவற்றின் முத்திரையாகவே இருந்தது. காலனி நாடுகளிலும், நவீன

---

* சர்வதேச சோஷலிஸ்டு தொழிலாளர் இயக்கத்தின் ஆண்டு மலர், 1956-1957, லண்டன், 1956, பக். 44.

** அதே நூல், பக். 329.

காலனி நாடுகளிலும் உள்ள அநேக வலதுசாரி சோஷலிஸ்டு கட்சிகள் இக்கருத்தை அங்கீகரிக்கத் தயங்கின. சில காலனி நாடுகளிலுள்ள சமூக சீர்திருத்தவாதிகள் கூட இக்கருத்தை காலனியாதிக்கத்தை நியாயப்படுத்தும் ஒன்றாகக் கருதினர் யுத்தத்திற்கு பிறகு பிரஞ்சு சோஷலிஸ்டு கட்சியின் அறிக்கையில்கூட, இரு மக்களினங்களின் கூட்டு ஏற்பாடு, பரஸ்பரம் இலாபகரமான ஒத்துழைப்பு எனில், 'காலனி யாதிக்கம் நியாயமான ஒன்றுதான்'' என்று குறிப்பிடப்பட் டிருந்தது. பரஸ்பரம் ''இலாபகரமான ஒத்துழைப்பு'' வேண்டாம். காலனியாதிக்க சக்திகளுக்கும் அவர்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் இடை சாதாரண ''ஒத்துழைப்பு'' என்பதேகூட சாத்தியமா.

ஆகவேதான் சோஷலிஸ்டு அகிலம் தொடங்கப்பட்டு 18 மாதங்களே ஆனதும், ஒன்பது வலதுசாரி சோஷலிஸ்டு கட்சிகள் சேர்ந்து ஆசிய சோஷலிஸ்டு மாநாடு நடந்தது என்பதில் ஆச்சரியம் ஏதுமில்லை. அவ்வாறு தனியாக பிரிந்த தற்கு காரணம் காலனியாதிக்கம், சார்பு நாட்டு மக்களின் விடுதலை ஆகிய பிரச்சினைகளில் அக்கட்சிகளிடையே கணிசமான கருத்து வேறுபாடு இருந்ததுதான்.

ஐரோப்பிய வலதுசாரி சோஷலிஸ்டுகள், மேற்கு ஐரோப்பிய ஏகபோகங்கள் பொதுச்சந்தையை நிறுவுவதற்கு உதவினர். தொடக்க காலத்திலிருந்தே அந்த இ.இ.சி. (ஐரோப்பிய பொருளாதார அமைப்பு) அமைப்பு, தேசியத் தொடர்புகள் பற்றிய பிரச்சினையை, நான்கு பகுதிகளாகப் பிரித்து மிக ஆழமாக அதில் ஈடுபட்டு வந்தது. அந்த நான்கு பகுதிகளாவன:

(அ) இ.இ.சி. அமைப்பில் உட்பட்ட மக்களினங்களுக் கிடையே உள்ள உறவுகள்;

(ஆ) இ.இ.சி. நாடுகளுக்கும், பிற வளர்ச்சியடைந்த முதலாளித்துவ அரசுகளுக்கும் இடையேயான உறவுகள்;

(இ) இ.இ.சி. அமைப்பில் உள்ள நாடுகளுக்கும் உலக சோஷலிஸ்ட் அமைப்புக்கும் உள்ள தொடர்பு;

(ஈ) இ.இ.சி. அமைப்பிற்கும் காலனி-சார்பு நாடுகளின் மக்களினங்களுக்கும் இடையுள்ள தொடர்பு.

தேசிய உறவுகள்பற்றிய இந்த அம்சங்கள், தேசங்களின் ஒற்றுமை என்ற பிரச்சினையை எழுப்பின. ஏனெனில் ஏகபோக மூலதனத்தின் தாசர்கள் தேசிய இணைப்பாக்கம் என்ற கருத்தை முன்வைத்தார்கள். அவர்களுடைய குறிக்கோள் என்னவெனில் ஒரு தேசிய சமுதாயத்தை வலுப்படுத்தி அதில் பூர்ஷுவாக்களின் வர்க்க இயல்புகளை துடைத்தெறிந்து தொழிலாளி வர்க்கத்தின் "பாட்டாளி வர்க்கத் தன்மையை ஒழித்து" இறுதியாக அவர்களுக் கிடையேயுள்ள வர்க்க வேறுபாடுகளை அகற்றிவிட வேண்டும் என்பதேயாகும்.

ஒரு வரையறைக்கு உட்பட்ட பொருளாதாரக் குழுவான இ.இ.சி என்ற அமைப்பு இணைப்பாக்கம் என்று பேசி உள்ளபடியே இயங்கியபோதும், அது தேசங்களுக் கிடையேயுள்ள உறவுகளை கணிசமான அளவுக்கு கடுமையுறச் செய்தது. அந்த அமைப்பிலுள்ள உறுப்பு நாடுகளுக்கும் மற்ற ஐரோப்பிய நாடுகளுக்குமிடையே போட்டி மிகவும் கடுமையாக அதிகரித்தது. அவற்றில் ஏழு நாடுகள் தனியாக பிரிட்டனோடு ஒரு கூட்டு ஏற்படுத்திக் கொண்டன. இ.இ.சி அமைப்பின் அகத்தே முரண்பாடுகள் அதிகரிக்கத் தொடங்கின. குறிப்பாக, இந்தக் கூட்டமைப்பை தங்கள் சொந்த நோக்கங்களுக்கு கீழடக்க நினைத்த பிரஞ்சு மேற்கு ஜெர்மன் ஏகபோகங்களுக்கிடையே முரண்பாடுகள் அதிகரித் தன. இ.இ.சி என்ற அமைப்பின் நிலைநிற்பு மேற்கு ஜெர்மன் ஏகாதிபத்தியத்தின் 26 நிலைகளைப் பலப்படுத்தியது. பிரெஞ்சு ஏகபோகம் பிரெஞ்சு தேசத்தை ஒன்றுபடுத்தும் முயற்சியில் தேசியத்தைத் தூண்டியது. ஒருபுறம் ஐரோப்பாவிலும், ஐரோப்பிய பொதுச் சந்தையிலும், தனது மேலாதிக்கத்தை ஏற்படுத்தவும், மறுபுறம் உலகில் தனது மேலாதிக்கத்தை

வலுப்படுத்த எண்ணிய அமெரிக்க ஏகபோகத்தின் பேராசையை எதிர்த்து ஐரோப்பாவில் தனது பிடிப்பை மேலும் அதிகப்படுத்த நினைத்த மேற்கு ஜெர்மன் ஏகபோகத்தின் பேராசையை எதிர்த்தும் போராட முயன்றது.

இவை எல்லாமே வெவ்வேறு நாடுகளிலுள்ள ஏகபோகங்களுக்கிடையேயான உறவுகளை மட்டுமே பொறுத்த விஷயம் என்று நினைத்தால் அது தவறு. நடைபெறும் இந்தப் போட்டிப் போராட்டம் சாதாரண மக்களை குறிப்பாக தொழிலாளி வர்க்கத்தைப் பாதித்தது. மார்ஷல் திட்டக் காலத்திலிருந்தே, மேற்கு ஐரோப்பிய நாடுகளில், பெரும்பான்மை நாடுகள் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் கட்டுக்குள் வந்து விட்ட நிலையில் உழைக்கும் மக்களுக்கு அவர்களுடைய நாட்டின் தேசிய சுதந்திரத்தைப் பாதுகாப்பதையே ஒரு சவாலாக எதிரிட வேண்டி இருந்தது. இ.இ.சி. அமைப்பு நிறுவப்பட்டது இந்தப் பிரச்சினையைமேலும் உக்கிரபடுத்தியது. ஏனெனில் ஐரோப்பிய நாடுகளுக்கிடையேயான முரண்பாடுகள் மழுங்குவதற்குப் பதிலாக மேலும் கூர்மையடைந்தன. இ.இ.சி. அமைப்பினுள் மூலதனமும் மனித சக்தியும் தாராளமாக வந்து குவிந்ததை, பூர்ஷுவாக்கள் பயன்படுத்தி தொழிலாளர்களை உள் நாட்டவர் என்றும் ''குடியேறியவர்கள்'' என்றும் பிரித்த தொழிலதிபர்கள் குடியேறியவர்களுக்குக் குறைந்த கூலி கொடுத்து, தேசியத் தொழிலாளி வர்க்கத்தின் மீது நெருக்குதலை ஏற்படுத்தியதும் நிலைமைகளை மேலும் மோசமாக்கியது.

ஒடுக்கப்பட்ட மற்றும் ஒடுக்கிய மக்களினங்களுக்கிடையே, வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளுக்கிடையே முதலாளித்துவ நாடுகளுக்கும், புதிதாக விடுதலையடைந்த மக்களினங்களுக்குமிடையே பொருளாதார உறவுகள் சீர்குலையத் தொடங்கியதானது தேசிய உணர்வுகளையும், தேசிய போதத்தையும் வெளிப்படையாக ஊக்குவித்தது. காலனி ஒடுக்கு முறையுலிருந்து விடுதலை பெறும் சூழ்நிலையில், இது இயல்பான முற்போக்கான நிகழ்வாக

இருந்தது என்பதில் கேள்விக்கே இடமில்லை. வெவ்வேறு நாடுகளிலுள்ள பூர்ஷுவாக்களுக்கிடையேயான முரண்பாடுகள், மக்களினங்களுக்கிடையேயான தேசிய உறவுகளையும் பாதித்தன. சாம்ராஜ்யத் தலைமை நாடுகளிலிருந்த ஏகபோகங்கள், ஒடுக்கப்பட்டமக்களின் மீது வெறுப்பையும் விரோதத்தையும் தூண்டிவிட்டன.

காலனி மற்றும் சார்பு நாட்டு மக்களின் தேசிய உணர்வுகளின் முற்போக்கான வளர்ச்சியானது, காலனியாதிக்கவாதிகளுக்கு எதிராக, ஏகாதிபத்திய-எதிர்ப்பு முன்னணிகளைக் கட்டுவதில், சொத்துடமை வர்க்கப் பகுதிகள் உட்பட அனைத்து முற்போக்கு சக்திகளையும் ஒன்று படுத்துவதை ஊக்குவித்தது. காலனி அமைப்பு வரலாற்றில் எந்தக் கால கட்டத்திலும் தேசிய விடுதலை இயக்கம் இந்த அளவு விரிவுபட்டதாகவும், எல்லோரையும் உள்ளடக்கியதாகவும் இருந்ததில்லை. இது ஒரே நேரத்தில் தேசியப் பிரச்சினைகளையும், சமுதாயப் பிரச்சினைகளையும் அணுகியது. அந்நிய ஒடுக்குமுறையிலிருந்து கொஞ்சமாவது விடுதலை கிடைக்க முயற்சி என்ற பகுதி சமுதாய நோக்கங்களே இருந்தன என்பது மெய்யே. ஏனெனில் விடுதலைப் போர் வெற்றி பெற்றாலுங்கூட, ஒடுக்கப்பட்ட மக்களுக்கு அரசியல் சுதந்திரத்தைத் தவிர, வேறு எதுவும் கிட்டுவது சாத்தியமல்ல. மாறாக தேசிய நோக்கங்கள் என்ற அடிப்படையில் பார்த்தால் விளைவுகள் மிகவும் கணிசமாக இருந்தன. முதலாவதாகத் தேசிய விடுதலை இயக்கம் தேசிய அரசு ஏற்படுத்த வேண்டும் என்ற இயல்பான குறிக்கோளை எய்த முடிந்தது. இரண்டாவதாக, ஒரு தேசிய சமுதாயம் வெகுவிரைவில் வளர்ந்தது. அந்த நடப்பில் மக்களின் தேசிய உணர்வுகளும், விடுதலைப் போராட்டத்தின் பலனாக ஏற்பட்ட தேசிய அரசும் சிறப்பான பங்கு வகித்தன.

முதலாளித்துவத்தின் பொது நெருக்கடியின் இரண்டாவது கட்டம் முடிவதற்குமுன் ஒருசில மக்களினங்கள் மட்டுமே காலனி நுகத்தடியை தூக்கியெறிவதில் வெற்றி பெற்றன. 1940-களில் 12 புதிய தேசிய அரசுகள் நிறுவப்

பட்டன. 1950-களில் 8 தேசிய அரசுகள் மட்டுமே நிறுவப் பட்டன. ஆனால் பல்வேறு முக்கியமான துணை நிகழ்ச்சிகள் நடந்துள்ளன. முதலாவதாக 1940-களில் தேசிய விடுதலைப் புரட்சிகள் வெற்றிகரமாக நடந்தது ஆசியாவில் மட்டும் தான். ஆனால் 1950-களில் ஆப்பிரிக்காவிலும் காலனி யாதிக்கம் நொறுங்கத் தொடங்கியது. லிபியா, சூடான் மொராக்கோ, தூனிசியா, கானு, கினியா போன்ற தேசங்கள் விடுதலையடைந்தன. அதற்குள் காலனி ஆட்சி பலகீனமடைந்தது. எனவே கினியாவில் பொது வாக்கெடுப்பு மூலம் விடுதலை பெற்றதுபோல் வேறு பல இடங்களிலும் நடந்தது.

லத்தீன் அமெரிக்காவில் தேசியப் பிரச்சினையின் உள்ளடக்கம் சற்று வேறுபட்டதாக இருந்தது. இங்கேயும் கூட தேசிய ஒற்றுமையும் மக்களினங்கள் இணைதல் எனும் நடப்புக்கள் இருந்தன. ஆனால் அமெரிக்க ஏகபோகத்திட மிருந்து தேசிய சுதந்திரம் அடைவது என்ற பிரச்சினை அதிக முன்னுரிமை பெற்றிருந்தது. ஆகவே, 1940-களிலும் 1950-களிலும் கியூபா, குவாடிமாலா, கொலம்பியா ஆகிய நாடுகளின் மக்களின் விடுதலைப் போராட்ட சமுதாய நோக்கங்களின் முக்கியத்துவம் இருந்தபோதிலும், அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கு எதிராகவே நெறியாண்மை செய்யப் பட்டது. இருந்தாலும் லத்தீன் அமெரிக்காவில் இருந்த விசேஷமான சூழ்நிலை விடுதலை இயக்கத்தின் சமூக இயைபினைப் பாதித்தது. தேசிய பூர்ஷுவாக்கள் பொதுவாக போராட்டத்தைக் கைவிட்டனர். ஏனெனில் தேசிய விடுதலையின் நோக்கங்களில் பல, குறிப்பாக அரசியல் சுதந்திரம் மற்றும் தேசிய அரசுகளை நிறுவுதல் என்பன ஏற்கெனவே பெறப்பட்டுவிட்டன. அந்தப் பூர்ஷுவாக்களின் மனதில் தாமே தமது நாட்டு மக்களைச் சுரண்ட வேண்டும் என்ற எண்ணம் புகுவதற்குக்கூட முடியாதபடி மிகப் பெருமளவுக்கு அவர்கள் அமெரிக்க ஏகபோகத்தைச் சார்ந்து கிடந்தனர். வர்க்க முரண்பாடுகள் ஏற்கெனவே உக்கிரமடைந்திருந்தன.

லத்தீன் அமெரிக்காவில் தேசியத்தின் பங்கு இதிலும் அதிக அளவில் மங்கி இருந்தது. எங்காவது காணப்பட்டால் அதில், ஆசியாவிலும் ஆப்பிரிகாவிலும் இருப்பதைவிட மிகக் குறைவாகவே ஜனநாயகக் கூறுகள் இருந்தன. இப்படிக் கூறுவதால் ஆசிய, ஆப்பிரிக்க தேசிய வாதங்களில் பிற்போக்கு சக்திகள் அறவே இல்லை என்று கூறிவிட முடியாது அந்த சக்திகளும் இருந்தன. மக்களினங்களிடையே உள்ள உறவுகளை அவை எதிர்மறையாகப் பாதித்தன. நிலப்பிரபுத்துவ பிற்போக்காளர்களும் புதிதாக வந்த பூர்ஷுவாக்களும் தேசியத்தின் பிற்போக்கு அம்சங்களை வேண்டுமென்றே ஆதரித்து, மக்களினங்களுக்கிடையே நல்ல அண்டை அயல் உறவுகளுக்கு முட்டுக்கட்டை போட்டார்கள். அரபு பூர்ஷுவாக்களில் ஒரு பிரிவினர், சுதந்திரமான தேசிய வளர்ச்சியை தேர்ந்து கொண்ட அரபு நாட்டு மக்களின் உணர்வுகளுக்கு எதிராக அவர்களைக் கீழடக்க வெளிப்படையாகவே செயல்பட்டனர். ஆப்பிரிக்காவில் சில தலைவர்கள் ஏகாதிபத்தியத்தின் பிரச்சாரத்திற்கு இரையாகி, தேசியத்திற்கு, கம்யூனிச-எதிர்ப்புச் சாயம் பூச முயன்றனர். ஏகாதிபத்திய சித்தாந்த வாதிகளின் செல்வாக்குக்கு ஆட்பட்டு விடுதலையடைந்த மக்கள் மத்தியில் தேசியம் கம்யூனிசத்தின் செல்வாக்கை முடக்கும் ஒரு தடையாகவே சித்திரிக்கப்பட்டது.

தேசிய விடுதலை இயக்கத்தின் மீது சோஷலிச உலகின் செல்வாக்கு ஏற்படாது தவிர்க்கச் செய்யப்பட்ட முயற்சிகள் அத்தனையும் படுதோல்வி அடைந்தன. சோஷலிச சமுதாயத்தின் வெற்றிகளும், சர்வதேச தொழிலாளி வர்க்க இயக்கத்தின் வெற்றிகளும், வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளில் இன்னும் சற்று பெரிய அளவுக்கு இளம் தேசிய அரசுகள் தேசங்கள் தேசிய உறவுகளின் வளர்ச்சியில் எப்போதுமில்லாத அளவுக்கு ஒரு பெரிய தாக்கத்தை ஏற்படுத்தின. வியட்நாம், அல்ஜீரியா ஆகிய நாடுகளின் சுதந்திரத்துக்கும், சுயதீனத்துக்கும்

நடந்த போராட்டத்தில் சோவியத் யூனியனும், பிரஞ்சு தொழிலாளி வர்க்கமும் மிகப்பெரிய பங்காற்றின அது வியட்னும் மற்றும் அல்ஜிரியா மக்களுக்கு தார்மீக ஆதரவு அல்லது பிரஞ்சு ஏகாதிபத்திய வாதிகளால் நடத்தப்பட்ட காலனிப் போர்களுக்கு தார்மீகக் கண்டனம் என்ற அளவில் நிற்கவில்லை. உலக ஆதரவு திரட்டப்பட்டது, அரசியல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன; மேலும் ஆயுதங்கள், பயிற்சி பெறுவதற்கான வசதிகள், பொருளா தார போன்ற அனைத்தும் தொடர்ச்சியாகவும், தாராள மாகவும் வழங்கப்பட்டன.

சோவியத் யூனியனும், இதர சோஷலிச நாடுகளும் காலனியாதிக்கத்திற்குமுழுமையானமுடிவான முற்றுப்புள்ளி வைத்திடவேண்டும் என ஆண்டுதோறும் தொடர்ந்து விடாமல் வலியுறுத்தி வந்துள்ளன. எல்லா மக்களுக்கும் சுதந்திரம் வேண்டுமென்று கோரின; அன்னிய நாடுகளி லிருந்து ஏகாதிபத்தியத்தின் பற்றுடல் படைகளை வாபஸ் வாங்குவதோடு காலனி வாதிகளின் ஆக்கிரமிப்புச் சதிகளைக் கண்டிக்க வேண்டும் என்றும் கோரின. சோஷலிச நாடுகள் தான், விடுதலையடைந்த நாடுகளுக்கு உடனடியாக அரசியல் அங்கீகாரமும், பொருளாதார உதவியும், சாதகமான வியாபார ஒப்பந்தங்களும் செய்து கொள்ள இயல்பாகவே முன்வந்தன. அதோடு அவர்களுடைய சுதந்திரத்தையும் தேசிய சுயாதீனத்தையும் பாதுகாக்க உதவின. 1956-ல் எகிப்து, சிரியா ஆகிய நாடுகளை எதிர்த்த சர்வதேச ஏகாதி பத்தியத்தின் ஆக்கிரமிப்பை, சோவியத் யூனியன் மேற் கொண்ட உறுதியான நிலைபாட்டால்தான் செயல்குலைக்க முடிந்தது. வளர்முக நாடுகளின் பொருளாதார வளர்ச்சிக்கு உலக சோஷலிச அமைப்பின் பங்கு எவ்வளவு முக்கியமானது என்பதை அந்த நாடுகளுடன் திடமாகப் பல்கிப்பெருகிவரும் வாணிகத்தில் இருந்தே நிர்ணயம் செய்து கொள்ளலாம். 1970-களில் சோவியத் யூனியன் மட்டுமே 70 ஆசிய, ஆப்பிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகளோடு விரிவான வியாபார உறவுகளை மேற்கொண்டுள்ளது.

உலக சோஷலிச அமைப்பும், சர்வதேச தொழிலாளி வர்க்க இயக்கமும் எப்போதும் வழங்கத் தயாராக இருக்கும் உதவியானது ஆசிய, ஆப்பிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகளிலுள்ள முற்போக்கு சக்திகளின் செயல்பாடுகளுக்கும், குறிப்பாக மார்க்சிய லெனினியக் கட்சிகளின் செயல்களுக்கு உச்சபட்ச முக்கியத்துவம் வாய்ந்ததாகும். முதலாளித்துவத்தின் பொது நெருக்கடியின் இரண்டாவது கட்டத்தில் அந்த மூன்று மாகண்டங்களிலும் பதினெட்டு புதிய கட்சிகள் தோன்றியுள்ளன. அவைகளின் வேலை திட்டமும், கொள்கையும் தேசியப் பிரச்சினையைப் பொறுத்த அளவில் மார்க்சிய-லெனினிய அடிப்படையில் அமைந்தவைகளே. கம்யூனிஸ்டுகளின் எண்ணிக்கை கணிசமாகப் பெருகியது. 1939–ல் (புதிய சோஷலிஸ்டு நாடுகள் நீங்கலாக) ஆசியாவில் 22,000 கம்யூனிஸ்டுகள் மட்டுமே இருந்தனர். ஆனல் 1969-ல் இப்பகுதியில் 6,50,000 கம்யூனிஸ்டுகள் இருந்தார்கள். லத்தீன் அமெரிக்காவில் இந்த எண்ணிக்கை 90,000-லிருந்து 3,40,000 மாகவும், ஆப்பிரிக்காவில் 5,000 லிருந்து 60,000 மாகவும் உயர்ந்தது.

தொழிலாளி வர்க்கத்தின் எண்ணிக்கையும் அதிக அளவில் உயர்ந்துள்ளது. தொழிலாளர்கள் அரசியல் முதிர்ச்சியைப் பெற்றூர்கள். அவர்களுடைய தேசிய, சர்வதேசிய நோக்கங்களை வரையறுக்கக் கற்றுக் கொண்டார்கள். எடுத்துக்காட்டாக லத்தீன் அமெரிக்காவில் மட்டும் 37,00,000 ஆலைத் தொழிலாளர்களும். 10,800,000 விவசாயத் தொழிலாளர்களும் இருந்தார்கள் முதலாளித்துவ உலகில் தொழிலாளி வர்க்கம், உழைக்கும் மக்களின் முன்னணிப் படையாக இருந்தது. அந்த சக்திதான் அவர்களுடைய தேசிய, சர்வதேசிய நலன்களை மார்க்சிய-லெனினியக் கட்சிகளின் உதவியோடு பாதுகாத்து, அவற்றை மேம்படுத்துவதற்கான வழிகளை உருவரை செய்தன.

* * *

அதுதான் முதலாளித்துவ உலகில் உள்ள தேசியப் பிரச்சினையின் சுருக்கமாகும். மாபெரும் அக்டோபர் புரட்சி, சோவியத் யூனியனில் சோஷலிச நிர்மாணம், உலக சோஷலிச அமைப்பின் தோற்றம் ஆகியவற்றின் செல்வாக்கால் ஏற்பட்டவைதான் தேசங்கள். தேசிய உறவுகளின் வளர்ச்சியில் ஏற்பட்ட இந்த மாறுதல்கள் ஏகாதிபத்தியம் முதலாளித்துவ அமைப்பைக் கட்டிக் காப்பதற்காக தேசிய விரோதப் போக்குகளை உக்கிரப்படுத்திய அதே நேரத்தில், சோஷலிச உலகம் தேசியப் பிரச்சினையைத் தீர்வுகாண்பதில்தான் உண்மையான பலமும், சக்தியும், மக்களின் துரிதமான முன்னேற்றமும் அடங்கியிருக்கிறது என்று கண்டது.

பாகம்—2

தேசியப் பிரச்சினைக்குத் தீர்வு, சோஷலிசத்தின் கீழ் தேசங்களின் வளர்ச்சியும் சங்கமிப்பும்

சோஷலிசம் மிகப் பிரமாண்டமான வன்மையை உள்ளடக்கியது என்று லெனின் கூறினார். இது வரலாற்றில் ஒரு காலகட்டம்; அப்போதுதான் மனித சமுதாயம், தனது வளர்ச்சிக்கும், முன்னேற்றத்திற்கும் புதிய அசாதாரமான வாய்ப்புக்களைப் பெறுகிறது. இது சமுதாயத்திலுள்ள எல்லா பிரிவுகளுக்கும் முற்றும் பொருந்தும், மேலும் இதர விஷயங்களுடன் கூடவே மனிதகுல வாழ்வில் மிகவும் சிக்கலான பிரச்சினைகளில் ஒன்றாகிய தேசியப் பிரச்சினையின் தீர்வுக்கும் இட்டுச் செல்கிறது.

விஞ்ஞான கம்யூனிசத்தை நிறுவிய மார்க்சும் எங்கெல்சும் தேசங்களின் சுதந்திரமான மற்றும் ஆரோக்கியமான வளர்ச்சிக்கு அடிப்படையே தேசியப் பிரச்சினைக்கு ஏற்படும் தீர்வுதான் என்று விரைவில் கண்டார்கள். உண்மையான தோழமை பூர்வ தேசிய உறவுகளின் அடிப்படையில் ஏற்படும் இந்த வளர்ச்சியை, சோஷலிசத்திற்கு முந்திய முதலாளித்துவ அமைப்பால் மரபாக விடப்பட்ட அடித்தளம் மீது எண்ணிப் பார்த்திடவும் முடியாது. சோஷலிசம் அதற்குரிய புதிய அடிப்படையைப் படைக்க வேண்டியிருந்தது. முதலாளித்துவத்தை அழிப்பதன்

மூலமாக, பாட்டாளி வர்க்கம் தேசிய ஒடுக்குமுறையை அகற்றுவதற்கான சாத்தியக் கூறினை மட்டுமே ஏற்படுத்தியுள்ளது என்று கூறிய லெனின், அதை அகற்ற வேண்டுமானால் பாட்டாளி வர்க்கம் உண்மையில் சோஷலிச உற்பத்தி, எல்லாத் துறைகளிலும் முழு ஜனநாயகம் என்ற முறையில் புதிய அமைப்பினது அடித்தளத்தை நிர்மாணிக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

சோலிஷலிஸ்ட் உற்பத்தி முறையின் செல்வாக்கு தேசிய பிரச்சினை மீது, உற்பத்தி சக்திகளின் சுதந்திரமான வளர்ச்சியின் வாயிலாக குறைந்த அளவுக்கும், புதிய உற்பத்தி உறவுகளின் வெற்றியின் மூலமாகவும், தேசிய இனம் எதுவாக இருப்பினும் உழைக்கும் மக்களின் பரஸ்பர உதவி, ஒத்துழைப்பு ஆகியவற்றின் மூலமும் முக்கியமாகச் செயல்படுத்தப்படுகிறது. இதற்கான காரணம் என்னவெனில் சோவியத் ஆட்சியின் தொடக்க காலத்தில், தேசியப் பிரச்சினையின் உட்பொருள் தேசங்களின் வளர்ச்சி மற்றும் அவர்களுக்கிடையே உள்ள பரஸ்பர உறவுகள் ஆகிய இரண்டுமே தொடக்க நிலையில் சோஷலிஸ்டு உற்பத்தி முறை தனது பிடிப்பைத் பெறத் தொடங்கியுள்ளது. உற்பத்தி முறைகள் பல்வகைத் தன்மை அகற்றப்படவில்லை. சமூக உறவுகள் முற்றும் சோஷலிஸ்டு உறவுகளாக இல்லை எனும் மெய் நடப்பின் செல்வாக்குக்கு இலக்காகி இருந்தது. ஆனால் தற்காலிகமானதாகவே இருந்தது. சோஷலிசம் முழு அளவில் நாடு முழுவதும் வெற்றியடைந்ததும், தேசிய மற்றும் சர்வதேசிய நடப்புக்கள் எல்லாமே சோஷலிச உற்பற்தி முறையின் முழு ஆட்சியின் கீழ் வந்து விட்டன. இதர சோஷலிச நாடுகளிலும் இதுதான் உண்மை நிலை. ஒரு சில நாடுகளில் மட்டும் தேசிய, சர்வதேசிய தொடர்பாடுகளை முறைப்படுத்தும் கொள்கையில் சிறிது தொல்லைகள் இருந்தன; (இருக்கின்றன). அதற்குக் காரணம் சோஷலிச உற்பத்தி முறையின் தேவைகள் அகவயமான புறக்கணிப்புக்கு இலக்கானதேயாகும்.

தேசியப் பிரச்சினைக்குத் தீர்வு கண்டதன் மூலம் சோஷலிசம், முதலாளித்துவத்தைவிட மிகவும் உயர்வானது என்பது நிருபணமாகியது. தேசிய ஒடுக்குமுறையையும், ஏற்றத்தாழ்வையும் அழித்து தேசங்கள், தேசிய இனங்கள் மற்றும் இனக் குழுக்கள் ஆகியோரின் சுதந்திரமான வளர்ச்சிக்கு உறுதி செய்து, அனைத்து மக்களினங்களும் மலர்ச்சியுற்று வளர்ந்து, வர்க்கபேதமற்ற சமுதாயத்தைக் கட்டுவதில் இணைந்து நிற்க சோவியத் யூனியன் ஒளிமயமான புதிய வழிகளைக் காட்டியது. சோஷலிசத்தையும், கம்யூனி சத்தையும் கட்டுதல் என்ற பொதுநோக்கை முன்வைத்து, மார்க்சியமும் லெனினியமும் எல்லா தேசிய இனங்களைச் சார்ந்த உழைக்கும் மக்களிடையேயும், புதிய தோழமை உறவுகள், ஒத்துழைப்பு, பரஸ்பர உதவி ஆகியவற்றுக்கான சித்தாந்த நடைமுறை அடிப்படையை வழங்கியிருக்கிறது.

மறுபுறம் பூர்ஷுவா விஞ்ஞானம், மக்களுக்கு உருப்படியான ஒரு வழி காட்டுதலை வழங்க முடியாமல் இருக்கிறது. அமெரிக்காவிலுள்ள அரசியல் தலைவர்கள், அமெரிக்க சமுதாயம் ''சீரழிந்து'' வருவதை ஒப்புக் கொள்கிறார்கள். வீழ்ச்சியின் இறுதிக்கட்டத்தை நெருங்குக் கொண்டிருக்கும் போது, முதலாளித்துவம் தேசங்களுக்கிடையே உள்ள முரண்பாடுகளைக் கூர்மையடையச் செய்வதோடு, பெரு நஷ்டம் விளைக்கும் பயங்கர இரத்த வெறி யுத்தங்கள் ஏற்படுகிற அளவுக்கு உக்கிரப்படுத்துகிறது.

50 ஆண்டுகளுக்கு மேலாக இருந்துவரும் லெனினுடைய திட்டங்களும், சோவியத் யூனியனில் தேசியப் பிரச்சினை மீதான சோவியத் கம்யூனிஸ்டு கட்சியின் கொள்கையும், சோஷலிச அமைப்பில் இருக்கும் நாடுகளில் கடந்த கால் நூற்றாண்டு காலத்தில் தேசியத் தீர்வுகள் வெற்றிகரமாக ஏற்பட்டிருப்பதும், வர்க்க பேதமற்ற சமுதாயத்தை நிர்மாணிப்பதில் ஒவ்வொரு கட்டத்திலும் தேசங்கள் மற்றும் தேசிய உறவுகள் ஆகியவற்றின் உள்ளடக்கத்தில் ஏற்படும் ஒவ்வொரு மாற்றத்தையும் கண்டு கொள்வதற்கு

நமக்கு வாய்ப்பளிக்கின்றன. வாழ்வின் அடிப்படை அம்சமாகிய பாட்டாளி வர்க்க சர்வதேசியம் சோஷலிசப் பாதையைத் தொடர்ந்து ஏற்பட்டிருக்கும் அனைத்து மக்களினங்களின் வளர்ச்சியும், தோழமை உறவுகளும், தேசியப் பிரச்சினையின் உள்ளடக்கத்தில் தீர்மானகரமான அம்சமாக இருந்து வந்தது; இருந்து வருகிறது. தொடக்க காலத்திலிருந்தே சோஷலிசம் முன்னேற்றத்திற்குத் தடையாக இருந்த முதலாளித்துவ தேசிய வாதத்தை முறியடிக்க, எல்லா விதத்திலும் போராடி வந்துள்ளது.

சோவியத் நாட்டில் லெனினும் கம்யூனிஸ்டு கட்சியும், மக்களினங்களிடையே தோழமை உறவுகளுக்கு முக்கிய பாதமாக இருந்த, ருஷ்யாவின் மகா வல்லரசு குறு தேசிய வெறியை முறியடிக்க வேண்டும் என்று சிறப்பாக வலியுறுத்தினர். ''ஆதிக்க நாட்டு குறு தேசிய வெறியின்மீது இறுதி வரைப் போராட போர்ப்பிரகடனம் செய்கிறேன்''* என்று கட்சியின் மத்தியக் கமிட்டிக் கூட்டத்திற்கு லெனின் எழுதினார். சோவியத் யூனியனிலும், இதர சேஷலிச நாடுகளிலும் இன்னுமொரு அபாயம் இருந்தது. அதாவது குறுகிய வட்டார தேசியவாதமும், எல்லாப் பகுதி மக்களின் பொதுநோக்கங்களை வியாக்யானம் செய்வதில் தேசியப் அசாதாரணப்போக்கு என்பனவே இவை.

சோஷலிசத்தின் வெற்றியைத் தொடர்ந்து, பாட்டாளி வர்க்க சர்வதேசியமும், பூர்ஷுவா தேசிய வாதம் வெற்றிகரமாக ஒழிக்கப்பட்டதும் அதன் சமூக குறிக்கோள்களை முற்றிலும் அழித்துவிட்டன. ஒரு சில தனிநபர்களின் மனதில் சற்றே தங்கி இருக்கலாம். சோஷலிச சர்வதேசியம் என்பது ஒரு சித்தாந்தமாகவும், நடைமுறையாகவும், பல்தேசிய இனங்களைக் கொண்ட நாடுகளின் தனிநபர்கள் சோதர மக்கள் குடும்பங்களிலும், சோஷலிச சமுதாயம்

---

* வி. இ. லெனின், ''நூல் திரட்டு'', தொகுதி 33, பக். 372.

முழுவதிலும் ஒரு பிடிப்பை ஏற்படுத்தியிருக்கிறது. சோஷலிசத்தின்கீழ் அல்லது தொழிலாளர் ஆட்சி வந்த நாள்முதல் தேசிய உறவுகளின் உள்ளடக்கத்தில், உள்நாட்டு மற்றும் சர்வதேசியக் கொள்கை ஆகியவற்றில் மையமாக அமைந்தது தேசிய சமத்துவம்தான். சோவியத் நாட்டில் தான், மிகவும் சிக்கல் நிறைந்த பல மக்களினங்களைக் கொண்ட அங்குதான், தொழிலாளி வர்க்க தேசியக் கொள்கையைப் பற்றி லெனின் கூறிய வார்த்தைகள் முதன் முதலில் நடைமுறைக்கு வந்தன. "தேசங்களை ஒடுக்குதல், தேசங்களுக்கிடையே மோதல்கள், தேசங்களைத் தனிமைப்படுத்துதல்" ஆகியவைகளை உள்ளடக்கிய பழைய உலகத்திற்கு எதிராக மனிதனை மனிதன் எள்ளளவும் ஒடுக்காத, ஒரு சில வசதி படைத்தவர்களுக்கு இடம் என்ற நிலையே இல்லாத, எல்லா தேசங்களின் உழைக்கும் மக்களும் ஒன்றுபட்டு நிற்கிற ஒரு புதிய உலகை "தொழிலாளர்கள் முன்வைத்துள்ளனர்"* என்று லெனின் கூறினார்.

பாட்டாளிவர்க்க சர்வாதிகாரம் வெற்றி பெற்றதற்குப் பின்கூட, தேசிய சமத்துவம் என்பது சிக்கல் நிறைந்த பிரச்சினையாகவே உள்ளது. முதலில் அடைய வேண்டியது **சட்டபூர்வ அரசியல் சமத்துவம்.** இது தேசிய ஒடுக்குமுறை ஒழிக்கப்படும்போதே பிரகடனப்படுத்தப்பட்டு, சோஷலிச வெற்றிக்கான போராட்டத்தின்போது நடைமுறைப்படுத்தப்பட்டது. தேசிய சமத்துவத்தின் முக்கிய வடிவங்களில் ஒன்றுதான் மக்களினங்களின் சுயநிர்ணய உரிமையும், தேசிய அரசுத்துவத்துக்கான அவர்கள் உரிமையும் ஆகும். அரசுத்துவம் என்பது, மக்கள் தம் எதிர்கால வளர்ச்சிக்கு உரிய ஜீவாதாரமாகத் தேவைப்படும் நிலைமைகளின் உத்தரவாதமாகும். சர்வ தேசிய நிலையிலிருந்து பார்க்கும்போது தேசிய சுதந்திரம் என்பது ஏதோ இரண்டாந்தரமானது என்றுநினைப்பதுதவறு என எங்கெல்ஸ் ஏற்கெனவே கூறியுள்ளார். மாறாக அதுதான் எல்லா சர்வ தேச ஒத்துழைப்புக்குமான அடிப்படை என்றும்

* அதேநூல், தொகுதி 19, பக். 92.

கூறியுள்ளார். சேர்வியத் கம்யூனிஸ்டுக் கட்சி மற்றும் இதர சோஷலிஸ்டு நாடுகளிலுள்ள கம்யூனிஸ்டு மற்றும் தொழிலாளர் கட்சிகளின் லெனினிய தேசியக் கொள் கையின் அடிப்படை எப்போதுமே இந்த மார்க்சிய ஆராய்ச்சியுரைதான். சோவியத் யூனியன் மற்றும் உலக சோஷலிச அமைப்பிலான மக்களினங்களின் முன்னேற்றமும் அவர்களுடைய சோதர உறவுகளும், எங்கெல்ஸ் குறிப்பிட்டது போல் சர்வதேச ஒத்துழைப்பு என்பது சமமானவர் களிடையேதான் சாத்தியம் என்பதைத் தெளிவாக எடுத்துக்காட்டுகின்றன. ஆகவேதான் சோவியத் மக்களினங் களின் சோதரக் குடும்பத்தில், ருஷ்ய கூட்டாட்சிக்கு சலுகைபெற்ற சிறப்பிடம் எதுவும் இருக்கக் கூடாது என்று லெனின் வலியுறுத்தினார். "நாங்களும் உக்ரேனியன் சோ. சோ. குடியரசும் மற்றவையும் சமத்துவமானவை என்று கருதுகிறோம். எங்களை சம நிலையில் பாவித்து அவற்றுடன் சமத்துவ அடிப்படையில் ஒரு புதிய ஒன்றியத் தில், புதிய கூட்டமைப்பில் சேருகிறோம்" என்று அவர் கூறினார்.*

லெனினுடைய முன் முயற்சியால் அரசியல் விவகாரங் களில் உற்ற தேசிய சமத்துவம், மக்களினங்களின் பொருளாதார, கலாசார வளர்ச்சியில் **உண்மையான சமத்துவத்தை** கட்சியும் இடையறாது மேம்படுத்தியதால் நிறைவு பெற்றது. அக்டோபர் புரட்சிக்கு முன்னரே லெனின் இதைப்பற்றிப் பேசினார். கட்சியின் இரண்டாவது நகல் திட்டத்தில், "பிற்பட்ட பலஹீனமான தேசங்களுக்கு உதவி" மற்றும், செயல் முறைகளில் சமத்துவத்தை உறுதி செய்தல் ஆகியவற்றை மிகத் தெளிவாகவும், திட்டவட்ட மாகவும் அவர் வரையறுத்தார். தேசிய பிரச்சினை பற்றி பின்னர் கட்சிக்கு அறிவுரை வழங்கிய போதெல்லாம் உண்மையான சமத்துவமற்ற நிலையை அறவே போக்கிட வேண்டும் என்று திரும்பவும் குறிப்பிட்டார்.

---

* அதேநூல், தொகுதி 42, பக். 421–22.

வளர்ச்சி குன்றிய, பின்தங்கிய மக்களினங்களை உள்ளடக்கிய பல தேசிய இன சோஷலிச நாடு ஒவ்வொன்றிலும் அம் மக்களிடையேயுள்ள உண்மையான அசமத்துவத்தை கட்டாயம் போக்கிடவேண்டியது அவசியம். இதர சோஷலிச நாடுகளிலும் மக்களினங்களின் உண்மை யான சமத்துவத்தை உறுதிசெய்ய முக்கிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

பின்தங்கிய மக்கள் முதலாளித்துவ கட்டத்தைத் தாண்டிக் கடந்து, முதலாளித்துவமல்லாத வழிகளில் முன்னேறுவதற்கான வாய்ப்பு உண்டு என்றும் லெனினிய தத்துவத்தின் அடிப்படையில், சோஷலிசத்தைக் கட்டும் போதே சோவியத் யூனியனில் பல்வேறு பின்தங்கிய பழங்குடி மக்களிடையே இருந்த மெய்யான அசமத்துவம் அறவே நீக்கப்பட்டது. காலனியாதிக்கத்தால் பின்தங்கிய நிலையி லிருக்கும் மக்களினங்கள் முதலாளித்துவத்தைத் தாண்டிக் கடந்து சோஷலிசத்திற்குச் செல்லும் வாய்ப்பு உண்டு என்றும், சில நேரங்களில் புராதனச் சமூகத்திலிருந்தே நேரடியாகச் செல்லும் வாய்ப்பும் உண்டு என்றும் மார்க்சும் எங்கெல்சும் எதிர்பார்த்தார்கள். இந்தச்சிந்தனையை லெனின் தெட்டத் தெளிவான தத்துவார்த்த அறுதியுரையின் அமைப்பாக விரிவுபடுத்தினர். மேலும் நடைமுறையில் அமுலாக்குவதில் முக்கிய பங்கும் வகித்தார்.

முதலாவதாக, தேசியத் திடத்தன்மை பொருளாதார வளர்ச்சி மற்றும் அரசியல் ஒற்றுமையின் வழக்கமான அளவு வளர்ச்சியை எட்டுவதற்கு முன்பே தேசிய அரசுத்துவம் மக்களுக்கு வழங்கப்பட்டது. இரண்டாவதாக, தேசிய அரசுகள் அமைப்பதும், சோவியத் நாட்டின் சுற்றுமுள்ள தேசிய சக்திகளை ஒன்று திரட்டுவதும், ருஷ்யாவின் தொழிலாளி வர்க்கத்தின் வழிகாட்டுதல் மூலமே நிகழ்ந்தது. ஏனெனில் அந்தந்தப் பகுதிகளிலுள்ள தேசியத் தொழிலாளர் பிரிவுகள் பலவீனமாகவோ அல்லது ஆரம்ப நிலையிலோ இருந்தனர். மூன்றாவதாக வெவ்வேறு தேசியப் பகுதிகளி

லிருந்த மக்களும், ருஷ்யாவின் தொழிலாளி வர்க்கமும் அரசியல் ரீதியாக, பிரதானமாயும் விவசாயத் தொழிலாளர்களை உறுப்பினர்களாகக் கொண்ட மார்க்சிய-லெனினியக் கட்சி அமைப்புகளோடு பெரும்பாலும் தொடர்பு கொண்டிருந்தனர். நீண்டகாலமாக ஆட்சி அதிகார உறுப்புக்கள் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் உறுப்புக்களாக இல்லாது, புரட்சிகர ஜனநாயக தன்மையுடையதாகவே இருந்தன. நான்காவதாக, தேசிய உறவுகள், குறிப்பாக உள்நாட்டு மக்களுக்கும் ருஷ்ய மக்களுக்குமிடையே உள்ள உறவுகள், சோவியத் ஆட்சி அதிகாரம் நிர்மாணிக்கப்பட்டதுமே தீவிரமான மாற்றங்களைப் பெறத் தொடங்கின. சோவியத் ஆட்சி அதிகாரத்திற்கான கூட்டுப் போராட்டமும் பொருளாதார மற்றும் கலாசார முன்னேற்றத்திற்கும் தேசிய ஊழியர்களுக்கு பயிற்சியளிப்பதற்கும் உள்ள பொறுப்பை ரஷ்ய மக்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று லெனின் குறிப்பிட்டதை முழுவிருப்புடன் சோவியத் ருஷ்யா நிறைவேற்றி வைத்ததும் தானே ஒரு சமத்துவமற்ற ஒத்துழைப்பை சுய விருப்பமாக மேற்கொண்டதைக் காட்டியது முக்கிய காரணியாக விளங்கியது.

முதலாளித்துவமற்ற பாதையைப் பின்பற்றும் மக்களுக்கும், எல்லா தேசிய இனங்களுக்கும், தேசங்களுக்கும் தேசிய ஒற்றுமையை உறுதி செய்ய வேண்டியது முக்கியக் கடமையாகும். இது சுரண்டும் வர்க்கங்களையும், அடுக்குகளையும் ஒழித்து இல்லாமல் செய்வதைவிட ஒரு படி அதிகமாகும். தேசங்கள், தேசிய இனங்கள் ஆகியவற்றின் பொது முன்னேற்றமும், நிலைநிற்புப் பாங்கும் தொழிலாளர்கள், விவசாயிகள் ஆகியோரது வர்க்க நலன்கள், அகவளச் சிறப்பு இவற்றிலான ஒற்றுமை அறிவு ஜீவிகளுடனுன நெருக்கம் இவற்றைப் பொறுத்ததே ஆகும். தேசங்கள் தேசிய இனங்களின் மாற்றமடைந்த சமுதாயக் கட்டமைப்புத்தான் மக்களினங்களின் தேசிய ஒற்றுமைக்கும் சோஷலிஸ்ட் மாதிரி தேசங்களும், தேசிய இனங்களும் உருவாவதற்கும் அடிப்படையாகும்.

சோ.சோ.கு. ஒன்றியம் மற்றும் இதர சோஷலிச நாடுகளிலும் தேசங்களும், தேசிய இனங்களும் மாறுதல் அடைந்திருப்பது, பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம், சோஷலிச உற்பத்திமுறை, பல்வேறு தேசிய இனங்களின் உழைக்கும் வர்க்கத்தின் சித்தாந்தமான மார்க்சிய லெனினியத்தின் உறுதிப்பாடு ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டதே. சோஷலிச தேசங்கள், தேசிய இனங்களின் உருவாக்கம் எனும் தேசிய நடப்புக்களின் முக்கியமான மூன்று அம்சங்கள் பின்கண்டவாறு அமைந்தன: அவை (அ) பூர்ஷுவா சமுதாயத்தின் தேசங்களும், தேசிய இனங்களும் சோஷலிசத் தன்மை வாய்ந்த தேசங்கள் தேசிய இனங்களாக மாற்றப் படுதல், (ஆ) முதலாளித்துவ சூழ்நிலைகளில் உருவான தேசிய இனங்க்ள் நேரடியாக சோஷலிச தேசங்களாக மாற்றம் பெறுதல்; மற்றும் (இ) பலதரப்பட்ட பழங்குடியினர் இனப் பிரிவினர் ஆகியோரை இணைத்து சோஷலிசத் தன்மை வாய்ந்த தேசிய இனங்களாக உருவாக்குதல்.

சோஷலிசத்தின் கீழ் வாழும் மக்களின் தேசிய, சர்வதேசிய அம்சத்தின் ஒற்றுமை பொதுவாக புதிய உற்பத்தி முறையினுலும், புதிய சமூக உறவுகளாலும் உறுதி செய்யப்பட்டுள்ளது. சுரண்டலும், ஒடுக்கு முறையும் அகற்றப்படுதல், மக்களின் ஒரு பகுதியினர் இன்னொரு பகுதியினர் இழப்பில் வளர்ச்சியுறுதல் எனும் நிலைமைகள் ஒழிக்கப்படுதல், நலன்களும் நோக்கங்களும் ஒன்றுபடுதல் ஆகியவை பகைமை எண்ணங்களையும், அவநம்பிக்கையையும் அகற்றுவதற்கும் தேசிய நட்புறவு நெருக்கமான ஒத்துழைப்பு பரஸ்பர உதவி ஆகியவை வளமடைவதற்கும் துணை நிற்கின்றன.

சோவியத் ஒன்றியத்தில் மக்களினங்களுக்கிடையேயான நட்புறவு, லெனினுடைய போதனையின் அடிப்படையில் முதல் முறையாக அவருடைய வழிகாட்டுதலின் பேரில் கம்யூனிஸ்டு கட்சியால் உருவாக்கப்பட்டு, தேசியப் பிரச்சினை முன்னென்றும் கண்டிராத வகையில் வெற்றிகரமாகத் தீர்க்கப்பட்டிருப்பது சோஷலிசத்தின் மிகப்பெரிய சாதனை

களில் ஒன்றாகும். நட்புறவு என்பது மக்களினங்களிடையே கருத்து வேறுபாடுகளும், அவநம்பிக்கையும் இல்லாதிருப்பது என்பது மட்டுமல்ல. மாறாக,சோஷலிசத்தின் கீழ் பல்தேசிய இனங்களை உள்ளடக்கிய நாட்டின் அபிவிருத்தியிலான புதிய அளப்பரிய முக்கியத்துவமுடைய சமுதாய அம்சமாகும். சோவியத் ஒன்றியத்தின் மக்கனளினங்களிடையே உருவாகி யிருக்கும் நட்புறவை லெனினுடைய தேசியக் கொள் கையின் மிக முக்கியமான விளைவுகளில் ஒன்று என்றும், சோவியத் சமுதாய வளர்ச்சிக்குப் பின்னணியில் இருந்தமிகப் பெரிய சக்திகளில் ஒன்றாகும் என்றும் சோவியத் கம்யூனிஸ்டு கட்சிக் காங்கிரஸ் தீர்மானங்களும், கட்சித் திட்டங்களும் விரிவாகச் சித்திரிகின்றன. ''இதற்கு முன்னால் வரலாற்றில் அறவே கேட்டிராததான சுதந்திர தேசங்களின்இடையிலான ஒற்றுமை மற்றும் நட்புறவு உறவுகளை உருவகப்படுத்து கிறது.சோவியத் யூனியனின் இந்த நட்புறவு சோஷலிசத்தின் மிகப்பெரிய சாதனைகளில் ஒன்றாகும். சோவியத் சமுதாயத் தின் மிகப்பெரிய உந்து சக்தியாகும்; அந்த நட்புறவுதான் சோவியத் ஒன்றியத்திலுள்ள எல்லா தேசிய இனங்களின் உழைக்கும் மக்களும் ஒன்றுபட்டு "கம்யூனிசத்தை நிர்மாணித்தல்'' என்ற உன்னத லட்சியத்தை நிறைவேற்றிட தொடர்ந்து ஆற்றிடும் ஆக்கப்பணிகளின் வற்றாத ஊற்றாக அமைந்துள்ளது.''*

மக்களினங்களின் இந்த நட்புறவுதான், கட்சியால் நிறுவப்பட்டு மேம்படுத்தப்பட்டு வரும் சோஷலிச தேசங்கள், தேசிய இனங்கள், இனப்பகுதியினர் ஆகியோரின் சகலதுறை ஒத்துழைப்பு பரஸ்பர சோதர உதவி ஆகிய வற்றின் மீது நிலைகொண்டிருக்கிறது.

சோவியத் ஒன்றியத்தில் சோஷலிசத்தின் இறுதி வெற்றியும், கம்யூனிசத்தைக் கட்டுவதிலான அதன் நடப்பு வெற்றிகளும் (அ) புதிய தேசங்கள் மலர்ந்து ஒன்று

* "சோவியத் சோஷலிஸ்டு குடியரசுகளின் ஒன்றியம் நிறுவப்பட்டதன் 50 ஆம் ஆண்டு விழாவுக்கானத் தயாரிப்புகள்", சோ.க.க.ம.க. தீர்மானம், பக். 4.

சேரும் போக்கிற்கும், (ஆ) அவற்றின் பொருளாதார காலாசாரத்தரங்கள் சம சீராவதற்கும் வலுவான ஊக்கு சக்தியாக இருந்தன.

சோஷலிசப் புரட்சியின் வெற்றியைத் தொடர்ந்து, முதலாளித்துவத்தின் கீழ் தேசிய, சர்வதேசிய நடப்புக்களை ஆளுமை செய்யும் கண்மூடித்தனமான தன்னியல்பான சமூக சக்திகள் பல்வேறு தேசிய இனங்களைச் சார்ந்த உழைக்கும் மக்களின் உள்ளுணர்வுகளுக்கும் மேலதிகமான வீச்சினை அளித்திடுவதும், மார்க்சிய-லெனினிய கட்சிகளின் வழிகாட்டுதலுக்கு அதிக வீச்சினை அளித்திடுவதுமான புறநிலை முறைமைகளுக்கு இடமளித்தன. இயல்பாகவே இது புறவய விதிமுறைகளுக்கு மாற்றீடு ஆக முடியாது. ஆனால் அந்த விதிமுறைகளை மார்க்சிய-லெனினிய அடிப் படையில் புரிந்து கொள்வதற்கும்,அதற்கேற்ப தேசங்கள், தேசிய உறவுகளின் வளர்ச்சியை நெறியாண்மை செய்வதற்கும் உதவுகிறது.

தேசங்களும், தேசிய இனங்களும் மலர்ந்து ஒன்று சேருதல் என்பது, தேசியப் பிரச்சினைக்குத் தீர்வுகண்டு, தேசிய உறவுகளை வளமடையச் செய்யும்போது புறவய அவசியக்கூறு என்ற முறையில் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டிய மிக முக்கியமான மற்றும் கடினமான அம்ச மாகும். சமுதாயத்தில் இன்னும் பல துறைகளில், தேசங்கள் தேசிய உறவுகள் தொடர்பான இன்னும் கடந்து செல்ல வேண்டிய வளர்ச்சிக்கட்டங்களை பாய்ச்சல்நடத்தித்தாண்டிச் செல்வதும் சாத்தியமல்ல என்பதை மனதிலிருத்தல் முக்கிய மானது. எடுத்துக்காட்டாக பல்வேறு தேசிய இனங்களைச் சார்ந்த தொழிலாளர்களிடையே சோதர உணர்வு ஏற்படு வதற்குமுன் மக்களினங்களிடையே சோதர உறவோ அல்லது தேசியம் வளர்ச்சியடையும் முன்பு சர்வதேசியம் வளர்ச்சியடைவதோ சாதனையாக முடியாது.

சோவியத் கம்யூனிஸ்டு கட்சியின் திட்டமும், கொள் கையும் தொடக்க முதலே ஒவ்வொரு தேசமும் தேசிய இனமும் மலர்ந்து வளர்ந்து சங்கமிப்பதற்கு வழிவகை

செய்து கொடுத்தது. தேசங்கள், தேசிய உறவுகள் ஆகிய வற்றின் வளர்ச்சியில் சோஷலிசத்தின் உலகந்தழுவிய விதிமுறை தொடர்பான லெனினுடைய கருத்தின் அடிப் படையில் கட்சி செயல்பட்டது.

தேசங்கள் மலர்வதும் ஒன்று சேர்தலும், சோஷ லிசத்தின் உலகந்தழுவிய விதிமுறையின் இரு போக்குகளின் நிறைவேற்றம் என்ற முறையில் ஏககாலத்தில் நடைபெறு கின்றன. பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் கீழ், சோஷ லிசத்தை நிர்மாணித்துக் கொண்டிருக்கும் இதர பகுதி மக்களோடு சங்கமிப்பு இல்லாமல் அல்லது முதலாளித்துவ நாடுகளின் உழைக்கும் மக்களோடு ஒரு சர்வதேச ஒற்றுமை ஏற்படாமல் தனியாக ஒரு பிரிவு மக்கள் மலர்ச்சியுறுதல் என்பது சாத்தியமல்ல; ஏதாவது ஒரு தேசத்தின் வளர்ச் சியோ, மலர்ச்சியோ தடுக்கப்பட்டாலும் அல்லது கட்டுப் படுத்தப்பட்டாலும் சரி தேசங்களின்சங்கமிப்பு என்பது நினைக்கமுடியாததாகும். இந்தகாலகட்டத்தில் உலகந்தழுவிய சோஷலிச விதியை நடைமுறைப் படுத்துதல் என்பது சர்வ தேசியத்திற்கு முதன்மையிடமளித்து தேசியம், சர்வதேசியம் ஆகியவற்றின் இயக்கவியல் ஒற்றுமையை அடிப்படையாகக் கொள்வதே சாத்தியம்.

பின்தங்கிய மற்றும் முன்னேறிவிட்ட மக்களினங்களுக் கிடையே ஓரளவு சங்கமிப்புக்கூட இல்லாமல், சர்வதேசிய பிணைப்புகளும் நட்புறவும் இல்லாமல் மெய்யான அசமத்துவத்தை வென்று போக்குதல் என்பது முடியாது என்பது நிச்சயம். முன்னேறிவிட்ட நாடுகள், வளர்ச்சி குன்றிய நாடுகளின்பால் உண்மையான சர்வதேசிய அணுகு முறையைக் கடைப்பிடிக்காவிட்டாலும் இது சாத்தியமல்ல எங்கெல்ஸ் கூறியதுபோல், முன்னேறிவிட்ட நாடுகளுக்கு, வளர்ச்சிகுன்றிய நாடுகளின் நிலவல் சுயாட்சி உள்நாட்டு சுதந்திரம் மற்றும் சர்வதேசிய கருத்தோட்டத் தின் ஒரு பகுதியே ஆகும். இதை மனதில் கொண்டுதான் லெனினும், சோஷலிசப் புரட்சியைத் தொடர்ந்து பெரிய தேசம், சிறிய முன்னாள் ஒடுக்கப்பட்ட மக்களினங்களுக்கு

மெய்யாக இருந்த அசமத்துவத்தை மாற்றி ஈடுகட்ட வேண்டும் என்பதைப் புரிந்து கொள்ளாதவர்கள், தேசியப் பிரச்சினையில் மெய்யான பாட்டாளிவர்க்க தோரணையையும் புரிந்துகொள்ள மாட்டார்கள் என்று குறிப்பிட்டார்.* பின் தங்கிய மக்களினங்களைப் பொறுத்தவரையில், அவர்களது வளர்ச்சியில் சர்வதேச அம்சங்களை முக்கியமாக இருந்த போதிலும் புரட்சி நிகழ்ந்த உடனேயே பொதுவான லட்சி யத்திற்கு வேண்டி இதர மக்களைப்போல் சமமான அளவுக்கு தமது பங்கைத் தாங்களும் செலுத்து வேண்டும் என்று அவசரப்படக்கூடாது;இது நடைமுறையில் சாத்தியமுமல்ல. முதலில் அவர்களுடைய பின்தங்கிய நிலையை அறவே அகற்ற வேண்டும். பின்னர் இதர மக்களோடு கூட்டாகச் சேர்ந்து நிர்மாணச் செயல்களுக்கான அடித்தளத்தைப் போட வேண்டும். இங்குதான் மார்க்ஸ், எங்கெல்ஸ், லெனின் ஆகியோரின் ஆராய்ச்சியுரைகள் உண்மையாக இருப்பதைக் காண்கிறோம். அதாவது சோஷலிசத்தின் கீழ் சர்வதேசிய வாதியாக இருக்கவேண்டுமானல் அவர்கள் முதலில் தேசிய வாதியாக இருக்கவேண்டும்; உண்மையான தேசிய வாதி யாக வேண்டுமானல் அவர்கள் சர்வதேசிய வாதியாகவும் இருக்கவேண்டும்.

சமமானவர்களிடையேதான் சர்வதேச ஒத்துழைப்பு இருக்க முடியும் என்ற மார்க்சியக் கருத்தின் பொருள் என்னவெனில், மெய்யான சமத்துவமற்ற நிலை நீக்கப்பட்டு, அரசியல், பொருளாதார, கலாசாரத் தரம் இதர மக்களுக்குச் சமமாக உயர்த்தப்படும் போதுதான் சர்வதேச ஒத்துழைப்பின் உச்சபட்ச பலன்களையும் பெறமுடியும் என்பதேயாகும். இது பல்தேசிய இனங்களைக்கொண்ட நாடுகளுக்கும் பொருந்தும் உலக சோஷலிச அமைப்பிலுள்ள நாடுகளுக்கிடையே நிலவிவரும் உறவுகளுக்கும் இந்த விதி பொருந்தும்.

---

* காண்க வி. இ. லெனின், "நூல் திரட்டு", தொகுதி 36, பக். 608.

சோவியத் யூனியனில் உள்ள முன்னல் பின்தங்கிய மக்களிடையே நிலவிய மெய்யான அசமத்துவம் முற்றிலும் நீக்கப்படும் வரை, அவர்களுடைய சர்வதேச ஒத்துழைப்பு நட்புறவு மற்றும் சங்கமிப்பு புதிய வரலாற்றுச் சிறப்புமிக்க, சர்வதேசிய சமுதாயத்தை, பல்தேசிய இனங்களைக் கொண்ட சோவியத் மக்கள் தோற்றமளிப்பதை உறுதி செய்யவில்லை. உலக சோஷலிச அமைப்பில் ஒரு புதிய சர்வ தேசிய சமுதாயம் உருவாகத் தொடங்கியது. அந்தச் சமுதாயத்தின் தனிச்சிறப்புள்ள அம்சங்களில், சோவியத் மக்களின் உதாரணத்தில் இருந்து நிர்ணயம் செய்யும் பட்சத்தில்—அவை முதலாவதாக எல்லா தேசங்களுக்கும் பொதுவாக இருக்கும் தன்மைகளை திடமாக தோற்றுவித்து வளர்த்தல்; இரண்டவதாக முதிர்ந்த கம்யூனிச சமுதாயம் ஏற்படும் கட்டம்வரை சுதந்திரமான தேசீய சமுதாயங்கள் நீடித்து நிலவுதல்; மூன்ருவதாக சர்வதேசிய சமுதாயங் களிலும் மண்டலத்தன்மைகள் தவிர்க்கமுடியாத வகையில் இருத்தல்.

தேசியப் பிரச்சினைக்கு வெற்றிகரமான தீர்வு, சோவியத் மக்கள் வரலாற்றுச் சிறப்புமிக்க புதிய சமுதாய அமைப்பாக உருப்பெறுதல் இவை சோவியத் ஒன்றியத்தில் சோஷலிசத் தின் வளர்ச்சிக்கும் வெற்றிக்கும் உச்சபட்ச முக்கியத்துவ முடையவை. வளர்ச்சியடைந்த சோஷலிசம் கம்யூனிசமாக அபிவிருத்தி பெறுவது தேசிய உறவுகள், தேசங்கள் ஆகிய வற்றின் வளர்ச்சியில் ஒரு புதிய கட்டமாகும். இந்த கட்டத்தில் சோவியத் கம்யூனிஸ்டு கட்சியின் திட்டத்தில் கூறப்படுவது ஒப்ப ''முழு ஒற்றுமையை அடைவது வரை தேசங்கள் மேலும் மேலும் நெருங்கி வரும்.''*

சோவியத் ஒன்றியத்தில் பல்வேறு தேசங்களும் தேசிய இனங்களும் உறுதியுடன் நெருங்கி வருவதும் அவற்றின் மேலதிகமான ஒற்றுமையும் ஒட்டிணைவும் லெனினுடைய தேசியக் கொள்கையை நடைமுறைப் படுத்துவதிலும்,

---

* கம்யூனிசத்துக்கான பாதை, மாஸ்கோ, 1962, பக். 559.

கம்யூனிசத்தைக் கட்டுவதிலும் கட்சி பெற்றுவரும் புதிய வெற்றியை உறுதி செய்கின்றன. அது மேலும் மனித இன வளர்ச்சியில் சோவியத் ஒன்றியத்தின் புரட்சிகரமான செல்வாக்கை ஏற்படுத்தும் மிக முக்கியமான மூலாதாரமாயும் திகழ்கிறது. "சோவியத் ஒன்றியம் இன்று கம்யூனிசத்தை நிர்மாணிக்கும் நாடாகவும் மக்களினங்களின் நட்புணர்வின் கோட்டையாகவும் சர்வதேச புரட்சிகர விடுதலை இயக்கங்களின் காப்புக் கொத்தளமாகவும் உலகம் முழுவதிலும் மதிக்கப்படுகிறது."*

* சோவியத் சோஷலிஸ்டு குடியரசுகளின் ஒன்றியத்தின் உருவாக்கத்தின் 50 ஆம் ஆண்டு விழாவுக்கான தயாரிப்புகள், சோ.க.க.ம.க. தீர்மானம், பக். 22-23.

அத்தியாயம் நான்கு

சோஷலிசத்தின் கீழ் தேசங்களும் தேசிய இனங்களும்

முதலாளித்துவ தேசங்களை சோஷலிச தேசங்களாக மாற்றுவதற்கு அடிப்படை அரசியல் முன்னேற்பாடுகள் பாட்டாளி வர்க்கப் புரட்சியும், பாட்டாளி வர்க்க சர்வாதிகாரமுமேயாகும். மாபெரும் அக்டோபர் சோஷலிசப் புரட்சிதான் ருஷ்யாவிலுள்ள தேசங்கள் தேசிய இனங்கள் ஆகியவற்றின் வேகமான அரசியல், பொருளாதார, கலாசார மேம்பாட்டிற்கும், அவை சோஷலிச நாடுகளாக வளர்வதற்கும் வழி வகுத்தது. அவற்றில் சில தேசங்கள் முதலாளித்துவ கட்டத்தைத் தாண்டிக் கடந்துவிட்டன.

சோஷலிச தேசங்கள், ஏற்கெனவே அமைந்திருக்கும் தேசங்கள் தேசிய இனங்கள் ஆகியவற்றின் அஸ்திவாரத்தில் தான் "தோன்றி" வளர்கின்றன. அப்படி வளரும்போது பல நூற்றாண்டுகளாகத் திரட்டிக் குவிக்கப்பட்டிருக்கும் முற்போக்கு அம்சங்களைத் தக்கவைத்துக் கொள்கின்றன, பிற்போக்கு காலாவதியான கருத்துக்களைப் புறக்கணிக் கின்றன. ஏற்கெனவே தேசங்களாக உருவாகாத பெரிய இனப் பிரிவுகள்கூட சோஷலிச தேசங்களாக மாற்றப் பட்டுள்ளன.

சோஷலிசம் கட்டப்படும்போது தேசங்கள், தேசிய இனங்கள் ஆகியவற்றின் அரசியல், சமூக-பொருளாதார நிலைமைகள் கலாசார அம்சங்களில் தீவிரமான மாற்றங்கள் ஏற்படுகின்றன. இந்த மாற்றங்கள் வளர்ச்சியடையும்

போது புதிய புறவிதிகளும், ஒழுங்கு முறைகளும் நடைமுறைக்கு வருகின்றன. தேசங்களும் தேசிய இனங்களும் செழுமையடைந்து நெருங்கி வருகின்றன (இவை ஒன்றுக்கொன்று தொடர்புள்ள முற்போக்கு போக்குகளாகும்); முற்போக்கு சமூக சுமுக உள்ளியையின் அடிப்படையில் சோஷலிச தேசிய, சர்வதேசிய ஒற்றுமையை அடைகின்றன. எல்லா தேசங்களும் கம்யூனிசத்தை நிர்மாணம் செய்யும் நடப்பில் நெருக்கமாக ஈர்க்கப்படுகின்றன; மக்களுக்கு முழுமையான அரசியல் சமத்துவம் செயல்படுத்தப்படுகிறது. சோஷலிச சர்வதேசியம் மெய்ப்பற்றுடன் கடைப்பிடிக்கப் படுகிறது. தேசங்களுடையவும் தேசிய இனங்களுடையவும் தேசிய சர்வதேசிய கடமைகள் சீராக ஒழுங்கமைக்கப் படுகின்றன; ஒத்துழைப்பும் பரஸ்பர உதவியும் தொடர்ந்து விரிவுபடுத்தப்படுகின்றன; பொருளாதார கலாசாரத் தரங்கள் சம சீராக்கப்படுகின்றன.

தேசங்களின் சோஷலிச வளர்ச்சியில் தீர்மானகரமான அம்சங்கள்

சோவியத் சமுதாயத்தில் வர்க்க கட்டமைப்பில் ஏற்பட்ட தீவிர மாற்றங்களும், அதைத் தொடர்ந்து ஏற்பட்ட நேச வர்க்க வெற்றியும், தேசிய உறவுகளும், ஓர் உண்மையை எடுத்துக் காட்டுகின்றன. அதாவது பல்வேறு வர்க்கங்களும், சமூக அணிகளும் சோஷலிச மாற்றமடைவதற்கும், தேசங்கள், தேசிய இனங்கள் சோஷலிச மாற்றமடைவதற்கும் இடையே உள்ளார்ந்து கிடக்கும் இணைப்பும் ஒற்றுமையும் வெளிப்படுகிறது. லெனின் கூறியதுபோல் இது ஒரு இரட்டை நடப்பாகும்: சுரண்டல் அமைப்பு முறையை தனியார் தொழில் பாணியை தகர்ப்பது ஒரு பக்கம். மறு பக்கத்தில் சோவியத் நாடு முழுமைக்கும் புதிய சமூக-பொருளாதார அரசியல் சித்தாந்த அடிப்படையால் மாற்றீடு செய்த மக்களுடைய சர்வதேசிய ஒற்றுமையை உருவாக்குதலுமாகும்.

சொத்துடைமை உறவுகள் (உற்பத்தி சாதனங்களின் உடைமை) சமுதாயத்தில் பொருளாதார உறவுகளின் ஒற்றுமையையும், உறுதியையும் நெறியாக்கம் செய்வதால், அவற்றின் உள்ளடக்கமும் தன்மையும் சமூக பொருளாதார அமைப்பை மட்டும் அன்றி அதோடு மக்களிடையே தேசங்களிடையே, வர்க்கங்களிடையேயான உறவுகளின் தன்மையையுங்கூடத் தீர்மானிக்கின்றன என்பது தெளிவாகிறது.

சோஷலிசப் புரட்சியில் தனிச்சொத்துரிமை ஒழிக்கப்பட்டு அது பொதுச் சொத்துடைமையால் மாற்றீடு செய்யப்படுதலும், சோஷலிச உற்பத்தி உறவுகள் நிறுவப்படுதலும், சோஷலிசப் பொருளாதார வளர்ச்சியும், தேசங்களும் தேசிய இனங்களும் சுதந்திரமாக வளர்ச்சிபெற்று படிப்படியாகவும் உறுதியாகவும் சங்கமிப்பதற்கான ஒரு **பொருளாதார அடித்தளத்தை** அமைத்துக் கொடுக்கின்றன.

எனவேதான், வரலாற்று ரீதியாக நெறியாண்மை பெற்றுவிட்ட இரு நேரெதிரான சொத்துடைமை வடிவங்கள்— முதலாளித்துவ தனி உடைமை, சோஷலிசப் பொது உடைமை—இருவேறு குணும்சம்கொண்ட தேசங்கள் தேசிய உறவுகளைத் தீர்மானிக்கின்றன. மக்களிடையே, வர்க்கங்களிடையே, தேசங்களிடையே ஆதிக்கமும், ஒடுக்குமுறையும் தாண்டவம் செய்யும் முதலாளித்துவ உறவுகள் அகன்று சமத்துவம், நட்புறவு, ஒத்துழைப்பு சோதரப் பரஸ்பர உதவி ஆகியவை கொண்ட புதிய உறவுகள் இடம் பெறுகின்றன.

தேசங்கள், தேசிய உறவுகள் ஆகியவற்றின் சோஷலிச வளர்ச்சிக்கு லெனின் வகுத்துக் கொடுத்த திட்டம் முந்திய ருஷ்ய சாம்ராஜ்யத்தில் மக்களினங்களிடையிருந்த ஏற்றத் தாழ்வுகளை மிகக்குறுகிய காலத்தில் அகற்றுவதைக் குறிக்கோளாக முன்வைத்தது. அன்றைய முதலாளித்துவ, நிலப்பிரபுத்துவ அமைப்பு, ருஷ்யாவின் தேசங்களையும் தேசிய இனங்களையும் பொருளாதார கலாசார வளர்ச்சியில் மிகவும் தாழ்வுற்ற மட்டத்தில்தான் வைத்திருந்தன.

மேலும் இந்த வளர்ச்சியின் தரங்கள் வெவ்வேறு விதமாக இருந்தன. அவற்றைப் பொதுவான சகல-துறை வளர்ச்சி அடிப்படையில் சமனப்படுத்த வேண்டியிருந்தது. அதோடு மிகவும் பின்தங்கிய தேசிய இனங்கள் மேலும் அதிக வேகத்தில் வளர வேண்டியிருந்தது. புதிய அரசியல் அமைப்பிற்கு ஏற்ப பொருளாதாரத்தைக்கட்டி வளர்ப்பதில் இது மிகவும் அவசியமாக இருந்தது. அதாவது கம்யூனிஸ்டு கட்சியும், சோவியத் அரசாங்கமும் அனைத்து தேசங்கள் தேசிய இனங்கள் ஆகியவற்றின் சோஷலிஸ்டு பொருளாதார வளர்ச்சிக்கு உறுதியளித்து அவற்றின் பொருளாதார ஏற்றத் தாழ்வை அகற்ற வேண்டி இருந்தது.

முந்திய ஜாராட்சி ருஷ்யாவில் 25 மில்லியன் மக்கள் ஆடுமாடு மேய்க்கும் நாடோடிகளாகவும் அல்லது பழங் கால குலமரபினராகவும் இருந்தனர். இதிலிருந்து நிறை வேற்ற வேண்டிய பணியின் பிரமாண்டமான சிக்கல் நமக்குப் புரிகிறது. நீ நெட்ஸ், காண்டி, மான்சி, சுக்சி, மற்றுமுள்ள வடபகுதி மக்களினங்கள் பழங்குடி குழுக்களாகவும், அடிமைகளாகவும் வாழ்ந்தார்கள்; நிலப்பிரபுத்துவ கட்டத் தைக்கூட அவர்கள் அடையவில்லை. காக்கசசின் வடபாதி யிலும், தாஜிக், கிர்கிஷ், காரா-கல்பாக் மற்றுமுள்ள பகுதிகளில் வாழ்ந்த மக்களிடையே நிலப்பிரபுத்துவ உறவுகள் நிலவியிருந்தன. முதலாளித்துவ கட்டத்தைத் தாண்டிக் கடப்பது ஒருபுறமிருக்க, அதை இன்னும் எட்டிப் பிடிக்காதுகூட இருந்த இவர்களும் சோஷலிசத் திற்கு மாறிச்செல்லவேண்டுவதை உறுதிசெய்ய வேண்டுவது வெற்றிகர ருஷ்யப் பாட்டாளிகளின் கடமையாக இருந்தது.

புரட்சியின் தொடக்கத்திலிருந்தே, கம்யூனிஸ்டு கட்சியும், சோவியத் அரசாங்கமும் அனைத்து தேசங்கள், தேசிய இனங்களின் சோஷலிசப் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்யத் தீவிரமான நடவடிக்கைகள் எடுத்து வந்தன. அதிக வளர்ச்சிபெற்ற மக்களினங்கள் குறிப்பாக ருஷ்ய மக்கள் பொருளாதாரத்திலும் கலாசாரத்திலும்

பின்தங்கிய தேசங்களுக்கும் தேசிய இனங்களுக்கும் மிகப் பெரிய உதவியை அளித்தனர்.

முதலாவதாக சுற்றிலுமுள்ள பகுதிகளிலெல்லாம் தொழில் மையங்களைத் தொடங்குவது மிகவும் அவசியமானது. கம்யூனிஸ்டு கட்சியின் 10-வது காங்கிரஸ் அதன் தீர்மானங்களில் இதைத்தான் வலியுறுத்தியது. சமூக பொருளாதாரத் துறைகளில் நிலவிய தேசிய அசமத்துவத்தின் எச்சமிச்சங்களை வெற்றிகரமாக அகற்ற வேண்டியது மிக முக்கியமான கடமை என்றும், இதில் முதலாவதாயும் முக்கியமாயும் சுற்றுப்புறப்பகுதிகளில் திட்டமிட்ட தொழில் துறை வளர்ச்சிக்கு உறுதியளிக்க வேண்டும் என்றும், கிடைக்கும் கச்சாப் பொருட்களுக்கேற்றாற்போல் தொழிற்கூடங்களின் இடத்தை மாற்றியமைக்க வேண்டுமென்றும் வலியுறுத்தியது.''* அதேபோல் முன்னாள் ஒடுக்கப்பட்ட மக்கள் திருப்பிச் செலுத்தும் தேவையற்ற உதவியை மிகப் பெரிய அளவில் பெற்றார்கள். பொருளாதாரம் வளர வளர சோவியத் தேசங்களுக்கும், தேசிய இனங்களுக்குமிடையே பரஸ்பர உதவியும் அதே விகிதத்தில் அதிகரித்தது. சோஷலிச சுற்றுச் சூழலில் மக்களுக்கிடையேயான நட்புறவும், அவர்களின் சகலதுறை ஒத்துழைப்பும் வளர்ச்சியின் நியதியாகவும், சமுதாயத்தின் உந்து சக்தியாகவும் முன்னேற்றத்தின் ஆதாரமாகவும் அமைந்து விட்டன. முன்னேறியதும் பின்தங்கியதுமான தேசங்களும், தேசிய இனங்களும் வேகமாக வளர்வதற்கும், மலர்வதற்கும் பின்தங்கிய தேசங்கள் அதி உயர் வேகத்தில் வளர்வதற்கும் சோஷலிசம் சரியான சூழ்நிலைகளை ஏற்படுத்திக் கொடுக்கிறது. இல்லாவிடில் வேறுபட்ட மட்டங்களை என்றுமே சமனப்படுத்த முடியாது.

முன்னாள் பின்தங்கிய சுற்றுப்புறப் பகுதிகள் மட்டுமல்லாது, ருஷ்யா, உக்ரேன் மற்றும் தொழில்

---

* **சோ.க.க. காங்கிரசுகள், மாநாடுகள், ம. க. பிளீனம் கூட்டங்களின் தீர்மானங்கள்**, தொகுதி 2, மாஸ்கோ 1970, பக். 253. (ருஷ்ய மொழியில்)

'வளர்ச்சி பெற்றுள்ள பகுதிகளும் அடையாளம் தெரியாத அளவிற்கு மாறியுள்ளன. புதிய நகரங்களும், தொழில் மையங்களும் தேசியக் குடியரசுகளிலும், பிரதேசங் களிலும், பகுதிகளிலும் வேகமாக வளர்ந்தன. தேசிய அளவில் திறன்மிக்க ஊழியர் அணி உருவாக்கப்பட்டு பயிற்சியளிக்கப்பட்டது. விவசாயம் கூட்டுடைமையாக்கப் பட்டது, சோஷலிச அடிப்படையில் பொருளாதார வளர்ச்சிக்கு உறுதியளித்தது. வட்டார தேசிய குறுமனப் போக்குக்குத் தனிக் காரணமாக அமைந்த பொருளாதார பின்னடைவும், சிதறலான பண்ணை முறையும் விரைவில் வென்று அகற்றப்பட்டன. சுரண்டும் வர்க்கங்களை ஒழித்தல் தனியொரு சோஷலிச வடிவப் பொருளாதாரத்தை நிறுவுதல் ஆகியவை முன்னுள் தேசியப் பகைமைக்கான அடிப்படையை அறவே அகற்றிவிட்டன.

பின்தங்கிய மக்களின் சமூக பொருளாதார நிலைமைகள் படிப்படியே தீவிரமாக மாறுதல் அடைந்ததும் சோஷலிசப் பொருளாதார அமைப்பின் வெற்றியும் ஒன்று சேர்ந்து தேசங்களுக்கிடையேயும், தேசிய இனங்களுக்கிடையேயும் புதுமாதிரி உறவுகளை உருவாக்கின. உற்பத்தி சாதனங் களைப் பொருத்த அளவில் சமத்துவத்தை உறுதி செய்த பொதுவுடைமை உரிமை உழைக்கும் மக்களை எல்லாவிதமான சார்பு நிலையில் இருந்தும், தேசிய ஒடுக்குமுறையிலிருந்தும் விடுவித்து அவர்களது அரசியல் பொருளாதார நலன்கள் விஷயத்தில் ஒரு சமுதாயப் பொதுமையை ஏற்படுத்தியது.

சோஷலிச உடைமை பரவியது, பிரத்தியேகமான சோஷலிச வளர்ச்சி விதிமுறைகளை இயக்குவித்தது; தேசங்களின் பொருளாதார, கலாசார, சமூக- அரசியல் தரங்கள் சீரடையத் தொடங்கின. எல்லா தேசங் களுடையவும், தேசிய இனங்களின் தரங்களும் சமனப்பட்டுச் சீரடைய வேண்டுமானால், பொருளாதாரத்தைப் பொறுத்த வரை எல்லாத் துறைகளிலும் சோஷலிச உற்பத்தி உறவுகள் மேலோங்கி நிற்கவேண்டும்; மேலும் உழைப்பாளர்களின்

உற்பத்தித் திறனும், வாழ்க்கை தரங்களும் ஏகதேசம் சமநிலையில் அமைய வேண்டும்.

பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம், சோஷலிச ஜன நாயகம் ஆகியவைதான் தேசங்களின் சோஷலிச வளர்ச்சிக்கும், புதிய தேசிய உறவுகளுக்கும், மக்களினங்கள் சேர்ந்து இணைவதற்கும், நட்புறவுக்கும் அரசியல் அடிப் படையாக அமையும் என்று லெனின் எடுத்துக் காட்டியுள்ளார்.

அவர் தேசிய அரசுத்துவ பிரச்சினைக்கு மிக அதிக முக்கியத்துவம் கொடுத்தார்; சோவியத் சூழ்நிலைமைகளில், முன்னுள் ருஷ்யப் பேரரசு போன்ற பல்தேசிய இனங்களைக் கொண்ட ஒரு நாடு சோஷலிச அடிப்படையில்தான், தேசிய அரசுத்துவமும் ஒன்றிய அரசு அமைப்பும் கொண்டவர்களான சமத்துவமான மக்களினங்களின் ஒரு சுதந்திர ஒன்றியமாக வளர முடியும் என்று லெனின் கருதினுர். தேசங்களும் தேசிய உறவுகளின் வளர்ச்சி பற்றிய லெனினது தத்துவத்தின் உதவி கொண்டு அக்டோபர் புரட்சி வெற்றிபெற்ற உடனே, காலதாமத மின்றி, போல்ஷிவிக் கட்சியானது தேசங்களின் சுயநிர்ணய உரிமை அடிப்படையில் தேசிய அரசுகள் நிர்மாணத்தை சமாளித்தது. அக்டோபர் புரட்சி தேசிய ஒடுக்கு முறைக்கு முற்றுப்புள்ளி வைத்தது; சுயநிர்ணய உரிமையைப் பிரகடனம் செய்து அதன் அமலாக்கத்தை உத்தரவாதம் செய்தது. இந்த உரிமை அரசியல் சட்டத்திலும் பொது நியதியாக இடம் பெற்றது. மேலும் சோவியத் அரசின் வெளி நாட்டுக் கொள்கையிலும் இது ஒரு முக்கிய கோட்பாடாகியது.

லெனினுடைய தேசியக் கொள்கைக்கு ஏற்பட்ட கவர்ச்சி சக்தியை மட்டுப்படுத்த முதலாளித்துவ சித்தாந்த வாதிகள், கம்யூனிஸ்டுகள் சுயநிர்ணய உரிமையை பாட்டாளி வர்க்கத்தினருக்கு மட்டுமேயன்றி எல்லோருக்குமான உரிமையாகப் கருதவில்லை எனப் பிரச்சாரம் செய்தனர்.

உண்மையில் இந்தப் படுமோசமான பொய்ப் பிரச்சாரம் இன்றும் நிலவுகிறது. 1966-ல் இவியானேயில் நடைபெற்ற 6-வது உலக சமூகவியலாளர்களின் மாநாட்டில் கூட அமெரிக்க சமூகவியலாளர் வி. டாட்ரியன் ஒரு தவறான குற்றச்சாட்டை முன்வைத்தார். அதாவது "லெனின் சுய நிர்ணய உரிமை தொழிலாளி வர்க்கத்துக்கு மட்டுமே பொருந்தும்'' என்று கருதியதாக அவர் கூறினார். இது உண்மையல்ல. சோஷலிசப் புரட்சிக்கு முன்பே, சுயநிர்ணய உரிமை, தேசங்கள் தேசிய இனங்களின் அரசுத்துவம் ஆகியவை பற்றி மிகத் தெளிவாகவும், துல்லியமாகவும் குறிப்பிட்ட லெனின், "இடதுசாரிகளின்'' கருத்துக் களையும் கண்டன விமர்சனம் செய்துள்ளார். சுயநிர்ணய உரிமை தொழிலாளி வர்க்கத்தினருக்கு மட்டுமே என்று குறுக்கிய அவர்களுடைய வாதத்தையும் சோஷலிச ருஷ்யாவில் தேசிய எல்லைகள் தேவையில்லை என்ற அவர் களது கருத்தையும் லெனின் கடுமையாக விமர்சனம் செய்தார்.

சோஷலிசப் புரட்சியைத் தொடர்ந்து, கட்சி சுயநிர்ணய உரிமைக்காக வாதிட்டது. முதலாளித்துவ காலகட்டத்திலிருந்து மரபாகப் பெற்ற அவநம்பிக்கை மற்றும் அன்னியப்படுத்தப்பட்டிருந்த நிலைமை இவற்றை ஒழிப்பதற்கான உறுதியான வழி சுயநிர்ணய உரிமையே என்று எடுத்துக் கூறியது. அதோடு முதலாளிகள் சுயநிர்ணய உரிமையை புரட்சிக்கு எதிராகவும் தங்களுடைய வர்க்க நலனுக்குச் சாதகமாகவும் பயன்படுத்துவதற்கு வகுத்த சூழ்ச்சித் திட்டங்களையும் அம்பலப்படுத்தியது. போல்ஷி விக்குகள் எதிர்பார்த்ததுபோல் சுய நிர்ணய உரிமை என்பது சோஷலிசம், ஜனநாயகம், சமாதானம் என்ற அடிப்படையில் பல தேசங்களும் தேசிய இனங்களும் வளர்ந்து சங்கமிப்பதற்கும், உதவியாக அமையும். கட்சி அந்த சுய நிர்ணய உரிமைக்காக போரிட்டது. பாட்டாளி வர்க்க நலனுக்காகவும், உழைக்கும் மக்களின் நலனுக்கா

கவும் அந்த உரிமை மீதான மக்களின் ஆர்வம் அமைந்திடும் வண்ணம் பார்த்துக்கொள்ள கட்சி பாடுபட்டது.

சமத்துவம், அரசுரிமை, தேசங்களின் சுயநிர்ணய உரிமை தேசிய, தேசிய-சமய கட்டுப்பாடுகள், சலுகைகள், ரத்துச் செய்யப்படுதல், தேசிய சிறுபான்மையினர், இனப் பிரிவுகளின் கட்டற்ற வளர்ச்சி ஆகியவைத் தொடர்பாக அக்டோபர் புரட்சியின்போது பிரகடனப்படுத்தப்பட்ட கோட்பாடுகளை அமல் செய்தல்—இவை, சுதந்திரமான சமத்துவமான தேசங்களும் தேசிய இனங்களும் சுயவிருப்ப மாக ஒன்றுபடுவதற்கான வழி வகைகளை ஏற்படுத்தின. 1917 ஏப்ரல் மாதத்தில் "**நமது புரட்சியில் பாட்டாளி வர்க்கத்தின் கடமைகள்**" என்ற தலைப்பில் வெளியிடபட்ட ஒரு பிரசுரத்தில் லெனின் பின்வருமாறு எழுதினார்: ருஷ்யக் குடியரசு எவ்வளவு அதிகம் ஜனநாயகத் தன்மை கொண்டதாக மாறுகிறதோ, எந்த அளவுக்கு அது தொழிலாளர், விவசாயிகள் பிரதிநிதிகளின் சோவியத்துகளின் குடியரசாக வெற்றிகரமாக தன்னை அமைத்துக்கொள்கிறதோ அந்தளவு அதிகமாக எல்லா தேசத்து தொழிலாளர்களுக்கும் அத்தகைய குடியரசின் தன்னியல்பான கவர்ச்சி சக்தி மிக மிக வன்மையுடையதாக இருக்கும்"* என எழுதினார். இது முற்றிலும் உண்மை என்ற நடப்புக்கள் எடுத்துக் காட்டு கின்றன.

சோஷலிச நிர்மாணத்தில் கிட்டிய அனுபவம் பாட்டாளி வர்க்க சர்வதேசியம் என்ற அடிப்படையில், தேசிய அரசுத் துவத்தைவலுப்படுத்தலுக்கான சூழ்நிலைமைகளைசோஷலிசம் மட்டுமே உருவாக்குகிறது மற்றும் தேசங்களையும் தேசிய இனங்களையும் பிரிப்பதற்குப் பதிலாக ஒன்று சேர்க்கிறது.

சோஷலிசத்தைக் கட்டவேண்டும் என்ற பொதுவான நோக்கம், புறக்காரணிகளோடு சேர்ந்து, சோவியத் ஆட்சி அதிகாரத்தை நிர்மாணித்த மக்களோடு மிக நெருங்கிய ஒற்றுமையை இன்றியமையாததாக்கி விட்டது. லெனின்

* வி. இ. லெனின், "நூல்திரட்டு", தொகுதி 24, பக். 73.

திட்டப்படியான கூட்டாட்சி வடிவிலான அரசு அமைப்பு, முந்திய ஜாராட்சி ருஷ்யாவில் இருந்த பல்வேறு தேசங்களையும் தேசிய இனங்களையும் ஒரே ஆட்சியின் கீழ் கொண்டு வந்து இந்த நெருக்கமான ஒற்றுமையை உறுதி செய்தது. சோவியத் சோஷலிசக் குடியரசுகளின் ஒன்றியம் தேசிய அரசுரிமையும் சர்வதேச ஒற்றுமையும் உண்மையிலேயே இசைவான கலந்திணைவு பெற வழிவகுத்ததை அனுபவம் எடுத்துக்காட்டுகிறது. சோவியத் ஒன்றியத்தை நிறுவிய தேசங்கள் சம உரிமைகளைப் பெற்றன. சுயநிர்ணய உரிமை மூலமாகவும் தமது தேசிய அரசுத்துவத்தை வளர்த்துக் கொண்டும் அந்த தேசங்கள் தனித்தனி அரசுகளாகப் பிரிந்து போகாமல், ஒருங்கிணைந்த பகுதியாக ஒன்றியக் குடியரசுகளாக இருந்து வந்தன. சோவியத் குடியரசாக இணைப்பாக்கம் பெற்றதால் அவற்றின் அரசுரிமை மீறப்படும் அபாயம் தவிர்க்கப்பட்டதோடு அவை ஏகாதிபத்திய தாக்குதல்களிலிருந்தும் பாதுகாக்கப்பட்டு மேலும் பத்திரமாக இருக்க முடிந்தது. முழுமையான ஒன்றியத்தின் வலிமை அவற்றின் வலிமையாகவும் பாதுகாப்பாகவும் அமைந்தது.

"உலகில் இதுவரை நிலவிய அமைப்புகளிலெல்லாம், சோவியத் ஒன்றியம்தான் உண்மையில் மிகவும் சிறந்த இணைப்பாக்கம் பெற்றதான மையப்படுத்தப்பட்ட தேசிய அரசாகும்" எனக்கண்டு முதலாளித்துவ சித்தாந்த வாதிகள் இயல்பாகவே எரிச்சலடைந்துள்ளனர். அவர்களுக்கு சோவியத் தேசங்களெல்லாம் ஒன்றுக இணைந்து நெருக்கமாக சேர்ந்து நிற்பதுசர்வதேசியத்திற்கு கிடைத்த வெற்றியாகத் தெரியவில்லை. மாருக அது "ஒருபுதியவிதமான இணைப்பாக்க தேசியவாதமாகவே"* தென்பட்டது. அவர்கள் பொய்மையான வெற்றுப் பிரகடனம் செய்யப்பட்ட சர்வதேசியம் என்ருல் திருப்தியடைந்திருப்பார்கள். ஏனெனில் அப்படிப்பட்ட அமைப்பில் ஒவ்வொரு குடியரசும் வரிசையாக ஏகபோக மூலதனத்துக்கு எளிதில்

* அதே நூல்.

இரையாகியிருக்கும் வாய்ப்பு உண்டு. ஆனால் சோவியத் தேசங்கள் அம்மாதிரியான அழிவுப்பாதையைத் தேர்ந்தெடுக்கவில்லை. மாறாக ஜனநாயக மத்தியத்துவம் என்ற அடிப்படையில் சோவியத் சோஷலிசக் குடியரசுகளின் ஒன்றியத்தை வலுப்படுத்தின.

ஒன்றிய குடியரசுகளின் எல்லைகள், சுயாட்சிக் குடியரசுகளின் எல்லைகள், சுயாட்சிப் பகுதிகள், மற்றுமுள்ள தேசியப் பிரதேசங்களின் எல்லைகள்யாவும் பொருளாதாரக் காரணிகள், வாழ்க்கை முறை, மக்கள் தொகையின் தேசிய ஒழுங்கமைப்பு ஆகியவற்றிற்கு ஏற்றாற்போல் வரையறுக்கப் பட்டன. சிறியது பெரியது என்ற பாகுபாடின்றி அனைத்து மக்களினங்களின் தேசிய அரசுரிமையும் சோவியத்சோஷலிசக் குடியரசுகளின் ஒன்றியம் மற்றும் தனித்தனி ஒன்றியக் குடியரசுகளின் அரசியல் சட்ட அமைப்பாலும் இதர சட்ட விதிகளாலும் பாதுகாக்கப்படுகிறது. சுதந்திரமான அரசு அமைப்பு இல்லாத மிகச்சிறிய எண்ணிக்கையில் பரவலாக இருக்கும் சிறுபான்மையினரின் தேசிய சமத்துவமும் பாதுகாக்கப்படுகிறது.

ஒன்றிய உறுப்பு தேசங்கள் மற்றும் ஒன்றியத்தின் சோஷலிஸ்டு அரசு அமைப்பு கலாசார வளர்ச்சிக்கு மிகவும் பிரம்மாண்டமாகப் பங்காற்றியுள்ளது. ஒரு தேசத்தின் வெற்றிகரமான சமூக பொருளாதார வளர்ச்சிக்கு தொழில் நுட்ப அறிவு கலாச்சாரத் துறைகளிலான உயர் வீச்சு அவசியமாகும். இவை தம் வகைக்கு வேகமான தொழில் வளர்ச்சியாலும், விஞ்ஞான தொழில் நுட்ப முன்னேற்றத்தாலும் ஊக்குவிக்கப்படுகின்றன.

தேசங்களை சோஷலிச அமைப்பாக மாற்றுவதைப் போல் அவற்றின் துரித வளர்ச்சியைப்போல் இதுவும் கம்யூனிச நிர்மாணத்தை ஆளுமை செய்யும் பொது விதிகளின் ஒரு பகுதியாகும்.

சோஷலிச சித்தாந்தத்தையும் சர்வதேசியக் கொள்கையையும் பேணி வளர்ப்பதற்கும், புதிய வாழ்க்கையின் தீவிர நிர்மாணிகளாக மக்களை மாற்றுவதற்கும்,

மக்கள் திரளினரின் கலாசாரத் தரத்தை உயர்த்த வேண்டுவது மிகவும் இன்றியமையாததாகும். சோஷலிசப் பொருளாதாரத்தை வேகமாக கட்டும் பணியுடன் பின்னிப் பிணைந்துள்ள மிகப் பரவலான கலாசார புரட்சியானது எழுத்தறிவின்மையை அறவே அகற்றி, தேசிய அறிவு ஜீவிகளை உருவாக்கியது. அனைத்து மக்களுக்கும் கலை, கலாசாரம் ஆகிய துறைகளில் எளிதில் பங்கேற்கும் விரிவான வாய்ப்பு ஏற்பட்டது. கலையும் இலக்கியமும் வளமுடன் பெருகின. சோஷலிச கலாசாரம் பல்வேறு தேசிய வடிவங்களில் வளரத் தொடங்கியது. சர்வதேசியத் தன்மைகளால் மேலும் மேலும் செழுமையடைந்ததான புதிய சோஷலிசத் தனிக்கூறுகள் தேசிய குணவியல்புகளில் தோன்றின. **தேசங்களும் தேசிய உறவுகளும் வளர்ச்சி அடைவதற்கு மார்க்சியமும், லெனினியமும் தத்துவார்த்த சித்தாந்த அடிப்படையாக அமைந்தன.**

அரசியல் சமத்துவம், அவற்றின் பொருளாதார கலாசார முன்னேற்றம் இவை சோவியத் தேசங்களையும் தேசிய இனங்களையும் முக்கியமாயும் புதிய சோஷலிச தேசங்களாக மாற்றிவிட்டன. முந்திய ருஷ்யப் பேரரசி லிருந்த கசாக்குகள், கிர்கிசியர், துருக்மேனியர், சுவாஷ்கள், யாகுத்தியர் மற்றும் பிறரும் டஜன் கணக்கிலுள்ள சிறு சிறு மக்களினங்களும் துவக்கத்திலேயே சோஷலிஸ்டு வளர்ச்சிவட்டத்தினுல் ஈர்க்கப்பட்டு, முதலாளித்துவ கட்டத் தைத் தாண்டிக் கடந்து ருஷ்யத் தொழிலாளி வர்க்கத்தின் உதவியுடன் சோஷலிஸ்டு தேசங்களாகவும், தேசிய இனங்களாகவும் மாற்றப்பட்டனர்.

இது, சோஷலிசத்தை நோக்கிய பாதையில் மக்கள் முதலாளித்துவத்தை தாண்டிக் கடந்து செல்ல முடியும் என்ற மார்க்சிய லெனினியத் தத்துவத்தின் முதலாவதும் மிக எடுப்பானதுமான நடைமுறை ஊர்ஜிதமாகும்.

முன்னுள் பூர்ஷுவா நிலப்பிரபுத்துவ ருஷ்யாவின் தேசங்களும், தேசிய இனங்களும் சோஷலிச தேசங்களா

கவும் தேசிய இனங்களாகவும் மாற்றப்பட்ட நடப்பு உலகளாவிய வரலாற்று முக்கியத்துவமுடைய நிகழ்ச்சியாகும். வரலாற்றிலேயே முதன் முறையாக, புதிய மாதிரியிலான முதலாளித்துவ சமூக அமைப்பிலுள்ள தேசங்கள் தேசிய இனங்கள் ஆகியவற்றிலிருந்து சாரத்தில் அறவே மாறுபட்ட தேசங்களும் தேசிய இனங்களும் தோன்றின.

2. சோஷலிச தேசங்களின் அம்சங்களும் அவற்றின் வளர்ச்சிப் போக்குகளும்

பகைமையான முரண்பாடுகள், அகற்றப்பட்ட பின்னர், சோவியத் ஒன்றியத்திலுள்ள தேசங்கள் சமூக ரீதியிலான சமூக உள்ளியைபை பெறத் தொடங்கின. தேசிய குணும்சத்திலும், கலாசாரத்திலும் இருந்த வர்க்க இரட்டை தன்மை மறைந்துவிட்டது. சோஷலிச தேசங்களின் தலைமை சக்தியான மார்க்சிய லெனினியக் கட்சிகள், பாட்டாளி வர்க்க சோஷலிச சர்வதேசிய உணர்வை மேம்படச் செய்தன. சோஷலிசத் தேசங்களுக்கிடையேயுள்ள உறவுகள் புதிய மாதிரியான சர்வதேசிய உறவுகளாக மாற்றமடைந்தன.

தேசங்கள், தேசிய உறவுகள் ஆகியவற்றின் சாரத்தில் ஏற்பட்ட, ஏற்பட்டுக் கொண்டிருக்கின்ற ஆழமான மாற்றங்களை சோவியத் சோஷலிசக் குடியரசுகளின் ஒன்றியத்தின் 50-வது ஆண்டு நிறைவு விழாவிற்கான தயாரிப்பின்போது நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில் சோவியத் கம்யூனிஸ்டு கட்சியின் மத்தியக் கமிட்டியால் பரிசீலிக்கப்பட்டன.

சோவியத் யூனியனில் மிக வளர்ச்சியடைந்த சோஷலிச சமுதாயத்தைக் கட்டியதன் மூலமாக சோவியத் மக்களின் வீரஞ்செறிந்த முயற்சிகள் மிக தகுந்த முறையில் உச்சிமேல் வைத்த மெச்சுதலைப்பெறுகின்றன"இந்த சமுதாயத்தினுள்ளே.

"அகில ஒன்றியத்தின் பொருளாதாரம்—ஒவ்வொரு குடியரசின் நலன்கள், நாடு முழுவதன் நலன்கள் ஆகிய

வற்றை கருத்தில் கொண்ட குடியரசுகளின் பொருளாதாரங்களை இணைத்த பரஸ்பர உறவு கொண்டுள்ள தேசியப் பொருளாதாரம் முழுமையும் தனியொரு அரசுத் திட்டப் படி நல்ல முறையில் உயர்ந்த அளவிற்கு வளர்ச்சி பெற்றுள்ளது;

''தேசிய முரண்பாடுகளும் வர்க்க முரண்பாடுகளும் அகற்றப்பட்டுள்ளன. ஒவ்வொரு தேசமும், தனித்தனி தேசிய இனமும் ஆக சமுதாயம் முழுமையும் தொழிலாளி வர்க்கம், கூட்டுப்பண்ணை விவசாயிகள் மற்றும் உழைக்கும் அறிவுஜீவிகள் ஆகியோரை உள்ளடக்கிய சீரான சமூக அமைப்பைக் கொண்டுள்ளது.''

''ஜனநாயக மத்தியத்துவத்தையும், சோஷலிசக் கூட்டாச்சி முறையையும் அடிப்படைக் கோட்பாடுகளாகக் கொண்ட குடியரசுகளின் தேசிய அரசுத்துவம், ஒன்றியத்தின் அரசுத்துவம் ஆகியவற்றின் தகர்க்க முடியாத ஒற்றுமையில் தான் சோவியத் சோஷலிச ஜனநாயகத்தின் சர்வாம்சமான வளர்ச்சி உத்தரவாதம் செய்யப்பட்டுள்ளது.''

''விஞ்ஞானம், தொழில் நுட்பம், கலாசாரம் ஆகிய வற்றின் வளர்ச்சியில் அனைத்து தேசிய இனங்களையும் சார்ந்த உழைக்கும் மக்களின் தீவிரப் பங்கேற்பு ஏற்படு வதற்கு தேவையான முன்னேற்பாடுகள் எல்லாம்உருவாக்கப் பட்டுள்ளன. சோஷலிச தேசங்கள், தேசிய இனங்கள் ஆகியவற்றின் கலாசாரங்களின் செழுமையாக்கம் தொடர் செயல் விளைவு பரஸ்பரம் வளமான போக்குகள் எல்லாமே சோவியத் மக்களின் வாழ்வில் இயற்கையான சம்பவங்களாகி விட்டன.''

மார்க்சிய லெனினிய சித்தாந்தம் சோஷலிச சர்வ தேசியம் மக்களினங்களிடையேயான நட்புறவு ஆகிய எல்லாமே ஒன்றுக்கொன்று அரண்போன்று உறுதியாகப் பிணைந்துள்ளன. ஆகவே, பொருள்வய மற்றும் கலாசார மதிப்புக்கள், சிறப்பு நிபுணர் பரிமாற்றங்கள் மிக நீடித்த செயல் விளைவுள்ளனவாக இருக்கின்றன."

"மக்களினங்களின் வாழ்க்கை முறை முழுவதிலுமான பரஸ்பர செல்வாக்கும், சர்வதேசிய மயமாக்கலும் அநேக வடிவங்களில் அதிகரித்துக் கொண்டிருக்கின்றன. ஒவ்வொரு குடியரசின் உழைக்கும் மக்களும், பல்தேசிய இன கூட்டமைப்பாகவே தெரிகின்றனர். அதாவது அந்த மக்களிடையேயான தேசிய குணும்சங்களோடு சர்வதேசிய குணும்சங்களும், சோஷலிசத் தன்மைகளும் பொதுவாக சோவியத் அம்சங்களும் மரபுகளும் இசைவாக இணைந்திருந்தன.''*

இது தேசம் என்பதன் சாரத்தையே மாற்றுகிறது. முதலாளித்துவ சமுதாயத்தில் உள்ள தேசத்துடன் இதை உவமைப்படுத்தி வரையறை செய்ய முடியாது.

சோஷலிச தேசம் என்பது ஒரு புதிய மக்கள் சமூக அமைப்பு; அதிலுள்ள மக்கள், முதலாளித்துவத்தின் அழிவு சோஷலிசத்தின் வெற்றி எனும் நடப்பு மூலமாக, முதலாளித்துவ சமூக அமைப்பிலுள்ள தேசம் தேசிய இனம் ஆகியவற்றிலிருந்து விடுபட்டு வளர்ந்தவர்களாவர் புதிய குணும்ச அடிப்படையேயானுலும், இந்த புதிய சமுதாயம் முந்திய தேசிய சமூகத்திலுள்ள சில திட்டவட்டமான இனவகை குணக்கூறுகளைத் தக்க வைத்துக் கொண்டிருந்தது. ஆனுல் இதன் முழுமையான அரசியல், சமூகப் பொருளாதார கலாசார வாழ்க்கை முறை சோஷலிச சர்வ தேசிய கொள்கைகளுக்கு ஏற்ருற்போல் மாற்றப்பட்டுள்ளன.

உள்ளடக்கத்தில் ஒரு சில இனவகை தன்மைகளைக் கொண்டிருந்தாலும், ஒரு தேசம் சோஷலிச வெற்றியால் சமூக வடிவத்தில் பெரு மாறுதலடைந்து, பொருளாதரர அடிப்படை, வர்க்க அமைப்பு, அரசியல் திட்டம், கலாசாரம் ஆகியவற்றில் சோஷலிசத் தன்மையுடையதாக மாறுகிறது. சோஷலிச சர்வதேசிய வாழ்க்கை முறையால் தீர்மானிக்கப்

* சோவியத் சோஷலிஸ்டு குடியரசுகளின் ஒன்றியத்தின் உருவாக்கத்தின் 50 ஆம் ஆண்டு விழாவுக்கான தயாரிப்புகள் பற்றி, சோ. க. க. ம. க. தீர்மானம், பக். 16—18.

பட்ட புதிய தன்மைகள் அங்கே தோன்றி, பழங்கால தன்மைகளுக்குப் புதிய வடிவம் கொடுத்து மாற்றியமைக்க ஏதுவாகின்றன.

பூர்ஷுவா சமுதாயத்தில் உள்ள தேசத்திற்கு, பொருளாதார சமூகம் என்பது ஏற்கெனவே நிலவுகிற வெவ்வேறு (பகைமையுள்ளதுட்ட) சமூக வர்க்கங்கள் குழுக்களுக்கிடையேயான உற்பத்தி உறவுகளுக்கேற்ப புறநிலை பொருளாதார இணைப்பை உள்ளடக்கியதாகும். ஆனால் சோஷலிச தேசத்தில் நட்பு வர்க்கங்களும், குழுக்களும் ஓர் உண்மையான பொருளாதார சமூகத்தை தன்னகத்தே கொண்டுள்ளன. அது உற்பத்திப் பந்தங்களை மட்டுமல்லாமல், உற்பத்திச் சாதனங்களுடனான உறவுகளைப் பொறுத்த மட்டில் சமத்துவமும், பொருளாதார நலன்கள், நோக்கங்கள் விஷயத்தில் ஒருமித்த தோரணை என்ற அடிப்படையிலும் அமைந்ததாகும்.

ஒரு நாட்டிலுள்ள பல்வேறு சோஷலிச தேசங்கள், தேசிய இனங்கள் ஆகியவற்றின் தேசியப் பொருளாதாரத்தின் பரஸ்பர சார்பு நிலை ஒரு சர்வதேசிய பொருளாதார சமூகத்தின் வளர்ச்சியைத் தூண்டுகிறது.

பிரதேசவாரி சமுதாயம் ஒரு தேசத்திற்கான நிபந்தனையாகவும் தன்மையாகவும் இருப்பதும் ஒரு புதிய குணவியல் பாடும். சோஷலிச தேசங்களுக்கு வரலாற்று அடிப்படையிலான எல்லைகள் உள்ள நிலப்பகுதிகள் உண்டு. ஆனால் அவற்றில் முதலாளித்துவ கருத்துருப்படி தனித்தனி தேசமாக இருந்த இயல்பு படிப்படியாக மறைந்து விடுகிறது. தேசங்களுக்கிடையே தகவல் தொடர்புகள் அதிகரித்த வண்ணமாகவும், பல்வேறு வடிவங்களில் பரிணமித்தும் இருக்கின்றன. தேசியப் பிரதேசம் என்பது பொருளற்றதாகி விடுமோ என்று கருத வேண்டுவதில்லை. ஒரு தேசத்தின் வாழ்வும் செயல்பாடும், ஒரு குறிப்பிட்ட பிரதேசத்திற்குள் தான் வெளிப்படுகின்றன. அந்த தேசத்து மக்கள் தொகை தேசத்தின் பரப்பு விஷயத்தை புறக்கணிப்பவர்களல்ல.

தேசிய உணர்வுகளை எப்போதும் மதிக்கும் கம்யூனிஸ்டுகள், ஒரு தேசத்தின் பிரதேசம் அதன் எல்லைகள் எல்லாமே ஜன நாயக அடிப்படையில் நிர்ணயிக்கப்பட வேண்டும் என்பதை தொடர்ந்து வலியுறுத்தி வந்திருக்கிறார்கள்.

ஆனால் தாங்கள்தான் ஒரு குறிப்பிட்ட பிரதேசத்தின் இனவாரி சமுதாயத்தின் வாரிசுகள் என்றும், இந்த சமுதாயம் தொன்மை பழங்காலத்தில் இப்பிரதேசத்தில் இருந்தது எனவும் பல நூற்றாண்டுகாலமாக உருவான இன்னொரு தேசத்தின் தாயகமாக இது இருக்கிறது எனவும் உரிமை கொண்டாடினால் அது நியாயமற்றது, மேலும் ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல.

எல்லைகளைக் குறிப்பிடும்போது முதலாளித்துவம் மக்களின் சித்தத்தை உதாசீனம் செய்கிறது. அதே நேரத்தில் சோஷலிசம் மக்களின் பரிவுணர்வுகளுக்கேற்ப எல்லைகளை வரையறை செய்கிறது என்று லெனின் அழுத்தமாகக் குறிப்பிட்டார். இந்த எல்லைகள் என்பவை பிரச்சினைக்குரிய பகுதியிலுள்ள தேசிய பிஇயைனைப் பொறுத்ததே ஆகும். ஆனால் சோஷலிசத்தையும், கம்யூனிசத்தையும் கட்டும் போதே, சோஷலிச தேசங்களுக்கிடையேயும் தேசிய இனங் களுக்கிடையேயும் உள்ள பொருளாதார தொடர்புகள் முனைப்படைவதோடு ஓரிடத்திலிருந்து மக்கள் இன்னோரிடத் திற்குப் பெயர்ந்து செல்வதும் அதிகரிக்கிறது. மேலும் வெவ் வேறு தேசிய இனங்களைச் சார்ந்த மக்கள் ஒருவரோடு ஒருவர் கலந்து கொள்கின்றனர். இதனால்தான் லெனின், மக்களை பிரதேசவாரியாகப் பிரிக்கும்போது பொருளாதார நலன்கள் மேலாங்கியிருக்கும் என்று ஏற்கெனவே குறிப் பிட்டார். ''மக்களின் தேசிய இயைபு என்பது மிக முக்கிய மான பொருளாதாரக் காரணிகளில் ஒன்றாகும். ஆனால் அது மட்டுமே ஏக அம்சமாக மிகமுக்கியமான அம்சமாக இராது. ஆகவேதான் மார்க்சியவாதிகள் முழுக்க முழுக்க "தேசிய பிரதேசவாரி'' கோட்பாட்டின் அடிப்படையில் அவர்

களுடைய நிலையை மேற்கொள்ளக் கூடாது''* என்று லெனின் எழுதினர்.

புதிய கட்டுமானப் பணிகளும், கன்னி நிலங்களை வளப்படுத்தும் பணிகளும் எல்லா தேசிய இனங்களையும் சார்ந்த பெரும்பகுதி மக்களை ஈடுபடுத்தக் கூடியவையாகும். கம்யூனிச நிர்மாணம் என்பது சோவியத் ஒன்றியம் முழுமையுமுள்ள அனைத்து தேசிய இனங்களையும் இரண்டறக் கலக்கச் செய்வதாகும். இது நிச்சயமாயும் ஒரு முற்போக்கு அம்சமாகும். தேசிய சமூக உள்ளியைபை ஒரு குடியரசில் அப்படியே பாதுகாக்க வேண்டும் என்று எடுக்கக் கூடிய திட்டமிட்ட நடவடிக்கைகள் மக்களின் பொருளாதார சமூக வளர்ச்சியை தாமதப்படுத்தவே செய்யும்.

சோஷலிசத்தின்கீழ் சில தேசிய தனித் தன்மைகள் சமூக பொருளாதார கலாசார தரங்களிலுள்ள வேறுபாடு களைப் போலவே, ஒப்பளவில் விரைவாகச் சீராக்கப்படும். ஆனல் இனவகைப்பட்டதான வேறுபாடுகள் குறிப்பாக மொழி வடிவங்கள் போன்றவை நீண்ட நாள் நிலைத் திருக்கும்.

தேசிய கலாசார வடிவங்களும் மாற்ற முடியாதவை அல்ல. அவை படிப்படியாக சோஷலிச உள்ளடக்கத்தோடு இணக்கம் பெறுகின்றன. அதோடு சோஷலிச தேசங்கள் முழுமையின் வளர்ச்சிக்கும் வழி வகுக்கின்றன. இந்தப் பண்பைப் பொறுத்த அளவில் தேசிய வடிவம் காலாவதி யாகிவிட்ட ஒன்றல்ல. மாருக இன்னும் நெடுங்காலத்துக்கு அது மிகவும் பயனுள்ள பங்கை நிறைவேற்றமுடியும்.

சோஷலிச தேசங்கள், தேசிய இனங்கள் ஆகியவற்றின் தேசிய உணர்வுகள் தீவிர மாற்றமடைகின்றன. அது தேசப் பற்றுள்ள முற்போக்கான, எல்லாவற்றிற்கும் மேலாக புரட்சிகரமான பாரம்பரியத்தை பிரதிபலிக்கிறது. சோஷலிச சமூகத்தில் நாட்டுப்பற்று என்பதன் மையக்கூறு சோஷலிச

* வி. இ. லெனின், ''நூல் திரட்டு'', தொகுதி 20, பக். 50.

அமைப்பிற்கும், கம்யூனிசத்திற்கும் காட்டும் ஆழமான விசுவாசமே என்பதால், சோஷலிச தேசிய உணர்வு என்பது தேசங்களுக்குள்ளேயும், தேசங்களுக்கிடையேயும் ஏற்பட்டுள்ள புதிய பொருளாதார, அரசியல், கலாசார வடிவங்களால் தீர்மானிக்கப்படும் என்பது தெளிவாகிறது. சோஷலிச தேசங்களின் தேசிய உணர்வுகள் வளர்ந்துவரும் மார்க்சிய லெனினிய சர்வதேசியச் சித்தாந்தத்திற்கு உட்பட்டதே ஆகும்.

ஆர். பைப்ஸ், ஏ. பென்னிங்சென் போன்ற சோவியத் விரோத விமர்சகர்கள், சோவியத் தேசங்களின் கலாசார முன்னேற்றத்தை ஒப்புக்கொண்ட போதிலும் முன்னுள் பின்தங்கிய ருஷ்யாவின் புறப்பகுதியில் ஏற்பட்டுள்ள அறிவு ஜீவிகளின் வளர்ச்சியானது குறு தேசியவாதத்தையும் தேசிய தனித்தன்மையையும் கிளப்பிவிடும் என்று இன்னும் நம்புகிறார்கள். 1967 மார்ச் 29-ல் லைப்ரே பெல்ஜிக்கில் எம். கார்ன் செய்ததுபோல் இங்கொன்றும் அங்கொன்றுமாக ஒருசில குறுகிய வட்டார வாத நிகழ்ச்சிகளைச் சுட்டிக் காட்டி, சில பொறுப்பாளர்களைத் தெரிவு செய்வதில் லெனினுடைய கோட்பாடுகள் மீறப்பட்டுள்ளது என்பதையும் எடுத்துக்காட்டி, ''வட்டார தேசியவாதம் இன்னும் சோவியத் யூனியனில் மறைந்துவிடவில்லை'' என்று இவர்கள் வாதிடுகிறார்கள். இவர்கள் கிளாஸ்கோ நகரில் சென்று கொண்டிருந்த பிரயாணியைப் போன்றவர்கள் ஆகும். அந்தப் பிரயாணி அந்த நகரில் செந்நிறத் தலையர்களான மூன்று சகோதரர்களைப் பார்த்துவிட்டு இந்த நகரம் முழுவதும் செந்தலையர்கள்தான் குடியேறியுள்ளனர் என்று தனது குறிப்போட்டில் குறிப்பு எழுதிக் கொண்டானும்.

சோவியத் மக்களினங்களின் தேசிய கலாசாரத்தில் ஏற்பட்ட முன்னேற்றம், அவர்களது வரலாற்றில் அவர்களுக்குள்ள அக்கறையையும், கலை, இலக்கியத்தில் சிறப்புத் தன்மை குறித்த அக்கறையையும் மேலோங்கச் செய்தது. ஆனல் சோஷலிச சுற்றுச் சூழலில் இது தேசிய உணர்வின்

சோஷலிச உள்ளடக்கத்தின் ஒரு பகுதியேயாகும். அது தேசிய, சர்வதேசிய பிரத்தியேக இயல்புகளை ஒற்றுமை படுத்தி ஒரு புதிய சமூக அமைப்பின் தோரணையையும் தன்னகத்தே கொண்டுள்ளது.

சோஷலிசத்தின் கீழ் தேசபக்த உணர்வு என்பது புதிய தன்மைகளை பெறுகிறது. சோவியத் மக்களிடையேகூட சொந்த இயற்கைக் காட்சி, கலைகளில் அதன் பிரதிபலிப்பு இவை ஒரு இன்பகரமான மனக்கிளர்ச்சியையும், தேசிய வண்ணம்கொண்ட உணர்ச்சிகளையும் தட்டி எழுப்பத்தான் செய்கிறது. ஆனால் தேசப்பற்று என்பது சொந்த இயற்கைத் தலம், மொழி, கலாசாரம் என்பவற்றின் மீதான பற்று மட்டுமல்ல. லெனின் எடுத்துக்காட்டியதுபோல் தேசபக்தி என்பதன் சாரம், தனிநபரின் சமூக ஈடுபாடு, பழமையின் மீதும், இன்று சுற்றிநிற்கும் எதார்த்தம் மீது அவர் கொண் டிருக்கும் சித்தாந்த, அழகியல் தோரணை ஆகியவற்றில் மிக ஆழமாக வேரூன்றியுள்ளது. ஆனால் நாட்டுப்பற்றின் உள்ளடக்கத்திலான முக்கிய அம்சம் ஒரு முற்போக்கு சமுதாய அமைப்பிற்கான போராட்டமேயாகும். சோஷலிசம் ஒரு புதிய தேசபக்தியை பெற்று அளித்திருக்கிறது. அது தேசிய வரம்புகளில் இருந்து விடுபட்டது. இது தந்தையர் நாட்டிற்கு மட்டுமன்றி, சோஷலிச அமைப்பிற்கும் சோஷலிசஅரசுக்கும் கம்யூனிசத்திற்குமான தமதுஎல்லையற்ற அற்பணிப்பைக் குறிக்கிறது.

சோஷலிச தேசபக்தி என்பது சோஷலிச குடும்பத்தின் மக்களினங்களின் முற்போக்கு பாரம்பரியத்தால் அதிக வல்லமை வாய்ந்ததாகிறது. தேசியத்தையும், சர்வதேசியத்தையும் அது ஓர் ஒற்றுமையாகக் கருதுகிறது. ஆகவேதான் தேசங்களையும், தேசிய இனங்களையும் அது பிரிப்பதில்லை, மாறாக ஒன்றுபடுத்துகிறது.

சோஷலிச சுற்றுச் சூழலில் தமது தேச வரலாற்றின் முற்போக்கு அம்சங்களை தன்வயமாக்கிக் கொண்டு மக்களின் தேசிய இயல்பு மாறுகிறது. சோஷலிசத்தையும் கம்யூனிசத்

தையும் நிர்மாணிக்கும் நடப்பில் இது வடிவம் பெறுகிறது. ஒரு தேசத்திலிருந்து இன்னொரு தேசத்தை தனிப்படுத்திக் காட்டும் அம்சங்களை மட்டும் கணக்கில் கொண்டு தேசியத்தைப் பரிசீலிப்பது தவறாகும். சோவியத் தேசங்களின் தன்மையில் சோஷலிச சர்வதேசியம், பரஸ்பர நட்புறவு, உதவி, சோவியத் தேசபக்தி ஆகிய அம்சங்கள் புதிய சோஷலிச உறவுகளின் பிரதிபலிப்பேயாகும். அவை சோஷலிச, சமூக-பொருளாதார, சமூக-அரசியல் அமைப்பாலும், மார்க்சிய லெனினிய சித்தாந்தத்தாலும் உருப்பெறுகின்றன. ஒட்டுமொத்தமான இந்த அம்சங்கள் தேசிய சர்வதேசிய அம்சங்களின் ஒற்றுமை என்ற சோவியத் குணவியல்பை உருவாக்குகின்றன.

தேசிய உறவுகள் சோஷலிச சமூக உறவுகளின் ஒரு பகுதியே. கம்யூனிச நிர்மாணம் முன்னேற்றமடையும் போது இவை குறிப்பிடத் தகுந்த மாறுதல்களைப் பெறுகின்றன. சோவியத் மக்களினங்களின் அரசியல், பொருளாதார, சமூக கலாசார வாழ்வில் ஏற்பட்ட சோஷலிச மாற்றங்கள் சோஷலிசத்தின் வெற்றியை உறுதி செய்தன. முதிர்ச்சியடைந்த சோஷலிச சமுதாயத்தில் தேசங்களும், தேசிய இனங்களும் அவற்றின் உறவுகளும் மென்மேலும் சோஷலிச அடிப்படையில் மிக உறுதியாக வளர்ச்சியடைகின்றன. சோவியத் யூனியனின் இன்றைய தேசிய பிரச்சினைகள், முதலாளித்துவத்திலிருந்து சோஷலிசத்திற்கு மாறும் கட்டத்தில் இருந்தவற்றிலிருந்து முற்றிலும் வேறுபட்டவைகளாகும்.

கம்யூனிசமாக வளர்ந்து கொண்டிருக்கும் வளர்ச்சியடைந்த சோஷலிசக் கட்டம் என்பது தேசிய உறவுகள் துறையினைப் பொறுத்து, ஒன்றுக்கொன்று தொடர்புள்ள இரு முன்னேற்றமான போக்குகளின் தீவிர செயல்பாட்டால் மிகச்சிறந்து விளங்குகிறது: புதிய புதிய தேசங்களும்,தேசிய இனங்களும் தொடர்ந்து மலர்வதும், அவை சங்கமிப்பதும் மேலதிகமான பரஸ்பரம் செல்வாக்குப்பெறுவதும் பரஸ்பரம் செழுமையுறுவதும் இதன் தனிச்சிறப்பு.

தேசங்கள் நெருங்கிவந்து ஒன்று சேருவதற்கும், முற்போக்கு மரபுகள் மற்றும் கலாசார சாதனைகளைப் பெற்று பரஸ்பரம் செழுமையுறுவதற்கும் பிற்போக்கு மரபுகளைச் சமாளித்திடவும் ஏற்ற சூழ்நிலைகளும் வசதிகளும் தானாகவே ஏற்படுவதில்லை. ஆனால் அந்த சூழ்நிலைகள் ஏற்படாமல் வேறு எந்த பிரச்சினையும் ஒரு பல்தேசிய இன நாட்டில் வெற்றி கரமாக தீர்க்க முடியாது. தேசிய உறவுகள் துறையிலான, நடப்புக் கடமைகள் பற்றிய இந்த நோக்கத்தை சரியாகப் புரிந்து கொண்டால், சோவியத் யூனியனில் தேசங்கள், தேசிய உறவுகளின் இனிமேலான வளர்ச்சிக்கு கம்யூனிஸ்டு கட்சியும், சோவியத் அரசாங்கமும் மேற்கொள்ளும் பணிகளின் பரிமாணத்தை நிச்சயமாயும் முழுமையாயும் மதிப்பிட முடியும்.

தேசங்களின் பரஸ்பர சார்புநிலை மற்றும் சங்கமிப்பு என்பது — தத்துவத்தளவில் ஒப்புக்கொள்ளப்பட்ட போதிலும், சிலர் அவர்களுடைய சொந்த தேசத்தின் வளர்ச்சி விஷயத்தில் ஒரு சார்பாக அணுகும் போக்கை ஒதுக்கிவிட முடியாது. எல்லா தேசங்களும் வளர்ச்சியடையும் போது தேசங்கள் சங்கமிப்பது என்பது தானாகவே அடக்கமாக நிகழும் என்று இவர்கள் நம்புகிறார்கள். தேசிய அம்சங்களின் சோஷலிச பாணி வளர்ச்சியில் அரசியல், பொருளாதாரம், சித்தாந்தம் ஆகியவை சர்வதேசிய மயமாக்கலும் அடங்கியுள்ளது என்பதையும் அனைத்து சோவியத் தேசங்களும் கலாசார அகவள ஒழுங்கமைப்பில் சர்வதேசியத் தன்மைகளுடன்தான் உருவாகின்றன என்பதையும் இவர்கள் பார்க்கவில்லை. தேசங்களின் சங்கமிப்பும் சகோதர ஒத்துழைப்பும் அவற்றின் வளர்ச்சிப் போக்கில் ஒரு முக்கிய அம்சமாகும். தேசங்கள் மலர்வது சங்கமிப்பை ஊக்குவிப்பதாகும். தேசிய கர்வம் அசாதாரண இயல்பு என்பவற்றிற்கு இரையாகிவிட்ட மக்கள் தேசங்களின் சங்கமிப்புக்கான உச்சபட்ச நிலைமைகளை வழங்க உணர்வு பூர்வமாக எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவற்றையும்

தேசங்களை இரண்டறக் கலந்திணைப்பதற்கான திட்டமிட்ட தூண்டல் என்றே எடுத்துக் கொள்வார்கள். இருந்தாலும் எதார்த்த நடப்பை எளிதாக்க உதவுவதும், தேவையான கட்டங்களைக் கடந்து தாண்டிச் செல்வதும் இருவேறு விவகாரங்களாகும்.

சோஷலிஸ்ட் வாழ்க்கையின் சுய இயல்பாலேயே தூண்டப்படும் புதுமைக்கு செயற்கையான ஊக்குவிப்பு அறவே தேவையில்லை. ''அதே நேரத்தில் தேசங்களின் சங்கமிப்பைத் தடுத்து நிறுத்தவோ, ஏதேனும் சாக்குப் போக்கில் தகையவோ அல்லது தேசியத் தனி இயல்புக்கு அளவுமீறிய முக்கியத்துவம் தரவோ மேற்கொள்ளப்படும் எந்த முயற்சியையும் கட்சி அனுமதிக்காது என்றும், ஏனெனில், அது நமது சமுதாயத்தின் பொது வளர்ச்சி பற்றிய கொள்கைக்கும் கம்யூனிஸ்டுகளின் சர்வதேசிய லட்சியங்கள் சித்தாந்தங்களுக்கும் கம்யூனிச நிர்மாணத்தின் நலன்களுக்கும் எதிராகப் போய்விடும்''* என்று பிரெஷ்நேவ் குறிப்பிட்டார்.

கட்சியாலும் சோவியத் அரசாலும் நெறியாண்மை செய்யப்பட்டுள்ளபடி வளர்ச்சிபெற்ற சோஷலிசத்தின் காலகட்டத்தில், தேசங்களின் சங்கமிப்பு என்பது இயற்கையான வரலாற்று நடைமுறையாகும். சோவியத் கம்யூனிஸ்டு கட்சியின் வேலைத் திட்டம், சோஷலிச தேசங்களின் வளர்ச்சிக்கும், சகோதர ஒத்துழைப்பிற்கும் வாழ்க்கையின் சகல துறைகளிலுமான அவற்றின் சங்கமிப்பையும் சகோதர ஒத்துழைப்பையும் சோஷலிஸ்டு சர்வதேசியத்தின் கோட்பாடுகளுக்கு உகந்த முறையில் லட்சியமாக்கி சோஷலிஸ்டு தேசங்களின் இனிமேலான முன்னேற்றத்தையும் உருவரை செய்துள்ளது.இதற்கு ஒவ்வொரு குடியரசின் நலனும், ஒன்றியம் முழுமைக்குமான நலனும் சீராக ஒத்திணைவது அவசியமாகும். அது தனிவகை தேசியம் உட்பட எல்லாவிதமான

* லி.இ. பிரேஷ்நேவ், **சோவியத் சோஷலிஸ்டு குடியரசுகளின் ஒன்றியத்தின் ஐம்பதாம் ஆண்டு விழா,** பக். 36-37.

சமூக நடப்புக்களுக்கும் விஞ்ஞான வழிகாட்டுதலை அவசிய மாக்குகிறது.

3. சர்வதேசியம்—தேசங்களின் சோஷலிஸ்டு வளர்ச்சிக்குரிய சித்தாந்த அடிப்படை

முதலாளித்துவ சமுதாயத்திலுள்ள தேசங்கள் சோஷலிஸ்டு தேசங்களாக மாற்றுவதும், மக்களினங்களிடையே சோஷலிச உறவுகள் தோன்றுவதும், முதலாளித்துவ தேசிய வாதத்திற்கு எதிராக பாட்டாளி வர்க்க சோஷலிஸ்டு சர்வ தேசியம் நடத்தும் போராட்டத்துடன் பிணைந்துள்ளன.

முதலாளித்துவ உற்பத்திமுறை தேசியம் ஏற்படுவதற்கு வழிவகுத்தது போலவே, அதற்கு நேர் எதிரான பாட்டாளி வர்க்க சர்வதேசியம் ஏற்படுவதற்கும் வழிவகுத்தது. அனைத்து மக்களும் சங்கமிப்பதற்கான புறநிலைக் காரணங்களை மார்க்சியமும் லெனினியமும் குறிப்பிட்டுக் காட்டியுள்ளன. மேலும் பாட்டாளி வர்க்க சர்வதேசியத்தை பாட்டாளி வர்க்க சமூக-பொருளாதார நிலைகளில் இருந்து தடம்காண முடியும் எனவும் அது கம்யூனிச சமுதாயத்தைக் கட்டு வதிலும், உழைக்கும் மக்களுக்கு விடுதலை அளிப்பதிலும் முக்கிய பங்கு வகிக்கிறது என்பதையும் எடுத்துக் காட்டியது.

சோஷலிச நிலைமைகளில் உழைக்கும் மக்களின் அரசியல் சமூக நடைமுறை, உளவியல், சித்தாந்தம் ஆகியவற்றோடு இணைந்து அவர்களின் சர்வதேசிய ஒருமைப்பாட்டைப் பிரதிபலிக்கிற பாட்டாளி வர்க்க சர்வதேசியம்தான் புதிய தேசங்களும் தேசிய இனங்களும் தோன்றி சங்கமிப்பதற் கான அடித்தளமாகும். அதோடு சோஷலிசத்தையும் கம்யூனிசத்தையும் கட்டுவதில் மிக முக்கிய அம்சமுமாகும். அரசியல் கோட்பாடு கம்யூனிஸ்டு அறநெறிக் கோட்பாடு என்ற முறையில் பாட்டாளி வர்க்க சர்வதேசியம் என்பது மார்க்சிய லெனினியத்திலிருந்து பிரிக்கமுடியாத ஒரு அங்கப் பகுதியாகும். முரணற்ற சர்வதேசியமில்லாமல் மார்க்சிய

லெனினிய கொள்கையோ நடைமுறையோ இருக்க முடியாது. முதலாளித்துவத்திற்கு எதிராக போராடுபவர்களாயும், முதலாளித்துவத்தைத் தூக்கியெறிந்த பின்னர் சோஷலிசத்தையும் கம்யூனிசத்தையும் கட்டுவோராயும் இருக்க வேண்டுமானால் உழைக்கும் மக்கள் சர்வதேசியவாதிகளாக இருக்க வேண்டும். சோஷலிச தேசபக்தியும் சர்வதேசியமும் இரண்டறக் கலப்பதுதான் தனி ஒருவருடைய தார்மீகவளர்ச்சிக்கு முக்கிய காரணியாகவும் அறிகுறியாகவும் அமையும். சர்வதேசியத்தை திடநம்பிக்கையுடன் ஏற்றுக் கொள்வதும், சிந்தனைப் போக்கிலும் நடத்தையிலும் அதை ஒரு பகுதியாகக் கொள்வதும் ஒருவருடைய சகல துறை இசைவான வளர்ச்சிக்கு இன்றியமையாததாகும். வெவ்வேறு தேசிய இன மக்களிடையே கம்யூனிசக் கண்ணோட்டத்தை வளர்ப்பதிலும், ஒற்றுமையையும், ஒத்திணைவையும் வளர்ப்பதிலுமான மார்க்சிய—லெனினியக் கட்சிகளின் செயல்பாட்டில் அடிப்படை அம்சமாக சர்வதேசியம் அமைகிறது.

முதலாளித்துவ உலகைச் சார்ந்த சித்தாந்தவாதிகள் சர்வதேசியத்தை எதிர்க்கிறார்கள். மக்களுடைய தேசிய உணர்வுகளைப் புரட்டுவதிலும், வர்க்கப் போராட்டங்களுக்குப் பதிலாக தேசத்தின் ஒற்றுமை என்ற கொடியின் கீழ் தேசங்களுக்கிடையேயான போராட்டங்களை மாற்றீடு செய்வதிலும் முனைந்து நிற்பார்கள். சந்தர்ப்பவாதிகள் அவர்களுக்கு உதவியாக அணி சேர்வார்கள்.

வர்க்க உணர்வுகளிலிருந்து தேசிய உணர்வுகளைப் பிரித்துக்காட்டி (சோஷலிச சுற்றுச் சூழலில், சோஷலிச உணர்வுகளிலிருந்து) ''இடதுசாரி'' வலதுசாரி சந்தர்ப்பவாதிகள் தேசிய ஒற்றுமையை வர்க்கம் மீறிய மதிப்புடையதாகச் சித்தரித்து உழைக்கும் மக்களை சோஷலிச கட்டத்தில் சர்வதேசியத்தோடு இணங்கித் தம் தேசிய நலன்களைப் பார்க்கவிடாமல் தடுக்கிறார்கள். தேசிய வாதத்தையும், சந்தர்ப்ப வாதத்தையும் லெனின் ஒன்றாகவே இனங்கண்டார். சர்வதேசியத்தை முழுக்க ஏற்றுக்கொள்ளும்

ஆதரவாளர் சந்தர்ப்பவாதத்தின் முரணற்ற-உறுதியான எதிராளியாக இல்லாதிருப்பது என்பது வெறும் கற்பனைத் தோற்றமே என்று அவர் மேலும் வலியுறுத்தினர்.

சர்வதேசியம் என்பதில் உள்ளடங்கியிருக்கும் பொருள் என்னவென்றால் ஒவ்வொரு மார்க்சிய லெனினிய கட்சியும் குறிப்பாயும் ஆட்சியிலிருக்கும் பட்சத்தில் இயக்கம் முழுமைக்கும், தாம் தான் பொறுப்பு என்ற உணர்வோடு இருக்க வேண்டும். சோஷலிசத்திற்கு ''பிரத்தியேகமான'' முற்றும் ''தேசியமான'' பாதைகளை வகுப்பதும், சோஷலிச நிர்மாணத்தின் பொது விதிகளை மறுதளிப்பதும் சோஷலிச மற்றும் சர்வதேசிய லட்சியத்தைச் சீர்குலைக்கும்.

தேசிய வாதத்தை முறியடிப்பது எல்லாத் தேசங்களின் நலன்களுக்கும் ஏற்றதாகும். தேசிய அரசுரிமை என்பது எல்லா தேசங்களும் தமது சிறந்த நலன்களுக்காக சமூக பொருளாதார சமூக அரசியல் வாழ்க்கையை ஒழுங்கு செய்து கொள்வதற்கான உரிமை ஆகும். சோஷலிச தேசங்களின் முக்கிய நோக்கம் கம்யூனிசத்தை நோக்கி முன்னேறுவதற்கான ஆகச்சிறந்த நிலைமைகளை உறுதி செய்வதேயாகும்.

மார்க்சிய வாதிகளும், லெனினிய வாதிகளும் ஒரு வரம்புக்கு உட்பட்ட அரசுரிமை எனும் தத்துவம் ஒன்றை வகுத்துக் கொடுத்ததாகக் கூறப்படுகிறது. பாட்டாளி வர்க்க சர்வதேசியம் என்பது தேசிய அரசுரிமையை வெளிப்படையாக ஒதுக்கிவிடுகிறது என்று எடுத்துக்காட்டுவதற்கான தம் முயற்சியில் முதலாளித்துவ சித்தாந்தவாதிகள் அப்பட்டமாயும் உண்மைகளைப் புரட்டு கிறார்கள்.

சோஷலிச நாடுகளிடையிலான சகலதுறை ஒத்துழைப்பு தேசிய அரசுரிமையைக் கட்டுப்படுத்துவதில்லை. மாறாக முழு அளவில் அரசுரிமை செயல்படுவதற்கு உறுதியளிக்கிறது.

மறுபுறமோ, தேசிய வாதமும், அதன் உக்கிர வகைப் பட்ட குறு தேசிய வெறியும் தேசிய நலன்களையும் சோஷலிச

சாதனைகளையும் தொடர்ச்சியாக அச்சுறுத்தி வருகிறது. குறிப்பிட்ட ஒரு மக்களைத் தனிமைப்படுத்துவதோ அல்லது இன்னொரு மக்களை அடிமைப்படுத்துவதோ சுரண்டும் வர்க்கத்தினருக்குச் சாதகமாகவே அமையும். இந்த வர்க்கங்களை ஒழித்து சோஷலிசத்தைக் கட்டுவது தேசிய வாதத்தின் சமூக வேர்களை அழித்துவிடும். இருந்தாலும், பல்வேறு காரணங்களால் இது நீண்டகாலமாக வெவ்வேறு வடிவங்களில் தலைகாட்டி வருகிறது. கம்யூனிஸ்டு எதிர்ப்பாளர்கள் நம்மை நம்பவைப்பதற்குக் கூறுவதுபோல் இதை மக்களின் உள்ளார்ந்த தேசிய உளவியல் உணர்வு என்றோ அல்லது மக்களின் வாழ்வின் தேசிய வடிவங்கள் என்றோ கற்பிதமாக எடுத்துக் கொள்ளக் கூடாது. இது முழுமையாயும் அறவேயும் வரலாற்று நிலைமைகளால் ஏற்பட்டதே ஆகும். பல்வேறு இதர விவகாரங்களுடன் கூடவே, பழைய விரோதம் சந்தேகம் என்ற வேதனையான மரபுவழி காரணமாயும் சோஷலிஸ்டு ஜீவியின் உணர்வு இன்மையாலும், குறிப்பாக ஏகாதிபத்தியவாதிகள் மற்றும் அவர்களுடைய சித்தாந்தவாதிகள் தேசிய உணர்வுகளை மிகைப்படுத்தியும் புரட்டியும் தேசியக் குரோதங்களைக் கிளர்த்திவிட்டும், தூபமிட்டு வருவதும் இதற்குக் காரணமாகும். இன்னும் சொல்லப்போனால் சோஷலிச விதிமுறைகள் ஆங்காங்கே கவனக்குறைவானமுறையில் புரட்டப்படுவதும் இதற்கு எதுவாகும்: பொருளாதார கலாசார வளர்ச்சியில் மக்களின் சமத்துவத்தன்மை மீறப்படுவதும், சமுதாய வளர்ச்சியில் தேசத்தின் சாதனைகளும் பங்குப் பணியும் புறக்கணிக்கப்படுவதும், தேசிய உணர்வுகள் புறக்கணிக்கப்படுவதும் மற்றும் இதுபோன்ற செயல்களும் இதற்கு ஓரளவு காரணங்களாக அமைகின்றன.

பொறுப்பான ஊழியர்களைத் தெரிவு செய்யும்போது, ஒரு குடியரசிலுள்ள அனைத்து மக்களும், தேசிய இன வேறுபாடின்றி, அந்த அரசுத்துவத்துக்கு அருகதையானவர்கள் தான் என்பதும், அந்த அரசின் பொருளாதாரத்தையும் தேசிய கலாசாரத்தையும் நிர்மாணிப்பவர்கள் என்பதும்

மறக்கப்படுவதால் சில தவறுகளும், அத்துமீறல்களும் ஏற்பட்டு அதிக தீங்குகளை விளைவிக்கின்றன.

சோஷலிச தேசபக்தி என்பது குறுகிய தேசியவாத போலி தேசபக்தியால் மாற்றீடு செய்யப் பெறுமானால் சோஷலிச உணர்வின் கட்டுப்பாட்டைக் கடந்து தேசபக்தி வெளிவருமானால் அது தேசிய குறுகிய தன்மையாக மாறு மானால் அது தேசிய வாதத்தின் மிகக்கொடிய வடிவமாக மாறிவிடும்.

தேசியவாத போக்குகள் அடிக்கடி வேறு வேடங்களில் மறைந்து தென்படும். எடுத்துக்காட்டாக, அப்போக்குகள் சில தனித்த அலாதிப் பண்புகளுக்காகவும், பாரம்பரிய பழக்க வழக்கங்களுக்காகவும் புதிய தேசத்தின் மலர்ச்சிக்கான அக்கறையின் வடிவத்தை மேற்கொள்ளும். மக்கள் ஒருதடவை இத்தகைய தேசியவாதத்திற்கு மயங்கி உடன்பட்டார்கள் என்றால், முதலாளித்துவ தேசிய வாதத்திற்கும், சோஷலிச தேசபக்திக்கும் உள்ள வேறுபாட்டின் பிரிநிலையைக் கண்டறிய முடியாதவர்களாகி விடுகிறார்கள். அம்மாதிரி நிகழ்வுகளில், தேசங்களின், வரலாறுகளின் முற்போக்கு அம்சங்களை மட்டும்தான் சோஷலிச தேசபக்தி ஏற்றுக் கொள்ளும் என்றபோதிலும் உண்மை தேசியப் பழமை பற்றிய சகட்டுமேனி புகழ்ச்சி சோவியத் தேசபக்திபோல் பரவலாகப் பேசப்படும்.

தேசிய வாதத்தால் பீடிக்கப்பட்ட மக்கள் தேசிய பெருமைக்குப் பதிலாக தேசிய கர்வத்தை வெளிக் காண்பிப்பார்கள். அவர்களுடைய தேசத்தின் வெற்றிகளை அதன் சிறப்பு வரப்பிரசாதமாக ஒப்பிட்டு மகிழ்வார்கள். தோல்விகளை இதர தேசங்களோடும் தேசிய இனங்களோடும் கொண்டிருந்த நெருக்கத்தால்தான் ஏற்பட்டன என்று பழி கூறுவார்கள். மற்ற கலாசாரத்தின் செல்வாக்கிலிருந்து விடுபட்டதாக எவ்விதத் தொடர்பும் இல்லாத தனித்தன்மை வாய்ந்தது தங்களுடைய தேசிய வரலாறும் கலாசாரமும் என்று மிகையான அழுத்தத்தோடு கூறுவதுதான் தேசிய குறு தன்மைக்கு அறிகுறியாகும். தேசியத் தனித்தன்மைக்கு

அம்மாதிரியான அர்த்தம் கொள்வதுதான் தேசங்கள், தேசிய இனங்கள் ஆகியவற்றிற்கிடையேயான சீரிய உறவுகளும் பரஸ்பர ஒத்துழைப்பும் கெட்டு தடைபடுவதற்கு ஏதுவாகிறது.

தேசிய சிறப்புத் தன்மைகளைக் கவனத்தில் கொள்வதற்கு லெனின் அறைகூவல் விடுத்தார். சரியான பயனுள்ள கொள்கை தேசியக் காரணிகள் "தனிமைப்படுத்தும்" குறிபொருள் பெறுவதைத் தடுத்து நிறுத்தி மாறாக வெவ்வேறு தேசங்களின் மக்களுக்கு இடையே சர்வதேசிய பந்தங்களை வளர்த்துப் பலப்படுத்தும் என்றார். சூன்யவாதப் போக்கில் தேசிய சிறப்புத் தன்மைகளை அவர் மறுக்கவில்லை. அவற்றிற்கு தேசிய வாத அர்த்தம் கொடுப்பதைத்தான் அவர் எதிர்த்தார். மேலும் உழைக்கும் மக்களின் கல்வி முறையில் சர்வதேசியக் கோட்பாடுகளுக்கு முதலிடம் அளித்தார்.

தேசிய சிறப்புத் தன்மைகளைக் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும். ஆனால் அவை தேசங்களையும், தேசிய உறவுகளையும் சரியான வழிகளில் நெறியாண்மை செய்ய வேண்டும். ஆனால் தேசிய சிறப்புத் தன்மைகளை பரமமான அடிப்படைக் கொள்கையாகச் செய்யவும் தேசிய நற்பண்புகளை அதன் பிரத்தியேக பண்புகளின் விளைவு என்று சாட்டியும் வேறு எந்த தேசத்தின் இயல்பிலும் இல்லாத சிறப்புத் தன்மை என்று சித்திரிக்க முயல்வதையும் முறியடிக்க வேண்டியது அவசியமாகும்.

தேசிய சிறப்புத் தன்மைகளைக் கணக்கில் எடுக்கும் போது மார்க்சிய-லெனினிய கட்சிகள் காலாவதியாகிவிட்ட பிற்போக்கு பாரம்பரியத்தை எதிர்த்து ஒதுக்கி, முற்போக்கு பாரம்பரியத்தை ஊக்குவித்து பழைய, புதிய மதிப்புக்கள் அனைத்தும் கொண்டு எல்லா தேசங்களின் பரஸ்பர செழுமைப்பாட்டிற்காகவும், வளர்ச்சிக்காகவும் துணை நிற்கின்றன. இதற்கு நேர்மாறாக ஏகாதிபத்திய வாதிகளும், தேசியவாதிகளும் என்னதான் செய்து கொண்டிருந்தாலும் சோஷலிஸ்டு நாடுகளின் மக்களினங்கள் தங்களுடைய

அனுபவத்திலிருந்து சிலவற்றைக் கற்றுக் கொண்டிருக்கிறார்கள். முதலாளித்துவ தேசிய வாதமும் தேசிய தன்முனைவமும் அவர்களுடைய தேசிய நலன்களுக்கு எதிராகவே போகின்றன என்று அவர்கள் காண்கிறார்கள். மேலும் நெருக்கமான உறவுகளுக்கும், சங்கமிப்புக்கும், சகோதர ஒத்துழைப்புக்கும் அவர்கள் தீவிரமாக செயல்படுகிறார்கள்.

சோஷலிச நாடுகளிலுள்ள மார்க்சிய - லெனினிய கட்சிகள் பொருளாதார, அரசியல், கலாசார ஒத்துழைப்பை ஒழுங்கமைப்பதில் மிக முக்கியமான பங்கை வகிக்கின்றன. சோஷலிசத்தின் வளர்ச்சியினால் வளர்ந்துவரும் மக்கள் சமூகம் பல நன்மைகளையடைந்துள்ளது என்றும் உலக சோஷலிச அமைப்பில் பகைமையில்லாத முரண்பாடுகள் பற்றிய தீர்மானத்தை ஆதாரமாக்கி நிற்கின்றன என்றும் கம்யூனிஸ்டுகள் அறிவார்கள். தேசங்களை நெருக்கமாகக் கொண்டு வருவதற்கும், உலக சோஷலிச அமைப்பை சோஷலிச சர்வதேசியத்தின் அடிப்படையில் ஒருங்கிணைத்து பலமடையச் செய்வதற்கும் இது ஒரு முக்கிய அம்சமாகும்.

தேசிய உணர்வுகளை மிகவும் கவனமாக கையாள வேண்டும் என்று லெனின் எச்சரித்தார். வெவ்வேறு தேசங்கள் ஒரேமாதிரி வரலாற்றுத் திசை வழியிலும் ஆனால் வித்தியாசமான நெளிவு சுழிவான பாதைகளிலும் முன்னேறிச் செல்லுகின்றன என்று அவர் எச்சரித்தார். எல்லா நிகழ்வுகளிலும் கம்யூனிஸ்டுகள் சிறிய தேசக் குறு மனப்பாங்கினையும், தனிமைப்பட்டு ஒதுக்கப்படுதலையும் எதிர்த்துப் போரிடவேண்டும் என்றும், முழுமையையும் பொதுவானவற்றையும் கணக்கிலெடுத்து ஒரு குறிப்பிட்ட நிகழ்ச்சியை பொது நலனுக்காக கீழடக்கி வைக்கலாம் என்றும் அவர் மேலும் எச்சரித்தார். மார்க்சியவாதிகளும் லெனினியவாதிகளும், தேசங்கள் சங்கமிப்பதற்கான சாதகமான பின்னணியை ஏற்படுத்துவதற்கும், என்னென்ன முரண்பாடுகள் தோன்றும், அவற்றை எப்படியெல்லாம்

கண்டறிந்து தீர்வு காணலாம் என்பதற்கும் வேறுபட்ட பல்வேறு பகைப்புலன்களைப் பரிசீலிக்கிறார்கள்.

மார்க்சிய - லெனினிய கோட்பாடுகளையும், சோஷலிச சர்வதேசியத்தையும் வெகு கண்டிப்பாக கடைப்பிடிக்கும் மக்களின் சகலதுறை ஒத்துழைப்புத்தான் தேசங்களை மேலும் நெருக்கமாக கொணர்ந்து பல் தேசிய இனமக்களின் சோஷலிச சமுதாயத்தை உறுதிப்படுத்த முடியும்.

சோஷலிச நாடுகளிலுள்ள மார்க்சிய-லெனினிய கட்சிகள், தேசங்களின் சங்கமிப்புக்கும் சகலதுறை வளர்ச்சியும் பெறுவதற்கும் வரலாற்று விதிகளின் அதிகபட்ச உபயோகத்தை முதன்மைப்படுத்தி எல்லா முயற்சிகளையும் மேற்கொள்ளுகிறார்கள். அதோடு சோஷலிச சர்வதேசியம் பரஸ்பர உதவி, சர்வதேச சோஷலிச ஒத்துழைப்பு ஆகியவற்றிற்காக எல்லா சந்தர்ப்பங்களையும் சிறப்பாக பயன்படுத்த முயற்சி செய்கிறார்கள்.

அத்தியாயம் ஐந்து

சோஷலிஸ்டு தேசங்கள், தேசிய இனங்களின் வளர்ச்சி மற்றும் சங்கமிப்பு தொடர்பாக அடிப்படையாயுள்ள பொருளாதாரக் காரணிகள்

சோஷலிசத்தின் கீழ் தேசங்கள் தேசிய இனங்களின் வளர்ச்சி மற்றும் சங்கமிப்பு தொடர்பாக அடிப்படையாயுள்ள பொருளாதாரக் காரணிகளை வரையறுத்து முறைப்படுவதற்கான அணுகுமுறை தேசங்கள் தேசிய உறவுகள் மீதான மார்க்சிய-லெனினிய போதனையில் மையமான இடத்தைப் பெறுகிறது. இந்தப் பொருளாதாரக் காரணிகளின் சாரம், முதலாவதாயும் முதன்மையாயும் சோஷலிஸ்டு உற்பத்தி உறவுகள் மற்றும் தேசிய சர்வதேசிய இயக்கங்கள் உள்ளிட்டு, சமுதாய உறவுகளின் எல்லாத் துறைகளுடனுமான அவற்றின் தொடர்புகளிலிருந்தும் பெறப்படுகிறது.

உற்பத்தி உறவுகள் தேசங்கள் இடையிலான உறவுகளை நிர்ணயம் செய்கின்றன. ஆகவே அவை சோஷலிஸ்டு தேசங்கள் தேசிய இனங்கள் மத்தியிலான ஒத்துழைப்பு மற்றும் பரஸ்பர உதவி துவக்கம், செயல்பாடு மற்றும் வளர்ச்சியின் அடித்தளமாக விளங்குகின்றன. இவை— சமுதாய, அரசியல், சித்தாந்த, கலாசார, வாழ்க்கைமுறை

மரபுரிமை இத்தியாதி—சமுதாய வாழ்க்கையின் சகல அம்சங்கள் மீதும் செல்வாக்குச் செலுத்துகின்றன. இவை தேசங்கள் தேசிய இனங்களின் அகவளர்ச்சிக் கருத்துப் படிவினைப் பல வழிகளில் உருவாக்குவது மட்டுமன்றி அவற்றின் இடையேயான உறவுகளின் தன்மையினையும் உருவாக்குகின்றன.

சோவியத் ஒன்றியத்தின் மக்களினங்களின் வாழ்க்கை மற்றும் பரஸ்பர உறவுகள் மீதான சோஷலிஸ்டு உறவுகளின் செல்வாக்கு பல்தேசிய இன சோவியத் அரசு தனியொரு பொருளாதார அமைப்பாக வளர்ச்சியுறுவதில் பிரதிபலிக்கிறது. சோவியத் பொருளாதாரம் அதன் இயல்பு, முக்கியத்துவம் வளர்ச்சி ஆகியவற்றில் சர்வதேசியத் தன்மையுடன் திகழ்கிறது. ஒரு புதிய வரலாற்று சமுதாயம் என்ற முறையில் சோவியத் மக்களின் வாழ்க்கையின் பொருளாயத அடிப்படையாகக் காட்சி தருகிறது. சோவியத் ஒன்றியத்தின் எல்லாக் குடியரசுகளின் பொருளாதாரங்களும் தனியொரு முழுமையாக உருக்கொண்டிருப்பதன் காரணத்தால் இந்த நாடு கடந்த நூற்றாண்டுகளின் திகைப்பூட்டும் கேடுகளை வெகு விரைவில் வென்று சமாளிக்க முடிந்தது. எல்லா தேசங்கள் தேசிய இனங்களையும் சார்ந்த உழைக்கும் மக்களின் நலனுக்கான ஆழமான சமூக-பொருளாதார மாற்றங்களைச் செய்வது சாத்தியமாயிற்று. ஒரு வளர்ச்சியடைந்த சோஷலிஸ்டு சமுதாய அமைப்பைக் கட்டுவதும் கம்யூனிஸ்டு நிர்மாணத்தைத் துவக்குவதும் சாத்தியமாயிற்று.

1. சோஷலிசத்தின் பொருளாயத தொழில் நுட்ப அடித்தளத்தினைக் கட்டிவரும் தேசங்கள் இடையிலான பொருளாதார ஒத்துழைப்பு

புரட்சிக்கு முந்திய ருஷ்யாவில் உற்பத்தி சக்திகள் மிகவும் சமமற்ற முறையில் விநியோகிக்கப்பட்டிருந்தன. தொழில்கள் பிரதானமாயும் நாட்டின் ஐரோப்பியப் பகுதியிலேயே செறிந்து கிடந்தன. கிழக்கு தென்கிழக்குப்

பிரதேசங்களில் அறவே எதுவும் இருக்கவில்லை. தொழில் வள மையப்பகுதி தென்திசை சுரங்கத் தொழில் மற்றும் பீடர்ஸ்பர்க், பால்டிக் பொருளாதாரப் பகுதிகள் சுரங்கம் மற்றும் யந்திரத் தொழில்களில் 67.2 சதவிகிதத்தை (போலிஷ் குபேர்னியாக்கள் நீங்கலாக) கொண்டதாக இருந்தன. இதற்கிடையே, பரந்த சைபீரியப் பிரதேசம் தொழில் துறை உற்பத்தியில் 2.2 சதவிகிதத்திற்கே வகை செய்தது. துருக்கிஸ்தான் பங்கோ இதிலும் குறைந்ததாய் 1.7 சதவிகிதமே இருந்தது.

ஜாராட்சியோ காலனியாதிக்கக் கொள்கையைப் பின்பற்றி பெரும்பாலான தேசியப் பிராந்தியங்களில் தொழில் வளர்ச்சியைத் திட்டமிட்டே மட்டந்தட்டி வந்தது. சோஷலிஸ்டு நிர்மாணப் பணி துவக்கப்பட்ட நேரம் வரை முதலாளித்துவ வளர்ச்சி கட்டத்தினை எட்டா திருந்த பின்தங்கிய மக்களினங்கள் வளர்ச்சியடைந்த சமூக உழைப்புப் பிரிவினை இல்லாது கிடந்தனர். பெரியதொழில்கள் எதுவும் இல்லை. தொழில்துறைத் தொழிலாளர் சம்பந் தமான அனுபவம் எதுவும் இருக்கவில்லை. மேலதிக வளர்ச்சி பெற்றிருந்த மக்களினங்களுடனான பொருளாதார உறவுகள் மூலப் பொருட்களை செய்முறைப் பண்டங்களுக்கு சமமற்ற முறையில் பரிவர்த்தனை செய்துகொள்வதன் அளவில் மட்டுமே பிரதானமாயும் இருந்தது.

சோவியத் ஆட்சி நிறுவப்பட்டதைத் தொடர்ந்து, தேசியப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான துவக்க நோக்கமாக இருந்தது. வெவ்வேறு மக்களினங்களின் பொருளாதாரப் பிற்பட்ட நிலைமையினை அழித்தொழிப்ப தாகும். இதை நிறைவேற்றுதற்குரிய ஒரேமார்க்கம், பழைய உற்பத்தி உறவுகளை புதிய உற்பத்தி உறவுகளால் மாற்றீடு செய்வதும், உற்பத்தி சக்திகளின் தரத்தை உயர்த்துவதும் வர்க்கக் கட்டமைப்பினைத் திருத்தி அமைப்பதும் ஆகும்.

உற்பத்தி சாதனங்களிலான பொதுவுடைமை உரிமை நாட்டில் இருக்கும் எல்லா மக்களினங்களையும் சமத்துவ மான அடிப்படையில் வைப்பதற்குரிய வாய்ப்பினை

அளித்தது. எனினும் பல தேசங்கள் குறிப்பாயும் பின்தங்கிய தேசிய இனங்கள் இதிலிருந்து நன்மை அடைவதற்கான பொருள்வகை ஆதாரங்கள் இன்றி இருந்தன. அக்டோபர் புரட்சியால் உத்தரவாதம் செய்யப்பட்ட அவர்களது அரசியல் மற்றும் சட்ட ரீதியான சமத்துவம் மெய்யான பொருளாதார சமத்துவத்தால் முழுமை செய்யப்பட வேண்டியிருந்தது. எனவே பின்தங்கிய தன்மையினை சமாளித்து அகற்றி மெய்யான சமத்துவத்தை அடைவது என்பது இந்த மக்களினங்களின் வாழ்க்கையின் சகல துறைகளையும் தழுவியதான தனியொரு இயக்கமாகும்.

அக்டோபர் புரட்சிக்குப் பின்னுல், கம்யூனிஸ்டுக் கட்சியும் சோவியத் அரசாங்கமும் தேசங்களின் மெய்யான அசமத்துவ நிலையை அகற்ற முன்வந்தன. இவ்வாறு செய்வதில் அவை சோவியத் குடியரசுகள் இடையில் ''நெருக்கமான பொருளாதார நேச அணி''*யினை உத்தரவாதம் செய்வதற்குரிய லெனினது போதனைகளைப் பின்பற்றின. காரணம் இப்படிச் செய்யாவிடில் உழைக்கும் மக்களின் நலவாழ்வை உத்தரவாதம் செய்வது சாத்தியமன்று. மெய்யான அசமத்துவத்தை ஒழித்தகற்றவும் முன்ஞள் ஒடுக்கப்பட்ட மக்களின் பின்தங்கிய நிலையை அகற்றி மாற்றவும் வேண்டுமானுல் முதலாவதாக, சமுதாயம் முழுமையின் பொருளாதார முன்னேற்றத்தைப் பெறுவது அவசியம், இரண்டாவதாக மேலதிக வளர்ச்சி பெற்ற தேசங்களின் உதவியை உறுதியாகப் பெறவேண்டுவது அவசியம்.

பின்தங்கி நிற்கும் மக்கள் இனங்கள் பல வெளியே இருந்து மெய்யானதும் நீடித்ததுமான உதவியினைப் பெருமல் தமது உரிமைகளையும் வாய்ப்புக்களையும் முழுமையாகப் பயன்படுத்த இயலவில்லை... மேலும் உயர் வளர்ச்சி மட்டத்தை எய்தி தம்மைப் பின்தள்ளிவிட்டு முன்னேறி

---

* வி. இ. லெனின், "நூல் திரட்டு", தொகுதி 31, பக். 147.

யுள்ள தேசிய இனங்களை எட்டிப்பிடிக்க இயலவில்லை* என்று கம்யூனிஸ்டுக் கட்சியின் 12 ஆவது காங்கிரஸ் தீர்மானம் வலியுறுத்தியது. இது புரிந்து கொள்ளக்கூடிய ஒன்றே.முன்னேறிய நாடுகளை எட்டிப்பிடித்துச் சமநிலைபெற பின்தங்கி நிற்கும் நாடுகள் மேலும் உயர் விகிதத்திலான வளர்ச்சி பெறுதல் வேண்டும்.

கம்யூனிஸ்டுக் கட்சியானது உரிய நடவடிக்கைகளை மேற் கொண்டது. இதன் வழி சோஷலிஸ்டு அரசு தன் சொந்தக் கரங்களில் இருந்த எல்லா பொருள்வகைச் செல்வங்களையும் ஒருமுகமாகத் திரட்டி குடியரசுகள் இடையே மறுவினி யோகம் செய்தது. இதனால், மேலதிக வளர்ச்சியடைந்த தான குடியரசுகளின் செல்வாதாரங்கள் சிலவற்றை மாற்றி அளித்து குறைவான வளர்ச்சி பெற்ற குடியரசுகளின் பொருளாதார கலாசாரத் தேவைகளைப் பூர்த்தி செய்வது சாத்தியமாயிற்று.

1918 மேயில், வறண்ட ஸ்டெப்பி வெளிகளுக்கு நீர்ப் பாசனம் வழங்க வேண்டி துருக்கிஸ்தான் குடியரசுக்கு 5 கோடி ரூபிள் ஒதுக்கி அரசாணை பிறப்பித்தார் லெனின்.

1921 டிசம்பரில், ருஷ்யக் கூட்டாட்சி அரசாங்கம் பிலோ ருஷ்யாவின் வேண்டுகோளை ஏற்று அடுத்த பொருளா தார ஆண்டின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான நிதி யுதவியை வழங்கியது, அதோடு மூலப் பொருட்களையும் யந்திரச் சாதனங்களையும் கொடுத்தது. 1921-1922-ல் டிராக்டர்கள் வாங்கவும் நீர்ப்பாசனத் திட்டங்களை மீட்டமைக்கவும், பருத்தி சாகுபடிக்கு நிதி உதவவும், ஜெமோ-அவ்சால் நீர் மின்சார ஆலையினைக் கட்டவும் துணை செய்யும் வகையில் அசெர்பைஜான், அர்மீனியா மற்றும் ஜார்ஜியாவுக்கு 1 கோடி 10 லட்சம் தங்க ரூபிள் வழங்கப் பட்டது. 1921-ல் ருஷ்யக் கூட்டாட்சி அசெர்பைஜான்,

---

* சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சி — காங்கிரசுகள், மாநாடுகள், ம.க. பிளீனம் கூட்டங்களின் தீர்மானங் கள், தொகுதி 2, பக். 438 (ருஷ்ய மொழியில்).

அர்மீனியா, ஜார்ஜியா குடியரசுகளுக்கு 35 லட்சம் பூடுதானியம் அனுமதித்தது. 1921—1922-ல் துருக்கிஸ்தான் குடியரசு அதன் பருத்தி விளைப் பிராந்தியங்களுக்கு என்று 45 லட்சம் பூடுதானியம் பெற்றது. அதோடு விவசாயி களுக்கு பண்ணைக் கருவிகளும் உணவும் தரப்பட்டன.

உள்நாட்டுப் போர் முடிவடைவதற்குமுன் போரினல் பாழ்படுத்தப்பட்டு பட்டினியால் வாடியதான சோவியத் ருஷ்யா, கார்க்கவ் ரயில்வே தொழிலாளர்களுக்கும் டோனத்ஸ் சுரங்கத் தொழிலாளர்களுக்கும் கணிசமான தொகை அனுப்பி வைத்தது. பிலோருஷ்யா, லித்துவேனியா, லாத்வியாவுக்குப் பேரளவிலான பொருளாதார உதவி வழங்கியது.

ருஷ்யாவும் இதர தேசங்களும் பின்தங்கிநின்ற மக்களுக்கு வேறு பல வழிகளிலும் உதவி அளித்தன. தொழில்வளப் பகுதிகளில் (மையப் பகுதி உக்ரேன், ஊரால் இத்தியாதி) இருந்த நிறுவனங்கள் மத்திய ஆசியா டிரான்ஸ்காகேசியா முதலியவற்றில் இருந்த ஆலைகளுக்குத் தேவைப்பட்ட யந்திரங்கள், சாதனங்களை உற்பத்தி செய்தன. 1921—1922-ல், பல ரயில் பெட்டிகளில் நிரம்பிய செய்பொருட்கள் தெற்கு மற்றும் கிழக்கு பகுதிகளுக்கு ருஷ்ய கூட்டாட்சி நகரங்களில் இருந்து அனுப்பி வைக்கப் பட்டன. அதோடு பொறியாளர், தொழில் நுட்ப நிபுணர்கள் தேர்ச்சிமிகு தொழிலாளர், விஞ்ஞானிகள், ஆசிரியர்கள், விரிவுரையாளர்கள், கலாசார ஊழியர்களும் அனுப்பி வைக்கப்பட்டார்கள். தேசியப் பகுதிகளில் புதிய தொழில் நிறுவனங்கள் கட்டப்பெற்றன. தொழில் துறை மற்றும் அலுவலக ஊழியர்கள் அறிவுஜீவிகள் உள்நாட்டு மக்கள் மத்தியில் இருந்து பயிற்றுவிக்கப்பட்டார்கள்.

போருக்கு முன்னதாகவே எல்லா சோவியத் மக்களினங் களிடையிலும் பயிற்சிபெற்ற சொந்த ஊழியர்கள் இருந்தனர் என்பதற்கு ஸ்தல தேசிய இனத்திடை தொழிலாளர் சதவிகிதம் அதிகரித்து வருவது சான்றுபகரும். உதாரணமாக 1937-ல், பிலோருஷ்யா தொழில்துறை

ஊழியர்களிடை 69.5 சதவிகிதமும், தத்தாரியாவில் 36.5 சதவிகிதமும், மொர்தாவியாவில் 33 சதவிகிதமும், கிர்கீசியாவில் 30 சதவிகிதமும், தகெஸ்தானில் 30 சதவிகிதமும், யகூடியாவில் 10 சதவிகிதமும் ஸ்தல ஊழியர்களாக இருந்தார்கள். கோமி சுயாட்சி சோவியத் சோஷலிஸ்டுக் குடியரசில் ஸ்தல தொழில்களிலான இவர்களது தொகை 1926-ல் இருந்ததுபோல 7.7 மடங்கு 1939-ல் அதிகரித்திருந்தது. புரட்சிக்கு முன்பாக ஸ்தல ஊழியர்களே இருந்திராத மத்திய ஆசியக் குடியரசுகளில் 1939-ல் கால்வாசிக்குமேல் உள் நாட்டவராக இருந்தார்கள். உக்ரேன் பிலோருஷ்யா அர்மீனியாவில் மூன்றில் இரண்டு பங்குக்கு மேல் உள்ளூர் தொழிலாளர் இருந்தார்கள்.

சோவியத் ஒன்றியத்தின் தொழிலாளி வர்க்கத்தின் தேசிய அணிப் பிரிவுகள் பெருக்கம் தேசங்கள் மேலும் மலர்ச்சியடைவதையும் சங்கமிப்பதையும் கட்டாயமாக்கியது. அதோடு பல்வேறு தேசிய இனங்களைச் சார்ந்த உழைக்கும் மக்கள் மத்தியில் சர்வதேசிய அம்சங்களை அபிவிருத்தி செய்தது. குடியரசுகள் பிராந்தியங்களிலான தொழில் வளர்ச்சியிலும், தேசிய தொழிலாளர் அணிப் பிரிவுகளை பயிற்றுவிப்பதிலும் ருஷ்யத் தொழிலாளர்கள் முன்னணியில் இருந்தார்கள்.

தேசிய சுற்று வட்டாரங்கள் எனப்படுவனவற்றுக்கு உதவி செய்வது என்பது சோவியத் சோஷலிஸ்டு குடியரசுகளின் ஒன்றியத்தின் ஒட்டுமொத்தமான பொருளாதாரக் கொள்கையில் ஒரு பாகமாக ஆயிற்று. பல ஆண்டுகளுக்கு பல ஒன்றியக் குடியரசுகளின் பட்ஜெட் செலவினங்கள் அகில ஒன்றிய பட்ஜெட் உதவி நிதிகளில் இருந்தே பிரதானமாயும் ஏற்பாடு செய்யப்பட்டன என்று கூறுவதே இங்கு போதுமானது என்று லியோனித் பிரெஷ்நேவ் நினைவுகூரியுள்ளார். ''எடுத்துக்காட்டாக, 1924-லும் 1925-லும் துருக்மன் குடியரசின் பட்ஜெட்டில் 10 சதவிகிதமே அதன் வருவாயில் இருந்து நிதி உதவப்பெற்றது. உக்ரேன் போன்ற பெரிய குடியரசும்கூடத் தனது செல்வாதாரங்

களில் இருந்து பட்ஜெட் செலவின் 40 சதவிகிதத்திற்கு மட்டுமே வகைசெய்தது.''*

புதிய சமுதாயம் அமைப்பினைக் கட்டிவந்த காலப்பகுதி முழுவதிலும் கம்யூனிஸ்டுக் கட்சியும் சோவியத் அரசும் பின்தங்கி நின்ற மக்களினங்களுக்கு உதவி அளித்தன. இந்த உதவியின் அளவும் வடிவங்களும் அரும்பிவரும் சோஷலிசத்தின் பொருளாயத—தொழில் நுட்ப அடிப்படையினைச் சார்ந்ததாக இருந்தது இயல்பே. நாட்டிலுள்ள எல்லாத் தேசங்கள் தேசிய இனங்களையும் சார்ந்த உழைக்கும் மக்களின் நலன் கருதி ஆழமான சமூகப் பொருளாதார மாற்றங்களைக் கொண்டு வருவதற்கு இந்த உதவி குடியரசுகளுக்குத் துணை செய்தது.

பின்தங்கி நிற்கும் மக்களினங்களுக்கு ருஷ்ய மற்றும் இதர தேசங்கள் அளித்ததான தன்னலமற்ற உதவி பரஸ்பரமான உதவியை எவ்வகையிலும் தடுத்துவிடவில்லை. இந்தப் பரஸ்பர உதவி-தொழில்களுக்கான கச்சாப் பொருள்கள், நாட்டின் மத்தியப் பிராந்திய மக்களுக்கு உணவு இத்தியாதி பல்வேறு வடிவங்களில் வழங்கப்பட்டது.

பொருளாதார ஒத்துழைப்பு மெய்யான சமத்துவத்தின் முன்னேற்றத்துடன் சமவேகத்தில் வளர்ந்தது. புதிய உற்பத்தி உறவுகள், அனைத்து உழைக்கும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் அடிப்படையில் நாடு முழுவதிலும் உற்பத்தியை ஊக்குவிப்பது என்ற பொதுக் குறி இலக்கை தேசங்களிடமும் தேசிய இனங்களிடமும் ஒப்படைத்தன. இந்த ஒத்துழைப்பும் பரஸ்பர உதவியும் வளர்ச்சியின் புறநிலைத் தேவைகளைத் வெளிப்படுத்தின. சமுதாயத்தின் உற்பத்தி சக்திகளை விரிவுபடுத்தவும், சோஷலிஸ்டுப் பொருளாதாரத்தைக் கட்டி வளர்க்கவும் இவை தேவையாக இருந்தன. தேசங்கள் தேசிய இனங்கள்

---

* லி. இ. பிரெஷ்நெவ்-**சோவியத் சோஷலிஸ்டு குடியரசுகளின் ஒன்றியத்தின் ஐம்பதாவது ஆண்டு விழா**, பக். 20-21.

இடையிலான இந்த ஒத்துழைப்பு சோஷலிஸ்டு மற்றும் கம்யூனிஸ்டு நிர்மாணக் காலகட்டத்தில் வரலாற்றின் இயல்பான விதியாகும்.

மக்களினங்கள் மத்தியிலான ஒத்துழைப்புடன் கூடவே, பல்வேறு தேசியவாத அரசியல்-சித்தாந்தப் போக்குகளை எதிர்த்த போராட்டமும் பின்தொடர்ந்தது. உதாரணமாக சாரத்தில் பிரிந்த தனித்ததான தேசிய இருத்தலின் அவசியத்தை 'நிரூபிக்க' முயலும் ''தத்துவங்களை'' பூர்ஷுவா தேசிய வாதிகள் வைத்திருந்தார்கள். நாட்டின் தேசியப் பகுதிகளில் அவர்கள் சோஷலிஸ்டு நிர்மாணத்தைக் தடுத்து நிறுத்தவும், இறுதியாக செயல் குலைக்கவும் விரும்பினார்கள். தேசியத் தனித்துவத்தைப் பாதுகாப்பது எனும் அறைகூவல்களின் பின்னே ஒளிந்து நின்று, பழைய பொருளாதாரக் கட்டுமானத்தையே நிரந்தரமாக்க அவர்கள் முயன்றார்கள். ஜாராட்சியின் முந்தைய மக்கள்-விரோதக் கொள்கையின் காரணமாக ருஷ்யர்களுக்கு எதிராக படிப்படியே பரப்பப்படும் அவநம்பிக்கையைத் தமக்கு ஆதரவாகப் பயன்படுத்த முயன்றார்கள். இந்த அவநம்பிக்கை மக்கள் பரப்பின் சில பகுதிகளிடையே, குறிப்பாயும் பின்தங்கி நிற்கும் விவசாயிகள் மத்தியில் இன்னும் நீடித்து நிலவி வந்தது தெரிந்ததே.

தேசங்கள் தேசிய இனங்களின் தேவைகள்பால் கம்யூனிஸ்டுக் கட்சியும் சோவியத் அரசும் தோற்றுவித்த அக்கறையும், பின்தங்கிய நிலையினை அகற்றி ஓட்டுவதில் உதவுவதற்கான அவற்றின் மனப்பூர்வமான முயற்சிகளும் சர்வதேச ஒற்றுமையைப் பிறப்பித்தன.

மேலதிக வளர்ச்சியடைந்த தேசங்களின் உதவி, பின்தங்கிய மக்களினங்கள் மற்றும் நாடு முழுதுக்குமான தேவைகளை நோக்கி முடுக்கப்பட்டது. ''பின்தங்கிய தேசியப் பகுதிகள் மற்றும் பிற்பட்ட பிராந்தியங்களின் பொருளாதாரத்தையும் கலாசாரத்தையும் உயர்த்துவதில் விசேஷ கவனம் செலுத்த வேண்டும். காரணம், அவற்றின் பொருளாதார கலாசார பின்தங்கிய நிலைமையினைப் படிப்

படியாக அழித்தொழிப்பது அவசியமாகும். மேலும் ஒன்றியத்தின் தேவைகள் அவசியங்கள் உடன் இந்தப் பகுதியின் தேவைகளையும் அவசியங்களையும் ஒருமுகப்படுத்தும் பொருட்டு அவற்றின் பொருளாதாரம் மற்றும் கலாசாரத்தின் வளர்ச்சி மேலும் துரித வேகத்தில் நடைபெறுவதற்கு வகை செய்தல்வேண்டும்''* என்பதாக 15-வது கட்சிக் காங்கிரஸ் தீர்மானம் வலியுறுத்தியது. சோஷலிஸ்டு நிர்மாணத்தின் ஒரு கட்டத்தில் இருந்து இன்னொரு கட்டத்திற்கு சோவியத் ஒன்றியத்தின் பொருளாதார உள்ளாற்றல் படிப்படியே அதிகரித்தது, இது முன்னாள் ஒடுக்கப்பட்ட மக்கள் தமது பின்தங்கிய நிலைமையினை அகற்றி மீண்டிட உதவியது.

தொழில் வளர்ச்சியும் விவசாயத்தில் கூட்டு முறை அபிவிருத்தியும் குடியரசுகளின் பொருளாதார வளர்ச்சி மட்டங்கள் இடையிலான ஏற்றத் தாழ்வை அகற்றுவதற்குத் துணை புரிந்தன. ஒவ்வொரு தேசம் தேசிய இனத்தின் அகத்தேயும் சோவியத் ஒன்றியத்தில் ஒட்டுமொத்தமாயும் தொழிலாளர் கூட்டுப்பண்ணை விவசாயிகளின் நேச அணிக்கு உத்வேகமூட்டின, உறுதியான பொருளாதார கலாசார வளர்ச்சியை உத்தரவாதம் செய்தன. சில மக்களினங்கள் தொழில் வளமிக்க மக்களினங்களாயும் வேறு சில விவசாயி மக்களினங்களாயும் வளர்ச்சியடைவதற்கு ஏதுவாக இருந்த உழைப்புப் பிரிவினைக்கு முடிவு கட்டப்பட்டது.

சோஷலிஸ்டு நிர்மாணப் பணி காலப் பகுதியிலான கம்யூனிஸ்டுக் கட்சியின் பொருளாதாரக் கொள்கை லெனினது கட்டளையின் உருவகமாகும். பொருளாதார மற்றும் தொழில் செல்வங்களை சமமாகப் பயன்படுத்தும் நோக்கம் கொண்டதான பெருவீதமான திட்டமிட்ட நிர்மாணப் பணிமட்டுமே சோஷலிஸ்டுத் தன்மையது எனக்

---

* **சோ.க.க காங்கிரஸ்கள், மாநாடுகள், ம. க. பிளீனம் கூட்டங்களின் தீர்மானங்கள்**, தொகுதி 4, மாஸ்கோ, 1970, பக். 45 (ருஷ்ய மொழியில்).

குறிப்பிடும் தகுதி பெற்றதாகும்'' என்று 1918-ல் அவர் கூறினர்.* கம்யூனிஸ்டுக் கட்சியின் கொள்கையினுலும் தனியொரு பொருளாதாரத் திட்டத்தினுலும் நெறியாக்கம் செய்யப்பட்டு, சோஷலிசத்தின் பொருளாயத மற்றும் தொழில்நுட்ப அடித்தளத்தைக் கட்டுவதில் சோவியத் தேசங்கள், தேசிய இனங்கள் வகித்த பங்கு, அவற்றின் பொருளாதார வளர்ச்சியின் புதுமைத் தன்மையை உறுதிப் படுத்தியது. மக்கள் சேர்ந்து முன்வருவதை ஊக்குவித்தது. பெருவீத பொதுத் திட்டத்தின் அடிப்படையிலான சோஷலிஸ்டு நிர்மாணமே குடியரசுகளின் பொருளாதார வளர்ச்சியை சமநிலைப் படுத்துவதற்கான புறநிலை முன் நிபந்தனையாகும்.

சோவியத் ஒன்றியத்தை பாசிஸ்டு ஜெர்மனி தாக்கியது. இதனுல் இந்த நடைமுறையின் வேகம் குன்றியது. மகத்தான தேசபக்தப் போரின்போது நாஜிப் படையெடுப்பாளர்கள் பொருளாதாரத்தின் மீது பிரம்மாண்டமான பொருள் வகைச் சேதத்தை விளைத்தார்கள். போர் இழப்பான 67,900 கோடி ரூபிள்களில் (1941 விலைப்படி) ருஷ்ய சமஷ்டிக்கு ஏற்பட்ட இழப்பு 25,500 கோடி, உக்ரேனுக்கு 28,500 கோடி,பிலோ ருஷ்யாவுக்கு 7,500 கோடி,லாத்வியா வுக்கு 2,000, கோடி லித்துவேனியாவுக்கு 1,700 கோடி, எஸ்தோனியாவுக்கு 1,600 கோடி, மல்தாவியாவுக்கு 1,100 கோடி. ஆனுல் ''இந்தப் புள்ளி விவரங்கள் எதுவுமே போரில் சோவியத் மக்களுக்கு ஏற்பட்ட கடும் சேதத்தின் மெய்யான அளவு குறித்த எதார்த்தமான விவரணத்தைத் தர முடியாது'' என்று லி. இ. பிரெஷ்நெவ் கூறினர். ''பாசிஸ்டு களால் அழித்து ஒழிக்கப்பட்ட மிகப் பரவலான பொருள் வகை, மற்றும் அகவளச் செல்வங்களை படைத்துருவாக்க நமது மக்களின் பல தலைமுறையினர் ஈடுபடுத்தியதான பிரம்மாண்ட உழைப்பு சிந்தனை மற்றும் ஆற்றலை

* வி. இ. லெனின், ''நூல் திரட்டு'', தொகுதி 28, பக். 36.

கணக்கெடுத்துப் புள்ளி உருவில் வரையறுப்பது சாத்திய மல்ல''* எனவும் அவர் கூறியுள்ளார்.

போரில் அழிந்து போனதான பொருளாதாரத்தை அதன் இடிபாடுகளில் இருந்து உயர்த்தி எழுப்ப வேண்டியதாக இருந்தது. தொழில்களையும் விவசாயத்தையும் அவற்றின் யுத்த முற்கால மட்டத்திற்கு மீட்டமைப்பது அவசியமாக இருந்தது. துரிதமான பொருளாதார, கலாசார முன்னேற்றம் தேவைப்பட்டது. காலம் காத்திருக்காது. கட்சியும் மக்களும் காலத்தை வீணாக்குவதில்லை என்ற உறுதியுடன் செயல்பட்டார்கள். 1946-ல், சோவியத் ஒன்றியத்தின் சுப்ரீம் சோவியத் 1946-1950க்கான பொருளாதார மறு சீரமைப்பு மற்றும் வளர்ச்சிக்கான ஐந்தாண்டுத் திட்டம் பற்றிய சட்டத்தை நிறைவேற்றியது. இது பொருளாதாரத்திற்கு போரினால் ஏற்பட்ட சேதத்தை சீர்படுத்த எல்லா முதலீடுகளிலுமாய் 46 சதவிகிதத்தை ஒதுக்கியது.

போரினால் சேதமடைந்த பகுதிகளைச் சீரமைக்க சோவியத் மக்கள் தமது பலம் முழுவதையும் வள ஆதாரங்கள் அனைத்தையும் அணி திரட்டினார்கள். பல குடியரசுகளும் பிரதேசங்களும் குறிப்பிட்ட பகுதிகள் விஷயத்தில் உதவும் புரவலர்களாகச் செயல்பட முன்வந்தன. எடுத்துக்காட்டாக கஜக்ஸ்தான், உக்ரேன், ஸ்டாலின் கிராட் மற்றும் ஒரல் பிரதேசங்களுக்கு பொறுப்பு ஏற்றது. அசெர்பைஜான் ஸ்தவரபோல் பிரதேசம் பிலோ ருஷ்யாவின் உட்முர்ட்ஸ் பகுதிகளுக்குப் பொறுப்பேற்றது.

மாஸ்கோ, லெனின்கிராட், கோர்க்கி, ஸ்வெர்த்லோவ்ஸ்க், செலியாபின்ஸ்க், கரகண்டா, துலா, யாரோஸ்லாவல் மற்றும் இதர நகரங்களில் இருந்த தொழிற்சாலை நிறுவனங்கள் தோனத்ஸ் படுகை நிலக்கரிச் சுரங்கங்கள் மீண்டும் துவங்கிச் செயல்பட உதவின. மாஸ்கோ, லெனின் கிராட், குபிஷெவ், மாக்னிகொடார்ஸ்க், தாஷ்கெண்டு மற்றும் இதர

* லி. இ. பிரெஷ்நெவ், **லெனின் வழியில்**, மாஸ்கோ, 1970, தொகுதி 1, பக். 140 (ருஷ்ய மொழியில்).

இடங்களிலான தொழில் நிறுவனங்கள் நீப்பர் நீர் மின்சார நிலையத்துக்கான யந்திரத் தேவைகளைசெய்து நிறைவேற்றின.

1944-ல், அதாவது போர் முடிவுறுவதற்கு முன்பாகவே சோவியத் அரசாங்கம் 4,290 லட்சம் ரூபிள், ஆயிரத்துக்கும் அதிகமான யந்திரக் கருவிகள், ஏராளமான உலோகம், பெருமளவில் பல்வேறு யந்திரங்கள், பேரளவில் கட்டட சாதனங்களை பிலோருஷ்யாவின் மறு வாழ்வுக்கென ஒதுக்கி யிருந்தது. பிலோருஷ்யாவின் விவசாயிகளுக்கு 13,000 குதிரைகள், 80,000 கால்நடைகள் 130,000 ஆடுகள் வழங்கப்பட்டன. கூடுதலாக 92 கோடி ரூபிள் அல்லது போருக்கு முந்திய தொழில் வளர்ச்சிக்கு ஒதுக்கப்பட்ட தொகையை விடவும் 40 சதவிகிதம் அதிகத் தொகை 1944-1950 ஆம் ஆண்டுகளுக்கான பிலோருஷ்யப் பொருளா தாரத்துக்கு எனத் தரப்பட்டது.

ருஷ்யக் கூட்டாட்சியின் சுயாட்சிக் குடியரசுகளில் போரினல் சீரழிந்த பொருளாதாரங்களை சீரமைக்க மிகப் பெரும் தொகைகள் ஒதுக்கப்பட்டன. 1946-1948-ல், வடக்கு ஒஸெட்டியா தொழில்துறை மற்றும் போக்கு வரத்துத் துறைகளுக்கு என 3260 லட்சம் ரூபிள் அள்ளித் தரப்பட்டது. 1943-1948-ஆம் ஆண்டுகளில், கபார்தினோ-பல்காரியா பொருளாதாரத்திற்கு என 1480 லட்சம் ரூபிள் உதவப்பட்டது.

பால்டிக் குடியரசுகளான லாத்வியா, லித்துவேனியா, எஸ்தோனியாவின் பொருளாதாரம் சோவியத் ஒன்றியத்தி லுள்ள எல்லாக் குடியரசுகளின் தீவிர உதவியுடன் மீண்டும் சீரமைக்கப்பட்டது. மாஸ்கோவும் லெனின்கிராடும் தொழிற்சாலை சாதனங்களை யந்திரங்கள் கருவிகளை வழங்கின; ஊரால் பகுதி தேன் இரும்பு, உருக்கு மற்றும் குழாய்களை உதவியது; பக்கூ,குரோஸ்னி நகர்கள் எண்ணெய் மற்றும் எண்ணெய்ப் பொருட்களை அளித்தன; கோர்க்கி மோட்டார் கார்களையும் மத்திய ஆசியக் குடியரசுகள் பருத்தியையும் அனுப்பி வைத்தன. 1946-ல் மாத்திரமே,

லாத்வியாவுக்கு போருக்கு முன்பு பூர்ஷுவா ஆட்சியில் இருந்ததைவிடவும் அதிகமான கார்கள் கிடைத்தன. லித்துவேனியாவுக்கு 75,000 டன் உலோகங்கள், 78,000 டன் சிமெண்ட், 850,000 டன் நிலக்கரி மற்றும் இதர பண்டங்கள் (1946க்கும் 1949க்கும்இடையே) கிடைத்தன. இதர இடங்களில் இருந்து பெறப்பட்ட பொருட்கள் ஒரு புறம் இருக்க, எஸ்தோனியாவுக்கு 25 கோடி ரூபிள் மதிப்புள்ள பொருட்கள், மூலப் பொருட்கள் சாதனங்கள் எஸ்தோனியா பண்டக் கொள்முதல் நிறுவனம் மூலம் மட்டுமே தரவழைக்கப்பட்டன.

போரால் சீரழிந்த குடியரசுகளுக்கான பண்டங்களின் இறக்குமதிகள் ஏற்றுமதிகளை விடவும் அதிகமாக இருந்தன. இது அவற்றின் மறு சீரமைப்பைத் துரிதப்படுத்தியது. 1945-ல், எஸ்தோனியாவில் இருந்து கப்பல் மூலம் ஏற்றி அனுப்பப்பட்ட செய்பொருட்கள் மொத்த உற்பத்தியில் 7 சதவிகிதம் மட்டுமே. இதன் மதிப்பு 16,200,000 ரூபிள். ஆனல் கப்பல் மூலம் இறக்குமதி செய்யப்பட்டதான பண்டங்களின் மதிப்பு இதைப்போலப் பதின் மடங்காகும்.

-இதர குடியரசுகள் மற்றும் பிராந்தியங்களின் சோதர உதவியின் விளைவாகவே நாஜிகளின் படையெடுப்புக்கு இலக்கான குடியரசுகளின் பொருளாதாரங்கள் 1940 ஆம் ஆண்டுகளின் இறுதிக்குள் மீண்டும் சீரமைக்கப்பட்டுவிட்டன. 1950-ம் ஆண்டு இறுதிக்குள் எல்லாக் குடியரசுகளின் பொருளாதார வளர்ச்சி மட்டங்களையும் சமநிலைப்படுத்துவதில் கணிசமான முன்னேற்றம் காணப்பட்டது. 1958–ல் சோவியத் ஒன்றியத்தின் மொத்தத் தொழில்துறை உற்பத்தி 1940-ல் இருந்ததுபோன்று 330 சதவிகிதம் அதிகமாக இருந்தது. இந்த அளவுகள் கஜக்ஸ்தானுக்கு 467 சதவிகிதம், லித்துவேனியாவுக்கு சுமார் 700 சதவிகிதம், மல்தோவியாவுக்கு 655, லாத்வியாவுக்கு 770, கிர்க்சியாவுக்கு 410, அர்மீனியாவுக்கு 530, எஸ்தோனியாவுக்கு 826 சதவிகிதமாக இருந்தன. உக்ரேனில் தொழில்துறை பண்ட

உற்பத்தி இதே கால அளவில் 202 சதவிகிதமும், பிலோ ருஷ்யாவில் 237, ஜார்ஜியாவில் 240, அசெர்பைஜானில் 145 சதவிகிதமும் இருந்தது.

நாலாவது ஐந்தாவது மற்றும் ஆருவது திட்ட காலப் பகுதியில் கனரகத் தொழில்களின் வளர்ச்சிக்கு முதலிடம் தரப்பட வேண்டும் என்று கட்சி மேற்கொண்ட திசைவழி பொருளாதார மறுசீராக்கம் மற்றும் பொருளாதார மட்டங்களை சமநிலைப்படுத்தும் விஷயத்தில் தலையாய முக்கியத்துவமுடையதாகும். 1913-க்கும் 1958-க்கும் இடையே, மொத்தத் தொழில்துறை பண்ட உற்பத்தி 1913ஐக் காட்டிலும் 36 மடங்கு அதிகரித்தது. அதே பொழுதில் உற்பத்தி சாதனங்கள் உற்பத்தி 83 மடங்கும், பொறியியல் உலோக வேலைத் துறை உற்பத்தி இதே கால கட்டத்தில் 240 மடங்கும் அதிகரித்துள்ளது. நீண்ட காலம் தரிசு போட்ட நிலம், கன்னி நிலம் அபிவிருத்தி செய்யப்பட்டதன் பலனாக விவசாயத் துறையிலும் முக்கியமான முன்னேற்றங்கள் காணப் பெற்றன. "நாட்டின் சகல சக்திகளையும் வள ஆதாரங்களையும் ஒன்று திரட்டியது மூலம் மட்டுமே சோவியத் மக்கள் வரலாற்று ரீதியில் இத்தகைய குறுகிய காலத்திற்குள்ளேயே ஜாராட்சி மற்றும் முதலாளித்துவத்தின் கெடுமரபான பொருளாதார கலாசார பிற்பட்ட தன்மையினை ஒழித்துக்கட்ட முடிந்தது. சோஷலிசத்தைக் கட்டி சோவியத் ஒன்றியத்தை வலிமை மிக்க, நன்கு அபிவிருத்தியடைந்த நாடாக மாற்றியமைக்க முடிந்தது. கம்யூனிஸ்டு சமுதாயத்தை நிர்மாணிக்கும் பணியினைத் துவங்குவது சாத்தியமாயிற்று."* லெனினிய தேசிய இனக்கொள்கையின் விளைவாக, பழைய ருஷ்யாவில் சகஜமாகக் கூறப்படும் "பிற்பட்ட தேசிய புறப் பகுதி என்ற தொடர் மறைந்துவிட்டது. இது நமது கட்சிக்கு ஏற்பட்ட

* **சோவியத் சோஷலிஸ்டுக் குடியரசுகளின் ஒன்றியத்தின் உருவாக்கத்தின் 50–ஆம் ஆண்டு விழா தயாரிப்புகள்,** சோ.க.க. ம.க. தீர்மானம், பக். 14.

அற்புதமான சாதனை. சோஷலிசத்தின், தேசங்களின் சோஷலிஸ்டு நட்புறவின் சாதனை."*

2. வளர்ச்சியடைந்த சோஷலிஸ்டு சமுதாயத்தில் தேசங்கள், தேசிய இனங்கள் இடையே பொருளாதார பந்தங்கள் மேலும் வலுப்படுதல்

கம்யூனிசம் கட்டப்பட்டதன் விளைவாக, சோஷலிஸ்டு தேசங்கள், தேசிய இனங்கள் இடையிலான பொருளாதார உறவுகளில் ஒரு புதிய கட்டம் பிறந்தது, அவற்றின் சங்கமிப்பு மேலும் வலுப்பெற்றது. அவற்றின் ஒத்துழைப்பு மற்றும் பரஸ்பர உதவியின் முக்கியத்துவமும் விரிவும் பெருமளவுக்கு அதிகரித்தன. சமுதாயம் சர்வதேசியத் தன்மை பெறுவது மேலும் தீவிரமடைந்தது.

உற்பத்திச் சக்திகளின் துரிதமான வளர்ச்சியும் மேம்பாடும், மிகப்பெரு வீதத்திலான நிர்மாணப்பணிகளும், தொடர்ந்து அதிகரித்துவரும் விஞ்ஞான தொழில்நுட்ப முன்னேற்றத்தின் வேகமும், சோவியத் குடியரசுகளிடையே ஒத்துழைப்பும் பரஸ்பர உதவியும் மேலும் விரிவடைவதை அவசியமாக்கின. கம்யூனிசத்தின் பொருளாயத மற்றும் தொழில்நுட்ப அடிப்படை எல்லா சோஷலிஸ்டு தேசங்கள் தேசிய இனங்களின் ஒருமுகப்படுத்தப் பட்டதான முயற்சி மூலம் கூட்டாகக் கட்டப்பட்டு வருகிறது.

எல்லாப் பொருளாதாரத் துறைகளிலுமான குடியரசுகளின் ஒத்துழைப்பு ஒவ்வொன்றின் வளர்ச்சிமீதும் பிரம்மாண்டமான தாக்கம் செலுத்தியது. சோவியத் சோஷலிஸ்டு குடியரசுகளின் ஒன்றியம் தோற்றுவிக்கப் பட்டதான 1922 ஆம் ஆண்டுடன் ஒப்பு நோக்கும்போதில் 1972-ல் தொழில்துறை பண்ட உற்பத்தி கஜக்ஸ்தானில் 600 மடங்கும், மல்தாவியாவில் 532 மடங்கும்,

* லி. இ. பிரெஷ்நெவ், **சோவியத் சோஷலிஸ்டு குடியரசுகளின் ஒன்றியத்தின் 50-ஆம் ஆண்டுவிழா**, பக். 24.

அர்மீனியாவில் 527 மடங்கும், தாஜிகிஸ்தானில் 513 மடங்கும், கிர்கீசியாவில் 412 மடங்கும், பிலோருஷ்யாவில் 343 மடங்கும், ருஷ்யக் கூட்டாட்சியில் 308 மடங்கும், உஸ்பெகிஸ்தானில் 239 மடங்கும், உக்ரேனில் 176 மடங்கும், ஜார்ஜியாவில் 161 மடங்கும், துருக்மேனியாவில் 136 மடங்கும்,அசெர்பைஜானில் 67 மடங்கும் அதிகரித்தது. லாத்வியா, லித்துவேனியா மற்றும் எஸ்தோனியாவில் 1940க்குப் பிந்திய கட்டத்தில் தொழில்துறை பண்ட உற்பத்தி 31-37 மடங்கு அதிகரித்தது.

குடியரசுகளிடையேயான ஒத்துழைப்புக்கும் பரஸ்பர உதவிக்கும் சோவியத் தேசியப்பொருளாதாரத் திட்டங்களில் உரியவகை செய்யப்பட்டிருக்கிறது. உ தா ர ண மா க பத்தாவது ஐந்தாண்டுத் திட்டமானது சோவியத் ஒன்றியத்தில் ஒட்டு மொத்தமாக தொழில்துறை உற்பத்தி 35—39 சதவிகிதம் அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கிறது, அதே பொழுதில்* அசெர்பைஜானில் 37-41 சதவிகிதம், பிலோருஷ்யா, கஜக்ஸ்தானில் 39-43 சதவிகிதம், தாஜிகிஸ் தானில் 38-42 சதவிகிதம், அர்மீனியாவில் 43-47 சதவிகிதம்,மல்தாவியாவில் 45-49 சதவிகிதம் வளர்ச்சியைக் குறித்துள்ளது. இன்று, பல்வேறு குடியரசுகளின் பொருளாதார அபிவிருத்தியினை சமநிலைப்படுத்தும் பணி பிரதானமாயும் பூர்த்தி செய்யப்பட்டுவிட்ட நிலையில், நாம் பொருளாதாரப் பிரச்சினைகளை நாடு முழுவதன் நலனைக் கருத்தில் கொண்டு அணுகும் சாத்தியக்கூறு ஏற்பட்டுள்ளது, சோவியத் ஒன்றியத்தின் தேசியப் பொருளாதாரம் முழுவதன் திறனை உயர்த்துவதும் எனும் கொள்கை நிலையில், ஒன்றிய மற்றும் சுயாட்சிக் குடியரசுகளின் விசேஷ நலன் கருதிச் செயல்படும் நிலைமை ஏற்பட்டுள்ளது" என்று லியனித் பிரெஷ்நெவ் சோவியத் ஒன்றியத்தின் க. க. ம. க. மற்றும் சுப்ரீம் சோவியத் ருஷ்யக் கூட்டாட்சி

* "1976—80-க்கான சோவியத் ஒன்றியத்தின் தேசியப் பொருளாதார வளர்ச்சிக்கான வழிகாட்டு முறைகள்", மாஸ்கோ, 1976, பக். 97—105.

யின் சுப்ரீம் சோவியத் ஆகியவற்றின் கூட்டுக் கூட்டத்தில் கூறினர்.*

சோவியத் ஒன்றியத்தின் தேசங்கள் தேசிய இனங்களின் துரிதமான சர்வாம்சமான பொருளாதார சமூக அரசியல் மற்றும் கலாசார முன்னேற்றத்துக்கு காரணம் சோஷலிசத்தின் சாதக அம்சங்களேயாகும். சாத்தியமான அளவு ஆக முழுமையான திட்டமிடலையும், நாடு முழுதுக்குமான வீதத்தில் உற்பத்தி சக்திகளை சீராகப் பங்கீடு செய்வதற்கும், இன தேசிய, இன வித்தியாசங்கள் எதுவும் இன்றி இவற்றை மக்கள் நலனுக்காகப் பயன்படுத்துவதற்குமான நிலைமைகளை சோஷலிசம் வழங்கி உதவுகிறது. எந்த ஒரு சமுதாய அமைப்பு அதன் உற்பத்தி சக்திகளை ஒன்றுடன் ஒன்று இசைவிணக்கத்தோடு தனி ஒரு பரந்த திட்டத்தின் அடிப்படையில் பொருத்துவதைச் சாத்தியமாக்குகிறதோ அத்தகைய சமுதாய அமைப்பு மட்டுமே அதன் சொந்த வளர்ச்சிக்கு மிகவும் சிறப்பான முறையில் தகவமைந்த வழியில், நாடு முழுவதில் தொழில்கள் பரவலாக வினியோகிக்கப்பட அனுமதிக்கும், அதோடு உற்பத்தியின் இதர அம்சங்களைப் பராமரித்து வளர்க்கும்''** என்று பிரடெரிக் எங்கெல்ஸ் எழுதினர்.

தேசங்கள் தேசிய இனங்கள் வளர்ச்சி மற்றும் சங்கமிப்பு சம்பந்தமான தொழிலாளி வர்க்கத்தின் தலைமைப் பாத்திரம் சோஷலிஸ்டு சுற்றுச் சூழலில் மேலும் அதிகத் தெளிவாக உள்ளது. சமுதாயத்தில் தொழிலாளர் வகித்து வரும் ஸ்தானம் காரணமாக அது கம்யூனிசத்தைக் கட்டிவருவோரின் முன்னணிப் படையாக உருவெடுக்கிறது. எல்லாக் குடியரசுகளின் மக்கள் தொகையிலும் தனது சதவீதத்தினைத் தொடர்ந்து அதிகரித்து வரும் தொழிலாளி வர்க்கத்தின் முயற்சிகள் கம்யூனிசத்தின் பொருளாயத

* லி. இ. பிரெஷ்நெவ், **சோவியத் சோஷலிஸ்டு குடியரசுகளின் ஒன்றியத்தின் 50 ஆம் ஆண்டுவிழா,** பக். 77.

** பிரடெரிக் எங்கெல்ஸ், ''டூரிங்குக்கு மறுப்பு'', மாஸ்கோ, 1959, பக். 351.

மற்றும் தொழில் நுட்ப அடிப்படை வெற்றிகரமாக நிர்மாணிக்கப்படுவதை உத்தரவாதம் செய்கின்றன. இதனுல்தான், கட்சிக் கொள்கை கம்யூனிஸ்டு நிர்மாணத்தில் தொழிலாளி வர்க்கத்தின் தலைமைப் பாத்திரத்தை மேம்படுத்தவும், இதர சமுதாய அடுக்குகள் மீதான அதன் செல்வாக்கை உயர்த்தவும் அரும்பாடு படுகிறது.

ஒவ்வொரு தேசம் மற்றும் தேசிய இனத்தைச் சார்ந்த உழைக்கும் மக்களின் நலன்களைப் பிரகடனப்படுத்தியும், தாங்கி ஆதரித்தும்வரும் கம்யூனிஸ்டுக்கட்சி ஒன்றிய மற்றும் அதன் உள்ளுறுப்பான குடியரசுகளின் நலன்கள் முற்றொருமையாக இருப்பதில் அக்கறை காட்டுகிறது. நாடு முழுவதன் அபிவிருத்தியையும் நெறியாண்மை செய்து வரும் அது ஒவ்வொரு குடியரசிலுமான பொருளாதாரத்தின் பிரத்தியேக அம்சங்களையும் மக்கள் திரளின் உற்பத்தி அனுபவத்தையும் கவனத்தில் கொள்கிறது. அதேபோதில், அவற்றின் தேசியத் தனி இயல்புகளை மிகைப் படுத்தாமல் தவிர்க்கிறது. இத்தகைய கொள்கை மட்டுமே நாடு முழுவதன் ஒவ்வொரு சோவியத் குடியரசினதும் பொருளாதார ஆற்றலை வளப்படுத்த உதவும். அகில ஒன்றிய மற்றும் குடியரசின் நலன்களை இணைக்கும் வடிவங்களும் முறைமைகளும் தொடர்ந்து திருத்தம் செய்யப்பட்டு மேம்படுத்தப் படுகின்றன.

எதார்த்த நடைமுறைகளில் பொது நலனுக்கே முதலிடம் தருவது என்பது அகில ஒன்றிய மற்றும் குடியரசுகளின் நலன்களுக்கு இன்றியமையாததாகும், எடுத்துக் காட்டு—உற்பத்தி சக்திகளை சீராகப் பங்கிடுவது. இங்கு பொருளாதார அம்சம் முதன் முதல் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்: ஒரு குறிப்பிட்ட பிராந்தியத்தில் தொழிலகம் கட்டப்படுவது நாடு முழுவதன் நலனுக்கு உகந்ததா இல்லையா என்பதைப் பார்க்க வேண்டும். லாபகரமானது என்பது ஓர் அம்சம் மட்டுமே. வேறு அம்சங்கள் உள்ளன: சம்பந்தப்பட்ட தேசம் அல்லது தேசிய இனத்தின் வளர்ச்சிக்கு இந்தத் தொழில் திட்டம்

பயன்படவேண்டும், தேசங்களிடையே நேச உறவு உறுதிப் படவும், குறிப்பிட்ட பகுதியில் வேலை வாய்ப்புகளை வழங்கவும் நாட்டின் தற்காப்பு ஆற்றலுக்கு ஆக்கம் தரவும் இத்தியாதி காரியங்களுக்குப் பயன்படவேண்டும். வேறு மாதிரி கூறில், குடியரசு மற்றும் அகில ஒன்றிய நலன்கள் ஒருங்கே கவனத்தில் கொள்ளப்படவேண்டும்.

கம்யூனிஸ்டு நிர்மாணப்பணி நிலைமைகளில் சோவியத் ஒன்றியத்திலுள்ள பல குடியரசுகள் இவற்றில் சில தொழில் வளத்தைக் காட்டிலும் அதிகமாக விவசாய நாடுகளாக இருந்தபோதிலுங் கூட விஞ்ஞான தொழில்நுட்ப முன்னேற்றத்தின் சாதனைகளை எளிதில் பெற முடியும். எல்லாத் தொழில்களும் விவசாயத்துடன் சேர்ந்து அவை எந்தக் குடியரசில் இருப்பினும் சரி, தனியொரு முழு சோவியத் பொருளாதார அமைப்பாகவே காட்சிதரும். ஒத்துழைப்பு குடியரசுகள் இடையே உற்பத்தித் துறையில் தனி ஆற்றல் திறன், கூட்டு முயற்சி மூலம் ஒவ்வொரு குடியரசும் தனது பொருளாதாரத்தை உயர் வேகத்தில் வளர்த்து பொது வான சுபிட்ச நிலையினை எய்த முடியும். தற்போது உள்ள படியே நாடுமுழுமைக்குமான தனியொரு பொருளாதாரத் தொகு நிறுவனம் ஏற்படும் நிலையில் குடியரசுகள், பிராந்தியங்கள், மாவட்டங்களின் வெற்றி சாதனைகள் தனி ஒரு கூட்டாட்சி அரசின் கூட்டுச் சாதனைகளாக முகிழ்க்கும்.

சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சியின் வேலைத்திட்டம், அதன் 24 ஆவது 25 ஆவது காங்கிரசுகளின் தஸ்தவேஜுகள் உற்பத்தி சக்திகளின் வினியோகத்தை மேலும் சீராக்கு வதையும், இயற்கைச் செல்வத்தின் பெருக்கம், குடியரசுகள் மத்தியில் சோஷலிஸ்டு உழைப்புப் பிரிவினையை செம்மைப் படுத்தல் ஆகியவற்றையே முதன்மையான இலக்குகளாகச் சிறப்பித்துக் கூறியுள்ளன. சைபீரியாவின் சோவியத் தொலைகிழக்குப் பகுதியின் இயற்கை வள ஆதாரங்களும், வெகு விரைவான அபிவிருத்தியை நோக்கி முடுக்கப்படு கின்றன. உற்பத்தி சக்திகளை நிறுவும் இடங்களை மேம் படுத்தும் விஷயத்தில், சோ. க. க. 25-ஆவது காங்கிரஸ்

அங்கீகரித்த 1976-1980 ஆம் ஆண்டுகளுக்கான, பொருளாதார வழிகாட்டி நெறிகள் ''கீழ்த்திசை பிராந்தியங்களின் பொருளாதார ஆற்றல்களை மேலும் கட்டி வளர்ப்பதையும் அகில ஒன்றிய தொழில்துறைப் பண்ட உற்பத்தியில் அவற்றின் பங்கை அதிகரிப்பதையும், எல்லா ஒன்றிய மற்றும் சுயாட்சிக் குடியரசுகள்,பொருளாதாரப் பிராந்தியங்கள், சுயாட்சிப் பிரதேசங்கள் மற்றும் தேசியப் பகுதிகளில் மேலதிகமான பொருளாதாரப் பெருக்கத்தையும் எதிர் நோக்குகின்றன.''*

நமது சமுதாய வளர்ச்சியின் சகல கட்டங்களிலும் சோவியத் குடியரசுகளின் மத்தியில் பொருளாதார பந்தங்கள் மேலும் வலுவடையும் என்பதை சோஷலிசத்தின் புறநிலை பொருளாதார நியதிகள் முன்னறிந்து கூறின. இந்த நியதிகள் (தொழிலாளர் உற்பத்தி ஆற்றலின் ஏற்றம்,திட்டமிட்ட சராசரி வளர்ச்சி முதலிய) நாட்டில் ஒட்டுமொத்தமாகவும் ஒவ்வொரு தனிக் குடியரசிலும் ஒருங்கே அமலாகி வருகின்றன. ஆயினும் குடியரசுகளிலான அவற்றின் அமலாக்கம் வரலாற்று இயற்கை, புவி இயல் அம்சங்கள் மற்றும் செல்வவள வாய்ப்பு பிரதேசம், மக்கள் தொகை, தொழிலாளர், விவசாயிகள் விகிதம் சமுதாயக் கட்டமைப்பிலான இதுபோன்ற அம்சங்களாலும் பலமாக இயக்கப்படுகிறது என்பதை மனதிற் கொள்ள வேண்டும்.

குடியரசுகள் இடையிலான நீண்ட கால உற்பத்தி உறவுகள், தனித்திறனுட்சி சமுதாய முறையிலான உழைப்புப் பிரிவினை ஆகியவை சோஷலிசத்தின் பொருளாதார விதிகளின் செயல்பாட்டில் பலமான அழுத்தம் செலுத்துகின்றன. எனவே இவற்றைக் குடியரசுகளின் வரலாற்று மற்றும் பொருளாதார வளர்ச்சியில் பிரத்தியேகமாகக் காணப்படும் சிறப்புகள் எனும் பட்டகை மூலமாகப் பார்த்தல் வேண்டும். உதாரணமாக, உற்பத்தி சாதனங்

* ''1976—1980-க்கான சோவியத் ஒன்றியத்தின் தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கான வழிகாட்டு நெறிகள்'', பக். 89—90.

களின் உற்பத்தி குறித்த முன்னுரிமை நியதி, மூல முக்கியப் பொருட்களின் உற்பத்திக்கு எல்லாக் குடியரசுகளிலும் முன்னுரிமை தரப்படுகிறது என்பதை குறிக்கவில்லை. சில குடியரசுகளில் உணவு மற்றும் மென்னியந்திரத் தொழில் களுக்கே முன்னுரிமை உள்ளது. இது சமுதாய உழைப்புப் பிரிவினை, தனித்திறனுட்சியின் தேவைகள் மற்றும் உற்பத்தி யில் ஒத்துழைப்பு ஆகியவற்றைச் சார்ந்ததாக உள்ளன.

தனித் திறனுட்சி மூலம் நாடு முழுதுக்கும் அவசியமான தொழிலின் கிளைகள் மிகவும் பொருத்தமான நிலைகள் கொண்டதான குடியரசுகள் மற்றும் பகுதிகளில் ஒன்று குவிந்து காணப்படுகின்றன. இதனால், அவை மேலும் எளிதான முறையில் முன்னேற்றமும் மேம்பாடும் பெற முடிகிறது. இதன்மூலம் நாட்டின் பொருளாதாரத்தின் போக்கு மேலும் சிக்கனமான திறமான பொருள் உற்பத்திக்கு நெறியாண்மை செய்யப்படுகிறது.

உற்பத்தியிலான ஒத்துழைப்பு குடியரசுகளின் பொருளா தாரங்களை தனி ஒரு முழு அமைப்பாக இணைத்துருவாக்கு கிறது. இது தேசங்கள் தேசிய இனங்கள் மத்தியில் மேலும் நெருக்கமான பொருளாதாரப் பிணைப்புக்களை உருவாக்கு கிறது. பொருளாதாரம் சர்வதேசிய மயமாக்கப்படுவதைக் கட்டாயப்படுத்துகிறது. சோவியத் தேசங்களின் பொருளாதார சமூகக் கட்டை வலுப்படுத்துகிறது. ஒத்துழைப்பு இன்றேல், பொருளாயதச் செல்வங்களை உற்பத்தி செய்வதற்கு குடியரசுகளின் இயற்கை மற்றும் வரலாற்று நிலைமைகளை சமுதாயம் முற்றுக சாதகப்படுத்திக் கொள்ள இயலாது போகும்.

ஒட்டு மொத்தத்தில், பொருளுற்பத்தியில் தனித் திறனுட்சியும் ஒத்துழைப்பும் தனி ஒரு ஒற்றைநடைமுறையின் பரஸ்பரத் தொடர்புடைய பரஸ்பர சார்புடைய இரு கூறுகளேயாகும்.

தனித் திறனுட்சி சர்வாம்சமான பொருளாதார அபிவிருத்திக்கு ஒரு தடைக்கல் அல்ல. நேர் மாறாக, அது

பல்துறை வளர்ச்சியை முன்னனுமானிக்கிறது. உதாரணமாக எட்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் (ஸ்தூலமான நிலைமைகளைப் பொருத்து) ஒவ்வொரு ஒன்றியக் குடியரசிலும் வெவ்வேறு தொழில்கள் அபிவிருத்தி செய்யப்பட்டன. எடுத்துக் காட்டாக தனக்கெனச் சொந்தமான உலோகத் தொழிற்சாலை இல்லாத ஆனுல் உயர் தேர்ச்சி வாய்ந்த ஊழியர்களைக் கொண்டதான எஸ்தோனியா மின் யந்திர நுட்ப ரேடியோ நுட்ப கருவிகள் கட்டும் தொழிற்சாலைகளை நிர்மாணித்தது. இவை முனைப்பான உழைப்பை அடிப்படை யாக்கியவை, இவற்றுக்கு உயர் அளவிலான தேர்ச்சி தேவை. கால்நடை வளர்ப்பு, உணவு மற்றும் மென்னியந்திரத் தொழில்களில் பிரசித்தி பெற்ற கிர்கிசியா மின் பொறியியல், யந்திர கட்டுமானம், இரும்பல்லாத உலோகத் தொழில், கட்டட சாதனத் தொழில் ஆகியவற்றை அபிவிருத்தி செய்து கொண்டது. தாஜிகிஸ்தான், இரசாயனத் தொழிலுக்கு அடித்தளம் இட்டது, சிமெண்ட் உற்பத்தியைத் தொடங் கியது. மேலும் ஓர் எடுத்துக் காட்டு: தனது உணவு மற்றும் மென்னியந்திரத் தொழில்கள் நீங்கலாக துருக்மேனியா எண்ணெய், எரிவாயு மற்றும் இரசாயனத் தொழில்களைக் கட்டியுள்ளது. 9ஆவது ஐந்தாண்டுத் திட்டம் சம்பந்தப்பட்ட தனது நெறியாண்மைகளில் சோ.க.க. யின் 24 ஆவது காங்கிரஸ் கூறியதாவது: உற்பத்தி சக்திகளின் இடநிர்ணயம் மேலும் சீரடையும், பிரதேச அளவிலான பொருளாதாரப் பிணைப்புக்கள் மேம்பாடுறும். ஒன்றியக் குடியரசுகளும் உழைக்கும் மக்கள் பிரதிநிதிகளின் ஸ்தல சோவியத்துக்களும் உற்பத்தி சக்திகளின் இடநிர்ணயம் விஷயத்தில் முடிவுகளை எடுப்பதில் மேலும் பெரியளவு பங்கு வகிக்கும்.

"துறைவாரி மற்றும் பிரதேச ரீதியான திட்டமிடல் சீரான முறையில் இணைக்கப்படுவது உறுதி செய்யப்படும்"*

வேலையின் அளவு மற்றும் தரத்திற்கு ஏற்ப பங்கீடு செய்வது எனும் கோட்பாடு, சோவியத் தேசங்கள் தேசிய இனங்களின் உழைக்கும் மக்களின் வாழ்க்கைத் தரத்திற்கு

* சோ.க க. 24 ஆவது காங்கிரஸ், பக் 296.

அடித்தளமாக இருந்தது. இது அங்கக் குடியரசுகளின் இடையிலான உறவுகளுக்கு மிகவும் முக்கியமான அம்சமாகும். இந்தக் கோட்பாட்டுக்கு ஏற்பாக சோவியத் அரசு—அனைத்து மக்களின் அரசு—தேசிய வருவாயை மறு பகிர்வு செய்கிறது. இதன் மூலம் அகில ஒன்றிய மற்றும் குடியரசின் கேந்திரமான பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்கிறது.

கம்யூனிஸ்டுக் கட்சி எல்லாக் குடியரசுகளுக்கும் முன்னேற்றத்தை உத்தரவாதம் செய்கிறது. இந்த நோக்குடன் அது மேற்கொள்ளும் நடவடிக்கைகளில்—சில ஒன்றியக் குடியரசுகளுக்கு மற்றவற்றை விடவும் உயர் வளர்ச்சி இலக்கினை வைத்தல், ஒவ்வொன்றின் பொருளாதாரத்திலும் வெவ்வேறு அளவிலான முதலீடுகள் செய்தல், புரள்வு-வரியில் இருந்து வருவாயை மறுபகிர்வு செய்தல் கணிசமான அளவில் தொழில் வளர்ச்சி தேவைப்படும் குடியரசுக்கு கூடுதல் நிதி ஒதுக்கீடு இத்தியாதி இதிலடங்கும். எடுத்துக் காட்டாக, 1976 ஆம் ஆண்டு (பட்ஜெட்) வரவு செலவுத் திட்டம் அகில ஒன்றிய வரிகள் மற்றும் ஒன்றியக் குடியரசுகளில் வசூலிக்கப்படும் வரிகளில் இருந்து குடியரசுகளுக்குப் பின்வரும் வகையில் நிதி ஒதுக்கியுள்ளது: புரள்வு வரி வருவாயில் 41.9 சதவிகிதம் ருஷ்யக் கூட்டாட்சிக்கு, லாத்வியாவுக்கு 44.1, உக்ரேனுக்கு 46.2, எஸ்தோனியாவுக்கு 57.3, மல்தாவியா 60, பிலோருஷ்யா 63.1, அசெர்பைஜான் 67.7, ஜார்ஜியா 84.1, அர்மீனியா 84.2, தாஜிகிஸ்தான் 90.1, உஸ்பெகிஸ்தான் 91.7, கிர்கிசியா 94.5, லித்துவேனியா 98 மற்றும் கஜக்ஸ்தான் துருக்கிஸ்தான் இரண்டுக்கும் 100 என்ற சதவிகிதத்தில் நிதி ஒதுக்கப்பட்டன.

இதற்கும் கூடுதலாக, அகில ஒன்றிய பட்ஜெட்டில் இருந்து கஜக்ஸ்தானுக்கு 197,100,000 ரூபிள் துருக்மேனியாவுக்கு சோவியத் ஒன்றியத்தின் 1976 ஆம் ஆண்டுத் திட்டப்படியான தொழிற்சாலைகள் நிறுவுவதற்கு 65,200,000 ரூபிளும் தரப்பட்டது. குடியரசுகளிடையே தேசிய வருவாய்

(அவற்றின் தேவைகளுக்கு ஏற்ப) மறுபங்கீடு செய்யப்பட்டதானது இந்தக் குடியரசுகள் அகில ஒன்றிய பட்ஜெட்டுக்கு நிதிஉதவுவதற்கான ஏற்பாடுகளையும் வழிவகைகளையும் மேம்படுத்த உதவியது: இதில் நிறுவனங்களின் லாபங்களில் இருந்து ஒதுக்கீடு, நிதிகள் செலுத்தல்,புரள்வு வரி இத்தியாதி உட்படும்.

தேசங்களிடையிலான பொருளாதார உறவுகள், தொழில்களின் நிர்வாகத்தை மத்தியப்படுத்துவதை யூனியன் குடியரசுகளின் விரிவான முன்னுரிமைகளுடன் இணைப்பது மூலம் தெளிவாயும் நன்மை பெறும். அண்மையில் ஏற்பட்ட பொருளாதார சீர்திருத்தம், குடியரசின் பொருளாதார நிர்வாகத்தின் உரிமைகளை விஸ்தரித்தது, இது நாட்டின் பொருளாதாரத்தை பரவலாக்கவில்லை. குடியரசுகளின் மேலும் விரிவான உரிமைகள் மத்தியப் படுத்தப்பட்ட பொருளாதார நிர்வாகத்தின் அமைப்புடன் மோதுவதில்லை. கம்யூனிசத்தைக் கட்டுவதற்கு நாடு முழுவதன் அளவிலான அரசாங்கத் திட்டமிடல் அவசியம். கம்யூனிசத்திற்கு நாடு முழுவதிலுமான பெருவீதப் பொருள் உற்பத்தியை சாத்தியமானவரை மிக அதிக அளவுக்கு மத்தியத்துவப் படுத்த வேண்டுவது அவசியம், அது முன்னனுமானிப்பதும் இதுவே''* என்று லெனின் கூறினர்.

குடியரசின் பொருளாதார நிர்வாகத்துக்கு அனுமதிக்கப்படும் மேலதிகமான சுதந்திரம் மற்றும் முன்முயற்சியுடன் மேம்பட்டதான நிர்வாகமும் சேர்ந்து சோவியத் ஜனநாயகத்தின் வளர்ச்சியோடு பந்தப்பட்டு நிற்கிறது, இது உழைக்கும் மக்களின் படைப்பாற்றல் முயற்சிகளையும், நாட்டின் உயிரான பொருளாதாரப் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதில் மக்கள் மேலும் அதிகப் பங்கேற்பதையும் இது ஊக்குவிக்கும். இது சமுதாய உற்பத்தியின் வளர்ச்சி விகிதங்களை ஊக்குவிக்கிறது, இது சோவியத் குடியரசு

* வி. இ. லெனின், ''நூல் திரட்டு'', தொகுதி 42, பக். 96.

களிடையே பொருளாதாரப் பிணைப்புக்கள் வளர்ந்து தொடர்ச்சியாக மேம்பாடுறுவதை ஊக்குவிக்கும்.

3. தேசங்களின் வளர்ச்சி மற்றும் உலக சோஷலிஸ்டு கூட்டமைப்பினுள் சங்கமிப்பதற்குமான பொருளாதார அடிப்படைகள்

தேசங்கள் தேசிய இனங்கள் மத்தியிலான ஒத்துழைப்பு குறித்த சோஷலிஸ்டு கோட்பாடுகள் இதர சோஷலிஸ்டு நாடுகளிலும் அனுசரிக்கப்பட்டு வருகின்றன.

சோஷலிஸ்டு நாடுகளின் சமூக பொருளாதார அடிப்படைகள் ஒரே மாதிரியாக இருப்பதால் அவற்றிடையே வேறுபாடுகள் இல்லை என்று பொருளல்ல. மக்களின் ஸ்தூலமான வரலாற்று நிலைமையின் தனிச் சிறப்பு, உற்பத்தி சாதனங்கள் எந்தளவுக்கு சமூக உடைமையாக்கப்பட்டுள்ளன என்பதையும், நகரிலும் நாட்டுப் புறத்திலுமான பல உற்பத்தி முறைகள் நிலவுவதையும் சமுதாயத்தின் பிரத்தியேகமான சமூகக் கட்டமைப்பையும், தேசிய வரலாற்று மரபுகளையும் சார்ந்ததாக உள்ளது.

பொருளாதார வளர்ச்சியில் ஒரு சோஷலிஸ்டு நாட்டுக்கும் இன்னொரு சோஷலிஸ்டு நாட்டுக்கும் இடையே வேறுபட்ட இயல்புகள் இருப்பதற்கான காரணங்களில் பிரதானமானது முதலாளித்துவத்தின் கெடுமரபே: பல்வேறு தொழில்களில் ஏறுமாறான தன்மை, ஒருசீரின்மை, பொருளாதாரக் கட்டமைப்பில் ஏற்றத்தாழ்வு, சர்வதேச உழைப்புப் பிரிவினையில் வெவ்வேறான பாத்திரம் இத்தியாதி நிலவின. இதனால்தான் பகைமை முரண்பாடுகளை இல்லாதாக்கும் ஒரே மாதிரியான சமூக-பொருளாதார அடிப்படைகள் என்பதால் பொருளாதார உறவுகளிலான வேறுபாடுகள் இல்லாதாகி விடுவதில்லை. ஒவ்வொரு அரசும் இதர சோஷலிஸ்டு நாடுகளுடனான அதன் பொருளாதார உறவுகளில் அதன் சொந்தத் தேவைகளையே கடைப்பிடிக்கிறது, ஸ்தூலமான பொருளாதாரப் பிரச்சினைகள் விஷயத்தில் தனது சொந்த அணுகுமுறையினை வைத்திருக்கிறது.

ஆனால் புறநிலைப் பொருளாதாரக் காரணிகளால் தூண்டுவிக்கப்பட்டு சர்வதேசிய வீச்சில் உற்பத்தியை ஒழுங்கமைப்பதற்கான முயற்சிகளை ஒருமுகப்படுத்த வேண்டுவதன் தேவை காரணமாயும் பொருளாதார வாழ்க்கை சர்வதேசிய மயமாக்கப்படுவது எனும் போக்கு சோஷலிஸ்டுக் குடும்ப நாடுகளின் உள்ளே அதிகரித்த வேகத்தில் நடக்கிறது. இயல்பாகவே, உலக சோஷலிஸ்டு அமைப்பின் கட்டுக்கோப்புக்குள் உற்பத்தி சர்வதேசிய மயமாக்கப்படுவதால் தேசிய அரசுகள் இருப்பதன் காரணமாக சில பிரச்சினைகள் உருவாகின்றன. ஆனால் இந்தப் பிரச்சினைகள் ஒருமைப்பாடு மற்றும் தேசிய பொருளாதாரத் திட்டங்களை சமநிலைப்படுத்தல் மூலம் தீர்க்கப்படுகின்றன.

அவற்றின் சர்வவுரிமைத் தன்மை எவ்வகையிலும் பாதிக்கப்படாமல், அவை தமது உள்நாட்டு வெளிநாட்டுக் கொள்கைகள் சம்பந்தமான பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் உரிமையினை தம் கையிலேயே வைத்திருக்கும்படி வகை செய்து தரும் பட்சத்தில், சோஷலிஸ்டு நாடுகளின் ஜீவாதார நலன்களுக்கு ஒத்துழைப்பும் பரஸ்பரம் உதவியும் தேவைப்படும். ''சோஷலிசத்தின் கீழ், தேசியப் பொருளாதாரம், கலாசாரம், அரசுத்துவம் ஆகியவற்றின் அபிவிருத்தி உலக சோஷலிஸ்டு அமைப்பு முழுவதையும் பலப்படுத்துவதோடும், தேசங்களின் ஒற்றுமையை முன் என்றையும்விட அதிகமாக வலுப்படுத்துவதோடும் இரண்டறக் கலந்திருக்கிறது''* இந்த மார்க்சிய-லெனினியக் கருதுகோளின் செல்தகைமை வரலாற்றால் மெய்ப்பிக்கப்பட்டு விட்டது.

புதிய சமுதாய அமைப்பின் ஆற்றல்கள் மற்றும் சாதகங்களைக் கணிசமான அளவு அதிகத் திறம்பட பயன்படுத்தும் கட்டத்தில், சோஷலிஸ்டு நாடுகள் இருக்கின்றன. முதலாளித்துவத்தை எதிர்த்த போராட்டத்தில் நிர்ணயமான வெற்றிகளுக்கான முன் நிபந்தனைகள் உருவாக்கப்பட்டு வருகின்றன.

---

* **சமாதானம் ஜனநாயகம் சோஷலிசத்துக்கான போராட்டம்**, *மாஸ்கோ, 1963, பக். 50.*

சோஷலிஸ்டு நாடுகள் உலகப் பொருளாதாரத்தில் மேலதிகமான முக்கியத்துவம் பெற்று வருகின்றன. சோஷலிஸ்டு குடும்பம் உலகின் மிகவும் ஆற்றல் வாய்ந்த பொருளாதார சக்தியாகி விட்டது. 1971-1975 காலப் பகுதியில், இதன் உறுப்பு நாடுகளின் தொழில்துறை வளர்ச்சி யடைந்த முதலாளித்துவ நாடுகளைப் போல நான்கு மடங்கு பெருக்கமுற்றது. 1975-ல் அவற்றின் தொழில்துறை உற்பத்தி பொது மார்க்கெட் நாடுகளின் உற்பத்தியைப் போல் இருமடங்குக்கும் அதிகமாக இருந்தது. சோஷலிஸ்டு நாடுகளில் விஞ்ஞான தொழில் நுட்ப முன்னேற்றத்துக்கு நிர்ணயகரமாக இருக்கும் மின் விசை மற்றும் பொறியியல் தொழில்கள் குறிப்பாயும் உயர் வேகத்தில் அபிவிருத்தி செய்யப்படுகின்றன.

உற்பத்தி சக்திகளின் சீரான வினியோகம், சர்வதேசத் தொழில் பிரிவினை, ஒவ்வொரு நாட்டின் செல்வ வளத்துக்கும் எதார்த்தமான வாய்ப்பளித்தல் என்பவை சோஷலிஸ்டு பொருளாதார அமைப்பில் இயல்பாகவே காணப்படும் வரலாற்று வழிப்பட்ட சாதக அம்சங்களுக்கு உரிய வாய்ப் பினை வழங்கும். இந்தச் சாதக அம்சங்களை அதிகபட்சமாகப் பயன்படுத்தி, பரஸ்பர பொருளதார உதவிக் கவுன்சில் உறுப்பு நாடுகள் ஒரு குறிப்பிட்ட தொழில் துறை அல்லது விவசாயத் துறைப் பிரிவினை அபிவிருத்தி செய்ய எந்த நாடு மிகவும் ஏற்றது என்பதைக் கண்டு முடிவு செய்கின்றன. எடுத்துக் காட்டாக ஜெர்மன் ஜனநாயகக் குடியரசு யந்திரக் கருவிகள், இரசாயனத் தொழிலுக்கான சாதனம், இத்தியாதி களில் தனி அக்கறை செலுத்துகின்றது. ருமேனியாவில் அழுத்தம் எண்ணெய் எரிவாயு மற்றும் பெட்ரோ ரசாயனத் தொழில்மீது காட்டப்படுகிறது. போலந்தில் கப்பல்கட்டுதல், நிலக்கரி தோண்டுதல், லாரி டிரக் போன்ற வாகனங்கள் உற்பத்தி முக்கியமானதாக இருக்கின்றன. செக்கோஸ்லோ வாகியா அச்சகம், தானியங்கின, அரைத் தானியங்கி யந்திரக் கருவிகள் மின்சார விசையில் இயங்கும் ரயில்வே எஞ்சின்கள் உற்பத்தியில் தனிக்கவனம் செலுத்துகிறது.

ஒவ்வொரு சோஷலிஸ்டு நாடும் தனக்கே உரிய பொருளாதார அபிவிருத்திக்கான மிகவும் சீரான பாணியைத் தேர்ந்து கொள்ளவும் தனது முயற்சிகளை சமுதாய உற்பத்தியின் மிகவும் பயனுறுதியுள்ள துறைகளில் ஒருமுகப்படுத்தவும், உழைப்பின் ஆக உயர்ந்த உற்பத்தித் திறனைப் பெறப் பாடுபடவும் சர்வதேச உழைப்புப் பிரிவினை உதவுகிறது. ஒத்துழைப்பை மேலும் விரிவாக்குவது, மேம்படுத்துவது, சோஷலிஸ்டு பொருளாதார இணைப் பாக்கத்தை வளர்ப்பது என்பதற்கான ப.பொ.உ.க. சர்வாம்சமான வேலைத் திட்டம், பல்வேறு நாடுகளின் பெருவாரியான தொழிலாளர்கள், தொழில் நுட்ப நிபுணர், பொறியாளர்களை சர்வதேசிய ஒத்துழைப்பில் ஈடுபடுத்த பொருளாதார ஸ்தாபன நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படுவதை எதிர்நோக்குகிறது. ப.பொ.உ.க. நாடுகளில் பொருளாதார சமூக முன்னேற்றத்தினை ஊக்குவிக்கும் இந்த இணைப்பாக்கம் அவற்றின் மக்களினங்களை ஒன்று சேர்ப்பதற் கான இசைவிணக்கமான திட்டமிட்ட பாதையினைச் சமைத்து வருகிறது. உண்மையில், உலக சோஷலிஸ்டுக் குடும்பத்தின் அரசுகள் இடையிலான பொருளாதார உறவுகளில் ஒரு புதிய கட்டத்தை இது துவக்கியுள்ளது.

ப.பொ.உ. கவுன்சிலின் 27 ஆவது அமர்வு (1973) சர்வாம்ச ரீதியான வேலைத்திட்டத்தை அமல் செய்வது அதன் உறுப்பினர்களின் ஒத்துழைப்பின் சாரமாகி விட்டது என்ற முடிவுக்கு வந்தது. இணைப்பாக்க நடைமுறையினை துரிதப்படுத்தவும் ஆழப்படுத்தவுமான நடை முறை வழிகளை அது வகுத்து முன்வைத்தது. இதர அலுவல் களுடன் கூடவே அணுசக்தி நிலையங்களுக்கான செய்முறைச் சாதனங்கள் தொழிலில், ஒத்துழைப்பதற்கான கூட்டு விஞ்ஞான தொழில்நுட்ப கூட்டு நிறுவனங்கள் திட்ட மிடப் படுகின்றன, மிகவும் நவீனமான கூம்ப்யூட்டர்கள் உருவாக்கப்படுகின்றன, இத்தியாதி.

அவற்றின் பொருளாதார மட்டங்கள் படிப்படியாகச் சமநிலைப் படுத்தப் பெறுவதால், சோஷலிஸ்டு குடும்ப நாடு

களின் மேலும் நெருக்கமான இணைவு எளிதாக்கப்படுகிறது, இந்த சமநிலைப்படுத்தலை 1960-ல் நடந்த கம்யூனிஸ்டு மற்றும் தொழிலாளர் கட்சிகளின் மாநாடு ''பொருளாதார வளர்ச்சியிலான மட்டங்களின் வரலாற்று வழி வேறுபாடுகள் படிப்படியாக அகற்றப்பட்டன''* என்று குறிப்பிட்டது. இந்த அர்த்தத்தில் இதனை சம்பந்தப்பட்டதான தேசிய பொருளாதாரத்தின் ஒட்டு மொத்தமான உற்பத்தியில் தொழில்துறை உற்பத்தியின் பங்கை தோராயப் படுத்தல், நபர் விகிதப் பண்ட உற்பத்திப் பெருக்கத்தை சமநிலைப்படுத்தல், தேசிய வருவாயின் அளவு, வாழ்க்கைத் தரம், தொழிலாளி வர்க்கம் மற்றும் நகர்ப்புற மக்கள் தொகையின் சதவிகிதம் இத்தியாதிகளைக் குறிப்பாகக் கருதலாம். சோஷலிஸ்டு அமைப்பு முதலாளித்துவத்திடமிருந்து வழி வழியாகப் பெற்றதான பொருளாதார மற்றும் கலாசார அபிவிருத்தியிலான ஏற்றத் தாழ்வுகள் ஒழிக்கப் படுவதை சாத்தியமாக்குகிறது, முதலாளித்துவத்தின் கீழ் எதன் பொருளாதாரம் பின்தங்கி நின்றதோ அந்த நாட்டின் பொருளாதாரத்தை மேலும் வேகமாக அபிவிருத்தி செய்ய உதவுகிறது. அவற்றின் பொருளாதாரங்களையும் கலாசாரத்தையும் உறுதியாக மேம்படுத்துகிறது. சோஷலிஸ்டு குடும்பத்து நாடுகளின் வளர்ச்சியின் பொது மட்டத்தினைச் சமநிலைப்படுத்தும்''** நோக்கத்துடன் இவ்வாறு செயல்படுகிறது என்று சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சியின் வேலைத் திட்டம் கூறுகிறது.

சோஷலிஸ்டு குடும்பத்தின் கட்டுக்கோப்பிலான இந்த சமநிலைப்படுத்தல் சோஷலிஸ்டு நாடுகளிடை, தேசிய இனங்களிடை பொருளாதார அசமத்துவத்தை அகற்றும் மெய்யான சமத்துவத்தைக் கொண்டு வரும். வேறு சொற்களில் கூறிடில் இது அவற்றின் பரஸ்பர உறவுகளைச் செம்மைப் படுத்தும். உலக அமைப்பில் உள்ள பெரிய மற்றும் சிறிய தேசங்களின் உழைக்கும் மக்களிடையே

* அதே நூல், பக். 49.

** கம்யூனிசத்துக்கான பாதை, பக். 580.

சமத்துவமான பரஸ்பரம் சாதகமான உறவுகளுக்கு சோஷலிசம் வழி சமைக்கும்.

ப. பொ. உ. கவுன்சிலின் 27 ஆம் அமர்வு சோஷலிஸ்டு நாடுகளின் பொருளாதார மட்டங்களைச்சமநிலைப்படுத்துவது சம்பந்தமான பிரச்சினைகள் விஷயத்தில் மேலும் அதிக அழுத்தம் தரவேண்டும் என்று பரிந்துரைத்துள்ளது, கவனத்தைக் கவரும் வெற்றிகள் சாதனையாகி உள்ளன. உலக சோஷலிஸ்டு அமைப்பின் உருவாக்க கட்டத்தில் ஐரோப்பிய சோஷலிஸ்டு நாடுகள் ஒன்று, தொழில் வள விவசாய நாடுகளாய் அல்லது, விவசாய தொழில்வள நாடுகளாய் அல்லது முற்றும் விவசாய நாடுகளாய் இருந்து வந்துள்ளன. பிந்திய இருவகைகளே பேராதிக்கம் வகித்து வந்துள்ளன. இப்போது ப. பொ. உ. க. சார்ந்த எல்லா ஐரோப்பிய நாடுகளிலும் தேசிய வருவாயில் பெரும் பகுதி தொழில்துறையிடம் இருந்தே கிட்டி வருகிறது. வாழ்க்கைத் தரங்கள் மேலும் தோராயமாக உயர்ந்துள்ளன.

அவற்றில் ஆட்சிபுரியும் மார்க்சிய-லெனியக் கட்சிகள் சோஷலிஸ்டு அரசுகள் மத்தியிலான ஒத்துழைப்பை மேலும் பயனுடையதாக்கவும், ஒவ்வொரு நாடும் இந்த நாடுகளின் கூட்டமைப்பு முழுதும் எதிரிட்டு வரும் பிரச்சினைகளுக்கு மேலும் நல்ல தீர்வு காண்பதிலும் தமது முயற்சிகளை ஒருமுகப்படுத்தி வருகின்றன. இந்த நோக்கத்திற்காகவும், பலதரப்பு ஒத்துழைப்பை மேலும் அதிகரித்துக் கொள்ளவும் வேண்டி பல ஆண்டுகளுக்கு முன்பே சோஷலிஸ்டு நாடுகளின் சர்வதேச முதலீட்டு வங்கி நிறுவப்பட்டது. இது புதுவகைப்பட்ட சர்வதேசக் கடன் வழங்கு அமைப்பு ஆகும். தனது நோக்கங்கள், கடன் வழங்கு நிபந்தனைகள் மற்றும் நிர்வாக வடிவங்கள் முறைகளிலும் கூட அதன் முதலாளித்துவ சம எதிர் நிறுவனங்களிடம் முற்றிலும் வேறுபட்டு இருக்கிறது. இது சோஷலிஸ்டு பொருளாதார இணைப்பாக்கத்தை வேகப்படுத்த உதவுகிறது, மேலும் பயனுறுதியான உழைப்புப் பிரிவினையை ஊக்குவிக்கிறது. உற்பத்தியில் தனித்

திறனுட்சியையும் ஒத்துழைப்பையும் தூண்டுகிறது, அதன் மூலமாக ஒவ்வொரு சோதர நாட்டிலும் இந்த நாடுகளின் குடும்பம் முழுவதிலும் மேலும் துரிதமான முன்னேற்றத்துக்கு வகை செய்கிறது.

தேசியப் பொருளாதாரங்கள் இடையிலான பிணைப்புக்களை மேலும் ஆழப்படுத்தி மேம்படுத்துவது, சோஷலிஸ்டு மக்களினங்களின் சமூக-அரசியல் ஒற்றுமையை மேலும் உயர்த்துவதற்கு அவசியம். அவற்றின் பொருளாதார இணைப்பாக்கம் காரணமாக சோஷலிஸ்டு நாடுகளின் ஒத்துழைப்பு, உற்பத்தி சக்திகளின் பெருக்கம், ஒவ்வொரு நாட்டிலும் சோஷலிஸ்டு உறவுகள் மேம்பாடுறுவதன் மூலம் புதிய வெற்றிகளை ஈட்டி வருகிறது.

சோஷலிஸ்டு நாடுகளின் பொருளாதார இணைப்பாக்கம் பற்றி சோ.க.க. 25 ஆவது காங்கிரஸ் தஸ்தாவேஜுகளும், சமீபத்தில் நடந்த சோதரக் கட்சிகளின் காங்கிரசுகள் மற்றும் ம. க. பிளீனம் கூட்டங்களும் விரிவாக விளக்கம் தந்துள்ளன. இணைப்பாக்கம் மேலும் முன்னேறிய ஒத்துழைப்பு முறைகளுக்கு வகை செய்கிறது, சோதர நாடுகளின் வளர்ச்சியைத் துரிதப்படுத்துவதற்குரிய பரஸ்பரச் செயல்பாட்டுக்கு விரிவான வாய்ப்பினைத் தருகிறது. இந்த ஒத்துழைப்பு மேலும் விரிவும் மேம்பாடும் உறுவதும், சோஷலிஸ்டு இணைப்பாக்கம் அபிவிருத்தியடைவதும் சோஷலிஸ்டு உலக அமைப்பின் வலிமையை மேலும் உயர்த்த உதவும், ஒவ்வொரு நாட்டின் பொருளாதாரத்தையும் வலுப்படுத்தும்; அதோடு இவை சமுதாய வாழ்வின் சகல துறைகளிலும், முதலாளித்துவத்துக்கு எதிராக சோஷலிஸ்டு உலக அமைப்பின் ஒற்றுமையையும் உயர் மாண்பையும் வலுப்படுத்துவதற்கும், சோஷலிசம் மற்றும் முதலாளித்துவத்துக்கு இடையிலான போட்டியில் அதன் வெற்றியை உறுதிப்படுத்தவும் இவை முக்கியமான காரணிகளாக விளங்கும்."*

---

* ப.பொ.உ. கவுன்சில் உறுப்பு நாடுகள் தமது ஒத்துழைப்பை மேலும் விரிவாக்கி மேம்படுத்திக் கொள்ளவும் சோஷலிஸ்டு இணைப்பாக்கத்தை அபிவிருத்தி செய்து கொள்வதற்குமான சர்வாம்ச வேலைத் திட்டம், *மாஸ்கோ, 1971, பக். 14.*

அத்தியாயம் ஆறு

சோஷலிசத்தின் கீழ் தேசிய அரசு

முன்னாள் ருஷ்யன் சாம்ராஜ்யத்தில், பாட்டாளி வர்க்கப் புரட்சியினைத் தொடர்ந்து, சோஷலிசத்துக்கு அதிகப்பட்ச ஆக்கம் தருவது பெரிய ஜனநாயக முறையில் மத்தியப் படுத்தப்பட்டதான பல்தேசிய இன அரசே என்பது லெனினுக்கும் கம்யூனிஸ்டுக் கட்சிக்கும் தெளிவாகத் தெரிந்திருந்தது. வரலாறு இதனை ஊர்ஜிதம் செய்திருக்கிறது. சோவியத் நாட்டில் சோஷலிசம் வெற்றி வாகை சூடியதும், சோவியத் சோஷலிஸ்டு குடியரசுகளின் ஒன்றியம் உருவாக்கம் பெற்று ஆக்கமுற்ற நடப்பும் மிகவும் நெருக்கமாக இணைக்கப்பட்டு விளங்கின. ஒன்றியத்தின் 50 ஆம் ஆண்டு விழாவின் போது கட்சியும் மக்களும் அதன் ஆரம்பகர்த்தாவும் அமைப்பாளருமான லெனினுக்கு உரிய பாராட்டை அர்ப்பணித்தனர். சோ.க.க. மத்தியக் கமிட்டி குறிப்பிட்டதாவது: "**இந்தப் பல்தேசிய இன சோஷலிஸ்டு அரசினை உருவாக்கியதற்குரிய மிகப் பெரிய பெருமை கட்சியின் மக்களின் தலைவரான விளதீமிர் இலியிச் லெனினையே சாரும்.**"*

கம்யூனிஸ்டுக் கட்சி புரிந்த விரிவான தத்துவார்த்த ஆராய்ச்சி மற்றும் அரசியல் பணியினைத் தொடர்ந்து இந்த ஒன்றியம் உருவாயிற்று. இது வீரஞ்செறிந்த தொழிலாளி வர்க்கத்தின் தலைமையில் அனைத்து சோவியத் ஒன்றியத்தின்

---

* **சோவியத் சோஷலிஸ்டுக் குடியரசுகளின் உருவாக்கத்தின் 50 ஆம் ஆண்டு விழாத் தயாரிப்புகள்,** சோ.க.க. ம.க தீர்மானம் பக். 4.

மக்களும் ருஷ்ய மக்களைச் சுற்றிலும் திரண்டு மேற்கொண்ட புரட்சிகர முன்முயற்சியின் விளைவாகும்.

சோவியத் பல்தேசிய இன அரசின் 50 ஆண்டுகளுக்கும் அதிகமான வளர்ச்சியில் கிட்டிய அனுபவமே உலகமுற்றுமுள்ள மக்களினங்களின் முன்னேற்றத்துக்காக தேசங்கள், தேசிய உறவுகள் மீதான மார்க்சிய லெனினிய போதனைக்கு சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சிவழங்கியதானபடைப்பாற்றல் சிறப்புடைய பங்குப் பணியாகும். சோவியத் சோஷலிஸ்டு குடியரசுகளின் ஒன்றியம் உருவானதும் அதன் வெற்றிகரமான அபிவிருத்தியும் பிரம்மாண்டமான சர்வதேசிய முக்கியத்துவமுடையது, மனிதகுலம் முழுவதன் சமுதாய முன்னேற்றத்துக்கு ஒரு மாபெரும் சாதனையாகும். ஒரு பல்தேசிய இன அரசை உருவாக்குவதிலும், நமது மக்களினங்களின் பொது முயற்சி மூலம் ஒரு வளர்ச்சியடைந்த சோஷலிஸ்டு சமுதாயத்தைக் கட்டுவதும், மிகவும் சிக்கலான தேசியப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதிலுமான சோவியத் அனுபவம் உலக அங்கீகாரத்தைப் பெற்றுவிட்டது, மேலும் அது சமூக தேசிய விடுதலைக்கு பாடுபடும் போராளிகளுக்கு மதிப்புமிக்க உதவியை வழங்கியுள்ளது.''*

இது தோற்றுவிக்கப்பட்ட காலம் தொட்டே, ருஷ்யாவை தனித்தனியான சிறு அரசுகளாகத் துண்டாடுவது என்ற நிலையுடன் ஒப்பிடும் போதில் பெரிய பல்தேசிய இன நாட்டின் சாதகநிலை பற்றிய மார்க்சிய-லெனினிய கோட்பாடே கட்சிக் கொள்கையின் அடிப்படையாக இருந்தது. பழைய அமைப்பின் கீழேயுங்கூட பெரிய அரசு, தொழிலாளி வர்க்கத்தின் தலைமையின் கீழ் எல்லா தேசிய இனங்களையும் சார்ந்த உழைக்கும் மக்களின் ஓர் ஐக்கிய சர்வதேசிய அணியை உருவாக்க உதவியது, இந்த அணி முதலாளித்துவ நிலப்பிரபுத்துவ ஆட்சி வீழ்த்தப் படுவதை விரைவுபடுத்தியது. சோஷலிசத்தின் கீழ் பெரிய அரசுகள் இருப்பது இருமடங்கு சரியான முடிவாகும். காரணம் பொருளாதாரக் காரணிகள் ஒரு

* அதே நூல், பக். 20—21.

வர்க்கமற்ற சமுதாயத்தில் எல்லா தேசங்களின் சாத்தியமான அளவு வேகமான சங்கமத்தையும் கலவையையும் கோருகின்றன. முன்னாள் ஒடுக்கப்பட்ட மக்களினங்கள் கூடத்தாமே முக்கியமாயும் பொருளாதாரக் காரணங்களால் தனிப்பிரிந்து போக விரும்பமாட்டார்கள், மேலும் முன்னேறிய தேசங்களுடனான நேச அணியினையே விழைவார்கள் என்று லெனின் சுட்டிக்காட்டியுள்ளார்.

பெரிய சோஷலிஸ்டு அரசுகளினால் ஏற்படும் சாதகம் என்னவென்றால், அவை அ) சிறிய அரசுகளைவிடவும் மேலதிக வெற்றிகரமான முறையில் பொருளாதார முன்னேற்றம் பற்றிய பிரச்சினைகளுக்குத்தீர்வு காணமுடியும்; ஆ) பாட்டாளி வர்க்கப் புரட்சியின் முழு வெற்றியை உறுதி செய்ய முடியும்; இ) பொருளாயத மற்றும் கலாசாரத் துறைகளில் உழைக்கும் மக்களின் நலன்களை நிறைவு செய்ய முடியும்; ஈ) முதலாளித்துவத்துக்கு எதிராக சோஷலிசத்தின் மாபெரும் சாதகங்களை மேலும் தெளிவாக எடுத்துக் காட்ட முடியும்.

பெரிய அரசுகளின் சாதகங்களைக் கட்சிஉணர்ந்திருந்தது. காரணம், லெனினுடைய போதனைகளின்படி, ஏகாதிபத்திய காலகட்டத்தில் சோஷலிஸ்டுப் புரட்சி துவக்கத்தில் ஒன்று அல்லது சில நாடுகளில் வெற்றிவாகை சூடலாம். இவை மிகவும் வளர்ச்சியடைந்த நாடுகளாக இருக்கத் தேவையில்லை. இந்த சந்தர்ப்ப சூழல்களில் பகைமையான முதலாளித்துவ நாடுகளால் சுற்றிவளைத்துக் கொள்ளப்படும் போதில் பெரிய பாட்டாளி அரசு நீடித்து நிலைபெறுவதற்கான வாய்ப்புகள் அதிகம், மேலும் அது எல்லா ஒடுக்கப்பட்ட, சுரண்டப்பட்ட தேசங்களுக்கும் பழைய முதலாளித்துவ அமைப்பை விடவும் புதிய சோஷலிஸ்டு அமைப்பு மேலானது என்பதைச் சுட்டிக்காட்டவும் முடியும்.

அக்டோபர் புரட்சிக்கு முன்னதாகவே பெரியதோர் பல் தேசிய இன சோஷலிஸ்டு அரசு நிறுவப்படுவதற்கு அடிப்படையாயுள்ள பிரதான கோட்பாடுகள் குறித்து லெனின் தெளிவான கருத்து வைத்திருந்தார்; ஜனநாயக மத்தியத்

துவம், பெரிய சிறிய மக்களினங்களின் உறவுகளில் சமத்துவமும் சுதந்திர சித்தமும் என்பனவே இந்தக் கோட்பாடுகளாகும். எல்லாத் தேசிய இனங்களையும் சேர்ந்த உழைக்கும் மக்களை ஒற்றுமைப் படுத்தவும், பாட்டாளி வர்க்கப் புரட்சியின் வெற்றிக்குப் பிறகு தேசிய அரசுகளின் ஆக்கத்தைத் துவக்கி வைக்கவும் இந்த வழிகாட்டு நெறிகள் கட்சிக்கு மிகவும் பயனுடையனவாக இருந்தன.

ஜாராட்சியின் கட்டமைப்புக்கு மாற்ருக ஒரு ஜனநாயக நாடாளுமன்றக் குடியரசு என்பதை விடவும் சோவியத் குடியரசு நிறுவப்பட வேண்டும் எனும் லெனினது போதனை சோஷலிஸ்டு அடிப்படையிலான ஒரு பல்தேசிய இன அரசு பரிணமிப்பதற்குத் தலையாய முக்கியத்துவம் வகித்தது. தேசிய இனம் எதுவாக இருப்பினும் சரி, உழைக்கும் மக்களுடன் மிகவும் நெருக்கமான உறவுகளை வைத்திருந்த சோவியத்துகளில் எல்லா அதிகாரமும் ஒருமுகப்படுத்தப் பட்டதானது அரசுக் கட்டமைப்பில் ஜனநாயக மத்தியத் துவத்தை உத்தரவாதம் செய்தது.

சோவியத் குடியரசில் சமத்துவம், சுதந்திர சித்தம், மற்றும் ஜனநாயக மத்தியத்துவம் எனும் லெனினது கோட்பாடுகள் பல்வேறு வடிவிலான தேசிய அரசுத்துவத்தையும் கூட்டாட்சி நேச அமைப்பையும் அனுமதித்தன. இது உருவில் சோவியத்தாகவும் உள்ளடக்கத்தில் சோஷலிஸ்டாகவும் இருந்ததால், சுரண்டும் வர்க்கங்களை எதிர்த்து சோஷலிசத் திற்காக நடைபெறும் போராட்டத்தில் எல்லா தேசிய இனங்களையும் சேர்ந்த உழைக்கும் மக்களின் ஒற்றுமையை உறுதி செய்தது.

அக்டோபர் புரட்சிக்குச் சற்று முன்னதாக, 1917 ஆகஸ்டு–செப்டம்பரில், ருஷ்யாவின் எல்லை வட்டத்தில் இருக்கும் ஒடுக்கப்பட்ட மக்களுக்கு எது மிகவும் விரிவான ஆக மெய்யான சுதந்திரத்தைக் கொண்டு வர முடியும் என்பது குறித்து லெனின் சிந்தித்தார். அவர்களது சொந்த அரசுத்துவமும் கூட்டாட்சி அடிப்படையிலான ஒன்றியமுமா அல்லது விரிவான ஸ்தல சுயாட்சியுடன் ஒரு பல்தேசிய

இன அரசில் இணைப்பதா எது சிறந்தது என்று சிந்தித்துப் பார்த்தார்.*

சோஷலிஸ்டுப்புரட்சியின் வெற்றிக்குப் பிறகு பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் நிறுவப்பட்டதன் பின், அவர் தேசிய உறவுகளின் புதிய உள்ளடக்கத்தை விசேஷமாயும் ஆராய்ந்தார். ஒவ்வொரு மக்களினத்தின் அகத்தேயும் தேசிய சர்வதேசிய நிகழ்ச்சிப் போக்குகள் மேலும் துரிதமாக அபிவிருத்தியடையும், புதிய வரலாற்றுக் கட்டத்தில் இவற்றை நெறியாண்மை செய்வதற்குரிய வாய்ப்புகள் இருக்கும் எனும் இந்த இரண்டும் அவரது பிரிநிலைக் கருத்துக்களாக இருந்தன.

துவக்கத்தில் சோஷலிஸ்டுப் புரட்சி ஒரு நாட்டில் மட்டுமே வாகை சூடியிருந்ததால், லெனினும் கட்சியும் இதர மக்களினங்களின் ஆதரவைப் பெறவேண்டி இருந்தது. 1917 டிசம்பர் இறுதியில் லெனின் பின்வரும் குறிப்பை வெளியிட்டார். ''ருஷ்யாவின் சோவியத் சோஷலிஸ்டு குடியரசுகளுக்கு ஆதரவாக, இதர தேசங்களைப் பொதுவாகவும், குறிப்பாக முன்னுள் ருஷ்யப் பேரினத்தால் ஒடுக்கப்பட்டு வந்த தேசங்களைக் குறிப்பாகவும் வென்று பெறுவது எப்படி?''** இந்தப் பிரச்சினை இனி மேலும் தேசிய ஒடுக்கு முறையை ஒழிப்பதாக இருக்க முடியாது, காரணம் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் நிறுவப் பட்டதாலும் சோஷலிஸ்டு பாணி உற்பத்தியை நோக்கிய ஆரம்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு விட்டதாலும் இதன் அடித்தளங்கள் ஏற்கெனவே அழிக்கப்பட்டு விட்டன. முதலாளித்துவ ஆதிக்கத்தை எதிர்த்தும் புதியவாழ்வை நிர்மாணிப்பதற்கும் எல்லா தேசிய இனங்களையும் கொண்ட உழைக்கும் மக்களின் ஐக்கிய முன்னணிக்கு அடித்தளமாக உதவும் வகையில் தேசிய உறவுகளுக்கு வடிவம் கொடுப்பது மேலும் முக்கியமானது, நிச்சயமாயும் அவ்வளவு கடினமானதல்ல. லெனினது இந்தக் கேள்விக்கான விடை அவரது

---

* லெனின், ''நூல் திரட்டு'', தொகுதி 25, பக். 448.

** ''அதே நூல்'', தொகுதி 36, பக். 460–61.

பிந்திய நூல்களில் காணக் கிடக்கின்றது. எதார்த்தமான நிகழ்ச்சிப் போக்கு புதிய தேசிய உறவுகளுக்கு வடிவம் தருவதில் பின்வரும் முக்கியமான போக்குகளை முன் வைத்துள்ளன.

அ) பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை நிறுவி, தாங்கி ஆதரிப்பதற்குரிய கூட்டுப் போராட்டம்; இந்தப் போராட்டத்தில் எல்லா தேசிய இனங்களையும் சேர்ந்த உழைக்கும் மக்கள் அரசின் சுயாதீனம் மற்றும் எல்லைகள் பிரச்சினை எப்படித் தீர்க்கப் பட்டாலும் சரி, பிரதான விஷயம் பொது விரோதிகளை எதிர்த்துப் போரிடுவதற்கான நெருக்கமான ராணுவ மற்றும் பொருளாதாரக் கூட்டணியே என்பதை உணர்ந்து வருகிறார்கள்.

ஆ) தேசிய அரசுகள் நிறுவுவதற்கான முன்னாள் ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமை, அவர்களது சுதந்திரத்தை அங்கீகரித்தல். இது பரஸ்பர நம்பிக்கையை உருவாக்கியது, சோவியத் நாட்டின் எல்லா மக்களினங்களின் சமத்துவத்தையும் உத்தரவாதம் செய்தது, சர்வதேச அரங்கத்தில் இதர மக்களினங்கள் பாலான அதன் கொள்கைக்கு அடித்தளமாக உதவியது. லெனின் எழுதியதாவது: "போலிஷ், லாத்வியன், லித்துவேனியன், எஸ்தோனியன் மற்றும் பின்னிஷ் அரசுகளின் சுயாதீனத்தை அங்கீகரிப்பது மூலமாக நாம் மேலும் அதிகளவு பின் தங்கி நின்று முதலாளிகளால் மேலதிகமாக ஏமாற்றப்பட்டும் மிதித்துத் துவைக்கப் பட்டும் கிடந்த அண்டைச் சிறு நாடுகளின் உழைக்கும் மக்களின் நம்பிக்கையை மெள்ள மெள்ள ஆனால் உறுதியாகப் பெற்று வருகிறோம்."*

இ) எல்லா தேசங்களின் நலன்களையும் ஆக அதிகப் பட்ச அளவுக்கு நிறைவு செய்தல், மக்களினங்களின் தேசிய உணர்வு விஷயத்தில் ஆகப்பெரியளவு நயமும் அக்கறையும், காட்டுதல்.

---

* "அதே நூல்", தொகுதி 30, பக். 294.

"பல்வேறு தேசங்களின் நலன்கள் குறித்து தனிமுக்கியத்துவமுள்ள கவனம் செலுத்தப் படுவது மூலம் மட்டுமே, மோதல்களுக்கான ஏதுக்களை அகற்ற முடியும், பரஸ்பர அவநம்பிக்கையை அகற்ற முடியும், ஏதேனும் சூழ்ச்சி நடக்குமோ என்னும் அச்சத்தை அகற்ற முடியும். அதோடு பல்வேறு மொழிகள் பேசும் தொழிலாளர் விவசாயிகள் சம்பந்தப்பட்டவரை நம்பிக்கையினை ஊட்ட முடியும், இதில்லாமல் மக்களினங்கள் இடையில் சமாதான உறவுகள் அறவே இருக்க முடியாது. இன்றைய நாகரிகத்தின் மதிப்பு வாய்ந்த சகலத்தையும் வெற்றிகரமாக அபிவிருத்தி செய்தல் முடியாது, இது குறித்து நமது அனுபவம் நமக்கு உறுதியான நம்பிக்கையளித்துள்ளது"* என்று லெனின் எழுதினார்.

ஈ) புதிய தேசிய உறவுகளுக்கு வடிவம் தரும்போது ஒடுக்கும் மற்றும் ஒடுக்கப்படும் தேசங்களின் உழைக்கும் மக்களின் முன்நாளைய நிலைமையைக் கவனத்தில் எடுத்துக் கொள்வது பாட்டாளி வர்க்க ஒருமைப்பாட்டின் அடிப்படை நலன்களும், இதன் பின்விளைவாக பாட்டாளி வர்க்கப் போராட்டத்தின் நலன்களும் தேசியப் பிரச்சினை குறித்து நாம் ஒரு சம்பிரதாயப் போக்கினை என்றும் அனுசரிக்கக் கூடாது என்றும் மாறாக, ஒடுக்கப்பட்ட (சிறிய) தேசத்தின் பாட்டாளி ஒடுக்கும் (மகா) தேசத்தின்பால் மேற்கொள்ளும் பிரத்தியேகப் போக்கை எப்போதும் கவனத்தில் கொள்ள வேண்டும் எனவும் கோருகின்றன."**

1. தேசிய அரசுப் பிரச்சினையில் லெனினது தலைமை

கம்யூனிஸ்டுக் கட்சி நிறுவப்பட்ட நாள் முதலே தேசங்களின் சுயநிர்ணய உரிமையினை ஆதரித்து வந்துள்ளது. "தேசங்களின் சுயநிர்ணயம் என்பது இந்த தேசங்களை

* வி.இ. லெனின், தொகுதி 33, பக். 386.

** "அதே நூல்", "நூல் திரட்டு", தொகுதி 36, பக். 609.

அன்னிய தேசிய அமைப்புகளிலிருந்து அரசியல் முறையில் தனிப் பிரிப்பது, சுயாதீனமான தேசிய அரசினை உருவாக்குவது என்பதாகும்''* என்று லெனின் கூறியுள்ளார். ஆனால் முதலில் இந்தப் பிரச்சினை மக்களினங்களின் அரசுத்துவ உரிமை பற்றி மட்டுமே அக்கறை காட்டியது. இந்த உரிமையினை செயலாக்கும் விஷயத்தில் கட்சியின் கருத்துக்கள் உருப்பெற நீண்டகாலம் எடுத்தது.

பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் நிறுவப்பட்டதைத் தொடர்ந்து ருஷ்யாவில் ஓர் ஐக்கிய மத்தியப்படுத்தப்பட்ட அரசு வேண்டுமென விழைந்த கம்யூனிஸ்டுக் கட்சியானது, நாட்டின் வெளிப்புறப் பகுதிகளில் சமுதாய மாற்றங்கள் இப்பிரச்சினையை முன்னணிக்குக் கொண்டுவந்தவரை இந்த மக்களினங்கள் விஷயத்தில் தேசிய அரசுத்துவப் பிரச்சினையையே எழுப்பவில்லை. இதனால் தேசிய அரசுத்துவம் பற்றிய கட்சியின் நோட்டம் எதிர்மறையானது என்று பொருளல்ல. போலந்து மற்றும் பின்லாந்து மக்களினங்கள் சிறிது காலம் உரித்தாகக் கொண்டு இருந்த தேசிய அரசுத்துவத்தை மீட்டமைப்பது சாத்தியமானது என்று ஒப்புக் கொள்ளப்பட்டது. உக்ரேன் விஷயத்திலும் இதேநிலை மேற்கொள்ளப்பட்டது.** ஆனால் ஜாராட்சி வீழ்த்தப்படுவதற்கும் தேச விடுதலை இயக்கத்தில் ஒரு புதிய எழுச்சி பிறப்பதற்கும் முன்னதாக, ருஷ்யாவின் ஒடுக்கப்பட்ட மக்களினங்களுக்கு அரசுத்துவம் என்பது சாத்தியம் என்பதாக மட்டுமே இருந்தது. இது விஷயத்தில் செயல்படக் கோரும் அளவுக்கு நிலைமைகள் முற்றி இருக்கவில்லை.

பழைய ருஷ்யாவில் தேசங்களின் சுயநிர்ணய உரிமை "வெற்றிகரமான ஒரு சோஷலிஸ்டுப் புரட்சி இல்லாமல் சாதனையாகாது''*** என்று லெனின் குறிப்பிட்டார். ருஷ்யாவின் பாட்டாளி வர்க்கத்தின் தலைமையின் கீழ்,

---

* வி. இ. லெனின் ''நூல் திரட்டு'' தொகுதி 20, பக். 397.

** ''அதே நூல்'', பக். 413.

*** அதே நூல், தொகுதி 21, பக். 282.

எல்லா தேசிய இனங்களையும் சேர்ந்த உழைக்கும் மக்கள் தமது ஒன்றுபட்ட புரட்சிகரப் போராட்டம் மூலம் மட்டுமே ஒரு சோஷலிஸ்டுப் புரட்சியை வெற்றிகரமாகச் செய்து நிறைவேற்ற முடியும். இத்தகைய ஒற்றுமைக்கு அடித்தளமாகப் பரஸ்பர நம்பிக்கை தேவை. உண்மையில் முக்கியமாயும் இதுவே பிரிந்து போய் சுயாதீனமான தேசிய அரசுகளை நிறுவிக் கொள்வது என்பது வரையான சுயநிர்ணய உரிமைக்கான கோரிக்கைக்குத் தூண்டுதலாக இருந்தது. ‘‘எல்லா அரசு மற்றும் தேசியத் தனியுரிமைகளை எதிர்த்தும் தத்தம் தேசிய அரசுகளை நிறுவிக் கொள்வதற்கான எல்லா தேசங்களின் உரிமைகளையும் சமத்துவ உரிமையையும் ஆதரித்தும்’’* இடைவிடாது பிரசாரம் நடத்துவதே தேசியப் பிரச்சினையிலான போல்ஷிவிக்குகளின் பிரதானக் கடமை என்று லெனின் சுட்டிக்காட்டினார். இதுவே, இது மட்டுமே மக்கள் திரளினருக்கு உண்மையிலேயே ஜனநாயக மான, உண்மையிலேயே சோஷலிஸ்ட் தன்மை வாய்ந்த கருத்துக்களை வழங்கும், பல்வேறு தேசங்களையும் சேர்ந்த உழைக்கும் மக்களின் ஒரு சமத்துவக் கூட்டணியை உத்தர வாதம் செய்யும்.

“ஒடுக்கப்பட்ட மக்களின் பூர்ஷுவா விடுதலை இயக் கங்கள் மற்றும் ஒடுக்கும் நாடுகளிலான பாட்டாளி வர்க்க விமோசன இயக்கங்கள் (ருஷியாவில் தேசியப் பிரச்சினையை கடினமாக்கும் பிரச்சினை இதுவே) இடையிலான சாத்திய மான எல்லா உறவுகளையும் முன்கூட்டியே** மதிப்பிடுவது சாத்தியமல்ல” என்று லெனின் கூறினார். அக்டோபர் புரட்சியின் போது இந்த உறவு உழைக்கும் மக்களுக்குச் சாதகமாக மாறியபொழுது, முன்னாள் ஒடுக்கப்பட்ட மக்களினங்கள் எல்லோரும் சோவியத் தேசிய அரசுகளை உருவாக்கிக் கொள்வதை முற்றும் **பொருத்தமானது** என்று பிரகடனம் செய்ய கம்யூனிஸ்டுக் கட்சி தயங்கவில்லை. தேசிய எல்லைப்பகுதிகளில் இருந்த தேசியவாத பூர்ஷு

---

* அதே நூல், தொகுதி 20, பக். 414.

** அதே நூல், பக். 440.

வாக்கள் இதைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டபோதிலும் விஷயத்தினைச் சிக்கலாக்குவதற்கு மேலாதிகமாக எதுவும் செய்ய இயலவில்லை. முன்னாள் ஒடுக்கப்பட்ட மக்களின் தேசிய மற்றும் சமூக விடுதலையைத் தவிர்க்க முடியவில்லை.

அக்டோபர் புரட்சிக்குப் பிறகு சமுதாயத்தில் தேசியப் பிரச்சினைக்கு இருந்த இடமானது மேலும் தெளிவாயிற்று. தேசிய அரசுத்துவத்தின் உள்ளடக்கத்தையும், உருவத்தையும், மக்களினங்களின் பல்வேறு அரசுக் கூட்டணிகளையும், எவ்வாறு அவற்றின் மறுமலர்ச்சியையும், சுபிட்சத்தையும் மேம்படுத்தவும் சோஷலிச நிர்மாணத்தை முன் கொண்டு செல்லவும் எவ்வாறு பயன்படுத்துவது என்பதும் மேலும் தெளிவாயிற்று. சோவியத் தேசிய அரசுத்துவம் ஜனநாயக மத்தியத்துவத்தோடு முரண்படவில்லை எனவும், இதற்கு மாறாக அது ஐக்கியத்திற்கு உதவிகரமாக இருந்தது மற்றும் மக்களினங்கள் மறுமலர்ச்சி, சுபிட்சம், வர்க்கமில்லாத சமுதாயத்தை நோக்கிய முன்னேற்றம் ஆகியவற்றை உத்தரவாதம் செய்துகொள்ள இதைப் பயன்படுத்த இயலும் என்ற முடிவுக்கு கட்சி வந்தபோது இவ்வாறு நிகழ்ந்தது.

எல்லைப்புறப் பகுதிகளில் பொது மக்களின் தேசிய விழிப்புணர்வு வேகமாகப் பெருகியது. ஆனால் தேசிய அரசுத்துவம் பற்றிய கருத்து உடனடியாகத் தோன்றவில்லை. போல்ஷிவிக் கட்சியின் நெறியாண்மையின் கீழ் அங்கிருந்த தொழிலாளர்களும் விவசாயிகளும் ருஷ்யாவின் பாட்டாளிகளுடன் கைகோர்த்து நின்று ஒரு சோஷலிஸ்டுப் புரட்சிக்காக ஊக்கமுடன் பாடுபட்டார்கள். இப்புரட்சி வெற்றிபெறும் பட்சத்தில் தேசியப் பிரச்சினைக்கும் தீர்வு காணப்பட்டுவிடும் என்று சரியாகவே கருதினார்கள். புரட்சி நெருங்கி வருவது கண்ட தேசியவாதத்தின் சித்தாந்திகள் முதலாளிகள்,நிலப்பிரபுக்களின் அதிகாரத்தை பாதுகாக்க வெறிபிடித்துத் திரிந்தனர். "பொதுவான தேசிய அரசு" எனும் கோஷம் எழுப்பி மக்களை சோஷலிஸ்டுப்

புரட்சியிடமிருந்து திசைதிருப்ப முயன்றனர். உழைக்கும் மக்களைப் பொருத்தவரை சோஷலிஸ்டுப் புரட்சி வெடித்த வரை தேசிய அரசுத்துவம் எனும் கருத்தைப் பற்றி யோசிக்கவே இல்லை, அதையும் புரட்சியின் வெற்றியுடன் சேர்த்தே பார்த்தார்கள். இது தொழிலாளர் விவசாயிகள் மத்தியிலும் தேசியப் பிரதேசங்களில் இருந்த போல்ஷிவிக் அமைப்புகளிலும் சமுதாய விடுதலையின் பெருகிவரும் நிச்சயத் தன்மைக்குச் சமவீதத்தில் இக் கருத்து கனிந்து வரலாயிற்று.

நீண்ட காலம், வெற்றி வாகை சூடிய புரட்சியை அடிப்படையாக்கி ஓர் ஐக்கிய மத்தியத்துவ அரசைக் கட்டு வதில் முயற்சிகள் ஒருமுகப்படுத்தப் பட்டிருந்தபோது கட்சி பொதுவாக கூட்டாட்சியை எதிர்த்தே வந்தது. பெரிய அரசின் கட்டமைப்பிற்குள்ளான தொழிலாளர்களின் சர்வதேசிய ஒற்றுமையின் தனி முக்கியத்துவம் ஒரு புறம் இருக்க, முதலாளித்துவத்தின் கீழ் கூட்டாட்சி மத்தியத் துவத்தைக் குலைத்து பொதுவாக முன்னேற்றத்தைத் தகைக்கிறது என்று லெனின் வலியுறுத்தினார். ''நாம் நிச்சய மாயும், ஜனநாயக மத்தியத்துவத்தை ஆதரிக்கிறோம். நாம் கூட்டாட்சியை எதிர்க்கிறோம்''* என்பதாக அவர் 1913 இறுதியில் எஸ். ஷாஹுாம்யானுக்கு** எழுதினார். மேலும் விரித்துரைத்து அவர் குறிப்பிட்டதாவது: ''நாம் கோட் பாட்டளவில் கூட்டாட்சிக் கருத்தை எதிர்க்கிறோம். இது பொருளாதார பிணைப்புக்களைத் தளர்த்தி விடுகிறது. தனி

* வி. இ. லெனின், ''நூல் திரட்டு'', தொகுதி 19, பக். 500.

** ஷாஹுாம்யான், ஸ்டிபான் கிரிகோரியெவிச் (1878-1918) கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் சோவியத் அரசின் பிரமுகர். அக்டோபர் சோஷலிஸ்டுப் புரட்சிக்குப் பிறகு அவர் மக்கள் கமிசார்களின் பக்கூ கவுன்சில் தலைவராக இருந்தார். 1918-ல் பிரிட்டிஷ் தலையீட்டாளர்களால் 25 இதரபக்கூ கமிசார்களுடன் சேர்த்து சுட்டுக் கொல்லப்பட்டார்.

ஓர் அரசுக்கு இது பொருந்தாது."* இதற்குப் பின்னுல் வெவ்வேறு தேசங்கள் ஓர் அரசில் அடங்கியுள்ள காலம் வரை மார்க்சிய வாதிகள் கூட்டாட்சிக் கோட்பாட்டையோ அல்லது பரவலாக்கும் செயலேயோ எக்காரணங் கொண்டும் ஆதரியார்கள். 1914 இறுதியில், **மகா ருஷ்யர்களின் தேசியப் பெருமிதம்** எனும் கட்டுரையில் அவர் மீண்டும் உரைத்த தாவது: ''இதர நிலைமைகள் சமமாக இருக்கும் அளவில் நாம் நிச்சயமாயும் மத்தியத்துவப்படுத்தலேயே ஆதரிக்கி ருேம், குட்டி பூர்ஷுவா லட்சியமான கூட்டாட்சி உறவுகளை எதிர்க்கிருேம்,"**

ஆனுல் கூட்டாட்சி மீதான லெனினது எதிர்ப்பு முற்ற முழுமையானது அல்ல. 1903-ல் அவர் எழுதினுர்: ''நாம் எல்லாத் தேசிய இனங்களையும் சார்ந்த பாட்டாளிகளின் மிக நெருக்கமான ஒற்றுமைக்கு எப்போதும் தயக்கமின்றிப் பாடுபட வேண்டும். தனிப்பட்டதும் விதி விலக்கானதுமான சந்தர்ப்பங்களில் மட்டுமே நாம் புதிய வர்க்க அரசு அமைப்பதற்கோ அல்லது மேலும் பரவலான கூட்டாட்சி ஒற்றுமைக்கு மாறிச் செல்லவோ உதவும் கோரிக்கைகளை முன்வைத்து செயலூக்கமுடன் ஆதரிக்கவோ செய்யலாம். இதுவும் அரசின் பரிபூரண அரசியல் ஒற்றுமைக்காகவே."*** இங்கு குறிப்பிடப்பட்டது ருஷ்யாவில் இருந்த பிரத்தியேக நிலைமைகளே. ஆயினும் பல சந்தர்ப்பங்களில் லெனின் இதர மக்களினங்களுக்கு கூட்டாட்சி முறையை ஆதரித் துள்ளார் (குறிப்பாக பால்கன் நாடுகளுக்கும் அயர்லாந்து மற்றும் பிரிட்டனுக்கு), ''கோட்பாட்டளவில் கூட்டாட்சிக்கு விரோதமாக இருந்தபோதிலும்'' மார்க்ஸ் அயர்லாந்துக்கும் பிரிட்டனுக்கும் இது பொருந்தும் என்ருர். மார்க்ஸ் இந்த விஷயத்தில் ஒரு நிபந்தனை செய்திருப்பதாக லெனின் சுட்டு கிருர். ''அயர்லாந்தின் விமோசனம் சீர்திருத்த வழிகளில்

---

* வி. இ. லெனின், ''நூல் திரட்டு'', தொகுதி 19, பக். 500.

** அதே நூல், தொகுதி 21, பக். 105.

*** அதே நூல், தொகுதி 6, பக். 454.

அன்றி புரட்சிகரமான வழிகளில் சாத்தியமாக இருப்பின் இது''* பொருத்தம் என்கிறார்.

தேசிய அரசுத்துவம் பற்றிய லெனினது கருத் தோட்டத்தில் ஏற்பட்ட மாறுதல் கூட்டாட்சி பிரச்சினை உள்ளிட்ட தேசிய உறவுகள் சம்பந்தமான கருத்துரு முழு வதையுமே பாதித்தது. சோஷலிஸ்டு புரட்சி கண் கூடாகவும் நெருங்கி வருகிறது என்ற சூழலில் அவர் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் நிறுவப்படுவது தொடர்ந்த கால கட்டத்திற்கு ஏற்ப தேசிய உறவுகள் விஷயத்தில் தமது அழுத்தத்தை மாற்றிப் பிரயோகம் செய்தார் என்பதை இங்கு மனதிற்கொள்ள வேண்டும்.

1917 பிப்ரவரி பூர்ஷுவா ஜனநாயகப் புரட்சிக்குப் பிற்பாடு, கட்சி ஒரு பல்தேசிய இன அரசை நிர்மாணிப் பதன் ஜனநாயக சாரத்தை வரையறுத்துத் தந்தது. இது முன்னாள் ஒடுக்கப்பட்டுக் கிடந்த மக்களின் தேச விடுதலை இயக்கம் துரிதமாக வளர்ந்து வருவதால் இது இன்றியமை யாததாயிற்று. 1917 ஏப்ரலில் நடைபெற்றதான கட்சிக் காங்கிரசில், லெனின் நாட்டின் வாழ்க்கையில் தேசியப் பிரச்சினைக்கு உரிய இடம் மாற்றமடைந்து விட்டது என்பதை இன்னமும் உணராமல் இருந்த பல முக்கியக் கட்சித் தலைவர்களுடன் லெனின் மோத வேண்டி ஏற்பட்டது. சர்வவுரிமையுள்ள தேசிய அரசுகளின் உருவாக்கம் முற்றிலும் ஏற்புடையது என்று அவர் வலியுறுத்தினார். ''நாம் தேசங்களின் ஒரு சோதர ஒன்றியத்தை ஆதரிக்கி றோம்'' என்று அவர் சொன்னார். ஓர் உக்ரேனியக் குடியரசும் ஒரு ருஷ்யக் குடியரசும் இருக்குமானால் இவை இரண்டுக்கும் இடையே மேலும் நெருக்கமான தொடர்பும் மேலதிகமான பரஸ்பர நம்பிக்கையும் இருக்கும்''** என்றார் அவர். 1917 மே துவக்கத்தில் ருஷ்யாவுக்கு ஒருகூட்டாட்சி அரசு முற்றும் பொருத்தமானதே என்றார். ''தொழிற்சாலைகளிலும் படைப் பிரிவுகளிலும் தேர்வு செய்யப்பட்ட தொழிலாளர்-

---

* அதே நூல், தொகுதி 20, பக். 441.

** அதே நூல், தொகுதி 24, பக். 30.

படைவீரர் பிரதிநிதிகளின் சோவியத்துகளின் உறுப்பினர்களுக்கு அறிவுரை வழங்கியபோதில்'' இதை அவர் மூன்று சந்தர்ப்பங்களில் வலியுறுத்தினர். ருஷ்யர்கள், ''எவ்வித விதிவிலக்கும் இன்றி இதர தேசங்கள் அனைத்தும் தாம் தனி அரசுகளாக வாழவோ அல்லது தாம் விரும்பும் வேறு தேசங்களுடன் ஒன்றியமாக இணைந்தோ விரும்பியபடி சுதந்திரமாக முடிவு செய்ய''* அனுமதிக்கவேண்டும் என்பதே அவர் மனதில் இருந்த கருத்தாகும். சோவியத்துகளின் முதலாவது அகில ருஷ்ய காங்கிரசில் அவர் ருஷ்ய மக்களினங்களின் சுயவிருப்பமான கூட்டாட்சிக் குடியரசை ஆதரித்து (இது சோஷலிஸ்டுப் புரட்சியாளர்களால் பிரேரேபிக்கப்பட்டது) விவசாயிகள் காங்கிரஸ் மேற்கொண்ட முடிவை முன்னேற்ற நோக்குடையது என்று அவர் பாராட்டினர். சோவியத்துகளின் காங்கிரசில் உரையாற்றிய அவர் ''ஐக்கியமுற்ற பிரிக்கவெண்ணுத ருஷ்யக் குடியரசு'' பற்றியும் தனிக்குடியரசுகள் பற்றியும் குறிப்பிட்டார். ருஷ்யாவின் குடியரசு என்னும்போது அவர் ஒரு கூட்டாட்சி அரசையே கருத்தில் கொண்டிருந்தார். காரணம் ''ருஷ்யா சுதந்திரக் குடியரசுகளின் ஒன்றியமாக இருப்பதாக.''** எனவும் கூறினர். **அரசும் புரட்சியும்** என்னும் அவரது நூலில் கூட்டாட்சி என்பது ருஷ்யாவில் தேசியப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்குரியதான ஏற்புடை வழிமுறை என்றுர்.

அக்டோபர் புரட்சிக்குப் பிறகு ஒரு சில தேசியப் பிரதேசங்களில் பூர்ஷுவா தேசிய அரசுகள் உதித்தன—முதலில் போலந்திலும் பின்லாந்திலும் சில நாட்களுக்குப் பின்னர் லாத்வியா,லித்துவேனியா மற்றும்எஸ்தோனியாவில் இவை எழுந்தன. உக்ரேனில், நாட்டின் மத்திய பிராந்தியங்களில் அக்டோபர் புரட்சி வெற்றி வாகை சூடியதைத் தொடர்ந்து, சிலகாலம் குட்டி பூர்ஷுவா பிரிவுகளிடைப்

---

* வி. இ. லெனின், ''நூல் திரட்டு'', தொகுதி 24, பக். 355.

** அதே நூல், தொகுதி 25, பக் 37.

பேரளவான செல்வாக்குச் செலுத்தி வந்த பூர்ஷுவா தேசியவாத எதிர்ப் புரட்சியாளர்கள் ருஷ்யாவின் பூர்ஷுவா மற்றும் நிலவுடைமையாளர்களின் ஒரு "பொதுவான கூட்டாட்சி" அரசாங்கத்தை நிறுவும் எண்ணமுடன் கிட்டத்தட்ட இரண்டு மாத காலம் ஆடித் திரிந்தார்கள்.

பெரும்பாலான சந்தர்ப்பங்களில்,தேசியப்பகுதிகளிலான உழைக்கும் மக்கள் திரளினர் தாமே முடிவு எடுத்து எதிர்ப் புரட்சியாளர் திட்டங்களைக் குலைத்தனர். லெனின் முன்னறிந்து கூறியதுபோல தேசியப் பிரதேசங்களிலான மக்கள் திரளினர் ருஷ்யாவின் பாட்டாளிகளுடன் நேச அணி நாடினர். "ஒடுக்கப்பட்ட தேசங்களைச் சேர்ந்த மிகப் பரவலான மக்கள் பகுதியினர் (அதாவது குட்டி-பூர்ஷுவா மக்கள் திரளினர் உட்பட) பூர்ஷுவாக்களைவிடவும் அதிகமாக ருஷ்யாவின் பாட்டாளி மக்கள் மீது நம்பிக்கை வைத்திருந்தனர்"* என்று அக்டோபர் புரட்சிதறுவாயில் அவர் எழுதினர்.

உண்மையில், சோஷலிஸ்டுப் புரட்சியின் தயாரிப்புக் கட்டத்திலும், புரட்சி வெடித்த சமயத்திலும் பேரளவில் காணப்பெற்றதான விரிமைய பிளவுச் சக்திகளை நாம் காணத் தவறிவிடக் கூடாது. எல்லைப்புறப் பகுதிகளில் பூர்ஷுவா தேசியவாதி எதிர்ப்புரட்சியாளர் மத்தியில் காணப்பெற்றதான தனிப்பிரியும் பிரிவினைப் போக்குகள் ஒரு புறம் இருக்க, முதலில் ஜாராட்சி பின்னர் பூர்ஷுவா தேசிய அரசாங்கத்தின் குறு தேசிய வெறிக் கொள்கையின் பராதீனப்படுத்தும் தாக்கமும் கூட இருந்தது. எல்லைப்புறப் பகுதிகளுடனை மையத்தின் பொருளாதார உறவுகள் மிகவும் மோசமான அளவுக்குச் சீர்குலைக்கப்பட்டன. இது சிதைந்தழியும் அபாயத்தை ஏற்படுத்தியது. சோஷலிஸ்டுப் புரட்சி பற்றி குலை நடுங்கிய பூர்ஷுவாக்கள் தேசியப் பகுதி களிலே ருஷ்யாவிடமிருந்து பிரிந்து செல்வதற்கான

---

* அதே நூல், தொகுதி 26, பக். 98.

திட்டங்களை முன்வைத்தார்கள். ஆனால் மிகச்சில இடங்களில் மட்டுமே இதனைச் செயல்படுத்த முடிந்தது. இதற்கு அன்னிய ஏகாதிபத்திய வாதிகளின் ஆதரவும்,அக்டோபர் புரட்சிக்குப் பின் ருஷ்யன் பூர்ஷுவாக்களின் ஓரளவு ஆதரவும் இருந்தது தெரிந்ததே.

சோஷலிஸ்டுப் புரட்சி வெற்றி வாகை சூடியதோடு சுய-நிர்ணய உரிமையினைச் செயல்படுத்துவது என்பது, முன்னாள் ஒடுக்கப்பட்ட மக்களினங்களின் தேசிய விடுதலைக்குச் சாதகமான நிர்ணயமான அம்சமாகியது. இந்த கோஷத்தின் உள்ளடக்கமும், உட்பொருளும் சட்ட வரையறுப்புக்கள் அல்லது கருத்தியலான சூத்திரங்களில் தேடிக் காணமுடியாது. மாறாக தேசிய இயக்கத்தின் வரலாற்றுப் பொருளாதார நிலைமைகளில் கண்டெய்த முயல வேண்டும் என்று லெனின் கூறினார். தேசிய அரசுகளின் உடனடியான உருவாக்கம் சம்பந்தமாக கட்சியின் நோக்கு நிலை திருத்தப்பட வேண்டும் என்று இரு காரணிகள் வற்புறுத்தின. அ) நாடு ஒரு சோஷலிஸ்டுப் புரட்சியின் தலைவாயிலில் நிற்கிறது. இது தவிர்க்க முடியாத வகையில் எல்லைப் பகுதிகளையும் மையப் பகுதியையும் ஈடுபடுத்தும்; ஆ) தேசிய விடுதலை இயக்கம் மிகவும் உயர்ந்தளவு முதிர்ச்சி பெற்று விட்டது. மிகவும் விரிவடைந்து விட்டது. ஆகவே மக்களினங்கள் தாமாகவே தமது சொந்த சோவியத் அரசுகளை உருவாக்கிக் கொள்வது உடனடியான நிகழ்வாக இருக்கும். இந்த இரு காரணிகளும் தொடர்புடையவை, ஒன்றை ஒன்றுமுழுமை செய்பவை. இவ்வாறு தேசிய அரசுகள் பிரச்சினைக்கு ஒரு புதிய அணுகுமுறை அவசியமாயிற்று.

சோவியத் பல்தேசிய இன அரசின் கட்டுமானக் கோட்பாடாக கட்சி கூட்டாட்சியை ஏற்றுக் கொண்டதற்கான காரணங்கள் இவையே.

அக்டோபர் புரட்சிக்கான தயாரிப்புகளின் போதும் புரட்சியின் நடைமுறையின் போதும் வெளியிடப்பட்ட

லெனினது அறிவிப்புக்கள் அந்தத் தருணத்தில் அவர் கூட்டாட்சி என்று பயன்படுத்திய தொடரின் பொருள் ஒன்றிய அரசு என்பதே என்று உறுதியாகக் கருத இடமளிக்கின்றன. ''கூட்டாட்சி என்பது சமநிலையில் இருக்கும் நாடுகளின் இணைப்பு, பொது உடன்பாட்டைக் கோரும் ஓர் இணைப்பு''* என்று இதற்கு முன்னரே அவர் விளக்கம் தந்திருந்தார். சுயாட்சி என்பது மக்களினங்களின் தேசிய அரசுத்துவத்தின் உருவகம் என்பதைக் காட்டிலும் பிராந்திய சுயநிர்வாகத்தின் ஒரு வடிவம் என்பதாகவே கருதப்பட்டிருந்தது. சோவியத் ஆட்சியதிகாரத்தின் துவக்க மாதங்களில் மேற்கு மற்றும் மாஸ்கோ பகுதிகளில் மக்கள் கமிசார்கள் கவுன்சில்கள் நிறுவப்பட்டது, சில நாட்களுக்குப் பின் பெட்ரோகிராட் உழைப்பாளர் கம்யூன் நிறுவப்பட்டது மூலம் இது ஊர்ஜிதப்படுத்தப்பட்டது.

ஒரு சோஷலிஸ்டு கூட்டாட்சியில் சோவியத் நாட்டின் மக்களினங்கள் அரசுருவில் சேர்ந்திணைவது என்பதான லெனினது கருத்து, சோவியத் ருஷ்யாவுக்கும் சோவியத் உக்ரேனுக்கும் இடையிலான உறவுகள் சம்பந்தமாக (1917 டிசம்பர் துவக்கத்தில்) யோசனைகள் முன்வைப்பதற்கு இட்டுச் சென்றது. சோவியத் உக்ரேனின் தேசிய உரிமைகளும் சுயாதீனமும் எவ்வித நிபந்தனைகளும் இன்றி மட்டுமழுப்பல் இன்றி அங்கீகரிக்கப்பட்டது. புதிய உறவின் தடைகளை நிர்ணயிப்பதற்குக் கூட்டாட்சி சம்பந்தமான ''ஓர் ஒப்பந்தம் செய்து கொள்ளலாம்'' என்று கருத்துரைக்கப்பட்டது.

சுயாட்சி பற்றியதான கருத்துக்களும் இந்த நேரத்தில் ஸ்தூலமாக உருப்பெறத் துவங்கின. 1917 டிசம்பர் 4-ந் தேதி, லெனின் நிலக் கமிஷன் பற்றியதான அவசரச் சட்டத்தில் கையொப்பமிட்டார். இது சோவியத் நாட்டின் அரசுரிமை பற்றிக் குறிப்பிட்டு, சுயாட்சி உறுப்புகளை

---

* அதே நூல், தொகுதி 19, பக். 500.

கூட்டாட்சியின் அங்கங்களாக வரையறுத்து, முதன் முதலாக சுயாட்சி மற்றும் கூட்டாட்சி எனும் கருத்துருக்களை இணைத்துக் காட்டியது.

கூட்டாட்சிக் கோட்பாட்டுக்கு ஆதரவான கட்சியின் விருப்ப முடிவு இரு காரணிகளை ஆதாரமாக்கியதாகும்: அ) முன்னாள் ஒடுக்கப்பட்ட மக்களினங்கள் சோஷலிஸ்டு நிலைமைகளில் மறுமலர்ச்சி பெற்று சகல துறைகளிலும் முன்னேறுவதற்கு தேசிய அரசுத்துவம் சாதக நிலைகளை ஏற்படுத்தி இருக்கிறது என்பதை நிகழ்வுகள் காட்டுகின்றன. சோஷலிஸ்டுப் புரட்சியைத் தொடங்கி வைத்த லெனின், நாம் உக்ரேன், பின்லாந்து போன்ற இதர தேசங்களை வன்முறை மூலமோ அல்லது திணிக்கப்பட்ட ஒற்றுமை மூலமோ அன்றி அவர்கள் தமது சொந்த சோஷலிஸ்டு அமைப்பை அவர்களது சொந்த சோவியத் குடியரசை படைத்துருவாக்கிக் கொள்வதற்கு அனுமதித்து—கவர்ந்து இழுக்கலாம்* என்று லெனின் கூறினர்.

லெனினது ''உழைக்கும் சுரண்டப்படும் மக்களின் உரிமைகள் பிரகடனத்தை'' 1918 ஜனவரி 12-ந் தேதியன்று அங்கீகரித்தது மூலம் சோவியத்துகளின் மூன்ருவது அகில ருஷ்யக் காங்கிரஸ் தேசிய அரசுகளின் அபிவிருத்திக்கு கூட்டாட்சி ஓர் அடித்தளம் என்பதை அதிகார பூர்வமாக ஒப்புக் கொண்டது. இந்தப் பிரகடனம் கூறியதாவது: ''ருஷ்யாவின் சோவியத் குடியரசு சுதந்திர தேசங்களின் சுதந்திர ஒன்றியம் எனும் கோட்பாட்டின் மீது நிறுவப்படுகிறது.''** லெனின் கூறியதாவது: சோவியத்துகளின் மூன்ருவது காங்கிரஸ் உலக வரலாற்றில் ஒரு புதிய சகாப்

---

* வி. இ. லெனின் ''நூல் திரட்டு'', தொகுதி 26, பக். 495.

** அதே நூல், தொகுதி 26, பக். 423.

த்தைத் திறந்து வைத்திருக்கிறது. சோஷலிஸ்டு சோவியத் குடியரசின் புதிய அமைப்பை ருஷ்யாவில் வாழும் பல்வேறு தேசங்களின் சுதந்திரக் குடியரசுகளின் ஒரு கூட்டாட்சியாக'' என்றென்றைக்குமாக ஊர்ஜிதம் செய்வது மூலம் இதைப் புரிந்திருக்கிறது. இந்தப் புதிய அமைப்பு ''ஒரு புதுக் கண்டு பிடிப்போ அல்லது கட்சியின் சாதுரியச் செயலோ அல்ல, மாறாக இது வாழ்க்கையின் மாறுதலின் அசல் விளைவே யாகும்''* என்றும் அவர் குறிப்பிட்டார்.

ருஷ்யன் சோவியத் கூட்டாட்சி சோஷலிஸ்டுக் குடியரசு (ஆர்.எஸ்.எப். எஸ்.ஆர்.)மகா ருஷ்யாவால் அன்றி சோவியத் நாடு முழுவதாலும் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்ட சோவியத்துகளின் அகில ருஷ்யக் காங்கிரசால் நிறுவப் பட்டது. இது படிப்படியாக சர்வவுரிமையுடைய சோவியத் குடியரசுகளையும் அவற்றின் வாயிலாக சுயாட்சி தேசியப் பகுதிகளையும் அரவணைத்த ஐக்கிய சோவியத் பல்தேசிய இன அரசு உருவாக வகை செய்தது.

கட்சியின் ஆரம்பத்திட்டம், சோவியத் சோஷலிஸ்டுக் குடியரசுகளின் ஒன்றியத்தின் அரசியல் சட்டம் குறித்து 1922 செப்டம்பரில் லெனின் முன்வைத்த ஆலோசனைகளுக்கு உடன்பாடானதாக இருந்தது. இது, அக்டோபர் சோஷலிஸ்டுப் புரட்சிக்குப் பின்னர், திட்டமிட்டபடி ஐக்கிய சோவியத் பல்தேசிய அரசின் அகத்தே பல்வேறு வடிவிலான தேசிய அரசுத்துவத்தைப் பயன்படுத்தும் கருத்தை முதன்முதலாகப் பிரயோகித்தது. ஆனால் இந்த ஆரம்பத் திட்டம் பல வழிகளில் நிர்ணயமில்லாததாக (கூட்டாட்சியின் மாதிரிகள் தெளிவாக அறிவிக்கப்படவில்லை) இருந்தன. அதே சமயம் சோவியத் ஒன்றியத்தின் கட்டமைப்பு ஏற்கெனவே பரிசீலித்துத் தேர்ந்த ஒன்றிய வடிவங்களை அடிப்படையாக்கி இருந்தது, அதோடு ஒரு

* அதே நூல், தொகுதி 26, பக். 479.

புதிய உயர் மாதிரியிலான சோவியத் கூட்டாட்சியின் தோற்றத்தையும் எடுத்துக் காட்டியது.

இந்தத் துவக்கத் திட்டம் ஓரளவுக்கு மட்டுமே அமுலாக்கம் செய்யப்பட்டது ஏன்? இதற்குப் பிரதான காரணம் புதிய தேசிய உறவுகளை உருவகப்படுத்துவது என்பது எதிர்பார்த்ததைவிடவும் மிகவும் கடினமானது என்பது தெரிந்தது. இதற்கும் மேல் வெளிநாட்டு உள்நாட்டு விரோதிகளை எதிர்த்து எல்லா தேசிய இனங்களையும் சார்ந்த உழைக்கும் மக்களின் கடுமையான போராட்டத்தால் நிலைமை மேலும் சிக்கலாயிற்று. அன்னிய ஏகாதிபத்தியவாதிகளின் உதவியுடன் பூர்ஷுவா—தேசிய எதிர்ப்புரட்சியாளர்கள் மக்கள் மத்தியில் தேசியவாதம் குறுதேசிய வெறி ஆகிய நோய்களைப் பரப்ப அதிகப் பட்சமாக முயன்றார்கள்; பிரிவினைவாதப் போக்குகளை ஊக்குவித்தார்கள்; பல எல்லைப்புறப் பகுதிகளை சோவியத் நாட்டிடமிருந்து பிரித்து பூர்ஷுவா தேசிய அரசுகளை உருவாக்கியதன் மூலம், நீண்ட காலத்துக்குப் பிரித்து வைப்பதில் சாதனை கண்டார்கள்.

இது ஒன்றிணைந்த ஒன்றிய அரசு படைத்துருவாக்கப் படுவதைத் தடைப்படுத்தியது. அக்டோபர் புரட்சியின் தறுவாயிலும் அதற்கு உடனடி பின்னாலும் முழுமையான இணைப்பாக்கம் கொண்ட பல்தேசிய இன அரசையோ அல்லது அதன் கட்டுக் கோப்புக்குள்ளேயே பல்வேறு வடிவங்களிலான சுயாட்சியையோ ஆதரித்த அந்த மக்களினங்களுங்கூட, ஒரு சில தேசிய நடப்புகளின் தாக்கத்தின் கீழ் அன்னியத் தலையீடும் உள்நாட்டுப் போரும் ஏற்பட்ட போது சுயாதீனமான சோவியத் தேசியக் குடியரசுகளுக்கு ஆதரவாகத் திரும்பினார்கள். இது முன்னாள் ஒடுக்கப்பட்ட தேசிய இனங்களைச் சேர்ந்த உழைக்கும் மக்கள் ருஷ்ய மக்களுடன் கூட்டுச் சேர்ந்து விதேசி மற்றும் சுதேசி எதிர்ப்புரட்சியை எதிர்த்துப்

போராடுவதையும், முன்னுள் ஒடுக்கப்பட்ட மக்களினங்களை அணி திரட்டி சோஷலிஸ்டு நிர்மாணப் பணிகளில் அவர்களை ஈர்ப்பதையும் காலப் பொருத்தமானது,அவசியமானது என நிரூபணம் செய்தது.

சர்வவுரிமையுடைய சோவியத் குடியரசுகளிடையிலான உறவுகளை உருவகப்படுத்துவது உள்ளடக்கத்தில் கடினம் என்பது தெரியவந்தது,இதற்கு நீடித்த காலமும் எடுத்தது. பல ஆண்டுகள் இவை தமது நெருக்கமான ஒத்துழைப்பு மற்றும் பரஸ்பர உதவி காரணமாக அவற்றின் பிரத்தியேகத் தன்மை ஓரளவுக்கு இருந்த போதிலும் அவை "குறிப்பிட்ட சோவியத் குடியரசுகளாக இருந்தன"* என்பதை சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சியின் எட்டாவது காங்கிரஸ் கண்டது.

மறுபுறத்தில் சுயாட்சி தேசிய அரசுகள் பெரும்பாலும் மிகச் சிறிய பரப்பையே கொண்டிருந்ததால்,ரு.சோ.கூ.சோ. குடியரசில் ஒருபகுதியாகவே இருக்கும் அவசியம் ஏற்பட்டது. உண்மையில் ருஷ்ய மக்களின் அரசின் அகத்தேயான எல்லைப் பகுதிகளாகவே இருந்தன, அவற்றில் பெரும்பாலானவை. இதற்கும் மேலாக, சிறிய மக்களினங்களின் சுயாட்சி வடிவம் (அரசியல் மற்றும் நிர்வாகம்) சோவியத் சர்வவுரிமைக் குடியரசு விஷயத்தில் காட்டிலும் அதிகமாக, சோவியத் ருஷ்யாவுடனான அவற்றின் அரசு உறவுகளின் உள்ளடக்கம் மேலும் விரைவாக வரையறை செய்யப்படுவதாக இருந்தது.

இவ்வாறு, 1918 முன்பனிக்காலத்தில் துவக்கப்பட்டதான சோவியத் பல்தேசிய இன அரசின் நிர்மாணம் இரட்டை நடைமுறையாக இருந்தது: ஒரு புறத்தில் ரு. சோ. கூ. சோ. குடியரசு சுயாட்சி அடிப்படையிலேயே உருவாயிற்று, அதே போதில், மறுபுறம் சர்வவுரிமையுள்ள

---

* சோ. க. க. **காங்கிரசுகள், மாநாடுகள் ம. க. பிளீனம் கூட்டங்களின் தீர்மானங்கள்,** தொகுதி 2, பக். 73, (ருஷ்ய மொழியில்).

சோவியத் குடியரசுகளின் அரசு ஒன்றியம் இதற்கு இணையாகவும் ரு. சோ. கூ. சோ குடியரசின் தலைமையிலும் உருவாகியது. இதனுல்தான் "சோவியத் ருஷ்யாவைச் சுற்றும் பல தேசிய சோவியத் குடியரசுகளை ஒன்றிணைக்கும்" அனுபவத்தின் மீது செயல்பட்ட சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சியின் 8 ஆவது காங்கிரஸ் லெனினது ஆலோசனைப்படி கட்சியின் வேலைத் திட்டத்தில், கட்சியின் நோக்கம் "சோவியத் வழிகளில் ஒழுங்கமைக்கப்பட்டதான அரசுகளின் கூட்டாட்சி ஒன்றியத்தைப் பெறுவதே"* என்று வரையறை செய்து கொண்டிருக்கிறது.

தேசிய அரசுகளின் அபிவிருத்தி மிகவும் சிக்கலானதாக இருந்தது. 1919 வசந்த காலத்தில் நிலைமை மிகவும் கடுமையாகியதால் சோவியத் உக்ரேனின் சுதந்திரமானது, விரோதியை முறியடிப்பதற்கான அதன் மனித சக்தி மற்றும் வள ஆதாரங்களை ஒன்று திரட்டுவதைத் தடைப்படுத்தத் தொடங்கியது. குடியரசுகளை ஒற்றுமைப்படுத்துவதற்கான மிகவும் பொருத்தமான வடிவம் குறித்த தேட்டம் தொடர்ந்தது. லெனின் பங்கேற்புடன் சோவியத் கட்சியின் அரசியல் குழு இரண்டு குடியரசுகளின் இணைவு சாத்தியமா என்ற விஷயத்தைப் பரிசீலித்தது, ஆயினும் உரிய காலத்தில் தீர்வு காணப்பட்டது: உடன்படிக்கை அடிப்படையிலான கூட்டாட்சி உருவில் சர்வவுரிமை பெற்ற சோவியத் குடியரசுகளின் அரசு ஒன்றியம் நன்று என்று லெனின் ஆலோசனை கூறினர். இதை அகில ருஷ்ய மத்திய நிர்வாகக்கமிட்டி 1919 ஜூன் 1ந் தேதிய அரசாணையில் அங்கீகரித்தது.

கம்யூனிஸ்டு அகிலத்தின் இரண்டாவது காங்கிரசில் தேசிய காலனி பிரச்சினை மீதான தனது ஆராய்ச்சியுரையில் லெனின் "என்றும் நிலவும் மேலும் நெருக்கமான

---

* அதே நூல், பக். 45, 46.

கூட்டாட்சி ஒற்றுமையின்''* அவசியம் பற்றிக் குறிப்பிட்டார். அன்று சோஷலிஸ்டு கூட்டாட்சி வாயிலாக சாதனையான விளைவுகளை அடிப்படையாக்கிய இந்த முக்கியமான தத்துவார்த்த மற்றும் நடைமுறை அனுபவக் கருத்து 1921-1922-ல் உடன்படிக்கை அடிப்படையிலான சர்வவுரிமை சோவியத் குடியரசுகளின் கூட்டாட்சியின் மேற்பட்ட வளர்ச்சியிலும், சோவியத் சோஷலிஸ்டு குடியரசுகளின் ஒன்றியத்தின் உருவாக்கம் விஷயத்திலும் முனைப்பாக நின்றது.

லெனினும் கட்சி முழுவதும், தேசியப் பிரச்சினையை தொழிலாளி வர்க்க அரசு மற்றும் சோஷலிசத்தின் எதிர்காலத்தைப் பற்றிய பிரச்சினைக்குக் கீழடக்கியே எப்போதும் வைத்திருந்தனர் என்ற உவமை, மக்களினங்களில் தேசிய அரசுத்துவம் மற்றும் அவர்களது அரசு ஒன்றியத்தின் வடிவங்கள் பாலான தோரணையில் பிரதிபலித்தது. தேசிய அரசுத்துவத்தின் வடிவம் கம்யூனிஸ்டுகள் மத்தியில் உட்பூசலுக்கு இலக்காக இருத்தல் கூடாது; அது ஒருமுகப்படுத்தப் பெற்றதான நட்புறவான பாட்டாளி வர்க்கப் பணிக்கு முட்டுக் கட்டையாக இருத்தல் கூடாது என்பதற்காக லெனின் சுட்டிக் காட்டினார். இதுவே பாட்டாளி வர்க்க அரசுகளின் ஒன்றியத்துக்கும் பொருந்தும். இவை மூலதனத்தின் ஆதிக்கத்தை எதிர்த்து பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்திற்காக நடத்தும் போராட்டத்தில் ஒற்றுமை அவசியம், அதோடு தேசிய எல்லைகள் விஷயத்திலோ அல்லது அரசுகள் இடையே கூட்டாட்சி அல்லது வேறு இதர பந்தம் இருக்க வேண்டும் என்பதிலோ கம்யூனிஸ்டுகள் மத்தியில் கருத்து வேறுபாடுகள் இருத்தல் கூடாது''** என்று லெனின் எழுதினார்.

---

* வி. இ. லெனின் ''நூல் திரட்டு'', தொகுதி 31, பக். 147.

** அதே நூல், தொகுதி 30, பக். 294-95.

தேசிய அரசுத்துவத்தின் வடிவம் மற்றும் மக்களினங்களின் அரசு ஒன்றியம் இவை எளிதில் கையாளத் தக்கனவாக இருந்ததால், லெனினும் கட்சி முழுவதும் தேசிய அசாதாரணத் தன்மையின் ஆகச் சிறிய வெளிப்பாட்டைக் கூட அனுமதிக்க மறுத்தனர். இது வெளிநாட்டு உள் நாட்டுக் கூட்டுச் சக்திகளை எதிர்த்த ஐக்கிய முன்னணியைச் சீர்குலைக்கக் கூடும் என்று கண்டனர். தெனிக்கினை எதிர்த்த வெற்றிகள் சம்பந்தமாக உக்ரேன் தொழிலாளர் விவசாயிகளுக்கு எழுதிய கடிதத்தில் லெனின் நீடித்ததும் கடினமானதுமான போராட்டத்தில் எல்லா தேசிய இனங்களையும் சேர்ந்த தொழிலாளர்கள் ''மிகவும் நெருக்கமான கூட்டணியைப் பேணி வைத்திருத்தல் வேண்டும், காரணம் தனித்தனியே நம்மால் இந்தக் கடமையை நிச்சயமாயும் சமாளிக்க முடியாது.''* சற்றே ஒரு மாதத்திற்குப் பிறகு அவர் இந்த விஷயத்தை மீண்டும் எழுப்பினுர். புதிய தேசிய அரசுகளின் சுயாதீனத்தை அங்கீகரித்த அதே சமயம் நாம் அவற்றிலுள்ள உழைக்கும் மக்களுக்கு வேண்டுகோள் விடுக்கிறோம். நாம் கூறுகிறோம்:"ராணுவ சக்திகளின்ஒற்றுமை கட்டாயத் தேவை, இந்த ஒற்றுமையில் இருந்து எந்த ஒரு தடம் புரளலும் அனுமதிக்கப்பட மாட்டாது"** என்றார் லெனின்.

புரட்சி மற்றும் உள்நாட்டுப் போரின்போது லெனின் இன்னும் அதிகத் திட்டவட்டமான கருத்து வைத்திருந்தார். காரணம் சோவியத் ருஷ்யாதான் சோஷலிஸ்டுப் புரட்சி எனும் தீச்சுடரை முதன் முதலில் கொளுத்தி வைத்தது. இவ்வாறு, உலகப் புரட்சியின் ஆக்கத்துக்கு மெய்யான அடித்தளமாகியது. அதனுடனான கூட்டணி ஒவ்வொரு தேசிய அரசுக்கும் விமோசனம் தருவது மாத்திரமல்ல, அதோடு பாட்டாளி வர்க்க சர்வதேசியத்தின் ஆக உன்ன

---

* அதே நூல், பக். 297.

** வி. இ. லெனின், ''நூல் திரட்டு'', தொகுதி 30, பக். 326.

தமான் வெளிப்பாடுமாகும். உக்ரேன் மற்றும் ருஷ்யக் குடியரசுக்கு இடையிலான ஆக நெருக்கமான கூட்டணி மட்டுமே சர்வதேச ஏகாதிபத்தியம் இருக்கும் நிலையில் உண்மையிலேயே வெல்லற்கரியதாக இருக்கும் எனவும் ஏகாதிபத்தியத்தை எதிர்த்த போராட்டம் நடக்கும்போது உக்ரேன் அரசு தனிப் பிரிவதால் நன்மை எதுவும் கிடையாது எனவும், காரணம், ஏகாதிபத்தியமானது ஒவ்வொரு பிரிவினையையும் தனக்குச் சாதகமாக்கி சோவியத் ஆட்சி அதிகாரத்தை நசுக்க முற்படும் எனவும் லெனின் சுட்டிக் காட்டினார். இத்தகைய பிரிவினை பெருங்கேடு."*

சித்தாந்த விஷயத்திலும் உறுப்பினர் சம்பந்தமாயும் சர்வதேசியத் தன்மையுடன் திகழும் கம்யூனிஸ்டுக் கட்சி, சோவியத் பல்தேசிய அரசின் உயர்ந்து வரும் கட்டுமானத்தை உறுதியாக இணைத்தது. இதனால் தான் தேசியப் பிரதேசங்களில் கட்சியின் வளர்ச்சி குறித்து லெனின் இவ்வளவு அதிக அக்கறை தோற்றுவித்தார். சில நாடுகளில் தேசிய அரசுத்துவம் ஏற்படுவதற்கு முன்பும் சில நாடுகளில் இதற்குப் பின்னரும் உருவான தேசியக் குடியரசுகளின் கம்யூனிஸ்டுக் கட்சிகள், எல்லா இடங்களிலுமே புதிய தேசிய அரசுகளையும் சோதர சோவியத் ருஷ்யாவையும் இணைக்கும் பிரதானப் பிணைப்புகளாக விளங்கின. தமது சொந்த வரலாற்றை தாமே உருவாக்கி தேசிய அரசுகளை நிறுவிய (அல்லது உருவாக்கத் தொடங்கிவிட்ட) மக்களினங்களின் சமுதாயத் தேவைகள் காரணமாகவே தேசியப் பகுதிகளில் கம்யூனிஸ்டுக் கட்சிகள் உருவாயின அம்மக்களுக்குத் தமக்கே சொந்தமான தத்துவார்த்த மற்றும் ஸ்தாபனத் தலைமையகம் தேவையாக இருந்தது.

ஆனால் மக்களினங்கள் தமது சோவியத் தேசிய அரசுத்துவத்திற்கு எந்த வடிவத்தை அளித்திருந்த போதிலும், சோவியத் ருஷ்யாவுடனான அதன் உறவுகள் எப்படி இருந்த போதிலும், கட்சியையும் கூட்டாட்சிக் கோட்பாட்டு வழியில்

---

* அதே நூல், பக். 326.

தட்டியெழுப்ப வேண்டும் என்ற எண்ணம் லெனினுக்கோ அல்லது மத்தியக் கமிட்டிக்கோ என்றும் தோன்றவில்லை.

ரு.சோ.கூ.சோ குடியரசிலிருந்து **தனிப் பிரிந்த** குடியரசுகள் இருத்தலைக் கவனத்தில் எடுத்துக் கொண்ட எட்டாவது கட்சிக் காங்கிரசானது மத்தியப் படுத்தப்பட்ட ஒரு கம்யூனிஸ்டுக் கட்சியும் எல்லா சோவியத் குடியரசுகளிலும் கட்சி வேலைகளை நெறியாண்மை செய்யும் ஒரு மத்தியக் கமிட்டியும் இருத்தல் வேண்டும் என்று முடிவு செய்தது. "உக்ரேனிய லாத்வியன் மற்றும் லித்துவேனியன் கம்யூனிஸ்டுகளின் மத்தியக் கமிட்டிகளுக்கு கட்சியின் பிராந்தியக் கமிட்டிகளின் அதிகாரம் உண்டு. அதோடு அவை ரு.க.க.ம. கமிட்டிக்கு முற்றும் கீழடங்கியவை"* என்று அது தீர்ப்பளித்தது.

சுதந்திரமான சோவியத் குடியரசுகளின் ஒற்றுமைக்கு ஏற்புடைய இந்தக் கருத்து, ருஷ்யக் கூட்டாட்சிக்கும் உக்ரேனிய சோவியத் சோஷலிஸ்டு குடியரசுக்கும் இடையிலான உறவால் எடுத்துக் காட்டப்படலாம். இந்த இரண்டு சோதரக் குடியரசுகளின் இடையிலான அரசு உறவுகள் சகஜமாக்கப்படுவதற்கு முன்னதாக, அவற்றின் நேச அணி நடை முறையில் உழைக்கும் மக்கள் திரளினரின்ஒருமைப்பாடு மற்றும் ருஷ்யா மற்றும் உக்ரேனிய கம்யூனிஸ்டு ஸ்தாபனங்களின் ஒற்றுமை மற்றும் இந்த இரு குடியரசுகளிலும் ருஷ்யன் கம்யூனிஸ்டுக் கட்சியின் மத்தியக் கமிட்டி வகித்த தலைமை ஆகியவற்றை அடிப்படையாக்கி இருந்தது. ருஷ்யக் கூட்டாட்சிக்கும் உக்ரேன் மக்கள் கமிசார்களுக்கும் இடையே கருத்து வேறுபாடுகள் எழுமானால் அவை கட்சியின் மத்தியக் கமிட்டியின் பரிசீலனைக்கு வைக்கப்பட்டு தீர்வு காணப்படும். 1919 வசந்தத்தில் பல

---

* சோ.க.க. **காங்கிரசுகள், மாநாடுகள் மற்றும் ம. க. பிளீனம் கூட்டங்களின் தீர்மானங்கள்,** தொகுதி 2, பக். 74 (ருஷ்ய மொழியில்)

பிரச்சினைகள் மீது தனது சொந்த வழியை வகுத்துக் கொண்டு, தலையீட்டுப் படைகள் மற்றும் உள்நாட்டு எதிர்ப் புரட்சியை எதிர்த்த இரு குடியரசுகளின் ஐக்கிய முன்னணியை பலவீனப்படுத்தும் போக்கில் உக்ரேனியத் தலைமை அளவுக்கு மிஞ்சிய சுயேச்சைத் தன்மையினை வெளிப்படுத்தியபோது—ருஷ்ய கம்யூனிஸ்டுக் கட்சியின் மத்தியக் கமிட்டி லெனின் யோசனைப்படி இந்த ஒற்றுமையினை உத்வேகப்படுத்த உடனடி நடவடிக்கைகளை மேற்கொண்டது.

வேலைப்பளுவின் நெருக்குதல் வெளிநாட்டு உள்நாட்டு விரோதிகளின் தாக்குதலை எதிர்த்தடிக்க சோவியத் குடியரசுகளின் அனைத்து மக்களின் ஆயுதமேந்திய போராட்டத்தை நெறியாண்மை செய்யும் தமது பொறுப்புகள் இவை இருந்த போதிலும், புதிய சமுதாயத்தைக் கட்டுவதில் திரண்ட அனுபவத்தைப் பொதுமைப்படுத்த அவர் மேற்கொண்ட கடுமையான கடமை இருந்தபோதிலும் தேசிய அரசுகளின் சிக்கலான வளர்ச்சியைப் பரிசீலிக்கவும் விடுதலை பெற்ற மக்களினங்கள் மத்தியில் உண்மையிலேயே சகோதர உறவுகளை மேம்படுத்தவும் லெனினுக்கு எப்போதுமே கால அவகாசம் கிடைத்தது.

அவரது சொந்தத் தலைமை மற்றும் கட்சியின் வழிகாட்டுதலின் கீழ் சோதரக் கூட்டணியை வலுப்படுத்தவும், தனி ஒரு சோவியத் பல்தேசிய அரசில் ஒற்றுமைப்படுத்தவுமான ஒரு பலம் பொருந்திய இயக்கம் அக்டோபர் புரட்சியின் வெற்றியுடன் துவங்கி, பிந்திய ஐந்தாண்டுகளில் தொடர்ந்து விரிவடைந்தது. இந்த இயக்கத்தை சர்வ தேசத் தொழிலாளி வர்க்கம் உத்வேக மூட்டி ஒழுங்கமைத்தது.

பல்வேறு வடிவங்களிலான ஒத்துழைப்பு மற்றும் பரஸ்பர உதவியால் சாதனையான இந்த மக்களினங்களை ஐக்கியப்படுத்தும் இயக்கத்தின் பிரதான அம்சங்களாவன:

(அ) சோஷலிஸ்டுப் புரட்சியின் வெற்றிக்கும், சோவியத் ஆட்சி அதிகாரத்தை நிறுவுவதற்கும் உரிய போராட்டத்தில் எல்லா தேசிய இனங்களின் உழைக்கும் மக்களினதுமான கூட்டான புரட்சிகரப் போராட்டம்;

(ஆ) உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு எதிர்ப் புரட்சியின் கூட்டு சக்திகளை எதிர்த்துப் புரட்சியின் சாதனைகளைக் காத்து நிற்க சோவியத் குடியரசு களின் அரசியல் மற்றும் ராணுவக் கூட்டணி;

(இ) தற்காப்பு நோக்கங்களுக்காகவும், பொருளாதார புனர்வாழ்வுக்காகவும் பொருளாயத வள ஆதாரங்களை மிகவும் திறம்படப் பயன்படுத்த உத்தரவாதமளிக்கும் பொருளாதார ராணுவக் கூட்டணி;

(ஈ) உலக விவகாரங்களை எளிதில் தெரிந்து கொள்ள வும், சோவியத் ஒன்றியத்தை இணைப்பாக்கம் பெற்ற தனி முழுநாடு என்று காணுமல் புறக்கணித்து, தனிப்பட்ட குடியரசுகள் மீது அசமத்துவமான உடன்படிக்கைகளையும் ஒப்பந்தங்களையும் திணிக்க முயலும் ஏகாதிபத்திய பூர்ஷு வாக்களின் ஒருமுகப்பட்ட தாக்குதலை எதிர்த்து தாக்கவு மான அரசு தந்திரக் கூட்டணி;

(உ) ஒரு சோவியத் அதாவது சோவியத் சோஷலிஸ்டு குடியரசுகளின் ஒன்றியம் பற்றிய லெனினது கருத்துருவுக்கு இணக்கமான சோஷலிஸ்டு கூட்டாட்சியின் அடிப்படையி லான அரசு கூட்டணிக் கருத்துக்கு நாடு தழுவிய ஆதரவு.

பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் வெற்றி மற்றும் ஆரம்ப கால சோஷலிஸ்டு மாற்றங்கள் காரணமாக, மக்களினங்களின் இடையிலான உறவுகள் தீவிரமாக மாற்ற மடைந்தன. இந்த உறவுகள் உருவம் பெற்றதானது தேசிய வளர்ச்சியின் பல அம்சங்கள் மீது பாதிப்புச் செலுத்தியது. 1918-1922 ஆண்டுகளில் ஆறு சுயேச்சையான, பத்து சுயாட்சி சோவியத் குடியரசுகளும் இரண்டு சோவியத் மக்கள் குடியரசுகளும் உருவாக்கப்பட்டன. புரட்சியின் விரோதிகளை முறியடித்து சோஷலிஸ்டு மாற்றங்களைச்

செயல்படுத்த எல்லா தேசிய இனங்களையும் சேர்ந்த உழைக்கும் மக்கள் ராணுவ பொருளாதார ஒத்துழைப்பில் இறங்கியபோது அவர்களது அரசியல் கூட்டமைப்பு மேலும் உறுதிப்பட்டது, பல்வேறு வடிவங்களிலான அரசுக் கூட்டணி யாகப் பரிணமித்தது. சோஷலிசத்தின் பக்கம் போய்விட்ட அல்லது போய்க்கொண்டிருக்கிற அரசுகளின் ஒரு கூட்டு இணைப்புக்கு சமுதாயப் புரட்சி இட்டுச் செல்லும் என்று அக்டோபர் புரட்சி நடப்பதற்குச் சில வாரங்கள் முன்பு லெனின் தந்த முன்றை கூற்றை இது ஊர்ஜிதம் செய்தது.

அரசியல் அரங்கத்திலும் குடியரசுகளின் பரஸ்பர உறவுகள் துறையிலுமான மக்களினங்களின் சோதரக் கூட்டு அமைப்பு பல்வேறு மாதிரிகளிலான சோவியத் சோஷலிஸ்டு கூட்டாட்சியை அடிப்படையாக்கியதாக இருந்தது. அக்டோபர் புரட்சிக்குப் பிந்திய துவக்க ஆண்டுகளில் உடன் படிக்கை-அடிப்படை பாணியிலான கூட்டாட்சியை (இது சுதந்திரக் குடியரசுகளிடையான உறவுகளை ஆளுமை செய்வது) மற்றும் சுயாட்சி அடிப்படையிலான கூட்டாட்சியை யும் (ரு. சோ. சோ. கு. உள்ளே) நிறுவிட லெனின் யோசனை கூறினார். லெனினது பங்கேற்புடன் வரையப்பட்டதான ஒரு தீர்மானத்தில் பத்தாவது கட்சிக் காங்கிரஸ் இந்த இரு மாதிரிகளுக்கு இடையேயான ஒரு கூட்டாட்சி வடிவம் இருப்பதைப் பதிவு செய்தது. இது ரு. சோ. சோ. குடியரசுக்கும் பிலோ ருஷ்யாவின் சோவியத் சோஷலிஸ்டு குடியரசு அல்லது துருக்கிஸ்தான் சுயாட்சி சோவியத் சோஷலிஸ்டுக் குடியரசுக்கும் இடையிலான உறவின் மாதிரி போன்றது.

கூட்டாட்சி ஒன்றியத்துக்கு ஊக்கமூட்டுவது, அதன் பழைய வடிவங்களை அபிவிருத்தி செய்வது, புதிய வடிவங் களைக் கண்டறிவது, பல்தேசிய இன சோவியத் அரசின் அமைப்பைப் பூர்த்தி செய்வது என்பது போரில் இருந்து சமாதானம் நோக்கிச் சென்ற காலத்திலும், பின்னல் சோஷலிசத்தை நிர்மாணித்த போதும், எல்லா தேசிய

அமைவையும் சார்ந்த மக்களினங்களின் அரசியல் வாழ்வில் நிலவிய கேந்திரமான அம்சமாகும்.

நிச்சயமாயும், சோஷலிஸ்டு தேசிய உறவுகளை நிலை நாட்டுவதற்கான கட்சியின் லெனினியக் கொள்கை பல இடர்ப்பாடுகளை எதிரிட நேரிட்டது. முதலாளித்துவ சக்திகளுக்கு புத்துயிரளித்து வர்க்கப் போராட்டத்தை கூர்மைப் படுத்திய முதல் பல ஆண்டுக் காலத்திய ''புதிய பொருளாதாரக் கொள்கை'' தவிர்க்க முடியாத வகையில் தேசிய உறவுகளைப் பாதித்தது; மற்றும் வேறு பலவற்றுடன்கூடவே கட்சியினுள் மகாவல்லரசு குறுதேசிய வெறி மற்றும் ஸ்தல பூர்ஷ்வா தேசியவாதம் நோக்கிய திரிபுகளை ஏற்படுத்தியது.

ஏற்கெனவே நிலவுகிற தேசிய அரசு கட்டுமானத்தின் செய்தகைமை சோவியத் பல்தேசிய இன அரசை அமைக்கும் செயல்முறையில் சோதனைக்கு இலக்காகிறது. அதே சமயம் புதிய வடிவங்களுக்கான தேட்டம் நீடித்தது. எடுத்துக் காட்டாக சுயாட்சி தேசிய அரசுகளின் பல்வேறு வடிவங்களையும் சுயாட்சியை அடிப்படையாக்கிய சோவியத் கூட்டாட்சி மாதிரியையும் வைத்திருந்து அபிவிருத்தி செய்வதன் சாதகங்களை நடைமுறை அனுபவம் உறுதிப் படுத்தியது. சிறிய மக்களினங்களின் அரசுத்துவம் குறித்து ஒருசில தலைவர்கள் கொண்டிருந்த சூன்யவாத கருத்துக்கள் நிராகரிக்கப்பட்டன. இதே போன்று அவற்றின் அரசுத்துவத்தை சுதந்திரக் குடியரசுகள் என்ற நிலைக்கு (சில வற்றின் விஷயத்தில்) வேகமாக உயர்த்துவதற்கான காலத்துக்கு முந்திய யோசனைகளும் நிராகரிக்கப்பட்டன. தனிப்பட்ட மக்களினங்களுக்கும் ரு.சோ.கூ.சோ. குடியரசுக்கும் இடையிலான இடைக்கால வடிவமான கூட்டாட்சி உறவும் படிப்படியே குறைந்து வரலாயிற்று. பிலோ ருஷ்யா தன்னைத் தானே ஒரு சர்வவுரிமை குடியரசாகப் பலப் படுத்திக் கொண்டது. துருக்கிஸ்தான் சுயாட்சிக் குடியரசு ஆகியது. இதற்குக் காரணம் இடையில் ஏற்பட்ட மாதிரி

யான கூட்டாட்சி தேசிய உறவுகளின் எந்த ஒரு புறநிலைக் காரணிகளின் விளைவாக இராமல் தற்காலிக சந்தர்ப்ப சூழல்களின் விளைவாக இருந்ததேயாகும்.

சுதந்திரக் குடியரசுகளின் கூட்டாட்சி உறவுகள் மேம்பாடடைவதும் அபிவிருத்தி யுறுவதும் கட்சி மற்றும் மக்கள் கவனத்தை ஒருமுகப்படுத்தின. சோவியத் சுதந்திரக் குடியரசுகள் தவிரவும் (ரு.சோ.கூ.சோ. குடியரசுடனான உறவுகளில்) கூட்டாட்சி டிரான்ஸ் காகேஷியன் குடியரசுகள் இடையிலும் ஒப்புக் கொள்ளப்பட்டிருந்தது. இது இங்கு ஒருவழியில் இரட்டைத் தன்மையுடையதாக இருந்தது. காரணம் இந்தக் குடியரசுகள் தமக்கிடையே மட்டுமின்றி ரு.சோ.கூ.சோ. குடியரசுடனும் உடன்படிக்கை உறவுகள் கொண்டிருந்தன. சோவியத் பல்தேசிய இன அரசின் எதிர் கால வளர்ச்சி சம்பந்தமாக அனுசரிக்க வேண்டிய வழிகள் வடிவங்கள் குறித்து லெனின் மெய்யான விஞ்ஞானப் பகுப் பாய்வினை வழங்கியிருந்தார். இதன் இறுதியான வரை யறுப்புக்கு உரிய திட்டத்தை அவர் வகுத்திருந்தார். இத் திட்டத்தின் உள்ளமாகத் திகழ்ந்தது பூரண சமத்துவம் மற்றும் சுதந்திர சித்தத்தினை அடிப்படையாக்கிய புதிய உயர் மாதிரியிலான கூட்டாட்சி ஒன்றியத்தை நிறுவுவது குறித்த யோசனையாகும். *

ஓர் ஒன்றிய அரசின் உருவாக்கத்தில் வந்து முடிந்த இந்தப்புதிய மாதிரியிலான சோஷலிஸ்டுக்கூட்டாட்சியானது ரு.சோ கூ.சோ. குடியரசுக்கும் சோதரக் குடியரசுகளுக்கும் இடையிலான இருதரப்பு உடன்படிக்கைகளை அடிப்படை யாக்கிய கூட்டாட்சியின் குறைபாடுகளையும், சர்வவுரிமைக் குடியரசுகளை "சுயாட்சி மயமாக்கும் ஸ்டாலினது" யோசனைகளையும் ஒழித்தகற்றியது. சுதந்திர மக்களினங் களின் ஒன்றியக் கட்டமைப்பை இது மேலும் உயர் மட்டத் திற்கு உயர்த்தியது. கட்சியின் தேசியக் கொள்கையில்

* காண்க வி.இ. லெனின் "நூல் திரட்டு" தொகுதி, 42, பக். 421-22.

ஏற்கெனவே நடப்பில் அமுல் செய்யப்பட்டு விட்டதான சமத்துவம், சுதந்திர சித்தம், தேசிய நலன்கள், தேசிய உணர்வுகளுக்கு அதிகப்பட்ச மதிப்பளித்தல், ஜனநாயக மத்தியத்துவம் போன்ற கோட்பாடுகள் இப்போது புதிய முகப்பு வடிவத்தைப் பெற்றன. இதற்குக் காரணம் இவை சோவியத் ஜனநாயகத்தின் சாரத்தில் சோஷலிஸ்டு ஜன நாயகத்தின் மேலும் ஆழமான வளர்ச்சியுடன் ஒன்று கலந்தன. இது புதிய சமுதாயத்தைக் கட்டுவதற்கு ஒன்றிய அரசை ஓர் கருவியாகப் பயன்படுத்தவும் மக்களினங்களின் சோவியத் அரசுத்துவத்தை மேம்படுத்தவும் புதிய வாய்ப் புக்களை வழங்கியுள்ளது. சோவியத் சோஷலிஸ்டுக் குடியரசு களின் ஒன்றியத்தை உருவாக்குவதற்கான லெனினது திட்ட மானது கட்சியின் தலைமைப் பாத்திரத்தை உயர்த்தியது, சோஷலிஸ்டு தேசிய உறவுகளில் மேலும் முன்னேற்றம் காணவும் ஒரு வர்க்கங்கள் இல்லாத சமுதாயத்தைக் கட்டவும் உத்தரவாதம் வழங்கும் வகையில் மக்கள் திரளினரின் படைப்பாற்றல் முன்முயற்சிகளை ஊக்கு வித்தது.

விரிந்து பரந்த இந்த நாட்டின் பெரிய மற்றும் சிறிய மக்களினங்கள் ருஷ்ய மக்களுடன் கூட்டுச் சேர்ந்து நட்புற வுடன் வாழ்வோம் என்று தமது வளையாத உறுதியை வெளிப்படுத்தினார்கள். ருஷ்ய மக்களின் இந்த சர்வதேச வெற்றி சாதனையின் பரிமாணமும் அவர்களின் அர்ப் பணிப்பும் தனது சொந்த மக்கள் விஷயத்தில் போலவே இதர மக்களினங்களின் விடுதலைக்கான போராட்டத்தில் பிரகடனமாயிற்று. சோவியத் நாட்டின் மக்களினங்கள் ருஷ்ய மக்களுடனும், அவர்களின் வீரஞ்செறிந்த தொழி லாளி வர்க்கத்தோடும் கூட்டுச் சேராமல் முன்னேற்றம் பற்றியோ சோஷலிசத்தை நிர்மாணிப்பது குறித்தோ கருதிப் பார்த்திருக்க முடியாது.

1922 டிசம்பர் 30-ல் கூட்டப்பெற்றதான சோவியத்து களின் முதல் அகில- ஒன்றிய காங்கிரஸ், லெனினுடைய திட்டத்தின்படி சோவியத் சோஷலிஸ்டு குடியரசுகளின்

ஒன்றியத்தை உருவாக்கியதாகப் பிரகடனம் செய்தது. அதன் மூலம் நாட்டில் பதிந்திருந்த மக்களினங்களின் சித்தத்தைச் செயல்படுத்தியது. இந்த ஒன்றியத்தில் ரு.சோ.கூ.சோ. குடியரசு, உக்ரேன் சோவியத் சோஷலிஸ்டுக் குடியரசு, பிலோ ருஷ்ய சோவியத் சோஷலிஸ்டு குடியரசு, டிரான்ஸ் காகேஷியன் சோவியத் கூட்டாட்சி சோஷலிஸ்டு குடியரசு (இதில் சர்வவுரிமையுள்ள சோவியத் குடியரசுகளான அசெர்பைஜான், அர்மீனியா, ஜார்ஜியா இணைக்கப்பட்டது)இவை அடங்கும். லெனினது அறிவுரைப் படி காங்கிரசால் ஊர்ஜிதம் செய்யப்பட்டதான சோ.சோ.கு. ஒன்றியத்தின் உருவாக்கம் பற்றிய பிரகடனம் மற்றும் உடன்படிக்கை மீண்டும் மக்கள் மத்தியில் விவாதத்துக்கு விடப்பட்டது. இந்த சோவியத் பல்தேசிய இன அரசின் அரசியலமைப்பு முறையிலான ஒழுங்கமைப்பு 1924 ஜனவரியில்தான் சோவியத்துகளின் அகில ஒன்றிய காங்கிரசால் முழுநிறை செய்யப்பட்டது.

சோ. சோ. கு. ஒன்றியத்தின் உருவாக்கம் பாட்டாளி வர்க்க சர்வதேசியத்தின் ஒரு செயல்பாடு, கட்சியின் லெனினிய தேசியக் கொள்கையின் பயனுள்ள விளைவாகும். இந்த அதிமுக்கியமான வரலாற்று நிகழ்ச்சி சோஷலிஸ்டு அமைப்பின் வெற்றியை முன்கூட்டியே உறுதிப்படுத்தியது, மேலும் உலகின் ஆக முதலாவது தொழிலாளர் விவசாயி களின் பல்தேசிய இன அரசின் தற்காப்பு ஆற்றலையும் சர்வ தேச அந்தஸ்தையும் ஊக்குவித்தது.

தேசியப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பது என்பது சோஷலிஸ்டு சமுதாயத்தை கட்டுவதிலான கேந்திரமான லட்சியங்களில் ஒன்றாக இருந்ததால்-இந்த லட்சியம் மீதே புதிய அமைப்பின் எதிர்காலம் பெருமளவுக்குச் சார்ந்திருந்த தால் சோவியத் ஒன்றியம் உருவானதற்குப் பின்னருங்கூட தேசிய-அரசு வளர்ச்சியின் பல்வேறு அம்சங்கள்பால் கம்யூனிஸ்டுக் கட்சியானது இடைவிடாத கவனம் செலுத் தியது.

மக்களினங்களின் விருப்பங்களை நிறைவு செய்யும் வகையில் கடந்த அரை நூற்றுண்டுக் காலத்தில், பல புதிய சர்வவுரிமையுற்ற சுயாட்சி சோவியத் குடியரசுகளும், சுயாட்சி பிராந்தியங்களும் தேசியப் பிரதேசங்களும் அமைக்கப் பெற்றன. உஸ்பெக் மற்றும் துருக்குமன் சோவியத் குடியரசுகள் 1924லும், தாஜிக் சோவியத் குடியரசு 1929லும் நிறுவப்பட்டன. கஜாக் மற்றும் கிர்கிஸ் சோவியத் சோஷலிஸ்டுக் குடியரசுகள் 1936 ல் முந்திய சுயாட்சிக் குடியரசின் அடிப்படையில் நிறுவப் பெற்றன. டிரான்ஸ் காகேஷியன் சோவியத் கூட்டாட்சி சோஷலிஸ்டு குடியரசு தனது நோக்கத்தை நிறைவேற்றிவிட்ட பின்னுல் அதன் உறுப்புகளான அசர்பைஜான் அர்மீனியன் மற்றும் ஜார்ஜியன்குடியரசுகள் தனித்தனியே சோவியத்சோஷலிஸ்டு குடியரசுகளின் ஒன்றியத்தில் இணைந்தன.

இதன் பின்னுல் 1939—45 ல் உக்ரேனிய மக்களினங்களின் மறு ஒற்றுமையாக்கமும் 1939ல் பிலோ ருஷ்ய மக்களின் இணைப்பும் ஏற்பட்டன. 1940ல் லாத்வியா, லித்துவேனியா மற்றும் எஸ்தோனியா சோவியத் குடியரசுகள் மறு சீரமைக்கப்பட்டு சுய விருப்பமாக ஒன்றியத்தில் சேர்ந்தன. 1940 மல்தாவிய மக்கள் மறு ஒற்றுமையைத் தொடர்ந்து மல்தாவிய சோஷலிஸ்டு சோவியத் குடியரசு நிறுவப்பட்டது.

சோவியத் தேசிய அரசுத்துவத்தின் இதர வடிவங்களும் முன்னணிக்கு வந்தன. சோவியத் ஒன்றியத்தின் 50 ஆவது ஆண்டுவிழாவை ஒட்டிய தமது அறிக்கையில் பிரெஷ்நேவ் முன்னுள் ஒடுக்கப்பட்ட மக்களினங்கள் முன்னேற்றம் மற்றும் இணைப்புக்கான பிரம்மாண்டமான முக்கியத்துவத்தைக் குறிப்பிட்டார். இந்த மக்களினங்களில் முன்னுள் என்றுமே தேசிய அரசுத்துவம் இல்லாதிருந்த டஜன் கணக்கான பிரிவுகள், சோவியத் ஆட்சி நிறுவப்பட்டதைத் தொடர்ந்து கம்யூனிஸ்டுக் கட்சியின் தலைமையின் கீழ் தேசிய அரசுத்துவம் பெற்றன. தற்போது ஒன்றியமாக உருவெடுத்திருக்கும் 15 சர்வவுரிமையுள்ள குடியரசுகள் தம் கட்டுக்

கோப்புக்குள் 20 சுயாட்சி சோவியத் குடியரசுகளையும், எட்டு சுயாட்சி தேசியப் பிராந்தியங்களையும் 10 தேசியப் பிரதேசங்களையும் வைத்திருக்கின்றன.

தேசிய—அரசு அபிவிருத்தியில் ஏற்பட்டதான கம்யூனிஸ்டுக் கட்சியின் வெற்றிகள், தேசியப் பிரச்சினையைத் தீர்த்து அகற்றுவதில் பெரும்பங்கு வகித்தன. சோஷலிசத்தின் கட்டுமானம் துவங்கிய கட்டத்திலேயே இப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட்டது. சோவியத் ஒன்றியம் தொடர்ச்சியாக வலுப்படுத்தப் பெறுவதும் மக்களினங்களின் சோவியத் தேசிய அரசுத்துவம் மேம்பாடுறுவதும் சோஷலிஸ்டு தேசங்கள் மற்றும் தேசிய இனங்களின் ஈடற்ற மாற்றம் சடவேகம் பெற்று மற்றும் புதிதாக உருவாதலையும் அவற்றின் மலர்ச்சி மற்றும் சங்கமித்தலையும் துரிதப் படுத்தின. இந்த சாதனைக்கு அடிப்படையாக இருந்தது மக்களினங்கள் சோஷலிசம் மற்றும் கம்யூனிசத்தின் பொருளாயத மற்றும் தொழில் நுட்ப அடித்தளத்தை ஒன்று சேர்ந்து நிர்மாணம் செய்ததும், சோஷலிஸ்டு சமுதாய உறவுகளை வலுப்படுத்தி அவை கம்யூனிஸ்டு உறவுகளாக வளர்ச்சியுறவும், புதிய மனிதனை வார்த்தெடுக்கவும் பாடுபட்டதேயாகும்.

எல்லாத் தேசிய இனங்களையும் சார்ந்த உழைக்கும் மக்கள் ஐக்கிய சோவியத் பல்தேசிய இன அரசுக்கு வழங்கும் அர்ப்பணிப்பான ஆதரவு அதன் பலம் உறுதியாகப் பெருகுவதையும் அது மேலும் அபிவிருத்தியடைவதையும் உத்தரவாதம் செய்கிறது. மறுபுறத்தில் இந்த ஆதரவு இந்த மக்களினங்கள் ஒவ்வொன்றினதன் வாழ்க்கை மற்றும் அபிவிருத்தியில் சோவியத் சோஷலிஸ்டு குடியரசுகளின் ஒன்றியம் வகிக்கும் பாத்திரத்தில் இருந்தே எழுகிறது. ஒன்றிய அரசு—அகில ஒன்றிய மற்றும் குடியரசின் நலன்களை இணைப்பது எனும் லெனினது சூத்திரத்தினைப் பின்பற்றுகிறது, அதே போதில் முன்னதற்கு முதலிடம் தருகிறது. உற்பத்தி சக்திகளின் இடத்தேர்வு கிடைக்கும் பொருள்வகை வள ஆதாரங்களையும் மனித

சக்தியையும், நிதிகளையும் தேர்ச்சி பெற்ற ஊழியர்களையும் மறு பங்கீடு செய்தல் ஆகியவற்றை நிர்ணயம் செய்யும் வழி காட்டி இதுவேயாகும். சோவியத் ஒன்றியத்தின் சுதந்திரமான மக்களினங்களைப் பொருத்தவரை சோவியத் பல்தேசிய இன அரசு சோஷலிசத்தை நிர்மாணிக்கும் பிரதான சாதனமாகும். இது மகத்தான தேசபக்தப் போர்க் கால கட்டத்தில் சுதந்திரத்தையும் சுயாதீனத்தையும் பாதுகாத்தது. யுத்தப் பிற்கால கட்டத்தில் பொருளாதாரத்தை மறு சீரமைத்தது, வளர்ந்து வரும் சோஷலிஸ்டு சமுதாய அமைப்பை முன்னேறச் செய்து வருகிறது.

சோவியத் பல்தேசிய இன அரசு நிலவி வரும் கால கட்டம் முழுவதிலும் கம்யூனிஸ்டுக் கட்சியானது லெனினால் முதலில் வகுத்து முன்வைக்கப்பட்டதான ஜனநாயக மத்தியத்துவம் எனும் கோட்பாட்டை முரணின்றி அனுசரித்து வந்தது. இன்றும்கூட இது தேசிய சர்வதேசிய நலன்களை இணைத்தும், மத்தியத்துவம் ஆக்கபூர்வமான ஸ்தல முன்முயற்சி ஆகியவற்றை ஒன்றிணைப்பது வாயிலாகவும் சோவியத் ஒன்றியத்தை வலுப்படுத்தும் ஒரு கேந்திரமான காரணியாக விளங்குகிறது. குடியரசு அரசாங்கங்களின் உரிமைகள் சோவியத் பல்தேசிய இன அரசாங்கத்தினைப் படிப்படியாக வலுப்படுத்துவதுடன் சமவேகத்தில் விஸ்தரிக்கப்பட்டன என்பது கண்டிப்பான ஒரு நியதியாகும். எடுத்துக் காட்டாக கடந்த 15க்கும் மேற்பட்ட ஆண்டுகளில் குடியரசுகளின் உரிமைகள் விஸ்தரிக்கப்படுவது அவற்றின் சொந்த வளர்ச்சி ஏற்பட்ட வெற்றிகளுக்கு கூறாயும் சரிவிகித அளவிலும் அதற்கும் மேல் ஒன்றியத்தை வலுப்படுத்துவதற்கு அவை தந்த பங்களிப்புக்கு ஏற்பவும் இருந்தது.

லெனினிய தேசியக் கொள்கையின் அமுலாக்கத்திற்கும் சோவியத் ஒன்றியத்தை வலுப்படுத்தவும் கம்யூனிஸ்டு கட்சி எடுக்கும் நடவடிக்கைகளுக்கு பிரதான உறுதுணையாக நிற்பது சர்வதேசிய சோவியத் தொழிலாளி வர்க்கமே.

1972 மார்ச் 20-ல், சோவியத் தொழிற் சங்கங்களின் 15 ஆவது காங்கிரசில் உரை நிகழ்த்திய லியனித் பிரெஷ்நேவ் சோவியத் சமுதாயத்தின் அபிவிருத்தியில் தொழிலாளி வர்க்கம் வகித்ததான பாத்திரத்தைப் பாராட்டினர். ஆறரைக் கோடி அடங்கும் வலிமை மிகு படையாகத் திகழும் அது (இதில் மூன்றில் இரண்டு பகுதி தொழில்துறை தொழிலாளிகள்) தேசங்கள் மற்றும் தேசிய இனங்களின் வளர்ச்சி உள்ளிட்டதான சகல துறைகளிலும் தலைமை தாங்கும் சமூக-அரசியல் மற்றும் பொருளாதார சக்தியாக மேலும் மேலும் அதிக முக்கியத்துவம் பெற்று வருகிறது.

சோவியத் தொழிலாளி வர்க்கம் தேசங்களின் முழு மலர்ச்சிக்காகப் போராடுகிறது. அதே சமயம் அது சோஷலிஸ்டு சர்வதேசியத்தின் முன் எடுத்துச் செல்லும், தேசங்கள் மற்றும் தேசிய இனங்களின் சங்கமிப்புக்குப் பின் பலமாக நிற்கும், பிரதான சமுதாய சக்தியுமாகும். மேலும் அது தேசிய உறவுகளில் தேசிய மற்றும் சர்வதேசியக் கூறுகளை துல்லியமாயும் போதிய அளவிலும் இணைக்கும் உருவகமாக விளங்குகிறது.

இதற்கும் மேலாக, சோவியத் தொழிலாளி வர்க்கம் கூட்டுப் பண்ணை விவசாயிகள் மற்றும் உழைக்கும் அறிவுத் துறையினருடனை தனது சொந்தக் கூட்டணியின் ஊக்குவிப்பாளராயும் ஸ்தாபகராகவும் இன்னும் விளங்கு கிறது, அதன் தலைமையின்கீழ் இந்தக் கூட்டணியானது ஒரு பிரம்மாண்டமான சமூக-அரசியல் சக்தியாக மாறி கம்யூனிசத்தை நிர்மாணிப்பதில் சோவியத் மக்கள் வெற்றி யடைவதை உத்தரவாதம் செய்கிறது.

லெனினது கம்யூனிஸ்டுக் கட்சியும் கம்யூனிஸ்டு நிர்மாணத்தில் அதன் தலைமைப் பாத்திரம் அதிகரித்து வருவதும், சோவியத் பல்தேசிய இன அரசு, சோதர ஒன்றியம் அதன் மக்களின் நட்புறவு ஆகியவற்றை வலுப்படுத்துவதற்கான இன்றியமையாத ஆதார சக்தி யாகும். கட்சி சோஷலிஸ்டு சர்வதேசிய சித்தாந்தத்தின்

வெற்றியையும் மக்களினங்களின் நட்புறவையும் சகோதரத்துவத்தையும் உருவகப்படுத்துகிறது. இது கட்சியின் தேசிய இயைபிலும் அதன் வட்டார அமைப்புக்களிலும் பிரதிபலிக்கிறது, இவற்றில் உள்ள உறுப்பினர்கள் மத்தியில் டஜன் கணக்கான ஒருசில குடியரசுகளின் கம்யூனிஸ்டுக் கட்சிகளில் நூற்றுக்கும் மேற்பட்ட தேசங்கள், தேசிய இனங்கள், இனப் பிரிவுகளைச் சார்ந்தவர்கள் இருக்கிறார்கள். இது கட்சியின் சர்வதேசியக் கொள்கையை எல்லா தேசிய இனங்களையும் சார்ந்த லட்சோபலட்சம் உழைக்கும் மக்களின் ஜீவாதார லட்சியமாக்குகிறது.

லியனித் பிரெஷ்நேவ் வலியுறுத்தியதாவது: ''எமது கட்சியின் எல்லா தேசியப் பகுதிகளும் நதிகளின் தண்ணீர் ஒரு மாபெரும் கடலில் கலத்தல்போல சோவியத் ஒன்றிய கம்யூனிஸ்டுக் கட்சியில் ஒன்றிணைகின்றன எனும் மெய்பாட்டில் பெருமிதம் கொள்கிறோம். இந்தக் கட்சியானது ஒரே கருத்துடைய லெனினியவாதிகளின் ஒன்றியமாகும், இதில் அவர்கள் சித்தம் நோக்கம் மற்றும் கோட்பாட்டில் ஒன்றுபட்டு நிற்கிறார்கள் ...நமது நாட்டின் அபிவிருத்தி சம்பந்தமான பிரச்சினைகள் எதுவாயினும் சரி, அரசியல் பொருளாதார அல்லது கலாசாரப் பிரச்சினைகள் என்பதான எதுவாயினும் சரி, அவற்றுக்குத் தீர்வு காண்பதில் கட்சியானது எல்லா மக்களினதுமான நலன்கள் மற்றும் தேசிய அம்சங்களை எப்போதும் கவனத்தில் கொண்டதாய், சோவியத் மக்கள் எல்லோரிடமும் பாட்டாளி வர்க்க சர்வதேசிய உணர்வையும், சோவியத் ஒன்றியத்து மக்களினங்களின் சகோதரத்துவம் நட்புரிமையின் பாலான மீறவொண்ணாத அர்ப்பணிப்பு உணர்வையும் புகட்டும். இது மட்டுமே சரியான தேசியக் கொள்கை—சோவியத் ஒன்றியத்தின் அபிவிருத்தியிலான அனுபவம் இது சரியானது தகைமை சான்றது என்பதற்குச் சான்று வழங்குகின்றன.''*

---

* சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சியின் 23ஆவது காங்கிரஸ் சோ.க.க. மத்தியக் கமிட்டி சார்பில் லி. இ. பிரேஷ்நெவ் அறிக்கை *மாஸ்கோ* 1966, பக் 150-51.

'சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சியின் சர்வதேசிய இயையும் மற்றும் அதன் சர்வதேசியக் கொள்கையும், சோஷலிஸ்டு தேசங்கள் தேசிய இனங்களின் சுதந்திரமான ஒன்றியத்தை வலுப்படுத்தி மேம்படுத்துவதற்கான அதன் வெற்றிகளுக்கு இதயம் போன்று விளங்கும் கூறுகளாகும். இதை வலியுறுத்துவது அவசியமானது. காரணம் கம்யூனிஸ்டு நிர்மாணத்தின் செல்வழியில் கட்சியினது வேலைத்திட்டக் குறிக்கோள்கள் மற்றும் கம்யூனிஸ்டு லட்சியங்களுக்கு வேண்டி சுதந்திர மக்களினங்கள் நடத்தி வரும் கூட்டுப் போராட்டத்துக்கு வரலாற்று வழியிலான முற்றிலும் நியாயப் படுத்தப்பட்ட அரசு வடிவாக முகிழ்ந்து விளங்கும் சோவியத் ஒன்றியத்தின் முக்கியத்துவம் அதிகரிக்கிறது.''*

அதன் செல்வக் கருவூலம் மற்றும் பல்வகைப்பட்ட வள ஆதாரங்களிடமிருந்து பெறப்பட்டதான பல்தேசிய இன சோவியத் அரசின் சர்வ வன்மையும், மக்கள் அனைவரின் செயல் ஒற்றுமை மற்றும் உயர் தரமான ஸ்தாபனக் கட்டும் எல்லாம் கம்யூனிஸ்டு நிர்மாணம் எனும் பிரம்மாண்மான பிரச்சினையை சமாளிப்பதற்காக ஒருமுகப்படுத்தப் பெற்றுள்ளன.

பல்தேசிய இன சோவியத் அரசை வலுப்படுத்துவது, கம்யூனிஸ்டு நிர்மாணத்தின் பகைப்புலனில் மக்களினங்களின் சோவியத் தேசிய அரசுத்துவத்தை அபிவிருத்தி செய்வது எனும் வேலைத்திட்ட நோக்கத்தை மனதிற் கொண்டு சோ.க.க. 24 ஆவது காங்கிரஸ் தீர்மானம் கூறியதாவது: அதன் உறுப்புக்குடியரசுகள் ஒவ்வொன்றினது வளர்ச்சி நிலைமைகளையும் கவனத்தில் கொண்டும், எல்லா சோஷலிஸ்டு தேசங்களும் மீண்டும் முழுமலர்ச்சி பெறுவதற்காக உறுதியுடன் பாடுபட்டும், அவை படிப்படியே நெருக்கமாகச்

---

* சோவியத் சோஷலிஸ்டு குடியரசுகளின் ஒன்றியத்தின் உருவாக்கத்தின் 50 ஆம் ஆண்டு விழாவுக்கான தயாரிப்புகள் பற்றி சோ.க.க.ம.க. தீர்மானம் பக் 20.

சேர்ந்திணையும் பொருட்டும், சோவியத் அரசின் பொது நலன் களின் அடிப்படையில் சோவியத் சோஷலிஸ்டுக் குடியரசு களின் ஒன்றியத்தை வலுப்படுத்துவதற்கும், லெனினியக் கொள்கையை தொடர்ந்து உறுதியாக முன் கொண்டு செல்ல வேண்டுவது அவசியம்.''**

2. லெனினியமும் சோஷலிஸ்டு அரசுகள் இடையிலான உறவுகளும்

சோவியத் நாட்டில் தேசியப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பது என்பது உள்நாட்டு அளவில் மட்டுமன்றி சர்வ தேசிய ரீதியிலுங்கூட முக்கியமானது.

ஒரு பல்தேசிய இன அரசில் ஒரு சோதரக் குடும்பம் போன்று மக்களினங்களை ஒன்றிணைப்பதில் கிட்டிய சோவியத் வெற்றியைப் பாராட்டிய லெனின், எல்லா சர்வவுரிமையுள்ள சோஷலிஸ்டு அரசுகள் இடையே சோதர உறவுகளுக்குரிய பாணியை வகுத்திட்ட போல்ஷிவிக் கட்சி யின் அனுபவத்தைப் பயன்படுத்துவதன் அளப்பரிய முக்கியத்துவத்தைச் சுட்டினார்.

முதலாளித்துவத்துக்கு மேலதிக வலிமை இருக்கும் உலகில், பாட்டாளி வர்க்க சர்வாதிகார அரசுகள் ஒரே மாதிரியான சமூக பொருளாதார அமைப்புகள் லட்சியங் கள் குறிக்கோள்களுடன் நிலவுவதால் எல்லா சோஷலிஸ்டு நாடுகளினதன் அதிகபட்ச ஒற்றுமை அவசியமாகும். இத்தகைய ஒற்றுமை தோற்றமளிப்பதை அரசுகள் இடையி லான உறவுகளில் ஒரு புதிய லட்சணத்தின் தோற்றம் என்று லெனின் கருதினார். இந்த உறவுகளை சுதந்திர சோவியத் குடியரசுகளின் உறவுகளுடன் ஒப்பு நோக்கி இவை கூட்டாட்சி உறவுகள் என்று வருணித்தார். ஆயினும் லெனினது தத்துவார்த்த மரபு மற்றும் சோவியத் ஒன்றியத்துக்கும் இதர சோஷலிஸ்டு நாடுகளுக்கும் இடையிலான உறவுகள் ஆகியவற்றில்

* சோ.க.க. 24 ஆவது காங்கிரஸ், பக். 226.

இருந்து பார்க்கும் போதில் இந்தப் புது மாதிரியான கூட்டாட்சியிடம் மிகவும் பரவலான கட்டுக்கோப்பும் நெளிவு சுளிவான வடிவங்களும் உள்ளன என்பதும், இதன் உள்ளடக்கத்தில் பல உயர் தனி இயல்புகள் இருப்பதும் தெரியவரும். பொதுவான அதிகார உறுப்புக்களையும் நிர்வாகத்தையும் கொண்டதான புதிய அரசு ஒன்றியத்துடன் சேர்ந்து இணைவது என்பது அத்தனை முக்கியமல்ல என்று லெனின் கருதினார். ஆனால் எல்லாவற்றுக்கும் மேலாக சர்வவுரிமை பெற்ற சோஷலிஸ்டு நாடுகளின் சாதனைகளைப் பாதுகாக்கவும், ஒரு புதிய வர்க்கங்களற்ற சமுதாயத்திற்கு அஸ்திவாரம் இடவுமான, தகர்க்க வொண்ணாத ஒற்றுமையைப் பேணி வளர்க்கும் இத்தகைய வடிவங்களும், உறவுகளின் இத்தகைய உள்ளடக்கமுமே முக்கியமானவை என்றார்.

லெனினது பகுப்பாய்வின் இந்த வீச்சும் கருத்தாழமும் அவருக்கு வழக்கமாகிவிட்ட முழுநிறைப் பண்பும் செயல் யூகமும் எல்லாம் சர்வதேச அரங்கிலான சோஷலிஸ்டு நாடுகளின் இடையிலான அரசு உறவுகளின் உள்ளடக்கம் மற்றும் வடிவம் குறித்த அவரது ஆய்வில் தெட்டத்தெளிவாகக் காணலாம். தேசியப் பிரச்சினையின் பாத்திரம் மற்றும் முக்கியத்துவத்தை அவர் உலகப் பாட்டாளி வர்க்கப் புரட்சியின் அவசியமான சமுதாயக் குறிக்கோள்களின் சந்தர்ப்ப சூழலில் வைத்தே அணுகினார்.

மக்களினங்கள் ஒடுக்குமுறையில் இருந்தும் சுரண்டலில் இருந்தும் விடுதலை பெறுவதையும், புதுவாழ்வை நிர்மாணிப்பதையும், அதற்கான கருவியாக உழைக்கும் மக்களைத் திரட்டும் ஒரு பிரதான சாதனமாக தேசிய அரசுத்துவத்தை விரிவாகப் பயன்படுத்துவதையும் லெனின் இணைத்துப் பார்த்தார். பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் நிலைநாட்டப் பட்டதோடு முன்னாள் ஒடுக்கப்பட்டிருந்த மக்களினங்களின் தேசிய அரசுகள் நிறுவப்படுவதில் முற்போக்குத் தன்மை இருப்பதைக் கண்டு அங்கீகரித்தார். இதனை ஒப்புக் கொண்ட

அவர் சோஷலிஸ்டுப் புரட்சி நிலைமைகளில், தேச விடுதலை இயக்கம் தேசிய அரசுகள் நிறுவும் கொள்கையைப் பின் பற்றுவது, எதிர்ப்புரட்சித் தன்மை வாய்ந்த நடவடிக்கை என்ற கருத்தை நிராகரித்தார். 1920 ஜூன் மாதம் இ. பிரியோபிரெஷின்ஸ்கி லெனினது தேசிய காலனி பிரச்சினை பற்றிய ஆராய்ச்சியுரை (இது கம்யூனிஸ்டு அகிலத்தின் இரண்டாவது காங்கிரசுக்காக எழுதப்பட்டது) தொடர்பாக எழுதியதாவது: ''பாட்டாளி வர்க்கப்புரட்சி லண்டனிலும் பாரிசிலும் வெற்றியடைந்த பின்னர், கீழ்த் திசை நாடுகளிலான தேசியப் புரட்சி இயக்கம் எதிர்ப் புரட்சித் தன்மைகொண்டதாக மாறிவிடும்; ரு.சோ.கூ.சோ. குடியரசின் பரப்பில் துருக்கிஸ்தான் பஷ்கீரியா மற்றும் கிர்கிசியாவின் தேசிய இயக்கம் ஏற்கெனவே எதிர்ப்புரட்சித் தன்மை''* கொண்டதாக இருக்கிறது. இந்த வாக்கியத்தில் லெனின் துருக்கிஸ்தான் பஷ்கிரியா என்னும் சொற்களுக்குக் கீழே ஒருமுறை கோடிட்டார், ''எதிர்ப்புரட்சித் தன்மை'' எனும் தொடருக்கு இருமுறை கோடிட்டார்.பிறகு அதற்குக் கீழே பிரிபிரோஷென்ஸ்கியின் கற்பிதத்தைக் கண்டனம் செய்தார். சோஷலிஸ்டு நாடுகள் உலக சோஷலிஸ்டுப் புரட்சியுடன் சேர்ந்திணையாத தேச விடுதலை இயக்கம் முழு வதையும் ''வலுவந்தமாக ஒடுக்கும்'' கட்டாயத்திற்கு ''தவிர்க்க முடியாத வகையில்'' வந்து சேரும் என்பதே அவரது கற்பிதமாகும்.

1921 பிப்ரவரியில் லெனின் வி. பி. ஜதோன்ஸ்கியின் கருத்தையும் கண்டித்து விமர்சித்தார். ''அரும்பிவரும் பாட்டாளி வர்க்கப் புரட்சி சூழ்நிலைமைகளில் தேசியப் புரட்சி சாரத்தில் எதிர்ப்புரட்சித் தன்மை கொண்டதே என்பதே அன்னாரின் கருத்து. அதோடு ஒரு புரட்சியில் எல்லா தேசியப் போராட்டமும் விடுதலை நோக்குடைய தாக இருப்பினுங்கூட எதிர்மறைத் தன்மை கொண்டதே எனும் ஜதோன்ஸ்கியின் கருத்துடன் லெனின் உடன் படவில்லை.

இதன் விளைவாக லெனின் முன்னாள் ஒடுக்கப்பட்ட மக்களின் தொழிலாளி வர்க்கத்தின் தலைமையிலான தேசிய இயக்கங்களின் முற்போக்குத் தன்மையை ஒப்புக் கொண்டார், அவர்களது இறுதி லட்சியத்தையும்—பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் கட்டுக்கோப்பில் தேசிய அரசுத்துவம்—ஒப்புக் கொண்டார்.

சுதந்திர மக்களினங்களின் தேசிய அரசுத்துவம் தோன்றிய வழிகளையும் வடிவங்களையும் ஆராய்ந்த லெனின் அவர்களது புதுமாதிரியான பரஸ்பர உறவுகள் குறித்து மிகவும் நெருக்கமாக கவனம் செலுத்தினார்.

சோவியத்துகளின் மூன்றாவது அகில ருஷ்ய காங்கிரஸ் (1918 ஜனவரி) ருஷ்யாவை சோவியத் தேசியக் குடியரசு களின் ஒரு கூட்டாட்சி என்று பிரகடனப்படுத்தியது. அதில் உரையாற்றிய லெனின் தமது முடிவுரையில் "புரட்சிகர ருஷ்யாவைச் சுற்றும் சுதந்திர தேசங்களின் மேலும் மேலும் பல்வகைப்பட்டதான கூட்டாட்சிகள் தாமே திரண்டு நிற்கும்" என்றார்.* 1919-ல் இந்த விஷயத்தை மீண்டும் விளக்கும்போது : நாம் தேசிய விரோதம், தேசியப் பூசல் மற்றும் தேசிய அசாதாரணத் தன்மைகளை எதிர்க்கிறோம். நாம் சர்வதேசியவாதிகள். தனியொரு உலக சோவியத் குடியரசில் எல்லா நாடுகளையும் சேர்ந்த தொழிலாளர்களையும் விவசாயிகளையும் முழுமையாகச் சேர்த்திணைக்கும் ஒரு கச்சிதமான ஒன்றியத்தையே ஆதரிக்கிறோம்."** "உலக கூட்டாட்சி சோவியத்குடியரசுக்கு"*** பாடுபடவேண்டுவது அவசியம் என்று அவர் குறிப்பிட்டார்.

சர்வவுரிமையுடையதான தேசிய அரசுகளின் ஐக்கியத் தால் விளையும் அனுகூலங்கள் மீதான லெனினது நம்பிக்கை, உலக சோஷலிசம் உறுநாளில் இவற்றின் நம்பகமான

---

* வி. இ. லெனின் "நூல் திரட்டு", தொகுதி 25, பக். 481.

** அதே நூல், தொகுதி 30, பக். 293.

*** அதே நூல், பக். 297.

கூட்டணி மட்டுமே உலகப் புரட்சிக்கு அடித்தளமாக உதவும் என்பதிலான அவரது பற்றுறுதியில் இருந்து தோன்றியதாகும்.

கம்யூனிஸ்டு அகிலத்தின் இரண்டாவது காங்கிரசுக்குச் சற்று முன்னரும், காங்கிரசின் போதும் அவர் சோஷலிசத்தை ஏற்கும் நாடுகள் இடையிலான உறவுகளின் சர்வதேசிய இயல்பு குறித்து வெகு நுணுக்கமாக ஆராய்ந்தார்.

தேசிய மற்றும் காலனிப் பிரச்சினை குறித்த அவரது ஆராய்ச்சியுரையில் ரு. சோ. கூ. சோ.குடியரசு ஹங்கேரியன் சோவியத் குடியரசு மற்றும் பின்லந்து சோஷலிஸ்டு தொழிலாளர் குடியரசு இடையிலான உறவுகள் கூட்டாட்சி அடிப்படையில் உருவாகத் தொடங்குவதை அவர் குறிப்பிட்டார். ஒற்றுமையின் அவசியத்தை முன்னதாகவே ஏற்றுக் கொண்டுவிட்ட நிலையில், கூட்டாட்சி பற்றிய அவரது கருத்தோட்டம் அதன் உருவிலும் உள்ளடக்கத்திலும் மிகவும் விரிவானதாகவும் நெளிவுசுளிவானதாகவும் இருந்த நிலையில், அவர் இந்த இரண்டு சர்வவுரிமையுள்ள அரசுகள் சோவியத் ருஷ்யாவுடன் கொள்ளும் எதிர்கால உறவுகளின் கூட்டாட்சிப் பண்பு குறித்தே துல்லியமாகப் பேசினார், உண்மையில் இத்தகைய உறவுகளின் சாரத்தை வரையறுப்பதற்கான சட்டமுறை நியதிகள் இன்னும் உண்டாயிருக்கவில்லை.

லெனின், இ. பிரியோ பிரிஷென்ஸ்கியின் கருத்து நிலையை உறுதியாக நிராகரித்தார். பின்னவர் கம்யூனிஸ்டு அகிலத்தின் இரண்டாவது காங்கிரசுக்கு தேசிய மற்றும் காலனிப் பிரச்சினை மீது லெனின் சமர்ப்பித்த ஆராய்ச்சியுரை பற்றிய தமது குறிப்புக்களில் உள்ளபடியே தேசியப் பிரச்சினையின் முக்கியத்துவத்தைப் புறக்கணித்தார். தேசிய இனங்கள் பிரச்சினைக்கான தீர்வு நிலவில் இருக்கும் சோஷலிஸ்டு குடியரசுகளை வைத்து தனி ஒரு பொருளாதார அமைப்பினை உருவாக்கும் பணிக்குக் கீழடங்கியதாக இருத்தல் வேண்டும் என்று பிரியோ பிரிஷென்ஸ்கி

அறிவிப்புச் செய்தார். லெனின் கீழடங்கியிருத்தல் எனும் தொடரைச் பற்றி ஒரு வட்டம் இட்டு இந்த வாசகத்தின் மேல் எழுதினுர்: அப்படியே **கீழடக்குவது** என்பது சாத்தியமல்ல. எனது விளக்கம் பாரா 12-ஐ ஒப்புநோக்குக.* இந்தப் பாரா தேசியப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பது மிகவும் சிக்கலானது என்பதை தேசிய அவநம்பிக்கையையும் தேசிய வாத தப்பெண்ணங்களையும் அகற்றுவது கஷ்டம் என்பதைக் குறிப்பிடுகிறது. எனவே மிக நீண்ட காலம் ஒடுக்கப்பட்டுக் கிடந்த நாடுகள் மற்றும் தேசிய இனங்கள் மத்தியில் காணப்படும் தேசிய உணர்ச்சிகளின் மீத மிச்சங்களை குறிப்பிட்ட எச்சரிக்கையோடும் கவனத்தோடும் கருதிப் பார்க்க வேண்டுவது எல்லா நாடுகளினதன் வர்க்க போதமுடைய கம்யூனிஸ்டுப் பாட்டாளிகளின் கடமையாகும். இந்த அவநம்பிக்கையையும் தப்பெண்ணங்களையும் மேலும் விரைவாக அகற்றிடும் பொருட்டு ஒரு சில சலுகைகளை வழங்குவதும் இதே அளவுக்கு அவசியமானதாகும்.**

பின்தங்கி நின்ற காலனி மக்களினங்களை சோஷலிஸ்டு நாடுகளுடன் ஒரு கூட்டணிக்குள் கொண்டு வரும் வழிகள் பற்றியும் லெனின் பிரி பிரெஷன்ஸ்கியுடன் உடன்படவில்லை, சோஷலிஸ்டு ஐரோப்பாவுக்குத் தேவைப்படுவதும் காலனிகளால் வழங்கப்படுவதுமான மூலப் பொருள்களைப் பற்றிக் குறிப்பிட்டு பிரியோ பிரெஷென்ஸ்கி எழுதியதாவது: பிரதான தேசியப் பிரிவுகளுடன் ஒரு பொருளாதார உடன்பாட்டை எட்டுவது சாத்தியமல்ல என்பது நிரூபணமாகுமானுல், பின்னது தவிர்க்க முடியாத வகையில் பலப் பிரயோகத்தால் ஒடுக்கப்படும் பொருளாதார வகையில் முக்கியமான பிராந்தியங்கள் ஐரோப்பிய குடியரசுகளின்

---

* மத்தியக் கட்சி பழஞ்சுவடிக் கூடம்.

** வி. இ. லெனின், "நூல் திரட்டு", தொகுதி 31, பக். 151.

ஒன்றியத்தில் சேரும் கட்டாயம் ஏற்படும்.''* இந்த நிலைமை தமது உள்நாட்டு பூர்ஷுவாக்களின் உயர் அடுக்கினரிடமிருந்து விடுதலை பெற்ற உழைக்கும் மக்கள் திரடனர் ஐரோப்பாவுடன் கூட்டாட்சி எனும் அடிப்படையில் அதிகாரத்தை ஏற்றெடுக்கும் ஆற்றலுடையதான குழுக்களை உருவாக்காத காலம் வரையில் நீடிக்கும் ''தவிர்க்க முடியாத வகையில்'' எனும் தொடரை லெனின் மும்முறையும் ''குடியரசுகள்'' எனும் தொடரை உள்ளிட்டு அதன் வகைப்பட்ட இதர சொற்களை ஒரு தடவையும் கோடிட்டுக் காட்டிய லெனின் இந்த வாசகத்தின் அடியில் ''இது அளவு மீறிச் செல்கிறது'' என்று குறிப்பிட்டார். பலப்பிரயோகம் மூலம் ஒடுக்குவது ''தவிர்க்க முடியாதது'' என்பதை நிருபிக்க முடியாது. அப்படிச் சொல்வதும் தவருகும். அது அடிப்படையான தவருகும்''**என்ருர்.

சர்வவுரிமையுடையதான சோஷலிஸ்டு அரசுகள் இடையிலான உறவுகளை ஏற்பாடு செய்யும் காரியத்தில் கூட்டமைவு எனும் கோட்பாட்டினை கூட்டாட்சி எனும் கோட்பாட்டுடன் சேர்த்து ஈடுபடுத்துவது தவிர்க்க முடியாதது என்று ஸ்டாலின் கருதினுர். லெனின் இக் கருத்தில் இருந்து வேறுபட்டார். லெனினது நகல் மீதான தனது குறிப்புரையில் ஸ்டாலின் 1920 ஜூன் 12-ந் தேதி வெளியிட்ட தமது கருத்தில் இந்த ஆராய்ச்சியுரையின் பாராக்களில் பல்வேறு தேசங்களைச் சேர்ந்த உழைக்கும் மக்களின் பூரணமான ஒற்றுமைக்கு இடைக்கால வடிவம் என்ற முறையில் கூட்டாட்சியின் பாத்திரம் பற்றிக் குறிப்பிடும் போதில், பெரிய கூட்டமைவு பற்றிய ஒரு வரையறுப்பும் சேர்க்கப்பட வேண்டும் என்ருர். அவரது கருத்துப்படி இதுவும் ஓர் இடைக்கால கட்ட வடிவமாக உதவும். பழைய ருஷ்யாவின் முன்னுள் பகுதியாக இருந்த தேசங்கள் விஷயத்தில் சோவியத் மாதிரியிலான கூட்டாட்சி சர்வ தேசிய ஒற்றுமைக்குரிய பாதையாக விளங்கும் தகைமை

* அதே நூல், பக். 555.

** அதே நூல்.

யுடையது. அவ்வாறு கருதலாம், கருதப் படவும் வேண்டும் என்று எழுதினர். சோஷலிஸ்டுப் பாதையை மேற்கொண்ட இதர மக்களினங்கள் சோவியத் ருஷ்யாவுடன் கொள்ளும் உறவுகள் கூட்டமைவுக் கோட்பாட்டின் மூலம் மேலும் செம்மையுற முடியும் என்று முதலில் அவர் ஜெர்மனி, போலந்து, ஹங்கேரி போன்ற முன் நாட்களிலேயே வளர்ச்சி யடைந்த அரசுத்துவத்தை உடையதாக இருந்த மக்களினங் களையே குறிப்பிட்டார். சோவியத் ருஷ்யாவுக்கும் முன்னுள் பின் தங்கி நின்ற சார்பு நாடுகளுக்கும் இடையிலான அரசு உறவுகள் இதே தன்மை கொண்டனவாக இருத்தல் வேண்டும்.

கூட்டமைவு சம்பந்தமான ஸ்டாலினது யோசனைகளை லெனின் தீர்க்கமாக ஆராய்ந்தார். 1920 ஜூன் 12-ந்தேதி ஸ்டாலின் எழுதியிருந்த கடிதத்தில் "கூட்டமைவு" என்ற தொடரை அடிக்கோடிட்டுப் பின்வரும் குறிப்பை லெனின் வரைந்திருந்தார். "இது இப்படியானதா?"* இதற்கும் மேலாக அச்சு திருத்தும் படிவம் மீது கூட்டாட்சி பற்றிய குறிப்புக்குப் பின்னர் இன்னொரு குறிப்பில் "7 + கூட்டமைவு? (ஸ்டாலின்)" என்று பொறித்திருந்தார். ஆனால் இந்தப் பிரச்சினையைப் பொறுத்த வரையில் லெனின் இந்த ஆராய்ச்சியுரையிலோ அல்லது கம்யூனிஸ்டு அகிலத்தின் இரண்டாவது காங்கிரசுக்கான தமது அறிக்கையிலோ எதையும் மாற்றவில்லை.

சோஷலிஸ்டு அரசுகளின் பரஸ்பர உறவுகள் விஷயத்தில் கம்யூனிஸ்டு அகிலத்தில் இணைந்துள்ள பாட்டாளி வர்க்க கட்சிகளுக்குரிய எதிர்கால செயல் சுதந்திரத்தை கட்டுப் படுத்த லெனின் விரும்பவில்லை என்பது இங்கு கண்கூடு. எதிர்கால நிலைமைகள் குறித்தும், கூட்டணியின் சாத்தி யமான வடிவங்கள் சம்பந்தமாயும், ஒரு வரையறுப்பை வகுத்து முன்வைப்பது அவசியம் என்று அவர் கருதவில்லை; இந்தக் கூட்டணி ஒற்றுமை, சுதந்திர சித்தம், முழு

* மத்திய கட்சி பழஞ்சுவடிக் கூடம்.

சமத்துவம் ஆகியவற்றை உறுதிப்படுத்துவதன் அவசியத்தில் இருந்து செயல்படத் தொடங்க வேண்டும் என்பதே அவரது கருத்தாக இருந்தது. பாட்டாளி வர்க்க சர்வாதிகார அரசுகளின் சோஷலிஸ்டு கூட்டாட்சி ஏற்கெனவே உருவாகி வருவதைத் தமது ஆராய்ச்சியுரையில் குறிப்பிட்ட லெனின், கூட்டாட்சி என்பது எப்போதுமே சமத்துவமுடைய நாடுகளின் ஒன்றியமே என்று அழுத்தமாகக்கூறினார். அனுபவத்தில் சோதிக்கப் பெற்றதான இந்த வடிவத்தின் நன்மைகளை மனதில் இருத்திய லெனின், தமது ஆராய்ச்சியுரையில், கம்யூனிஸ்டு அகிலம் இதனைத் தொடர்ந்து அபிவிருத்தி செய்ய வேண்டும் என்பது மட்டுமன்றி அதோடு கூடவே புதிதாக எழுச்சியுற்று வரும் கூட்டாட்சிகளையும் "அனுபவ மூலம் ஆராய்ந்து சோதனை செய்ய வேண்டும்"* என்றார்.

தேசிய மற்றும் காலனி விடுதலை இயக்கங்கள் அனைத்தும் சோவியத் ருஷ்யாவுடன் சாத்தியமான வரையில் மிக நெருக்கமான கூட்டணி நாடவேண்டுவதன் அவசியம் குறித்த லெனினது குறிப்பை வலியுறுத்துவது முக்கியமானது. இந்தக் கூட்டணியின் வடிவங்களை அவர் ஒவ்வொரு நாட்டின் தொழிலாளி வர்க்கத்தின் மத்தியிலும் ஏற்பட்டுள்ள கம்யூனிஸ்டு இயக்கத்தின் வளர்ச்சி அளவீட்டை வைத்தும், பின்தங்கிய நாடுகளில் அல்லது பின்தங்கிய தேசங்கள் தேசிய இனங்கள் மத்தியில் தொழிலாளர் விவசாயிகளின் பூர்ஷுவா ஜனநாயக விடுதலை இயக்கத்தின் வளர்ச்சியை வைத்துமே வரையறை செய்தார். உண்மையில், இங்கு குறிப்பிடப்படுவது பின்தங்கிய மக்களினங்களுடனை சோவியத் நாட்டின் கூட்டணியே. ஆனால் இதிலடங்கிய முக்கியமான விஷயம் என்னவெனில் கூட்டணியின் வடிவங்கள் ஸ்தூலமான நிலைமையையும் மக்கள் திரளினரின் உணர்வு மட்டத்தையும் சார்ந்ததாக இருத்தல் வேண்டும் என்பதேயாகும். சோவியத் நாட்டின்

* காண்க வி.இ. லெனின் "நூல்திரட்டு", தொகுதி 31, பக். 147.

நிலைமைகளைப்பற்றிக் குறிப்பிடும்போது இதே கருத்தினை அவர் திரும்பத் திரும்ப வெளியிட்டார்.

சோஷலிஸ்டுப் பாதையில் செல்லும் மக்களினங்களின் **ஒற்றுமைக்கு** லெனின் ஆக உயர் முன் முக்கியத்துவம் கொடுத்தார். இதன் குறிப்பொருளைத் தொடர்ந்து வலியுறுத்தினார். இந்த ஒன்றியத்தின் உண்மையான வடிவங்கள் ஏகாதிபத்தியத்தை எதிர்த்த கூட்டுப் போராட்டம் புதுவாழ்வினைச் சேர்ந்து நிர்மாணித்தல் மற்றும் சோதர ஒத்துழைப்பின் அனுபவம் ஆகியவற்றின் முன்னேற்றத்தால் நிர்ணயிக்கப்படும் என்று விரிவிளக்கம் தந்தார்.

சோஷலிஸ்டு கூட்டாட்சியின் எதார்த்தமான உருவாக்கம், சோவியத் தேசிய அரசுகள் முழு அமைப்புகள் இடையிலும், சோவியத் நாடு மற்றும் சோஷலிஸ்டு அரசுகள் இடையிலும்—இந்த அரசுகள் அக்டோபர் புரட்சி நடந்து முடிந்த உடனே முன்னாள் ருஷ்யாவின் சாம்ராஜ்யத்துக்கு வெளியே எல்லைக்கு அப்பால் இருந்தவை பரஸ்பர உறவுகளின் பல்வேறு கட்டங்களிலான இதன் உள்ளடக்கம் குறித்தும் லெனினது அணுகுமுறையினைப் பின்பற்றுவது பயன் தருவதாக இருக்கும். இது லெனினால் கருத்துரைக்கப்பட்டதான பல்வேறு மாதிரிகளிலான சோஷலிஸ்டு கூட்டாட்சி அ) ஒரு பல்தேசிய இன நாடு, ஆ) சர்வதேச அளவிலான சோஷலிஸ்டு நாடுகளிடையிலான உறவுகள் இவற்றிடை இனங்கண்டு கொள்வதற்கு உதவும்.

சர்வவுரிமையுள்ள சோவியத் சோஷலிஸ்டு குடியரசுகளின் கூட்டாட்சி ஒன்றியத்தின் வரலாற்று வழியில் உள்ளடக்கத்தை முதலில் நெறியாண்மை செய்வது ராணுவக் கூட்டணியே. துவக்கத்தில் இது 1919 ஜூன் 1-ந் தேதி ஏற்கப்பட்டதான "உலக ஏகாதிபத்தியத்தை எதிர்த்த போராட்டத்தில்'' ருஷ்யன், உக்ரேனியன், லாத்வியன், லித்துவேனியன் மற்றும் பிலோருஷ்யன் குடியரசுகளின் ஒன்றியம் மீதான அகில ருஷ்ய—மத்திய

நிர்வாகக் கமிட்டியின் அரசாணையில் முறைப்படுத்தப் பட்டது. இந்த அரசாணை ராணுவ நிறுவனங்கள், ராணுவத் தலைமை, மக்களின் பொருளாதாரக் கவுன்சில்கள், ரயில்வேக்கள் அவற்றின் நிர்வாகம், நி தி த் து றை, தொழிலாளர் நலக்கமிசாரகங்கள் ஆகியவை ஒன்றிணைக்கப் படுவதை இது எதிர் நோக்கியது. மிகக் குறுகியதான காலத்திலேயே பின்னல் சோவியத் ருஷ்யாவுடன் சேர்ந் திருந்ததான எல்லாக் குடியரசுகளிலும் ஆட்சி அதிகாரம் உள்நாட்டு எதிர்ப்புரட்சியாளர்களாலும் அன்னிய ஏகாதி பத்தியவாதிகளாலும் கைப்பற்றப்பட்டது (உக்ரேனிய சோவியத் சோஷலிஸ்டு குடியரசு மாத்திரமே 1919-ல் மீண்டும் புதுப்பிக்கப்பட்டது). இவ்வாறு கிட்டிய அற்ப சொற்ப அனுபவம் கொண்டே லெனின் இந்தக் குடியரசு களின் கூட்டணி ஓர் உடன்பாட்டை அடிப்படையாக்கிய கூட்டாட்சியே என்னும் முடிவுக்கு வந்தார். 1919 ஜூன் 1-ந் தேதிய அகில ருஷ்ய மத்திய நிர்வாகக் கமிட்டியின் அரசாணையை அவர் ரு. சோ. கூ. சோ. குடியரசு மற்றும் உக்ரேனியன் சோ. கூ. கு. இடையிலான நெருக்கமான கூட்டாட்சியினைக் குறிக்கும் ஓர் உடன்படிக்கை என்று சுட்டுகிருர்.

1920 கோடைக்கால ஆரம்பத்தில், கம்யூனிஸ்டு அகிலத்தின் இரண்டாவது காங்கிரசுக்கான தயாரிப்புகள் செய்துவந்த போதில், லெனின் மக்களினங்களின் கூட்டாட்சி ஒன்றியத்தின் உள்ளடக்கம் குறித்த தமது ஆய்வினைப் புதுப்பித்தார். தேசிய, மற்றும் காலனிகள் பற்றிய ஆராய்ச்சியுரையினைச் செப்பம் செய்யும் தறுவாயில் அவர் தமது சாமான்ய வரையறுப்பில் பின்வரும் குறிப்பை வெளியிட்டார்: ரு. சோ. கூ. சோ குடியரசின் அனுபவம்: கூட்டாட்சியின் உள்ளுறை பற்றிய திட்டவட்டமான விளக்கம்: (ரயில்வேக்கள், தபால், ராணுவம், **தேசியப் பொருளாதாரம்** இத்தியாதி)''* உள்நாட்டுப் போரின் முடிவு

---

* வி. இ. லெனின், ''நூல் திரட்டு'', தொகுதி 41, பக். 438, 5-ம் பதிப்பு (ருஷ்ய மொழியில்).

நெருங்கி வந்த சமயம் அவர் பொருளாதார அம்சத்திற்கு முதலிடம் தந்தார். தற்பாதுகாப்பு இரண்டாம் இடத்தைப் பெற்றது. இதுவுங்கூட ரு. சோ. கூ. சோ. குடியரசின் உள்ளேயான மக்களினங்கள் மற்றும் சர்வவுரிமை சோவியத் குடியரசுகளின் கூட்டணி இடையிலான உறவுகளின் அடிப்படை என்ற முறையில் சோஷலிஸ்டு கூட்டாட்சியின் உள்ளடக்கத்துக்கு பொருந்தியதாக இருந்தது. 1920 இறுதியிலும், 1921 துவக்கத்திலும் அவர்களால் செய்து கொள்ளப்பட்டதான தொழிலாளர் விவசாயிகளின் கூட்டணி உடன்படிக்கைகளில் இதனை தெளிவாகப் பார்க்கலாம்

சோவியத் சோஷலிஸ்டு குடியரசுகளின் உருவாக்கத்துக்கு முந்தியதான சோவியத் நாட்டின் மக்களினங்களிடையிலான உறவுகளையும், அகில ஒன்றிய நிர்வாக அமைப்புகள் நிறுவப்படுவதற்கு முன்பதான இந்த உறவுகளின் வரலாற்றுச் சான்று குறித்துமான லெனினது பகுப்பாய்வு முக்கியமான முடிவுகளுக்கு நம்மை இட்டுச் செல்கிறது. பின்வரும் அம்சங்கள் சோவியத் சோஷலிஸ்டு கூட்டாட்சியின் எல்லாப் பதிவு செய்யப்பட்ட மாதிரிகளுக்கும் போதுவாக இருந்தன.

(அ) பாட்டாளிவர்க்க சர்வதேசியம் எனும்சித்தாந்தம், (ஆ) ருஷ்யாவின் பல்தேசிய இன தொழிலாளி வர்க்கம் தலைமைப் பாத்திரம் வகித்தது. (இ) கம்யூனிஸ்டுக் கட்சி ஆளும் கட்சி எல்லா தேசிய அரசுகளிலும் தலைமை தாங்கியது, (ஈ) பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் தனியொரு அரசியல் வடிவமான சோவியத் ஆட்சியே இருந்தது, (உ) சோஷலிஸ்டுப் புரட்சிக்குப் பிறகு வரலாற்று வழியில் உருப்பெற்றதான உழைப்புப் பிரிவினை மற்றும் முன்னுள் ருஷ்ய சாம்ராஜ்யத்தின் மக்களினங்கள் இடையிலான பொருளாதார கலாசார பந்தங்கள் நிலவியதும் மேலும் வளர்ச்சியடைந்ததும், (ஊ) பல்வேறு கட்டங்களில் ஏற்கப்பட்டதான அரசு உறவுகளின் நடைமுறை மற்றும் ஒழுங்கமைப்பு சம்பந்தமான பல்வேறு நியதி பூர்வ

மான சட்டங்கள், (எ) தற்காலிகமான ஆட்சி மற்றும் அதிகாரம் சம்பந்தமான உறுப்புக்கள் (ஐக்கிய மக்கள் கமிசாரகங்கள் இத்தியாதி) பல குடியரசுகள் விஷயத்தில்.

சோவியத் நாட்டின் அகத்தே கூட்டாட்சி பந்தங்களின் சாரத்தை வரையறுப்பதோடு கூடவே, லெனின், அந்த சமயத்தில் நிலவில் வந்ததான இதர சோஷலிஸ்டு அரசு களுடன் அதன் கூட்டாட்சி ஒன்றியத்தின் உள்ளடக்கத்தைப் பரிசீலித்தார். இந்தப் புது வடிவிலான சோஷலிஸ்டு கூட்டாட்சியின் பிரத்தியேக அம்சம் என்னவென்றால், கூட்டாட்சியின் அடிப்படைக் கோட்பாடுகளில் சிலவற்றை மட்டுமே பதிவு செய்திருப்போம், இது சோவியத் நாட்டில் காணப்படுகிறது, இங்கு பிரயோகம் செய்யப்படுகிறது.

சோவியத் நாட்டுக்கும் இதர சோஷலிஸ்டு அரசு களுக்கும் இடையிலான கூட்டாட்சி ஒன்றியத்தின் பிரதான மான நிர்ணயமான கோட்பாடு பாட்டாளி வர்க்க சர்வ தேசிய சித்தாந்தமேயாகும். இது பல்வேறு தேசிய இனங் களைச் சேர்ந்த தொழிலாளர்களின் ஒரே மாதிரியான வர்க்க நோக்கங்களையும் நலன்களையும் தொடர்ந்து வருவதாகும். லெனின் கண்ட அளவில், சோஷலிஸ்டுப் புரட்சியின் பாட்டாளி வர்க்க சர்வதேசியத்தின் கருத்துக்கள் உழைக்கும் மக்களின் வர்க்க-உணர்வை விழிப்பூட்டித் தூண்டுபவை, அவர்களை ஒரு உறுதியான கூட்டணியில் ஒன்றுதிரட்டுபவை. இவை புராதன ரோமாபுரியின் கடும் நியதிகள் தேவைப் பட்டது போன்று பிரிவினை செய்யவில்லை மாறாக, ஜீவிய நலன்களின் மற்றும் வர்க்க போதத்தின் தகர்க்க முடியாத பந்தங்களால் எல்லா உழைக்கும் மக்களையும் ஒன்றிணைக் கிறது.''*

லெனினைப் பொருத்தவரையில் கம்யூனிஸ்டுக் கட்சியைப் பொருத்த வரையில், எந்த ஒரு மக்களினத்தின் தேசிய சோஷலிஸ்டு அரசின்பாலுமான கொள்கையின் சாரம்

---

* வி. இ. லெனின், ''நூல் திரட்டு'', தொகுதி 26, பக். 480.

துல்லியமாயும் பாட்டாளி வர்க்க சர்வதேசியத்தின் கோட்
பாடுகளில் வேர் கொண்டிருப்பதே. உடன்படிக்கைகள்
செய்துகொள்ளப்படினும்சரி,செய்து கொள்ளப்படாவிடினும்
சரி, பரஸ்பர உறவுகளையும் ஒத்துழைப்பையும் நிர்வாகம்
செய்ய பொது அமைப்புகள் எதுவும் உருவாக்கப்படவில்லை.
இது இந்தப் புதிய சோஷலிஸ்டு வடிவ கூட்டாட்சியின் ஒரு
மாதிரி அம்சமாகும்.

பாட்டாளி வர்க்க சர்வதேசியத்துடன் கூடவே லெனின்
சோஷலிஸ்டு அரசுகளில் கோலோச்சுவதும், கம்யூனிஸ்டு
அகிலத்தில் ஒன்றிணைந்து நிற்பதுமான கம்யூனிஸ்டு கட்சி
களின் ஒரே மாதிரியான தத்துவார்த்த மற்றும் அரசியல்
செயல்பாடுகளையும் புதிய சோஷலிஸ்டு மாதிரி கூட்டாட்சி
யின் மூலக்கல் என்றே லெனின் கருதினார். குறிப்பாயும்
ஹங்கேரிய தொழிலாளி வர்க்க அணிகளில் இருந்த பிளவு
அகற்றப்பட்ட போது, லெனின் இந்த நிகழ்வை
பாராட்டினார். ஆனால் ஹங்கேரி கம்யூனிஸ்டுக் கட்சி தன்னை
சமூக ஜனநாயகக் கட்சி அணிகளுக்குள் இரண்டறக் கலந்து
கொள்வதை எதிர்த்து அக்கட்சிக்குத் திரும்பத் திரும்ப
எச்சரிக்கை செய்தார். இது ஒருபுறம் உண்மையிலேயே
புரட்சிகரமான கொள்கை குறித்த அரசாங்கத்தின் நடத்தை
யில் தவிர்க்க முடியாத வகையில் ஊசலாட்டதை ஏற்
படுத்தும். மறுபுறம் மார்க்சிய கட்சிகள் மற்றும் அவை
நெறியாண்மை செய்த கட்சிகள் மத்தியிலான சர்வதேச
உறவுகளை சிக்கல்படுத்தும்.

1919 ஏப்ரல் 15 ஆம் நாள், சோவியத் நாட்டின்
குடியரசுகளுடன் அக்கம் பக்கமாக ஹங்கேரியன் மற்றும்
பவேரியன் சோவியத் குடியரசுகள் நிலவி இருந்த சமயம்
கம்யூனிஸ்டு அகிலம் "இப்போது முன் என்றும் கண்டிராத
அளவுக்கு உறுதியான அஸ்திவாரத்தின் மேல் சில பல
சோவியத் குடியரசுகளின் உருவத்தில் நிற்கிறது. இவை
பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை அமுல் நடத்துகின்றன,
சர்வதேசிய அளவில் முதலாளித்துவத்தை எதிர்த்த

வெற்றியின் உருவகமாகத் திகழ்கின்றன''* என்று லெனின் கூறினார்.

அக்டோபர் புரட்சிக்குப் பிறகு உருப்பெறத் தொடங்கிய தான சோஷலிஸ்டுக் கூட்டாட்சியின் சிறப்பு இயல்புகளை முறைப்படுத்தி முன்வைப்பதுடன் கூடவே ஏககாலத்தில் சோஷலிஸ்டு நாடுகள் மத்தியிலான பரஸ்பர அரசு உறவு களின் பிரதான கோட்பாடுகளும் வகுத்தளிக்கப் பெற்றன. இங்கும் லெனினது வழிகாட்டுதல் மதிப்பிடற்கரியதாக விளங்கியது.

இதன் முதல் கோட்பாடு: பரஸ்பரம் மதிப்பது, ஒன்று இன்னொன்றின் உள் விவகாரங்களில் தலையிடாமை, உறவு மற்றும் ஒத்துழைப்பின் வடிவங்களைத் தேர்ந்து கொள்வதில் பூரண சமத்துவம், சுதந்திர சித்தம் இதனை முரணின்றிக் கடைப்பிடித்தது மூலம் சோவியத் நாடு முன் உதாரணமாகத் திகழ்ந்தது. இதர மக்களினங்கள் மற்றும் நாடுகள் பாலான சோவியத் கொள்கை ஒற்றுமையையும் கூட்டணியையும் சாதிப்பதை நோக்கமாகக் கொண்டு இருந்தது, இது ''பலப் பிரயோகம் அல்லது வலுவந்தமான திணிப்பு மூலம் அன்றி அவை தமது சொந்தசோஷலிஸ்டுஅமைப்பினை நிறுவிக் கொள்ள அனுமதிப்பது மூலம் நிறைவேறியது''** என்று லெனின் கூறினார்".

இரண்டாவது கோட்பாடு ஒவ்வொரு மக்களினமும் தமது தேசிய மற்றும் அரசு சர்வவுரிமையினை முரணின்றிக் கடைப்பிடிப்பது என்பதாகும். இந்த சர்வவுரிமை முழுமை யாகவும் நேரடியாகவும் செயல்படுத்தப் பட்டது என்பதை நாம் அழுத்தமாகக் கூறுவோம். முன்னாள் ருஷ்ய சாம்ராஜ்யத்தின் பிரதேசத்தில் எழுந்த சோவியத் குடியரசுகள் முழுமையான சர்வவுரிமையினை அனுபவித்தன, இதை நேரடியாகவும் சில பல அல்லது எல்லா குடியரசுகளின் அதிகார மற்றும் அரசாங்கத்தின் கூட்டு அமைப்புகள் மூலம்

* அதே நூல், தொகுதி 29, பக். 307.
** அதே நூல், தொகுதி 26, பக். 495.

செயல்படுத்தின என்பதை நினைவு கூருவோம். முதலில் சோவியத்துகளின் அகில-ருஷ்ய மத்திய நிர்வாகக் கமிட்டியும் கூட்டு மக்கள் கமிசாரகங்களுமே இருந்தன. பின்னுல் சோவியத் சோஷலிஸ்டு குடியரசுகளின் ஒன்றியத்தின் அமைப்புகள் ஏற்பட்டன. இவையும் அரசுகளிடையிலான உறவுகளில் கூட்டாட்சி மாதிரி அமைப்புக்களையே ஆதரித்த போதிலும், இது சோவியத் நாடு மற்றும் இதர நட்புறவு சோஷலிஸ்டு அரசுகள் இடையிலான உறவுகளின் ஒரு பகுதி ஆகாது.

மூன்ருவது கோட்பாடு, இடையருத பரஸ்பர உதவி மற்றும் சோஷலிசத்தின் எதிர்காலத்திற்கான பொறுப்பில் பங்கு பெறுதல் என்பதாம். சோவியத் ருஷ்யாவுக்கும் பாட்டாளி பின்லாந்துக்கும் இடையிலான உடன்படிக்கையில் லெனின் இந்தக் கோட்பாட்டைத் தாமே வரையறுத்து முன் வைத்தார். பின்லாந்தின் தொழிலாளர் அரசாங்கத்துடன் சமாதானம் ஏற்படுத்திக் கொள்கையில் சோஷலிஸ்டு ருஷ்யாவினது பிரதிநிதிகளான நாங்கள் முழுப் பிரதேசத்தின் மீதுமான பின்லாந்தின் பரம அதிகார உரிமையை அங்கீகரித்தோம். ஆனுல், சோஷலிஸ்டு குடியரசுகளின் கூட்டு நலன்களைப் பாதுகாக்கும் பொருட்டு இனே கோட்டை ருஷ்யாவின் கைகளில் இருக்க வேண்டும் என்பதை இரு அரசாங்கங்களும் பரஸ்பரம் ஒப்புக் கொண்டன* என்று லெனின் பின்னுல் நினைவு கூர்ந்தார்.

1918 முன்பனிக் காலத்தில் பின்லாந்தின் தொழிலாளர் சோஷலிஸ்டுக் குடியரசுடன் முதல் சோவியத் குடியரசு, சோவியத் நாடு முழுவதும் மேற்கொண்ட உறவுகளின் அனுபவத்தின் மீது செயல்பட்டு, புதிதாக தோன்றி வரும் கம்யூனிஸ்டு அகிலத்தை சோஷலிஸ்டு அரசுகளின் ஒற்றுமைக்கான உத்தரவாதம்சார்ந்த கட்சிகளின் உயிர்நாடியான நோக்கமாக இருத்தல் வேண்டும் என்பதாக வரையறை செய்யப்பட்டது. ''கம்யூனிஸ்டு அகிலத்தின் முதலாவது

* அதே நூல், தொகுதி 27, பக். 379-80.

காங்கிரசுக்கான "வேண்டுகோள் கூறியதாவது: "இன்றுள்ள உலக நிலைமையில் புரட்சிகரப் பாட்டாளிகளின் பல்வேறு பகுதிகளின் இடையே உச்ச பட்சமான தொடர்பும், சோஷலிஸ்டுப் புரட்சி ஏற்கெனவே வாகை சூடியுள்ள நாடுகளின் இடையே ஒரு முழு அளவிலான கூட்டணி அமைவதும் அவசியமாகும்."*

சோஷலிஸ்டு நாடுகளின் இடையிலான உறவுகள், புரட்சிகரப் போராட்டங்கள், அரசியல் ஆதரவு, ராணுவ உதவி, மற்றும் உணவு சப்ளை போன்று சோஷலிசத்தின் எதிர்காலத்துக்காக பரஸ்பர உதவி பொதுவான பொறுப்பு ஆகியவற்றைச் செயல்படுத்துவதற்காக பல வழி வகைகள் இருக்கின்றன என்பதை விரைவில் எடுத்துக் காட்டின. சோவியத் ருஷ்யாவும் சோவியத் ஹங்கேரியும் எரிபொருள், தேர்ச்சி வாய்ந்த தொழிலாளர் மற்றும் தனித்துறை நிபுணர்களை வழங்கி உதவுவது பற்றிக் கூட விவாதித்தன.

பரஸ்பர உதவிக் கோட்பாட்டை அமுலாக்குவதில் சோவியத் நாடு உதாரணமாக விளங்கியது மட்டுமல்ல, இதர நாடுகளில் சோஷலிசம் வலுப்படுத்தப்படுவது குறித்துப் பெருத்த அக்கறை காட்டியது. ஜெர்மனியில் புரட்சி வெடித்த சமயம் வழங்கப்பட்ட பல்வகைப்பட்ட உதவி மற்றும் ஹங்கேரி சோவியத் குடியரசுக்கு கொடுத்த ஆதரவு இவையே இதற்கு எடுத்துக்காட்டு.

புதிதாக உதித்து எழும் ஒவ்வொரு சோஷலிஸ்டு அரசும் சோவியத் நாட்டின் நேசசக்தியாக விளங்க வேண்டும் என்று லெனின் வலியுறுத்தினார். அந்த நாட்களில் சர்வதேச ஏகாதிபத்தியத்தின் தாக்குதலில் இருந்து இந்தப் புதிய அரசைப் பாதுகாப்பதற்கு இது அவசியமாக இருந்தது. மேலும் இது பாட்டாளி வர்க்க சர்வதேசியத்தின் ஆக உயர் வெளிப்பாடாகவும் இருந்தது. ருஷ்யக் குடியரசுடனான மிக நெருக்கமான கூட்டணி மட்டுமே இதை சர்வதேச ஏகாதிபத்தியத்திடமிருந்து ஊறு செய்யப்படாது உறுதியாக நிற்க உதவ இயலும் என்று லெனின் வலியுறுத்தினார்.

* **கம்யூனிஸ்டு அகிலத்தின் முதலாவது காங்கிரஸ்,** மாஸ்கோ, 1933, பக். 254 (ருஷ்ய மொழியில்).

சோஷலிஸ்டு நாடுகள் அனைத்தின் ஒற்றுமைக்கு அவர் தலையாய முக்கியத்துவம் கொடுத்தார். இதற்குக் காரணம் ராணுவ அரசியல் மற்றும் பொருளாதார ஏதுக்களால் கூட்டணி விரும்பத் தக்கது என்பது மட்டுமல்ல, அதோடு அவர் சமுதாய வளர்ச்சியின் புறநிலை விதிகளை ஆழமாகப் புரிந்து கொண்டிருந்ததும் இதற்கு ஏதுவாகும். அவரைப் பொருத்தவரை, சோஷலிஸ்டு அரசுகளிடையான உறவு களின் உள்ளடக்கமும் வடிவங்களும் பொதுவாக சர்வ தேசிய மயமாக்கலின் உலகு தழுவிய இயக்கங்களையும், குறிப்பாக தனி ஒரு ஒற்றை உலகப் பொருளாதாரம் உருவாக்கப்படுவதையும் நேரடியாகச் சார்ந்து இருந்தன.*

இரண்டாம் உலகப் போரின் போதும் அதற்குப் பின்னரும் பல நாடுகளில் தொழிலாளி வர்க்கம் உழைக்கும் மக்கள் திரளுக்குத் தலைமை தாங்கிய சோஷலிஸ்டுப் புரட்சிப் பாதையினை மேற்கொண்டது. உலக சோஷலிஸ்டு அமைப்பு உருப்பெறத் தொடங்கியது. அப்போது இந்த மெய் நடப்புக்கள் சோஷலிஸ்டு நாடுகளுக்கு இடையிலான உறவுகள் பற்றிய லெனினது கோட்பாடுகளை ஊர்ஜிதம் செய்தன, மேலும் இவற்றை தேசியப் பிரச்சினையின் பாத்திரம் மற்றும் குறிபொருளுக்கும் ஸ்தூலமான வரலாற்று நிலைமைக்கும் பொருத்தமாகச் செயல்படுத்து வதற்கான வழிகளையும் ஊர்ஜிதம் செய்தன.

கம்யூனிஸ்டு அகிலத்தின் இரண்டாவது காங்கிரசில் தேசிய காலனிப் பிரச்சினைகள் எனும் (அவரே வருணித்தபடி) மிகவும் சிக்கலான விஷயம் மீதான தமது ஆராய்ச்சி யுரையினை முன்வைத்த லெனின், ஸ்தூலமான வரலாற்று நிலைமை பற்றிய திட்டவட்டமான ஆய்வு ஸ்தூலமற்ற அல்லது சம்பிரதாயமான கோட்பாடுகளை விடவும் முன்னுரிமை பெறுதல் வேண்டும் என்று பலமாக வற்புறுத்

* காண்க வி.இ. லெனின், "நூல்திரட்டு", தொகுதி 19, பக் 246; தொகுதி 20, பக். 28; தொகுதி 21, பக் 39, தொகுதி 31, பக் 147.

தினர். அந்த சமயத்தில் நிலவிய சந்தர்ப்ப சூழலில் அவர் பொருளாதாரக் காரணிகளுக்கே பிரதான முக்கியத்துவம் அளித்தார். இந்த நாட்களிலுங்கூட, சோஷலிஸ்டு நாடுகளின் பரஸ்பர உறவுகளைப் பகுத்தாயும் போது, நாம் பொருளாதார மட்டங்களில் காணப்பெறும் வேறுபாடுகள், பொருளாதார ஒத்துழைப்பின் மூலம் அடைந்த பல்வேறு தரங்களிலான பயன் ஆகியவை குறித்துக் கவனம் செலுத்தும் கட்டாயம் ஏற்பட்டுள்ளது. லெனின் சுட்டிக் காட்டிய இதர காரணிகள் அகத்தே, தொழிலாளிவர்க்க ஆட்சி நிறுவப்படுவதற்கு முன்பாக இந்த நாடுகளிடையான உறவுகள், இவை வரலாற்று முறையில் எவ்வாறு பரிணமமடைந்தன, சம்பந்தப்பட்ட நாடு ஒடுக்கும் நாடா அல்லது ஒடுக்கப்படும் நாடா என்பது போன்ற அம்சங்கள் உள்ளன.

எல்லா தேசங்கள் சகல நாடுகளின் பாட்டாளிகளையும் உழைக்கும் மக்கள் திரளினரையும், மேலும் நெருக்கமாக இணைத்துக் கொண்டுவர வேண்டும். இதுவே கம்யூனிஸ்டுக் கட்சிகளின் கொள்கையின் மூலக்கல்லாகும் எனும் லெனினது தத்துவக்கூறு இங்கு மிகமிகப் பொருத்தமானது.

சோவியத் சோஷலிஸ்டு குடியரசுகளின் ஒன்றியம் மற்றும் மக்கள் ஜனநாயகங்களின் சோதரக் கூட்டணி மற்றும் பின்னவற்றின் இடையிலான கூட்டணியின் நடைமுறை, அவற்றின் பரஸ்பர உறவுகளின் உள்ளடக்கம் குறித்து லெனின் முன்வைத்துள்ள அம்சங்கள் பலவும் மார்க்சிய-லெனினியக் கட்சிகளில் உருவகம் பெற்றுத் திகழ்வதைப் புலப்படுத்தும். இது சோஷலிஸ்டு நாடுகளின் பொருளாதார அரசியல் மற்றும் ராணுவ ஒத்துழைப்பின் பல்வேறு அம்சங்களுக்கும் பொருத்தமானதாகும்.

தேசியப் பிரச்சினை மீதான மார்க்ஸ், எங்கெல்ஸ் மற்றும் லெனினது போதனையும், சோஷலிஸ்டு நிலைமைகளில் தேசிய அரசுகள் முன்னேறுவதன் வழி வகைகள் பற்றியும் லெனின் வகுத்தளித்த அறிவுரைகளும் எல்லா

நாடுகளையும் சார்ந்த தொழிலாளி வர்க்கமும் கம்யூனிஸ்டுக் கட்சிகளும் தமது பிரதானக் கடமைகளில் ஒன்று சோஷலிஸ்டு கூட்டமைப்பின் ஒற்றுமையை உச்சபட்சமாக வலுப்படுத்துவது என்று நிர்ணயம் செய்கின்றன. அதே பொழுதில், இதன் உறுப்பு நாடுகள் ஒவ்வொன்றினது நலன்களுக்கும் உத்தரவாதம் அளிக்கப்படுகிறது. சோஷலிஸ்டு நாடுகள் தமது உறவுகள் விஷயத்தில் என்ன வடிவங்களை மேற்கொண்டபோதிலும் சரி, அவற்றின் வெளிநாட்டு உள்நாட்டுக் கொள்கைகள் உலக சோஷலிஸ்டு அமைப்பை பாதுகாப்பது பலப்படுத்துவது என்பதான ஜீவாதாரத் தேவைக்கு உகந்தனவாகவே இருத்தல் வேண்டும். ஒற்றுமை மீறல்கள் உலகப் புரட்சி இயக்கம் முழுவதற்கும் தடைக்கல்லாகும். உலக சோஷலிஸ்டு அமைப்பைச் சீர்குலைப்பதற்கான எந்த உள்நோக்கமும் நியாயமானதல்ல. உலக சோஷலிசத்தின் நலன்கள் எந்த ஒரு தனி தேசிய அரசின் நலனைவிட முன் கவனத்துக்கு உரியவை எனும் லெனினது உறுதியுரை மீறவொண்ணாதது.

இன்றைய சர்வதேச நிலைமை, முதலாவதாகவும் முதன்மையாகவும் சக்திகளின் பரஸ்பர உறவு உலக சோஷலிஸ்டு அமைப்பின் ஒற்றுமை தொடர்ந்து வலுப்படுத்தப்படுவதை அவசியமாக்குகிறது. சுயாதீனத்துக்கும் தனிப்படுத்தப்படும் நிலைக்கும் இடையிலான பாகுபாட்டு எல்லை மிக மிக எளிதில் மாறி இயங்குவதாகும். மேலும் இதனை . நாட்டின் தொழிலாளி வர்க்கம் மற்றும் மார்க்சிய-லெனினிய கட்சி மட்டுமே எப்போதும் நிர்ணயம் செய்வது கிடையாது. சுயாதீனமும் சுயதேவைப் பூர்த்தியும் மிகையாக வலியுறுத்தப்படும்போது நிலவும் நிலை காரணமாக மீறல்கள் ஏற்படக்கூடும். இரண்டு அமைப்புக்களின் சக்திகளின் பரஸ்பர உறவுகளும் மாறி வருவது இதற்குக் காரணமாகும்.

பரஸ்பர உறவுகளை முன்கொண்டு செல்லவும் சோஷலிஸ்டு கூட்டமைப்பு நாடுகள் இடையே ஒத்துழைப்பை

மேம்படுத்தவும் கம்யூனிஸ்டு மற்றும் தொழிலாளர் கட்சிகள் உச்சபட்சம் முயல்கின்றன.

சோஷலிஸ்டு பொருளாதார இணைப்பாக்கம் இனி மேலும் ஆழமுறுவது, வளர்ச்சியுறுவது எனும் செய்முறை சோஷலிஸ்டு சர்வதேசியத்தின் கோட்பாடுகளுக்கு ஏற்பவும், அரசின் சர்வவுரிமை, சுயாதீனம், தேசிய நலன்கள், நாடுகளின் உள்விவகாரங்களில் தலையிடாமை, பூரண சமத்துவம், பரஸ்பர நலன்கள் மற்றும் தோழமை பூர்வமான பரஸ்பர உதவி எனும் அடிப்படையிலும் தொடர்ந்து அமுலாக்கப்படும் என்பதாக சர்வாம்ச வேலைத்திட்டம் கூறுகிறது. இந்தப் புதுமாதிரியிலான அரசுகளிடையான உறவுகள் சம்பந்தப்பட்டதான மார்க்சிய லெனினியக் கோட்பாடுகளின் இருத்தல் தகைமையை வரலாற்று அனுபவம் முழுமையாக ஊர்ஜிதம் செய்துள்ளது. இது ஒவ்வொரு நாட்டிலும் சோஷலிஸ்டு நிர்மாணத்தை வலுப்படுத்தும் புறநிலைத் தேவைகளுக்கு முற்றும் பொருத்தமானது. உலக சோஷலிஸ்டு அமைப்பின் வளர்ச்சிக்கான நிலைமைகள் இருப்பதை நிறைவு செய்கிறது. விரிவானதும் பயனுள்ளதுமான சர்வதேச ஒத்துழைப்புக்குரிய உறுதியான அடித்தளத்தை உருவாக்க உதவுகிறது.''*

---

* **ப. உ. க. உறுப்பு நாடுகளால் சோஷலிஸ்டு பொருளாதார இணைப்பாக்கத்தில் ஒத்துழைப்பு வளர்ச்சி மேலும் விரிவும் மேம்பாடும் உறுவதற்கான சர்வாசம் வேலைத்திட்டம்,** *பக். 15.*

அத்தியாயம் ஏழு

சோஷலிசமும் தேசிய கலாசாரங்களின் பரஸ்பர செல்வாக்கும் அவை செழுமையுறலும்

1. கலாசார வளர்ச்சியும் தேசியக் கலாசாரமும்

பொதுவாக, மார்க்சிய-லெனினிய விஞ்ஞானம் கலாசாரத்தை ஒரு சமுதாயத்தின் ஒட்டுமொத்தமான சாதனை என்றே புரிந்து கொள்கிறது. கலாசாரத்தின் ஆக்கக் கூறுகள் பொருளாயதத் துறையிலும், அகவளத் துறையிலுமானமனிதனது ஆக்கபூர்வமானசெயல்பாட்டின் விளைவுகளேயாகும். மதிப்புக்களைப் படைத்துருவாக்குவது என்பது கலாசாரத்தின் ஒரு பகுதியாகும். அதேபோல தன்னைச் சுற்றியுள்ள உலகத்தையும் அவன் தன்னையும் மாற்றிக் கொள்வதற்கான மானுடச் செயல்பாட்டின் முறைகளும் இத்தகையதே. அதேபோல சமுதாய உளவியலும் மற்றும் சித்தாந்தமும், மக்கள் நடத்தையிலான அவற்றின் பிரதிபலிப்பும் இதன்பாற்பட்டனவேயாகும். ஆனால் ''கலாசாரம்'' எனும் கருத்தினம் பெரும்பாலும் மேலும் குறுகிய பொருளில் பயன்படுத்தப்படுகிறது. இது அகவள கலாசாரத்தை (விஞ்ஞானம், இலக்கியம், கலை, ஒழுக்கம், கல்வி இத்தியாதி துறைகளிலும், அவற்றின் உற்பத்தி,

வினியோகம், பயனீடு ஆகியவற்றிலுமான மதிப்புகளை) குறிப்பிடுகிறது.

ஒவ்வொரு தேசம் மற்றும் தேசிய இனத்தின் கலாசாரம் வரலாற்றின் ஏதேனும் ஒரு கட்டத்திலான மனித குல கலாசார வளர்ச்சியின் ஒன்றிணைக்கப்பட்ட பகுதியேயாகும். ஒரு தேசம் அல்லது தேசிய இனத்தின் கலாசாரம் எந்தளவுக்கு அதிக வளர்ச்சி பெற்றிருக்கிறதோ அந்த அளவுக்கு அதன் அகத்தேயான சர்வப்பொதுவான கூறுகள் மேலும் அதிகமாக இருக்கும். தமது தேசியக் கலாசாரத்தை உயர்த்துவதற்காக மக்கள் புரியும் ஆக்கபூர்வமான செயல்பாடு வாயிலாகவே இவை உருப் பெறுகின்றன—இந்த முயற்சியை இதர தேசியக் கலாசாரங்களில் இருந்து தனிப்படுத்தியோ, அவற்றுடன் பரஸ்பர செழுமையும் இடைச் செயற்பாடும் இன்றியோ நினைத்தே பார்க்க முடியாது.

ஒரு பகைமை சமுதாயத்தில் மோதும் நலன்கள், பகைமை வர்க்கங்களின் முரண்படும் சமுதாய-வரலாற்று நடைமுறை காரணமாக, கலாசாரம் வர்க்க கலாசாரமாகக் காட்சி தருகிறது.

கலாசாரத்தின் சாரம் பற்றிய இந்த மார்க்சிய மற்றும் முரணற்றதான விஞ்ஞான பொருள் முதல்வாத வரையறுப்புக்கு நேர் எதிராக, முதலாளித்துவத்தின் சித்தாந்தவாதிகள் முற்றும் வேறுபட்ட விஞ்ஞானத் தன்மையற்ற கருத்தியலான விளக்கத்தைத் தருகிறார்கள். அவர்களது கருத்துப்படி குலம், தேசிய இனம் அல்லது தேசம் போன்ற மக்களின் சமுதாயக் கூட்டுகள், பிரத்தியேகமானதான படைப்பாற்றல் உள்வலியை வைத்திருக்கிறார்களாம், பல்வேறு கலாசாரங்களின் தோற்றத்துக்கு இதையே காரணம் காட்டுகிறார்களாம்.

மனிதனது "மாற்றவொண்ணாத இயல்பை"ச் சார்ந்ததாகக் கூறப்படும் சிந்தனையின் உயிரியல் கொள்கை என்பது ஒருபுறம் இருக்க, கருத்தியலான உளவியல் கருத்தினங்களும் கூட "மனித அகத்தின் மாற்றவொண்ணாத திறமைகளையே"

விவரித்துக் கூறுகின்றன. உயிரியல் மற்றும் மனிதவியல் சார்ந்த சமூகவியல், கருத்தியலான மனோதத்துவ சமூகவியல் மற்றும் மனித இன-மனோதத்துவயியல் போலவே, கலாசாரத்தை அதன் பொருளாயத அஸ்திவாரத்தில் இருந்து, பொருளாதார சமூக அடித்தளத்தில் இருந்து தனிப்பிரிக்கிறது. இது "நிரந்தர மாதிரிகள்" அல்லது கலாசாரத்தின் வடிவமைப்பு, "கலாசார சார்பு வாதம்" இத்தியாதி கருத்துப் படிவங்களில் போய் முடிகிறது. கலாசாரங்களுக்கு இடையே ஏற்படக்கூடிய, ஏதேனும் பரஸ்பரச் செல்வாக்கு அல்லது செழுமை, முடிவில் வளர்ச்சியைக்காட்டிலும் அவை மறைந்தழிவதற்கே இட்டுச் செல்லும் என்று இவற்றின் விரிவுரையாளர்கள் சாதிக்கிறார்கள்.

கலாசாரம் பற்றிய கருத்து முதல் எண்ணத்தைப் போலன்றி, வரலாற்று வழி பொருள்முதல்வாதம் பொருளாயத வாழ்க்கையிலான உற்பத்திப்பாங்கே சமூக-அரசியல் மற்றும் அகவளம்பற்றிய இயக்கங்களை நெறியாக்கம் செய்கிறது என்று வாதம் செய்கிறது. மார்க்சும் எங்கெல்சும் பொருளாயத மற்றும் அகவள கலாசாரங்கள் இடையிலான வேறுபாட்டைக் கண்டனர். ஆனால், அவை மிகவும் நெருக்கமாகப் பிணைந்திருப்பதையும் தொடர்ந்து பரஸ்பரம் செயல்படுவதையும் கூட எடுத்துக் காட்டினார்கள்.

வளர்ச்சியடைந்துவிட்ட தேசங்களை அவற்றின் பொருளாயத கலாசாரம் மூலம் இனம் காண்பது மேலதிகமாயும் கடினமாகி வருகிறது. இந்தத் துறையில் சர்வதேசியமயமாக்கல் மிகவும் முனைப்பாக இருக்கிறது. அகவள கலாசாரத்தில் ஒரு பகுதியும் சர்வதேசியத் தன்மை உடையதே. அது சமுதாய உணர்வின் ஒட்டு மொத்தமான சகல வடிவங்களையும், வழக்கங்கள், தனித் திறமைகளையும், அகவள மதிப்புக்களை உருவாக்கும் சாதனங்களையும் அரவணைத்து நிற்கிறது என்பதுநமக்கு ஏற்கெனவே தெரியும் பொதுஜன போதம் தன் வகைக்கு அவர்களது அன்றாட சுற்றுச் சூழலின் செல்வாக்கின் கீழ் மக்கள் பெறுகிற சமூக

உளவியல் மட்டத்திலும், உயர்தரமான பொதுஜன போதமாயும் திட்டவட்டமான சமுதாய வர்க்கத்தின் நலன்கள் தேவைகளை வெளியிடும் கருத்து மற்றும் தத்துவ அமைப்பாகக் காட்சி தரும் சித்தாந்த மட்டத்திலுமான கருத்துக்கள், எண்ணங்கள் மற்றும் தத்துவங்களைச் சேர்த்து அரவணைத்துக் கொள்கிறது.

விஞ்ஞான அறிவை தேசியமானது என்று கருதுவது தவறு, காரணம் இது உலகப்பொதுவானது என்பது கண்கூடு. அதே போதில் சித்தாந்தத்தை (அரசியல் சட்டநியதி, தத்துவஞான, அறநெறி, கலையுணர்வு மற்றும் இதர கருத்துக்களை) தேசியமானது என்று கருதுவதும் சரியல்ல, காரணம் அதன் வர்க்கத் தன்மை. இதுவே சமூக-உளவியலுக்கும் பொருந்தும். இது சமுதாய உணர்வுகள், கருத்துப் படிவங்கள், உணர்ச்சிகள், ஆவேச உணர்வுகள் மற்றும் பிரமைகள், தப்பெண்ணங்களின் கூட்டு மொத்தமாகும்.

மறுபுறத்தில் இலக்கியம், கலை, நடத்தையிலான சில போக்குகள், பழக்கங்கள், மரபுகள், வளர்ப்புமுறை இத்தியாதி அகவள கலாசாரத்தின் இத்தகைய கூறுகள் தெட்டத் தெளிவாயும் பிரத்தியேகமான தேசியத் தனித் தன்மைகள் கொண்டிருக்கின்றன. இங்கும் கூட முதலாளித்துவ சமுதாயத்திற்கு உள்ளடக்கத்தில் இணைப் பாக்கம் கொண்டதான தேசியக் கலாசாரம் கிடையாது (இப்போது நிலவும் ஜன விரோத நவீனபாணி கலாசாரம் பொருத்த வரை தேசியக் கலாசாரம் என்பது வடிவத்தில் கூட இல்லை). இதற்கு நேர் மாருகவே நிலைமை இருப்பதாகப் பல பூர்ஷுவா சித்தாந்தவாதிகள் மற்றும் தேசியவாதிகள் "நிருபிக்க'' முயல்கிருர்கள்.

ஒரு தேசத்தின் கலாசாரமும் தேசியக் கலாசாரம் என்பதும் ஒன்றல்ல என்பதைத் தெளிவாக உணர்தல் வேண்டும். ''தேசியம்" என்ற தொடர், தேசம் முழுவதன் கலாசாரத்தையும் சுட்டுகிறபோது மட்டுமே இவை ஒத்திருக்

கின்றன என்பது கண்கூடு. அந்த இடத்தில் ஒவ்வொரு நாட்டின் கலாசாரத்திலும் இரண்டு தேசியக் கலாசாரங்கள்" முற்போக்கானதும் பிற்போக்கானதும் ஒருங்கே இடம் பெறும்.

வர்க்கம் மீறியதான தத்துவங்களும், தேசியக் கலாசாரம் இணைப்பாக்கமுள்ளது என்ற கருத்தும் லெனினால்* பிற்போக்கானவை, தவறானவை என்று நிதர்சனமாக்கப்பட்டு விட்டன. தொகுத்துக் கூறிய அவர் கூறியதாவது: "ஒவ்வொரு தேசியக் கலாசாரத்திலும் இரண்டு தேசியக் கலாசாரங்கள் உள்ளன."**

இது "நிபந்தனையுடன்" கூடியது என்றும், இதன் பொருள் அப்பட்டமாயும் சித்தாந்த ரீதியானது, அரசியல் முறையிலானது, அழகியல் வழியில் தோன்றியதல்ல என்றும், விடாமல் வற்புறுத்தி இந்த யோசனையைத் திருத்திட முயல்வோரும் உள்ளனர். "புரிஷ்கேவிச்சுகள், குச்கோவ்கள் மற்றும் ஸ்த்ரூவேகளின் கலாசாரம்" என்று லெனின் குறிப்பிடும் வாசகத்தில் கலாசாரம் எனும் சொல் அரசியல் தொடர் எனவும் இந்தப் பட்டியலில் குறிப்பிடப்பட்ட பிற்போக்காளர்கள் கலாசாரம் எதையும் படைக்கவில்லை எனவும் குற்றம் சாட்டுகிறார்கள். ஆனால் லெனின், இங்கு பூர்ஷ்"வாக்கள் அனைவரையும், பிற்போக்கின் சேவகர்களாய் பிற்போக்குக்கு ஊழியம் செய்யும் (கலைகள் உள்ளிட்டதான) சமய நிறுவனங்களின் அகவளக் கலாசாரம் உட்பட, மனதிற்கொண்டு குறிப்பிடுகிறார்.

லெனினுடைய கூற்றினை வெறும் சொல்லணியால் குறுக்கிக் காட்டவும் மேலும் பல முயற்சிகள் நடக்கின்றன. இந்த மிகவும் சிக்கலானதும் முக்கியமானதுமான பிரச்சினையினைப் பகுப்பாய்வு செய்யும் விருப்பமின்மையையே

---

* காண்க வி. இ. லெனின், "நூல் திரட்டு", தொகுதி 19, பக். 246, 533, 541, 548; தொகுதி 20, பக். 22-26, 32-39, 289-91

** அதே நூல், தொகுதி 20, பக். 32.

இப்போக்கு பெருமளவு சுட்டுகிறது. இரண்டு தேசியக் கலாசாரங்கள் என்னும் வாசகம் சொல்லணியே, ஆனால் ஒரு சொல்லணி என்ற முறையில் இது அழுத்தம் தந்து காட்டும் மிகவும் முக்கியமான கருத்தாழம் கொண்ட விவரமும் உள்ளது. முதலாளித்துவ அமைப்பைக் கொண்ட ஒரு தேசத்தின் சாரத்தைச் சரியாகப் புரிந்துகொண்டு, சரியான கொள்கை, ஆதார நெறி மற்றும் போர்த்தந்திரங்களை தேசிய மற்றும் வர்க்கப் பிரச்சினைகள் சம்பந்தமாக வகுத்துக் கொள்வது உயர் முக்கியமான பணியாகும்.

இருப்பினும் லெனினது "இரண்டு தேசியக் கலாசாரங்கள்'' என்ற கருத்துக்கும், மாவோயிஸ்டுகளின் "பாட்டாளி கலாசார'' கொள்கைவாதிகள் கடந்த காலத்திய கலாசார சாதனைகள் மீது தோற்றுவிக்கும் இழிபழிக்கும், எவ்விதமான பொது அம்சமும் கிடையாது. லெனினது தோரணை பற்றிய எந்த உதாரணத்தை வேண்டுமாயினும் எடுத்துக் கொள்ளுங்கள்: அவர் ஜனநாயக தேசியக் கலாசாரத்தையும் பூர்ஷுவா கலாசாரத்தையும் வேறுபடுத்திப் பார்க்கிறார். ஆனால் அவருக்கு அளவுகோலாக இருப்பது கலாசாரத்தை உருவாக்குவோரின் வர்க்க உறவின் பண்பல்ல, மாறாக இந்தக் கலாசாரம் எந்த வர்க்கங்களுக்குச் சேவை செய்யும் என்பதேயாகும்.

முதலாளித்துவ சமுதாயத்தில் ஜனநாயக கலாசாரம், பூர்ஷுவா கலாசாரம் இரண்டுமே ஒரே தேசிய வடிவில் பல்வேறான வெளிப்பாடுகளில் பிரகடனப்படுத்தப்படுகிறது எனும் மெய்விவரம் காரணமாக அவற்றை தனி ஒரு இணைப்பாக்கமுடைய கலாசாரம் என்று கருதமுடியாது.

ஜனநாயக மற்றும் சோஷலிஸ்டு கலாசாரத்தின் மூலக் கூறுகள் தற்போது ஆரம்ப வடிவத்தில் ஒவ்வொரு தேசிய கலாசாரத்திலும் காணப்படுகின்றன. ஏனெனில் ஒவ்வொரு தேசத்திலும் உழைக்கும், சுரண்டப்படும் மக்கள் திரளினர் உள்ளனர். அவர்களது வாழ்க்கை நிலைமைகள் தவிர்க்க முடியாத வகையில் ஜனநாயகம், சோஷலிசம் எனும்

சித்தாந்தத்தைப் பிறப்பித்துள்ளன. ஆனால் ஒவ்வொரு தேசத்திலும் பூர்ஷுவா கலாசாரமும் இருக்கிறது (பெரும்பாலான தேசங்களில் பிற்போக்கான சமய சார்பான கலாசாரமும் இருக்கிறது). இது "மூலக்கூறுகள்" வடிவில் அல்ல, மாறாக **ஆதிக்கம் செலுத்தும்** கலாசாரமாக இது இருக்கிறது.*

"தேசியக் கலாசாரம்" எனும் தொடர் "ஒரு தேசத்தின் கலாசாரம்" என்பதைவிடவும் மிகவும் குறுகிய பொருளுடையதாக இருக்கிறது. சுரண்டல் சமுதாயத்தில் இது தேசம் முழுவதன் கலாசாரத்திற்கும் பொருந்துவதில்லை, மாறாக அதன் இனக்கூறினை மட்டுமே, மொழி வாழ்க்கைப் பாணி மற்றும் கலை இலக்கிய வடிவங்களையே பிரதானப்படுத்தும் முறையில் இருக்கிறது. இந்த ஆக்கக் கூறுகளில்தான் கலாசாரம் திட்டவட்டமாயும் இனப்பாகுபாட்டுப் பணிகளை நிறைவேற்றுகிறது. இது இதர வேலைகளுடன் கூடவே ஒரு தேசத்தின் கலாசாரத்தை இதர தேசங்களின் கலாசாரங்களிடமிருந்து இனம் பிரித்துக் காட்டுகிறது. இந்தப் பொருளில் இது தேசியத்தன்மையுடையது, தேசம் முழுவதன் அல்லது தேசிய இனத்தினை முழுமையாகச் சித்திரிக்கிறது.

விரிவான பொருளில் பார்த்தால், பகைமை வர்க்கங்களைக் கொண்டதான ஒரு தேசத்துக்கு, ஒட்டு மொத்தமாக ஒரே கலாசாரம் மட்டும் இருத்தல் இயலாது. இருப்பினும் முதலாளித்துவ சமுதாயத்தில் தேசியக் கலாசாரத்தின் "பொதுமை" மறுக்கப்படுவதால் தேசிய சூன்யவாதம் இருக்கும் என்று கருதுவது தவறாகும். ஏனெனில் இந்தப் பொதுமைகள் சிறப்பாக தேசத்தின் மிகப்பெரும்பாலான மக்களுக்கிடையே நிலவுகின்றன, மற்றும் இவை சோஷலிஸ்டு தேசங்களில் தமது மெய்யான சாரத்தில் முழுமையாக வெளிப்பாடாகின்றன.

---

* வி. இ. லெனின், "நூல் திரட்டு", தொகுதி 20, பக். 24.

தேசியப் பகைமைகள் எனும் முதலாளித்துவ நடைமுறையினை நியாய நிறுவீடு செய்யும் தேசியவாதிகள் தேசிய சமுதாயக் கூட்டை ஒவ்வொரு தேசத்தினதன் உறுப்பினர்களும் தேசிய மெய்ப்பாட்டில் ''உணர்ச்சி பூர்வம் ஈடுபடுவதன்'' விளைவே என்று வருணிக்கிறார்கள்.

ஆனால் தேசிய வாழ்க்கையில் இத்தகைய ''உணர்ச்சி பூர்வம் ஈடுபடுவது'' என்பது, உண்மையிலேயே பொதுவான ஜீவாதார நலன்கள் மற்றும் குறிக்கோள்கள் கொண்ட தேசத்தின் உறுப்பினர்களான உழைக்கும் மக்கள் மற்றும் பரந்த மக்கள் திரளினரால் மட்டுமே சாத்தியம்.

ஒவ்வொரு மக்களினமும் அதன் கலாசாரத்திற்கு தேசிய வடிவம் புனைகிறது. பிரத்தியேகமான வாழ்க்கை நிலைமைகள், வழக்கம், மரபு, மொழி இத்தியாதிகளால் வடிவமைக்கிறது.

தேசிய உணர்வுகள் பற்றிய கருத்தியலான கருத்தினத்திற்கு மாறாக, இயக்கவியல் பொருள்முதல் வாதம் இவற்றை பொதுவான பொருளாதாரப் பிணைப்புகள் மொழி மற்றும் பிரதேசம் அடிப்படையிலான, மக்களினங்களின் சமுதாய மற்றும் வரலாற்று நடைமுறையின் விளைவாகவே காண்கிறது.

தேசிய உணர்வுகளை வர்க்க உணர்வுகளிலிருந்து தனிப்பிரிக்க முடியாது. மக்கள் சமுதாயத்தின் அகத்தே வாழ்கிறார்கள். தகவல் போக்குவரத்து, பொருளாயத மற்றும் அகவள கலாசாரம், விஞ்ஞான அறிவு, அறநெறித் தரங்கள் மற்றும் அழகியல் மதிப்புக்களின் வடிவங்களை வளர்த்துக் கொள்கிறார்கள். இதுவே உன்னதமான மானுடத் தேவைகள் மற்றும் இதன் தொடர்பான உணர்வுகளையும் தோற்றுவிக்கின்றது.

மக்கள் வாழ்ந்து வரும் சுற்றுச் சூழல் வெறும் சமுதாய சாதனம் மட்டுமல்ல, மாறாக ஒரு தேசிய சமுதாய சாதனமாகும். அவர்களது தேவைகளும் உணர்வுகளும் திட்டவட்ட

மான தேசிய சிறப்பியல்புகளைக் கொண்டிருக்கின்றன. ஒருவரது தேசம் அல்லது தேசிய இனத்தின் நலன்கள், அதன் நற்பண்புகள், பொதுவான மானுட முன்னேற்றத்தில் அது வகித்த பங்கு மற்றும் உள்ளூர் இயற்கைச் சூழல் உள்ளூர் மொழி, கலை, இலக்கியம் இவற்றுடனான மிகவும் நெருக்கமான அழகியல் உறவு, இவற்றுடன் பந்தப்பட்டு நிற்கும் தீவிர உணர்ச்சிகளே தேசிய உணர்வுகளின் வடிவத்தை மேற்கொள்கின்றன.

ஒப்பளவில் ஒரே மாதிரியான பிரதானமாயும் இயல்பான நிலைமைகளில் வாழ்ந்து வரும் ஒவ்வொரு மக்களும் சுற்றுமுள்ள எதார்த்தத்தின் கலையம்சம் கொண்ட புலனறிவின் திட்டவட்டமான சக்திவாய்ந்த மாறுமாதிரிப் படிவத்தையும், அதன் மறுமதிப்பையும் பெறுகின்றனர். உலகைப் பற்றியதான இந்தப் பிரத்தியேகமான அழகியல் ரசனை, பொதுவான (சர்வப் பொது மானுட) ரசனையுடனும் தொடர்புடையது, ஆனால் பொது ரசனையை விடவும் செழுமையானது. காரணம் இது இயற்கையின் ஒரு சில தனிப்பட்ட இயல்புகளையும், தேசத்தின் பொருளாதார அரசியல் மற்றும் கலாசார அபிவிருத்தியையும் கூடப் பிரதிபலிக்கிறது.

தமது தேசிய இசை, கலை மற்றும் இலக்கியத்தில் மக்கள் பல மக்களினங்களுக்கும் பொதுவாக இருக்கும் பிரச்சினைகளிலான முற்போக்கு அம்சங்களையும், இது சம்பந்தப்பட்டதான உணர்வுகளையும் சிந்தனைகளையும் இயல்பாகவே பிரதிபலிக்கிறார்கள். இதற்கும் மேலாக இது இந்த உணர்வுகளை தேசியத் தன்மையுடன் கொண்டு செல்வதற்கு அவர்களது உணர்ச்சி பூர்வமான பாவத்தைக் கொண்டு செல்வதற்குப் போதனை தருகிறது.

மக்களின் சமூக-வரலாற்று நடைமுறையில்தான் அவர்களது அழகியல் உணர்வுகளும் தேவைகளும் எழுகின்றன. எதார்த்த வாழ்வின்பால் பல்வேறு தேசிய இனங்களைச் சார்ந்த மக்கள் தமது அழகியல் உறவுகளில் வெளிப்படுத்தும்

பொது அம்சங்களும் வேற்றுமை இயல்புகளும் அவர்களது சமூக-வரலாற்று அனுபவத்தின் உள்ளடக்கத்திலான பொது அம்சங்கள் மற்றும் வேற்றுமை இயல்புகளிலிருந்தே கிளைக்கின்றன. ஓர் உண்மையான தேசியக் கலைஞன், சர்வதேசிய இயல்பையும் அலாதியான தேசிய இயல்பையும் ஓர் ஒற்றுமை சாதனையாக வெளிப்படுத்துகிறான். ஒரு தேசத்தின் கலைஞர்கள் எதார்த்த வாழ்வுடனான தமது அழகியல் உறவுகளின் பல்வேறு வடிவங்களையும் வண்ணங்களையும் தோற்றுவிக்கும் அதே போதில், பல்வேறு தேசங்களைச் சார்ந்த கலைஞர்கள் இந்தப் பல்வகைத் தன்மைக்கு தேசியச் சூழலால் உருவாக்கப்பட்ட தமது பிரத்தியேக தரிசனத்தையும் சேர்த்து வழங்குகிறார்கள்.

திட்டவட்டமான தேசிய நிலைமைகளில் வாழும் ஒரு கலைஞன், தனது மக்களின் அக்கறைகளிலும், போராட்டங்களிலும் பங்கு கொள்கிறான். அவர்களது நாடோடி இலக்கியம் மற்றும் கிராமியக் கலையின் திட்டவட்டமான உணர்வுகளையும் அதன் கலைச் சிறப்புடைய மொழி மரபுகள் உருவகங்களையும் கூடத் தன்வயப்படுத்திக் கொள்கிறான். பரிச்சயமான தேசிய வடிவில் அவன் வெளிப்படுத்துகிற எதார்த்த சித்திரத்தை அவனது தேசத்தவர் இயல்பாகவே மேலும் அதிக ஆழமாகப் புரிந்து கொள்கிறார்கள், இது உலகத்தை அவர்கள் அறிந்து கொள்ள உதவுகிறது.

எதார்த்தத்தை வெளிப்படுத்தவும் அறிந்து கொள்ளவுமான இந்த தேசிய வடிவம், இந்த எதார்த்தத்தைக் கற்றறிய உதவுகிறது, மற்றும் இதை வைத்திருப்போருக்கு ஒரு சுதந்திரமான மதிப்பாக அமைகிறது.

ஒரு கலாசாரத்தின் தேசிய வடிவத்தைப் புறக்கணிப்பதோ அல்லது குறைத்து மதிப்பிடுவதோ நினைக்கவும் முடியாத செயலாகும், காரணம் இது அந்தக் கலாசாரத்தின் சோஷலிஸ்டு உள்ளடக்கத்தை சம்பந்தப்பட்ட தேசத்தின் மக்கள் திரளினர் எளிதில் பெற இயலுமாறு செய்கிறது.

சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சியின் 25 ஆவது காங்கிரசுக்கு சமர்ப்பிக்கப்பட்டதான மத்தியக் கமிட்டியின் அறிக்கையில், சோவியத் ஒன்றியத்தின் கலையும் இலக்கியமும் நாட்டின் டஜன் கணக்கான மக்களினங்களின் மொழிகளில் பயன்தரும் வகையில் ஒளிமயமான பல்வகைப்பட்ட தேசிய வடிவங்களில் வளர்ச்சியடைந்து வருகிறது எனும் மெய்விவரம் குறித்து மனநிறைவைத் தெரிவிக்கும் சொற்றொடர்கள் மிளிர்வதைக் காணலாம். ஆனால் கலாசாரப் புரட்சியின் நடைமுறையில் வெவ்வேறு தேசங்களின் கலாசாரங்கள் சர்வதேசியத் தனி இயல்புகளைப் பெற்று விட்டன என்பதையும் நினைவில் கொள்ளுதல் வேண்டும். தேசிய வண்ணங்கள் அவற்றை எல்லா தேசங்களும் அறிந்து கொள்ள இயலுமாறு செய்துள்ளன. எனவே, கலையுருவிலான வெளிப்பாட்டின் தேசிய சாதனங்கள் தனிப்பட்ட தேசங்களை உலக கலாசாரத்துக்கு அறிமுகப்படுத்தும் சாதனங்கள் என்ற முறையிலும் மதிப்புக்குரியவை. இந்த உலக கலாசாரம் இந்த தேசங்களுக்கு மிகவும் புரிந்து கொள்ளக் கூடியதும் எளிதானதுமான வழியில் புகட்டப்படுகிறது.

2. சோஷலிஸ்டு தேசிய கலாசாரங்களின் வளர்ச்சியும் நல்லிணக்கமும்

சோஷலிஸ்டு தேசங்களின் கலாசாரம் எனப்படுவது, முந்திய சகாப்தங்களில் பரிணமம் பெற்றதான தேசியக் கலாசாரங்களின் ஜனநாயக மற்றும் சோஷலிஸ்டு இயல்புகளின் தொடராக்கமும் வளர்ச்சியுமாகும். ஆனால், இது பண்பில் புதியது, காரணம் ஒரு முழு அமைப்பு (ஆக்கக் கூறின் பின் ஆக்கக் கூறுக மட்டுமன்றி) என்ற முறையில் இது சோஷலிஸ்டு அமைப்பு நிலைமைகளில் தோன்றுகிறது.

சோஷலிஸ்டு நிர்மாணத்தின் செல்வழியில், தேசியக் கலாசாரங்களின் பரஸ்பரக் கிரியையும், பரஸ்பர ஊடுருவலும், பரஸ்பரம் செழுமையுறுவதும் மேலும் மேலும் தீவிரமாகியுள்ளன. அதோடு இது தன்மையிலும் புதியதே. இந்த மாறுதலுக்கான சக்திவாய்ந்த வாய்ப்பு, முற்போக்கு

கலாசாரத்தின் இயல்பிலிருந்தே புறவயமான வழிகளில் கிளைத்துருவாகிறது. முதலாளித்துவ சமுதாயத்திலுங்கூட வட்டார மற்றும் தேசிய அசாதாரணத் தன்மை அகற்றப் படும் பட்சத்தில் மக்களினங்கள் இடையே பல்வேறு பிணைப்புக்கள் தோற்றமளிக்கும். ஆனால் அங்கே தனிச் சொத்துடைமை அமைப்பில் உள்ளார்ந்து கிடக்கும் தேசிய வாதமும், குறுதேசிய வெறியும் பல்வேறு கலாசாரங் களை நெருக்கமாக இணைப்பதன் திசையிலான முற்போக்குத் தன்மையைத் தடுத்து நிறுத்தும். பூர்ஷுவாக்கள் ஒடுக்கப் பட்ட தேசங்களுடனான கலாசாரப் பிணைப்புக்களையும், தொடர்புகளையும், பலாத்காரமாகத் தன்வயப்படுத்து வதற்குரிய சாதனங்களாக, தமது கலாசாரங்களை ஒன்றிணைப் பதற்கான சாதனங்களாகவே பயன்படுத்துகிறார்கள். இந்தக் கலாசார பாரபட்சம் தேசியத் தனித்தன்மையைத் தோற்று விக்கிறது, ஒருவர் தமது கலாசாரத்தை "சுத்தமாக" வைத்திருக்கப் பாடுபடுகிறது. உண்மையான தேசிய கலாசாரங்களின் வளர்ச்சிக்கும் பரஸ்பரச் செழுமைக்கும் பாதகமாக முதலாளித்துவம் எந்தளவு முட்டுக்கட்டை போடுகிறது என்பதை வட்டார பூர்ஷுவாக்கள், நிலப் பிரபுத்துவ சக்திகள் மற்றும் சமய குருமார் "கலாசாரத்தின் தூய்மையை" பாதுகாப்பது எனும் சாக்குப் போக்கில் தமது பிற்போக்கு கலாசாரத்தை எந்த வழியில் பத்திரப்படுத்திக் கொள்கிறார்கள் என்பதிலிருந்து காணலாம்.

தேசியக் கலாசாரங்கள் மேலும் நெருங்கி இணைவதற்குப் பாதகமாக முதலாளித்துவம் எழுப்பும் பல முட்டுக்கட்டை களையும், பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் ஒரு புதிய சமுதாய அமைப்பை நிர்மாணிப்பது மூலம் மட்டுமே அகற்றிட முடியும். சோஷலிஸ்டு உறவுகள் வளர்ச்சியடைந்து கம்யூனிஸ்டு உறவுகளாக மலரும்போதில், கலாசார நெருங்கிணைவு தீவிரமடைகிறது. சோஷலிசமானது, தேசிய கலாசாரங்கள் ஒவ்வொன்றுக்கும் ஆக சாதகமான நிலைமைகளை உத்தரவாதம் செய்யும் அதே பொழுதில் அவற்றின் பரஸ்பர செழுமைக்கான விரிவான அடித்தளம்

இடுகிறது: நாட்டு மொழியில் பொதுக் கல்வி, உயர்கல்வி, விஞ்ஞானம், கலை மற்றும் இலக்கியத்தின் வளர்ச்சி, தேசிய அறிவுத் துறையினர் பெருக்கம், சோஷலிஸ்டு தேசங்கள் தேசிய இனங்களின் கலாசாரங்கள் பரஸ்பரம் செழுமை யுறுவது, அவை சமூக ரீதியில் மேலதிகமாயும் கருத்தொருமை யுறும்போது பொதுவான நலன்களையும் நோக்கங்களையும் ஏற்றுக் கொள்ளும்போது அதிகரிக்கிறது.

பொருளாயத கலாசாரம் கிட்டத்தட்ட முழுவதனதும், அகவள கலாசாரத்தில் (விஞ்ஞானம், விஞ்ஞான சித்தாந்தம் மற்றும் அடிப்படையில் உளவியல்) கணிசமான பகுதியினதும் சர்வதேசியத் தன்மை சோஷலிஸ்டு நிலைமை களில் குறிப்பாயும் வெளிப்படையாகும். சோஷலிஸ்டு வாழ்க்கை முறையானது சோவியத் மக்களின் அறநெறிகள், செயல்பாடு, நடத்தை மற்றும் ''புலனுணர்வு கலாசாரம்'' எனப்படும் சகலத்தையும் ஒரே தன்மையதாக்கி விட்டது. மற்றும் தேசிய முற்றொருமை வாழ்க்கைப் பாணியில், அன்றாட வாழ்க்கை முறையில், கலை வெளிப்பாட்டுத் துறையில் மற்றும் பல்வேறு தேசங்கள் தேசிய இனங்களின் மொழிகளில் மேலும் தெளிவாகக் காணப்படுமாதலால் நாம், இந்த அத்தியாயத்தில் தேசிய கலாசாரங்களின் முக்கியமாயும் கலை இலக்கியம் மற்றும் மொழித் துறைகளிலான பரஸ்பர கிரியை மற்றும் பரஸ்பர செல்வாக்குப் பற்றிப் பரிசீலிப்போம். இங்கு தேசிய அலாதித் தன்மையும் சர்வதேசியத்துடனான அவற்றின் தொடர்பும் பல மக்களினங்களின் அகத்துறை வாழ்வின் பொதுவான இயல்பும் எல்லாம் மேலும் தெளிவாகவும் அதிக முனைப்புடனும் பல்வகைத் தன்மையுடனும் ஓங்கி நிற்கக் காணலாம்.

சோவியத் தேசங்களின் கலாசாரம் தனியொரு சோஷலிஸ்டு பொருளாதாரம் மற்றும் சித்தாந்தத்தால் உருவாக்கப்படுகிறது. இதுவுந்தவிர கலைச்சுவையுடைய புலனறிவும் எதார்த்தம் பற்றிய பிரதிபலிப்பும் ஒற்றை முறையையே கடைப்பிடிப்பன. மக்கள் மனங்களிலான

பழங்கால மீதமிச்சங்கள் அகற்றப்பட்டுவிட்டன. அவர்களது சோஷலிஸ்டு சர்வதேசிய உணர்வு வலிமை பெற்றுவிட்டது. கலாசாரத்தில் சர்வதேசிய அம்சங்கள் அதிக முக்கியத்துவம் பெறுகின்றன. ஆனால் இது யாந்திரீகமான சமப்படுத்தலுக்கோ, தேசியக் கலாசாரத்தில் வெறுப்பூட்டும் ஒரே தன்மைக்கோ இட்டுச் செல்லவில்லை. மாறாக அவை முழு மலர்ச்சியுற்று பல்வேறு வழிகளில் வளர்ச்சியடைகின்றன.

கலாசாரங்கள் ஒன்று சேருவதும், பரஸ்பரம் செழுமையுறுவதும், வாழ்க்கைமுறைப் பாணிகள், வடிவப் பாங்குகள் மற்றும் விளக்கச் சாதனங்கள் பல்கிப் பெருகுமாறு செய்கின்றன. ஒவ்வொரு நாட்டின் கலாசாரத்தின் அருமையான சாதனைகளும் இதர தேசங்களின் உடைமையாகின்றன.

இப்போது, சோதர இலக்கியங்களின் ஆழமான சித்தாந்த மற்றும் படைப்பாற்றல் வகையிலான, பரஸ்பரச் செல்வாக்கும் செழுமையும், பல்தேசிய இன சோவியத் கலைகளின் எதிர்கால வளர்ச்சிக்கு இன்றியமையாத நிபந்தனையாகும். உண்மையான தேசிய கலாசாரம் பல்வேறு தேசங்களின் கலாசாரங்களின் விரிவான இடைச் செயல்பாடு மற்றும் பரஸ்பர செழுமையுறல் மூலமே அபிவிருத்தியடைகிறது என்பதை சோஷலிசம் தெளிவாகப் புலப்படுத்துகிறது.

சம காலத்தன்மை பற்றிய தீவிர உணர்வும் தேசியத் தன்மையில் சர்வதேசியப் பண்பு வலுப்படுவதும், தேசியத்தின் கருத்தினம் மாற்றமடைந்து வருவதையும் மேலும் செழுமையுற்றுத் திகழ்வதையும் நிதர்சனப்படுத்துகின்றன. தேசியத்தில் உள்ள முற்போக்கானதும் பயனுடையதுமான எதையும் கைவிடாமலே சோஷலிஸ்டு தேசங்களின் மக்கள் சோஷலிஸ்டு சகாப்தத்துடன் ஒரு புதிய உருவத் தகுதியைப் பெறுகிறார்கள். மக்கள் தமது பெற்றோர்களை ஒத்திருப்பதை விடவும் காலத்தை ஒத்திருக்கிறார்கள் எனும் முதுமொழியை இது எண்பித்துக் காட்டு

கிறது. தொடர்ச்சி என்பது பழைய கலாசாரத்தைக் கண்மூடித்தனமாக பின்பற்றுவதல்ல.

புதிய உலகின் குடிமகனின், புதிய அறநெறி கொண்ட குடிமகனின் பிறப்பு சோவியத் ஒன்றியத்தில் புரட்சிகர மறுநிர்மாணத்தின் ஆகப்பெரும் பின்விளைவேயாகும்.

தேசிய கலாசாரத்தை தொன்மையான வடிவங்களுடன் ஒன்ருக சேர்த்துக் காணும் போக்கு, தேசிய கலாசாரங்களை அபிவிருத்தி செய்து பரஸ்பரம் செழுமைப்படுத்துவது எனும் சோஷலிஸ்டு நடைமுறைக்கு தத்துவார்த்தத்தில் தவருனது, கேடுவிளைப்பதுங்கூட. இது தேசிய வாழ்க்கை முறை புரட்சிகரமாக மாற்றியமைக்கப்படுவதைப் படுமோசமாகப் புறக்கணிக்கும் செயலாகும். தேசத்தின் சோஷலிஸ்டு வாழ்க்கைக் கட்டமைப்பு புதிய தேசியக் கலாசாரத்தைத் தோற்றுவிக்கிறது. பழைய கலாசாரத்தின் வளர்ச்சியடைந்ததும் முற்போக்கானதுமான இயல்புகளை மட்டுமே இது வைத்துக் கொண்டிருக்கும்.

தொழில் நுணுக்க முன்னேற்றத்தையும் அகவள கலாசாரத்தையும் பிரித்துக் காண்பதும் எதிரெதிராக வைப்பதும் எப்படித் தவருே, அதேபோல அவற்றை ஒன்றெனக் கருதுவதும் தவறேயாகும்—பொதுவாக தொழில் நுணுக்கத்தின் வளர்ச்சியும், குறிப்பாக புதிய தகவல் சாதனங்கள் மற்றும் வெகுஜனப் பிரசார சாதனங்களின் (ரேடியோ டெலிவிஷன் இத்தியாதி) வளர்ச்சியும் ஒவ்வொரு சோஷலிஸ்டு தேசத்திலும் அளப்பரிய பல மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளன.

ஒரு தந்தைவழி பாணியை தேசியத்தின் அளவுகோல் என்று தேர்ந்து எடுத்து, நவீனமான அனைத்துக்கும் தேசியத் தன்மை இல்லை என்று மறுப்பது உண்மையில் எளிதே. ஆனுல் இது சமுதாய அபிவிருத்தியின் தேவைகளுடன் பெருமளவுக்குப் பொருந்துகிற காரணிகளை கணித்து மதிப்பில் எடுத்துக் கொள்ளத் தயங்குவதையே சுட்டும்.

எந்த ஒரு தேசத்தின் கலை இலக்கியத்தின் மரபு வழக்கும் பாணியும் ஒவ்வொரு சகாப்தத்திலும் தூய மாதிரியில்

இருத்தல் முடியாது. மாறுக, பல்வேறு மக்களினங்களின் கலாசாரங்களின் பரஸ்பரச் செல்வாக்கின் விளைவாகவே இருக்க முடியும்.

நிச்சயமாயும் தேசிய அடையாளம் உருவாகப் பல நூற்றுண்டுகள் பிடிக்கின்றன, ஆனுல் அது அபிவிருத்தி யடைகிறது, சமுதாய முன்னேற்றத்துடன் சமநடை போட்டு மேலும் அதிகச் செழுமை பெறுகிறது, இந்த முன்னேற்றம் இதற்குப் புதிய உள்ளடக்கத்தைத் தருகிறது. கலாசாரத்தில் தேசிய கலாசாரம் முதலாவதாயும் முக்கிய மாயும், குறிப்பிட்ட சகாப்தத்தால் நிர்ணயிக்கப்படுகிறது. இதன் கீழ் பழமையின் ஆக்கபூர்வமான மரபுகளும் நிகழ் காலத்தின் சாதனைகளும் தீவிரமாகப் பரஸ்பரம் செயல்படு கின்றன. சோஷலிஸ்டு கலாசாரத்தில் தேசிய அலாதித் தன்மைகள் களையப்படுவதில்லை. ஆனுல் பழமையை வலியுறுத்தி அல்லது செயற்கையாக மிகைப்படுத்துவதும் சோஷலிஸ்டு தேசங்களின் வளர்ச்சி சம்பந்தப்பட்ட தத்து வத்திற்கோ நடைமுறைக்கோ நன்மை பயப்பதல்ல. தேசிய கலாசாரம் என்று முற்றிலும் மனித இன இயல் நாடோடி இலக்கிய இயல்புகளைச் சுட்டுவதோ, ஆகப் பழையது ஆகச் சிறந்தது என்று கருதுவதோ சரியல்ல. வி. ஜி. பெலின்ஸ்கி கூறியபடி, ஒவ்வொரு சகாப்தமும் தனது சொந்தக் கருத்துக்களை மட்டுமின்றி அதற்கே உரிய தான கலை வடிவங்களையும் பிறப்பிக்கிறது என்பதை சோவியத் கலாசாரம் உறுதிப்படுத்திவிட்டது.

தமது சொந்த வரலாற்று அனுபவத்திலிருந்தும், இதர மக்களினங்களின் அனுபவத்திலிருந்தும் படிப்பினை பெற்ற சோஷலிஸ்டு தேசங்கள், தமது புதிய உள்ளடக்கத்துக்கு இசைவிணக்கமான, தெளிவான, செழுமையான வடிவங் களிலான தேசிய கலாசாரத்துக்காகப் பாடுபடுகின்றன.

ஒவ்வொரு தேசம் மற்றும் தேசிய இனம் தனது முன் மாதிரியான படைப்பாற்றல் திறன் மற்றும் அனுபவம் கொண்டு அதன் கலாசாரத்தை நிர்மாணித்துக் கொள்கிறது.

இதுவே கலாசாரத்தின் தேசிய அடையாளத்தைப் பேணிவைத்துக்கொள்ள உதவுகிறது. இது தனிச்சிறப்புடன் இருப்பதற்குக் காரணம், இதர கலாசாரங்களின் செல்வாக்கிலிருந்து பகட்டுக்காகத் தப்பித்துக் கொள்வது அல்ல (கடந்த காலத்தில்கூட இது நடக்கவில்லை). மாறாக, எல்லா மக்களினங்களின் கலாசார சாதனைகளையும் ஈர்த்துக் கொள்ளும் அதே பொழுதில், சித்தாந்த ரீதியிலும், அழகியல் அடிப்படையிலும் தன்னைத் தானே செழுமைப் படுத்திக்கொள்ளும் அதே பொழுதில், அது கலை மற்றும் இலக்கியத்தின் பல வடிவங்களிலும் வகைகளிலும் தனது அலாதியான மரபு வழக்கை உண்டாக்குகிறது.

ஒரே தேசத்தைச் சேர்ந்த கலைஞர்கள் உலகை வெவ்வேறாகக் காண்பது சாத்தியம் என்பது நமக்குத் தெரியும். உண்மையில் பொதுவான தேசிய சமுதாயச் சூழலிலிருந்து கிளைக்கும் ஒரே மாதிரியான இயல்பு அவர்கள் சித்தரிக்கும் விஷயங்களிலான தோரணையிலும் மதிப்பீடுகளிலும் இருக்கலாம். ஆனால் இது ஒரு தேசியக் கலைஞனின் படைப்பாற்றல் தனிச்சிறப்பின் ஆக்கக்கூறுகளில் ஒன்று மட்டுமே. தேசிய முற்றொருமையை ஏதோ சுய உரிமைத்தன்மையுடைய மருட்டும் தேசிய உணர்விலிருந்து கிடைக்கப் பெறும் அலாதித்தன்மையாகக் கருதிப்பார்க்கக் கூடாது.

எந்த ஒரு தேசமும் தேசிய கலாசாரமும் முற்றமுழு சுய சார்புத்தன்மையில் இருந்தும், இதர தேசங்கள் மற்றும் கலாசாரங்களை புறக்கணித்தும் என்றுமே அபிவிருத்தி அடைந்தது கிடையாது.

பழமைசால் மரபுகள் தவிர வேறு எதற்கும் நிபந்தனையற்ற விசுவாசத்தை ஊக்குவித்து வராத, தேசிய அலாதித் தன்மை பற்றிய பழமை வாதக் கருத்து, தேசியக் கலாசாரங்கள் பற்றிய அடிப்படையான ஒவ்வாமையை அனுமானிக்கிறது. மற்றும் அவற்றின் இடைச் செயற் பாட்டையும் பரஸ்பரச் செழுமையுறலையும் எதிர்க்கிறது.

தேசியக் கலாசாரத்தின் விரிவான தீர்க்கமான செயல், எதிர்ச்செயல், சோஷலிஸ்டு சுற்றுச் சூழலில் குறிப்பாயும் எடுப்புடன் காணப்படுகிறது. சோஷலிஸ்டு தேசங்களின் கலாசாரங்களில் நிலவும் அலாதிச் சிறப்பின் பிரதானக்கூறு, காலத்தைப் பற்றிய அவற்றின் படைப்பாற்றல் தன்மை வாய்ந்த சுயேச்சையான சக்தி வாய்ந்த குடிமைப் புலனறிவும், நிகழ்காலத்தின் சித்திரத்தைப் பொருளறிவதற் கான நாட்டமும், மனிதகுலத்தின் வரலாற்று வளர்ச்சியின் நீரோட்டத்தில் ஆக முக்கியமானதைத் தேடிக்காணும் தேர்ச்சியும் ஆகும்.

வாஸ்தவத்தில் எந்த ஒரு மெய்யான அலாதித்தன்மை யுடைய தேசியக் கலாசாரமும் எல்லா மக்களினங்களுக்கும் பொருத்தமானது. காரணம் இது மூடிக்குறுகிய மனித இனக் கட்டுக்கோப்புக்குள் படைக்கப்படவில்லை. மாறாக, கலாசாரங்களைச் செழுமைப்படுத்துவதன் வாயிலாக சர்வதேசியவாதம், மனிதநேயம் மற்றும் சர்வதேச நட்புறவு எனும் கருத்துக்களிலிருந்து பிழிந்தெடுத்து உருவாக்கப் பட்டதாகும். இதுவே சர்வதேசிய கலாசாரத்தை சாத்திய மாக்குகிறது. ஏனெனில் இது தேசிய வாழ்வின் ஜனநாயக மற்றும் சோஷலிஸ்டு இயல்புகளை வெளியிடும் தேசியக் கலாசாரம் ஒவ்வொன்றிலும் காணக்கிடக்கிறது.

ஒரு நபர் எந்த ஒரு தேசிய இலக்கிய மற்றும் கலைச் சிறப்புடைய மொழியையும் கற்றுக் கரை காணலாம், மற்றும் புரிந்துகொள்ள இயலும், அதன் சித்திரங்கள் கற்பனைகளை மனதில் வாங்கிக் கொள்ளலாம், அந்த மொழி பேசும் மக்களுக்கே உரித்தான சிந்தனைகளையும், உணர்ச்சிகளையும் உய்த்துணரலாம்; அவனோ ஒரு நூலாசிரியனாகி பிரத்தியேக மான "தேசிய உணர்வோ" உள்ளே பிறந்த தேசிய உணர்ச்சிகளோ இல்லாத நிலையில் அந்த மொழியில் எழுதலாம், எந்த ஒரு தேசத்தினதும் வண்ணங்கள், ரேகைகள் மற்றும் ஒலிகளின் மொழியைப் புலனால் அறிவது மட்டு மின்றிப் புரிந்து கொள்ளவும் கூடும். அவற்றின் முன் மாதிரியான தொனியின் தேசிய கூட்டிசையைப் புரிந்து

கொள்ளலாம், அதுமட்டுமின்றி அந்த ''மொழியின்'' வாயிலாக கலாசாரத்தைச் செழுமைப்படுத்தலாம், இதைச் செயலூக்கமுடனும் வெற்றிகரமாகவும் நடத்தலாம். மானுடக் கண்பார்வையும் கேட்கும் ஆற்றலும் ''அறிவாளி யின்'' புலன்கள் எனவும், எல்லையற்ற வீச்சுடையது எனவும் கூறப்படுவதுண்டு. ஆனால் இது பிரத்தியேகமான தேசிய சமூகச் சூழலில் வளர்ந்து வரும் மக்கள் தமது வழக்கமானதும் அதிகப் பரிச்சயமுடையதுமான கலைக்கு எது உற்றார் உறவினராக இருக்கும் என்பது குறித்துத் தமது பிரதிபலிப்பில் மேலதிகமாக உணர்ச்சி வசப்படுவர் என்ற உண்மையை ரத்துச் செய்துவிட முடியாது. இத்தகைய கலையின்பால் அவர்களுக்கு மேலும் ஆழமான மெய்யுணர்வும் மதிப்பும் உண்டு.

ஆயினும் தேசியக் கலாசாரங்களின் முழுமையான ஊடுருவல் மற்றும் பரஸ்பர செழுமையுறலின் புறநிலை இயக்கமே, கலையில் தேசியத் தன்மை என்பது ஒரு தேசத்தை அந்தக் கூறளவில் கட்டுப்படுத்தி இன்னொரு தேசத்திட மிருந்து இனங்காணவும், அந்த தேசத்துக்கு மட்டுமே அசாதாரணமாக இருப்பதுமான ஒன்றல்ல என்பதை விளக்கு கிறது. தேசியம் எனும் கருத்தினத்திடமிருந்து பிரதானக் கூறுகளான சர்வதேசியக் கூறுகளை விட்டுவிடுவோமானால், அதனை வடிவம் அளவுக்குக் குறுக்கிவிடுவோம். அதோடு இந்த வடிவின் தற்செயலானதும் தற்காலிகமானதுமான வெளிப்பாடுகள் அளவுக்குக் குறுக்கிவிடுவோம்.

எந்த ஒரு மக்களின் வரலாற்று அனுபவத்திலும் சரி, அது தன்னகத்தே ஈர்த்து இணைத்துள்ள இதர மக்களினங் களின் சாதனைகளும் உட்படும். பல்வேறு தேசங்களில் உள்ளடக்கமாகக் காணப்படும் பொதுவான கூறுகளை ஆராய்வதும் அடையாளம் காண்பதும் அவற்றின் அலாதித் தன்மையைக் குறைவுபடுத்தாது. இதற்கு மாறாக பொதுவான சாதனைகளால் உருவாக்கப்பட்ட அசல் தன்மையை இது வலியுறுத்த உதவும். சம்பந்தப்பட்ட மக்களால் பொதுவாக எல்லோருக்குமாக வழங்கப்பட்ட

அந்த தனிச்சிறப்புடைய இயல்புகளை இது வலியுறுத்தும். ஒரு தேசத்தை அது உண்மையில் எப்படி இருக்கிறதோ அப்படியே காண்பதற்கான ஒரே வழி, அதன் வடிவ அமைப்பில் உள்ள பொதுவும் பிரத்தியேகமுமான (தனி இயல்பை அல்ல) இரு அம்சங்களையும் முறையே நிர்ணயம் செய்வதேயாகும்.

தனிப்பட்ட படைப்புக்கள் எப்படி அவற்றை ஆக்கியோரின் சாமான்யமான "சுயவெளிப்பாடு" ஆகாதோ எவ்வாறு புற உலகிலிருந்து தன்னிச்சையாக எழும் "தூய உணர்வின்" விளைவு ஆகாதோ அதே போன்று, ஒரு தேசத்தின் கலை அதன் கலாசாரம் என்பவை ஏதோ சில கட்டுப்படுத்தப்பட்ட அசாதாரணமான தேசிய உணர்வின் "சுயவெளிப்பாடு" ஆகாது.

இன்னொரு தேசத்தின் வாழ்வில் கலையுருவில் ஊடுருவ வேண்டுமாயின் அதற்கு சமுதாய வளர்ச்சியின் பிரத்தியேக கட்டத்திலான தேசிய பிம்பத்தின் சர்வப்பொதுவான வாழ் நிலைகுறித்த தீர்க்கமான ஒரு மதிப்பு அவசியம். இன்னொரு தேசத்தின் கலாசார அனுபவத்தைப் பின்பற்றுவதோ, நடை பாணி மற்றும் கற்பனைச் சித்திரத்தின் புறத் தன்மைகளைப் பற்றி நடத்தலோ, கலாசாரத்தில் கிடக்கும் உண்மையான தேசியப் பண்பைப் புரிந்து கொள்ள உதவாது, மாறாகத் தடைப்படுத்தும்.

தேசிய வடிவம் பற்றிய மேலோட்டமான புலனறிவானது, தமது கதாநாயகர்களின் தேசிய உளவியலின் அசாதாரணத் தன்மையை எடுத்துக்காட்ட விரும்பும் சில எழுத்தாளர்களை வெறும் நையாண்டிகளை மட்டுமே உருவாக்க இட்டுச் செல்கிறது. இதற்குக் காரணம் இவர்கள் புறவயமான அயற்பண்புடைய தன்மைகளைச் சித்திரிப்பது வாயிலாகக் கதாநாயகனின் தேசிய இயல்புகளை எடுத்துக்காட்ட முயல்வதுதான். பல்வேறு தேசங்களின் எழுத்தாளர்களும் கலைஞர்களும் பலமுறை தேசியத் தன்மையின் மனித இன இயல் கிராமியப் பாடல்

கருத்துருவை எதிர்த்தே வந்திருக்கிறார்கள். எடுத்துக் காட்டாக பிலோ ருஷ்யன் கவியான மாக்சிம் டான்க் சோவியத் எழுத்தாளர்களின் நாலாவது காங்கிரசில் கூறியதாவது: "பிலோ ருஷ்யன் கவிதையானது தனது அலாதித் தன்மையைத் தன்வசம் வைத்துக் கொண்டே எமது விமர்சகர்கள் சிலர் இன்னும் இதை மரபான கட்டைக்குழல் ஊதும் கிராமத்துச் சிறுமியின் வேடமிட்டே காட்டிய போதிலும், மேலும் அதிக அறிவாற்றலுடையதாகவும் உலகுதழுவியதாகவும் மாறி வருகிறது."*

யாகுத் வசன எழுத்தாளர் எஸ். தானிலவ், அயற் பண்புக்குப் பாராட்டுரை தரும் சில நூலாசிரியர்கள் நீண்டகாலமாக மறந்தொதுக்கிவிட்ட ஷமான்களை புதுப்பிக்க முயல்கிறார்கள். மற்றும் இவை எல்லாம் இன்றைய வாழ்க்கையிலிருந்து வெகுதொலைவில் விலகிக்கிடப்பதையும், அவை சித்திரிக்கும் "தேசிய மாதிரிகள்" இப்போது கடுமையான வடக்குப் பிராந்தியங்களை மாற்றியமைத்து காலத்தின் வேகத்துக்கு ஏற்ப வாழ்ந்து வரும் மக்களைச் சிறிதளவும் ஒத்திருக்கவில்லை என்ற உண்மையைக் காணாமல் இருப்பதையும் குறை கூறியுள்ளார்.

தமது தேசியக் கரை வரம்பில் மிக நெருக்கமாக இருக்க முயலும் கலைஞர்கள் உண்மையில் அவற்றில் இருந்து விலகியே செல்கிறார்கள், காரணம் சோஷலிஸ்டு தேசங்களில் புதிய பிரத்தியேகமான அம்சங்கள் தோன்றி விட்டன. காலாவதியாகிப் போன வடிவங்கள்கூட இனிமேல் ஏற்கப்படமாட்டா. ஒரு காலத்தில் கலைச்சிறப்புடைய படைப்புகளாக இருந்த வீர காவியங்கள் இப்போது கிராமியப் பாடல் பயிலும் சில மாணவர்களால் தூண்டப்பட்ட சில கதை சொல்வோர் புதிய சோஷலிஸ்டு சகாப்தத்தில் கதைப் பொருள்களையும், கதையமைப்புகளையும் எடுத்துரைப்பதில் வீரகாவியத்தின் வடிவத்தினைக் கையாள முயல்வதன் காரணமாக இன்று வெற்றுரவாரடப்பாக்களாகக் காணப்படுகின்றன.

---

* லித்தரதூர்னயா கசேத்தா, மே 31, 1967.

கலாசாரங்களின் தீவிர செயல் எதிர்ச்செயல் மற்றும் பரஸ்பரச் செழுமைப்பாடு காரணமாக சர்வதேசிய மற்றும் அகில-சோவியத் கூறுகள் தேசிய வடிவங்களையும் சேர்த்து அரவணைத்துக் கொண்டிருக்கின்றன. எடுத்துக்காட்டாக மத்திய ஆசிய தேசங்கள் தகெஸ்தான் மக்கள் மற்றும் இதர தேசிய இனங்கள் இதர தேசங்கள் தேசிய இனங்களுடனுன கலாசார ஒத்துழைப்பின் பலனாக, பல குரல் ஓர் இசைப் பாடுதல், பாலே நடனம், வசனம் மற்றும் நாடகம் எழுது வதை உருவாக்கி வளர்த்தன. அருங்கலைகளின் வேறுபல பாணி வகைகளான நிலைச்சட்ட ஓவியம், வரையுருவக் கலைகள், சிற்பம் போன்றவற்றையும் ஏற்றுப் பயன்படுத்து கின்றனர். இதர மக்களினங்களின் கலாசார சாதனைகளைப் பயன்படுத்துவது, இயல்பாகவே, தேசிய வாழ்க்கையை சித்திரிக்கும் வழிவகைகளை விஸ்தரித்தது. இதற்கும் மேலாக, இந்த தேசிய வாழ்வு இதன் மூலம் இதர சோதர மக்களினங் களுக்கு மேலும் நன்றாக அறிமுகமாயிற்று. பல்வேறு தேசங் களைச் சேர்ந்த கலைஞர்கள் சோவியத் மக்களின் பல்தேசிய இன கலாசாரத்தையும் உலக கலாசாரத்தின் சாதனை களையும் உட்கவர்வது மூலம், அவர்களது தேசியப் பண்பு சற்றும் குறைவதில்லை. இதற்கு நேர்மாறான தன்மையே நிலவுகிறது. தமது சொந்த தேசியப் பகைப்புலனிலேயே உலகளாவிய மானுடப் பண்பினைச் சித்திரிப்பதற்கு இது அவர்களுக்கு மேலும் கூடுதல் அறிவாதாரங்களை தருகிறது. அவர்கள் தொடர்ந்து தேசிய கலைஞர்களாகவே இருப் பார்கள். ஆனல் இனி எப்பொழுதும் தேசிய வரம்புக்குள் கட்டுப்பட்டிருக்க மாட்டார்கள்.

சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சியின் வேலைத்திட்டம் கூறுவதாவது: ''சோவியத் ஒன்றியத்தின் மக்களினங்களின் கலாசாரங்களின் சோஷலிஸ்டு உள்ளடக்கத்தின் அபி விருத்திக்கு தீர்மானகரமான முக்கியத்துவம் அளிக்கும் கட்சியானது, அவற்றின் வருங்காலத்திய பரஸ்பர செழுமைப்பாட்டையும் இசைவிணக்கத்தையும் மேம் படுத்தும், அவற்றின் சர்வதேசிய அடித்தளத்தை வலுப்

படுத்தும், அதன் மூலம் எதிர் காலத்திற்குரிய கம்யூனிஸ்டு சமூக அமைப்பின் தனியொரு உலகு அளாவிய கலாசாரத்தை உருவாக்கும்.''*

தேசியக் கலாசாரங்களின் இடைச் செயற்பாடும் பரஸ்பர செழுமைப்பாடும் ஒவ்வொரு மக்களின் அபிவிருத்தியையும் அகவள வளர்ச்சியையும் விரைவுபடுத்தும். மற்றும் மக்கள் எந்தளவு மிகவும் உயரிய வளர்ச்சியடைந்திருக்கிறார்களோ அந்த அளவுக்கு அவர்களது கலாசாரம் செழுமையுடையதாயும் பல்வகைப்பட்டதாயும் விளங்கும் என்பதை நாம் அறிவோம். கலாசார சாதனைகளின் பரஸ்பரப் பரிமாற்றம் எல்லா மக்களினங்களையும் செழுமைப்படுத்தும். இது சோவியத் ஒன்றியத்தின் மக்களினங்களின் இடை உள்ளபடியே நிலவிய அசமத்துவத்தை அகற்றி ஒழிக்க உதவியது, மற்றும் அவர்களது தேசியக் கலாசாரங்கள் வேகமாக வளர்ச்சியுறுவதை உத்தரவாதம் செய்தது.

விசேஷமான தேசிய இயல்புகள் இருந்த போதிலும் எல்லா சோஷலிஸ்டு தேசங்கள் மற்றும் தேசிய இனங்களின் மக்கள் பிரதானமும் அடிப்படையானதுமான எல்லாவற்றிலும் பொதுவான சர்வதேசிய இயல்புகளைக் கொண்டவர்களாக இருக்கிறார்கள். இந்த சர்வதேசிய இயல்புகள் தேசிய உடைமையாகிவிட்டன. எடுத்துக் காட்டாக அவர்களது அகவள உலகின் இந்த இசைவினை சுரண்டலாளர் மனோ தத்துவம் சோவியத் மக்களுக்கு அறவே அன்னியமானது என்ற மெய்நடப்பில் காணலாம்.

சோவியத் தேசங்களின் கலாசாரம் எல்லா தேசங்களினதும் ஆக உயர் வளர்ச்சியடைந்த கலாசாரத்தின் மேலும் மேலும் அதிகமான சர்வதேச அம்சங்களை உட்கவர்ந்து இருக்கும். இது வேறுபட்ட தேசங்களின் மக்களினங்கள் மத்தியில் ஒரே மாதிரியான இயல்புகள் அதிகரித்து வருவதையும், அவர்கள அகவள ஒழுங்கமைப்பின் கூட்டுத்தன்மையையும் பிரதிபலிக்கும்.

---

* கம்யூனிசத்திற்கான பாதை, பக். 561-62.

3. தேசியக் கலாசாரத்தின் உருவம் மற்றும் உள்ளடக்கத்தின் இயக்கவியல்

ஒரு தேசத்தின் கலைச்சிறப்புடையதான கலாசாரம் அந்த தேசத்தின் வாழ்க்கையை உய்த்தறிந்து பிரதிபலிப்பதற்கான வடிவங்களில் ஒன்ருகும். ஆனுல் அது ஓரளவுக்கு சுயேச்சையும், அதன் சொந்த உள்ளடக்கமும் உருவமும் கொண்டதாக இருப்பதால்—சோஷலிஸ்டு தேசத்தின் வாழ்நிலையிலான பொதுவும் பிரத்தியேகமானதுமான அம்சங்கள் வேறு சொற்களில் கூறிடின்—சர்வதேசிய மற்றும் தேசிய அம்சங்கள் அதன் கலைச்சிறப்புடைய கலாசாரத்தின் உள்ளடக்கத்திலும் உருவிலும் பிரதிபலிக்கின்றன.

உள்ளடக்கத்தில் சோஷலிஸ்டு மற்றும் உருவத்தில் தேசியம் எனும் கருத்தினத்தின் சிக்கலான இயக்கவியலைக் காட்டுவதற்குப் பதில் சிலசமயம் இது சமுதாய மட்டத்தில் மட்டுமே எடுத்துக் கவனிக்கப்படுகிறது,அதேபோதில் இதற்கு இணையான சூத்திரமான ''கலைச்சிறப்புடைய உள்ளடக்கம், கலைச் சிறப்புடைய உருவம்"என்பது,கலாசரத்தின் அழகியல் துறைக்கு முன்வைக்கப்படுகிறது. கலை மற்றும் இலக்கியப் படைப்புக்களின் உள்ளடக்கத்தையும் உருவத்தையும் கலைச் சுவை ஓர் நிலையில் இருந்து ஆராய்வது நிச்சயமாயும் அழகியல் பகுப்பாய்வின் முறைகளில் ஒன்ருகும். ஆனுல் தேசிய கலைச்சிறப்புடைய கலாசாரம் விஷயத்தில் அதன் சோஷலிஸ்டு உள்ளடக்கத்தில் தேசியக் கலைச் சிறப்பைத் தனிப்பிரித்துக் காணச்செய்யப்படும் முயற்சிகள், சோஷலிஸ்டு மற்றும் தேசிய உள்ளடக்கங்களை நியாயமின்றி எதிரெதிராக நிறுத்துவதில் போய் முடியும். இந்தக் கூறுபடுத்தும் செயல் தேசியக் கலாசாரத்தில் சமுதாய மற்றும் அழகியல் துறைகளிடையான உயர்த்துடிப்பான பிணைப்புக்களை அழிக்கிறது. அவற்றின் பரஸ்பர ஊடுருவலின் இயக்கவியலை நாசமாக்குகிறது. நிச்சயமாயும் உலகக் கண்ணேட்டமே கலையின் (பொதுவாகக் கலாசாரத்தின்) மையக்

கூறுகும். ஆனுல் கலேயின் உள்ளடக்கத்தை முற்றிலும் அதன் சித்தாந்த அடிப்படைக்குள் ஒடுக்கிவிடுவது என்று அர்த்தமல்ல. இதன் அஸ்திவாரத்திலும் அழகியலின் வகையினங்களால் பிரதிபலிக்கப்படும் சகலமும் (அழகானது, உன்னதமானது இத்தியாதி) அடக்கம்.

கலேயின் சோஷலிஸ்டு உள்ளடக்கத்தைக் கலேஞன் மார்க்சிய-லெனினிய உலகக் கண்ணேட்டத்தின் அடிப் படையில் பொதுப்பட அன்றி, மாருக சோஷலிசத்தின் சமூக-அழகியல் லட்சியங்களுக்குத் தக்கபடி தேசியக் கலே வடிவங்களில் வெளிப்படுத்துகிருன். சர்வதேசியக் கூறுகளின் இந்த வடிவங்களில் மேலதிகமாக ஊடுருவிப் பரவுவது என்பது அசல் சர்வதேசிய கம்யூனிஸ்டு கண்ணேட்டம் போலவே, சம்பந்தப்பட்ட மக்களின் கலாசாரத்தில் உட்கவரப்படும் சர்வதேசியம் அதன் தேசிய உடைமை யாகிறது என்றே பொருள்படும். இந்த வடிவம் தேசியம் என்றும் கலேத் தன்மையுடையது என்பதாகவும் கருதும் எந்த ஒரு பிளவையும் குறிப்பிடவில்லே. உள்ளடக்கத்தின் அகக் கட்டுமானம் என்ற முறையில் வடிவம் ஒரு தேசம் அல்லது தேசிய இனம் முழுவதன் சோஷலிஸ்டு வாழ்க்கையைப் பிரதிபலிக்கிறது (வெறும் விளம்பரமான சகவாழ்வு வாழும் கூறுகளாக அல்ல, மாருக தனிப்பிரிந்த சர்வதேசிய மற்றும் தேசியக் கூறுகள் என்று) உள்ளடக்கத்தை முழு நிறைவுடையதாக்குகிறது, எதார்த்தத்தை ஓர் ஒன்றிணேந்த சாதனேயாகவும் தேசிய சர்வதேசிய அம்சங் களின் ஒற்றுமையாகவும் சித்திரிக்கிறது.

வடிவமானது ஒரு கலேப் பொருளின் (பிம்பமும் தன்மைகளும்) உள்ளடக்கத்தின் கட்டுமானக் கூறுகளுக்கு இடையிலான புறநிலே உறவுகளேயும் இடைத் தொடர்பு களேயும் பிரதிநிதித்துவப்படுத்துகிறது என்ற அளவுக்கு, அது இயல்பாயும் எதார்த்தத்தின் பிரத்தியேகமான தேசிய இயல்புகளேயும் வெளிப்படுத்துகிறது.

சோஷலிஸ்டு கலாசாரத்தின் உள்ளடக்கத்தில் ஒவ்வொரு தேசத்தின் முழுமையான உயிர்க்கூறுன கலாசாரச் செல்வமும் அடங்கியிருக்கிறது. இது தேசிய கலாசாரங்களின் படைப்பாற்றல் செல்வாக்கிலிருந்து விலகி, சுயேச்சையாக நிற்கும் கருத்தியலான சோஷலிஸ்டு உள்ளடக்கமல்ல. மேலும் இது எல்லா தேசங்களாலும் உருவாக்கப்படுகிறது. இது சர்வதேசியத் தன்மை கொண்டது. ஆனுல், வெவ்வேறு தேசங்கள் நிலவும் காலம் வரை சோஷலிஸ்டு உள்ளடக்கம் வெவ்வேருன தேசிய வடிவங்களில் அமைக்கப்பட்டு வெளியிடப்படும். இந்த வடிவங்கள் வளர்ந்து மேம்பாடடைந்து இந்த உள்ளடக்கத்தின் வழிகாட்டும் செல்வாக்கின்கீழ் சர்வதேசியக் கூறுகள் மூலம் செழுமையடையும்.

இந்த உள்ளடக்கம் அதன் பங்குக்கு, சர்வதேசிய மயமாதலை எளிதாக்கியும் வெவ்வேறு தேசிய வடிவங்களின் மதிப்புக்குரிய அம்சங்களைப் பரப்புவது மூலமும் உதவி புரிகிறது. இதனுல்தான் உள்ளடக்கம் உருவம் இவற்றின் இயக்கவியல் ஒற்றுமை குலைக்கப்படுவதில்லை. தேசங்களின் சாரத்தில் ஏற்படும் அடிப்படையான மாறுதல்களால் இது உத்தரவாதம் செய்யப்படுகிறது. இவை சோஷலிஸ்டு தேசங்களாக மாறிவிட்டன. இதன் விளைவாக ''சோஷலிஸ்டு உள்ளடக்கமும் தேசிய உருவமும் கொண்ட கலாசாரம்'' எனும் சூத்திரம் கலாசாரத்தின் கருப்பொருள், கலை, இலக்கியத்தின் புறப்பொருள் போலவே தனிநபர், அவரது சமுதாய உறவுகள் மற்றும் சோஷலிஸ்டு எதார்த்தம் ஒட்டு மொத்தமாக — அடிப்படையிலேயே மாற்றமடைந்திருக்கிறது எனும் முக்கியமான வரலாற்று உண்மையை வெளிப்படுத்துகிறது. தேசியக் குடியரசுகளிலுள்ள சோவியத் எழுத்தாளர்கள் படைப்புக்களில் காணப்பெறும் உரைபொருள், அவற்றின் பல்வகைத்தன்மை இருந்தபோதிலும் ஒன்றுகவே உள்ளது (விவசாயத்தில் கூட்டுமுறை தொழில் வளர்ச்சி, கலாசாரப் புரட்சி, மாபெரும் தேசபக்த யுத்தம் இத்தியாதி). ஆயினும் ஒரு பொதுவான சோஷலிஸ்டு

சித்தாந்தக் கோணத்தில் இருந்து சித்திரிக்கப்படும் இவற்றில் தேசியச் சிறப்பியல்புகள் இல்லாது போகவில்லை. ஏனெனில் சோஷலிஸ்டு உள்ளடக்கம் என்பது சோவியத் ஒன்றியத்தின் எல்லா மக்களினங்களினதுமான தேசிய வாழ்நிலையின் சாரமாகத் திகழ்கிறது.

உள்ளடக்கம் மற்றும் உருவத்தின் இயக்கவியல் ஒற்றுமையையும் இடைச் செயற்பாட்டையும் குறிப்பிடு கிறது, அப்பட்டமான நேரடி பரஸ்பரச் சார்புத்தன்மையை அல்ல, ஏனெனில் உருவம் தேசியத் தன்மையுடன் இருப்ப தால் உள்ளடக்கமும் தேசியத் தன்மையதாகவே இருக்க வேண்டும் என்று நாம் கூறமுடியாது.

''உருவிலும் உள்ளடக்கத்திலும் தேசியத் தன்மை கொண்ட கலை'' எனும் சூத்திரம், உருவமும் உள்ளடக்கமும் ஒற்றுமையில் அடங்கியவை எனவும், உருவம் உள்ளடக் கத்தைச் சார்ந்து நிற்கும் எனவும், கற்பிதம் செய்து கொள்ளும் அளவுக்கு மட்டுமே, மேலோட்டத்தில் இயக்க வியல் தன்மையுடையதாகத் தோன்றும். ஆனால் உண்மை யில் இது கலைகளின் பிரதான நிபந்தனையை—அமைப்பின் வர்க்க சாரத்தைப் புறக்கணிக்கிறது.

இது கலையை கலை சார்ந்த உள்ளடக்கமும் கலைசார்ந்த உருவமும் கொண்ட, கருத்தியலான இணைப்பாகவே கருது கிறது. சமுதாய உணர்வின் ஒரு வடிவம் என்ற முறையில், கலைக்கு சமுதாய மூலாதாரம் இருக்கிறது என்பதையும், அது அறிந்துணர்தல் சித்தாந்தம் மற்றும் அழகியலின் ஒற்றுமையை உருவாக்குகிறது என்பதையும் இது பாராது விட்டுவிடுகிறது. இருப்பினும் கலையை அறவே அழகியலின் பக்கம் இருந்து பார்த்தல் கூடாது, ஏனெனில் அழகியல் தன்னுள் மட்டுமே அடங்கிக் கிடப்பதல்ல, மாறாக வாழ்க் கையுடன் ஆயிரம் இழைகளால் பிணைந்து கிடப்பது.

அதோடு சமுதாய உணர்வின் வடிவங்களில் வாழ்க்கையைப் பிரதிபலிப்பதுமாகும்.

சோஷலிஸ்டுப் பண்பு ஒவ்வொரு மக்களின் வாழ்க்கையிலும் தேசிய உடமையாக மாறுகிறது. இதன்படி அது தேசிய கலாசாரத்தின் உள்ளடக்கத்தில் பிரதிபலிக்கிறது. தேசங்களின் கலாசாரங்களில் உள்ள தேசிய மற்றும் சர்வ தேசியக் கூறுகள் சகவாழ்வு மட்டும் வாழ்வதில்லை, ஆனால் ஓர் இயக்கவியல் ஒற்றுமையாக உருப்பெறுகின்றன. தேசங்களின் வாழ்க்கையிலான முற்போக்கு அம்சங்களின் பிரதிபலிப்பு என்ற முறையில், கலையின் சோஷலிஸ்டு உள்ளடக்கம் முழுதுமே சர்வதேசக் கலாசாரத்தின் ஒரு பாகமாகும். ஆனால் அது சம்பந்தப்பட்ட தேசியக் கலாசாரத்தின் பராதீனப்படுத்தவியலாத செல்வமாகவும் விளங்குகிறது. வேறு சொற்களில் கூறப்புகின் ''சோஷலிஸ்டு உள்ளடக்கமும் தேசிய உருவமும்'' எனும் சூத்திரம் உள்ளடக்கம் மற்றும் உருவத்தின் ஒற்றுமையை வெளிப் படுத்துகிறது.

சோஷலிஸ்டு தேசங்களின் கலாசாரத்தின் உள்ளடக்கம், சர்வதேசியத் தன்மை வாய்ந்தது, எல்லாவற்றுக்கும் பொதுவானது மற்றும் அது கலாசாரத்தின் ஒவ்வொரு தேசிய உருவத்துடனும் ஒற்றுமையை உருவகப்படுத்துகிறது. இது பொதுவும் குறிப்பிட்டதுமான இரண்டின் இயக்க வியலுக்கும் ஒரு கூடுதல் சான்று ஆகும். தனிப்பட்டது அல்லது குறிப்பிட்டது என்பதும் ஏதேனும் ஒரு வழியில் பொதுவானதே என்பதை இது சுட்டுகிறது. மறுபுறம் பொதுக்கூறு தனிக்கூறில் நிலவுகிறது, தனிக்கூறு வாயிலாக குறிப்பிட்ட அம்சம் நிலவுகிறது. ஒவ்வொரு தேசத்தின் முக்கியமான தனிக்கூறும் வெறும் தேசியத்தன்மை கொண்டனவல்ல, மாறாக சர்வதேசியத் தன்மையும் கொண்டவை. ஒரு தேசத்துக்கும் இன்னொரு தேசத்துக்கும் இடையிலான வேறுபாடு, இந்தத் தனிக்கூறுகளில் இருந்து எழுவதில்லை. மாறாக அவை வெளிக்காட்டும் பிரத்தியேக வழிகளில் இருந்தும், குறிப்பிட்ட தேசிய சமூகச் சூழல்

காரணமாயும், இதனுல் பிறக்கும் வெவ்வேறு உணர்ச்சி பூர்வமான சிறப்புத் தன்மைகளாலும், கருத்தினங்கள் மற்றும் கற்பனைச் சித்திரங்களின் திட்டவட்டமான அமைப்பாலுமே ஏற்படுகின்றன. இவையாவும் முக்கியமாயும் தேசிய உருவம் சம்பந்தப்பட்டவை, இதன் வாயிலாக ஒரு தேசத்தின் கலாசாரத்துக்கு உரியவை, காரணம் உருவமே உள்ளடக்கத்தை ஒழுங்கமைத்து வெளிப்படுத்துகிறது. அதன் பங்குக்கு ஒரு தலையாய சக்தி என்ற முறையில், சோஷலிஸ்டு உள்ளடக்கம் தேசிய உருவங்களின் வளர்ச்சியை நிர்ணயம் செய்கிறது. அதோடு அவற்றின் உட்கூறுகள் சிலவற்றை சர்வதேசியமயமாக்கும்படி கட்டாயப் படுத்துகிறது.

தேசிய இயல்பின் வளர்ச்சியில், சர்வதேசிய இயல்பு வகித்துவரும் பிரம்மாண்டமான பங்கை வலியுறுத்தியும், தேசிய இயல்பைத் தனிமைப்படுத்துவது அதன் முக்கியத்துவத்தை பாதிக்கிறது என்பதை உணர்ந்தும், அர்மீனியக் கவிஞரான எகிஷி சாரன்ட்ஸ் சோவியத் எழுத்தாளரின் முதலாவது அகில ருஷ்ய காங்கிரசில் கூறியதாவது: "நான் எனது படைப்புச் செயற்பாட்டை உளவியல் முறையில் தேசிய தனிமை நிலை எனும் கட்டுக்கோப்புக்குள் கட்டுப் படுத்திக் கொள்வேனேயாகில், அதன் வீச்சும் செல்வாக்கின் அளவும் உண்மையிலேயே ஆகக் குறைந்தபட்சமானதாகவே இருக்கும். தேசிய சுய-ஒதுக்கம் எனும் கேடுகெட்ட பிரமையினை எனது அகவளப் புலனறிவிடமிருந்து ஒழித்து விட்டது. அக்டோபர் புரட்சி, இதன் காரணமாக நான் மானுடன் எனும் ஆக முன்னேறிச் செல்லும் நீரோட்டத்தில் ஒரு பகுதியாக இருக்கிறேன் என்று உணர்ந்து கொள்வதில் மகிழ்ச்சி அடைகிறேன்."*

"உள்ளடக்கத்தில் சோஷலிஸ்டு, உருவத்தில் தேசியம்" எனும் சூத்திரத்தின் சாரத்தை முழுமையாகப் பகுப்பாய்வு செய்தால், அது தேசங்களின் வாழ்விலான தீவிர மாற்றங்களின் முக்கியமான மெய்ப்பற்றுடையதான பிரதிபலிப்பே

---

* **லித்தரத்தூர்னயா கசேத்தா**, செப்டம்பர் 27, 1967.

என்பதைப் புலப்படுத்தும். இதன் பின்விளைவாக தேசியக் கலாசாரத்தின் உரைப்பொருள் மற்றும் உள்ளடக்கத்திலும் இவ்வாறே தோற்றுவிக்கும். இது உள்ளடக்கம் உருவம் இவற்றின் இயக்கவியல் ஒற்றுமையை மறுப்பதில்லை, ஏனெனில் சோஷலிஸ்டு உள்ளடக்கம் தேசங்களின் வாழ் நிலையின் சாரமாக அமைகிறது, அதேபோதில் தேசிய உருவம் சம்பந்தப்பட்ட கலாசாரத்திற்குஉரியதான வழிகள், முறைகள் அளவோடு நின்றுவிடுவதில்லை.

சோஷலிஸ்டு சுற்றுச் சூழலில் கலாசார வடிவங்களை தேசிய சமூகக் கூட்டுகள் மட்டுமன்றி, சர்வதேசிய சமூகக் கூட்டுகளும் தோற்றுவிக்கின்றன. சோவியத் மக்களை எடுத்துப்பார்ப்போம்: எல்லா சோவியத் தேசங்கள் தேசிய இனங்களின் சோஷலிஸ்டு சாரத்தைத் தம்முள் உருவகப் படுத்திக் கொள்கிற இந்தப் புதிய சமுதாய அமைப்பு அவர்களது எதிர்கால வளர்ச்சிக்கு அடித்தளமாக விளங்கு கிறது. இந்த மண்ணின் மீதுதான் தேசியக் கலாசாரங்கள் நிலவுகின்றன, வளர்கின்றன. தேசியக் கூறு என்பது ஒரு குறிப்பிட்ட சோவியத் இயல்பாகும். அதேபோதில் சோவியத் என்பது சோவியத் ஒன்றியத்திலுள்ள அனைத்து தேசங்கள் தேசிய இனங்களுக்கும் பொதுவான இயல்பாகும்.

பல்வேறு தேசிய இனங்களைச் சேர்ந்த மக்களின் நலன் களின் முற்றொருமையும் சோதரப் பிணைப்புக்களும் அதிகரித்து வருவதும், அவர்களது கலாசாரங்கள் பரஸ்பரம் செழுமையுறுவதும், சோஷலிஸ்டு தேசங்களின் அக வாழ்வில் சர்வதேசிய முற்றொருமைக்கு ஆக்கம் தருகின்றன. எதன் சித்தாந்த மற்றும் உணர்வு பூர்வமான உள்ளடக்கம் சமுதாயத்தின் கருத்துக்கள், உணர்வுகள் மற்றும் அழகியல் லட்சியங்களை வெளிப்படுத்துகிறதோ, அந்தக் கலையின் முக்கிய சாரத்தைப் பொருத்தவரை—இது இந்த விஷயத் துடன், உள்ளடக்கத்துடன் அங்கப் பகுதியாக சேர்ந்து இணைந்திருக்கிறது. மேலும் சாதாரண மற்றும் சர்வதேசிய அம்சங்களுக்குத் தெட்டத் தெளிவாயும் பிரதான இடத்தை

வழங்குகிறது. சோஷலிஸ்டு தேசங்களின் கலையில் அதன் உள்ளடக்கத்தின் இரு பாகங்களும் (சித்தரிப்பது மற்றும் சித்தாந்த ரீதி உணர்வு பூர்வமானது) ஒரே மாதிரியான கலைஞரின் உலகக் கண்ணோட்டத்தாலும் அவர்களது கலை சார்ந்த முறையான சோஷலிஸ்டு எதார்த்த வாதத்தாலும் சேர்த்து இணைக்கப்படுகின்றன. இதன் பலனாக உள்ளடக்கத்தில் பொதுவானதும் சர்வதேசியத் தன்மையதுமான இயல்புகள் இருப்பது மேலும் தெளிவாகிறது.

சோவியத் சோஷலிஸ்டு தேசங்களின் கலையிலான பிரதான உரை பொருளும், அடிப்படை கருப்பொருளும், சோவியத் தனி நபரும் அவரது புதிய சமூக-அரசியல் மற்றும் அகவள பிம்பமுமே, அவரதும் கலைஞனதும் உணர்வு (சோவியத் தேசங்கள் அனைத்துக்கும் பொதுவான) புதிய வாழ்க்கை நிலைமைகளுக்கே பிரதானமாயும் இசைவு செய்யப் பட்டுள்ளது.

கலைஞர்கள் தமது கதாநாயகர்களின் தேசியப் பண்பினை சோவியத் பண்பாகச் சித்தரிக்கும்போது அவர்கள் அதன் மூலம் தேசிய வாழ்விலான ஆழமான மாற்றங்களைப் பதிவு செய்கிறார்கள். எடுத்துக் காட்டாக தமது **விடை கொடு குல்சாரி** எனும் குறுநாவலில் சிங்கிஸ் ஐத்மதோவ் சமுதாயப் போராட்டத்தின் அனுபவத்தை பிரதிபலித்தார். சோவியத் சமுதாயம் ஒட்டுமொத்தத்தின் வளர்ச்சியின் முக்கிய அம்சங்களை விவரித்தார். ''சோவியத் மனிதன்'' எனும் கருத்துருவின் உன்னதப் பொருளைச் சுட்டினார். இந்த நடப்பு கிர்கிஸ் தேசியப் பின்னணியில் தரப்படுகிறது, ஆனால் இதன் சாரமும் உள்ளடக்கமும் சோஷலிஸ்டு மற்றும் சோவியத் தன்மை கொண்டவை. கிர்கிஸ் விவசாயியின் பிம்பம் ஒரு மாதிரி சோவியத் மனிதனை சித்திரிக்கிறது, இது அவர்கள் எந்த தேசிய இனத்தைச் சேர்ந்தவர்களாக இருப்பினும் சரி, எமது நாட்டிலுள்ள எல்லா மக்களுக்கும் அணிமையாயும் எல்லோரும் புரிந்து கொள்ள இயலும் வகையிலும் இருக்கிறது.

அதன் உட்கிடைப் பொருள், உள்ளடக்கம் முக்கியமாயும், அதன் தேசத்தையே மையமாக்கியதாக இருந்த போதிலும், ஒவ்வொரு தேசியக் கலையும் உலக முழுதிலுமுள்ள மக்களின் உறவுகளை வெளியிடுகிறது. ஒரு கூட்டுப் பண்ணை அல்லது ஆலையிலான வாழ்க்கையைச் சித்திரிக்கும் போதும் கூட மெய்யான கலை உருப்படியான நிகழ்ச்சிகளைப் படம் பிடிக்கிறது. உலகுதழுவிய சர்வப் பொதுவான மானுட முக்கியத்துவமுடைய இயக்கத்துடனான அவர்களின் நெருக்கமான பந்தத்தையும் கோத்திணைவினையும் எடுத்துக் காட்டுகிறது.

சோவியத் எழுத்தாளர்களும் கலைஞர்களும் சமுதாயம் மற்றும் தனிநபரின் பிரச்சினைகளை முன்னணியில் வைத்துப் பார்க்கிறார்கள். கம்யூனிஸ்டு உலகக் கண்ணோட்டத்தின் சந்தர்ப்ப சூழலில் பொதுவான சோவியத் தன்மை சர்வப் பொது மானுடக் கருத்துக்களைப் பொதுமையாக்க முயல்கிறார்கள். காலாவதியாகிவிட்ட தேசிய வழக்கம் மற்றும் வாழ்க்கை முறையில் கருத்தூன்றி இருப்போர், தமது தேசியக் கலாசாரங்களை சுய ஒதுக்கல் நிலைமைக்கு இட்டுச் செல்வார்கள். அவர்களது பணி அயற் பண்பானது, மற்றும் வரலாற்று மானுடவியலில் நடத்தும் வெற்று முயற்சி தவிர வேறல்ல.

சோஷலிஸ்டு எதார்த்தவாதக் கொள்கையுடைய படைப்புகளில் தேசிய அம்சம், சோவியத் சர்வதேசிய அம்சத்துடன் மிகவும் நெருக்கமாக இணைந்து பிணைந்து கிடக்கிறது. எந்த தேசத்ததாயினும் சரி, கலை இலக்கியத்திலான தலைசிறந்த படைப்புக்கள், காலத்தின் ஆகப்பெரிய பிரச்சினைகளை ஆராய்கின்றன. ருஷ்யத் திரைப்படமான அவைத்தலைவன், ஜார்ஜியன் படமான படையாளியின் தந்தை அல்லது லித்துவேனியன் படமான எவரும் இறக்க விரும்பவில்லை என்பவற்றை எடுத்துக் கொள்ளுங்கள். இவை குறிப்பாயும் தேசியத்தன்மையுடன் இருக்கும் அதே போதில், எந்த ஒரு தேசிய இனத்தினதும் முற்போக்கு மக்களின் சிந்தனைகளையும் அபிலாஷைகளையும் பிரதிபலிக்

கின்றன, சர்வப்பொது பிரச்சினைகளாகிவிட்ட இன்றைய மனிதநேயம் மற்றும் முன்னேற்றம் பற்றியதான எண்ணங்களைத் தோற்றுவிக்கின்றன.

ஒவ்வொரு தேசத்தின் கலாசாரமும் அந்த தேசத்தின் வரலாற்றின் முன்னுனை நிலைக்கண்ணுடியாகும். அதிலுள்ள நவீனப் பண்பு அந்த வரலாற்றுடன் உறவு பூண்டதாகும். இருப்பினும், தேசியம் என்பதைப் பற்றிக் குறிப்பிடும் போது நாம் அதன் இன்றைய தோற்றத்தில்—எல்லா கலாசார சாதனைகளாலும் செழுமைப்படுத்தப்பட்ட வடிவில் அதனை எடுத்தாளுகிறோம். சோவியத் கலாசாரத்தை அதன் தேசியப் பன்முகத்தன்மையின் முழு இணைப்பாக ஏற்றுக்கொள்ளும் அதேபோதில், இந்தப் பன்முகத்தன்மை ஊடுபரவி இருக்கிறது. ஒவ்வொரு தேசிய கலாசாரத்தினுள்ளும் தொடர்ந்து ஊடுபரவி வருகிறது என்பதை நினைவில் கொள்ளவேண்டும். சோஷலிஸ்டு தேசங்களின் மக்கள் சோவியத் பண்பின் பொது இயல்புகளைக் கொண்டவர்களாக இருக்கிறார்கள். தேசங்கள் பொருளாதார கலாசார விஷயத்தில் மட்டுமின்றி அகவளக் கட்டமைப்பிலும் ஒன்றுக்கொன்று நெருக்கமாக இணைந்து வருகின்றன. சோஷலிஸ்டு தேசத்தின் அமைப்பு ஆகிவிட்ட நிலையில் புதுமை ஒரு தேசிய உடைமை மட்டுமல்ல, இதர தேசங்களின் உடைமையுமாகும். இதனுல்தான் தேசிய கலாசாரம் மலர்ச்சியுறுவதானது சர்வதேச கலாசாரத்தை வலுப்படுத்துகிறது, செழுமைப்படுத்துகிறது.

4. தேசிய மற்றும் சர்வதேசிய தகவல் போக்குவரத்து மொழிகள். கலாசார வளர்ச்சியிலும் தேசங்களின் நல்லிணக்கத்திலும் அவற்றின் ஸ்தானம்

தேசியக் கலாசாரங்களின் வளர்ச்சியில் மொழிகள் தீர்மானகரமான பங்கு வகிக்கின்றன. மக்கள்திரளினர் தமதும் மற்றும் இதர மக்களுடையதுமான கலாசாரத்தில் பங்கு பற்றுகின்றனர், அதன் எதிர்கால

வளர்ச்சியில் தாம் நன்கு புரிந்து கொள்கிற தமது சுதேசி மொழியைத் தொடர்பு மொழியாகக் கொண்டு கலந்து கொள்கின்றனர். இதனுல்தான் கம்யூனிஸ்டுக் கட்சியானது எல்லா தேசிய மொழிகளிலும் பூரண சமத்துவத்தையும் கட்டற்ற வளர்ச்சியையும் உத்தரவாதம் செய்ய எப்போதும் முன் முயன்று வந்துள்ளன, ஆதிக்க தேசத்தின் மொழி மக்களினங்கள் மீது பலாத்காரமாகத் திணிக்கப்படுவதை நிராகரித்து வந்துள்ளன.

கட்சியின் முதலாவது வேலைத்திட்டமே, அது மக்கள் தமது சுதேசி மொழிகளிலேயே கல்வி பயிலும் உரிமைக்காகப் போராடி வருவதையும்,தேவையான பள்ளிகளை நிறுவ அரசு மற்றும் சுயாட்சி அமைப்புகள் ஏற்படும் செலவுகளை உத்தரவாதம் செய்ய வேண்டும் எனவும், ஒவ்வொரு குடிமகனும் தனது சொந்த மொழியில் கூட்டங்களில் பேச உரிமை உண்டு என்பதையும் எல்லா வட்டார மற்றும் பொது அல்லது அரசாங்க நிலையங்களிலும் சுதேசி மொழியே புகுத்தப்படும் என்பதையும் உறுதிப்படுத்தும்''* என்ற மெய்நடப்பு பதிவு செய்யப்பட்டது.

ருஷ்யாவில் சோஷலிஸ்டுப் புரட்சிக்குப் பின்னுல் கட்சியானது மொழிகளின் சமத்துவம் மற்றும் கட்டற்ற வளர்ச்சி மீதான லெனினது கருத்துக்களை முரணின்றிச் செயல்படுத்தியது. மொழி உள்ளிட்டதான எல்லா தேசியத் தனியுரிமைகளும் ஒழிக்கப்பட்டன, மொழிகளின் வளர்ச்சி மேம்படுத்தப்பட்டது. தேசிய மொழிகளை ஆராயவும் ஜனரஞ்சகமாக்கவும் ஆராய்ச்சி மையங்கள் நிறுவப்பட்டன. மொழிகளின் எழுத்துத் தொகுதி சீராக்கப்பட்டது. அவற்றின் சொற் தொகுதிகளை செழுமைப்படுத்தவும் அவற்றின் சொல் விளக்கத்திறனை உயர்த்தவும் ஊக்கமான

---

* **சோ. க. க. காங்கிரசுகள், மாநாடுகள், மத்தியக் கமிட்டியின் பிளீனம் கூட்டங்களின் தீர்மானங்களும்** முடிவுகளும், பாகம் 1, மாஸ்கோ அரசு அரசியல் இலக்கிய வெளியீட்டகம், 1970, பக். 63, (ருஷ்ய மொழியில்).

நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. எழுத்துக்கள் இல்லாத மொழிகளின் ஒலியியல் முறைகள் இலக்கணம் மற்றும் அகராதி இயல் ஆராயப்பட்டு வரையறுக்கப்பட்டன. அவர்களது வரலாற்றிலேயே முதல் தடவையாக எழுத்தறியாத 40 தேசிய இனத்தவர் விஞ்ஞான முறையில் ஒழுங்கு செய்யப்பட்ட எழுத்து மொழியினைப் பெற்றார்கள்.

புரட்சிக்கு முன்னதாக இலக்கியத்தில் 13 மொழிகளே இருந்தன. சோவியத் ஒன்றியத்தில் 75 எழுத்து மொழிகள் நிலவின என்ற உண்மையை சோவியத் எழுத்தாளர்களின் 5 ஆவது காங்கிரஸ் பதிவு செய்தது.

ஜாராட்சி காலத்தில் நிலையான இலக்கிய மரபுடன் விளங்கிய பெரிய தேசங்களின் மொழிகளான உக்ரேனியன், பிலோருஷ்யன், ஜார்ஜியன் மற்றும் அர்மீனியன் மொழிகளும் கூட மிகவும் வரம்புக்குட்பட்ட சமுதாயப் பணிகளில் தான் பயன்படுத்தப் பட்டிருந்தன. சோவியத் காலப் பகுதியில் பள்ளிக்கூடங்களிலும் பல்கலைக் கழகங்களிலும் பல டஜன் மொழிகளில் போதனை தரப்படுகிறது. புத்தகங்கள், செய்திப் பத்திரிகைகள் மற்றும் சஞ்சிகைகள் பதின் கணக்கான மொழிகளில் வெளியிடப்படுகின்றன. பொது மற்றும் அரசாங்க அலுவல் நாட்டின் பல்வேறு மொழிகளிலும் நடத்தப்படுகிறது. ரேடியோ மற்றும் டெலிவிஷன் நிகழ்ச்சிகள் உள்ளூர் மொழிகளிலேயே நடத்தப்படுகின்றன. நவீன கலாசாரம், விஞ்ஞானம், தொழில் நுட்பம் ஆகிய துறைகளிலான சோஷலிஸ்டு மற்றும் சோஷலிஸ்டு உறவுகளின் ஒட்டுமொத்தமான எல்லா சாதனைகளும் சோவியத் ஒன்றியத்தின் மக்களினங்களின் பழைய மற்றும் புதிய எழுத்து மொழிகளில் ஒருங்கே பிரதிபலிக்கின்றன.

தேசிய மொழிகளின் சமுதாய செயல்பாடுகளின் முன் என்றும் கண்டிராத இந்த விரிவாக்கம், மக்களினங்கள் மத்தியிலான சோஷலிஸ்டு உறவுகளின் பின்னணியில் நிகழ்ந்தது. கட்சி இதற்கு மாபெரும் முக்கியத்துவத்தை வழங்கியது. காரணம் தேசங்கள் மற்றும் அவற்றின்

மொழிகளின் சம வளர்ச்சியை ஊர்ஜிதம் செய்தது மட்டுமின்றி உழைக்கும் மக்கள் திரளின் வேகமான கலாசார வளர்ச்சியையும், அவர்களது புதிய கலாசார மதிப்புக்கள் படைக்கப்படுவதையும்கூடக் கட்சி உத்தரவாதம் செய்தது. தவிரவும், சோவியத் ஒன்றியம் போன்ற ஒரு பல்தேசிய இன அரசில் தேசிய மொழிகள், வெகுஜனப் பத்திரிகைகள், பிரசார சாதனங்கள் மூலமும் கல்வி நிறுவனங்கள் வாயிலாகவும் கம்யூனிஸ்டுக் கருத்துக்கள் பரவத் துணைசெய்தன.

ஆனால் சோஷலிஸ்டு சமுதாய அமைப்பின் முனைப்பும், செழுமையும் கொண்ட சமூக-பொருளாதார மற்றும் அகவள அபிவிருத்தியின் தேவைகளை நிறைவு செய்யும் அளவுக்கு எல்லா தேசிய இனங்களும் தமது மொழியில் சமுதாயப் பணிகளை விரிவுபட ஆற்ற இயலவில்லை. அதன் உள்ளாற்றல் கைவரப் பெறுவதற்கு ஒரு மொழிக்குத் திட்ட வட்டமாயும் குறைந்த பட்ச அளவுக்கு அதைப் பேசுவோர் தொகை தேவை. வளர்ச்சிக்குச் சாதகமான சமுதாய நிலைமைகள் மட்டும் போதா. நிச்சயமாயும் ஒன்று அல்லது இரண்டே கிராமங்களில் பேசப்படும் ஒரு மொழி, அதனிடம் எத்தகைய உள்ளாற்றல் இருந்தபோதிலும் சரி, அது தனது சமுதாயப் பணியை விஸ்தரித்துக் கொள்ள இயலாது. ஒரு சில தேசங்கள் தேசிய இனங்கள் சம்பந்தப்பட்டவரை, அவை ஓரளவுக்கு சிறு தொகையினராக இருப்பது, பரவலாகச் சிதறிக்கிடப்பதும், பெரிய சோஷலிஸ்டு தேசங்களின் மொழியை அம்மக்களில் ஒரு பகுதியினர் சுயவிருப்பமாக ஒப்புக்கொள்வதுமெல்லாம் அவர்களது மொழி தீவிரமாகச் செழுமையுற்று மேம்பாடடைவதைப் புறநிலைக் காரணங்களால் தடை செய்யும். அவர்களது மொழிகள் இன்னமும் பலவீனமான சொல்திறனே கொண்டதாக இக்கால விஞ்ஞானம் மற்றும் தொழில் நுட்பத்தின் தேவைகளை நிறைவு செய்யும் ஆற்றல் அறவே இல்லாதனவாய் இன்னமும் இருந்து வருகின்றன. சிறிய தேசிய இனங்களும் இனக்குழுக்களும் (சோவியத் ஒன்றியத்

தில் இவை சுமார் 60 உள்ளன) பல்தேசிய இனப் பொருள் உற்பத்திக் கூட்டமைப்புகளிலும், பொருள்வகை மற்றும் அகவளர்ச்சிக்கான உற்பத்தி இயக்கங்களிலும் தமது சொந்த மொழிகளில் தொடர்பு கொள்வதற்கான வாய்ப்பு கள் மிகவும் குறைவே. தமது சொந்த மொழிகளில் உலக விஞ்ஞானம் மற்றும் கலாசாரச் செல்வங்களை ஈர்த்துப் பயனுறுவதற்கான வாய்ப்புகளும் குறைவே, இந்தக் காரணத்தால், தமது தேசிய மொழியைத் தவிர அவர்கள் சுயவிருப்பமுடன் தமது அண்டைத் தேசங்களின் மொழிகளை யும் ஏற்றுக்கொண்டார்கள். அதிலும் முதலாவதாய் மிகவும் வளர்ச்சியடைந்திருந்த—மாபெரும் ருஷ்ய மொழியினை ஏற்றுக் கொண்டார்கள். இதுவே இருமொழி பரவியதற்குக் காரணமாகும்.''*

இருமொழி ஏற்பாடு எழுத்துமொழி இல்லாத தேசிய இனங்கள் மத்தியில் மாத்திரம் விரிவாகப் பரவியிருக்கவில்லை. பல்வேறு சோவியத் தேசிய இனங்களின் நெருக்கமான உறவுகள் மற்றும் கூட்டு வாழ்க்கை காரணமாக எல்லா உழைக்கும் மக்கள் மத்தியிலும் இது வேகமாக பரவி வருகிறது. பெருந்திரளான மக்கள் ஓர் இரண்டாவது மொழியை, பெரும்பாலும் ருஷ்ய மொழியை கற்றுத் தேர்ந்திருக்கிறார்கள். இரு மொழி ஏற்பாட்டின் பிரதான மாதிரி சோவியத் தேசங்கள் தேசிய இனங்களின் அபிவிருத்தியில் உயர் ஆக்கபூர்வ காரணியாக விளங்கி யுள்ளது. தமது தேசிய மொழியிலும் சர்வதேசிய மொழி யான ருஷ்யனிலும் பெறும் ஞானம் தகவல் தொடர்பை எளிதாக்குகிறது, கம்யூனிஸ்டு நிர்மாணப் பணியில் பரஸ்பரப் புரிவையும் ஒருங்கிணைப்பையும் அதிகரிக்க உதவு கிறது.

சமத்துவம் மற்றும் கட்டற்ற வளர்ச்சி எனும் கோட் பாடுகளை முரணின்றி அமலாக்குவதும், இதன் விளைவாக எல்லா தேசங்கள் தேசிய இனங்களின் கலாசாரங்களும்

* காண்க: இருமொழி மற்றும் பன்மொழி பிரச்சினைகள், மாஸ்கோ, 1972 (ருஷ்ய மொழியில்).

உயர்வடைவதும், முன்னல் சமுசயங்கள் இரிந்தொழிந்து முன் என்றும் கண்டிராத அளவுக்குப் பரஸ்பர உறவுகள் வளர்ச்சியடைவதும் படிப்படியாகவும் தவிர்க்க முடியாத வகையிலும், சோவியத் ஒன்றியத்தின் சமமான மொழிகளில் ஒன்றைப் பொது மொழியாக நாட்டிலுள்ள எல்லா தேசிய இனங்களேயும் சார்ந்த நபர்கள் இடையிலான தொடர்பு மொழியாகத் தேர்வு செய்து கொள்ளும் முடிவுக்கு இட்டுச் சென்றது. மிகவும் தகுதியானது என்ற முறையில் ருஷ்ய மொழி தேர்ந்து கொள்ளப்பட்டது. இது மக்களில் பெரும் பாலோருக்குத் தாய்மொழியாகும். 1926 மக்கள் தொகை கணிப்புப்படி 57.3 சதவிகிதம் பேர் ருஷ்யனே தமது தாய்மொழி என்று கூறினர், 1970 மக்கள் தொகை கணிப்பில் 58. 7 சதவிகிதம் பேர் (இதில் பலர் ருஷ்யரல் லாதார்) இவ்வாறு கூறினர். இதற்கும் மேலாக ருஷ்ய மொழிக்கும் உக்ரேனியன் மற்றும் பிலோருஷ்யன் மொழிகளுக்கும் இடையே பொதுவான பல அம்சங்கள் உள்ளன. இந்த மக்கள் ருஷ்ய மொழியைப் புரிந்து கொள்கிறார்கள். இவர்களோடு ருஷ்யர்களேச் சேர்த்தால் கிட்டத்தட்ட நாட்டின் மக்கள் தொகையில் முக்கால் பகுதி இதிலடங்கும். சோஷலிஸ்டு மறு சீரமைப்புக்கு முன்னரே ஸ்லாவ் இனத்தவரல்லாத மக்களினங்கள் (மர்தாவியர், டாடர், ஒஸதியர் மற்றும் இதரர்) மத்தியில் ருஷ்யமொழி கணிசமாகப் பரவி இருந்தது. 1970 ஜன கணிதப்படி சோவியத் ஒன்றியத்தின் ருஷ்யரல்லா மக்களில் 48. 7 சதவிகிதம் பேர் ருஷ்ய மொழியினே சரளமாகப் பயன் படுத்தி வந்தனர், தாய் மொழியாகக் கருதினர். சர்வதேசியத் தொடர்பு மொழி என்ற வகையில் இதர சம மொழிகளே விடவும் ருஷ்ய மொழி உசிதமானது. ஏனெனில் இது மேலும் அதிக வளம் பெற்றது, செழுமைப்பாடுடையது, பல வகைச் சாதகங்களே (உ. ம். இயக்கவியல் வேறுபாடுகள் சொற்பம், பேச்சு மரபும் எழுத்து மொழியும் மிகவும் ஒத்திருப்பன, இதன் எழுத்தாக்கம் உச்சரிப்புடன் மிகவும் நெருக்கமானது) கொண்டது.

சர்வதேசத் தகவல் தொடர்புக்கான மொழி என்ற வகையில் ருஷ்யமொழியானது சோவியத் தேசங்கள் மற்றும் தேசிய இனங்கள் அனைத்தின் வாழ்க்கையிலும் சோவியத் மக்களை ஒரு புதிய வரலாற்று சமுதாயமாக வார்த்துருவாக்கும் துறையிலும் மிகவும் முற்போக்கான லட்சியப் பணியினைச் செய்து நிறைவேற்றுகிறது. இது ஒரு வலிமை பொருந்திய சமுதாயக் காரணியாக விளங்கி, சோவியத் சோஷலிஸ்டு சமுதாயத்தின் அபிவிருத்தியினை வேகப்படுத்தியும், தேசிய இனங்களை ஈர்த்து ஒன்று திரட்டி நெருக்கமான ஒத்துழைப்புக்கும் மார்க்சிய-லெனினிய சித்தாந்தத்தை அடிப்படையாக்கிய கம்யூனிஸ்டு நிர்மாணம் எனும் பொது லட்சியத்திற்குப் பாடுபடுவதற்கான அவர் களது ஒற்றுமைக்கும் உறுதுணைசெய்கிறது.

தாய் மொழியிடமிருந்து தனிப்பட்ட நிலையில் தேசியக் கலாசாரம்பற்றிப் பேசுவது எப்போதும் வெறும் கற்பனையே என்று சொல்வது தவறு. சில இடங்களில் முன்னுள் தாய் மொழியாக இல்லாத ஒரு மொழி தேசியக் கலாசாரத்தின் வளர்ச்சிக்கான ஒரு வடிவமாக உதவலாம். பல தேசிய இனங்களும் சிறிய தேசங்களும் (ஒஸெத்தியர், கரேலியர், கோமி, மாரி மர்தோவியர், உத்முர்த்கள், காகசியன்கள் இத்தியாதி) தமது தேசியக் கலாசாரங்களை படைத்துரு வாக்கும் போதில் தமது சொந்த மொழிகளுடன்கூட ருஷ்ய மொழியையும் விரிவாகப் பயன்படுத்துகிருர்கள். பொது மொழி என்ற வகையில் ருஷ்ய மொழி பெரிய தேசங்களின் கலாசாரங்கள் மீது சாதகமான செல்வாக்குச் செலுத்து கிறது.

மொழிகளிலான பாகுபாட்டுமுறை (பேச்சு மொழி களின் பரிணமம்) அல்ல, இன்னொரு இலக்கிய மொழியினுல் கவர்ந்து பற்றப்படும் பொருளிலான இணைப்பாக்கமும் அல்ல, மாருக எல்லா மொழிகளையும் சமத்துவ அடிப் படையில் பரஸ்பர சொல் திரட்டல் மற்றும் இதரவகை களில் செழுமையூட்டுவது என்பதே சோஷலிஸ்டு சகாப் தத்தில் முன்மாதிரியான சேவையாகும்.

நேரடியாகப் பிறமொழிகளில் இருந்து பெறப்படும் சொற்களில் கணிசமான பகுதி சர்வதேசிய தொடர்கள், சோவியத் இயல் விஞ்ஞான தொழில் நுட்ப இலக்கிய மற்றும் இலக்கியச் சொற்களாகும்.

மொழிகளின் பரஸ்பரச் செழுமையாக்கம் எல்லா யுகங்களிலும் அனுஷ்டிக்கப்பட்டு வந்திருக்கிறது. உலகில் எந்த மொழியும் தூயது என்பது இல்லை. ஆங்கில மொழியில் நிலவும் சொற்களில் 60 முதல் 70 சதவிகிதம் இதர மொழிகளிலிருந்து எடுத்துக் கொள்ளப்பட்டவை. கொரிய மொழியில் 75 சதவிகிதம் பிறமொழிச் சொற்கள் என்பதாக மொழி இயலாளர் மதிப்பிடுகின்றனர். கீழ்த்திசை லத்தீன்—வழி-மொழிகளின் சொற்திரட்டில் மூன்றில் ஒரு பங்கு ஸ்லாவ் மொழி மூலத்திலிருந்து உதித்தவை.

தமது மொழியில் தூய்மை விழைந்து அக்கறை காட்டும் தேசியவாதிகளின் போக்கு, ஒரு சில மொழி மூலகங்களின் முற்போக்கான சங்கமிப்பை எதிர்த்து நெறியாக்கம் செய்யப் பட்டவை. சொற்கள் தொடர்களின் சர்வதேசியத் திரட்டு பெருகிவருதலை எதிர்த்த செயல் ருஷ்ய மொழியின் தூய்மை பற்றிக் குறிப்பிடும்போது லெனின், தேவையில்லாத கேலியான அன்னியச் சொற்கள் பயன்படுத்தப் பெறுவதை ஆட்சேபித்தார். காரணம் பொது மக்கள் மத்தியில் எழுத்தறிவும் கலாசாரமும் பரவுவதற்கு இவை தடையாக இருக்கும் என்பதே. ஆனால் அவசியமானதும் பயனுடையதுமான சொற்களை எடுத்தாள்வதை அவர் எதிர்க்கவில்லை.

சோவியத் ஒன்றியத்தின் தேசிய மொழிகள் முதலில் அவற்றின் சொந்த உள்ளாற்றல்கள் மற்றும் இரண்டாவதாக இதர மொழிகளில் இருந்து எடுத்துக் கொண்ட மூலச் சொற்கள் எனும் அடிப்படையிலேயே அபிவிருத்தியடைந்து வருகின்றன. இந்தப் பரஸ்பரச் செழுமையாக்கத்தில் ருஷ்ய மொழி ஒரு விசேஷமான பன்முகமான பாத்திரம் வகிக்கிறது. காரணம், சோவியத் ஒன்றியத்தின் மக்களினங்களுக்கு இதுவே ருஷ்யன் மற்றும் உலகக் கலாசாரத்துக்கு இட்டுச் செல்லும் பிரதான மார்க்கமாக விளங்குகிறது.

ருஷ்ய மொழியில் இருந்தும் ருஷ்ய மொழிவாயிலாக இதர மொழிகளிலிருந்தும் முக்கியமான, விஞ்ஞான அடிப்படையுள்ள விவேகமான முறையில் சொற்களை எடுத்தாள்வதால் மொழியைக் கற்றுக் கொள்வது எளிது. ருஷ்யமொழி பேசும் மக்களுடன் தொடர்பு கொள்வது வசதி, சோவியத் ஒன்றியத்தின் தேசங்கள் தேசிய இனங்களின் மேலும் நெருக்கமான ஒற்றுமையை ஊக்குவிப்பது எனும் முற்போக்கு லட்சியத்துக்குப் பாடுபட முடியும்.

''புரட்சி'', ''சோவியத்'', ''கம்யூனிசம்'', மற்றும் காஸ்மோனட் போன்ற விவாதத்துக்கு இடமில்லாத சர்வதேசத் தொடர்களுக்கும் கூட தேசிய மொழிகளில் மாற்றுப்பதங்களை வழங்கிடச் சில மொழியியலாளர்கள் முயன்றார்கள். ஆனால், இது சர்வதேசிய சொற்திரட்டு வளங்களைப் பயனற்றதாக்கும், இவற்றின் பெருக்கம் ஒரு முற்போக்கு நடைமுறையாகும்.

மொழிகளின் உள்ளார்ந்த வளங்களுடன் கூடவே, அவற்றின் பரஸ்பர செழுமைப்பாடும் சோஷலிஸ்டுச் சுற்றுச் சூழலிலான அவற்றின் வளர்ச்சிக்குரிய முக்கியக் கூறுகளாகிவிட்டன என்று பல சோவியத் மொழியியலாளர்கள் குறிப்பிடுகிறார்கள்.

சோவியத் ஒன்றியத்தின் மக்களினங்களின் பொதுவான சொற்களஞ்சிய வளங்கள் தொடர்ந்து விரிவடைந்து வருகின்றன. அவர்களது சமூக-அரசியல், தொழில் துறை கலாசாரம் மற்றும் அன்றாட வாழ்க்கையின் சகல அம்சங்களையும் இவை பிரதிபலிக்கின்றன.

ருஷ்யரல்லாத தேசங்கள் தேசிய இனங்களின் மொழிகளும் ருஷ்ய மொழிமீது செல்வாக்குச் செலுத்துகின்றன. இருப்பினும், பரஸ்பர செழுமைப்பாட்டின் பிரதான ஆதாரம் ருஷ்ய மொழியினதன் அதன்வழி மேலும் அதிக வளர்ச்சியடைந்துள்ள ஆங்கிலம், பிரெஞ்சு, ஜெர்மன், உக்ரேனியன், ஜார்ஜியன் மற்றும் அர்மீனியன் மொழிகளின் தாக்கமேயாகும்.

எல்லா மொழிகளும் இதர மொழிகளில் இருந்து சொற்களை எடுத்தாண்டு தமது சொற்றிரட்டை செழுமைப் படுத்திக்கொள்கின்றன. ருஷ்ய மொழியும் இத்ற்கு விதி விலக்கு அல்ல. பல நூற்றுண்டு காலமாக ருஷ்ய மொழி யானது வேறு இதர மொழிகளிடம் இருந்து ஏராளமான சொற்களை எடுத்துப் பயன்படுத்தியுள்ளது, வேறு எந்த ஒரு மொர்ழியின் நிலையும் இதுவே.

புரட்சிக்கு முன்னேயுங்கூட போல்ஷிவிக்குகள் இதர மக்களினங்கள் மத்தியில் ருஷ்ய மொழியும் ருஷ்யாவின் முன்னேறிய கலாசாரமும் பரவுவதை ஆதரித்தார்கள். லெனின் எழுதியதாவது: ''ருஷ்யாவில் வாழும் ஒவ்வொரு நபரும் மகத்தான ருஷ்ய மொழியைக் கற்றுக்கொள்ளும் வாய்ப்பினைப் பெறவேண்டும் என்றே நாம் நிச்சயமாயும் விரும்புகிறோம்.

"இதில் பலவந்த அம்சம் இருப்பதை நாம்விரும்பவில்லை. குண்டாந்தடி அடிபட்டு மக்கள் சுவர்க்கத்துக்கு விரட்டிச் செல்லப்படுவதை நாம் விரும்பவில்லை. கலாசாரம் பற்றி எத்தனை அழகான தொடர்கள் பேசப்பட்டாலும் சரி, **கட்டாயமான,** அதிகார மொழி என்பதில் பலவந்தம் இருக் கிறது, குண்டாந்தடிப் பிரயோகம் உள்ளது.''*

நடைமுறை, லெனினது முடிவு சரியானது என்பதை நிருபித்துவிட்டது. தமது சொந்தத் தாய்மொழியுடன் கூடவே லட்சோபலட்சம் மக்கள் சுயவிருப்பமாக ருஷ்ய மொழியைப் பயில்வது பரிபூரண தேசிய சமத்துவம் மற்றும் கட்டற்ற வளர்ச்சி எனும் சோஷலிஸ்டுப் பின்னணியில் ஒரு மெய்நடப்பு ஆகிவிட்டது.

1970 ஜனக்கணக்குப்படி 12,88,00,000 ருஷ்யர் களுடன் கூடவே 13 மில்லியன் ருஷ்யரல்லாத மக்களும் ருஷ்ய மொழியே தமது தாய்மொழி என்று கூறியுள்ளனர். அதே சமயம் 4,19,00,000 பேர் தமது இரண்டாவது மொழி என்ற முறையில் ருஷ்ய மொழியைச் சரளமாகப்

*வி. இ. லெனின் "நூல் திரட்டு", தொகுதி 20, பக். 72.

பேசவும் எழுதவும் முடிகிறது. இவ்வாறு ருஷ்ய மொழி ருஷ்யரல்லாத 5,49,00,000 சோவியத் குடிமக்களின் இரண்டாவது தாய் மொழியாக அதன் முழு அர்த்தத்தில் பரிணமிக்கிறது. பொது மொழி என்ற முறையில் அது பிரம்மாண்டமாயும் முக்கியமான சமுதாயப் பணிகளை ஆற்றி வருகிறது. மக்களினங்களையும் அவர்களது கலாசாரங்களையும் சேர்த்து ஒருங்கிணைப்பதற்குத் துணைசெய்கிறது. ருஷ்ய மொழி வெளிநாடுகளிலும் குறிப்பாயும் சோஷலிஸ்டு நாடுகளில் லட்சக் கணக்கானவர்களால் பயிலப்படுகிறது.

சோஷலிஸ்டு சமுதாய அமைப்பில் மொழிகளின் வளர்ச்சி இயல்பான வரலாற்று நடைமுறையாகும். ஆனால் நிச்சயமாயும் தன்னிச்சையான நிகழ்ச்சிப் போக்கல்ல. பல்கலைக் கழகங்கள் மற்றும் கல்விச் சாலைகளில் மொழியியல் நிபுணர்கள் மொழியியல் இயக்கம் பற்றிப் பகுப்பாய்வு செய்து மொழிகளை செம்மைப்படுத்தும் பணிக்குத் தம்மை அர்ப்பணித்துக் கொள்கிறார்கள். இதில் சில குறைபாடுகள் இருப்பது மெய்யே. எல்லா மக்களினங்களுமே பேச்சு மொழி மற்றும் எழுத்து மொழிக்கு இடையிலான வேறுபாட்டால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பது முன்பே சுட்டிக்காட்டப்பட்டது. இது தாய்மொழியைக் கற்பதும் சரியாகப் பேசுவதற்குப் பயில்வதும் குறிப்பாயும் மக்களிடையிலான தொடர்பு மொழியாகப் பயன்படும் மொழியினைக் கற்றுக்கொள்வதும் கடினம் என்பதைச் சுட்டுகிறது. சில தேசிய மொழிகளின் சிக்கலான எழுத்தாக்க விதிகள் இன்னமும் எளிதாக்கப்படவில்லை. எனவே இம்மொழிகளைப் பயில்வதற்கு இது உதவியாக இல்லை. சோவியத் மொழியியலாளர்கள் அதிகப்பட்ச ஜனநாயகத் தன்மை,எளிமை, புரிந்து கொள்ளும் இயல்பு இவற்றுக்காகப் பாடுபட்டு துரித வளர்ச்சியின் காரணமாக ஏற்பட்ட இந்தக் குறைகளைப் போக்கியிருக்கிறார்கள். தமது மொழி பேச்சு மொழியின் தரத்துக்கு ''இறங்கிவிட்டது'' என்று ஓலமிட்டபடி மொழியின் மேம்பாட்டையும் எழுத்தறிவு பரவுவதையும் ஒருங்கே தடைப்படுத்தி வரும் தமது

மொழியின் சம்பிரதாய மரபுகளை வெறித்தனமாகக் கட்டிக் காத்துவரும் தூய்மை வாதிகளுடன் மல்லாடி வேண்டியதைச் செய்ய இந்த மொழியியலாளர்கள் தயங்குவதில்லை.

மார்க்சின் மூலதனம் இரண்டாம் தொகுதியின் நடை சம்பந்தமாக ஜெர்மன் சோஷலிஸ்டு வெளியேறியும் தூய்மைவாதியுமான ஒருவர் வெளியிட்ட விமர்சனக் கருத்துக்களைக் குறிப்பிட்டு பிரெடரிக் எங்கெல்ஸ் எழுதியதாவது: ''அவர் கண்டு மகிழும் ஜெர்மன் மொழி பள்ளிக்கூடத்தில் அடித்து ஏற்றப்பட்ட இது, காலங்கள் பற்றிய வெறுப்பூட்டும் அமைப்புகள் கொண்டது, இதில் பயனிலை எழுவாயில் இருந்து பத்து மைல் தூரம் முடிவற்ற துணைத் தொடர்களால் விலக்கப்பட்டுக் கிடக்கும், வாக்கியத்தின் கடைக்கோடியில் இடம் பெற்றிருக்கும் இந்த வகையான ஜெர்மன் மொழியை நினைவிலிருந்து அகற்ற எனக்கு முப்பதாண்டுகள் பிடித்தன. லெஸ்ஸிங் போன்றோர் இருப்பதையே அறியாத பள்ளி ஆசிரியர்களின் அதிகார வர்க்க பாணி ஜெர்மன் மொழி ஜெர்மனியிலுங்கூட இப்போது முழுமையாக மறைந்து வருகிறது.''*

ருஷ்ய மொழியின் இன்றைய செழுமைப்பாட்டுக்கும், சொல்வளத்துக்கும், செம்மைக்கும் காரணம் ருஷ்ய சமுதாயத்தின் முற்போக்குப் பிரிவுகள் எடுக்கும் அளப்பரிய முயற்சிகளும் பல தலைமுறைகளைச் சேர்ந்த அறிஞர்களின் உழைப்புமாகும். முதலாம் பீட்டர் மன்னரின் மொழிச் சீர்திருத்தம் எழுத்து வரிவடிவம் சம்பந்தப்பட்டதாகும். திரெத்யா கோவ்ஸ்கி ருஷ்ய எழுத்து இலக்கணத்தில் சீர்திருத்தம் தேவை என்று கோரினர். ''ஒலிகளின் நாதத்தை வைத்து'' எழுத வேண்டும் என்று ஒலியியல் கோட்பாட்டை அவர் பரிந்துரை செய்தார். ஜார் ஆட்சி எழுத்தறிவும் கலாசாரமும் பரவுவதை எதிர்த்தது. ருஷ்ய மொழியின் எழுத்தாக்கத்தை எளிதாக்குவதில் அதற்கு அக்கறை இருக்கவில்லை. 19-ம் நூற்றுண்டின் இரண்டாம் பாதியில் அறிஞர்களும் ஆசிரியர்களும் பல சீர்திருத்தத்

* மார்க்ஸ்-எங்கெல்ஸ் நூல்கள், தொகுதி 38, பக். 477.

திட்டங்களை சமர்ப்பித்தார்கள். ஆனால் ஏதோ சில மாறுதல்களைத் தவிர்த்து அவையாவும் ஒதுக்கித் தள்ளப் பட்டன.

லெனின் தலைமையிலான சோவியத் அரசாங்கம் ருஷ்ய எழுத்து முறையில் ஒரு சீர்திருத்தம் செய்து அரசாணை பிறப்பித்தது (பல அவசியமற்ற எழுத்துக்கள் களைந்தெறியப் பட்டன). எழுத்தாக்க விதிகள் பலவும் ஒழிக்கப்பட்டன அல்லது எளிதாக்கப்பட்டன. இது 1917 டிசம்பர் 23-லும் 1918 அக்டோபர் 13-லும் அமலாக்கப்பட்டது.

புதிய எழுத்தாக்க விதிகளைப் புகுத்திய அரசாங்கத்தின் ஆணை "பரவலான மக்கள் திரளினர் ருஷ்ய எழுத்துக்களைப் படிப்பதை எளிதாக்கவும் எழுத்தாக்கத்துக்கு மட்டும் படிப்பதென்ற பயன் இல்லா முயற்சிகளில் இருந்து பள்ளிகளை விடுதலை செய்யவும்"* வேண்டிய அவசியத்தைச் சுட்டிக் காட்டின.

1964-ல் இஸ்வெஸ்தியா "ருஷ்ய எழுத்திலக்கணத்தை மேம்படுத்துவதற்கான புதிய யோசனைகளை" வெளியிட்டது. இவற்றை சோவியத் ஒன்றியத்தின் விஞ்ஞானங்கள் பேரவையின் ருஷ்ய மொழிக் கழகம் வகுத்திருந்தது. இந்த யோசனைகளில் தவறுகள் சில இருந்த போதிலும், தொடர்ந்து நடைபெற்றதான பொது விவாதம் காலத்துக்கு காலம் மொழியின் விதிகளில் மாறுதல்கள் தேவை என்பதை ஊர்ஜிதம் செய்தது. அதோடு ஒரு சில அகநிலைப்பட்ட உத்தரவுகள் உட்பட இவ்வாறு செய்வதிலுள்ள இடர்ப்பாடு களையும் வெளிப்படுத்தியது.

இந்த யோசனைகளை விமர்சித்த சிலர் எதை எப்படி மேம்படுத்துவது என்ற காரியத்தில் அக்கறை காட்டாமல் "தூய்மையையே" ஒரு தன்னிலையான குறிக்கோளாகக் காட்டி வாதித்தனர். இருப்பினும் ருஷ்ய மொழி இதர சோதர சோவியத் மக்களினங்களின் மொழிகள்மூலம் செழுமைப்பாடு

---

* சட்டங்கள் முடிவுகளின் திரட்டு, 1918, தொகுதி 74, விதி 804 (ருஷ்ய மொழியில்).

பெறுவது என்பது அதன் வளர்ச்சியில் ஒரு முக்கியமான அம்சமாகிவிட்டது. எடுத்துக்காட்டாக நிக்கலாய் கோகல் ருஷ்ய மொழியில் எத்தனையோ பல உக்ரேனியச் சொற்களைப் புகுத்தினர் என்பது எல்லோரும் அறிந்ததே. பாவ்லோ தைச்சீனவும் 'உக்ரேனியயத்தை'' ருஷ்யனில் ஊடும் பாவுமாகப் புகுத்தினர். மறுபுறத்தில் தாராஸ் ஷெவ்சென்கோ இன்று உலகில் ஆக வளர்ச்சியடைந்த மொழிகளில் ஒன்ருகத் திகழும் உக்ரேனிய இலக்கிய மொழியில் ருஷ்ய மொழியின் சாதனைகளைப் புகுத்திச் செழுமைப்படுத்தினர், அவர் ருஷ்யனில் எழுதிய நூல்கள் உட்பட பல தலைசிறந்த படைப்புகளை வழங்கியுள்ளார். அற்புதமான பிலோ ருஷ்ய எழுத்தாளர்களான யங்காகுபாலா மற்றும் யாகுப்கோலாஸ் தமது சொந்த இலக்கிய மொழியைச் செழுமைப்படுத்த ருஷ்யனில் இருந்து பல அம்சங்களை எடுத்தாண்டிருக்கிருர்கள்.

சோவியத் ஒன்றியத்தில் மொழிகளுக்கு இடையே போட்டி இல்லை, இருக்கவும் முடியாது. சோஷலிஸ்டு சமுதாய அமைப்பில் மொழிகளின் சமத்துவம் சம்பூர்ணமானது, தாய் மொழிமீதுள்ள பற்றுதல் மக்கள் இதர மொழிகளை மதிப்பதை எவ்விதத்திலும் தடை செய்வதில்லை. அவற்றைத் தெரிந்துகொள்வதையோ பொது மொழியாகப் பயன்படுத்துவதையோ தடுப்பதில்லை. மற்றும் சிறிய தேசிய இனங்கள் சில அதிக வசதியாக இருப்பதன் காரணம் தமதல்லாத ஒரு மொழியினைப் பயன்படுத்துவார்களாயின், அதன் மூலம் அவர்கள் தமது தனித்தன்மையை இழந்துவிட்டார்கள் என்று அர்த்தமல்ல. அவர்கள் பயன்படுத்தவென்று தேர்ந்து எடுத்த மொழி அவர்களது தேசிய இனநபர்களுக்குப் புதுவடிவிலான விளக்க முறையாக மாறி, இறுதியில் அவர்களது தாய்மொழியாகி விடுகிறது என்பதை அனுபவம் புலப்படுத்துகிறது.

ஒரு தேசத்தின் உறுப்பினர் எந்த மொழியில் கல்வி பயிற்றுவிக்கப்பட வேண்டும் என்ற கேள்வியை இந்த சந்தர்ப்ப சூழலில் எடுத்துக் கொள்வது சரியல்ல, காரணம்

இது குடியுரிமைகள் துறைமீது படை தொடுக்கும், அவற்றை ஏதேனும் ஒரு வழியில் மீறி நடக்கும். உரிமையைக் கடமையுடன் போட்டுக் குழப்பும் சில பூர்ஷுவா நூலாசிரியர்கள் குடிமக்கள் தமது தாய் மொழியில் பள்ளிக் கல்வி பெறுவதை உரிமை என்று பார்க்காமல் கடமை என்று கருதுகிருர்கள். சோவியத் ஒன்றியத்தின் குடிமக்கள் அவர்களது தாய் மொழியிலேயே கல்வி பெறவேண்டும் என்பது "முன்னனுமானம்" என்று ஒரு விமர்சகர் எழுதுகிருர். இது நடைமுறையில் எப்போதும் செயலாவதில்லை என்று அவர் புகார் செய்கிருர். நிச்சயமாயும் அது அப்படியல்ல. காரணம் சோவியத் குடிமக்கள் தமது தாய் மொழியிலேயே கற்கும் உரிமையை அனுபவிக்கிருர்கள். ஆனுல் அது கடப்பாடாக இல்லை. சோவியத் ஒன்றியத்தின் மக்களினங்களின் சமத்துவம் என்பது மற்ற விஷயங்கள் மத்தியில் மொழியைத் தேர்ந்து கொள்ளும் சுதந்திரத்தையும் கூடக் குறிப்பாக சுட்டுகிறது. ஒவ்வொரு குடிமகனும் தான் விரும்பும் மொழியில் பயிலவும், அவனது குழந்தைகளும் அதில் பயிற்றுவிக்கப்படவுமான சுதந்திரம் உண்டு. பெற்ருேர் தமது குழந்தையை ருஷ்யன், உக்ரேனியன் அல்லது தனி அயல் மொழியில் போதனை நடத்தும் பள்ளிக்கு அனுப்பிவைப்பார்களேயானுல் அது அவர்களது உரிமைகளில் அடங்கிய செயலே, இதன் மீது (தார்மிகமாயும் கூட) ஏதேனும் நிர்ப்பந்தம் கொண்டு வருவது, தாய் மொழியல்லாத மொழியில் கட்டாயப் பள்ளிப்படிப்பு என்ற முறையில் தேசிய சமத்துவம் பற்றிய லெனினது கொள்கையை மீறிய செயலாகும்.

கல்வி மீதான சோவியத் ஒன்றியம் மற்றும் ஒன்றியக் குடியரசுகளின் சட்டத்தின் அடிப்படைகள், பொதுக் கல்வியில் விரும்பிய மொழியைத் தேர்ந்து கொள்ளும் உரிமையை வழங்குகின்றன. "பொதுக் கல்விப் பள்ளிகளில் படிக்கும் மாணவர்கள் தமது சொந்தத் தாய்மொழியில் அல்லது சோவியத் ஒன்றியத்தில் வாழ்ந்து வரும் வேறு எந்த ஒரு மக்களினத்தின் மொழியில் கல்வி புகட்டப்படுவர்.

பெற்றோர் அல்லது பெற்றோருக்குப் பதில் பராமரிக்கும் நபர் தமது குழந்தைக்கு உரிய போதனு மொழி பயிற்றும் பள்ளியைத் தேர்ந்து கொள்ளும் உரிமை உண்டு. இந்த சம்பந்தப்பட்ட போதனுமொழிக்கும் கூடுதலாகமாணவர்கள் தம் விருப்பப்படி சோவியத் ஒன்றியத்தின் வேறு எந்த மக்களினத்தின் மொழியை வேண்டுமாயினும் கற்றுக் கொள்ளலாம்.''*

அவர்களது கலாசார மற்றும் கல்வி வளர்ச்சிக்குச் சாதகமான பின்னணி வழங்கவேண்டுமென்பதால், பெற்றோர் தமது குழந்தைகள் தாய்மொழியினை மட்டுமன்றி வேறு ஒரு அல்லது கூடுதல் மொழியினைப் பயில வேண்டும் என்றே விரும்புகிறார்கள். நிச்சயமாயும் தாய் மொழி என்பது உளவியல் அடிப்படையில் மிகவும் நெருக்க மானதுதான். ஆனால் இந்த மொழியை ஒரு சில ஆயிரம் பேர்கள் அல்லது சிலசமயம் சில நூறுபேர்களே பேசுவார் களானால், இது உலக கலாசாரம் மற்றும் விஞ்ஞானத்தை அறிந்தெட்டுவதற்குப் போதாது என்பது கண்கூடு. பெரிய தேசங்களைச் சேர்ந்தவர்களும்கூட தாய் மொழியல்லாத பிற மொழிகளை அதிலும் முதன்மையாக ருஷ்யமொழியை அறிந்திருப்பது அவசியம். காரணம் இது சர்வதேசியத் தொடர்மொழி. மேலும் நாட்டின் சோதர மக்களினங் களுடன் பரஸ்பர இணக்கம், தொடர்பு மற்றும் ஒத்துழைப்பை இது எளிதாக்கும். அதோடு அன்னிய மொழி களிலிருந்து மொழிபெயர்க்கப்பட்ட விஞ்ஞான மற்றும் இதர இலக்கியங்களை மேலும் சர்வாம்ச ரீதியில் தெரிந்து கொள்ள உதவும்.

''சோவியத் ஒன்றியத்தின் மக்களினங்களின் மொழிகள் கட்டற்று வளம் பெறுவதை ஊக்குவிக்கவும், சோவியத் ஒன்றியத்தின் குடிமகன் ஒவ்வொருவரும் எந்த மொழியில் வேண்டுமாயினும் பேசவும் தனது குழந்தைகளை வளர்க்கவும்

---

* சோவியத் ஒன்றியம் மற்றும் ஒன்றியக் குடியரசு களின் சட்டத்தின் அடிப்படைகள், முன்னேற்றப் பதிப்பகம், மாஸ்கோ, 1974, பக் 369.

கல்வி கற்பிக்கவுமான பூரண சுதந்திரத்தையும், எல்லாத் தனிச் சலுகைகளையும், இந்த அல்லது அந்த மொழியைப் பயன்படுத்தவேண்டுமென்ற கட்டுப்பாட்டையும் கட்டாய முடிவுகளையும் ஒழித்துக் கட்டுவதையும் தொடர்ந்து செயல் படுத்தும் என்று சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சியானது தனது வேலைத்திட்டத்தில் சாற்றுகிறது. மக்களினங்களின் சோதர நட்புறவு மற்றும் பரஸ்பர நம்பிக்கையின் பலனாக தேசிய மொழிகள் சமத்துவம் மற்றும் பரஸ்பர செழுமைப் பாடு எனும் அடிப்படையில் அபிவிருத்தியடைந்து வருகின்றன."*

தேசிய மொழிகளின் வளர்ச்சி அவற்றின் பரஸ்பர செழுமைப்பாடு, சர்வதேசியத் தொடர்பு மொழியாக ருஷ்யமொழியின் சமுதாயப் பணிகள் தொடர்ந்து விரிவடைதல் இவையாவும் கம்யூனிஸ்டு நிர்மாணத்தின் கால கட்டத்தில் வரலாற்று முறையில் முழு நிறைவாகக் கணக்கிடக்கின்றன. தாய்மொழிகள் வளர்ச்சியடைவதானது மக்கள்திரளினர் தமது கலாசாரத் தரத்தினை வேகமாக உயர்த்திக் கொள்ளவும், புதிய கலாசார மதிப்புக்களை உருவாக்கவும் இதன்வழி எல்லா மக்களினங்களின் முன்னேற்றத்துக்குமான சர்வதேசிய வள ஆதாரங்களை செழுமைப்படுத்திக் கொள்ளவும் வகை செய்கிறது. தாய் மொழியுடன் கூடவே பொது மொழி அறிவும் சேர்வது தேசிய கலாசாரத்துக்கும் வளர்ச்சிக்கும் வெளியீட்டுக்குமான புதிய வலிமை மிகுந்த சாதனங்களை வழங்குகிறது. தேசியக் கலாசாரங்கள் மேலதிகமாக பரஸ்பரம் செழுமையுறுவதை உறுதிப்படுத்துகிறது. அவற்றின் சர்வதேச அடித்தளத்தை விரிவுபடுத்தி உத்வேகமூட்டுகிறது.

தேசிய வளர்ச்சி என்று பொய்யாகக் கருதப்படும் ஒன்றுக்காக தமது சொந்த மொழியளவில் வரம்பு கட்டிக் கொள்வது என்பது தேசங்கள் தேசிய இனங்களின் குறிப்பாயும் சிறிய தேசங்களின் மெய்யான முன்னேற்றத்துக்கு

* கம்யூனிசத்துக்கான பாதை, பக். 562.

எதிரான செயலாகும். இத்தகைய சுய-கட்டாயமான தனிமைப் போக்கும் ஒன்றியம் தழுவிய மற்றும் உலகக் கருத்து மேடையை ஒரு பல்தேசிய இன நாட்டில் பொதுவான தொடர்பு மொழி வாயிலாக அடைவதில் தயக்கம் காட்டுவதும் மக்களினங்களின் சாதனைகள் பரவுவதற்கும், அவர்களின் பரஸ்பரச் செழுமைப்பாட்டுக்கும் ஒரு முட்டுக் கட்டையாகும்.

மார்க்சிய-லெனினிய போதனையால் வழிநடத்தப் படுகிற கம்யூனிஸ்டுக் கட்சி, கலாசாரங்களின் பரஸ்பர செல்வாக்கையும் செழுமைப்பாட்டையும், எல்லா தேசங்கள் தேசிய இனங்களின் உழைக்கும் மக்களின் நியாயமான தேவைகள் மற்றும் முற்போக்கான அபிலாஷைகளின் முழு நிறைவாக்கத்துக்கும் முட்டுக்கட்டையாக இருக்கும் அனைத்தையும் ஒழித்தகற்றப் பாடுபடும்.

அதன் கொள்கை தேசிய கலாசாரங்களின் மலர்ச்சியையும், அவற்றின் சர்வதேச அடித்தளங்களை சிறு தேசத்தின் கலாசாரத்தை பெரிய தேசத்தின் கலாசாரத்துக்குக் கீழடக்கி அல்ல, அவற்றை யாந்திரிகமாக ஒன்றிணைத்து அல்ல, மாறாக எல்லா தேசியக் கலாசாரங்களின் வளர்ச்சிக்கும் அவற்றின் பரஸ்பர ஊடுருவல், பரஸ்பர செழுமைப்பாடு மற்றும் இசைவிணக்கத்துக்கான பல்வகைப்பட்டதும் சாதகமானதுமான நிலைமைகளை உருவாக்குவதன் வாயிலாக உத்தரவாதம் செய்வதையே நோக்கமாகக் கொண்டதாகும்.

சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சியின் 25 ஆவது காங்கிரசிலும் உறுப்புக் குடியரசுகளின் கம்யூனிஸ்டு கட்சிகளின் காங்கிரசுகளிலும் ஆற்றிய உரைகளில் ஒன்றிய மற்றும் சுயாட்சிக் குடியரசுகளின் தேசியப் பிரதேசங்களின் பிரதிநிதிகள் கலாசாரச் செல்வங்களை தீவிரமாகப் பரிமாற்றம் செய்து கொள்வது தேசியக் கலாசாரங்களின் வளர்ச்சிக்கும் அவற்றின் பரஸ்பர செல்வாக்கு மேலும் நெருக்கமாக இணைதல் ஆகியவற்றுக்கும் மிகவும் முக்கியமான காரணியாகிவிட்டது என்று வலியுறுத்தினார்கள்.

இடைச் செயற்பாடு பரஸ்பர செழுமைப்பாடு மற்றும் தேசியக் கலாசாரங்களை தோராயமாக இணைப்பது என்று புறநிலை விதியாக இயங்கிவரும் இத்தன்மை உலக சோஷலிஸ்டு அமைப்பின் தோற்றத்தோடு மேலும் விரிவான அடித்தளத்தைப் பெற்று விட்டது. சிக்கலும் முரண்பாடும் கொண்டதாக இருப்பினும் சோஷலிஸ்டு நாடுகளின் கலாசார சங்கமிப்பு நடைமுறை அவற்றின் பொருளாதார மற்றும் அரசியல் அமைப்பினதன் ஒற்றுமையை அடிப்படையாக்கியதாகும்.

சோஷலிஸ்டு நாடுகளின் மக்களினங்களின் சோதர நட்புறவு, பொருளாதார ஒத்துழைப்பில் மாத்திரமின்றி விரிவான கலாசார செல்வங்களின் பரிமாற்றத்திலும் துலாம்பரமாக இருக்கிறது. சோஷலிஸ்டு நாடுகள் தமது விஞ்ஞான பேரவைகள், உயர் கல்வி நிலையங்கள் மட்டத்தில் இலக்கிய மொழிபெயர்ப்பு, திரைப்பட பரிமாற்றம், நாடக அரங்கு இத்தியாதி துறைகளில் விரிவாக ஒத்துழைக்கின்றன. சோஷலிஸ்டு நாடுகளின் கலாசாரத்தை வலுப்படுத்துவது எனும் எதார்த்த அவசியம் பல்வேறு தேசங்களின் மக்களின் அகவளக் கூட்டமைப்பை ஊக்குவிக்க மார்க்சிய-லெனினியக் கட்சிகள் புரியும் சேவையால் மேம்பாடுறுகிறது. அவற்றின் சமுதாய உள்ளியைபு மேலும் முனைப்படையும்போது, சோஷலிஸ்டு தேசங்கள் பலவகையான ஆனால் இன்னும் ஒற்றையான சர்வதேசக் கலாசாரத்தை உருவாக்குகின்றன.

அத்தியாயம் எட்டு

சோஷலிஸ்டு தேசபக்தியும் சர்வதேசியக் கல்வியும்

சோஷலிஸ்டு தாயகத்தைப் படைத்துருவாக்கி வளர்ப்பதற்கும், சோஷலிஸ்டு தேச பக்தியைத் தோற்றுவிப்பதற்குமான மிகவும் முக்கியமான காரணிகளில் ஒன்று, புரட்சிகர மறுசீரமைப்புச் சுற்று சூழலில் தேசிய இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதேயாகும்.

பழைய மாதிரியுடன் ஒப்பிடும்போதில் இந்தப் புதிய மாதிரியான தேச பக்தியில் காணப்பெறும் பண்பு ரீதியிலான புதிய இயல்புகள் யாவை, இது மட்டுமே கொண்டிருக்கும் இயல்புகள் யாவை? இன்றைய நிலைமைகளில் சோஷலிஸ்டு தேசபக்தியும் சோவியத் குடிமகனின் அகில தேசியப் பெருமித உணர்வும் சர்வதேசியக் கல்வியுடன் எந்தளவு நெருக்கமாக நிலவுகின்றன? சர்வதேசியக் கல்வியை செயல் விளைவுள்ளதாக்குவது எது, அதன் பிரதான போக்கியல்புகள் யாவை, அதன் முக்கிய வடிவங்கள் எவை?*

இதற்கான விடைகள் லெனினது நூல்களிலும், சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சியின் அன்றாட நடைமுறை

** ''சர்வதேசியக் கல்வி'' எனும் லெனினது தொடர் அடிக்கடி பயன்படுத்தப்படும் "சர்வதேசக் கல்வி" எனும் தொடரைவிட அதிகத் துல்லியமானது. காண்க: வி. இ. லெனின், ''நூல் திரட்டு'', தொகுதி 22, பக். 346, 353.*

யிலும் காணக் கிடக்கின்றன—இவை பூர்ஷுவா ஜனநாயகப் புரட்சி மற்றும் சோஷலிஸ்டுப் புரட்சியின் கட்டங்களிலான தேசபக்தி மற்றும் சர்வதேசியத்தின் சாரம் பற்றிய விரிவான பகுப்பாய்வில் மட்டுமன்றி, கம்யூனிஸ்டு நிர்மாணத்தின் காலப் பகுதிக்கு உருவரை செய்யப்பட்டதான முக்கியமான முறைமை இயல் கோட்பாடுகளிலும் கூட இந்த விடைகளைக் காணலாம்.

1. சோஷலிஸ்டு தேசபக்தியின் சர்வதேச சாரம்

சோஷலிஸ்டு தாயகம் படைத்துருவாக்கப் படுவதும், புது மாதிரியான தேசபக்தியின் தோற்றமும் நிகழ்வதற்கு முன்னரே முதலாளித்துவ சமுதாயத்தின் கருப்பையில் சோஷலிசத்தின் வெற்றிக்குரிய பொருளாயத,தொழில்நுட்ப மற்றும் சித்தாந்த முன் நிபந்தனைகள் பக்குவம் பெற்று விடுகின்றன.

முதலாளித்துவமானது, உற்பத்தி சக்திகளின் பெருக்கத்துக்கு ஒரு தடையாக மாறிவிட்ட உடனேயே அது சமுதாயத்தின் நலன்களுடன் மோதத் தொடங்குகிறது. உற்பத்தி சாதனங்களிலான தனியார் உடைமையும் ஏகபோக பூர்ஷுவாக்களின் அரசியல் ஆதிக்கமும் சமுதாய மற்றும் தேசியப் பகைமை முரண்பாடுகளைத் தோற்றுவிக்கின்றன. இவையே தேசிய ஒடுக்குமுறை மற்றும் தேசியவாதம் போலிப் பொதுப்பற்று (காஸ்மோபாலிடனிசம்) போன்ற சித்தாந்தங்களின் அடிவேராக இருக்கின்றன.

முதலாளித்துவ சமுதாயத்தில் தொடர்ந்து நிலவும் சிறுவீத உடைமையுரிமையே பழைய-பாணி தேசபக்திக்கான பொருளாதார மண்வளமாகும். வெளி நாட்டு மார்க்கெட்டுடன் எவ்வித சம்பந்தமும் இல்லாததால் குட்டி-பூர்ஷுவாக்கள் ஏகபோக பூர்ஷுவாக்களை விடவும் அதிக தேசபக்தியுள்ளவர்களாக இருக்கின்றனர். ஆனால் அவர்களது தேசபக்தி குறுகியது; வரம்புக்குட்பட்டது. அவர்கள் தமது நாட்டின் நலன்களை அதன் சுதந்திரத்தில் மட்டுமே பிரதான

மாயும் கருதிப் பார்க்கிறார்கள். அவர்கள் தமது எதிர் காலத்தை உலகளாவிய புரட்சி இயக்கத்தின் வருங்காலத் திசை வழிகளுடன் சேர்த்துக் காண்பதில்லை.*

பெருவீத முதலாளித்துவத் தொழில் துறை மூலம் தோற்றுவிக்கப்பட்டதும், தனது ஜீவாதார நலன்களுக்கு ஒற்றுமையைத் தேடி நாடுவதுமான தொழிலாளி வர்க்கம் மட்டுமே, மார்க்சிய-லெனினியக் கட்சியின் உதவியுடன் தனது நாடு, தேசம் மற்றும் உலக முன்னேற்றத்தின் நலன்களை விஞ்ஞான பூர்வம் அறிந்தேற்றுச் செயல்படமுடிகிறது.

தொழிலாளி வர்க்கத்தின் பொருளாதார நிலவரம், அதன் விமோசனத்துக்கான நிலைமைகள் மற்றும் அதன் வர்க்க விரோதி யாவுமே லெனின் சுட்டிக்காட்டியது போல தேசிய மட்டத்திலானவை அல்ல, மாறாக சர்வதேசியத் தன்மை கொண்டவை.** இதனால்தான் தொழிலாளி வர்க்கம் தனது நாட்டின் வளர்ச்சியின் வருங்காலத் திசை வழி உலகக் கம்யூனிஸ்டுப் புரட்சியின் வெற்றியைச் சார்ந்து இருப்பதாகக் கருதுகிறது.

சோஷலிசத்திற்கான அதன் வர்க்கப் போராட்டத்தின் நோக்கு நிலையில் இருந்து பார்த்தால் முதலாளித்துவச் சுற்றுச் சூழலில் உள்ள பாட்டாளி வர்க்கம் தான் வாழ்ந்து, தனது போராட்டங்களை நடத்தி வரும் சம்பந்தப்பட்டதான அரசியல் கலாசார மற்றும் சமுதாய சுற்றுச்சூழல் என்ற முறையில், தாயகம்பால் அசட்டையாக இருக்க முடியாது என்பது தெரியவரும்.***

பொருள் உற்பத்தித் துறையிலான அதன் உழைப்பு மற்றும் ஜனநாயகம்,தேசிய சுதந்திரம், சோஷலிசத்துக்கான அதன் அரசியல் பொருளாதார சித்தாந்தப் போராட்டம்

* காண்க வி. இ. லெனின், ''நூல் திரட்டு'', தொகுதி 28, பக். 187.

** காண்க அதே நூல், தொகுதி 35, பக். 247.

*** காண்க அதே நூல், தொகுதி 15, பக். 195.

ஆகியவை, சமூக அரசியல் அமைப்பு மீது தாக்கம் செலுத்துகின்றன, அதோடு நாட்டின் பொருளாதார, கலாசார முன்னேற்றத்துக்குப் பங்குப்பணி ஆற்றுகின்றன.

ஆனல், முதலாளித்துவ வர்க்கத்தின் ஆதிக்கம் தொழிலாளி வர்க்கம் மற்றும் அதன் நேச சக்திகளின் முயற்சிகளைக் கட்டுப்படுத்த முனைகிறது. பூர்ஷுவாக்கள், மக்கள் திரளினரின் உணர்வை தேசியவாத சித்தாந்தத்தின் செல்வாக்கின் கீழ் வைத்திருக்கப் பல வழிகளில் முயல்கின்றனர். சர்வதேசியக் கண்ணேட்டம் பரவுவதை சித்தாந்தப் பிரசாரக் கருவிகள் மட்டுமன்றி, கம்யூனிஸ்டு மற்றும் தொழிலாளர் கட்சிகளை எதிர்த்த அடக்கு முறைகளும் தடைப்படுத்துகின்றன.

சுரண்டும் வர்க்கங்கள் ஒழிக்கப்படுவதும், பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் நிறுவப்படுவதும் உற்பத்தி சாதனங்கள் பொதுவுடைமை செய்யப்படுவதும் மட்டுமே, சோஷலிஸ்டுத் தாயகத்தையும் புது மாதிரியான தேச பக்தியையும் உருவாக்க உத்தரவாதம் தர முடியும்.

புதிய சோஷலிஸ்டு தேசபக்திக்கான அரசியல் அடிப்படை சோஷலிஸ்டு ஜனநாயகமே. இது எந்த தேசிய இனத்தைச் சார்ந்தவர்களாக இருப்பினும் சரி, எல்லா உழைக்கும் மக்களுக்கும் வரையறையற்ற அரசியல் உரிமைகளை வழங்குகிறது. பல்தேசிய இன அரசுகளில் ஆளும் தொழிலாளி வர்க்கத்தின் பல்வேறு தேசிய படைப்பிரிவுகள், தமது அடிப்படையான வர்க்க நலன்களின் முற்றொருமை காரணமாக, இதர நாடுகளின் பாட்டாளிகளுடன் சேர்ந்து நிற்பதால் ஒன்றிணைக்கப்படுகின்றன.

இந்த அடிப்படை நலன்கள் கம்யூனிஸ்டு கட்சியின் வாயிலாக வெளியிடப்படுகின்றன. இக்கட்சி சர்வதேசிய மற்றும் வர்க்க ரீதியில் கட்டமைக்கப் பட்டுள்ளது. இதன் வேலைத் திட்டமானது, தேசிய ஒடுக்குமுறை மற்றும் அசமத்துவத்தை ஒழித்தகற்றுவது, ஒவ்வொரு தேசமும் தேசிய இனமும் சுயேச்சையான பொருளாயத மற்றும் அகவள

முன்னேற்றத்தைப் பெற வகை செய்வது, மேலும் நெருக்கமான நட்புறவு, ஒத்துழைப்பு, பரஸ்பர உதவி மற்றும் எல்லா மக்களினங்களின் இணைவு ஆகியவற்றை அமல் நடத்த உத்தேசித்துள்ளது.

பொதுவான உடைமையும் பொதுவான தேசிய வருவாயும், பல்தேசிய இன நாட்டின் முழு அளவுக்குமான வகையில் பொதுவான பொருளாதார நலன்களை உருவாக்குகின்றன. பரஸ்பர பொருளாதார, விஞ்ஞான தொழில் நுட்ப உதவிக்கும் மக்களினங்கள் மத்தியில் உள்ளபடியே அசமத்துவம் ஏதேனும் இருப்பின் அதையும் பழங்கால சமுசயங்களையும் ஒழித்து நீக்கவும் சாதகமான நிலைமைகள் தோன்றியுள்ளன.

பல்தேசிய-இன நாட்டின் இயற்கைச் செல்வாதாரங்களைக் கூட்டாகப் பயன்படுத்தல், சோஷலிஸ்டு உற்பத்திப் பாங்கினை அடிப்படையாக்கிய கூட்டு உழைப்பு, ஒற்றைப் பொருளாதாரத் திட்டம் இவை யாவும் ஒவ்வொரு தேசமும் தேசிய இனமும் தாயகம் ஒட்டுமொத்தமாகவும் முன் என்றுங்கண்டிராத அளவுக்கு உயர் வீத அபிவிருத்தி பெறுவதை உறுதிப்படுத்துகின்றன.

முன்னாட்களில் சொந்த நாட்டின் தேசியப் பரப்பின் பூகோள எல்லைகளுக்குக் கட்டுப்படுத்தப்பட்டிருந்த, தாயகம் பற்றிய கருத்துரு மிகவும் விரிவடைந்து விட்டது. ஒரு கருத்துரு என்ற முறையில் தாயகம் என்பது, எல்லா தேசங்கள் தேசிய இனங்கள் விஷயத்தில் சோவியத் பல்தேசிய இன நாடு முழுவதையும் சேர்த்து அமைத்த ஒன்றாகும்.

சோஷலிஸ்டு தேசபக்தி, சமுதாயத்தின் வர்க்கக் கட்டமைப்பில் ஏற்படும் மாறுதல்களை—முதலாவதாயும் முக்கியமாயும் சுரண்டும் வர்க்கங்கள் ஒழித்தகற்றப்படுவதை ஒட்டிச் சார்ந்து நிற்கிறது, இந்த வர்க்கங்களே தேசியவெறி மற்றும் தேசியவாத சித்தாந்தத்தை வளர்க்கின்றன. சர்வ தேசியவாதக் கருத்துருக்களை முரணின்றி ஏந்திநிற்கும் தொழிலாளி வர்க்கத்தின் சதவிகிதம் மக்கள் தொகையில் அதிகரிக்

கிறது. விவசாயத்தில் ஏற்பட்டுள்ள சோஷலிஸ்டு மாற்றமுங் கூட தேசிய குறு மனப்பான்மையின் மூல காரணங்களை ஒழித்து நீக்க உதவுகின்றது.

தொழிலாளர் விவசாயிகள் கூட்டணி வலுப்பட்டு, உழைக்கும் மக்களின் கலாசார தொழில் நுட்ப கல்வித் தரங்கள் உயர்வடைவதோடு, சோஷலிஸ்டு தேசபக்தியின் சமூக அடித்தளம் மேலும் உரமடைகிறது. விவசாயத்தில் வேகமான தொழில் நுட்ப வளர்ச்சி, கூட்டுப் பண்ணை ஜனநாயகத்தின் விரிவாக்கம், நாட்டுப்புறத்தில் கலாசாரப் பெருக்கம் இவை விவசாயிகளின் கல்வித்தரத்தையும் தொழில் திறனையும் உயர்த்தி அவர்களது அரசியல் உணர்வை மேம்படுத்துகின்றன.

பொருளுற்பத்திக்கு மேலும் அதிக ஆட்கள் தேவை என்பதால், பழையதும் புதியதுமான தொழில்துறை மற்றும் கலாசார மையங்களில் பல்வேறு தேசிய இனங்களைச் சேர்ந்த மக்கள் சென்று திரள்கிறார்கள். இதுவுங்கூட தேசிய எல்லைப் பிரதேசங்களின் முன்னாள் மாகாணத் தனித்தன்மையை உடைக்க உதவுகிறது.

முதலாளித்துவத்தின் கீழ் சமுதாயத்தில் ஒரு பகுதி மட்டுமே தொழிலாளி வர்க்கமும் அதன் சித்தாந்த நிலைகளை ஏற்றுக் கொள்ளும் மக்களுமே சர்வதேசிய உணர்வு கொண்டிருந்தார்கள். சோஷலிசத்தின் வெற்றியைத் தொடர்ந்து மார்க்சிய-லெனினிய சித்தாந்தம் ஏற்றம் பெற்றுத் தலைமை சித்தாந்தமாக மாறியது. இந்த சித்தாந்தம்தான் சரி நுட்பமாயும், சோஷலிஸ்டு தேசபக்தியின் பாட்டாளி வர்க்க சர்வதேசியத்தின் மூலாதாரமாகத் திகழ்கிறது.

ஆகவே, சோஷலிஸ்ட் தேசபக்திக்கு பண்புமுறையிலான புதிதான அரசியல் பொருளாதார சமூக சித்தாந்த அடித்தளம் உள்ளது. இதுவே, இதன் பிரத்தியேகமான மிகவும் இன்றியமையாத இயல்புகளையும், பழைய-காலத்து தேச பக்தியுடனான இதன் அடிப்படை வேறுபாட்டையும் நிர்ணயம் செய்கிறது.

சோஷலிஸ்டு தேசபக்தி பழைய தேசபக்தியில் காணப் பெற்றதான ஆகச் சிறந்த அம்சங்கள் அனைத்தையும் ஏற்றுத் தன்வயப்படுத்தியுள்ளது, அது, "நூறு ஆயிரம் ஆண்டு காலமாக தனிப்பட்ட தாயகங்கள் இருந்த காரணத்தால் புகுத்தப்பட்டதான மிகவும் ஆழமாக வேரோடிக்கிடக்கும் ஆவேச உணர்ச்சிகளில் ஒன்றாகும்."* அதில் நாட்டின் மக்கள் தொகையில் இடம்பெற்றுள்ள எல்லா தேசங்கள், தேசிய இனங்களின், தேசிய ஜனநாயக மரபுகளிலான முற்போக்கான முன்மாதிரியான சகலமும் ஒருமுகமாகச் செறிந்து கிடக்கின்றன: தாய்நாட்டின் மீது அன்பு, குழந்தைப் பருவமுதலே பரிச்சயமான இயற்கைமீது பாசம், தாய்மொழி கலாசாரம் தம்மக்களின் வழக்கங்கள் மீது பற்று, உலகின் ஜனநாயகக் கலாசாரத்துக்குத் தம்மக்கள் தந்துள்ள பங்களிப்புப் பற்றிய தேசியப் பெருமிதம், கடந்த காலத்திய வீரசாகசங்கள் குறித்த பெருமை இத்தியாதி.

ஆனால் பழைய காலத்திய தேசபக்தியிடமிருந்து முற்றிலும் வேறுபட்ட சோஷலிஸ்டு தேசபக்தியின் பிரதான உள்ளடக்கம், கம்யூனிஸ்டு லட்சியத்தின்பால், சோஷலிஸ்டு அமைப்பு மற்றும் மார்க்சிய லெனினியக் கட்சியின்மாட்டு பற்றுறுதி, அர்ப்பணிப்பு இவையாவும் சமுதாயம் முழுவதன் நலனுக்குமாக, முதலாளித்துவத்தின் கீழ் என்றுமே எண்ணிப்பார்க்கவியலாத அத்தகைய வழிகளில் நாட்டின் பொருளாதார சமூக அரசியல் மற்றும் கலாசார முன்னேற்றத்தை உத்தரவாதம் செய்கின்றன. எல்லா தேசங்களையும் தேசிய இனங்களையும் சார்ந்த உழைக்கும் மக்கள் தமது பொதுவான சோஷலிஸ்டு தாயகத்தின் மீதான தமது பற்றுதலை வெளியிடுவதற்கான ஏது இதுவே. வாழ்விலும் உழைப்பிலும் இந்தப் பொதுவான புரட்சிகர மரபுகளிடம் அவர்கள் பக்தி சிரத்தை காட்டுவதும் இதனால்தான்.

சமாதானம் ஜனநாயகம் மற்றும் சோஷலிசத்திற்கான போராட்டத்தில் முன்னணிப் படையாக நிற்கும்,

---

* வி. இ. லெனின், "நூல் திரட்டு", தொகுதி 28, பக். 187.

பல்தேசிய இன சோவியத் மக்கள் அனைவரைப் பற்றியும் பெருமிதம், போராட்டத்திலும் பொறுப்பான பணியிலும் தோற்றுவிக்கப்படும் அவர்களது சர்வதேசிய மரபுகள் குறித்த பெருமிதம், இவையே கம்யூனிசத்தை நிர்மாணித்து வருகிற நாட்டின் எல்லா தேசங்கள், தேசிய இனங்களையும் சேர்ந்த உழைக்கும் மக்களின் தேசபக்த உணர்ச்சிகளில் மதிப்புடையதும் முழுநிறையானதுமான சகலத்தையும் அரவணைத்து நிற்கின்றன.*

சோஷலிஸ்டு தேசபக்தியின் சாரம், பின்வரும் லெனினது தத்துவக்கூறில் விளக்கப்பட்டுள்ளது: வெற்றி வாகை சூடிய தொழிலாளி வர்க்கம் சோஷலிஸ்டு தாயகத்தை ஆதரித்துக் காத்து நிற்கிறது. சோஷலிசத்தை தாயகமாகவும், சோவியத் குடியரசை சோஷலிஸ்டு உலக சைனியத்தின் ஒரு படைப்பிரிவாகவும் கருதுகிறது. மேலும் இதர தேசங்களின் தொழிலாளர்களின் சோதரக் கூட்டணியிடம் விசுவாசமுடன் நடந்து கொள்கிறது.''** இது பிரம்மாண்டமான முறைமையியல் முக்கியத்துவமுடையதாகும். மேலும் சோஷலிஸ்டு தேசபக்தியின் பிரதான உள்ளடக்கம் எக்காரணங்கொண்டும் அதன் பொது ஜனநாயக மற்றும் பிரத்தியேக தேசிய மரபுகளால் மூடி மறைக்கப்படலாகாது எனும் முக்கியமான தத்துவார்த்த மற்றும் நடைமுறை அரசியல் முடிவுக்கு இட்டுச் செல்கிறது.

பிரதானமாயும் குட்டி பூர்ஷுவா தன்மை கொண்டதும் தன் மக்களை இதர மக்களினங்களுக்கு எதிராக வைப்பதுமான, பழைய தேசபக்தி போலன்றி, சோஷலிஸ்டு தேசபக்தி சாரத்தில் சர்வதேசியத் தன்மையுடையது:

---

* காண்க: லி. இ. பிரெஷ்நேவ், **சோவியத் சோஷலிஸ்டு குடியரசுகளின் ஒன்றியத்தின் 50 ஆம் ஆண்டுவிழா**, பக். 78.

** காண்க: வி. இ. லெனின், "நூல் திரட்டு", தொகுதி 27, பக். 163.

முதலாவதாயும் இதன் அரசியல் பொருளாதார சமூக மற்றும் சித்தாந்த அடித்தளங்கள் சர்வதேசியத் தன்மை கொண்டவை;

இரண்டாவதாக, ஒவ்வொரு சோஷலிஸ்டு நாட்டிலும் இதனை உயர்த்திப் பிடித்து நிற்போர் சம அளவிலான எல்லா தேசங்கள் தேசிய இனங்களையும் சேர்ந்த உழைக்கும் மக்களே ஆவர்;

மூன்றாவதாக, இது தனது நாடு, தேசம் அல்லது தேசிய இனத்தின் வருங்காலத் திசை வழியை சர்வதேசிய பாட்டாளி வர்க்க ஒருமைப்பாட்டுடனும், சர்வதேசத் தொழிலாளி வர்க்கம் அதன் நேச சக்திகளின் வர்க்கப் போராட்டத் தோடும், சர்வதேசிய அளவிலான கம்யூனிசத்தின் வெற்றி யோடும் இணைத்துக் கொள்கிறது.

நான்காவதாக, சோஷலிஸ்டு நாடுகளின் உழைக்கும் மக்களின் தேசபக்தச் செயல்பாடுகள் புறநிலை உள்ளடக் கத்திலும் முக்கியத்துவத்திலும் அவர்களது சர்வதேசியக் கடமையின் நடைமுறை நிறைவேற்றமாகவே இருக் கின்றன.

இதனால்தான், சோஷலிஸ்ட் தேசபக்தி பூர்ஷுவா தேசிய வெறி அல்லது தேசியவாதம் அல்லது குட்டி பூர்ஷுவா குறுமனப்பான்மை இவற்றுடன் ஒவ்வாததாக உள்ளது. இது ஸ்தாபன உறுப்பு என்ற முறையில் பாட்டாளி வர்க்க சோஷலிஸ்டு சர்வதேசியத்துடன் இணைந்து நிற்பது. இதன் விளைவாக இதன் வளர்ச்சியானது சர்வதேசியக் கல்வியுடன் நெருக்கமாகத் தொடர்பு கொண்டு இயங்கும்.

தேசபக்த மற்றும் சர்வதேசியக் கல்வி அங்க ரீதியாகத் தொடர்பு பூண்டு இருப்பதை சோவியத் கம்யூனிஸ்டு கட்சி யின் மத்தியக் கமிட்டி தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது. மக்களை சோவியத் தேசபக்தி, நட்புறவு, சகோதரத்துவம் எனும் உணர்விலும், சோஷலிஸ்டு நாடுகளின் மக்களுடனான சமூக தேசிய விடுதலை, ஜனநாயகம், சமாதானம்,

சோஷலிசம் ஆகியவற்றுக்காகப் போராடி வரும் எல்லா மக்களினங்களுடனுன சர்வதேச ஒருமைப்பாட்டு உணர்வில் மக்களுக்குப் போதனை அளிக்கும் அதன் கொள்கையை மீண்டும் ஊர்ஜிதம் செய்கிறது.

லெனின் வகுத்தளித்த பாதையில் நாட்டின் எதிர்கால வளர்ச்சி குறித்த பிரச்சினைகளுக்கு கட்சி தீர்வு காணும் போதில், அது சர்வதேசிய உணர்விலும் சோவியத் தேச பக்தி உணர்விலுமான தொடர்ச்சியான முறையான கருத்தாழ மிகுந்த கல்வியை எல்லா சோவியத் குடிமக்களுக்கும் பயிற்றுவிக்கும் விஷயத்தில் மாபெரும் முக்கியத்துவம் தருகிறது''* என்று லி. இ. பிரெஷ்நெவ் வலியுறுத்தினுர். தேசபக்த-சர்வதேசிய உணர்வின் உள்ளடக்கம், புறநிலை மற்றும் அகநிலைக் காரணிகளைச் சார்ந்து இருக்கிறது. கம்யூனிஸ்டு நிர்மாண கட்டத்தில் பின்வருவன புறநிலைக் காரணிகளாக விளங்கும்:

—உற்பத்தி சக்திகளை துரிதமாக அபிவிருத்தி செய்வதன் வாயிலாக கம்யூனிசத்தின் பொருளாயத மற்றும் தொழில் நுட்ப அடித்தளத்தை உருவாக்குதல், நாடு முற்றும் வேகமான விஞ்ஞான தொழில்நுட்ப முன்னேற்றம், தேசங்கள் தேசிய இனங்களின் பொருளாதாரத் தரங்களை மேலும் சமப்படுத்துதல், அவற்றின் பொருளாதாரக் குடும்பத்தை வலுப்படுத்தல் பல்தேசிய இன உற்பத்திக் கூட்டமைப்புகளின் எண்ணிக்கைப் பெருக்கம்;

—சமுதாய உறவுகளை மேம்படுத்தல், வர்க்க மற்றும் வர்க்கங்கள் இடையிலான ஏற்றத்தாழ்வுகளை அகற்றுதல், சமுதாயத்தின் சமூக உள்ளியைபை மேலும் விஸ்தரித்தல், சோஷலிஸ்டு ஜனநாயகத்தை வளர்த்தல், உழைக்கும் மக்களின் தீவிரமான லட்சியப் பொறுப்பை மேலும் ஊக்குவித்தல், சோஷலிஸ்டு நாட்டின்பாலான அவர்களது கடப்பாட்டு உணர்வை அதிகரித்தல்;

---

* லி. இ. பிரெஷ்நெவ், **சோவியத் சோஷலிஸ்டு குடியரசுகளின் 50 ஆம் ஆண்டு விழா**, பக். 37.

—நாட்டின் அகத்தே தேசங்கள் தேசிய இனங்களை உறுதியாக ஒன்று சேர ஈர்த்தல், இதர நாடுகளின் உழைக்கும் மக்களுடன் மேலும் பலமான சர்வதேசியப் பிணைப்புக்கள் ஏற்படுத்தல்;

—தேசிய கலாசாரங்கள் தொடர்ந்து சங்கமித்தலும் பரஸ்பர செழுமைப்பாடும், வாழ்க்கைப் பாணி படிப் படியாக சர்வதேசியமயமாதல், பல்வேறு தேசங்களின் மக்களுக்கும் பொதுவான புதிய மரபுகள் ஏற்படுதல்.

இந்த நடப்புக்கள்தான் தேசங்கள் தேசிய இனங்களின் தொடர்ந்து ஆக்கம் பெற்று வரும் நட்புறவு மற்றும் ஒற்றுமைக்கும், புதிய வரலாற்று மக்கள் சமுதாயமான-பல்தேசிய இன சோவியத் மக்கள் மேலும் திடமுறவும், இதன் பின்விளைவாக பொதுவான தேசபக்த சர்வதேசிய உணர்வு பரிணமிப்பதற்கும் அடிப்படையாக இருக்கிறது.

“கம்யூனிசத்தை நிர்மாணிப்பதில் நாம் எந்தளவுக்கு முன்னேறுகிறோமோ அந்த அளவுக்கு அதிகமாக சோவியத் ஒன்றியத்தின் மக்களினங்கள் அனைத்தையும் ஒன்றாக இணைக்கும் பொருளாதார, கலாசார மற்றும் இதர உறவுகள் கூடுதல் பல்வடிவமும் வலுவும் பெறுகின்றன. சோவியத் மனிதனின் தேசியப் பெருமிதம் என்று நாம் அழைக்கும் அந்த மகத்தான குடும்பத்தின் உன்னத உட்பொருள் மேலும் வலுவும் பொலிவும் பெறுகிறது”*

ஆனால் தேசபக்தி மற்றும் சர்வதேசியக் கல்வியில் ஓர் அகநிலைக் காரணியும் உள்ளடங்கி இருக்கிறது—கட்சி மற்றும் இதர பொது அமைப்புகளின் ஸ்தாபன மற்றும் சித்தாந்தப் பணி பற்றியதாகும் அது.

பழைய பாணி தேசபக்தி பிரதானமாயும் தன்னியல் பானது, இது புறநிலைக் காரணங்களால் நூற்றாண்டுகள் ஆயிரமாண்டுகளாக பரிணமித்து வந்தது. ஆனால் சர்வதேசியவாத உணர்வு இதே வழியில் தோன்ற

* வி. இ. பிரேஷ்நேவ், **சோவியத் சோஷலிஸ்டு குடியரசுகளின் 50 ஆம் ஆண்டு விழா**, பக். 87.

முடியாது. ஒருவரது சொந்த அனுபவங்கள் மற்றும் தாய் நாட்டின்பாலான இயல்பான பாசம் இவற்றின் அடிப்படையிலிருந்து மட்டுமே பிறக்க முடியாது.

சர்வதேசிய போதனை என்பது, எல்லா கட்சி சோவியத் பொருளாதார, கலாசார, பொது அமைப்புகள், மத்தியிலும் வட்டாரங்களிலும் ஒவ்வொரு குடியரசிலும், பிரதேசத்திலும் பிராந்தியத்திலும் கூட்டு அமைப்பிலும் இருக்கும் எல்லா ஊழியர்களின் கேந்திரமான கடமையாகும்.''*

பொதுவாக, பலபேர் சமுதாய நிகழ்ச்சிகளில் வரம்புக்கு உட்பட்டே செயல்பட முடியும்—அவர்களது வயது, வேலை, இருப்பிடம் இத்தியாதி வரம்புகளுக்கு உட்பட்டே இது சாத்தியம். அவர்களுக்கு இதர மக்களுடன் மிகச் சில நெருக்கமானதும் நேரடியானதுமான பிணைப்புக்களே உண்டு.

மேலீடாகப் பார்த்தால் அவர்கள் பல்வேறு மக்களின் தேசிய நலன்களின் இடையிலான தற்காலிக முரண்பாடுகளை அடிக்கடி பின்பற்றிவரக் காணலாம். சர்வதேச அரங்கிலான விடுதலை இயக்கமும், உலக சோஷலிஸ்டு அமைப்பு வலுப்படுவதும் தமது சோஷலிஸ்டு நாட்டுக்கான, தேசத்துக்கான உதவியும் ஆதரவும் என்ற கருத்திலோ, தமது சொந்த நலவாழ்வுக்கான தீர்மானகரமான காரணி என்பதாகவோ, அவர்களுக்கு நேரடியாகப் புலப்படுவதில்லை. பல்வகைப் பட்ட நிகழ்ச்சிகளின் அடிப்படையில் காணப்படும் உலக உழைப்பாளி மக்களின் பொதுவான நோக்கங்கள் மற்றும் ஜீவாதாரமான வர்க்க நலன்களை மெய்யாகவே புரிந்து கொள்வதற்கு விஞ்ஞான அறிவும் நுழைபுலமும் எல்லோருக்கும் தேவை.

சர்வதேசிய வாதத்தின் சித்தாந்தம் ஒட்டுமொத்தமான உலகப் புரட்சி இயக்கத்தின் அனுபவத்தை அடிப்படை

---

* சோவியத் சோஷலிஸ்டு குடியரசுகளின் ஒன்றியத்தின் உருவாக்கத்தின் 50 ஆம் ஆண்டு விழா தயாரிப்புகள் பற்றி சோ.க.க.ம.க. தீர்மானம், பக். 25.

யாகக் கொண்டு வளர்ந்து வருகிறது. விஞ்ஞானபூர்வமான மார்க்சிய—லெனினியக் கண்ணோட்டத்தின் ஒரு பாகம் என்ற முறையில், இது உழைக்கும் மக்களிடம் கம்யூனிஸ்டுக் கட்சியால் புகட்டப்படுகிறது.

ஆனால் சோஷலிசம் கட்டி நிர்மாணிக்கப்படும் தறுவாயில் சர்வதேசியக் கருத்துக்கள் வலுப்படுவது தேசிய வாதம் மற்றும் குறுதேசிய வெறி ஆகியவற்றின் வெளிப் பாடுகளுக்கு எதிராக முழுமையான உத்தரவாதம் செய்ய முடிவதில்லை. இந்தப் போக்குகள் எந்த ஒரு திட்டவட்ட மான வர்க்கம் அல்லது சமூகப் பிரிவினரால் உருவமைக்கப் படுவதில்லை என்பது தெரிந்ததே. சமுதாய உணர்வில் அன்றி தனிப்பட்டோர் உணர்வில் தோற்றமளிக்கும் இவை ஒரு ''சிறு குழுவின்'' செல்வாக்கின் கட்டாயத்துக்குள்ளா கின்றன.

வேறு சொற்களில் கூறிடின், கம்யூனிஸ்டு உருவாக்கத் தின் தன்மை, குறுதேசிய வெறி மற்றும் தேசியவாதம் நீடிப் பதற்குரிய புறநிலை அடிப்படையினை ஒவ்வாததாக்கி விடு கிறது. முதலாளித்துவத்தின் சூழலில் இருந்து எழுச்சியுற்று வருவதான கம்யூனிசத்தின் கீழ் கட்டமான சோஷலிஸ்டு சமுதாய அமைப்பில், இந்த மீதமிச்சங்கள் சுரண்டும் அமைப்பின் விளைவேயாகும். தேசங்களுக்கு இடையிலான தகராறுகள், பிரதேச மோதல்கள், சமயப் பூசல்கள், காலனி அடிமைத்தனம், கலாசாரம் அல்லது மொழி ஒடுக்கப்படுதல் இவற்றின் நினைவுகள் மக்கள் உணர்வில் நீண்டகாலம் நிலவும்.

இதற்குக் காரணம் வேறு விவகாரங்களுடன் கூடவே, முதலாளித்துவத்தின்கீழ் எமது நாட்டிலும், இதர சோஷ லிஸ்டு நாடுகளிலும், குறிப்பாயும் தேசிய எல்லைப்புற வட்டாரங்களிலுமுள்ள மக்கள் தொகையில் கணிசமான பகுதி பாட்டாளிகளல்லாத பகுப்பினர் அல்லது அவர்களது பொருளாதார சமுதாய நிலைமை காரணமாக மக்கள் நலன்கள் பற்றிய அரைகுறையான கருத்துடைய நபர்களாக இருக்கிறார்கள் மற்றும் இவர்களுக்கு சர்வதேசப்

பாட்டாளி வர்க்க ஒருமைப்பாடு என்பது புரிந்துகொள்ள இயலாத அன்னியக் கருத்தாக இருக்கிறது என்ற மெய்நடப் பேயாகும்.

குறுதேசியவெறி மற்றும் தேசியவாதத்திற்கு ஒரு காரணம், சில காலத்துக்கு தேசங்களின் அசமத்துவம் நிலவியதும், அவற்றின் பொருளாதார கலாசார மட்டங்கள் முதலாளித்துவத்திடமிருந்து மரபாகப் பெறப்பட்டிருந்தது மாகும்.

தேசியவாதம் நீடிப்பதும் சில சமயங்களில் ஊக்குவிக்கப் படுவதும் அகநிலைக் காரணங்களாலும் ஏற்படலாம். புதிய சமுதாயம் நிர்மாணிக்கப்படும்போது அதன் புறநிலை சமூக நியதிகள் பற்றிய முழு மதிப்பையும் போதியளவு புரிந்து கொள்ள முடியாமை, லெனினது தேசியக் கொள்கையின் கோட்பாடுகளை ஒருசில அகவயக் காரணங்களால் மீறி செயல்படல், அரசு மற்றும் கட்சி அமைப்புக்களின் சித்தாந்தப் பணியிலான குறைபாடுகள் இவையும் இதற்கு ஏதுவாகலாம்.

குறுதேசிய வெறி நீடிப்பதற்கு காரணம் இதரதேசங்கள் தேசிய இனங்களின் பிரத்தியேக நலன்களை அதிகார வர்க்க பாணியில் அசட்டை செய்வதும், அவற்றின் மொழி, பழக்கங்கள் மற்றும் கலாசாரத்தை அதிகார வர்க்க பாணியில் அவமதிப்பதும் ஆகும்.

தேசியவாதத்தின் வெளிப்பாடுகள் என்ற முறையில் தேசியத்தன்முனைவம், பிரதேச வெறி, தேசிய அகம்பாவம் மற்றும் விஞ்ஞானம்,கலாசாரத்தில் இதர மக்களின் பங்களிப் பைச் சிறுமைப்படுத்தி, தேசத்தின் சாதனைகள் சம்பந்த மாகப் போலித் தற்பெருமை காட்டல், தேசங்கள் ஒப்புக் கொண்ட பொது மொழி மீது வெறுப்பு, சோதர குடியரசு களின் முன்னேற்றமான அனுபவத்தை இகழ்தல், தேசியத் தன்னல நாட்டம் ''தேசிய முற்றொருமை''யைப் பாதுகாப்ப தாகச் சாக்குச் சொல்லி இதர குடியரசுகளில் இருந்து மக்கள் பெயர்ந்து வருவதைத் தடுக்க முயல்வது, தேசத்தின் வரலாற்றை மிக்குயர்படுத்தல், காலாவதியாகிப் போன

தேசிய மரபுகளைக் கட்டிக்காத்தல் இத்தியாதிகளைக் குறிப்பிடலாம்.

தேசிய வாதம் அபாயகரமானது. காரணம் அது தேசிய உணர்ச்சி ஆவேசங்களை வைத்துச் சூதாடுகிறது. இதன் பற்றாளர்கள் தேசபக்தர்களாகவும், தேசிய நலன்களின் மெய்யான வீர ஆதரவாளராயும் வேடமிட்டுத் திரிகிறார்கள். அதேசமயம், சர்வதேசிய வாதத்தை தேசம் அல்லது தேசிய இனத்தின் நலன்கள்பால் எதிர்மறையான தோரணை கொண்டதாகச் சித்திரிக்கிறார்கள். இதனால்தான் தேசிய வாதம் ஒரு சில உழைக்கும் மக்களின் உணர்வுகளை நச்சுப் படுத்தும் நிலையில் உள்ளது.

குறுதேசிய வெறி, தேசியவாதம் மற்றும் தேசிய அசாதாரணத் தன்மைகளின் வெளிப்பாடுகளை, சோஷலிஸ்டு அமைப்பைத் தொடர்ந்து மேம்படுத்துவது மூலமும் மேலும் முனைப்பான சித்தாந்தப் பணிகள் வாயிலாகவும் தீவிரமான சர்வதேசிய போதனை, சோஷலிஸ்டு தேசபக்திக் கருத்துக்களை பேணிவளர்த்தல் ஆகியவை கொண்டும் சமாளித்து அகற்றலாம். சர்வதேசிய அளவில் சோஷலிசத்துக்கும் முதலாளித்துவத்துக்கும் இடையிலான சித்தாந்தப் போராட்டம் கடுமையாகி இருப்பதால், இது கண்டிப்பாயும் அவசியமாகி விட்டது. சோஷலிசத்தை ராணுவ அரசியல் மற்றும் பொருளாதார வழிகளால் "தகர்த்து அழிக்க" தாம் செய்த முயற்சிகள் தோற்றுவிட்டன என்பதைக் கண்ட ஏகாதிபத்தியப் பிற்போக்கு சக்திகள், பூர்ஷுவா தேசியப்பிரசாரம் மூலம், உலகவிடுதலை இயக்கம், சோஷலிஸ்டு முகாம் மற்றும் சோஷலிஸ்டு நாடுகளின் மக்களினங்களின் நட்புறவு ஆகியவற்றைச் சீர்குலைக்க முயல்கின்றன. தேசிய உறவுகளில் பகைமைகள் இயல்பானவை என்றும் அவை நிரந்தரமாக இருக்கும் எனவும் கம்யூனிஸ்டு-எதிர்ப்பாளர்கள் சாதிக்கிறார்கள். முதலாளித்துவத்தில் தனி மாதிரியாக இருக்கும் வெறுப்பு இயல்புகள் சோஷலிஸ்டு எதார்த்தத்துக்கும் பொருந்தும் என்று அவர்கள் வலியுறுத்துகிறார்கள். சோஷலிசம் முன்வைக்கும் தேசியப்

பிரச்சினைக்கான தீர்வை, அவர்கள் மறுதலிக்கிறார்கள் அல்லது கேவலப்படுத்துகிறார்கள். எடுத்துக்காட்டாக அவர்கள் சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சியின் சர்வதேசியக் கொள்கையை தேசங்களை ஒன்றிணைக்கும் அதன் திசை வழியை, ஜாராட்சி காலத்திய காலனியாதிக்க மற்றும் ருஷ்யமயமாக்கும் கொள்கையுடன் சமப்படுத்திக் காட்டுகிறார்கள். மேலும் சில சோவியத் மக்களின் உணர்வில் காணப்படும் தேசிய வாதத்தின் மீத மிச்சங்களை அகற்றி நீக்க கம்யூனிஸ்டுக் கட்சி செய்யும் முயற்சிகளை தேசியத் தனி இயல்புகளை ஒழித்துக் கட்டும் கொள்கை என்று சித்திரிக்கிறார்கள்.

இந்தக் கம்யூனிஸ்டு-எதிர்ப்பு அவதூறை, திருத்தல் வாத மற்றும் வறட்டுச் சூத்திரவாதத் தேசியக் கருத்தினங்கள் கொண்டு தாங்கி நிற்கிறார்கள்.

இது, கம்யூனிஸ்டு போதனையை குறிப்பாயும் சர்வ தேசியவாத போதனையை ஊக்கப்படுத்துவதை அவசியமாக்குகிறது. சோஷலிசம் மற்றும் கம்யூனிஸ்டு நிர்மாணத்தின் நிலைமைகளில், தத்துவஞான, பொருளாதார மற்றும் சமூக-அரசியல் கருத்துக்களின் ஒன்றிணைந்த தெட்டத்தெளிவான அமைப்பு என்ற முறையில் மார்க்சிய-லெனினியத்தின் அடிப்படைமீது உழைக்கும் மக்களின் விஞ்ஞான பூர்வமான உலகக் கண்ணோட்டத்தை வார்த்து உருவாக்க வேண்டுவதன் தலையாய முக்கியத்துவத்தை சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சியின் வேலைத்திட்டம் வற்புறுத்துகிறது.*

2. சர்வதேசியக் கல்வி போதனையில் பிரதான போக்குகள்

சர்வதேசியக் கல்வி போதனையின் வெற்றி, அது மார்க்சிய-லெனினியத் தத்துவத்துக்கு உகந்த முறையில்—முதலாளித்துவத்திலிருந்து சோஷலிசத்துக்கு மாறிச் செல்லும் சகாப்தத்தில், சமுதாய வளர்ச்சியின் புறநிலை

* காண்க, **கம்யூனிசத்துக்கான பாதை**, பக். 563.

நியதிகளை மற்றும் குறிப்பாயும் தேசிய உறவுகளிலான புறநிலை சோஷலிஸ்டுப் போக்குகளை அது எவ்வளவு முழுமையாகப் பிரதிபலிக்கிறது என்பதைச் சார்ந்தே இருக்கும்.

சர்வதேசியத் தன்மையும் அதே சமயம் தேசபக்தத் தன்மையும் கொண்டதான கல்வி சர்வதேசத் தொழிலாளி வர்க்கத்தினதன் மற்றும் அதன் இறுதி லட்சியமான-கம்யூனிசத்தின் உலகுதழுவிய வெற்றியுடையதன்அடிப்படை நலனுக்காகவே பாடுபடுகிறது. அது, பல்வேறு தேசிய இனங்களைச் சேர்ந்த உழைக்கும் மக்களுக்கு தமது சொந்த மக்களுடனும், சம்யூனிஸ்டு சமுதாய அமைப்பைக் கட்டி வரும் மக்களினங்களின் சமுதாயத்தோடும் சமாதானம், ஜனநாயகம் மற்றும் சோஷலிசத்துக்காகப் போராடிவரும் மாபெரும் சர்வதேசியப் பாட்டாளி வர்க்கப் படையினேடுமான, அவர்களது உறவை உணர்த்துகிறது. உலகப் புரட்சி இயக்கத்தில் தமது நாடும் தமது தேசமும் வகித்த வரலாற்றுப் பாத்திரத்தை அவர்கள் அறிந்து கொள்கிறுர்கள்.

சர்வதேசியக் கல்வியின் நோக்கம் சொல்லிலும் செயலிலும் சர்வதேசியவாதியாக இருப்பதற்கான திடநம்பிக்கையை உருவாக்குவதும் அதற்கான ஆயத்தத்தை ஊக்குவிப்பதுமாகும். காரணம் மெய்யான பாட்டாளி வர்க்க சர்வதேசியம் என்பது வெறும் உணர்ச்சியின் வெளியீடு மட்டுமன்று, மாருக செயல்கள் மூலம் காட்டப்பட வேண்டுவது. அதாவது, ஒவ்வொரு மக்களும் கூட்டாகவும் தனியாகவும் தமது சர்வதேசியக் கடமையைத் தவருது செய்து நிறைவேற்ற வேண்டும் என்பதாகும்.

ஒருவர் தமது சர்வதேசியக் கடமையைச் செய்து நிறைவேற்ற வேண்டுமாயின், முதலில் அவர் தமது நாடு, தமது குடியரசு சோஷலிஸ்டு மற்றும் கம்யூனிஸ்டு நிர்மாணத்தின் பொதுவான பணிகளை நிறைவு செய்வதற்கு உழைத்தல் வேண்டும், இதன் வழி உலகப் புரட்சி இயக்கத்தை ஊக்குவிக்க முடியும், தமது செயல்பாடுகளை சர்வதேசத் தொழிலாளி வர்க்கத்தின் பொது நோக்குடன்

இணைக்க முடியும், இரண்டாவதாக, பொது லட்சியத்திற்கு வேண்டித் தேவைப்படும்போது தியாகங்களைச் செய்ய முடியும், இதரநாடுகளின் உழைக்கும் மக்களுக்கு உதவலாம். சர்வதேசத் தொழிலாளி வர்க்கத்தின் விளைபயனான உலக சோஷலிஸ்டு அமைப்பைத் தற்காக்க முடியும்.

சர்வதேசியக் கடமையை அறிந்து மதிப்பிடுவதற்கு சர்வதேசத் தொழிலாளி வர்க்கத்தின் ஜீவாதார நலன்கள் பற்றித் தெரிந்திருத்தல் வேண்டும், தனிப்பட்ட நாடுகள் மற்றும் தேசங்களின் நலன்களிலான அவற்றின் முதலிடம் குறித்தும் அறிந்து இருக்க வேண்டும். அதோடு தமது மக்கள் உலக விடுதலை இயக்கத்தில் வகித்த பங்கைத் தெரிந்திருத்தல் வேண்டும். தேசிய இனம் எதுவாக இருப்பினும் சரி, ஒவ்வொரு தேசமும் தேசிய இனமும் சோவியத் மக்கள் முழுமையும், எதிர்காலத்தில் முன்னேற்றம் அடைவதற்கான நிபந்தனைகள் எதுவாயினும் சரி, நாட்டிலுள்ள உழைக்கும் மக்களின் நலன்களின் முற்றொருமையை எடுத்துக் காட்டுவது மிகவும் முக்கியமானது.

சர்வதேசியக் கல்வியின் பிரதானப் போக்குகளை வரையறுக்கும் போதில், முதன் முதலாயும் விஞ்ஞானக் கம்யூனிசத்தின் முறை மற்றும் வர்க்க சாரத்தின் மீதான அதன் அடிப்படைக் கோட்பாட்டைப் பகுப்பாய்வு செய்வது இன்றியமையாதது. இதன் பொருள் எல்லா நாடுகள் மற்றும் தேசங்களின் தொழிலாளி வர்க்கத்துக்கும் பொதுவான ஜீவாதாரமான வர்க்க நலன்களின் உள்ளடக்கத்தை, இறுதி லட்சியத்தின் உள்ளடக்கத்தை எடுத்துக் காட்டுவதாகும்-முதலாளித்துவ ஒடுக்குமுறையில் இருந்து உழைக்கும் மக்களை விடுவித்தல், சோஷலிசம் மற்றும் கம்யூனிசத்தை நிர்மாணித்தல்; சோஷலிஸ்டு உலகப் புரட்சியின் நலன்கள் வட்டார மற்றும் தேசிய நலன்களை விடவும் முன்னிடம் பெற வேண்டும் என்பதை எடுத்துக் காட்டுவதும் ஆகும். பாட்டாளி வர்க்க சர்வதேசியத்தைப் பரப்புவதற்கு லெனின் பின்வரும் மாதிரியை வழங்கினர். "ஒரு சர்வதேசியவாதியாக இருக்க வேண்டுமாயின் தனது

சொந்த தேசம் பற்றி மட்டுமே சிந்தனை செய்தல் **கூடாது**. மாறாக, **அதற்கும் மேலாக** எல்லா தேசங்களின் நலன்களையும் அவற்றின் பொதுவான விடுதலை மற்றும் சமத்துவத்தையும் கருதிப் பார்க்க வேண்டும்''* என்றார் அவர்.

இறுதியாகப் பகுப்பாய்வு செய்யும்போதில், ஒவ்வொரு நாட்டின் எதிர்காலமும் அதன் சமுதாய முன்னேற்றமும் சர்வவுரிமையும் வர்க்க சக்திகளின் உலகத் தொடர்பாடு, சோஷலிசத்துக்கும் முதலாளித்துவத்துக்கும் இடையிலான போராட்டத்தின் விளை முடிவு, நமது காலத்தின் அனைத்துப் புரட்சிகர சக்திகளின் பலம் அளவு மற்றும் ஒற்றுமை ஆகியவற்றைச் சார்ந்ததாக இருக்கும். தமது சொந்த நாட்டின் சோஷலிஸ்டு மற்றும் கம்யூனிஸ்டு நிர்மாணத்தின் வெற்றிகளை மட்டும் சார்ந்ததாக இருக்காது.

உழைக்கும் மக்களை தேசிய இனம், வருண இனம், சமயம் மற்றும் பிரதேச ரீதியாகப் பாகுபடுத்துவது உலக விடுதலை இயக்க சக்திகளைப் பிளவுபடுத்தும் போக்காகும். இதன் விளைவாகத் தனது தேசிய சர்வவுரிமையை வலுப் படுத்திக் கொள்ளவும் பொருளாதார சமூக-அரசியல் முன்னேற்றம் பெறவும் வேண்டி நடத்தும் போராட்டத்தில் ஒவ்வொரு தேசத்தின் நிலையும் பலவீனப்படுத்தப்படும்.

சர்வதேசியக் கல்வியின் முக்கிய நோக்கம் மக்கள் திரளினருக்கு உலக விடுதலை இயக்கத்தினுள் தமது நாடு வகிக்கும் இடத்தையும் பாத்திரத்தையும் புலப்படுத்துவ தாகும். அதன் சர்வதேசியப் பணிகளின் உள்ளடக்கத்தையும் எடுத்துக்காட்டி இந்தப் பணிகளை நிறைவேற்றி முடிக்க அவர்களை ஒன்று திரட்டுவதேயாகும். சோஷலிஸ்டு நாடு களில் ஆக வலிமை மிக்கதான சோவியத் ஒன்றியம் உலக விடுதலை இயக்கத்தின் முன்னணிப் படையாக இருக்கிறது எனும் எண்ணம், எந்த தேசிய இனத்தைச் சார்ந்தவராயினும் சரி, ஒவ்வொரு சோவியத் குடிமகனும் தனது அன்றாட வேலைகள் குறித்தும், கம்யூனிஸ்டு நிர்மாணத்தில் பங்கேற்

* வி.இ. லெனின், "நூல் திரட்டு", தொகுதி 22, பக். 347.

பதிலும், சோஷலிஸ்டு உலகப் புரட்சியின் வெற்றிக்கான பொதுப் போராட்டத்திலுமான அவரது பொறுப்புணர்வை அதிகரிக்கிறது.

உலக விடுதலை இயக்கத்தில் ஒவ்வொரு சோஷலிஸ்டு நாடும் தனது பங்கைச் செய்து நிறைவேற்ற வேண்டுமாயின் அதன் எல்லைகளுக்கு அகத்தேயுள்ள எல்லா தேசங்கள் தேசிய இனங்களையும் சேர்ந்த உழைக்கும் மக்கள் தமது முயற்சிகள் அனைத்தையும் ஒருமுகப்படுத்த வேண்டும். சோவியத் ஒன்றியம் போன்ற பல்தேசிய இன நாடுகள் விஷயத்தில் இது கண்டிப்பாயும் முக்கியமானது.

எனவே, ஒவ்வொரு சோஷலிஸ்டு நாட்டிலுமுள்ள எல்லா தேசங்கள் தேசிய இனங்களதும் ஒட்டுமொத்தமாக சோஷலிஸ்டு அமைப்பினதுமான அடிப்படை நலன்கள் ஒன்றே என்பதை எடுத்துக் காட்ட வேண்டுவது அவசியம். சோவியத் ஒன்றியத்தின் மக்களினங்கள் விஷயத்தில் இந்த நலன்களின் முற்றொருமை, முன்னாள் ருஷ்ய சாம்ராஜ்யத்தின் நிலப்பிரபுக்களையும் முதலாளிகளையும் வீழ்த்தி, பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை நிறுவியதிலும், எதிர்ப்புரட்சியையும் அன்னியத் தலையீட்டையும் முறியடித்ததிலும், சோஷலிஸ்டு தொழில் மயமாக்கம், விவசாயத்தில் கூட்டுறவு மற்றும் கலாசாரப் புரட்சியிலும், முதலாளித்துவத்துக்கு எதிரான சோஷலிசத்தின் சாதகக் கூறுகளை சாத்தியமானவரை முழுமையாகப் பயன்படுத்தியதிலும், முதலாளித்துவ நாடுகளில் இருப்பதைவிடவும் உயர்ந்த வாழ்க்கைத் தரத்துக்காக உழைத்திடுவதிலும், தாயகத்தின் கூட்டுப் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதிலும், அதன் தற்காப்பு ஆற்றலைப் பெருக்குவதிலும் ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப் போராடியும் கம்யூனிஸ்டு சமூக அமைப்பை நிர்மாணிக்கவும் போராடி வரும் மக்களினங்களுக்கு உதவி செய்வதிலும் எல்லாம் காணப்படுகிறது.

நமது அடிப்படை நலன்கள் ஒன்றே என்ற அறிதலின் மூலம், சோவியத் மக்கள் இந்த நலன்களை ஒவ்வொரு தனித் தனி தேசம் அல்லது தேசிய இனத்தின் நலன்களுடன் சரி

யான தொடர்பாடு கொள்ளுமாறு செய்வதை உறுதிப்படுத்து கிருர்கள். இதற்குப் பின்னர் பொதுப் பணிகளை ஒன்று சேர்ந்து நிறைவேற்றுவது குறிப்பாயும் நாட்டின் பொருளாதார மற்றும் தற்காப்பு வலிமையை அதிகரிப்பது ஒவ்வொரு தனிப்பட்ட தேசம் மற்றும் தேசிய இனத்தின் உண்மையான சர்வவுரிமையையும், அதன் நலன்கள் அதன் படைப்பாற்றல் சக்திகளின் பெருக்கம் அதன் தனிச்சிறப்பு இவற்றுக்கு உத்தரவாதம் தருகிறது என்பதை உழைக்கும் மக்கள் மேலும் தீர்க்கமாகப் புரிந்து கொள்கிருர்கள். நேர் மாருக பல்வேறு தேசங்களின் நலன்களை எதிரெதிராக வைத்தால், ஐக்கிய சோஷலிஸ்டு அரசின் மத்தியில் பிளவுகளை உருவாக்கும்.

ஒட்டுமொத்தமான சோவியத் மக்களின் நலன்களுக்கு மேலாகத் தமது தேசத்தின் நலனை முன்வைப்போர் சோஷலிசத்தின் நிலைகளைப் பலவீனப்படுத்துகிருர்கள் மற்றும் தமது சொந்த தேசத்தின் வளர்ச்சிக்கு மிகவும் முக்கியமான அடித்தளத்தையே குலைக்கிருர்கள்.

சர்வதேசியக் கல்வியில் ஒரு பகுதி என்ற வகையில், சோஷலிஸ்ட் அமைப்பில் உள்ளார்ந்து கிடக்கும் தேசிய மற்றும் சர்வதேசிய நலன்களின் ஒற்றுமை தானே ஏற்படுவதல்ல என்பது எடுத்துக் காட்டப்பட வேண்டும். இதைச் சாதனையாக்குவதில் உறும் இடர்பாடுகள், தேசங்களின் பொருளாதார கலாசாரத் தரங்களிலான வேறுபாடுகள், அவற்றின் புவிஇயல் மற்றும் மக்கள் தொகையின் அளவு, சோஷலிசத்தின் வெற்றிக்கு முன்னுல் அவற்றிடையே ஏற்பட்ட மோதல்களின் நீடித்த தாக்கம் ஆகியவற்றிலிருந்து ஏற்படுவதாகும்.

தேசங்கள் தேசிய இனங்களின் இடையிலான உறவுகளுக்கான புறநிலை அடிப்படைகள் தொடர்ந்து வளர்ந்து வருகின்றன: பொருளாதாரமும் கலாசாரமும் எல்லாக் காலங்களிலும் அதிகரித்தபடி இருக்கும், ஒவ்வொரு குடியரசிலும் நாடு முழுவதிலும் சமுதாய உறவுகள் மேம்பாடுறும். பொருள்வய அடிப்படையிலான இந்த மாறுதல்கள்

தேசிய உறவுகளின் அகநிலைப் புறத்தே பிரதிபலிக்கின்றன. குறிப்பாயும் சர்வதேசியக் கல்வியின் நடைமுறைப் பணியில் அதன் ஸ்தூலமான உள்ளடக்கம் பிரதான போக்கியல்புகள் மற்றும் அதன் வடிவங்கள் வழிமுறைகளிலுங்கூடக் காணப் பெறுகின்றன.

நாம் ஏற்கெனவே சொன்னபடி, வெற்றிகரமான பாட்டாளி வர்க்கப் புரட்சியானது, தேசங்கள் தேசிய இனங்களின் உறவுகளில் இரண்டு புறவயமாகப் பரஸ்பரத் தொடர்புடைய போக்குகளைத் தோற்றுவிக்கிறது. ஆனால் சோஷலிஸ்டு மற்றும் கம்யூனிஸ்டு நிர்மாணத்தின் ஒவ்வொரு கட்டத்திலும் இந்த இரண்டு போக்குகளின் பரஸ்பரச் செயல்பாடு பிரத்தியேகமானதாக இருக்கிறது.

இந்தக் காரணத்தினால், சர்வதேசியக் கல்வியின் அமைப்பு ஒவ்வொரு கட்டத்திலும் இந்த ஸ்தூலமான அம்சத்தை பிரதிபலிக்க வேண்டும், மற்றும் தொடர்ந்து வளர்ச்சியடைந்து வருகிற புறநிலைப் போக்குகளுக்கு விளக்கம் தர வேண்டும், அதோடு தேசங்களின் சங்கமிப்பு மற்றும் சர்வதேச அளவில் கம்யூனிசம் வெற்றிவாகை சூடிய பின்னர், அவை முழுமையாக ஒன்று கலந்திடும் நடைமுறை மீது, உடனடியானதும் மேலும் தொலைவிலுமான எதிர்காலத்திலான அவற்றின் வளர்ச்சியின் வருங்கால வாய்ப்புகள் மீது தன்னை இணைவு செய்து கொள்ள வேண்டும். அதோடு இன்றைய கட்டத்தில் எல்லா மக்களினங்களின் வாழ்க்கைப் பாங்கிலும் முன் என்றையும்விட அதிக முனைப்பான சர்வதேசியமயமாக்கலால் ஏற்படும் விளைவுகளைப்பற்றி மேலதிகமான கவனம் செலுத்த வேண்டும். *

பல்வேறு தேசங்கள் தேசிய இனங்களைச் சேர்ந்த உழைக்கும் மக்களின் தொடர்ந்து அதிகரித்துவரும்

---

* சோவியத் சோஷலிஸ்டு குடியரசுகளின் ஒன்றியத்தின் உருவாக்கத்தின் 50 ஆம் ஆண்டு விழாவுக்கான தயாரிப்புகள், சோ.க.க.ம.க. தீர்மானம், பக். 17.

பொதுவான நலன்களை மெய்யென எடுத்துக் காட்டுவதற்கு இது மிகவும் முக்கியமானது.

இன்றைய விஞ்ஞான, தொழில்நுட்பப் புரட்சி எந்த ஒரு தனிப்பட்ட தேசம் அல்லது தேசிய இனம் மற்றும் பெரிய பல்தேசிய இன அரசின் கட்டுக்கோப்புக்குள் சரியானபடி பொருந்துவதாக இல்லை. உற்பத்தி சக்திகளின் பெருக்கம் சர்வதேச அளவிலான ஒருமுகப்பட்ட முயற்சிகளை தேவையாக்கி விட்டது. தனியார் தொழில் நிறுவனத்தை அமைக்கும்போது கூட பூர்ஷுவா அரசாங்கங்கள் பல்வேறு நாடுகளின் உற்பத்தியை ''இணைப்பாக்கம்'' செய்ய வேண்டியதான கட்டாயம் ஏற்பட்டுள்ளது. சோஷலிசம் இதற்கு இன்னமும் அதிக சாதகமான நிலைமைகளை மேலும் விரிவான அடிப்படையில் உருவாக்குகிறது. இது முதலாளித் துவத்துக்கு எதிரான முக்கிய சாதகங்களில் ஒன்றாகும், அதன் உலகளாவிய வெற்றியை உத்தரவாதம் செய்வதுமாகும்.

சர்வதேசியக் கல்வியானது மக்களினங்களின் வாழ்க்கையிலான பிரத்தியேகமான தேசிய அம்சத்தைப் புறக் கணிக்கவோ கேவலப்படுத்தவோ கூடாது என்பது கண்கூடு. இதில் உறும் சின்னஞ்சிறிய மாறு நடத்தைகூட சோஷலிசத்தின் புறநிலை நியதிகளுக்கும் தேசங்களின் வளர்ச்சிக்கும் தேசங்களிடையிலான உறவுகளுக்கும் விரோதமாகப் போகும்.

சர்வதேசிய மயமாக்கல் உற்பத்தி சக்திகளின் பெருக்கம் மற்றும் உற்பத்தி உறவுகளால் கட்டாயப்படுத்தப் பெறுகிறது. ஆனால் தேசிய அம்சத்தின் வளர்ச்சி இன்றியும், பொதுவான சர்வதேச நோக்கங்களுக்கு இதன் பயன் கிட்டாத நிலையிலும் இதைப்பற்றி எண்ணியே பார்க்க முடியாது. தேசிய அம்சம் மறைந்து போவது என்பது தேசங்கள் நலிந்து உதிர்ந்து போகும் என்ற பொருள்தரும். இதன் பின்விளைவாக சர்வதேசிய மயமாக்கும் நடைமுறை முடிவடையும். ஆனால் உலகின் பல்வேறு பொருளாதார மற்றும் புவிஇயல்வாரி பிராந்தியங்கள் இடையே பொருளாதார கலாசாரப் பிணைப்புகளின் இயல்பான

விரிவாக்கமும் செறிவும் இன்னும் வரப்போகும் பல ஆண்டு களுக்கு, தேசிய வேறுபாடுகளின் மறைவைக் குறிக்காது என்பது திண்ணம்.

சோஷலிசம் முதலாளித்துவத்தை விடவும் அதிகமாக சர்வதேசிய மயமாக்கல் நடைமுறையை வேகப்படுத்துகிறது. காரணம் அது தேசங்கள் தேசிய இனங்கள் மீது பலவந்தம் செலுத்துவதில்லை, அதோடு அவற்றின் சமத்துவம் சுதந்திரம் மற்றும் சுயநிர்ணய உரிமையை உத்தரவாதம் செய்கிறது. சமுசயங்களையும் பகைமையையும் சமாளித்து அகற்றுவ தற்கும் தேசங்களின் சங்கமிப்பையும், தொலை எதிர்காலத்தில் அவை ஒன்றாக இணைவதையும் சாத்தியமாக்கும் ஒரே வழி இது மட்டுமே.

ஒவ்வொரு தேசமும் எந்தளவு தீவிரமாகவும் முழுமை யாகவும் தனது பொருளாயத மற்றும் அகவளர்ச்சி வள ஆதாரங்களை அபிவிருத்தி செய்து கொள்கிறதோ அந்த அளவுக்கு பொதுவான சர்வதேசிய நோக்கங்களுக்கான அதன் பங்களிப்பு அதிகமாக இருக்கும், சர்வதேசிய மயமாக்கல் நடப்பு அந்தளவு அதிக முனைப்புடன் நிகழும்.*

சோஷலிஸ்டு தாயகம் முழுவதன் முன்னேற்றம் குறித்த உழைக்கும் மக்களின் அக்கறை, நாட்டின் எல்லா மக்களினங் களின் அடிப்படையான அரசு நலன்களுக்கு இசைவான முறையில், தத்தம் தேசம் அல்லது குடியரசின் அபிவிருத்தியில் நடைமுறையில் பங்கேற்பதன் வாயிலாக வெளிப்படுத்தப் படுகிறது.

இதனால்தான் சோஷலிஸ்டு தேசபக்தியை சர்வதேசியக் கல்வியுடன் இணைத்து வார்த்துருவாக்கும் பணியில், நாம் சர்வதேசிய மற்றும் தேசியக் கூறுகளின் பரஸ்பர இணைப்பு மற்றும் தொடர்பாட்டையும், தேசிய அம்சத்தின்

* காண்க, லி. இ. பிரெஷ்நேவ், **சோவியத் சோஷலிஸ்ட் குடியரசுகளின் ஒன்றியத்தின் 50 ஆம் ஆண்டு விழா**, பக். 30.

பரிணமத்தில் சர்வதேசிய அம்சத்தின் செல்வாக்கையும் எடுத்துக்காட்ட வேண்டும்.

சர்வதேசிய போதனை மற்றும் அதே போன்று தேசபக்தி கல்விக்கான முறைமை இயல் வழிகாட்டி நெறிகள், லெனினது பின்வரும் யோசனையில் அடங்கியுள்ளன: "நாம் தேசங்களின் சுயவிருப்ப ஒன்றியத்தையே விழைகிறோம். இந்த ஒன்றியத்தில் ஒரு தேசத்தின் மீது இன்னொரு தேசம் பலவந்தம் செலுத்துவதற்கு இடமளித்தல் கூடாது. இது முழுமையான நம்பிக்கை மீது சோதர ஒற்றுமையைத் தெட்டத் தெளிவாக அங்கீகரிப்பதின் மீது, முற்ற முழு சுய விருப்ப ஒப்புதலின்மீது நிறுவப்படும் ஒன்றியமாக இருத்தல் வேண்டும். இத்தகைய ஒன்றியத்தை எளிதாக அமைத்துவிட முடியாது; மிகப் பெருமளவு பொறுமை மற்றும் எச்சரிக்கையுடன் அதற்காகப் பாடுபட வேண்டும், காரியங்களைக் கெடுத்து விடாமலும், அவநம்பிக்கையை எழுப்பாமலும் செயல்பட வேண்டும். பல நூற்றாண்டுக் காலத்திய நிலப்பிரபுத்துவ மற்றும் முதலாளித்துவ ஒடுக்குமுறையிலிருந்தும், பல நூற்றாண்டுக் கால தனிச் சொத்துடைமையிலிருந்தும் மரபாக வந்த அவநம்பிக்கை அதன் பிரிவினைகள், மறு பிரிவினைகளால் ஏற்பட்ட பகைமை, இவை யாவும் மறைந்து போவதற்கான வாய்ப்பு ஏற்படும் விதத்தில் செயல் புரிய வேண்டும்.*

சோஷலிஸ்டு தேசபக்தி மற்றும் பாட்டாளி வர்க்க சர்வதேசியம் இடையிலான இசைவான உணர்வுடன், உழைக்கும் மக்களுக்குக் கல்வி போதிப்பது சம்பந்தமான லெனினது இந்த மற்றும் இதர தத்துவக் கூறுகளில் இருந்து பின்வரும் முக்கியமான முடிவுகளுக்கு வரலாம்.

இது வெற்றிகரமாவதற்கு, இத்தகைய கல்வியானது தேசியப் பிரச்சினை மீது தொழிலாளி வர்க்கமும் அதன் கட்சியும் மேற்கொள்ளும் கொள்கையின் பிரதான அம்சங்கள் குறித்த விஞ்ஞானபூர்வமான அறிவை வழங்க வேண்டும்.

* வி. இ. லெனின், "நூல் திரட்டு", தொகுதி 30, பக். 293.

எந்த தேசிய இனத்தைச் சேர்ந்தவர்களாயிருப்பினும் சரி, சமூக தேசிய ஒடுக்குமுறையை எதிர்த்தும் சோஷலிசம் மற்றும் கம்யூனிசத்தின் வெற்றிக்காகவும் நடைபெறும் பொதுவான போராட்டத்தில் உழைக்கும் மக்களை ஒன்று திரட்ட வேண்டும்.

அதன் சர்வதேச ஒற்றுமை, வர்க்க ஒருமைப்பாடு, நாட்டின் எல்லா மக்களினங்களையும் சேர்ந்த உழைக்கும் மக்கள் திரளினருடன் கூட்டணி சேரல் எனும் தொழிலாளி வர்க்கத்தின் வரலாற்று லட்சியப்பணி, சோஷலிஸ்டுப் புரட்சியிலும் சோஷலிசம் மற்றும் கம்யூனிசத்தை நிர்மாணிப்பதிலும் ஆன ஜீவாதாரமான மூலாதாரங்களில் ஒன்று என்பதை விளக்குவது முக்கியமான இன்னொரு தேவையாகும். சோஷலிசத்தின் கீழ் தேசங்கள் இடையிலான உறவுகள் தேசங்களின் தேசிய இனங்களின் சங்கமிப்பு இவற்றிலான புறநிலைப் போக்குகளையும், சர்வதேசிய அளவில் கம்யூனிசம் வெற்றி பெற்ற பின்னர் அவை ஒன்று சேருவதற்கான எதிர்கால வாய்ப்புகளையும் எடுத்துக் காட்டுவது முக்கியமானது.

தேசியப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் சோஷலிசம் அடைந்து வரும் வரலாற்றுச் சிறப்புடைய வெற்றிகளைக் குறித்த மேலும் முழுமையான ஒரு சித்திரத்தைத் தர வேண்டுமாயின், தேசியப் பூசல்களை கடுமையாக ஊக்கி வளர்த்த ஜாராட்சியின் காலனியாதிக்கக் கொள்கையின் விளைவுகளைக் கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டுவது அவசியம். இந்த விளைவுகளைச் சிறுமைப்படுத்துவதோ, புறக்கணிப்பதோ சுரண்டும் அமைப்பினால் உருவாக்கப்பட்டு பின்னால் விடப்பட்ட மிகவும் சிக்கலான பிரச்சினைகளை தீர்த்துவைப்பதில் சோஷலிசத்துக்குள்ள பங்கினைச் சிறுமைப் படுத்துவதாகும்—இந்தப் பிரச்சினைகளை முதலாளித் துவத்தால் தீர்க்க முடியவில்லை என்பது தெரிந்ததே.

பல்வேறு மக்களினங்களின் மத்தியிலான நட்புறவு, சகோதரத்துவம் போன்ற ஜனநாயக மரபுகளையும், ஜாராட்சியின் காலனிக் கொள்கை இருந்தபோதிலும்

பரிணமித்து வந்த அவர்களின் பொருளாதார கலாசாரப் பிணைப்புக்களையும் சோஷலிசம் மரபாகப் பெறுவதோடு மட்டுமன்றி, அவற்றை வளர்க்கவும் செய்கிறது. ஜாராட்சி மற்றும் முதலாளித்துவத்தை எதிர்த்தும் உள்நாட்டு வெளி நாட்டு விரோதிகளை எதிர்த்தும் நடைபெற்ற கூட்டுப் போராட்டத்தில் உருவான, தொழிலாளி வர்க்கத்தில், எல்லாதேசிய இனங்களையும் சேர்ந்த உழைக்கும் மக்களின் பொதுவான புரட்சிகரப் போராட்ட மரபுகளைப் பரிசீலனை செய்வதுங்கூட மிகவும் முக்கியமானது.

தேசியப் பிரச்சினைக்குத் தீர்வு காண்கிற சோஷலிசத்தின் வரலாற்று சாதகங்களையும், அது உத்தரவாதம் செய்யும் தேசங்களின் சமத்துவத்தையும், அவற்றின் ஒன்றியத்தில் உள்ளார்ந்து கிடக்கும் சுதந்திர சித்தம் எனும் கோட்பாட்டையும் நிதர்சனப்படுத்திக் காட்டும்போதில், இந்தக் கோட்பாடுகள் லவலேசம் மீறப்பட்டாலும், தேசங்களின் சங்கமிப்பு மற்றும் ஒன்று சேர்வதைத் தள்ளிவைக்கச் சிறிதாவது முயற்சி செய்யப்பட்டாலும் அது எதிரான விளைவுகளை உண்டாக்கும். இந்தப் போக்கைத் தடைப்படுத்தி பழைய அவநம்பிக்கை மித்திர பேதம் மற்றும் பகைமையை நிச்சயம் புதுப்பிக்கும் என்பதை வலியுறுத்துவதும் அவசியமாகும்.

சுதந்திர சித்தம் எனுங் கோட்பாட்டின் உண்மையான பகுப்பாய்வு எதிலும் ஒன்றியத்தின் அவசியம் பற்றிய விளக்கம் இடம் பெறவேண்டும். சோஷலிஸ்டு நிலைமைகளில் தேசிய ஒடுக்குமுறை இல்லாத தருணத்தில் பெரிய அரசுகள் (அரசுகளிடையிலான பொருளாதார அமைப்புகளும்) இருப்பது பொருளாதார வளர்ச்சி விஷயத்திலும், எல்லா தேசங்கள் தேசிய இனங்களின் விஞ்ஞான தொழில் நுட்ப முன்னேற்றம் மற்றும் கலாசார மேம்பாடு விஷயத்திலும் சிறிய அரசுகளைவிடவும் மறுக்க முடியாத அளவுக்கு சாதகமானது. ஒரு பெரிய அரசின் பாகம் என்ற முறையில் ஒவ்வொரு தேசமும், தேசிய இனமும் அவற்றின் அளவு,பரப்பு, வளர்ச்சி மட்டம் இவை எதுவாக இருப்பினும்

சரி தனிப் பிரிந்த ஒரு சுயாதீன அரசை விடவும் மேலும் அதிகமாக எல்லாத் துறைகளிலும் பேரளவில் முன்னேற்ற மடைவது திண்ணம். சோவியத் ஒன்றியத்தின் உருவாக்க மும் வளர்ச்சியும் சோஷலிசத்தை நிர்மாணிப்பதிலான மக்களினங்களின் சக்தியையும் மூலவளங்களையும் அதிகரிக்க உதவின. ஒவ்வொரு தேசத்தின் அபிவிருத்தியையும் உத்தர வாதம் செய்யும் சோஷலிசத்தின் வரலாற்று மேன்மை, மக்களினங்களின் மிகவும் நெருக்கமான ஒத்துழைப்பு இருக்கும் பட்சத்தில், பெரிய அரசிலும் அரசுகள் இடையி லான இணைவிலும் மேலும் முழுமையாக இயங்குகிறது. அதன் சாதகங்கள் உச்சபட்சம் பலன் தரவேண்டுமாயின், இந்த வெற்றி சர்வதேசிய அளவில் ஏற்பட வேண்டும். இதனால் தான் தன்னந்தனியாக இயங்கி தனிப்பிரிந்த நிலையில் சோஷலிசத்தை நிர்மாணிக்க நடத்தும் முயற்சிகள் நடைமுறையில், உற்பத்தி சக்திகளின் பெருக்கம் கலாசார மலர்ச்சி மற்றும் ஆக உயர்ந்த வாழ்க்கைத் தரம் ஆகிய வற்றுக்கு சோஷலிசம் வழங்கும் பிரம்மாண்டமான சாத்தியக் கூறுகளில் கணிசமான பகுதியை மக்களுக்கு மறுதலிப்பதற்குச் சமமாகும். எனவே பிரிவினைகள் யாவுமே சர்வதேசிய விரோதமானவை என்பது மட்டுமல்ல, சாரத்தில் தேச விரோதமானவையுங்கூட.

தேசங்களின் சங்கமிப்பு மற்றும் ஒன்று சேருவதன் சர்வதேசியக் குறிக்கோள் தேசிய நலன்கள், தேசிய உணர்ச்சிகள் பழக்க வழக்கங்கள், கலாசாரத்தில் வாழ்க் கைப் பாணியில் மற்றும் உறவியலில் பிரத்தியேகமாயும் தேசியத்தன்மை கொண்ட எல்லாவற்றிடமும் மிகவும் விவேகமான அன்பாதரவான ஒத்துணர்வைக் குறிக்கிறது. வட்டார நலன்களை அதிகாரவர்க்க முறையில் புறக்கணிப் பதை அனுமதிக்க முடியாது. ஆயினும் லெனினியம் வர்க்கம் மீறிய வரலாற்று சம்பந்தமில்லாத அணுகு முறையைத் தள்ளுபடி செய்கிறது, மற்றும் பழமை தட்டிய வழக்கங்கள் சடங்குகளின் வழிபாட்டையும், பிற்பட்ட வாழ்க்கைப் பாணியின் மீதமிச்சங்களையும் தேசிய

அசாதாரண இயல்புகளையும் எதிர்த்துப் போராடுவதற்குரிய போதனையை நமக்கு அளிக்கிறது. இது முற்போக்கான சகலத்தையும், தேசிய வேறுபாடுகளை அகற்ற உதவும் எல்லாவற்றையும் முரணின்றி ஆதரிக்குமாறு நம்மைப் பணிக்கிறது.''*

ஒருவர் தமது தாய்மொழிமீது பற்றுக் கொள்வதை உற்சாகப்படுத்தும் அதேபோதில், நாட்டின் பொதுவான தொடர்பு மொழியைப் பயில்வதற்கும் பயன்படுத்துவதற்கும் போடப்படும் செயற்கையான தடைகளை கம்யூனிஸ்டுகள் கண்டிக்கிறார்கள். தேசபக்தனோ சர்வதேசியவாதியோ சர்வதேசியமயமாக்கும் உலகு தழுவிய புறநிலை நடைமுறைக்கு எதிராக தேசியத் தனிமைப் போக்கை என்றுமேகட்டிக் காக்க விரும்பமாட்டார்கள் என்று அவர்கள் எடுத்துக் காட்டுவார்கள்.

லெனினும் கம்யூனிஸ்டுக் கட்சியும் குறுதேசிய வெறியையும், தேசிய உணர்வுகளை சூன்யவாத முறையில் அசட்டை செய்வதையும் எப்போதும் எதிர்த்துப் போராடி வந்திருக்கிறார்கள். அதோடு தேசிய உணர்வுகளை தேசியவாதி முறையில் மிகைப்படுத்துவதையும் எதிர்த்துப் போராடி வந்திருக்கிறார்கள்.

தேசங்கள் தேசிய இனங்களின் சமத்துவம் ப்ற்றிய கோட்பாட்டை விரிவிளக்கம் செய்கையில், லெனினும் கட்சியும் பாட்டாளி வர்க்க சர்வதேசிய வாதம் வெறும் சமத்துவத்தை விடவும் மிகவும் அதிகமான வன்மையுடையது என்பதை சுட்டிக் காட்டினார்கள். அதன் ஆக முக்கியமான கூறு பொது லட்சியமான—சோஷலிசம் மற்றும் கம்யூனிசத்தை நிர்மாணிக்கும் போராட்டத்தில் பல்வேறு தேசிய இனங்கள் நடத்தும் ஒன்றுபட்ட செயல்பாடேயாகும்.

சர்வதேசத் தொழிலாளி வர்க்கம் மற்றும் அதன் நேச சக்திகளின் நலனுக்காகப் பாடுபடுகிற பாட்டாளி

---

* காண்க வி. இ. லெனின், ''நூல் திரட்டு'', தொகுதி 20, பக். 35-36.

வர்க்க மற்றும் சோஷலிஸ்டு சர்வதேசியவாதம் சமுதாய மற்றும் தேசிய ஒடுக்கு முறைகளை எதிர்த்தப் போராட்டத்தின் சகல ஜனநாயக மரபுகளையும் சார்ந்து நிற்கிறது. இதனுல்தான், எல்லா தேசங்களின் சுதந்திரமும் சமத்துவமும் இதன் அடிப்படைக் கோட்பாடுகளில் ஒன்ருகும். ஆனுல் இந்தக் கோட்பாட்டின் அமலாக்கம், முதலாளித்துவத்தை எதிர்த்தும் சோஷலிஸ்டு மற்றும் கம்யூனிஸ்டு சமுதாய அமைப்பை நிர்மாணிப்பதற்காகவும் உலகின் மற்றும் ஒவ்வொரு தேசம் மற்றும் நாட்டின் உழைக்கும் மக்களின் கூட்டுப் போராட்டத்தின் வெற்றியைச் சார்ந்ததாக இருக்கும்.

லெனினது அறிவுரைகள் மற்றும் கம்யூனிஸ்டு நிர்மாணத்தின் உடனடிக் கடமைகளுக்குப் பொருத்தமான வகையில் பிரதான திசை வழிகளைச் சரிவரத் தேர்வது, சோஷலிஸ்டு தேசபக்தி மற்றும் பாட்டாளி வர்க்க சர்வதேசியத்தின் உணர்வில் வெற்றிகரமான கல்வி போதனைக்குத் தீர்மானகரமான நிபந்தனையாகும். இது கம்யூனிஸ்டுக் கட்சியின் லட்சியத்துக்கும், மக்கள் நலன் கருதி சமூக தேசியப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணும் அடிப்படையான சோஷலிஸ்டு அமைப்புக்கும் நாடு முழுவதும் தேசங்கள் தேசிய இனங்கள் அனைத்தும் வேகமாக முன்னேற வேண்டும் என்ற நோக்கத்துக்கும் எல்லா தேசிய இனங்களையும் சார்ந்த உழைக்கும் மக்கள் விசுவாசமாக இருப்பார்கள் என்பதை உத்தரவாதம் செய்கிறது. கம்யூனிஸ்டு நிர்மாணத்தின் உடனடி மற்றும் நீண்டகாலக் குறிக்கோள்கள்பால் மெய்யுணர்வும் சரியான எதார்த்தமான அணுகுமுறையும் மேற்கொள்வதையும் இது உறுதிப்படுத்துகிறது.

சோவியத் சோஷலிஸ்டு அரசின் எல்லா மக்களினங்களின் நட்புறவு மற்றும் ஒற்றுமையின் முக்கியத்துவத்தையும் ஒவ்வொரு தேசம் மற்றும் தேசிய இனத்தின் மெய்யான பொருளாதார அரசியல் மற்றும் கலாசார மேம்பாடு குறித்துமான ஒரு விஞ்ஞான பூர்வமான மெய்யுணர்வை கம்யூனிஸ்டுக் கட்சி வழங்குகிறது. தனிப்பட்ட குடியரசுகள்

மற்றும் பிராந்தியங்களின் பொருளாதார நிலைமை, நாடு முழுவதன் பொருளாதாரத்தின் பெருகி வரும் திறமான பலனையே சார்ந்திருக்கிறது என்பதையும், அவற்றின் வெற்றி சோவியத் மக்கள் அனைவரின் சாதனை என்பதையும் உழைக்கும் மக்களுக்கு மெய்ப்பித்துக் காட்டுகிறது.

ஆகவே, தேசபக்த சர்வதேசிய பாணி கல்வியின் கேந்திரமான திசைவழி பல்தேசிய இன சோஷலிஸ்டு நாட்டினிடம் பாசத்தையும் பற்றுதலையும்-சோவியத் நாட்டின் மீது பெருமிதத்தையும் சோவியத் ஒன்றியத்தின் அனைத்துத் தேசங்கள் தேசிய இனங்களைச் சார்ந்த உழைக்கும் மக்கள் மத்தியில் பேணி வளர்ப்பதேயாகும்.

தேசபக்த-சர்வதேசியக் கல்வியின் முக்கியமான ஒரு குறிக்கோள் கம்யூனிஸ்டு நிர்மாணத்தின் இன்றைய கட்டத்தில் தலைகாட்டும் குறுதேசியவெறி மற்றும் தேசிய வாதத்தின் மீதமிச்சங்களை ஒழித்தகற்றுவதாகும்.

உலகம் முழுவதிலும் ஜனநாயக சோஷலிஸ்டு சக்திகளின் பெருக்கம், மிகவும் சிக்கலான சமூக மற்றும் தேசிய பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதிலும், எல்லா தேசங்களின் மெய்யான நடைமுறை சமத்துவம் நோக்கிப் புதிய முன்னேற்றங்களைக் காண்பதிலும், முதலாளித்துவத்தைவிட சோஷலிசத்தின் வரலாற்று சாதகக் கூறுகள் மேலும் தீர்மானகரமாக உறுதிப்படுதல் போன்ற இத்தகைய புறநிலைக் காரணிகளால் வெற்றி உத்தரவாதம் செய்யப் படுகிறது.

தேசிய வாதத்தை எதிர்த்தப் போராட்டத்தில் வெற்றி எவ்வாறு உறுதிப்படுகிறது என்பதை சோவியத் குடியரசுகளிலான கட்சி அனுபவம் சுட்டுகிறது.

—பாட்டாளி வர்க்க சர்வதேசியத்தின் கோட்பாடுகளைப் பிரசாரம் செய்தல், கம்யூனிஸ்டுக் கட்சியின் தேசியக் கொள்கையை தெளிவாக எடுத்து விளக்குதல்;

—பழமையின் எல்லா மீதமிச்சங்களையும் எதிர்த்து முறையான முரணில்லாத போராட்டம் சுயநல நாட்ட

சொத்துடைமை உள்ளெண்ணங்கள் தார்மிக உறுதியின்மை தேசிய வாதத்தின் வெளிப்பாட்டுக்கு இட்டுச்செல்லும் சமய மற்றும் இதர தப்பெண்ணங்கள்;

—கடந்த காலங்களில் இருந்தும், சோஷலிஸ்டு கம்யூனிஸ்டு நிர்மாணத்தின் இடர்ப்பாடுகளில் இருந்தும் கிளைத்தெழும் தேசிய வாதத்தின் புறநிலை அகவய காரணங்களை அகல் விரிவாக எடுத்து விளக்குதல்;

—தேசியவாதத்தின் ஒவ்வொரு வெளிப்பாட்டையும் அதன் கையாட்களையும் அம்பலப்படுத்தல்;

—தேசியவாதத்தின் மீதமிச்சங்களின் ஜனநாயக விரோத சோஷலிஸ்டு எதிர்ப்பு மற்றும் தேச விரோத சாரத்தையும், அவை ஏகாதிபத்தியத்தினதன் சித்தாந்தச் சீர்குலைவுச் செயல்களை எதார்த்தத்தில் ஒத்ததாக இருப்பதையும் பகிரங்கமாக்குவது;

— தமது சொந்த தேசத்தைச் சார்ந்தவர்கள் மத்தியில் காணப்படும் தேசிய வாதத்தின் பல்வேறு வெளிப்பாடுகளை முதலில் கண்டன விமர்சனம் செய்தல்; வெளியேறி பூர்ஷுவா தேசியவாதிகளின் முகமூடியைக் கிழித்தல்.

சோஷலிஸ்டு நாடுகளுக்குள் தூண்டிப் பரப்பப்படும் ஏகாதிபத்திய வாதிகளின் தேசியவாதப் பிரசாரமே தேசிய வாதம் மற்றும் தேசிய குறுமனப் போக்கின் வெளிப்பாடுகளைப் பெருமளவு ஊட்டம் தந்து வளர்த்து வருகிறது. எனவே இதை வென்று சமாளிக்க வேண்டுமானால் சர்வ தேசியக் கல்வி கம்யூனிஸ்டு-எதிர்ப்பு சித்தாந்தம் மற்றும் சோஷலிஸ்டு நாடுகளின் தேசிய உறவுகள் பற்றிய பூர்ஷுவா பொய்க் கூற்றுக்களை அம்பலப்படுத்த வேண்டும்.

லெனினது தத்துவார்த்த மற்றும் அரசியல் செயல்பாடு கம்யூனிஸ்டு மற்றும் தொழிலாளர் கட்சிகள் பூர்ஷுவா தேசிய வாதம் மற்றும் போலிப் பொதுப்பற்று (காஸ்மோபாலிடனிசம்) சித்தாந்தத்தை எதிர்த்து முரணின்றியும் விடாமுயற்சியுடனும் தாட்சண்யமின்றியும் போராட வேண்டும் என்று போதிக்கிறது. சுரண்டப்படும் மற்றும்

ஒடுக்கப்பட்ட மக்கள் திரளினர் மத்தியில் தேசியவாதத்தை நட்டு, சர்வதேச தொழிலாளி வர்க்கத்தைப் பிளவுறுத்தும் உலக ஏகாதிபத்தியத்தின் பிற்போக்கு சதித்திட்டங்களை அவர் அம்பலப்படுத்தினர்.

குறு தேசிய வெறியையும் தேசியவாதத்தையும் தூண்டி எரிய விடுவது மூலம் ஏகாதிபத்திய பூர்ஷுவாக்கள், சர்வதேசத் தொழிலாளி வர்க்கத்தைப் பிளவுபடுத்தி பலவீனப்படுத்தவும், சந்தர்ப்பவாதத்தால் கேடு கெட்டுப் போன இரண்டாம் அகிலத்தை நாசப்படுத்தவும் மற்றும் முதலாவது ஏகாதிபத்தியப் போரைத் தொடங்கி, பல்வேறு நாடுகளின் தொழிலாளர்களை போர்க்களத்துக்கு அனுப்பி, அவர்கள் ஒருவரை ஒருவர் படுகொலை செய்து கொள்ளுமாறும் ஏற்பாடு செய்தார்கள்.

இதேபோன்ற தேசியவாதக் கையாட்களைத்தான் வெறி பிடித்த பிற்போக்கு ஏகாதிபத்திய ராணுவவெறிக் கும்பல்கள் கருவியாகப் பயன்படுத்தி மனித குலத்தை இரண்டாம் உலகப் போரில் தள்ளிவிட்டன.

லெனினது அறிவுரைகளை உளத்திற்கொண்டு, சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சியும் இதர மார்க்சிய-லெனினியக் கட்சிகளும் உலக சோஷலிஸ்டு அமைப்புக்கும் சர்வதேச விடுதலை இயக்கம் முழுமைக்கும் தேசியவாதம் இன்று ஏற்படுத்தியுள்ள அபாயம் குறித்து எச்சரிக்கை செய்கின்றன. சோஷலிஸ்டு அமைப்பில் இருந்து நாடுகளை ஒன்றுபின் ஒன்ருகப் பிரித்து வெளியேற்ற உலகப் பிற்போக்கு சக்திகள் தேசியவாதத்தையும் ''தேசிய கம்யூனிசத்தையுமே'' நம்பிச் சார்ந்து இருக்கின்றன. 1956ஆம் வருடத்திய ஹங்கேரி நிகழ்ச்சிகளும் 1968-ல் செக்கோஸ்லோவாகியாவில் நடந்த சம்பவங்களும் ஏகாதிபத்தியப் பிரசாரம் விடாமுயற்சியுடன் திட்டமிட்டு புகுத்திவரும் தேசியவாதம் மற்றும் சோவியத் எதிர்ப்பின் ஆபத்திற்கு தெளிவான சான்ருகும்.

பாட்டாளி வர்க்க சர்வதேசிய உணர்வையும் சோஷலிஸ்டு தேச பக்தியையும் சேர்ந்து இசைவாக

ஒன்றிணைக்கும் உழைக்கும் மக்கள் கல்வியின் பிரதானக் குறிக்கோள்களில் ஒன்று ஏகாதிபத்திய சூழ்ச்சிகளை அம்பலப் படுத்தலும், பூர்ஷுவா தேசியவாதத் தத்துவங்கள் அவற்றின் சோஷலிஸ்டு-விரோத சோவியத்-எதிர்ப்பு திசைவழியின் மெய்யான வள்ளலைப் புலப்படுத்துவது மாகும்.

இன்றைய திருத்தல்வாதம் மற்றும் வரட்டுச் சூத்திர வாதத்தின் தேசியவாதக் கருத்தினங்களைக் கண்டன விமர்சனம் செய்வதும் மிகவும் முக்கியமானது. லெனினது தத்துவார்த்த மரபுச் செல்வம் மார்க்சிய-லெனினிய தத்துவத்தின் தூய்மையை உறுதிப்படுத்தவும், அதனை வலதுசாரி மற்றும் "இடதுசாரி" சந்தர்ப்பவாதிகள் தேசியவாதி நிலையில் இருந்து புரட்டுவதை எதிர்த்துப் போராடவும் நம்பகமான வழிகாட்டியாகத் திகழ்கிறது.

குறுதேசிய வெறி மற்றும் தேசியவாதத்தின் மீத மிச்சங்களையும் சர்வதேசியக் கல்வி முழுவதையும் சமாளிப் பதற்கான நடைமுறை, தேசங்கள் தேசிய இனங்களுக்கு இடையிலான உறவுகளை மட்டுமின்றி பல்வேறு தேசிய இனங்களின் தனிநபர்கள் இடையிலான உறவுகளையுங் கூடச் சுற்றி வளைத்துள்ளது. வேறு சொற்களில் கூறிடின் இவை, அரசியல், சித்தாந்தத் துறைகளுக்கு மட்டுமன்றி தார்மீக மற்றும் அறநெறித் துறைகளுக்கும் பொருந்தும். எல்லா சோவியத் மக்களுக்கும் குறிப்பாக வருங்கால சந்ததிகளுக்கு ஆழ வேரூன்றிய திடநம்பிக்கைகளையும் நடத்தைத் தரங் களையும் தரும் வகையில் பாட்டாளி வர்க்க சர்வ தேசியத்தின் அரசியல் மற்றும் சித்தாந்தக் கோட்பாடுகளின் அபிவிருத்தியை உறுதிப்படுத்த தொடர்ச்சியான கடுமை யான உழைப்பு அவசியம்.

தேசபக்த மற்றும் சர்வதேசியக் கல்வி மனிதநேயம், லட்சியவாதம் போன்ற தார்மீகக் கோட்பாடுகளையும் நீதியுணர்வு, கூட்டுமை மற்றும் கடமையுணர்வு ஆகிய வற்றையும் உருவாக்குகிறது. இதில் நாத்திகப் பிரசாரத் திற்குத் தனி முக்கியத்துவம் தரப்படுகிறது, காரணம்

சமயத்தின் மீதமிச்சங்கள் பூர்ஷுவா தேசியவாதத்திற்கு மேற்போர்வை போன்று பெரும்பாலும் பயன்படுத்தப் பெறுகின்றன.

சர்வதேசிய மற்றும் தேசபக்தக் கல்வி கம்யூனிஸ்டு நிர்மாணத்தின் அடிப்படை நோக்கங்களுடனும் உலக விடுதலை இயக்கத்தை வலுப்படுத்துவதுடனும் நெருக்கமாக இணைந்ததாகும்.

3. தேசங்கள், வர்க்கங்கள் மற்றும் சமுதாயப் பிரிவுகளின் தனி இயல்புகளும் சர்வதேசியக் கல்வி மீதான அவற்றின் உறவுகளும்

சோஷலிஸ்டு நிர்மாணத்தின் செயல் போக்கில் ஒற்றுமையை உறுதிப்படுத்திக் கொள்ளும் பொருட்டு, கம்யூனிஸ்டு மற்றும் தொழிலாளர் கட்சிகள் முன்னுள் ஒடுக்கும் தேசம் மற்றும் ஒடுக்கப்படும் தேசத்திற்கு இடையிலான உறவுகளின் பிரத்தியேகத் தன்மையை கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று லெனின் போதித்தார். சர்வதேசியக் கல்வி விஷயத்தில் முன்னுள் ஒடுக்கும் தேசங்களைச் சேர்ந்த கம்யூனிஸ்டுகள் ஒவ்வொரு தேசம் மற்றும் தேசிய இனத்தினுள் காணப்படும் பிரத்தியேக தேசியத் தன்மையில் அடங்கியுள்ள எல்லா முற்போக்கு அம்சங்களையும் வலியுறுத்த வேண்டும். சுயநிர்ணத்தின் முக்கியத்துவத்தின் மீதும் மகாவல்லரசு குறுதேசிய வாதத்தின் மீதமிச்சங்களை எதிர்த்த போராட்டம் மீதும் கவனத்தை ஒருமுகப்படுத்த வேண்டும், முன்னுள் ஒடுக்கப்பட்ட மக்களினங்களின் தேசிய நலன்கள், வழக்கங்கள் மொழி மற்றும் உணர்வுகளை மதித்திட வேண்டும்.

சோஷலிஸ்டு தாயகத்தை நிறுவி வலுப்படுத்துவதிலும் உலக விடுதலை இயக்கத்தை ஊக்குவிப்பதிலும், மகத்தான ருஷ்ய மக்களின் முன்னணிப் பாத்திரத்தை சுட்டிக்காட்டும் அதேபோதில், லெனினும் கம்யூனிஸ்டுக் கட்சியும் அவர்களுக்கென்று எவ்வித விசேஷ லட்சியப் பண்புகளையும் சாட்டியுரைக்கவில்லை மற்றும் அவர்களது இந்தப் பாத்திரம்

புற மற்றும் உள்காரணிகளின் "பரஸ்பர இணைப்பினாலும்' ருஷ்யாவிலும் உலகின் இதர பகுதிகளிலும் சோஷலிஸ்டுப் புரட்சியின் வளர்ச்சி விதிகள் செயல்பாட்டின் காரணத்தாலும் ஏற்பட்டது என்று எடுத்துக் காட்டினார்கள். புரட்சி இயக்கத்துக்கும் சோஷலிஸ்டு கம்யூனிஸ்டு நிர்மாணத்திற்கும் தமது பங்களிப்பைத் தந்துள்ள இதர மக்களினங்கள் எல்லோருக்குமே இதற்குரிய மதிப்பை எப்போதும் தந்து வந்திருக்கிறார்கள்.

மறுபுறத்தில் முன்னாள் ஒடுக்கப்பட்ட தேசங்களைச் சேர்ந்த கம்யூனிஸ்டுகள் மேலும் அதிக வளர்ச்சியடைந்த தேசங்களில் இருந்து கிடைத்த உதவியின் முக்கியத்துவம், நாடு முழுவதற்கும் குறிப்பாக ஒவ்வொரு தேசத்துக்கும் பயன்தரும் மேலும் நெருக்கமான ஒத்துழைப்பின் தேவை மற்றும் வட்டார தேசிய வாதத்தின் மீதமிச்சங்களை எதிர்த்துப் போராடுதல், இவைகுறித்துத் தமது கவனத்தை ஒருமுகப்படுத்த வேண்டும். ருஷ்யாவின் முன்னாள் பின் தங்கி நின்ற மக்களினங்களைச் சேர்ந்த கம்யூனிஸ்டுகள் எடுத்துக்காட்டாக சோஷலிஸ்டுப் புரட்சிக்குத் தயாரிப்புகள் செய்வதிலும் அதை நிறைவேற்றி முடிப்பதிலும், சோவியத் அரசை உருவாக்கி வளர்ப்பதிலும், சோஷலிசம் கம்யூனிசத்தை நிர்மாணிப்பதிலும், சோஷலிஸ்டு தாயகத்தின் பொருளாதார சக்தியையும் தற்காப்பு ஆற்றலையும் அதிகரிப்பதிலும், ருஷ்ய மக்கள் வகித்த பங்கினை வருணித்தார்கள், சோவியத் மற்றும் உலகக் கலாசாரம் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பத்தின் சாதனைகளை எளிதில் புரிந்து கொள்ள உதவும் ருஷ்ய மொழியினைப் பயில்வதன் சாதகங்களையும் எடுத்துக் காட்டினார்கள்.

உழைக்கும் மக்களின் சர்வதேசியக் கல்விக்கான வகை வேறுபாட்டு அணுகுமுறையில் பின்வரும் காரணிகள் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும்.

—ஒவ்வொரு தேசத்தின் (தேசிய இனத்தின்) உருவாக்கம் மற்றும் வளர்ச்சியிலும் அது சோஷலிசத்

துக்கு கடந்து செல்வதிலுமான ஸ்தூலமான தனிப்பட்ட அம்சங்கள்;

— தேசிய உணர்வு மற்றும் சர்வதேசிய உலகக் கண்ணோட்டத்தின் வலிமை;

— ஜாராட்சி மற்றும் முதலாளித்துவ சகாப்தத்தின் கெடுமரபின் தன்மை;

— வர்க்கக் கட்டமைப்பின் தனி இயல்புகள், குறிப்பாயும் நகரப்புற நாட்டுப்புற மக்கள் தொகையின் தொடர்பாடு;

— குடியரசின் மக்கள் தொகையில் இந்த தேசத்தின் பங்கு;

— இதர மக்களுடனான மரபான பிணைப்புக்களின் வரம்பு;

— மக்கள் தொகையின் சில பகுதியினரிடை குறுதேசிய வெறி மற்றும் தேசியவாத மீதமிச்சங்கள் இருத்தல்.

சர்வதேசியக் கல்வி திறமாக நடத்தப்பட வேண்டுமானால், அது ஸ்தூலமான நிலைமைக்குத் தன்னைத் தகவமைத்துக் கொள்ளுதல் வேண்டும். இந்த நிலைமை தேசத்தின் வரலாற்று வளர்ச்சி அதன் வர்க்கக்கட்டமைப்பு சோவியத் குடியரசுகள், பிராந்தியங்கள் மற்றும் தனிப்பட்ட உழைப்பாளர் கூட்டமைப்புகளின் வாழ்க்கையிலான இன நடைமுறைகள் ஆகியவற்றில் இருந்து ஏற்படுகிறது.

மார்க்சிய-லெனினிய வர்க்க அணுகுமுறை, சமுதாயப் பின்னணியை நாம் கவனத்தில் எடுத்துக் கொள்வதை அவசியப்படுத்துகிறது; தொழிலாளர் விவசாயிகள் மற்றும் அறிவுஜீவிகள் தமது ஸ்தானம் சமுதாயத்தில் கம்யூனிஸ்டு மறு சீரமைப்பு மற்றும் சோஷலிஸ்டு தாயகத்தை வலுப்படுத்தி வளர்த்திடுவதிலான தமது பங்கு இவற்றில் ஒருவரோடு இன்னொருவர் வேறுபடுவர்.

சர்வதேசியக் கல்வியின் வழிகள் மற்றும் முறைகளின் அமைப்பு சோஷலிஸ்டு சமுதாயத்தின் தலைமை சக்தி என்ற

முறையில் தொழிலாளி வர்க்கத்தின் பின்வரும் தனிச் சிறப்பான இயல்புகளால் நிர்ணயிக்கப்படுவதாகும்:

—சோவியத் மக்கள் அனைவரும் ஆளப்படுவோராக இருக்கும் நாடு தழுவிய வடிவிலான அரசு உடைமை (மக்கள் முழுமையின் உடைமை) யுடனான நேரடிக் கூட்டு;

—எல்லா சோவியத் குடியரசுகளிலும் ஒரே மாதிரியாக இருக்கும் பெருவீத தொழில்துறை உற்பத்தியில் அதன் பங்கேற்பு;

—பிரதானமாயும் பெரிய தொழில்துறை கலாசார மையங்களில் இது ஒருமுகப்பட்டிருத்தல்;

—இதன் உயர்தரமான அரசியல் கலாசார வளர்ச்சி, உயர்தரமான ஸ்தாபனம், கட்டுப்பாடு, இவை நவீன தொழில்துறை உற்பத்தியால் நெறியாக்கம் செய்யப் பட்டிருப்பது;

—இதன் தொழிலாளர் கூட்டமைப்புகளின் (பொதுவான) பல்தேசிய இன இயைபு;

—புரட்சிகரப் போராட்டங்களிலும் உழைப்பிலுமான இதன் செழுமையான சர்வதேசிய மரபுகள்;

—இதர ஒன்றியக் குடியரசுகளிலுள்ள இதர சோஷலிஸ்டு நாடுகளிலும் வளர்முக நாடுகளிலுமுள்ள தொழிலாளர் கூட்டமைவுகளுடனான இதன் விரிவான தொழில்துறை கலாசாரப் பிணைப்புக்கள்;

—இளம் மக்களின் மற்றும் கிராமப் பிரதேசங்களில் ஏற்படும் ஜனப்பெயர்வு காரணமாக மக்கள் தொகையில் இதன் பங்கு தொடர்ந்து அதிகரித்து வருவது;

—சோஷலிஸ்டு தாயகத்துக்கும் உலக சோஷலிஸ்டு அமைப்புக்கும் உலக விடுதலை இயக்கம் முழுமைக்குமான இதன் விசேஷப் பொறுப்பு.

தொழிலாளர்களின் சர்வதேசிய கல்வியின் வழிகளும் முறைகளும் கட்சியின் வழிகாட்டுதலின்கீழ் தொடர்ந்து முன்னேற்றமடைந்து வருகின்றன. இது சோஷலிஸ்டு

நிர்மாணத்தின் முன்னுரிமைகள், உலக விடுதலை இயக்கத்தின் வளர்ச்சி, தொடர்ந்து உயர்ந்து வரும் கலாசார தொழில் நுட்பத் தரத்தால் தொழிலாளி வர்க்கத்தில் கட்டாயமாக ஏற்படும் மாறுதல்கள் இவற்றுக்கு ஏற்ப நிகழ்கிறது.

சர்வதேசியக் கல்வி குறித்த வகை வேறுபாட்டு அணுகுமுறை, விவசாயிகளின் எதார்த்த நிலையை சரியாக மதிப்பீடு செய்தல் வேண்டும்:

—அவர்கள் குழு, கூட்டுறவு, கூட்டுப் பண்ணை மாதிரி உடைமையுரிமையுடன் நேரடியாகக் கூட்டுச் சேர்ந்திருக்கிறார்கள், இந்த உடைமையுரிமை கூட்டுறவுகளின் உறுப்பினர்களை மட்டுமே கொண்டதாகும், சோவியத் மக்கள் அனைவரையும் அல்ல;

—விவசாயத்திலான பிரத்தியேக போக்கு இயற்கை மற்றும் பருவநிலைகளைச் சார்ந்திருப்பது, இது நாட்டின் பிராந்தியத்துக்கு ஏற்ப வேறுபடும்;

—விவசாயிகள் கிராமங்களில் ஒருவருக்கொருவர் தம்மிடையும் பெரிய தொழில்துறை கலாசார மையங்களில் இருந்தும் கணிசமான தொலைவில் பரவலாக வாழ்கிறார்கள்.

—தொழிலாளர்களுடன் ஒப்புநோக்கும்போது விவசாயிகளிடம் தாழ்ந்த தரத்திலான அரசியல் கலாசார ஞானமே காணப்படுகிறது, அதோடு அவர்களது ஸ்தாபனக் கட்டும் குறைவு;

—விவசாயிகளின் உழைப்புக் கூட்டுகள் பொதுவாக ஒரு தேசிய இனத்தையே கொண்டதாகும், இதர தேசிய இனங்களுடனான அவர்களது உறவு செறிவாக இல்லை;

—விவசாயிகளுக்கு இதர குடியரசுகள், இதர சோஷலிஸ்டு தேசங்கள் அல்லது வளர்முக நாடுகளின் உழைப்பாளர் கூட்டுகளுடன் உள்ள பிணைப்புகள் மிகச் சிலவே;

—அவர்களது முன்னாள் குட்டி பூர்ஷுவா அந்தஸ்து காரணமாக விவசாயிகள் சொத்துரிமை மற்றும் சமயத்தின்

மீதமிச்சங்களையும் தேசிய அசாதாரணத் தன்மையின் மீதமிச்சங்களையும் மேலும் பிடிவாதமாகப் பற்றி நிற்பவர் களாவர்.

அறிவுஜீவி வர்க்கத்தின் பிரத்தியேக இயல்புகள், நாட்டின் முன்னேற்றத்தில் அதன் பாத்திரம், அதன் உறுப்பினர் சிலரிடம் பிற்பட்ட உணர்ச்சிகள் காணப்படுவது ஏன் என்பதற்கான காரணங்கள் இவையும், சர்வதேசியக் கல்வியை நடத்தும் கட்சி மற்றும் பொது அமைப்புகளால் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும்.

உழைக்கும் மக்களின் தேசபக்த-சர்வதேசியக் கல்வி போதனை தொழிலாளர் விவசாயிகள் அறிவுஜீவுகளின் விசேஷமான எதார்த்த நிலைமை ஒவ்வொரு ஸ்தூலமான சூழலிலும் மறைமுகமாக மட்டுமே பிரதிபலிக்கிறது என்ற மெய்நடப்பால் சிக்கலுறுகிறது. ஒரு வர்க்கம் அல்லது ஒரு அடுக்கினர் சோஷலிஸ்டு உணர்வை வார்த்து உருவாக்கு வதிலான பொதுப்போக்கு தனிப்பட்டோர் திரிபுகளை இல்லாமற் செய்வதில்லை.

சர்வதேசியக் கல்வி, ஒட்டு மொத்தமாயும் தேசங்களின் பிரத்தியேக அம்சங்களைக் கையாளுவதையும், தொழிலாளி வர்க்கம் விவசாயிகள் மற்றும் அறிவுஜீவிகளின் எதார்த்த நிலைமையையும் சார்ந்தே இருக்கிறது. அதோடு பல்வேறு குழுக்களின் உற்பத்தியிலான குழுக்கள் தனித் தொழில் புரியும் குழுவினர், ஒரே தரமான கல்வி பெற்ற குழுவினர், ஒரே இடத்தில் வாழும் குழுவினர் இத்தியாதியோரின் சமூக-தேசிய பிரத்தியேக இயல்புகள் எவ்வாறு கையாளப் படுகின்றன என்பதையும் பொருத்து இது இருக்கிறது. இளம் தொழிலாளர்களுக்கும், பள்ளிகளிலும் பல்கலைக் கழகங்களிலுமுள்ள மாணவர்களுக்கும், விஞ்ஞான ரீதியில் செம்மை செய்யப்பட்ட சர்வதேசியக் கல்வியின் சீரான அமைப்பு தனி முக்கியத்துவம் உடையது.

கட்சி தொழிற்சங்கம் மற்றும் காம்சொமால் (இளம் கம்யூனிஸ்டு கழகம்) அமைப்புகள் நேரடி வேலையில்

ஈடுபட்டுள்ள உழைக்கும் மக்களின் சர்வதேசியக் கல்வியின் மீது தமது கவனத்தை மையப்படுத்துகின்றன. இதை மேலும் திறம்படச் செய்ய வேண்டி, அவை இதை தொழிலாளர் மற்றும் ஊழியர்களின் தேசியப் பின்னணி யோடும் இனக் குழுக்கள் இடையிலான உறவுகள் மற்றும் அவற்றின் நேசபூர்வப் பிணைப்புகளுடனும் இணைத்துச் செயல்படுகின்றன.

லெனினும் கம்யூனிஸ்டுக் கட்சியும் கல்விப் பணியின் பிரத்தியேக முறைகள் மற்றும் வடிவங்கள் பற்றி என்றுமே போலி வழிபாடு செய்தது கிடையாது. உழைக்கும் மக்களின் பல்வேறு வகை இனங்கள் விஷயத்தில் அவர்கள் ஒரே மாதிரியான அணுகுமுறை மேற்கொள்வதை எதிர்த்து எச்சரித்திருந்தார்கள். அவர்கள் நடைமுறை அனுபவத்தை தீர்க்கமாக ஆராய்தல் வேண்டும் என்று வற்புறுத்தினர்கள், கம்யூனிஸ்டு கல்வியில் மேலும் சிறந்த புதிய அதிகத் திறமான வழி வகைகளைத் தேடுமாறு ஊக்குவித்தார்கள்.

சோவியத் தேசபக்தி மற்றும் சோஷலிஸ்டு சர்வதேசிய உணர்வை மேம்படுத்துவதற்கு, சோஷலிஸ்டு மற்றும் கம்யூனிஸ்டுநிர்மாணத்தின் நடப்பில் சாதகமான வாய்ப்புகள் உருவாயின. கம்யூனிஸ்டு கட்சியின் வசம் பத்திரிகை, ரேடியோ, டெலிவிஷன், சினிமா மற்றும் நாடக மன்றம் போன்றதான வலிமை வாய்ந்த சித்தாந்த மற்றும் தார்மிக பிரசார சாதனங்கள் இருந்தன.

எல்லா உழைக்கும் மக்கள் மத்தியிலும், அதிலும் முதன்மையாக வருங்கால சந்ததியினர் மத்தியிலும், சோவியத் தேசபக்தியை, சோஷலிஸ்டு தாயகம் குறித்த பெருமிதத்தை சோவியத் மக்களின் மாபெரும் சாதனைகள் பற்றிய பெருமையை கட்டாயம் வளர்க்க வேண்டும் என்று கம்யூனிஸ்டுக் கட்சி எப்போதும் வலியுறுத்தி வந்துள்ளது. இது சர்வதேசிய உணர்வில் எல்லா தேசங்கள் மற்றும் தேசிய இனங்கள்பாலான மதிப்புணர்வுடன் பேணப்பட வேண்டும். தேசிய வாதம் குறுதேசிய வெறி மற்றும் தேசிய

அசாதாரணத் தன்மையின் வெளிப்பாடுகள் எதையும் அனுமதித்தலாகாது.

தேசபக்த மற்றும் சர்வ தேசிய கல்வி விஷயத்தில் கட்சி அமைப்புகளுக்கு விரிவான நடைமுறை அனுபவம் உண்டு. ஒரே வேலைத் தளத்தில், ஒரே குழுவில் அல்லது ஷிட்டில் சேர்ந்து உழைப்பது மூலமே பிரதானமாயும் பல்வேறு தேசிய இனங்களைச் சேர்ந்த உழைக்கும் மக்கள் இடையே சோதர நட்புறவு வார்த்து உருவாக்கப்பட்டு வலுவடைகிறது. 46 தேசிய இனங்களைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலை செய்யும் கஜக்ஸ்தான் இரும்பு-உருக்கு ஆலை (இது கஜாக் மாக்னிடொகோர்ஸ்க் என்று அறியப்படுவது) போன்றதான பல்தேசிய-இன தொழில்துறை நிறுவனங்கள் சர்வதேசியக் கல்வியின் வெகு மெய்யான கேந்திரங்களாகி விட்டன.

ஒன்றியக் குடியரசுகள் இடையிலும், பிராந்தியங்கள் இடையிலும், நகரங்கள், மாவட்டங்கள் மற்றும் ஆலைக் கூட்டுகள் இடையிலும், பல்வேறு வடிவிலான சோஷலிஸ்டு ஆதர்சப் போட்டி நடக்கிறது.

அரசியல் கல்வி முறை குறிப்பாயும் பாட்டாளி வர்க்க சர்வதேசியத்தின் தத்துவம் நடைமுறை பற்றிய ஆராய்வு சோவியத் ஒன்றியத்தின் மக்களினங்களின் நட்புறவு மற்றும் லெனினது தேசியக் கொள்கை பற்றிய ஆராய்வு, உழைக்கும் மக்களின் தேசபக்த மற்றும் சர்வதேசியக் கண்ணோட்டத்தை உருவாக்குவதில் முக்கியமான பங்கு வகிக்கின்றன.

நட்புறவு விழாக்கள், சோதரக் குடியரசுகளுக்கு சுற்றுலாப் பயணங்கள், நாடகக் குழுக்களின் நட்புறவு நிகழ்ச்சிகள், கலை இலக்கிய விழாக்கள், சோதர மக்களின் கதைகள், நாவல்கள், மொழியாக்கம், இதர குடியரசுகளின் சாதனைகள் பற்றிய பொருட்காட்சிகள் இவை மக்களால் பெருமளவு விரும்பப்படுகின்றன. ஒன்றியக் குடியரசுகளின் ஆண்டு விழாக்களில் நடைபெறும் அணிவகுப்புகள்

கூட்டங்கள் இதர சோஷலிஸ்டு நாடுகளின் மக்களின் விழாக்களும் இக்கல்வி போதனைக்கான திறமான முறையாகும். சர்வதேசிய நட்புறவு கிளப்புகள் இளைஞர்களிடையே பிரபலமாகியுள்ளன.

பல்வேறு தேசிய இனங்களைச் சேர்ந்த குழந்தைகளுக்கான பள்ளிகளின் விரிவான அமைப்பு, சர்வதேச பேசு நண்பர்கள் சங்கம் அகில சோவியத் மரபுகள் வாழ்க்கைப் பாணி இத்தியாதிகளை மக்களிடையே பரப்புவதும் எல்லாம் நல்ல பலன்களைத் தந்துள்ளன.

ஏற்கெனவே நடப்பில் உள்ள கல்விப் பணி வடிவங்களின் அகத்தே பல கட்சி அமைப்புக்கள் புதிய அம்சங்களைப் புகுத்துகின்றன. இதன் வழி மக்களின் அக்கறையை மேலும் உயர்த்துகின்றன. அதோடு அவை சமூகவியல் ஆராய்ச்சி, பொதுஜன கருத்து வாக்கெடுப்பு மற்றும் சாதனை அறிக்கைகள் வாயிலாக தேசபக்த மற்றும் சர்வதேசியக் கல்வி போதனையின் நடைமுறை விளைவு, அரசியல் பிரதிபலிப்பு மற்றும் உணர்வு பூர்வத் தாக்கம் ஆகியவற்றை ஆராய்கின்றன.

சோவியத் தேசபக்தியை சர்வதேசியத்துடன் இரண்டற இணைக்கும் கல்விப் பணியின் பல்வேறு அம்சங்கள் நகரங்களிலும் மாவட்டங்களிலுமான கட்சிக் கமிட்டிக் கூட்டங்களிலும் பல கட்சிக் கிளைகளிலும் விவாதிக்கப்படுகின்றன.

சோவியத் தேசபக்தி சர்வதேசியம் மற்றும் மக்களினங்களின் நட்புறவு சம்பந்தமான விஷயங்கள் மத்திய மற்றும் குடியரசுகளிலான பத்திரிகைகளால் விரிவாக விவாதிக்கப்படுகின்றன. ஒட்டு மொத்தமாக சோவியத் மக்களினதும், உறுப்புக் குடியரசுகள், சுயாட்சிக் குடியரசுகளின் மக்களினதுமான தேசபக்த மற்றும் சர்வதேசியக் கடமை மேலும் திட்டவட்டமான முறையில் விவரிக்கப்படுகிறது.

வி. இ. லெனின் பிறந்த தின நூற்றாண்டு விழாவும், சோவியத் சோஷலிஸ்டு குடியரசுகளின் ஒன்றியத்தின் 50ஆம்

ஆண்டு விழாவும், மக்களின் தேசபக்த-சர்வதேசியக் கண்ணேட்டம் மீது அனுகூலமான செல்வாக்குச்செலுத்தின. கம்யூனிஸ்டு சமுதாய அமைப்பை நிர்மாணிப்பதிலான லெனினது கருத்துக்களின் நடைமுறை அமலாக்கம் பற்றியும், சர்வதேசியம், பல்தேசிய இன சோஷலிஸ்டு அரசின் எதிர்கால அபிவிருத்திக்கான மக்களினங்களின் நட்புறவு, உலகப் புரட்சி இயக்கத்தில் சோவியத் ஒன்றியத்தின் பாத்திரம் ஆகியவற்றின் முக்கியத்துவத்தையும் குறித்து சோவியத் மக்கள் மேலும் தீர்க்கமான மதிப்பீட்டைப் பெற்றுர்கள்.

இருப்பினும், தேசபக்த சர்வதேசியக் கல்வி போதனையில் இன்னும் கணிசமான சில குறைபாடுகள் உள்ளன. இந்த முக்கியமான துறையில் கட்சி அமைப்புகளின் பணி எந்தளவுக்கு இருக்க வேண்டுமோ அந்தளவுக்கு முறை யானதாக இல்லை. அவசியமான அளவு திட்டமிடல் மற்றும் லட்சிய நோக்கம் இல்லாது காணப்படுகிறது. மக்கள் தொகை பிரிவுகளின் சமூக-தேசிய இயல்புகள் எப்போதும் சரிவர கவனித்தபாடில்லை, கல்விப் பணியின் பல்வகையான வடிவங்களும் சாதனங்களும் எப்போதும் முழுமையாகப் பயன்படுத்தப் பெறுவதில்லை. கட்சி மற்றும் காம்சொமால் கல்வி ஏற்பாடு, தேசியப் பிரச்சினை மீதான லெனினது சித்தாந்த மரபையும், சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சியின் சர்வதேச மரபுகளையும், உலகக் கம்யூனிஸ்டு இயக்கத்தின், தேசிய திரிபு வாதத்தை எதிர்த்த போராட்டத்தின் வரலாற்றையும், சோஷலிசம் கம்யூனிசத்தின் கீழ் தேசங் களிடையான உறவுகளை ஆளுமை செய்யும் புறநிலை நியதி களையும் கம்யூனிஸ்டு-எதிர்ப்பு மற்றும் சோவியத்-விரோதத்தை எதிர்த்த போராட்டத்தின் வடிவங்கள், முறை களையும் பற்றி எப்போதும் போதுமான அளவுக்கு தீர்க்கமான அறிவுரையை வழங்குவதில்லை.

தேசிய இனங்கள் பற்றிய வேறுபாடுகள் எதுவுமின்றி, அனைத்து உழைக்கும் மக்களுடையதுமான ஐக்கிய சோஷலிஸ்டு நாட்டின்பால் உணர்வு பூர்வமான

விசுவாசத்தைப் பேணி வளர்ப்பது, அதன் வலிமை பெருகவும், உலக நிகழ்ச்சிகள் மீதான அதன் மதிப்பு உயரவும்,செல்வாக்கு அதிகரிக்கவும் இன்றியமையாததாகும்.

உலகப் புரட்சி இயக்கத்தில் தேசியப் பிரச்சினை வகிக்கும் மேலதிகமான பாத்திரம் மூலமும் முதலாளித்துவத்திலிருந்து கம்யூனிசத்துக்கு மாறிச் செல்லும் இந்த சகாப்தத்தின் ஜீவாதார முக்கியத்துவமுடைய பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண வேண்டிய தேவை காரணமாயும், உலக சோஷலிஸ்டு அமைப்பு மற்றும் சர்வதேசத் தொழிலாளி வர்க்கம் முழுவதன் ஒற்றுமையை மேலும் வலுப்படுத்துவது எனும் ஜீவாதார லட்சியம் காரணமாயும் மேலும் பயனுறுதியுடையதான சர்வதேசியக் கல்வி அவசியமாகிறது.

இதற்குப் பெருமளவு உதவிகரமாக சமுதாயத்தின் எல்லாத் துறைகளிலும் கம்யூனிஸ்டுக் கட்சி விஞ்ஞான பூர்வமாக விரிவிளக்கம் செய்துள்ள கொள்கை முன் வருகிறது. இதனுள் தேசங்கள் தேசிய இனங்கள் இடையிலான உறவுகள், தனிநபர் வழிபாடு மற்றும் அகநிலைப் போக்கு சம்பந்தமாக ஏற்பட்ட தவறுகளைத் திருத்தி நேர் செய்தல், எல்லா ஸ்தாபன மற்றும் சித்தாந்தப் பணிகளை மேம்படுத்தல் ஆகியவை அடங்கும்.

அத்தியாயம் ஒன்பது

சோவியத் மக்கள்—ஒரு புதிய வரலாற்று சமுதாயம்

சோஷலிஸ்டு வழிகளில் சோவியத் ஒன்றியத்தின் தேசங்கள் தேசிய இனங்கள் வளர்ச்சியடைந்ததற்கு மகுடம் வைத்தாற் போல, புதிய சமூக-அரசியல் மற்றும் சர்வ தேசிய சமுதாயமான சோவியத் மக்கள் தோற்றமளித் தார்கள். இது அக்டோபர் புரட்சியின் மகத்தான லட்சியங் களின் திறமான செயல்பாடு, பொருளாதாரத்தின் சோஷ லிஸ்டு புனரமைப்பு, சுரண்டும் வர்க்கங்கள் ஒழிக்கப்படல், தொழிலாளர், விவசாயிகள், அறிவுஜீவிகளின் கூட்டணி எழுச்சியூட்டப் பெறல் மற்றும் சோஷலிஸ்டு தேசங்களின் உருவாக்கம், வளர்ச்சி மற்றும் படிப்படியான சங்கமிப்பு இவற்றின் இயல்பான விளைவாகும்.

லெனினது கட்சியின் வழிகாட்டுதலின் கீழ், மிக மோசமான இடையூறுகளை எதிர்த்து நின்று செயல்பட்ட சோவியத் தேசங்களும் தேசிய இனங்களும்தான் முதன் முதலாக மெய்யான சுதந்திரத்தைப் பெற்றன, தமது நாட்டின் முழுஉரிமையாளர் ஆகின,உலகிலேயே முதலாவது வளர்ச்சியடைந்த சோஷலிஸ்டு சமூக அமைப்பை நிறுவின, படிப்படியாக ஒற்றை சோவியத் மக்கள் உருவில் இணைந்தன.

சோவியத் ஒன்றியத்தில் சமூக, அரசியல், தார்மிக அழகியல் வாழ்க்கை நாட்டின் எல்லா தேசிய இனங்களையும்

சேர்ந்த உழைக்கும் மக்களின் நட்புறவையும் சகோதரத் துவத்தையும் ஆதாரமாகக் கொண்டு நிலவுகிறது. சோவியத் மக்கள் நகரப்புற மற்றும் நாட்டுப்புற மக்கள் நெருக்கமாக இணைந்த ஒரு கூட்டமைப்பாகும். மேலும் 100-க்கு மேற் பட்ட தேசிய இனங்கள் கம்யூனிசத்தை ஒன்று சேர்ந்து நிர்மாணித்துவரும் தனியொரு நட்புறவுக் குடும்பமாகும். மனித குலத்தின் கம்யூனிச எதிர்காலத்துக்குப் புலனாய்வு செய்து முன்னோடியாகச் செயல்படும் தமது உலக வரலாற்றுத் திருப்பணியில், சோவியத் மக்கள் வெற்றி யடைந்து வருவதை உலகம் எங்குமுள்ள முற்போக் காளர்கள் அங்கீகாரம் செய்துள்ளனர்.

நம்மிடம் சோவியத் மக்கள் எனும் முழுஉருவகம் பெற்ற புதிய வரலாற்று சமுதாயம் இப்போது உள்ளது என்ற ஆதாரத்தை வைத்தே நாம் எப்போதும் துவக்கம் செய் கிறோம். இந்த மக்கள் தொழிலாளி வர்க்கம், விவசாயிகள் மற்றும் அறிவு ஜீவிகளின் உறுதியான கூட்டணியையும் நமது நாட்டின் பெரிதும் சிறிதுமான எல்லா தேசங்களின் நட்புறவையும் அடிப்படையாகக் கொண்டது, இதில் தொழிலாளி வர்க்கமே தலைமைப் பாத்திரம் வகிக்கிறது என்று 25 ஆவது காங்கிரசுக்கான தனது அறிக்கையில் சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சியின் மத்தியக் கமிட்டி குறிப்பிடுகிறது. *

கடந்த அரை நூற்றாண்டு காலத்துள், நாட்டில் ஏற் பட்ட எல்லா இடைத் தொடர்புடைய பொருளாதார மற்றும் சமூக-அரசியல் மாற்றங்களின் மொத்தமான விளைவான சோவியத் மக்கள், ஒரு புதிய உயர் மாதிரி யான வரலாற்றுச் சமுதாயம் என்ற முறையில், சமுதாயத் தின் முன்னேற்றத்துக்காக கம்யூனிசத்தை நிர்மாணிப்பதில்

---

* சோ.க.க. மத்தியக் கமிட்டியின் அறிக்கையும் உள் நாட்டு வெளிநாட்டுக் கொள்கையில் கட்சியின் உடனடிப் பணிகளும், சோ.க.க. 25 ஆவது காங்கிரஸ், மாஸ்கோ, 1976, பக். 96.

முன் என்றையும்விட அதிகமாக மேலும் மகத்தான பாத்திரம் வகிப்பர் என்பதில் கேள்விக்கே இடமில்லை.

1. தேசங்கள் தேசிய இனங்களின் சமூக மற்றும் சர்வதேசிய ஒற்றுமை— சோஷலிஸ்டு சமுதாயத்தின் முக்கியமான புறநிலை நியதி

வரலாறு-குலமரபு, பூர்வகுடி, தேசிய இனம், தேசம் என்னும் பல்வேறு வகைகளிலான சமுதாயங்களைக் கண்டிருக்கிறது. சோவியத் மக்கள் அடிப்படையிலேயே ஒரு புதிய சமூக மற்றும் சர்வதேசிய மக்கள் சமுதாயம் ஆவர்.

குலமரபு மற்றும் பூர்வகுடி பொதுவான மூதாதையர் மீது உறைந்திருந்த "இயல்பான சமுதாயம்" ஆகும். இதில் மார்க்சும் எங்கெல்சும் குறிப்பிடுவது போன்று மக்கள் ஒருவரோடொருவர் பிரித்தறிய முடியாதபடி இருந்தார்கள். புராதன சமுதாயத்தின் மரபுவழி பந்தத்திலிருந்து இன்னமும் பிரிந்து வாழவில்லை. தனிச் சொத்துடைமையின் வளர்ச்சி, பரிவர்த்தனை மற்றும் வாணிகம் இந்தப் பூர்வகுடி பந்தங்களை அழித்தது, வர்க்கங்களாகப் பிரிந்து அடுக்கமைவதைச் சாத்தியமாக்கியது. இந்த அடிப்படையில் தேசிய இனங்கள் தோன்றின, இதன் முக்கிய குணாம்சம் கூட்டுத் தன்மை அல்ல, மாறாக, வெவ்வேறு வர்க்கங்கள் சமூகப் பிரிவுகளைத் தனிப்படுத்தி பிணங்கி ஒதுங்கச் செய்வதும் பிராந்தியங்களைத் தனிமைப்படுத்துவதுமாக இருந்தது. சமூகப்பகைமைகள் மேலோங்கியதோடு ஆதிக்க வர்க்கங்கள் மக்களின் முற்போக்கு வளர்ச்சியைத் தகையத் தொடங்கின. இவ்வாறு செய்ததன்மூலம் மக்களிடம் இருந்த தொடர்பை இழந்தன. இந்தக் கால கட்டத்தில் "மக்கள்" எனும் கருத்தினம் உழைக்கும் மக்கள் திரளினரை மட்டுமே குறித்தது. தேசங்கள் விஷயத்திலும் பாட்டாளி வர்க்கம் மற்றும் பூர்ஷுவா வர்க்கத்தின் நலன்கள் இரு கோடிகளில் துருவமயமாகும்போது இதே காட்சியைக் காணலாம்.

பகைமை சமூக அமைப்பில் குறிப்பாயும் ஜாராட்சி ருஷ்யா போன்ற பல்தேசிய இன அரசில் ''மக்கள்'' எனும் கருத்தினம் தேசம் முழுவதையும் சேர்த்து அரவணைத்த ஒன்ருக இருக்கவில்லை.

மேற்கு ஐரோப்பிய சமூக-ஜனநாயக வாதிகளின் சந்தர்ப்பவாதப் பிரிவினரும் ருஷ்யாவின் சோஷலிஸ்டு புரட்சியாளர் மற்றும் மென்ஷிவிக்குகளும் பூர்ஷுவா சித்தாந்த வாதிகளின் அடியொற்றி நடந்து அவர்களால் ஒரு சமூக உள்ளியைபுள்ள திரளினர் என்று சித்திரிக்கப்படும் ''மக்கள்'' எனும் கருத்தினத்தின் பின்னே, சமுதாயம் வர்க்கங்களாகப் பிரிந்து கிடப்பதை மூடி மறைத்தார்கள். முதலாளித்துவ நாடுகளில் மக்கள் தனி ஒரு ஒற்றைத் தொகுதியாக இருப்பதாக உரிமை கொண்டாடும் இன்றைய சமூக-சீர்திருத்த வாதிகளும் திருத்தல் வாதிகளும் தேசிய ஒற்றுமை குறித்த அவர்களது பிரசார உரைகளில் இதே வழியைப் பின்பற்றுகின்றனர். மார்க்சிய லெனினியத்தின் மூலவர்கள் இந்த வர்க்க வேறுபாடுகள் இத்தகைய சந்தர்ப்ப வாத மற்றும் அற்பவாத முறையில் பொய்யாக உருமாற்றப் படுதலை எப்போதுமே உறுதியாக எதிர்த்து வந்திருக்கிருர்கள். வர்க்கப் பகைமைகள் மக்களினங்கள் இடையே பகைமைகள் எழுவதற்கும் இடமளிக்கின்றன.

சோவியத் நாட்டில் முதலில் செயல்படுத்தப்பட்ட முதலாளித்துவத் தனிச் சொத்துரிமை ஒழிப்பு, மனிதனை மனிதன் சுரண்டுவதை ஒழித்ததோடு மக்களை மக்கள் ஒடுக்குவதையும் ஒழித்தது. அதன் மூலம் சோவியத் ஒன்றியத்தின் மக்களினங்கள் ஒற்றை சர்வதேசியக் குடும்பமாக எழுச்சியுற வழி வகுத்தது.

புதிய வரலாற்று சமுதாயம்—சோவியத் மக்கள், சமுதாயத்தின் வர்க்கக் கட்டுக்கோப்பில் ஏற்பட்ட மாறுதல்களின் பலனுகவே முக்கியமாயும் உருவகம் பெற்றது. 1913-ல் ஜாராட்சி ருஷ்யாவின் மக்கள் தொகையில் 16.3 சதவிகிதம் பேர் பூர்ஷுவாக்கள், நிலப்பிரபுக்கள், வாணிகர் மற்றும் குலாக்குகளாயும் 17 சதவிகிதம் பேர் தொழிலாளர் மற்றும்

இதர ஊழியர்களாயும் (இதில் 14 சதவிகிதம் தொழிலாளர்) 66.7 சதவிகிதம் பேர் விவசாயிகள், கைவினைஞர்களாயும் இருந்தார்கள். இதற்கு நேர்மாறாக, சோவியத் சமுதாய அமைப்பில் உழைக்கும் மக்கள் மட்டுமே உள்ளனர். இதில் 83 சதவிகிதம் சோஷலிஸ்டு தொழிலகங்கள், அலுவலகங் களிலான தொழிலாளரும் இதர ஊழியருமாவர் (இதில் 60.9 சதவிகிதம் தொழிலாளர்); 17.1 சதவிகிதம் கூட்டுப் பண்ணை விவசாயிகளுமாவர்.

சுரண்டும் வர்க்கங்கள் ஒழிக்கப்பட்டதானது, வர்க்க ஒடுக்கு முறையை நடத்துபவர்கள் மட்டுமன்றி தேசிய ஒடுக்குமுறை தேசியப் பூசல் மித்திரபேதம் செய்து ஒதுக்கு தல் மற்றும் சமுசயங்களை ஏற்படுத்துவோரும் அகற்றி நீக்கப்பட்டார்கள். மற்றும் விவசாயிகளிடையான கூட்ட மைப்புகள், தேசிய ஒதுக்க நிலைக்கான குட்டி பூர்ஷுவா ஆதார ஒதுக்கலுக்கு முற்றுப்புள்ளி வைத்தன. ஒரு சோஷலிஸ்டு அறிவுத் துறையினரின் தோற்றமுங்கூட தேசிய குறுமனப்பான்மையை அகற்றுவதற்குத் துணை செய்தது. சோவியத் சோஷலிஸ்டு சமுதாய அமைப்பிலுள்ள நட்புடைய வர்க்கங்களும் குழுக்களும் மேலும் மேலும் நெருங்கி ஒன்று சேர்ந்து வருகின்றன, மக்கள் அனைவரினதும் சமூக-அரசியல் மற்றும் சித்தாந்த ஒற்றுமை மேலும் வலுப் பெற்று வருகிறது. சமுதாயத்தின் பிரதான உற்பத்தி சக்தியும் இந்த சகாப்தத்தின் ஆக முற்போக்கான வர்க்க முமான தொழிலாளி வர்க்கம் இந்த இயக்கங்களின் நடுநாய கமாக நிற்கிறது. தொழிலாளி வர்க்கத்தின் வழிகாட்டும் தலைமையை ஏற்றுள்ள கூட்டுப்பண்ணை விவசாயிகளும் சோவியத் அறிவு ஜீவிகளும், இதன் பல அம்சங்களை, அரசியல் செயல் திறன் மற்றும் போதம், கட்டுப்பாடு, ஸ்தாபன மற்றும் கூட்டுமை உணர்வு ஆகியவற்றைப் பெற்று அவற்றை அபிவிருத்தி செய்து வருகிறார்கள். அதே சமயம், வேகமான விஞ்ஞான தொழில் நுட்ப முன்னேற்றத்தை ஏற்படுத்துவதில் தொழிலாளர்களும் விவசாயிகளும்

கருத்தால் உழைக்கும் அறிவு ஜீவிகளுடன் மேலும் நெருக்க மாகச் சேர்ந்து செயல்படுகிறார்கள்.

சோவியத் ஒன்றியத்தில் சோஷலிசம் நிர்மாணிக்கப் பட்டிருப்பதானது தேசிய வாழ்வில் இருமை நிலையும் தேசங்கள் இடையிலான பகைமைகளும் அகற்றப்படுவதையும் தொழிலாளி வர்க்கத்தின் தலைமையின் கீழ் உழைக்கும் வர்க்கங்களும் சமுதாயக் குழுக்களும் மேலும் நெருக்கமாக ஒன்று சேர்ந்து வருவதையும் இந்த அடிப்படையில் தேசங் களும் தேசிய இனங்களும் சோஷலிஸ்டு தேசங்கள் தேசிய இனங்களாக மாற்றமடைந்து வருவதையும் குறித்த மார்க்சிய-லெனினிய அடிக்கோளை ஊர்ஜிதம் செய்துள்ளது.

சமுதாயத்தின் தேசிய வடிவம் சோஷலிசத்தின் கீழுங் கூட நீடிக்கிறது, ஆனால் முதலாளித்துவத்திலிருந்து சோஷலிசத்திற்கான மாற்றம் தேசங்கள் தேசிய இனங்களின் சமுதாய சாரத்தை அடிப்படையிலேயே மாற்றி விடுகிறது. 1914-லேயே லெனின் எழுதியதாவது: ''நிலப்பிரபுத்து வத்தில் இருந்து முதலாளித்துவத்துக்குக் கடந்து செல்வது தேசியக் கருத்துக்கள் இன்றி எப்படி சாத்தியமல்லவோ, அதே போல தேசியக் கட்டுக்கோப்பைத் தகர்க்காமல் முதலாளித்துவத்திலிருந்து சோஷலிசத்துக்கு மாறிச் செல்லவும் முடியாது.''*

''தேசியக் கட்டுக்கோப்பைத் தகர்ப்பது'' என்றதால் தேசிய வேறுபாடுகள் இறுதியாக மறைந்து விடும் என்று லெனின் கருதவில்லை என்பது கண்கூடு. நாம் முதிர்ச்சி யடைந்த கம்யூனிச கட்டத்துக்கு வரும் வரையில் அது சாத்தியமல்ல. அவர் கருதியது என்னவெனில், முதலாளித் துவத்தின் கீழ் ஏற்கெனவே மேலும் மேலும் சர்வதேசிய மயமாகி வந்துள்ளதான மனித குலத்தின் அரசியல் மற்றும் அகவள வாழ்க்கை சோஷலிசத்தின் கீழ் முழுமையாக சர்வதேசிய மயமாக்கப்படும் என்பதே.''**

---

* வி. இ. லெனின், ''நூல் திரட்டு'', தொகுதி 36, பக். 302.

** காண்க ''அதே நூல்'', தொகுதி 19, பக். 246.

உண்மையான பொருளாதார சமுதாயமும், ஒவ்வொரு தேசம் மற்றும் தேசிய இனத்தின் உழைக்கும் மக்களின், முதலும் முக்கியமுமாக தொழிலாளி வர்க்கத்தினது நலன்களின் ஒருமைப்பாடும் நிலைநாட்டப்படுவதே தேசங்கள் தேசிய இனங்கள் சோஷலிஸ்டு வழிகளில் வளர்ச்சியடைவதற்கும் அவற்றின் சமூக-அரசியல் மற்றும் சித்தாந்த ஒற்றுமைக்கும் அடிப்படையாகும். சோஷலிஸ்டு தேசங்களின் பொருளாதார சமூக-அரசியல் சமுதாயக் கூட்டே, அவற்றின் தன்மையின் சர்வதேசிய இயல்புக்கும், அவற்றின் அகவள சமூகக் கூட்டின் வளர்ச்சிக்கும் தேசிய கலாசாரங்களின் பரஸ்பர செழுமைப்பாடும் சங்கமிப்பும் ஏற்படுவதற்கும் அடிப்படையாகும்.

புரட்சிகரமான சமூக-பொருளாதார அரசியல் மற்றும் கலாசார மாற்றங்கள் ஒரு சோஷலிஸ்டு தேசிய சுய விழிப்பையும், சோஷலிஸ்டு மனப்பான்மை மற்றும் நடத்தையையும் உண்டாக்குகின்றன. இவை தொடர்ந்து அதிகரித்து வரும் மார்க்சிய-லெனினியத்தின் செல்வாக்கின் கீழ் வருகின்றன. பூர்ஷுவா சமுதாய அமைப்பின் தேசங்கள் சோஷலிஸ்டு தேசங்களாக மாற்றமடைவதானது, முதலாளித்துவத்திலிருந்து சோஷலிசத்துக்கு மாறிச் செல்லும் சகாப்தத்திலான உலகப் புரட்சி இயக்கத்தின் ஒரு பாகமாகும். இதனுல்தான் சோஷலிஸ்டு தேசத்தின் சாரம் குறுகிய தேசியக் கட்டமைப்பின் இயல் கடந்ததாக இருக்கிறது சோஷலிஸ்டு தேசமானது சோஷலிஸ்டு நாடுகளின் இதர தேசங்களுடனும் முதலாளித்துவத்தை எதிர்த்த சோஷலிசத்தின் உலகளாவிய வர்க்கப் போராட்டத்துடனும் விரிவான ஆழமான சர்வதேசியப் பிணைப்புக்களைக் கொண்டிருக்கிறது. சோஷலிஸ்டு சர்வதேசியத் தன்மையின் அடிப்படையில் சோஷலிஸ்டு அமைப்பானது அனைத்து சோஷலிஸ்டு தேசங்களின் சோதர ஒத்துழைப்பு, பரஸ்பர உதவி, பரஸ்பர செழுமைப்பாடு ஆகியவற்றுக்கான அவசியமான எல்லா நிபந்தனைகளுக்கும் வகை செய்கிறது. இது, புதிய சர்வதேசிய சமுதாய அமைப்புகள் வரலாற்று

முறையில் தவிர்க்க முடியாத வகையிலும் அவசியமாயும் தோற்றமளித்து வளர்ச்சியுறுவதற்கான துவக்க நிலையும் ஒரு முக்கியமான அம்சமும் ஆகும்.

சோவியத் மக்களுக்கு ஒரு சோஷலிஸ்டு தாயகம் உள்ளது. உற்பத்தி சாதனங்களின் பொது உடைமையும், சோஷலிஸ்டு பொருளாதார முறையுமே சோவியத் ஒன்றியத்தின் மக்களினங்களின் சமூக-அரசியல் மற்றும் சர்வதேசிய ஒற்றுமைக்கான பௌதிக அடித்தளமாகும். மக்கள் முழுமையின் சோஷலிஸ்டு அரசு இந்தப் புதிய வரலாற்று சமுதாயத்தின் அரசியல் அஸ்திவாரமாகும். சோவியத் மக்கள் ஒரே ஒரு மார்க்சிய-லெனினிய சித்தாந்தத்தையே வழிகாட்டியாகக் கொள்கிறார்கள். வருண இனங்கள், தேசங்கள் தேசிய இனங்களைப் பிளவுபடுத்தும் பூர்ஷுவா சித்தாந்தத்துக்கு நேர் எதிராக மார்க்சிய-லெனினியம் அவற்றின் பொதுவான சர்வதேசிய மற்றும் ஜீவாதாரமான பிரத்தியேகமான தேசிய நலன்களையும் வெளியிடுகிறது.

உயர்தரமான புதிய பல்தேசிய இன சமுதாய அமைப்பாக உருவெடுப்பதன் வழி, சோஷலிஸ்டு தேசங்கள் பரிபூரண ஒற்றுமையை நோக்கித் தவிர்க்கவியலாத முறையில் முன்னேறுகின்றன என்பதை சோவியத் அனுபவம் காட்டுகிறது. நாட்டின் தொழில்மயமாக்கல், விவசாயத்தில் கூட்டுப்பண்ணை முறை, கலாசாரப் புரட்சி, தேசியப் பிரச்சினைக்குத் தீர்வு, தொழிலாளி வர்க்கம் உழைக்கும் விவசாயிகள் மற்றும் மக்கள் அறிவுத்துறையினர் கூட்டணி வலுப்படுதல், நகரத்துக்கும் கிராமத்துக்கும் இடையிலும், மூளையுழைப்புக்கும் உடலுழைப்புக்கும் இடையிலுமான இந்த முரண்நிலை படிப்படியாக அகற்றப்படுதல் இன்னோரன்ன தீவிர மாற்றங்கள்தான் ஒரு புதிய வரலாற்று சமுதாயமாக சோவியத் மக்கள் மலர்ச்சியுற அடிப்படையாக உதவின. மக்களினங்களின் நட்புறவு மற்றும் தார்மிக அரசியல் ஒற்றுமை சோவியத் தேசபக்தி மற்றும் சோஷலிஸ்டு சர்வதேசியவாதம் இவை வெற்றிவாகை சூடியுள்ளன.

சோவியத் சோஷலிஸ்டு சமுதாய அமைப்பின் அபிவிருத்தியின் பின் காணப்படும் முக்கியமான இயக்கு சக்தி இவையே.

உற்பத்தியிலான சோஷலிஸ்டு உறவுகளின் வெற்றி மற்றும் சோஷலிசத்தின் பொருளாயத தொழில் நுட்ப அடிப்படையின் நிர்மாணம் இவற்றைத் தொடர்ந்து, சோவியத் சமுதாயம் முதலாளித்துவத்திலிருந்து சோஷலிசத்துக்கு மாறிச் செல்லும் கட்டத்தின் இயல்புகளை இழந்துவிட்டது, மற்றும் 1930களின் நடுப்பகுதியில் தனது சொந்த அடித்தளத்தின் மீதே செயல்படத் தொடங்கியது. இந்தக் கட்டத்தில் சோவியத் மக்களினங்கள் கம்யூனிஸ்டுக் கட்சியின் தலைமையில் சோஷலிஸ்டு சமுதாய அமைப்பை வலுப்படுத்தினார்கள். நாட்டின் தற்காப்பு ஆற்றலுக்கு வலுவூட்டினர், மகத்தான தேசபக்த யுத்தத்தில் வெற்றி பெறப் போராடினர், போருக்குப் பிறகு பொருளாதாரத்தை மறு சீரமைத்து விஸ்தரித்தார்கள், உலக சோஷலிஸ்டு அமைப்பின் கட்டுக்கோப்பில் சோஷலிஸ்டு சமூக அமைப்பை மேலும் வலுப்படுத்தினார்கள். சோவியத் ஒன்றியத்தின் தேசங்கள் தேசிய இனங்களுக்குப் பொதுவான இந்தக் குறிக்கோள்களுக்கான போராட்டத்தில் சோவியத் மக்களின் பொதுவான இயல்புகள் புதிய வரலாற்றுமுறை மக்கள் சமுதாயம் என்ற முறையிலும், சோஷலிசத்தின் கீழிலான தேசங்களுக்கு இடையிலான உறவுகள் சம்பந்தமான ஒரு புதிய தன்மை என்ற முறையிலும் வேர் கொண்டன. இந்தக் கட்டத்தில் நாட்டின் அனைத்து மக்களினங்களின் பொருளாதார, சமூக, அரசியல் மற்றும் கலாசார வாழ்க்கையின் ஒற்றுமை விளக்கத் தேவையில்லாத மெய்நடப்பாகி விட்டது. மார்க்சிய-லெனினிய சித்தாந்தமானது சோவியத் ஒன்றியத்தின் எல்லா சமூக வர்க்கங்கள் குழுக்களினதும், எல்லா தேசங்கள் தேசிய இனங்களின் உறுப்பினர்களின் பொது சித்தாந்தமாகி விட்டது. தலைமை சக்தியான தொழிலாளி வர்க்கத்தின் நலன்கள் மற்றும் லட்சியங்கள் எல்லா வர்க்கங்கள், குழுக்களின் எல்லா தேசங்கள் தேசிய இனங்களின் பொதுவான

நலன்களும் லட்சியங்களுமாகி விட்டன. இவ்வாறு ஒரு புதிய வரலாற்று முறை சமுதாயம் என்பதாக சோவியத் மக்கள் உருவகம் பெற்றதானது சோவியத் ஒன்றியத்தின் மக்களினங்களால் சோஷலிஸ்டு சமூக அமைப்பு ஒன்று சேர்ந்து கட்டப்பட்டதன் பிரதான விளைவுகளில் ஒன்றே யாகும்.

சோவியத் மக்கள் ஒரு புதிய வரலாற்றுரீதி, சமூக மற்றும் சர்வதேசிய மக்கள் கூட்டு சமுதாயம்; இவர்களுக்கு எனத் தாயகம் உண்டு. மேலும், ஒரே பிரதேசம், ஒரே பொருளாதாரம், சோஷலிஸ்டு உள்ளடக்கம் கொண்ட ஒரே கலாசாரம், மக்கள் முழுமையின் கூட்டாட்சிபாணி அரசு கம்யூனிசத்தை நிர்மாணிப்பது எனும் பொதுவான குறிக்கோள் கொண்டவர்கள். இந்த சமுதாய சோஷலிஸ்டு மாறுதல்கள் மற்றும் உழைக்கும் வர்க்கங்கள், அடுக்குகள், தேசங்கள் தேசிய இனங்களின் சங்கமிப்பின் விளைவாகவும் ஏற்பட்டது.

சோஷலிஸ்டு சமூக அமைப்பு மனோதத்துவம் மற்றும் ஒரு புதிய அகவள ஒற்றுமையையும் தோற்றுவித்துள்ளது. எல்லா பொருளாதார அரசியல் மற்றும் இதர உறவுகளின் கர்த்தாக்களான—சோவியத் மக்கள் மார்க்சிய—லெனினியத்தால், தொழிலாளி வர்க்கத்தின் கம்யூனிஸ்டு லட்சியங்களால், பாட்டாளி வர்க்கசோஷலிஸ்டு சர்வதேசியக் கோட்பாடுகளால் வழி நடத்தப் படுகிறார்கள், தேசங்கள் இடையிலான தொடர்புக்கான பொதுமொழி ருஷ்யமொழி. இதன் சமூகச் செயல்பாடு மற்றும் பயன்படுத்தும் துறைகளின் அளவு தொடர்ந்து அதிகரித்து வருகிறது.

இந்தப் புதிய வரலாற்று மக்கள் சமுதாயத்தை—சோவியத் மக்கள் என்பதை—உருவாக்கியதில் தலைமைப் பாத்திரம் சோவியத் கம்யூனிஸ்டு கட்சிக்கு உரியதாகும். இக்கட்சி அதன் துவக்க முதலே, பல்தேசிய இன இயை பினைக் கொண்டதாக, சாரத்தில் தீர்க்கமான சர்வதேசியத் தன்மையுடையதாக இருந்து வந்துள்ளது. அது தேசியத் தன்மை கொண்டிருக்கலாம் எனும் கருத்தை அகற்றிடும்

வண்ணம் அக்கட்சி தன்னை **ரோஸ்ஸிகயா** (ருஷ்யாவின் கட்சி ருஷ்யா ஒரு நாடு என்ற பொருளில்) என்று அழைத்துக் கொண்டது **ருஸ்கயா**. ருஷ்யன் கட்சி என்றல்ல, (ருஸ்கயா, என்பது ருஷ்ய தேசிய இனத்தைக் குறிப்பது) என்று லெனின் 1905லேயே குறிப்பிட்டார். கட்சி, சோஷலிஸ்டுப் புரட்சியை நெறியாண்மை செய்ததும், சோஷலிசம், கம்யூனிசத்தை நிர்மாணித்ததும், எல்லா லெனின்-விரோத குழுக்கள் பல்வேறு சந்தர்ப்பவாத மற்றும் தேசிய வாதத் திரிபுகளையும் முறியடித்ததும் அதற்குத் தொழிலாளர், விவசாயிகள் மற்றும் அறிவு ஜீவிகளின் ஒத்துழைப்பைப் பெற உதவின. கட்சியின் சர்வதேசிய ஒற்றுமை சோவியத் மக்களின் ஒற்றுமையை உருவகப்படுத்துகிறது. விஞ்ஞானக் கம்யூனிசத்தின் கட்சி எனும் முறையில் அதன் உறுப்பினர்கள் எல்லாப் பொது மற்றும் அரசு அமைப்புகளின் கருமையமாக அமைந்திருக்க, அது மக்களின் செயல்பாட்டை ஒழுங்கமைத்து நெறியாண்மை செய்கிறது, சோவியத் தேச பக்தி மற்றும் சோஷலிஸ்டு சர்வதேசியப் பண்பின் உணர்வில் அவர்களுக்குப் போதனை அளிக்கிறது. எல்லாத் துறைகளிலும் சோவியத் மக்களின் சமுதாய அமைப்பை கெட்டிப்படுத்துகிறது.

2. இன்றைய கட்டத்தில் சோவியத் மக்கள்

சோவியத் ஒன்றியத்தில் வளர்ச்சியடைந்த சோஷலிசம் என்பது சாதனையாகிவிட்ட மெய் நடப்பாகி விட்டது. முதிர்ந்த சோஷலிசத்தின் நிலைமைகளில், சோவியத் மக்கள் வளர்ச்சியின் ஒரு புதிய கட்டத்தில் பிரவேசித்திருக்கிறார்கள். பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் மக்கள் முழுமையின் அரசாக வளர்ந்திருப்பது, சோவியத் அமைப்பின் சமூக சமூக உள்ளியைபுக்கு ஆக்கம் தரும் அனைத்து வர்க்கங்கள், சமூகக் குழுக்கள், தேசங்கள் தேசிய இனங்களின் மேலதிகமான ஒற்றுமை மற்றும் நட்புறவின் பொருள் பொதிந்த வெளியீடாகும். சோவியத் மக்கள், அவர்களது சமூக-பொருளாதார அரசியல்-சித்தாந்த மற்றும் சர்வதேசிய

ஒற்றுமையுடன், தொழிலாளர்-விவசாயி கூட்டணியின் உயர்ந்ததோர் கட்டத்தையும், இந்த இரு வர்க்கங்கள் மற்றும் சோஷலிஸ்டு அறிவுத் துறையினரின் நட்புறவையும், எல்லா சோவியத் தேசங்கள் தேசிய இனங்களின் நட்புறவு மற்றும் சகோதரத்துவத்தையும் உருவகப்படுத்துகின்றனர். இந்த ஒற்றுமையின் இயங்கு ஆற்றலாக இருப்பது கம்யூனிஸ்டுக் கட்சியே. வளர்ச்சியடைந்த சோஷலிஸ்டு சமூக அமைப்பில் சோஷலிஸ்டு சர்வதேசியமானது வர்க்க திசையமைவுள்ள பாட்டாளி வர்க்க சர்வதேசியத்தின் சர்வப் பொது வெளியீடாகி விட்டது. இதன் பொருள் வெவ்வேறு தேசங்கள் தேசிய இனங்களைச் சேர்ந்த தொழிலாளரின் உறவுகள் மட்டுமன்றி விவசாயிகள் அறிவு ஜீவிகளின் உறவு களும், ஒன்றிய மற்றும் சுயாட்சிக் குடியரசுகளின் உருவாக் கம் தொட்டு சுயாட்சிப் பிராந்தியம், தேசியப் பிரதேசம் வரையான உருவாக்கமும் இப்போது சர்வதேசியத்தில் உறைந்திருக்கிறது என்பதாகும். எனவே, சோஷலிஸ்டு சர்வதேசியம் என்பது புதிய சமூக அரசியல் உள்ளடக் கத்தால் செழுமைப் படுத்தப்பட்டதான பாட்டாளி வர்க்க சர்வதேசியத்தின் கூடுதல் வளர்ச்சியின் ஒரு வெளியீடே யாகும். சோஷலிஸ்டு சர்வதேசியம் தேசங்கள் இடையிலான உறவுகளை ஆளுமை செய்கிறது. இந்த உறவுகளானவை அனைத்து தேசங்கள் தேசிய இனங்களின் நட்புறவு, பூரண சமத்துவம், சகலதுறை சோதர ஒத்துழைப்பு, பரஸ்பர அரசியல் பொருளாதார கலாசார உதவி எனும் அடிப்படையில் உருப்பெற்று அபிவிருத்தியடைவதாகும். வேறு சொற்களில் கூறிடின், இது சோவியத் ஒன்றியத்தின் மக்களினங்களின் அன்றாட வாழ்க்கை, பொருளாதாரம், கலாசாரம் ஆகியவற்றின் இன்றியமையாத கோட்பாடாகி விட்டது எனலாம். இது சோஷலிசத்தின் சாதகங்களை உறுதி யுடன் பயன்படுத்தவும் தேசங்கள் தேசிய இனங்கள் மேலும் சர்வாம்சமாக சங்கமிப்பதற்கும் உரியதான நிலைகளை உத்தரவாதம் செய்கின்றன.

சோஷலிஸ்டு தேசங்களின் வளர்ச்சியின் புறநிலை இயல் புகளை உருவகப்படுத்தும் சோஷலிஸ்டு சர்வதேசியம் புது

மாதிரியிலான சர்வதேச உறவுகளில் முக்கியக்கூறுக விளங்கு கிறது. அதோடு சோஷலிஸ்டு மக்களினங்களை தகர்க்க வியலாத ஒரு சமுதாயமாக இணைக்கிறது.

இதர விஷயங்களுக்கு மத்தியில், மக்களின் இந்தப் புதிய சோஷலிஸ்டு சமுதாயக் கூட்டு சோஷலிஸ்டு மாதிரி யிலான ஆளுமை வளர்ச்சி மீதும், அது சமுதாயத்துடன் ஒன்றிணைவதன் மீதும் அதிகரித்த செல்வாக்குச் செலுத்து கிறது. சோஷலிசம் மக்களை வர்க்க அசாதாரணத் தன்மையில் இருந்து விடுவித்து அவர்களது சமூகத் தன்மையை முழு அளவில் வன்மையாக வலியுறுத்தியுள்ளது. இதனுல் சோவியத் ஒன்றியத்தில் ஆளுமை ''ஒரே தரப் படுத்தப்பட்டு'' விட்டது என்றோ, அல்லது கம்யூனிஸ்டு விரோதி சித்தாந்த வாதிகள் நம்மை நம்பவைக்க வேண்டும் என்பதற்காக இன்னமும் ''ஆதி நிலையிலிருந்த ஒரே தன்மையை'' மீண்டும் பெற்று விட்டதாகவோ அர்த்த மல்ல. சோஷலிசம் ஆளுமையை எந்த வழியிலும் மோச மாக்கி விடவில்லை. நேர்மாருக அதன் இசைவான சர்வாம்ச வளர்ச்சிக்காக வகை செய்கிறது. இதனுல்தான் கம்யூனிஸ்டு நிர்மாணத்தின் இன்றைய கட்டத்தில் சோவியத் மக்களின் அதிமேலான ஒற்றுமை புதிய தனிநபரை வார்த்து உருவாக்குவதுடன் நெருக்கமாகப் பிணைந்து நிற்கிறது.

''சோவியத் மக்கள்'' எனும் கருத்தினத்தை வியாக் யானம் செய்வதில் இரண்டு கோடிகள் இருக்கின்றன. இவற்றில் ஒன்று சோவியத் மக்கள் ஒரு தேசத்திற்குரிய தேவையான எல்லாப் பண்புகளும் கொண்டிருக்கிருர்கள். அவர்களிடம் பொது பொருளாதாரம், பிரதேசம், தொடர்பு மொழி, அகவள ஒற்றுமை இவை உள்ளன என்று செப்பு கிறது. ''சோவியத் தேசம்'' என்று பெயர் சூட்டுவது சரி யாக இருக்கும் என்ற உணர்வில் இது இருக்கிறது. இன்ஞெரு கருத்தோ ''சோவியத் மக்கள்'' என்பதானது அரசியல் மற்றும் அரசு அமைப்பு என்பது தவிர வேறு எதையும் உருவகப்படுத்தவில்லை என்கிறது. ஆனுல் இந்த இரண்டு கருத்துக்களுமே பிழையானவை. சோவியத் மக்கள்

மேலதிகமான அகில –சோவியத் சர்வதேசிய இயல்புகளைப் புதிதாகப் பெற்று வருகிறார்கள் என்பதால் சோவியத் ஒன்றியத்தின் மக்கள் தொகை ஒரு புதிய தேசமாக மாறி விட்டது என்று அர்த்தமல்ல. சோவியத் மக்களிடம் ஒரு தேசம் போன்றதான (பொதுவான பிரதேசம், பொருளாதாரம், அகவள ஒற்றுமை) தன்மைகள் இருந்த போதிலும், ''சோவியத் மனிதனின் அகில தேசியப் பெருமிதம்'' மற்றும் ''சோவியத் அரசின் தேசிய நலன்கள்'' போன்ற கருத்தினங்களைப் பயன்படுத்துவது நியாயமாகவே இருப்பினும், அது ஒரு புதிய தேசம் அல்ல. அது மேலும் உயர்தரமான ஒரு சர்வதேசக் கூட்டை சோவியத் ஒன்றியத்திலுள்ள சமுதாய அனைத்து தேசங்கள் தேசிய இனங்களின் இணைப்பை ஏற்படுத்துகிறது.

ஓர் ஒற்றை சோவியத் மக்களின் தோற்றத்தையும் முதலாளித்துவ உலகில் காணப்படும் வலுவந்தமான தன் வயப்படுத்தலையும் இணையானவை என்று காட்ட பூர்ஷுவா சித்தாந்தவாதிகள் முயல்வார்கள். ஆனால் இது எதார்த்த உண்மைகளைப் படுமோசமாகப் புரட்டும் செயலாகும். ஏகாதிபத்தியம் முழு மக்களினங்களை ஒடுக்குகிறது, பூண்டோடு அழித்து விடுகிறது. அதே போதில் சோவியத் ஒன்றியத்திலுள்ள தேசங்களும் தேசிய இனங்களும் முழு மலர்ச்சியடைந்து சோஷலிஸ்டு ஜனநாயகத்தின் அடிப்படையில் ஒன்று சேருகின்றன. சிறிய இனங்கள் மற்றும் இனக்குழுக்கள் பல்வேறு தேசங்களுடன் சேர்ந்திணைந்து விடும் தனிப்பட்ட சம்பவங்கள் கூறாயும் சுயவிருப்ப அடிப்படையிலேயே நிகழ்கின்றன.

புதிய வரலாற்று சமுதாயக் கூட்டான சோவியத் மக்கள் தோற்றம், தேசங்களை யாந்திரிகமான முறையில் சமப்படுத்துவதோ, அவற்றின் தேசிய இயல்புகள், மொழிகள் மற்றும் கலாசாரங்களை புறக்கணிப்பதோ அன்று. வளர்ச்சியடைந்த சோஷலிஸ்டு சமுதாய அமைப்பில் சோவியத் மக்களின் அங்கமான பிரிக்கவொண்ணாத பாகமாகிவிட்ட ஒவ்வொரு தேசம் மற்றும் தேசிய இனத்தின் சாதனைகள்

பெருமிதப்பட வேண்டிய சாதனைகள் சோவியத் மக்கள் முழுமையின் சொத்து. இதுவே சோவியத் மக்களின் அகில-தேசிய பெருமிதத்தின் அடிப்படை, இது நாட்டிலுள்ள எல்லா தேசங்கள் தேசிய இனங்களுக்கும் பொதுவானது. சோவியத் மக்கள் ஒவ்வொரு சோஷலிஸ்ட் தேசம் மற்றும் தேசிய இனத்தினதன் பொருளாதார மற்றும் கலாசார வாழ்க்கையிலிருந்து பொதுவான, நிலையான முக்கியமான அம்சங்களைத் தன்வயப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

''சோவியத் மக்கள்'' எனும் கருத்தினம், சோவியத் தேசங்கள் தேசிய இனங்களின் சாரம் மற்றும் படிவத்திலான தீவிர மாற்றங்களின் பிரதிபலிப்பாகவும், அவர்களது சர்வாம்சமான சங்கமிப்பு மற்றும் அதிகரித்துவரும் முனைப்பான சர்வதேசிய இயல்புகளின் வெளிப்பாடாகவும் தோன்றியது. சர்வதேசிய மற்றும் தேசிய அம்சங்கள் நெருங்கி பின்னிப் பிணைந்த நிலையில் சோஷலிஸ்டு தேசங்கள் சோவியத் மக்களை உள்ளடக்கி இருக்கின்றன, அதே பொழுது அவை சுயேச்சையான ஆக்கக் கூறுகளாயும் விளங்குகின்றன. தேசங்களின் பூரண சமத்துவம் மற்றும் சோவியத் ஒன்றியத்தின் நலன்களை அதன் உறுப்புக் குடியரசுகளின் நலன்களுடன் இணைப்பது என்பவை சோவியத் கம்யூனிஸ்டு கட்சியின், சோவியத் அரசின் தேசியக் கொள்கையின் முக்கியமான கோட்பாடுகளாகும். சோவியத் நிலைமைகளில், சர்வதேசிய அம்சங்களை தேசிய அம்சங்களுக்கு எதிராகவும் மறுதலையாகவும் வைப்பதற்கான அறிவான காரணங்கள் எதுவும் கிடையா.

சோவியத் மக்கள் தேசங்கள் தேசிய இனங்களின் ஒரு சாதாரணக் கூட்டு அன்று. அதேபோல சோவியத் ஒன்றியம் தேசியக் குடியரசுகள் மற்றும் பிராந்தியங்களின் பல்கூட்டும் அல்ல. அது உறுப்பமைவுள்ள ஒன்றியம், இணைப்பாக்க அமைப்பு. பல்தேசிய இன சமூகத்தின் புதிய குணம்ச நெறியும் ஆகும்.

சோஷலிசமும் மக்களினங்களின் சோதர ஒன்றியமுமே சோவியத் தேசங்கள் தேசிய இனங்களின் தலைசிறந்த வெற்றி

களுக்கு ஆதாரம். சோவியத் தேசங்களும் தேசிய இனங்களும் இவ்வாறு சாதனைகள் பெற்றுள்ளதற்கு ஏக காரணம் இருபதாம் நூற்றாண்டின் விஞ்ஞான தொழில்நுட்ப முன்னேற்றமே என்று கம்யூனிஸ்டு-எதிர்ப்பாளர்கள் வாதாடுகிறார்கள். ஆனால் அது சோஷலிஸ்டு அமைப்பின் சாதகங்களை இணைத்து வைத்தே, முன்னாள் பின்தங்கியிருந்த மக்களினங்களுக்கு வியக்கத் தக்கதான ஏற்றத்தை உத்தரவாதம் செய்து, நவீன உற்பத்தி விஞ்ஞானம் தொழில் நுட்பம் மற்றும் கலாசாரத்தின் கொடுமுடிக்கு அவற்றை உயர்த்த முடிந்தது என்பதை மெய்நடப்புகள் புலப்படுத்து கின்றன. ஒவ்வொரு சோவியத் குடியரசின் வெற்றியும் சோஷலிஸ்டு சர்வதேசியத்தின் மகத்தான சக்தியை உருவகப்படுத்துகிறது. சோவியத் ஒன்றியத்தின் மக்களினங் களின் எடுப்பான சாதனைகள் அவர்களது கூட்டு உழைப்பின் பலனாகும். சோவியத் தேசங்கள் தேசிய இனங்களின் வளவாழ்வுக்குக் காரணம் நெருங்கிய ஒத்துழைப்பும் பரஸ்பர செழுமைப்பாடும் படிப்படியான சங்கமிப்புமேயாகும்.

கட்சியானது—வட்டாரம் முதல் மையம் வரையிலான— அதிகார மற்றும் அரசாங்க அமைப்புகள் அனைத்திற்கும் மேலதிகமான ஜனநாயகம் வேண்டுமென்பதற்காகப் பாடு படுகிறது. எல்லா சோவியத் தேசங்கள் தேசிய இனங் களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்து குடியரசு ஆட்சி நிர்வாகத்தின் தலைவர்களும் ஒன்றிய மட்டத்தில் ஏக காலத்தில் கட்சி அல்லது அரசு அமைப்புகளின் உறுப்பினர் களாகவோ தலைவர்களாகவோ இருப்பார்கள். இந்தக் கோட்பாடு இன்னும் அதிக அளவில் விஞ்ஞான கலாசார அமைப்புகளிலும் பின்பற்றப்பட்டு வருகிறது. அகில ஒன்றிய அமைப்புக்களில் எல்லா மட்டங்களிலுமான கட்சி மற்றும் அரசாங்க ஊழியர்கள் விரிவாகவும் பல்வேறு வகையிலும் பங்கேற்பது இந்த அமைப்பின் ஜனநாயகத் தன்மையும் சர்வதேசியப்பண்பும் மற்றும் கட்சி அரசாங்கம், விஞ்ஞான கலாசார அமைப்புகளின் கட்டமைப்பும் சோவியத் தேசங்கள் தேசிய இனங்களின் தேசிய சர்வதேசிய

நலன்களை இசைவாக உள்ளிணைத்து வருகின்றன என்பதற்கு எடுப்பான சான்ருகும்.

சோஷலிஸ்டு கூட்டாட்சியின் ஜனநாயக மத்தியத்துவம் ஒன்றிய மற்றும் தேசிய அரசுத்துவம் தகர்க்க முடியாத ஒற்றுமையாக திடமாக அபிவிருத்தியடைவதை உறுதிப் படுத்துகிறது. குடியரசுகளின் உரிமைத் தகைமை விரி வாக்கம் பெறுவது வட்டார முன்முயற்சிக்கும் மக்கள் திரளின் படைப்பாற்றல் செயல்பாட்டுக்கும் சாதகமாக இருக்கிறது. இறுதியாகப் பகுப்பாய்வு செய்திடில், இது சோவியத் மக்களின் ஒற்றுமையையும் வன்மையையும் பல வீனப்படுத்துவதற்கு (கெடுதி செய்வோர் இதையே விரும்பு வார்கள்) மாருக புதிய சமுதாயக் கூட்டை ஊக்கப் படுத்தவே துணை செய்கிறது-தேசியக் குடியரசுகள் தமது ஆட்சிப் பிரதேசத்தில் முழுமையான சட்டமியற்றல், நிர்வாகம்,மற்றும் நீதிபாலான அதிகாரத்தை அமல் செய்து வருகின்றன .சோவியத் மக்கள் தமது குடியரசின் பிரஜைகள் மற்றும் பொது அரசான சோவியத் ஒன்றியத்தின் குடிமக்கள் என்பதான இரண்டு அடையாள முத்திரையுடன் சர்வவுரிமையை உயர்த்திப் பிடிப்போராக விளங்கு கிருர்கள். தமது தேசிய அரசை மேம்படுத்துவதன் வாயிலாக தமது ஒன்றிய அரசை மேம்படுத்திக் கொள் கிருர்கள்.

சோஷலிஸ்டு தேசங்கள் தேசிய இனங்களின் பொரு ளாதார சமூக அரசியல் சமுதாயக் கூட்டு எல்லாத் தேசிய இனங்களையும் சேர்ந்த உழைக்கும் மக்கள் கலாசாரம் விஞ்ஞானம் மற்றும் தொழில் நுட்பத் துறைகளில் செயலூக்கமுடன் பங்கேற்பதற்குப் பாதை சமைத் துள்ளது. அவர்களது அகவள உறவு, மேலும் அணித்தே நெருங்கி வருகிறது. தேசியக் கலாசாரங்கள் ஒன்று சேர்ந்து வருகின்றன. சோவியத் தேசங்கள் தேசிய இனங்களுக்கு ஒற்றை சோஷலிஸ்டு கலாசாரம் உள்ளது—உணர்விலும் அடிப்படை உள்ளடக்கத்திலும் ஒற்றையானதும்-எல்லா

மக்களினங்களின் அகவள மதிப்புகளின் ஒரு கலவையாக விளங்குகிறது.

ஒரு புதிய வரலாற்று சமுதாயக் கூட்டாக சோவியத் மக்கள் தோன்றியும் வளர்ந்தும் வருவதானது, ''சோவியத் தாயகம்'', ''சோவியத் தேசபக்தி'', ''சோவியத் பண்பு'', ''சோவியத் பொருளாதாரம்'' மற்றும் ''சோவியத் கலாச்சாரம்'' எனும் கருத்தினங்களை உண்டாக்கியுள்ளது. ஆழமான உள்ளடக்கத்தைப் பெற்றுள்ள இந்தக் கருத்தினங்கள் தேசியம் மற்றும் சர்வதேசியத்தினதன் நெருக்கமான இயக்கவியல் ஒற்றுமையினைப் பிரதிபலிக்கின்றன. தாம் எந்த தேசிய இனத்தைச் சேர்ந்தவர்களாயினும் சரி, சோவியத்மக்களிடம் தமது நாட்டின் மீதான-அன்பு இதர சோஷலிஸ்டு நாடுகளிடம் பற்றுதல், பாட்டாளி வர்க்க சோஷலிஸ்டு சர்வதேசியம்,கம்யூனிசத்தின்பால் பற்றுறுதி, உழைப்பின் மீதான கம்யூனிஸ்டு தோரணை, குடியுரிமை பற்றிய உயர்போதம், கூட்டுமை உணர்வு, தோழமை பூர்வமான பரஸ்பர உதவி, சோஷலிஸ்டு மனித நேயம், தேசிய வருண இன விரோதம் சகியாமை, கம்யூனிசம், சமாதானம் இவற்றின் விரோதிகள்பாலும், மக்களினங்களின் நட்புறவு, சுதந்திரம் இவற்றை எதிர்ப்போர் இடத்தும் சகிப்பின்மை போன்ற பொது இயல்புகள் காணப்படுகின்றன.

சோவியத் குணச்சிறப்பின் இதுவும் மற்றும் இதர அம்சங்களும் புதியசோஷலிஸ்டு உறவுகளைப் பிரதிபலிப்பன. இவை கம்யூனிசத்தை நோக்கி முன்னேறும் சமுதாயத்தால் மார்க்சிய-லெனினிய சித்தாந்தத்தால் உருவாக்கப்பட்டவை, இவை யாவும் சர்வதேசியத் தன்மை கொண்டவை. ஆனால் அவை தேசிய அம்சங்களாகவும் மாறியுள்ளன. காரணம் அவற்றின் ஏற்பாளர்கள் வெவ்வேறு தேசிய இனங்களைச் சேர்ந்தவர்களாவர்.

இது 1914-ல் லெனின் எழுதிய கருத்தை ஊர்ஜிதம் செய்கிறது: தேசங்களை பிணங்கிப் பிரியவைக்கும் முதலாளித்துவத்துக்கு நேர் எதிரான வகையில் சோஷலிசம் ''புதியதும் மேலும் உயர்வானதுமான மனித சமுதாய

வடிவங்களை சிருஷ்டிக்கிறது. இதில் ஒவ்வொரு தேசிய இனத்தையும் சேர்ந்த உழைக்கும் மக்கள் திரளினரின் நியாயமான தேவைகளும், முற்போக்கு அபிலாஷைகளும், முதல் தடவையாக, நிலவும் தேசியப் பாகப்பிரிவினைகள் அகற்றப்படும் பட்சத்தில் சர்வதேசிய ஒற்றுமை வாயிலாக நிறைவேற்றப்படும்.''*

சோவியத் ஒன்றியமே இந்த உயர் வடிவிலான மானுடக் கூட்டு வாழ்வின் முதல் முன்மாதிரியாகும். இது பல்தேசிய இன சோவியத் மக்கள் அனைவரின் தாயகமாகி விட்டது. எல்லா சோவியத் மக்களும் தமது ஒரே தாயகத்தை நெஞ்சார நேசித்துப் பெருமிதம் அடைகிறார்கள்.

''பல ஆண்டுக் கால நடைமுறை அனுபவம் நாட்டின் சகல மக்களினங்களுக்கும் சோவியத் சோஷலிஸ்டு குடியரசு களின் ஒன்றியத்தின் அகத்தேயான ஒற்றுமையால் விளைந் துள்ள செழுமையான நற்பலன்களையும் எதிர்காலத்தில் இதனால் கிட்டவிருக்கும் மாபெரும் வாய்ப்புக்களையும் எடுத்துக் காட்டியுள்ளது.''**

இந்த ஞானம் சோவியத் தேசபக்தியின் ஊற்றுக் கண்ணாகும், ஏனெனில் இது ''பிரிக்கப்பட்டுக் கிடந்த தாயகங்களின்'' மண்ணில் வளரவில்லை. மாறாக ''சோஷலிசத்தை தாயகமாக்க''ப் புரிந்த கூட்டு முயற்சி யிலும் போராட்டத்திலும் வளர்ந்தது,*** மக்களினங்களின் பொதுவானதும் பிரத்தியேகமானதுமான நலன்களும், ஒன்றியம் மற்றும் தேசிய அரசுத்துவத்தின் நெருக்கமான ஒற்றுமையால் சாதனையாகின்றன என்பதை ஒவ்வொரு சோவியத் தேசபக்தனும் அறிவான். முழுமையையும் சர்வப்

---

* வி. இ. லெனின், ''நூல் திரட்டு'', தொகுதி 21, பக். 38-39.

** **சோவியத் சோஷலிஸ்டு குடியரசுகளின் ஒன்றியத்தின் உருவாக்கத்தின் 50 ஆம் ஆண்டு விழா தயாரிப்புகள் பற்றி** சோ.க.க. ம.க. தீர்மானம், பக். 14.

*** வி. இ. லெனின், ''நூல் திரட்டு'', தொகுதி 27, பக். 163.

பொதுமையையும் கருதிப் பார்த்துச் செயல்படாமல் சர்வதேசியப் பண்பு இருக்க முடியாது. எனவே, சோவியத் சோஷலிஸ்டு தேசபக்தியும் இருக்க முடியாது என்பதை எல்லா சோவியத் மக்களும் அறிவார்கள்.

சுருங்கக் கூறின், பொதுவான சோஷலிஸ்டு தாயகமும் பொதுவான சோஷலிஸ்டு பொருளாதாரமும் வர்க்கக் கட்டமைப்பும், பொதுவான மார்க்சிய-லெனினிய உலகக் கண்ணேட்டமும் கம்யூனிசத்தை நிர்மாணிப்பது எனும் பொது லட்சியமும் கொண்டிருக்கும் சோவியத் சோஷலிஸ்டு தேசங்கள் மேலும் அதிக தனிச் சிறப்புடைய சர்வதேசிய கம்யூனிஸ்டு நடத்தை, வாழ்க்கைப் பாணி மற்றும் உளப் பாங்கைப் பெறுகின்றன. சோவியத் சமுதாயம் எல்லா தேசங்கள் தேசிய இனங்களின் மதிப்பு மிகுந்த அம்சங்களின் ஒருமுகமான செறிவு ஆகும். தேசிய சமுதாயக் கூட்டுடன் கூடவே சோவியத் மக்கள் வசம் உயர்தரத்திலான சர்வ தேசிய சமுதாயக் கூட்டும் காணப்படுகிறது. சோவியத் ஒன்றியத்தின் எந்த ஒரு தேசம் அல்லது தேசிய இனத்தைச் சேர்ந்தவர்களாக இருந்த போதிலும் அவர்கள் தம்மைத் தாமே முதலாவதாயும் முக்கியமாகவும் சோவியத் பிரஜைகள் என்றே பெருமையுடன் கருதுகிருர்கள்.

வளர்ச்சியடைந்த சோஷலிஸ்டு சமூக அமைப்பில் ஒரு புதியதும் மேலும் விரிவானதுமான ஒரு கருத்தினமாக சோவியத் மனிதனின் அனைத்து ஒன்றியப் பெருமிதம் தோன்றியிருப்பது மாபெரும் சாதனையாகும். 'சோவியத் மனிதனின் தேசியப் பெருமிதம், மிகவும் பரந்த, சர்வமும் தழுவிய, அளப்பரிய செழுமைமிகு உள்ளடக்கம் கொண்டதான ஓர் உணர்வாகும். இது நமது நாட்டில் அமைந்திருக்கும் ஒவ்வொரு மக்களினங்களின் இயல்பான தேசிய உணர்வினைக் காட்டிலும் அதிக விரிவானதும் கருத்தாழ மிக்கதுமாகும். அது லட்சோபலட்சம் சோவியத் மக்களின் உழைப்பு, திரம் மற்றும் படைப்பாற்றல் மேதையின் ஆக

அருமையான சாதனை வித்தகங்களையும் தன்வயமாக்கிக் கொண்டு விட்டது."*

* * *

புதிய வரலாற்று சமுதாயக் கூட்டான சோவியத் மக்கள், முழுமையான சமூக உள்ளியைபு மற்றும் தேசங்கள் தேசிய இனங்களின் பூரண ஒற்றுமை நோக்கி முன்னேறு கிறார்கள். கட்சியின் குறிக்கோள்களை வரையறுத்த சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சியின் 24 ஆவது காங்கிரஸ், இது சம்பந்தமான தெளிவான முக்கியமான ஒரு வேலைத் திட்டத்தை வகுத்து முன் வைத்தது.

சோவியத் ஒன்றியத்தில் நடைபெற்று வரும் பரஸ்பரத் தொடர்புடையதான எல்லா சமுதாய இயக்கங்களும் புதிய வரலாற்று சமுதாயக் கூட்டாக விளங்கும் சோவியத் மக்கள் மற்றும் அவர்களது தனியொரு தாயகமான– சோவியத் ஒன்றியம் இவற்றை ஊக்குவித்து மேம்படுத்தும் திசைவழியில் இயக்கப்படுவதை உறுதிப் படுத்துவது ஒவ்வொரு சோவியத் குடிமகனதும் சர்வதேசிய தேசபக்தக் கடமையாகும். உழைக்கும் வர்க்கங்கள் மற்றும் அடுக்குகள், தேசங்கள் தேசிய இனங்கள் எய்தியுள்ள சோஷலிஸ்டு வளர்ச்சியின் தரத்துக்கு ஒப்பவும், வளர்ச்சியடைந்த சோஷலிசத்திலிருந்து கம்யூனிசத்துக்கான வளர்ச்சியின் இயக்கவியலை மனதிற் கொண்டும், 24 ஆவது காங்கிர சானது, உழைப்பாளி வர்க்கங்கள் சமூகக் குழுக்கள், கையாலும் கருத்தாலும் உழைப்போர், உற்பத்தி கலாசா ரத்தின் தரங்கள் நகரப்புற மற்றும் நாட்டுப்புற வாழ்க்கை இவற்றை மேலும் சங்கமிக்குமாறு செய்தும், தேசங்கள் தேசிய இனங்களின் இணைவு மூலமாகவும் சோவியத் மக்களின் எதார்த்த வளர்ச்சியை ஊக்குவிக்க வேண்டும் எனும் பணியை வகுத்து முன் வைத்தது.

* லி. இ. பிரெஷ்நெவ், **சோவியத் சோஷலிஸ்டு குடியரசுகளின் ஒன்றியத்தின் 50 ஆம் ஆண்டு விழா**, பக். 86.

சோவியத் ஒன்றியத்தின் 50 ஆம் ஆண்டு விழாவுக்கான தயாரிப்புகள் பற்றிய சோ. க. க. ம. க. தீர்மானம், லெனினது கொள்கை வழியைப் பின்பற்றி, சோவியத் தேசங்கள் தேசிய இனங்களின் சகலதுறை சங்கமிப்பை மேம்படுத்தவும், அவற்றின் இடையே மேலும் நெருக்கமும் ஆழமுமான உறவுகளை உறுதிப்படுத்தவும் இதன் வழி, அவற்றின் சர்வதேசிய சோஷலிஸ்டு ஒற்றுமையை மேலும் அதிக நிலையானதாக்கவும் 24 ஆவது காங்கிரஸ் எடுத்த முடிவுகளை மீண்டும் ஊர்ஜிதம் செய்தது.

ஒரு புதிய வரலாற்று சமுதாயக் கூட்டு என்ற முறையில் சோவியத் மக்கள் அடைந்துள்ள வளர்ச்சி நாட்டின் பரஸ்பரத் தொடர்பாடுடைய சமூக இயக்கங்களால் பெற்றுத் தரப்பட்டதாகும். ஆயினும் ஒவ்வொரு முக்கியமான சமூகப் பணியும் இடைத் தொடர்புடைய பிரச்சினைகளின் முழுத் தொகுதியோடும் இணைந்து கிடப்பது. எடுத்துக் காட்டாக நகரம் மற்றும் கிராமத்துக்கு இடையிலான முக்கியமான வேறுபாடுகளை வென்றகற்ற வேண்டுமாயின், விவசாய உற்பத்தி சக்திகள் பெருமளவு விரிவாக்கம் பெற்றிருக்க வேண்டும், கூட்டுப்பண்ணை மற்றும் கூட்டுறவு சொத்துடைமை மேலும் உயர்ந்த அளவுக்கு சோஷலிச மயமாக்கப்பட்டிருத்தல் வேண்டும்; நாட்டுப்புறப் பகுதிகளில் கலாசாரம் உயர்த்தப் பட்டிருத்தல் அவசியம். கையாலும் கருத்தாலுமான உழைப்பு இணைவுபெற வேண்டுமானால் இதன் தன்மை நவீன விஞ்ஞானம் தொழில்நுட்ப அடிப்படையில் மாற்ற மடைதல் வேண்டும். இதற்கு உயர் தரமான தொழில் நுட்ப கலாசாரமும், இதன் விளைவாக கல்வியைப் பயனுள்ள உழைப்போடு இணைவு செய்தலும் அவசியமாகும்.

சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சியின் 24 ஆவது காங்கிரசானது, சர்வாம்சமான நகர மற்றும் கிராம வளர்ச்சித் திட்டம், விவசாயத் தொழிலாளிகளை பல்வகையான தொழில்துறை உழைப்பாளிகளாக மாற்றுவது, காலாவதியாகிவிட்ட வழக்கங்கள் மரபுகளை ஒழித்தகற்றுவது, சர்வ

தேசிய மார்க்சிய-லெனினியக் கண்ணோட்டத்தைப் பேணி வளர்ப்பது, சோஷலிஸ்டு வாழ்க்கை முறையை வலுப் படுத்துவது இவற்றின் முக்கியத்துவத்தைக் குறிப்பிட்டது.

வாழ்க்கைத் தரங்களைத் தெள்ளத் தெளிவான வகையில் மேம்படுத்தவும் சோவியத்மக்களின் பொருளாயத மற்றும் அகவளர்ச்சித் தேவைகளை அதிகப்பட்சம் நிறைவு செய்வதற்கும், நகரங்களிலும் கிராமங்களிலுமுள்ள நிலைமைகளைத் தோராயமாக்குவதற்கும் எல்லா தேசங்கள் தேசிய இனங்களின் சுயவிருப்ப இணைவை உறுதிப்படுத்துவதற்கு மான குறியளவுகளை இந்தக் காங்கிரஸ் வகுத்து முன் வைத்தது. இது, இசைவான சகல-துறை முன்னேற்றத் துக்கும் சோவியத் மக்களை இன்னும் நெருக்கமான சமூக சர்வதேசியக் கூட்டாக இட்டுச் செல்லவும் உத்தரவாதம் தரும் திட்டமாகும்.

தொழிலாளர் கூட்டுப் பண்ணை விவசாயிகள் மற்றும் சோஷலிஸ்டு அறிவுத் துறையினரின் தார்மிக மற்றும் அரசியல் ஒற்றுமையானது மேலும் திடமாக அதிகரித்து வருகிறது. இது சகல-துறை சங்கமிப்புக்குப் பாட்டை சமைக்கிறது. தொழிலாளி வர்க்கமே இந்த ஒற்றுமைக்கு அடிப்படை. அதன் அதிகரித்த தொழில்நுட்பத் திறமை மற்றும் உயர்ந்து வரும் கலாசாரம் காரணமாக இது சோவியத் வாழ்க்கை முறையினை மேலும் முன்னேற்று வதிலும் மானுட உறவுகள் சம்பந்தமான உன்னத சோஷலிஸ்டு நியதிகளை ஊர்ஜிதம் செய்வதிலும் தனது தலைமைப் பாத்திரத்தை செயலூக்கமுடன் வகித்து வருகிறது.

சோவியத் ஒன்றியம் போன்ற பல்தேசிய இன நாட்டில் மக்களினங்களின் லெனினிய நட்புறவினை மேலும் வலுப் படுத்துவதற்கு தனி முக்கியத்துவம் தரப்படுகிறது. சோஷலிசத்தின் வியத்தகு விளைவு, அது கம்யூனிஸ்டு நிர்மாணத்தில் வேகமும் ஒளிமயமானதுமான முன்னேற்றத்தைத் தூண்டி விளைப்பதும், அதோடு முதலாளித்துவத்தின் மீதான சோஷலிசத்தின் வரலாற்று சாதகங்களை சாத்திய

மான அளவுக்கு முழுமையாக கைவரச் செய்வதற்கா அவசிய நிபந்தனையாகவும் இருப்பதுமே.

சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சியின் வேலைத் திட்டம் தேசங்கள் தேசிய இனங்களின் ஒட்டு மொத்த ஒற்றுமை சாதனையாவதை முன்னனுமானிக்கிறது, கம்யூனிசத்தை நிர்மாணிப்பதற்குரிய முக்கியமான நிபந்தனைகளில் ஒன்றுகும். இது வளர்ச்சியடைந்த சோஷலிஸ்டு சமூக அமைப்பின் முன் என்றையும் விட அதிக திட்டவட்டமாகி வரும் சமூக உள்ளியைபு மற்றும் தேசங்கள் தேசிய இனங்கள் மேலும் முனைப்பாக ஒன்றுசேர்ந்து வருதல் மூலம் இந்தக் குறிக்கோளின் நிறைவேற்றம் மேலும் நெருங்கி வருகிறது.

பூரண ஒற்றுமையை சாதிக்க வேண்டுமானுல், தேசிய வாதத்தின் எல்லா வெளிப்பாடுகளையும் வென்றகற்ற வேண்டுவதும், சோஷலிஸ்டு சமூக அமைப்பில் தேசிய வாதத்தின்பால் விட்டுக் கொடுக்காத சகிப்பின்மைச் சூழலை உருவாக்குவதும் அத்தியாவசியமாகும்.

சோவியத் ஒன்றியம் சர்வதேசிய சித்தாந்தம் வெற்றி வாகை சூடியுள்ள முதல் பல்தேசிய இன நாடாகும். சுரண்டும் வர்க்கங்கள் ஒழிக்கப்பட்டதும் சோஷலிஸ்டு நிர்மாணமும் தேசிய வாதத்தின் சமூக வேர்களை நிர்மூலமாக்கி விட்டன. இன்னும் இருக்கும் இதன் மீத மிச்சங்களுக்கு மக்கள் மீது எவ்விதத் தாக்கமும் கிடையாது. தேசியத் தப்பெண்ணங்களை வைத்திருப்பது இன்னும் நிகழலாம் என்பதை கட்சி உணர்ந் திருக்கிறது, இத்தகை தப்பெண்ணங்களின் விடாப்பிடி, தூபமிடப்பட்ட மற்றும் புரட்டப்பட்டதான தேசிய ஆவேசங்கள் மற்றும் வட்டார மனப்போக்கு கவனிக்கப்பட வேண்டும் என்று கட்சி கோருகிறது, இவற்றை எதிர்த்துப் போராடி ஒழித்துக்கட்ட வேண்டும், ஏனெனில் ஒரு வளர்ச்சி யடைந்த சோஷலிஸ்டு சமூக அமைப்பில் இவை அனுமதிக்க இயலாதவை.

தமக்கென ஒரு சாதகமான பின்னணி அமைப்பை உருவாக்க வேண்டி தேசியவாதிகள் பழங்கால குறுகிய தேசிய

குட்டி பூர்ஷுவா பாணி தேசபக்தியை சோஷலிஸ்டு தேசபக்தி என்று பம்மாத்துச் செய்து, தேசிய உணர்வுகளின் ஆவேசத் தன்மையை விடாமுயற்சியுடன் வலியுறுத்து கிறார்கள். கட்சி மிகவும் பரிவுடன் பாவித்து வரும் தேசிய உணர்வுகள் வேறு, தேசியவாத ஆவேச உணர்வுகள் வேறு. பின்னவை குறிப்பாயும் ஒரு வளர்ச்சியடைந்த சோஷலிஸ்டு சமூக அமைப்பில் சகிக்க முடியாததாகும். தேசிய உணர்வுகள் பால் பரிவு காட்டுவதை, தேசியவாத வெளிப்பாடுகளை எதிர்த்த திட்டவட்டமான போராட்டம் தளர்ந்து விட்டதாகவோ, முடிந்து விட்டதாகவோ கருதக் கூடாது. இது இருமடங்கு அவசியம். காரணம் சோவியத் மக்களின் ஒற்றுமையைக் குலைக்கும் நம்பிக்கையுடன் ஏகாதிபத்திய போர்த்தந்திர வாதிகள் தேசியத் தப்பெண் ணங்களை ஊக்குவித்தும், மிகைப்படுத்தியும் வருகிறார்கள்.

சோவியத் மனிதனின் புதிய சித்திரம், அவனது கம்யூனிஸ்டு ஒழுக்கமுறை மற்றும் கண்ணோட்டத்தைப் பலமாக வலியுறுத்தும் பொருட்டு சோ.க.க. யின் 25 ஆம் காங்கிரஸ் எல்லா தேசியவாதப் போக்கியல்புகளையும் ஒழித்தகற்ற வேண்டுவதன் முக்கியத்துவத்தை மீண்டும் ஊர்ஜிதம் செய்தது.

சோவியத் ஒன்றியம் நிறுவப் பெற்றதன் 50ஆம் ஆண்டு விழாவுக்கான தயாரிப்புகள் பற்றிய அதன் தீர்மானத்தில் சோ.க.க. மத்தியக் கமிட்டி சுட்டிக் காட்டியதாவது: ''தாம் தனியொரு சோஷலிஸ்டு தாயகத்தைச் சேர்ந்தவர்கள், புதிய சமுதாயத்தின் நிர்மாணிகள் கொண்ட மகத்தான சர்வதேசியப் படையினைச் சேர்ந்தவர்கள் எனும் உணர்வினை மக்களிடையே எல்லா வழிகளிலும் வலுப்படுத்த வேண்டுவது ஒவ்வொரு கம்யூனிஸ்டின் கடமையுமாகும்.''*

---

* **சோவியத் சோஷலிஸ்டு குடியரசுகளின் ஒன்றியம் நிறுவப்பட்டதன் 50 ஆம் ஆண்டு விழாவுக்கான தயாரிப்புகள் பற்றி** சோ. க. க. ம. க. தீர்மானம், பக். 26.

கம்யூனிசத்தின் பொருளாயத மற்றும் தொழில்நுட்ப அடித்தளத்தை நிறுவுதல், நேசப்பாங்குடைய வர்க்கங்கள், சமூக குழுக்கள் தேசங்கள் தேசிய இனங்கள் சம்பந்தமாக லெனினது கோட்பாடுகளை முரணின்றி அனுசரித்தல், பகைமையில்லாத முரண்பாடுகளை அவை எழுந்த உடனேயே காலாகாலத்தில் அகற்றி நீக்கல், மெய்யான கூட்டுமை ஆதரவாளர்கள் மற்றும் சர்வதேசிய வாதிகளை கம்யூனிஸ்டு ஒழுக்க நெறியுடைய நபர்களை வளர்த்துப் பேணிட சரியான நிலைமைகளை வழங்குதல், இதன் பின்விளைவாக சோவியத் மக்களை கம்யூனிசத்தை நிர்மாணிக்கும் புதிய வரலாற்று சமுதாயக் கூட்டாக வலுப்படுத்தி முன்னேற வைத்தல். சோஷலிஸ்டு தேசங்களின் மலர்ச்சியும் சங்கமமும் தொடர்ந்து நிகழும் இந்த சமுதாயக் கூட்டு சோவியத் ஒன்றியத்தின் தொடர்ந்த முன்னேற்றத்தை நிர்ணயிக்கும் வடிவமும் இன்னும் பரவலான எதிர்கால சர்வதேசிய சமுதாய கூட்டுகளின் மூல முன்மாதிரியுமாகும்.

உலக சோஷலிஸ்டு அமைப்பின் தோற்றம், சர்வதேசிய சமுதாயக் கூட்டு நிறுவப்படுவதற்கு இட்டுச் செல்லும் இயக்கத்தின் உள்ளே ஈர்க்கப்படும் மக்களினங்களின் எண்ணிக்கையை மேலும் அதிகப்படுத்தியது. சோஷலிசத்தின் புறநிலை விதிகள்-தேசங்கள் தேசிய இனங்களின் வளர்ச்சியில் இரண்டு இடைத் தொடர்புடைய போக்கியல்புகள், தேசங்களிடையே ஒத்துழைப்பும் பரஸ்பர உதவியும் ஆழமும் விரிவாக்கமும் பெறுதல், அவற்றின் பொருளாதார கலாசார தரங்கள் சமனப்படுதல்—தனித்தனி சோஷலிஸ்டு நாடுகளிலும் சரி, சோஷலிஸ்டு சமுதாயக் கூட்டு முழுமையின் அளவிலும் சரி இரண்டிலும் செயல்படுகின்றன. இந்தப் புறநிலை விதிகள் மீது உலக சோஷலிஸ்டு அமைப்பிலுள்ள ஒவ்வொரு நாட்டின் சிறப்பான தேசிய இயல்புகளின் செல்வாக்குச் செலுத்தப்படுகின்றது என்பதை நாம் மறந்துவிடலாகாது. அதே போதில் பின்னவை அதே சமூக-பொருளாதார அமைப்புடன் கூடிய சாதாரண அரசுகளின்

தொகுப்பாக இனிமேலால் அமையா என்பதையும் மனதிற் கொள்ள வேண்டும்.

25 ஆவது காங்கிரசுக்கான சோ.க.க. மத்தியக் கமிட்டியின் அறிக்கை வலியுறுத்தியதாவது: "சோஷலிஸ்டு அரசுகளிடையிலான பிணைப்புகள், ஒவ்வொரு சோஷலிஸ்டு தேசமும் மலர்ச்சியுறுவதுடனும் அவற்றின் சர்வவுரிமை வலுப்பட்டு, சமுதாயக் கூறுகள் அவற்றின் கொள்கை பொருளாதாரம் மற்றும் சமூக வாழ்வில் அதிகரிப்பதோடு மேலும் நெருக்கமாகி வருகின்றன. அவற்றின் வளர்ச்சி படிப்படியாக சமநிலை அடைந்து வருகிறது. படிப்படியாக சோஷலிஸ்டு நாடுகள் ஒன்று சேர்ந்துவரும் இந்த நடைமுறை ஒரு புறநிலை விதியாக முற்றிலும் திட்டவட்டமாக இப்போது அமுலாகி வருகிறது."* பொருளாதாரம், அரசியல், கலாசாரம் ஆகிய எல்லாத் துறைகளிலும் சோஷலிஸ்டு குடும்பத்தைச் சேர்ந்த மார்க்சிய-லெனினியக் கட்சிகள் பாட்டாளி வர்க்க சோஷலிஸ்டு சர்வதேசியத்தின் கோட்பாடுகளால் வழி நடத்தப்படுகின்றன. சோஷலிஸ்டு தேசங்கள் தேசிய இனங்களின் வாழ்வில் தேசிய மற்றும் சர்வதேசிய இயல்புகளின் ஒற்றுமை உற்பத்தி சக்திகளை சோஷலிசமயமாக்கும் புறவய நடப்புக்களாலும், சோஷலிஸ்டு சமுதாய அமைப்பை உருவாக்கும் வளர்க்கும் பொதுவிதிகளாலும் முதலாளித்துவத்துடனான அதன் போட்டி மற்றும் எதிர்ப்பினாலும் நிர்ணயிக்கப் பெறுகின்றன.

உலகின் முதலாவது சோஷலிஸ்டு நாடு என்ற முறையில் சோவியத் ஒன்றியம், அதன் தேசங்கள் தேசிய இனங்களை ஒன்றிணைப்பதில் மாபெரும் வெற்றியைப் பெற்றுள்ளது. இப்போது, கம்யூனிஸ்டு நிர்மாணக் காலகட்டத்தினுள் பிரவேசித்து விட்ட நிலைமையில், அது இன்னமும் மக்களினங்களின் பூரண ஒற்றுமைக்கான பாதையில் தலைமை தாங்கிச் செல்கிறது. ஆனால் இங்குள்ள அடிப்படை விஷயம் என்ன

* சோ.க.க. மத்தியக் கமிட்டியின் அறிக்கையும், உள்நாட்டு வெளிநாட்டுக்கொள்கையில் கட்சியின்உடனடிப் பணிகளும், சோ.க.க. 25 ஆம் காங்கிரஸ், பக். 9.

வென்றால், இதுகாறும் வரிசைப்படுத்தித் தந்த நடப்புகள் எல்லாம் பொதுவாக சோஷலிசத்தின் சாரத்தின் பகுதியே யாகும். வெவ்வேறு சோஷலிஸ்டு நாடுகளில் பல்வேறு பிரச்சினைகளுக்கு தீர்வு கண்டிருப்பதன் அளவு, காலவரம்பு மற்றும் அவற்றின் வளர்ச்சி வீதம், பிரச்சினையின் சிக்கல் தன்மை இவற்றைப் பொருத்ததாகவே இருக்கும். பிரதான விஷயம் என்னவெனில், சோஷலிசம் அதன் கோட்பாடுகள் புரட்டப்படுவதை தவிர்த்துவிடும் பட்சத்தில்—எப்போதும் மக்களினங்களின் நட்புறவை, அவற்றின் தோராயப்படுத்தல் மற்றும் ஒற்றுமையை வலியுறுத்துகிறது, புதிய சமூக மற்றும் சர்வதேசிய மக்கள் சமுதாயக் கூட்டுகளை அபிவிருத்தி செய்யத் தலைமை தாங்கிச் செல்கிறது.

"50 ஆண்டுகளுக்கு முன்னால் சோவியத் குடியரசுகளை சோவியத் சோஷலிஸ்டுக் குடியரசுகளின் ஒரே ஒரு ஒன்றிய மாக ஒன்றிணைப்பது பற்றிய பிரச்சினை எழுந்தபோது, லெனின்,ஏகாதிபத்தியத்தின் ராணுவத் தாக்குதலை எதிர்த்து நிற்கவும், புரட்சியின் சாதனைகளைத் தற்காத்துக் கொள்ளவும், பொது முயற்சி மூலமாக சோஷலிஸ்டு நிர்மாணத்தின் அமைதியான படைப்பாற்றல் பணிகளை மேலும் வெற்றிகரமாகச் செய்து நிறைவேற்றவும், ஒன்றியம் அவசியம் என்று சுட்டிக் காட்டினார்.

"கோட்பாட்டளவில், வார்சா ஒப்பந்த அமைப்பு மற்றும் பரஸ்பர பொருளாதார உதவிக் கவுன்சில் ஆகிய வற்றில் ஒன்றிணைந்துள்ள சர்வவுரிமை சோஷலிஸ்டு அரசு களின் சோதரக் குடும்பத்துக்கும் இதுவே பொருந்தும்."*

சர்வதேசிய சோஷலிஸ்டு உழைப்புப் பிரிவினை, ப. பொ. உ. க. உறுப்பு நாடுகளின் பொருளாதார இணைப்பாக்கத் திற்கான சர்வாம்ச வேலைத் திட்டம், அவற்றின் சகல-துறை ஒத்துழைப்பு இவை தேசங்களை ஒன்று சேர்க்கவும் சோஷலி சத்தின் சர்வதேசிய நிலைகளை வலுப்படுத்தவும் புதிய பிரம்

---

* லி. இ. பிரெஷ்நேவ், **சோவியத் சோஷலிஸ்டுக் குடியரசு களின் ஒன்றியத்தின் 50ஆம் ஆண்டு விழா**, பக்.42-43.

மாண்டமான வாய்ப்புக்களை வழங்கியுள்ளன. சோஷலிஸ்டு குடும்பத்தைச் சேர்ந்த நாடுகள் இந்த ஒத்துழைப்பை முற்றிலும் தேசிய நிலைகளில் இருந்து அணுகவில்லை, மாறாக, சோஷலிஸ்ட் சர்வதேசிய நிலைமைகளில் இருந்தே அணுகுகின்றன, குடும்பத்தில் உள்ள ஒவ்வொரு நாட்டின் நன்மையிலும் அக்கறை காட்டுகின்றன.

சோஷலிஸ்டு தேசங்களின் சகல-துறை பொருளாதார அரசியல் மற்றும் கலாசார ஒத்துழைப்பும், அவை ஒன்று சேருவதும் மக்களின் புதிய வரலாற்று சமுதாயக் கூட்டுகளை விஸ்தரிக்கவும் வளப்படுத்தவுமான அவசியமான முன் நிபந்தனையாகும். அதுவே பிரதான விஷயம். சோதர ஒத்துழைப்பும் பரஸ்பர உதவியும் சோஷலிஸ்டு தேசங்களை மிகவும் நெருக்கமாக இணைந்த மக்களினங்களின் ஒரு குடும்பமாக மாற்றுகின்றன, புதிய சமுதாய அமைப்பை ஒன்று சேர்ந்து கட்டவும் ஒன்று சேர்ந்து பாதுகாக்கவும் வகை செய்கின்றன.

பாகம்—3

தேசியப் பிரச்சினையும் புரட்சி இயக்கமும்

தேசங்களின் வளர்ச்சி மற்றும் தேசிய உறவுகள் பற்றிய பிரச்சினைகளை முழுமையாக உணர்ந்து புரிந்து கொள்ள வேண்டுமானால், அவற்றை சமுதாய இயக்கங்கள் அவற்றின் இயங்கியல் மற்றும் இந்த சகாப்தத்தின் உள்ளடக்கம் இவற்றின் பின்னணியில் பரிசீலிக்க வேண்டும். தேசியப் பிரச்சினையை பொதுப்பட வரலாற்று சகாப்தத்தோடும், குறிப்பிட்ட நாட்டிலான தேசங்கள் மற்றும் தேசிய உறவுகளின் வளர்ச்சியின் திட்டவட்டமான அம்சங்களோடும், சேர்த்துப் பார்க்க வேண்டும் என்பதாக நமக்கு லெனின் போதித்தார். அதோடு "வர்க்கங்களின் உறவுகள் மற்றும் ஒவ்வொரு வரலாற்று நிலைமையினதுமான பிரத்தியேகமான ஸ்தூலமான அம்சங்கள் குறித்த கறாராயும் சரி நுட்பமான, உண்மையிலேயே சான்றுதாரம் தரத்தக்க பகுப்பாய்வு"* அவசியம் என்பதாகவும் அவர் கண்டார்.

இன்று மக்களின் முன்னுள்ள பிரதானக் கடமைகளில் ஒரு முக்கியக் கூறாக, தேசங்களின் வளர்ச்சியும் தேசிய உறவுகளும் காணப்படுகின்றன. உலக சோஷலிஸ்டு அமைப்பைச் சேர்ந்த மக்களினங்களின் முக்கியமான பணி, சோஷலிசம் கம்யூனிசத்தை நிர்மாணிப்பதேயாகும். வளர்ச்சி

* வி. இ. லெனின், "நூல் திரட்டு", தொகுதி 24, பக். 43.

யடைந்த முதலாளித்துவ நாடுகளின் மக்களினங்களுக்கோ, சோஷலிஸ்டுப் புரட்சிக்குப் பாதை சமைக்கும் வகையில், பொதுவான ஜனநாயக ஏகபோக-எதிர்ப்பு மாற்றங்களைக் கொண்டு வருவதே சிறப்பான சேவை. வளர்முக நாடுகளின் மக்களினங்களின் மூலப் பொறுப்பு அவர்களது தேசிய சுயாதீனத்தை வலுப்படுத்தல், சமுதாயத்தின் பாணியை மாற்றியமைத்தல், மற்றும் பிற்பட்ட நிலையை ஒழித்தகற்றல் என்பதே.

தேசங்களின் வளர்ச்சி மற்றும் தேசிய உறவுகள்பாலான வரலாற்று முறை பொருளாதார அமைப்புக்கு ஏற்ப தேசிய மற்றும் சர்வதேசியஇயக்கங்களின் உள்ளடக்கத்திற்கிடையே தெளிவாகப் பாகுபடுத்திப் பார்ப்பதும் அவசியமாகும். முதலாளித்துவ நாடுகளைப் பொருத்த வரை தேசியப் பிரச்சினையின் விஷயத்தில் முக்கியமான பணி தேசங்களை ஒடுக்கும் தேசங்கள் ஒடுக்கப்படும் தேசங்கள் என்று பிரிவினை செய்வதை ஒழித்து ஒடுக்கப்படும் தேசங்களுக்கு வளர்ச்சி சுதந்திரத்தை உறுதிப் படுத்துவதாகும், அதோடு ஆதிக்க தேசங்களின் வளர்ச்சியிலான உள் இயக்கங்களும் அவற்றிடையிலான உறவுகளும் முக்கியமானவை. வளர்முக நாடுகள் சம்பந்தப்பட்ட வரை தேசியப் பிரச்சினையின் சாரம் நேரடியாயும் மறைமுகமாயுமான ஏகாதிபத்திய ஒடுக்கு முறையை இல்லாதொழிப்பதும், தேசிய ஒருமைப்பாட்டு இயக்கங்களை கட்டவிழ்த்து விடுவதும், தேசங்கள் தேசிய இனங்களின் உருவாக்கம் சுயேச்சையான வளர்ச்சி இவற்றை உத்தரவாதம் செய்வதுமாகும்.

சோஷலிசம் தேசிய ஒடுக்கு முறையை அழித்து விட்டது. தேசங்கள் தேசிய உறவுகளுக்கு மெய்யாகவே சுதந்திரமான வளர்ச்சியை உறுதிப் படுத்தி விட்டது. ஆகவே, சோஷலிஸ்டு நாடுகளில் வளர்ச்சியின் அளவையும் தேசிய ஒருமைப்பாட்டின் வீச்சையும் உயர்த்துவதும், மக்களினங்களின் நட்புறவையும் ஒத்துழைப்பையும் வலுப் படுத்துவதுமே தேவை.

தேசங்கள் தேசிய உறவுகளின் அபிவிருத்தி, சமுதாய வாழ்க்கையின் இதர அம்சங்களுடன் பலமான தொடர்பு கொண்டு இருக்கிறது, மக்களினங்களின் ஒற்றுமைக்கும் முன்னேற்றத்துக்குமான அடித்தளம் என்ற வகையில், உலகப் புரட்சி இயக்கமுங்கூட தேசங்கள் தேசிய உறவுகளின் அபிவிருத்தியின் செல்வாக்குக்கு இலக்காகிறது.

லெனின் கூறியது போல, பல காரணங்களால், வரலாற்றின் இன்றைய கட்டம், ஒரு பக்கம் உலக வளர்ச்சி பிரம்மாண்டமாக வேக முடுக்கம் பெற்றுள்ளதாலும், மறுபுறம் சோஷலிஸ்டு உலகத்திற்கு அக்கம் பக்கமாக சோஷலிசத்துக்கு முந்தியதான சமூக உறவுகளின் வடிவங்களும் இருப்பதாலும், குறிப்பிடத் தக்கதாக விளங்குகிறது. இந்த நிலைமைகளில் தேசங்கள் தேசிய உறவுகளின் வளர்ச்சியை, சோஷலிசத்தின் மற்றும் முதலாளித்துவத்தின் சக்திகளுக்கு இடையிலான போராட்டத்தைப் பின்னணியாகக் கொண்டு பரிசீலிக்க வேண்டும், வேறுபட்ட சமுதாய அமைப்புகளையுடைய அரசுகளின் சகவாழ்வு கட்டத்தின் கால அளவை கவனத்தில் வைத்திருக்க வேண்டும். இன்றைய உலக சோஷலிஸ்டு அமைப்பின் மக்களினங்கள் வளர்ச்சியடைந்த சோஷலிச கட்டத்தில் இருந்து கம்யூனிச கட்டத்திற்கும் போகும் போதும், வளர்ச்சியடைந்த பூர்ஷுவா நாடுகளில் முதலாளித்துவத்தின் பொதுநெருக்கடி மேலும் கடுமையுறுவதையும், அதைத் தொடர்ந்து ஏகபோகம் ஒன்று குவிந்து செறிவடைதல் விரைவடையும் போதும், இந்தச் சகவாழ்வு தொடர்ந்து நீடிக்கும். இளம் தேசிய அரசுகளின் மக்களினங்கள், அரசியல் சுதந்திரத்தை நிலை நாட்டியும், முக்கிய ஏகாதிபத்திய வல்லரசுகளின் நவீன காலனியாதிக்கத்தை எதிர்த்த போராட்டத்தில், சமூக–பொருளாதார அரசியல் மறு திசையமைவின் நிலைமைகளில், வளர்ந்து முன்னேகும்.

தேசங்கள் தேசிய உறவுகளின் வளர்ச்சி சோவியத் ஒன்றியத்திலும் இதர சோஷலிஸ்டு நாடுகளிலும் தேசியப் பிரச்சினைக்கு ஏற்பட்ட தீர்வின் பலமான செல்வாக்குக்கு

இலக்காகும். ஜேக்கஸ்டுக்ளோ மேற்கோள் காட்டியபடி சோவியத் அனுபவம், "காலனி ஒடுக்குமுறையை அறிந்திருந்த நாடுகள் மீதான சோவியத் ஒன்றியத்தின் செல்வாக்கை'' பெருமளவு ஏற்றம் பெறச் செய்துள்ளது. "இந்த உதாரணம் தேசிய மற்றும் சமூக விடுதலைக்காக மக்கள் நடத்தும் போராட்டத்தில்அவர்களுக்கு உத்வேகமும் உறுதியும் அளித்துள்ளது.''* மேலும் வி. இ. லெனின் பிறந்த நாள் நூற்றாண்டு விழாவில் சமர்ப்பிக்கப்பட்ட தமது அறிக்கையில் லி. இ. பிரெஷ்நேவ் குறிப்பிட்டதாவது: "சமுதாய வாழ்வில் மிகவும் கடுமையானதும் ஆக இடர்ப்பாடு நிறைந்ததுமான தேசியப் பிரச்சினை விஷயத்தில் லெனினது கொள்கை வெற்றி வாகை சூடியதும், சோவியத் ஒன்றியம் இந்தப் பிரச்சினைக்கு தீர்வு கண்டதும்—பிரம்மாண்டமான முக்கியத்துவமுடைய அருஞ்செயலாகும். அதோடு மனித குலத்தின் சமுதாய வளர்ச்சியில் ஒரு பிரதான முன்னேற்றமும் ஆகும்.''**

சோவியத் ஒன்றியத்திலும் உலக சோஷலிஸ்டு அமைப்பிலும் தேசங்களும் தேசிய உறவுகளும் வெற்றிகரமாக வளர்ச்சியடைந்ததன் மூலம் மனித குலம் அனைத்தின் முன்னேற்றம் மீதும் ஏற்பட்ட நல்தாக்கம், அவற்றின் அனுபவத்தை ஒரு முன் மாதிரியாகக் கொள்வதிலும், முதலாளித்துவ மற்றும் வளர்முக நாடுகளின் உழைக்கும் மக்களுக்கு நல்கும் நேரடி உதவியிலும்உருப்படியான நிறைவு பெற்றது. இந்தச் செல்வாக்கின் அளவு சோஷலிஸ்டு நாடுகளின் மக்கள் எய்தியுள்ள சோஷலிஸ்டு கட்டத்துக்கு நேர் விகிதத்தில் இருந்தது.

சோஷலிஸ்டு நிர்மாணக் காலகட்டத்தில் தேசங்கள் பெருமளவுக்கு முதலாளித்துவத்திடமிருந்து மரபாகப் பெற்ற அடித்தளம் மீதே அபிவிருத்தி கண்டன. இதற்கு நேர்மாறாக, வளர்ச்சியடைந்த சோஷலிசம் தேசங்கள்

---

* உலக மார்க்சிஸ்ட் ரெவ்யூ, இதழ் 3, 1966, பக். 2.

** லி. இ. பிரெஷ்நெவ், லெனின் வழியைப் பின்பற்றி, மாஸ்கோ, 1972, பக். 278.

கம்யூனிசத்தை நோக்கி முற்றிலும் சோஷலிஸ்டு அடிப்படையில் முன் செல்ல இயலுமாறு உதவுகிறது. இயல்பாகவே, சோஷலிஸ்டு தேசிய இனங்களில் இருந்தோ அல்லது பல தேசிய இனங்கள் சேர்ந்து இணைவதன் மூலமோ, தேசங்கள் புதிதாக உருவகம் பெறுவது சாத்தியம். இந்தக் கட்டத்தில் முக்கிய மூலக்கூறாக இருப்பது சோஷலிஸ்டு தேசங்களின் வளர்ந்து வரும் பக்குவமும், அவை படிப்படியாகவும் உறுதியாகவும் ஒன்று சேர்ந்து இணைவதுமேயாகும். ஆக உருப்படியான மாறுதல்கள் பல்தேசிய இன அரசுகளில் நிகழ்வது கண்கூடு; தேசிய செயல் முறைகள் அதாவது தேசங்களின் முக்கியமான தனிச் சிறப்பான இயல்புகளின் வளர்ச்சி மேலும் ஆழமுறுகிறது; மக்களினங்களின் தேசிய ஒற்றுமை மேலும் திடமுறுகிறது; தேசங்களின் உறவுகளிலான சாரமும் வடிவங்களும் மாறுதல் உறுகின்றன; குறிப்பாயும் பரஸ்பர செல்வாக்கினாலும் தேசிய கலாசாரங்களைப் பரஸ்பரம் செழுமைப்படுத்துவதனாலும் இவை உறுகின்றன. உதாரணமாக சோவியத் ஒன்றியத்தில் வளர்ச்சியடைந்த சோஷலிசம் எனும் பின்னணியில் தேசங்கள் தேசிய இனங்களின் முன்னேற்றம், சோவியத் மக்கள் ஒரு புதிய வரலாற்றுக் குடும்பமாக மேலும் ஒருமைப்பாடடைந்து வருவதில்தான் முக்கியமாயும் வெளியாகிறது.

உலக சோஷலிஸ்டு அமைப்பின் தேசங்கள் இடையிலான உறவுகளிலும் முக்கியமான மாற்றங்கள்புலப்படுத்துகின்றன. வேறு விஷயங்களுடன் கூடவே, சர்வதேசியக் காரணி, குறிப்பிட்ட தேசியக் காரணியை விடவும் மேலதிகமான முக்கியத்துவம் பெறுகிறது, எல்லாத் துறைகளிலும் தேசங்கள் பரஸ்பரம் ஒன்று சேரும் போக்குத் துவங்கி விட்டது.

தேசங்கள் தேசிய உறவுகளின் வளர்ச்சியிலான இன்றைய உள்ளடக்கம், பிரதானமாயும், சோஷலிஸ்டு மற்றும் முதலாளித்துவ சமூக அமைப்பின் அடிப்படை இயல்புகளாலும், உலக அரங்கிலான அவற்றின் போராட்டத்தினுலுமே நிர்ணயிக்கப்படுகிறது, நிகழ்கால, விஞ்ஞான

தொழில்நுட்பப் புரட்சியும் இந்த நடைமுறை மீது பலத்த செல்வாக்குச் செலுத்துகிறது.

முதலாளித்துவத்தின் பொது நெருக்கடியின் மூன்றும் கட்டத்தின் துவக்கமே, உலக சக்திகளின் பலநிலை சோஷலிசத்துக்கு இன்னும் சாதகமாக மாறி விட்டதையும், ஏகாதிபத்தியம் தனது வரலாற்று முன்முயற்சியை இழந்து விட்டதையும், சோஷலிசம் உலக வளர்ச்சிப் போக்கின் பிரதான திசை காட்டி ஆகிவிட்டதையும் தெளிவாக்கி விட்டது.

கடந்த இரண்டு ஆண்டுகளில் இந்த இரண்டு உலக அமைப்புகளின் இடையிலான உறவுகளின் பலநிலை, இன்னும் அதிகமாக சோஷலிசத்துக்குச் சாதகமாக மாறிவிட்டது. உலக நடப்புக்களைப் பரிசீலித்த சோ.க.க.யின் 25 ஆவது காங்கிரஸ், உலகப் புரட்சி சக்திகளைத் தடுத்து நிறுத்தவும், சோஷலிசம் வலிமையுறுவதைத் தகையவும் வேண்டி ஏகாதிபத்தியவாதிகள் புரிந்த எல்லா முயற்சிகளும் வீணுகி விட்டது என்பதைக் கண்டது. சோஷலிசத்தின் நிலவரங்கள் நாளொருமேனி வலுவடைந்து வருகின்றன. 25ஆவது காங்கிரசில் முன்வைக்கப்பட்ட சோ.க.க. மத்தியக் கமிட்டியின் அறிக்கை கூறுவதாவது: ''உலக விவகாரங்கள் மீதான சோஷலிஸ்டு நாடுகளின் செல்வாக்கு நாளுக்குநாள் வலிவும் பொலிவும் பெற்று வருகின்றன என்பதை பாரபட்சமற்ற எவரும் மறுக்க மாட்டார்கள்,'' சோ.க.க. மத்தியக் கமிட்டி இதை "மனிதகுலம் முழுமைக்கும், சுதந்திரம், சமத்துவம், சுயாதீனம், சமாதானம் மற்றும் முன்னேற்றத்தை விழையும் அனைவருக்கும் இது ஒரு மகத்தான வரப்பிரசாதம்"* என்று வருணித்தது.

1974 நடுப்பகுதியில் உலகப் பரப்பின் 8.6 சதவிகிதப் பிரதேசத்தையும் உலக மக்கள் தொகையில் 14.3 சதவிகிதத்

* சோ.க.க. மத்தியக் கமிட்டியின் அறிக்கையும் உள்நாட்டு வெளிநாட்டுக் கொள்கையில் கட்சியின் உடனடிப் பணிகளும், பக். 8.

தையும் பிரதான ஏகாதிபத்திய வல்லரசுகள் தம் ஆதிக்கத்தில் வைத்திருந்தன. இதற்கிடையே சோஷலிஸ்டு உலகத்தின் பங்கு பிரம்மாண்டமாக மாறிவிட்டது. அது உலக மக்கள் தொகையில் 32 சதவிகிதத்துக்கும், உலகத் தொழில்துறை உற்பத்தியில் சுமார் 40 சதவிகிதத்துக்கும் வகை செய்கிறது.

உலக முதலாளித்துவத்தின் தொடர்ச்சியான வீழ்ச்சிக்கு இதர காரணிகளுடன் கூடவே, காலனி அமைப்பின் கிட்டத்தட்ட முழுமையான அரசியல் சீரழிவும் ஏதுவாகும். 1919-ல் காலனிகளும் அரைக் காலனிகளும் உலகப் பரப்பில் 72 சதவிகிதத்தையும், உலக மக்கள் தொகையில் 69.4 சதவிகிதத்தையும் கொண்டதாக இருந்தன. 1970-ம் ஆண்டுகளின் நடுப்பகுதிக்குள் இந்த விகிதங்கள் முறையே 3.3 மற்றும் 1 சதவிகிதத்துக்கும் குறைவாகவே இருந்தன, முதலாளித்துவத்தின் பொது நெருக்கடியின் மூன்றும் கட்டம் துவங்கியதன் பின்னுல் உலகப் படத்தில் கிட்டத்தட்ட 50 புதிய அரசுகள் தோற்ற மளித்துள்ளன. காலனி ஆதிக்கத்தின் கடைசி எச்சங்கள் தகர்ந்து விழுந்து வருகின்றன. அண்மை ஆண்டுகளில் கினி-பிசாவு கேப்வெர்டே தீவு, அங்கோலா மற்றும் மொஸாம்பிக் மக்களினங்கள் ஆயுதமேந்திய போராட்ட மூலம் தம்மைத் தாமே விடுவித்துக் கொண்டார்கள். ஸிம்பாப்வே, நமிபியா மற்றும் தென் ஆப்பிரிக்க குடியரசில் தேசிய விடுதலை இயக்கம் மேலும் தீவிரமடைந்துள்ளது.

உலக சக்திகளின் ஒப்பு வலிமை மட்டும் முதலாளித் துவத்தின் அதோகதியைச் செய்யவில்லை. இந்த விஷயத்தில் முதலாளித்துவ சமூக-பொருளாதார அமைப்பு, தனது வளர்ச்சிக்கான அதன் உயிர்க்கூறுன மூலவளங்களைப் பயன் படுத்தித் தீர்த்து, இப்போது மனிதகுல முன்னேற்றத்துக்கு தடையாக நிற்பதும் ஒரு முக்கியமான காரணியேயாகும். புதிதாக விடுதலை பெற்ற மக்களினங்கள் பலவும் தாம் முதலாளித்துவ வளர்ச்சிப் பாதையை நிராகரிப்பதாகப் பகிரங்கமாகப் பறைசாற்றியுள்ளன. தமது வேலைத் திட்டங்களை வெளியிட்டுள்ள ஆப்பிரிக்க அரசியல் கட்சிகளில்

மிகப் பெரும்பான்மையானவை "சோஷலிஸ்டு பொருளாதாரத்துக்கு" ஆதரவாக வெளிப்படையாகப் பிரகடனம் செய்துள்ளன. அரசியல் சுதந்திரம் வென்று பெற்ற மக்களினங்களில் ஒரு சிறு விகிதம் மட்டுமே, தமது இறுதித் தேர்வை முடிவு செய்திருக்கிறார்கள், ஆனால் அவர்கள் முதலாளித்துவப் பொருளாதாரத்தை விடவும் சோஷலிஸ்டு பொருளாதாரம் சாதகமானது என்பதை அங்கீகரித்திருப்பது தெளிவாகத் தெரிகிறது. இதற்குக் காரணம் சோவியத் ஒன்றியம் மற்றும் இதர சோஷலிஸ்டு அரசுகளின் மக்களினங்கள் புது வாழ்வை நிர்மாணிப்பதில் அடைந்துள்ள வெற்றிகளேயாகும்.

உலக அபிவிருத்திக்கான தலைமைப் பாத்திரத்தை முதலாளித்துவம் இழந்து விட்டது என்பதால், மக்களினங்களின் வாழ்க்கை மீதோ தேசங்கள் இடையிலான உறவுகளின் மீதோ அதன் செல்வாக்கு இல்லாததாகி விட்டது என்று நாம் முடிவுகட்ட முடியாது.

ஏகாதிபத்தியத்தை லெனின், தேசிய ஒடுக்குமுறையும் காலனிக் கொள்ளையும் வலுப்பெற்று விரிவடைவதோடும், தேசங்கள் மேலும் கடுமையாக ஒடுக்கப்படுவதோடும் சேர்த்து இனங்காட்டினார்,* இது இன்று மெய்யாகி விட்டது. தவிரவும் சோஷலிஸ்டல்லாத உலகினை ஒடுக்கும் தேசங்கள் ஒடுக்கப்படும் தேசங்கள் என்று பிரிவினை செய்வது மேலும் அதிகத் தெளிவாகி விட்டது. 150 கோடி மக்களுக்கும் அதிகமானோர் அரசியல் சுதந்திரத்தைப் பெற்றுவிட்ட போதிலும் ஏகாதிபத்தியம் இன்னமும் அவற்றை பொருளாதாரத் துறையில் ஒடுக்கியே வந்தது. ஏகாதிபத்திய வாதிகள் காலனி ஆதிக்கம் இருந்த இடத்தில் நவீன காலனி ஆதிக்கத்தைப் புகுத்தினர். இதுவும் அதேபோன்று ஆபத்தானதே. மேலும் வளர்ச்சியடைந்த தேசங்களில் மக்களினங்களை ஒடுக்குவதையும் சுரண்டுவதையும் அதிகரித்

---

* காண்க வி. இ. லெனின், "நூல் திரட்டு", தொகுதி 21, பக். 409; தொகுதி 22, பக். 143.

தார்கள், இவ்வாறு தேசிய சர்வதேசிய இயக்கங்களை மந்தப் படுத்தினார்கள்.

நவீன முதலாளித்துவத்தின் ஒரு சில புதிய குணம்சஇயல்புகள் முதலாளித்துவத்தின் பொது நெருக்கடியின் மூன்றாவது கட்டத்தில், தேசங்கள் தேசிய உறவுகளின் வளர்ச்சி மீது பலமான செல்வாக்குச் செலுத்துகின்றன. பிரம்மாண்டமான அளவில் மூலதனம் செறிவடைதல் ஏகாதிபத்தியத்தின் மிகம் தன்மைக் குறிப்பான மிகவும் உருப்படியான இயல்பாகும் எனும் அவதானிப்பு, இதை லெனின் அரை நூற்றாண்டுகளுக்கு முன் செய்ததுபோல அதே வன்மையுடன் இன்றும் ஒலிக்கிறது.

ஏகபோக மூலதனத்தின் இந்த அதிகரித்துவரும் ஒருமுகச்செறிவு பெரிய கம்பெனிகள் மேலும் பெரிய கம்பெனிகளாக ஒன்றிணையும் வடிவத்தை மேற்கொள்கிறது. இவை அண்மை ஆண்டுகளில் ஒரு கதம்பத்தன்மையை ஏற்கத் தொடங்கி முற்றிலும் வேறுபட்ட துறைகளில் செயலூக்கமுடன் இயங்கி வரும் நிறுவனங்களைச் சேர்த்து இணைத்துக் கொள்கின்றன.

அமெரிக்கப் பொருளாதாரம் இப்போது 2,000 குபேரக் குடும்பங்கள் உள்ளிட்டு 8 பெரிய நிதி முதலாளித்துவக் குழுக்களால் ஆதிக்கம் செலுத்தப்படுகிறது. 1970 ஆம் ஆண்டுகளின் துவக்கத்தில் சுமார் 0.5 சதவிகிதம் அமெரிக்காவின் மக்கள் தொகையினர் 60,000 கோடி டாலர் செல்வம் குவித்தனர், டுபாண்ட் குடும்பம் மட்டுமே 15,000 கோடி டாலர் மதிப்புடைய சொத்துக்கள் மீது உரிமை செலுத்துகிறது. 1980 ஆம் ஆண்டுகளுக்குள் 100 பன்னாட்டு ஏகபோகங்கள் மட்டுமே முதலாளித்துவ நாடுகளின் தொழில்துறை உற்பத்தியில் மூன்றில் இரண்டு பங்கின் மீது உரிமை செலுத்தும் என்று மதிப்பிடப்படுகிறது.

ஏகபோக மூலதனத்தின் ஒருமுகச் செறிவின் அளவைப் பின்வரும் சில புள்ளி விவரங்கள் எடுத்துக் காட்டுகின்றன.

1948-ல் அமெரிக்காவின் ஆகப்பெரிய 200 கூட்டு நிறுவனங்கள் நாட்டின் நிலையான மூலதனத்தில் 48.2 சதவிகிதத்தின் மீது உரிமை செலுத்தின. 1972—க்குள் 60 சதவிகிதம் அளவுக்குத் தம் கண்காணிப்பில் கொண்டு வந்தன. 1929-ல் ஆகச் செல்வந்தர்களான அமெரிக்காவின் ஒரு சதவிகிதம் பேர் தனியார் கூட்டுப் பங்கு மூலதனத் திற்கு உடைமையாளர்களாக இருந்தார்கள், 40 ஆண்டு களுக்குப் பிறகு முக்கால் பங்குக்கும், அதிக மூலதனத்திற்கு உரிமையாளராயினர். 1969-ல் ஜெர்மன் சமஷ்டிக் குடியரசின் தேசியச் செல்வத்தில் மூன்றில் ஒரு பங்கும் 70 சதவிகிதம் உற்பத்திச் சொத்துக்களும் நாட்டின் மக்கள் தொகையில் வெறும் 1.7 சதவிகிதமே இருந்த பெரும் பணக்காரக் குடும்பங்களிடம் குவிந்து கிடந்தன. பிரிட்டனில் 1.5 சதவிகிதம் பேர், தனியார் சொத்துடைமையில் 58 சதவிகிதத்திற்கு உரிமையாளர்களாக இருக்கிறார்கள். இத்தகை வலிமை மிக்க பொருளாதார ஆற்றல் இந்த ஏகபோகங்கள் தேசிய சர்வதேசிய இயக்கங்கள் மீது பலமான செல்வாக்குச் செலுத்த இயலுமாறு உதவுகிறது என்பது கண்கூடு.

இது முக்கியமாயும் ஒரு எதிர்மறையான செல்வாக்கே. இதன் ஒரு அம்சம் மட்டுமே—அதாவது உற்பத்தி சக்திகளை ஊக்குவிக்கும் இதன் புறநிலைத் திறன் மட்டுமே இது தேசங்கள் தேசங்களின் உறவுகள் முன்னேற்றமடைய உதவும்.

அக்டோபர் புரட்சியின் தறுவாயில் லெனின் மூலதனம் "ஏற்கெனவே சர்வதேசியத் தன்மை கொண்டது. அத்தன்மை மேலும் அதிகரித்து வருகிறது"* என்று குறிப்பிட்டார். இதற்குக் காரணம் முதலாவதாக, அது தேசிய எல்லைகளைப் பற்றிக் கவலைப்படுவதில்லை, எந்த நாடுகளில் லாபம் பெரிதாக இருக்கிறதோ அவற்றில் செயல்பட முயல்கிறது, இரண்டாவதாக, பல நாடுகளிலிருந்து மூலதனத்தை

* வி. இ. லெனின், "நூல் திரட்டு", தொகுதி 20, பக். 22.

ஒன்றிணைத்து வரும் தேசங்கடந்ததான கூட்டு நிறுவனங் களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதுமாகும்.

1973 இறுதிக்குள் வெளிநாடுகளிலான அமெரிக்காவின் நேரடி தனியார் முதலீடுகள் 10,720 கோடி டாலர் என்று அதிகார பூர்வமாக மதிப்பிடப்பட்டுள்ளது. அதே சமயம் பிரபல சஞ்சிகையான (Wall street journal) வால் ஸ்ட்ரீட் ஜர்னல் தகவலின்படி 1971 துவக்கத்திலேயே, இந்த வகையில் 25,000 கோடி டாலர் இருந்ததாகத் தெரிகிறது. 1969-71-ல் மட்டுமே உலக நிதி வழங்கு மூலதன மார்க்கெட் மீது எழுப்பப்பட்டதான வங்கிகள் மற்றும் கூட்டுக் கம்பெனி களின் குறுகியகாலக் கடன்கள் 16,200 கோடி டாலரிலிருந்து 26,800 கோடி டாலராக அதிகரித்தன. அதே போதில் குறுகிய கால செலுத்துப் பொறுப்பு 13450 கோடி டாலரி லிருந்து 20200 டாலாராக அதிகரித்தது. சேஸ்மன்ஹாட்டன் வங்கிக்கு மட்டுமே நாட்டுக்கு வெளியே 1600 கிளைகள் உள்ளன. வெளிநாடுகளில் அமெரிக்க கூட்டுக் கம்பெனி களின் வருடாந்த உற்பத்தி கிட்டத்தட்ட 20,000 கோடி டாலர் மதிப்புடையது, அமெரிக்க ஏற்றுமதிகளைப்போல் ஆறு மடங்கு அதிகமானது.

ஏகாதிபத்திய ஏகபோகங்களின் கொடுக்குகள் டஜன் கணக்கான தேசங்களைப் பிணைத்துக் கட்டியுள்ளன. ஜெனரல் மோட்டார்ஸ் (அமெரிக்கா) மற்றும் சீமென்ஸ் (ஜெ.ச.கு) இவை 100-க்கும் அதிகமான நாடுகளில் செயல்பட்டு வரும் நிறுவனங்களாகும்.

மூலதனம் ஏற்றுமதி என்பது சுரண்டலின் முக்கியமான வடிவங்களில் ஒன்றாகும். இத்தகையதான சுரண்டும் உரிமைக்காக பிரதான ஏகாதிபத்திய வல்லரசுகள் தமக்குள் கடுமையாகப் போராடி வருகின்றன. சமீப காலமாக அமெரிக்க ஏகபோக மூலதனம் அதன் போட்டியாளர் களுக்கு குறிப்பாயும் ஜெ.ச.கு. மற்றும் ஜப்பானுக்கு விட்டுக் கொடுக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது. (Fortune) பார்ச்சூன் சஞ்சிகை (ஆக. 1972) தரும் விவரப்

படி 1958—70 ல் ஜப்பானில் தொழில் துறை உற்பத்தி 449 சதவிகிதம் அதிகரித்திருந்தது, இத்தாலியில் 150, ஜெ. ச. கு. 110, கனடாவில் 100, பிரான்சில் 89, அமெரிக்காவில் 82, பிரிட்டனில் 48 சதவிகிதம் அதிகரித்திருந்தது. பணவீக்க நடைமுறைகளும், டாலர் மதிப்புக் குறைக்கப்பட்டதும், இவை, வெளிநாட்டுக்குக் கடந்து செல்லும் மூலதனத்தைக் குறைத்துவிட்ட நிலையில், அமெரிக்க நிலைகளை பலவீனப் படுத்தும் காரணிகளாகி விட்டன. இதன் விளைவு அன்னிய முதலீடுகளின் வளர்ச்சி வீதத்தில் அமெரிக்கா இதர நாடுகளின்பின்னே வால் பிடிக்கிறது. அதே சமயம் மேற்கு ஜெர்மனியின் முதலீடுகள் ஆண்டுக்கு 21 சதவீதம் ஏறும் போது அமெரிக்க முதலீடுகள் 9சதவிகிதமேஅதிகரித்துள்ளன. வெளி நாடுகளில் ஜெ. ச. கு. நேரடி முதலீடுகள் 1961-1972-ல் 5.5 மடங்கு பெருகின. அதே பொழுதில் பண்டங்கள் ஏற்றுமதி 80 சதவிகிதம் மட்டுமே கூடியது.

ஏகாதிபத்திய ஜப்பான் தனது நிலைமைகளை வேகமாகத் திடப்படுத்தி வருகிறது. இன்னமும் ஓரளவுக்கு அமெரிக்க ஏகாதிபத்தியத்தைச் சார்ந்தே இருந்த போதிலும் அது தனது பொருளாதார நிலைமையை உறுதியாக வலுப் படுத்திக் கொண்டு விட்டது, இதர மக்களினங்களைச் சுரண்டுவதன் மூலம் இது ஓரளவுக்கு சாத்தியமாகியுள்ளது. தொழில் துறை வன்மை மற்றும் தேசிய உற்பத்தியின் வெகு துரிதமான பெருக்கம் இதை எளிதாக்கியது; 1967-ல் அது பிரான்சையும், 1968-ல் பிரிட்டனையும், 1969-ல் ஜெ.ச.கு. வையும் விஞ்சிவிட்டது. இப்போது முதலாளித்துவ உலகில் அமெரிக்காவுக்கு அடுத்தபடி உறுதியான இரண்டாம் இடத்தைப் பெற்றிருக்கிறது, ஒரு சில தொழில் துறைகளில் அமெரிக்காவை விடவும் முன்னணியில் நிற்கிறது. அண்மை ஆண்டுகளில், வெளிநாடுகளுக்குள் பொழிந்த ஜப்பானிய ஏகபோக மூலதனம் அதிகரித்துள்ளது. 1972 ஏப்ரலுக்குள் இது ஏற்கனவே மொத்தம் 450 கோடி டாலர் அளவிலும் பின்னால் ஆண்டுதோறும் 100 கோடி டாலர் அளவிலும் தொடர்ந்து பெருகி வருகிறது.

வளர்முக நாடுகளுக்கு மூலதனத்தை ஏற்றுமதி செய்வதும் அவற்றுடனுன அசமத்துவ வாணிகமும் ஏகபோகங்களுக்கு மிகவும் லாபகரமாக இருந்தன. 1960ஆம் ஆண்டுகளின் துவக்கத்தில் வளர்முக நாடுகள், வெளி நாடுகளுக்குக் கடத்திச் சென்றதான அன்னியர் லாபங்கள் மற்றும் அசமத்துவமான செலவாணிப் பரிமாற்றம் காரணமாக, ஆண்டுக்கு 2000 கோடி டாலர்கள் அல்லது அவற்றின் தேசியப் பொருள் உற்பத்தியில் ஆறில் ஒரு பங்கை இழந்துள்ளன.இந்த இழப்புக்கள் மேலும் அதிகரித்து வருகின்றன. ஏகாதிபத்தியப் பாகுபாடுகள் மற்றும் இதரக் காரணிகளின் விளைவாக உலகின் வெளிநாட்டு வாணிகத்தில் ஆசிய, ஆப்பிரிக்க,லத்தீன் அமெரிக்க நாடுகளின் பங்கு கேவலம் 20 சதவிகிதம் மட்டுமே. இது 1950-ல் 31.7 சதவிகிதமாக இருந்தது. வளர்ச்சி குன்றிய நாடுகளும் அவற்றின் பண்டங்களின் விலைகள் செயற்கையாகக் குறைக்கப்பட்டதால் மிகப் பெரிய நஷ்டங்களால் பாதிக்கப்பட்டன. எடுத்துக் காட்டாக பிரெசில் 1957-1969-ல் 260 கோடி டாலர்களையும் வெனிசுவாலா கடந்த பத்தாண்டுகளில் 500கோடி டாலரையும் இழந்தன.

வளர்முக நாடுகளைச்சுரண்டுவதற்கு ஏகபோக மூலதனம் பல்வேறு சர்வதேசிய அமைப்புக்களை விரிவாகப் பயன்படுத்துகிறது. எடுத்துக் காட்டாக சர்வதேசிய நிதி நிறுவனத்தின் நிதி யாருடைய நலன்களுக்காகச் சேவை செய்கிறது என்பதைப் பரிசீலித்தால், 1970-ல் அதன் உறுப்பினர்களுக்கு தமது சர்வதேசிய பண விவகாரங்களை நேர்செய்ய ஒதுக்கப்பட்ட நிலையில், அமெரிக்கா, 90 கோடி டாலரும் எல்லா ஆப்பிரிக்க நாடுகளும் சேர்ந்து 6 கோடி டாலரும் பெற்றன என்ற மெய் விவரம் தெரிய வரும்.

லெனின் முன்னறிந்து கூறியதுபோல, முதலாளித்துவத்தின் பொது நெருக்கடியின் மூன்ருவது கட்டத்தில், ஏகாதிபத்தியத்தின் ''தேசங்கள் மீது படிப்படியாக அதிக

ரித்து வரும் ஒடுக்கு முறையை''* தொடுப்பதில் பல புதிய அம்சங்கள் தோன்றியுள்ளன. இவற்றுள் ஒன்று, வளர்முக நாடுகளின் மக்களினங்களையும் மீதமுள்ள ஒரு சில காலனிகளையும் சுரண்டுவதன் கூடவே, ஏகாதிபத்தியமானது, அன்னிய மூலதனத்தைப் பொழிவது மூலம் வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளையுங்கூட நெருக்கி அழுத்திவருகிறது. 1973 இறுதிக்குள் அமெரிக்காவின் நேரடி தனியார் முதலீடுகள் கனடாவில் 2805 கோடி டாலரும் அதே போதில் எல்லா லத்தீன் அமெரிக்க நாடுகளிலுமாக 1840 கோடி டாலராகவும் இருந்தன.

வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளிலும் வளர்முக நாடுகளிலுமான அன்னிய முதலீடுகளின் தொடர்பாடு பெருமளவுக்கு கணிசமாக மாற்றமடையத் தொடங்கிவிட்டது. 1950-1967ல் வெளி நாடுகளில் போடப்பட்ட மொத்த முதலீடுகளுடன் வளர்ச்சியடைந்த நாடுகளிலான நேரடி அமெரிக்க முதலீடுகள் 48.3 சதவிகிதத்திலிருந்து 67.2 சதவிகிதமாக அதிகரித்தன, அதே போதில் வளர்முக நாடுகளிலான அமெரிக்க முதலீடுகள் 51.7 சதவிகிதத்திலிருந்து 32.8 சதவிகிதமாகக் குறைந்தன. உயர் லாப விகிதம் காரணமாக வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளில் முதலீடுகளைத் திருப்பி விடுவது எனும் போக்கு இதர ஏகாதிபத்திய வல்லரசுகளிடமும் காணப்பட்டது. எடுத்துக்காட்டாக மேற்கு ஜெர்மன் ஏகபோகங்கள் தமது முதலீடுகளில் 50 சதவிகிதத்தை ஐரோப்பிய நாடுகளுக்கும் 30 சதவிகிதத்தை மட்டுமே வளர்முக நாடுகளுக்கும் திருப்பி விட்டன.

ஏகபோக முதலாளித்துவத்தின் இன்றைய கட்டத்தில் முன்மாதிரியான பரஸ்பர ஊடுருவல், அதன் சொந்த நாட்டின் தேசிய நலன்கள் விஷயத்தில்கூட அது அறவே அசட்டையாக இருக்கிறது என்பதற்குத் தெளிவான சான்றுகும். பிரிட்டனின் செலுத்தல் சமநிலைஇடர்ப்பாடுகள்

* வி. இ. லெனின், ''நூல் திரட்டு'' தொகுதி 21, பக். 409.

நன்கு தெரிந்தவையே. இருப்பினும் அந்த நாட்டிலிருந்து ஐ. பொ. கூட்டு நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டதான மூலதனம் 1973-ல் மட்டுமே 51 கோடி 90 லட்சம் டாலர் ஆகும். அந்த நாடுகளின் ஏகபோகங்கள் பிரிட்டிஷ் பொருளாதாரத்தின் உள்ளே 10 கோடி டாலர்களைப் புகுத்தின என்ற மெய் நடப்பு காரியங்களை மேலும் மோசமாக்கியது. இப்போது இந்த நாடு மேலும் மேலும் அமெரிக்க ஏகாதிபத்திய ஆணையினைச் சார்ந்து கிடக்கிறது.

சமீப காலமாக இந்த நாடுகடந்ததான (அல்லது பன்னாட்டு) ஏகபோகங்கள் எனப்படுபவை எண்ணிக்கையும் பொருளாதார வன்மையும் தொடர்ந்து அதிகரித்து வருகின்றன. இவை முதலாளித்துவ உலகிலான தேசிய உறவுகளின் மீதும் சமூக தேசிய விடுதலைக்காக உழைக்கும் மக்கள் திரளினர் நடத்திவரும் போராட்டத்தின் மீதும் கண்கூடான செல்வாக்குச் செலுத்தத் தொடங்கிவிட்டன. நாலாயிரம் அமெரிக்கக் கம்பெனிகளுக்கு மட்டுமே வெளிநாடுகளில் 17,000 கிளைகள் இருக்கின்றன. இந்த நாடுகடந்த ஏகபோகங்கள் முதலாளித்துவ உலகின் மொத்த தேசிய உற்பத்தியில் சுமார் 15 சத விகிதம் மீது ஆதிக்கம் செலுத்துகின்றனர். அவற்றின் தொகை உற்பத்தி முதலாளித்துவ உலகின் வருடாந்த சராசரியை விடவும் கிட்டத்தட்ட நான்கு மடங்கு உயர்ந்திருக்கிறது. அவற்றின் பெருகிவரும் செல்வாக்கு முதலாளித்துவ நாடுகளின் தொழிலாளர் மற்றும் இதர உழைக்கும் மக்களின் சர்வதேச ஒருமைப்பாட்டை வலுப்படுத்துவது பற்றிய பிரச்சினைக்கு ஒரு புதிய கோணத்தைத் தந்துள்ளது.

இந்தப் பன்னாட்டு ஏகபோகங்களை எதிர்த்த மக்கள் திரளினரின் போராட்டத்துக்கு கம்யூனிஸ்டு தொழிலாலர் கட்சிகள் தலைமை தாங்குகின்றன. அவை இந்த ஏகபோகங்களின் ஜனவிரோதத் தன்மையையும் அவற்றின் செயல்பாட்டின் சமுதாய விளைவுகளையும் எதிர்த்து அம்பலப்படுத்துகின்றன. ஏகபோக மூலதனம் எவ்வாறு தொழிலாளி வர்க்க இயக்கத்துக்கு எதிராகத் தனது சக்திகளை ஒற்றுமைப்

படுத்துகின்றது, அரசு அமைப்புகளை எப்படி கீழடக்கு கிறது, மக்களினங்களின் தேசிய சுதந்திரத்தையும் சர்வ உரிமையையும் எப்படிப் புறக்கணிக்கிறது—இத்தியாதிகளை மார்க்சிய—லெனினியவாதிகள் உழைக்கும் மக்களுக்கு எடுத்துக் காட்டுகிறார்கள்.

தொழிலாளி வர்க்கத்தின் நலன்களைக் கட்டிக் காப்பதும் தேவையான முடிவுகளை எடுத்து பாட்டாளி வர்க்க சர்வ தேசியத்தின் சித்தாந்த அடித்தளங்களை கெட்டிப் படுத்துவதும்,பல்வேறு நாடுகளின் தொழிலாளி வர்க்கத்தின் புரட்சிகரமான கூட்டுப் போராட்டத்தை வலுப்படுத்து வதும் எல்லாம் கம்யூனிஸ்டுகளின் நோக்கமாகும்.

ஏகபோக முதலாளித்துவம் எனும் புதிய புலப்பாடு பற்றிய கருத்தாழமிக்க பரிசீலனை 1969-ல் நடந்த கம்யூனிஸ்டு, தொழிலாளர் கட்சிகளின் சர்வதேசக் கூட்டத்தில் நடத்தப்பட்டது. பயன்மிக்க விவரங்கள் கம்யூனிஸ்டு பத்திரிகைகளில் குறிப்பாகவும் ஒர்ல்ட் மார்க்சிஸ்ட் ரெவ்யூ, பொலிடிக்ஸ் அஃபயர்ஸ் லேபர் மந்த்லி ஆகிய சஞ்சிகைகளிலும் இமானிதே யூனிட்டா மற்றும் இதர செய்தித் தாள்களிலும் வெளியிடப்பட்டுள்ளன. பன்னாட்டு ஏகபோகங்களை எதிர்த்த மேற்கு ஐரோப்பிய தொழிலாளர் போராட்டம் பற்றி 1972 ஜனவரியில் நடைபெற்றதான 15 கம்யூனிஸ்டு, தொழிலாளர் கட்சிகளின் மாநாடு விவாதித்தது. இந்த ஏகபோகங்கள் தொழிலாளர் மற்றும் எல்லா உழைக்கும் மக்களினதும் சமூக விமோசனப் போராட்டத்துக்கு மட்டும் ஆபத்தானவை அல்ல, அதோடு அவை மக்கள் திரளினரின் தேசிய சர்வவுரிமைக்கும் ஜனநாயக சாதனைகளுக்கும் குழிபறிப்பனவுமாகும் என்று இந்த மாநாட்டின் அறிக்கை குறிப்பிட்டது. அவற்றை எதிர்த்த போராட்டத்தை ஒருமுகப்படுத்துவதற்கான நடவடிக் கைகள் வகுக்கப்பட்டன.

பன்னாட்டு ஏகபோகங்களின் தாக்குதலை எதிர்த்துத் தடுக்க எல்லா நாடுகளின் தொழிலாளி வர்க்கத்தின் ஒருமைப்பாடும் அவசியம் என்பதை 1973 ஏப்ரலில்

சாண்டியாகோ நகரில் கூடிய தொழிற் சங்கங்களின் ஏகாதிபத்திய-எதிர்ப்பு உலக மாநாடு விவாதித்தது.

இது எல்லா நாடுகளின்—குறிப்பாக மேற்கு ஐரோப்பாவின் தொழிலாளர்களின் வர்க்க ஒருமைப்பாட்டை வலுப்படுத்த உதவியது. அங்கு பல சர்வதேசியப் போராட்டங்கள் நடந்தன, பல்வேறு நாடுகளின் நிறுவனங்களுடன் சேர்ந்து ஏகபோகங்களை எதிர்த்து நடத்திய வர்க்கப் போராட்டத்தின் கணிசமான அனுபவம் திரட்டப்பெற்றது. பிரான்ஸ், ஜெ.ச.கு., பெல்ஜியம், ஹாலந்து, சுவிட்சர்லாந்து மற்றும் இதர நாடுகளின் உலோகத் தொழிலாளர், துறைமுகத் தொழிலாளர், மோட்டார் கார் மற்றும் இரசாயனத் தொழிலாளர் இந்தப் பன்னாட்டு ஏகபோகங்களை எதிர்த்த போராட்டத்தில் முன்னணியில் நிற்கிறார்கள்.

ஏகபோக மூலதனத்தின் பெருகிவரும் ஒன்று குவிப்பின் காரணமாக ஏற்படும் அபாயம் ஒருபுறமிருக்க, மக்களினங்களின் தேசிய நலன்கள் ஏகாதிபத்தியத்தின் அதிகரித்து வரும் ஆக்கிரமிப்புத் தன்மையாலும் கடுமையான மேலும் அதிகமான சேதத்துக்கு இலக்காகின்றன.

இதனால் போர்கள் அவற்றுக்கான தயாரிப்புகளுக்காகப் பிரம்மாண்டமான செலவுகள் சுமத்தப்படுகின்றன, இவற்றை பிரதானமாயும் பொது மக்களே செலுத்த வேண்டியுள்ளது. 1970 நவம்பரில் நியூயார்க் டைம்ஸ் பத்திரிகை வெளியிட்ட செய்தியில் 1945-க்குப் பிறகு அமெரிக்கா ராணுவ நோக்க வேலைகளுக்காக 1,10,000கோடி டாலர் செலவழித்திருப்பதாக கூறப்பட்டது. ஐ. நா. தரும் விவரப்படி 1961-க்கும் 1970-க்கும் இடையே உலகில் ராணுவ நோக்கத் திட்டங்களுக்காக 1,87,000 கோடிடாலர் செலவழிக்கப்பட்டது; இது சுகாதாரத்துக்காகச் செலவிடப்படும் தொகையைவிடவும் 150 சதவிகிதமும், ஏகாதிபத்திய காலனியாதிக்கத்தின் இடிபாடுகளிலிருந்து எழுந்துள்ள வளர்முக நாடுகளுக்கு வழங்கும் உதவியைவிட 30 மடங்கு அதிகமானதுமாகும். ஆக்கிரமிப்பு (NATO) நாட்டோ

கூட்டணி உறுப்பினர்களின் ராணுவச் செலவு மிகவும் அதிகம். 1975-ல் இது மொத்தம் 15,000 கோடி டாலராக இருந்தது.

பல நாடுகளின் தேசிய நலன்களும் பாழ்படுத்தப் பட்டன, காரணம் அவற்றின் பிற்போக்கு வட்டங்களின் நாடுபிடிப் பேராசை, அவற்றின் சொந்த ஏகபோகங்களின் கொள்கையில் இருந்து மட்டுமின்றி, அன்னிய ஏகாதி பத்தியங்களின் செல்வாக்கில் இருந்தும் மூளத்ததாகும். எடுத்துக்காட்டாக ஜெ. ச. குடியரசில் பழிவெறியையும் ராணுவ வெறியையும் தூண்டி வளர்த்ததில் அமெரிக்க ஏகபோகங்களுக்குப் பங்கு உண்டு என்பது எல்லோரும் நன்கறிந்ததே. அந்த நாட்டில் பழிவெறி மற்றும் ஆக்கிர மிப்பு சக்திகளைப் புதுப்பித்து, அதை கம்யூனிஸ்டு-எதிர்ப் பின் கோட்டையாக்க அமெரிக்க ஏகபோகங்கள் ஜெ ச. கு. பொருளாதாரத்தில் பெரும் நிதிகளைக் கொட்டியிறைத்தன. கடந்த 20 ஆண்டுகளில் அவற்றின் முதலீடுகள் 17 மடங்கு பெருகியுள்ளன. ஜப்பான் விஷயத்திலும் நிலைமை இதுவே இங்கு ராணுவவெறியும் பழிவெறியும் அமெரிக்க ஏகபோகத் தால் மேலும் பகிரங்கமாக ஊக்குவிக்கப்படுகின்றன

இதன் தொடர்பாக, ''தேசங்களை எதிர்த்த வன்முறை யாக'' லெனினால் சித்திரிக்கப்படும் ஏகாதிபத்தியப் போர் மாத்திரமின்றி அதற்கான தயாரிப்புங்கூட மக்களுக்கு மிகப்பெரும் செலவுச் சுமையாக இருக்கும், விவகாரங்களின் இயல்பான நடைமுறையைச் சீர்குலைக்கும் தேசிய உறவு களில் எதிர் மறையான வீச்சைத் தரும்.

ஏகாதிபத்தியத்தின் ஆயுதப் போர்களும், தொடர்ச்சி யான தோல்விகளும் உலக முதலாளித்துவ அமைப்பின் நிலைமைகள் பலவீனப்பட்டு வருகின்றன என்பதற்குச் சான்றாகும். முதலாளித்துவத்தின் பொது நெருக்கடி எப்போதும் கடுமையிலும் கடுமையாகி வருகிறது. இதைத் தொழிலாளர்களின் வர்க்கப் போராட்டங்களின் உக்கிரமும், ஏகாதிபத்திய வல்லரசுகளிடையிலான மிகவும் தீவிரமான

முரண்பாடுகளும் இந்த வல்லரசுகளுக்கும் ஒடுக்கப்படும் மக்களுக்கும் இடையிலான தீவிரமான முரண்பாடுகளும் அதோடு கூட பொது ஜனநாயக இயக்கத்தின் அளவும் ஊர்ஜிதம் செய்கின்றன. ஏகபோகத்தின் சர்வ வல்லமைக்கு எதிர்ப்பு அதிகரித்து வருகிறது. பல ஆண்டுகளாக முதலாளித்துவ உலகத்தால் நாணய மற்றும் நிதிக் குழப்பத்தைத் தீர்க்க முடியவில்லை.

உலக முதலாளித்துவத்தின் பலவீன நிலைகளைப் பற்றிக் கூறும்போது அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் பாத்திரத்தின் மாற்றுக் குறைந்திருப்பதும் இன்னொரு எடுப்பான உண்மையாகும்.

சர்வதேசத் தொழிலாளி வர்க்கம், உலகம் முழுதிலுமான உழைக்கும் மக்கள், குறிப்பாயும் சோஷலிஸ்டு நாடுகளின் குடும்பத்தின் மக்களினங்கள் போருக்குப் பிந்திய காலகட்டம் முழுவதிலும் பிற்போக்கையும் போரையும் எதிர்த்த தமது போராட்டத்தை மட்டுப்படுத்தவில்லை. தேசங்களின் சுயேச்சையான அபிவிருத்திக்கும் சமாதான உறவுகளுக்குமான போராட்டத்தை நிறுத்தவில்லை. இந்தப் போராட்டத்திலான அவர்களது வெற்றி, சர்வதேசப் பதற்றத் தணிவுக்கான முக்கியமான திருப்பம் ஏற்பட்டுள்ள இப்போது குறிப்பாயும் நிச்சயமானது என்பது வெளிப்படை.

ஏகாதிபத்தியம் இன்னும் தன் இயல்பால் பிற்போக்கானது, ஆக்கிரமிப்புத் தன்மையுடையது என்பது உறுதி. கொள்கையிலான மாற்றங்கள் அதன் மீது வலுவந்தமாக போடப்பட்டவை, மற்றும் உலக அரங்கில் சக்திகளின் தொடர்பாடு தாட்சண்யமற்ற வகையில் சோஷலிசத்துக்கு சாதகமாக இருப்பதன் விளைவால் ஏற்பட்டவை. ஏகபோக மூலதனம் இனிமேல் தங்குதடையின்றித் தனது கொள்கையை நடத்திச் செல்ல முடியாது. காரணம் அதன் ஆக்கிரமிப்பு சூழ்ச்சிகள் எப்போதுமே தண்டனைக்கு உள்ளாகும். அதன் ஜனவிரோத சாரம் மேலும் மேலும் தெளிவாகத் தெரிய வரும்.

சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சியின் 24-வது காங்கிரசின் சமாதான வேலைத் திட்டம் உலக நிகழ்வுகளின் இன்றைய மாறுதல்களுக்கு மாபெரும் பங்குப்பணி ஆற்றியுள்ளது. மேலும் எல்லோராலும் பாராட்டப்பட்டுள்ளது. ''சர்வதேச விவகாரங்களில் நமது சோஷலிஸ்டு புரட்சிகர இயக்கத்துக்கான பிரதான ஆதாரக் கால்களை லெனின் நாட்டினார். நாம் அவரது கட்டளைகளையும் அறிவுரைகளையும் என்றும் விசுவாசத்துடன் கடைப்பிடித்து நடப்போம்'' என்று 1973 ஏப்ரலில் நடைபெற்ற கட்சியின் மத்தியக் கமிட்டிக் கூட்டத்தில் லி. இ. பிரெஷ்நேவ் கூறினார். இக்கூட்டம் கட்சியின் சர்வதேசிய செயல்பாடுகள் குறித்து விமர்சனம் செய்தது.

சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சி மற்றும் சோவியத் அரசின் வர்க்கத் திசையமைவிலான வெளிநாட்டுக் கொள்கை, பாட்டாளி வர்க்க சர்வதேசியத்தை அடிப்படையாக்கியது. அதன் குறிக்கோள் சோவியத் ஒன்றியத்தில் கம்யூனிசத்தை நிர்மாணிப்பதற்கும், உலக சோஷலிசத்தின் நிலவரங்களுக்கும், சர்வதேசத் தொழிலாளி வர்க்கத்துக்கும் தேச விடுதலை இயக்கத்துக்கும் சாதகமான சர்வதேசச் சூழலை உத்தரவாதம் செய்வதேயாகும்.

சோவியத் கம்யூனிஸ்டு கட்சியின் வெளிநாட்டுக் கொள்கையும், அமெரிக்கா, பிரான்ஸ் மற்றும் ஜெ.ச. குடியரசுக்கான லி இ பிரெஷ்நேவின் விஜயங்களும் ஓர் அணு ஆயுதப் போர் மூளாது தவிர்ப்பதை சாத்தியமாக்கின, பரஸ்பர நம்பிக்கையை மீட்டமைத்து வலுப்படுத்தின, பரஸ்பர அனுகூலமான ஒத்துழைப்பை விரிவாக்க உதவின. 1975 ஆகஸ்டில் ஹெல்சிங்கி மாநாட்டில் நிறைவேற்றப்பட்டதான ஐரோப்பாவில் பந்தோபஸ்து மற்றும் ஒத்துழைப்பு குறித்த இறுதிச் சட்டம் அரசுகளிடையான உறவுகளை ஆளுமை செய்யும் சில கோட்பாடுகளை உருவாக்கியது. இவை சமாதான சகவாழ்வின் தேவைக்கு இசைவாக இருந்தன, சமாதானத்தைப் பேணிக் காக்கவும் வலுப்படுத்தவுமான சாதகமான நிலைமைகளைப் படைத்தளித்தன.

மெய்நடப்புகள் சமாதான வேலைத்திட்டம் இந்தக் காலத்துக்கு உகந்தது, எதார்த்தமானது என்பதை உறுதி செய்துள்ளன. "உலக சமாதானம் இன்னமும் எவ்வகையிலும் உத்தரவாதம் செய்யப்படவில்லை என்ற போதிலும், சர்வதேசச் சூழலில் ஏற்பட்டுள்ள மேம்பாடு நிலையான சமாதானம் என்பது வெறும் நல்ல எண்ணம் மாத்திரமல்ல, மாறாக முற்றிலும் எதார்த்தமான குறிக்கோளே என்று கொள்வதற்கான உறுதியான சான்றாகும் என்று நிச்சயமாயும் பிரகடனம் செய்யலாம். இதை சாதனையாக்குவதற்காக நாம் தொடர்ந்து சோர்வின்றிபாடுபட வேண்டும், பாடுபட முடியும்"*என்று சோ.க.க.ம க. பொதுச் செயலர் லி. இ. பிரெஷ்நேவ் 25 ஆவது காங்கிரசுக்கு சமர்ப்பித்த தான சோ.க க. மத்தியக் கமிட்டியின் அறிக்கையில் கூறினார். பெரிதும் சிறிதுமான எல்லா தேசங்களும் இதனால் நன்மை அடையும். ஆனால் பதற்றத் தணிவின் தாக்கம் சிறிய தேசங்கள் தேசிய இனங்கள் விஷயத்தில் நிச்சயமாயும் மகத்தானது. காரணம் அவற்றின் சமாதான வழியிலான கட்டற்ற வளர்ச்சிக்கும், முக்கியமான சர்வதேசியப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதிலான அவற்றின் செயலூக்கமான பங்கேற்புக்குமான புதிய வாய்ப்புக்கள் தோன்றியுள்ளன.

சர்வதேசத் தொழிலாளி வர்க்கத்தை ஒன்று திரட்டுவதும் எல்லா நாடுகளின் உழைக்கும் மக்கள் ஏற்கெனவே பெற்ற சாதகங்களை வலுப்படுத்துவதும் ஆக்க பூர்வமான மாறுதல்களை திருப்பி மறிக்கவியலாதபடி செய்வதும் தமது கடமை என்று சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சியும் உலகின் எல்லா மார்க்சிய-லெனினிய கட்சிகளும் கருதுகின்றன. மார்க்சிய லெனினியம் பாட்டாளி வர்க்க சர்வதேசியத்தின் அடிப்படையில் கம்யூனிஸ்டு, தொழிலாளர் கட்சிகளின் ஒற்றுமை அதிகரித்து வருவதும், சோஷலிஸ்டு கூட்டுக்

---

* சோ க க. மத்தியக் கமிட்டியின் அறிக்கையும் உள்நாட்டு வெளிநாட்டுக் கொள்கையில் கட்சியின் உடனடிப் பணிகளும், பக். 21.

குடும்பத்தின் கூட்டிசைவு, உலக சோஷலிசத்தின் அதிகரித்து வரும் வன்மையும்தான் பதற்றத் தணிவு நிகழ்ச்சிப் போக்குத் தொடர்ந்து ஆக்கமுறும் என்பதற்கான உத்தர வாதமாகும். இதற்கிடையே மனித குல வளர்ச்சியின் மீது உலக கம்யூனிஸ்டு இயக்கத்தின் செல்வாக்கும் சோவியத் ஒன்றியம் மற்றும் சோஷலிஸ்டு கூட்டுக் குடும்பத்தின் சோதர நாடுகளின் தாக்கமும் மேலும் திண்மை உறுகிறது. உழைக்கும் மக்கள் திரளினர் ஆதரவு மேலும் விரிவடைந்து வருகிறது.

மார்க்சிய-லெனினியக் கட்சிகள் சோ.க.க. அயல்துறைக் கொள்கைக்கு ஆதரவாக அணி வகுத்து நிற்கின்றன. சோஷலிஸ்டு நாடுகளின் கம்யூனிஸ்டு தொழிலாளர் கட்சி களின் தலைவர்கள் நடத்திய கிரைமியன் மாநாட்டின் அறிக்கையை எடுத்துப் பார்ப்போம். இதில் பங்கேற்ற எல்லோரும் சோவியத் கம்யூனிஸ்டு கட்சியின் வெளிநாட்டுக் கொள்கையையும் சமாதான வேலைத் திட்டத்தின் கொள்கை வழியிலான சர்வதேச அரங்கில் ஏற்பட்ட முக்கிய நிகழ்வு களையும், பிரதான முதலாளித்துவ அரசுகளுடனான பேச்சு வார்த்தைகளையும் இதன் விளைவாக ஏற்பட்ட ஒப்பந்தங்கள் உடன்படிக்கைகளையும் பாராட்டி வரவேற்றன.

முதலாளித்துவ நாடுகள் வளர்முக நாடுகளின் மார்க்சிய-லெனினியக் கட்சிகளின் தலைமையும் சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சியின் வெளிநாட்டுக் கொள்கைக்கு முழு ஆதரவு தெரி வித்துள்ளது. எடுத்துக் காட்டாக அமெரிக்க கம்யூனிஸ்டு கட்சியின் தேசிய தலைவர் ஹென்றி வின்ஸ்டன் கூறியதாவது: ''சமாதான சகவாழ்வு பற்றியதான லெனினிய ஆதார நெறி ஏகாதிபத்திய-எதிர்ப்புச் சக்திகளுக்கு தாக்குவ தற்கான ஓர் ஆயுதத்தை வழங்குகிறது.''* லெபனான் கம்யூனிஸ்டு கட்சியின் பொதுச் செயலரான நிக்கலஸ் சவோயி வன்முறையைப் பயன்படுத்தல் மற்றும் வன்முறை அச்சுறுத்தலில் இருந்து விலகி நிற்க

* பிராவ்தா, ஜூலை 21, 1973.

சோவியத்-அமெரிக்க உடன்பாடு ஏற்பட்டதைப் புகழ்ந்து வரவேற்றார். அவர் எழுதியாதாவது: ''உடன்பாட்டின் இந்த அம்சம் அரபு மக்களுக்குக் கிட்டிய நேரடி ஆதரவு என்றே எல்லா ஏகாதிபத்திய-எதிர்ப்பு தேசிய சக்திகளும் கருதுகின்றன. காரணம், முன் நாட்களில் நிகழ்ந்தது போன்று அரபு தேச விடுதலை இயக்கத்துக்கு எதிராக ஏகாதி பத்தியத் தரைப்படைகள்,கடற்படைகள் தலையிடுவதற்கான சாத்தியப்பாட்டை இது தடைசெய்கிறது.''*

பெருவியன் கம்யூனிஸ்டு கட்சியின் மத்தியக் கமிட்டியின் பிளீனம் கூட்டம் பெரு நாட்டில் புரட்சிகர மாற்றங்களுக்கு உறுதுணையாக இருக்கும் தீர்மானகரமான காரணி உலக சோஷலிஸ்டு அமைப்பே என்று சாற்றி சோவியத் ஒன்றியத் தின் வெளிநாட்டுக் கொள்கையைப் பாராட்டியது.**

விஞ்ஞான தொழில் நுட்பப் புரட்சியானது தேசங்கள் தேசிய உறவுகளின் அபிவிருத்தி மீது பல்வேறு வழிகளில் செல்வாக்குச் செலுத்தி வருகிறது. முதலாவதாக, அதன் சமுதாய விளைவுகள் பொருளாதார அரசியல் கலாசார சர்வதேசிய மயமாக்கல் நோக்குடன் கலந்திணைகிறது, மற்றும் குறிப்பாக பொருளாதாரத் துறையில் வன்மையான இணைப்பாக்க தொடர் நிகழ்வுகள் நடப்பதைக் கட்டாயப் படுத்துகிறது. இரண்டாவதாக, வர்க்கங்கள் மற்றும் சமுதாய அடுக்குகளின் ''தேசிய ஒட்டிணைப்பை'' பெரும் பாலும் குறைப்பது மூலம் தேசங்களின் சமூக கட்டமைப் பின் மீது சந்தேகமன்னியில் தீவிரமான செல்வாக்குச் செலுத்துகிறது. மூன்றாவதாக, இது ஆளுமையின் தேசிய இயல்புகளை படிப்படியாக அரித்து அவற்றின் முக்கியத்து வத்தைக் குறைத்து ஒவ்வொரு தனி நபரின் வளர்ச்சி மீதும் செல்வாக்குச் செலுத்துகிறது.

இணைப்பாக்க இயக்கங்களின் பாத்திரம் மிகவும் மகத் தானது. இது சோஷலிஸ்டு மற்றும் முதலாளித்துவ சமூக

---

* பிராவ்தா, ஜுலை 24, 1973.

** பிராவ்தா, ஆகஸ்டு 3, 1973.

அமைப்புகள் இரண்டுக்கும் பொருந்தும். தேசங்கள் தேசிய இனங்களின் அபிவிருத்தி மீது மக்களினங்களின் பொருளாதார அரசியல் மாற்றங்கள் வகிக்கும் செல்வாக்கும் மகத்தானது. இருப்பினும் விஞ்ஞான தொழில்நுட்பப் புரட்சியின் வளர்ச்சியால் ஊக்குவிக்கப்பட்டு, இணைப்பாக்கம் வரை இட்டுச் செல்கிற பொருளாதார அரசியல் கலாசார சர்வதேசியமயமாக்கல் சோஷலிசத்தின் கீழும் முதலாளித்துவத்தின் கீழும் முற்றிலும் வெவ்வேறு வழிகளில் நடைபெறுகிறது. சர்வதேசியமயமாக்கல் நோக்கிய போக்கு மற்றும் அதன் உடன் விளைவான மத்தியத்துவம் மற்றும் ஒருமுகச் செறிவு பற்றிக் குறிப்பிட்ட லெனின், ஏகாதிபத்தியச் சுற்றுச் சூழலில் இந்த இயக்கங்கள் முரண்பாடுகள், மோதல்கள் மற்றும் எழுச்சிகள் இன்றி நிகழா எனவும், இது பொருளாதார அரசியல் துறைகளில் மட்டுமின்றி தேசியத் துறையிலும் ஏற்படும் எனவும் சுட்டிக் காட்டினர்.* இது விஞ்ஞான தொழில் நுட்பப் புரட்சியிலிருந்து நேரடி ஏற்படும் மத்தியத்துவப்படுத்தல் மற்றும் ஒருமுகச் செறிவின் இன்றைய கட்டத்துக்கு இன்னும் முற்றிலும் தகுதியுடையதாகும். சோஷலிஸ்டு சமூக அமைப்பைப் பொருத்த வரையில் லெனின் முன்னறிந்து கூறியபடி, உலக சோஷலிஸ்டு அமைப்பின் நிலைமைகளில் சர்வதேசியமயமாக்கலை நோக்கிய போக்கு தேசங்களின் நட்புறவுகள் மற்றும் சங்கமிப்புக்கு முக்கியமான ஆதார சக்திகளில் ஒன்றாகும்.

சோஷலிசம் தேசங்களின் வாழ்வில் சகல அம்சங்களையும் சர்வ தேசிய மயமாக்குகிறது என்று லெனின் கூறினர். இது உலக சோஷலிஸ்டு அமைப்பின் மக்களினங்களின் இன்றைய ஒத்துழைப்பு மற்றும் பரஸ்பர உதவியால் மெய்ப்படுத்தப்பட்டுள்ளது. வேறு விஷயங்களுடன் கூடவே சோஷலிசமானது சுதந்திர மக்களினங்களை பொருளாதார முறையில் சர்வதேசியமயமாக்கி உலக சோஷலிஸ்டு பொரு

---

* காண்க. வி. இ. லெனின், ''நூல் திரட்டு'', தொகுதி 22, பக். 107.

ளாதாரத்துக்குப் பாதை சமைக்கும் வன்மை மிகுந்த வேகமுடுக்கியாகத் தன்னை நிலை நாட்டிக் கொள்கிறது.

பரஸ்பர பொருளாதார உதவிக் கவுன்சில் கட்டமைப்பில் இப்போது துவங்கப்பட்டுள்ள பொருளாதார இணைப்பாக்கம் சோஷலிஸ்டு நாடுகளின் மக்களினங்களின் இயற்கையான வளர்ச்சி நடைமுறையை வேகப்படுத்துகிறது, அவற்றின் உறவுகளின் நட்புறவுத் தன்மையை உயர்த்துகிறது, அதே சமயம் ஒவ்வொரு தேசத்தின் சுதந்திரமான அபிவிருத்திக்கும் உதவுகிறது. முதலாளித்துவச் சுற்றுச் சூழலிலான இணைப்பாக்க இயக்கங்கள் முற்றிலும் வேறு பாதையைப் பின்பற்றுகின்றன. எடுத்துக்காட்டாக ஐரோப்பிய பொருளாதாரக் கூட்டமைப்பு துவக்க முதலே ஐரோப்பாவை முதலாளித்துவ மற்றும் சோஷலிஸ்டு பகுதிகளாகத் தீவிரமாகப் பிளவுபடுத்தும் ஒரு சாதனமாக அமெரிக்க ஏகாதிபத்தியத்துக்கும் ஐரோப்பிய ஏகபோகங்களுக்கும் உதவியது என்பதும், ஆக்கிரமிப்பு நேட்டோ கூட்டணிக்கு பொருளாதார அடித்தளம் இட்டது என்பதும் தெட்டத் தெளிவு. லெனினது சொற்களில் கூறினால் இது ''ஐரோப்பாவில் சோஷலிசத்தை ஒன்று சேர்ந்து ஒடுக்கும் நோக்கத்திற்கான'' ஒரு தற்காலிக உடன்படிக்கை மட்டுமேயாகும்.*

ஐரோப்பிய பொருளாதாரக் கூட்டமைப்பு உடன்படிக்கை ஏகபோகங்கள் இடையே சந்தைகளின்சர்வதேசியப் பிரிவினையை உறுதிப்படுத்துவதற்கான முயற்சியே. அதோடு மூன்று போட்டி ஏகபோக கோஷ்டிகளான—அமெரிக்க பிரெஞ்சு மற்றும் மேற்கு ஜெர்மன் பிரிவுகள்—தமது பிரத்தியேக நோக்கங்களையே பின்பற்றின. பொருளாதார இணைப்பாக்க அடிப்படையில் ஐரோப்பாவை அரசியல் ரீதியாக ஒன்றிணைப்பதில் தலைமைப்பாத்திரத்தைப் பறித்துக் கொள்ள ஒவ்வொன்றும் திட்டமிட்டன. அவற்றின்

---

* வி. இ. லெனின், ''நூல் திரட்டு'', தொகுதி 21, பக். 341.

பிரசாரம் ஐரோப்பிய ஐக்கிய நாடுகள் திட்டத்தை தேசம் கடந்த ஓர் ஐரோப்பிய அரசாங்கத்தை இத்தியாதிகளைப் பிரபலப்படுத்தியது.

இருப்பினும், இந்த ஏகபோகங்கள் மேற்கு ஐரோப்பாவின் மெய்யான அதிபர்களான—அங்குள்ள மக்களினங்களை கவனத்தில் எடுத்துக் கொள்ளவில்லை. அவை இவற்றின் தேசிய நலன்களைப் புறக்கணித்தன, தேசிய உணர்வுகளை மீறிக் கேவலப்படுத்தின மற்றும் தேசிய, அரசுச் சர்வவுரிமையை வெறுத்தொதுக்கின.

ஏகபோகங்களின் சதித்திட்டங்களை எதிர்த்த மக்கள் திரளினரின் போராட்டத்துக்கு கம்யூனிஸ்டுக் கட்சிகள் தலைமை தாங்கின.

இந்த "இணைப்பாக்கப் பிரமைகளை" எதிர்த்த பூர்ஷுவா தலைவர்களில் ஒருவர் டி கால். காரணம் அவர் பிரெஞ்சு ஏகபோகங்களின் சுயேச்சையான நலன்களைப் பிரதிநிதித்துவப்படுத்தினர் என்பது மட்டுமல்ல, அதோடு தேசிய இயக்கங்களின் ஸ்திரத்தன்மையையும் அவர் புரிந்து கொண்டிருந்தார்.

தமது சொந்த நாடுகளில் தேசியவாதத்தையும் குறுதேசிய வெறியையும் தூண்டி விடவும், இதர தேசங்களின் சர்வவுரிமை குறித்து ஒரு செயலற்ற சூன்யவாத தோரணையினை நடவு செய்யவும் ஏகபோகக் கோஷ்டிகள் செய்த முயற்சிகள் வீணாயின.

ஐரோப்பிய இணைப்பாக்கமும் அமெரிக்காவும் எனும் மகுடத்திலான தமது நூலில் பூர்ஷுவா பொருளாதார நிபுணர் லாரன்ஸ் எல். கிராஸ் "பொருளாதார இணைப்பாக்கம் சுயாதீனத்துக்கான விருப்பத்தைக் குறைப்பதற்குப் பதில் ஒரு வேளை அதிகரித்துவிட்டது"* என்பதை ஒப்புக் கொள்கிறார். மேற்கு ஐரோப்பிய நிலைமையில் இருந்து

---

* எல் கிராஸ், **ஐரோப்பிய பொருளாதார இணைப்பாக்கமும் அமெரிக்காவும்**, வாஷிங்டன், *1968*, பக். *230*.

இரண்டு முடிவுகளுக்கு வரலாம். முதலாவது, ஐரோப்பிய நாடுகளின் அரசியல் கூட்டணி எந்த நாளும் வரலாம் என எதிர்பார்ப்பது மடமை. இரண்டாவது, ஐரோப்பாவின் முதலாளித்துவ மற்றும் சோஷலிஸ்டு நாடுகளின் மக்களினங்கள் இடையே சகலதுறை பிணைப்புக்கள் உருவாக்கப்படும் வரையில் மக்களினங்களின் அரசியல் ரீதியிலான செயல்படும் மெய்யான ஒரு கூட்டமைப்பைக் கட்டுவது என்பது சாத்தியமல்ல.

நவீன உலகில் தேசங்கள் தேசிய உறவுகளின் அபிவிருத்தி மீது இணைப்பாக்க நிகழ்ச்சிகளும் எல்லாத் துறைகளிலும் மக்களினங்களின் இடையே பொதுவாக அதிகரித்துவரும் பிணைப்புக்களும் பலமான செல்வாக்குச் செலுத்துகின்றன. இந்தப் பிணைப்புக்களின் பெருக்கம் வெவ்வேறு விகிதங்களில்,வெவ்வேறு வடிவங்களில்,பல்வேறு காரணிகளைச் சார்ந்து நிகழ்கிறது: சமூக-அரசியல் அமைப்பு வளர்ச்சி மட்டம், விஞ்ஞான தொழில் நுட்ப முன்னேற்றம், இத்தியாதி மக்களினங்கள் இடையிலான பிணைப்புக்கள் புறநிலைக் காரணிகளை மட்டுமன்றி அகநிலைக் காரணிகளையும் சார்ந்தனவாக இருக்கின்றன, உண்மையில் பின்னதன் பங்கு விடாமல் அதிகரித்து வருகிறது.

முதலாளித்துவ நிலைமைகளில் விரிவான பொருளாதார கலாசாரப் பிணைப்புகள் வாயிலாக தேசங்களை மேலும் நெருக்கமாக ஒற்றுமைப் படுத்தும் போக்கு தொடர்ந்து அதிகரித்து வரும் சமூக முரண்பாடுகளால் தடை செய்யப் படுகிறது. முதலாளித்துவ நிலைகளில் தேசிய வாழ்வை மார்க்சியக் கண்கொண்டு பார்க்க வேண்டுமானால் துல்லியமாயும் ''வர்க்கப் போராட்டத்தின் நோக்கு நிலையில் இருந்து பார்க்க வேண்டும்''* என்று லெனின்கூறுவது வழக்கம். 1969-ல் நடைபெற்ற கம்யூனிஸ்டு, தொழிலாளர் கட்சிகளின் சர்வதேசிய மாநாடு லத்தீன் அமெரிக்க நாடுகள்

* வி. இ. லெனின், ''நூல் திரட்டு'', தொகுதி 20, பக். 23.

பற்றிக் குறிப்பிடுகையில் ''மக்களினங்களின் தேசிய உணர்வுகள் மற்றும் பொருளாதார இடர்ப்பாடுகள் சில அரசாங்கங்களேக்கூட ஏகாதிபத்தியத்துக்கு எதிராக முக்கியமான நடவடிக்கைகள் எடுக்கும்படி கட்டாயப் படுத்தலாம்''* என்று குறிப்பிட்டது.

ஆயினும், பொதுவாகக் கூறுமிடத்து தேசிய உணர்வுகள் தேசிய சமுதாயக்கூட்டு இவை பல காரணிகளேச் சார்ந்து இருக்கும், அரசாங்கங்களின் கொள்கை ஏகபோகங் களின் நலன்கள் அன்னிய ஏகாதிபத்தியத்தின் செல்வாக்கு இத்தியாதி இதிலடங்கும். ஏகாதிபத்தியத்தின் கோட்டை யான அமெரிக்காவில் இது எவ்வாறு தேசங்களேயும் தேசிய உறவுகளேயும் பாதிப்புச் செய்கிறது என்பதை 1970 ஜூலை மாதத்திய (Newsweek) நியூஸ்வீக் பத்திரிகை இதழ் விவரிக்கிறது. ''70 ஆம் ஆண்டுகளின் உணர்வு'' எனுந் தலைப்பு மீது பேசும்படி கேட்டுக் கொள்ளப்பட்ட பிரபல விஞ்ஞானிகளில் கிட்டத்திட்ட எல்லோருமே தேசிய உணர்வுகளின் வீழ்ச்சியையும் தேசிய அபிவிருத்தி விஷயங் களில் சூன்னியவாதத்தின் எழுச்சியையும், தேசத்துக்குள்ளே பிளவுகளேயும் கறுப்பு நிற மக்களுக்குப் பகைமையான தேசிய உணர்வுகள் அதிகரிப்பதையும் சுட்டிக் காட்டி ஞர்கள். ஆர்தர் எம். ஷ்லிசிங்கர் தேசம் துண்டாடப் படுதல் பற்றிக் குறிப்பிட்டார். இந்த நிலைமை ''இன்னமும் முளேப்பருவத்தில் (?) இருக்கிறது என்று குறிப்பிட்ட அவர் பிணங்கிப் பிரிந்து சென்றதும் விலகி நின்றதுமான பிரிவுகள் நமது தேசியக் கூட்டமைவில் முழு உறுப்பினர் களாக சேர்த்துக் கொள்ளும் ஒரு தேசிய மறுசீரமைப்பு''** அவசர அவசியம் என்று கோரினர். யூஜின் டி ஜெனேவீஸ் அமெரிக்க சமுதாயத்தில் தேசிய உறவுகளில் காணப்படும் பகைமை இயல்பு பற்றிக் குறிப்பிட்டார், கருப்புநிற சமுதாயங்கள் மீது கருப்பு நிற மக்கள் உரிமை மேற்கொள்

* **கம்யூனிஸ்டு, தொழிலாளர் கட்சிகளின் சர்வதேசிய மாநாடு, மாஸ்கோ**, *1969*, பக். *17.*
** **நியூஸ்வீக்**, ஜூலை *6, 1970*, பக். *30.*

வதை வெள்ளை நிறத்தவர் எதிர்ப்பதன் விளைவாக அதிகார பூர்வம் விளம்பரப்படுத்தப்படும் இன இணைப்பாக்க வேலைத் திட்டங்கள் தோல்வியுற்று வருவதை கருப்பு நிற மக்கள் புரிந்து கொண்டு விட்டார்கள் என்றார்.

நியூஸ்வீக் (Newsweek) சஞ்சிகையில் இந்த விஷயத்தை விவாதித்த எல்லா விஞ்ஞானிகளையும் பொருத்தவரை அமெரிக்காவின் எதிர்காலம் நிச்சயமாயும் இருள் மண்டியதே. எடுத்துக்காட்டாக ஆண்ட்ரு ஹேக்கர் என்பவர் 20 ஆம் நூற்றுண்டின் எஞ்சியுள்ள பகுதியைக் குறிப்பிட்டு "நாம் பொது உணர்வை உடைய தனி ஒரு தேசமாக இனி மேலால் இருக்க முடியாது"* என்றார்.

அமெரிக்காவின் இரு நூருமாண்டு விழா தொடர்பாக கருத்துரைத்த பிரபல அமெரிக்க சமூகவியலாளர் டேனியல் பெல் அமெரிக்காவின் தனிமுக்கியத்துவம்எனும் கட்டுக்கதை அகற்றப்பட்டு விட்டது எனவும், அமெரிக்க சமுதாயம் மீது பொது நம்பிக்கை இல்லை எனவும் அது ஒரு குழம்பிய நிலையில் இருப்பதாயும் ஒப்புக்கொள்ள நேர்ந்தது.

வேறு பல நாடுகளிலும் நிலவும் உணர்வு, குறிப்பாயும் "சமுதாய சமாதானம்" எனும் அப்பட்டமாயும் பயனற்ற எதிர்பார்ப்பு தொடர்பாக பெருமளவுக்கு இதே போல இருக்கிறது. ஆனல் பிற்போக்கு சக்திகள் பழிவெறி மற்றும் விஸ்தரிப்பு கோஷங்கள் மூலம் தேசத்தை ஒன்றிணைக்க முயலும் நாடுகளில், தேசத்தை ஒன்று திரட்ட வேண்டும் எனும் விருப்பம் பலமாக இருக்கிறது. மேற்கு ஜெர்மனியில் பிற்போக்காளர்கள் "தேசிய ஒற்றுமை", "தேசிய சுய நிர்ணய உரிமை" எனும் கோஷங்கள் மீது, தேசிய உணர்ச்சிகள் மீது பலமான அழுத்தம் தர முயல்கின்றனர். புதிய நாஜி தேசிய ஜன நாயகக் கட்சி "சுய நிர்ணய உரிமைக்கான" ஜெர்மன் தேசிய எழுச்சியைத் தூண்டிவிட்ட பழைய நாஜி வேலைத் திட்டத்தின் கோரிக்கைகளை சொல்லுக்குச் சொல் அப்படியே திருப்பிச் சாற்றுகிறது. கிருஸ்தவ சமூக யூனியனுங்கூட

* அதே நூல், பக், 21.

பழி வெறி கலந்ததான "அகில ஜெர்மன் தேசிய உணர்வை" பிரசாரம் செய்கிறது—இதன் தலைவரான பிரான்ஸ் ஜோசப் ஸ்ட்ராஸ் ஏகாதிபத்திய ஜெர்மனியின் குடையின் கீழ் பல்வேறு மக்களினங்களைத் திரட்டி கூட்டாட்சி முறையில் உருவாக்கப்படும் தனியொரு ஐரோப்பாவின் அகததே கொண்டு வரலாம் என்று நம்புகிறார்.

மத்திய கிழக்கிலான இஸ்ரேலின் ஆக்கிரமிப்பு நடத்தை தொடர்பாக மேலைய நாட்டுப் பத்திரிகைகள் யூதப்பிரச்சினை என்பதை எடுத்துக் கவனிக்கத் தலைப்பட்டுள்ளன. பாலஸ்தீனப் பிரதேசத்தில் அரபு தேசிய அரசு நிறுவப்படும் எனும் நிபந்தனை மீது 1948-ல் பாலஸ்தீனத்தில் ஒரு யூத அரசை உருவாக்க முற்போக்கு சக்திகள் ஆதரவு தெரிவித்தன என்பதை இங்கு நினைவு கூரலாம். ஆனால் இஸ்ரேல் உடனே சர்வதேச ஏகாதிபத்தியத்தின் கருவியாகி விட்டது, காரணம் யூதவெறி சக்திகள் அதற்குச் சேவை புரிந்து வந்தன பாலஸ்தீனிய அரபு மக்களின் தேசிய நலன்கள் மிதித்துத் துவைக்கப் பட்டன. தேச விடுதலை இயக்கத்துக்கு எதிராகப் போராடி வந்த உலக பிற்போக்கு சக்திகள் இஸ்ரேலை நம்பி முன்வரலாயின. இஸ்ரேலி பிரதேசத்தில் யூத தேசம் மறுக்கவொண்ணவகையில் ஒருமைப்பாடு அடைந்திருந்த போதிலும் இது "உலகு தழுவிய யூத தேசத்தை"ப் பிரதிநிதித்துவப் படுத்துவதாக உரிமைகொண்டாடுவதற்கு எவ்வித ஆதாரமும் கிடையாது. இது பொது அறிவுக்கு எதிரானது. அவர்கள் வாழ்ந்து வரும் நாட்டில் யூதர்களுக்கு சுயநிர்ணய உரிமை வழங்கப் படுகிறதா இல்லையா என்பது ஒருபுறமிருக்கட்டும்—சோவியத் ஒன்றியத்தில் இவ்வுரிமை வழங்கப்பட்டுள்ளது, பெரும் பாலான முதலாளித்துவ நாடுகளில் இவ்வுரிமை இல்லை. உண்மையில் அவர்கள் வெறும் இனச்குழுக்களாகவே வாழ்கின்றனர், எந்த தேசத்தின் மத்தியில் வாழ்கிறார்களோ அதனுடன் சேர்ந்து தன் வயமாகிடும் ஏதேனும் ஒரு கட்டத்தில்தான் வாழ்ந்து வருகிறார்கள்—இந்தக் குழுக்கள் தொடர்பின்றி பிரிந்து கிடப்பது மட்டுமல்ல, மொழி,

பழக்கம், கலாசார உளவியல் இயல்புகள் இவற்றிலும் கணிசமாக வேறுபடுகின்றன, காரணம் பெரும்பாலும் அவை சேர்ந்து வாழும் மக்களினங்களிடமிருந்தே இவற்றை எடுத்துக் கொள்கின்றன.

ஜியோனிசத்துக்கும் (யூத இனவெறி) யூதர்களின் தேசிய நலன்களுக்கும் பொதுவான அம்சங்கள் எதுவும் கிடையா. இது நீண்டகால முன்பே ஏகாதிபத்தியத்தின் நவீனகாலனியாதிக்கக் கொள்கையின் கருவியாகிவிட்டது. யூத இன வெறியினரும் யூத எதிர்ப்பு இனவெறியர்களும் யூதர் பிரச்சினையின் மெய்யான சாரத்தைப் புரட்டி அதற்கு வர்க்கத் தன்மை அளிப்பதற்கு பதிலாக இனவெறித் தன்மையைத் தருகிறார்கள்.

நவின முதலாளித்துவ சமூக அமைப்பில் தேசிய சர்வ தேசிய இயக்கங்களின் உருவிலும் உள்ளடக்கத்திலுமான மாற்றங்கள் பல்வேறு காரணிகளால் ஆட்டிப்படைக்கப்படு கின்றன. இவை உலக முதலாளித்துவத்தின் நியதிகளோடும் விஞ்ஞான தொழில் நுட்ப புரட்சியின் சமூக விளைவு களுடனும் தொடர்புடையவை. இதற்கும் மேல், இன்றைய உலகின்நிலைமைகளுக்கு ஏற்ப ஏகபோக பூர்ஷுவாக்கள் திட்டமிட்டுத் தம்மைத் தகவமைத்துக் கொள்வதும் இதில் முக்கியமான பங்கு வகிக்கிறது இருப்பினும், இந்தப் புதிய நிலைமைகளுக்கு ஏற்பத் தன்னைத் தகவமைத்துக் கொள்ள முதலாளித்துவம் செய்யும் முயற்சிகள் ஒரு சமுதாய அமைப்பாக அதனை திடப்படுத்தத் தவறி விட்டன. அதன் பொது நெருக்கடி தொடர்ந்து அதிகரித்தே வருகிறது. இந்த நெருக்கடி தேசங்கள் மற்றும் தேசிய உறவுகளின் மீது நிகழும் மாற்றங்களில் பிரதிபலிக் கிறது. தொடர்ச்சியாக தேசிய—ஜனநாயகப் புரட்சிகள் வெடிப்பதிலும், அன்னிய மூலதனம் தேசிய சுதந்திரத்தைச் சீர்குலைப்பதற்கு எதிரான கண்டனங்களிலும், வளர்ச் சியடைந்த தேசிய அரசுகளில் மக்களினங்கள் மத்தியிலான முரண்பாடுகள் கடுமையுறுவதிலும் உருப்படியாகக் காட்சி யளிக்கிறது. தேசியவாதம் குறுதேசிய வெறியை எதிர்த்த

போராட்டத்தில் பாட்டாளி வர்க்க சர்வதேசியத்தின் சித்தாந்தம், கொள்கை மற்றும் நடைமுறை முன்னேற்ற மடைவது மறுக்க முடியாதது.

பாட்டாளி வர்க்க சர்வதேசியம் வளர்ந்து தொடர்ந்து அபிவிருத்தியடைந்து சமுதாய முன்னேற்றத்தில் ஒரு தீர்மானகரமான காரணியாக மாறிவருகிறது.

பாட்டாளி வர்க்க சர்வதேசியத்தின் சித்தாந்தம் மார்க்சிய லெனினியக் கட்சிகளால், சர்வதேச தொழிலாளி வர்க்கத்தால் தொடர்ந்து வளமுறுத்தப்படுகிறது. உலகம் புரட்சிகரமாகப் புதுக்கப் பெறும் நடைமுறைக்கு இங்கு நிர்ணயமான பொறுப்பு இருக்கிறது. ஏனெனில் 1969-ல் கம்யூனிஸ்டு, தொழிலாளர் கட்சிகளின் சர்வதேசிய மாநாட்டில் கஸ்ஹால் கூறியது போன்று, மூன்று முனைகள் கொண்ட உலகளாவிய புரட்சி இயக்கமே சர்வதேசியத்தின் இயக்கு சக்தியும் புதிய ஊற்றுக்காலுமாகும்.

''தொழிலாளி வர்க்கமும் அதன் நேசசக்திகளும் ஆட்சியதிகாரம் வென்று பெறுவதுதான், சோஷலிசம், பாட்டாளி வர்க்க சர்வதேசியம் எனும் லட்சியத்துக்கு முதலாளித்துவ நிலைமைகளில் போராடிவரும் கம்யூனிஸ்டுக் கட்சி வழங்கும் மகத்தான பங்களிப்பு ஆகும்''* என்று இந்த சர்வதேச மாநாட்டின் தீர்மானம் செப்புகிறது.

சோவியத் ஒன்றியத்தின் கம்யூனிஸ்டுக் கட்சியும் புதிய அடித்தளங்கள் மீது தமது வாழ்க்கையை நிர்மாணித்து வரும் உழைக்கும் மக்களின் கண்ணோட்டத்திலும் சமூக நடப்பிலும் சர்வதேசியம் ஒரு பாகமாகிவிட்ட இதர சோஷலிஸ்டு நாடுகளின் மார்க்சிய-லெனினியக் கட்சிகளும் பாட்டாளிவர்க்க சர்வதேசியத்தின் விரிவாக்கத்தில் மேலதிக மான தத்துவார்த்த மற்றும் நடைமுறைப் பாத்திரம் வகிக்கின்றன.

---

* கம்யூனிஸ்டு, தொழிலாளர் கட்சிகளின் சர்வதேச மாநாடு, மாஸ்கோ, *1969*, பக். *37*.

இன்றைய நிலைமைகளில்,பாட்டாளி வர்க்க சர்வதேசிய மானது அ) அதன் உள்ளடக்கம் செழுமையூட்டப் படுவதாலும் ஆ) அதன் வடிவங்கள் பேரளவு பல்வகைத் தன்மை பெறுவதாலும் இ) அதன் செயல் வட்டம் விரிவடைந்திருப்பதாலும் ஈ) சமுதாயத்தின் புரட்சிகர மறு சீரமைப்பில் ஒரு கேந்திரமான சமூகக் காரணியாக அதன் மேலதிகமான பாத்திரம் வகித்தது மூலமும் ஆக்கம் பெற்று வருகிறது.

இதன் பலனாக தொழிலாளி வர்க்கம் மட்டுமல்லாமல் அதன் நேச சக்திகளுங்கூட தமது கொள்கையையும் சமுதாய நடைமுறையையும சர்வதேசிய வாதத்தை அடிப் படையாக்கி அனுசரிக்கின்றன பாட்டாளி வர்க்க சர்வதேசியம் மேலும் மேலும் தனி நபர்களின் கண்ணோட்டம், தார்மிக மற்றும் உளவியல் நடத்தையின் பாகமாகி வருகிறது. தொழிலாளி வர்க்கத்தின் தேவைகள் அதன் வாழ்க்கை மற்றும் போராட்டத்திற்கு உகந்த முறையில் தேசிய சர்வதேசியக் காரணிகளும் ஜனநாயக சோஷலிஸ்டு காரணிகளும் கொண்ட புதிய இணைப்புக்கள் தோற்றமளிக்கின்றன. இதற்குக் காரணம் இன்றைய கட்டத்தில் உலகப் புரட்சியின் சமுதாய அடித்தளம் விரிவடைந்து இருப்பதேயாகும். பல்வேறு நாடுகளின் பாட்டாளிகள் வர்க்கத்தினதன் வர்க்கக் கூட்டணியும் அதன் பொதுஜன ஸ்தாபனங்களும், விவசாயிகள், அறிவுத் துறையினர், இளைஞர் மற்றும் பல்வேறு ஜனநாயக அமைப்புகளுடன் சேர்ந்து நடைபெறும்பல்வேறு வடிவிலான போராட்டங்களின் விரிவான பிணைப்புக்களால் முழு நிறைவு பெறுகின்றன.

பல்வேறு நாடுகளின் பாட்டாளிகள் ஆதரவாக உருவாக்கிய வர்க்க ஒருமைப்பாட்டின் துவக்க கால வெளிப் பாடுகளின் நிலையில் இருந்து சர்வதேச தொழிலாளி வர்க்க இயக்கத்தின் பெருகிவரும் ஒற்றுமைக்கும்; ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலைப் போராட்டத்துக்கு சாப்ராஜ்ய தேசங்

களின் தொழிலாளர் அனுதாபத்தில் இருந்து, தேசவிடுதலை இயக்கத்தோடான சர்வதேச தொழிலாளி வர்க்க இயக்கத்தின் மிகவும் உறுதியான கூட்டணிக்கும்; எல்லா நாடுகளிலுமான புரட்சி இயக்கம் அக்டோபர் புரட்சிக்கு ஆதரவு தந்ததில் இருந்து, சர்வதேசத் தொழிலாளி வர்க்கமும் தேசவிடுதலை இயக்கமும் தனியொரு உலகப் புரட்சி இயக்கமாகிவிட்ட நிலையில், உலக சோஷலிஸ்டு அமைப்பு பின் பல தரப்புக் கூட்டணிக்கும் என்ற வகையில் பாட்டாளி வர்க்க சர்வதேசியம் நெடுந்தொலைவுக்கு முன்னேறிவிட்டது. இதுவே, பாட்டாளி வர்க்க சர்வதேசியத்தின் உருவங்கள் மற்றும் உள்ளடக்கத்தில் ஏற்பட்ட மாறுதல்களின் இறுதியான சான்றாகும். அண்மைக்காலத்தில் மட்டுமே பாட்டாளி சர்வதேசியம் பல்வேறு தேசிய இனங்களைச் சேர்ந்த பாட்டாளிகளின் அரசியல் சித்தாந்த ஒற்றுமை வாயிலாக முக்கியமாயும் வெளிப்பட்டுள்ளது. இன்று, அது வன்மைமிகு உலகப் புரட்சி இயக்கம், ஏகபோக மூலதனத்தை எதிர்த்த போராட்டத்தில் நாடுகள், மக்களினங்கள், வர்க்கங்கள், கட்சிகளின் திட்டவட்டமான ஒத்துழைப்பு சோஷலிசம் கம்யூனிசத்தை நிர்மாணிப்பதில் உருப்படியான ஒத்துழைப்பு எனும் மூன்று நீரோட்டங்களின் நிறைவியலின் பரஸ்பரச் செயல்பாடாக விளங்குகிறது. மேலும், இந்த ஒத்துழைப்பு சமூக-அரசியல், தத்துவார்த்த-சித்தாந்தத் துறைகளுக்கும் அப்பால் அடைந்த சாதனைகளைப் பொதுவாகத் தற்காத்துக் கொள்வது, பொருளாதார ஆக்கம், கலாசார வளர்ச்சி மற்றும் புதிய உறவுகளை உருவாக்கிக் கொள்வது வரையில் நீடிக்கிறது.

சமகால உலகத்தில் பாட்டாளி வர்க்க சர்வதேசியம் வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளில் முன் என்றும் கண்டிராத அளவு உக்ரமான வேலை நிறுத்தங்களிலும், சோஷலிஸ்டு திசைவழியில் செல்லும் நாடுகளின் முக்கியமான சமூக-பொருளாதார மாறுதல்களிலும், உலக சோஷலிஸ்டு அமைப்பின் மக்களினங்கள் பொருளாதார ஒத்துழைப்பின் ஆரம்ப வடிவங்களில் இருந்து

சோஷலிஸ்டு பொருளாதார இணைப்பாக்கத்து கடந்து செல்வதிலும் தனது மாபெரும் உள்ளாற்றலை வெளிப் படுத்துகிறது.

இன்றைய கட்டத்தில் பாட்டாளி வர்க்க சர்வதேசியத் தின் இனி மேற்பட்ட வளர்ச்சியும் அதன் அதிகரித்து வரும் பாத்திரமும் பல காரணிகளால் உவக்குவிக்கப்படுகின்றன. இதில் தலையாய காரணி ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப் போராடும் சக்திகள் அனைத்தின் மாபெரும் புரட்சிகரப் போராட்ட ஒற்றுமையேயாகும். சர்வதேசிய வாதத்தை அடிப்படையாக்கிய ஏகாதிபத்திய-எதிர்ப்பு ஒற்றுமையின் அவசியம்தெட்டத்தெளிவானது இது இல்லாமல்,முதலாளித் துவத்தில் இருந்து சோஷலிசத்துக்கு மாறிச் செல்வது எனும் குறிக்கோளை அடைய உலகக் கம்யூனிஸ்டு இயக்கமும் பாட்டாளி வர்க்க சர்வதேசியம் எனும் சித்தாந்தத்தைப் பின்பற்றி வரும் எல்லா நாடுகளின் தொழிலாளி வர்க்கமும் மட்டுமே இந்தக் குறிக்கோளை நோக்கி முன்னேக உறுதியான தலைமையை வழங்க முடியும்.

ஆயினும், ஏகாதிபத்திய சக்திகள் உண்மையிலேயே பலவீனமாக இருப்பதனுல், ஏகாதிபத்தியத்தின் ஆக்கிரமிப்புத் தன்மை மாறிவிட்டது என்று அர்த்தமல்ல. இன்னும் மீதமிருக்கும் நிலைகளைத் தன்வசம் வைத்துக் கொள்ள அது எதையும் செய்யத்துணியும். ஏகாதிபத்திய வல்லரசுகள் இடையே நிலவுவதும்—சில சமயம் மேலும், கடுமையுறுவதுமான—முரண்பாடுகள் இருந்தபோதிலும் அவை உலக சோஷலிஸ்டு அமைப்பு,சர்வதேசத் தொழிலாளி வர்க்கம், தேசவிடுதலை இயக்கம் இவற்றுக்கு எதிராக பொதுவான உலகளாவிய போர்த்தந்திரத்தை இயக்கி வருகின்றன. இது உலக சக்திகளை துருவகரணம் செய்து விட்டது. பெருந் திரளான உழைக்கும் மக்கள், நடுத்தர அடுக்குகள் மற்றும் அறிவுத் துறையினர், சோஷலிஸ்டுப் பாதை மட்டுமே முன்னேற்றத்துக்கான பாதை என்பதை யும், ஏகாதிபத்தியத்தை எதிர்த்த சமரசப்படுத்தவியலாத

போராட்டம் மூலம் மட்டுமே சமாதானத்தைப் பேண முடியும், சமுதாய ஒடுக்குமுறை மற்றும் அசமத்துவத்தை அழித்தொழிக்க முடியும், ஜனநாயகத்தைப் பாதுகாக்க முடியும் என்பதையும் தம் அனுபவத்திலிருந்து அறிந்து கொள்கிருர்கள். இதனுல் தான் ஏகாதிபத்திய-எதிர்ப்பு சக்திகள் மேலும் செயலூக்கமுடன் இருந்து உலக சோஷலிசத்தைச் சுற்றி ஒன்று திரளவேண்டும் என்ற மறுத்தற்கியலாத போக்கு காணப்படுகிறது.

வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளில், விவசாயிகள், அறிவுத் துறையினர், சேவா தொழில் ஊழியர்கள், மாணவர், இளேஞர் மற்றும் இதர சமூகப் பிரிவினர் ஏகபோகத்தையும் ஏகபோகத்துடன் இணேந்து நிற்கும் அரசுப் பொறியமைவையும் எதிர்த்து நடக்கும் போராட்டத்தில் தொழிலாளி வர்க்கத்துடன் அணிவகுத்து நிற்கிருர்கள். கட்டற்ற தேசிய அபிவிருத்திக்கான இயக்கம் உலக முதலாளித்துவ அமைப்புக்குள்ளேயான போராட்டத்தின் ஒரு புதிய முன்னணியாகும். அமெரிக்கா, பிரிட்டன்,பெல்ஜியம், கனடா மற்றும் ஸ்பெயினில் தேசியச் சிறுபான்மையினரின் ஜனநாயக இயக்கத்தின் வீச்சு முன் என்றும் இருந்த விகிதங்களே விஞ்சிவிட்டது. ஒரு சில நாடுகளில் பொது மக்கள், பூர்ஷுவாக்களில் ஒரு பகுதியுங்கூட அன்னிய மூலதனம் தமது தேசிய சுதந்திரத்தை அரித்து வருவதை எதிர்த்துத் தமது போராட்டத்தை கடுமையாக்கியுள்ளனர்.

ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டத்தில் இன்னெரு புதிய முன்னணி, ஒரு காலத்தில் வரலாறு படைப்பவர்கள் என்பதை விடவும் வரலாற்றின் இலக்குப் பொருளாக இருந்த மக்களினங்கள், சர்வதேச விவகாரங்களில் மேலும் செயலூக்கமுடன் பங்கேற்பதைக் காட்டுகிறது. அவர்கள் உள்நாட்டு விவகாரங்களில் உறுதியாயும் முழு சுயாதீனம் கோரிப் போராடுகிருர்கள். சோஷலிச திசைவழியில் மேவும் நாடுகளின் மக்களினங்கள் உலகப் புத்தாக்கத்துக்கான

பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதில் மிகப் பெரிய பங்கு வகிக்கிறார்கள். இத்தகைய நாடுகளின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருகிறது, அவற்றின் அனுபவம் மேலதிகமான ஜன ஆதரவு பெற்றுவருகிறது.

சமுதாயத்தைப் புரட்சிகரமான வழியில் புதுக்குவதற்கான போராட்டத்தில் புதிய சமூக சக்திகள் தோற்றமளிப்பதானது, ஏகாதிபத்திய—எதிர்ப்புப் போராட்டத்தின் பெருகி வரும் வீச்சையும் அதன் உள்ளடக்கத்திலான குணம்ச மாற்றத்தையும் காட்டுகிறது. ஒரு சமுதாயப்புரட்சி மூலம் மட்டுமே அவசரமான சமூகப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணமுடியும் எனவும், இங்கு தொழிலாளி வர்க்கமே பிரதான தாக்கும் சக்தி எனவுமான திட நம்பிக்கை மக்கள் திரளினர் மத்தியில் அதிகரித்து வருகிறது.

இதுவே பாட்டாளி வர்க்க சர்வதேசியத்தின் பதாகையின் கீழ் ஒன்று திரளவேண்டும் என்ற மக்கள் திரளினரின் இணையற்ற ஆர்வத்தின் புறநிலை அடித்தளமாகும்.

ஏகாதிபத்திய-எதிர்ப்புப் போராட்டத்தில் மக்கள் திரளினரின் ஒற்றுமை, சர்வதேசியத்தை நோக்கி அவர்கள் ஈர்க்கப்படுதல், இவை சோஷலிஸ்டு உலகின் வன்மையான செல்வாக்கால் உறுபவை. அதன் மெய்யான சுதந்திரம், ஜனநாயகம், சமாதானத்துக்காகவும் ஆக்கிரமிப்பை எதிர்த்தும் அது நடத்தும் சோர்விலாப் போராட்டம், எல்லா முற்போக்கு சக்திகளையும் ஆதரிப்பது, புதுவாழ்வை நிர்மாணித்துவரும் மக்களுக்கு உதவி-இவை சோஷலிசத்தின் சர்வதேச சாரத்தின் இயல்புகளில் சிலவாகும், முதலாளித்துவத்தை விட அனுகூலமான அதன் சாதகங்களாகும்.

சோஷலிஸ்டல்லாத உலகின் எல்லா நாடுகளின் சமூக வளர்ச்சியின் மீதும் சோஷலிஸ்டு உலகின் செல்வாக்கை விஸ்தரிக்க வேண்டுவதன் புறநிலைத் தேவை, பாட்டாளி வர்க்க சர்வதேசியத்தின் எதிர்கால ஆக்கத்தைத் தூண்டி வருகிறது, இது உலக சோஷலிஸ்டு அமைப்பின் உள் நடைமுறைகளாலும் தூண்டிவிடப் படுகிறது. சர்வப் பொதுவான

புறநிலை நியதிகளைப் பின்பற்றிவரும் சோஷலிசம் நிர்மாணிக்கப்படுவதானது திட்டவட்டமான வரலாற்று நிலைமைகளையும் பிரத்தியேகமான தேசிய இயல்புகளையும் பொருத்துப் பல்வேறு வடிவங்களை எடுக்கும். சோஷலிசத்தை நிர்மாணிப்பதில் வெற்றி பெறுவது, சமூகத்தின் வளர்ச்சியில் பொதுவான மற்றும் பிரத்தியேகமான தேசியப் பண்பினை சரியாக இணைப்பதிலேயே பலவழிகளிலும் சார்ந்திருக்கிறது. தனிப்பட்ட நாடுகளில் சோஷலிசம் வெற்றிகளை ஈட்டுவதற்கும் இது பொருந்தும், இன்னும் அதிக அளவுக்கு சோஷலிஸ்டு நாடுகளின் அரசுத் தொடர்பான உறவுகளையும் ஒத்துழைப்பையும் உருவாக்குவதிலும் உலக சோஷலிஸ்டு மாளிகையை நிறுவுவதிலுமான வெற்றிகளுக்கும் இது பொருந்தும்.

பாட்டாளி வர்க்கத்தின் வர்க்க நலன்களின் வெளியீடு என்ற முறையிலும், சோஷலிஸ்டு நாடுகளை ஒன்றிணைக்கும் சாதனம் என்ற முறையிலும் சர்வதேசியம் மேலும் விரிவாக்கம் பெறுவது உலக சோஷலிஸ்டு அமைப்பின் மற்றும் பொதுவாக உலக சோஷலிஸ்டு இயக்கத்தின் அகத்தேயான அதன் பாத்திரத்தை மேம்படுத்துகிறது.

ஆகவே, சமுதாயத்தில் பாட்டாளி வர்க்க சர்வதேசியத்தின் பாத்திரம் பல புதிய புலப்பாடுகளால் வரையறை செய்யப்படுகிறது. மக்களினங்களின் அரசியல் பொருளாதார மற்றும் கலாசார வாழ்வில் சர்வதேசிய மயமாக்கம் உறுதியாகத் தொடர்ந்து நடைபெறுகிறது, பல்வேறு நாடுகளின் தொழிலாளி வர்க்கத்தின் தேசிய சர்வ தேசியப் பணிகள் எதார்த்தத்தில் ஒன்றே எனும், உலகக் கம்யூனிஸ்டு இயக்கமும் சோஷலிசமும் இயல்பாகவே சர்வதேசியத் தன்மை வாய்ந்தவை எனும் இந்த உண்மையே இந்தப் புலப்பாடுகளில் சிறப்பாயும் முக்கியமானது.

பாட்டாளி வர்க்க சர்வதேசியம் பல மூலாதாரமான பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கான பிரதான சாதனம் ஆகும்—சர்வதேச தொழிலாளி வர்க்கத்தை ஒற்றுமைப்

படுத்துவது, ஏகாதிபத்தியத்தை எதிர்த்தும் சோஷலிசம், கம்யூனிசத்தின் வெற்றிக்காகவும் நடக்கும் போராட்டத்தில் போராட்ட வடிவங்கள், முறைகளின் ஒற்றுமையை உறுதிப் படுத்துவது; சமாதானம் சுதந்திரம் மற்றும் ஜனநாயகத்துக் கான போராட்டத்தில் எல்லா ஜனநாயக சக்திகளேயும் ஒன்றிணைப்பது; தேசியப் பிரச்சினைக்குத் தீர்வுகண்டு, தேசங்கள், தேசிய இனங்களின் அபிவிருத்தியை முன்னேற்ற மான வழிகளில் உத்தரவாதம் செய்தல்; தேசியவாதம், குறுதேசிய வெறி, போலி பொதுப்பற்று, (காஸ்மோ பாலிடனிசம்) தேசிய சூன்யவாதம் ஆகியவற்றின் எல்லா வகையான வெளிப்பாடுகளேயும் வென்று அகற்றுதல், இன வெறியாட்டம், இனசங்காரம் போன்றவற்றை அறவே ஒழித்தல் இத்தியாதி பிரச்சினைகள் இதிலடங்கும்.

பாட்டாளி வர்க்க சர்வதேசியத்தின் பாத்திரம் மேலோங்கி இருப்பதற்கு முக்கிய காரணம் சர்வதேசத் தொழிலாளி வர்க்கத்தின் மகத்தான எண்ணிக்கையும் மாபெரும் சமுதாயப் பங்குமேயாகும். அண்மை ஆண்டு களில், "தொழிலாளி வர்க்கத்தின் வலிமையும் செல்வாக்கும் முன்னைவிட மகத்தானது, உழைக்கும் மக்கள் நலன்களுக்கான தேசத்தின் மெய்யான நலன்களுக்கான போராட்டத்தில் அதன் முன்னணிப் பாத்திரம் அதிகரித் துள்ளது"* என்பதாக சோ. க. க. யின் 25 ஆவது காங்கிரஸ் குறிப்பிட்டது. தொழிலாளி வர்க்கத்தின் இன்றைய பெரிய போராட்டங்கள் புதியதும் மேலும் பெரிதுமான சமர்களின் முன்னோடிகளாகும். இவை அடிப்படையான சமூக மாற்றங் களைக் கொண்டு வருவதிலும், உழைக்கும் மக்களின் இதர பகுதிகளுடன் கூட்டணி சேர்ந்து தொழிலாளி வர்க்கம் தனது ஆட்சியை நிறுவுவதிலும் சென்று முகிழ்க்கும் என்று 1969-ல் கம்யூனிஸ்டு, தொழிலாளர் கட்சிகளின் சர்வதேசிய

---

* **சோ. க. க. மத்தியக் கமிட்டியின் அறிக்கையும் உள்நாட்டு, வெளிநாட்டுக் கொள்கையிலான கட்சியின் உடனடிக் கடமைகளும்,** *பக். 34.*

மாநாடு எடுத்த முடிவை இந்த மெய் நடப்புக்கள் ஊர்ஜிதம் செய்கின்றன.

சமுதாயப் புரட்சிக்கான புறநிலைக் காரணிகள் கனிந்து பக்குவமுற்றுவிடும். பட்சத்தில், சர்வதேசிய சித்தாந்தம் தொழிலாளி வர்க்கத்தின் கரங்களில் வன்மை மிகுந்த போராயுதமாகி விடும், மண்ணுலகில் சோஷலிசத்திற்கான போராட்டத்தில் எல்லா முற்போக்கு சக்திகளின் ஒற்றுமையையும், முற்போக்கான மாறுதலையும் இது உத்தரவாதம் செய்யும். இந்த இடத்தில் முன்னேறிய தொழிலாளரின் மார்க்சிய-லெனினியக் கட்சியின் பாத்திரம் குறிப்பாயும் மகத்தானது.

உலகப் புரட்சியின் சமூக அடித்தளம் விரிவடைந்து விட்டது. பாட்டாளி வர்க்க சர்வதேசியத்தின் செல்வாக்கு, ஏகாதிபத்தியத்தை எதிர்த்த போராட்டத்தில் தொழிலாளர் நேச சக்திகளிடம் பரவிவிட்டது. எனவே, சோஷலிஸ்டு மற்றும் ஜனநாயகக் கடமைகளை இணைக்கும் பிரச்சினையை ஆராய்வதும், பல்வேறு திட்டவட்டமான சூழ்நிலைமைகளில் இதற்கான திட்டமான வடிவங்களை வகுத்தளிப்பதும் மார்க்சிய-லெனினியக் கட்சிகளுக்கு அளப்பரிய முக்கியத்துவமுடையதாகி விட்டன.

சிரியா நாட்டு கம்யூனிஸ்டு தலைவர் காலித் பக்தாஷ் மேற்கோள்படி ‘‘சர்வதேசியவாதத்தைப் பாதுகாப்பதும், தேசியவிடுதலை இயக்கத்தில் அதன் உணர்வைப் பரப்புவதற்கு முயற்சிகள் செய்வதும் சிரியா கம்யூனிஸ்டுக் கட்சியின் முன்னே இருக்கும் ஆக இடர்ப்பாடான பணிகளில் ஒன்ருக இருந்தது, இன்னமும் இருந்து வருகிறது.’’* இந்தக் கடமையை அவர் அடிப்படையானது என்று வருணித்தார், இதை எந்தக் கம்யூனிஸ்டும் புறக்கணிக்க முடியாது என்று வலியுறுத்தினர்.

---

* காலித் பக்தாஷ், தேர்வு கட்டுரைகள் மாஸ்கோ, 1970, பக் 73 (ருஷ்ய மொழியில்).

தேசவிடுதலை இயக்கத்தில் பங்கேற்பவர்கள் இந்த நாட்களில் பொதுப் பிரச்சினைகளை வர்க்க நிலைகளிலிருந்தே அணுகுகிறார்கள். இது தேச விடுதலை இயக்கத்தினுள் பாட்டாளி வர்க்க சர்வதேசியத்தைப் பரப்பியுள்ள சர்வதேசத் தொழிலாளி வர்க்கத்துக்கும் கம்யூனிஸ்டு இயக்கத்துக்கும் இது பெருமை தருவதாகும்.

கம்யூனிஸ்டுகளின் உதாரணத்தைப் பின்பற்றி, புரட்சிகர ஜனநாயகக் கட்சிகள் தேசத்தின் நலன்கள் விஷயத்தில் தமது வர்க்க சார்பிலாத அணுகு முறையை படிப்படியாகக் கைவிட்டு வருகிறார்கள்.

எடுத்துக் காட்டாக அரபு தேசிய விடுதலை இயக்கத்தின் தலைவர்கள் சிலர் முன் நாட்களில் தேசத்தின் தனி நலன் பற்றிப் பேசினர், வர்க்கங்கள் இருப்பதையும் வர்க்கப் போராட்டத்தையும் பாராது புறக்கணித்தனர். இப்போது நிகழ்ச்சிகளின் தாக்கத்தின் கீழ் அவர்களது தோரணை மாற்றமடைந்து வருகிறது.

பாட்டாளி வர்க்க சர்வதேசியத்தின் அனுகூலமான செல்வாக்கின் இன்னொரு முக்கிய விளைவு: தேசிய விடுதலைக் கான பொதுவான போராட்டத்தின் செல்வழியில் தொழி லாளி வர்க்கமும், உழைக்கும் மக்கள் திரளினரும் தமது சொந்த பிரத்தியேக நலன்களைப் பற்றி முன்னைவிடத் தெளி வான கண்ணோட்டம் பெறுகின்றனர். கம்யூனிஸ்டுகள் புரட்சிகர ஜனநாயகக் கட்சிகளில் செயலூக்கமுடன் இருக்கும் முற்போக்கு நபர்கள் இவர்களது செல்வாக்கின் கீழ், உலக சோஷலிஸ்டு அமைப்புடனும் சர்வதேசத் தொழி லாளி வர்க்க இயக்கத்துடனுமான தேசவிடுதலை இயக்கத்தின் கூட்டணி உறுதியாயும் வலிமை பெற்று வருகிறது.

இவ்வாறு, ஏகாதிபத்திய-எதிர்ப்புப் போராட்டத்தின் ஆக்கம் பொதுவான உலகப்புரட்சி இயக்கத்தின் வெற்றிகள் இவற்றுடன் பாட்டாளி வர்க்க சர்வதேசியத்தின் பாத்திரமும் முக்கியத்துவமும் அதிகரிக்கின்றன இது உலக முதலாளித்துவத்தின் நெருக்கடிக்கான கூடுதல் சான்றாகும்.

இருப்பினுங் கூட பொதுவாக பூர்ஷுவா பிரசாரமும் குறிப்பாக கம்யூனிஸ்டு-எதிர்ப்பு சித்தாந்த வாதிகளும் பாட்டாளி வர்க்க சர்வதேசியத்தில் நெருக்கடி ஏற்பட்டிருப்பதாயும் இதில் அவர்களுடன் வலது ''இடது'' சாரி சந்தர்ப்பவாதிகளும் திருத்தல்வாதிகளும் நேரடியாகவோ மறைமுகமாகவோ சேர்ந்து நிற்பதாயும் குற்றம் சாட்டுகின்றனர். அவர்கள் சர்வதேசியத்தின் பல்வகையான வெளிப்பாடுகளை தேசியக் கட்டுக்கோப்புக்குள் அடக்கிவிட முயல்கிறார்கள். அதாவது ஒரு குறிப்பிட்ட நாட்டின் வர்க்கப் போராட்டம் அல்லது சோஷலிஸ்டு நிர்மாணத்தின் அளவோடு அதன் முக்கியத்துவத்தைகுறைத்து விடுகிறார்கள். உலக சோஷலிசத்தின் பாத்திரத்தை மேம்படுத்துவது உட்பட்ட சர்வதேசியக் கடமைகள் பற்றி அறவே அக்கறை கொள்வதில்லை. இவ்வாறு செய்வது மூலம் அவர்கள் ஒரு நாட்டின் பாட்டாளி வர்க்கப் போராட்டத்தின் நலன்கள் உலகளாவிய அளவிலான போராட்டத்தின் நலன்களுக்கு கீழடங்கியதே* என்று திரும்பத் திரும்ப வலியுறுத்தும் லெனினது ஆராய்ச்சி உரையை மறுதலிக்கிறார்கள்.

பாட்டாளி வர்க்க சர்வதேசியத்தின் சித்தாந்தம் மற்றும் கொள்கையினுடைய வலிமை நிலை நிற்புப் பாங்கு ஆகியவற்றையும் ஏற்கெனவே கிட்டிய முக்கியமான அனுபவத்தையும் அப்பட்டமாயும் நம்ப மறுக்கும் பேர்வழிகள் இருக்கிறார்கள். இதன் விளைவு ''சர்வதேசியத்தின் நெருக்கடி'' பற்றிய பேச்சு, ஒரு ''புதிய ஒற்றுமையை'' ''ஆக உயர் வடிவிலான ஒற்றுமையை'' நாடி சர்வதேச கம்யூனிஸ்டு தொழிலாளி வர்க்க இயக்கத்தை ஈடுபடுத்த முயற்சி இத்தியாதி பல. ''சர்வதேசியத்தின் நெருக்கடியை'' ''மெய்ப்பித்துக் காட்டுவதற்கு'' அவர்கள் சில சமயம் அதன் அடிப்படைக் காரணங்கள் புறநிலைத் தன்மையுடையன எனவும் உலகப் புரட்சிகர இயக்கத்தின் வெற்றிகளில் இருந்து பின்தொடர்பவை எனவும் வாதிக்கிறார்கள். இது

* காண்க வி. இ. லெனின், ''நூல் திரட்டு'', தொகுதி 31, பக். 148.

மெய் நடப்புக்களுக்கு முற்றிலும் மாறுனது. நாம் எடுத்துக் காட்டியபடி, இவை பாட்டாளி வர்க்க சர்வதேசியமும் அதன் சமுதாய பாத்திரமும் அதன் செயற்களமும் ஆக்கமுறுவதை ஏகாதிபத்திய-எதிர்ப்பு விடுதலை இயக்கத்தின் பாட்டாளித் தன்மையற்ற பல வடிவங்களுக்கும் இது பரவுதலை புறநிலையில் இருந்து அவசியமாக்குகின்றன.

1969-ல் நடைபெற்ற கம்யூனிஸ்டு, தொழிலாளர் கட்சிகளின் சர்வதேச மாநாடு, உலகப் புரட்சிகரப் புத்தாக்கத்தின் நடப்பு இயக்கங்களைத் தீர்க்கமாகப் பகுப்பாய்வு செய்தது, அதோடு சந்தர்ப்பவாதம், தேசிய வாதம் எனும் திசையிலான திரிபுகளால் உறும் மாபெரும் அபாயத்தையும் சுட்டிக் காட்டியது. நமது காலத்தின் பிரச்சினைகளுக்கான திறவுகோல், தொழிலாளி வர்க்கம் அதன் கட்சிகளின் தேசிய சர்வதேசியப் பணிகளைச் சரியாக சேர்த்திணைப்பதிலும், சர்வதேசிய ஒருமைப்பாட்டின் ஈர்ப்பு மையத்தினை சித்தாந்த அரசியல் கருத்துக்களின் பொதுமை என்பதில் இருந்து, புரட்சிப் போராட்டங்களின் ஒற்றுமைக்கு மாற்றுவதிலும் காணக் கிடக்கிறது. உலக சோஷலிஸ்டு அமைப்பு இப்போது ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டத்தின், முதலாளித்துவத்திலிருந்து சோஷலிசத்துக்கு மனிதகுலம் மாறிச் செல்வதன் நிர்ணயமான சக்தியாகும். இந்தக் காரணத்தால் தான் 1969-ல் நடந்த சர்வதேச மாநாடு சோஷலிசத்தின் சாதனைகளைக் கட்டிக் காப்பது சர்வதேசியத்தின் பிரதான வெளிப்பாடுகளில் ஒன்று என்பதாக வருணித்தது.

ஒற்றுமையை வலுப்படுத்துவதற்கான ஆகத் திறமான வழி, கம்யூனிஸ்டுகள், தொழிலாளி வர்க்கம் அதன் நேச சக்திகள் மற்றும் சமாதானம் தேசிய சுதந்திரம் சோஷலிசம் இவற்றுக்காகப் போராடி வரும் நம் காலத்திய அனைத்துப் புரட்சிகர சக்திகளின் கூட்டுப் போராட்டமே எனும் சர்வதேச மாநாட்டு முடிவை இந்த நிகழ்ச்சிகள் ஊர்ஜிதம் செய்து விட்டன. ஒன்றிணைந்த போராட்டம் வெற்றிக்கு

மேல் வெற்றியை ஈட்டி வருகிறது என்று சோவியத் கம்யூனிஸ்டுக்கட்சியின் 25 ஆவது காங்கிரஸ் சரியாகவே குறிப்பிட்டது. உலகக் கம்யூனிஸ்டு இயக்கத்தின் கூட்டிசைவு மேலும் தெளிவாகி வருகிறது, உலக சோஷலிஸ்டு அமைப்பின் நாடுகள் மக்களினங்களின் ஒற்றுமை மேலும் திடப்பட்டு வருகிறது, உலகப் புரட்சி இயக்கத்தின் நீரோட்டங்களின் இடைச் செயற்பாடு மேலும் விரிவடைந்து வருகிறது.

1976 பிப்ரவரி-மார்ச்சில் நடைபெற்றதான சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சியின் 25 ஆவது காங்கிரசானது பாட்டாளி வர்க்க சர்வதேசியத்தின் பாலான அசைக்க முடியாத பற்றுறுதியின் பிரகடனமாகும். 96 நாடுகளின் 103 கம்யூனிஸ்டு மற்றும் தொழிலாளர் தேசிய-ஜனநாயக மற்றும் சோஷலிஸ்டுக் கட்சிகள் இதில் கலந்து கொள்ளத் தம் பிரதிநிதிகளை அனுப்பி வைத்தன. தமது உரைகளில் அவர்கள் உலகக் கம்யூனிஸ்டு இயக்கத்திலான பிளவுச் சக்திகளை சமர்ளித்து உலகப்புரட்சி இயக்கத்தின் மூன்று நீரோட்டங்களின் ஒற்றுமையைக் கெட்டிப்படுத்த கம்யூனிஸ்டு, தொழிலாளர் கட்சிகள் வகுத்து முன்வைத்துள்ள கூட்டு வேலைத் திட்டம் வெற்றிகரமாக நிறைவேற்றப்படுவது குறித்துச் சுட்டினர், அனைத்துப் புரட்சிகர சக்திகளின் செயல் ஒற்றுமையைப் பலப்படுத்துவதற்கான உடனடிப் பணிகள் பற்றிக் குறிப்பிட்டனர். முதலாளித்துவ உலகில் கம்யூனிஸ்டு, தொழிலாளர் கட்சிகள் வென்றடைந்துள்ள மேலதிகமான செல்வாக்கு கடந்த ஐந்தாண்டுக் கால கட்டத்தின் இன்னுமொரு முக்கியமான மலர்ச்சி என்று 25 ஆம் காங்கிரஸ் வருணித்தது. இக்கட்சிகளின் உறுப்பினர் தொகை கிட்டத்தட்ட 10 லட்சம் வரை அதிகரித்துள்ளது, நாடாளுமன்ற மற்றும் வட்டாரத் தேர்தல்களில் கம்யூனிஸ்டுகளுக்கு வாக்களிக்கும் வாக்காளர் தொகை கணிசமாக அதிகரித்துள்ளது. 1965 கம்யூனிஸ்டு, தொழிலாளர் கட்சிகளின் மாநாடு முன்வைத்த ஏகாதிபத்திய-எதிர்ப்புப் போராட்ட வேலைத் திட்டத்தின் பல இலக்குகள் ஏற்கெனவே நிறைவேற்றப்பட்டு விட்டதை இந்தக் காங்கிரஸ்

கண்டறிந்தது. "இதர நாடுகளின் கம்யூனிஸ்டுக் கட்சிகளுடன் சேர்ந்து, போராட்டத்தின் பாதையும் பிரதான இலக்கு களும் சரியாக வரையறுக்கப்பட்டுள்ளன எனவும் மக்களினங் களின் நன்மைக்கான கூட்டுப்பணி மக்கள் திரளினர் மத்தியில் விரிவான வரவேற்பைப் பெற்று விட்டது எனவும் பயனுள்ள விளைவுகளைத் தருகிறது எனவும் நாம் கூற முடியும்''* எனவும் 25 ஆவது காங்கிரசுக்கான சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சியின் மத்தியக் கமிட்டி அறிக்கை செப்பியது.

உலக சோஷலிஸ்டு அமைப்பைச் சேர்ந்த நாடுகளின் மார்க்சிய-லெனினியக் கட்சிகள் நமது காலத்தின் பிரதான புரட்சி சக்திகளின் மேலும் நெருக்கமான ஒற்றுமை அவசியம் என்று தமது பலமான விருப்பத்தை வெளிப் படுத்தின.

இன்றைய கட்டத்தில் மார்க்சிய-லெனினியத்தின் முக்கியமான கோட்பாடுகளில் ஒன்ருக இருக்கும் பாட்டாளி வர்க்க சர்வதேசியத்தின் முக்கியத்துவம் குறித்து சோ.க.க. 25 ஆவது காங்கிரஸ் வலியுறுத்தியது. காங்கிரசுக்குச் சமர்ப்பித்த தனது அறிக்கையில், சோ.க.க. மத்தியக்கமிட்டி சர்வதேசியத்தின் புரட்சிகர உள்ளடக்கத்தை அழித்துக் கெடுக்கச் செய்யும் முயற்சிகளைக் கண்டித்தது, மார்க்சிய-லெனினிய மூல நூல்களின் கருத்துக்கள் காலாவதியாகிப் போனவை எனும் குற்றச் சாட்டுகளையும் கண்டித்தது. சோ.க.க. பார்வையில் "பாட்டாளி வர்க்க சர்வதேசியத்தை கைவிடுவது என்பது, கம்யூனிஸ்டுக் கட்சிகளும் பொதுவாக தொழிலாளி வர்க்க இயக்கமும் வன்மை மிகுந்த கடுஞ் சோதனையில் தேறிய ஓர் ஆயுதத்தை இழக்கச் செய்வது என்பதே. இது வர்க்க விரோதிக்கு சாதகமாக இருக்கும். அவர்கள் தமது கம்யூனிஸ்டு-எதிர்ப்பு செயல்பாடுகளை சர்வதேசிய அளவில் ஒன்று திரட்ட உதவும். பாட்டாளி

---

* **சோ. க. க. மத்தியக்கமிட்டி அறிக்கையும் உள்நாட்டு, வெளிநாட்டுக் கொள்கையிலான கட்சியின் உடனடிக் கடமைகளும்**, பக். 36.

வர்க்க சர்வதேசியத்தைப் பாதுகாப்பது ஒவ்வொரு மார்க்சிய-லெனினிய வாதியின் பவித்திரமான கடமை என்று சோவியத் கம்யூனிஸ்டுகளாகிய நாம் கருதுகிறோம்.''*

வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளின் கம்யூனிஸ்டுக் கட்சிகளின் பிரதிநிதிக் குழுக்கள் சர்வதேச தொழிலாளி வர்க்க மற்றும் தேச விடுதலை இயக்கங்களின் ஒற்றுமைக்காகப் பாடுபடுவது குறித்த தமது உறுதியை மறு ஊர்ஜிதம் செய்தன. உலகப் புரட்சி இயக்கத்தின் அடக்க முடியாத போராட்ட ஆற்றல் அதன் அதிகரித்துவரும் வன்மை, மற்றும் அதன் இயக்கு சக்திகளின் ஒற்றுமை, இவையே நமது சகாப்தத்தின் எதார்த்தங்களின் பின்னணியில் உள்ள முக்கிய காரணியாகும் என்று சோ.க.க. 25 ஆவது காங்கிரசில் உரையாற்றிய அமெரிக்க கம்யூனிஸ்டு கட்சியின் பொதுச் செயலர் கஸ்ஹால் கூறினர். ஜெர்மன் கம்யூனிஸ்டுக் கட்சியின் தலைவர் ஹெர்பர்ட் மீஸ் பேசுகையில் சோவியத்-எதிர்ப்புக்குத் தூபமிட்டுப் பெருக்குவதன் மூலம் பிற்போக்கு சக்திகள் உலகப் புரட்சி இயக்கத்தின் ஒற்றுமைக்கு உலை வைக்க முயல்கின்றன என்றார். கம்யூனிஸ்டுகளின் தேசிய சர்வதேசியக் குறிக்கோள்களின் வெளியீடு என்ற முறையில், அவர்களது சித்தாந்தப் பணியின் முக்கிய கடமை சோவியத்-எதிர்ப்பை எதிர்த்து முறியடிப்பதே. ''ஜெர்மன் சமஷ்டிக் குடியரசைச் சேர்ந்த கம்யூனிஸ்டுகளான நாம் எமது சொந்த நாட்டுதொழிலாளி வர்க்கத்தின் நலன்களுக்காகவும் எமது சொந்த மக்களின் தேசிய நலன்களைப் பாதுகாக்கவுமே சோவியத்-எதிர்ப்பை எதிர்த்துப் போராடுகிறோம். நாம் எர்னஸ்ட் தேல்மனின் கோட்பாடுகளைப் பின்பற்றுகிறோம். சோவியத் ஒன்றியம் குறித்த உறவுநிலை கம்யூனிஸ்டுகளாகிய எமக்கு எப்போதும் பெரிய சோதனை என்று அவர் கூறுவது வழக்கம். இதன்வழி நாம் உலகக் கம்யூனிஸ்டு இயக்கத்தின் ஒற்றுமையை மேலும் திடப்படுத்தப் பங்குப்பணி ஆற்றுகிறோம்'' என்று தொடர்ந்து கூறினர்.

* அதே நூல், பக். 31.

ஏகாதிபத்தியத்தை எதிர்த்த சகல போராளிகளுடனும் சோஷலிஸ்டு நாடுகளின் குடும்பமும் சர்வதேசத் தொழிலாளி வர்க்கமும் தோற்றுவிக்கும் சர்வதேச ஒருமைப்பாடு, எல்லா ஒடுக்கப்பட்ட மக்களினங்களின் விடுதலைப் போராட்டத்தில் மிகவும் முக்கியமான காரணியாகும்.

பாட்டாளி வர்க்க சர்வதேசியம் தேசவிடுதலை இயக்கப் போராளிகள் அனைவரின் கோட்பாட்டுச் சொல் ஆகி வருகிறது.

வியத்நாம், மொஸாம்பிக், கம்போடியா, லாவோஸ், கினி-பிசாவ் மற்றும் அங்கோலா மக்களினங்களின் வெற்றிக்கு சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சியும் சோவியத் ஒன்றியமும் அளித்த பங்கு பாட்டாளி வர்க்க சர்வ தேசியத்தின் ஆகச் சிறந்த மரபுகளுக்குப் பொருந்திய செயலாகும் என்று சோவியத் கம்யூனிஸ்டு கட்சியின் 25-ஆவது காங்கிரசில் உரையாற்றிய தென்னாப்பிரிக்க கம்யூனிஸ்டுக் கட்சியின் தலைவர் யூசுப் டாடு கூறினார். பாட்டாளி வர்க்க சர்வதேசியம் சமாதானம் தேசவிடுதலை மற்றும் சோஷலிசத்துக்கான மக்கள் போராட்டத்தில் ஜீவாதார அவசியமான காரணி என்று வருணித்தார்.

இன்றைய கட்டத்தில் பாட்டாளி வர்க்க சர்வ தேசியத்தின் பாத்திரம் அதிகரிக்க வேண்டுவது சமுதாய ரீதியில் அத்தியாவசியமாக இருப்பதற்கு இன்னும் ஒரு முக்கிய காரணம் பலவீனமடைந்தும் ஒன்றுபின் ஒன்றாகத் தனது நிலைகளை இழந்தும் வரும் பழைய உலகம், தேசிய வாதத்தை மிகப் பெருமளவுக்குப் பயன்படுத்த முயல்வதே எனவே, இதன் சாரத்தையும் வடிவங்களையும் ஆராயும் போது "தேசியம் என்பதைப் பொதுவாக கருத்தியலாக முன்வைப்பது மூலம் எவ்விதப் பயனும் இல்லை"* எனும் லெனினது அறிவுரையை மனதிற் கொள்வது மிகவும் முக்கியமானது.

---

* வி. இ. லெனின், "நூல் திரட்டு", தொகுதி 36, பக். 607.

வரலாற்றின் இன்றைய கட்டத்தில் பழைய நலிந்து வரும் முதலாளித்துவ உலக சக்திகளுக்கும் புதிய எழுந்து வரும் சோஷலிஸ்டு உலகத்துக்கும் இடையே மாபெரும் இணைவரையற்ற சமூகப் போராட்டம் நடப்பதை நாம் காண்கிறோம். அக்டோபர் புரட்சியின் வெற்றியைத் தொடர்ந்து நவீன உலகின் புற அமைப்பு ''இரண்டு முறைகளால் இரண்டு அரசியல் பொருளாதார அமைப்புக்களால் —கம்யூனிஸ்டு மற்றும் முதலாளித்துவ அமைப்பக்களின்''* போராட்டத்தால் நிர்ணயிக்கப்படுகிறது என்று லெனின் கூறினர். இந்த வாதாட்டத்தின் தனிக்குறிப்பான அம்சங்களில் ஒன்று, தேசியவாதத்தின் வெவ்வேறு வடிவங்களின் பாத்திரமும் முக்கியத்துவமும் சமுதாயத்தில் ஓரளவு அதிகரித்ததேயாகும்.

தேசியத்தை அறிய இயலாத சிலவாக, அதன் வேர்கள் ''அக இயல்பை'' தனிநபரின் உளவியல் துறையை, வர்க்கப் பின்னணி எதுவாயிருப்பினும் சரி, எட்டுவதாகவும் சித்திரிக்க பூர்ஷுவா சித்தாந்தவாதிகள் அரும்பாடு படுகிறார்கள். மக்களினங்களின் வளர்ச்சியில் சமூக-பொருளாதார அமைப்புக்களின் கதியிலுங் கூட தேசியவாதத்துக்கு அருள் நிகழ்ச்சியின் பாத்திரம் சாட்டியுரைக்கப்படுகிறது. **சம கால லத்தீன் அமெரிக்காவில் தேசியவாதம்** எனும் நூலின் ஆசிரியர்களை எடுத்துக் கொள்வோம். தேசியவாதம் ''முன் என்றும் இருந்திராத அளவில்'' தழைத்தோங்குகிறது எனவும் ''அது மிகவும் பரந்து விரிவெய்தி சகலத்தையும் தழுவியதாகி விட்ட நிலையில், தலைசிறந்த வரலாற்றாசிரியரில் ஒருவரான ஹான்ஸ் கோஹன் அண்மையில் இன்றைய யுகம் உலகளாவிய அகண்ட-தேசியவாதத்தின் யுகம் என்று வருணித்துள்ளார்.''** வால்டர் கோலரஸ் கருத்தில் தேசிய வாதமே மூழ்கிவரும்

* அதே நூல், தொகுதி *31*, பக். *456*.

** எ. பி. விட்டேகர், டி. சி. ஜோர்டன், **சம கால லத்தீன் அமெரிக்காவில் தேசியவாதம்**, நி. யா. *1966*, பக். *1*.

முதலாளித்துவ உலகத்தின் நம்பிக்கை. அவர் அதிலிருந்து கடைத்தேற்றத்தை எதிர்பார்க்கிறார்: ‘முடிவில் உலகம் முழுவதிலுமே கம்யூனிசம் தேசியவாதத்திடம் சரணடைய வேண்டி வரலாம்’’* என்கிறார்.

பூர்ஷுவா சித்தாந்த வாதிகள் தேசியவாதத்தின் பிற்போக்கு தேசிய விரோத உள்ளடக்கக் கூறுகளையும், ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலை ஆர்வம், தேசிய சுய-துணிவு, தேசிய நலன்களைக் கட்டிக் காத்தல், தேசிய ஒற்றுமை நோக்கிய போக்கின் இயல்பான ஆக்கம் இத்தியாதி சமுதாயப் புலப்பாடுகளையும் ஒன்றென இனங் காட்ட விரும்புகிறார்கள்.

இன்றைய நிலைமைகளில் தேசியவாதத்தின் வெளிப் பாடுகள் மிகவும் பல்வகைப்பட்டுக் காட்சிதருவது மெய்யே. ஒடுக்கும் மற்றும் ஒடுக்கப்படும் தேசங்கள் பெரிய சிறிய தேசங்கள் இவற்றின் தேசிய வாதம் போன்ற ‘‘மரபான’’ வடிவங்களுக்கும் புறம்பாக இதர வெளிப்பாடுகளும் காணப் படுகின்றன. இவற்றை,ஏகபோகத்தின்விஸ்தரிப்புப் பேராசை கள் வாணிகப்பொருட்களை மேலும்போட்டித்தன்மையுடைய தாக்கும் அதன் விருப்பம்; சுதந்திர சித்தம் பரஸ்பர உறவிலான சமத்துவம் இவை மீறப்படல்; ஒரு மக்களுக்கும் இன்னொரு மக்களுக்கும் இடையிலோ மக்களினங்களின் பிரிவுகள் மத்தியிலோவான அரசுக் கூட்டணியின் கட்டுக் கோப்புக்குள் அபிவிருத்திப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதிலான அதிருப்தி; சொந்த தேசத்தின் நலன்களை மட்டுமே உறுதிப் படுத்தும் ஆர்வம்; தேசிய தற்பெருமை அல்லது ஆணவம் ஆகியவை ஊட்டி வளர்க்கின்றன. தேசிய வாதத்தின் உள்ளடக்கம் மக்களினங்களின் பொருளாதார அரசியல் வாழ்க்கையுடனான அதன் பிணைப்புக்கள் இவை பொருத்தவரை, அது அடிப்படையான சமூக மாற்றங்கள், வர்க்கங்கள் கட்சிகள் அரசுகளின் கொள்கைகள் இவற்றுடன்

---

* வால்டர் கோலரஸ், **கம்யூனிசமும் காலனி ஆதிக்கமும்**, லண்டன், 1964, பக். 12.

மாறுத தொடர்புடைய இன்னும் அதிகச் சிக்கலான ஒரு விஷயமாகும்.

முதலாளித்துவ உலகில் தேசியம் மலர்வதற்கான காரணங்களில் ஒன்று அமெரிக்க ஏகபோகங்களுக்கும் இதர நாடுகளிலுள்ள ஏகபோகங்களுக்கும் இடையிலான போட்டி முதலீட்டு மண்டலங்களுக்கான போராட்டம் கடுமை யானதே எனலாம். இந்தப் போட்டி எந்தளவு கடுமையடைந்திருக்கிறது என்பதை அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் நிலைகள் தொடர்ந்து பலவீனப்பட்டு வருவதில் இருந்து காணலாம். அது அதன் போட்டியாளர்களால் முதலாவதாயும் ஜப்பான் மற்றும் ஜெ. ச. குடியரசின் ஏகபோகங்களால் படிப்படியாக வெளி யேற்றப்பட்டு வருகிறது. முதலாளித்துவ உலகின் தொழில் துறை உற்பத்தி 1948-ல் 56 சதவிகிதமாக இருந்தது 1970-ல் 41 சதவிகிதமாகக் குறைந்தது. முதலாளித்துவ உலகின் ஏற்றுமதிகளில் 25 சதவிகிதத்தில் இருந்து 13 சதவிகிதத்துக்கு குன்றியது. விஞ்ஞான தொழில் நுட்பப் புரட்சியின் பின்னணியில் செய்பொருள் தொழில் முதலாளித்துவ முதலீட்டின் முக்கியத்துறையாக மாறிவிட்டது. இருப்பினும் அது போட்டிப் போராட்டத் தின் போக்கில் ஆக்கம் பெற்றது. இந்தத் துறையில் அமெரிக்க ஏகபோகத்தின் நிலைகள் பலவீனமாகவே இருந்தன. முதலாவதாக அமெரிக்கா வளர்ச்சி விகிதங்களில் இன்னமும் மேற்கு ஐரோப்பாவுக்குப் பின்னடைந்தே இருக்கிறது: 1953—1974 கட்டத்தில் அதன் நபர்வீத தொழில்துறை உற்பத்தி 70 சதவிகிதம் அதிகரித்தது, அதே போதில் மேற்கு ஐரோப்பாவில் இது 440 சதவிகிதம் அதிகரித்தது. சரிவிகிதம் 5. 6-க்கு 1 என்று இந்தக் கட்டத்தின் துவக்கத்தில் இருந்த நபர்வீத மட்டம் 1. 7-க்கு 1 என்பதாகக் குறைந்தது இன்னும் இது அமெரிக்காவுக்கு சாதகமாகவே இருந்தது. இரண்டாவதாக, அமெரிக்க பட்டறை செய்தொழில் உற்பத்தியிலான அமெரிக்காவின் ஏற்றுமதியின் பங்கு 11.6 சதவிகிதம்மட்டுமே,அதேபோதில்

ஜப்பானிலும் ஜெ. கூ குடியரசிலும் 38 சதவிகிதமாயும் பிரிட்டன் மற்றும் கனடாவில் 50 சதவிகிதமாயும், ஹாலந்தில் 75 சதவிகிதமாயும் இருந்தது. அமெரிக்க ஏகபோகத்துடன் பல தொழில் துறைகளில் பிரதான போட்டி நாடாக இருக்கும் ஜப்பான் தனது ஏற்றுமதிகளில் மூன்றில் ஒரு பகுதியை அமெரிக்காவுக்கு விற்பனைசெய்கிறது. ஏற்றுமதிகள் இறக்குமதிகளைவிட (1972-ல் 420 கோடி டாலர் மதிப்புடையது) அதிகமாக இருந்தது. ஜப்பான் தனது வெளிநாட்டு முதலீடுகளில் மூன்றில் ஒரு பங்கை அமெரிக்காவின் பொருளாதாரத்தில் முடக்கியது. அதன் வருடாந்த சராசரி முதலீட்டு விகிதம் அமெரிக்காவினுடையதைவிடவும் கிட்டத்தட்ட இருமடங்காகும்.

மேலே சுட்டப்பட்ட புள்ளிகள் போட்டிப் போராட்டத்தின் நிலையையும் நிலவும் போக்குகளையும் காட்டுகின்றன. இந்தப் போராட்டம் விலக்கிட முடியாதவகையில் போட்டியாளர் மீது குறுதேசிய வெறியையும் தேசியவாதத்தையும் புகுத்தும். அண்மை ஆண்டுகளில் ஜப்பான் மீதான கண்டன விமர்சனம் அமெரிக்காவில் குறிப்பாயும் பலமாக நடத்தப் பெறுகிறது. 1970—1973-ல் அமெரிக்கக் காங்கிரஸ் ஜப்பானிய இறக்குமதிப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்து மளவுக்கு முன் வந்தது. அமெரிக்க ஏகபோகம் தொழிலாளர் மத்தியில் தேசியவாத உணர்வுகளைத் தூண்டிவிடுகிறது: மோட்டார் தொழிலாளர்சங்கத்தின் சம்பளக்கோரிக்கைகள்- இது 7 லட்சம் தொழிலாளர் சம்பந்தப்பட்டது— எழுந்த போது அமெரிக்க முதலாளிகள் உலக மார்க்கெட்டில் ஜப்பானின் போட்டியை எதிர்த்துப் போரிட வேண்டுவதன் அவசியம் பற்றிக் குறிப்பிட்டார்கள். அமெரிக்க ஏகபோகங்களின் ஜப்பானிய, மேற்கு ஜெர்மானிய மற்றும் இதர போட்டியாளர்கள் இதே வகையில் பதிலடி தந்து தமது சண்டைக்கார வகைப்பட்ட தேசியவாதம், குறு தேசிய வெறியின் அமெரிக்க எதிர்ப்பு உணர்வுகளை வலியுறுத்துகிறார்கள். சித்தாந்த நெறியாக்கத்தின் விரிவான பிரசார சாதனங்கள் மீது உரிமை

செலுத்தும் ஏகபோகங்களின் இந்தப் போட்டி தொடர்ந்து தேசியத்தால் பின் தொடரப்படும் என்பதும், இது முதலாளித்துவ நாடுகளிலான தேசங்கள், மக்களினங்கள் இடையிலான உறவுகளைக் கட்டாயம் பாதிக்கும் என்பதும் தெளிவு.

ஏகாதிபத்தியம் காலனியாதிக்க அடிமைத் தளைகளை உதறித்தள்ளி வரும் நாடுகளிலும் தேசியவாத சித்தாந்தம் மிகவும் சிக்கலானதாயும் முரண்பாடுள்ளதாகவும் இருக்கும். இது பெரும்பாலும் பூர்ஷுவா, குட்டி பூர்ஷுவா நிலப் பிரபுத்துவ மற்றும் குலமரபு தேசிய வாதத்தின் ஒரு கதம்பமாகவே இருக்கும். இது இன்னும் முளைப்பருவத்தி லேயே இருந்த போதிலும், ஏற்கெனவே ஊதிப்பருத்த மிகையான தேசிய உணர்வைக் கொண்டிருக்கும். "உள் நாட்டு" சமயம், பாதிரிகளால் கொண்டுவரப்பட்ட சமயம் இரண்டின் செல்வாக்கும், கற்பனுவாத சோஷலிசத்தின் பல்வேறு பிரிவுகள் மற்றும் விஞ்ஞான சோஷலிசத்தின் செல்வாக்கு யாவும் சேர்ந்து பலமாக உணரப்படுகின்றன.

''முற்போக்கு தேசிய வாதம்'' என்று ஓரளவுக்குப் பரவலாக அறியப்படும் தொடர் முற்றும் சரி என்பதில்லை. எல்லா நடப்புக்களிலும் தேசிய வாதம், தேசிய ஒதுக்கம், தனிமை, அவநம்பிக்கை, பகைமை என்பனவற்றை ஏற்றுச் செல்லும், மக்களை ஒரு ''தேசியக் கூட்டில்'' அடைத்து வைக்கும். விளைவாக இது ஒரு பிற்போக்கு சித்தாந்த மேயாகும். மறுப்புக்கிடமின்றி, ஒரு சில கட்டங்களில் தேசிய கோஷங்களில் ஜனநாயகத்துவக் கூறுகள் இடம் பெறலாம். இதனுல் தேசிய வாதத்தின் உள்ளடக்கத்திலான பிற்போக்கு அம்சம் அகற்றப்பட்டு விடாது, அது தற்காலிக மாகவே இடம் பெறுகிறது. புரட்சியாளர்கள் அவருள் முதலாவதாக மார்க்சிய-லெனினிய வாதிகள் தேசிய வாதத்தில் எங்கு துல்லியமாயும் ஜனநாயகக் கூறுகள் தேசிய இயக்கத்திலுள்ள முற்போக்கு சக்திகளைப் பலப் படுத்த இயலுமோ அங்கு தேசிய வாதத்தை அங்கீகரித்து ஆதரிப்பார்கள்.

எடுத்துக்காட்டாக லெனின்இத்தகையதேசியவாதத்தை முற்போக்கானது என்று மட்டுமன்றி பூர்ஷுவா-முற்போக்கு தேசிய வாதம் என்று வருணித்தார். தேசிய வாதத்தை அங்கீகரிப்பதும் ஆதரிப்பதும் தேசிய வாதத்துக்குத் தாளம் போடும் போக்காக ஆகிவிடக் கூடாது என்று அவர் எச்சரித்தார். மேலும் இந்த ஆதரவு அதன் முற்போக்குக் கூறுகள் அளவில் கறாராக வரம்பிடப்பட்டிருக்க வேண்டும். இல்லாவிடில் இது தொழிலாளர்களின் போதத்தை பூர்ஷுவா சித்தாந்தத்தால் குழப்பப்படுத்துவதில் போய் முடியும். ''நியாயமானதோ'', ''தூய்மையானதோ'' செம்மையானதோ நாகரிகமானதோ எப்படியிருப்பினும் எல்லா வகை தேசிய வாதத்தையும் எதிர்த்துப் போராட வேண்டுவது அவசியம் என அவர் வலியுறுத்தினர்.

முற்போக்கானதாக இருப்பது தேசிய வாதமல்ல,மாறாக அதனுள் காணப்படும். ஜனநாயகத் தன்மையே என்று லெனின் சுட்டிக் காட்டினர். அதோடு புரட்சியாளர்கள் முரணற்ற ஜனநாயகத் தன்மைக்கு, தேசியப் பிரச்சினையின் தீர்விலான ஜனநாயகத் தன்மை உட்பட, போராடி வருவதால் அவர்கள் திட்டவட்டமான கட்டங்களில் தேசிய இயக்கங்களையும் தேசிய வாதத்தின் உள்ளடக்கத்திலான ஜனநாயகத் தன்மையையும் ஆதரிக்கலாம் எனவும் அவர் கூறினர்.

இந்த விஷயத்தில் கம்யூனிஸ்டுகள் லெனினது அறுதி யுரைகளை வழிகாட்டியாகக் கொண்டு, வளர்முக நாடுகளின், புரட்சிகர ஜனநாயக வாதிகளின் தேசிய வாத சித்தாந் தத்தை இன்றைய நிலைமையின் தறுவாயில் ஆதரிக்கிறார்கள். இந்த மாதிரியிலான தேசிய வாதத்தில் ஜனநாயகக் கூறுகள் சந்தேகமன்னியில் தமது சார்பிலான பங்கினை அதிகரித்துக் கொண்டிருந்த போதிலும், இதனை இன்னமும் மட்டு மழுப்ப லின்றி முழுமையாகவும் முற்போக்கானதுஎன்றும் வருணிக்க முடியாது.

புரட்சிகர ஜனநாயக வாதிகளின் தேசிய வாதத்தின் பாலான மார்க்சிய-லெனினிய தோரணையை வரையறுக்கும்

போதில், இந்த ஒரு கருத்தையும் மனதிற் கொள்ள வேண்டும். அவர்களது பார்வையில், தேசியவாத சித்தாந்தத்தில் சமூக மற்றும் தேசிய முன்னேற்றம் சம்பந்தமான எல்லாக் கருத்துப் படிவங்களும் அடங்கும். தேசியவாதத்தின் இந்த அம்சமே பல நாடுகளில் கட்சிகள் மற்றும் அரசுகளின் சித்தாந்தம் எனப் பிரகடனம் செய்யப் படுகிறது. சமுதாய புத்தாக்கத்தைக் குறிக்கும் இந்த அம்சமே பல்வேறு சோஷலிஸ்டு போதனைகளாலும் ஓரளவுக்கு விஞ்ஞான சோஷலிசத்தாலும் மற்ற விஷயங்களுடன் கூடவே செல்வாக்கிற்கு இலக்காகியுள்ளது.

உருவம் உள்ளடக்கத்தில் சிக்கலானதும், அவற்றை எவை தோற்றுவிக்கின்றனவோ அவை காரணமாகப் பல்வகைத் தன்மையும் பெறும் தேசிய வாதத்தின் வெளிப்பாடுகள் சோஷலிஸ்டு நாடுகளின் தொழிலாளி வர்க்க மற்றும் கம்யூனிஸ்டு இயக்கத்தில் காணப்படுகின்றன. பல வழிகளில் அவை சமுதாயத் தோற்றம் மட்டுமன்றி உளவியல் தோற்றம் கொண்டவை. சில சமயங்களில் அவை முதலாளித்துவ நாடுகளின் நிலைமைகளிலான தொழிலாளி வர்க்கத்தின் முரண்கூறிலிருந்து கிளைத்தவை. லெனின் கூறியது போல அதன் உயர் ஏறு வரிசை காலனி குறுதேசிய வெறியால் அல்லது குட்டி பூர்ஷுவா பின்னணியுடைய நபர்களின் செல்வாக்கால் பாதிக்கப்படும்போது இது நிகழ்கிறது.

இந்த தேசிய வாதத்தின் வடிவங்கள் பலவாகும். அவை பாட்டாளி வர்க்க சர்வதேசியத்தில் இருந்து குட்டி பூர்ஷுவா தேசிய வாதத்தை நோக்கியதான நேரடியான திரிபுகளாக இருக்கலாம், அல்லது தேசிய ஆணவம் மற்றும் தனி ஒதுக்கம், வீண் பெருமை மற்றும் இறுமாப்பின் பாலான சமரச மனப்பாங்கால் ஏற்படலாம்.

லெனின் கூறியுள்ளது போன்று பெரும்பாலும் ''அதிவல்லரசு அந்தஸ்துக்கான போலிப் பெருமை''*

* வி. இ. லெனின் ''நூல் திரட்டு'', தொகுதி 23, பக். 21.

அறிகுறி உள்ளது. ஒரு பெரிய தேசத்தின் விஷயத்தில் இது அயல் விவகாரங்களிலான மேலாதிக்கத்துக்கும் உள்நாட்டில் தன்வயப்படுத்தும் கொள்கைக்குமான அறைகூவலாக இருக்கும், சிறிய தேசங்களைப் பொருத்தவரை குறிப்பாயும விடுதலைக்கு முன்னர் தமது சுதந்திரத்தையும் நிலவுதலையும் கூட பல நூற்றுண்டுகளாக மகாவல்லரசுகளின் நிர்ப்பந்தத்தில் இருந்து தற்காத்துக் கொள்ள வேண்டியிருந்த இந்த தேசங்கள் விஷயத்தில் (உள்நாட்டில் தேசியச் சிறுபான்மையினரை ஒடுக்கும் அதே போதில்) இந்த ''போலிப் பெருமை'' சோஷலிசத்துக்கான அடித்தளம் இட்ட பின்னருங்கூட வெளித் தெரியும். இவை மெய்யான சமத்துவம் மறுதலிக்கப்பட்டிருக்கும் சிறுபான்மையினர் மீதும் இதர சோஷலிஸ்டு நாடுகள்பாலும் முடுக்கி விடப்பட்டு, மக்களினங்களின் சோதரக் குடும்பத்தில் ''நடுநிலைமை'' எனும் சூழ்ச்சி வகைப்பட்ட உரிமை கொண்டாடல் மூலம் அவற்றுடனுன ஒற்றுமையைப் பலவீனப்படுத்தும். அதனை மீறும் எண்ணம் கிஞ்சிற்றும் எவர்க்கும் இல்லாத போதிலும் அவை தேசிய மற்றும் அரசு சர்வவுரிமை விஷயத்தில் அளவு மீறியதான ''பாதுகாப்புத் தன்மை'' வடிவத்தை மேற்கொள்ளும்.

இதிலிருந்து சில நிலைமைகளில் தன்னுள் இடம் பெற்றுள்ள ஜனநாயகத்தின் கூறுகளைத் தவிர மற்றபடி தேசிய வாதம் என்பது, மக்களினங்களின் வாழ்க்கையில் அவர்களது வர்க்க நலன்களின் நோக்கு நிலையில் இருந்து மட்டுமின்றி அவர்களது தேசிய நலன்களின்படியுங்கூட ஓர் எதிர்மறைக் காரணியே எனும் லெனினது அறுதியுரையை வரலாறு ஊர்ஜிதம் செய்கிறது.

தேசிய வாதத்தை வென்று சமாளிப்பது என்பது ஆக முக்கியமான கடமைகளில் ஒன்றுகும். இது லெனின் கூறியது போன்று, ''மனிதகுலமானது எல்லாத் தனியுரிமைகளும் சகல சுரண்டல் முறைகளும் அறவே விலக்கப்பட்டதான ஒரு புதிய வாழ்க்கை முறையை நோக்கி அதாவது

சோஷலிசத்தை நோக்கி ஆக்கமுறுவதை ஊக்கப்படுத்தும்.* இந்தக் கடமைகள் பலவும் தேசியப் பிரச்சினையுடன் கட்டுண்டவை தொழிலாளி வர்க்கம் மட்டுமே இவற்றை நிறைவேற்ற முடியும்.

தேசங்கள் தேசிய உறவுகளின் அபிவிருத்தியில் தொழிலாளி வர்க்கம் வகிக்கும் பாத்திரம், சமுதாய வாழ்விலும் சமூக உற்பத்தியிலும் அது பெறும் இடத்தைப் பொறுத்தே உள்ளது. அதுவே ஒவ்வொரு தேசத்தினதும் பொருள்வகை மதிப்புக்களின் முக்கிய படைப்பாளியாக இருக்கிறது. உற்பத்தியின் விரிவாக்கத்துடன் கூடவே வளர்ச்சியடைந்து வரும் இது தவிர்க்க முடியா வகையில் உழைக்கும் மக்களின் முன்னணிப் படையினுள் உந்திவிடப் படுகிறது. அதன் உயர் அளவிலான அரசியல் போதம், ஸ்தாபனக் கட்டு, ஆக முன்னேறிய புரட்சித் தத்துவமான மார்க்சிய-லெனினியத்தைத் தன்வயமாக்கும் பாங்கு இவை அதனைத் தேசத்தின் சகல முற்போக்கு சக்திகளின் தலைமையில் இருத்துகின்றன. சோஷலிஸ்டு, முதலாளித்துவ சமுதாயஅமைப்புகள் இரண்டிலும் அது எல்லா வர்க்கங்கள், அடுக்குகளின் தலைமையில் நின்று, எல்லா தேசிய அம்சங்களையும் வளர்த்து இதர தேசங்களின் சாதனைகளைக் கொண்டு செழுமைப் படுத்தி அவற்றின் தேசிய நலன்களைப் பாதுகாக்கவும் செய்கிறது.

மேலே கூறப்பட்ட விவரம் பூர்ஷுவா வர்க்கமே முதலாளித்துவ தேசத்தின் அமைப்பாளர் எனும் உண்மையுடன் முரண்படுவதில்லை. முதலாளித்துவத்தின் எழுநிலை கட்டத்தில் புதிய உற்பத்தி முறையின் படைப்பாளியாக இருந்த பூர்ஷுவா வர்க்கம் உள்ளபடியே முதலில் பாட்டாளி வர்க்கத்தை விடவும் மேலும் அதிக வளர்ச்சியடைந்த வர்க்கமாக இருந்தது. ஆனால் அந்த நாட்களிலுங் கூட பாட்டாளி வர்க்கம் தான் தேசத்தின் நலன்களின் முரணற்ற பாதுகாவலனாக மறுக்கவியலாத வகையில்

---

* அதே நூல், தொகுதி 20, பக். 22.

இருந்தது, காரணம் வெகு துவக்கம் முதலே, பூர்ஷுவா வர்க்கம் தனது நலன்களுக்கு ஆபத்து நேருமாஞல் தேசத்தைக் காட்டிக் கொடுக்கத் தயங்காது என்ற பாணியில் இருந்தது. பாட்டாளி வர்க்கமும் தனது வர்க்க நலன்களை தேசிய நலன்களுக்கு மேலாகக் கருதியது என்பது உண்மையே. ஆனல் இதில் வித்தியாசம் இருந்தது. பாட்டாளி வர்க்க நலன்கள் எப்போதும் தேசத்தின் மிகப் பெரும்பாலானேர் நலன்களுக்கு ஒத்ததாகவே இருந்தது. அப்படியிருக்க பூர்ஷுவா வர்க்கத்தின் நலன்கள் சில இடங் களில் சில கட்டங்களில் மட்டுமே (தேசம் அமைதல் தேசிய சுதந்திரத்தைப் பாதுகாத்தல்) பொது நலனுக்கு ஒத்ததாக இருந்தன.

தேசத்தில் தொழிலாளி வர்க்கம் வகிக்கும் தலைமைப் பாத்திரம், அதன் எண்ணிக்கைப் பெருக்கத்தைச் சார்ந்த தல்ல. பொருளாதாரத்திலும் அரசியலிலும் தொழிலாளர் பெற்றுள்ள இடம், அவர்களது அரசியல் போதம் மற்றும் ஸ்தாபன பலத்தின் அளவு, மக்கள் திரளினரை ஒன்று திரட்டி முன்னேற்றப் பாதையில் தலைமை தாங்குவதிலான அவர்களது ஆற்றல் இவைகளில் இருந்து இது பெறப் படுகிறது. ஆனல் அவர்கள் எண்ணிக்கை திடமாக அதிகரித்து வருவதையும் மக்கள் தொகையில் அவர்களது விகிதம் பெருகி வருவதையும் முதன் முதலாக கவனத்தில் எடுத்துக் கொள்ளவேண்டுவதும் முக்கியமானதே. காரணம் தேசியப் பொருளாதாரத்திற்கு தொழில் துறை பொருளுற் பத்தியின் முக்கியத்துவமும் இதர தேசங்களுடனை இந்த தேசத்தின் உறவுகளும் மேலோங்கி வருகின்றன. இதற்கும் மேலாக நகரப் பண்பாக்கத்தின் தொடர்பான விளைபயனும் காணக்கிடக்கிறது. ஆசிய ஆப்பிரிக்க நாடுகளில், குறிப்பாக லத்தீன் அமெரிக்க நாடுகளில் இந்த நகரப்பண்பாக்கம் பெருமளவுக்கு முன்னேறியுள்ளது. எடுத்துக் காட்டாக 1970-ல் லத்தீன் அமெரிக்காவின் நகரப் புற மக்கள் தொகை 40 சதவிகிதமாயும், ஆசியாவினது 20 சதவிகிதமாயும் ஆப்பிரிக்காவினது 17 சதவிகிதமாயும் இருந்தது.

ஐ. நா. மதிப்பீடுகளின்படி 2000 ஆம் ஆண்டில் வளர்முக நாடுகளின் நகர்ப்புற மக்கள் தொகை 1970-ஐ விட மூன்று மடங்கு அதிகமாக இருக்கும்; அது 62 கோடி 20 லட்சத்தில் இருந்து 208 கோடி 70 லட்சமாக அதிகரிக்கும்.

உலகின் பல பகுதிகளில் இப்போது நிகழ்ந்து வரும் தேசிய ஒருமைப்பாட்டு இயக்கங்களில் தொழிலாளி வர்க்கத்தின் பாத்திரம் பெருமளவு மாற்றமடைந்திருக்கிறது. எழுநிலை முதலாளித்துவத்தின் கால கட்டத்துடன் ஒப்பு நோக்கிடில் அது கணிசமாக அதிகரித்துள்ளது தெரிய வரும். அன்று பூர்ஷுவா வர்க்கமே நடைமுறையில் தேசத்தின் ஒரே அமைப்பாளராக இருந்தது. சுதந்திரம் பெற்ற பிறகு முதலாளித்துவமற்ற வளர்ச்சிப் பாதையைத் தேர்ந்து கொண்ட நாடுகள் மக்களினங்களைப் பொருத்த வரையில், புதிய தேசங்களின் உருவாக்கத்தில் பூர்ஷுவா வர்க்கம் தலைமை தாங்குவதில்லை, மாறாக, குறைவோ கூடுதலோவான பாட்டாளி வர்க்கச் செல்வாக்கின் கீழ் புரட்சிகர ஜனநாயக சக்திகள் தலைமை தாங்குகின்றன. ஆனால் இங்கும் கூட புதிய தேசிய அரசை நிர்மாணித்தல், பொருளாயத கலாசார மதிப்புக்களைப் படைத்தல், தேசியப் பிணைப்புக்களை வலுப்படுத்தல், இதர தேசங்களின் சாதனைகளைக் கொண்டு தேசத்தை செழுமைப் படுத்தல் ஆகிய இத்தகைய துறைகளில் தொழிலாளி வர்க்கத்தின் பாத்திரம் திடமாக அதிகரித்தே வந்துள்ளது. வளர்முக ஆசிய, ஆப்பிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகளில் கூலி—தொழிலாளர் தொகை 1973 துவக்கத்தில் 23 கோடி முதல் 23 கோடி 50 லட்சம் வரை இருந்தது. இதில் கால்வாசிப்பேர் தொழில்துறை ஊழியர்களாவர். இந்தப் பெருக்கம் பொருளாதார முன்னேற்றத்தினால் மட்டுமின்றி, பொதுத்துறை திடமாக வளர்ச்சியடைந்ததாலும் ஏற்பட்டதாகும்.

வளர்ச்சியடைந்த முதலாளித்துவ தேசங்களிலும் தொழிலாளி வர்க்கத்தின் பாத்திரம் அதிகரித்து வருகிறது. ஏகபோக ஆதிக்கத்தை எதிர்த்தும் ஜனநாயகத்தை ஆதரித்தும் போராடி வரும் முற்போக்கு ஜனநாயக சக்திகள் மேலும் மேலும் தொழிலாளி வர்க்கத்தைச் சுற்றித் திரண்டு வருகின்றன. ஆகவே, தேசங்களின் வளர்ச்சியிலான தொழிலாளர் பாத்திரம் இயல்பாகவே மாறுதலையடைகிறது. தேசிய வாழ்வில் தலைமைப் பாத்திரத்தை அது ஏற்கவேண்டுவது மேலதிகமாயும் அவசர அவசியமாகி விட்டது. இதனை சாதிப்பதற்கான வழி முறைகள், கம்யூனிஸ்டு தொழிலாளர் கட்சிகளின் 1969 ஆம் ஆண்டு மாநாட்டில் வரையறுக்கப்பட்டன. இந்த மாநாடு முதலாளித்துவ நாடுகளில் தொழிலாளி வர்க்கத்தின் தலைமையின் கீழ் ஓர் ஐக்கிய ஏகாதிபத்திய-எதிர்ப்பு முன்னணியை அமைப்பதற்கான வேலைத்திட்டத்தை வகுத்தது.

''லெனினும் சமாதானம், ஜனநாயகம், சோஷலிசத்திற்கான போராட்டத்தின் புதிய பிரச்சினைகளும்'' எனும் மகுடத்திலான தமது கட்டுரையில், கனடா நாட்டு கம்யூனிஸ்டுக் கட்சியின் தலைவர் (அமரர்) டிம் பக் வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளின் வாழ்வில் பூர்ஷுவா மற்றும் தொழிலாளி வர்க்கத்தின் மாறிவரும் பாத்திரம் குறித்துள்ள கனடாவின் உதாரணத்தைப் பயன்படுத்தி வெகு தீர்க்கமான பகுப்பாய்வினைச் செய்தார். கனடா நாட்டு பூர்ஷுவா வர்க்கம், நாட்டின் நலன்களைக் காட்டிக் கொடுத்து விட்டது என்று அவர் சுட்டிக் காட்டினார். கடந்த 20 ஆண்டுகளாக தேசியப் பொருளாதாரம் நாட்டின் தேசியச் செல்வ வளங்கள் அமெரிக்காவில் தலைமைப் பீடத்தை வைத்துக் கொண்டிருக்கும் சர்வதேச ஏகபோகங்களின் உடைமைக்கு மாறிவிட்டன, தொழிலாளி வர்க்கம் மெய்யான தேசிய நலன்களைப் பாதுகாப்பதில் மேலதிகமாயும் முன்னணியில் நிற்கிறது என்று அவர் குறிப்பிட்டார். ''தொழிலாளி வர்க்கத்தின் புரட்சி சக்திகளின்

தலைவர்களான கம்யூனிஸ்டு, தொழிலாளர் கட்சிகளை தத்து வத்தில் இருந்து செயலூக்கான ஜீவாதாரமான பாய்ச்சலை முன்னைவிட அதிகமாக நடத்தும்படி கோரப்படுகின்றன. தேசத்துக்கு வழிகாட்டும் பொறுப்பை அவை ஏற்றுக் கொள்ள வேண்டும். தற்போது தேசியப் படுநாசத்துக்கு இட்டுச் செல்லும் ஏகபோகங்களின் சூன்யவாதக் கொள்கை களுக்கு எதிராக அவை திட்டவட்டமான ஜனநாயக மாற்றுத் திட்டங்களை முன்நிறுத்தி அவற்றுக்கு ஆதரவு தேடப் போராடவேண்டும். தற்போது கைவசம் இருக்கும் வழிகளையும், போராட்டத்தின் செல்வழியில் ஆக்கம் பெறும் இதர வழிகளையும் சேர்த்து சகல ஜனநாயக வழிமுறை களாலும் போராடி, தேசத்தின் மெய்யான சித்தாந்தத் தலைமையை மேற்கொள்ள வேண்டும்''* என்று டிம்பக் எழுதினார்.

தொழிலாளி வர்க்கமும் அதன் மார்க்சிய-லெனினியக் கட்சிகளும் தேசிய நலன்களை முரணின்றி பாதுகாக்கப் போராடுதல் கண்டு பிற்போக்காளர்கள் கோபாவேசம் கொள்கின்றனர். பூர்ஷுவா மற்றும் வலதுசாரி சீர்திருத்த வாத சித்தாந்திகள் உண்மையான நிலவரத்தைப் புரட்ட முயல்கிறார்கள். ''வரையறுக்கப்பட்ட சர்வவுரிமை'' கொள்கையைப் பின்பற்றி வருவதாக கம்யூனிஸ்டுகள் மீது குற்றம் சாட்டி 1969-ல் தீர்மானம் போட்ட சோஷலிஸ்டு அகிலத்தின் தலைவர்களுக்கு இது பொய் என்பது அப்பட்ட மாகத் தெரியும், இந்தத் தத்துவம் நடைமுறையில் பல வலது சாரி சோஷலிஸ்டுக் கட்சிகளின் வேலைத்திட்டங்களில் அதிகார பூர்வமாகப் பிரகடனம் செய்யப்பட்டது. 1962 ஜூலையில் பிரான்ஸ் நாட்டின் சோஷலிஸ்டுக் கட்சி ஏற்றுக் கொண்ட ''அடிப்படை வேலைத்திட்டத்தைப் பார்ப்போம்''. அரசுகளின் சர்வவுரிமை, மக்களினங்களின் பரிணாமத்தில் ஒரு வரலாற்றுவழி கட்டம், அதன் இன்றைய வடிவில் தன்னை நிரந்தரப்படுத்திக் கொள்ளுமேயாயின்

* வர்ல்ட் மார்க்சிஸ்ட் ரெவ்யூ, இதழ் 7, 1970, பக். 4.

அது மனிதகுலத்தின் பொருளாதார, சமூக, கலாசார வளர்ச்சிக்குத் தடையாகச் செயல்படும், மற்றும் போர் அபாயத்தை அதிகரிக்கும்''* என்று அது தெளிவாகக் கூறுகிறது. அது மேலும் ''சர்வவுரிமைக்கு வரம்பிடப் படுவதுதான் துல்லியமாயும் சர்வதேச மார்க்கெட்டையும் பொருளாதாரத்தின் படிப்படி சர்வப்பொதுவான அமைப் பையும், மக்களினங்களின் நலன்களுக்காக உற்பத்தியை விஸ்தரித்து மேலும் சிறப்பான வினியோகத்தை விரிவு படுத்துவதையும் அனுமதிக்கிறது.''**

வலதுசாரி சோஷலிஸ்டுகளின் வேலைத்திட்டங்களில் காணப்பெறும் தேசிய சர்வவுரிமையின் பாலான புறக்கணிப்பு உண்மையில் ஏகபோக மூலதனத்தின் நலன்களின் ஒரு பலவீனமான எதிரொலி மட்டுமேயாகும். இதை மேலைநாட்டு சித்தாந்தவாதிகள், அரசியல்வாதிகளின் மிகுதெளிவான கடைமுடிவுகளில் இருந்து எளிதில் காணலாம். எடுத்துக் காட்டாக மேற்கு ஜெர்மன் தத்துவவியலாளர் கார்ல் ஜஸ்பெர்ஸ் ஒரு மக்கள், தேசிய சர்வவுரிமையை நிராகரிப்பதை ''ஓர் அரசியல் மாட்சிமிகு செயலாகக்'' கருதப்பட வேண்டும் என வாதிக்கிறார். சர்வவுரிமை அரசு எனும் கருத்துரு அரசியல் வளர்ச்சியின் விளைவாகக் காலாவதியாகி விட்டது என்கிறார் அவர். தேசத்தின் மெய்யான பிரதிநிதிகளுக்கு இனிமேலால் தேசிய அரசுத்துவ உணர்வோ தாயகம் எனும் எண்ணமோ, மக்களோ உத்வேசமூட்டப்போவதில்லை. மாறாக ''சுய உரிமை வலியுறுத்து உணர்வே'' உத்வேகம் தரும். ஆயினும் இதிலிருந்து வந்து முடிவது இதர மக்களினங்கள் மீது ஆதிக்கம் செலுத்துவதற்கான மேற்கு ஜெர்மன் ஏகபோகங் களின் ஆர்வ நாட்டமேயாகும். ''தொழில்-வாணிக

---

* La Revue Soialiste, *பாரிஸ், ஜூலை 1962, இதழ் 155. பக். 133.*

** அதே நூல், *பக். 134.*

நிறுவனங்களுக்கு தனி தேசிய இனம் இல்லையேல் தேசிய மார்க்கெட் எனும் கருத்துருக்குப் பொருளில்லை''* என்று அமெரிக்க பூர்ஷுவா பொருளாதார நிபுணரான லாரன்ஸ் பி. கிராஸ் வாதிடுகிறார். பிரெஞ்சு சட்டநிபுணர் பியரி வெல்லாஸ் ''ஐரோப்பா சர்வவுரிமையுள்ள அரசுகளாகத் துண்டாடப்படுவதே மேற்கு ஐரோப்பாவின் வளர்ச்சி அமெரிக்காவினதைவிடப் பின் தங்கி இருப்பதற்குக் காரணம்''** என்று கருதுகிறார்.

பூர்ஷுவா அரசியல் வாதிகள் இதைவிடவும் அதிகமாகத் துணிந்து பேசுகிறார்கள். முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி லிண்டன் பி. ஜான்சன் 1666 மார்ச்சில் சர்வவுரிமை எனும் பழைய குறுகிய கருத்துரு நவீன சமுதாயத்துக்கு சற்றும் ஏற்புடையதல்ல என்று பறை சாற்றினார். கனடாவின் பிரதமர் பியரி எலியட் ட்ருடாவ் வட அமெரிக்க ஏகபோகங்களின் ஊடுருவலில் இருந்து தமது நாட்டின் சர்வவுரிமை பாதுகாக்கப்பட வேண்டும் என்று அடிக்கடி உரைப்பார். அவரே சுயநிர்ணய உரிமையையும் சர்வவுரிமைகளையும் விழையும் பிரெஞ்சு மொழி பேசும் கனடியருக்கு அளித்த பதிலில் ''தேசம் எனும் கருத்துரு பிற்போக்கானதல்ல; ஆனால் தேசம் சர்வ வுரிமையுடன் இருக்க வேண்டுவது அவசியம் எனும் கருத்தே பிற்போக்கானது''*** என்றார். பிரான்சின் தீவிரக் கட்சியின் தலைவர் ஜின் ஜேக்கஸ் செர்வான் ஷ்ரிபெர் கூட்டாட்சி ஐரோப்பாவுக்கு ஆதரவாக தேசிய சர்வவுரிமையை கைவிட்டுவிடத் தயாராக இருப்பதாகச்சொன்னார். பன்னாட்டு கூட்டு நிறுவனங்களின் பெருகிவரும் செல்வாக்கை எதிர்க்க

---

* லாரன்ஸ் பி. கிராஸ், ''ஐரோப்பிய பொருளாதார இணைப்பாக்கமும் அமெரிக்காவும், வாஷிங்டன், 1968, பக். 147.

** பி வெல்லாஸ், L'Erope face a la revolution technologique americaine, பாரிஸ், 1969, பக். 39.

*** பியரி எலியட் ட்ருடோ, சமஷ்டி, அமைப்பும் பிரெஞ்சு மொழி கனடியரும், டோரண்டோ, 1968, பக். 151.

முதலாளித்துவ உலகுக்குத் தேவை ''அதே தரத்திலான அரசியல் அதிகாரம். இதற்குரிய வழி பிராந்திய கூட்டாட்சிகளே என்று நினைக்கிறேன். ஐரோப்பாவுக்கு ஒரு கூட்டாட்சி, தென் கிழக்காசியாவுக்கு ஒரு கூட்டாட்சி, தென் அமெரிக்காவுக்கு ஒரு கூட்டாட்சி தேவை''* என்று நம்புகிறார்.

மக்களினங்களின் தேசிய மற்றும் அரசு சர்வவுரிமையைத் தாங்கி ஆதரிப்பது பூர்ஷுவாக்களல்ல, மாறாக தொழிலாளி வர்க்கமே. தொழிலாளி வர்க்கத்தின் சார்பில் தான் 1969-ல் நடைபெற்ற கம்யூனிஸ்டு, தொழிலாளர் கட்சிகளின் சர்வதேசிய மாநாடு அங்கீகரித்த தனது தஸ்தவேஜுகளில் மக்களினங்களின் சர்வவுரிமையைப் பாதுகாத்து வலுப்படுத்தவும், தேசிய வளர்ச்சிக்கான சுதந்திரத்தை உறுதிப்படுத்தவும் முரணற்ற போராட்டம் அவசியம் என்பதை வலியுறுத்தியது.**

தேசிய மற்றும் அரசு சர்வவுரிமை முழுமையாக அனுசரிக்கப்படுவதை சோஷலிசத்தால் மட்டுமே உத்தரவாதம் செய்ய முடியும். மறுபக்கம் சர்வுவுரிமைக்கு வரம்பு மற்றும் தேசங்களின் சுயநிர்ணயவுரிமைக்கு வரம்பு-இவை முதலாளித்துவத்தின் அசல் இயல்பிலிருந்தே தொடர்வதாகும். சோஷலிசத்தின் கீழில் மட்டுமே, தேசங்களின் சுயநிர்ணய உரிமையும், சர்வவுரிமையைச் செயல் படுத்துவதும், சமுதாய அமைப்பின் தன்மையுடன் அல்லது சர்வதேசியமாக்கல் நடைமுறைகளுடன் முரண் படுவதில்லை.

முதலாளித்துவத்தின் பொது நெருக்கடியின் மூன்றாவது கட்டத்தில், தேசங்கள் தேசிய உறவுகளின் வளர்ச்சியின் உள்ளடக்கத்தில் ஏற்பட்டுள்ள மாறுதல்கள் இவையே. இந்த

---

* பிசினஸ்வீக், நியூயார்க், அக்டோபர் 14, 1972, பக் 66.

** காண்க கம்யூனிஸ்டு தொழிலாளர் கட்சிகளின் சர்வதேசிய மாநாடு,மாஸ்கோ, 1969, பக். 28—29.

மாறுதல்கள் பற்றியும் உலகப் புரட்சி இயக்கத்திலான அவற்றின் பாத்திரம் பற்றியுமான மேலும் விரிவான பகுப்பாய்வு செய்ய வேண்டுமேல், அதன் மூன்று நீரோட்டங்களான: உலக சோஷலிசம், சர்வதேச தொழிலாளி வர்க்க இயக்கம் மற்றும் மக்களினங்களின் தேச விடுதலைப் போராட்டம் இவை அனைத்தையும் பற்றிய பரிசீலனை அவசியம்.

அத்தியாயம் பத்து

உலக சோஷலிஸ்டு அமைப்பும் தேசியப் பிரச்சினையின் உள்ளுறை மீதான அதன் செல்வாக்கும்

1. சர்வதேசிய வாதம்—சோஷலிஸ்டு நாடுகளின் மக்களினங்கள் இடையிலான உறவுகளை நிர்ணயிக்கும் சமூகக் காரணி

உலக சோஷலிஸ்டு அமைப்பு தோன்றியபோது, அதன் உறுப்பு அரசுகள் இடையிலான உறவுகள் முதல் தடவையாக சோஷலிஸ்டு சர்வதேசிய வாதத்தை அடிப்படையாக்கியதாக இருந்தன. பாட்டாளி வர்க்க சர்வதேசியத்தின் முனைப்பமைவான இது மாபெரும் தேசபக்தப் போருக்கு முன்னதாக சோவியத் ஒன்றியத்தின் மக்களினங்கள் இடையிலான உறவுகளில் திட்டமாக உருவகம் பெறத் தொடங்கியது. சோஷலிசம் ஒரு நாட்டின் எல்லைகளைக் கடந்து உதித்தெழுந்தபோது, அதன் செயல்துறை விரிவடைந்தது. அது குணும்ச ரீதியில் உயர் மட்டத்திற்கு எழும்பி புதியதான சித்தாந்த, தத்துவார்த்த, சமூக மற்றும் அரசியல் உள்ளடக்கத்தைப் பெற்றது.

சோஷலிஸ்டு சர்வதேசியம், உலக சோஷலிஸ்டு அமைப்பில் தேசங்களின் வளர்ச்சியின் புறவயப் போக்கியல்புகளை வெளியிடுகிறது. அதோடு, அந்த அமைப்பின் அகத்தேயான, மக்களினங்கள் அரசுகள் கட்சிகள் என்ற

வகையில், இவற்றிடையான புதுவகையான சர்வதேச உறவுகளை முன்மாதிரியாகக் காட்டுகிறது, மக்களினங்களை அழிக்கமுடியாத ஒரு சோதரக் குடும்பமாக ஒன்றிணைக்கிறது.

இன்று சோஷலிஸ்டு சர்வதேசியம் வெறும் சித்தாந்த அரசியல் கருத்தோட்டம் என்பதற்கும் மிகையானது. அது உலக சோஷலிஸ்டு அமைப்பின் மக்களினங்களின் பொருளாதார, கலாசார வாழ்விலும் அவர்களது அன்றாட வாழ்க்கைப் பாங்கிலும் நிலவும் முக்கியமான சமுதாயக் காரணியுமாகும். மக்களினங்களின் சகல-துறை சங்கமிப்பில் உருவகம் பெற்ற இது, சோஷலிசத்தின் எல்லா சாதகங்களையும் திறமாகப் பயன்படுத்துவதற்குரிய அனுகூலமான நிலைமைகளை வழங்குகிறது.

சோஷலிஸ்டு சர்வதேசியம் தேசிய நலன்களை மேம்படுத்துவதற்கான அடித்தளமும் பிரதான முன் நிபந்தனையும் கூட. இதிலிருந்தே ஆளும் கட்சிகள் ஒவ்வொரு நாட்டின் தேசிய, அரசியல் இயல்புகளை ஆராய்கின்றன, சோஷலிஸ்டு நிர்மாணத்தின் வடிவங்களையும் முறைகளையும் பேரளவுக்கு அதிகரிக்கின்றன, மக்களினங்களின் இடையே சோதர ஒத்துழைப்பையும், பரஸ்பர உதவி புரிதலையும் ஊக்குவிக்கின்றன.

சோஷலிஸ்டு நாடுகள் ஒவ்வொன்றினதன் நலன்களுடன் அவற்றின் பொதுவான நலன்களை இசைவாக இணைப்பதற்கு, அவற்றின் மத்தியிலுள்ள எல்லா தேசிய சர்வதேசிய இயக்கங்களைப் பற்றி தீர்க்கமாக கவனம் செலுத்த வேண்டும்

ஒரு புதிய மாதிரி வடிவிலான சமூக உறவுகள் என்ற வகையில் சோஷலிசத்தின் அரசியல் சித்தாந்த சாரம் எல்லா நாடுகளிலும் ஒரே தன்மையதாக இருக்கும். சோஷலிசத்தின் கீழிலான தேசிய சர்வதேசிய இயக்கங்களை, ஒருபுறம் சமுதாயம் வளர்த்து வரும் தேசிய வடிவத்தோடும் மறுபுறத்தில் சோஷலிசம் வாழ்க்கையின் எல்லாத் துறைகளும் சர்வதேசிய மயமாக்கப்படுவதை மிகவும் வேகமுடுக்கம் செய்தல், மக்களினங்களைச் சேர்த்து இணைத்தல், பரஸ்பர

செல்வாக்கு, பரஸ்பர செழுமைப்பாடு ஆகியவற்றை உத்தரவாதம் செய்தல் எனும் மெய்நடப்போடும் வைத்து இனங்காண வேண்டும்.

தனியுடைமை பொதுவுடைமையால் மாற்றீடு செய்யப் பட்டதும், உற்பத்தியிலான சோஷலிஸ்டு உறவுகளும் வெவ்வேறு நாடுகளில் சோஷலிஸ்டு, கம்யூனிஸ்ட் நிர்மாணத்தின் அதே சர்வப் பொது நியதிகளை இயக்கி விட்டுள்ளன. அவற்றின் உள்நாட்டு வெளிநாட்டுக் கொள்கைக்கு ஒருசர்வதேசியத் தன்மையினை அளித்துள்ளன, சோஷலிசத்தை அமைப்பதற்குரிய பொதுவான கோட்பாடு களைக் கொண்டு வந்துள்ளன, தனியொரு மார்க்சிய லெனினிய, சாரத்தில் சர்வதேசியத் தன்மை கொண்ட சித்தாந்தத்தை வலியுறுத்துகின்றன. இருப்பினும், உலக சோஷலிசத்தை நிர்மாணிப்பதன் செயல் அனுபவம்—சோஷலிஸ்டு நிர்மாணத்தின் திட்டவட்டமான வடிவங்கள்—சமுதாயத்தின் அரசியல் ஸ்தாபனம் அதன் வளர்ச்சியின் நெறியாக்கம், பொருளாதார நிர்வாகமுறைகள் இத்தியாதி-வித்தியாசப்படும் எனும் மார்க்சிய-லெனினிய வரையறுப்பை ஊர்ஜிதம் செய்துள்ளது. இதற்கும் மேலாக, பிரடெரிக் எங்கெல்ஸ் சுட்டியது போன்று சர்வதேசத் தொழிலாளி வர்க்கத்தின் ஒற்றை ஆதார நெறி ஒவ்வொரு தேசத் தினதுமான பல்வகை நிலைமைகளுக்கும் தானே இஷ்டம் போலத் தகவமைத்துக் கொள்கிறது என்பதை நாம் எப்போதும் நினைவில் வைத்திருக்க வேண்டும்.*

இதை அழுத்தி வற்புறுத்திய லெனின், மார்க்சிய தத்துவம் பொதுவான வழிகாட்டு நெறிகளை மட்டுமே வழங்குகிறது என்றும், இவை வெவ்வேறு நாடுகளில் வெவ்வேறு வகையில் பிரயோகிக்கப்படுகின்றன எனவும் சுட்டிக் காட்டினார்.**

---

* மார்க்ஸ், எங்கெல்ஸ், ''நூல்கள் தொகுப்பு'', 19, பக். 124.

** காண்க வி.இ. லெனின்''நூல் திரட்டு'' தொகுதி 4, பக். 184.

தேசிய சர்வதேசிய இயக்கங்கள் இயக்கவியல் முறையில் தொடர்பாடுடையவை; சர்வதேசிய இயக்கம் தேசிய இயக்கத்தின் அடிப்படையில் துவங்குகிறது, பின்னது சர்வதேசிய இயக்கத்தின் செல்வாக்கின் கீழ் ஆழமுற்று பன்முகத் தன்மை பெறுகிறது.

தேசிய இயக்கங்களின் மத்தியில், சோஷலிஸ்டு மாற்றங்களின் ஒட்டு மொத்தத்தின் அடிப்படையில், முதலில் எழுவது தேசத்தின் ஒற்றுமையை அடைவதற்கான போக்கேயாகும்.

தேசத்தின் இந்தப் புதிய ஒற்றுமை தொழிலாளி வர்க்கத்தின் வழிகாட்டுதலின் கீழ் திட்டமாக உருவாகிறது. அதோடு பாட்டாளிகளல்லாத நகரப்புற மற்றும் நாட்டுப்புற உழைக்கும் மக்கள் திரளினருடனும், அறிவுத் துறையினரின் முற்போக்குப் பகுதிகளுடனுமான இதன் கூட்டணியைப் பிரதிநிதித்துவப் படுத்துகிறது. சுரண்டல் முறையை ஒழிக்கவும் சோஷலிஸ்டு புரட்சியின் வெற்றியை சாதனையாக்கவும்—இது தேசத்தின் தலைமை பாட்டாளி வர்க்கத்திடம் ஒப்படைக்கப்பட்டாலன்றி சாத்தியமல்ல—நடைபெறும் போராட்டத்தில் பல்வேறு வர்க்கங்கள் சமுதாயப் பிரிவுகளின் பொதுவான நலன்கள், லட்சியங்கள் மீது இது உறைந்து நிற்கிறது.

ஐரோப்பிய சோஷலிஸ்டு நாடுகள்சிலவற்றில்,மார்க்சிய-லெனினிய அடிப்படையில் கம்யூனிஸ்டு சமூக ஜனநாயகக் கட்சிகள் சேர்ந்திணைந்து, தொழிலாளி வர்க்கத்தின் முன்னுள் பிளவுகளைச் சரி செய்தபோது, தேசிய ஒற்றுமையை நோக்கிய ஒரு முக்கியமான முன்னேற்றம் சாதனையாயிற்று. ஒன்றிணைந்த ஒரே கட்சியின் வழிகாட்டுதலின் கீழ் உழைக்கும் வர்க்கங்களும் தேசத்தின் அடுக்குகளும் தனி ஒரு முழுமையாக வார்த்து இணைக்கப்பட்டன.

தேசிய அரசுத்துவம் அல்லது பழைய அரசுத்துவத்தை குணும்சத்தில் மறுபாணி செய்து மேம்படுத்தப்பட்ட முறை உருவாக்கப்பட்டதானது, உலக சோஷலிஸ்டு அமைப்பில்

ஏற்பட்டுவரும் இன்னொரு முக்கியமான தேசிய நடப்பு ஆகும். இது விரிவான மக்கள் திரளினரை புதிய பொருளாதார அரசியல் வாழ்வுக்குள் கொண்டுவர உதவுகிறது, அதோடு மக்களினங்களின் தேசிய முன்னேற்றத்தையும் உறுதிப்படுத்துகிறது.

தேசிய அரசு என்பது ஒரு தேசத்தின் அரசியல் அமைப்பின் வடிவங்களில் ஒன்றாகும். இது சோஷலிசத்தின் கீழும் அப்படியே இருக்கும். சரியாகப் பயன்படுத்தப் பெற்றால் தேசிய அரசுத்துவமானது மக்களினங்களின் முற்போக்கான அபிவிருத்தியைத் தொடர்ந்து வேகமுறச் செய்யும். தேசியஅரசுத்துவத்தை மேம்படுத்துவது என்பதன் பிரதான அர்த்தம் சமுதாயத்தை முழு வேகத்தில் ஜனநாயக மயமாக்குவது, அரசுத்துவத்தைப் பயன்படுத்தி தேசத்தின் பொருளாதாரத்தையும் கலாசாரத்தையும் உயர்த்துவது, மக்களினங்களின் அரசியல் செயல்பாட்டையும் உழைப்பையும் ஊக்குவிப்பது என்பதே.

சோஷலிஸ்டு கூட்டுக் குடும்ப நாடுகளின் மக்களினங்கள் தமது தேசிய சர்வவுரிமையினை வலுப்படுத்திக் கொள்ள உதவும், இந்த வேகமுடுக்கம் பெறும் பொருளாதார கலாசார ஆக்கம், சம்பந்தப்பட்ட தேசங்களின் படைப்பு சக்திகளை கட்டவிழ்த்து விடுவதற்கு அத்தியாவசியமானது. தொழில்மயமாக்கல் நடைமுறையின் போது, தொழில்களின் எல்லாப் பிரிவுகளையும் நிறுவிடாமலே, ஒவ்வொரு நாட்டிலும் தேசியப் பொருளாதாரப் பன்முக அமைபபை உருவாக்குவதற்கான புறநிலை வாய்ப்புக்களை அளித்திருந்த போதிலும், இது செயல்படுத்தப்பட்டது.

முதலாளித்துவ தேசங்கள், தேசிய இனங்களை சோஷலிஸ்டு தேசங்கள் தேசிய இனங்களாக மாற்றுவதே உலக சோஷலிஸ்டு அமைப்பில் நடைபெற்று வரும் ஆக முக்கியமான தேசிய நடப்புக்களில் ஒன்றாகும். பல்தேசிய இன அரசுகளில் சில தேசிய இனங்கள் சோஷலிஸ்டு தேசங்களாக மாற்றமுறும் திசையில் முன்னேறுகின்றன. சமூகம் ஜனநாயக மயமாக்கப்படுவதன் மூலம், தேசியச் சிறுபான்மை

யினர் இஷ்டப்படி அபிவிருத்தியடைவதற்கு ஊக்கம் கிட்டு கிறது. முதலாளித்துவம் தேசிய சமத்துவம் குறித்து வெறும் சம்பிரதாய பிரகடனங்களுடன் நின்று விடும் அதே போதில், சோஷலிசம் சிறிய மக்களினங்கள் தேசியச் சிறுபான்மையினர் எழுச்சியுறுவதற்கான மெய்யான வாய்ப்புகளை அளிக்கிறது.

சோவியத் ஒன்றியத்திலும் சோஷலிஸ்டு நாடுகளிலும் இருக்கும் சோஷலிஸ்டு தேசங்களின் முக்கியமான தனிச் சிறப்பான தன்மைகளில் ஒன்று, சமூக உள்ளியைபு அதிகரித்ததன் பலனாக தேசத்தின் எல்லா உறுப்பினர் களினதும் அடிப்படை பொருளாதார அரசியல் நலன்கள் முற்றொருமையாக இருப்பதேயாகும். முழுமையான உள்ளியைபு பிந்திய கட்டங்களில் பெறப்படும், ஆனால் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் வெகுதுவக்கம் தொட்டு அடைந்த வெற்றியும் முக்கியமானதே: தொழி லாளர்—விவசாயிகள் கூட்டணியின் அடிப்படையில் தேசத்தின் ஒற்றுமை மேலும் நெருங்கி வருகிறது, வர்க்கங் களற்ற ஒரு சமுதாயத்தைக் கட்டுவதற்கு அதன் செயலூக்க மான பங்கேற்பு கிட்டுகிறது, தேசங்களின் சங்கமிப்புக்கும் இறுதியில் ஒன்றிணைவதற்குமான மேலும் சாதகமான நிலைமைகள் எழுகின்றன.

சுதந்திரமான மக்களினங்களின் வாழ்க்கையிலான புறநிலை தேசிய நடப்புக்களுக்கும் மேலை சித்தாந்தவாதி களின் புதுக் கண்டுபிடிப்புக்களுக்கும் பொதுவான அம்சங்கள் எதுவுமே இல்லை. அவர்கள் சோஷலிசம் தேசிய விரோதமானது என்று வாதிடுகிறார்கள், சோஷலிஸ்டு நாடு களிலுள்ள கம்யூனிஸ்டு, தொழிலாளர் கட்சிகள் சோஷ லிசத்தையும் தேசிய உணர்வுகளின் பெருக்கத்தையும் ''சமரசப்படுத்த வேண்டிய'' கட்டாயத்திற்குள்ளாகி யிருக்கிறார்கள் எனவும் சாதிக்கிறார்கள். எனினும் மக்களி னங்களின் தேசிய போதம் அதிகரிக்காமல், சர்வதேசியக் கல்வி மூலம் அது செழுமைப்பாடுறாமல், சர்வதேசக் கடமைகளை செய்து நிறைவேற்றாமல், முழுமையான சமூக

தேசிய விமோசனத்தின் சூழலிலான மக்களினங்களின் மெய்யான சுதந்திரம் என்பதை எண்ணிப் பார்க்கவும் முடியாது. தேசிய உணர்வுகளை செழுமையூட்டுவதும் பேணி வளர்ப்பதுமே சோஷலிசத்தின் தனி மாதிரிப் பண்பாகும், அவற்றைக் குறைவாக மதித்து அவமதிப்பதல்ல. அவை மக்கள் தமது தேசத்தின் பொருள்வகை மற்றும் அகவள மதிப்புக்களைக் கட்டிக் காத்துக் கொள்ளவும், அவர்களது வெற்றிகளிலும் சோஷலிஸ்டு நிர்மாணத்திலான அவர்களின் பங்குப் பணியிலும் பெருமிதம் கொள்ளவும், சுதந்திரத்துக்கும் புதுவாழ்வுக்குமான போராட்டத்தில் பல்வேறு தேசங்கள் தேசிய இனங்களின் தேசிய நலன்களிலான முற்றொருமையைப் புரிந்து கொள்ளவும் இவை துணை செய்கின்றன.

நமது தேசிய போதம் மேலும் மேலும் அதிக அள்வுக்கு சோஷலிஸ்டு சர்வதேசியவாத போதமாக மாறி வருகிறது என்று ஹங்கேரி சோஷலிஸ்டு தொழிலாளர் கட்சியின் முதற் செயலாளர் ஜானோஸ் காதர் கூறினார். இந்த நாட்களில் தேசிய உணர்வுகளும் தேசபக்தியும் நாட்டின் மீதான பற்றுதலையும் விசுவாசத்தையும் குறிக்கின்றன; சோஷலிஸ்டு தேச பக்தி இதர சோஷலிஸ்டு நாடுகளுடனான சகோதரத்துவத்தையும் உலக முழுதுமுள்ள உழைக்கும் மக்களுடனான ஒருமைப்பாட்டையும் கூடக் குறிக்கிறது.

தேசங்களின் வளர்ச்சியிலான புறநிலை மற்றும் அகநிலைக் காரணிகளின் தொடர்பாடு முதலாளித்துவத்துடன் ஒப்பு நோக்குமிடத்து சோஷலிசத்தின் கீழ் சற்றே மாறுபட்ட காட்சியளிக்கிறது—அகநிலைக் காரணிகளின் பாத்திரம் அதிகரிக்கிறது. அது, தொழிலாளி வர்க்கம் அதன் மார்க்சிய—லெனினிய கட்சிகளின் ஸ்தாபன ரீதியான, கல்வி சம்பந்தப் பட்ட பாத்திரத்திலும், பாட்டாளி வர்க்க சர்வதேசியம் பொதுவான மார்க்சிய-லெனினியத்தின் முன்னேறிய புரட்சி சித்தாந்தத்தின் திடமாக அதிகரித்துவரும் செல்வாக்கிலும் தன்னைத்தானே வெளிப்படுத்திக் கொள்கிறது.

சோஷலிஸ்டு சர்வதேசியத்தின் பின்வரும் அடிப்படைக் கோட்பாடுகள் உலக சோஷலிஸ்டு அமைப்பைச் சேர்ந்த நாடுகள் மக்களினங்கள் இடையிலான உறவுகளைக் கட்டுப் படுத்தியுள்ளன, திடமான முறையில் பெருமளவில் செயல் படுத்தப் பெறுகின்றன: (அ) உலக சோஷலிசத்தைத் தாங்கி ஆதரிப்பதும் வலுப்படுத்துவதும் ஆக உயர்ந்ததான சர்வதேசியக் கடமைப்பணி; (ஆ) நட்புறவும் சகலதுறை ஒத்துழைப்பும் (இ) சோதர பரஸ்பர உதவி; (ஈ) தேசிய சர்வதேசிய நலன்களை இசைவிணக்கம் செய்தல்; (உ) பரஸ்பர நம்பிக்கை ஒருவர் மற்றவர் உள்விவகாரங் களில் தலையிடாமை; (ஊ) கூட்டுக் குடும்பம் முழுவதன் முன்னேற்றத்துக்குப் பங்குப்பணி புரிய ஆயத்தம்.

சோஷலிஸ்டு நாடுகள் மேலும் நெருங்கி ஒன்றிணைவ தோடு மக்களினங்களின் வாழ்க்கையிலான தேசிய நடப்புக்கள் தம் சடவேகத்தை இழந்துவிடும் என்று கருது வது தவறு. தேசிய சர்வதேசிய நடப்புக்களின் தொடர் பாட்டுக்கு சோஷலிசம் குண ரீதியில் புதியதோர் அடிப் படையை வழங்குகிறது. தனிச் சொத்துடைமை கோலோச்சும் இடத்தில் சர்வதேசிய நடப்புக்கள் ஒடுக்கப் பட்ட சார்பு நிலையிலுள்ள மக்களினங்களின் தேசிய நடப்புக் களைத் தாழ்வுறச் செய்து மந்தப்படுத்தும் போக்கில் செயல் படும். அப்படியிருக்க, பொதுவுடைமையும் சோஷலிஸ்டு சமுதாயத்தின் மெய்யான ஜனநாயகத்துவமும் இரண்டுக்குமே அங்கக ஒற்றுமையில் ஒரேயளவு சுயேச்சை யான வளர்ச்சியை உறுதிப் படுத்தும்.

தேசிய நலன்களை (பொருளாதாரம், கலாசாரம், தேசிய அரசுத்துவம், நாட்டின் சர்வதேச விவகாரம்) அதிகப் பட்சமாக நிறைவு செய்வது சர்வதேசியப் பிணைப்புக்களை வலுப்படுத்துவதற்கான முக்கிய அடி நோக்கங்களில் ஒன்றாகும். சோஷலிஸ்டு நாடுகள் எந்தளவுக்கு அதிக வலிமையுறுகின்றனவோ அந்த அளவுக்கு அவை மக்களினங் களின் சோதரக் குடும்பத்தின் இதர உறுப்பு நாடுகளுடனான

தமது பிணைப்புக்களை வலுப்படுத்திக் கொள்வது அவசிய மாகும்.

தேசிய சர்வதேசிய நலன்களின் இணைப்பிலான இந்த இசைவிணக்கம், சோஷலிஸ்டு நாடுகளின் பொருளாதார அரசியல் கலாசார வளர்ச்சியையும் முதலாளித்துவ உலகினோடான அதன் உறவுகளையும் ஆளுமை செய்யும் புறநிலை நியதிகளில் இருந்து மட்டுமின்றி, அதோடு கூடவே தொழிலாளி வர்க்கத்தின் சித்தம், உழைக்கும் மக்களின் போதம், மார்க்சிய லெனினியக் கட்சிகளின் அமைப்புத் துறை மற்றும் கல்விப் பணி ஆகியவற்றிலிருந்தும் பெறப் பட்டதாகும். உலக சோஷலிஸ்டு அமைப்பு முன்னேறும் போது சில பிரத்தியேகமான தேசிய நலன்கள் மேலும் நெருக்கமாக ஒத்திசைவாகி, இறுதியில் சர்வதேசிய நலன் களுடன் சேர்ந்திணைந்து விடும். மற்றவை சாதனையாகி விட்ட உடனே மறைந்து போய் புதியவற்றுக்கு இடம்தரும். இதன் விளைவாக, தேசிய நலன்களின் உள்ளடக்கம் கம்யூனி சத்தை நோக்கி மக்களினங்கள் முன்னேறிச் செல்லும் நிகழ்வுக்குக் கீழடங்கியதாக இருக்கும், அதே போதில், இந்த மாறுதல்கள் தேசிய நலன்கள் தம்மைத் தாமே வெளிப்படுத்திக் கொள்ளும் வடிவங்களையே முக்கியமாகவும் சார்ந்திருக்கும்.

உலக சோஷலிஸ்டு அமைப்பில் சர்வதேசிய நடப்புக்கள் தீவிரமடைவதால் மக்களினங்களின் சுதந்திரமோ சர்வ வுரிமைத் தன்மையோ பாதிக்கப்படாது. இதற்கு முற்றிலும் மாறான நிலையே ஏற்படும். ஆனால் சோஷலிசத்தின் நன்மைக்கு வேண்டி சோஷலிஸ்டு அரசுகளின் சர்வவுரிமை உலக சோஷலிஸ்டு அமைப்பு முழுவதன் திட்பத்துக்கும் வெற்றிக்குமாக ஒவ்வொரு மக்களும் மேற்கொள்ளும் பொறுப்புடன் சேர்ந்திணைய வேண்டுவது அவசியமாகும்.

இருப்பினும், சோஷலிஸ்டு நாடுகளின் அரசு சார்ந்த சர்வவுரிமை வலுப்படுகிறது என்பதால், சுயேச்சையான சகல-துறை தேசிய வளர்ச்சி மக்களினங்களின் மேலதிகமான சுய நிர்வாக உரிமைக்குச் சமமானது என்று அர்த்தங்

கொள்ளக் கூடாது. இவ்வாறு செய்வது உண்மையில் தனி ஒதுக்கலில் தான் போய் முடியும். தனி மக்களினங்கள் தனி நபர்களுங்கூட நடத்தும் முயற்சிகளிலிருந்தே எல்லா சமுதாய இயக்கங்களும் உலக அளவில் ஒன்று சேருகின்றன என்பது மெய்யே. ஆனால் இந்த முயற்சிகள் அவை ஒன்று சேர்ந்து அல்லது செறிவடைந்து செயல்பட்டாலொழிய சமூக முன்னேற்றத்தின், உலக சோஷலிஸ்டு மறுசீரமைப்பின் இயக்கு சக்தி ஆகமாட்டா; நிச்சயமாயும் மேலதிக "சுயாட்சி" அதாவது மேலதிக தனிமையுறல் மூலம் ஆக மாட்டா, இதன் விளைவாக உலகத்துக்கு சமுதாய வளர்ச்சிக்கான குணும்ச முறையில் புதியதான இயக்கு சக்திகள் கிட்டும், எடுத்துக் காட்டாக சர்வதேசத் தொழிலாளி வர்க்க இயக்கம், மக்களினங்களின் தேச விடுதலை இயக்கம் இவை ஒரு புரட்சிகர இயக்கமாகக் கலந்திணையும்.

உலக சோஷலிஸ்டு அமைப்பின் சர்வதேசிய மயமாக்கல் நடப்புக்கள் மிகவும் முக்கியமான சமுதாய விளைவுகளை ஏற்படுத்துகின்றன. ஒவ்வொரு மக்களின் சமுதாய முன்னேற்றமும் வேகமுடுக்கப்படுவது இதில் பிரதானமான ஒன்று என்பதில் கேள்விக்கே இடமில்லை. மக்களினங்கள் சேர்ந்து ஒன்றிணைவதும் பரஸ்பரம் செழுமைப்படுத்திக் கொள்வதும் மறுக்கவொண்ணாத செயல்பாடுகளே.

உலக சோஷலிஸ்டு அமைப்பில் தேசிய மற்றும் சர்வதேசிய நடப்புக்களை மதிப்பீடு செய்யும்போது நாம் மக்களினங்களின் சோதரக் குடும்பத்தை உருவாக்குவதி லுள்ள சிக்கலையும் இடர்ப்பாடுகளையும் சரியாகப் புரிந்து கொள்ள வேண்டும். 1969 சர்வதேச மாநாடு சுட்டியது போல "சோஷலிசம் முதலாளித்துவத்தில் உள்ளார்ந்து கிடக்கும் முரண்பாடுகளால் அல்லற்படவில்லை. பொருளாதார வளர்ச்சியின் மட்டம் சமுதாயக் கட்டமைப்பு அல்லது சர்வதேசிய நிலவரம் இவற்றிலான வித்தியாசங் களாலோ, தேசியத் தனி வேறுபாடுகளின் காரணத்தாலோ சோஷலிஸ்டு நாடுகளிடையே ஒவ்வாமை எழும்போது,

அவற்றைப் பாட்டாளி சர்வதேசியத்தின் வர்க்க அடிப்படையில் தோழமை பூர்வமான விவாதம் மூலமும், சுயவிருப்பமான சோதர ஒத்துழைப்பு மூலமும், வெற்றி கரமாகத் தீர்த்துக் கொள்ள முடியும், தீர்த்துக் கொள்ள வேண்டும்.''*

பழைய அமைப்பு, தமது சிந்தனையை ஒரே நொடியில் மாற்றிக் கொள்ள முடியாத மக்களினங்கள் இடையேயும் தனிநபர்கள் இடையேயுமான உறவுகளில் தீர்க்கப்படாத பல பிரச்சினைகளை விட்டுச் சென்றுள்ளது. சர்வதேச மாநாட்டில் லி. இ. பிரெஷ்நேவ் சுட்டியது போன்று இதன் பொருள் பல நூற்றுண்டுகளாக உருவாகி வந்த தேசியப் பகைமை, சமுசயம் இவற்றை வென்று சமாளிப்பதாகும். இதற்கும் மேலாக, சோஷலிசத்தின் கீழ் அகநிலைப் போக்கையும் சந்தர்ப்பவாதத் திரிபுகளையும் ஒழிப்பது இன்னும் சாத்தியமற்றதாகவே உள்ளது. இவை ஏதேனும் ஒரு அளவுக்கு தேசியவாதத்தை அடிப்படையாக்கியவை. ஆனுல், இவை எல்லாம் சோஷலிசத்தின் தன்மையில் (கம்யூனிஸ்டு எதிர்ப்பாளர் நம்மை நம்புமாறு கேட்பது போல) இயல்பாகத் தோன்றுவன அல்ல, மாறுக சோஷலிசத் திலிருந்து திசை மாறுவதால் அல்லது சோஷலிசத்தை எப்படி நிர்மாணிப்பது என்பதில் எழும் தவறுன கருத்துப் படிவங்களால் ஏற்பட்டவை.

தேசிய சர்வதேசிய நடப்புக்களை சரியாகத் தொடர்பாடு கொள்ளச் செய்வது மிகவும் கடினம். இந்த இடர்ப் பாட்டிற்குக் காரணம், உலக சோஷலிஸ்டு அமைப்பின் சமூக வளர்ச்சியிலான இயல்பான சிக்கல், தனித்தனி நாடுகளின் வளர்ச்சி மட்டத்திலும் அவற்றின் நடைமுறை பொருளாதாரக் குறிக்கோள், உழைப்பு பரிவர்த்தனையும் பிரிவினையும், நாடுகளிடையான உறவுகளுக்கு உருவம் கொடுப்பதில் ஏற்படும் பிழைபாடு, அகநிலைப் போக்கு,

---

* கம்யூனிஸ்டு, தொழிலாளர் கட்சிகளின் சவதேச மாநாடு, மாஸ்கோ, 1969, பக். 23.

சாத்தியமான தேசியப் போக்கியல்புகள் [இவற்றில் நிலவும் வேறுபாடுகள் இத்தியாதியே. லெனின் இந்தத் தீராத வேதனைகளை முன் அறிந்திருந்தார், வேறு விஷயங்களுடன் கூடவே கேந்திரமான பிரச்சினைகளை அணுகும் விஷயத்தில் ஒருதலைச்சார்பான போக்கு சாத்தியம் எனக் கண்டிருந்தார். ஒவ்வொன்றும் தனித்தனியாக எடுத்துப் பார்க்கின் ஒரு சார்புடையதாக இருந்து ஒரு சில முரண்பாடுகளால் பாதிக்கப் பட்டிருக்கும்—தொடர்ச்சியான பல முயற்சிகள் மூலம் மட்டுமே- முழுமையான சோஷலிசத்தைப் படைக்க முடியும்''* என்று அவர் எழுதினர்.

உலக சோஷலிஸ்டு அமைப்பை இன்னும் அதிக பலமுள்ளதாக்க வேண்டுமானுல், மார்க்சிய-லெனினியக் கட்சிகள் சோஷலிஸ்டு நாடுகளின் மக்களினங்களின் தேசிய, சர்வதேசியப் பணிகளை இசைவிணக்கப்படுத்த வேண்டுவது அவசியம்.

அப்பட்டமாக அதிகரித்து வரும் மக்களினங்களின் இடைத் தொடர்பாடுகள், அவர்களின் விரிவடைந்துவரும் ஒத்துழைப்பு, பரஸ்பர உதவி மற்றும் உலக சோஷலிஸ்டு அமைப்பின் தேசங்கள் ஒன்று சேர்வது இவை எல்லாம் சர்வதேச நடப்புக்களின் முக்கியத்துவத்தை மிகையாக மதிப்பிடுவதற்கோ தேசிய நடப்புக்களைக் குறைத்து மதிப்பிடுவதற்கோ இட்டுச் செல்லக் கூடாது. இது சோஷலிஸ்டு நாடுகளின் அரசியல், பொருளாதார ஒத்துழைப்புக்கு நிச்சயமாயும் கேடு விளைவிக்கும்.

தேசிய நடப்புக்கள் இன்றைய கட்டத்தில் சோஷலிஸ்டு நாடுகளின் மக்களினங்களின் உள்நாட்டு வாழ்வில் மறுக்க முடியாதபடி முக்கியமான பாத்திரம் வகிக்கின்றன. இது மக்களின் பொருளாதார, அரசியல், கலாசார அபிவிருத் திக்குப் பொருந்தும். இருப்பினும், அவர்களை ஓர் ஒன்றிணைந்த சோதரக் குடும்பமாக்கிய கூட்டுப்பண்பே,

* வி. இ. லெனின், ''நூல் திரட்டு'', தொகுதி 27, பக். 346.

சிறப்பாயும் எல்லா ஏகாதிபத்தியச் சதிகளையும் எதிர்த்துச் சாடி, சோஷலிசம் கம்யூனிசத்தின் நிர்மாணத்துக்கான சமாதான நிலைமைகளைப் பெற இயலுமாறு சோஷலிஸ்டு நாடுகளின் மக்களினங்களுக்குத் துணைசெய்தது. உலக சோஷலிஸ்டு அமைப்பை உருவாக்கும் பணியில், அவர்கள் மனிதகுலம் முழுவதன் மீதும் தமது அதிகரித்துவரும் தனி மகத்துவத்தையும்,செல்வாக்கையும் செலுத்தி வருகிறார்கள் என்பது சொல்லாமலே விளங்கும். சர்வதேசிய நடப்புக்கள் தான் சோஷலிஸ்டு நாடுகளின் ஒற்றுமையைக் கெட்டிப் படுத்தின, தொடர்ந்து கெட்டிப்படுத்தி வருகின்றன, முதலாளித்துவத்திலிருந்து சோஷலிசம் கம்யூனிசத்துக்கு உலகம் மாறிச் செல்லும் செயல்பாட்டில் அவற்றின் பாத்திரத்தை ஏற்றமுறச் செய்துள்ளன.

சர்வதேசிய நடப்புக்கள் தேசிய நலன்களுக்கு எதிரானவையல்ல.

பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் நிலைநாட்டப் பட்டதைத் தொடர்ந்து, சோஷலிசம் கம்யூனிசத்தை நிர்மாணிப்பதே ஒவ்வொரு மக்களின் பிரதானமான சர்வ தேசியக் கடமையாகும். இது தனித்தனி ஒவ்வொரு மக்களுக்கும், ஒட்டு மொத்தத்தில் அவர்களது சோதரக் குடும்பம் முழுவதற்குமான பிரதான சர்வதேச நலவுரிமை யாகும். இதனால்தான் உலக சோஷலிஸ்டு அமைப்பின் உள்ளே தேசிய சர்வதேசிய நலவுரிமைகள் முரண்நிலையில் இருப்பதாகச் சாட்டி நடத்தப் பெறும் சகல ஏகாதிபத்தியப் பிரசாரமும் முற்றிலும் பொருத்தமற்றதாகிறது.

உலக விவகாரங்களில், ஒரு நாடு உலக சோஷலிஸ்டு அமைப்பின் கட்டுக்கோப்புக்குள் நில்லாது, சொந்த வழியில் செயல்பட்டால், அதன் தேசிய நலன்கள் மேலும் சிறப்பாக நிறைவுபெறும் வாய்ப்பு இருக்கலாம் என்று எண்ணுவது தவறு. பொதுவாக உலக அரங்கில் காணப்படும், தவறாகப் புரிந்து கொள்ளப்பட்ட தேசிய நலன்களும் சர்வதேச நடப்புக்களும் உலகக் கம்யூனிஸ்டு இயக்கத்தில் பிளவு

நடவடிக்கைக்கு இடமளிக்கலாம். பொதுவான சோஷலிஸ்டு லட்சியம் சீர்குலைக்கப்படுவதை மூடி மறைக்க, தேசிய நலன்களைப் பாதுகாப்பதாகச் சொல்லி எத்தகைய சொல் அலங்காரங்கள் பயன்படுத்தப்படினும் சரி, சோஷலிஸ்டு நாடுகளின் அனைத்து மக்களினங்களின் சர்வதேசியக் கடமைகளைப் புறக்கணிக்க முடிவு செய்வோரை வரலாறு என்றுமே மன்னிக்காது. சோஷலிசத்தின் எதிர் காலத்துக்கு அபாயம் ஏற்பட்டிருக்கும் நேரத்தில் தேசிய நலன்கள், மக்கள் வாழ்வில் அவை எத்துணை முக்கியமான பங்கு வகித்த போதிலும் சரி, சர்வதேசிய நலனுக்கும் மனிதகுல முன்னேற்றத்தின் பொது லட்சியத்துக்கும் கீழடங்கியதாகவே கருதப்பட வேண்டும். "சோஷலிசத்தின், உலக சோஷலிசத்தின் நலன்கள் தேசிய நலன்களை விடவும் உயர்ந்தவை என்று வன்மையாக எடுத்துக் கூறுகிறோம்"* என்று லெனின் வலியுறுத்துகிறார்.

தேசிய, சர்வதேசிய நடப்புக்களின் சரியான தொடர்பாடு, அவற்றின் அங்கக இணைப்பு, இரண்டினதன் சுயேச்சையான வளர்ச்சி இவை பல புறநிலைக் காரணிகளை அடிப்படையாக்கியவை. ஆனால் தொழிலாளி வர்க்கத்தின், அதன் கட்சியின் உணர்வு பூர்வமான செயல்பாடும் இதில் மிகப் பெரிய பங்கு வகிக்கிறது. ஒரு சோஷலிஸ்டு நாட்டின் மார்க்சிய-லெனினியக் கட்சி சர்வதேசியக் கோட்பாடுகளை அனுசரிக்குமானால், அந்த நாட்டின் கொள்கை, மக்களினங்களின் ஒற்றுமைக்கான பங்குப்பணி, அவர்களின் நட்புறவையும் ஒத்துழைப்பையும் வலுப்படுத்தல் போன்ற ஜீவாதாரமான பிரச்சினைகளில், அந்த நாட்டில் எந்தப் பாணியிலான நிலைமைகள் நீடித்த போதிலும் சரி, இதர சோஷலிஸ்டு நாடுகளில் போன்று அதே மாதிரி நிலவுவது திண்ணம்.

---

* வி. இ. லெனின், "நூல் திரட்டு", தொகுதி 27, பக். 378.

மக்களினங்களின் சோஷலிஸ்டு ஒற்றுமைக்கான அடித்தளங்கள் பாட்டாளி வர்க்கப் புரட்சியால் இடப்படுகின்றன, இதன் உள்ளடக்கம் சர்வதேசியத்தன்மையே அன்றி வேறு எதுவும் அன்று. சோஷலிசத்தை நிர்மாணிக்கும் சமயத்தில் சோஷலிஸ்டு அரசுகளின் அரசியல் ஒத்துழைப்பு இன்னும் அதிக முக்கியமானது. உள்நாட்டு விவகாரங்களிலான அவற்றின் பொதுவான சோஷலிஸ்டு கோட்பாடுகளும் முதலாளித்துவ உலகைப் பொருத்தவரை அவற்றின் ஒற்றுமை நிலையும் ஒவ்வொரு மக்களினங்களின் வளர்ச்சிக்கும் சோஷலிஸ்டு அமைப்பு முழுவதன் அபிவிருத்திக்கும் இன்றியமையாதவை.

சர்வதேச ஏகாதிபத்தியத்தின் ஆக்கிரமிப்புத் தன்மை காரணமாக, மார்க்சிய—லெனினியக் கட்சிகளும் சோஷலிஸ்டு நாடுகளின் அரசாங்கங்களும் தமது அரசியல் ராணுவக் கூட்டணியை பலப்படுத்திக் கொள்ள வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது.

கடந்த கால் நூற்றாண்டு காலமாக உலக சோஷலிஸ்டு அமைப்பில் ஏற்பட்ட பிரத்தியேக வளர்ச்சியின் காரணமாக, அதன் முன்னேற்றத்தின் பொதுவான முறைமைகளும் சோஷலிஸ்டு சர்வதேசியமும் வார்சா உடன்படிக்கை ஸ்தாபனம் மற்றும் பரஸ்பர பொருளாதார உதவிக் கவுன்சிலைச் சேர்ந்து ஒற்றுமைப்பட்டு நிற்கும், சோஷலிஸ்டு கூட்டுக் குடும்பத்தைச் சேர்ந்த நாடுகளின் சமுதாய நடைமுறை அனுபவத்தில் மிகவும் முழுமையாக உருவகம் பெற்றுள்ளன.

அரசியல் ஒத்துழைப்பும் ஒருமுகப்படுத்தப்பட்ட சர்வதேசச் செயல்பாடும் சோஷலிசம் கம்யூனிசத்தை நிர்மாணிப்பதற்குரிய சாதகமான நிலைமைகளை வழங்குகின்றன. வார்சா உடன்படிக்கை ஸ்தாபனத்தின் அரசியல் ஆலோசகக் கமிட்டியே சோஷலிஸ்டு கூட்டுக் குடும்ப நாடுகளின் அயல்துறைக் கொள்கை நடவடிக்கைகளின் பிரதான ஒன்றிணைப்பு மையமாக விளங்குகிறது. இந்தக்

கமிட்டி தனது பணியை சோஷலிஸ்டு சர்வதேசியத்தின் முழு நிறைக் கோட்பாடுகள் மீது நடத்துகிறது; அவை: தமது நாட்டில் மட்டுமின்றி உலகம் முழுவதிலுமான சோஷலிசத் தின் எதிர்கால வளத்துக்கான பொறுப்பு; ஒவ்வொரு நாட்டின் புத்தாக்கத்தின் தேசிய வரலாற்று அம்சங்களை மதித்தல், அதன் சாதனைகளை பெருக்கிக் கொள்ள ஆயத்தமாக இருத்தல்; சுதந்திர மக்களினங்களின் அபிவிருத்தியை விரைவுபடுத்தவும் உலகப் புரட்சி இயக்கத் தின் மீதான சோஷலிஸ்டு அமைப்பின் செல்வாக்கை உயர்த்தவும், ஏகாதிபத்தியத்தை எதிர்த்தும், சமாதானம் ஜனநாயகம் சோஷலிசத்தை ஆதரித்தும் எழும் மக்களினங் களின் விடுதலைப் போராட்டத்தை ஆதரிக்கவும், சோஷலிசம், ஒத்துழைப்பு மற்றும் பரஸ்பர உதவியை அதிகப்பட்சமாகப் பயன்படுத்துவது.

சோஷலிஸ்டு கூட்டுக் குடும்ப நாடுகளின் முரணற்ற ஒருமுகப்படுத்தப்பட்ட கொள்கையும், சர்வதேச அரங்கிலான அவற்றின் நெருக்கமான ஒத்துழைப்பும் உலக விவகாரங்கள் மீதான அவற்றின் செல்வாக்கை பெருமளவு அதிகரித்துள்ளன. வியத்நாமில் அமெரிக்க ஏகாதிபத்தியத் தின் வெறியாட்டத்துக்கு ஏற்பட்ட உறுதியான எதிர்ப்பும், அரபு மக்களுக்கு அளிக்கப்பட்டதான ஆதரவும் ஐரோப்பாவில் கூட்டு பந்தோபஸ்தை மேம்படுத்தும் முயற்சி களும் இதற்கான நல்லதோர் எடுத்துக் காட்டாகும். "சோஷலிஸ்டு நாடுகளின் வளர்ச்சியும், அவற்றின் மேலதிக மான வன்மையும், அவற்றின் சர்வதேசக் கொள்கையின் விளைவாக ஏற்பட்ட மேலதிகமான, சாதகமான செல்வாக்கும் இப்போது மனிதகுலத்தின் சமுதாய முன்னேற்றத்திற்கான பிரதான திசைவழியாகும். சோஷலிசத்தின் ஈர்ப்பு ஆற்றல், முதலாளித்துவ நாடுகளில் வெடித்த நெருக்கடியின் பின்னணியில், மேலும் மிகப்பெரிதாகியுள்ளது"* என்று

---

* **சோ. க. க. மத்தியக்கமிட்டி அறிக்கையும் உள்நாட்டு, வெளிநாட்டுக் கொள்கையிலான கட்சியின் உடனடிக் கடமைகளும், பக். 33.**

25 ஆவது காங்கிரசுக்கான சோ. க. க. மத்தியக் கமிட்டியின் அறிக்கை செப்புகிறது.

பொருளாதார ஒத்துழைப்பே, சோஷலிஸ்டு சர்வ தேசியம் உலக சோஷலிசத்தின் முன்னேற்றத்துக்காகப் பங்காற்றும் பல மிக முக்கியமான துறைகளில் ஒன்ருகும். இந்த ஒத்துழைப்பு சர்வ தேசியத்துக்கேயான முக்கிய அடித்தளமும் விரிவாக்க ஆதாரமும் கூட ஆகும்.

தேசங்கள் வளர்ச்சியுறும்போது அவற்றின் பொருளாதாரங்கள் மேலும் சுயாதினம் பெறுகின்றன என்று கூறுவோர் உளர். ஆயினும், முதலாளித்துவத்தின் கீழிலுங்கூட எல்லா தேசங்களின் தொழிலாளி வர்க்கத்தாலும் தனி ஒரு திட்டத்தின் கீழ் முறைப்படுத்தப்பட்டதான தனி ஒரு உலகப் பொருளாதாரத்தை நோக்கிய ஒரு தனிப்போக்கு இருக்கிறது என்று லெனின் வலியுறுத்தினர். இந்தப் போக்கு முதலில் ஒவ்வொரு சோஷலிஸ்டு நாட்டின் அகத்தும் சர்வதேச நடப்புக்களில் தெளிவாகத் தெரிகிறது, பின்னர் ப. பொ. உ. க.-ல். இருக்கும் சோஷலிஸ்டு நாடுகளின் இடையிலான அரசுருவுத்துறைகள் அனைத்திலும் வேர் கொள்கிறது. வார்சா உடன்படிக்கை நாடுகளின் இருதரப்பு பொருளாதார பிணைப்புகளிலும் பல்வேறு வடிவிலான கலாசார ஒத்துழைப்பிலும் இடம் பெறுகிறது.

சோஷலிஸ்டு உற்பத்தி உறவுகள் மட்டுமே, ஒவ்வொரு நாட்டிலும் உற்பத்தி சக்திகளின் பெருக்கத்துக்குப் பேரளவான தூண்டுதலைத் தர முடியும். இன்றைய நிலைமைகளில் அவை இன்னும் அதிகமாகப் பெருக வேண்டுமாஞல், உற்பத்தியில் தனித்தேர்ச்சியை, ஒத்துழைப்பை அடிப்படையாக்கியதான சர்வதேச உழைப்புப் பிரிவினை ஏற்பட வேண்டும். இதை சர்வவுரிமையுடைய சோஷலிஸ்டு அரசுகள் ஒத்துழைப்பது மூலம் உருவாக்குகின்றன. ஏனெனில், உலக சோஷலிஸ்டு அமைப்பின் கட்டுக்கோப்பினுள் நடைபெறும் சோஷலிஸ்டு மறு உற்பத்தி

இன்னும் நீண்ட காலத்துக்குத் தேசிய அடிப்படையிலேயே நடைபெறும்.

தனிப்பட்ட நாடுகளின் உற்பத்திச் செயல்பாடு அவற்றின் அரசாங்க அமைப்புக்கள் மூலம் திட்டமிடப்படு கிறது, அதோடு கூடவே சோஷலிஸ்டு கூட்டுக் குடும்பத்தின் கட்டுக்கோப்பில் தேசியத் திட்டங்களை ஒருமுகப்படுத்துவது மூலமும் இது நடக்கிறது.

சோஷலிஸ்டு சர்வதேசிய உழைப்புப் பிரிவினை தேசியப் பொருளாதாரத்தின் வேகமான பெருக்கத்தைக் கட்டாய மாக்குகிறது. இது தன் வகைக்கு சோஷலிஸ்டுக் கூட்டுக் குடும்பத்தின் வன்மை மேலும் பெருகுவதற்குரிய அடிப் படையைத் தருகிறது. சோஷலிஸ்டு தேசங்கள் மலர்ச்சியுறு வதையும் ஒன்றுசேர்வதையும் கட்டாயப்படுத்தி நடத்தும் இயக்கவியல் இதுவே.

1949—1975 ஆண்டுகளிலான தமது பொருளாதார, விஞ்ஞான, தொழில் நுட்ப ஒத்துழைப்பின் பலனாக ப. பொ. உ. க. நாடுகளின் தொழில் துறை உற்பத்தி 15 மடங்குக்குமேல் அதிகரித்தது. அவற்றின் பொருளாதார மட்டங்கள் சமமடைந்து வருகின்றன, சோஷலிஸ்டு சர்வதேசிய உழைப்புப் பிரிவினை முன் என்றையும்விட மேலும் முழுமையுறுவதற்கான முன் நிபந்தனைகள் உருவாக்கப்பட்டுவிட்டன. பொருளாதார ஒத்துழைப்பின் தீர்மானகரமான மண்டலங்களில் ஏற்பட்டுவரும் அகல்-விரிவான இணைப்பாக்க நடப்புக்கள் உச்சபட்ச முக்கியத்துவ முடையவை. மின்விசை ஆதாரவளங்களைத் திரட்டுதல், எரிபொருள் மூலப்பொருள்கள் பிரச்சினைக்கு கூட்டுத்தீர்வு, பொறியியல் போக்குவரத்துத் துறைகளில் பல்வேறு வளர்ச்சி அம்சங்கள், பண அலுவல்களுக்கு மிகவும் பொருத்தமான வடிவங்களைத் தேர்வு செய்தல், விஞ்ஞான தொழில் நுட்ப ஒத்துழைப்பு இவை இதிலுட்படும்.

சோஷலிஸ்டு நாடுகளின் முன்னேற்றம் என்பது அவர்களது சாதனைகளின் வெறும் கூட்டு மொத்தமாக

(இவையும் ஒத்துழைப்பின் பலன்களே) இல்லாமல், இந்த சாதனைகளின் விளைவாயும், சர்வதேச உழைப்புப் பிரிவினையின் திட்பத்திலிருந்தும் ஏற்படும் ஓர் இணைப்பாக்க அளவினமாக இருக்குமானால், இயக்காற்றலையும் இடையீடில்லாத ஒத்துழைப்பையும் உறுதி செய்யும். பொருளாதார, விஞ்ஞான தொழில்நுட்ப இணைப்பாக்கத்துக்கான ஒரு சர்வாம்சமான நீண்டகால வேலைத் திட்டத்தை இயக்கி விடுவது அத்தியாவசியம் என்பது சில காலம் முன்பே நிச்சயமாகத் தெரிய வந்தது.

சோஷலிஸ்டுப் பொருளாதார இணைப்பாக் வேலைத் திட்டம் சர்வாம்சமானது, இதன் அர்த்தம் இது பொருள் உற்பத்தி, விஞ்ஞானம், தொழில் நுட்பம், பண மற்றும் நிதி உறவுகள், அயல்நாட்டு வாணிகம், போக்குவரத்து ஆகிய துறைகளை மட்டுமன்றி நிர்வாகம், திட்டமிடல், சட்டம், ஸ்தாபனம் மற்றும் முறைமையியலின் பல்வேறு அம்சங்களையும் தன்னுள் அடக்கி வைத்திருக்கிறது என்பதாகும்.

இது ஒரு நீண்ட கால வேலை திட்டமுங்கூட. ப. பொ. உ. க. நாடுகளின் 25 ஆவது அமர்வில் 15-20 ஆண்டு காலத்துக்கென ஒப்புக்கொள்ளப்பட்டது இது. இது பொருளாதார அமைப்புத் துறை நடவடிக்கைகளை முன்னனுமானிக்கிறது. இவை ஒரு கால அட்டவணையின் கீழ் செய்து நிறைவேற்றப்பட வேண்டியவை, ஒவ்வொரு நாட்டின் நலன்களிலும் இந்தக் கூட்டுக் குடும்பம் முழுவதன் நலன்களிலும் கண்ணும் கருத்துமாக இருந்து அமுலாக்க வேண்டியவை.

சோஷலிஸ்டுக் கூட்டுக் குடும்பத்தைச் சேர்ந்த நாடுகளின் மத்தியில் நிலவும் தனிமாதிரியான கண்ணோட்டம் கண்டு பூர்ஷுவா தலைவர்கள் எப்போதும் வியப்புத் தெரிவிப்பர் என்று ப. பொ உ. க. 28 ஆவது விழா அமர்வில் பேசிய சோவியத் ஒன்றியத்தின் அமைச்சரவைத் தலைவர் (பிரதமர்) எ. என். சோசிகின் கூறினார். நமது கூட்டுக் குடும்பத்தில் நம்பிக்கை நெருக்கடியோ நலவுரிமைகளின் மோதலோ போட்டிச் சண்டைகளோ ஏன் நடப்பதில்லை

என்பதை அவர்கள் தமது பூர்ஷுவா கணணோட்டம் காரணமாகப் புரிந்து கொள்வது கடினம். முதலாளித்துவ உலகத்தின் லட்சணங்களான இவையாவும் நமது கூட்டுக் குடும்பத்தில் நிலவுவதில்லை. காரணம் சோதர சோஷலிஸ்டு நாடுகளிடையிலான உறவுகள் அவற்றின் நலன்களை சர்வதேச நலன்களுடன் இசைவாக இணைத்துள்ளன. மேலும் அவை சோஷலிஸ்டு சர்வதேசியக் கோட்பாடுகள் சமத்துவம், சர்வ வுரிமை, சோதரப் பரஸ்பர உதவி எனும் கோட்பாடுகளை அடிப்படையாக்கியவை. இந்தக் கோட்பாடுகள் எமது கூட்டுக்குடும்பத்தில் தேசியம், சர்வதேசியம் எனும் இரு கட்டுக்கோப்புகளிலும் செயல்படுகின்றன.''*

சோ.க.க. 25 ஆவது காங்கிரஸ் ஏற்றுக் கொண்டதான 1976-1980 ஆம் ஆண்டுகளுக்கான பொருளாதார வழி காட்டி நெறிகளில் முன் அனுமானம் செய்தபடி, பரஸ்பர அனுகூலம், தோழமை பூர்வ பரஸ்பர உதவி எனும் அடிப் படையில் சாத்தியமான எல்லா வழிகளிலும் சோஷலிஸ்டு நாடுகளுடன் பொருளாதார, விஞ்ஞான, தொழில்நுட்ப ஒத்துழைப்பை விரிவாக்கி வலுப்படுத்துவது, 1976-80 ஆம் ஆண்டுகளுக்கான ப.பொ.உ.க. உறுப்பு நாடுகளின் சர்வாம்ச சோஷலிஸ்டு பொருளாதார இணைப்பாக்கம் மற்றும் பலதரப்பு இணைப்பாக்க நடவடிக்கைகளுக்கான ஒருமுகப்படுத்தப்பட்ட திட்டமும் முன்னனுமானித்தபடி உரிய நடவடிக்கைகளைச் செய்து முடித்தலை உத்தரவாதம் செய்தல்."**

சோஷலிஸ்டுப் பொருளாதார இணைப்பாக்கம் இடைத் தொடர்புடையதான இரண்டு போக்குகளை அடிப்படை யாக்கியுள்ளது. ஒரு புறம் தேசியப் பொருளாதாரத் திட்ட நிறுவனங்களை வலுப்படுத்தல், மறுபுறம் தேசியப் பொருளா தாரக்கட்டுக்கோப்பிலிருந்துபின்வாங்கிமேலும் நெருக்கமான

---

* பிராவ்தா, ஜூன் 20, 1974.

** "1976-1980க்கான சோவியத் ஒன்றியத்தின் தேசியப் பொருளாதாரத்தின் வளர்ச்சிக்கான வழிகாட்டு நெறிகள்'', பக். 106.

சர்வதேசப் பிணைப்புக்களை ஏற்படுத்தல். இது இதன் தனிச்சிறப்பான அம்சமாகும்.

சோஷலிஸ்டு நாடுகளின், மக்களினங்களின் மேலும் நெருக்கமான பிணைப்புக்களும்சோதர நட்புறவும் அக வளர்ச்சிச் செல்வங்களை அவர்கள் பரவலாகப் பரிவர்த்தனை செய்து கொள்வதில் காணப்படுகிறது. அவர்களது கலா சாரங்களின் பரஸ்பர செல்வாக்கும் செழுமைப்பாடும், பல்வகையான வடிவங்களிலும் வெவ்வேறு கட்டங்களிலும் நிகழ்கின்றன. சம்பந்தப்பட்ட எழுத்தாளர்,கலைஞர் மற்றும் இசையமைப்பாளர் சங்கங்கள் விரிவான அடிப்படையில் ஒத்துழைக்கின்றன. இதேபோல விஞ்ஞானப் பேரவைகள், பல்கலைக்கழகங்கள் இதர உயர் கல்வி நிலையங்கள் செயல்படு கின்றன. நூல்கள் பெருமளவில் மொழிபெயர்க்கப்படு கின்றன. திரைப்பட டெலிவிஷன் நிகழ்ச்சிகள், நாடக கம்பெனிகள் மற்றும் இதர கலைநிகழ்ச்சிக் குழுக்களின் பரிவர்த்தனைகள் நடைபெறுகின்றன.

சோஷலிசத்துடன் இசைவுடைய தேசிய சர்வதேசிய நடப்புக்களின் ஆக்கத்தின் சரியான தொடர்பாடு என்பது தானாக சாதனையாவதில்லை. சர்வதேசியம் எதிரிட்டுச் சமாளிக்க வேண்டியுள்ள பல இடர்ப்பாடுகளும் சிக்கல்களும் தேசியப் பிரச்சினையுடன் சம்பந்தப்பட்டவையாகும்.

"ஒட்டுமொத்தமான போக்கு சோஷலிஸ்டு நாடுகளின் பெருகிவரும் இசைவிணக்கத்தால் குணநிர்ணயம் பெறுகிறது என்பதில் கேள்விக்கே இடமில்லை" என்று குறிப்பிட்ட சோ. க. க. 25 ஆம் காங்கிரஸ் மேலும் கூறியதாவது: "நாம் இந்தப் போக்கினை மிகவும் உயர்வாக மதிக்கிறோம், முன் போலவே இதனை எல்லா வழிகளிலும் மேம்படுத்துவோம்."*

---

* சோ. க. க. மத்தியக் கமிட்டியின் அறிக்கையும் உள் நாட்டு, வெளிநாட்டுக் கொள்கையிலான கட்சியின் கடமைகளும், பக். 11.

உலக சோஷலிஸ்டு அமைப்பின் தோற்றமும் வளர்ச்சியும் சோஷலிசத்துக்கும் முதலாளித்துவத்துக்கும் இடையிலான வர்க்கப் போராட்டத்தின் ஒரு பகுதியே. புரிந்து கொள்ளக்கூடிய காரணங்களால் இந்தப் போராட்டத்தின் சந்தர்ப்ப சூழல்கள் தேசிய சர்வவுரிமை, அரசு சுதந்திரம் எனும் பிரச்சினைகளுக்கு ஒவ்வொரு மக்களும் தீர்வு காண்பதைச் சிக்கலாக்குகின்றன. சென்ற பத்தாண்டின் வன்மை மிக்க தேசவிடுதலை இயக்கம் சில சோஷலிஸ்டு நாடுகளில் மக்களினங்களின் தேசிய உணர்வுகளை வேகப்படுத்துவதில் தாக்கம் செலுத்தியுள்ளன. உலக சக்திகளின் பலாபலத்தைத் தனக்குச் சார்பாக மாற்றிக் கொள்ள வேண்டும் எனும் தனது முயற்சியில் ஏகாதிபத்தியம் தேசியவாதப் போக்குகளை ஆதரிப்பது மூலம் சோஷலிஸ்டு நாடுகளின் மக்களினங்களின் ஒற்றுமையைச் சீர்குலைக்க மிகக் கடுமையாக முயல்கிறது.

அண்மை ஆண்டுகளில் மட்டுமே கார்ல் மார்க்சினால் முன்னறிந்து கூறப்பட்ட "உற்பத்தியின் சமூக வடிவங்களில் இசைவிணக்கமான தேசிய சர்வதேசிய ஒருமுகத் தன்மையின்"* அவசியம் முற்றும் தெளிவாயிற்று. லெனின் கூறியது போன்று இத்தகைய ஒருமுகத்தன்மை ஒன்றியத்தின் பொருளாதார அவசியத்தை சோஷலிஸ்டு நாடுகள் தெளிவாக அறிந்தேற்றுக் கொள்வதுடன் நெருங்கிய தொடர்புடையது. உலக சோஷலிசத்தின் பொருளாதார அடிப்படைக்கான புறநிலைத் தேவை, நாடுகள் மத்தியிலான உழைப்புப் பிரிவினையில் மேம்பாடுகளை ஊக்குவிக்கிறது, இதன் பின்விளைவாக, தேசிய பொருளாதார திட்ட நிறுவனங்களின் வளர்ச்சியில் சகலமுந் தழுவியதான பல்வகைத் தன்மைக்கு முன்னாட்களில் தோற்றுவித்த நாட்டத்தை மறுதலிக்கிறது.

சோஷலிஸ்டுப் பொருளாதார இணைப்பாக்கத்துக்கும், சோஷலிஸ்டு நாடுகளின் இடையிலான தேசிய உறவுகள்

---

* மார்க்ஸ்-எங்கெல்ஸ், "நூல்கள்", தொகுதி 17, பக். 546.

பிரச்சினைக்கும் இடையிலான தொடர்பு முன்னுட்களில் அனுமானித்ததை விடவும் அதிக நெருக்கமானது என்பது நிருபணமாயிற்று. இதனுல்தான் 1969 வசந்தத்தில் நடந்த ப. பொ. உ. க. அமர்வு, இணைப்பாக்கம் அரசு சர்வவுரிமை, சுயாதீனம் மற்றும் சுதந்திர சித்தம் எனும் கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டும் என வலியுறுத்தியது. சோஷலிஸ்டு இணைப்பாக்கம் ப. பொ. உ. க. உறுப்பு நாடுகளின் தேசியப் பொருளாதாரங்கள் ஒன்று சேர்வதையும் பொருளாதார ஒத்துழைப்பு மேலும் ஆக்க முறுவதையும் உத்தரவாதம் செய்தல் வேண்டும். இது முதலாளித்துவ இணைப்பாக்கத்துக்கு எடுத்துக்காட்டாக தேசத்தை மீறிய நிர்வாக அமைப்புகள் உருவாக்கப்படுவதை நோக்கமாக்கிய பொது மார்க்கெட்டின் இணைப்பாக்கத்துக்கு அறவே மாறுபட்டது. ஆகையால், சோஷலிஸ்டு இணைப் பாக்கம் பங்கேற்கும் நாடுகளின் உள்நாட்டுப் பொருளாதார வாழ்க்கையை ஆக்கிரமிக்காது.

வர்க்கப் போராட்டத்தின் இன்றைய கட்டத்திலான ஒரு சில அலாதித் தன்மைகளால் தேசிய உறவுகளுங்கூட பாதிக்கப்படுகின்றன: முதலாவதாக, வர்க்க வேறுபாடுகள் தவிர சில சோஷலிஸ்டு நாடுகளில் பழைய அமைப்பையும் பழம் மனப்போக்கின் மீதமிச்சங்களையும் ஆதரிக்கும் சில பேர் இருக்கிருர்கள்; இரண்டாவதாக, பழைய, புதிய உலகங்களுக்கு இடையிலான வர்க்கப் போராட்டத்தில் முக்கியமான சமர்க்களமாக மாறியிருக்கிறது சித்தாந்தம், புதிய அம்சம் தன்னை ஊர்ஜிதப்படுத்திக் கொள்ள அதிக காலாவகாசம் எடுக்கும் தேசிய உறவுகள், சோஷலிஸ்டு—எதிர்ப்பு சக்திகளின் மிகு கவனத்தின் மையமாக இருக்கின்றன. தேசிய அவநம்பிக்கையின் மீதமிச்சங்கள் பரஸ்பர வெறுப்பு, கடந்த காலத்திலிருந்து மரபாக வந்த குட்டி பூர்ஷுவா தேசியவாதக் கருத்துக்கள் இவற்றை மிகையாகப் பயன்படுத்தி இந்த சக்திகள் தேசியவாதத்தை ஊக்குவித்து எரிமூட்டி விடுகின்றன. ஒவ்வொரு நாட்டிலு முள்ள சோஷலிசத்தின் ஆதாரத் தூண்களைக் கவிழ்க்க

நாடும் அதே பொழுதில் சோஷலிசத்தின் விரோதிகள், சோஷலிஸ்டு நாடுகள் அணியத்தின் ஒற்றுமையைச் சீர்குலைக்கும் முயற்சியில தேசியவாதத்தையும் கையாளுகிருர்கள். இதற்கும் மேலாக, சோஷலிஸ்டு கூட்டுக் குடும்பத்தின் வளர்ச்சியில் சோவியத் ஒன்றியம் சிறப்பாயும் பெரிய பங்கு வகிப்பதால், தேசியவாதம் பெரும்பாலும் சோவியத் எதிர்ப்பாக மாறுகிறது.

சர்வதேச அரங்கிலும் சில சோஷலிஸ்டு திசைவழியினை ஏற்றுக்கொண்ட நாடுகளிலும் கடுமையான வர்க்கப் போராட்டத்தின் சுற்றுச் சூழலில் ஒரு புதிய லட்சணத்திலான சர்வதேசிய உறவுகள் தோன்றி வருகின்றன. அக்டோபர் புரட்சி முடிந்த உடனேயே முதலாளித்துவ நாடுகளோடான உறவுகளை ஒப்பு நோக்குகையில் ''போல்ஷிவிக்குகள் முற்றிலும் வேறுபட்டதான சர்வதேச உறவுகளை நிறுவி வருகிருர்கள்''* என்று லெனின் வலியுறுத்தினர். இந்த உறவுகள் பூரண சமத்துவம், சர்வவுரிமை மற்றும் சுதந்திரம் மீது உறைந்து நிற்கின்றன. லெனின் சுட்டியது போன்று இந்தப் புதிய மாதிரியிலான சர்வதேச உறவுகள் ''எல்லா ஒடுக்கப்பட்ட மக்களும் ஏகாதிபத்திய அடிமைத் தளையில் இருந்து தம்மை விடுவித்துக் கொள்ளுவதை சாத்தியமாக்கின.''** சிறிய மக்களினங்கள் மெய்யான வளர்ச்சி சுதந்திரம் பெற்றன. இருப்பினும் குறிப்பாயும் சிறிய மக்களினங்களைச் சேர்ந்த இந்த சோஷலிஸ்டு-விரோத சக்திகள்தான் அன்னிய ஏகாதிபத்தியத்தின் ஆதரவுடன் தேசியவாதத்தைத் தீவிரமாகத் திணித்து வருகின்றன, இதைப் பாட்டாளி வர்க்க சர்வதேசியக் கோட்பாடுகளுக்கு எதிராகவும், அதன் பற்றுறுதி மிக்க ஆதரவாளர்களான சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சி, சோவியத் அரசு இவற்றுக்கு எதிராகவும் முடுக்கிவிடுகிருர்கள். எடுத்துக்காட்டாக செக்கோஸ்லோவாகியாவில்

---

* வி. இ. லெனின், ''நூல் திரட்டு'', தொகுதி 31, பக். 477.

** அதே நூல்.

இருந்த சோஷலிஸ்டு-விரோதப் பத்திரிகைகள், சிறிய நாடுகளின் தேசிய நலவுரிமைகள், "பாட்டாளி வர்க்க சர்வதேசியம் என்ற வேடமிட்ட மகாவல்லரசுப் பேராசையுடன்" மோதுவதாக அடித்துக் கூறுகின்றன.

கம்யூனிஸ்டுக் கட்சியில் உறுப்பினராகி, சோஷலிசத்தை எதிர்த்த தமது போராட்டத்தை மூடிமறைத்தவர்கள் பாட்டாளிவர்க்க சர்வதேசியத்தை மேலும் அதிக நுண்ணயமான மார்க்கங்களில் எதிர்த்துப் போராடினர்கள். பாட்டாளி வர்க்க சர்வதேசியம் காலாவதியாகிவிட்ட கருத்துரு என்று சொல்வது அவர்களது நரி வேலையில் ஒன்று. வலது சாரி சந்தர்ப்பவாதிகளில் ஒருவரான எஃப். கிரீகல் என்பவர் பல ஆண்டுகளாக பாட்டாளிகளே இருக்கவில்லை என்று வாதாடினர். இருப்பவர்கள் உழைக்கும் மக்கள், இவர்கள் தொழில் நுட்ப ஊழியர், பொறியாளர் மற்றும் அறிவுத்துறையினருடன் சேர்ந்து கலந்து விட்டார்கள், அவர்களுக்கு இனிமேல் சர்வதேசியத்தில் வர்க்க உள்ளடக்கம் என்பது இருக்காது என்று அவர் சொன்னர். கம்யூனிஸ்டு கட்சியின் சர்வதேசியக் கொள்கையை செக்கோஸ்லோவாகியாவில் இருந்த சோஷலிஸ்டு-விரோத சக்திகள் சோஷலிஸ்டு ஜனநாயகத்துக்கு ஓர் முட்டுக்கட்டை என்று போலித்தனமாக வருணித்தன. **லித்தரார்னி லிஸ்தி** எனும்இத்தகைய எதிர்ப்புரட்சிக் கோலத்துக்குப் பெயர்பெற்ற ஒரு செய்திப் பத்திரிகை "கட்சி தேசியக் கொள்கை மட்டுமின்றி சர்வதேசியக் கொள்கையையும் கடைப்பிடிக்க வேண்டி இருப்பதால் அதனல் ஜனநாயகப்படுத்தலை சாதிப்பது அரிது" என்று கூட எழுதியது. வலது சாரி சந்தர்ப்பவாத சோஷலிஸ்டு-விரோத சக்திகள் தொழிலாளி வர்க்கம்,அதன் கட்சி இவற்றின் தேசிய, சர்வதேசியப் பணிகளின் ஒற்றுமையையும் பிரிக்கவொண்ணுத் தன்மையையும் குறித்த மார்க்சியத் தத்துவக் கூறை வேண்டுமென்றே புறக்கணித்து, தேசிய வாதத்தைப் பரப்பும் நோக்கமுடன்

இந்தப் பணிகளை ஒன்றுக்கொன்று எதிரானதாக வைத்துக் குழப்பினார்கள்.

பல்வேறு நாடுகளில் சோஷலிசத்தின் வெற்றியை சாதனையாக்குவதற்கான மிகத் திட்பமும் தகுதியுமுடைய வழிகள் குறித்த தேட்டம், இந்த நாட்களில் மிகவும் மும்முரமாகி வருகிறது. இதுவும் கூட முன்னே அனுமானித்தது போலன்றி தேசியப் பிரச்சினையுடன் மேலும் நெருக்கமான தொடர்புடையதாக இருக்கிறது. இந்தத் தேட்டம் வெகுமுன்னரே தொடங்கிவிட்டது என்பது திண்ணம்; ஆனால் கடந்த 10 அல்லது 15 ஆண்டுகளாக மட்டுமே,தொழிலாளி வர்க்கமும் அதன் மார்க்சிய-லெனினியக் கட்சிகளும் தத்தம் நாடுகளின் பிரத்தியேகமான இயல்புகள் குறித்து எப்போதும் போதியளவு கரிசனம் காட்டவில்லை என்பது தெளிவாகி வருகிறது.

உலக சோஷலிசத்தின் எதிர்காலம் பற்றிய தனது பொறுப்பின் போத உணர்வுடன் சோஷலிஸ்டு நாடுகளின் தொழிலாளி வர்க்கம் சோஷலிசத்தை வலியுறுத்தக் கூடிய அத்தகைய வழி வகைகள் குறித்த தேட்டத்தில் அதிக கவனம் செலுத்தி வருகிறது. இது மக்களினங்களின் சாதனைகளைப் பெருக்கிடவும், முதலாளித்துவ நாடுகளிலும் வளர்முக நாடுகளிலும் சோஷலிசத்தின் கவர்ச்சி சக்தியை அதிகரித்திடவும் துணை செய்யும்.

இயல்பாகவே, சோஷலிஸ்டு விரோத சக்திகள் சோஷலிசத்தை நிர்மாணிப்பதற்கான வழிகளைக் கோரும் இந்தத் தேட்டத்தினை உலக சோஷலிஸ்டு அமைப்பை நோக்கிய தொடர்பறுப்பாகத் திசை திருப்ப முயல்கிறார்கள், இந்த நடப்புக்கு ஒரு தேசியவாத நிறம் பூசப் பார்க்கிறார்கள். இந்த முடிவுக்காகத்தான அவர்கள் தேசிய இயல்புகளை அளவுக்கு மீறி மிகைப்படுத்துகிறார்கள். சோஷலிஸ்டு நிர்மாணத்தின் பொது விதிகளை ஏளனம் செய்கிறார்கள்.

சோஷலிஸ்டு நாடுகளின் மக்களினங்களின் வாழ்வில் தேசியப் பிரச்சினையின் பாத்திரத்தை அதிகரித்த காரணி

களில் ஒன்று உலக சோஷலிஸ்டு அமைப்பின் வேகமுடுக்கப் பட்ட அபிவிருத்தியாகும். உலக சோஷலிஸ்டு அமைப்பின் வளர்ச்சியிலான நித்தம் பெருகிவரும் புதிய நியதிகள் மற்றும் முறைமைகளின் தூண்டுதலால் தோற்றுவிக்கப்பட்டுள்ள நடப்புக்களின் பல்வகைப்பாட்டை மற்றும் சிக்கல் தன்மையினை மானுட மனதால் இன்னும் சேர்த்தணைக்க முடியவில்லை. இது வரை நாம் இந்த நடப்புக்களின் முதல் அறிவித்தல்களை மட்டுமே பார்த்திருக்கிறோம். நிகழ்ச்சிகளின் இயற்கையான செல்வழி, தேசியப் பொருளாதார கூட்டமைப்புக்கும் ஒற்றை உலக சோஷலிஸ்டு பொருளாதாரத்தின் உருவாக்கத்துக்கும் இடையிலான வேற்றுமைகள் படிப்படியாக அழிந்தொழிதல்; தேசிய நடப்புக்கள் சர்வதேசிய நடப்புக்களுக்கு மேலதிகமாயும் கீழடங்குதல்; உலக சோஷலிஸ்டு அமைப்பின் வரம்புகளுக்குள் சோஷலிஸ்டு தேசங்களும் தேசிய இனங்களும் படிப்படியாகச் சங்கமித்தல் இவற்றை நிகழ்ச்சி நிரலில் சேர்த்து விட்டது.

சோஷலிஸ்டு நாடுகளில் ஏற்பட்டுவரும் மாறுதல்கள் சம்பந்தமாக இந்த நாடுகளின் மக்கள் தொகையின் பல்வேறு பகுதியினரின் எதிர் விளைவு ஒரே மாதிரி இல்லை என்பது புரிந்து கொள்ளக் கூடியதேயாகும். அவற்றுள் சில உள்நாட்டு சோஷலிஸ்டு விரோத சக்திகளாலும் வெளிநாட்டு ஏகாதிபத்தியச் செல்வாக்குகளாலும் தூண்டிவிடப்பட்டு எப்பாடுபட்டும் தேசியவாதம் உள்ளிட்ட முந்திய நிலைமையைக் கட்டிக் காக்க முயல்கின்றன. இதற்கும் மேலாக தனிப்பட்ட நாடுகளை அசாதாரண முக்கியத்துவம் தந்து தனிமைப்படும் நிலைக்கும் தள்ளிவிட முயல்கின்றன.

சமூக உறவுகள் அமைப்பில் பொதுவாகவும் சோஷலிஸ்டு நாடுகளின் அரசுகளிடையான உறவுகளில் குறிப்பாயும் உள்ள தேசிய உறவுகளின் மேலதிகமான முக்கியத்துவத்தின் பின் இருக்கும் இன்னொரு காரணி, உலக சோஷலிஸ்டு அமைப்பு உருவாகி வந்த சமயம் முற்றிலும் அகவயமான காரணங்களால் ஏற்பட்ட சில தவறுகளும், அவை நிகழ்ந்தபோது மக்களினங்கள் இடையிலான

உறவுகளில் ஏற்பட்ட எதிர்மறை விளைவும் ஆகும். இந்தத் தவறுகள் நீண்டகால முன்பே திருத்திக் கொள்ளப்பட்டன, அவற்றின் விளைவுகள் அகற்றப்பட்டுவிட்டன. இருப்பினும் சோஷலிஸ்டு-விரோத சக்திகள் அவற்றை தொடர்ந்து தம் நலத்துக்குப் பயன்படுத்தி வருகின்றன.

இன்றைய கட்டத்தில் சோஷலிஸ்டு நாடுகளின் வாழ்க்கையில் தேசியப் பிரச்சினை மேலதிகமான பாத்திரம் வகித்து வரும் காரணத்தால் தேசியவாதப் போக்குகள் ஓரளவுக்கு அதிகரித்துள்ளன.

உலக சோஷலிஸ்டு அமைப்பில் வதியும் மக்களின் வாழ்க்கையில் தேசிய வாதத்துக்குள்ள இடத்தையும் பங்கையும் வேண்டுமென்றே மிகைப்படுத்துகிறது பூர்ஷுவா பிரசாரம். ஆயினும் அது ஏற்கெனவே சுமத்தியுள்ள இன்னும் சுமத்தக் கூடிய தீங்கினைக் குறைத்து மதிப்பிடுவதிலும் அதிகமாக, இன்றைய கால கட்டத்தில் தேசியவாதத்தின் அபாயத்தை மிகையாக மதிப்பிட ஏதுவில்லை என்பது உண்மை. தேசியவாதத்தின் வெளிப்பாடுகள் உலக சோஷலிசத்தின் முன்னேற்றத்துக்கு உறும் தடைகளாகும். அகற்றி ஒழிக்கப்படாவிட்டால் தேசிய வாதம் மேலும் உறுதியாக இடம் பிடித்துக் கொள்ளும். பின்னர் இதை எதிர்த்துப் போராடுவது அதிகச் சிரமமாக இருக்கும். இறுதியாக, தேசியவாதத்தின் வெளிப்பாடுகளை எதிர்த்துப் போராட வேண்டுவது அவசியம், காரணம் வேறு காரியங்களுடன் கூடவே, அவை சமுதாயத்தின் முன்னேற்றத்தை வேகப்படுத்தி உத்தரவாதம் செய்துவரும், தேசிய, சர்வதேசிய நடப்புக்களின் சமநிலையைக் குலைத்து விடும்.

தேசியவாதத்தை முரணின்றி எதிர்த்துப் போராட வேண்டுமாயின், நாம் அதன் இயல்பையும் பல்வேறு வெளிப்பாடுகளையும் தெரிந்திருக்க வேண்டும்

முதலாளித்துவத்தை அகற்றி மாற்றீடு செய்யும் (சோஷலிசம் திட்டவட்டமான உற்பத்தி சக்திகளை, பலவகையான உற்பத்திப் பாங்குகள், தனிச் சொத்து, இயற்கைச்

செல்வம் இத்தியாதிகளைப் பலவந்தமாகப் பிரிவினையும் மறு பிரிவினையும் செய்தும், அநீதியான முறையில் பாகுபடுத்தப் பெற்று ஏற்பட்ட அபத்தமான காலாவதியாகிப்போன தேசிய எல்லைகளையும் மரபாகப் பெறுகிறது. பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் நிறுவப்பட்ட பிறகும் தேசிய வாதம், அ) பூர்ஷுவா தேசியவாதத்தின் மிச்ச சொச்சங்கள்; ஆ) குட்டி-பூர்ஷுவா தேசிய வாதம் அதன் மிச்ச சொச்சங்கள்; இ) சமுதாய வளர்ச்சியின் முரணான தன்மை, அகவயப் புரட்டுகள் அல்லது தவறுகள் காரணமாக தேசிய போதம் தேசிய உறவுகளின் இயல்பான வளர்ச்சியிலிருந்து திசை திரும்பல், இத்தியாதி அடிப்படை யான வடிவங்களில் மேவலாம் என்பதற்கான காரணங் களில் இதுவுமொன்றாகும்.

சோஷலிஸ்டுப் புரட்சியின் வெற்றிக்குப் பின்னர், **பூர்ஷுவா தேசியவாதம்** என்பது மீதமிச்சங்கள் அல்லது மிச்ச சொச்சங்களின் வடிவில் மட்டுமே வெளிப்பாடாகும். இந்த எச்சம் ஆகப் பரவலாகக் காணப்படும் வடிவம், இதர மக்களினங்கள் மீது ஆதிக்கம் செலுத்திய பெரிய தேசங் களின் உறுப்பினர் மத்தியில், நிலவிய மகாவல்லரசு தேசிய வெறியின் மரபினை அடிப்படையாக்கிய தப்பெண்ணங்களே. பாட்டாளி வர்க்க சர்வாதிகார நிலைமைகளில் நிகழக்கூடிய தான இன்னொரு விட்டகுறை, தம்மை ஒடுக்கிவந்த தேசம் மீது முன்னாள் ஒடுக்கப்பட்ட தேசம் அதன் உழைக்கும் மக்கள் கொண்டிருக்கும் அவ நம்பிக்கையாகும்; இந்த அவ நம்பிக்கை தனி ஒதுக்கம், பல்தேசிய இன அரசில் இருந்து அல்லது சோஷலிசத்தை நிர்மாணித்துவரும் அரசுகளின் கூட்டுக் குடும்பத்தில் இருந்து பிரிந்து செல்வதற்குக் கட்டாயப்படுத்துமாயின் இது நிகழலாம்.

சோவியத் ஆட்சி அதிகாரத்தின் துவக்க ஆண்டுகளில், பூர்ஷுவா தேசியவாதத்தின் விட்டகுறைகள் தத்துவார்த்த முறையிலும் அரசியல் ரீதியாகவும் உறுதியற்று இருந்த ஒரு சில கம்யூனிஸ்டுகள் மத்தியில் கூட இருந்ததை லெனின் அவதானித்தார். உள்நாட்டு,வெளிநாட்டு எதிர்ப்புரட்சிக்கு

எதிரான போராட்டத்தில் எல்லா தேசிய இனங்களையும் சேர்ந்த உழைக்கும் மக்களின் ஒற்றுமை வேண்டும் என அறை கூவியும், இதற்கு அத்தியாவசியம் என்ற முறையில் மத்தியப் படுத்தலைக் கொண்டு வந்தும் செயல்பட்ட ருஷ்யன் இனத்தவரான கம்யூனிஸ்டுகள் சில சமயங்களில் புரட்சியின் நலன்களால் மட்டுமின்றி பழைய "மகா-ருஷ்யன் தேசிய வாதத் தப்பெண்ணங்களாலும்"* ஊக்குவிக்கப்பட்டனர். இது லெனினுக்கு வியப்பூட்டவில்லை, காரணம் "இந்த மகா-ருஷ்ய இனத்தவர் நிலப்பிரபுக்கள், முதலாளிகளின் அடிமைத்தளையின் கீழ் பல நூற்றுண்டுகளாக மகா-ருஷ்ய தேசிய வெறியின் வெட்கக் கேடான வெறுப்பூட்டும் தப்பெண்ணங்களை மனதிற் கொண்டிருந்தார்கள்"** என்று அவர் கூறினர். இத்தகைய நடத்தைக்கு எதிர்வினை என்ற முறையில் முன்னுள் ஒடுக்கப்பட்டுக் கிடந்த தேசிய எல்லைப் பிரதேசங்களின் கம்யூனிஸ்டுகளிடையே அவநம்பிக்கை ஏற்பட்டது, அவர்களது சமுசயங்கள், பழைய தப்பெண்ணங்கள் மரபுகளில் இருந்து எழுந்தன. "இத்தகை அவநம்பிக்கை இயல்பானதே, மற்றும் ஓர் அளவுக்கு தவிர்க்க வொண்ணுததும் நியாயமானதும் கூட"*** என்று லெனின் கூறினர்.

உழைக்கும் மக்களுங்கூட பூர்ஷுவா தேசியவாதத்தின் விட்டகுறை மற்றும் எச்சங்களின் ஏற்பாளர்களாக இருக்கலாம் என்பது இதன் மூலம் தெரிகிறது. தவிர, முறியடிக்கப்பட்ட சுரண்டும் வர்க்கங்களில் இருந்து தப்பி எஞ்சியவர்கள், சில சமயம் பெரும் அளவில்கூட இருத்தலைக் காணலாம். இதேபோன்று அவர்களுக்குத் தொண்டு புரிந்த அறிவுத்துறையினர் முன்னுள் அலுவலர் அதிகார வர்க்கத்தவர் இத்தியாதியினரும் இருக்கலாம். இந்தப் பிரிவினர் நிச்சயமாயும் சோஷலிஸ்டு விரோதிகள், தமது

---

* வி. இ. லெனின், "நூல் திரட்டு", தொகுதி 30, பக். 295.

** அதே நூல்.

*** அதே நூல்.

வேடத் தோற்றத்தில் தேசியவாதிகள். பாட்டாளிவர்க்க அரசின் அலுவலகங்கள், ஸ்தாபனங்கள், நிறுவனங்களில் வேலையிலமர்ந்த இவர்கள் தமது கருத்துக்களை, உணர்ச்சிகளை அடித்து வலியுறுத்த தமது வேலையைப் பயன்படுத்திக் கொள்ள விரும்புவார்கள்.

பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் கீழ் குட்டி பூர்ஷுவா தேசியவாதம் சமூக அடிப்படையிலும் சித்தாந்த ரீதியிலும் உளவியல் முறையிலும் மேலும் சிக்கலான ஒரு புலப்பாடாகும். சோஷலிசத்தின் வெற்றிக்கு முன்னர் அது மக்களின் மனங்களில் இருந்த பழமையின் விட்டகுறை யாகவும், அதே சமயம் திட்டவட்டமான சமுதாயப் பின்னணியின் விளைவாகவும் இருந்தது.

ருஷ்யாவிலும் இப்போது சோஷலிஸ்டு நாடுகளாக இருக்கும் பெரும்பாலான நாடுகளிலும், ருஷ்யாவின் சோஷலிஸ்டுப் புரட்சி நடந்த சமயத்தில், சிறுவீத பண்ட உற்பத்தி முறையே மேலோங்கியிருந்தது. குட்டி பூர்ஷுவா மக்கள் திரளினரில் பேரளவுக்கு இருந்த உழைக்கும் விவசாயிகள் நீங்கலாக சிலகாலம் குலாக்குகள் இருந்தார்கள். நகரங்கள், பட்டணங்களில் கைவினையாளர், கடைக்காரர் மற்றும் தனி நிறுவனங்களின் உடைமையாளர் கொண்ட கணிசமான சமூக அடுக்கினர் இருந்தனர். லெனின் குறிப் பிட்டபடி "சோஷலிசம் தனது நிறைவேற்ற கால கட்டத்தில் பிரவேசித்த பின்னர், குட்டி பூர்ஷுவா நிலைகளை கட்டிக் காப்பதோ நீடித்து வைத்திருப்பதோ அறவே சாத்தியமில்லை என்பது எல்லோருக்குமே முற்றும் தெளிவாகத் தெரிந்து விட்ட நிலையில்"* குட்டி-பூர்ஷுவா நபர்கள் தொடர்ந்து நம்பிக்கை வைத்திருந்தனர். அவர்களது நம்பிக்கைகள் சோஷலிசம் வலுப்பெறுவதை எதிர்த்த போராட்டமாக வளர்ந்தது. இந்தப் போராட்டம் பெரு மளவு தேசியவாதக் கொடியின் கீழ் நடத்தப்பட்டது. இதர சோஷலிஸ்டு-விரோத சக்திகளுடன் சேர்ந்து நின்ற

* அதே நூல், தொகுதி 28, பக். 335.

அவர்கள், தமது நிலைகளைப் பாதுகாத்துக் கொள்வதற்கான முயற்சியில் தேசியவாதத்தை ஒரு முக்கிய ஆயுதமாகப் பயன்படுத்தினர்.

சிறிது காலம் குட்டி பூர்ஷுவா தேசியவாதம் அதன் சொந்த சமுதாய அடித்தளம் மீதே நிலவியது; அதோடு மக்கள் மனங்களில் இருந்த முதலாளித்துவத்தின் எச்சங்களிலிருந்தும் ஊட்டம் பெற்றது. இதன் பொருள் மக்களில் ஒரு பகுதியினரை இது கவர்ந்து பிடித்திருந்தது என்பதே; இது அவர்களது சித்தாந்தமாக மாறுகிறது, சமுதாய உறவுகளிலும் உளவியலிலும் மேவுகிறது.

தேசியத் தன்னல ஆணவம், குட்டி பூர்ஷுவா அடிப்படையில் மட்டுமே இது வெளியீடாகிறது எனும் நிலை இல்லாதிருப்பினும் கூட, குட்டி-பூர்ஷுவா தேசியவாதத்தின் கட்டமைப்பின் மையமாக உள்ளது. சித்தாந்தத்திலும் உளவியலிலும் உருவகம் பெற்றுள்ள ஒரு மக்களின் வாழ்க்கையின் புரட்டப்பட்ட பிரதிபலிப்பு என்ற வகையில், இது சர்வதேச நலன்களுக்குப் பாதகமான முறையில் தேசிய நலன்களை மிகைப்படுத்தக் காரணமாவதுடன், இதர மக்களின் தேசிய நலன்களை அப்பட்டமாயும் புறக்கணிக்க ஏதுவாகிறது. தேசிய அசாதாரணத்தன்மை, குறுகிய மனப்பான்மை எனும் வடிவங்களிலேயே இந்த தேசியத் தன்னல ஆணவம் தன்னை வெளிப்படுத்திக் கொள்கிறது.

பாட்டாளி வர்க்க சர்வாதிகார நிலைமைகளில், குட்டி பூர்ஷுவா தேசியவாதம் குறிப்பாயும் ஏன் அபாயகரமானது என்பதற்குப் பல காரணங்கள் உள்ளன. துவக்கத்தில் இதன் ஆதரவாளர்கள் சோஷலிஸ்டு அமைப்பைப் பகிரங்கமாக எதிர்ப்பதில்லை; நேர் மாறாக, அதன் ஜனநாயகத்தன்மையைத் தமக்குச் சாதகமாக எடுத்துக் கொண்டு மக்கள் திரளினர் மத்தியிலான தமது கவிழ்ப்பு நடவடிக்கைகளை மூடிமறைத்து வருகிறார்கள். மேலும், தேசிய நலன்கள் தேசியத் தன்மானம் இவை மீறப்படும்

சாத்திய கூறுக்கு எதிர்வினை என்ற முறையில் இதன் உள்ளடக்கத்தில் ஜனநாயகத்துவத்தின் கூறுகள் இருக்கலாம். வேறு சொற்களில் கூறிடின், குட்டி-பூர்ஷுவா மக்கள் திரளினரின் கிட்டத்தட்டக் கணிசமான பகுதியின் வடிவில் இதற்கு சமூக அடிப்படை இருக்கலாம், அவர்களின் சித்தாந்தமாக சேவைபுரியலாம். உணர்விலும் உளவியலிலும் சமூக அனுபவ நடைமுறையிலும் சாதனையாகலாம். இதற்குக் காரணம் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் துவக்க ஆண்டுகளில், தேசிய நலன்கள், தேசிய உணர்வுகளுக்கு எதிரான குற்றங்கள் அறவே இருக்காது என்ற முடிவுக்கு வருவது கடினம் (தேசியப் பொருளாதாரம், கலாசாரத்தின் வளர்ச்சியில் போதியளவு வேகம் இல்லாமை, இதர மக்களினங்களுடன் இதர தேசங்களுடன் குறிப்பாயும் முன்னாள் ஒடுக்குனர் தேசங்களுடன்—எப்போதுமே பரஸ்பர அனுகூலமான பரிமாற்றங்கள் நடைபெறும் என்பதற்கில்லை- அவற்றின் வெறுப்பு மற்றும் தேசிய வெறியைக் கூடக் காட்டலாம்) இந்த வடிவிலான குட்டி—பூர்ஷுவா தேசிய வாதமானது சோஷலிசத்திலிருந்து வருவிக்கப்பட்டதல்ல, மாறாக பழைய அமைப்பின் பின் விளைவே—சோஷலிஸ்டு கட்டத்துக்கு முந்தியதான உற்பத்தி முறை குட்டி பூர்ஷுவா மக்கள் திரளினரின் உடைமையுரிமை நலன்கள் பொதுவாக போதத்திலும், வாழ்க்கைப் பாணியிலும் மரபுகளிலுமான முதலாளித்துவத்தின் எச்சங்கள் இவற்றின்-பின்விளைவே. சமுதாய போதத்தின் ஒரு கூறு என்ற முறையிலும், மக்கள் தொகையின் ஒரு பகுதியினரின் சித்தாந்தம், கொள்கை, சமூக நடைமுறை என்ற முறையிலும் குட்டி பூர்ஷுவா தேசியவாதம், முதலாளித்துவ அல்லது முதலாளித்துவத்துக்கு முந்திய சமுதாய வடிவங்களில் இருந்து சோஷலிசத்துக்கு மாறிச் செல்லும் காலகட்டத்தில் மட்டுமே நிகழலாம், இதுவுங்கூட அதிகாரத்தில் இருக்கும் தொழிலாளி வர்க்கம் மீதான குட்டிபூர்ஷுவா இழிவெறியின் செல்வாக்கின் கீழ் சோஷலிசத்திலிருந்து ஏற்படும் ஒரு தாற்காலிகத் திரிபாகவும் இருக்கலாம். மகா-வல்லரசு

மரபுகள், மேலாதிபத்திய வாதம் இவற்றுடன் சேர்ந்து இதுவே பச்சையான பகட்டு தேசிய வெறியாக தன்னை வெளிக்காட்டிக் கொள்ளலாம். இதன் வழக்கமான வடிவங்கள் நடுநிலைமை வாதம், தேசிய மற்றும் ஒரே மாதிரியான பொய்யாகவே கருத்தில் உருவானநலன்கள்பால் ஒருதலை விருப்பம்; சர்வதேசிய கடமைகளை இரகசியமாயும் பகிரங்கமாயும் புறக்கணித்தல்; தத்துவம் நடைமுறை இரண்டிலுமே பாட்டாளி வர்க்க சர்வதேசியத்திலிருந்து திசை மாறுதல்.

சோஷலிசம் வெற்றிவாகை சூடிவிட்ட நிலைமைகளில், தேசிய வாதம் ஒரு திட்டவட்டமான வர்க்கம் அல்லது அடுக்கின் முறைப்படுத்தப்பட்ட சித்தாந்தமாகவோ, அவற்றின் கொள்கையாகவோ சமுதாய நடைமுறை யாகவோ இருக்க முடியாது. காரணம் இதன்பின் இத்தகைய வர்க்கம் அல்லது அடுக்குகள் எதுவும் நிலவ முடியாது. இங்கு பிரதானமாயும் உணர்வு மண்டலம் அளவில் மட்டுமே தேசியவாத வெளிப்பாடுகள் சாத்தியம். அதுவுங்கூட மக்கள் மத்தியிலான ஓர் அற்பமான பகுதியின் இடத்தில் மட்டுமே சாத்தியம். அரசியல் மற்றும் சமூக நடைமுறைத் துறையில் தனிநபர்கள் இடையிலான உறவு களில் மாத்திரமே இது சாத்தியம்.

தேசியவாதத்தின் வெளிப்பாடுகள் பல்வேறு வழிகளில் தோன்றுகின்றன: அ) சமுதாயக் கட்டமைப்பு தேசிய உளவியல், வாழ்க்கை முறை மற்றும் மரபுகளின் சென்ற கால விளைகேடு ஆ) சித்தாந்த வகையிலான வெளியார் செல்வாக்குகள் இதர நாடுகளின் சமுதாய நடைமுறையின் தாக்கம் இ) சமுதாய வளர்ச்சியிலான முரண்பாடுகள், இந்த வளர்ச்சியின் செல்வழியிலான அகநிலைப் புரட்டுகள் சுயவிருப்பவாதம், தத்துவம் நடைமுறையிலான பிழைகள் இதைப் போன்றதான முரண்பாடுகள்.

சோஷலிஸ்டு நிர்மாணத்தில் குறிப்பாயும் உலக சோஷலிசத்தைவலுப்படுத்தும்பணியில் பழைய அமைப்பின் பின்விளைவுகளை கவனத்தில் கொள்ள வேண்டும்

என்று மார்க்ஸ்-எங்கெல்ஸ் மற்றும் லெனின் சுட்டிக் காட்டியுள்ளனர். விட்டகுறைகள், தப்பெண்ணங்கள் மற்றும் பிற்போக்கான மரபுகளின் வடிவிலான பழமையின் விளைகேடுகள் சுமத்தப்படும் மக்களால் சோஷலிசம் நிர்மாணிக்கப்படும் எனும் உண்மையை மார்க்சும் எங்கெல்சும் சுட்டிக் காட்டினார்கள். பழைய மரபுகள் வாழ்பவர்கள் மனங்களில் கோரக் கனவுகளாகத் தம்மைத் தாமே திணித்துக் கொள்கின்றன என்று மார்க்ஸ் ஒரு முறை கூறினார். தேசிய உறவுகள் துறையில் இது குறிப்பாயும் தெட்டத் தெளிவாகும்.

பழமையின் கெடுவிளைவு என்ற முறையில் தேசிய வாதத்தின் தீமை குறித்து கவனத்தை ஈர்த்தார் லெனின். அவர் கூறியதாவது: ''இந்தத் தீம்பினை எதிர்த்து ஆக ஆழவேரோடிய குட்டி-பூர்ஷுவா தேசியத் தப்பெண்ணங் களை எதிர்த்து நடத்த வேண்டிய போராட்டத்தின் அவசர அவசியம் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை (அதாவது தனி ஒரு நாட்டில் நிலவி உலக அரசியலை நிர்ணயிக்க வியலாது இருக்கும்)ஒரு சர்வதேசியத்தன்மை கொண்டதாக (அதாவது பல முன்னேறிய நாடுகளை ஈடுபடுத்துவதும் உலக அரசியலில் ஒட்டு மொத்தமாக தீர்மானகரமான செல்வாக்குச் செலுத்தத் தக்கதுமாக) மாற்றும் பணியின் ஏறுமுகமான அவசர சந்தர்ப்பம் பெரிதாகஎழுந்துள்ளது.''*

இது தனிப்பட்ட நாடுகளில் சோஷலிச நிர்மாணம், பொதுவாக உலக சோஷலிசத்தின் ஒருமைப்பாடு இவற்றுக்குச் சம்பந்தப்பட்டதான சில முடிவுகளுக்கு இட்டுச் செல்கிறது. துவக்கத்தில் இந்தத் தீய விளைகேடு மேவியதான முக்கிய துறைகள் தேசிய உணர்வு மற்றும் உளவியல் என்பதாக லெனின் குறிப்பிடுகிறார். தேசிய வாதத்தின் ஊட்டம்தரும் சாதனமும் வரையறுக்கப்பட்டுள்ளது: மக்கள் உணர்வில் காணப்பெறும் பழமையின் எச்சங்கள் தவிரவும், தேசிய உணர்வுகள் தவிரவும் சமுதாயக் கட்டமைப்பில்

* வி. இ. லெனின், ''நூல் திரட்டு'', தொகுதி 31, பக். 148.

பழமையின் கூறுகள் இருப்பதை குறிப்பாயும் குட்டி பூர்ஷுவா மக்கள் திரளினர் மத்தியில் இவை நீடித்து நிலவுவதை லெனின் சுட்டினார். பின்தங்கிய நாடுகளை சோஷலிஸ்டு நிர்மாணத்திற்கு ஈர்க்கும் போதில் சமூக சித்தாந்த மற்றும் உளவியல் பின்விளைவுகளைப் புறக்கணிப்பதால் எதிர்மறையான விளைவுகள் ஏற்படலாம் என்று அவர் வலியுறுத்துகிறார். காரணம் "ஒரு நாடு எந்தளவுக்கு அதிகப் பின்தங்கியதாக இருக்கிறதோ அந்த அளவுக்கு அதிக பலமுடையதாக சிறுவீத விவசாய உற்பத்தி, தந்தைவழி மரபு, தனிமை இவற்றின் பிடிப்பும் இருக்கும். இவை, ஆகக் கடுமையான குட்டிபூர்ஷுவா தப்பெண்ணங்களுக்கு, அதாவது தேசியத் தன்முனைவும் தேசிய குறு மனப்பான்மை ஆகியவற்றுக்குப் பிரத்தியேக பலமும் விடா உறுதியும் அளிக்கும்"* என்று அவர் கூறினார். அதே சமயம் உணர்விலும் உளவியலிலுமான எச்சங்கள் தவிர, குட்டி பூர்ஷுவா மக்கள் திரளினரின் இடையே நீண்டகாலமாக இவை நிலவி வருவதும், வெளிப்படையாயும் பொதுவான சோஷலிஸ்டு விரோத சக்திகள் (முறியடிக்கப்பட்ட சுரண்டும் வர்க்கங்களின் எச்சங்களும், தேசிய அறிவுத் துறையினரில் ஒரு பகுதியினர் பழைய அமைப்புக்கு விசுவாசமாக இருப்பதும்) இருப்பதும் தவிர, இந்தத் தப்பெண்ணங்கள் சில நாடுகளில் நிலவும் முதலாளித்துவ அமைப்பில் வேரூன்றி நிற்பது காணலாம். தேசியத் தன்முனைவும் மற்றும் தேசியக் குறுமனப்பான்மையின் தப்பெண்ணங்கள் பழங்கதையாக வேண்டுமானால் அ) வளர்ச்சியடைந்த நாடுகளில் ஏகாதிபத்தியமும் முதலாளித்துவமும் அழிந்து மறையவேண்டும் ஆ) பின்தங்கிய நாடுகளின் பொருளாதார வாழ்வில் தீவிரமான மாற்றங்கள் ஏற்படவேண்டும். ஆகவே இந்தத் தப்பெண்ணங்கள் வேதனைகரமான முறையில் மெதுவாகவே மாண்டழியும் என்று லெனின் எழுதினார்.

* வி. இ. லெனின், "நூல் திரட்டு", தொகுதி 31, பக். 150.

மொத்தத்தில்தேசியவாதத்தின் புதியவெளிப்பாடுகளைப் பிறப்பிக்கும் சமுதாய அடிப்படை நீடிப்பதும் தேசிய வாதத்துக்கு ஓர் ஊற்றுக்கண்ணுகும். இந்தப் புதிய வெளிப் பாடுகள், பொதுத்தன்மையதான (தனிநபர் வாதம், தனியுடமைக்கு ஆதரவு இத்தியாதி) முதலாளித்துவத்தின் விட்ட குறைகளால் பீடிக்கப்பட்டதான மக்கள் தொகையின் பின்தங்கிய பகுதியின் மீது இன்னமும் நிலவி வரும் முதலாளித்துவ உலகின் செல்வாக்கில் இருந்து தோன்றலாம். சோஷலிஸ்டு பாதையைக் கரரராகவும் முரணின்றியும் கடைப்பிடிக்கத் தவறிடும் சோஷலிஸ்டு நாடுகளின் சமூக நடைமுறை எதிர்மறையான விளைவை ஏற்படுத்தலாம். எடுத்துக்காட்டாக சில நாடுகளில் "தேசியக் கம்யூனிசத்தின்" சித்தாந்தம் நடைமுறையின் எதிர்மறைத் தாக்கம் இருப்பதைக் காணலாம்.

சோஷலிஸ்டு சமூக அமைப்பில் தேசியவாத விளை நிலத்தினதன் முதலாவது இரண்டாவது மூலாதாரங் களான பழைமையின் மரபுரிமை, வெளிப்புறத்தாக்கம் இரண்டையும் அம்பலப்படுத்துவது முக்கியமானது; எனினும் இதன் வெளிப்பாடுகளின் "வகை நுட்பம்" ஒரே மாதிரியாக இருக்கிறது, ஓரளவு எளிதில் புரிந்து கொள்ள முடிகிறது. இதன் மூன்ருவது மூலாதாரம் மிக மிகச் சிக்கலானது—சமுதாயத்தின் கட்டமைப்பில்சமூகஅடிப்படை எதுவுமின்றி, மக்கள் உணர்வில் தேசியவாதத்தின் நேரடி எச்சங்கள் எவையும் இன்றி, கேவலம் சோஷ லிசத்தின் கீழ் சமுதாய வளர்ச்சியின் முரண்பாடுகளின் விளைவாக தவருன தத்துவார்த்த அரசியல் மதிப்பீடு, தேசிய, சர்வதேசிய நலன்கள் கடமைகள் விஷயத்தில் சரியான தொடர்பாட்டினை நிறுவிக்கொள்ள இயலாமை அல்லது தயக்கம் இவற்றின் விளைவாக இந்த வளர்ச்சியின் இயல்பான செல்வழி அகநிலையான முறையில் புரட்டப் படுகிறது.

தேசிய வடிவங்கள், மக்களினங்களின் முன்னேற்றத்தின் சமூக உள்ளடக்கம் இவற்றின் வளர்ச்சி வெவ்வேறு விகிதங்

களில் நடைபெறுகிறது. பொதுவாக, வடிவம் உள்ளடக்கத்தைவிடவும் அதிகப் பழமைத்தன்மை கொண்டது. மேலும் இங்கு நாம் தேசியத்தில் முக்கியமாயும் இன அம்சத்தினைச் சார்ந்த மிக மெதுவாக மாற்றம் கண்டுவரும் காரணிகளான மொழி, தேசிய கலாசாரம், தேசியப் பண்பு இத்தியாதியுடன் சம்பந்தப்பட்ட தேசிய வடிவத்தையே இங்கு நாம் எடுத்தாளுகிறோம். மறுபுறம் சமுதாய உள்ளடக்கம் ஓரளவு உயர் விகிதத்தில் மாற்றமடையும் உற்பத்தி சக்திகளின் பெருக்கம் உற்பத்தி உறவுகள் இவற்றுடன் முக்கியமாயும் தொடர்புடையதாகும்.

சோஷலிசத்தின் கீழ் சமுதாய வளர்ச்சியின் ஒரு முரண்பாடு, விஞ்ஞான-தத்துவார்த்த போதத்தின் உள்ளடக்கம் மற்றும் அவை தம்மைத்தாமே வெளிப்படுத்திக் கொள்ளும் வடிவங்கள் இடையிலான வேற்றுமைகளில் இருந்து கிளைக்கிறது. இந்த வேற்றுமைகள் கவனத்திற்குரியன. காரணம் அவை, சர்வதேசிய தேசிய, நடப்புக்களின் வர்க்க மற்றும் தேசியக் கூறுகளின் தொடர்பாடு போன்ற, அத்தகைய சிக்கலான சமூக புலப்பாடுகளை அகநிலையில் இருந்து வியாக்யானம் செய்யும் விளைவில் போய் முடிகின்றன.

சமுதாய வளர்ச்சியின் முரண்பாடான தன்மை, சோஷலிசத்தின் கீழிலான தேசியவாத வெளிப்பாடுகள் மீது பலமான தொடர்பாக்கமுடையது; இதற்குக் காரணம் தேசியப் பிரச்சினை சம்பந்தமாக தொழிலாளி வர்க்கமும் அதன் கட்சியும் தமது கொள்கையில் அகவயமான புரட்டுக்களையும் சிலசமயம் பிழைகளையும் செய்வதேயாகும். இந்தப் புரட்டுக்கள் பிழைகளுக்கான காரணங்கள் வேறுபடலாம். சில சந்தர்ப்பங்களில் மக்களினங்களின் இயல்புகள் சம்பந்தமாகவும், தேசிய உணர்வுகள் விஷயத்தில் விசேஷ மதிநுட்பமும் கரிசனமும் காட்டப்படவேண்டும் எனும் லெனினியத்தின் தேவை குறித்தும், மக்களினங்களின் வரலாற்றுப் பழமை அவர்களது தேசியப் பழக்கங்கள் மரபுகள் விஷயத்திலும் தோற்றுவிக்கப்படும் சூன்யவாத தோரணையேயாகும். வேறு சந்தர்ப்பங்களில், தனிநபர்கள்

சோஷலிசத்தின் கீழேயுங்கூட சமத்துவம் சுதந்திர சித்தம் இவற்றின் ஆரம்ப விதிகளை மீறி மக்கள் நம்பிக்கையைச் சீர்குலைக்கலாம்; இந்த நம்பிக்கை இல்லையேல் சமாதான உறவுகளும் இல்லை, முன்னேற்றமும் கிடையாது.

மேலே குறிப்பிட்டவை போலவே, அ க வ ய ப் புரட்டுக்கள் பிழைகளில் இருந்து பெறப்பட்ட பல காரியங்கள், பாட்டாளி வர்க்க சோஷலிஸ்டு சர்வதேசியம் புறக்கணிக்கப்பட்டதால் நேர்ந்தவை என்று கருதலாம். இதில் இருந்து ஏற்படும் எந்த ஒரு மாறுபாடும்—சர்வ சாதாரண விவகாரத்திலுங்—கூட சம்பிரதாய சமத் துவத்துக்குப் பதில் உண்மையான சமத்துவம் கையாளப் படுவதில் புரட்டு போன்று—குட்டி பூர்ஷுவா தோரணைக்கு இட்டுச்செல்லும் பூர்ஷுவா தோரணைக்கும் கூட இழுத்துச் செல்லலாம்.

முதலாளித்துவத்தின் பொது நெருக்கடியின் இரண்டா வது கட்டத்தின் விளைவாக ஒரு சோஷலிஸ்டு வாழ்க்கை முறையை மேற்கொண்ட சில நாடுகளின் மக்கள்தொகையில் குட்டி பூர்ஷுவா நபர்கள் (இப்போது அல்லது அண்மையில்) பெரும்பங்காக இருப்பது உலக சோஷலிஸ்டு அமைப்பின் ஆக்கத்தைப் பாதிக்கும் இன்னொரு முக்கிய காரணியாகும். சமுதாயத்தின் வர்க்கக் கட்டமைப்பில் ஏற்பட்டுள்ள சாரமான மாறுதல்கள் இருந்தபோதிலும் குட்டி-பூர்ஷுவா மக்கள் திரளினர், அவர்களது சித்தாந்தம் சோஷலிச நிர்மாணத்தினைத் தடுத்து மட்டுப்படுத்த முனைவர்.

சில நாடுகளில் நடைபெற்ற சோஷலிஸ்டுப் புரட்சி களின் தனி அம்சம் என்னவென்ருல், தேசியவாதத்தின் விரோதக் குரோதம் இருந்த போதிலும் அது பழைய அமைப்பை வீழ்த்துவதற்கான போராட்டத்தில் குட்டி பூர்ஷுவா, அறிவுத்துறையினர் பகுதிகள் சிலவற்றை கவர்ந்திர்ப்பதற்கு உதவியது, காரணம் இது சோஷலிஸ்டு புரட்சியை நெருக்கமாகக் கொண்டு வந்துவிடும் எனும் உணர்வைவிடவும் அவர்களது தேசிய சுதந்திர ஆர்வம்

பலமானதாக இருந்தது. தேசிய பூர்ஷுவாக்களும் குட்டி பூர்ஷுவாக்களும் முக்கியமாக விவசாயி மக்கள் திரளினரும் அதன் வெற்றிக்குத் துணை புரிந்ததோடு மட்டுமின்றி—தமது கட்சிகள் வாயிலாக ஐக்கிய மக்கள் முன்னணி நிறுவி அல்லது வேறு இதர வழிகளில் நாட்டை ஆட்சி செய்வதிலும் பங்கேற்றுக் கொண்டதால், இந்தப் பின்னணியில் புரட்சி வெற்றிவாகை சூடியது.

இன்றைய உலக சோஷலிஸ்டு அமைப்பின் சிலபல நாடுகளில் புதிய சமுதாய அமைப்பை நிர்மாணிப்பதற்கான பாதையில், குறிப்பாயும் தொழிலாளி வர்க்கம் பலவீனமாக இருக்கும் நிலையில், மக்களின் தேசிய உணர்வு ஒருதலைப் பட்சமாக வளரும் அபாயத்துக்கு இடமுண்டு. இது வளர வேண்டும் என்பது இயல்பே. காரணம் இது விரோதிகளை எதிர்த்தப் போராட்டத்திலும் புது வாழ்வை நிர்மாணிப்பதிலும் கிட்டிய வெற்றிகளின் நியாயமான பெருமிதத்தால் ஊக்குவிக்கப்பட்டுள்ளது. ஆனால் பொதுவான தேசியப் பெருமிதமும் தேசிய உணர்வும், தொழிலாளி வர்க்கம் ஏதேனும் காரணங்களால் அதைக் கண்காணிக்க முடியாமல் அதில் குட்டி பூர்ஷுவா நபர்கள் மேலாதிக்கம் வகிப்பார்களாயின் தேசியத் தப்பெண்ணங்களின் சுயவீக்கம் ஏற்பட்டு பெருமிதம் வீண்பெருமையாக மாறும். இது தன் வகைக்கு சில சந்தர்ப்பங்களில் தேசியவாதம் குறு தேசிய வெறியின் அளவை மேற்கொள்ளும். சோவியத் ஒன்றியத்தின் சில தேசிய வட்டாரங்களில் இதைப்போன்ற சிலசம்பவங்கள் நிகழ்ந்தன. தேசியவாதம் எனும் நோய்க்கிருமியால் கெடுக்கப்பட்ட தாத்தாரியாவின் எம். சுல்த்தான்-கலியெவ் ஜார்ஜியாவின் பி. மிதிவானி, உக்ரேனில் எ. ஷுமிஸ்கி உறுப்பு மற்றும் சுயாட்சிக் குடியரசுகளின் அதிகாரிகள் மட்டும் இவ்வாறு சிந்திக்கவில்லை, சிலர் விஷயத்தில் அவர்களது கருத்துக்கள் தேசியப் பிரச்சினையிலான திரிபுகளுக்குரிய சித்தாந்த மேடைகளாகி விட்டன. தொழிலாளி வர்க்கம் அதன் கட்சியின் முதிர்ச்சியின் விளைவாக, மாமேதை லெனினது தலைமையின் உதவியால் இந்தத்

திரிபுகள் முளையிலேயே கிள்ளப்பட்டன. சில சோஷலிஸ்டு நாடுகளில் தொழிலாளி வர்க்கத்தாலும் அதன் கட்சியாலும் மக்கள் தேசிய உணர்வின் பெருக்கத்தை நெறியாண்மை செய்யமுடியவில்லை. அவை தாமே குட்டி-பூர்ஷுவா தேசிய வாத சித்தாந்தத்தின் வசியத்துக்கு ஆளாகின.

பெரியளவில் குட்டி பூர்ஷுவா மக்கள் தொகையினர் கொண்டதான, சோஷலிஸ்டு பாதையில் செல்லுகிற ஒரு நாட்டில், தேசியவாதப் போக்குகள் மேவுவதற்கு இன்னொரு காரணம் உண்டு. கம்யூனிசத்தின் பொதுக் கோட்பாடுகளை, வர்க்கங்கள் கட்சிகளின் அலாதி உறவுகளுக்கும் சம்பந்தப்பட்ட நாட்டிற்கு எடுத்துக்காட்டான கம்யூனிசத்தை நோக்கிய அலாதியான புறநிலை மாற்றத்துக்கும் ஏற்பப் பிரயோகிப்பது என்பது, கம்யூனிஸ்டுக் கட்சியின் கடமை என்று லெனின் கூறினார். இந்த தேசிய அலாதித் தன்மைகள் மற்றும் சோஷலிஸ்டுப் புரட்சி சோஷலிஸ்டு நிர்மாணத்தின் பொது விதிகள் இடையிலான சரியான தொடர்பாட்டைக் கண்டறிவதும் அவசியம். ஆனால் இதற்கு பாட்டாளி வர்க்கக் கட்சியின் வசம் உயர் அளவிலான அரசியல் முதிர்ச்சியும் அனுபவமும் தேவைப்படும். "ஒவ்வொரு நாடும் பொதுவான நீரோட்டத்துக்குத் தமக்கே உரியதான மதிப்புமிக்க பிரத்தியேக அம்சங்களைப் பங்களிப்புச் செய்கின்றன; ஆனால் ஒவ்வொரு குறிப்பிட்ட நாட்டிலும் இயக்கம் தனது ஒரு சார்புப் போக்கால், தனிப்பட்ட சோஷலிஸ்டு கட்சிகளின் சொந்த தத்துவார்த்த நடைமுறைக் குறைப்பாடுகளால் பாதிக்கப்படுகிறது"* என்று லெனின் எழுதினார்.

சோஷலிஸ்டு நிர்மாணத்திற்கான பிரச்சினைகளை அணுகும்போது, வட்டார தனி இயல்புகளை மிகைப்படுத்துவதும், தேசியக் கம்யூனிசம் எனப்படுவதன் ஏதேனும் ஒரு வடிவத்தை ஆதரிப்பதும், வற்புறுத்தப்படுமாயின் அது மிகவும் அபாயகரமான செயலாகும். மக்கள் ஜனநாயகங்கள்

* வி. இ. லெனின், "நூல் திரட்டு", தொகுதி 15, பக். 187.

சிலவற்றில் சோஷலிஸ்டு நிர்மாணம் துவங்கப்பட்டபோது, உள்ளபடியே பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை எதிர்த்திருந்த நபர்கள் கம்யூனிஸ்டு கட்சிக்குள்ளேயும் கூட தீவிரமாகச் செயல்பட்டனர். மார்க்சிய-லெனினியத்தின் மீதான விசுவாசம் குறித்த சபதங்களுடன் அவர்கள் சோஷலிஸ்டு நிர்மாணத்தை தகையும் தமது முயற்சிகளை அப்பட்டமாயும் மூடி மறைத்தார்கள். ஆனால் இதில் ஒரு நிபந்தனை போட்டார்கள்: ஒவ்வொரு மக்களும் தமது சொந்தமான தனிப்பட்ட சோஷலிசத்துக்கான ''தேசிய''ப் பாதையினை தேர்ந்து கொள்ளலாம் என்று அவர்கள் வாதித்தார்கள். அவர்களது மெய்யான நோக்கம் சோஷலிசத்தைத் தகைவதே என்ற போதிலும் தேசியவாதம் மூலம் சோஷலிஸ்டு-விரோத சக்திகளின் இணைப்பை அடைய முடிந்தது. அதன்வழி தனிப்பட்ட கம்யூனிஸ்டுக் கட்சிகளின் உறுதியில்லா உறுப்பினர் பகுதியின் ஆதரவைப் பெற முடிந்தது. அதே சமயம் சோஷலிஸ்டு சக்திகளை எதிர்த்து உலக முழுதும் கெடுபிடிப் போர் கட்டவிழ்த்து விடப்பட்டதோடு, ''நடுநிலைமை வாதம்'' மற்றும் பிறருக்கு அசமத்துவம் என்று தெளிவாகப் புலப்படும் ஒரு வகை ''சமத்துவம்'' போன்றவற்றின் முதல் அறிவிப்புக்கள் தோன்றின.

தேசியக் கம்யூனிசத்தின் பாலான திசை ஈர்ப்புக்கான முக்கிய காரணங்களில் ஒன்று, கம்யூனிஸ்டுக் கட்சிகளினுள்ளே குட்டி-பூர்ஷ்வா நபர்கள் ஊடுருவியதும், அதோடு சேர்த்து கட்சியின் தலைமை ஊழியர்கள் போதிய அரசியல் முதிர்ச்சி அனுபவம் இவை இல்லாமல் இருந்ததுமேயாகும்.

1969 மாநாட்டில் கலந்து கொண்ட பலர் தத்துவம் நடைமுறை இரண்டிலும் பச்சையான வலது, ''இடது சாரி'' சந்தர்ப்பவாதம் தலைவிரித்தாடியதைப் பற்றி கவனத்தை ஈர்த்தனர். சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சியின் 24 ஆவது, 25 ஆவது காங்கிரசுகளுங்கூட உலகக் கம்யூனிஸ்டு இயக்கத்தில் கம்யூனிஸ்டு விரோதம் சோவியத்-எதிர்ப்பு இவற்றை எதிர்த்தும், வலது ''இடது'' திருத்தல்வாதம்

தேசியவாதம் இவற்றை எதிர்த்தும் போராட வேண்டுவது முக்கியமான கடமை என்று வலியுறுத்தின.

மக்களின் சமத்துவம் கடைப்பிடிக்கப்பட வேண்டும் என்று லெனின் வலியுறுத்தினர். தெரிந்தும் தெரியாமலோ விளையாட்டுக்குங்கூட சமத்துவம் மீறப்படுமானல் மக்கள் உணர்ச்சிவசப்பட்டு விடுகிறார்கள்: இருப்பினும் சில சோஷலிஸ்டு நாடுகளில் வெளியிடப்படும் வரலாற்று மற்றும் இலக்கிய நூல்களில் சோதர மக்களின் தேசிய தன்மானத்தைப் புண்படுத்தும் வகையில் தமது வரலாற்றை பெருமிதப்படுத்திக் கொள்ளும் கட்டுரைகள் வெளியிடப்படுகின்றன.

தேசியவாதத்தின் பகிரங்க வெளிப்பாடு மட்டும் உலக சோஷலிஸ்டு அமைப்பின் ஒற்றுமைக்குத் தீங்கு விளைப்பதல்ல. தேசிய நலன்கள் விஷயத்தில் பரஸ்பரம் காட்டும் கரிசனம் இம்மியளவு குறைவதுங்கூட அனுமதிக்க முடியாததாகும். குறிப்பாயும் இன்று, தேசிய பொருளாதார அமைப்பை மேம்படுத்துவதற்கான பொருளாதார சீர் திருத்தங்கள் பல நாடுகளில் உருவாக்கப்பட்டு வரும்போது ப.பொ.உ.க. நாடுகள் சோஷலிஸ்டு இணைப்பாக்கத்தை நாடி நடைபோடும் போதில் இது அறவே அனுமதிக்கப் படலாகாது. பொருளாதார சீர்திருத்தங்களின் சமூக பின் விளைவுகளையும் தேசிய சர்வதேசிய அம்சங்களின் தொடர் பாட்டிலான அவற்றின் வீச்சையும் கருதிப் பார்ப்பது அவசியம். இவற்றின் இடையிலான சரியான சமநிலை பேணப்பட வேண்டும்.

தேசிய வாதம் என்ன வேடம் போட்டாலுஞ்சரி தேசியவாத சித்தாந்தம் சோஷலிசத்துக்குப் பகைமை யானதே, காரணம் அது பழமையின் விட்டகுறையாக தன்னை வெளிப்படுத்திக் கொண்ட போதிலும் அது பூர்ஷுவா தேசியவாதத்தின் பிரதான கோட்பாட்டை தேசிய அசாதாரணத் தன்மையினை நீடித்துவைத்திருக்கிறது. இது நிச்சயமாயும் தனிமை, விலகிப் பிரிதல் மற்றும் உலக சோஷலிஸ்டு அமைப்பைப் பலவீனப்படுத்துவதற்கும்

நிச்சயமாயும் இட்டுச் செல்லும். பொதுவான விடுதலை நோக்கத்துக்கு தேசியவாதம் இழைக்கும் தீமை இதேபோல மிகப் பெரியதாகும். காரணம் அது மனிதகுலத்தின் முன்னேற்றத்தின் பொதுவான செல்வழியில், உலக சோஷலிஸ்டு இயக்கம் செலுத்தும் செல்வாக்கை மழுங்கடிக்கிறது. இன்னும் முதலாளித்துவ ஆட்சியின் கீழ் உள்ளவர்களும் அல்லது வெகு அண்மையில் காலனி ஆதிக்க ஒடுக்கு முறையில் இருந்து விடுதலை பெற்றவர்களுமான லட்சோப லட்சம் உழைக்கும் மக்கள் மத்தியில் சோஷலிஸ்டுக் கருத்துக்களை இழிவுபடுத்துகிறது.

சோஷலிசத்தை "மிதப்படுத்தும்" வேலைத் திட்டத்தின் ஒரு பகுதி என்பதாகத் தேசியவாதத்தை ஆதரிப்பவர்களும் "இடது" போலி-புரட்சிகர சொற்சாலத்தின் பின்னே மறைந்து செயல்படுவோரும், சம அளவில் தொழிலாளி வர்க்கம் மற்றும் இதர எல்லா உழைப்பாளி மக்களின் லட்சியத்துக்குத் தீங்கு செய்கிறார்கள்.

சோஷலிஸ்டு சர்வதேசியம் மட்டுமே உலக சோஷலிஸ்டு அமைப்பை வலுப்படுத்த முடியும், தேசியவாத சித்தாந் தத்தின் எச்சங்களால் ஏற்படும் பிரிவினைவாத விளைவுகளை வென்று சமாளிக்க முடியும்.

சோஷலிசத்தின் கீழ் ஒருநாட்டின் தேசிய ஒற்றுமையை உறுதிப்படுத்துவது என்பது சர்வதேசிய வாதத்தின் வெளிப் பாடு ஆகும். ஆனால் அத்தகைய ஒற்றுமையைச் சாதனை யாக்குவது எளிதல்ல. குட்டி-பூர்ஷுவா ஜனநாயகத்துக்கு எவ்விதச் சலுகைகளும் நாம் வழங்காதது முற்றிலும் சரியானதே. "மக்கள் ஒரு இணைப்பாக்கம் பெற்ற முழுமை என்றும், மக்களின் சித்தம் வர்க்கப் போராட்டத்திலன்றி வேறு வழிகளில் வெளிப்படுத்தப்படலாம் எனவும் கருதும் குட்டி பூர்ஷுவா பிரமைகளை நாம் கலைக்க வேண்டி யிருந்தது"* என்று லெனின் எழுதினார். சோவியத் ருஷ்யாவில் தேசிய ஒற்றுமையைப் பெறுவது மிகவும் கடின

* வி. இ. லெனின், "நூல் திரட்டு", தொகுதி 28, பக். 207.

மாக இருந்தது. போல்ஷிவிக் கட்சி பிரஸ்ட் சமாதான ஒப்பந்தத்தைச் செய்து கொண்டது. இதன் மூலம் குட்டி-பூர்ஷுவா மக்கள் திரளினரின் தேசபக்திக்கு எதிராகப் போக நேர்ந்தது. மேலும் ருஷ்யாவின் தொழிலாளி வர்க்கம் குறுகிய தேசிய நலன்களுக்காக உலகப் புரட்சியின் நலன்களை தியாகம் செய்யக் கூடாது என்பதைப் புரிந்து கொள்ளாதவர்களையும் எதிர்க்க வேண்டி வந்தது. இதனால் நிலைமை மேலும் உக்கிரமடைந்தது.

மக்கள் ஜனநாயகங்களில் நிலைமைகள் சற்றே வித்தியாசமாக இருந்தன. சோவியத் ஒன்றியத்தில் இருந்த நிலைக்கு மாறாக இங்கு சோஷலிஸ்டு மாற்றங்கள் தொடங்கப்பட்ட தருணம் முதலே நடுத்தர அடுக்கினரின் மக்கள் திரளினர் முழுவதுடனும் கூட்டணி சேருவது சாத்தியமாக இருந்தது. இருப்பினும் சில பல இடங்களில் தேசிய ஒற்றுமைக்குத் தொழிலாளி வர்க்க நலன்களே அடிப்படை என்ற நிலை ஏற்படச் சற்றுக் காலம் தேவைப்பட்டது. அதன் தாக்கம் எவ்வளவுதான் இருப்பினும், பாட்டாளி வர்க்க சர்வ தேசியத்தின் சித்தாந்தம் மிகவும் மெதுவாகவே குட்டி-பூர்ஷுவாக்களின் பல்வேறு பிரிவுகள் மத்தியில் பரவியது, இப் பிரிவுகளை லெனின் தொழிலாளர்களை விடவும் குறைந்த இயங்கு இயல்பு கொண்டவர்கள், இதர மக்களினங்களுடன் இன்னும் குறைவான தொடர்பே உள்ளவர்கள், தேசிய வாதத்தின் எச்சங்களால் மிகவும் கடுமையாகப் பீடிக்கப்பட்டவர்கள் என்று வருணித்தார். தேசிய இயக்கங்கள் ஓரளவுக்குக் குறைவாக மதிப்பிடப்பட்டன, இது மற்ற விவரங்களுடன் கூடவே தேசியச் சிறுபான்மையினர் நிலை மீதும், அறிவுத் துறையினர் உடனுன பணிகள் மீதும் பிரதிபலித்தது. இவற்றை எல்லாம் 1956-ல் ஹங்கேரியிலும் 1968-ல் செக்கோஸ்லோவாகியாவிலும் இருந்த சோஷலிஸ்டு-விரோத சக்திகள் தமக்கு ஆதரவாகப் பயன்படுத்திக் கொண்டன. தேசிய வாதம் சோவியத் எதிர்ப்பு அடிப்படையிலான ''தேசிய ஒற்றுமை'' எனும் கோஷத்தை ஆதரித்தன. இதன் காரணமாகத்தான், எதிர்ப் புரட்சி-

சக்திகளை முறியடித்த பின்னர் ஹங்கேரி, செக்கோஸ் லோவாகிய கம்யூனிஸ்டுகளின் தலையாய கடமை மெய்யான பாட்டாளி வர்க்க அடிப்படை மீது தேசிய ஒற்றுமையை சாதனையாக்குவது என்பதாக இருந்தது. ஹங்கேரியில் இது ஏற்கெனவே நிறைவேறி விட்டது. ஹங்கேரி சோஷலிஸ்டு தொழிலாளர் கட்சியின் அரசியல் குழு உறுப்பினர் ஜோல்தன் கமோசின் 1968 இலையுதிர் காலத்தில் எழுதிய தாவது: "கடந்த பன்னிரெண்டாண்டுகளிலான எமது முன்னேற்றம், சோஷலிஸ்டு உள்ளடக்கமும், கம்யூனிஸ்டுக் கட்சியின் வேலைத் திட்டத்துடன் உடன்படும் நோக்கங்களும் கொண்டதான ஒரு தேசிய ஒற்றுமையை உருவாக்கி யுள்ளது."* 1973 மார்ச் மாதம் வெளிவந்த அரசாங் கத்தின் அறிக்கையும் ஹங்கேரிய மக்களின் "வளர்ந்து வரும் சோஷலிஸ்டு தேசிய ஒற்றுமையை"** சிறப்பாக வலியுறுத் தியது.

செக்கோஸ்லோவாகியாவிலுள்ள செக் மற்றும் ஸ்லோவாக் மக்களின் சோஷலிஸ்டு தேசிய ஒற்றுமை வெற்றிகரமாக விருத்தி செய்யப்பட்டு வருகிறது.

உலக சோஷலிஸ்டு அமைப்பு சர்வதேசத் தொழிலாளி வர்க்க இயக்கம் இவற்றின் ஆக்கத்தில் தேசிய அம்சங்கள் எவ்வளவு முக்கியமானதாக இருந்த போதிலும், பாட்டாளி வர்க்க சர்வதேசியத்தின் பிரச்சினைகளைச் சரியாக வரையறுப் பதும் அவற்றுக்குத் தீர்வு காண்பதும் தலையாய முக்கியத் துவமுடையதாகும். சில சமயங்களில் சோஷலிசத்தின் அடிப்படையில் தேசங்களின் ஒரு சீரான கெட்டி ஒற்றுமைக்கான போராட்டம் சிரமமான நிலைமைகளில் நடைபெறுகிறது. இந்தக் காரணத்தால், சோஷலிஸ்டு நாடுகளில் இருக்கும் அரசியல் ஊழியர்களும் அறிஞர்களும் சர்வதேசியத்தின் பிரச்சினைகள்பால் பேரளவு கவனம் செலுத்துகின்றனர். சர்வதேசியம் தேசபக்தி கோட்பாடு

---

* ஓர்ல்ட் மார்க்சிஸ்ட் ரெவ்யூ, 1968, இதழ் 10-11, பக். 9.

** நெப்சாபத்சாக், 1973, மார்சியஸ் 22.

களின் நடைமுறையில் பரப்புதற்கும் சித்தாந்தப் பணிகளுக்கும் இடையே சாத்தியமான அளவு அதி நெருக்கமான ஒற்றுமையின் அவசியத்தை எடுத்துக் காட்டுகிறார்கள்.

இருப்பினும் 1960 ஆம் ஆண்டுகளின் இறுதியில் சர்வதேசியத்தின் கோட்பாடுகள் தொடர்பான ஏற்கவியலாத கருத்துக்கள் மேவலாயின. முக்கியமாயும் இது, மார்க்சிய-லெனினிய அடிப்படை என்ற பேரில் நமது சகாப்தத்தின் உள்ளடக்கம் பாட்டாளி வர்க்க சர்வதேசியத்தின் உள்ளடக்கத்தின் செயல் திறனை பலவீனப்படுத்திக் குறுக்கி விடுகிறது என்று நிரூபிப்பதற்கு நடந்த முயற்சிகளையே குறிப்பிடுகிறது. இன்றும் கூட கம்யூனிஸ்டுக் கட்சிகள் எய்தியுள்ள முதிர்ச்சியின் அளவும், சோஷலிஸ்டு நாடுகளின் இன்றைய அபிவிருத்தித் தரமும், பரஸ்பர பிணைப்புக்களையும் பரஸ்பர ஆதரவையும் கைவிட்டு விடும் சாத்தியப்பாட்டை ஏற்படுத்தி விட்டதாகக் கருதுவோர் இருக்கிறார்கள். இதனால்தான் பாட்டாளி வர்க்க சர்வதேசியத்தைக் காட்டிலும் "சுயாட்சிக் கோட்பாடு" அவற்றின் பரஸ்பர உறவுகள் விஷயத்தில் "உயர் கோட்பாடு" என்று இப்போது அனுமானிக்கப்படுகிறது போலும். குட்டி பூர்ஷுவா கருத்தினமான சர்வவுரிமை சுதந்திரம் என்பவற்றை அடிப்படையாக்கிய இந்த எண்ணம் மக்களினங்களின் நலவுரிமைகளையும் அபிலாஷைகளையும் குறுகிய தேசிய சந்தர்ப்ப கட்டத்தில் வைத்து வியாக்யானம் செய்கிறது, உலக சோஷலிசத்தின் நலன்களையும் தேவைகளையும் புறக்கணிக்கிறது.

சோஷலிஸ்டு நாடுகளுடனும் தொழிலாளி வர்க்கத்தோடும் பல்வேறு ஏகாதிபத்திய-எதிர்ப்பு சக்திகள் சேர்ந்து போராடி வருவதால், சோஷலிஸ்டு சர்வதேசியம் (இது உலக சோஷலிஸ்டு அமைப்பினுள் மட்டுமே அடங்கும்) ஒருபுறம் இருக்க பாட்டாளி வர்க்க சர்வதேசியமே "மிகவும் குறுகியதாக" மாறிவிட்டது எனும் எண்ணம் அரசியல் முறையிலும் கூடத் தீமை விளைப்பதாகும். இதற்குப்

பதிலாக முன்வைக்கப்படுவது ''ஏகாதிபத்திய-எதிர்ப்பு, சமாதானம்—விழையும் ஜனநாயக சக்திகளின்சர்வதேசியம்'' ஆகும்.

மேலோட்டமாகப் பார்த்தால் இந்த யோசனை தீங்கற்ற தாகத் தோற்றமளிக்கும். ஆனால் இதன் அர்த்தம், பாட்டாளி வர்க்க சர்வதேசியம் எனும் இணைப்பாக்கம் பெற்ற தெட்டத் தெளிவான சித்தாந்தம், ஏகாதிபத்தியம், போர் இவற்றை எதிர்க்கும் பலபடித்தான போராளிகளின், திரளின் உணர்ச்சிகள் ஆவேசங்களில் கரைத்துவிடப்பட வேண்டும், இதன் வழி சர்வதேசத் தொழிலாளி வர்க்கத்தின் செல்வாக்கையும் தலைமைப் பாத்திரத்தையும் பலவீனப் படுத்தவேண்டும் என்பதாகவே இருக்கும். இருப்பினும் சர்வதேசத் தொழிலாளி வர்க்கத்தின் தலைமையே ஏகாதி பத்திய-எதிர்ப்பு முன்னணியின் வெற்றிக்கு உத்தரவாதம் என்று 1969-ம் ஆண்டின் சர்வதேச மாநாடு சாற்றியது. ஜனநாயக, ஏகாதிபத்திய-எதிர்ப்பு இயக்கம் முழுவதன் புரட்சிகரப் போராட்டத்தின் முக்கியமான படை திரட்டும் சக்தி தொழிலாளி வர்க்கமே. ஆகவே பாட்டாளி வர்க்க சர்வதேசியம் எனும் கருத்துருவை திருத்த வேண்டிய அவசியமே இல்லை. அவசியம் என்னவெனில், இதன் செல்வாக்கை உலக சோஷலிஸ்டு அமைப்பு, சர்வதேசத் தொழிலாளி வர்க்க இயக்கம் இவற்றுக்கு வெளியே, முதன் முதலாயும் தேச விடுதலை இயக்கம் மற்றும் இதர ஜனநாயக இயக்கங்களில் பரப்பவேண்டும்.

இன்றைய நிலைமைகளில் மார்க்சிய-லெனினிய மூல நூல்களில் வரையறுக்கப்பட்டிருக்கும் பாட்டாளி வர்க்க சர்வதேசியத்தின் உள்ளடக்கத்தில் ஏதேனும் திருத்தம்செய்ய வெறும் ஒப்புதல் அளிப்பதுகூட, திருத்தல் வாதிகளுக்கும் சந்தர்ப்ப வாதிகளுக்கும் அளிக்கப்படும் சலுகையாகி விடும்.

சில நாடுகளின் அனுபவம் புலப்படுத்தியிருப்பதை வைத்துப் பார்த்தால்,சோஷலிசத்தை நிர்மாணித்து விருத்தி செய்துவரும் நடப்பில், சோஷலிஸ்டு-விரோத சக்திகளின் எதிர்ப்பு மூன்று பிரத்தியேக இயல்புகளைக் கொண்டதாக இருக்கும்:

—தேசிய வாதத்தை மிகைப்படுத்தல், சோஷலிஸ்டு நாடுகளின் மக்களினங்கள் இடையேயான சோதர உறவுகளைச் சீர்குலைத்தல் இவற்றுக்கான முயற்சிகள் தொடரும்;

—சோஷலிசத்தை சம்பிரதாயமாக ஆதரிக்கும் அதே பொழுதில், பகைமை சக்திகள் அதற்கு ஒரு தேசிய "சாயம்" தருவதை அதாவது ஒவ்வொரு நாட்டின் சோஷலிஸ்டு நிர்மாணத்தையும் தனிமைப்படுத்தி பலவீனப்படுத்துவதில் மும்முரமாக உள்ளன;

—சர்வதேச ஏகாதிபத்தியத்துடன் கள்ளக் கூட்டு சேருவது உட்பட சோஷலிசத்துக்கு எதிராகப் பல்வகை வழி முறைகளைப் பயன்படுத்தி வரும் சோஷலிஸ்டு-விரோத சக்திகள் தொழிலாளி வர்க்கத்தின் மீதும் அதன் மார்க்சிய-லெனினியக் கட்சிகள் மீதும் குட்டி-பூர்ஷுவா வகை நிர்ப்பந்தத்தைக் கொண்டு வந்து சர்வதேசியத்துக்கு மாற்றாக அற்பவாத தேசிய வாதத்தை திணிக்க முயல்கின்றன.

சிலபல இடங்களில் இந்த சோஷலிஸ்டு-விரோத சக்திகளின் நிர்ப்பந்தம் சர்வதேச ஏகாதிபத்தியத்தின் உதவியுடன் சோஷலிஸ்டு அமைப்பைக் கவிழ்க்கும் ஒளிவுமறைவில்லாத முயற்சியாக மாறியது. அதோடு உழைக்கும் மக்கள் மீதும் மார்க்சிய-லெனினியக் கட்சிகள் மீதும் இன்றைய சமுதாயத்தில் தேசியப் பிரச்சினை வகிக்கும் இடத்தையும் பாத்திரத்தையும் பற்றிய புரட்டப்பட்ட ஒரு கருத்துருவைத் திணிப்பதற்கான முயற்சிகள் காணப்பட்டன. முதலாவதாயும் முக்கியமாயும் சோஷலிஸ்டு சர்வதேசியம் பற்றிய ஒரு புரட்டப்பட்ட கருத்துருவைத் திணிப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

தேசங்கள், தேசிய உறவுகள் வளர்ச்சியின் சாரத்தை வியாக்யானம் செய்யும் விஷயத்தில் மார்க்சிய-லெனினிய போதனையிலிருந்து அப்பட்டமாயும் சில பிறழ்வுகள் ஏற்பட்டுள்ளன. இது முதன் முதலாயும், உலக சோஷலிஸ்டு அமைப்பில் இப்போது நிலவும் ஸ்தூலமான நிலைகளில்

மட்டுமன்றி, பொதுப்படவே சோஷலிசத்தின் கீழ், சாரமான வேறுபாடுகள், மோதல்கள் மற்றும் கடுமையான தேசிய முரண்பாடுகள் ஏற்படுவதற்கான அகவய புறவயக் காரணங்கள் உள்ளன எனும் தவறான கருத்துக்குப் பொருந்தும். துல்லியமாயும் இந்தக் கருத்தே, சோஷலிஸ்டு நாடுகளை மேலும் கவர்ந்தீர்த்து ஒன்று சேர்ப்பதற்கான வழிகளைத் தேடும் முயற்சிகள்பாலான மிகை உணர்ச்சி வயமான எதிர்வினைகளுக்கும், தேசியப் பொருளாதார நிறுவனங்களின் இணைப்பாக்கத்துக்கு இட்டுச்செல்லும் முதல் நடவடிக்கைகளை அமல் செய்வதற்கான யோசனைகள்பாலான எதிர்மறையான பிரதிபலிப்புக்கும் அடிவேராக உள்ளது.

மார்க்சிய-லெனினியத்துக்கு முரணான வகையில் தேசங்கள், தேசிய உறவுகள் வளர்ச்சியின் சாரத்தை வியாக்கியானம் செய்வதால், சோஷலிஸ்டு நாடுகளின் ஒற்றுமை சீர்குலைகிறது. அவற்றின் வளர்ச்சி மந்தமடைகிறது, இதன் பின்விளைவாக, உலகின் இதர பகுதிகளில், உலக சோஷலிஸ்டு அமைப்பின் செல்வாக்குக் குறைகிறது. ஆயினும் செயலில் சர்வதேசியத்துக்குப் பதில் சொல்லில் சர்வதேசியத்தை மாற்றீடு செய்து பெறப்பட்டதான "தேசத்தின் ஒற்றுமை" எப்போதுமே குட்டி பூர்ஷுவா தேசியவாதத்தைப் பலப்படுத்தும், சோஷலிசத்தின் அடித்தளங்களை சீர்குலைக்கும்.

உலக சோஷலிசத்துக்கு சர்வதேசியவாதம் அதி முக்கியமானது என்று 1969-ல் நடைபெற்ற சர்வதேச மாநாட்டில் அழுத்தமாக வலியுறுத்தப்பட்டது. அதில் பங்குபற்றியவர்களின் கருத்து நிலையைத் தொகுத்தும், இந்தக் கருத்து நிலையை சோ.க.க. முழுமையாக ஒப்புக்கொள்வதாக அறிவித்தும் லியனித் பிரெஷ்நேவ் கூறியதாவது: "சோஷலிஸ்டு அமைப்பை கெட்டியுறுதிப் படுத்துவதற்கான பிரதான திசைவழி, சோஷலிஸ்டு சர்வதேசியத்தின் கோட்பாடுகளை உறுதியாக அமுல்படுத்துவதும், சோஷலிஸ்டு நாடுகளின் தேசிய, சர்வதேசியக் கடமைகளைச் சரியாக இணைப்பதும், அவற்றின் இடையே, எல்லா சோஷலிஸ்டு

நாடுகளின் சமத்துவம், சர்வவுரிமை, சுதந்திரம், உள் விவகாரங்களில் தலையிடாமை என்பவற்றை முரணின்றிக் கடைப்பிடித்தல் எனும் அடிப்படையில் சோதர பரஸ்பர உதவியையும் ஆதரவையும் மேம்படுத்தல் என்பனவாம்.''*

உலக சோஷலிஸ்டு அமைப்பு மனிதகுலத்துக்குத் தனது சர்வதேசியப் பணியினை தலைசிறந்த வெற்றியுடன் செய்து நிறைவேற்றி வருகிறது. இந்த முடிவை மேற்கொண்ட இந்தமாநாடு சோஷலிஸ்டு சர்வதேசியத்தின் சித்தாந்தம் நடைமுறையில் செயல்படுத்தப்பெறும் பிரதான மண்டலங்களையும் வரையறுத்தது. முதலாவதாக உலக சோஷலிஸ்டு அமைப்பு, வர்க்கங்கள் இல்லாத ஒரு சமுதாயத்தை நிறுவுவதற்கு இதுவரை நாடப்பெறாத பாதைகளுக்கு ஒளிபாய்ச்சித் தடம் இடுகிறது. மேலும் இது ஏகாதிபத்தியத்திடமிருந்து விமோசனம் பெறுவதற்கான எதிர்காலத் திசைவழியை மனித குலத்துக்கு வழங்கியதோடு மட்டுமின்றி, அதை எதிர்த்த போராட்டத்தில் தானே ஒரு தீர்மானகரமான பகுதியாக விளங்குகிறது. தமது சர்வதேசியக் கடமையில் மெய்யுணர்வுடன் ஈடுபடும் சோஷலிஸ்டு நாடுகள் சுதந்திரம், சுயாதீனத்துக்காகப் போரிடும் மக்களினங்களுக்கு நாளொரு மேனி அதிகரித்து வரும் உதவியை வழங்குகின்றன, சர்வதேச சமாதானம், பந்தோபஸ்துக்காகப் பாடுபடுகின்றன.

மார்க்சிய-லெனினிய சர்வதேசியக் கோட்பாடுகளில் இருந்து தனிமையான மாறுபாடுகள் சர்வதேசிய நடப்புக்களை புறக்கணிப்பதனால் மட்டுமின்றி தேசிய நடப்புக்களின் ஒட்டு மொத்தத்தை அப்பட்டமாயும் அசட்டை செய்வதாலும் கிளைக்கின்றன. இதன் விளைவாக சர்வதேசியம் பற்றிய பிரசாரம் வெறும் சொல்லலங்காரமாகிறது. ஏனெனில் அதன் கோட்பாடுகள் அதன் அடிப்படையான தேசிய சர்வதேசிய நடப்புக்களுடன் பிணைக்கப்படவில்லை. இந்த நடப்புக்களைப் புறக்கணித்ததன்

---

* லி. இ. பிரெஷ்நேவ், லெனின் பாதையைப் பின்பற்றி, பக். 167-68.

காரணமாக சோஷலிஸ்டு அமைப்பின் நிலைமைகளில் அவற்றை வழிநடத்திச் செல்வதற்கான வாய்ப்புகள் பெரும் பாலும் பயன்படுத்தப்படுவது கிடையாது. இது மறுபுறம் பிரத்தியேகமாயும் தேசியத் தன்மையுடைய அம்சத்தை முன்னணிக்குத் தள்ளுகிறது. இதன் பயனாக, சர்வதேச நடப்புக்கள்தமக்குத் தேவைப்படும் வளமான அடித்தளமான தேசிய நடப்புக்களில் பொதுவும் உலகளாவியதுமான கூறுகளின் ஆக்கத்தைப் பெறுவதில்லை. இது இயல்பாகவே, தொழிலாளி வர்க்கம் அதன்கட்சியின் அணிகளுக்குள் தேசிய வாத நபர்கள் ஊடுருவுவதை வலுப்படுத்த உதவும்.

எடுத்துக் காட்டாக 1968-ல் செக்கோஸ் லோவாகியாவில் முந்திய இரு பத்தாண்டுகளில் போதிய சர்வதேசிய போதனை இருக்கவில்லை என்பதும், தேச பக்திக்கும் சர்வதேசியவாதத்துக்கும் உள்ள இடைத் தொடர்பை மக்கள் திரளினர் புரிந்து கொள்ளும்படி செய்வதற்குக் கட்சிஅமைப்புக்களில் போதிய தேர்ச்சி இருக்க வில்லை என்பதும், இதோடு சேர்ந்து தேசியவாத எச்சங் களையும் அவற்றைப் பிற்போக்கு சக்திகள் திறம்படப் பயன் படுத்தும் என்பதையும் குறைவாக மதிப்பிட்டதும் தெட்டத் தெளிவாகும். ''எல்லாவகைப்பட்ட பிற்போக்கு சார்பு களும் பூர்ஷுவா தேசியவாதம் எனும் நீரோட்டத்தில் கலந்தன'' என்று குஸ்தாவ் ஹுசக் கூறினார். ''பூர்ஷுவா தேசியவாதம் தொழிலாளி வர்க்கத்துக்கு ஆகப்பெரிய அபாயத்தைக் குறித்தது என்றார் லெனின். சோஷலிஸ்டு தேசபக்தியை பாட்டாளி வர்க்க சர்வதேசியத்துடன் இயக்கவியல் முறையில் இணைப்பதற்குப் பதிலாக இந்த மதிப்புக்கள் இயக்க மறுப்பியல் முறையில் எதிராக வைக்கப் பட்டன. அழுத்தம் முழுமையாயும் தேசிய இயல்புகள் மீதே இருந்தது. அறவே செக்கோஸ்லோவாகிய பாணி யிலான ''மானுட முகம் கொண்ட சோஷலிச மாதிரி'' பற்றிய தத்துவம் எழுந்தது.''*

---

* ஒர்ல்ட் மார்க்சிஸ்ட் ரெவ்யூ, 1970, இதழ் 1, பக். 3.

இன்றைய நிலைமையில் உலக சோஷலிசத்தின் எதிர் காலம் சம்பந்தமாக சோஷலிஸ்டு நாடுகளின் தொழிலாளி வர்க்கத்துக்கும் மார்க்சிய—லெனினியக் கட்சிகளுக்கும் விசேஷப் பொறுப்பு உள்ளது. சமுதாய வளர்ச்சியின் புறநிலை நியதிகளை மனதிற்கொண்டு, லெனின் எல்லா சோஷலிஸ்டு அரசுகளின் ஒற்றுமைக்கும் உச்ச முதலிடம் கொடுத்தார். சோஷலிஸ்டு நாடுகளின் அரசு உறவுகளின் வடிவம் மற்றும் உள்ளடக்கத்தை பொதுவாக சர்வதேசிய மயமாக்கும்நடப்புடனும்,ஒற்றைஉலகப்பொருளாதாரத்தை உருவாக்கும் பணியுடன் குறிப்பாகவும் அவர் இணைத்தார்.

சர்வதேசியமயமாக்கும் நடப்புக்களின் தலைமைப் பாத்திரத்தை வலியுறுத்திய அதேபோதில் லெனின், நவீன நிலைமைகளில் மானுட முன்னேற்றம் தேசிய நடப்புக் களின் சகல துறை வளர்ச்சியில் உருவகம் பெற்றிருக்கிறது என்பதைச் சுட்டிக் காட்டினார். சமுதாயத்தை மாற்றி யமைப்பதற்கான தமது புரட்சிகர ஆதார நெறியில் தொழிலாளி வர்க்கமும் அதன் கட்சியும் சர்வதேச நடப்புக்களில் இருந்து இயங்கத் தொடங்க வேண்டும், ஆகையால் அவை தமது போர்த்தந்திரங்களில் தேசிய நடப்புக்களை முழுமையாகக் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று அவர் கருதினார்.

தேசிய அசாதாரணத் தன்மை உணர்வுகளுக்கு அப்பாற் பட்டு நிற்பதும், தேசியவாதத்துக்கு ஆதரவு தருகிற எவரும் தவிர்க்க முடியாத வகையில் தம்மைச் சுற்றி ஒரு சீனச்சுவரை எழுப்பிக் கொள்வர் எனும் லெனினது வாசகங்களை நினைவில் கொள்வதும் முன் என்றையும்விட அதிமுக்கியமானதாகும். இத்தகைய இடங்களில் சர்வ தேசியம் ஒருதலைப்பட்சமாகப் பார்க்கப்படுகிறது, தமது சர்வதேசியக் கடமை பற்றிக் கிஞ்சிற்றும் சிந்தியாமல், அது எதைப் பெற்றுத்தர முடியும் என்பதிலேயே ஒருவர் கண்ணா யிருக்கிறார். இத்தகைய சர்வதேசிய வாதத்தை லெனின் "வெற்றுச் சொற்களே தவிர வேறில்லை"* என வருணித்

* வி. இ. லெனின், "நூல் திரட்டு", தொகுதி 22, பக். 148.

தார். இயல்பாகவே, சர்வதேசிய வாதத்தின் உள்ளடக்கம் பற்றிய பிழையான கருத்துரு தேசிய வாதத்தின் சாரம் குறித்த ஒரு பிழையான கருத்துருவுக்கு இட்டுச் செல்கிறது. இது முதலாளித்துவத்தின் கீழ் மட்டுமே இருப்பதாயும் இதர மக்களைச் சுரண்டுவதில் இடம் பெற்றிருப்பதாயும் காணப்படுகிறது.

எல்லா வகை தேசியவாதத்தையும் எதிர்க்கும்படி லெனின் சர்வதேசிய வாதிகளைக் கேட்டுக் கொண்டார். ''சிறு-தேச குறுகிய மனப்பான்மையையும் ஒதுக்கம் மற்றும் தனிமை நிலையையும் எதிர்த்துப் போராடும்படியும், பொது நலவுரிமை விஷயத்தில் பிரத்தியேகத் தன்மையைக் கீழடக்கி முழுமையையும் பொதுமையையும் கருதிப்பார்க்கும் படி''* அவர் அறைகூவினார். இதைச் சிலர் பின்பற்ற மறந்து விட்டார்கள். சர்வதேசியவாதம் எனும் கருத்துருவில் உள்ளபடியே என்ன கூறுகள் அடங்கியுள்ளன என்பதை அவர்கள் இதேபோல மறந்து விட்டார்கள். தமது கொள்கையில் தேசியவாதத்தின் சுவடே இல்லை என்பதைச் சாதிப்பதற்கு, அவர்கள் சோஷலிஸ்டு சர்வதேசியவாதத்தின் மேல் விசுவாசம் இருப்பதாகப் பிரமாணம் செய்யக் கடமைப்பட்டிருந்தனர். அவர்கள் தமது சர்வதேசியக் கடமைகளை ஆற்றுகிறார்களா என்று கேட்டால் தமது மக்களின் நலவாழ்விலும் தமது நாட்டின் புதுமலர்ச்சியிலும் அக்கறை கொண்டிருப்பதாக மட்டுமே பதிலளிப்பர். லெனினைப் பொருத்தவரை, சர்வதேசிய வாதம் என்பது தனது சொந்த நாட்டின் விடுதலைக்கும் சுகவாழ்வுக்குமாக இடைவிடாது போராடுவது என்பது மட்டுமல்ல, அதோடு இந்தப் போராட்டத்துக்கு (பிரசாரம், அனுதாபம், ஸ்தூலமான உதவி மூலம்) ஆதரவு தருவதும் எவ்விதமான விதிவிலக்கும் இன்றி ஒவ்வொரு நாட்டிலும் இந்த ஒரே கொள்கை வழியைப் பின்பற்றுவதும் ஆகும்."**

---

* அதே நூல், பக். 347.

** அதே நூல், தொகுதி 24, பக். 75.

சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சியின் செயற்பாடு சர்வதேசிய வாதத்திற்கு ஒரு முன்மாதிரியாகும். மாமேதை லெனினது மரபுரிமைக்கு மெய்யாய், எமது கட்சி"சோவியத் ஒன்றியத்தில் சோஷலிசத்தையும் கம்யூனிசத்தையும் உச்ச பட்ச அளவுக்கு வலுப்படுத்தவும் மேம்படுத்தவும் உள் ஆற்றல்கள் அனைத்தையும் முழுமையாக பயன்படுத்த எப்போதும் பாடுபட்டு வந்துள்ளது. அதே சமயம் உலகம் முழுவதிலும் புரட்சிப் போராட்டத்தை ஆதரித்து ஆக்கம் தந்துள்ளது"* என்று லியனித் பிரெஷ்நேவ் கூறினார்.

பின்தங்கிய நிலையில் இருந்து முன்னேற்றத்தை நோக்கி மிகவும் இடர்ப்பாடான நிலையில் ஏற முயன்று வருகிற சோஷலிஸ்டு நாடுகளில், தொழிலாளி வர்க்கம் போதியளவு உருக்குறுதி பெற்றிராதிருப்பின், தேசியவாதப் போக்குகள் சர்வதேசிய வாதத்தை நிலைகுலைத்திடும் அபாயம் சில சமயங்களில் மேவலாம். இத்தகைய நிலைமைகளில் சொல்லளவில் சர்வதேசிய வாதம் ஏற்கப்பட்டு, செயலில் அது தேசிய வாதத்தால் மாற்றீடு செய்யப் படலாம்; பின்னர் சர்வதேசியவாதக் கோட்பாடுகளுக்கான போராட்டம் நீடித்ததும் கடுமையானதும் ஆகலாம். சர்வதேசிய அம்சம் புறக்கணிக்கப்பட்டு, பாட்டாளி வர்க்க சர்வதேசியம் உறவுகளில் சமத்துவத்தை முழுமையாக அனுசரிப்பது என்றோ, அல்லது தேசியக் கடமையின் நிறைவேற்றம் என்பதாக மட்டுமோ வியாக்யானப் படுத்தப் பெறுமேயானால் இந்த விளைவுகள் ஏற்படும்.

இந்தக் கருத்தோட்டம் பாட்டாளி வர்க்க சர்வ தேசியத்தின் முக்கியமான குறிக்கோளுக்கு, ஒற்றுமையை வலுப்படுத்தல் என்பதற்கு, முற்றும் எதிரானது. இது முற்போக்கு சக்திகளைப் பிரிவினை செய்யவும் துண்டாடவும் இட்டுச் செல்கிறது. இவ்வாறாக லெனின் கூறியபடி "எல்லா தேசங்களின் எல்லா வருணஇனங்களின் எல்லாமொழிகளின் பாட்டாளிகளை ஒன்று திரளவும் ஒற்றுமைப்படவும் கோரும்

* லி. இ. பிரெஷ்நேவ், லெனின் பாதையைப் பின்பற்றி, பக். 219.

மகத்தான அறைகூவலை"* ஒன்றுமில்லாததாக்கி விடுகிறது. இதனால்தான் (1920-ல்) லெனின் மதிப்பிட்டபடியே பல நாடுகளில் தேசியவாதத் தப்பெண்ணங்களும் அவற்றின் எதிர்மறைத் தாக்கமும் பாட்டாளிவர்க்க சர்வாதிகாரத்தின் சர்வதேசியத் தன்மையைப் பாதிக்கும் எனும் கூற்று இன்றும் மெய்யாக ஒலிக்கிறது: "குட்டி பூர்ஷுவா தேசியவாதம் தேசங்களின் சமத்துவத்தை அங்கீகரிப்பதை மட்டுமே சர்வதேசிய வாதம் என்று பறைசாற்றுகிறது. **அதற்குமேல்** வேறு எதையுமல்ல'' என்று அவர் கூறினர். "இந்த அங்கீகாரம் முற்றிலும் சொல்லளவில் மட்டுமே எனும் உண்மை ஒரு புறம் இருக்க குட்டி-பூர்ஷுவா தேசியவாதம் தேசிய தன்-நலனைக் குலையாமல் பேணி வைத்திருக்கிறது, அப்படியிருக்க பாட்டாளி வர்க்க சர்வ தேசியம் முதலாவதாக ஏதேனும் ஒரு தனிநாட்டின் பாட்டாளி வர்க்கப் போராட்டத்தின் நலன்கள் உலகளாவிய அளவிலான அந்தப் போராட்டத்தின் நலன்களுக்குக் கீழடக்கப்பட வேண்டும் என்று கோருகிறது; இரண்டாவதாக பூர்ஷுவாக்களை வெற்றி கொள்ளும் ஒரு தேசம் சர்வதேசிய மூலதனத்தை வீழ்த்துவதற்காக மாபெரும் தேசியத் தியாகங்களைச் செய்ய இயல வேண்டும்"**

நான் ஒரு சர்வதேசியவாதியாக இருப்பேனாகில், "நான் 'எனது' நாடு எனும் நோக்குநிலையில் இருந்து அல்லாமல் (ஏனெனில் இது கடைகெட்ட முட்டாள் குட்டி பூர்ஷுவா தேசியவாதியின் வாதமாகும்) உலகப் பாட்டாளி வர்க்கப் புரட்சியின் தயாரிப்பு, பிரசாரம், அதன் வேக முடுக்கம் இவற்றிலான எனது பங்கின் நோக்கு நிலையில் இருந்தே வாதம் புரிய வேண்டும்''*** என்று லெனின் கூறினர். இன்றுள்ள நிலைமைகளில் இதன்கருத்து கம்யூனிஸ்டுக் கட்சிகள் தமது நாடுகளின் சோஷலிஸ்டு அபிவிருத்தியில் அக்கறை கொண்டிருக்கும் அதேபோதில், உலக சோஷலிஸ்டு

* வி. இ. லெனின், "நூல் திரட்டு", தொகுதி 6, பக். 521.

** அதே நூல், தொகுதி 31, பக். 148.

*** அதே நூல், தொகுதி 28, பக். 287.

அமைப்பை வலுப்படுத்துவது—உலகம் முதலாளித்துவத்திலிருந்து சோஷலிசத்துக்கு மாறிச் செல்லும் உலகப் புரட்சி இயக்கம் முழுவதன் வெற்றிகரமான வளர்ச்சிக்கான அடித்தளத்தை வலுப்படுத்துவது—உயர் முதல் கடமை என்பதை மறந்துவிடக் கூடாது.

சமத்துவம், பிரதேச உரிமை, சுதந்திரம், சர்வவுரிமை, உள்விவகாரங்களில் தலையிடாமை ஆகிய கோட்பாடுகளுங்கூட சோஷலிஸ்டு நாடுகளின் இடையிலான உறவுகளின் சாரத்தை முழுமையாக விவரணம் செய்யவில்லை என்று சோஷலிஸ்டு நாடுகளின் கம்யூனிஸ்டு, தொழிலாளர் கட்சிகள் தமது 1957ஆம் ஆண்டு பிரகடனத்தில் செப்பின. சோதர பரஸ்பர உதவி என்பது அவற்றின் உறவுகளில் இன்றியமையாத கூறுகிவிட்டது. அதோடு இது சோஷலிஸ்டு சர்வதேசியத்தின் கோட்பாடுகளின் ஆக முழுமையான, மிகவும் பயனுறுதியுடைய வெளியீடாகத் திகழ்கிறது.

சர்வதேசியத்தின் கோட்பாடுகள் என்ற முறையில் பரஸ்பர உதவியையும், உலக சோஷலிசத்தின் வருங்காலத்துக்கான பொதுப் பொறுப்பையும் பற்றிய குறைத்து மதிப்பீடு, 1968-ல் செக்கோஸ்லோவாகியாவில் ஏற்பட்ட நிகழ்ச்சிகள் சம்பந்தமாகச் சில வட்டாரங்களில் நிலவிய மனப்போக்கையும் இன்றைய நிலைமைகளில் பாட்டாளி வர்க்க சர்வதேசியத்தின் சாரம் என்ன என்பது மீதான அவர்களது கருத்தோட்டத்தையும் பிரதிபலித்தது. நேச நாடுகளின் துருப்புக்கள் செக்கோஸ்லோவாகியாவில் புகுந்ததைத் தொடர்ந்து பல நாடுகளில் செக் மற்றும் ஸ்லோவக் இனத்தவரின் இடையே தேசிய சர்வவுரிமை, தேசிய சுதந்திரம் இவற்றைப் பாதுகாப்பதன் வேடத்தில் பெரும் கூக்குரல் எழுந்ததை இங்கு நினைவு கூரலாம். இந்தப் போராட்ட ஏற்பாட்டுக்கு உலகப் பிற்போக்கு சக்திகள் தலைமை தாங்கின. பிற்போக்காளர் சதித்திட்டங்களுக்கும் சோஷலிசத்தைத் தாங்கி ஆதரிப்பதற்கும் ஏன், தேசிய சர்வவுரிமையைப் பாதுகாப்பதற்கும் இடையே பொதுவான அம்சம் எதுவும் கிடையாது என்பது நிச்சயம்.

ஆயினும் சோஷலிசத்தின் மனப்பூர்வமான நண்பர்கள், கம்யூனிஸ்டுகளும்கூட இதர சோஷலிஸ்டு நாடுகளால் செக்கோஸ்லோவாகியாவின் தேசிய சர்வவுரிமை மீறப்பட்ட தாக குற்றம் சாட்டி அதைப் பாதுகாப்பதாக பாவனை செய்யும் போதில், இந்த கருத்துக் கோணத்தின் தவறை எடுத்துக் காட்டும் பொருட்டும், இதனால் ஏற்படும் பாதகமான விளைவுகளைத் தவிர்க்கும் பொருட்டும், இந்த விஷயத்தை விவாதிக்க முற்படுதல் முற்றும் நியாயமே.

சோஷலிஸ்டு நாடுகள் தேசிய சர்வவுரிமை ஒருவர் மற்றவர் உள்விவகாரத்தில் தலையிடாமை எனும் கோட் பாடுகளைப் பிரகடனம் செய்தது, சோஷலிசத்தின் வெற்றியை உத்தரவாதம் செய்வதற்கே. அன்றி, பகைமை சக்திகள் இவற்றைப் பயன்படுத்தி சோஷலிசத்தைக் குலைப் பதற்காக அல்ல. தேசிய சர்வவுரிமை என்பது தன்னிலைப் பொருளல்ல. அது சோஷலிசத்தின் ஆதாயங்களை அடிப்படையாக்கியது, அதனை வலுப்படுத்த உதவ வேண்டியது. மறுபுறம் சோஷலிசத்தின் ஆதாயங்களைப் பாதுகாப்பது என்பது தேசிய சர்வவுரிமையைப் பாதுகாப் பதும் மெய்யான தேசிய சுதந்திரத்தைப் பாதுகாப்பது மாகும்.

செக்கோஸ்லோவாகிய நாட்டின் குடிமக்களுக்கு ஐந்து சோஷலிஸ்டு நாடுகளின் அரசாங்கங்கள் விடுத்த வேண்டு கோளில் நேச நாடுகளின் படையாளிகள் வர்க்க சகோதரர்கள் எனவும் அவர்கள் செக்கோஸ்லோவாகியா வுக்கு வந்திருப்பது ''உங்களுடன் சேர்ந்து நின்று எதிர்ப் புரட்சியை எதிர்த்துமுறியடிக்கும் பொருட்டும், சோஷலிஸ்டு லட்சியத்தைப் பாதுகாத்து உங்கள் தாயகத்தின் சர்வ வுரிமைக்கும் சுதந்திரத்துக்கும் பந்தோபஸ்துக்கும் ஏற்பட் டுள்ள அச்சுறுத்தலை அகற்றவுமே''* என்பதாக வலியுறுத்தப் பட்டிருந்தது. சோஷலிஸ்டு அரசுகள் எல்லா நாடுகளின்

* பிராவ்தா, ஆகஸ்ட் 24, 1968.

தேசிய சர்வவுரிமையையும் முழுமையாக மதிக்கின்றன எனவும், கம்யூனிஸ்டுகள் சோஷலிசத்தை நிர்மாணித்து வரும் அரசுகளின் சர்வவுரிமையை வலியுறுத்துவதற்கும் பாதுகாப்பதற்கும் தனி முக்கியத்துவம் அளிப்பதாகவும் லியோனித் பிரெஷ்நேவ் சுட்டிக்காட்டினார். அவர் கூறியதாவது: ''ஏகாதிபத்தியம் மற்றும் பிற்போக்கு சக்திகள் ஒன்றுபின் மற்றொன்றாக சோஷலிஸ்டு நாடுகளின் மக்களது சர்வவுரிமையைச் சூறையாட முனைந்து நிற்கின்றன. இந்த உரிமையை இந்த நாடுகள் வென்று பெற்றதுதமது நாட்டின் சுபிட்சத்தையும், பரவலான உழைக்கும் மக்கள் திரளினரின் நன்மை மற்றும் சுகவாழ்வையும், உத்தரவாதம் செய்து கொள்ளவும், எல்லா வகை ஒடுக்கு முறையும் சுரண்டலும் இல்லாத ஒரு சமுதாயத்தை நிர்மாணித்துக் கொள்ளவுமே ஆகும். இந்த உரிமை ஆக்கிரமிக்கப்படுவதை, சோஷலிஸ்டு முகாமிலுள்ள நாடுகள் ஒருமுகமாக எதிர்த்துத் தாக்கும் போதில் பூர்ஷுவா பிரசாரகர் ''சர்வவுரிமையை பாதுகாப்பது'', ''தலையிடாமை'' இவை பற்றிக் கூக்குரல் எழுப்புகிறார்கள். இது அவர்கள் செய்யும் பச்சை ஏமாற்றும் வெறும் சண்டப்பிரசண்டமுமே. உண்மையில் இந்த ஓலமிடுவோர் சோஷலிஸ்டு சர்வவுரிமையைப் பேணிக்காக்க அக்கறை கொள்ளவில்லை. அவர்கள் கவலை அதனை நாசப்படுத்துவதே யாகும்.''*

நேசநாடுகளின் துருப்புகள் உட்புகுவது மெய்நடப்புக்களால், உலக சோஷலிசத்தின் நலன்களால் அவசியமானது. இது செக்கோஸ்லோவாகிய மக்களின் தேசிய நலன்களுக்கு எதிரான செயல் அல்ல. இதற்கும் மேலாக, இது சோஷலிஸ்டு நாடுகளின் இருதரப்பு உடன்படிக்கைகள் தொடர்பாக வார்சாஉடன்பாட்டின் ஷரத்துக்களின்படி நடைபெற்றதாகும். கடைசியாக ஆனால் முக்கியமாக இது பிராட்டிஸ்லாவா அறிக்கையினால் நெறியாண்மை செய்யப்பட்டது. இது ஒருபுறம் சோவியத் ஒன்றியம், போலந்து, ஹங்கேரி, பல்கேரியா மற்றும் ஜெர்மன் ஜனநாயகக்

* லி. இ. பிரெஷ்நேவ், லெனின் பாதையைப் பின்பற்றி, பக். 144-45.

குடியரசின் தலைவர்களும் மறுபுறம் செக்கோஸ்லோ வாகியாவின் பிரதிநிதிகளும் செய்துகொண்ட பொது ஒப்புதலின் பேரில் நிகழ்ந்தது. குறிப்பாயும் துல்லியமாயும் செக்கோஸ்லோவாகியாவின் சோஷலிஸ்டு ஆதாயங்களுக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது என்பதால், இது உலக சோஷலிசத்தின் சாதனைகளின் கதி பற்றி எல்லா சோஷலிஸ்டு நாடுகளுக்கும் பொதுவான பொறுப்பு இருக்கிறது என்பதை வலியுறுத்தியது.

பிரிட்டிஸ்லாவா அறிக்கையின் வாசகம் வருமாறு: "வீரஞ்செறிந்த முயற்சிகளாலும் எல்லா மக்களின் தன்னல மற்ற உழைப்பின் மூலமும் பெற்ற இந்த சாதனைகளை ஆதரிப்பது, வலுப்படுத்துவது மற்றும் பாதுகாப்பது என்பது, எல்லா சோஷலிஸ்டு நாடுகளின் பொதுவான சர்வதேசக் கடப்பாடு ஆகும். இந்த மாநாட்டில் கலந்து கொண்டோர் அனைவரின் ஏகமனதான கருத்து இத்தகை யதாக இருந்தது. அவர்கள் தமது நாடுகளில் சோஷலிஸ்டு சாதனைகளை விருத்தி செய்து பாதுகாப்பது மற்றும் சோஷலிசத்தை நிர்மாணிப்பதில் புதிய வெற்றிகளுக்காகப் பாடுபடுவது இவை குறித்த தமது வளையாத உறுதியை வெளியிட்டனர்.''*

செக்கோஸ்லோவாகிய மக்களுக்கு சோவியத் ஒன்றியம், போலந்து, ஹங்கேரி, பல்கேரியா, ஜெர்மன் ஜனநாயகக் குடியரசு இவை அளித்த மனப்பூர்வமான நட்புறவு உதவி யானது அவர்களது தேசிய சர்வவுரிமையை ஆக்கிரமித்த ஒரு நடவடிக்கை அல்ல, மாறாக அந்த சர்வவுரிமையினை உண்மையிலேயே சோதர முறையில் பாதுகாத்த செயலாகும். சோஷலிஸ்டு கூட்டுக் குடும்பத்தைச் சேர்ந்த மக்களினங்கள் தமது மிக்குயர் சர்வதேசியக் கடமையினை நிறைவேற்றிய செயலாகும். இந்த ஐந்து சோஷலிஸ்டு நாடுகளின் செயல் செக்கோஸ்லோவாகியாவின் தேசிய அரசுத்துவத்தையோ, பிரதேச உரிமையையோ அல்லது உழைக்கும் மக்கள் ஆட்சியதிகாரத்தின் அடித்தளங்களையோ எதிர்த்து நெறி

* பிராவ்தா, ஆகஸ்டு 4, 1968.

யாக்கம் செய்யப்பட்டது என்றோ, எவரேனும் அந்த நாட்டின் செல்வத்தைக் கவர்ந்து பாதகம் செய்து விட்டார்கள் என்றோ எவரேனும் சொல்ல முடியுமா?

"செ. க. க. யின் 13 ஆம் காங்கிரசுக்குப் பின்னர் செக்கோஸ்லோவக் கம்யூனிஸ்டு கட்சியிலும் சமுதாயத்திலும் ஏற்பட்ட நெருக்கடி நிகழ்ச்சிகளின் படிப்பினைகள்'' எனும் 1970 டிசம்பரில் வெளியிடப்பட்ட தஸ்தவேஜில் செக்கோஸ்லோவாகிய கம்யூனிஸ்டுக் கட்சியின் மத்தியக் கமிட்டி சோஷலிஸ்டு நாடுகள் மீதான குற்றச் சாட்டுகளை உறுதியாக மறுதலித்தது. அது கூறியதாவது: ''ஐந்து சோஷலிஸ்டு நாடுகளின் நேசத் துருப்புக்கள் செக்கோஸ்லோவாகியாவுக்குள் புகுந்ததானது சர்வதேச ஒருமைப்பாட்டு நடவடிக்கையாகும், இது செக்கோஸ்லோவாகிய உழைக்கும் மக்களின், சர்வதேசத் தொழிலாளி வர்க்கத்தின், சோஷலிஸ்டுக் கூட்டுக் குடும்பத்தின் பொது நலன்களுக்குப் பொருத்தமானதே. இந்த சர்வதேச நடவடிக்கை ஆயிரக் கணக்கான மக்களின் உயிர்களை காப்பாற்றியது, அவர்கள் சமாதானமாகவும் சாந்தமாகவும் வேலைசெய்வதற்கான அக, புற நிலைமைகளை உறுதிப் படுத்தியது, சோஷலிஸ்டுமுகாமின் மேற்கு எல்லையை பலப்படுத்தியது, இரண்டாம் உலகப் போரின் விளைவுகளைத் திருத்த ஏகாதிபத்திய வாதிகள் போட்ட திட்டத்தை அழித்தொழித்து விட்டது.''* செ. க. க. மத்தியக் கமிட்டியின் பிரதமச் செயலாளரான குஸ்தவ் ஹூசக் சோ. க. க. யின் 24 ஆவது காங்கிரசுக்கு அனுப்பி வைத்த வாழ்த்துச் செய்தியில் ஐந்து சோஷலிஸ்டு நாடுகளின் சர்வதேசிய உதவி''எமது நாட்டை உள்நாட்டுப் போரிலிருந்தும் எதிர்ப் புரட்சியிலிருந்தும் காப்பாற்றி சோஷலிசத்தின் ஆதாயங்களை நாங்கள் உறுதியாகப் பற்றி நிற்பதற்கு உதவியது"** என்றார்.

செக்கோஸ்லோவாகிய சம்பவங்கள் தொடர்பாக சில சோஷலிஸ்டு நாடுகளில் பாட்டாளி வர்க்க சர்வதேசியம்

* நியூ டைம்ஸ், இதழ் 4, 1971, பக். 43.
** நமது நண்பர்கள் பேசுகிறார்கள், பக். 93.

புறக்கணிப்பு செய்யப்பட்டதானது, பிரதானமாயும் குட்டி பூர்ஷுவா தேசிய வாதத்துடனான சமரசப் போக்கையும் அதன் நீடிப்புக்கும் வலிமைப்படலுக்கும் உதவும் ஒரு கொள்கையையுமே புலப்படுத்தின. சில சமயங்களில் பாட்டாளி வர்க்க சர்வதேசியத்தின் அடிப்படைக் கோட்பாடுகள் அசட்டை செய்யப்படுவது முதலாளித்துவ மற்றும் சோஷலிஸ்டு நாடுகளில் கம்யூனிஸ்டுகள் எதிரிடும் கடமைகளின் உள்ளடக்கத்தில் காணப்படும் வித்தியாசங்களில் இருந்தும் உலக சோஷலிசத்தின் எதிர்காலம் பற்றிய அவர்களது பொறுப்பின் அளவீடு குறித்த வேறுபட்ட கருத்துக்களில் இருந்துமே கிளைக்கிறது.

எடுத்துக் காட்டாக முதலாளித்துவ நாடுகளிலுள்ள கம்யூனிஸ்டுக் கட்சிகளுக்கு சர்வதேசிய வாதத்தின் உள்ளடக்கத்திலான அழுத்தம், பிரதானமாயும் முதலாளித்துவ ஆட்சியை எதிர்த்த தொழிலாளி வர்க்கப் போராட்டத்துடனான ஒருமைப்பாட்டிலும் சோஷலிஸ்டு நாடுகளின் தார்மிக அரசியல் ஆதரவிலும் மையப்பட்டு நிற்கிறது, அதேபோதில் சோஷலிஸ்டு நாடுகளின் மார்க்சிய-லெனினிய கட்சிகள் விஷயத்தில் முக்கியமான அழுத்தம், நீண்ட காலமாகவே சோஷலிஸ்டு கம்யூனிஸ்டு நிர்மாணத்திலான பரஸ்பர உதவி, சோஷலிஸ்டு ஆதாயங்களைப் பாதுகாத்தல் உலக சோஷலிசத்தின் எதிர்காலத்துக்கான கூட்டுப் பொறுப்பு ஆகியவற்றில் கேந்திரப்பட்டு நிலவுகிறது.

உலக சோஷலிஸ்டு அமைப்பை வலுப்படுத்துவது எனும் அதன் சர்வதேசியக் கடமையினை கம்யூனிஸ்டுக் கட்சியானது உறுதியாக நிறைவேற்றியுள்ளதை சோ. க. க. மத்தியக் கமிட்டி மனதில் பதிய வைத்துக் கொண்டுள்ளது. அதன் தீர்மானம் கூறுவதாவது: "சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சி, தனது முழு முதற் கடமை, சோவியத் மக்கள் இதர சோஷலிஸ்டு நாடுகளின் மக்களினங்களுடன் மேலும் நெருக்கமான இசைவிணக்கம் பெறவும் நட்புறவை வலுப்படுத்திக் கொள்ளவும் அவர்களிடை அரசியல், பொருளாதார, சித்தாந்த, கலாசார உறவுகளை சர்வாம்ச

ரீதியில் விரிவுபடுத்திக் கொள்ளவும் இடைவிடாது பாடு படுவதில் காணக் கிடக்கிறது என்று கருதுகிறது."*

உலக சோஷலிஸ்டு அமைப்பின் நிலைகளை வலுப்படுத்துவதற்கு சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சியும், சோவியத் அரசாங்கமும் எடுத்து வரும் முயற்சிகளின் முக்கியத்துவம் சிறப்பாக வலியுறுத்தப்பட வேண்டும், காரணம் சோஷலிஸ்டு நாடுகளின் இசைவிணக்கம் மற்றும் ஆக நெருக்கமான ஒத்துழைப்பின் தேவை இன்னும் குறைந்து விடவில்லை, இதற்கு மாறான நிலையே உள்ளது. சோவியத் ஒன்றியத்தின் 50 ஆம் ஆண்டு விழாவை ஒட்டி சமர்ப்பித்த தமது அறிக்கையில் லியனித் பிரெஷ்நேவ் கூறியதாவது: ''சோஷலிஸ்டு சமுதாயத்தை அபிவிருத்தி செய்தல், கம்யூனிசத்தை நிர்மாணித்தல் எனும் கடமைகளை மேலும் விரைவாகவும் திறம்படவும் செய்து நிறைவேற்றும் பொருட்டு நமக்கு ஒற்றுமை, ஒத்துழைப்பு மற்றும் கூட்டுச் செயல் தேவை. மேலும், எல்லா மக்களுக்கும் ஜீவாதாரமாக உள்ள சமாதானத்தை சாத்தியமான அளவு வெற்றிகரமாகப் பாதுகாத்துப் பலப்படுத்தவும் சர்வதேசப் பதற்றத் தணிவை முன் எடுத்துச் செல்லவும், ஏகாதிபத்திய வாதிகளின் எல்லா ஆக்கிரமிப்புத் தாக்குதல்களையும், சோஷலிசத்தின் நலன்கள் மீது மோதும் எல்லா முயற்சிகளையும் உறுதியாக எதிர்த்தடிக்கவும் நமக்கு ஒற்றுமை ஒட்டிணைவு மற்றும் ஒத்துழைப்பு தேவைப் படுகிறது.''**

சோஷலிஸ்டு நாடுகளின் சங்கமிப்பு வேகத்திலும் அளவிலும் வெற்றிகரமாக நடைபெற்று வருகிறது. இது உலக சோஷலிஸ்டு அமைப்பின் வளர்ச்சியிலான பிரதான போக்கு என்று கம்யூனிஸ்டு, தொழிலாளர் கட்சிகள் கருது

* சோவியத் சோஷலிஸ்டுக் குடியரசுகளின் ஒன்றியம் நிறுவப்பட்டதன் 50 ஆம் ஆண்டு விழாவுக்கான தயாரிப்புகள், *சோ. க. க. மத்தியக் கமிட்டி தீர்மானம், பக். 21.*

** லி. இ. பிரெஷ்நேவ், சோவியத் சோஷலிஸ்டு குடியரசுகளின் ஒன்றியத்தின் 50 ஆம் ஆண்டு விழா, *பக். 43.*

கின்றன. இந்த இயக்கமானது, ஒரு வர்க்கங்கள் இல்லாத சமுதாயத்தைக் கட்டி வரும் மக்களினங்களின் மத்தியிலான சர்வதேச ஒத்துழைப்பின் புறநிலைத் தேவை, சோஷலிஸ்டு நாடுகளின் தொழிலாளி வர்க்கம் மற்றும் உழைக்கும் மக்களின் சித்தம் மீதும் மனித குலத்தின் சமுதாய முன்னேற்றம் மீதும் உலக சோஷலிஸ்டு அமைப்பின் அதிகரித்து வரும் தாக்கம் இவற்றை அடிப்படையாக்கி விளங்குகிறது.

2. நவீன உலகில் தேசங்கள், தேசிய உறவுகளின் வளர்ச்சி மீது உலக சோஷலிஸ்டு அமைப்பு வகிக்கும் செல்வாக்கு

அக்டோபர் புரட்சியின் வெற்றியும், சோவியத் ஒன்றியத்தில் சோஷலிசம் நிர்மாணிக்கப்பட்டதும், இரண்டாம் உலகப் போரில் முதலாளித்துவத்தை விடவும் சோஷலிசம் மேலுயர்வானது என்பது தெளிவானதும், உலக சோஷலிஸ்டு அமைப்பின் தோற்றமும் வளர்ச்சியும் உலக முழுதிலும் சோஷலிசம் எழுப்பிய உத்வேகமும் "வரலாற்று முன்னேற்றத்தை வேகப்படுத்துவதற்கான முன் தேவைகளை உருவாக்கியுள்ளன, உலகம் முழுதிலும் சோஷலிசம் முன்னேறி வெற்றி வாகை சூடுவதற்கான புதிய வாய்ப்புக்களை ஏற்படுத்தியுள்ளன"* என்று 1969-ல் நடைபெற்ற கம்யூனிஸ்டு, தொழிலாளர் கட்சிகளின் சர்வதேச மாநாடு குறிப்பிட்டது. சர்வதேசத் தொழிலாளி வர்க்க இயக்கம், தேச விடுதலை இயக்கம் இவற்றில் எழும் தேசியப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதில் சோஷலிஸ்டு உலகம் பிரம்மாண்டமான செல்வாக்குச் செலுத்துகிறது.

சோஷலிஸ்டு நாடுகளின் அயல்துறைக் கொள்கையின் நோக்கம் சோஷலிசம், கம்யூனிசத்தின் நிர்மாணத்திற்கு உரிய சாதகமான நிலைமைகளை உத்தரவாதம் செய்வது

---

* மாஸ்கோவில் 1969-ல் நடந்த கம்யூனிஸ்டு, தொழிலாளர் கட்சிகளின் சர்வதேச மாநாடு, பக். 21.

மட்டுமல்ல, அதோடு உலகப் புரட்சி இயக்கம் ஆக்கம் பெறுவதற்கு உதவுவதுமாகும். இந்தப் பிந்திய குறிக்கோளுக்கு இதர சாதனங்களுடன் கூடவே, உலக சோஷலிஸ்டு அமைப்பு சமாதானத்திற்காக நடத்திவரும் விடாமுயற்சியான போராட்டமும் அனுகூலம் செய்துள்ளது. சமாதானத்திற்கான போராட்டத்துக்கும் தேசியப் பிரச்சினைக்கும் இடையிலான பிணைப்பை 1969 சர்வதேச மாநாடு வலியுறுத்தியுள்ளது, சமாதான சகவாழ்வு, சர்வவுரிமை, சமத்துவம், பிரதேச மீறுதல் இல்லாமை பெரிதும் சிறிதுமான அரசுகள் இதர நாடுகளின் உள்விவகாரங்களில் தலையிடாமை, ஒவ்வொரு மக்களும் தமது சமூக பொருளாதார, அரசியல் அமைப்பை சுதந்திரமாக முடிவு செய்து கொள்ளும் உரிமை, தீர்க்கப்பட வேண்டிய சர்வதேசியப் பிரச்சினைகளுக்கு அரசியல் முறையில் பேச்சுவார்த்தைகள் மூலம் பரிகாரம் காணுதல் எனும் கோட்பாடுகளை அனுசரிக்குமாறு கோருகிறது"* எனவும் இந்த மாநாடு சுட்டியது

வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளின் தொழிலாளி வர்க்கம் அனைத்து உழைக்கும் மக்களைப் பொருத்தவரை, உலக சோஷலிஸ்டு அமைப்பு சிறப்பாகவும் சோவியத் ஒன்றியமானது, இந்த மக்கள் தமது நாடுகளை முன்னேற்றமுறச் செய்யவும், அன்னிய ஏகபோகங்களை எதிர்த்து தேசிய சுதந்திரத்தைத் தற்காத்துக் கொள்ளவும், தேசியப் பிரச்சினையின் பல்வேறு அம்சங்களை நாட்டிற்குள்ளும் இதர மக்களினங்களுடனுன உறவுகளிலும் பயன்படுத்தி ஓர் அரசியல் படையை உருவாக்கி புரட்சியின் வெற்றியை உறுதிப்படுத்தவும் உதவும் ஆதார தளமாக விளங்குகிறது.

காலனிகள் சார்பு நாடுகளின் மக்களினங்களின் தேச விடுதலைக்கு உலக சோஷலிஸ்டு அமைப்பின் முக்கியத்துவம் இன்னும் மகத்தானது.

---

* மாஸ்கோவில் 1969-ல் நடந்த கம்யூனிஸ்டு, தொழிலாளர் கட்சிகளின் சர்வதேச மாநாடு, பக். 31.

சோஷலிஸ்டு உலகம் நாடிப்பெற்ற சக்திகளின் பரஸ்பர சமபல நிலை, ஒடுக்கப்பட்ட மக்கள் காலனி அமைப்பு முறையைத் தகர்த்துத் தமது தேசிய சமுக விடுதலையை நோக்கி மகத்தான முன்னேற்றம் காண்பதை சாத்தியமாக்கி யுள்ளது. இன்றைய கட்டத்தில் தேசியப் பிரச்சினைக்குத் தீர்வுகாணும் விஷயத்தில் அதிமுக்கியமான பங்களிப்பாக இருப்பது இதுவே. காலனி அடிமைத் தளைகளை எதிர்த்துத் தூக்கி எறியப் போராடிவரும் மக்களுக்கு சோஷலிஸ்டு நாடுகள் நம்பகமான ஆதரவு தருகின்றன. காலனிகளின் விடுதலை ''புரட்சிகள் பல நடவாமல் சாதனையாகாது, அதுவும் சோஷலிசம் இல்லாமல் நிலையானதாகாது''* எனும் லெனின் கருத்தை நிகழ்ச்சிகள் உறுதிப்படுத்தி யுள்ளன. சோஷலிஸ்டு உலகம் விடுதலையை வென்று பெறவும் வெற்றியை உறுதிப்படுத்தவும் உதவுகிறது. சோஷலிஸ்டு நாடுகளின் அனுபவம் பின்தங்கிய நிலைமைக்கும், வளர்ச்சி குறித்த பிரச்சினைகளுக்கும் துல்லியமாயும் சோஷலிஸ்டு கொள்கை வழியிலேயே இறுதித் தீர்வை நாடவேண்டும் எனும் ஜீவாதாரமான அவசியத்தை நிதர்சனப்படுத்திக் காட்டுகிறது.

''ருஷ்யாவில் ஏற்படும் ஒரு சோஷலிஸ்டு சோவியத் குடியரசு, எல்லா நாடுகளின் மக்களினங்களுக்கும் ஓர் உயிரோட்டமுள்ள உதாரணமாகத் திகழும், இந்த உதாரணத்தின் பிரசாரமும் புரட்சிகரத் தாக்கமும் அளப் பரியதாக இருக்கும்''** என்று 50 ஆண்டுகளுக்கு முன்னால் லெனின் கூறிய இந்த மெய்யுரையை வரலாறு ஊர்ஜிதம் செய்துவிட்டது.

மனித குலத்தின் இதர பகுதியினரின் தேசியப் பிரச்சினைகள் உலகப் புரட்சி இயக்கம் இவற்றின் மீது, உலக சோஷலிஸ்டு அமைப்பு செல்வாக்குச் செலுத்தும் வடிவங்கள் மிகவும் பரவலானவை. தேசியப் பிரச்சினைக்குத்

* வி. இ. லெனின், ''நூல் திரட்டு'', தொகுதி 22, பக். 33.

** அதே நூல், தொகுதி 26, பக் 448.

தீர்வு காண்பதில் சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சியும் சோஷலிஸ்டு நாடுகளின் கம்யூனிஸ்டு தொழிலாளர் கட்சிகளும் பெற்ற அனுபவம் சர்வதேசத் தொழிலாளி வர்க்க மற்றும் தேசவிடுதலை இயக்கங்களுக்கு மாபெரும் முக்கியத்துவம் உடையது என்பது திண்ணம். தேசியப் பிரச்சினைக்கு சோவியத் கம்யூனிஸ்டு கட்சி கண்ட தீர்வையும், ஏகாதிபத்தியத்தை எதிர்த்த விடுதலைப் போராட்டத்திற்கான அதன் குறிபொருளையும் குறிப்பிட்டுக் கருத்துரைத்த அமெரிக்க மார்க்சிய அறிஞர் விக்டர் பெர்லோ சோவியத் ஒன்றியத்தில் உண்மையான தேசிய சமத்துவம் நிலைநாட்டப்பட்டதானது ஆசிய ஆப்பிரிக்க நாடுகளின் ஏகாதிபத்திய— எதிர்ப்புப் போராட்டத்தின் வளர்ச்சிமீது தீர்மான கரமான விளைவை ஏற்படுத்தியுள்ளது என்றார். சோவியத் ஒன்றியத்தின் 50 ஆவது ஆண்டுவிழா கனடா நாட்டின் உழைக்கும் மக்களுக்கு விசேஷ உட்பொருள் உடையது என்று 1972 இலையுதிர் காலத்தில் கனடா கம்யூனிஸ்டு கட்சி பொதுச் செயலர் வில்லியம் காஷ்டன் எழுதினார். தேசியப் பிரச்சினைக்குத் தீர்வு கண்டு தேசிய உறவுகளை முறைப்படுத்திக் கொள்வது எப்படி என்பதை எடுத்துக்காட்டும் மாதிரியாக சோவியத் ஒன்றியம் விளங்குகிறது என்று அவர் மேலும் வலியுறுத்தினார்.*

தேசிய சமுக விடுதலைக்கான போராட்டத்தில் உழைக்கும் மக்களின் முழு மக்கள் திரளினரும் ஈடுபட்டிருந்தார்கள் எனும் மெய்நடப்பு, சோஷலிஸ்டு நாடுகளின் மக்களின் அனுபவத்தில் முத்திரை பதிக்கிறது. வளர்முக நாடுகளில் தொடங்கியுள்ள இயக்கங்களைப் பரிசீலிப்பதற்கு இது மிகவும் முக்கியமானது. காலனி ஒடுக்குமுறையில் இருந்து அவர்களுக்கு அரசியல் விடுதலையைக் கொண்டு வந்த புரட்சிகள் அகில—தேசியத் தன்மையுடையனவாக இருந்த போதிலும், தேசிய அரசுகள் உருவாவதில் சென்று முடிந்த போதிலுங்கூட, சாமான்ய மக்கள் திரளினர் பல

* காண்க கம்யூனிஸ்ட் வியூபாயிண்ட், டோரண்டோ, 1972 செப்டம்பர்—அக்டோபர், இதழ் 5, பக். 4.

நாடுகளில் அரசாங்கத்தில் இருந்து வெகு தொலைவில் ஒதுக்கப்பட்டே இருந்தார்கள். தமது சொந்த வருங்காலம் பற்றி அவர்களுக்கு உண்மையில் எவ்வித உரிமையும் இருக்கவில்லை. இதற்கு எடுத்துக்காட்டாக ஆசிய ஆப்பிரிக்க லத்தீன் அமெரிக்க நாடுகளில் பெரும்பாலும் சிறிய சதிகாரக் கும்பல்களால் நடத்தப்பட்ட ராணுவ பாணி அரசுக் கவிழ்ப்புக்களைச் சுட்டலாம்.

தேசத்தின் நிலைத்து நிற்கக்கூடிய சக்திகளை, குறைந்தது அதன் பெரும் பான்மையை தொழிலாளி வர்க்கத்தின் பின்னே ஆதரவாக அணி திரட்டும் அனுபவம், முதலாளித் துவ நாடுகளிலும் வளர்முக நாடுகளிலும் இருக்கும் மக்களினங்களுக்கு முக்கியமானது. அக்டோபர் புரட்சியின் தருணத்திலும் அதன் துவக்க மாதங்களிலும் சோஷலிஸ்டு மற்றும் ஜனநாயகக் கடமைகளை இணைப்பதில் லெனின் கட்சி பெற்றதான அனுபவத்தையும் பல்வேறு குட்டி-பூர்ஷுவா கட்சிகள் தொடர்பான எல்லா நாடுகளின் பாட்டாளி வர்க்கக் கட்சியின் போர்த் தந்திரங்களையும் வெளிநாடுகளில் இருந்த புரட்சியாளர்கள் ஆராய்கிறார்கள்.

புரட்சியின் ஓர் அரசியல் படையினை சிறப்பாயும் தேசிய எல்லைப் பகுதிகளில் நிறுவும் விஷயத்தில் லெனின், பாட்டாளி வர்க்கத்துக்கும் பாட்டாளி வர்க்கமல்லாத உழைப்பாளி மக்கள் திரளினருக்கும் இடையான உறவை ஆக முக்கியமான காரியமாகக் கருதினார். ஆகவே இதர கட்சிகளுடன் ஒத்துழைப்பதற்கான வாய்ப்பை அவர்கள் அறவே தரவில்லை என்று சொல்வது லெனின் மீதும் போல்ஷிவிக் கட்சிமீதும் சுமத்தும் பச்சையான அவதூறு. அக்டோபர் புரட்சியின் வரலாற்றில் செய்யும் புரட்டு. உண்மையில் தத்துவத்திலோ நடைமுறையிலோ ஒத்துழைப்பு விலக்கப்படவில்லை. சிறிது காலம் இடது சோஷலிஸ்ட் புரட்சியாளர் போல்ஷிவிக்குகளுடன் சேர்ந்து சோவியத் மத்திய அரசாங்கத்தில் இருந்தார்கள் என்பதையும், நாட்டின் இதர பாகங்களில் முக்கியமாயும் தேசிய வட்டாரங்களில் போல்ஷிவிக்குகள் இதர குட்டி-பூர்ஷுவா

கட்சிகளுடன் பரவலாக ஒத்துழைத்தார்கள் என்பதையும் நினைவு கூறலாம். இந்த ஒத்துழைப்பு முறிந்து விட்டது என்றால் அதற்குக் காரணம், பூர்ஷுவாப் பிரசாரம் நம்மை நம்பவைக்க முயல்வதுபோல, போல்ஷிவிக்குகளின் "சகிப் பின்மை" அல்ல. இதற்குக் காரணம், குட்டி-பூர்ஷுவா கட்சிகள் மெய்ப்பற்றுடன் உழைக்கும் மக்களின் நலன் களுக்குப் பாடுபடவில்லை மற்றும் வெளிநாட்டு உள்நாட்டு எதிர்ப்புரட்சியின் சதித் திட்டங்களில் சிக்குண்டன என்பதே. இதற்குப் பழிவாங்கல் என்பது, மக்களிடமிருந்து அரசியல் முறையில் தனிமைப்படல், இதன் விளைவாக அரசியலில் இருந்தே மறைந்தொழியும் கதி-என்பதாக இருந்தது.

ஆகவே, இப்போது சோஷலிசத்தின் விரோதிகள் "அரசியல் சக்திகளின் இஷ்டப்படியான திருவிளையாடலை" அவசியம் என்று சாற்றி "பொதுவான தேசிய ஒற்றுமை" போன்ற கோஷங்களை முன்வைப்பார்களாயின், இவை எல்லாம் ஏற்கெனவே சோவியத் ஒன்றியத்தின் வரலாற்றில் நடந்து தீர்ந்து போனவை என்றுதான் அவர்களுக்கு நினைவுறுத்த வேண்டும். மேலும் பொதுவான தேசிய, ஒற்றுமை என்ற கோஷமே அடிக்கடி கம்யூனிஸ்டு பதாகை யின் கீழில்தான் முன்வைக்கப்பட்டது. இதனால் இதன் சோஷலிஸ்டு-விரோதத் தொடர் இணைவோ, தேசியவாத சாரமோ மாறிவிடவில்லை. சோஷலிஸ்டுப் புரட்சிக்குப் பின்னரும் தேசியப் பிரச்சினையை பூர்ஷுவா உணர்விலேயே தொடர்ந்து வியாக்யானம் செய்து வந்தோரின் எதிர்ப்பைச் சமாளித்து, லெனின் தலைமையிலான கம்யூனிஸ்டுக் கட்சி புறப்பகுதி மக்கள் தொகையின் ஒரு பகுதியினரிடை நிலவிய தேசியவாதத் திரிபுகளை அகற்றுவதில் வெற்றி கண்டது, சமூக மற்றும் தேசியப் புத்தாக்கத்திற்காக மக்களினங்களின் எல்லா முற்போக்கு சக்திகளையும் அணிதிரட்டியது. இந்தப் பணியினைச் செய்து முடித்த பிரதான சக்தி தொழிலாளி வர்க்கமே.

முதலாளித்துவ (வளர்ச்சிக் கட்டத்தைத்) தாண்டிக் கடந்து சில மக்களினங்கள் தமது வரலாற்று விரிவு மலர்ச்சியைச் சுருக்கிக் கொள்வார்கள் என்று முன்னறிந்து செப்பிய எங்கெல்ஸ், வளர்ச்சியடைந்த நாடுகளின் உதாரணத்தில் இருந்து பொது-உடைமையில் இருக்கும் உற்பத்தி சக்திகளை சமுதாயம் முழுமைக்கும் சேவைபுரியுமாறு எப்படிச் செய்வது என்பதைப் பின்தங்கி நிற்கும் மக்களினங்கள் கண்டு கொண்டு விடும்பட்சத்தில் அவர்கள் மேலும் சுருக்கமான பாதையைப் பின்பற்றக்கூடும் என்று ஒரு முறை உரைத்தார்.

சோவியத் ஒன்றியத்தின் முன்னுள் பின்தங்கிய மக்களும் மங்கோலிய மக்கள் குடியரசைச் சேர்ந்த மக்களும் முதலாளித்துவமற்ற வளர்ச்சி பாதையில் அபிவிருத்தி கண்ட அனுபவம் ஆசிய ஆப்பிரிக்க நாடுகள் பலவற்றில் தேசியப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு அளப்பரிய உட்பொருளை வழங்குகின்றன. இந்த நாட்களில் முதலாளித்துவமற்ற வளர்ச்சி அனுபவம் இதர நாடுகளில் இருந்தும் கிடைக்கிறது. முதலாளித்துவ கட்டத்தைத் தாண்டிக் கடந்துவிட நாடும் வளர்முக நாடுகளின் பல மக்களினங்கள் இதை உன்னிப்பாக ஆராய்ந்து வருகிறார்கள். இது முன்னாள் காலனிகளிலும் சார்பு நாடுகளிலும் புதிய சமுதாய அமைப்பின் பிறப்பு வேதனைகளைத் தணிக்க உதவும். அதோடு முதலாளித்துவத்துக்கு முந்திய கட்டத்தில் இருந்து சோஷலிசத்துக்கு மாறிச் செல்லும் பயணத்தை வேகப்படுத்தும். இங்கு வெற்றிக்கான உத்தரவாதம், லெனினால் அடிக்கோளிடப்பட்டதும், பல சோவியத் மக்களினங்கள் மங்கோலிய மக்கள் குடியரசின் மக்கள் ஆகியோர் அனுபவத்தால் செழுமையூட்டப் பெற்றதுமான முதலாளித்துவமற்ற வளர்ச்சிப் பாதையின் வடிவங்கள் முறைகள் சம்பந்தமான லெனினது அறுதியுரைகளில் உறைந்து கிடக்கிறது.

காலனி அடிமைத் தளைகளை வீசி எறிந்துவிட்ட மக்களினங்கள் தேசிய அரசு நிறுவுவது பற்றிய

சோவியத் அனுபவம், மக்கள் திரளினரை அரசுக்குள் கவர்ந்திர்க்கும் சோவியத் வடிவங்கள் முறைமைகள், அரசை சமூக தேசிய விமோசனத்திற்கு ஒரு கருவியாகப் பயன்படுத்துவது இத்தியாதி விஷயங்களை மிகவும் உன்னிப் பாக ஆராய்ந்து வருகிறார்கள். சோவியத் ஆட்சி அதி காரத்தின்கீழ் சோவியத் ஒன்றியத்தின் 15 குடியரசுகளில் 9 குடியரசுகளின் மக்களினங்களும் 38 இதர தேசிய அரசு அமைப்புகளும் தமது வரலாற்றிலேயே முதன் முறையாக தேசிய அரசுத்துவத்தைப் புதிதாகப் பெற்றன. இது வெறும் புள்ளிவிவரம் மட்டுமே. சர்வவுரிமையுடைய தேசிய அரசுகள் தோன்றி வரும் புதிய நிலைமைகள் எப்படி இருந்த போதிலும் முழுமையான விடுதலை, ஒரு காலத்தில் ஒடுக்கப்பட்டுக் கிடந்த மக்களின் புதுமலர்ச்சி இவற்றுக்கான தனது எல்லா உட்பொருளையும் நீடித்து வைத்திருக்கிறது தேசிய அரசுத்துவம்.

சோவியத் அனுபவத்திலிருந்து எடுத்துக் கொள்ள வேண்டிய முக்கியமான முடிவுகளில் ஒன்று, தேசிய அரசுத்துவ வளர்ச்சியில், தேசிய அம்சம் சர்வதேசிய அம்சத் துடன் எப்போதும் பின்னிப் பிணைந்து நெருங்கி நிற்கும் என்பதே. சர்வதேசியம் எனும் பதாகையின்கீழ் நின்று நடத்தி முடிக்கப்பட்ட அக்டோபர் புரட்சி பல்வேறு பிராந்தியங்களில் நிலைத்து வாழ்திருந்த மக்கள் தொகை யினருக்கு தேசிய அரசுத்துவத்தினை உறுதிப்படுத்தியது மட்டுமின்றி மேலும் பலவற்றை வழங்கியது, இந்த தேசிய அரசுத்துவத்தைக் கட்டி வளர்ப்பதில் இதர தேசிய இனங்கள் அனைத்தையும் சேர்ந்த உழைக்கும் மக்கள் பங்கேற் பதையும் உத்தரவாதம் செய்தது. தொழிலாளி வர்க்கம் கம்யூனிஸ்டுக் கட்சியின் கொள்கை மெய்யாகவே சர்வ தேசியத் தன்மை வாய்ந்தது. இந்த அல்லது அந்தக் குடியரசுக்கு எந்த தேசம் அல்லது தேசிய இனத்தின் பெயர் சூட்டப்பட்டது என்பதைப் பற்றிய அலட்டல் இன்றி புதிய வாழ்வைக் கட்டுவதில் அரசு நிர்வாகத்தை அமைப்பதில் எல்லா தேசிய இனங்களையும் சேர்ந்த உழைக்கும் மக்கள்

சேர்ந்து செயல் புரிந்தார்கள். சோவியத் நாட்டின் சிறிய மக்களினங்களின் தேசிய அரசுவத்துவத்தை நிறுவ ருஷ்யர்களும் இதர தேசிய இனத்தவரும் விரிவான சர்வதேசிய உதவி தந்தனர், அரசின் பொருளாதார அரசியல் அடித்தளங்களை இடவும், சர்வவுரிமையைப் பெற்றிடவும், ஊழியர்களைப் பயிற்றுவிக்கவும், கலாசாரத்தை வளர்க்கவும் இத்தியாதிகளுக்கு இந்த உதவிவகை செய்தது. முதலாளித்துவத்தைத் தாண்டி கடந்து சோஷலிஸ்டுப் பாதையில் கால் எடுத்து வைத்த மக்களினங்களுக்கு இது சிறப்பாகவும் பொருந்தும். இங்கு முக்கியமானது என்னவென்றால் தேசிய சர்வதேசிய சக்திகளின் தொடர்பாடு பின்னதற்குச் சாதகமாக மாற்றமடைந்ததானது உள்நாட்டு தேசிய இனத்தைச் சேர்ந்த மக்கள் தமது சோவியத் தேசிய அரசுத்துவத்தை அமைத்துக் கொள்வதில் தோற்றுவித்த ஈடுபாடு அதிகரித்ததே தவிரக் குறையவில்லை. மேலும், பின் தங்கிய தேசிய இனங்களை சார்ந்த உழைக்கும் மக்களுக்கு அதிக முன்னேற்றமடைந்த தேசங்கள் அளித்த தன்னலமற்ற சர்வதேசிய உதவி இந்த தேசிய இனங்கள் இப் பணிகளில் பெருந்திரளாக முன்வந்து ஈடுபட்டதற்குப் பிரதான காரணமாக இருந்தது.

தேசிய சமுதாய விடுதலை இயக்கத்திலும் தேசிய அரசுத்துவத்தை நிறுவும் பணியிலும் காலனிகள் சார்பு நாடுகளின் விரிவான மக்கள் திரளினரைக் கவர்ந்து ஈடுபடுத்தும் பிரச்சினை ஏகாதிபத்தியக் காலனியமைப்பு முறை தகர்ந்து முறிந்து விழத் தொடங்கும் வரையில் எழவில்லை. காலனியாதிக்க முறையை நொறுக்கி அழிப்பதை உறுதி செய்வதில் உலக சோஷலிஸ்டு அமைப்பு வகித்த பங்கு உண்மையில் மகத்தானது. "உலக சோஷலிச சக்திகள், ஏகாதிபத்திய ஒடுக்குமுறையில் இருந்து விடுதலை பெறுவதற்காக காலனி மற்றும் சார்பு நாடுகளின் மக்களினங்கள் நடத்திய போராட்டத்தில் தீர்மானகரமான பங்கு வகித்தன. சுதந்திரம் பெற்றுவிட்ட மக்களினங்களின் சுயேச்சையான தேசிய அபிவிருத்திக்கு சோஷலிஸ்டு

அமைப்பு நம்பகமான கேடயமாகத் திகழ்கிறது''* என்று 1960-ல் நடைபெற்றதான கம்யூனிஸ்டு தொழிலாளர் கட்சிகளின் மாநாட்டின் அறிக்கை கூறுகிறது. ஏகாதிபத்தியத்தின் காலனியாதிக்க அமைப்பைத் தகர்த்தழிப்பதில் ஒடுக்கப்பட்ட மக்களினங்களுக்குத் தரப்பட்ட உதவி, உலகப் புரட்சிக்கு கூடுதல் சடவேகத்தை அளித்து, தேச விடுதலை இயக்க மண்டலத்தில் மட்டுமின்றி முன்னாள் சாம்ராஜ்யத் தலைமை நாடுகளிலுங்கூட தேதிய சர்வதேசிய இயக்கங்களின் வேகத்தை முடுக்கிவிட்டது. இதற்குக் காரணம் காலனி ஒடுக்குமுறைக்கு முடிவுகட்டிய பின்னர் சொந்த நாட்டில் இருந்த பல தேசிய அம்சங்கள் முன்னாள் ஒடுக்குனர் தேசத்தின் தொழிலாளி வர்க்கத்துக்கு வேறுப்பட்ட தோற்றத்தில் காணப்பெற்றன: தேசத்துக்கு உள்ளேயே பாட்டாளி வர்க்கத்துக்கும் பூர்ஷுவாக்களுக்கும் இடையிலான பாகுபாட்டுத் தன்மை, இதர மக்களினங்கள் (முன்னாள் ஒடுக்கப்பட்டவர்கள் உள்ளிட்டு) உடனான உறவுகள்.

உலகெங்குமுள்ள உழைக்கும் மக்களின் விடுதலைப் போராட்டத்துக்கு சோஷலிஸ்டு நாடுகள் தொடர்ந்து தரும் உதவியும், உலகப் புரட்சி இயக்கம் வேகமுடுக்கும் பெறுவதற்கு உருப்படியான பங்குப்பணி ஆற்றுகிறது. சிறப்பாயும் விரிவானதும் பல்வகைப்பட்டதுமான உதவி சோவியத் ஒன்றியத்திடமிருந்து கிடைக்கிறது.

தற்போது சோவியத் ஒன்றியத்தின் சொந்த பொருளாதார அரசியல் மற்றும் ராணுவ ஆற்றல் பெருகி வருகிறது. அது இப்போது தனியனாக இருக்கவில்லை. இந்த நிலையில் அது இதர சோஷலிஸ்டு நாடுகளுடன் உலக அரங்கில் சேர்ந்து செயல்படுவதன் மூலம் ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப் போராடும் மக்களினங்களுக்கு உதவி புரிகிறது. ஆனால் ஒப்பிடவியலா அளவுக்கு மிகவும்

---

* **சமாதானம், ஜனநாயகம், சோஷலிசத்துக்கான போராட்டம்,** *மாஸ்கோ, 1963, பக். 62.*

சிக்கலான நிலைமைகளில் சோவியத் மக்கள், தேசிய அரசுத்துவத்தை மீட்டமைக்கவும் சோஷலிசத்துக்கான அடித்தளம் இடவும் இதர மக்களினங்களுக்கு உதவி செய்த காலம் இருந்தது. மகத்தான தேசபக்தப் போர் முடிவடைந்த மற்றும் அதன் பின்னர் உடனடியானதுமான காலகட்டத்தை எடுத்துக் கொள்வோம். சோவியத் ஒன்றியம், கிழக்கு ஐரோப்பிய மற்றும் தென்கிழக்காசிய மக்களினங்களுக்கு சோஷலிச அடித்தளங்களை நிறுவுவதற்காக உச்சபட்ச உதவி வழங்கித் தனது சர்வதேசியக் கடமையினை ஆற்றிய சமயம், அது நாஜி ஜெர்மனியால் இழைக்கப்பட்ட இழப்புக்களில் இருந்து இன்னமும் மீட்சியடைந்திருக்கவில்லை. சோவியத் உதவிஇல்லாதிருப்பின், சில நாடுகள் மீண்டும் நிமிர்ந்து நிற்பது என்பது மிகவும் கடினமாகியிருக்கும். எடுத்துக்காட்டாக போலந்து தனது தேசியச் செல்வத்தில் 40 சதவிகிதத்தையும் மக்கள் தொகையில் 22 சதவிகிதத்தையும் நாஜி ஆக்கிரமிப்பின் போது இழந்தது என்பதைச் சுட்டுவதே சாலும்.

இருப்பினும், உள்நாட்டில் பிரம்மாண்டமான இடர்ப்பாடுகளுடன் மல்லாடிய சோவியத் ஒன்றியமானது விஞ்ஞான கம்யூனிசத்தின் மூலவர்களும் மாமேதை லெனினும் விரும்பிய வகையில், தனது சர்வதேசியக் கடமையினைத் திடப்பற்றுடன் செய்து முடித்தது. ''கம்யூனிஸ்டுகளாகிய நாங்கள் முறையாக நமது நாடுகளில் சோஷலிசத்தையும் கம்யூனிசத்தையும் நிர்மாணித்து வருகிறோம், இதனை எமது தலையாய கடமை என்று கருதுகிறோம்'' என்று கூறினார் லியோனித் பிரெஷ்நேவ். ''ஆனால் அதே நேரத்தில் எமது திடநம்பிக்கைகளின் சாரம் எமது போதனை, எமது இதயங்களின் கட்டளை காரணமாக சர்வதேசியவாதிகளான நாங்கள் இதர நாடுகளில் சோஷலிஸ்டு நிர்மாணத்தின் கதிவிதிகள் பற்றியோ, இந்த மண்ணுலகின் மீது சோஷலிசம் கம்யூனிசம் குறித்த பொது லட்சியம்

பற்றியோ அக்கறையின்றி இருக்க முடியாது, அப்படி ஒரு நாளும் இருக்கவும் மாட்டோம்"*

1975 ஆம் ஆண்டின் துவக்கத்துக்குள் வெளிநாடுகளில் சோவியத் ஒன்றியத்தால் கட்டி முடிக்கப்பட்டதான 1894 தொழில்துறை மற்றும் இதரத் திட்ட நிறுவனங்களில் மிகப் பெரும்பாலானவை (1416) சோஷலிஸ்டு நாடுகளில் நிர்மாணிக்கப்பட்டன. மறுபுறம் உலக சோஷலிஸ்டு அமைப்பு உருப்பெற்றது முதலே உலகப்புரட்சி இயக்கத்தின் இதர பிரவாக வழிகளுக்கும் அதன் உதவி அதிகரித்தது. இதர மக்களினங்களுக்கு உதவுவதன் பிரதான பொறுப்பை இன்னமும் சோவியத் ஒன்றியமே தாங்கி நிற்பது இயல்பாக இருந்த போதிலும் இது நடைபெற்றது. எப்போதுமே இந்த உதவி பொதுவாக புரட்சி இயக்கம் மீதும், தேசியப் பிரச்சினைகு தீர்வுகாண்பதன் மீதும் மிகப் பலமான விளைவை ஏற்படுத்தியது. இது சோஷலிஸ்டு நாடுகளுக்கும், சிறப்பாகத் தேச விடுதலை இயக்கத்துக்கும் பொருந்தும்.

இரண்டாவது உலகப் போரின்போது ஒடுக்கப்பட்ட மக்களினங்களின் விடுதலைப் போராட்டத்தில் சோவியத் ஒன்றியம் தீர்மானகரமான பங்கு வகித்தது. பின்னால், இதர சோஷலிஸ்டு நாடுகளுடனும் வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளின் தொழிலாளி வர்க்கத்தோடும் ஒன்று சேர்ந்து தேசவிடுதலை இயக்கத்துக்கு அது எல்லா வகையிலுமான உதவியை வழங்கியது. 1950 ஆம் ஆண்டுகளில் காலனி ஆதிக்கத்தை எதிர்த்துப் போராடும் மக்களுக்கு ஆதரவாக சோவியத் மேற்கொண்ட ஆக மறக்க முடியாததான செயல்களில், எகிப்து, சிரியா மற்றும் இராக் மீதான ஏகாதிபத்திய ஆக்கிரமிப்புக்கு முடிவுகட்ட வேண்டும் என்ற சோவியத் நாட்டின் உறுதியான கோரிக்கையும் உட்படும். சோவியத் நடவடிக்கைக்குப் பின் ஏகாதிபத்தியவாதிகள் பின்வாங்கும் கட்டாயத்திற்கு உள்ளாகி, தமது ஆக்கிர

* மாஸ்கோ நியூஸ், இதழ் 28, 1968, அனுபந்தம், பக். 6-7.

மிப்புத் திட்டங்களைக் கைவிட்டனர் என்பது இங்கு நினைவு கூரத்தக்கதாகும்.

தேசவிடுதலை இயக்கத்திற்கு சோவியத் தரும் உதவியின் பரிமாணம், வடிவங்கள், முறைகள் பெரும்பாலும் அந்த இயக்கம் எந்தக் கட்டத்தில் இருக்கிறது என்பதைப் பொருத்ததாகவே இருக்கும். ஒடுக்கப்பட்ட மக்களினங்கள் இன்னமும் அரசியல் சுதந்திரத்துக்காகப் போராடிக் கொண்டிருந்த போதில் சோவியத் ஒன்றியம் முக்கியமாயும் தார்மிக அரசியல் ஆதரவு தந்ததோடு அவசியமேற்படின் ஆயுத உதவியும் கொடுத்தது. ஆசிய ஆப்பிரிக்க லத்தின் அமெரிக்க நாடுகளின் விடுதலைப் போராட்டத்தின் அடுத்த கட்டத்தின்போது—பொருளாதார சுதந்திரத்தைப் பெறுவதற்கு முயன்ற கால கட்டத்தில்—உதவியின் பிரதான வடிவம் தொழில் வளர்ச்சி, விவசாய அபிவிருத்தி, ஊழியர்களைப் பயிற்றுவித்தல் இத்தியாதி துறைகளில் இருந்தது.

ஆசிய, ஆப்பிரிக்க நாடுகளின் தேசவிடுதலைப் புரட்சிகளுக்கும் கியூபா நாட்டு சோஷலிஸ்டுப் புரட்சிக்கும் சோவியத் ஒன்றியத்தின் முழுநிறை ஆதரவு கிட்டியது, சில இடங்களில் சோவியத் உதவி ராணுவத் துறையிலும் குறிப்பாக ஆயுதங்கள் வழங்குவதிலும் பிரதிபலித்தது, சோவியத் உதவியின் காரணமாகத்தான் அல்ஜீரியா. இந்தோனேஷியா, ஏமன் மற்றும் வேறு சில நாடுகளும் தமது விடுதலையையும் சுயாதீனத்தையும் வென்றடைந்தன என்பது குறிப்பிடத் தக்கது. எல்லா வகையிலுமான சோவியத் உதவியும் ராணுவப் பாதுகாப்பும் வீரஞ்செறிந்த கியூபா மக்கள் விடுதலையையும் சுயாதீனத்தையும் உறுதிப் படுத்துவதில் உருப்படியான பங்கு வகித்தன. சோவியத் ஒன்றியம் மற்றும் சோஷலிஸ்டு உலகின் வலிமை தமக்குப் பின்பலமாக இருந்தமையால்தான் வியத்நாம் உழைப்பாளி மக்கள் அமெரிக்க ஆக்கிரமிப்பை வெற்றிகரமாக எதிர்த்து முறியடிக்க முடிந்தது.

இப்போதுங்கூட, லெனினது கட்டளையை உளத்திற் கொண்டு சோவியத் ஒன்றியமும் சோவியத் மக்கள்

அனைவரும் தமது முக்கியமான சர்வதேசியக் கடமையை போற்றத்தக்க வெற்றியுடன் செய்து நிறைவேற்றி வருகிறார்கள், ஒரு நாட்டில் செய்யக் கூடியதை அதிகப் பட்சம் செய்தும், எல்லா நாடுகளிலும், புரட்சியின் ஆக்கத்திற்கான எழுச்சியையும் ஆதரவையும் கிளர்த்தி விட்டும் பாடுபட்டு வருகிறார்கள். ஆனால் என்றுமே புரட்சி ''ஏற்றுமதி'' செய்யப்பட மாட்டாது. முரட்டுத் துணிச்சல் வாதம்—தாமே புரட்சி செய்ய வேண்டியவர்களுக்காக புரட்சி செய்ய முயற்சிகள் செய்தல் சோவியத் மக்களுக்கு முற்றிலும் அன்னியமான செயலாகும். தமது விடுதலைக்கும் தேசிய சுயாதீனத்துக்கும் போராடிவரும் அல்லது தமது சாதனைகளைப் பாதுகாத்து புதுவாழ்வை நிர்மாணித்து வரும் மக்களுக்கு முடிந்தளவுக்கு சகல உதவியையும் செய்வது என்பது வேறு விஷயம்.

இத்தகைய உதவி கொடுப்பது சோஷலிஸ்டு நாடுகள் தமக்கேயும் விடுதலைக்குப் போராடி வருகிற ஒடுக்கப்பட்ட மக்களினங்களுக்கும் ஒருங்கே இன்றியமையாதது என்று லெனின் கூறினர். நெருக்கமான ஒற்றுமை வேண்டிடும் அன்றைய கட்டத்தினை முன்கூட்டியே அறிந்த அவர் 1916-ல் எழுதியதாவது: ''நாம் மங்கோலியர், பாரசிகர்கள், இந்தியர்கள், எகிப்தியர்களுடன் உறவையும் இணைவையும் பேணி வளர்ப்பதற்குச் சகல முயற்சியும் செய்வோம். இதைச் செய்வது நமது கடமை, **நமது நலனுக்கு உகந்தது** என்று நாம் கருதுகிறோம், இல்லாவிடில் ஐரோப்பாவில் சோஷலிசம் **பத்திரமாக இராது.**''* சோவியத் மக்களும் இதரசோஷலிஸ்டு நாடுகளின்மக்களும்லெனினதுகட்டளையைப்புனிதமானதாகக் கருதுகிறார்கள். சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சியின் வேலைத் திட்டம் கூறுவதாவது: ''காலனி அரைக்காலனி அடிமைத் தளைகளை ஒழித்தெறிந்துவிட்ட மக்களினங்களுடன் சோதரக் கூட்டணி நிறுவுவது தனது சர்வதேசியக் கொள்கையின் மூலைக்கல் என்று சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சி கருதுகிறது.

---

* வி. இ. லெனின், ''நூல் திரட்டு'', தொகுதி 23, பக். 67.

இந்தக் கூட்டணி உலக சோஷலிசம் மற்றும் உலகளாவிய தேசவிடுதலை இயக்கம் இவற்றின் பொதுவான ஜீவாதார நலன்களை அடிப்படையாக்கியதாகும்."*சோவியத்கம்யூனிஸ்டு கட்சியின் மத்தியக் கமிட்டி தனது தீர்மானத்தில் வலியுறுத்தியதாவது: இளம் தேசிய அரசுகளுடன் எமது நாடு சமத்துவம், பரஸ்பர மதிப்பு, உள்விவகாரங்களில் தலையிடாமை, பொதுவான ஏகாதிபத்திய-எதிர்ப்புப் போராட்டத்தில் சர்வாம்ச ஒத்துழைப்பு என்பவற்றை ஆதாரமாக்கிய உறவுகளை நிலைநாட்டிக் கொண்டுள்ளது, ஏகாதிபத்தியத்திடம் இருந்து பொருளாதார விடுதலை பெறவும் சமுதாய முன்னேற்றத்துக்கும் வேண்டி ஆசிய ஆப்பிரிக்க லத்தீன் அமெரிக்க மக்களினங்கள் நடத்திவரும் புரட்சிகர இயக்கத்தை சோவியத் ஒன்றியம் முரணின்றி ஆதரித்து வருகிறது. இன்னமும் நிலவிவருகிற காலனியாதிக்க மற்றும் இனவெறி ஆட்சிகளை எதிர்த்து ஆயுதமேந்திப் போராடி வரும் தேசபக்தர்களுடன் சோவியத் ஒன்றியம் சர்வதேச ஒருமைப்பாட்டுக் கொள்கையை அமல் செய்து வருகிறது.''**

புதிதாக விடுதலைபெற்ற மக்களினங்கள் தமது சுதந்திரமான தேசியப் பொருளாதாரத்தை கட்டி வளர்த்துக் கொள்வதற்கு சோவியத் உதவி விசேஷமாயும் பயன்மதிப்புடையதாகும். இத்தகைய உதவி யுத்தப் பிற்கால காலகட்டம் முழுவதிலும் அளிக்கப்பட்டது. 1966-1970 ஆம் ஆண்டுகளில் இது மொத்தம் ஐந்து பில்லியன் ரூபிள் அளவுக்கு இருந்தது, இதில் மூக்கியமாக யந்திர சாதனங்கள் இருந்தன.

காலனி ஆதிக்கத்தில் இருந்து விடுதலை பெற்றதைத் தொடர்ந்து சோஷலிசத்தைத் தேர்வு செய்து கொண்ட

---

* கம்யூனிசத்துக்கான பாதை, பக். 497.

** சோவியத் சோஷலிஸ்டு குடியரசுகளின் ஒன்றியத்தின் 50 ஆம் ஆண்டுவிழாவுக்கான தயாரிப்புகள் பற்றி சோ. க. க. மத்தியக் கமிட்டி தீர்மானம், பக். 22.

நாடுகளுக்குரிய சோவியத் உதவியின் பரிமாணத்தை சீனாவில் 256, வியத்நாம் ஜனநாயகக் குடியரசில் 167, கொரிய மக்கள் குடியரசில் 46 நிறுவனங்கள் துணைசாதனங்கள் மற்றும் கட்டப்பட்ட திட்டநிலையங்கள், என்பதாக கணக்கிட்டுக் கூறலாம்.

சோவியத் பொருளாதார தொழில் நுட்ப உதவிகளில் 30 சதவிகிதத்துக்கு மேல் வளர்முக நாடுகள் பெற்றன. இப்போது பொருளாதார தொழில் நுட்ப உதவி ஆசியா ஆப்பிரிக்கா லத்தீன் அமெரிக்காவைச் சேர்ந்த கிட்டத்தட்ட 50 தேசிய அரசுகளுக்கு வழங்கப்படுகிறது. 1975 துவக்கத்திற்குள் சோவியத் ஒன்றியமானது 899 தொழிற் துறை நிறுவனங்கள் இதர திட்ட நிலையங்களை நிர்மாணிக்கும் உதவியை வாக்களித்திருந்தது. இவற்றில் நவீன தொழில்துறை ராட்சச ஆலைகளான இரண்டு இரும்பு உருக்கு ஆலைகள் (பிலாயும் பொக்காரோவும்) இந்தியாவிலும் எகிப்தில் ஒன்றும் (ஹல்வான்) நைல்நதிமீதான பிரம்மாண்ட (அஸ்வான்) அணைக்கட்டும் (சிரியாவில்) யூஃப்ரடீஸ் அணையும் அடங்கும். இவற்றில் 472 நிறுவனங்கள் ஏற்கெனவே இயங்கத் தொடங்கிவிட்டன. சோவியத் உதவியுடன் நிறுவப்பட்ட ஆலைகள் ஆண்டுக்கு 1. 6 கோடிடன் உருக்கையும், 1. 23 கோடிடன் இரும்புத் தண்டவாளங்கள், 1. 05 கோடிடன் நிலக்கரி, 68 லட்சம் டன் இரும்பு மூலம் 1. 16 கோடி டன் எண்ணெய் இவற்றின் உற்பத்திக்கு வகை செய்யும்.

ஊழியர்களைப் பயிற்றுவிப்பதிலும் சோவியத் ஒன்றியம் பல வளர் முக தேசங்களுக்கு உதவுகிறது. 140-க்கும் அதிகமான கல்வி நிலையங்களை நிறுவ உதவுகிறது, இவற்றில் 94 ஏற்கெனவே இயங்கத் தொடங்கிவிட்டன. இது விடுதலை பெற்ற மக்களினங்கள் நூறு, ஆயிரக் கணக்கில் உயர் தேர்ச்சி பெற்ற ஊழியர்களை உள்நாட்டில் பயிற்றுவித்துக் கொள்ள உதவுகிறது. தவிர பல இளைஞர்கள் பயிற்சி பெறுவதற்கு என்று சோவியத் ஒன்றியத்துக்கு அனுப்பி வைக்கப்படுகிறார்கள்.

ஆசிய, ஆப்பிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகளைச் சேர்ந்த 19,000 க்கும் அதிகமான மாணவர்கள் சோவியத் உயர்தர செகண்டரி விசேஷ கல்வி நிலையங்களில் இருந்து பயின்று பட்டம் பெற்றிருக்கிறார்கள், சுமார் 35,000 பேர் லுமுபா நட்புறவு பல்கலைக் கழகம் மற்றும் இதர கல்வி நிலையங்களில் போதனை பெற்று வருகிறார்கள். இதற்கும் கூடுதலாக வளர்முக நாடுகளிலிருந்து வரும் பதினாயிரக் கணக்கிலான தனித்தேர்ச்சியாளர்கள் குறிப்பிட்ட உற்பத்தித் துறைகளில் சோவியத் தொழில் நுட்பப் பயிற்சி பெற்றிருக்கிறார்கள். இதரநாடுகளில் தொழில் நுட்ப விஞ்ஞான இதரதுறை உதவிகள் வழங்க இதிலும் இருமடங்கு அதிகமான சோவியத் நிபுணர்கள் இதர நாடுகளுக்கு அனுப்பி வைக்கப்படுகிறார்கள். அவற்றில் தங்கி இருக்கும் போதில் சோவியத் நிபுணர்கள் முறையான பயிற்சித் திட்டங்கள் மூலமாக பத்தாயிரக் கணக்கான தேர்ச்சி பெற்ற தொழிலாளர்களையும் தொழில் நுட்ப வியலாளர்களையும் பயிற்றுவிக்கிறார்கள்.

உலக சோஷலிஸ்டு அமைப்பின் இதர நாடுகளும் வளர்முக நாடுகளுக்கு உதவி செய்கின்றன.

1975 ஆம் ஆண்டின் துவக்கத்துக்கு முன்னரே பரஸ்பர பொருளாதார உதவிக் கவுன்சில் (ப. பொ. உ. க.) உறுப்பு நாடுகள் ஆசிய, ஆப்பிரிக்க, லத்தீன் அமெரிக்காவைச் சேர்ந்த 60 நாடுகளில் 3,000-க்கும் அதிகமான தொழில் துறை நிறுவனங்களையும் இதர திட்டநிலையங்களையும் கட்டிமுடிக்க உதவிபுரிந்துள்ளன. இவற்றின் இடையே, பல்வேறு அளவிலான ஆற்றல் கொண்டதான 650 மின் நிலையங்கள், இதர மின் உற்பத்தி, மின்சார வினியோக நிலையங்கள்; 180 யந்திர—நிர்மாண உலோகத் தொழில்கள் திட்டங்கள்; 50-க்கும் மேற்பட்டதான இரும்பு உருக்கு, இரும்பல்லாத உலோகத் தொழிற் சாலைகள்; 500-க்கும் அதிகமான மென்னியந்திர, ஜவுளி, உணவுப் பொருள் தொழிற்சாலைகள் அடங்கும். 100-க்கும் மேற்பட்ட வளர்முக நாடு

களிலிருந்தும் காலனிப் பிரதேசங்களிலிருந்தும் பல ஆயிரக் கணக்கான மக்கள் ப. பொ. உ. க. நாடுகளில் பயிற்சி பெற்ருர்கள் அல்லது பெற்றுவருகிருர்கள்.

உலக சோஷலிஸ்டு அமைப்பின் சந்தைகளுடன் புதிதாக விடுதலை பெற்ற நாடுகளின் உறவுகள் தொடர்ந்து விரிவு அடைந்து வருகின்றன. அவற்றின் பொருளாதார சுதந்திரத்தை உறுதிப்படுத்துவதில் இவை விசேஷ முக்கியத்துவம் வகிக்கின்றன. 1965-க்கும் 1972-க்கும் இடையே ப. பொ. உ. க. உறுப்பு நாடுகளுடனுன இவற்றின் வாணிகம் 500 சதவிகிதம் அதிகரித்துள்ளது; 1974-ல் இது 10 பில்லியன் ரூபிள் அளவினை விஞ்சிவிட்டது. 1965-லேயே சோஷலிஸ்டு நாடுகள் வளர்முக நாடுகளிலிருந்துவரும் இறக்குமதிகள் மீதிலான சுங்கவரியை அகற்றிவிட்டன. நீண்டகால வாணிக உடன்பாடுகளும், ஒப்பந்தங்களும் வளர்முகநாடுகள் தமது பண்டங்களுக்கு சோஷலிஸ்டு உலகில் உறுதியானதும் நாளொருமேனி அதிகரித்து வருவதுமான வர்த்தக வடிகாலினை வழங்கின. அதோடு இறக்குமதிகள் மீது பெருமளவு மதிப்புடைய அன்னியச் செலாவணியை மீதப்படுத்தவும் உதவின. ஆசிய, ஆப்பிரிக்க மக்களினங்களின் முன்னேற்றத்தை உத்தரவாதம் செய்யக் கூடிய அத்தகைய பண்டங்களை குறிப்பாக தரவு செய்யும் நம்பகமான ஆதார தளங்களாக சோஷலிஸ்டு நாடுகள் விளங்கின. அந்த நாடுகளுக்கான சோஷலிஸ்டு உலகின் ஏற்றுமதிகளில் ஏறத்தாழ 50 சதவிகிதம் யந்திரங்கள் சாதனங்களாகவே இருந்தன.

இந்த முறையில்தான் உலக சோஷலிஸ்டு அமைப்பின் மக்களினங்கள் தமது பிரதான வேலை, அரசியல் சுதந்திரத் துக்கு மட்டும் பாடுபடுவதல்ல, மாருகப் பொருளாதார விமோசனத்துக்கும் உழைப்பதே எனும் லெனினது கருத்தைச் செயல் படுத்திஞர்கள், ஏகாதிபத்திய ஆதிக்கம் காரணமாக அரசியல் சுதந்திரம் என்பது பெரும்பாலும் அறமே சம்பிரதாயமானதாக இருந்தது என்பது தெரிந்ததே.

பூர்ஷுவா சித்தாந்தவாதிகளை அம்பலப்படுத்திய லெனின், "அவர்கள் தேசிய விடுதலை பற்றி பேசுகிறார்கள்... பொருளாதார விடுதலையை விட்டு விடுகிறார்கள். இருப்பினும் பின்னதுதான் முக்கியமான விஷயம்"* என்று வலியுறுத்தினார்.

சோவியத் ஒன்றியம் இதர சோஷலிஸ்டு நாடுகளின் உதவியானது, வளர்முக நாடுகளின் தேசியப் பொருளாதாரங்களுக்கு உடனடி அனுகூலம் செய்வது தவிரவும், தேசிய ஊழியர்களைப் பயிற்றுவிக்க உதவுவது அதோடு பேரளவிலான மறைமுகப் பயன்களையும் அளிக்கிறது. தமது முன்னாள் காலனி சாம்ராஜ்யங்களின் மக்களினங்கள் மத்தியிலான தனது செல்வாக்கை இழந்து விடுவோமோ எனும் அச்சத்தால் ஏகாதிபத்திய வல்லரசுகள் விடுதலை பெற்ற மக்களுக்குப் பொருளாதார உதவி நல்குவதில் போட்டியிடவேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது.

ஏகாதிபத்திய நாடுகளில் இருந்து கிட்டும் "உதவி" எப்போதுமே பல்வேறு பொருளாதார அரசியல் நிபந்தனைகளுடன் கட்டுண்டதாக இருக்கும்; அதன் நோக்கம், பெருமளவுக்குப் பிற்போக்கு ஆட்சிகளை ஆதரிப்பதாகவும், அவற்றின் ஆயுதப்படைகளைப் பெருக்கி தேசவிடுதலை இயக்கத்தை ஒடுக்குவதையும், விடுதலைபெற்ற மக்களினங்களின் இயற்கைச் செல்வம் சுரண்டப்படுவதையும் சூறையாடப்படுவதையும் தீவிரப்படுத்துவதற்கான நிலைமைகளை உத்தரவாதம் செய்வதையும் கொண்டதாகவே இருக்கும்.

சோவியத் ஒன்றியம் உலக சோஷலிஸ்டு அமைப்பு மற்றும் வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளின் தொழிலாளி வர்க்கம் வழங்கிடும் எல்லா உதவியையும் புள்ளிவிவரம் போட்டு விவரிக்க முடியாது. சோஷலிசம் கம்யூனிசத்தைக் கட்டுவதிலான அனுபவத்தை மாற்றி வழங்குதல், சோஷலிசத்தின் சாதகங்கள் தெட்டத்தெளி

* வி. இ. லெனின், "நூல் திரட்டு", தொகுதி 18, பக். 398.

வாக நிதர்சனமாதல், மார்க்சிய-லெனினிய சித்தாந்தத்தின் தாக்கம், அயல்துறை விவகாரங்களிலான அரசியல் நடவடிக்கைகள்—இவையாவும் விலைமதிக்க முடியாத நற்பயன்களாகும். சோவியத் நாடு வாழ்கிறது என்பதும், அதன் பொருளாதார வெற்றிகளும் ''புரட்சியின் பிரம்மாண்டமான சக்தியும் காரணியும் ஆகும்''* என்று லெனின் கூறியுள்ளார். இன்றுள்ள நிலைமைகளில், உலக சோஷலிஸ்டு அமைப்பு திடமாக வலுப்படுவதோடு இந்த சக்தி அளப்பரிய வகையில் ஆக்கம் பெற்றுள்ளது.

ஆசிய ஆப்பிரிக்க லத்தீன் அமெரிக்க மக்களினங்களின் விடுதலைப் போராட்டத்தில் சோவியத் ஒன்றியம் வகித்த மிகப்பெரிய பங்கையும், அதன் உதவியின் உட்பொருளையும் 1969-ம் ஆண்டு சர்வதேசிய மாநாட்டில் கம்யூனிஸ்டு, தொழிலாளர் கட்சிகளின் பிரதிநிதிகள் வலியுறுத்திக் காட்டினர்கள். லூயிகோர்வலான் (சிலி) தமது உரையில் சோவியத் ஒன்றியம் முன்னேற்றத்திற்கான மக்களினங்களின் போராட்டத்தின் அரணாக விளங்குகிறது எனவும் 20 ஆம் நூற்றாண்டின் வரலாற்றில் தீர்மானகரமான பாத்திரம் வகிக்கிறது எனவும் கூறினர்; காலித் பக்தாஷ் (சிரியா) உலக முழுதிலுமான புரட்சிகர இயக்கங்களுக்கு சோவியத் ஒன்றியம் அளித்துவரும் மிகப் பல்வகையான உதவிகளைக் குறிப்பிட்டார். அரபு மக்கள் அனைவரும் சிறப்பாக சிரியா மற்றும் எகிப்தின் மக்களும் தமது சொந்த அனுபவத்தில் இருந்தே இந்த சோவியத் உதவியின் பிரம்மாண்டமான பரிமாணத்தை நன்கறிவார்கள், இந்த உதவியானது ஏகாதிபத்திய மற்றும் யூத இனவெறியர் ஆக்கிரமிப்பில் இருந்து எமது சுதந்திரம்,சுயாதீனம், முற்போக்கு ஆட்சி இவற்றைப் பாதுகாத்துக் கொள்ளத் துணை செய்துள்ளது''** என்றார்.

---

* அதே நூல், தொகுதி 42, பக். 241.

** 1969-ல் மாஸ்கோவில் நடைபெற்ற கம்யூனிஸ்டு, தொழிலாளர் கட்சிகளின் சர்வதேசிய மாநாடு, பக். 569.

சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சியின் 24 ஆவது 25 ஆவது காங்கிரசுகள், சோவியத் ஒன்றியத்தின் இதர சோஷலிஸ்டு அரசுகளின் பெருகிவரும் சர்வதேசியச் செல்வாக்குக்கு முடிவான சாட்சியத்தை வழங்கியுள்ளன. இந்தக் காங்கிரஸ் தஸ்தவேஜுகளில் மானுட முன்னேற்றத்தில் உலக சோஷலிஸ்டு அமைப்பு வகிக்கும் இடமும் பாத்திரமும் குறித்த ஓர் அகல்விரிவான ஆழமான பகுப்பாய்வு அடங்கியுள்ளது. மேலும் உலகப் புரட்சி இயக்கம் விகசிப்பதுடன் கூடவே இதன் பாத்திரத்தை விஸ்தரிப்பதற்கான வழிவகைகளையும் இது வரையறை செய்தது. இந்தக் காங்கிரசுகளில் கலந்து கொண்ட சோஷலிஸ்டு நாடுகளின் மார்க்சிய-லெனினியக் கட்சிகளின் தலைவர்கள் பாட்டாளி வர்க்க சர்வதேசியத்தின் பாலான தமது மெய்ப்பற்றினை மீண்டும் ஊர்ஜிதம் செய்தனர்; இதர கட்சிகள் அனைத்தின் பிரதிநிதிகளும் தமது வாழ்த்துச் செய்திகளில், சமாதானம், தேசிய சுதந்திரம், ஜனநாயகம், சோஷலிசத்திற்கான உலகளாவிய போராட்டத்தில் சோஷலிஸ்டு நாடுகள் தமது சர்வதேசியக் கடமையை செய்து நிறைவேற்றியுள்ளதன் அளப்பரிய முக்கியத்துவத்தை வலியுறுத்தி எடுத்திக் காட்டினர்.

சோ.க.க. 25 ஆவது காங்கிரசில் மத்தியக் கமிட்டியினது அறிக்கையை சமர்ப்பித்த லி. இ. பிரெஷ்நேவ் கூறியதாவது: "நமது நெருக்கமான ஒத்துழைப்பின் பிரதான அடிப்படை, அதன் ஒரே வழிகாட்டும் அமைப் பாண்மை சக்தி சோஷலிஸ்டு நாடுகளின் கம்யூனிஸ்டுக் கட்சிகளின் கலைக்கவொண்ணாத திண்மையான கூட்டணியும், அவற்றின் ஒரே மாதிரியான உலகக் கண்ணோட்டமும் அவற்றின் நோக்கங்களும் சித்தமுமேயாகும். மத்தியக் கமிட்டியும் அதன் போலிட்ப்யுரோவும் இந்தக் கட்சிகளுடனான நமது சோதர நட்புறவை வலுப்படுத்துவதில் சற்றும் தளராத கவனம் செலுத்தி வந்துள்ளன என்று நாம் உறுதியாகக் கூறமுடியும். சோதரக் கட்சிகளும் அவ்வாறே

செய்துள்ளன என்று ஆழ்ந்த மனநிறைவுடன் நாம் கூற முடியும்.''*

இந்தக் காங்கிரசில் உரையாற்றிய மார்க்சிய-லெனினிய தேசிய-ஜனநாயக மற்றும் சோஷலிஸ்டுக் கட்சிகளின் பிரதிநிதிகள் மக்களினங்களுக்கு சோஷலிசம் கம்யூனிசத்துக் கான பாதையை ஒளியூட்டி வழிகாட்டியுள்ள சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சியின் வரலாற்றுரீதி லட்சியப் பணியைக் குறிப்பிட்டார்கள். மேலும் உலக சமாதானத்துக்கான போராட்டத்தில் சோவியத் ஒன்றியத்தின் பாத்திரத்தை வலியுறுத்தினுர்கள். காங்கிரசில் நிகழ்த்திய தமது முடிவுரை யில் லி. இ. பிரெஷ்நேவ் கூறியதாவது: ''இந்த உணர்வு களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறோம்; எம்மைப் பொருத்தவரை சோவியத் ஒன்றியத்தின் கம்யூனிஸ்டுகளும் மக்கள் அனைவரும் எதிர்காலத்திலும் சரி தமது சர்வதேசியக் கடமைகளைத் தொடர்ந்து இதே போல நிறைவேற்றி வருவார்கள் என்று, எல்லா நாடுகளிலுமானகம்யூனிஸ்டுகள், தொழிலாளர்கள், தேசிய சமூக விடுதலைப் போராளிகள் ஆகிய அனைவருக்கும் உறுதி கூறுகிறோம்.''**

காங்கிரசில் உரையாற்றிய போலந்து ஐக்கிய தொழி லாளர் கட்சியின் முதற் செயலாளர் எட்வர்ட் கீரெக் சோஷலிஸ்டு சக்திகளின் சித்தாந்த ஒற்றுமையினை கெட்டிப் படுத்தும் கொள்கைக்கும், உலகம் முழுவதும் இதர ஜனநாயக இயக்கங்களோடும் சமூக முன்னேற்றத்திற்குப் போராடுவோருடனும் சேர்ந்து பாடுபடுவதற்கும் முழு ஆதரவைப் பறைசாற்றினுர். ''நாம் தேசிய-ஜனநாயக இயக்கங்களை ஒருமைப்பாட்டு உணர்வுடன் கருதிப்பார்த்து, அதன் வெற்றியில் மகிழ்ச்சி கொள்கிறோம். பூரண சுதந்திரத்

* சோ.க.க. மத்தியக் கமிட்டியின் அறிக்கையும் உள் நாட்டு, வெளிநாட்டுக் கொள்கையில் கட்சியின், உடனடிக் கடமைகளும், பக். 10.

** சோ.க.க. மத்தியக் கமிட்டியின் அறிக்கையும் உள் நாட்டு, வெளிநாட்டுக் கொள்கையிலான கட்சியின் உடனடிக் கடமைகளும், பக். 11.

துக்காகப் பாடுபடும் வளர்முக நாடுகளை நாங்கள் ஆதரிக்கிறோம்'' என்றார்.

ஹங்கேரி மக்கள் குடியரசின் தலைவரும் ஹங்கேரி சோஷலிஸ்டுத் தொழிலாளர் கட்சியின் முதற் செயலருமான ஜானோஸ் காதர் பேசுகையில் ''இதர சோஷலிஸ்டுக் கட்சிகளுடன் கூடவே எமது கட்சியும் எமது மக்களும் மேலும் உறுதியான சமாதானத்துக்காக, வேறுபட்ட சமூக அமைப்புகளையுடைய நாடுகளின் சமாதான சகவாழ்வுக்காக அவற்றின் இடையே பயனுள்ள ஒத்துழைப்புக்காக உழைத்து வருகிறது. அதேசமயம் ஏகபோகத்தின் சர்வாதிகாரத்தை எதிர்த்துப் போரிடும் முற்போக்கு ஜனநாயக சக்திகளோடும் அரசியல்,பொருளாதார சுதந்திரத்துக்காகப் போராடிவரும் மக்களினங்களுடனும் நமது முழுமையான ஒருமைப்பாட்டை தெரிவித்துக் கொள்கிறோம்.

இந்தக் காங்கிரசில் பேசிய எல்லா மாகண்டங்களின் மக்களினங்களின் பிரதிநிதிகளும் உலக சோஷலிஸ்டு அமைப்பின் பாத்திரத்தை மெச்சிப் பாராட்டினார்கள், சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சியின் சோவியத் மக்களின் சர்வதேசியக் கடமையின் உட்பொருளை வெகுவாக வலியுறுத்தினார்கள்.

சோவியத் கம்யூனிஸ்டு கட்சி 25 ஆவது காங்கிரசில் ஆற்றிய தமது வாழ்த்துரையில் வியத்நாம் தொழிலாளர் கட்சியின் முதற் செயலர் லே துவான் கூறியதாவது: ''வியத்நாம் மக்களுக்கு அவர்கள் அளித்து வரும் ஆதரவுக்காக நாம் சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சிக்கும், சோவியத் அரசாங்கத்துக்கும், சோவியத் மக்களுக்கும் மனப்பூர்வமான ஆழ்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். இந்த உதவி அவர்களது உள்ளங்களில் இருந்து வருவது என்பதை நாம் அறிவோம்''. லாவோஸ் மக்கள் புரட்சிக் கட்சியின் பொதுச் செயலர் கேசோன் ஃபாம்விஹானே தமது நாட்டில் தேசிய ஜனநாயகப் புரட்சி வெற்றி பெற்றதை மார்க்சிய-லெனினியம் பாட்டாளி வர்க்க சர்வ

தேசியம், லாவோஸ், வியத்நாம், கம்போடியாவின் சோதர மக்களினங்களின் நெருக்கமான ராணுவத்துறைஒத்துழைப்பு இவை அனைத்தின் நிறைவாக்கம் என்பதாக வருணித்தார்: மேலும் இது "உலகப் புரட்சி சக்திகளின் சர்வதேச ஒருமைப்பாட்டுக்கு சோஷலிஸ்டு அமைப்பை முக்கியமாகக் கொண்ட உலகின் மூன்று கொந்தளித்துப் பாயும் நீரோட்டங்களின் வெற்றியுமாகும்" என்று வலியுறுத்தினர். கியூபா நாட்டு கம்யூனிஸ்டுக் கட்சியின் முதற் செயலர் பிடெல் காஸ்த்ரோ கூறியதாவது: "சோவியத் ஒன்றியம் இல்லாதிருக்குமேயானால் முதலாளித்துவ வல்லரசுகள்... எவ்விதத் தயக்கமும் இன்றி உலகை மீண்டும் பங்கு போட்டுக் கொள்ளத் தொடங்கி இருப்பார்கள். சோவியத் ஒன்றியம் இல்லாதிருக்குமேயானல் இன்று சிறிய அரசுகள் அனுபவித்து வரும் அளவிலான சுதந்திரத்தை எண்ணிப் பார்க்கவே முடியாது. தமது இயற்கைச் செல்வத்தின் மீதான உடைமையுரிமையை மீட்டுப் பெற மக்களினங்கள் நடத்திய போராட்டங்கள் வெற்றி கண்டிருக்காது, அவற்றின் குரல் தேசங்களின் மன்றத்திலே இவ்வளவு அழுத்தமாகக் கேட்டிருக்காது." இராக் கம்யூனிஸ்டுக் கட்சியின் முதற் செயலர் அசீஸ் முகம்மது "உலகின் ஆகத் தொலைவிலான மூலை முடுக்குகளில் புரட்சிகர சக்திகள் பெறும் வெற்றிகளையும் கூட சோவியத் ஒன்றியத்தின் பெருகி வரும் செல்வாக்கு மற்றும் உறுதியான ஆதரவு இவற்றிலிருந்து தனிமைப் படுத்திப் பார்க்க முடியாது" என்று வலியுறுத்தினர். கினியா, கேப்வெர்டே தீவுகளின் சுதந்திரத்துக்கான ஆப்பிரிக்கக் கட்சியின் பிரதிநிதி பிரான்சிஸ்கோ மெண்டெஸ் கூறியதாவது: "போர்த்துகீசிய காலனி ஆட்சிக்கு எதிராக நீண்ட பல ஆண்டுகளாக நாங்கள் நடத்திய கடுமையான போர் முழுவதிலும் சோவியத் மக்களது உன்னதமான சர்வதேசிய உணர்வினை உணர்ந்தே செயல்பட்டோம்." அங்கோலா விடுதலைக்கான மக்கள் இயக்கத்தின் பிரதிநிதி அல்வெஸ் பதிஸ்தா இதற்கு உடன்பாடாகக் கூறியதாவது: "போர்த்துக்கீசிய காலனியாதிக்கத்தை எதிர்த்த எமது வெற்றிக்கு சோவியத்

உதவியே பாதை சமைத்தது. இந்தக் காரணத்தால் இந்த உயர் மேடையில் இருந்து சோவியத் கம்யூனிஸ்டுக்க ட்சிக்கும் சோவியத் மக்களுக்கும் எல்லா சோஷலிஸ்டு நாடுகளுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.''

இந்தக் காங்கிரசுக்கு வந்திருந்த புரட்சி சக்திகளின் பிரதிநிதிகள் சோவியத் பொருளாதார சாதனைகளின் சர்வ தேச வீச்சை பாராட்டினர், இதுவே உலகப் புரட்சி இயக்கத்தின் அடித்தளம் என்று சரியாகவே சாற்றினர்.

மேலே எடுத்துக் காட்டப்பட்ட வாசகங்கள், சர்வ தேசியத் தொழிலாளி வர்க்க இயக்கம், தேச விடுதலை இயக்கம் இவற்றின் சமூக நடப்பிலும், மக்களினங்களின் வாழ்விலான தேசிய சர்வதேசிய இயக்கங்கள் மீதும், சோவியத் ஒன்றியமும் உலக சோஷலிஸ்டு அமைப்பு முழு வதும் எத்தகைய அளப்பரிய செல்வாக்கை வைத்திருக் கின்றன என்பதை புலப்படுத்துகின்றன. துவக்கத்தில் சோஷலிஸ்டு நாடுகளின் உதவி மக்களினங்களால் வென்று பெறப்பட்ட சுதந்திரம், தேசிய சுயாதீனம் இவற்றுக்கான பொருளாதார அடித்தளத்தை இடும் நோக்குடன் வழங்கப் படுகிறது. இரண்டாவதாக இது தேசிய தொழிலாளி வர்க்கம் தேசிய அறிவுத் துறையினர் தோன்றுவதையும் மற்றும் பொதுவாக தேசிய அபிவிருத்தியினைக் கணிசமாயும் வேகப்படுத்துகிறது; இளம் தேசிய அரசுகள் வலுப்படுவதும் விரைவுபடுத்தப் பெறுகிறது, இவை சோஷலிஸ்டு நாடு களுடன் மேலும் நெருக்கமான பொருளாதார, அரசியல், கலாசாரப் பிணைப்புக்களை நிறுவிக் கொள்கின்றன. மூன்றாவ தாக, சோஷலிஸ்டு நாடுகளுடனான உறவுகள் காரணமாக தேசங்கள், தேசிய இனங்களின் உருவாக்கம் மேலும் துரிதமாக நிகழ்கிறது.

சமத்துவம், தேசிய சர்வவுரிமை, பிரதேச உரிமை, பரஸ்பர உதவி, ஒருவர் மற்றவர் உள்விவகாரங்களில் தலையிடாமை இவற்றின் அடிப்படையில் உலக சோஷலிஸ்டு அமைப்பால் உருவமைக்கப்பட்டதான புது மாதிரி அரசு

உறவுகள் சர்வதேச தொழிலாளி வர்க்க மற்றும் தேச விடுதலை இயக்கத்துக்குப் படிப்பினையாக அமைந்த எடுத்துக் காட்டாகும். ஆசிய ஆப்பிரிக்க மக்களினங்கள், குறிப்பாயும் முதலாளித்துவமற்ற பாதையில் செல்வோர், சோஷலிஸ்டு நாடுகள் செயல்படுத்தியுள்ள அரசுகளுக்கு இடையிலான உதவுகளின் சில கூறுகளை ஏற்கெனவே அமல்படுத்த முயன்று வருகின்றன.

சோஷலிஸ்டு அரசுகளின் முன் முயற்சியின் மீதும், வளர் முக நாடுகளால் திடமாக ஆதரிக்கப்பட்டும் தான், ஐக்கிய தேசங்கள் அமைப்பு, காலனி ஆதிக்கத்தின் எச்சமிச்சங்களை இறுதியாக ஒழிப்பது பற்றியும், ஒடுக்கப்பட்ட மக்களினங் களின் சுதந்திரமான அபிவிருத்தி குறித்தும், மீண்டும் மீண்டும் விவாதித்து வந்துள்ளது. ஏகாதிபத்தியச் சதித் திட்டங்களை செயல் குலைத்து, சம்பந்தப்பட்ட ஐ. நா. தீர்மானங்கள் சுதந்திரமான தேசிய அபிவிருத்தி மற்றும் தேசிய அரசுகளின் உருவாக்கம் இவற்றுக்கான மக்களி னங்களின் உரிமையைப் பறைசாற்றின.

உலகப் புரட்சி இயக்கத்தின் வளர்ச்சிக்கான இன்னொரு முக்கியமான காரணி, உலக சமாதானத்தையும் பந்தோ பஸ்தையும் பாதுகாப்பதில் சோஷலிஸ்டு நாடுகள் வகிக்கும் பாத்திரமாகும். சோவியத் ஒன்றியம் இதர சோஷலிஸ்டு நாடுகளின் ராணுவ ஆற்றல் சிறிதும் பெரிதுமான எல்லா மக்களினங்களின் சுயேச்சையான வளர்ச்சிக்கும் நம்பக மான உத்தரவாதமாக விளங்குகிறது.

அரை நூற்றுண்டு காலத்துக்கு மேலாக சோஷலிஸ் டல்லாத உலகப் பகுதியின் முற்போக்கு சக்திகள், சோஷலிச மானது, பெரிதும் சிறிதுமான மக்களினங்கள், அவர்களது பரஸ்பர உறவுகள்பாலான அதன் ஆழ்ந்த மனித நேயத்தின் வாயிலாக, அதன் சர்வப் பொதுவாக அங்கீகரிக் கப்பட்டுவிட்ட சர்வதேசியத் தன்மை மூலமாயும் அனைத்து மனிதகுலத்தின் வாழ்க்கையிலான தேசங்கள், தேசிய உறவுகளின் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் செல்வாக்குச்

செலுத்துகிறது என்பதை அங்கீகரித்து வந்திருக்கின்றன. உலகின் மக்களினங்கள் சோஷலிஸ்டு மனித நேயத்தின் சர்வதேசியத் தன்மையை, எல்லா வடிவிலுமான தேசிய ஒடுக்குமுறைகளையும் எதிர்த்து உண்மையான அபிவிருத்தி சுதந்திரத்துக்கும், போர்களை அகற்றி சமாதான உறவுகளை நிலை நாட்டவுமான தீவிரப் போராட்டதிலும். சுதந்திரத்திற்கும் சுயாதீனத்துக்கும் போராடிவரும் எல்லா மக்களுக்கும் தன்னலமற்ற உதவி வழங்குவதிலும், கால காலமாக இருந்துவரும் தேசிய உறவுகள் பற்றிய பிரச்சினைக்கு அடிப்படையான தீர்வு வழங்குவதிலும் எல்லாம் கண்ணுறக் காண்கின்றனர்.

ஏகாதிபத்தியம் என்ன செய்தாலும் சோஷலிஸ்டு உலகின் வன்மையையோ அதிகாரத்தையோ தடுக்கவோ தவிர்க்கவோ இயலாது-முதலாளித்துவமல்லாத உலகில் மக்களினங்களின் வளர்ச்சி மற்றும் அவர்களது உறவுகள் சம்பந்தமான பல்வேறு அம்சங்களில் அது செலுத்திவரும் சகலமுந்தழுவிய பன்முகச் செல்வாக்கினை சோவியத் ஒன்றியத்தின் 50 ஆம் ஆண்டு விழாவை ஒட்டி அதன் பாத்திரம் குறித்து பல்வேறு நாடுகளின் அரசறிஞர்கள், அரசியல் தலைவர்களும் வெளியிட்ட கருத்துக்களைக் கொண்டு நிர்ணயம் செய்யலாம்.

''சுதந்திர தாகம் கொண்ட'' உலகின் பராதீனப்பட்டுச் செயல் குலைந்து கிடக்கும் கணக்கிறந்த கோடானுகோடி மக்களுக்கு சோவியத் ஒன்றியத்தின் 50 ஆண்டுக்கால சோஷலிஸ்டு நிர்மாணம் நம்பிக்கையின் ஒளி விளக்காகத் திகழ்கிறது'' என்று அமெரிக்கக் கம்யூனிஸ்டுக் கட்சியின் பொதுச் செயலர் கஸ் ஹால் கூறினார்-சோவியத் ஒன்றியத்தின் 50 ஆம் ஆண்டு விழா ஒட்டி சோ. க. க. மத்தியக் கமிட்டி, சோ.ஒ. சுப்ரீம் சோவியத்மற்றும் ரு. சோ. கூ. சோ குடியரசின் சுப்ரீம் சோவியத் சார்பில் நடைபெற்ற கூட்டத்தில் அவர் வாழ்த்துரை வழங்கினார். ''முதலாளித்துவச் சுரண்டலை எதிர்த்துப் போராடி

வருவோருக்கு இது நம்பிக்கையின் ஊற்றுக்கண். தேச விடுதலைக்குப் போராடிவரும் எல்லா மாகண்டங்களிலுமுள்ள லட்சோபலட்சம் மக்களுக்கு இது மாபெரும் உத்வேகம் தருகிறது. வருண இனவெறி ஒடுக்குமுறைக்கு இலக்காகி விட்டதான மக்களுக்கு இது விடுதலைக்குப் பாதை சமைக்கிறது. மானுட சமுதாயத்துக்கு ஒளிமயமான எதிர்காலம் உள்ளது எனும் செய்தியை சோவியத்தின் 50 ஆம் ஆண்டு விழா பறைசாற்றுகிறது''*

உருகுவே நாட்டின் கம்யூனிஸ்டு கட்சி மத்தியக் கமிட்டியின் முதற் செயலர் ரோட்னி அரிஸ்மெண்டி தமது வாழ்த்துச் செய்தியில், இந்த மகத்தான சர்வதேச சக்தி நிர்மாணிக்கப்பட்டதானது—ஏகாதிபத்தியத்தை எதிர்க்கும் எல்லாப் போராளிகளுக்கும் உலகத்தின் மக்களினங்களுக்கும் நல்வாய்ப்பாக—அக்டோபர் புரட்சியில் வெற்றிவாகை சூடியவர்களின் ஆக மகத்தான சாதனைகளின் அணியில் இடம்பெறுகிறது என்றார்.

உலகத் தொழிற்சங்க சம்மேளனத்தின் பொதுச்செயலர் பியரி ஜென்சோ, இயல்பாகவே சர்வதேசியத்தன்மை கொண்டதான தொழிலாளி வர்க்கமும் தொழிற்சங்கங்களும் எல்லா நாடுகளிலும் முன்னேற்றத்திற்காகப் போராடிவரும் அனைத்து மக்களும் சோவியத் ஒன்றியத்தின் 50 ஆம் ஆண்டு விழாவினைத் தமது திருவிழாவாகக் கொண்டாடினார்கள் என்றார். இந்தியக் குடியரசின் உபதலைவர் கோபால் சுவரூப் பதக் சோவியத் ஒன்றியத்தின் அமைப்பை சமத்துவமான தேசங்களின் சுயவிருப்ப ஒன்றியம் என்றும் இங்கு வருண இன, மொழிவகை இடைத் தடைகள் அழிக்கப் பெற்றது மனிதகுல வரலாற்றில் தலைசிறந்த நிகழ்ச்சி எனவும் வருணித்தார். அல்ஜிரிய மக்கள் ஜனநாயகக் குடியரசின் புரட்சிக் கவுன்சில் உறுப்பினர் பெஞ்செதி

---

* டெய்லி ஒர்ல்ட், டிசம்பர் 23, 1972.

சாத்லி இதர மக்களினங்களின் வெற்றிகளும் தேசவிடுதலை இயக்கம் மற்றும் எல்லா ஏகாதிபத்திய-எதிர்ப்பு சக்திகளின் வெற்றிகளும் சோவியத் ஒன்றியத்தின் மக்களினங்களின் வெற்றிகளுடன் நெருக்கமாக இணைந்து நிற்கின்றன என்று குறிப்பிட்டார். சோவியத் ஒன்றியத்தின் வெற்றிகள் தேசிய சுதந்திரம், முன்னேற்றம் மற்றும் சமாதானத்திற்காக, காலனி ஆதிக்கம், நவீன காலனி ஆதிக்கம் மற்றும் ஏகாதிபத்தியத்தை எதிர்த்து போராடிவரும் ஆப்பிரிக்க, ஆசிய, லத்தீன் அமெரிக்க மக்களினங்களுக்கு உத்வேகம் தரும் உதாரணமாகும் என்றார்.

மனிதகுலம் அனைத்தின் எதிர்காலத்துக்கு சோவியத் ஒன்றியத்தின் பங்கும் முக்கியத்துவமும் இன்றியமையாதது என்பதை உலகின் முற்போக்கு சக்திகள் சர்வப் பொதுவாக அங்கீகாரம் செய்து விட்டதைக் குறிப்பிட்டு சோ. க. க. மத்தியக் கமிட்டித் தீர்மானம் கூறியதாவது: ''சோவியத் ஒன்றியம் சமாதானம், நட்புறவு எனும் கொள்கையை உறுதியாகவும் முரணின்றிக் கடைப்பிடித்தும், மக்களினங்களின் சமத்துவம் பற்றிய லெனினியக் கோட்பாட்டை உறுதியாகப் பற்றி நின்றும், காலனியாதிக்கம், நவீன காலனியாதிக்கம், இனவெறி மற்றும் எல்லா வடிவங்களிலுமான தேசிய ஒடுக்குமுறையையும் வைராக்கியமாக எதிர்த்தும் உலக விவகாரங்களில் ஒரு மாபெரும் சக்தியாக விளங்குகிறது. இந்தக் கொள்கை ஏகாதிபத்தியம் மற்றும் பிற்போக்கு சக்திகளின் ஆக்கிரமிப்புப் போர்த்தந்திரத்தை எதிர்த்து முறியடிப்பதில் ஒரு பிரதான காரணியாகவும், நாடுபிடிப்போர்களை எதிர்த்த தீவிரப் போராட்டத்தின் ஒரு கருவியாகவும் எப்போதும் இருந்து வந்துள்ளது. இது சதா மக்களினங்களின் பந்தோபஸ்துக்கும் சுதந்திரத்துக்கும் சமுதாய முன்னேற்றத்துக்கும் பாடுபட்டு வந்துள்ளது.''*

---

* சோவியத் சோஷலிஸ்டு குடியரசுகளின் அமைப்பின் 50 ஆம் ஆண்டு விழாவுக்கான தயாரிப்புகள் பற்றி கோ. க. க. ம. க. தீர்மானம், பக். 12.

பாட்டாளிவர்க்க சர்வதேசிய சித்தாந்தத்திஞல் உத்வேகமூட்டப்பட்ட, சோவியத் சோஷலிஸ்டுக் குடியரசுகளின் ஒன்றியமும், உலக சோஷலிஸ்டு அமைப்பின் இதர நாடுகளும், வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளிலும் நாடுகளிலுமான தேசியப் பிரச்சினையின் பல்வேறு அம்சங்கள் மீது பலமான செல்வாக்குச் செலுத்துகின்றன; உலகப் புரட்சி இயக்கத்தை வேகமுடுக்கம் செய்ய உதவுகின்றன.

அத்தியாயம் பதினொன்று

சர்வதேசத் தொழிலாளி வர்க்க இயக்கமும் வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளில் தேசியப் பிரச்சினையும்

1. உலகப் புரட்சி இயக்கத்தில் தொழிலாளி வர்க்க இயக்கமும் தேசியப் பிரச்சினையும்

சர்வதேசத் தொழிலாளி வர்க்க இயக்கம், முதலாளித்துவ உலகில் மேலதிகமான வலிமைமிக்க, சிறந்த அமைப்புத் திரட்சியுடைய, அரசியல் ரீதியில் செயலூக்கமுள்ள சக்தியாகத் தோன்றி வருகிறது. முதலாளித்துவ நாடுகளில் தேசங்கள், தேசிய உறவுகளின் வளர்ச்சியில் தொழிலாளி வர்க்கத்துக்குள்ள செல்வாக்கு இதற்குச் சான்றாகும்.

உலகப் புரட்சி இயக்கத்தில் தேசியப் பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதில், சர்வதேசத் தொழிலாளி வர்க்கத்தின் செல்வாக்கு, உலக சோஷலிஸ்டு அமைப்பின் செல்வாக்குடன் நெருக்கமாக இணைந்து நிற்கிறது. முதலாவதாக, தொழிலாளி வர்க்க இயக்கத்தினுள் சர்வதேசிய நடப்புக்கள் தேசிய நடப்புக்களை விஞ்சி முன்செல்கின்றன; இதன் தூண்டும் சக்திகளில் ஒன்று சர்வதேசியவாதமாகும். இரண்டாவதாக, இந்த இயக்கத்தின் தனிப்பட்ட படைப்

பிரிவுகளின் வாழ்க்கையிலும் வர்க்கப் போராட்டத்திலுமான தேசியக் காரணிகள் மிகவும் உன்னிப்பாகக் கருதிப் பார்க்கப்படுகின்றன, காரணம் அவை முதலாளித்துவ ஒடுக்குமுறையை எதிர்த்த போராட்டத்திலான ஒற்றுமைக்கு மிகவும் முக்கியமானவை. மூன்ருவதாக, உலக சோஷலிஸ்டு அமைப்புடன் கூடவே சர்வதேசத் தொழிலாளி வர்க்க இயக்கமும் எந்த வடிவிலுமான தேசிய ஒடுக்குமுறையையும் எதிர்க்கிறது, சிறிதும் பெரிதுமான எல்லா மக்களினங்களின் சமத்துவத்தை ஆதரிக்கிறது. சர்வதேசியத் தொழிலாளி வர்க்கமும் உலக சோஷலிசமும் மக்களினங்களின் விடுதலைக்கு தெளிவான பங்குப்பணி ஆற்றுகின்றன. காரணம் அவை வர்க்க சக்திகளின் புதிய அணியமைப்பை நிர்ணயம் செய்கின்றன, தேச விடுதலை ஜனநாயக இயக்கங்களில் பாட்டாளி வர்க்க சர்வதேசியம் ஆக்கம் பெறப் பல வழிகளில் உதவுகின்றன, ஒடுக்கப்பட்ட மக்களுக்கு அரசியல் முறையிலும் பொருள்வகையிலும் சகாயம் செய்கின்றன, ஒவ்வொரு நாட்டிலும் இருக்கும் தொழிலாளி வர்க்கம் இதர வர்க்கங்கள், அடுக்குகள் சம்பந்தமாகத் தலைமைப் பாத்திரத்தை ஏற்றுச் செயல்படத் துணைபுரிகின்றன.

நமது சகாப்தத்தின் உள்ளடக்கம், சர்வதேசத் தொழிலாளி வர்க்கத்தினுல்—உலக சோஷலிஸ்டு அமைப்பின் செல்வாக்கு, சமாதானம், ஜனநாயகம், சோஷலிசத்துக்காக முதலாளித்துவ நாடுகளின் தொழிலாளர் நடத்தும் போராட்டம் இவற்ருல் நிர்ணயிக்கப்படுகிறது எனும் லெனினிய தத்துவக்கூறினை மெய் நடப்புக்கள் ஊர்ஜிதம் செய்து விட்டன. முதலாளித்துவ உலகத்தை குலைத்துவரும் அரசியல் போராட்டங்கள் தொழிலாளி வர்க்கமே நமது சகாப்தத்தின் சாரத்தை நிர்ணயிக்கிறது எனும் உண்மையினை உறுதிப்படுத்துகின்றன, ஏனெனில் இதர நிகழ்வுகளின் மத்தியில் வேலை நிறுத்தம் செய்தோரின் எண்ணிக்கை 1919–1939-க்கு இடையிலான போருக்கு முந்திய 20 ஆண்டுகளில் 7 கோடி 40 லட்சமாக இருந்தது, 1969 முதல் 1974 வரையான கட்டத்தில் 27 கோடி 20

லட்சமாக உயர்ந்தது. இதில் மிகவும் முனைப்பாக இருக்கும் அம்சம் என்னவென்ருல், இந்த வேலை நிறுத்தக்காரர்களில் மூன்றில் இரண்டு பகுதியினர் அரசியல் வேலை நிறுத்தங் களில் ஈடுபட்டு இருந்தனர் என்பதேயாகும்.

சர்வதேசத் தொழிலாளி வர்க்கம் மார்க்சிய-லெனினிய சித்தாந்தம் வாயிலாக உலகப் புரட்சி இயக்கத்தின் செல்வாக்கை அமுல் செய்கிறது, இதில் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரமும் ஒரு பகுதியாகும். இந்தச் செல்வாக்கின் வடிவங்களில் ஒன்று, பொதுவான ஜனநாயக இயக்கத்தில் தீவிரமாகப் பங்குபற்றுவதாகும். இந்த இயக்கம் போராடி வரும் லட்சியங்கள் மத்தியில் தேசியப் பிரச்சினை தலையாய இடத்தைப் பெறுகிறது. இவற்றை நான் ஏகாதிபத்தியம் தேசிய உறவுகள் உட்பட்ட முதலாளித்துவ சமுதாயத்தின் முரண்பாடுகளை மிகவும் கடுமையாக்கி விட்டது. இதன் விளைவுகளில் இருந்து தப்பி விடுபட்ட சமுதாயத் துறைகள் எதுவுமேஇல்லை எனலாம்.தொன்மையான கலாசாரங்களும், உலக நாகரிகத்துக்கு மிகவும் எடுப்பான பங்களிப்பும் தந்த நாடுகள், மக்களினங்கள் அசல் வாழ்வையே அணு ஆயுதப் போர் அபாயம் அச்சுறுத்துகிறது. இன்றைய முதலாளித் துவத்தின் புலப்பாடுகளான இனவெறி, குறுதேசிய வெறி, இன ஒதுக்கல் நிறவெறி தேசியவாதம் போலிப் பொதுப் பற்று (காஸ்மோபாலிடனிசம்) முதலியவை சமூக முன்னேற்றத்தைத் தகைந்து நிறுத்தியுள்ளன; பாசிசமும் அதன் மனிதனை வெறுக்கும் சித்தாந்தமும் பல நாடுகளில் இன்னமும் காணக்கிடக்கின்றன. இதன் புதிய வடிவங்கள் தோற்றமளிக்கின்றன, தேசங்கள்,தேசிய இனங்கள் வாழும் மெய்யான அடித்தளங்களையே அரித்துத் தகர்த்து வருகின்றன. பூர்ஷுவா வர்க்கமோ பாட்டாளி வர்க்கத்தை தேசிய சித்தாந்தம் மூலம் ஊழல்படுத்தி தேசியப் பிரச்சினையை நாடுகள் மக்கள் இனங்கள் இடையிலான முரண்பாடுகளின் முடிச்சாக்கி பாட்டாளி வர்க்கத்தின் போராட்டங்களை மட்டுப்படுத்திடத் தன்னுல் இயன்ற அனைத்தையும் செய்து வருகிறது. இந்த முரண்பாடுகள்

நிரந்தரமானவை, நெறிப்படுத்த முடியாதவை என்று சித்திரிக்கப்படுகிறது. இதன் நோக்கம்: பூர்ஷுவா ஆட்சியதிகாரம் வீழ்ச்சியுறுவதைத் தவிர்ப்பது, உலகம் முதலாளித்துவத்தில் இருந்து சோஷலிசத்தை நோக்கி மாறிச் செல்லும் போக்கைத் தவிர்க்க முடியாவிடினும் தடுத்துத் தாமதப்படுத்துவது.

பல நாடுகளில் தேசியப் பிரச்சினை ஆக முக்கியமான சமுதாயச் சிக்கல்களில் ஒன்ருக மாறி விட்டதால் இதற்குத் தீர்வுகாண்பதற்காகத் தொழிலாளி வர்க்கம் நடத்தும் போராட்டம் உழைக்கும் மக்களின் ஜனநாயக சாதனைகளைப் பாதுகாப்பதற்கு மக்கள் திரளினரைத் திரட்ட முடியும், தேசத்தின் நேர்மையான சக்திகள் அனைத்தையும் தீவிரமான சமூக-பொருளாதாரப் பரிகாரங்களை நாடி, பின்னுல் சோஷலிசத்தை நோக்கி முன் செல்வதற்கான ஒரு வலிமை வாய்ந்த ஏகாதிபத்திய-எதிர்ப்பு, ஏகபோக-எதிர்ப்பு முன்னணியில் ஒன்றிணைக்க முடியும்.

தொழிலாளி வர்க்கமும் அதன் மார்க்சிய-லெனினியக் கட்சிகளும் தேசிய சர்வதேசிய அம்சங்களின் தொடர்பாட்டை வரையறுக்க முயல்கின்றன. தேசங்கள் தேசிய உறவுகள் மீதான மார்க்சிய-லெனினிய போதனையை விமர்சனம் செய்யும் பூர்ஷ்வா பிரசாரம் இந்த இரண்டு கருத்துருக்களையும் வழக்கமாக எதிர்க்கவேசெய்யும். ஆயினும் உண்மையில் தேசிய, சர்வதேசிய அம்சங்கள் தகர்க்க வொண்ணுத வகையில் இணைக்கப் பட்டுள்ளன.

சமுதாய வாழ்வை சர்வதேசியமாக்கும் செயல்பாட்டின் பின்னே தலைமை தாங்கி மிகவும் செயலூக்கமுடைய சக்தியாக விளங்குகிறது. சர்வதேசத் தொழிலாளி வர்க்கம் சுமார் 60 கோடி அடங்கிய இது உலகின் சமூக பொருள் உற்பத்தியில் முக்கால் பங்கை உற்பத்தி செய்கிறது, இதன் மூலம் மட்டுமே இது மக்களினங்களின் சமுதாய முன்னேற்றத்தைப் பல வழிகளில் முடிவு செய்கிறது. இது இயல்பாகவே தீர்க்கமான சர்வதேசியத் தன்மையுடையது,

ஒற்றுமையை நோக்கிய போக்கியல்பு இதன் உயிர் குருதி யாகும். மேலும் முன்னேறிய தொழிலாளர் வசம் ஒரு மெய்யான சர்வதேசிய சித்தாந்தம்—மார்க்சிய-லெனினியம் இருக்கிறது.

பிரான்ஸ் நாட்டின் தொழிலாளி வர்க்கத்தை எடுத்துக் கொள்வோம். அது மெய்யான சர்வதேசியத்துக்கான பல உதாரணங்களைப் புலப்படுத்தியுள்ளது. பாரிஸ் கம்யூனுர்ட் (புரட்சி) வீரம் செறிந்த மரபில் வளர்த்து ஆளாக்கப்பட்ட இது காலனிகள் சார்பு நாடுகளில் மக்களினங்களின் சுதந்தி ரத்தை அவர்கள் மிதித்துத் துவைத்த போதில், தனது சொந்த நாட்டு ஏகாதிபத்திய வாதிகளை எதிர்த்துப் போராடியது தேச விடுதலைக்கும் அரசுத்துவத்துக்கும் தாம் நடத்திய போராட்டத்திற்குப் பிரெஞ்சு தொழிலாளர் களிடமிருந்து அவர்கள் பெற்ற உதவியை வியத்நாம், அல்ஜிரியா டியூனிஷியா, மொராக்கோ மற்றும் இதர முன்னுள் பிரெஞ்சுக்காலனிகளின் மக்கள் என்றுமே மறக்க மாட்டார்கள். மலாய் நாட்டில் பிரிட்டிஷ் ஏகாதிபத்திய வாதிகள் நடத்திய காலனிப்போரை எதிர்த்துப் பல பிரிட்டிஷ் தொழிலாளிகள் போராடினார்கள். அங்கோலா, மொசாம்பிக், கினி-பிசாவ் கேப்வெர்டே தீவுகளின் மக்களினங்கள்சுதந்திரத் திற்காக போர்த்துக்கீசிய காலனியாதிக்க வாதிகளை எதிர்த்து நடத்திய போராட்டத்திற்கு, போர்த்துகல் நாட்டின் தொழிலாளர்களும் முற்போக்கு சக்திகளும் உறுதியான ஆதரவு அளித்தன. சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சியின் 25 ஆவது காங்கிரசில் உரையாற்றும்போது போர்த்துகீசிய கம்யூனிஸ்டுக் கட்சி பொதுச்செயலர் அல்வாரோ குன்ஹால் கூறியதாவது: ''எமது போராட்டத்தில் நாங்கள் தொழிலாளி வர்க்கம் மற்றும் மக்கள் மீதான எமது நம்பிக்கையால் மட்டுமன்றி, ஜனநாயக முற்போக்கு சக்திகளின் சர்வதேச ஒருமைப்பாட்டாலும், தேச விடுதலை இயக்கத்தாலும், கம்யூனிஸ்டுகளின் மகத்தான சர்வதேசக் குடும்பத்தில் எம்மைச் சேர்ந்த மார்க்சிய-லெனினியக் கட்சிகளின் சோதர ஒற்றுமையாலும் உத்வேகப்

படுத்தப் பெறுகிறோம், உந்துவிக்கப் படுகிறோம். மார்க்சிய-லெனினியம் பாட்டாளி வர்க்க சர்வதேசியம் என்பவற்றின் அடிப்படையிலான இந்தக் குடும்ப ஒற்றுமை, பொதுவான வெற்றியை நாம் பெறுவதற்கு இன்றியமையாததாகும்."

வெளி நாடுகளிலான காலனி ஒடுக்கு முறையை எதிர்த்து சாம்ராஜ்ய நாடுகளில் மக்கள் கண்டனம் எழுந்த தானது ஏகாதிபத்தியவாதிகளைப் பொருத்தவரை அடிமைப் பட்ட மக்களின் விடுதலைப் போராட்டம் போலவே ஆபத்தானதாகவே இருந்தது. இதனால் தான் ஏகபோக மூலதனம் சாம்ராஜ்ய நாடுகளிலுள்ள தொழிலாளர் மனங்களை ஊழல்படுத்த முனைந்து நிற்கிறது. "சமுதாயம் முழுவதையும் பராமரித்து நிற்கும் பாட்டாளி வர்க்கம் மட்டுமே சமூகப் புரட்சியைக் கொண்டு வர முடியும்"* என்று லெனின் கூறினார். ஆனால் ஏகாதிபத்திய காலனி யாதிக்கக் கொள்கையின் விளைவாக சமுதாயம், சாம்ராஜ்ய நாடுகளைச் சேர்ந்த தொழிலாளி வர்க்கத்தின் உழைப்பினால் மட்டுமன்றி காலனிகள் சார்பு நாடுகளில் ஏகாதிபத்திய வாதிகளால் ஒடுக்கப்படும் மக்களினங்களின் உழைப்பாலும் பெருமளவில் பராமரிக்கப்படுகிறது. இது பாட்டாளிகளின் மத்தியில் காலனியாதிக்க குறு தேசிய வெறி எனும் தொத்து நோய் பரவுவதற்கான பொருளாதாரப் பின்னணியை உருவாக்குகிறது, இது தொழிலாளி வர்க்க இயக்கத்தி னுள்ளே சந்தர்ப்ப வாதத்துக்குக் கபாடம் திறந்து விடுகிறது.

பிரிட்டனிலும் அமெரிக்க ஐக்கியநாட்டிலும்தொழிலாளி வர்க்க இயக்கத்தில் இன்று காணப்படும் நிலைமை, இதர மக்களினங்களை ஒடுக்குகிற ஏகாதிபத்தியக் கொள்கை தொழிலாளர் மனங்களில் ஊழலை ஏற்படுத்தும் எனும் லெனினது ஆராய்ச்சியுரையை ஊர்ஜிதம் செய்கிறது. இதனால்தான் இனவெறி சித்தாந்தம் இவ்வளவு விடாப்

* வி. இ. லெனின், "நூல் திரட்டு", தொகுதி 13, பக். 77.

பிடியானதாக இருக்கிறது, இதனுல்தான் உயர் வளர்ச்சி யடைந்த நாடுகளில் பூர்ஷுவா வர்க்கம் இன ஒதுக்கலே இன்னும் செயல்படுத்த முடிகிறது. இதற்கு அரசியல் ரீதியில் பின் தங்கி நிற்கும் தொழிலாளர் பகுதியின் ஆதரவும் கிடைக்கிறது.

பாட்டாளி வர்க்கத்தின் சர்வதேசிய வாதத்தின் செல்வாக்கு சமுதாயம் சர்வதேசிய மயமாக்கப் பெறுவதை மேலும் ஊக்குவிப்பதால் ஏகபோக மூலதனம் இந்தச் செல்வாக்கை ஆகக் குறைந்த பட்சத்துக்குக் குறுக்கி விட விரும்புகிறது. சமுதாய உற்பத்தியின் ஒரு புறநிலேத் தேவையான மக்களினங்கள் மத்தியிலான ஒத்துழைப்பின் நோக்கத்தை நிதித்துறை மன்னர்கள் புரட்டுகின்றனர். முதலாளித்துவ மற்றும் சோஷலிஸ்டு நாடுகளின் மக்களி னங்கள் இடையே சர்வதேச உறவுகள் உருவாகி வருவதை வெட்டி விடும் எண்ணத்துடன் பல முதலாளித்துவ நாடுகள் சோஷலிஸ்டு நாடுகளுடனுன பொருளாதார உறவுகளே ஒரு சமயம் முறித்துக் கொண்டன, கலாசார தொடர்புகளைக் கூட மிகக் குறைந்த பட்சத்துக்குக் குறைத்துக் கொண்டன.

இப்போதோ, உலக ஏகாதிபத்தியத்தின் கொள்கை தோல்வியடைந்து விட்டது என்பது எல்லோருக்கும் தெளி வாகத் தெரியும். சோஷலிஸ்டு நாடுகளின் பொருளாதார, அரசியல் ராணுவ வலிமை ஒரு புறமும், முதலாளித்துவ நாடுகளின் மக்கள் திரளின் கண்டனம் இதோடு சேர்ந்து முதலாளித்துவத்தின் கடுமையுறும் பொது நெருக்கடியை இந்த அமைப்பால் தடுத்து நிறுத்த இயலாமை மறுபுறமும், முதலாளித்துவ நாடுகளிலுள்ள எதார்த்த மனப்பான்மை கொண்ட அரசியல் வாதிகள் தமது அயல்துறைக் கொள்கை வழியைத் திருத்திக்கொள்ளுமாறுகட்டாயப்படுத்தியுள்ளன. இப்போது ஏகாதிபத்தியம் பின்வாங்குமாறு கட்டாயப் படுத்தப்பட்டு, சோஷலிஸ்டு நாடுகளுடனுன விரிவான ஒத்துழைப்பை நோக்கி ஈர்க்கப்படுகிறது என்ருல் இதற்கான பிரதான காரணங்கள் இவையே.

ஏகபோக மூலதனமும் முதலாளித்துவ நாடுகளுடனுன பன்முக உறவுகளை ஏற்படுத்திக் கொள்வது மூலம் தனது நோக்கங்களை விருத்தி செய்துகொள்ள முயல்கிறது. இதை அமெரிக்க ஏகபோகங்களின் கொள்கையில் நன்கு காணலாம். யுத்தத்துக்குப் பிந்திய காலகட்டத்தில் மூலதன ஏற்றுமதி வாயிலாக அவை நடத்திய லாபவேட்டையுடன், பரந்த செயல்விளைவுகளையுடைய அரசியல் நோக்கங்களும் பின் தொடர்ந்தன. நாஜிகளால் சூறையாடப்பட்டு போரினுல் நாசமாக்கப்பட்ட மேற்கு ஐரோப்பா, மார்ஷல் திட்டத்தின் வாயிலாக அமெரிக்க மூலதனத்தின் செல்வாக்குகள் வீழ்ந்தது.அமெரிக்க நிர்ப்பந்தம் காரணமாக கம்யூனிஸ்டுகள் அரசாங்கத்தில் இருந்து விலக்கப்பட்டனர், பொதுவாக அரசியல் அரங்கத்தில் பிற்போக்கு சக்திகள் வலுவடைந்தன. மேற்கு ஐரோப்பிய நாடுகளில் முதலாளித்துவத்தைப் பலப் படுத்தப் பிற்போக்கு சக்திகள் எடுத்த முயற்சிகளுக்கு நேட்டோ ஆக்கிரமிப்புக் கூட்டணி நிறுவப்பட்டது ஆதர வாக இருந்தது, ''ஐரோப்பாவின் அரசியல் இணைப் பாக்கம்'' மற்றும் அகில ஐரோப்பிய ''அகண்ட-தேசிய அரசாங்கம்'' இவற்றுக்கான விரிவான திட்டங்கள் தீட்டப் பட்டன.

எடுத்துக்காட்டாயும் இது இணைப்பாக்கம், காஸ்மோ பாலிடன் நோக்கு எனும் கொடியின் கீழ் செய்யப்பட்டது, இன்னும் செய்யப்பட்டு வருகிறது. ஐரோப்பிய நிலக்கரி உருக்கு கூட்டிணைவு எனும் ராட்சச கூட்டமைப்பு, மூல தனமும் மனிதசக்தியும் இஷ்டம்போலப் பயன்படுத்தப் படவேண்டும், சுங்கத்தடைகள் நீக்கப்படவேண்டும், மக்கள் தேசிய சர்வவுரிமை, சுதந்திரம் போன்ற ''காலாவதியாகி விட்ட'' கருத்துக்களை கைவிட்டு விடும்படி கோரும் பொது மார்க்கெட் அமைப்பு இவற்றை எடுத்துப் பார்த்தாலே இது புலனுகும். பல்தேசிய இன ஆஸ்திரிய-ஹங்கேரி முடியரசு தேசியப் பிரச்சினைக்கான ஒரு லட்சணத் ''தீர்வு'' என்பதாக பூர்ஷுவா வரலாறும் அரசியல் நூல் களும் ஏற்றிப்போற்றுகின்றன.இன்றைய மேற்கு ஐரோப்

பாவுக்கு இது பொருத்தமான மாதிரி என்னும் இதன் மக்களினங்கள் ஓர் அகில-ஐரோப்பிய அரசாங்கத்துக்கு ஆதரவாகத் தமது தேசிய அரசுத்துவத்தை படிப்படியாக விட்டுக் கொடுக்கவேண்டும் எனவும் பறைசாற்றப்படுகிறது.

ஆயினும் இந்த ஏகபோகங்கள் உண்மையில் கிழக்கு நாடுகளுக்கும் மேற்கு நாடுகளுக்கும் இடையே ஓர் இரும்புத் திரை போட விரும்பினர் என்பதும், இதையே ஜோக்கிம் வான் ரிபன்ட்ராப் கனவு கண்டார். ஆனுல் அது நிறைவேம் வில்லை என்பதும் வெள்ளிடைமலை. இதோடு எல்லாற தீர்ந்துவில்லை, சர்வதேசிய மயமாக்கல் எனும் முற்போக்கு நடப்பையும் அவர்கள் குலைக்க விரும்பினுர்கள்.

சர்வதேசிய மயமாக்கலின் மெய்யான முற்போக்கு சாரத்தை, எவ்வாறு உலக ஏகாதிபத்தியம் புரட்டி வருகிறது என்பதை, பூர்ஷுவா சமூக அமைப்பில் இருந்தும் வளர்முக நாடுகளிலிருந்துமான பல உதாரணங்களில் காணலாம். பலவகையான ராணுவக் கூட்டணிகள் வெவ் வேறு நாடுகளின் "கூட்டாட்சிகள்" இதோடு சேர்ந்து வேறு பல நாசுக்கான முறைகள் இவை ஏகாதிபத்தியக் கவிழ்ப்புச் சதிகளையும், மக்களினங்களின் பெருகிவரும் ஒற்றுமையைக் குலைக்கும் முயற்சிகளையும் மூடிமறைத்து வருகின்றன.

சர்வதேசிய மயமாக்கலின் புறநிலை நடப்புக்களைத் தன்னலத்துக்குப் பயன்படுத்தி உலக சோஷலிசத்துக்கும் உழைக்கும் மக்கள் திரளினருக்கும் எதிரான தனது போராட்டத்தில், ஏகாதிபத்தியம் தன் நிலையை முட்டுக் கொடுத்து நிறுத்துவதில் ஓரளவுக்கு வெற்றி பெற்றுள்ளது. ஆயினும் அடிப்படையில் இந்த இயக்கம் மறுக்கவியலாத அளவுக்கு முற்போக்கானது, வெல்லற்கரியது. எடுத்துக் காட்டாக விஞ்ஞான,தொழில்நுட்பப்புரட்சியானது தேசியஎல்லைகளைக் கடந்து விட்டது. அணு ஆயுதப் போரையும் ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பையும் தடுக்கவும், சோஷலிஸ்டு நாடுகளுடன் நட்புறவையும் ஒத்துழைப்பையும் வலுப்படுத்தவுமான

மக்களின் போராட்டத்தில் உயிர்நாடியாக இருப்பது ஒற்றுமையே.

ஐரோப்பாவின் மக்களினங்கள், தேசிய சர்வவுரிமை யையும் சுதந்திரத்தையும் ஒழிப்பதற்கான திட்டங்களேயும், ஐரோப்பாவில் அகண்ட-தேசிய அரசாங்கம் உருவாக்கப்படு வதையும் வன்மையாக எதிர்த்து வருகிருர்கள்.

ஜெர்மன் பாசிசத்தையும் அதன் சுற்றுக் கிரகங்களேயும் எதிர்த்த போரின்போது போதிய அடிப்படையுடன் நிலவிய தேசிய வன்மம் மற்றும் பகைமை உணர்வுகளேத் தடுப்பதில் சோவியத்ஒன்றியமும் இதர சோஷலிஸ்டு நாடுகளும் வெற்றி கண்டுள்ளன. இந்த மெய்நடப்புக்கு ஐரோப்பாவில் ஆக்க பூர்வமான சர்வதேசிய மயமாக்கல் இயக்கம் மீது பலமான தாக்கம் இருக்கிறது. தமது வர்க்க ஒற்றுமை, பாட்டாளி வர்க்க சர்வதேசிய உணர்விஞல் உந்தப்பட்ட அவர்கள் தேசியப் பகைமையின் தன்னியல்பான உணர்வை வென்று சமாளித்து, ஜெர்மன் மக்களுக்கும் ஜெர்மன் பாசிசத் துக்கும் இடையே பிரிநிலேயை வகுத்து வைத்தார்கள்.

இயற்கையால் மக்களினங்களின் தேசிய உணர்வில் பகட்டாக நட்டுவைக்கப்படும் "எல்லா தேசிய நலன்களின் மோதல்களிலும் வேராகக் கிடப்பது போருக்கான இயக் காற்றல் தேவையே" என்று நவீன பூர்ஷுவா பிரசாரம் சாதிக்கிறது. இந்தத் தன்னினந்தின்னி 'தத்துவத்தை' எதிர்த்துப் போரிடும் சோஷலிசம், தேசிய உறவுகளே சர்வ தேசிய மயமாக்கலின் புறநிலே நடப்புக்களோடும், சர்வ தேசியக் கல்வியின் அகநிலேப் போக்குகளோடும் எவ்வாறு வரிசைப்படுத்துவது என்பதற்கான ஒரு மாதிரியை முன் வைக்கிறது. வெவ்வேறு நாடுகளின் மிகவும் முன்னேறிய தொழிலாளர்கள் ஜெர்மன் நாஜிகளின் இரத்தவெறிக் குற்றச் செயல்கள் இன்னமும் நினேவில் நின்ற போதிலும், சோஷலிசம்தான் ஜெர்மன் ஜனநாயகக் குடியரசுக்கும் இதர சோஷலிஸ்டு நாடுகளுக்கும் இடையே ஒத்துழைப்பு

பரஸ்பர உதவிக்கான நேசபூர்வமான உறவுகளை உத்தரவாதம் செய்தது என்பதை அறிவார்கள்.

பாட்டாளி வர்க்க சர்வதேசியத்தின் மேல் மெய்ப்பற்றுடன் சோஷலிஸ்டு நாடுகளின் மக்கள், ஜெர்மன் சமஷ்டிக் குடியரசின் உழைக்கும் மக்களிடம் நட்புறவு உணர்வுடன் நடந்து கொள்கிறார்கள், அங்கு நாஜிசத்தைப் புதுப்பிக்க ஆகப் பிற்போக்கான நபர்கள் செய்யும் முயற்சிகளுக்கும் மக்கள் நலன்களுக்கும் பொதுவான அம்சம் எதுவும் இல்லை என்பதையும் அவர்கள் அறிவார்கள். நிலைமை இதற்கு நேர் எதிரானதாகவே உள்ளது. இந்த நலன்களை, மேற்கு ஜெர்மனியின் பழிவெறியர்களை மட்டுப்படுத்த உலக சோஷலிஸ்டு அமைப்பு மேற்கொள்ளும் விடாப்பிடியான முயற்சிகள் மேம்படுத்த உதவுகின்றன.

இன்றைய முதலாளித்துவ உலகில் சர்வதேசியமயமாக்கல் நிகழ்வுகள் முதலாவதாயும் முக்கியமாகவும் பொருளாதாரத் தேவைகளால் தோற்றுவிக்கப்படுகின்றன. தொழில்துறையில் வளர்ச்சி அடைந்த நாடுகளிலும் ஆசிய, ஆப்பிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகளிலும் உற்பத்தி சமூக ரீதியிலேயே நடக்கிறது. இது, சமூக உழைப்புப் பிரிவினையானது தொடர்ந்து விரிவாக்கம் பெறுவதையும், தேசியப் பொருளாதார தொழில்தொகுதிகள் இடையே இணைப்புகள் ஏற்படுவதையும் கட்டாயப்படுத்துகிறது. இதற்கும் மேல் விஞ்ஞான தொழில்நுட்பப் புரட்சியின் சமுதாயப் பின் விளைவுகள் உள்ளன, இவை உற்பத்தியில் தனி நிபுணத்துவத்தையும் ஒத்துழைப்பையும் விஞ்ஞான தொழில் நுட்பத்தில் கூட்டு நடைமுறையையும் அவசியமாக்குகிறது.

சர்வதேசியமயமாக்கல் நடப்புக்கள் இரண்டாம் உலகப் போருக்குப்பின் தோன்றியதான ஒரு புதிய காரணியையும் சேர்த்து இணைத்துக் கொண்டிருக்கின்றன: மக்களினங்களின் உழைக்கும் மக்களின் பெருகிவரும் ஒற்றுமை, இது தேசங்கள் இடையிலான உறவுகளில் ஏகாதிபத்தியத்தின் யுத்தமுற்கால சர்வ வல்லமைக்கு எதிரெடையாக இருந்தது.

இது நவீன காலனியாதிக்கத்தை எதிர்த்தும், காலனியாதிக்கத்தை முற்றாக ஒழித்தகற்றவும், இத்தகைய உயர் தியாகம் செய்து பெற்ற சமாதானத்தை மேலும் திடப் படுத்தவும், அணு ஆயுதங்களைத் தடை செய்யவும் நடைபெறும் வெற்றிகரமான போராட்டத்தில் உறைந்து நிற்கிறது. தொழிலாளி வர்க்கத்தாலும் அதன் மார்க்சிய-லெனினியக் கட்சியாலும் தலைமை தாங்கப்படுகிற உழைக்கும் மக்கள் திரளினர் மட்டுமின்றி நடுத்தர சிறுதர பூர்ஷுவாக்களின் கணிசமான பகுதியும்கூட ஏகபோக மூலதனத்தின் ஆட்சியை எதிர்த்து எழுச்சியுற்று வருகின்றனர். ஏகாதிபத்திய-எதிர்ப்புப் போராட்டத்தில் பங்கேற்போரின் பல்வகைப்பட்டதான வர்க்க மற்றும் இதர தூண்டுதல்கள் அதன் அளவையும் தன்மையையும் பாதிக்கிறது என்பதை ஒப்புக் கொள்ள வேண்டும். ஆனால் சர்வதேசியமயமாக்கல் நடைமுறையினை ஊக்குவிக்கும் இதன் பாத்திரம் மிகவும் மகத்தானது: இது ஏகாதிபத்தியத்தின் அடித்தளங்களைப் பலவீனப்படுத்துகிறது, சமாதான சக்திகள் ஜனநாயக சோஷலிச சக்திகளின் நிலைகளை வலுப்படுத்துகிறது.

சர்வதேசியப் பாட்டாளி வர்க்க ஒற்றுமையின் ஆக்கம் பூர்ஷுவா வர்க்கத்தை எதிர்த்த தொழிலாளர் போராட்டத்தின் வர்க்க ஒருமைப்பாட்டை அடிப்படையாக்கி நிற்கிறது. ஆனால் இதன் வெற்றிகரமான ஆக்கம் மக்களினங்களின் வாழ்வில் தேசிய நடப்புக்கள் எந்தளவு முழுமையாக கவனத்தில் எடுத்துக் கொள்ளப்படுகின்றன என்பதையே பெரிய அளவுக்குச் சார்ந்திருக்கிறது. இந்த நடப்புக்களின் பல்வகைத் தன்மையும் அவற்றுக்கான காரணங்களும் யுத்தப் பிற்கால கட்டத்தில் அவற்றின் வளர்ச்சியில் காணப்பட்ட மேலதிகமான முரண்பட்ட தன்மையும் இன்றைய பூர்ஷுவா சமுதாய அமைப்பில் தேசியப் பிரச்சினையின் உள்ளடக்கத்தில் பல முக்கியமான காரணிகளைப் புகுத்தியுள்ளன.

இவற்றுள் ஒன்று தேசிய அரசுகளை அமைத்தல் அல்லது அவற்றின் வடிவங்களை மேம்படுத்தலை நோக்கிய போக்

காகும். இது சம்பந்தப்பட்ட மக்கள் முன் உள்ள கடமைகளைச் சார்ந்து இருக்கிறது. யுத்தப் பிற்கால கட்டத்திலும்கூட இந்தப் போக்கு சோவியத் ஒன்றியத்தில் தேசிய, அரசு வளர்ச்சியில் கிட்டிய அனுபவத்தின் வலுவான செல்வாக்குக்கு இலக்காகியது. நேரடி உதவியும் முக்கியமானதாக இருந்தது. விடுதலை விழையும் மக்களினங்கள் அனைவரின் ஆதரவுடன் சோவியத் சேனை ஜெர்மன் பாசிசத்துக்கும் ஜப்பானிய ஏகாதிபத்தியத்துக்கும் படு தோல்வியை ஏற்படுத்தியதானது இந்த மக்களினங்களில் பலர் தமது தேசிய அரசுத்துவத்தை மீண்டும் வென்று பெற இயலுமாறு உதவின.

இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர், தேசிய அரசுகளை அமைப்பதற்கான மக்களினங்களின் சித்தத்துக்கு ஐக்கிய நாடுகளின் சாசனம் விதிமுறை செய்த தேசங்களின் சுய நிர்ணய உரிமை பின் துணையாக நின்றது. இந்தப் பேற்றுக்கு மக்களினங்கள் உலகின் முற்போக்கு சக்திகளுக்கு, எல்லாவற்றுக்கும் மேலாக சோவியத் ஒன்றியத்துக்குக் கட்டுப்பாடுடையவர்களாவர். ஆனால் இந்தச் சுயநிர்ணய உரிமை ஏகபோகங்களால் தொடர்ந்து மறுதலிக்கப்பட்டே வருகிறது, அவை மக்களின் கதியைத் தமது சொந்த வழியில் முடிவு செய்யப் பிடிவாதமாக இருக்கின்றன.

ஜெர்மன்,கொரியன் மற்றும் வியத்நாமிய மக்களினங்கள் பிளவுபட்டதற்கான பழியை சோவியத் ஒன்றியம் மற்றும் இதர சோஷலிஸ்டு நாடுகள் மீதும் பூர்ஷுவா பிரசாரம் சாட்டுகிறது. ஆனால் நிஜமான குற்றவாளிகள்,ஏகாதிபத்திய வாதிகளேயாவர். இரண்டாம் உலகப் போர் இன்னமும் நடந்து கொண்டு இருந்தபோதில் அவர்கள் சில மக்களினங்கள்—முதலாவதாயும் அனைத்து ஜெர்மானியர், பால்கன் மக்கள் மற்றும் வேறு பலர்—தேசிய அரசுத்துவத்தைப் பெறுமல் இருப்பதற்காகச் சில திட்டங்களைத் தீட்டினர்.''*

* 1943 டிசம்பர் 1-ந் தேதி டெஹ்ரான் மாநாட்டில் ருஸ்வெல்டும் சர்ச்சிலும் ஜெர்மனியைத் துண்டாடுவது சம்பந்தமான கருத்தை விளக்கினர்கள்.

இந்தப் பிரச்சினைகளை நிர்ப்பந்தமாகக் கொண்டு வர அமெரிக்காவும் பிரிட்டனும் செய்த முயற்சிகள் பலன் தரவில்லை. சோவியத் வற்புறுத்தலால் போட்ஸ்டாமில் நாஜிகள் களையெடுப்பு, ஜனநாயகமயமாக்கல், ராணுவக் குறைப்பு பற்றி எடுத்த முடிவுகள் ஜெர்மனியின் பிரதேச உரிமைக் கருத்துருவை அடிப்படையாக்கியவையாகும். ஆஸ்திரிய பால்கன் மக்களினங்களின் தேசிய அரசுத்துவமும் கூட உத்தரவாதம் செய்யப்பட்டது. மாற்ற முடியாத ஒரு முடிவைச் செய்தே பின்னல் ஏகாதிபத்தியவாதிகள் பிசோனியா பின் திரிசோனியாவை உருவாக்கி ஜெர்மனியைத் துண்டாடினர். இதன் அடிப்படையில்தான் மேற்கு ஜெர்மன் ஏகபோகங்கள் ஜெர்மன் சமஷ்டிக் குடியரசை நிறுவின.

இதன் விளைவாக ஏற்பட்ட சுற்றுச் சூழலில் சோவியத் வசம் இருந்த மண்டலத்தைச் சேர்ந்த உழைக்கும் மக்கள் தமது சொந்த தேசிய அரசான ஜெர்மன் ஜனநாயகக் குடியரசை நிறுவுவது தவிர வேறு வழியில்லை என்ற நிலையில் செயல்பட்டார்கள்.

ருஸ்வெல்ட் ஐந்து சுயேச்சையான அரசுகளை அமைத்து கீல் கால்வாய் மண்டலம், ஹாம்பர்க் ரூர், சார் வட்டாரங்களை ஐ. நா. கண்காணிப்பில் வைப்பது என்று யோசனை கூறினர். சர்ச்சில் ஜெர்மனியை இன்னும் பல சிறு சிறு அரசுகளாகப் பிரிக்க வேண்டும் என்றார். பிரஷ்யாவின் தெற்கு மாகாணங்களைத் தனியே பிரித்து டன்யூப் நதி தீரத்திலுள்ள மக்களின் அரசுத்துவத்தை மறுதலிக்கவும் பால்கன் கூட்டாட்சியை நிறுவவும் விரும்பினர். ஜே. வி. ஸ்டாலின் தலைமையிலான சோவியத் அரசாங்கம் இத்திட்டத்தைக் கடுமையாக ஆட்சேபித்தது, எதிர்த்தது என்பதற்கான ஆவணச் சான்றுகள் உள்ளன. சோவியத் அரசாங்கத்தின் தலைமை சர்ச்சில் கருத்துப்படியான பால்கன் கூட்டாட்சியையும் நிராகரித்தது, சோவியத் ஒன்றியத்தை மேற்கு ஐரோப்பாவில் இருந்து தனிப்படுத்தி வைப்பதற்கான ஒரு தடை மதில் என்ற முறையில் ஆங்கில அமெரிக்கப் படையிறக்கத்துக்குப் பின் இது உருவாக்கப்பட்டது.

அங்கு இப்போது ஒரு சோஷலிஸ்டு ஜெர்மன் தேசம் ஆக்கம் பெற்றுள்ளது.

ஜெர்மன் ஜனநாயகக் குடியரசு துவக்க முதலே அரசு-ஏகபோக மூலதனத்தின் தேசிய-விரோத ஆதிக்கத்துக்கும் மேற்கு ஜெர்மன் கோடீசுவரர்களின் விஸ்தரிப்பு வாத ஏகாதிபத்தியக் கொள்கைக்கும் ஒரு மாற்று என்ற வழியில் ஆக்கம் பெற்று வருகிறது. இதனுல்தான் தேசங்கள், தேசிய உறவுகள் பற்றிய லெனினது போதனை சோஷலிஸ்ட் ஒற்றுமைக் கட்சியின் ஆதார நெறி மற்றும் போர்த் தந்திரத்திற்கு விசேஷமாயும் பொருந்துகிறது."*

ஜெர்மன் சோஷலிஸ்டு ஒற்றுமைக் கட்சியின் மத்தியக் கமிட்டி முதற்செயலர் எரிக் ஹோனேக்கர் அறிக்கை பற்றிய தனது தீர்மானத்தில் 8 ஆவது கட்சிக் காங்கிரஸ் கூறுவதாவது: "ஒரு சோஷலிஸ்ட் ஜெர்மன் தேசம் ஆக்கம் பெற்று வருகிற சோஷலிஸ்டு ஜெர்மன் ஜனநாயகக் குடியரசுக்கும் பழைய பூர்ஷுவா தேசம் நிலவுகின்ற ஏகபோக ஜெர்மன் சமஷ்டிக் குடியரசுக்கும் இடையே விசேஷ ஜெர்மன் இடையுறவுகள் எனப்படுவது இருக்க முடியாது, என்றுமே இருக்காது.

"இந்தக் காங்கிரஸ் பிரகடனம்செய்வதாவது: ஜெர்மன் ஜனநாயகக் குடியரசுக்கும் ஜெ. ச. கு. இடையே இயல்பான ஒரு தொடர்பு அறுப்பு நடைமுறை தொடங்கியுள்ளது. இந்த இரு அரசுகளும் எதிரெதிரான சமுதாய அமைப்புக்களைக் கொண்டவை. ஒன்றிடமிருந்து இன்னென்று சுதந்திரமாக நிற்பவை. இந்தக் காரணத்தால் சர்வதேச சட்டத்தை அடிப்படையாக்கிய சமாதான சகவாழ்வு உறவுகள் மட்டுமே இவற்றின் இடையே நிலவ முடியும்."

தேசியப் பிரச்சினை எப்போதும் சமூக முறையிலேயே தீர்மானிக்கப்படும் எனும் மார்க்சிய-லெனினிய அடிக்கோள்

---

* கம்முனிஸ்டு, 1969, இதழ் 6, பக். 34 (ருஷ்ய மொழியில்) பார்க்க.

உண்மையை ஜெர்மன் மக்களின் விவகாரம் தெளிவாக ஊர்ஜிதம் செய்கிறது. எந்த வர்க்கம் தலைமை வர்க்கமாக இருக்கிறது, எந்த வர்க்கம் தேசத்தை நெறியாண்மை செய்கிறது என்பதையே இதன் சமூக உள்ளடக்கம் சார்ந்திருக்கிறது. ஜெர்மனியின் மேற்குப் பகுதியில் மேலே ஏகபோக மூலதனம் அதிகாரத்தை வைத்திருக்கும் அதே போதில் ஜெர்மன் ஜனநாயகக் குடியரசின் உழைக்கும் மக்கள் சோஷலிசத்தை நிர்மாணித்து வருகிறுர்கள்.

2. முதலாளித்துவ நாடுகளில் தேசியப் பிரச்சினை கடுமையுறல்

வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளில் தேசிய நடப்புக்கள் மேலும் கடுமையடைந்துள்ளன. இதில் ஆக முன் மாதிரியாக நிற்பது அமெரிக்காவில் ஆப்பிரிக்க-அமெரிக்க பிரச்சினை, கனடாவில் குபெக் பிரச்சினை, பெல்ஜியத்தில் வாலூன்—பிளெமிஷ் பிரச்சினை, பிரிட்டனில் ஸ்காட்லந்து வேல்ஸ் வட அயர்லாந்து பிரச்சினை இந்த நடப்புக்களின் பெருக்கம், நவீன ஏகாதிபத்தியத்தின் பிரத்தியேக அம்சங்களுடனும் பூர்ஷுவா சமுதாயத்தில் தேசங்கள் உருவாதல், வளர்ச்சியடைதல் தொடர்ந்து நடைபெறுவதோடு இணைந்து காணப் பெறுகிறது.

அமெரிக்காவில் ஆப்பிரிக்க-அமெரிக்கர் பிரச்சினை இரண்டரை நூற்றுண்டு காலத்திய கருப்பு நிறத்தவர் அடிமைத்தனத்தின், மற்றும் 100 ஆண்டுகளுக்கும் அதிகமான வருண இனப் பாகுபாட்டின் வரலாருகும். இந்தக் காலகட்டம் முழுவதிலும் கருப்புநிற மக்கள் அதிகரித்த வைராக்கியத்துடன் விடுதலைக்குப் போராடி வந்துள்ளனர். கருப்பு நிறத்தவர் பிரச்சினை ஒரு வர்க்க, வருண இன மற்றும் தேசியப் பிரச்சினையாகும். 1967 கோடையில் அமெரிக்க நகரங்களில் வெடித்துக்குமுறிய கருப்பு நிறத்தவர் கோபாவேசமும், 1968-ல் நிகழ்ந்த இன்னும்

ஒரு "வெங்கோடையும்" கருப்பு நிறத்தவர் இயக்கம் வருண இன தேசியத் தன்மை மட்டும் கொண்டதல்ல, முதலாவதாயும் முக்கியமாயும் சமுதாயத் தன்மையுடையது என்பதைத் தெளிவாகப் புலப்படுத்தின. ஆயினும் இதைப் புரிந்துகொள்ள வேண்டுமானால் இதனை இந்த யுகத்தின் ஆகச்சிக்கலான தேசியப் பிரச்சினைகளில் ஒன்றாக அணுகிப் பார்க்க வேண்டும்.

அமெரிக்காவில் வதியும் இரண்டரைக்கோடி ஆப்பிரிக்க-அமெரிக்கர் மக்கள் தொகையில் 12 சதவிகிதமாவர். இரண்டாம் உலகப் போருக்கு முன்னரும், யுத்தப் பிற்காலத்தின் துவக்கக் கட்டத்திலும் இவர்களில் பெரும்பாலோர் கருப்பர் வட்டாரம் எனப்படும் தெற்கு ராஜ்யங்களான அலபாமா, மிசிசிப்பி, ஜார்ஜியா, லூயிசியானா மற்றும் தெற்கு கரோலினாவில் வசித்து வந்தார்கள். இங்கு ஓர் ஆப்பிரிக்க—அமெரிக்கர் தேசம் தோன்றுவதற்கான வாய்ப்புகள் இருந்தன. ஒரு கட்டத்தில் கருப்பர் வட்டாரத்தில் நீக்ரோ தேசத்துக்கு சுயநிர்ணய உரிமை தரப்படவேண்டும் எனும் கருத்தை கம்யூனிஸ்டுக் கட்சி முன்வைத்தது. ஆனால் மிருகத்தனமான சமூக தேசிய ஒடுக்குமுறை தேசியத்துவத்துக்கான பொருளாதார அடிப் படை உருவாக இயலாதபடி முடக்கிவிட்டது. தேசியக் கலாசாரமும் தேசிய சுய விழிப்பும் மேலோங்கி இருந்தன. ஆனால் சமூக தேசிய ஒடுக்குமுறை உக்ரமான இனவெறி மற்றும் குறுதேசிய வெறியுடன் சேர்ந்து கருப்பு நிற மக்கள் ஒரு தேசமாக உருவாவதைத் தடைசெய்துவிட்டன.

மெய்யாலும் சுதந்திரமான ஜனநாயகமுறையில் அமெரிக்க சமுதாயம் வளர்ச்சியுற முடிந்திருப்பின், கருப்பு நிற மக்களுக்குத் தனி முழு அமைப்பு என்பது தேவைப் பட்டிருக்காது. அவர்கள் ஒற்றை அமெரிக்க தேசத்தில் படிப்படியாகக் கலந்து ஒன்றுபட்டிருப்பார்கள், ஆனால் பிற்போக்கு சக்திகள் கருப்பு நிற மக்களுக்கும் இதர

அமெரிக்கர்களுக்கும் இடையே கடக்கமுடியாத ஒரு தடை வேலியைப் போட்டிருக்கின்றன.

யுத்தத்துக்குப் பிந்திய முதல் 15 ஆண்டுகள் கருப்பு நிற மக்களுக்கு புதிய சமூக நிலைமையை உருவாக்கின. முதலாவதாக, வர்க்கக் கட்டமைப்பில் வயதுவந்தோரில் 94 சதவிகிதம் பேர் நகர்ப்புறத் தொழிலாளர்களாயினர். இரண்டாவதாக, அமெரிக்காவின் முதலாளித்துவ வளர்ச்சியில் இருந்து கிளைத்த பல காரணங்களின் விளைவாக தென் புலத்தில் இருந்து வடபுலத்தில் உள்ள நகர்ப்புறமையங்களுக்கு கருப்பு நிறத்தவர் குடிபெயர்ந்து செல்லத் தொடங்கினர், இது இன்றளவும் தொடர்ந்து நிகழ்கிறது. கருப்பு நிறத்தவர் வட்டாரத்தில் கருப்பு நிற மக்கள் தொகையில் பாதிமட்டுமே மீதமாக நின்றது. இதன் காரணமாக அமெரிக்கக் கம்யூனிஸ்டு கட்சியின் 1959-ல் நடந்த தேசிய மாநாடு கருப்பு நிற மக்களுக்கு சுயநிர்ணய உரிமை எனும் கோஷத்தை நீக்கிவிட்டது, கருப்பு நிறத்தவர் ஒரு தேசமாக அமைவதில் தவறிவிட்டார்கள், இன்றுள்ள முதலாளித்துவ நிலைமைகளில் இதற்கான எதிர்கால வாய்ப்புக்களும் அறவே கிடையாது என்று அம் மாநாடு செப்பியது— அமெரிக்காவில் இருக்கும் கருப்பு நிற மக்கள் ஒரு தேசமாக அமையாவிடினும், கருப்பு நிறத்தவர் பிரச்சினை ஒரு தேசியப் பிரச்சினையாக நீடிக்கிறது என்று இந்த மாநாட்டின் தீர்மானம் வரையறுத்தது. இது நிச்சயமாயும் அத்தகையதே. இது எந்த லட்சணத்திலான தேசியப் பிரச்சினை, இதன் குறிப்பிடத்தக்க அம்சங்கள் எவை, இதற்குத் தீர்வுகாண்பதற்கான ஆதார தந்திரத்தின் கருத்துரு என்ன என்பதே நிர்ணயிக்கப்பட வேண்டி இருந்தது.

கருப்பு நிறத்தவர் இயக்கத்தில் வெவ்வேறான சில சமயம் நேர் எதிரிடையான போக்குகள் உள்ளன. ஆயினும் பிரதானமாக இருப்பது சர்வ தேசியவாதப் போக்கு எனலாம்; மிகப் பெரும்பாலான தீவிர ஊழியர் கருப்பு நிற

மக்களுக்கு முழுமையான சுதந்திரமும் உண்மையான சமத்துவ உரிமையுமே கோருகிறுர்கள்.

இன்னெரு முக்கியமான போக்கு "கருப்பு நிறத்தவர் தேசியம்" என்பது. இது பிரிவினைவாதச் சாயல் கொண்டது. இதன் ஆதரவாளர்கள் குறிப்பாயும் கருப்பு நிற பூர்ஷுவாக்கள், அவர்கள் சுதந்திரமான அபிவிருத்தியையும், வெள்ளை நிறத்தவர்களிடமிருந்து கருப்பு நிறத்தவரை தனிப் பிரித்து வைப்பதையும் விழைகிறுர்கள். சிலர் சுதந்திர அபிவிருத்தி என்பதை கருப்பு நிறத்தவர் சமூகத்தின் சுயநிர்ணய உரிமை என்பதாகக் கருதுகிறுர்கள், வேறு சிலர் கருப்பு நிறத்தவர் வட்டாரத்தில் "புதிய ஆப்பிரிக்கர் குடியரசு" எனும் ஒரு தரப்பான அரசாங்கம் உண்மையில் அமைவதை வழைகிறுர்கள்.

பிரிவினைவாத அதி தீவிரம், நிதானமான பகுப்பாய்வின் விளைவல்ல, மாருக விரகதி நிலையின் விளைவேயாம். இத்தகையோர் சிறுபான்மையாகவே இருக்கின்றனர். ஆயினும் இந்தப் பிரிவினைவாதிகள் 1966 ஜூனில் முன்வைத்த "கருப்பர் ஆட்சி அதிகாரம்" எனும் கோஷத்துக்கு எதிர் பாராதவிதமாக மக்கள் ஆதரவு இருந்தது. மிகப் பெரும்பாலோர் இதை கருப்புநிறத்தவர் தேசியத் தனிமை என்று கருதவில்லை, மாருக, கருப்பு நிற மக்களின் முன்னேற்றத்துக்கு இது சாதக நிலைமைகளை உத்தரவாதம் செய்வது என்றே நம்பினுர்கள்.

அமெரிக்க கம்யூனிஸ்டுக் கட்சி பொதுச் செயலர் கஸ்ஹால் அண்மையில் இது சம்பந்தமான பல முக்கியமான தத்துவார்த்த முடிவுகளுக்கு வந்திருக்கிறுர். அவரது பார்வையில் ஆப்பிரிக்க-அமெரிக்கர்களின் வளர்ச்சி, கருப்பு நிறத்தவரின் சொந்தப் பொருளாதாரக் கட்டுமானம் எனும் பிரச்சினையையோ, தனிப்பட்ட பிரதேசத்தில் ஓர் அரசியல் முழு அமைப்பாக, ஒரு தேசமாகச் செயல் படுவதையோ எவ்விதமான நடைமுறை அர்த்தத்திலும் முன் வைக்கவில்லை எனும் நிலைமையே தென்படுகிறது. அதே

சமயம் அதிகரித்துவரும் தேசிய சுயவிழிப்பு காணப்படுகிறது. இது தேசியக் கலாசாரத்தை உறுதியாக வலுப்படுத்துவதிலும், ஆப்பிரிக்க மக்களுடன் கலாசார முறையில் முற்றொருமையை நிலைநாட்டுவதிலும், தமது சாதனைகள் பற்றிய புதிய பெருமிதத்திலும் வெளியாகிறது. தேசங்களின் உருவாக்கத்தின் பின்னணியிலான காரணிகளில், நடைமுறை அவசியம் எனும் காரணியும் உட்படும். இது சுதந்திரமான தேசிய நிலைநிற்பு, எதார்த்தத்தில் சாத்தியமா என்பதை நிர்ணயிக்கிறது என்று கஸ்ஹாஸ் கூறினார்—தேசியப் பெருமிதத்தின் ஏற்றமும் தேசிய முற்றொருமை உணர்வும் எவ்வளவுதான் முக்கியமானதாக இருந்த போதிலும், ஒரு மக்களினம் தேசிய அரசுத்துவத்துக்கு முன்னேறிச் செல்கிறதா இல்லையா என்பதைத் தாம் மட்டுமே தீர்மானிப்பதில்லை.

கருப்பு நிறத்தவர் மலர்ச்சியுற்று வந்த வரலாற்று நிலைமைகள், மிகப் பெரும்பாலான கருப்புநிற மக்கள் சுய-நிர்ணய உரிமை எனும் கருத்தை, அதன் சம்பிரதாயமான பொருளில், அதாவது தேசிய அரசுத்துவத்தையும் அதன் சொந்த அரசாங்கத்தையும் உருவாக்க விரும்பும் தேசம் எனும் பொருளில் ஏற்றுக்கொள்ளவில்லை எனும் மறுக்க முடியாத மெய்நடப்பை அறுதி செய்தன. அதே சமயம் அமெரிக்கக் கம்யூனிஸ்டுக் கட்சியின் 19 ஆம் மாநாடு ''கருப்புநிற மக்கள் ஒரு தேசமாக அமையவில்லை'' என்று சுட்டிய போதிலும் அதன் தீர்மானம்: ''நாம் பாட்டாளி வர்க்க சர்வதேசியம் எனும் கோட்பாட்டைப் பின்பற்றுவதால், கருப்பு நிற மக்கள் தமது சுயாட்சியை நிறுவிக் கொள்ளும் உரிமை, சுய நிர்ணய உரிமையைச் செயல்படுத்தல் ஆகியவை உள்ளிட்ட தமது அபிலாஷைகளை நிறைவேற்றிக் கொள்வதற்குத் தேசியப் போராட்டத்தில் இனிமேலால் ஏற்படக்கூடிய மாற்றங்களின்மீது நாம் எவ்விதமான வரம்புகளையும் விதிக்க மாட்டோம். மேலும் இந்த உரிமைகள் சமூக பொருளாதார அரசியல் கலாசார மற்றும் சட்டமுறை தடைக் கட்டுப்பாடுகள் எதுவும் இன்றி

சுதந்திரமாகப் பிரகடனப்படுத்துவதற்கான நிலைமைகளை ஏற்படுத்தப் பாடுபடுவோம்.''* வெள்ளை நிறத்தவரும் கருப்பு நிறத்தவரும், மெக்சிகளும், போர்டோரிகன் வாசிகளும் இந்தியரும் இதர இனச் சிறுபான்மையரும் கருப்பு நிற மக்களுடன் சேர்ந்து சுமார் 4 கோடிப்பேர் இருப்பார்கள். இவர்கள் ஓர் ஏகபோக எதிர்ப்பு முன்னணியில் ஒன்றுதிரள வேண்டும். இதுவே இவர்களிடமிருந்து முதலாளி வர்க்கத்தால் களவாடிப் பறிக்கப்பட்டதான ஜனநாயக சுதந்திரங்களை மீட்டுப் பெறத் துணை செய்யும். இது கருப்பு நிறத்தவர் தாம் பெரும்பான்மையாக இருக்கும் இடங்களில் தமது வழியில் இப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பது சாத்தியமாகும். சிறுபான்மையாக இருக்கும் இடங்களில் சமத்துவ உரிமை பெற வழி வகுக்கும்.

ஆப்பிரிக்க-அமெரிக்கர் தமது போராட்டத்தில் வெற்றி பெறுவதற்கான ஒரே அடிப்படை தொழிலாளி வர்க்க இயக்கமே. இதுவே கருப்பு நிறத்தவர் பிரச்சினை சம்பந்தமான அமெரிக்கக் கம்யூனிஸ்டுக் கட்சியின் மையமான ஆராய்ச்சியுரையாகும். இருப்பினும் ஆப்பிரிக்க-அமெரிக்கர் இயக்கத்தில் கலந்து கொள்வோர் தமது நோக்கங்களையும் கடமைகளையும் புரிந்து கொள்வதற்கு பெரும்பணி ஆற்ற வேண்டியுள்ளது. இது இனவெறியும் குறுதேசிய வெறியும் ஆழ வேரோடிக் கிடக்கும் வெள்ளை நிறத் தொழிலாளர் விஷயத்தில் இது இருமடங்கு பொருந்தும். கருப்பு நிறத்தவர் இயக்கம் பலம் பொருந்தியதாய் மேலோங்கி வந்த இந்தப் பத்து ஆண்டு காலம் முழுவதிலும், இன ஒதுக்கல் மற்றும் இதர அக்கிரமங்களை கண்டித்து-வெள்ளை நிறத்தவர் தரும் ஆதரவு குறைந்துகொண்டே வந்துள்ளது என்பதை அமெரிக்கக் கம்யூனிஸ்டுகள் கலக்கத்துடன் குறிப்பிடுகிறார்கள்.

ஆப்பிரிக்க-அமெரிக்கர் விடுதலைப் போராட்டம் பற்றிய ஒரு நூலில் எழுத்தாளர் கிளாட் லைட்ஃபுட் ''கம்யூனிஸ்டுக்

* டெய்லி ஒர்ல்ட், 1969, மே 15, பக். 9.

கட்சி இன்றேல் கருப்பு நிறத்தவர் விடுதலை சாத்தியமல்ல'' என்ற தலைப்பில் ஓர் அத்தியாயம் சேர்த்திருக்கிறார். அதில் கம்யூனிஸ்டுக் கட்சி ஒரு சக்தி என்றும், ''முதலாளித் துவ சமூக அமைப்பின் ஒட்டு மொத்தமான தன்மையையும் இந்த சமுதாயத்தை இயக்கும் வர்க்கங்களின் பாத்திரத்தைப் புரிந்து கொள்வதுமான உள்ளார்ந்த விதிகளையும் அது அறிந்து கொண்டிருக்கிறது'' எனவும், எனவே ''முன்னேறு வதற்கான பாதையை அது சுட்டிக்காட்டும்''* எனவும் எழுதுகிறார்.

அமெரிக்க கம்யூனிஸ்டுக் கட்சியின் புதிய வேலைத் திட்டம் எந்த நிறத்தவராக இருப்பினும் சரி, உழைக்கும் மக்கள் அனைவரின் உண்மையான நலன்கள் மிகவும் நெருங்கிய ஒற்றுமையையும் சகோதரத்துவத்தையும் சித்திப் பெறச் செய்வதிலேயே உறைந்து கிடக்கின்றன. இதுவே தொழிலாளி வர்க்கத்தின் வலிமைக்கும், பொருளாதார, தேசிய இன வகை ஒடுக்குமுறையில் இருந்து விடுதலை பெற்றுத் தருவதற்கான அதன் உறுதிப்பாட்டுக்கும் அடித்தளமாக இருக்கிறது. ''வெள்ளை நிறத் தொழிலாளர்களைப் பொருத்த வரையில், வருண இனப் பகைமை, கருப்பு கபில நிறச் சகோதரர்களை இகழ்ச்சி செய்வது, அவர்களுக்கு எதிரான வேறுபாட்டுத் தீம்புகளில் சேர்ந்து கொள்வது, இனவெறி மற்றும் இனப்பாகுபாட்டுக்கு எதிரான போராட்டத்தில் சேராமல் இருப்பது, இவை அவர்களது படுமோசமான விரோதிகளான எல்லாத் தொழிலாளர்களையும் சுரண்டுகிற ஏகபோகங்களின் நலனுக்கே உதவுவதில் போய் முடியும். மக்கள் திரளினர் மத்தியில் பூசலையும் பிளவுகளையும் தோற்றுவிப்பது மூலம் வருண இன வெறியானது அவர்களது போராட்டத்தைப் பலவீனப் படுத்துகிறது. அதன் பொது நெருக்கடி கடுமையுற்று வரும் இந்தக் கட்டத்தில் இது முதலாளித்துவத்தின் ஆயுளை நீடிக்க உதவுகிறது.

---

* கிளாட் எம். லைட்ஃபுட், சேரி கலகத்தில் இருந்து கருப்பு நிறத்தோர் விடுதலை வரை, நியூ யார்க், 1968, பக். 292.

"வருண இன வெறியை வேருடன் களைவதற்குப் போராட வேண்டுமாயின், நமது நாட்டில் கருப்புநிற, கபிலநிற மக்கள் இடையே குறுக்கிடும் எல்லாத் தடை வேலிகளையும் அழித்து ஒழிக்கவும், அவர்கள் முழுமையான பொருளாதார அரசியல் சமூக சமத்துவ உரிமை பெற்று தேசத்தின் வாழ்விலும் விவகாரங்களிலும் கட்டற்ற நிலையில் பங்கேற்கவும் வேண்டித் தொடர்ந்து மிகவும் கடுமையாகப் போராட வேண்டுவது அவசியம்"* என்று இந்த வேலைத் திட்டம் வலியுறுத்துகிறது.

கருப்பு நிறத்தவர்களான அமெரிக்கர்கள் வருண இனம் என்ற முறையிலும்,தொழிலாளி என்பதாலும் மக்கள் என்ற வகையிலும் மூன்று விதங்களில் ஒடுக்கப்படுகிறார்கள். இதனால்தான் கருப்புநிறத் தொழிலாளர்கள் ஏகபோக மூலதனத்தை எதிர்த்தப் போராட்டத்தில் வெள்ளைநிறத் தொழிலாளருடன் சேர்ந்து நிற்கவேண்டும்.''வெள்ளைநிறத்த வரான நேசசக்திகள் இல்லாமல் கருப்பு நிறத்தவர் சுதந்திரத்தை வென்று பெற முடியும் எனும் கருத்துப் படிவத்தை நாம் நிராகரிக்கிறோம்'' என்று இந்த வேலைத் திட்டம் கூறுகிறது. தொழில்துறையில் முதலாளித்துவச் சுரண்டலை எதிர்த்தப் போராட்டத்தில் கருப்புநிறத் தொழிலாளர் வெள்ளைநிறத் தொழிலாளர்களுடன் ஒரு பொதுவான நலவுரிமையினைக் காண்கின்றனர். ஏகபோக ஆதிக்கத்தை எதிர்த்தப போராட்டத்தில் தொழிலாளி வர்க்க ஒற்றுமை இன்றியமையாததாகும்.'' வருண இன வெறி நீடிக்க இடந்தரப்பட்டால் இத்தகைய ஒற்றுமையை எண்ணிப் பார்க்கவும் முடியாது ''ஆனால் வருண இன வெறியை எதிர்த்த போராட்டம் பொருளாதாரப் பிரச்சினைகளையும் கடந்து செல்கிறது. இது மானுடத் தன்மானத்துக்கான, அனைத்து உழைக்கும் மக்களின் சகோதரத்துவத்தின் மனிதநேய லட்சியத்துக்கான போராட்டமும் ஆகும். அவர்கள் மீதே உறும் வருண இன வெறியின் இழிவான

* அமெரிக்க கம்யூனிஸ்டுக் கட்சியின் புதிய வேலைத் திட்டம், நி.யா., 1970, பக். 61.

ஊழல் விளைவுகளிலிருந்து வெள்ளைநிற அமெரிக்கரை விடு விக்கும் போராட்டமாகும் இது. கருப்புநிற, வெள்ளைநிறத் தொழிலாளர்களின் அடிப்படையான பொது நலன்களை ஒப்புக் கொள்வதில் இருந்தே வர்க்க போதம் துவங்கு கிறது.''*

ஏகபோக மூலதனத்தை எதிர்த்த போராட்டத்தில், எந்த நிறத்தவராயினும் சரி எல்லா உழைக்கும் மக்களும் ஒன்றுசேர வேண்டும் எனும் கருத்தே அமெரிக்க கம்யூனிஸ்டு கட்சியின் இன்றைய கொள்கையில் உள்ளீடாக இருக்கிறது. இந்தக் கோட்பாட்டினை கம்யூனிஸ்டுகள் ஆதரித்து நிற்ப தானது பல்வேறு பூர்ஷ்வா குட்டி பூர்ஷ்வா பிரிவினைவாத தேசியவாதக் கருத்துருக்கள் மீதான அவர்களது விடாப் பிடியான கண்டன விமர்சனத்துடன் நெருங்கிய தொடர்பு டையது. 1974 டிசம்பரில் நடைபெற்ற அமெரிக்க கம்யூனிஸ்டுக்கட்சியின் மத்தியக்கமிட்டி பிளினம் கூட்டத்தில் கட்சித்தலைவர் ஹென்றி வின்ஸ்டன் சமர்ப்பித்த அறிக்கையை ஒட்டி நடந்த விவாதத்தில் இது ஒரு விசேஷ விஷயமாக இருந்தது. இந்த அறிக்கை உள்நாட்டு ''காலனி தத்துவமும்'' அமெரிக்க கருப்புநிற மக்கள் தொகையினர் தொடர்பாக ''சுயநிர்ணய உரிமை கோஷமும் தத்துவார்த்த முறையிலும் அரசியல் ரீதியிலும் தவறுனவை என்று அம்பலப்படுத்தியிருந்தது. கருப்பு நிறத்தவர் வசம் பொது வான பிரதேசமும் இல்லை, பொதுவான பொருளாதாரமும் கிடையாது என்று இந்த அறிக்கை சுட்டியது. ஆப்பிரிக்க- அமெரிக்கர்களை விடுவிப்பதற்கான ஆதாரதந்திரம்பொருளா தாரம் உள்ளிட்ட எல்லா வாழ்க்கைத் துறைகளிலும் கருப்பு நிறத்தவர் முழுமையாக சம பங்கேற்பதை உத்தர வாதம் செய்ய வேண்டும். அமெரிக்காவில் இருந்து அவர்களை ஒதுக்கி அன்னியப்படுத்தக் கூடாது என்று காட்டினுர். ''உள்நாட்டுக் காலனி'' தத்துவம் இந்த ஆதார நெறியில் இருந்து விலகிச் செல்கிறது. உண்மையில் இது கருப்புநிறத்

* அமெரிக்க கம்யூனிஸ்டுக் கட்சியின் புதிய வேலைத் திட்டம், நி.யா., 1970, பக். 732-73.

தொழிலாளர் உற்பத்தி முனையில் அவர்களைச் சுரண்டும் ஏகபோகங்களை எதிர்த்த போராட்டத்தைக் கைவிடுமாறு கேட்கிறது. மாருக கருப்புநிறத்தவர் முதலாளித்துவம் அல்லது சேரிகளில் 'சுயநிர்ணய உரிமை' எனும் கற்பனைக் கருத்துக்களை ஆதரிப்போர் பின்னுல் ஓடும்படி விரட்டு கிறது."*

1975 ஜூலையில் நடந்த அமெரிக்க கம்யூனிஸ்டுக் கட்சியின் 21 ஆம் மாநாடு, கருப்பு நிறத்தவர் இதர தேசிய சிறுபான்மையினரின் சமத்துவ உரிமைக்கான போராட்டத்தில் தனிக்கவனம் செலுத்தியது. ஏகபோக-எதிர்ப்பு இயக்கத்திலான அவற்றின் பாத்திரத்தை உயர்த்திட முனைந்தது. இனவெறியின் சாரமும் அதன் பிற்போக்கு பாத்திரமும் அம்பலப்படுத்தப்பட்டதானது, குறிப்பாயும் முக்கியமானது. கஸ்ஹால் இனவெறியை முதலாளித் துவத்தின் பிரித்தாளும் கொள்கைகளின் போதை மருந்து என்பதாகச் சித்திரித்தார். தமது அறிக்கையில் கஸ்ஹால் கூறியதாவது: அமெரிக்காவில் ஏகபோக மூலதனத்தை எதிர்த்த எந்த வெற்றியைப் பெறுவதற்கும் தொழிலாளி வர்க்கம் இனவெறி ஒடுக்குமுறைக்கு இலக்கான ஆப்பிரிக்க-அமெரிக்கர், சிகானியர், போர்டோரீகர், ஆசியர், சுதேசி அமெரிக்க இந்திய மக்களின் நேச இணைப்பை அடிப்படையாகக் கொண்ட ஒரு விரிவான கூட்டணி அவசியம் என்பதை விளக்கிக்கூற அமெரிக்க கம்யூனிஸ்டுகள் தொடர்ந்து முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும். இனவெறி மனப் போக்குகளும் அவர்கள் விஷயத்தில் வெள்ளைநிறத்தவர் தோற்றுவிக்கும் அதிகரித்து வரும் புறக்கணிப்புமே, வர்க்க ஒற்றுமைக்கும் ஒன்றிணைவதற்குமான பாதையில் பிரதான தடைக்கற்களாக இருக்கின்றன.

இந்த மாநாடு தொழிலாளர் இயக்கத்துக்கும் ஒடுக்கப் பட்ட தேசிய வருண இனச் சிறுபான்மையினருக்கும்

---

* ஹென்றி வின்ஸ்டன், "உள்நாட்டு காலனி தவறு", பொலிடிகல் அபேர்ஸ், ஜனவரி 1975, பக். 20.

இடையே ஒற்றுமை ஏற்படுத்தி குடியேறிய தொழிலாளர் உரிமைகளைப் பாதுகாக்கப்பாடுபடுவது என்று தீர்மானித்தது.

கிரேட் பிரிட்டனிலும் கூட தேசியப் பிரச்சினை கடுமையடைந்துள்ளது. பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் சாம்ராஜ்யம் தகர்ந்து சிதைந்ததை ஒட்டி ஸ்காட்லந்து, வேல்ஸ், வடக்கு அயர்லந்து அல்ஸ்டர் இவற்றுடனான இங்கிலாந்தின் உறவுகள் படுமோசமாகின.

கெல்டிக் மக்களினங்களின் அண்டைப் பிரதேசங்களை பிரிட்டன் படையெடுத்துப் பிடித்துப் பல நூற்றாண்டுகள் கடந்துவிட்டன. இவ்வாறு கைப்பற்றிச் சேர்த்துக் கொள்ளப்பட்ட மக்களினங்களின் தேசிய இயல்புகளை வேரோடு பறிக்கவும், அவர்களை ஆங்கில தேசத்துடன் வலுவந்தமாக இணைத்துக் கொள்ளவும் சகல முயற்சிகளும் செய்யப்பட்டன. ஆனால் இவை பயனளிக்கவில்லை என்பதை நாம் அறிவோம்.

ஆங்கில பூர்ஷுவாக்களின் சமூக தேசிய ஒடுக்குமுறைக்கு எதிர்வினை என்ற முறையில் ஸ்காட்லந்து,வேல்ஸ், அயர்லந்து மக்களினங்கள் தமது தேசியத் தனிப்பண்புகளைப் பேணி வைத்திருப்பதில் அசாதாரணமான பிடிவாதம் தோற்றுவித்தனர், அவர்களது விடுதலைப் போராட்டம் என்றுமே சோர்வுறவில்லை. பிரிட்டிஷ் ஆட்சியின் உச்சி கட்டத்தில் அயர்லந்து, ஸ்காட்லந்து, வேல்ஸ் மக்களினங்கள் மத்தியில் இருந்த சொத்துடைமை அடுக்கினர் காலனிகளைக் கொள்ளையடித்ததில் பங்குபெற அனுமதிக்கப்பட்டிருந்த போதிலும், எதிர்ப்பில் எவ்வித மாறுதலும் ஏற்படவில்லை. தேசியப் பிரச்சினை எப்போதும் போலவே கடுமையானதாகவே இருந்தது, இதனால் 1891-ல் பிரடெரிக் எங்கெல்ஸ் "இரண்டு தீவுகளில் நான்கு மக்கள் இனங்கள் வதியும் பிரிட்டனில் ஒரு கூட்டாட்சிக் குடியரசு முன்னேற்றப்படியாக இருக்கும்"* என்று கூறினார்.

---

* கா. மார்க்ஸ், பி. எங்கெல்ஸ், தேர்வு நூல்கள் (3 தொகுதிகளில்), தொகுதி 3, பக். 435—36.

முதலாளித்தின் பொது நெருக்கடியின் முதல் கட்டமே பிரிட்டிஷ் தீவுகளில் தேசியப் பிரச்சினையில் புதிய கடுமைநிலை உருவாகக் கண்டது. 1916-ல் தேசிய சுதந்திரத்துக்கான அயர்லந்தின் கலகக் கிளர்ச்சி நிகழ்ந்தது. இது பிரிட்டிஷ் பேரரசை ஆட்டிக் குலுக்கியது, நான்கு ஆண்டுகள் கொரிலாப்போர் நீடித்தது. இறுதியாக பிரிட்டன் அயர்லந்தில் பேரளவான பகுதிக்கு டொமினியன் அந்தஸ்து வழங்கும் கட்டாயம் ஏற்பட்டது. சோதனையில் தேர்ந்த காலனியாதிக்க முறையான "பிரித்தாளும்" திட்டப்படி வடக்கு அயர்லந்து, தொழில் வள அல்ஸ்டர் பகுதி தற்காலிகமாக நாட்டின் இதர பகுதிகளில் இருந்து பிரித்துவைக்கப்பட்டு, தேசிய பொருளாதார அரசியல் உரிமை இழந்துகிடந்தது. வடக்கு அயர்லந்துக்கு வெகுவாக குறுக்கப்பட்ட சுயாட்சியே வழங்கப்பட்டிருந்த அதே போதில் தெற்கு அயர்லந்து இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் சம்பிரதாயமாக சுதந்திர அரசாகியது. இருப்பினும் அயர்லந்து மக்கள் சார்பு நிலையிலேயே நீடித்தனர். தேசியப் புத்தாக்கத்துக்கு உயிர்நாடி என்ற முறையில் அவர்கள் தமது நாட்டின் மறு ஒற்றுமைக்காகப் போராடி வருகிறார்கள்.

ஸ்காட்லந்துக்கும் வேல்சுக்கும் சுயாட்சி கிட்டவில்லை, வட்டார சுயாட்சிகூடக் கிடைக்கவில்லை.

வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளிலான தேசிய உறவுகளை வருணித்த லெனின் அக்டோபர் புரட்சிக்கு சற்று முன்னதாக எழுதும்போது "நாட்டின் பல்வேறு சிறிய பகுதிகளில் தேசியப் பிரச்சினைக்கு முடிவு கட்டிவிட்டது போலத் தோன்றும் பூகோள நிலைமைகள் பொது மொழி மற்றும் பல நூற்றுண்டுக் கால வரலாறு கொண்ட இங்கிலாந்தின் விஷயத்தில்—அத்தகைய நாட்டின் விஷயத்தில் கூட—தேசியப் பிரச்சினை இன்னமும் கடந்த கால விவகாரமாக ஆகிவிடவில்லை"* என்றார். அண்மைக்

* வி. இ. லெனின், "நூல் திரட்டு", தொகுதி 25, பக். 447.

கால சம்பவங்கள் இதை ஊர்ஜிதம் செய்கின்றன. பிரிட்டனில் தேசிய உறவுகள் மேலும் கடுமையடைந்து விட்டன. பெரிதும் சிறிதுமான தேசிய மனக்கசப்பு ஸ்காட்லந்து, வேல்ஸ் மற்றும் வடக்கு அயர்லந்தில் புதிய தன்மையுடைய தேசிய உணர்வை வலியுறுத்தியுள்ளன.

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்கு நெருக்கடி ஏற்பட்டுள்ளதால் இது முதலில் நிகழ்ந்தது. காமன்வெல்த் சிதறிப் பிரிந்து வருகிறது. நாடு பொருளாதார இடர்ப்பாடுகளாலும் முரண்பாடுகளாலும் தொல்லையுறுகிறது. ஒரு காலத்தில் கற்பனை செய்ய முடியாத அளவு அமோகமாய் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் உயிர்க்குருதியாக இருந்த லாபங்களின் பெருக்கம் வீழ்ச்சியடைந்து வருகிறது. இரண்டாவதாக, உலகு தழுவிய அளவிலும் பிரிட்டனிலுங்கூட நிகழும் ஏகாதிபத்திய எதிர்ப்பு போராட்டத்தின் புதிய கட்டம் ஸ்காட்லந்து, வேல்ஸ், வடக்கு அயர்லந்து மக்களினங்களின் சாமான்ய ஜனநாயக உரிமைகளின் அவசியத்தை வலியுறுத்தியுள்ளது. மூன்றாவதாக, யுத்தப் பிற்கால ஆண்டுகளில் பிரிட்டனின் ஏகபோக மூலதனத்தின் தனி அம்சங்கள் தேசியப் பரப்புகளில் கடுமையான பொருளாதாரச் சீரழிவையும், அதிகரித்த வேலையில்லாத் திண்டாட்டத்தையும் உழைக்கும் மக்கள் பொதுவாக வறுமையுறுவதையும் உண்டாக்கியுள்ளது. நாலாவதாக, அயர்லந்து, ஸ்காட்லந்து மற்றும் வேல்ஸ் மக்களினங்களின் தேசியக் கலாசாரத்தின் அடித்தளங்களும் அவர்களது வாழ்க்கைப் பாணி மரபுகள் ஆகியவும் வேகமாக அரித்தழிக்கப்பட்டு வருகின்றன. தேசியச் செல்வ இழப்பும், முழுமையான தன்மயமாக்கமும் மெய்யான அபாயமாக முகிழ்த்துவிட்டன. ஐந்தாவதாக, சாதாரணமான குடியுரிமை தேசிய சுதந்திரத்துக்கான கோரிக்கைகளுக்கு மறுதலிப்பாக முதலில் தொழிற் கட்சி பின்னர் கன்சர்வேடிவ் அரசாங்கம் ஏகபோக மூலதனத்தைத் திருப்திப் படுத்த வேண்டித் தண்டனை நடவடிக்கைகளை பிரயோகித்துள்ளது. வெகுஜனக் கண்டனங்கள் மகத்தான விடுதலைப் போராட்டமாக பொங்கி வளர்ந்து பல

இடங்களில் தெருமறிப்புகள் இரத்தம் சிந்தலில் கொண்டு போய் விட்டுள்ளன.

விடுதலைப் போராட்டத்தின் இந்தப் புதிய எழுச்சியில் ஸ்காட்லாந்து, வேல்ஸ், வடக்கு அயர்லந்தின் பூர்ஷுவா வர்க்கத்தின் வெவ்வேறு பகுதிகளின் நோக்கங்கள் மிகவும் முரண்பாடுடையனவாக இருந்தன. இங்கிலாந்தின் ஆளும் வர்க்கங்களின் நலன்களிலிருந்து இன்னும் வேறுபட்ட நலன் களையுடையவர்கள் தேசிய வாதத்தைத் தூண்டி விட்டுப் பிரிவினையை ஆதரிக்கிறார்கள். அதிகார பூர்வமாக தேசிய நாடாளுமன்றங்களைக் கோருகிற ஸ்காட்லந்து, வேல்ஸ் தேசிய வாதிகளும் இங்கிலாந்திடம் இருந்து முழுமையாகப் பிரிந்து செல்வதாக அச்சுறுத்துகிறார்கள். அவர்கள் மிகவும் விடாமுயற்சியுடன் விவாதித்து வரும் டென்மார்க், ஹாலந்து மற்றும் இதர சிறிய நாடுகளின் மாதிரி ஆட்சி களைப் பெறுவது உண்மையிலேயே அரிது என்பதை அவர்கள் திண்ணமாயும் அறிவார்கள். காரணம் இவற்றின் பொதுவான பின்தங்கிய நிலையும் இங்கிலாந்தையும் விதேசி மூலதனத்தையும் சார்ந்திருக்கும் நிலையும் அரசியல் சுதந்திரம் பெற்றாலுங்கூடக் கடக்க முடியாத தடைகளாக இருக்கும். இதனிடை பிரிட்டிஷ் ஏகபோக மூலதனத்தின் நலன்களுடன் முற்றும் கலந்து ஐக்கியமாகிவிட்ட நலன் களையுடைய உள்நாட்டுப் பூர்ஷுவாக்களில் ஒரு பகுதி ஏகபோகங்களுக்கு விசுவாசமாய்த் தொண்டாற்றி பிரிவினை வாதிகளின் முயற்சிகளைக் குலைத்து வருகிறது. தேசிய வட்டாரங்களில் படுமோசமான அதிகார துர்ச்செயல் களும் தேசிய சமய வேற்றுமைகள் ஊக்குவிக்கப் படுவதும் தாராளமாக நடக்கின்றன.

பிரிட்டனில் தேசியப் பிரச்சினைக்குத் தீர்வு காண்ப தற்கான பூர்ஷுவா வேலைத் திட்டம் வெறும் ஒரு தணிப்பு மருந்தின் தன்மையில் உள்ளது. அதிகப் பட்சம், இது ஸ்காட் லந்து, வேல்ஸில் நாடாளுமன்றம் நிறுவப் படுவதை மையமாக்கியதாகவே இருக்கிறது. ஆனால் வடக்கு அயர்

லந்துக்கு கிட்டத்தட்ட அரை நூற்றுண்டு காலமாக அதன் சொந்த நாடாளுமன்றம் இருந்து வந்துள்ளது. ஆனால் அதன் தேசிய முன்னேற்றமும் ஸ்காட்லந்து வேல்ஸ் மக்களுடையதைப் போலவே இன்னமும் ஏகாதிபத்திய ஒடுக்கு முறையால் தடைப் படுத்தப் படுகிறது. 1968 அக்டோபரில் "தேசிய" அரசாங்கத்தின் கொடுமைகளை எதிர்த்தும், பின்னர் லண்டன் அரசாங்கத்தின் ''வெஸ்ட் மினிஸ்டரில்'' இருந்து வரும் ''நேரடி ஆட்சியை" எதிர்த்தும் முழு அளவிலான உள் நாட்டுப் போர் வெடித்தது.

அல்ஸ்டரில் பிரிட்டிஷ் துருப்புக்கள் நிறுத்தப் படுவதும் பல ஆண்டுகளாக அங்கு நடைபெற்று வரும் ஆயுதமேந்திய போராட்டமும் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் அதிகரித்து வரும் நெருக்கடிக்குச் சான்று பகிர்கின்றன.

ஸ்காட்லந்து, வேல்ஸ், அயர்லந்தின் தேசியப் பிரச்சினையை தொழிலாளி வர்க்கத்தால் மட்டுமே தீர்க்க முடியும். இதுவும் தனிப் பிரிந்த ஒதுக்க நிலையில் நின்றல்ல. மாறுக அனைத்து பிரிட்டிஷ் பாட்டாளி வர்க்கத்துடன் சர்வதேசிய ஒற்றுமை பேணும் பின்னணியில் தான் சாத்தியம். இப்போது தேசியப் பிராந்தியங்களிலான தொழிலாளி வர்க்க இயக்கம் மையத்தில் இருப்பதை விடவும் அதிக பலமுடையதாக உள்ளது. கம்யூனிஸ்டுக் கட்சியின் நிலைகளும் இங்கு அதிக உறுதியாக உள்ளன. ஆனால் அதன் முயற்சிகள் இன்னமும் பலன் தர இயலவில்லை. பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின தேசிய ஒடுக்கு முறைக்கும் சுரண்டலுக்கும் இலக்காகி இருக்கும் அதே சமயம் ஸ்காட்லந்து, அயர்லந்து, வேல்ஸ் மக்களினங்கள் தாமே, காலனி சார்பு நாடுகளின் மக்களினங்களைப் பொருத்தவரை, ஒடுக்கும் நாட்டின் நேச சக்தியாக இருந்து வந்திருக்கிருர்கள். இதன் விளைவு இன்னும் நீடிக்கிறது. பிரிட்டனில் ஒரு சோஷலிஸ்டுப் புரட்சி ஏற்படுவது மிகவும் தாமதமாகி வருவதற்கான பிரதான காரணங்களில் இதுவும் ஒன்ருகும். இதன் பின் விளைவே அதன் உள்நாட்டு அரைக் காலனி மக்களினங்களின் தேசிய விடுதலையை இன்னும் நிறைவேற்ற முடியவில்லை.

இந்த மெய்நடப்பு ஒட்டு மொத்தமான தொழிலாளி வர்க்கத்தின் உள்ளங்களில் ஆழமாகப் பதியவில்லை, இதில் பெரும் பகுதியினர் இன்னமும் சமுக-சீர்திருத்த வாதிகளையே பின்பற்றுகிறார்கள்.

ஸ்காட்லந்து, வேல்ஸ், அயர்லந்தின் தேசிய விடுதலை உள்ளிட்டு தொழிலாளி வர்க்க இயக்கத்தினதன் பிரச்சினை களுக்குப் பரிகாரம் காண்பதற்கான சரியான வழி பிரிட்டிஷ் கம்யூனிஸ்டுக் கட்சி முன்வைத்துள்ள கொள்கையே. அயர்லாந்து தேசத்தின் மறு ஒருங்கிணைப்பு, தேசியப் புத்தாக்கம், ஸ்காட்லந்து, வேல்ஸ் தேசங்களின் விடுதலை இவை, தேசிய இயக்கமானது பொதுவான முன்னணியில் வளம்பெற்று, எல்லா தேசிய இனங்களையும் சேர்ந்த உழைக்கும் மக்களுடையதான ஓர் ஏகாதிபத்திய-எதிர்ப்பு பொதுவான ஜனநாயகப் போராட்டத்தின் ஒரு நீரோட்ட மாக மாறும் வரையில் சாதனையாகாது, மேலும் இந்தப் போராட்டம் நாட்டின் சோஷலிஸ்டு மாற்றத்துக்கு இட்டுச் செல்லும் இடைக்கால கட்டமாக இருக்கும்.

நாட்டின் தொழிலாளி வர்க்க இயக்கத்தின் சர்வதேசிய ஒற்றுமையைப் பேணிக்காப்பதும், அதை தேசியப் படைப் பிரிவுகளாக உடைக்க முயலும் பிரிவினைவாதிகளின் முயற்சி களைக் குலைப்பதும், பூர்ஷுவா அமைப்பு நிலவும் நிலைமை களில் கம்யூனிஸ்டு வேலைத்திட்டத்தின் முக்கியமான பிரி நிலையாகும். 1967 அக்டோபரில் பிரிட்டிஷ் கம்யூனிஸ்டுக் கட்சியானது ஸ்காட்லந்து, வேல்ஸ் தேசங்களின் தேசிய எதிர் காலம் பற்றி ஓர் அறிக்கை விடுத்தது. கட்சி வேலைத் திட்டத்தின் ஃவகு அண்மைய ஆவணமான **சோஷலிசத் திற்கான பிரிட்டிஷ்** செல்வழி ஸ்காட்லந்து, வேல்ஸ் மக்க ளினங்களுக்கு உள்நாட்டு விவகாரங்களிலும் தேசிய ஆக்கப் பணிகளிலும் முழுமையான சுதந்திரத்தைக் கோருகிறது. வடக்கு அயர்லாந்து சம்பந்தமாக கம்யூனிஸ்டுகள், கத்தோலிக்க சிறுபான்மையின் தேசிய ஒடுக்குமுறையை ஒழித்தல், அரசு-அரசியல் சட்டமைப்பை ஜனநாயகப் படுத்தல் சமுக, பொருளாதார சீர்திருத்தங்களை

அமலாக்குதல் எனும் மக்கள் கோரிக்கைகளை ஆதரிக்கின்றனர்

ஸ்காட்லந்தும் வேல்சும் முழுமையாகப் பிரிந்து செல்வது எனும் கோரிக்கை ஏற்கவியலாதது என்பதாக கம்யூனிஸ்டுகள் கருதுகிறார்கள். அது தொழிலாளி வர்க்க இயக்கத்தின் சர்வதேசிய ஒற்றுமையைக் குலைக்கும்,பிரிட்டிஷ் தீவுகளில் வாழும் மக்களினங்களின் சங்கமிப்பைத் தடைப் படுத்தும் அரசியல் சட்ட ஏற்பாடு (கூட்டாட்சி மற்றும் தேசிய நாடாளுமன்றம்)மாற்றப்பட வேண்டுவது அவசியம். தேசியப் பிரதேசங்களின் பொருளாதார அரசியல் கலாசார முன்னேற்றத்திற்கான ஒரு திட்டம் வேண்டும். தேசிய இயக்கம் எந்தத் திசையில் திரும்பினாலும் சரி, மார்க்சிய—லெனினிய வாதிகள் தேசிய, சர்வதேசிய நடப்புக்களின் துல்லியமான இணைப்பை, முன்னது பின்னதிற்குக் கீழடங்கும் வகையில் கோருகிறார்கள்.

பெல்ஜியத்தில் தேசியப் பிரச்சினை கடுமையுறுவதற்கான காரணங்களும் பிரிட்டனில் உள்ளவை போலவே காணப் படுகின்றன. இதில் பிரதானமாக இருப்பது பெல்ஜியம் ஏகபோக மூலதனத்திற்கு ஏற்பட்டுள்ள நெருக்கடியே, இது காலனியமைப்புத் தகர்வுற்றதால் உக்கிரமடைந்துள்ளது. இதைக் கட்ட பெல்ஜியன் ஏகபோகங்கள் உதவியுள்ளன- வெளிநாடுகளில் இருந்து மீலாபங்கள் பொழிந்து கொண்டு இருந்த காலம் வரை பெல்ஜியன் பூர்ஷுவா வர்க்கம் ஒரு முழு அமைப்பாக இருந்தது, அதன் தேசியப் படைப் பிரிவுகள் இடையிலான மோதல் அற்ப சொற்பமாகவே இருந்தது, ஆனால் 1960 ஆம் ஆண்டுகளின் துவக்கத்தில் நெருக்கடி பிறந்தபோது பிளெமிஷ் பிரிவு அதிக சாதகமான நிலையில் இருப்பது நிரூபணமாயிற்று (இதில் அதிகப்பேர் இருந்தார்கள், பெரிய நவீன தொழில்கள் பிளாண்டர்சில் இருந்தன, அன்னிய மூலதனத்தின் புகுதரவு இருந்தது) 1960 ஆம் ஆண்டுகளுக்கு முன்னதாகவே அது பிளெமிஷ் மொழியைக் கட்டாயமாக்கியது.இணைப்பாக்கம் பெற்றதான

பெல்ஜியன் அரசில் அது அதிமுக்கிய இடத்தைப் பெற்றிருந்தது.

பெல்ஜியன் பூர்ஷுவா வர்க்கத்தின் வல்லூன் கிளை சிறு தரச் செல்வாக்கு மட்டுமே கொண்டிருந்தது. ஏகபோக மூலதனத்தின் நெருக்கடி வல்லூன் சமுதாயத்தவர் வெகு வேகமாகப் பொருளாதார வீழ்ச்சியுற இடமளித்தது. தமது சொந்த நலனுக்கு என்று பிளெமிஷ் பூர்ஷுவாக்களால் தகவமைத்துக் கொள்ளப்பட்டதான அரசு, வல்லூன் மக்களுக்கு மேலும் மேலும் மாற்றுந்தாயாக காட்சி தந்தது. அவர்களுடைய தொல்லைகளைத் தீர்க்க அது எதுவும் செய்ய வில்லை, பெல்ஜியன் பூர்ஷுவாக்களின் இருபிரிவினரின் நலன்களின் மோதல் எப்போதுமே பெல்ஜியன் ஒற்றுமையை ஆதரித்து வந்த பிரசல்சைப் பாதித்தது.

இந்த சந்தர்ப்ப சூழல்கள் யாவும் மொழித் துறையிலும் நாட்டின் அரசியல் விவகாரங்களிலும் விரைவில் பிரதி பலித்தன. சமய நிறுவனங்களும், பல்வேறு அரசியல் கட்சி களும் பொது அமைப்புக்களும் இந்தப் போராட்டத்தில் ஈடுபடலாயின. தேசிய முரண்பாடுகள் கடுமையுற்றன. பிளெமிஷ், வல்லூன் சமுதாயத்தவரின் அரசியல் பொருளா தார தேசிய ஒருமைப்பாடு மிகவும் முனைப்பாயிற்று, நாட்டின் தலைநகரான பிரசல்சின் நிலைமையிலான இரு முனைத்தன்மையும் முனைப்பானது.

கம்யூனிஸ்டுச் கட்சி உள்ளிட்ட முற்போக்கு சக்திகள் தேசியப் பிரச்சினைக்கு ஒரு ஜனநாயகத் தீர்வு காண வேண்டும் என்பதற்கு முக்கியத்துவம் தருகின்றன. தேசிய சமத்துவத்துக்காகப் பாடுபடும் கம்யூனிஸ்டுகள் ஜனநாயக கூட்டாட்சி முறையை மிகவும் வாய்ப்பு வளநம்பிக்கைதரும் பரிகாரமாகக் கருதி ஆதரிக்கிறார்கள். பிரேண்டர்ஸ் மற்றும் வல்லூன் பிரதேசங்களுக்கு சுயேச்சையான தேசிய வளர்ச்சி யும் பிரசல்சுக்கு விசேஷ அந்தஸ்தும் உத்தரவாதமாகக் கிட்டும் என்று நம்புகிறார்கள். பெல்ஜியன் பூர்ஷுவா வர்க்கம் ஒன்றியவாதிகளின் நடவடிக்கைகளுடன் தனது

திட்டங்களை இணைத்துக் கொண்டிருக்கிறது. பிளெமிஷ் விஸ்தரிப்புவாதிகளையும் பிரெஞ்சு மொழி பேசும் தேசிய வாதிகளையும் ஊக்குவிக்கிறது. முற்போக்கு சக்திகள் அதிலும் முதலாவதாக கம்யூனிஸ்டுக் கட்சி நாட்டின் ஜனநாயக ஒற்றுமையை உத்தரவாதம் செய்யத் தொழிலாளி வர்க்க இயக்கத்தையே முற்றாக நம்பியிருக் கிறது "தொழிலாளி வர்க்க இயக்கம் தான் முக்கியமாயும் இதைச் சாதனையாக்க முடியும். காரணம் பெல்ஜியன் பூர்ஷுவாக்களையும் அதன் அரசியல் கையாட்களையும் எதிர்த்து நூற்றாண்டுகளுக்கும் அதிகமாக நடந்த பொதுப் போராட்டத்தில் தொழிலாளி வர்க்கம் ஒற்றுமை, ஒருமைப் பாடு எனும் மரபுகளை வளர்த்துக் கொண்டு விட்டது"* என்று பெல்ஜியம் நாட்டு கம்யூனிஸ்டுக் கட்சியின் 19ஆவது காங்கிரசின் தீர்மானம் கூறுகிறது.

பிளெமிங் வல்லூன் இனத்தவரின் சுதந்திரமான தேசிய அபிவிருத்திக்கான போராட்டம் நாட்டின் இன்றைய முன்னேற்றத்துக்குத் தீர்மானகரமானதல்ல—ஆயினும் பூர்ஷுவா வர்க்கத்தால் தேசிய உறவுகள் பற்றிய பிரச்சினைக்குத் தீர்வு காண்பதும் சமுதாயத்தை நிர்வாகம் செய்வதும் இயலாது என்பதை இது புலப்படுத்துகிறது.

வெகு சமீப காலம் வரையில் கடுமையுறாது இருந்த பெல்ஜியம் நாட்டின் தேசியப் பிரச்சினையைப் போலன்றி, கனடா நாட்டின் கியுபெக் பிரச்சினை அவசரமான ஒன்றாக இருக்கிறது. இன்றைய பிரெஞ்சு-கனடிய தேசிய இனத் தவரின் முன்னோர்தான் இரண்டு நூற்றாண்டுகள் முன்பு கனடா மண்ணில் முதன்முதலாக ஒரு காலனியை நிறுவி னார்கள். 1867-ல் ஆங்கில ராணியால் கையொப்பமிடப் பெற்ற பிரிட்டிஷ் வட அமெரிக்க சட்டம் பிரெஞ்சுக் காரருக்கும் பிரிட்டிஷாருக்கும் சம உரிமைகளை உத்தர வாதம் செய்திருந்த போதிலும், பிரெஞ்சு கனடியர் ஓர் ஒடுக்கப்பட்ட சிறுபான்மையினர் நிலையில் அல்லற்பட்டனர்.

* Le Drapeau Rouge 13, டிசம்பர், 1968, பக். 8.

கியுபெக், நாட்டின் செல்வங்கொழிக்கும் பெரு நிறுவனங் களின் தலைமையகமாகும். அங்கு ஏகபோகவாதிகள் பிரம் மண்டமான லாபங்களைச் சம்பாதிக்கிறார்கள். ஆனால் கூலி விகிதம் கனடாவின் இதர மாகாணங்களில் விடவும் குறைவே. பொதுக்கல்வி, சமுதாயப் பராமரிப்பு, உழைப் போர் நிலைமைகள் நாட்டின் இதர பகுதிகளை விடவும் படுமோசம். பிரெஞ்சு-கனடிய மக்கள் பொருளாதார ஒடுக்கு முறைக்கும் தேசிய ஒடுக்குமுறைக்கும் இலக்காகியுள்ளனர்: சுயநிர்ணய உரிமைக்கான அவர்களது அபிலாஷைகள் நசுக்கப் படுகின்றன, கியுபெக்கில் ஆங்கில கனடியர் அனுபவித்து வரும் மொழிச் சலுகைகள் காரணமாக, பிரெஞ்சு-கனடியர் தமது சொந்த மாகாணங்களில் கூடத் தமது அடிப்படை உரிமைகளை முழுமையாகப் பயன்படுத்த முடியவில்லை.

நிச்சயமாயும் கியூபெக்குக்கு வரம்புக்குட்பட்டதாயினும் சரி ஓரளவு சுயாட்சி இருக்கிறது. ஆனால் இது அரசியல் சட்ட உத்தரவாதங்கள் மூலம் பெறப்பட்டதல்ல, மாறாக திண்ணிய தேசிய ஒற்றுமை, தேசிய தனித்துவத்தில் அக்கறை இவற்றால் வென்று பெறப்பட்டதாகும்.

பிரெஞ்சு-கனடியர் சுதந்திரமான தேசிய முன்னேற்றத் திற்காகப் பல பத்தாண்டுகளாகப் போராடி வந்துள்ளனர். அண்மைக் காலத்தில் இந்தப் போராட்டம் மேலும் உக்கிர மாகியுள்ளது. படிப்படியாகத் திரண்ட அதிருப்தி, தேசிய அசமத்துவத்துக்கு எதிரான கண்டன எழுச்சியாக பரிணமித்துள்ளது. இதற்கு வேறு காரணங்களும் உள்ளன. கனடாவின் பொருளாதார நிலை கடுமையாயும் மோசமாகி யுள்ளது. வளர்ச்சியடைந்த நாடு என்ற முறையில் அதனிடம் சொந்தமான காலனிகள் என்றுமே இருந்திரா விடினும் ஏகாதிபத்திய காலனி முறை மூலம் ஒரு காலத்தில் அது கணிசமான நன்மைகளை அடைந்திருந்தது. கனடியப் பொருளாதாரம் மீதான அமெரிக்க ஏகபோகங்களின் பிடிப்பு மிகவும் இறுக்கமாகியுள்ளது. ஆங்கில-கனடிய ஏகபோகப் பிரிவுகள் மேசமாகிவரும் பொருளாதார

நிலையின் பிரதானச் சுமையினை பிரெஞ்சு-கனடியன் சிறுபான்மையினர் மீது இயல்பாகவே ஏற்றிவிட்டன.

வளர்ச்சியடைந்த இதர முதலாளித்துவ நாடுகளில் போலவே 1960 ஆம் ஆண்டுகளில் இங்கும் ஒரு பொதுவான-ஜனநாயக ஏகபோக-எதிர்ப்பு போராட்டத்தின் வலிமை மிக்க எழுச்சி ஓங்கி நின்றது. ஒடுக்கப்பட்ட தேசிய சிறு பான்மையினர் இதில் ஈடுபட்டனர், இது தேசிய இயக்கத்தை தூண்டி ஏறுமுகமாக்கியது. பிரெஞ்சு ஏகபோகங்களிடமிருந்தும் ஓரளவுக்கு உற்சாகம் கிட்டியது, அவை அமெரிக்க மாகண்டத்தில் தமது நிலைமைகளைக் கெட்டிப் படுத்திக் கொள்வதற்காக கனடாவின் பிரெஞ்சு மொழிபேசும் மக்களைச் சார்ந்து நிற்கத் தலைப்பட்டன.

பிரெஞ்சு—கனடியர்கள் ஆங்கில-கனடியருடன் பொருளாதார அரசியல் கலாசார சமத்துவம் கோரித் தீவிரமாகப் போராடுகிறார்கள். இந்தப் போராட்டத்தில் பெருவாரி மக்கள், 1970 முன்பனிக் காலத்தில் கனடாவிடமிருந்து கியூபெக் முற்றிலும் பிரிந்து செல்லும் உரிமை கோரிய பிரிவினைவாத அதிதீவிர நிலையில் இருந்து விலகி நின்றார்கள். பிரெஞ்சு—கனடியர்களும் நாட்டின் இதர பகுதிகளுடன் மிகப்பல தொடர்புகளைச் கொண்டிருக்கிறார்கள். ஒற்றுமை பேணப்படவேண்டும் என்று விழைகிறார்கள். ஆனால் இரு தேசங்களுக்கும் சமமான உரிமைகளும் வாய்ப்புக்களும் உத்தரவாதமாக அளிக்கப்பட வேண்டும். கனடா நாட்டு கம்யூனிஸ்டுக் கட்சி உள்ளிட்ட நாட்டின் முற்போக்கு சக்திகள் சமத்துவம் என்பதை ஒரு கூட்டிணைவு அமைப்பின் ஏற்பாடாகவே கருதிப் பார்க்கின்றனர். 1968 ஜனவரியில் கனடா கம்யூனிஸ்டுக் கட்சியின் மத்தியக் கமிட்டி பின்வரும் தீர்மானத்தை ஏற்றது, இது 1669 ஏப்ரலில் கட்சியின் 20 ஆவது காங்கிரசால் ஆமோதிக்கப்பட்டது. ''இன்றைய நெருக்கடிக்கு ஒரு நியாயமான ஜனநாயகத் தீர்வு காண வேண்டுமானால், பிரெஞ்சு-கனடிய மக்கள் தமது தேசிய அபிவிருத்தி, தமது தேசிய அரசின் வடிவம் ஆங்கிலேய-

கனடாவுடனுன தமது உறவுகள் இவற்றைத் தாமே தீர்மானம் செய்து கொள்வதற்கான உரிமை முழுமையாயும் நிபந்தனைகள் இன்றியும் ஒப்புக்கொள்ளப்படவேண்டுவது அவசியம். இந்த உரிமையின் அர்த்தம், பிரெஞ்சு கனடிய தேசம் கனடாவில் இருந்து பிரிந்து செல்வதா, அல்லது ஆங்கிலேய-கனடாவுடன் ஏதேனும் வடிவில் அரசியல் ஒன்றியம் அமைப்பதா என்பதை முடிவு செய்யும் உரிமை தரப்படவேண்டும் என்பதே. நமது கருத்துப்படி. பல்வேறு மாற்று யோசனைகளில் வைத்துப் பார்க்கும்போது, இரு மக்களினங்களுக்கும் மிகவும் சாதகமான தீர்வு ஒரு புதிய கூட்டிணைவு அமைப்பிலான உறவுமுறையை உருவாக்குவதே என்று புலனுகிறது.''*

தனது உறுப்புக் குடியரசுகளுக்கு விரிவான உரிமைகளை அளித்துள்ள சோவியத் ஒன்றியத்தின் அனுபவம் பிரெஞ்சு-கனடியர் மத்தியில் மிகவும் பரவலாக விரும்பப்படுகிறது. எடுத்துக்காட்டாக, கியுபெக் அரசாங்கம் ஆங்கிலேய-கனடாவுடன் கூட்டிணைவு முறையில் இணைக்கப்பட்டிருக்கும் பிரெஞ்சு—கனடிய அரசு ஐ. நா.வில் உக்ரேனும் பிலோருஷ்யாவும் பிரதிநிதித்துவம் பெற்று இருப்பதைப் போல சர்வதேசிய அமைப்புகளில் இடப் பெற வேண்டும் என்று கருதுகிறது. நாடாளுமன்றத்துக்கு பிரெஞ்சு-கனடா அனுப்பிய ஒரு விண்ணப்பத்தில் உக்ரேனுக்கும் பிலோருஷ்யாவுக்கும் இணையான சர்வதேசிய அந்தஸ்து கியூபெக்குக்குத் தரப்படவேண்டும், இது ஒட்டாவாவிலுள்ள காலனி அரசாங்கத்தின் ஏற்கமுடியாத் தலையீட்டில் இருந்து அதைப் பாதுகாக்கும் என்ற கோரிக்கையை முன்வைத்தது.

மார்க்சிய-லெனினிய போதனையை வழிகாட்டியாகக் கொண்டு, கனடிய கம்யூனிஸ்டுகள் நாட்டில் தேசியப் பிரச்சினைக்குரிய சரியான இடம் எது என்பதை மக்கள் திரளினருக்கு எடுத்துக்காட்டுகிருர்கள். இதற்கான தீர்வு மொழி அல்லது கலாசாரம் பற்றிய தகராறு அளவுக்கு வரம்பு கட்டப்படக் கூடாது. பூர்ஷுவாக்கள் இவற்றின்

* தி கனடியன் ட்ரிப்யூன், ஜனவரி 29, 1968.

மீது மட்டுமே கவனத்தைத் திசை திருப்ப முயன்று, அதன் வழி பிரெஞ்சு-கனடியர் தேசிய சுயநிர்ணய உரிமைப் பிரச்சினையையும் வர்க்கப் போராட்டத்தையும் இருட்டடிப்புச் செய்ய முயல்கிறார்கள். நாட்டின் சிக்கலான சமுக அரசியல் பிரச்சினைகளை வெறும் தேசியப் பிரச்சினை எனும் அளவுக்குக் குறுக்க முடியாது என்று கம்யூனிஸ்டுகள் எடுத்துக் காட்டுகிறார்கள். தேசியப் பிரச்சினை ஏகபோக ஆதிக்கத்தை எதிர்த்த போராட்டத்தின் ஒரு பகுதியாக மாறுமாயின் அதைஅறுதியாகத் தீர்க்கமுடியும். மெய்யாலும் ஜனநாயக சுதந்திரம் பெற்று, அமெரிக்க ஏகாதிபத்தியத்திடமிருந்து கனடா தேசிய விடுதலை பெறும் வகையில் பரிகாரம் காணமுடியும்.

கியுபெக்கின் தேசிய சுயநிர்ணய உரிமையும் அரசுரிமையும் அங்கீகரிக்கப்பட்டு புதிய கனடியன் அரசியல் சட்டத்தில் விதிமுறைச்சட்டம் ஆக்கப்படும் வரையில் மெய்யான அரசுரிமையும் சுதந்திரமும் இருக்கமுடியாது என்று கனடிய கம்யூனிஸ்டு கட்சியின் 21 ஆவது காங்கிரஸ் சுட்டிக் காட்டியுள்ளது. இவை ஒரே போராட்டத்தின் இரு அம்சங்களாகும். எனவே, கியுபெக்கை கனடாவின் இதர பகுதிகளில் இருந்து பிரித்து வைப்பது மூலம் பிரெஞ்சு கனடியர் தேசியக் கோரிக்கைகளை நிறைவு செய்ய முடியாது. இதற்கு மாறாக, ஆங்கில-கனடியர்களுடனும் இதர தேசிய இனங்களைச் சேர்ந்த உழைக்கும் மக்களுடனுமான சர்வதேசிய ஒற்றுமை தொழிலாளி வர்க்கத்தின் தலைமையில் ஒரு பொதுவான-ஜனநாயக, ஏகாதிபத்திய-எதிர்ப்பு முன்னணியை உருவாக்கும். இதுவே கனடிய கம்யூனிஸ்டுகள் மேற்கொள்ளும் நிலை. உண்மையான சுயநிர்ணய உரிமையை சாதனையாக்குவதற்குரிய ஒரே பாதை ஏகபோகப் பெறுப்பான்மையர் மற்றும் அவர்களைச் சுற்றியுள்ள பிற்போக்குப் பரிவாரங்களையும் அவர்களைச் சார்ந்து நிற்போரையும் எதிர்த்து எல்லா ஜனநாயக சக்திகளையும் ஒரு போராட்டப் பாதையில் ஒன்றிணைப்பதே" என்று டிம்பக் சுட்டினார்.

பாட்டாளி வர்க்கம் வரலாற்று அரங்கில் முதன் முதல் முன் வந்து, சமுதாயத்தைப் புரட்சிகரமாக மாற்றியமைப் பதற்கான தன் போராட்டத்தை துவக்கிய அந்த காலங் களில் மார்க்ஸ் கூறியதுபோல தேசியப் புரட்சிகளின் கதி பாட்டாளி வர்க்கப் புரட்சியின் கதிக்குக் கிழடங்கியதாகக் கருதப்பட்டது, அவற்றின் வெளிப்படையான சுயாட்சியும் மகத்தான சமூகப் புரடசியிடமிருந்து சுதந்திரமாக இருப் பதும் பறித்துக் கொள்ளப் பட்டன."* இதை மெய் நடப்புக்கள் மீண்டும் மீண்டும். ஊர்ஜிதம் செய்துள்ளன. கடந்த காலத்தில் தேசிய இயககங்கள் முதலாளித்துவம் வலுப்படுவதற்கான வாய்ப்பை அளித்தன. இப்போது தேசிய இயக்கங்களின் எதிர்காலமும் அவற்றின் விளைவாக தேசிய நடப்புக்களில் ஏற்படும் வெற்றிகளும் சோஷலிசத் துடன் தொடர்புடையதாக இருக்கின்றன. அவை உள்ளடக் கத்தில் சோஷலிஸ்டுத் தன்மை கொண்டதாக இல்லா விடினும், அவை பூர்ஷுவா உலகில் எழுப்பப்படும் பொது வான ஏகாதிபத்திய-எதிர்ப்புப் போராட்டத்துடன் சேர்ந்து கலந்து, சோஷலிசத்தின் வருகையை வேகப்படுத்த உதவு கின்றன.

இதன் அடிப்படையில், தேசிய இயக்கங்கள் நிகழும் நிலைமைகளைச் சார்ந்து அவற்றின் இறுதி லட்சியங்களை இனங்கண்டு கொள்ளவேண்டுவது இன்றியமையாதது. காலனி ஒடுக்குமுறையில் இருந்து விடுதலைபெற்ற அல்லது அதை எதிர்த்துப் போராடி வருகிற மக்களினங்கள் தேசிய சுதந்திரம், தேசிய அரசுத்துவம் இவற்றை விழைந்தே நிற்கின்றனர். காரணம், லெனின் சொற்களைப் பயன் படுத்திக் கூறிடில் தாயகம் தனது வரலாற்றுப் பாடலை இன்னும் கடைசிவரைப் பாடி முடிக்கவில்லை. வளர்ச்சி யடைந்த முதலாளித்துவ நாடுகளிலான ஒடுக்கப்பட்ட மக்களினங்களின் விடுதலைப் போராட்டத்தின் இறுதி நோக்கம் பெரும்பாலான இடங்களில் வேறானதாகவே

---

* கா. மார்க்ஸ், பி. எங்கெல்ஸ், தேர்வு நூல்கள் (3 தொகுதிகள்), தொகுதி 1, பக். 27

இருக்கும். இங்கு தேசியப் பிரச்சினேக்கு வர்க்க அணுகு முறை மிகவும் அவசியம். இதை ஒடுக்கும் தேசத்துடனுன போராட்டம் அளவுக்குக் குறுக்கிவிட முடியாது. ஒரே அரசின் கட்டுக்கோப்புக்குள் பல ஆண்டுகள் சேர்ந்து இருந்ததானது ஒடுக்கப்பட்ட தேசத்தை முதலும் முக்கியமுமாக உழைக்கும் மக்கள் திரளினர் ஒடுக்கும் தேசத்துடன் ஆயிரக்கணக்கான இழைகளால் பந்தப்படுத்தி வைக்கிறது. முதலாளித்துவ ஒடுக்குமுறையை எதிர்த்த வர்க்கப் போராட்டம் ஒடுக்கும் மற்றும் ஒடுக்கப்படும் தேசங்களின் உழைக்கும் மக்கள் இடையே நீடித்த சர்வதேசிய உறவுகளே உருவாக்குகிறது. இத்தகைய இடங்களில் ஒடுக்கப்பட்ட மக்கள் தனிப்பிரிந்து போவது என்பது வர்க்கப் போராட்டத்தின் ஐக்கிய முன்னணியை சீர்குலேக்கும், தேசிய விடுதலேக்கு மட்டுமே ஆதரவாக சமுதாய விடுதலேயைக் கைவிடும்படி செய்யும்.

அக்டோபர் புரட்சிக்கு சற்றே முன்னதாக, ருஷ்யாவிலிருந்து தமது நாடு கட்டாயம் தனிப்பிரிதல் வேண்டும் என்று உக்ரேனிய பூர்ஷுவா தேசியவாதிகள் வாதம் செய்தபோது, இது சோஷலிசத்துக்கு வெளிப்படையாகத் துரோகம் விளேப்பதாகும் எனவும் தனி ஓர் அரசின் கட்டுக்கோப்பினுள் நிலவும் உக்ரேனிய மற்றும் மகாருஷ்யன் பாட்டாளிகளுக்கு இடையிலான பந்தங்களேயும் நேச உறவுகளேயுப் பலவீனப்படுத்துவது எனும் பூர்ஷுவா நோக்கு நிலேயில் இருந்துகூட இது ஒரு முட்டாள்தனமான கொள்கை''* என்பதாக லெனின் எழுதினுர். வளர்ச்சியடைந்த நாடுகளிலான தேசியப் பிரச்சினே விஷயத்தில் இது இன்று முற்ற முழுமையாயும் செல்தகைமையுடையது.

சுருக்கிக் கூறிடின், பிற்போக்கின் பலம் அதிகரித்த போதிலும் ஏகாதிபத்தியத்தால், ஜனநாயகப் போக்குகள் மக்கள் மத்தியில் பெருகி வருவதைத் தடுக்க முடியவில்லே.

---

* வி. இ. லெனின், ''நூல் திரட்டு'', தொகுதி 20, பக். 30.

வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளில் தேசிய உறவுகள் அதிகளவுக்கு கடுமையுற்றுள்ளதற்கான முக்கிய காரணங்களில் இதுவும் ஒன்ருகும்.

3. தொழிலாளி வர்க்கத்தின் சர்வதேச ஒற்றுமைக்கான போராட்டம்

அதன் வர்க்க ஆட்சிக்கு முட்டுத்தர, பூர்ஷுவா வர்க்கம், தேசிய இயக்கங்கள் தேசியவாதத் தன்மையுடன் இருக்கவேண்டும் என்று விரும்புகிறது. மறுபுறத்தில், தொழிலாளி வர்க்கமோ ஒடுக்கப்பட்ட மக்களின் அபிலாஷைகளை சுதந்திரமான பொருளாதார கலாசார தேசிய அரசுத்துவம் நோக்கியும், தேசியவாதத்தையும் பிரிவினைவாதத்தையும் நடுதல் செய்ய பூர்ஷுவா வர்க்கத்துக்குள்ள வாய்ப்புக்களை குறைந்தபட்சமாக்கிடும் பாதையில் நெறியாண்மை செய்ய விரும்புகிறது. இந்தப் பிரிநிலை வரம்பு குறித்து விழிப்புடன் இருக்குமாறு பாட்டாளி வர்க்கத்துக்கு லெனின் போதித்தார். இது சில சமயம் மங்கலாகத் தெரிகிறது, இதை பூர்ஷுவா குட்டி பூர்ஷுவா புரட்சியாளர்கள் அலட்சியப் படுத்துகின்றனர் அல்லது மறந்து போய் விடுகின்றனர்.

''எல்லாத் தேசிய ஒடுக்குமுறையையும் எதிர்த்துப் போராட வேண்டுமா? ஆம் நிச்சயமாக! எந்தவிதமான தேசிய வளர்ச்சிக்கு ஆகவும், தேசிய கலாசாரத்துக்கு ஆக பொதுவாயும் போராடவேண்டுமா — நிச்சயமாயும் இல்லை.''* பூர்ஷுவா வர்க்கம் தனது வர்க்க நலன்களுக்கு வேண்டி ஒடுக்கப்பட்ட நாடுகளின் மக்களினங்கள் மீது எப்படியாவது ஒரு தேசிய அரசு நிறுவப்படவேண்டும் எனும் கண்மூடித்தனமான அவாவைத் திணிப்பதற்கு இடந்தரக் கூடாது. ஒரு தேசத்தன்மையைச் சுட்டும், பூர்ஷுவா தேசியவாதிகள் கூறும் ''தேசிய அரசு'' உண்மையில் மனித குலத்தின் ஒட்டுமொத்தமான முதலாளித்துவ வளர்ச்சியில்

* வி. இ. லெனின், ''நூல் திரட்டு'', தொகுதி 20, பக். 35.

வரலாற்றுல் நெறியாண்மை செய்யப்பட்ட தற்காலிக மாதிரியிலான அரசே என்று லெனின் வலியுறுத்தியுள்ளார்.

ஆஸ்திரிய தேசத்தின் உதாரணம் இன்றைய பூர்ஷுவா உலகில் தேசங்களின் வளர்ச்சி என்பது வடிவத்தில் எவ்வளவு பலவகைப்பட்டதாயும் உள்ளடக்கத்தில் எவ்வளவு சிக்கலானதாயும் இருக்கிறது என்பதைக் காட்டுகிறது. வரலாற்று நிகழ்ச்சிகள் ஆஸ்திரிய மக்களை இதர ஜெர்மன் மக்களிடமிருந்து பிரித்துவைத்தன என்பது எல்லோரும் அறிந்ததே. இதுவே ஆஸ்திரிய தேசத்தின் உருவாக்கத்தை நெறியாண்மை செய்தது. ஆயினும் அக்டோபர் புரட்சிக்குப் பின்னர், இந்த நடப்பினை வேகப்படுத்துவதற்கான வாய்ப்புகள் தோற்றமளித்த போதில் ஏகபோக மூலதனத்தின் செல்வாக்குக்குக் கட்டுப்பட்டு இருந்த ஆஸ்திரியன் பூர்ஷுவா வர்க்கம் இதை மேம்படுத்திக் கொள்ள மறுத்தது. சமூக-ஜனநாயக இயக்கத் தலைவர்கள் இதற்கு ஒப்புதல் அளித்தனர். அவர்கள் ஜெர்மன் மக்கள் முழுவதன் ஒரு சர்வப் பொதுவான புரட்சியை ஆதரித்தார்கள். ஒன்றியத்துக்கு (Anschlss)* ஆதரவாகமுன் வந்தார்கள். ஆளும் வட்டங்கள் ஆஸ்திரிய மக்களின் தேசிய உணர்வின் சகல அடையாளங்களையும் ஒடுக்கின; ஒரு தேசம் அமைப்பதை வேகப்படுத்தும் எல்லா முயற்சிகளையும் ஒடுக்கின.

இந்த வழியில் ஆஸ்திரிய ஆளும் வர்க்கங்கள் நாட்டை பாசிசத்திடம் ஒப்படைத்தன. வலதுசாரி சமூக ஜனநாயகக் கட்சியின் வலதுசாரித் தலைவர் கார்ல்ரென்னர் நாட்டை நாஜிகள் கைப்பற்றியதை வரவேற்றுர். தேசியப் பிரச்சினையின் சுய-தீவிரத் தத்துவாளரும் இந்த நிலைமையின் துன்பியலைப் புரிந்து கொண்டவருமான ஆட்டோ பாஷர் இந்தப் புதிய நிலைமைகளில் சோவியத் ஒன்றியம் ஜெர்மன் பாசிசத்தை முறியடிப்பதன் மூலம் மட்டுமே ஜெர்மன் மக்களின் சுதந்திரமான முன்னேற்றத்துக்கு உத்தரவாதம்

* ஆஸ்திரிய நாஜிகளால் பற்றுடல் செய்யப்பட்டு அமைக்கப்பட்ட ஒன்றியம்.

கிட்டும் என்று பறை சாற்றினர். ஆனால் அவர் ஆஸ்திரியாவின் மெய்யான தேசியப் பிரச்சினையைப் புரிந்து கொள்ளவில்லை. நிர்ப்பந்த ஒன்றியத்துக்கு பின்னர் ஓர் ஆஸ்திரிய தேசம் நிலவியது என்று கம்யூனிஸ்டுகள் சாதித்த போது, சுதந்திரம், தேசிய சுயாதீனம் இவற்றுக்கான போராட்டத்தில் மக்களை அணிதிரட்டும் பொருட்டு மக்களின் தேசிய உணர்வைப் பலப்படுத்த வேண்டுவது முற்போக்கு சக்திகளின் கடமையாக இருந்தபோது, பாஷரும் புரட்சிகர சோஷலிஸ்டுகள் எனப்படும் அவர் தலைமையிலான பேர்வழிகளும் இதனை எதிர்த்தார்கள்.

இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் கூட, தமது தேசிய நலன்களுக்கு விரோதமாகப் பல வழிகளில் செயல்பட்ட மக்கள் புதிய ஆஸ்திரியாவில் முன்னணிக்கு வந்தார்கள். வெகு அண்மைக் காலம் வரையில் நாட்டில் இருந்த சில தனிநபர்கள் ஆஸ்திரிய தேசம் பற்றி இழிவாகப் பேசி வந்தார்கள், மேற்கு ஜெர்மனியின் பழிவெறிக் கும்பலுடன் கைகோர்த்து நின்று பிற்போக்கு சக்திகள் நிர்ப்பந்த ஒன்றியத்துக்காக கிளர்ச்சி நடத்தின. நாட்டின் பிரகடனப்படுத்தப்பட்ட நடுநிலைமையை மீறி ஆஸ்திரியாவை பொது மார்க்கெட் அமைப்பில் சேர்ப்பதற்கு முயற்சிகள் செய்யப்பட்டன. ஆஸ்திரியன் கம்யூனிஸ்டுகள் உள்ளிட்ட முற்போக்கு சக்திகளின் நிர்ப்பந்தத்தின் கீழ் மட்டுமே ஆஸ்திரிய தேசத்தின் எதார்த்தத் தன்மை இறுதியாக ஒப்புக் கொள்ளப்பட்டது.

பழைய தேசங்களின் வளர்ச்சிக்கும், புதிய தேசங்களின் உருவாக்கத்துக்கும் நவீன ஏகாதிபத்தியம் தடையாக இருக்கிறது என்பதை அப்பட்டமாயும் ஒவ்வொரு படியிலும் காணலாம். முதலாவதாயும் முக்கியமாயும், இதுதேசங்களின் தோற்றத்தின் பொருளாதார அடிப்படைக்குப் பொருந்தும். மக்கள் உற்பத்தி செய்த செல்வங்களில் பேரளவு அற்பசொற்பமான ஒரு சில முதலாளிகள் வசம் இருக்கிறது. தேசியச் செல்வ வளத்தின் இந்த வினியோகம், நவீன பூர்ஷுவா சமூக அமைப்பில் தேசங்களின் வளர்ச்சியின்

உள்ளார்ந்த நடப்பு மீது எதிர்மறையான, பாதிப்பான தாக்கம் செலுத்துகிறது.

ஏகபோக அதிகாரத்தின் நிலைமைகளில், அகில-தேசிய சொத்துடமையின் ஒரே வடிவம் அரசுக் கடன்தான் என்று லெனின் சரியாகவே சுட்டினார். இந்தக் கடன் பிரம்மாண்ட பரிமாணங்களை எட்டிவிட்டது. அரசுக் கடனைப் பல்வேறு "வருவாய்", "செலவின்" தொகைகளுடன் ஒப்பிட்டுப் பார்த்தாலே போதும், தேசத்தின் பொருளாதார நலன்களை நிதி மூலதனம் எப்படி ஆணவமாக அசட்டை செய்கிறது என்பது தெரியவரும்.*

பல நாடுகளின் தேசியச் செல்வத்தை அன்னிய ஏகபோகங்கள் சூறையாடுவதானது, நவீன ஏகாதிபத்தியம் எப்படி தேசங்கள், தேசிய இனங்களின் பொருளாதார அடித்தளத்தைச் சீர்குலைக்கிறது? பெரும்பாலும் அன்னிய முதலீடுகள் தேசிய அரசுரிமையையும் சுதந்திரத்தையும் படிப்படியாக வெட்டிச் சுருக்குகிறது. பொருளாதாரத்தின் மீது ஆதிக்கம் செலுத்துகிறவர்களே அரசியலில் ஆதிக்கம் செலுத்துவர் என்று லெனின் பலதடவைகள் எடுத்துக் கூறியிருக்கிறார். ஒரு முதலாளித்துவ நாட்டுக்குப் பின் இன்னொன்றாக பொருளாதார முறையில் கீழடக்கி வரும் அமெரிக்க ஏகாதிபத்தியம் அவற்றின் அரசாங்கங்கள் மீது தனது சித்தத்தைத் திணிக்கிறது. பல நாடுகளின் தேசிய பூர்ஷுவா வர்க்கமுங்கூட தனது மக்களின் நலன்களைக்

---

* 1970 நடுப்பகுதிக்குள் அமெரிக்காவின் அரசாங்கக் கடன் 371.5 பில்லியன் டாலராகியது. 1976 நடுப்பகுதிக்குள் இது 600 பில்லியனை விஞ்சியது. இதன் ராணுவச் செலவு 117 பில்லியன் டாலராக இருந்தது. பிரிட்டனிலுள்ள நிலைமையும் பெருமளவு இது போன்றதே. அதன் அரசுக் கடன் 1974 மார்ச் இறுதியில் 40.124 பில்லியன் பவுன்களாக இருந்தது. 1975-ல் பட்ஜெட்டில் ராணுவச்செலவுகளுக்கு என்று 4.5 பில்லியன் பவுன் ஒதுக்கப்பட்டது. அமெரிக்க ஏகபோகங்கள் மட்டுமே ஆண்டுதோறும் ஒரு பில்லியன் பவுன் லாபமாக எடுத்துச் செல்கின்றன.

காட்டிக் கொடுக்கிறது. அது தனது நாட்டின் பெரும்பகுதி களின் மீதான அரசுரிமையைக் கைவிட்டு விடும் அளவுக்கு காரியங்கள் நடந்து விட்டன.*

தேசிய நலன்களைப் பாதுகாப்பதற்காக தொழிலாளி வர்க்கம் இதர எல்லா முற்போக்கு சக்திகளையும் அணிதிரட்டுகிறது. இது வர்க்கப் போராட்டத்துடன், ஏகபோக ஆதிக்கத்தைக் கட்டுப்படுத்தவும், பெரும் பூர்ஷுவாக்கள் தேசிய நலன்களுக்குத் துரோகம் இழைப்பதைத் தடுக்கவுமான போராட்டத்துடன் இணைந்து பிணைந்து கிடக்கிறது.

ஏகாதிபத்திய காலனி முறை சிதைவுற்று, அதன் முதலீட்டு மண்டலம் சுருங்கிக் கிடக்கும் இன்று, ஏகபோக மூலதனம் தேசிய நலன்களை முன்னைவிட மேலும் அதிகப் பகிரங்கமாகப் புறக்கணித்து வருகிறது. அமெரிக்க ஏகபோகங்கள் தமது வேடங்களை எல்லாம் களைந்து, உயர் வளர்ச்சியடைந்த நாடுகள் உள்ளிட்ட பல நாடுகளின் பொருளாதாரத்திலும் ஊடுருவல் செய்து அமெரிக்காவுக்கு உலக மேலாதிபத்தியத்தை வென்றுதர முனைந்து முன்வந்து

---

* கனடாவின் ஆளும் வர்க்கம் நாட்டின் ஆர்க்டிக் பகுதியிலுள்ள 2.5 மில்லியன் சதுர கிலோ மீட்டர் பரப்பை யுத்தப் பிற்கால கட்டத்தில் அமெரிக்க ஏகபோகங்களிடம் ஒப்படைத்தது. இதுதவிர, கனடா நாட்டு மக்கள் உலோகச் செல்வாதாரங்கள் மீதிருந்த உரிமையை இழந்தனர்.

பிரேசில் இன்னொரு எடுத்துக்காட்டு. இதன் பரப்பில் ஐந்தில் ஒரு பங்கு (8.5 மில்லியன் ச. கி. மீ.ல் 1.6 ச. கி. மீ) அன்னிய ஏகபோகங்களுக்கு பெரும்பாலும் அமெரிக்க ஏகபோகங்களுக்குச் சொந்தம். அண்மை ஆண்டுகளில் அமெரிக்க ஏகபோகங்கள் ஆஸ்திரேலியா தென் அமெரிக்கா மெச்சிகோ நியூஜிலந்து மற்றும் இதர இடங்களில் 170 மில்லியன் ஹெக்டர் பரப்புள்ள கடலோர நிலத்தை வாங்கியுள்ளன.

விட்டன. தேசியநலன்களைப் பாதுகாப்பதற்காக தொழிலாளி வர்க்கமும் அனைத்து உழைக்கும் மக்களும் ஏன் பொங்கி எழுந்துள்ளார்கள் என்பதை இது விளக்குகிறது. 1950-ல் மேற்கு ஐரோப்பாவில் அமெரிக்க முதலீடுகள் 1.7 பில்லியன் டாலராக இருந்தது, 1973 இறுதிக்குள் இவை 37.2 பில்லியன் டாலராகி விட்டன. பிரிட்டனின் முக்கியமான தொழில்களில் இருபத்தைந்து சதவிகிதம் அமெரிக்க ஏகபோகங்களின் ஆதிக்கத்தில் உள்ளன. கனடாவின் பொருளாதாரத்தில் அமெரிக்க மூலதனம் 60 முதல் 80 சதவிகிதம் வரையிலான பட்டறை உற்பத்தி, எண்ணெய், எரிவாயு, சுரங்கம் உருக்குத் தொழில்கள் மீது ஆதிக்கம் வகிக்கிறது. அன்னிய மூலதனம்,பிரதானமாயும் அமெரிக்க, ஜப்பான் ஏகபோகங்கள் ஆஸ்திரேலியாவின் தொழில்துறை நிறுவனங்கள் மீது ஆதிக்கம் செலுத்துகின்றன.

தொழிலாளி-வர்க்க இயக்கம் இந்த நிகழ்ச்சிகளை உன்னிப்பாக கவனித்து வருகிறது. எடுத்துக்காட்டாக பிரெஞ்சு கம்யூனிஸ்டுகள் இதர நாடுகளுடனுன தொழிலாளி வர்க்கத்துடன் சர்வதேச உறவுகளை வைத்திருக்கிறுர்கள், குடியேறிய தொழிலாளர் (சுமார் 60 தேசிய இனங்களைப் பிரதிநிதித்துவப் படுத்துவது) தேசிய இயல்புகள் விஷயத்தில் விசேஷ அக்கறை காட்டுகிறுர்கள், நால்வரில் ஒருவர் குடியேறிய தொழிலாளியாக இருக்கும் ஒரு நாட்டில், இதில் பாதிப்பேர் வெகுசில ஆண்டுகளுக்கு முன்பு இந்த நாட்டில் குடியேறினுர்கள், தொழிலாளி வர்க்க ஒற்றுமையை இதர நாடுகளின் தொழிலாளர்களுடனுன அதன் உறவுகளையும் இனவெறி மற்றும் குறுதேசிய வெறிப் பாகுபாடுகள் மூலம் முதலாளிவர்க்கம் சீர்குலைத்துவிடாதபடி தடுக்க வேண்டுவது முக்கியமானது.

பிரெஞ்சுக் கம்யூனிஸ்டுக் கட்சியின் பல வட்டார அமைப்புக்கள் குடியேறிய தொழிலாளர் மத்தியில் வேலை செய்வதற்கென்றே ஊழியர்களை நியமனம் செய்துள்ளன. அவர்கள் அனுபவத்தை பரிமாற்றம் செய்து கொள்ள

ஏற்பாடுகள் செய்து குடியேறிய தொழிலாளர்களை தொழிற் சங்கங்களிலும் கம்யூனிஸ்டுக் கட்சியிலும் சேரும்படி அழைக்கிறார்கள். இந்தக் குடியேறிய தொழிலாளர்களின் சுதேசநாடுகளின் சோதரக் கட்சிகள் இப்பணிக்கு விருப்ப பூர்வம் உதவி செய்கின்றன.

ஒரு நாட்டிலிருந்து இன்னொரு நாட்டுக்கு மனித சக்தி முக்கியமாயும் தொழிலாளர்கள் பெயர்ந்து செல்வது சம் பந்தமான பிரச்சினைகள் நமது காலத்தின் தேசிய சர்வ தேசிய நடப்புகளுக்கு முக்கியமானவை.* ஏகபோக மூலதனம் தேவையான மனித சக்தியைப் பெற்று அனுகூல மடைகிறது ; அதோடு அது குடியேறிய தொழிலாளர்களைத் தனது சொந்த நாட்டுத் தொழிலாளர்களை நெருக்குவதற் கான சாதனமாயும் பயன்படுத்துகிறது ; வெளி நாடுகளி லிருந்து வந்த தொழிலாளர்கள் உள்நாட்டுத் தொழிலாளர் களை விடவும் குறைந்த சலுகைகள் பெற்று வேலை செய்யத் தயாராக இருக்கிறார்கள். காரணம் அவர்களது தாய் நாட்டில் கூலி இதை விடவும் மிகக் குறைவு. வேலையற்றோர்

* எடுத்துக் காட்டாக கடந்த நூற்றாண்டில் 1.5 மில்லியன் மக்கள் வேல்ஸ் நாட்டை விட்டு (இதன் இப்போதைய ஜனத்தொகை 1 மில்லியன்) இங்கி லாந்தில் அல்லது வெளிநாடுகளில் குடியமரச் சென்றார்கள். இதனால் வேல்ஸ் நாட்டு மக்களின் முன்னேற்றத்துக்கு எத்தகைய விளைவுகள் ஏற்பட்டி ருக்கும் என்று சொல்லவும் வேண்டுமோ ?பதினாயிரக் கணக்கான மக்கள் ஆண்டுதோறும் ஸ்காட்லந்தை விட்டு மேலும் சிறந்த வாழ்க்கையை நாடிப் போகி றார்கள். இதனிடையில் வேறு நாடுகளில் பிறந்த 1.7 மில்லியன் பேர் இங்கிலாந்தில் வேலை செய் கிறார்கள். சுவிட்சர்லந்தில் தொழில் புரிவோரில் 20 சதவிகிதம் வெளி நாட்டவர். பிரான்சில் 1.72 மில்லியன் பேர் வெளிநாட்டவர். ஆப்பிரிக்காவிலும் மனிதசக்தி பெயர்ந்து வருகிறது. மாலாவி, லெசோதோ, போட்ஸ்வானா, ஸ்வாசிலந்து மக்கள் தென்னாப்பிரிக்கா செல்லுகிறார்கள். அங்கு தொழிற் சாலைகளிலும் விவசாயத்திலும் வேலையாட்கள் தேவை இருக்கிறது.

பட்டாளம் நிரந்தரமாக இருந்தபோதிலும், சிறு பெல்ஜியம் நாட்டின் ஏகபோகங்கள் ஆயிரக்கணக்கான குடியேறிய தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்தியுள்ளன. பிரான்சில் வேலையற்றோர் 1.5 மில்லியன் பேர் இருப்பர். வேலைசெய்யும் வெளிநாட்டுத் தொழிலாளர் தொகை இதனை விஞ்சும். பல்வேறு தேசிய இனங்களைச் சேர்ந்த தொழிலாளர்களை பூர்ஷுவா வர்க்கம் ஒருவருக்கு ஒருவர் எதிராக மோத விடுகிறது, தேசியவாதம் குறு தேசிய வெறிக்கு வித்திடுகிறது. இதன் நோக்கம் ஒன்றிணைந்த சர்வதேசப் பாட்டாளி வர்க்க முன்னணியைச் சீர்குலைப்பதும், தொழிலாளி வர்க்கத்தை முதலாளித்துவ அமைப்பை வீழ்த்துவதற்குப் போராட வேண்டும் எனும் அதன் பிரதான லட்சியத்தில் இருந்து திசை திருப்புவதும் ஆகும்.

தொழிலாளி வர்க்கத்தின் அதிகரித்து வரும் தலைமைப் பாத்திரம் என்பது முதலாளித்துவ சமுதாயத்திலான தேசிய நடப்புகளின் முக்கியமான அம்சமாகும். தேசிய அளவில் தொழில் துறைப் பாட்டாளி வர்க்கம் உருவகம் பெறுவது தேசத்தை சமுக தேசிய ஒடுக்குமுறையில் இருந்து விடுதலை செய்வதற்கான முக்கிய நிபந்தனை என்று மார்க்ஸ் கருதினார். பாட்டாளி வர்க்கம் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றுவதை "தேசிய விமோசனத்துக்கான அவசிய நிபந்தனை"* என்று வருணித்தார்.

ஆட்சியதிகாரம் பற்றிய விஷயம் இறுதியாக முடிவு கட்டப்படும் வரை, தொழிலாளி வர்க்கத்தின் தலைமைப் பாத்திரம் என்பது சார்பியலானதே. அது பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்துக்குச் சமமானதாகாது. இதற்குக் காரணம் வர்க்கப் போராட்டத்தின் மாறிய நிலைமைகளும், சோஷலிஸ்டுப் புரட்சியின் அணுகுமுறை செல்வழியிலும், புரட்சிக்கான அரசியல் சேனையின் உருவாக்கத்திலும் பிரத்தியேக அம்சங்கள் தோற்றமளிப்பதும் ஆகும்.

---

* மார்க்ஸ், எங்கெல்ஸ், 'நூல்கள்', தொகுதி 17, பெர்லின், 1968, பக். 558.

தேசத்தின் சித்தத்தைப் புறக்கணித்து, ஏகபோக மூலதனம் அதைப் பெரும்பாலும் அழிவுப் பாதைக்கே இட்டுச் செல்கிறது. இங்குதான் தொழிலாளி வர்க்கம் தேசத்தின் பார்வையில் அதிக மதிப்பைப் பெறுகிறது, இந்த வர்க்கம் மட்டுமே மெய்யான தேசிய நலன்களை முரண் பாடுகள் இன்றிப் பாதுகாக்கிறது. பூர்ஷுவா வர்க்கம் ஆட்சியதிகாரத்தை இன்னமும் தன்வசம் வைத்திருக்க முடிகின்றது என்றால், அதற்குக் காரணம், அது இன்னமும் பொருளாதாரம், அரசியல், பொறியமைவு மீது ஆதிக்கம் செலுத்திக் கொண்டும், சித்தாந்தப் பிரசார சாதனங்களைத் தன் பிடிப்பில் வைத்துக் கொண்டும் இருக்கிறது என்னும் மெய்நடப்பு மட்டுமேயாகும்.

தொழிலாளி வர்க்கத்தின் தலைமையிலான ஜனநாயக சக்திகள் பூர்ஷுவா வர்க்கத்தின் நிலைகளுக்கு அபாயம் விளைக்கும் தன்மையிலுள்ள பல நாடுகளில் பூர்ஷுவா வர்க்கத்தை ஆட்சியதிகாரத்தில் வைத்திருப்பதற்கான பணியில் சர்வதேச ஏகாதிபத்தியம் மிகப் பெரும் பங்கு வகிக்கிறது, இரண்டாம் உலகப்போரில் சுடுதல் ஓய்ந்த போது, ஐரோப்பாவில் பூர்ஷுவா வர்க்கத்தின் ஆட்சி அதி காரத்துக்கு முட்டுக்கொடுக்கவும், தொழிலாளி வர்க்கத்தின் செல்வாக்கை ஒடுக்கவும், அமெரிக்கா பெரும்பாடு பட்டது. லத்தீன் அமெரிக்க நாடுகளில் கூட அமெரிக்காவின் ஏக போகங்கள், ராணுவ சர்வாதிகாரத்தை நிறுவியும், ஆயுத மேந்திய தலையீடு நடத்தியும், ராணுவச்சதி மூலம் தொழி லாளி வர்க்கத்தை அழித்தொழிக்க உள்நாட்டுப் பிற்போக்கு சக்திகளுக்கு உதவியும் மக்களின் விடுதலைப் போராட் டத்தை எதிர்த்துச் சமராடுகிறது. இது பல பத்தாண்டு களாக நடந்து வருகிறது 1825-ல் பொலிவியா சுதந்திரம் பெற்றதற்குப் பின்னர் அந்த நாட்டின் வரலாற்றில் 180 ஆட்சிக் கவிழ்ப்பு முயற்சிகள் நடந்துள்ளன, எல்லாம் அமெரிக்க முதலாளித்துவத்தின் தூண்டுதலால். இதே கார ணத்தால் பெரு நாட்டின் அதிபர்களில் 96 பேரில் 87 பேர்

பதவிக் காலம் முடியுமுன்பே ஆட்சியிலிருந்து அகற்றப் பட்டனர். இத்தகை தலையீடுகளை 1947-ல் கிரீஸ் நாட்டில் தொடங்கி 1965-ல் வியத்நாமில் போய் முடித்தனர். சராசரி ஒவ்வொரு 18 மாதந்தோறும் அமெரிக்காவானது பல்வேறு நாடுகளுக்கு, ராணுவம் அல்லது அரை ராணுவப் படைகளை அரசாங்கங்களை கவிழ்க்கும் நோக்கத்துடனும் கொரிலா இயக்கத்துடனும் மோதவும், ''கம்யூனிஸ்டு அபாயத்தை'' எதிர்த்துப் போராடவும் வேண்டி அனுப்பி வந்துள்ளது. இது மக்களினங்களின் முன்னேற்றத்தின் மீது எதிர்மறை யான விளைவுகளை ஏற்படுத்தியிருக்கிறது.

இன்றைய நிலைமைகளில் ஒரு தேசத்தின் நிலைமையிலான மாறுதல், ஐக்கிய மக்கள் ஏகாதிபத்திய- எதிர்ப்பு, ஏகபோக எதிர்ப்பு கட்டுக்கோப்பினுள், அதாவது, சோஷலிஸ்டுப் புரட்சி வெற்றி பெறுவதற்கு முன்னதாக ஏற்படலாம். இந்த முன்னணியில் தொழிலாளி வர்க்கத்தின் தலைமைப் பாத்திரம் முழுமையாகவோ அல்லது தொடர்ந்தோ இல்லா விடினும் இது முதலில் தேசத்தின் எல்லா முற்போக்குச் சக்திகளையும் ஒற்றுமைப் படுத்தவும் பின்னர் ஆட்சியதி காரத்தை வென்று பெறக் கேந்திரமான இடங்களைப் பெறவும் சோஷலிஸ்டுப் புரட்சியை ஒட்டுமொத்தம் உறுதிப் படுத்துவதற்கான தீவிரமான சமூக, பொருளாதார மாற் றங்களை நிறைவேற்றவும் இது இன்னும் முக்கியமாக இருக் கிறது.

தொழிற்சங்க இயக்கம் குறிப்பாயும் கம்யூனிஸ்டுகளுடன் தொடர்பு இணைவு கொண்ட பகுதி உலகப் புரட்சிகர இயக்கம் மீது, பலமான செல்வாக்குச் செலுத்துகிறது. இந்த இயக்கத்தின் தேசிய அம்சங்கள், சர்வதேசத் தொழி லாளி வர்க்கத்தின் ஆட்சியதிகாரத்தை அ) ஆக்கிரமிப்புக்கு இலக்கான மககளினங்களின் சுதந்திரம், சுயாதீனத்தைப் பாதுகாக்கவும், ஆ) காலனியாதிக்கம் நவீன காலனியாதிக் கத்துக்கு எதிராக தேச விடுதலை இயக்கத்துக்கு உதவவும், விடுதலை பெற்ற மக்கள் புதுவாழ்வை நிறுவிக் கொள்வதற்

கும், இ) தேசவிடுதலை, பொதுவான ஜனநாயக இயக்கங்களில் பாட்டாளி வர்க்க சர்வதேசிய சித்தாந்தத்தினைப் பரப்புவதற்கும், பயன்படுத்த வாய்ப்பளிக்கின்றன.

இன்றைய பூர்ஷுவா உலகில் தேசிய சர்வதேசிய இயக்கங்கள் சர்வதேசத் தொழிலாளி வர்க்கம் தேசியவாதத்தையும் குறு தேசிய வெறியையும் செயல்படாது தடுப்பதில் பெறும் வெற்றியையே பெருமளவு சார்ந்ததாக இருக்கிறது. மார்க்ஸ் எழுதினர்: "குறு தேசிய வெறி, தொழிலாளி வர்க்கத்தின் விடுதலைக்குப் பிரதான நிபந்தனையாக உள்ள அதன் சர்வதேசிய ஒத்துழைப்பைத் தடங்கல் செய்வதற்கான ஒரு சாதனம்."* பிற்போக்கு சக்திகள் தேசியவாத சித்தாந்தத்தை ஊக்குவிக்கின்றன, இது மேற்கு ஜெர்மனியில் நவீன-நாஜிசம், இஸ்ரேலில் ஜியோனிசம், அமெரிக்காவில் வெள்ளைநிற வெறி மற்றும் தனது பிரத்தியேகத்தன்மை பல கொண்ட ஆப்பிரிக்க கருப்பர் தேசியவாதம் இவற்றில் அப்பட்டமாகத் தெரிகிறது. தேசியவாதம் இந்த யுகத்தின் சிறப்பு முத்திரை மற்றும் உலகக் கம்யூனிசத்தை எதிர்த்த ஆயுதம் எனவும் வருணிக்கப் படுகிறது. கம்யூனிச எதிர்ப்பும் பல ராணுவ வெறி போதனைகளும் தேசிய வாதத்தின் ஊடே பொழியப் படுகின்றன.

1969, கம்யூனிஸ்டு, தொழிலாளர் கட்சிகளின் மாநாட்டில் லியனித் பிரெஷ்நேவ் கூறியதாவது: "ஏகாதிபத்திய வாதிகளுக்கு சர்வதேசப்பாட்டாளிவர்க்க ஒருமைப்பாட்டின் வன்மை பற்றி நன்ருகத் தெரியும். இதனுல்தான் அவர்கள் சோஷலிஸ்டு சக்திகளையும் புரட்சிஇயக்கத்தையும் எதிர்த்துப் போராட தேசியவாதத்தை நம்பிநிற்கிருர்கள்."**

சர்வதேசத் தொழிலாளி வர்க்கமும் அதன் மார்க்சிய-லெனினியக் கட்சிகளும் தேசிய நலன்களைப் பாதுகாக்கின்

---

* 'அதே நூல்'

** 1969 மாஸ்கோவில் நடைபெற்ற கம்யூனிஸ்டு, தொழிலாளர் கடசிகளின் சர்வதேச மாநாடு, பக். 160.

றன, ஜனநாயக சக்திகளின் ஒற்றுமைக்குப் பாடுபடுகின்றன. ஏகபோக மூலதனத்தின் பிற்போக்குத் திட்டங்களைச் செயல் குலையவைக்கின்றன. இவ்வாறு செய்வதன் மூலம் அவை உலகப் புரட்சி இயக்கத்தின் தேசியப் பிரச்சினைகள் மீது பிரம்மாண்டமான செல்வாக்குச் செலுத்துகின்றன, அதன் வளர்ச்சியை வேகப்படுத்துகின்றன, பாட்டாளிவர்க்க சர்வ தேசியத்தின் கருத்துகளை மக்கள் திரளினரிடையே கொண்டு வருகின்றன.

கம்யூனிஸ்டு, தொழிலாளர் கட்சிகள் பூர்ஷுவா தேசியவாதத்துக்கு எதிராக தொழிலாளி வர்க்கத்தின் சோதனையில் வென்ற ஆயுதமான பாட்டாளி வர்க்க சர்வதேசியத்தை வீசுகின்றன. அவற்றின் குறிக்கோள் வாசகம் குறுந்தேசிய வெறியை எதிர்த்துத் தாட்சண்யமற்ற போராட்டம் நடத்தல், தொழிலாளி வர்க்கத்துக்கும் அனைத்து உழைக்கும் மக்களுக்கும் இடையறுத சர்வதேசிய போதனை அளித்தல் என்பதே. தேசிய அம்சங்கள் கவனத்துக் குரியன என்ற போதிலும் அவற்றின் பாத்திரம் குறித்து தொழிலாளி வர்க்கத்துக்கு ஒரு மிகையான கருத்தைத் தர முயலும் பூர்ஷுவா தலைமையை என்றுமே பின்பற்றலாகாது என்பது ஏகாதிபத்திய சகாப்தத்தில் வர்க்கப் போராட்டத்தின் சோதனையில் புடமிடப்பட்ட ஒரு முக்கியமான லெனினிய அடிக்கோளாகும். லெனின் கருத்துப்படி, முதலாளித்துவத்தில் இருந்து சோஷலிசத்துக்கு மாறிச் செல்லும் மனித குலத்தின் வரலாற்றுப் பாதையில் முக்கியமான கடமை **பொதுவான** சர்வதேசிய குறிக் கோளுக்கு ஒவ்வொரு நாட்டிலுமான **ஸ்தூலமான** அணுகு முறையில் இருக்கும். பிரத்தியேகமான தேசிய அம்சத்தை முன் அறிதல், கண்டு குறித்தல், ஆராய்தல், படித்தறிதல், புரிந்துகொள்ளல், தொழிலாளி வர்க்க இயக்கத்தின் உள்ளேயான சந்தர்ப்ப வாதம், இடது சாரி வரட்டுத் தத்துவ வாதம் இவற்றை எதிர்த்து வெற்றிபெறல், பூர்ஷுவா வர்க்கத்தை முறியடித்து வீழ்த்தல், பாட்டாளி வர்க்க

சர்வாதிகாரத்தை நிலைநாட்டுதல், இவையே பிரதானக் கடமைகளாகும்.

ஒவ்வொரு நாட்டிலும் தொழிலாளி வர்க்கத்தின் தேசிய, சர்வதேசியக் கடமைகளை வெற்றிகரமாக நிறைவேற்றுவது என்பது, எவ்வளவு சரியாக அவை புரிந்து கொள்ளப்படுகின்றன, எவ்வளவு தூரம் முரணற்ற வகையில் அவை சர்வதேசிய அம்சங்களுக்குக் கீழடக்கப்பட்டுள்ளன என்பவற்றைச் சார்ந்தே இருக்கும்.

அத்தியாயம் பனிரெண்டு

தேசவிடுதலை இயக்கத்திலும் வளர்முக நாடுகளிலுமான தேசியப் பிரச்சினை

1. இன்றைய தேசிய விடுதலைப் புரட்சியில் தேசிய சமூக அம்சங்களின் தொடர்பாடு

காலனி உலகில் சமுதாய நிலைமைகளில் ஓர் அடிப்படையான புரட்சி இன்றி மனிதகுலம் முன்னேற்றத்தை நோக்கிச் செல்ல முடியுமா? நூறுண்டுகளுக்கு முன்பு மார்க்ஸ் இந்த ஜீவாதார முக்கியத்துவமுடைய கேள்வியை எழுப்பினுர். இதற்கான விடையை மார்க்சிய-லெனினிய போதனையும் மெய்நடப்புக்களும் வழங்குகின்றன. மனித குலத்தை எதிரிடும் கடமைகளை எல்லா மாகண்டங்களையும் சேர்ந்த மக்களினங்கள் சேர்ந்து நின்று நிறைவேற்றுகின்றன. இதில் ஒவ்வொரு மக்களும் எந்த அளவுக்கு ஈடுபட்டிருக்கிறுர்கள் என்பதை சர்வதேச தொழிலாளி வர்க்கம் ஏகாதிபத்தியத்தை எதிர்த்த தனது போராட்டத்தையும் ஒடுக்கப்பட்ட மற்ற சார்பு நாட்டு மக்களின் தேசவிடுதலை இயக்கத்தையும் கலந்திணைப்பதில் எந்த அளவுக்கு வெற்றி பெற்றிருக்கிறதோ அதைச் சார்ந்ததாக இருக்கும். கீழ்த்திசை நாடுகளின் கோடானு கோடி உழைக்கும், சுரண்டப்படும் மக்களினங்களின் ஒரே நேச சக்தி சர்வதேசப்

பாட்டாளி வர்க்கமே''* என்பதாக லெனின் சுட்டிக் காட்டினர். ''ஏகாதிபத்திய-எதிர்ப்பு போராட்டத்தின் வரும் காலத்துக்கும் சோஷலிஸ்டு அமைப்புக்கும் தொழிலாளிவர்க்க இயக்கம் தேச விடுதலை இயக்கத்தின் சக்திகளுக்கும் இடையிலான கூட்டணியை வலுப்படுத்துவது தலையாய முக்கியத்துவமுடையது''** என்று 1969-ல் நடைபெற்ற கம்யூனிஸ்டு, தொழிலாளர் கட்சிகளின் மாநாடு தெட்டத்தெளிவாக்கியது.

சர்வதேசத் தொழிலாளி வர்க்கத்துக்கும் தேசவிடுதலை இயக்கத்துக்கும் இடையிலான கூட்டணி பல்வேறு காரணிகளைச் சார்ந்ததாக உள்ளது, குறிப்பாயும் விடுதலைக்குப் போராடிவரும் நாடுகளில் தேசியப் பிரச்சினை வகிக்கும் இடம், பாத்திரம் குறித்த ஒரு சரியான அணுகு முறையைச் சார்ந்ததாக உள்ளது. தேசியப் பிரச்சினைக்கு உள்ளேயே ஒடுக்கும், ஒடுக்கப்படும் தேசங்களுக்கு இடையிலான உறவுகளின் பிரச்சினைக்கு முதலிடம் அளிக்கப்பட வேண்டும்.

ஒடுக்கும், ஒடுக்கப்படும் தேசங்களின் பரஸ்பர உறவுகளின் பெருத்தச் சூழலில்தான் பெருமளவுக்கு தேசிய ஒடுக்குமுறை அசமத்துவம், ஒரு மக்களை இன்னொரு மக்கள் சுரண்டுதல் ஆகியவற்றை ஒழித்தகற்ற முடியும். ஒடுக்கப்பட்டவரும் சார்புநிலையில் இருப்போருமான மக்களினங்கள் விடுதலைபெற முடியும், பொருளாதாரத்தில் வளர்ச்சியடைந்ததும் பின்தங்கி நிற்பதுமான நாடுகளிடையிலான இடைவெளி படிப்படியே மூடுபடும். இவையே நோக்கங்கள், இவற்றைச் சாதனையாக்குவதற்கு சர்வதேசத் தொழிலாளி வர்க்கம் ஒடுக்கப்பட்ட ஒடுக்கப்படும் மக்களினங்களின் இடையே நிலவும் சமுசயங்களை அகற்றவேண்டும், வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளின் பாட்டாளிவர்க்கத்தின்

---

* வி. இ. லெனின், ''நூல் திரட்டு'', தொகுதி 30, பக். 162.

** 1969—மாஸ்கோவில் நடைபெற்ற கம்யூனிஸ்டு, தொழிலாளர் கட்சிகளின் சர்வதேச மாநாடு, பக். 30.

புரட்சிப் போராட்டத்துடன் காலனிகள், சார்பு நாடுகளின் தேசவிடுதலைப் போராட்டத்தை இரண்டற இணைத்தல் வேண்டும்.

தேசவிடுதலை இயக்கம் பிரம்மாண்டமான வெற்றிகளை சாதனையாக்கியுள்ளது. ஆசியா-ஆப்பிரிக்காவின் பெருவாரிப் பகுதிகளில் சர்வதேசிய அளவில் அப்பட்டமான தேசிய-காலனி ஒடுக்குமுறை இல்லை, இன்று 2 கோடி மக்களைக் கொண்டதான 40-க்கும் அதிகமான பிரதேசங்கள் இன்னமும் காலனியாதிக்க ஆட்சியின் கீழுள்ளன, நடைமுறையில் தென்னுப்பிரிக்க குடியரசிலும் தெற்கு ரோடிஷியாவிலும் இருக்கும் வெள்ளை நிறத்தவரல்லாத மக்கள் இன்னும் காலனி ஒடுக்குமுறையின் கீழுள்ளனர்.

தேசவிடுதலை இயக்கம் இவ்வளவு சிறப்பாக வெற்றியீட்டியிருப்பதற்குக் காரணம் உலக சோஷலிசத்தின் எதிர்த் தாக்குதலும், வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளில் வர்க்கப் போராட்டம் விடாது நடைபெற்று வருவதும் மிகவும் சாதகமான நிலைமைகளை உண்டாக்கியிருப்பதே.

முதலாளித்துவத்தின் கட்டுமானப் பகுதிகளான—தேசிய இனவெறி ஒடுக்குமுறையும் காலனிமுறைச் சுரண்டலும், முதலாளித்துவம் அதன் இறுதியான ஏகபோக கட்டத்துக்குக் கடந்து செல்லும்போது தவிர்க்க முடியாதவகையில் மிகவும் கடுமையாக இருக்கும். இதிலிருந்து தேசிய காலனி ஒடுக்குமுறையையும், இனவெறியையும், முதலாளித்துவம் முற்றுக ஒழிக்கப்பட்டு சோஷலிசம் வெற்றிகரமாகத் தோற்றமளித்தால் ஒழிய, முழுமையாக அகற்ற முடியாது என்ற முடிவு தொடர்கிறது. மார்க்சிய-லெனினியம் தேச விடுதலை இயக்கங்களுக்கு மாபெரும் முக்கியத்துவம் அளிக்கிறது, அவற்றை பிரதான குறிக்கோளான சோஷலிஸ்டுப் புரட்சியுடன் சேர்த்தே கருதிப் பார்க்கிறது. தேசிய விடுதலை இயக்கம் ஒரு விசேஷப் பாத்திரம் வகிக்கிறது எனும் கருத்து மார்க்சிய—லெனினியத்துக்கு மாறுனது: இதன் ஆதரவாளர்கள் ஏகாதி

பத்திய-எதிர்ப்பு போராட்டத்துக்கு சர்வதேச நிலைமையே பின்னணியாக இருக்கிறது என்பதை அறியாமல் தேசியவாத அனுமானங்களில் இறங்கி விடுகிறார்கள்.ஏகாதிபத்தியம் பலவீனப்படுவதற்குக் காரணம் உலகளாவிய நடப்புக்களின் விளைவே என்பதையும், இதில் முதலாவதாயும் முக்கியமானதாயும் அக்டோபர் புரட்சி, சோவியத் சோஷலிஸ்டு அரசின் அமைப்பு, பின்னர் உலக சோஷலிஸ்டு அமைப்பின் உருவாக்கம் இவற்றின் நேரடி விளைவே என்பதையும் அவர்கள் காண மறுக்கின்றனர்.

உள்நாட்டு வெளிநாட்டு புறநிலை, அகநிலைக் காரணிகளின் சாதகமான இணைப்பினால் உறுதிசெய்யப்பட்டதான, உலகப் புரட்சி இயக்கத்தின் வெற்றிகளுக்குச் சான்று தரும், வரலாற்று நிகழ்வுகளை மதிப்பீடு செய்வதில் புகும் வட்டார மனப்பான்மை. பொதுவான சித்திரத்தைப் புரட்டி, தவிர்க்க முடியாத வகையில் தவறான அரசியல் முடிவுகளுக்கு இட்டுச் செல்கிறது.

ஏகாதிபத்தியம் பலவீனமுறுவதற்கு தேசியவிடுதலைப் போராட்டமே முழுதும் காரணம் என்று காட்டி, அதுவே முக்கியமான தீர்மானகரமான காரணி என்று சாற்றுவது, அந்தப் போராட்டத்தின் மறுக்கமுடியாத வெற்றிகள், சோஷலிசத்துக்கான புறவய நிலைமைகள் குறிப்பாயும் தொழில்வள அடிப்படை அறவே இல்லாத, சமூகரீதியிலும் பொருளாதாரத் துறையிலும் வெகு சொற்ப அளவுக்கே முன்னேற்றமடைந்த, பிராந்தியங்களுக்குள் கட்டுண்டு கிடக்கின்றன என்பதை முற்றும் மறந்துவிடும் செயலாகும். சோஷலிஸ்டுப் புரட்சி குறித்த லெனினிய போதனை, சோஷலிஸ்டு நிலைமறுப்பின் வெற்றிக்கு முன்தேவைகள் என்ற முறையில், அகநிலை புறவயநிலைமைகளின் இணைப்பு, புரட்சி சக்திகளின் இருப்பு, முக்கியமான பொருள் உற்பத்தி மூலவளங்களின் இருப்பு ஆகியவற்றை அடிக்கோளாகக் காட்டுகிறது.

வளர்முக நாடுகள் விவசாயி நாடுகளாக இருப்பதால், புரட்சியில் தொழிலாளி வர்க்கமே தலைமைப் பாத்திரம் வகிக்கும் எனும் மார்க்சிய-லெனினியக் கோட்பாட்டின் கீழ் அவை வரமாட்டா என்று சொல்வோரும் உளர். 1969ல் கம்யூனிஸ்டு, தொழிலாளர் கட்சிகளின் மாநாட்டில் உரையாற்றிய லியனித் பிரஷ்நேவ் கூறியதாவது: ‘‘உலகின் அந்தப் பகுதியிலான விவசாயிகள் ஒரு மாபெரும் புரட்சிகர சக்தி ஆவர், ஆனால் பெரும்பாலான இடங்களில் இவர்கள் தனித்த சக்தியாய் அதற்கு ஏற்படும் எல்லா ஊசலாட்டங்களுக்கும் சித்தாந்த, அரசியல் முரண்பாடுகளுக்கும் உறைவிடமாய் இருக்கிறார்கள். தற்போதைக்கு இது வேறு வகையில் இருக்க முடியாது. காரணம் மிகப் பெரும்பாலான விவசாயி மக்கள் இன்னமும் படுபயங்கர வறுமையில் உரிமைகள் மறுதலிக்கப்பட்டும், பிரபுத்துவ, அரைப் பிரபுத்துவ உறவுகள் நீடித்து நிலவியும் வரும் நிலைமையில் வாழ்கிறார்கள்.’’*

விவசாயிகள் தொழிலாளி வர்க்கத்தின் தலைமையிலும் தொழிலாளருடன் கூட்டணி சேர்ந்தும் மட்டுமே வெற்றி பெறமுடியும். தொழிலாளி வர்க்கத்தின் அணிகள் தமது வேலையின் புறவய நிலைமைகளால் திடமாக இணைக்கப் பட்டிருக்கின்றன, இவை இவ்வணிகள் ஒருமுகப்படுவதை ஊக்குவித்து, வர்க்க ஒருமைப்பாட்டைத் தோற்றுவிக்கின்றன.

நல்ல ஸ்தாபனம், உறுதியான கட்டுப்பாடு, வலுவான திடநம்பிக்கை இவை மார்க்சிய-லெனினியத்தின் பதாகையின் கீழ் அணிவகுத்து நிற்கும் தொழிலாளரின் முக்கியமான தன்மைகளாகும், மேலும் புரட்சி இயக்கத்தில் தலைமைப் பாத்திரத்தை நிர்வகிப்பதற்கு இன்றியமையாத பொதுவான புரட்சிப் பண்பின் நிபந்தனையுமாகும். உலகப் பாட்டாளி வர்க்கத்தின் புரட்சிகரப் போராட்டமும் அதன் முக்கிய சாதனையான—உலக சோஷலிஸ்டு அமைப்பும் இல்லாமல், கீழ்த்திசையின் விவசாயிகளே அமோகமாக

* லி. இ. பிரெஷ்நேவ், லெனின் வழியைப் பின்பற்றி, பக். 175.

இருக்கும் நாடுகளில் விடுதலைப் போராட்டத்தின் வெற்றிகளைப் பற்றி எண்ணிப் பார்க்கவுங்கூட முடியாது.

அன்னிய காலனியாதிக்க வாதிகளையும் அவர்களது உள்நாட்டுக் கையாட்களையும் முறியடித்த பின்னுங்கூட, தொழிலாளி வர்க்கத்தின் தலைமை இன்றி, விவசாயிகள் புதிய மேலும் முற்போக்கான சமூக உறவுகளை உருவாக்க இயலாது என்பதை மனதிற் கொள்ள வேண்டும். விவசாயத்தின் பொது நிலைமைகளால் சிதறிப் பிரிந்தும், நிலத்தோடு கட்டுண்டும் கிடக்கும் விவசாயிகளிடம் போதிய அளவுக்கு ஒற்றுமையோ அரசியல் போதமோ கிடையாது. 19 ஆம் நூற்றாண்டில் சீனாவில் நடந்த தைப்பிங் கலகத்தின் வரலாற்றைப் பார்ப்போம், பிரபுத்துவ அரைப் பிரபுத்துவ சுரண்டல் முறைகளைத் தகர்க்கும் விஷயத்திலும் கூட, விவசாயிகள் முன்னுள் சமூக உறவுகளையே சகட்டுமேனி, மறுபடியும் பயன்படுத்தினார்கள்.

கீழ்த்திசை நாடுகளின் கம்யூனிஸ்டுகளுடன் உரையாற்றிய லெனின், தேசவிடுதலை இயக்கத்தின் உறுப்பினர்கள் மத்தியிலான அவர்களது பணியின் சிறப்பு அம்சங்களை உருவரை செய்து காட்டினார். அவர் கூறியதாவது: "இந்த விஷயத்தில் இதற்கு முன்னால் உலகின் கம்யூனிஸ்டுகளை எதிரிட்டிராத ஒரு கடமை உங்கள் எதிரே நிற்கிறது: கம்யூனிசத்தின் பொதுவான தத்துவம் நடைமுறையினைச் சார்ந்து நின்று நீங்கள், ஐரோப்பிய நாடுகளில் இல்லாத பிரத்தியேக நிலைமைகளுக்கு ஏற்ப உங்களைத் தகவமைத்துக் கொள்ள வேண்டும்; மக்கள் தொகையில் பெரும்பான்மை விவசாயிகளாக இருக்கும் நிலைமைகளில், உங்கள் பணி முதலாளித்துவத்தை எதிர்த்தல்ல, மத்திய கால எச்ச மிச்சங்களை எதிர்த்துப் போராட்டம் நடத்துவதே என்ற நிலைமைகளில், தத்துவத்தையும் நடைமுறையையும் நீங்கள் நன்கு பிரயோகிக்க இயலவேண்டும்."*

---

* வி. இ. லெனின் "நூல் திரட்டு", தொகுதி 30, பக். 161.

கம்யூனிஸ்டுகள் ''ஒவ்வொரு நாட்டின் உழைக்கும், சுரண்டப்படும் மக்கள் திரளினரை அணுகி அவர்கள் புரிந்து கொள்ளும் மொழியில் அவர்களது விமோசனத்துக்கான ஒரே தாரகம் சர்வதேசியப் புரட்சியின் வெற்றியில் காணக் கிடக்கிறது என்று எடுத்துச் சொல்ல வேண்டும்''* என்று அவர் வலியுறுத்தினார்.

இது இன்று உச்சபட்சமான முக்கியத்துவமுடையதாகும்.

பாட்டாளி வர்க்கம், அனைத்து உழைக்கும், சுரண்டப் படும் மக்களின் பொது விரோதியான ஏகாதிபத்தியத்தை எதிர்த்தப் போராட்டம், இதில் பங்கேற்போர் யாவரும் சேர்ந்து செயல்படும் பட்சத்தில் மிகத்திறமான பலன் தருவதாக இருக்கும். இந்தப் போராட்டத்தின் தேசிய சமுதாய அம்சங்களை எதிர்ப்பது தவறாகும், காரணம் ஏகாதிபத்தியத்தின் கீழ் தேசிய-காலனி பாணி ஒடுக்கு முறை உள்ளிட்ட எல்லா வடிவங்களிலுமான ஒடுக்கு முறையும் மேலும் கடுமையுறக் கூடும்-முதலாளித்துவ ஏக போகங்களை எதிர்த்த சர்வதேசத் தொழிலாளி வர்க்கப் போராட்டம் தவிர்க்க முடியாத வகையில் காலனி யாதிக்கத்தை எதிர்த்தும் நெறியாண்மை செய்யப்படுகிறது. தேசிய சுதந்திரத்தை வென்று பெறவோ அல்லது வலுப் படுத்திக் கொள்ளவோ போராடும் மக்களினங்களின் எதிர் காலம், சோஷலிஸ்டுப் பாதையில் உலகில் புரட்சிகர மாற்றங்கள் ஏற்படுவதன் வருங்கால வாய்ப்புடன் உள்ளார்ந்து இணைக்கப்பட்டிருக்கிறது.

சர்வதேசத் தொழிலாளி வர்க்க இயக்கம் மட்டுமே, தேச விடுதலைப் போராட்டத்தின் முக்கிய லட்சியமான, தேசிய ஒடுக்குமுறையை இறுதியாக ஒழிப்பது என்பதை சாதனையாக்குவதற்குரிய நிலைமைகளை உருவாக்குகிறது, அது முதலாளித்துவ அமைப்பு முறையை அரித்தழித்து விடுதலை இயக்கம் விரிவடைய வகை செய்கிறது.'' மேலும்

* அதே நூல், பக். 162.

சுரண்டலை எதிர்த்துப் போராடி வரும் வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளின் தொழிலாளி-வர்க்கம் தேச விடுதலை இயக்கத்துடன் கூட்டணி சேரப் பாடுபடுகிறது, ஒடுக்கப்பட்ட மக்களின் போராட்டங்கள் எல்லாவற்றையும் ஆதரிக்கிறது, அவர்களுக்குப் புரட்சி அனுபவங்களை வழங்கு கிறது. இதற்கும் அப்பால், சர்வதேசத் தொழிலாளி வர்க்க இயக்கத்தின் வெற்றிகளின் விளைவாகவும், தமது அர்ப் பணிப்பான சுய-போராட்டம் மூலமும் விடுதலை பெற்று, புதிய சோஷலிஸ்டு சமூக அமைப்பை நிர்மாணிப்பதில் இறங்கியுள்ள நாடுகளும் மக்களினங்களும் ஒடுக்கப்பட்டும், அண்டி வாழ்ந்தும் கிடக்கும் மக்களினங்களும் சாத்தியமான சகல உதவியையும் ஆதரவையும் வழங்குகின்றன. காலனி யாதிக்கத்தையும் நவீன காலனியாதிக்கத்தையும் அடித்து வீழ்த்த சோஷலிஸ்டு கூட்டுக் குடும்ப நாடுகளுடன் கூட்டணி அவசியம். அக்டோபர் புரட்சி நடந்து முடிந்த உடனேயே லெனின், காலனி சார்பு நாடுகளிலான புரட்சி இயக்கம் "நமது சோவியத் குடியரசு சர்வதேச ஏகாதிபத்தியத்தை எதிர்த்து நடத்தி வரும் புரட்சிகரப் போராட்டத்துடன் நேரடியாகச் சேர்ந்து நின்றால் மட்டுமே வெற்றிகரமான முடிவை எட்டமுடியும்"* என்று சுட்டிக் காட்டினார்.

உலக சோஷலிஸ்டு அமைப்பு நிறுவப்பட்டு அதன் பின்னர் உலக புரட்சி இயக்கம் மேலும் முன்னேற்றம் எய்தி, முதலாளித்துவம் பலவீனப்படுத்தப் பெற்றதால், சர்வதேசத் தொழிலாளி வர்க்கம் காலனி சார்பு நாடுகளின் விடுதலைப் போராட்டத்துக்கு உதவுவதற்கான புதிய வாய்ப் புகளைப் பெற்றது. முதலாவதாக, உலக சோஷலிசம் ஏகாதிபத்தியத்தின் காலனி அமைப்பு மீது வன்மையான தாக்குதல் நடத்தித் தன்னை வலுப்படுத்திக் கொண்டது (சீனப் புரட்சியின் வெற்றி, வடக்கு கொரியா, வடக்கு வியத்நாம் மக்கள் சோஷலிசத்தை ஏற்றது). இரண்டாவ தாக, சர்வதேச தொழிலாளி வர்க்க இயக்கமும் சோஷலிஸ்டு

* வி. இ. லெனின், "நூல் திரட்டு", தொகுதி 30, பக். 151.

நாடுகளும் தேசவிடுதலை இயக்கத்துக்குரிய தமது பொருளாதார அரசியல் ராணுவ உதவிகளைக் கணிசமாக அதிகரிக்க முடிந்தது. இந்த உதவியின் விளைவாகவே இந்த இயக்கம் இத்தகைய அழுத்தமான பலன்களை அடைவது சாத்தியமாயிற்று. முதலாளித்துவம் பொது நெருக்கடியின் மூன்றும் கட்டத்தை எட்டியபோது, ஏகாதிபத்திய காலனி முறை சிதைவுறத் தொடங்கியது.

முன்னாள் ஒடுக்கப்பட்ட மக்களினங்கள் தேசிய அரசுகளை அமைப்பது, ஆசிய ஆப்பிரிக்க நாடுகளின் தேசியப் பிரச்சினையின் உள்ளடக்கத்தில் மையமான இடத்தைப் பெறுகிறது. யுத்தப் பிற்கால கட்டத்தில் தேசிய அரசு நிர்மாணத்தின் நடப்பு கணிசமாயும் மாறுதலடைந்தது. வழக்கமாக தேசிய அரசுகள், முதலாளித்துவ வளர்ச்சியால் ஊட்டம் தரப்பெற்ற உள்ளார்ந்த தேசிய நடப்புக்கள் முதிர்ச்சியடைவதன் வாயிலாகத் தோன்றுகின்றன. எடுத்துக்காட்டாக ஐரோப்பாவில் தேசிய அரசுகள் தோன்றத் தொடங்கியவுடனே அவற்றுக்கு எப்போதுமே ஒரு பொருளாதார அடித்தளம் இருந்தது—மக்கள் தொகை முழுவதையும் அரவணைத்ததான உற்பத்தி சக்திகள் பொருளாதாரப் பிணைப்புக்களின் பொருத்தமான மட்டம் இருந்தது, பொதுவாக ஒரு முழுமையாக அமைந்த தேசிய போதமும், கட்சிகள் அல்லது அரசு அமைப்புகளைத் தழுவிய அரசியல் ஒற்றுமையும் இருந்தது. பெரும்பாலான ஐரோப்பிய நாடுகளில், தேசங்கள் சாரத்தில் ஏற்கெனவே உருவாகிவிட்டன. தேசிய அரசு இந்த நடப்பை வேகப்படுத்தி முழுநிறைவு செய்தது.

இந்தக் காரணிகள் ஏகாதிபத்திய ஆதிக்கத்தின் தவிர்க்க முடியாத பின் விளைவுகள் என்ற முறையில் நிலவியது உண்மையே. என்ற போதிலும், யுத்தப் பிற்கால கட்டத்தில் ஆசிய ஆப்பிரிக்க நாடுகளில் இவை அவ்வளவு தெளிவாக காணப்படவில்லை. ஏகாதிபத்தியத்தின் முக்கியமான அம்சங்களில் ஒன்று அது மிகவும் பின்தங்கிய நாடுகளில்

முதலாளித்துவ வளர்ச்சியை வேகப்படுத்துகிறது என்பதும், அதன்வழி தேசிய ஒடுக்கு முறைக்கு எதிரான போராட்டத்தை விரிவுபடுத்தித் தீவிரப்படுத்துவதுமாகும்"* என்று லெனின் சுட்டிக் காட்டினர். வன்மை மிக்க தேசிய இயக்கங்கள் அபிவிருத்தியடைந்தன. சில நாடுகளில் தேசிய அரசுகளை நிறுவவும் சுதந்திரத்தைப் பாதுகாத்துக் கொள்வதையும் முக்கிய நோக்கமாகக் கொண்ட போர்களுக்கு இட்டுச் சென்றன (இந்தோனேஷியா, அல்ஜீரியா, வியத்நாம்). இருப்பினும் தேசிய அரசுகளை அமைக்கும் பழைய வழியே பின்பற்றப்பட்டது, இதுவும் ஓரளவுக்கு ஒரு சில நாடுகளில்—இந்தியா, லெபனுன், மலேசியா, இலங்கை மற்றும் பிலிப்பைன்ஸ்—இவற்றில் மட்டுமே நிகழ்ந்தது. ஆயினும் மிகப்பல நாடுகளில் தேசிய அரசுகளின் உருவாக்கம் வெவ்வேறு பாணிகளில் பல தனிப்பட்ட அம்சங்களுடன் தொடர்ந்தது.

1969 சர்வதேசிய மாநாட்டில் உரையாற்றிய லியனித் பிரெஷ்நேவ் காலனி அடிமைத்தளையில் இருந்து விடுதலை பெற்ற தேசிய அரசுகளை மூன்று பிரதான பிரிவுகளாகப் பிரித்தார்.

முதலாவதாக, சோஷலிஸ்டு திசையமைவுடைய நாடுகள் உள்ளன, இவை அமைந்ததானது புரட்சிகர சக்திகளுக்கு முக்கியமான சாதனை, ஏகாதிபத்தியத்துக்கு கடுமையான தோல்வி, இதற்குள் இந்த நாடுகள் ஆக்கம் மிக்க சமூக, பொருளாதார மாறுதல்களைச் செய்து நிறைவேற்றுவதில் முதல் வெற்றிகளைப் பெற்றுவிட்டன.

இரண்டாவதாக, ஏகாதிபத்தியத்துடன் நெருக்கமான உறவு பூண்டு இருந்த பிற்போக்கு சக்திகள் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றியுள்ள தேசங்கள் உள்ளன. இதற்குக் காரணம் பல புறநிலைக்கூறுகளும் முன்னுள் காலனி உலகில் முற்போக்கு சக்திகள் போதிய ஸ்தாபன அமைப்பின்றி செயல் மறந்து நின்றதுமேயாகும். இந்தப் பிரிவில்

* "அதே நூல்", தொகுதி 23, பக். 78.

ராணுவ சர்வாதிகார ஆட்சிகள் உட்படும், இவை முற்போக்கு சக்திகளை பயங்கரமாக அச்சுறுத்துகின்றன. ஏகாதிபத்திய அரசுகள் இவற்றின் பிரதேசங்களைஆக்கிரமிப்பு நோக்கங்களுக்காகப் பயன்படுத்துகின்றன. குறிப்பாயும் ராணுவதளங்கள் நிறுவப் பயன்படுத்துகின்றன. இந்த நாடுகளில் கம்யூனிஸ்டுகளும் அவர்களது நேச சக்திகளும் செயல்படும் நிலைமைகள் காலனியாதிக்க கட்டத்தினை ஒத்ததாக இருக்கின்றன.

மூன்றாவதாக, இன்னுமொரு பிரிவு இருக்கிறது. இதன் திசையமைவோ எதிர்காலப் பாதையோ இன்னும் முற்றும் தெளிவாக்கப்படவில்லை-இங்கு முற்போக்கு சக்திகளுக்கும் ஏகாதிபத்திய-ஆதரவுடனான உள்நாட்டுப் பிற்போக்கு சக்திகளுக்கும் இடையே கடும் போராட்டம் நடந்து வருகிறது. உள்நாட்டில் பாகுபாட்டுத் தன்மை அதிகரித்து வருகிறது-மக்கள் திரளினர் மாறுதல்கள் வேண்டும் என்று தீவிரமாகக் கோருகின்றனர். ஆனால் தனது சுயவர்க்க நலன்களால் தூண்டப்பட்ட உயர்மட்ட தேசிய பூர்ஷுவாக்கள் சமுதாய முன்னேற்றத்தையும் முரணற்ற ஏகாதிபத்திய-எதிர்ப்புக் கொள்கையையும் எதிர்த்து வருகின்றனர். இது கடுமையான வர்க்கப் போராட்டத்துக்கு சடவேகம் தருகிறது.*

தேசிய-அரசு வளர்ச்சியின் இன்றைய பாணி பல காரணிகளால் உருவாக்கப்படுகிறது. முதலாவதாயும் முக்கியமாயும் இதில் உயர் மட்டத்திலான மெய்யாலும் வெகுஜனத் தன்மை வாய்ந்ததான தேச விடுதலை இயக்கம் இதிலடங்கும். இது சர்வதேச தொழிலாளி வர்க்கத்தின் இயக்கம் மற்றும் உலக சோஷலிஸ்டு அமைப்பின் வெகு வன்மையான செல்வாக்குக்கு இலக்காகியுள்ளது. முதலாளித்துவத்திலிருந்து சோஷலிசத்துக்கு மாறிச் செல்லும் இந்த

* 1969-ல் மாஸ்கோவில் நடைபெற்ற கம்யூனிஸ்டு, தொழிலாளர் கட்சிகளின் சர்வதேச மாநாடு, பக். 152-53.

சகாப்தத்தில், தேச விடுதலை இயக்கத்தை எதிரிட்டுக் கொண்டு காலனியாதிக்கவாதிகள் இனிமேலால் முன்போல ஆட்சி புரிய முடியாது என்பது இரண்டாவது காரணி. இது ஒருபுறம் ஒடுக்கப்பட்ட மக்கள் அரசியல் சுதந்திரம் பெறுவதற்கு உதவியுள்ளது. மறுபுறம் காலனியாதிக்க வாதிகள் குறைந்த பட்சம் தமது ஒரு சில காலனிகளில் தேசிய அரசுத்துவம் ஏற்றம் பெறுவதைப் புரட்ட முயன்றிருக்கிறார்கள். சில நாடுகளில் அவர்கள் விரட்டப் படுவதற்குக் காத்திராமல் ''சுயவிருப்பமாக'' வெளியேறுவ தாக வேடம் போட்டார்கள். ஆனால் இப்படி சுதந்திரம் ''வழங்கும்'' தந்திரம் தேசிய அரசுகள் உருவாவதற்கு இட்டுச்சென்ற போதிலும் மக்களுக்கு பேரிழப்புக்களை கொண்டு வந்தன. காரணம் இவை காலனியாதிக்க வாதிகள் தம் இஷ்டப்படி அரசியல் சட்டங்களையும் ஆட்சி யாளர்களையும் இந்த நாடுகள் மீது திணித்து தொடர்ந்து தமது ஆதிக்கத்தை நீடித்து வைத்திருக்க வகை செய்தன.

1920-ல் லெனின் சுட்டிக்காட்டியது போன்று, எல்லா நாடுகளின், குறிப்பாக பின்தங்கிய நாடுகளின் பரவலான உழைக்கும் மக்கள் திரளினர் மத்தியில், ஏகாதிபத்திய வல்லரசுகள் முறையாக நடத்திவரும் இந்த ஏமாற்றுதலை, அரசியல் முறையில் சுதந்திரமான அரசுகள் என்ற வேடத்தில் அவற்றிடம் பொருளாதார முறையில், நிதி அடிப்படையில், ராணுவ ரீதியில் முற்றாக அண்டி நிற்கும் அரசுகளை நிறுவும் பம்மாத்தை இடையறாது விளக்கிக் கூறி அம்பலப்படுத்துவது அவசியம்.''* புதிதாக அமைக்கப்பட்ட அரசுகளில் தமது நிலைகளுக்கு முட்டுக் கொடுக்க வேண்டி பிரிட்டிஷ் ஏகாதிபத்தியவாதிகள் கூட்டாட்சி ஒன்றியங்களை கையாண்டனர், இன்னமும் கையாண்டு வருகின்றனர். பெயரளவில் விடுதலை பெற்ற முன்னாள் காலனி நாட்டு மக்களின் தேசிய சுதந்திரத்தைக் கட்டுப்படுத்த மிகவும்

* வி. இ. லெனின், ''நூல் திரட்டு'', தொகுதி 31, பக். 150.

பரவலாகப் பயன்படுத்தப்பட்டது பொருளாதாரமே; அன்னிய ஏகபோகங்கள் தொழில்துறை, போக்குவரத்து நிறுவனங்கள் மீது தொடர்ந்து ஆதிக்கம் செலுத்துகின்றன, புதிதாக விடுதலை பெற்ற நாடுகள் ஏதேனும் ஒரு செலாவணி மண்டலத்தில் இணைக்கப் பட்டிருக்கின்றன அல்லது நாடுகளிடையிலான சில ஏகபோக ஒன்றியத்தில் கட்டுண்டு கிடக்கின்றன (உ. ம். ஐரோப்பிய பொருளாதாரக் கூட்டமைப்பில் சேர்ந்துள்ள 21 ஆப்பிரிக்க நாடுகளின் ஒன்றியம்).

1965-க்கும் 1972-க்கும் இடையே வளர்முக நாடுகளின் அன்னியக் கடன் 34 பில்லியன் டாலரிலிருந்து 89 பில்லியன் டாலராக அதிகரித்தது. அதே பொழுதில் அவற்றின் கடன் மற்றும் கடன் வட்டி செலுத்தல்கள் 2.7 பில்லியன் டாலரிலிருந்து 7.5 பில்லியன் டாலராக அதிகரித்தது.

யுத்தப் பிற்கால தேசிய அரசுகள் உருவாக்கத்தின் அலாதியான பாணியின் பின்னேயுள்ள மூன்ருவது கூறு, சோவியத் ஒன்றியத்தின் முன்னுள் பின்தங்கி நின்ற மக்களினங்களின் உதாரணம் ஆகும், ஐரோப்பிய அனுபவத்தில் இருந்து பார்க்கும் போதில் வழக்கமான முன்நிபந்தனைகள் இப்போதுதான் பக்குவமடையும் சந்தர்ப்ப சூழலிலுங்கூட, தமது சுயநிர்ணய உரிமையைச் செயல்படுத்திய மக்களினங்களின் உதாரணமாகும் இது தேசிய அரசுத்துவம் சமுதாயம் எட்டியுள்ள தரத்துக்கு இணையாக இருக்கும் சமயத்தில் அன்றி, இந்தத் தரத்தினை வலுப்படுத்த வேண்டிய அவசியமும் ஏற்படும் தருணத்தில்தான் பூர்ஷுவா வர்க்கம் எப்போதும் தேசங்களின் சுயநிர்ணய உரிமையினை வேண்டி வரவழைக்கும். பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் நிலைமைகளில், மக்களின் சுயநிர்ணயம், தேசிய அரசுத்துவத்தை புதிதாய்ப் பெறுதல் என்பது இந்த மட்டத்தைத் துரிதமாக மாற்றுவதற்கான முன்னேற்றத்தை வேகப்படுத்துவதற்கான சாதனம் ஆகிறது. இது சுயநிர்ணய உரிமையைச் செயல்படுத்துவதிலான ஓர் அடிப்படை

வேறுபாடு மட்டுமல்ல, ஆனால் பொதுப்பட சர்வதேசத் தொழிலாளி வர்க்கமும் குறிப்பாக அதன் சோவியத் படைப் பிரிவும் காலனி சார்பு நாடுகளின் மக்களினங்களுக்கு செய்யும் வரலாற்றுச் சிறப்புடைய சேவையுமாகும்.

உள்நாட்டு வெளிநாட்டுக் கூறுகளுக்கும் பொருளாதார சித்தாந்தக் கூறுகளுக்கும் இடையிலான தொடர்பாடு பின்னால் மாற்றமடைந்துள்ளது. இதற்குக் காரணம் காலனி சார்பு நாடுகளில் முதலாளித்துவத்தின் வளர்ச்சி ஐரோப்பிய நாடுகளிலான அதன் வளர்ச்சியைக் காட்டிலும் பெரிதும் வேறுபடுகிறது எனும் மெய்நடப்பே. தேசிய பூர்ஷுவாக் களின் தோற்றம் மெதுவாகவே ஏற்பட்டது, தனது மக்களின் தேச விடுதலைப் போராட்டத்துக்குத் தலைமை தாங்கவேண்டும் எனும் விருப்பம் வழக்கமாகவே இன்னும் மெதுவாகவே தோற்றமளித்தது.தேசிய பூர்ஷுவா வர்க்கம் பிரதானமாயும் சேவா துறையில் தான் வளர்ந்து, இத் துறையில் காலனியாதிக்க வாதிகளுக்கு சேவை செய்தது, உற்பத்தித் துறையில் அல்ல. இதன் நிலைகள், முக்கியமாயும் ஆட்சி நிர்வாகப் பொறியமைவில் அல்லது பொருள் உற்பத்தியின் துணைத் துறையில் முக்கியமில்லாத துறை களில், படிப்பாளிகள் மத்தியில் வலுவுடையதாக இருந்தன என்பதால்; பூர்ஷுவாக்களின் தோற்றம் தொழில்துறை பாட்டாளிகளின் தோற்றத்துக்கு இட்டுச் செல்லவில்லை. குறைந்தபட்சம் கண்ணில்படும் அளவுக்குப் பங்கேற்கவில்லை. ஆகவே, பாட்டாளி வர்க்கமானது முக்கியமாயும் அன்னிய மூலதனத்தின் எதிர் நிலையாக நின்றது, உள்நாட்டுப் பூர்ஷுவாக்களுக்கு அல்ல.

எனவே மக்களினங்களின் விடுதலைப் போராட்டமானது உள்நாட்டுக் கூறுகள் முதிர்ச்சியடைவதை மட்டும் சார்ந்ததாக இருக்கவில்லை, ஆனால் பல வெளிநாட்டுக் கூறுகளையும் சார்ந்திருந்தது: சர்வதேச தொழிலாளி வர்க்க இயக்கம் உலக சோஷலிஸ்டு அமைப்பு தரும் உதவி; சோஷலிசத்துக்குச் சாதகமாக உலக சக்திகளின் மாறிவரும்

தொடர்பாடு; காலனி சாம்ராஜ்யத்தின் மேலும் வளர்ச்சியடைந்த பிராந்தியங்களில் தேசவிடுதலை இயக்கத்தின் வீச்சு இத்தியாதி. இந்த புற செல்வாக்கு பெருமளவில் சித்தாந்தத் தன்மையுடையதாக இருந்ததால் புரட்சிகர—ஜனநாயக அறிவுத்துறையினர் முக்கியத்துவம் பெருமளவு அதிகரித்தது. இதனுல்தான் பலஇடங்களில் தேசியபூர்ஷுவாக்களை அல்லது தொழிலாளிகளை விடவும் (பல நாடுகளில் சுதந்திரமான அரசியல் சக்தி என்ற முறையில் தொழிலாளி வர்க்கம் இருக்கவில்லை, தேசவிடுதலை இயக்கம் துவங்கியபோது தேசிய அரசுகள் அமைக்கப்பட்டுள்ளன) பிந்தியவர்களே தேச விடுதலை இயக்கத்தினதன், பின்னுல் தேசிய அரசின் தலைமையை மேற்கொண்டார்கள்.

ஏகாதிபத்தியத்தின் காலனி அமைப்பின் பகுதியாக இருந்து வந்த பல நாடுகளில் தேசிய அரசுகள் நிறுவப்பட்ட போது (இதில் இந்தியா, எகிப்து, அல்ஜீரிய தேசங்கள் வேறுசில சேரா) தேசங்கள் இன்னமும் உருவாகி இருக்கவில்லை. ஆகவே, இந்த தேசிய அரசுகளின் தனிச் சிறப்பான அம்சம் இவை தேசங்களைக் கட்டுவதற்கான சாதனங்களாக இருந்தன என்பதே. எனவே எந்த மாதிரியான தேசம் பரிணமித்தது என்பது, பல புறவயக் கூறுகளையும் யார் எந்த வர்க்கம் அல்லது அடுக்கினர்—அரசு அதிகாரத்தைக் கண்காணித்தனர், அதன் திசைவழியினை தேர்ந்தெடுத்தனர் என்பதையும் பொருத்ததாக இருந்தது. தேசிய பூர்ஷுவாக்களிடம் ஆட்சியதிகாரம் கிட்டிய இடங்களில் அவர்கள் முதலாளித்துவ வழிகளில் நாட்டின் அபிவிருத்திக்காகப் பாடுபட்டனர். தேசம் ஒரு முதலாளித்துவ தேசமாகப் பரிணமித்தது. தலைமை முதலாளித்துவமற்ற பாதையைத் தேர்ந்த புரட்சிகர ஜனநாயக வாதிகளிடம் இருந்த இடங்களில் புதிய தேசங்கள் மாறிவரும் இயல்புடையனவாக இருந்தன.

காலனி அடிமைத் தளைகளை அகற்றி எறிந்த, காலனி சார்பு நாடுகளின் மக்களினங்கள், தமது தேசிய அரசுத் துவம் முறைப்படுத்தப் படுவதற்காகப் போராடுகிருர்கள்.

உள்நாட்டு மக்களுக்கு ஆட்சியதிகாரம் மாற்றி ஒப்படைக்கப் படுவது என்பது இப்போது தென் ஆப்பிரிக்கா, தெற்கு ரொடேஷியா மற்றும் இதர சில நாடுகளில் மிகவும் உக்கிரமாகியுள்ளது.

அவர்கள் சுதந்திரத்துக்குத் தயாராக இல்லை, தம்மைத் தாமே ஆட்சி புரிந்துகொள்ளும் திறமையற்றவர்கள் என்று காலனியாதிக்க வாதிகள் உரிமைவாதம் செய்வதை மக்களினங்கள் நிராகரிக்கின்றன.

கீழ்த்திசை நாடுகளின் மக்கள் விடுதலையையும் தேசிய சுயாதீனத்தையும் எவ்வளவு உயர்வாக நெஞ்சார நேசிக்கிறார்கள் என்பதை இராக்கைச் சேர்ந்த குர்ட் மக்கள் நடத்தி வந்த நீண்ட நெடும் போராட்டத்தில் காணலாம். வரலாற்றுக் காரணங்களால் குர்த் மக்கள் மூன்று நாடுகளில் குடியமர்த்தப் பட்டனர். ஆனால் வடக்கு இராக் பகுதியில் மட்டுமே அவர்கள் வெற்றிகரமாக ஒற்றுமையைப் பேணிக்காத்தனர், தேசிய சுதந்திரத்துக்குப் போராட வேண்டும் என்ற தமது சித்தத்தை நீட்டித்து வைத்திருந்தனர். அரபு இராக் குடியரசின் கட்டுக்கோப்புக்குள் சுயாட்சி எனும் தமது நியாயமான கோரிக்கையை, படைபலம், பொருளாதார முற்றுகை இவற்றின் நெருக்குதலுக்கு அஞ்சி குர்த் மலைவாசிகள் கைவிட்டுவிடவில்லை ஏகாதிபத்திய வாதிகள் இராக்கின் இந்த உள்நாட்டுப் பூசலைத் தம் நலனுக்குப் பயன்படுத்தினர். ஆயினும் 1970 ல் இராக்கின் ஜனநாயக ஏகாதிபத்திய எதிர்ப்பு சக்திகள் ஒரு போர் நிறுத்த உடன்படிக்கையை இறுதியாக வெற்றிகரமாக எய்தி, ஐக்கிய இராக் அரசில் குர்த் மக்கள் தேசிய சுயாட்சிக்கு அங்கீகாரம் பெற்றார்கள்.

முதலாளித்துவமற்ற திசையமைவிலான அரசுகள் அமைவது ஆசியாவிலும் ஆப்பிரிக்காவிலும் தேசி -அரசு வளர்ச்சியில் பல புதிய மூலக் கூறுகளைப் புகுததுகிறது, இந்த நடப்பினைக் குலைக்க ஏகாதிபத்தியம் வெறித்தனமாக முயல்கிறது. சில நாடுகளில் திடீர் ராணுவ ஆட்சி மாற்றங்கள் மூலம் முதலாளித்துவமற்ற வளர்ச்சியை சிறிது

காலம் நிறுத்திவைப்பதில் வெற்றி பெற்றுள்ளது. இஸ்ரேல் ஆக்கிரமிப்பாளர்களின் உதவியுடன் உலகப் பிற்போக்கு சக்திகள் பல அரபு நாடுகள் இந்தப் புதிய பாதையில் செல்வதைத் தகைய முயன்று வருகின்றன.

ஆனால் இந்தப் புதிய பாதை வெட்டிச் சமைத்தபடி முன்னேகுகிறது: ஒன்றன்பின் ஒன்றாக புதிதாக விடுதலை பெற்ற மக்களினங்கள் முதலாளித்துவத்தோடு முறித்துக் கொண்டு சோஷலிசப் பாதையை நிறுவி வருகின்றன. இந்த நடப்பு நீடித்தது, சிக்கலானது என்பது மெய்யே. காரணம் தேசவிடுதலைப் புரட்சியின் இந்தப் புதிய கட்டத்தில் வர்க்க சக்திகளை மறு அணியமைப்பது மிகவும் கடினம். இதன் நிறைவாக்கத்துக்குப் போதுமான செயல்திறம் சாமான்ய மக்களிடம் இல்லை. தேவையாக இருப்பது ஜனநாயகத்தின் ஆக்கத்தை விரிவாக்குவதும் மேலும் வலுவான தொழிலாளி வர்க்கச் செல்வாக்கைப் புகுத்துவதுமே. "ஆனால் இடர்ப்பாடுகள் எதுவாக இருந்தபோதிலும் சரி, புதிதாக சுதந்திரம் பெற்ற நாடுகளின் அபிவிருத்திக்கு அடிப்படையிலேயே புதிய நெறியாண்மை ஏற்கெனவே செய்யப்பட்டு விட்டது எனும் மூலாதாரமான மெய் நடப்பின் முக்கியத்துவத்தை இவற்றால் குறைத்துவிட முடியாது"* என்று லியனித் பிரெஷ்நேவ் கூறியுள்ளார்.

ஆசிய, ஆப்பிரிக்க நாடுகளில் தேசிய அரசுகள் உருவானதன் பின்னால், தேசியப் பிரச்சினையின் உள்ளடக்கத்தில் எழும் இரண்டாவது மூலாதாரமான உண்மை தேசங்கள், தேசிய இனங்களின் உருவாக்கமும் சமமான ஒத்துழைப்பையும், பரஸ்பர உதவியையும் நிலைநாட்டுவதும் ஆகும். இதைச் சாதிப்பது மிகவும் கஷ்டம், இதற்கான பிரதான காரணம் மக்களினங்கள் சர்வப்பொது முன்னேற்றம் எனும் வரலாற்றின் நீரோட்டத்தில் ஈர்க்கப் படும் நேரத்தில், ஆப்பிரிக்காவிலும் ஏஷியாவிலும் வளர்ச்சி மட்டம் மிகவும் குறைவாக இருந்ததேயாகும்.

---

* லி. இ. பிரெஷ்நேவ், லெனின் பாதையைப் பின்பற்றி, பக். 173.

பல நூற்ருண்டுக் கால காலனி ஒடுக்குமுறை தம் காலத்து உயர்ந்தோங்கி வளர்ந்திருந்த நாகரிகங்களே அழித்தது. ஆப்பிரிக்காவின் வடபகுதியில் இருந்த மக்களினங்களும், ஆசிய மக்களினங்களில் சிலவும் மட்டுமே முதலாளித்துவ உறவுகளால் சுற்றி அரவணைக்கப் பட்டிருந்தன. இதனுல்தான் அங்கு சுதந்திரம் பெற்ற சமயம் தேசங்கள் உருவாகத் தொடங்கிவிட்டன. ஆனுல் இது இன்னும் முழுமையுறவில்லே. மறுபுறம், இதர ஆப்பிரிக்க மக்களின் முன்னேற்றம் செயற்கையாகத் தகையப்பெற்றது. சுமார் பத்துக்கோடி மக்கள் காலனி களில் இருந்து அடிமைகளாகக் கப்பலேற்றி அனுப்பப் பட்டார்கள், லட்சோப லட்சம் பேர் காலனியாதிக்க வாதிகளே எதிர்த்த போராட்டத்தில் வீழ்ந்துபட்டனர். காலனியாக்கப்பட்ட கால கட்டத்தில் ஆப்பிரிக்காவில் உலக மக்கள் தொகையில் மூன்றில் ஒரு பங்கு இருந்தது மூன்று நூற்ருண்டுகளுக்குப் பின்னர் இத்தொகை பத்தில் ஒரு பங்காகக் குறைந்து விட்டது. மக்களினங்களின் இயல்பான வளர்ச்சியில் இதனுல் ஏற்பட்ட விளேவு என்ன என்பதை மதிப்பிடுவது கடினம். இவர்களில் பலர் கொன்றழிக்கப்பட்டார்கள், மீதமானவர்கள் வசதி குறைந்த பகுதிகளுக்கு அனுப்பப் பட்டார்கள். மக்களினங்கள் கலத்தல் எனும் நடைமுறை லெனினுல் முதலாளித்துவ வளர்ச்சி நிலேகளில் முற்போக்கானது என வருணிக்கப்பட்ட இது, இந்த சந்தர்ப்ப சூழல்களில் துன்பகரமான ஒன்ருகவே இருந்தது. காரணம் இதைத் தொடர்ந்து கூடுதலான பெரும் பாலும் பரஸ்பரம் பூண்டோடு அழிப்பது நிகழ்ந்தது. இது காலனியாதிக்க வாதிகளே எதிர்த்த ஜீவமரணப் போராட்டத்தில் தப்பி உயிர் வாழ்ந்த பலரின் மரணத்துக்கு ஏதுவாயிற்று.

18, 19 ஆம் நூற்ருண்டுகளில் ஆசிய, ஆப்பிரிக்க மக்களினங்கள் காலனியாதிக்கவாதிகள் தமது ஆட்சியை ா றுவிய சமயமோ அல்லது உள்நாட்டு அரசர்களின் சபலப் படி வரையறுக்கப்பட்ட எல்லேக்கோடுகளால் பிளவுபடுத்தப்

பெற்றார்கள், இத்த நிகழ்வால் அவர்கள் மீதான ஒடுக்கு முறை மேலும் உக்கிரமாயிற்று. இதன் விளைவாக பல தேசிய இனங்களும், பூர்வகுடிகளும் துண்டாடப்பட்டன, சில சமயம் எட்டுப் பகுதிகளாகக்கூட பிரிபட்டன. முன்னர் எவ்விதத் தொடர்பும் இருந்திரா பகையாக இருந்தவரான மக்களுடன் ஒரே ஆட்சி நிர்வாகக் கட்டுக்கோப்புக்குள் வாழும்படி கட்டாயப் படுத்தப் பெற்றன. இயல்பாகவே இது, உள்நாட்டு வளர்ச்சி,தேசிய இனங்கள் பூர்வகுடிகளின் சங்கமிப்பு ஆதிய நடப்புக்களை குலைத்து விட்டது.

தம்மைப் படையெடுத்து அடக்கியவர்கள் அதிக நாகரிகம் படைத்தவர்கள் என்பதால் காலனி மக்களினங் களின் பொருளாதார அரசியல்,கலாசார முன்னேற்றத்துக்கு எவ்வித நன்மையும் கிட்டவில்லை. இந்த நாகரிகம் முன்னேற் றத்தைவிடவும் பூண்டோடு அழிப்பதில் தான் கருத்தாக இருந்தது. காலனி ஆதிக்கவாதிகள் அந்தக் காலத்தில் முற்போக்கு நடவடிக்கை எனக் கருதப்பட்ட பூர்ஷுவா உற்பத்தி முறைகள் உயர்தர உற்பத்தி சக்திகளை இறக்குமதி செய்த போதிலும் நிலைமைகளில் எவ்வித மாற்றமும் ஏற்படவில்லை. முதலாளித்துவ உறவுகள் நகர்ப்புற மக்கள் தொகையில் ஒரு மிகச் சிறு பகுதியினர் மத்தியில் மட்டுமே பரவின, நாட்டுப் புறத்தில் இருந்த பேரளவான மக்கள் மத்தியில் அற்பமான விளைவுகளையே கொண்டிருந்தன, அங்கு பல இடங்களில், பல நூற்றாண்டுகளாக பண்டைக் கால சமுதாய அமைப்பு விடாமல் நீடித்தது. பல நாடுகளில் கல்வி கற்ற அடுக்கினர் தோற்றமளித்தனர், தொழிலாளி வர்க்கத்தின் உருவாக்கம் துவங்கியது என்பது மெய்யே ஆனால் இது கேவலம் காலனியாதிக்க வாதிகளின் தேவை களை பிரதிபலித்ததே தவிர, அடிமைப்பட்டுக்கிடந்த மக்களினங்களின் வளர்ச்சி பற்றி அக்கறை காட்டவில்லை

காலனிகளாக்கத்தின் அளவு எப்படியிருப்பினும் காலனி யாதிக்க வாதிகள் உள்ளூர் மக்களுடன் சேர்ந்து இணையவே இல்லை. லத்தீன் அமெரிக்காவின் சில பகுதிகளில் மட்டும் வெள்ளை நிறத்தவரும் சுதேசியரும் சேர்ந்த கலப்பு

இனத்தவர் காணப்பட்டனர். இந்தப் புதிதாக அமையப் பெற்ற தேசங்களின் மொழி பெரும்பாலும் புதிதாக வந்தோரின் மொழியாகவே இருந்தது, அவற்றின் தேசிய கலாசாரமும் அவர்களின் நிர்ணயகரமான செல்வாக்கின்கீழ் வந்தது. இது காலனியாதிக்க வாதிகளின் நல்லெண்ணத்தால் ஏற்பட்டதல்ல மாறாக விசேஷ வரலாற்று நிலைமைகளால் ஏற்பட்டவை என்பது திண்ணம். 19 ஆம் நூற்றாண்டில் அமெரிக்க மாகண்டத்தில் பரிணமித்த புதிய தேசங்களும், தேசிய அரசுத்துவத்தின் உருவாக்கம் உள்ளிட்ட அவற்றின் வளர்ச்சியும் ஆப்பிரிக்க, ஆசிய மாகண்டங்களின் தேசங்களை விடவும் ஒப்பளவில் அதிக வேகமாக இருந்தது என்பது உண்மை. இருப்பினும் இங்கும்கூட பெரும் பாலான சுதேசிய மக்கள் பொதுவான முன்னேற்றப் பாதையில் ஈர்க்கப்படவில்லை, அழிந்து ஒழிவதே அவர்கள் கதியாகியது.

எல்லா மாகண்டங்களிலும் வைத்து குறிப்பாயும் ஆப்பிரிக்காவின் பெரும் பகுதிகளில் அரசியல் நிர்வாக அர்த்தத்தில் காலனியாதிக்க வாதிகளின் ஆட்சி ஆட்டங் கண்ட உயர் கட்டமைப்பாக இருந்தது, ராணுவக் காவல் படைமீதும் பொருளாதார ஆதாரக் கால்களையும் சார்ந்து நின்றது. அதோடு உள்நாட்டு மக்களின் முன்னேற்றத்துக்கு முட்டுக்கட்டை போடவும், தலையிட்டாளர்களை எதிர்த்து அவர்கள் ஒன்று சேருவதைத் தவிர்க்கவும் வேண்டி, திட்ட மிட்டுத் தூண்டியும் விடாது பேணியும் வந்த பழங்குடியினரி டையிலான பூசலையும் பலமாக அண்டி நின்றது. மேலும் காலனியாதிக்க வாதிகள் முக்கியமான உள்நாட்டு தேசிய இனம் அல்லது பழங்குடியினர் விஷயத்தில் பெரும்பாலும் எவ்விதச் சலுகையும் காட்டவில்லை, மாறாகத் தாம் சிறுதர அதிகாரிகள், போலீஸ் என்று பொறுக்கி எடுத்த ஊழியர் களைக் கொண்டதான சிறுபான்மைப் பிரிவுகள் விஷயத் திலேயே சலுகை காட்டினர். எடுத்துக் காட்டாக பிரான்ஸ் பல ஆப்பிரிக்கக் காலனிகளில் சிறுதர அதிகாரவர்க்கப் பதவிகளுக்கு முற்றிலும் தஹோமி

சுதேசிகளை மட்டுமே நியமித்தது, அதே சமயம் சேனை, போலீஸ் துறைகளில் இடந்தரவில்லை.

ஏகாதிபத்தியத்தின் காலனி அமைப்பு தகர்க்கப்பட்டும் கூட, அரசுரிமையும் சுயாதீன அரசும் வென்று பெற்ற நாடுகளில் கூட தேசிய ஒடுக்குமுறை சக்திகள் அனைத்தையும் ஒழிக்க முடியவில்லை.

தேசிய அரசுத்துவம் உருவகம் பெற்றதானது, அம்சத்துவம் கீழடங்கல், ஏகாதிபத்திய வல்லரசுகளை அரசியல் பொருளாதார சித்தாந்தத் துறைகளில் அண்டி நிற்றல், இவற்றின் ஒழிப்பின் அசல் துவக்கமாகும். "நிதிமூலதனம் என்பது அனைத்துப் பொருளாதார சகல சர்வதேச உறவுகளிலும் அத்தகைய மகத்தான, அத்தகைய தீர்மானகரமான சக்தியாக இருப்பதால், அது சம்பூர்ணமான அரசியல் சுதந்திரத்தை அனுபவித்து வரும் அரசுகளைக்கூடக் கீழடக்கக்கூடிய, உண்மையில் கீழடக்குகிற ஆற்றல் கொண்டதாகும்"* என்று லெனின் எழுதினார். இந்த அடிமைத்தனத்தை ஒழித்தகற்றுவது எனும் புறநிலை அவசியம் தேசியப் பிரச்சினையின் அவசர முக்கியத்துவத்தை அதிகரிக்கிறது. மேலும் வளர்முக நாடுகளுக்கும் இதர அரசுகளுக்கும் இடையிலான உறவுகளில் இதர அம்சங்கள் அனைத்திற்கும் மேலாக இதற்கு முன்னிடம் தருகிறது. இது வெறும் பொருளாதார அசமத்துவம் பற்றிய பிரச்சினை அல்ல. மாறாக,பல நாடுகளின் பொருளாதாரத்தில் அன்னிய ஏகபோகங்களின் மேலாதிக்கம் பற்றிய பிரச்சினையாகும். இந்த நாடுகள் பொருளாதாரத்தின் பல்வேறு துறைகளிலும் கலாசார மண்டலத்திலும் அரசாங்கத்திலும் திறமைவாய்ந்த நிபுணர்கள் இல்லாமையை அல்லது பற்றாக் குறையை அனுபவித்து வருகின்றன எனும் உண்மையில் தேசிய அசமத்துவம் காணப்படுகிறது. இதன் விளைவாக, சென்ற காலத்திய ஏகாதிபத்திய "எஜமானர்கள்"

---

* வி. இ. லெனின், "நூல் திரட்டு", தொகுதி 22, பக். 259.

அரசுரிமையுடைய பல தேசிய அரசுகளில் ஊழியர் பயிற்சி விஷயத்தில் தமது பிடிப்பை நீடித்து வைத்திருக்கின்றனர். இவ்வாறு இந்த நாடுகள் அன்னியச் செல்வாக்குக்கு அறவே இலக்காகி, முற்றிலும் சுதந்திரமான தேசியக் கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்கான வாய்ப்பு மறுதலிக்கப்பட்டு அவதியுறுகின்றன.

அவசியமான கல்வி நிறுவனங்கள் இல்லாததால், அவர்கள் தம் இளம் பருவத்தினரை வெளிநாடுகளுக்கு, பிரதானமாயும் சில ஆண்டுகளுக்கு முன்வரை தமது தலைமை சாம்ராஜ்ய நாடாக இருந்த இடத்திற்கு அனுப்பவேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. இதற்குக் காரணம் அதன் மொழியில் ஏற்பட்ட பரிச்சயத்தின் மீது கிளைத்த மரபும் ஏகாதிபத்திய வல்லரசுகளின் அரசியல் கொள்கையும் ஆகும். அது தனது சொந்தத் தேவைகளைப் பொருத்த முறையில் வளர்முக நாடுகளுக்கான ஊழியர்களைப் பயிற்று விப்பதற்கான எளிய நிபந்தனைகளை வழங்குகிறது. இதன் விளைவு ஏகாதிபத்தியவாதிகள் தமது செல்வாக்குக்கு உட்பட்ட நம்பகமான கையாட்களை, அரசியல் சுதந்திரத்தை வெறும் கற்பனையாக மாற்றிடும் பேர்வழிகளைப் பெறலாம் என்று நம்புகின்றனர்.

கலாசார அசமத்துவம், விஞ்ஞான தொழில்நுட்ப சாதனைகளை அன்னிய நிபுணர்கள் ஏகபோகமாக்கிக் கொள்ளும் நிலை, உள்நாட்டு ஊழியர் வன்பிடி போதனையால் சித்தம் இழத்தல் இவை அரசியலில் சுதந்திரமான ஆனால் வளர்ச்சி குன்றிய தேசிய அரசுகள் பெரும்பாலானவற்றில் உறும் நிலைமையின் முக்கியமான அம்சங்களாகிவிட்டன.

இயல்பாகவே, இது திட்டவட்டமான ஓர் எதிர் வினையைத் தோற்றுவிக்கிறது. அரசின் சர்வவுரிமை, தேசிய சுயவுரிமை வலியுறுத்தல் மற்றும் தேசிய ஒருமைப்பாடு பற்றிய அக்கறையுடன் நெருக்கமான தொடர்புடையது.

கம்யூனிசத்தை எதிர்த்து ''கூட்டுப் பாதுகாப்பின்'' தேவை எனும் போலி உரையால் வெகு சொற்பமாகவே

மூடி மறைக்கப்பட்டிருக்கும் பொருளாதார நிர்ப்பந்தமும் ராணுவ மிரட்டலும், விடுதலை விழையும் மக்களினங்களை எதிர்த்த ஏகாதிபத்திய ஆக்கிரமிப்புச் செயல்களின் நெடிய சங்கிலித்தொடரில் அடங்கும். காலனி அமைப்பு சரிந்து விழுவதுடன் தேசவிடுதலை இயக்கம் முடிவடைந்து விடுவதில்லை என்பதை இது புலப்படுத்துகிறது. சில சமயம் இது மேலும் கடுமையுறுகிறது, காரணம், ஏகாதிபத்திய வாதிகள் புதிதாக விடுதலை பெற்ற நாடுகளில் முற்போக்கு சமூக மாறுதல்கள் ஏற்படாது தடுக்க மிகவும் மோசமான நடவடிக்கைகளைக்கூட மேற்கொள்ளத் தயங்கமாட்டார்கள் என்பதே.

2. தேசிய ஒருமைப்பாட்டு நடப்புகள்

தேசவிடுதலை இயக்கத்தின் வெற்றிகள், மக்களினங்களின் வாழ்க்கையில் பல துறைகளில், சிறப்பாயும் தேசிய ஒருமைப் பாட்டு நடப்பில் பிரதிபலிக்கின்றன.

ஆசிய, ஆப்பிரிக்க நாடுகள் பலவற்றில், தேசிய அரசைக் கட்டுவதில் மிகவும் தீவிரமான பங்கு பற்றுவோர், முன் நாட்களில் ஏகாதிபத்திய வாதிகளுக்குச் சேவைகளை வழங்கிய நகரப்புற அடுக்கினரேயாவர். இதன் பொருள் அரசியல் வாதிகளும் அதிகார வர்க்கமும் எப்போதுமே காலனியாதிக்க ஆதரவாளர்களாக இருந்து வந்துள்ளனர் என்பதாகும், இதன் விளைவாக தேசிய அரசுத்துவம் என்பது வெறும் பெயரளவில் மட்டுமே இருந்தது. பல நாடுகளில் காலனியாதிக்கவாதிகள் ஏதேனும் ஒரு தேசிய இனத்தை பெரும்பாலும் ஒரு சிறுபான்மை இனத்தையே நம்பிச் சார்ந்து இருந்ததால், இத்தகைய இடங்களில் புதிய அரசுகள் பெரும்பான்மையினரின் சித்தத்தை உருவகப் படுத்தவில்லை. கடைசியாக தேசவிடுதலை இயக்கத்தின் போக்கில் இது மக்கள் தொகையின் பெரும்பான்மையைச் சேர்த்து அரவணைத்துக் கொண்டாலும் இல்லாவிடினும் பலநாடுகளில் தேசிய உணர்வின் பெருக்கம் பழங்குடியினர்

பூசலால் தகையப்பட்டது. சில நாடுகளில் உண்மையிலேயே இது முன்னைவிடவும் கடுமையடைந்தது.

இயல்பாகவே, காலனியாதிக்க வாதிகள் வாளா கிடக்கவில்லை. தேசிய ஒருமைப்பாட்டு நடப்புக்களைச் செயல் குலைக்கவும், மக்கள் ஒற்றுமை பரிணமிப்பதைத் தவிர்க்கவும் அவர்கள் உச்சபட்சம் முண்டிச் செயல்பட்டனர்.

புதிய தேசிய அரசுகள் அமைக்கப்பட்டதன் முதல் எதிர்மறை விளைவுகளில் ஒன்று, தேசிய முறையிலும் அரசியல் ரீதியாகவும் பாரபட்சப்படுத்தப்பட்ட தேசிய இனங்கள், பழங்குடியினர் பெருமளவில் மறு குடியமர்த்தப் பட்டதாகும். ருவாண்டா நாட்டைப் பாருங்கள். இங்கு மக்கள் தொகையில் 16. 6 சதவிகிதமே உள்ள டுட்சி சிறுபான்மையினர் காலனியாதிக்க வாதிகளின் கீழ் முக்கிய கூறாக இருந்தனர், அவர்கள் நாட்டின் அரியணையில் தமது மன்னரைப் பதவியில் அமர்த்த முடிந்தது. ஆயினும் உரிய காலத்தில் ஹுடு பழங்குடியைச் சேர்ந்த பெரும்பான்மை யினர் டுட்சிகளை வீழ்த்தினர் விளைவு பின்னவரில் பெருந் தொகையினர் (1.5 லட்சத்திற்கும் மேல்) நாட்டைத் துறந்து வெளியேறினர். இப்போது எல்லைகளில் இடையறாது தொல்லை தந்தபடி இருக்கின்றனர். இதற்கும் மேலாக, அண்டையிலுள்ள புருண்டியில் அடைக்கலம் நாடிய டுட்சிகள் அந்தச் சிறிய நாட்டில் தேசிய உறவுகளைக் கடுமையான அளவுக்குச் சிக்கலாக்கிவிட்டார்கள்.

இன்னொரு எடுத்துக்காட்டு நைஜிரியா. இந்த நாட்டின் கிழக்குப் பகுதி சார்ந்த இபோ இனத்தவர் பிரிட்டிஷ் காலனி ஆட்சி நிர்வாகத்திற்குரிய பெருமளவிலான ஊழியர் களைப் பல ஆண்டுகளாக வழங்கி வந்தார்கள். நாடு சுதந்திரம் பெற்ற பின்னர் அவர்கள் அரசுப் பொறியமைவு, சேனைத்தலைமை, சில்லறை வர்த்தகம் இத்தியாதிகளில் ஆதிக்கம் கொண்டிருந்தனர். காலனியாட்சியின் கடந்த நாட்களில் பல லட்சம் இபோ இனத்தவர் வடபுலம் உள்ளிட்டு நாட்டின் இதர பகுதிகளுக்குப் பெயர்ந்து

சென்றார்கள். விடுதலை இயக்கத்தின்போது, உள்ளூர் மக்களின் தேசிய உணர்வுகள் தீவிரமான சமயம், கிழக்குப் பிராந்தியத்தில் இருந்து வந்தவர்களே இதை முதலில் உணர்ந்தார்கள். பல லட்சம் இபோ இனத்தவர் 'கீழ்த் திசைக்கு மீண்டும் செல்வதன்றி வேறுவழிகாணாது தவித்தனர், அங்கு ஏகாதிபத்தியவாதிகளால் தூண்டிவிடப் பட்டு பியாஃப்ரா எனும் தனி அரசை விரைவில் பிரகடனம் செய்தனர். இதன் விளைவாக நாடு ஒரு சகோதரப் போரில் மூழ்கடிக்கப்பட்டது.

ஆப்பிரிக்காவிலும், ஆசியா மற்றும் ஒஷியானாவின் சில பகுதிகளிலும் தேசிய ஒருமைப்பாட்டு நடப்புக்கள் எத்துணை சிக்கலானதாக இருக்கின்றன என்பதற்கு இதுபோன்று டஜன் கணக்கான உதாரணங்கள் உள்ளன. காரியங்கள் இன்னும் மோசமாகி இருப்பதற்குக் காரணம் ஏகாதிபத்திய மானது வளர்ச்சி குன்றிய நாடுகள் விஷயத்திலான தனது கொள்கையை மேலோட்டமாக மாத்திரமே மாற்றிக் கொண்டிருக்கிறது என்பதே, சாரத்தில் இது அப்படியே நீடிக்கிறது, 1969-ல் நடந்த மாநாட்டில் கம்யூனிஸ்டு'' தொழிலாளர் கட்சிகளின் பிரதிநிதிகள் பல்வேறு நாடு களின் அறிஞர்கள் பொது ஸ்தாபனங்களுடன் சேர்ந்து ஏகாதிபத்தியத்தை எதிர்த்து ஒரு கண்டன வாசகம் தயாரித்தார்கள். இதில் புதிதாக விடுதலை பெற்ற நாடுகள் உள்ளிட்ட சார்பு நாடுகள்ன் மக்களினங்கள் சூறையாடப் பட்டது, பூண்டோடு நாசமாக்கப்பட்டது குறித்த திடுக்கிட வைக்கும் மெய் விவரங்கள் எடுத்துக் காட்டப்பட்டன. யுத்தப் பிற்கால ஆண்டுகளில் மட்டுமே காலனியாதிக்க வாதிகள் ஏகாதிபத்திய அடிமைத்தளைகளைத் தகர்த்து எறிய முயன்ற மக்களினங்களை எதிர்த்த 34 போர்களில் சமராடினர். இந்தப் போர்களில் சில இன்னமும் நடந்து வருகின்றன. 1960 ஆம் ஆண்டுகளில் அன்னிய முதலீடு களுக்கான லாபம் இரு மடங்காகியுள்ளது, இதில் 23 பில்லியன் டாலர் இதர நாடுகளில் இருந்து 1960களின் இரண்டாம் பாதியில் கறந்து ஏற்றுமதி செய்யப்பட்ட

லாபமாகும். இந்த விவரமே ஏகாதிபத்திய வாதிகளின் ''நாகரிகப்படுத்தும்'' பணிக்கு எடுத்துக் காட்டாகும். இந்த வகையிலான போக்கின் வளர்ச்சி பலவீனமடை வதற்கு மாருக வலுப்பட்டே வருகிறது.

திட்டமிட்டு பூண்டோடு அழிப்பது என்பது இன்னமும் முழு மக்களினங்களின் கதியாக இருந்து வருகிறது. அமெரிக்க மாகண்டத்திலுள்ள பூர்வகுடி மக்களினங்கள் பெரும்பாலும் அழிந்தொழியும் கதிக்கு இலக்காகியுள்ளன. எடுத்துக் காட்டாக பிரேசில் நாட்டில் 25 இந்தியரில் ஒருவர் என்ற விழுக்காடில் தான் இன்னும் உயிர் வாழ் கின்றனர். கொலும்பியாவில் 32 பேரில் ஒருவர் என்ற விகிதத்தில் உயிர் வாழ்கின்றனர். இந்தியப் பாதுகாப்பு சேவை, பிரேசில் அவர்களது வளமிக்க நிலங்களைப் பறித்துக் கொள்ள வேண்டி ஏழு பழங்குடி இன மக்களை கிட்டத்தட்ட முழுமையாயும் அழித்தொழித்தது என்று 1988ல் உலகப் பத்திரிகைச் செய்திகள் சாற்றின. பராகுவே, கொலம்பியா மற்று வேறு சில லத்தீன் அமெரிக்க நாடுகளிலுமே இந்தியர்கள் இவ்வாறு மிருகத்தனமாகப் பூண்டோடு அழிக்கப்படுகிருர்கள்—ஆஸ்திரேலியாவில் பூர்வகுடிகளின் எண்ணிக்கை முன்பிருந்ததில் ஆறில் ஒரு மடங்காகச் சுருங்கி விட்டது.

சிறிய மக்களினங்களின் வளர்ச்சியை ஏகாதிபத்தியம் எப்படி தடுத்து மட்டப்படுத்துகிறது என்பதை பல இடங் களில் மொழிக் கூட பழங்குடி சமூக மட்டத்தில் நின்று மக்களின் தகவல் போக்குவரத்துத் தேவைகளை நிறைவு செய்ய இயலாதபடி இருக்கும் உண்மை நிலவரம் வெளிப் படுத்துகிறது. ஒட்டு மொத்தத்தில் இந்த மக்களினங்களுக்கு வரிவடிவ மொழி இல்லை, இலக்கியம் கிடையாது அல்லது எழுத்து இன்னும் ஆரம்ப கட்டத்தில் இருந்து வருகிறது.

பல மக்களினங்கள் மிகவும் தாழ்ந்த மட்டத்திலான வளர்ச்சியே பெற்று இருப்பதன் காரணமாக அவர்கள் தமது பரந்த இயற்கைச் செல்வ வளங்களைத் தமது சொந்தத்

தேவைகளுக்குப் பயன்படுத்த முடியவில்லை. இது ஏகாதிபத்தியத்தின் சூறையாட்டத்தை வரவேற்கிறது. இந்த வகையில் தான் மத்திய கிழக்கில் இருக்கும் எண்ணெய் வளங்களும் லத்தீன் அமெரிக்காவிலுள்ள மிகவும் வளமான நிலப்பரப்பும் காலனியாதிக்கவாதிகள் கரங்களில் சிக்கின.

தனிச் சொத்துடைமை ஆட்சி மக்கள் கலாசார முன்னேற்றத்துக்குத் தடைக்கல். தேசியக் கலாசாரத்தின் விலைமதிக்கவொண்ணுத பொக்கிஷங்கள் அற்பமான விலைக்கு வாங்கப்பட்டு முதலாளிகளால் கப்பலேற்றி அனுப்பப்படுகின்றன.

பொதுக் கல்வி வருந்தத்தக்க நிலையில் இருக்கிறது. பெரும்பாலான வளர்ச்சி குன்றிய நாடுகளில் பேரளவான மக்கள் எழுத்தறிவற்றவர்களாக உள்ளனர். ஆப்பிரிக்காவில் 80—85 சதவிகிதம் மக்களுக்கு எழுதவோ படிக்கவோ தெரியாது, படித்தவர் தொகை சில லத்தீன் அமெரிக்க நாடுகளில்இன்னும் குறைவாகவேஉள்ளது குவாடிமாலாவில் மக்கள் தொகைப் பெருக்கத்தால் எழுத்தறிவில்லாதார் தொகையும் அதிகரித்துள்ளது: 1950-ல் இது 71·9 சதவிகிதமாக இருந்தது. இன்று 80 சதவிகிதமாகியுள்ளது.

பயிற்றுவிக்கப்பட்ட ஊழியர் விஷயத்தில் நிலைமை இன்னும் மோசம். உள்நாட்டில் பயிற்சி பெற்ற வெகு சில நிபுணர்களில் கூட பலர் உயர் வளர்ச்சியடைந்த நாடுகளால் கவரப்படுகின்றனர். அமெரிக்க விஞ்ஞான தொழில்நுட்ப அலுவலகத்தின் செயலர் சார்ல்ஸ் வி.கிட் வளர்முக நாடுகளில் இருந்து வாரிச் செல்லப்படும் விஞ்ஞான நிபுணர் தொகை ஒரு வகையில் ஒரு தேசிய விபத்தே ஆகிவிட்டது விட்டது என்பதாக ஒப்புக் கொள்கிருர்,

நீண்டகால காலனி ஆட்சி பின்தங்கிய நாடுகளிலும் மாகண்டங்களிலும் உள்ள மக்களை தொழில் வளமிக்க முதலாளித்துவ நாடுகளை விடவும் 80 முதல் 100 பின்

தங்கிய நிலையில் வைத்திருக்கிறது என்பதே இந்தத் துன்பியல் வேதனை. உலக மக்கள் தொகையில் மூன்றில் இரண்டு பங்கைத் தன்னுள் அடங்கிய வளர்முக நாடுகளின் ஒட்டு மொத்த வருவாய் தொழில் வளம் பெற்ற அரசுகளின் வருவாயில் பத்தில் ஒரு பங்குக்கு சொற்பமே அதிகமான தாகவிருக்கிறது. மூலதனம் ஆட்சியில் நீடிக்குமாயின் அடுத்த பல பத்தாண்டுகளில் இந்த ஏற்றத் தாழ்வு மேலும் தவிர்க்க முடியாதபடி விரிவடையும் என்று ஐ. நா. மற்றும் இதர மதிப்பீடுகள் சுட்டுகின்றன: விஞ்ஞான தொழில் நுட்பம் புரட்சியின் உதவியால் முன்னேறிய அரசுகள் முன்னேறிப் பாயும் அதே போதில், பின்தங்கிய நாடுகள், சுமாரான வருடாந்தர பொருள் உற்பத்தி சேகரம் செய்யும் நாடுகள் கூட தமது மக்கள் தொகை பெருக்கம் காரண மாகக் காத்து நிற்கும்படி நேரும்.

நபர்வாரி வருவாயின் தேசிய சராசரியிலான ஏற்றத் தாழ்வு 1923ல் 8.4 மடங்காக அதிகரித்துவிட்டது என்று நிபுணர்கள் மதிப்பிடுகிறார்கள். இன்றைய அமெரிக்காவின் சராசரி நபர் விகித வருவாய் தென் அமெரிக்காவை விடவும் 7.5 மடங்கு அதிகமாயும் ஆப்பிரிக்காவை போல 18மடங்கு அதிகமாயும் இருப்பதாக பூர்ஷுவா ஆராச்சியாளர்கள் மதிப்பிடுகிறார்கள் 2000 ஆவது ஆண்டில் இந்த ஏற்றத் தாழ்வு, அண்டவெளி தென் அமெரிக்கா விஷயத்தில் 12.5 மடங்காகவும் ஆப்பிரிக்காவைப் பொருத்தவரை 22 மடங் காகவும் விரிவடையும்.

ஆப்பிரிக்காவுக்கான ஐ நா. பொருளாதாரக் கமிஷன் இப்போதைய வளர்ச்சி விகிதங்களை வைத்து பார்க்கையில் மாகண்டத்தின் நபர் விகித வருவாய் இன்னும் 273 ஆண்டு களில் பிரிட்டன், பிரான்ஸ் மட்டத்தையும் 343 ஆண்டு களில் அமெரிக்காவின் மட்டத்தையும் எட்டும் என்று மதிப்பிட்டிருக்கிறது

தேசிய ஒருமைப்பாட்டின் நடப்பு நிகழ்ச்சிப் போக்கு களுக்கான இந்தப் பின்னணி, புதிதாக விடுதலை பெற்ற மக்களினங்களின் வாழ்க்கையில் காணப்படுவது, தேசங்கள்

தேசிய இனங்களின் உருவாக்கத்தில், முதலாவதாயும் முக்கியமாயும் சில ஆப்பிரிக்க நாடுகளில், சில பிரத்தியேக அம்சங்கள் தோன்றுவதற்கு காரணமாகியுள்ளது.

எடுத்துக்காட்டாக, மொழி இயக்கங்கள் மிகவும் பிரத்தியேகத் தன்மையுடையவை, பலவழிகளில் அலாதியானவை. ஆப்பிரிக்காவில் சில புதிதாய் பிறந்த தேசங்கள் காலனியாதிக்க வாதிகள் கொண்டு வந்த மொழிகளையே பயன்படுத்துகின்றன. கனு, குனியா,மாலி முதலிய நாடுகள் விஷயத்தில் இது இவ்வாறு உள்ளது. கொண்டு வரப்பட்ட மொழி தேசம் அதன் உருவாக்க நடைமுறையை முழுமை செய்யும் போதில் நிச்சயமாயும் அந்த தேசத்தின் மொழியாக மாறிவிடாது. தவிரவும் இது தேசிய அரசுத்துவம் நிறுவுவதற்குப் பயன்படுத்தப் பட்டதாகும். இது உருவாக்க கட்டத்தின் தேவைகளையும் தேசத்தின் வளர்ச்சிகளையும் உள்நாட்டு பேச்சுமொழிகள் அடிப்படையில் எல்லா தேசிய இனங்கள் பழங்குடிகளுக்கு உரிய தனி தேசிய மொழி தோன்றும் வரையில் நிறைவு செய்கிறது. டுனிஷியா ஸ்ரீலங்கா, மௌரிடானியா, மலேஷியா போன்ற சில நாடுகளில் உள்நாட்டு மொழிகளில் ஒன்று, அன்னிய மொழியுடன் கூடவே, அரசாங்க மொழியாக ஏற்கெனவே புகுத்தப்பட்டிருக்கிறது. மலேஷியாவில் பல பகுதிகளில் மொழிமாற்ற ஏற்பாட்டுக்கு என ஒன்பதாண்டு கால வரையறை செய்யப்பட்டிருக்கிறது. இந்தக் காலப் பகுதியில் எல்லா நிலையங்களிலும் அலுவலகங்களிலும் நடபடிகள் ஆங்கிலத்தில் இருந்து மலாய் மொழிக்கு மாற்றி ஏற்பாடு செய்யப்படும். பாகிஸ்தானில் ஆங்கிலத்துடன் கூடவே உருதுமொழி அரசாங்க அலுவல் மொழியாக பயன்படுத்தப்படுகிறது. பங்களாதேஷில் வங்காளி மொழி இதே தன்மையில் உள்ளது. சோமாலியாவில் 1972 இறுதியில் சோமாலிய மொழி ஒரே ஆட்சிமொழி எனப் பிரகடனம் செய்யப்பட்டது. இதற்கு முன்பு இத்தாலியன், ஆங்கிலம் மற்றும் அரபு மொழிகள் பயன்படுத்தப் பட்டிருந்தன.

ஆனுல் பழங்குடியினர் இடையிலான பகைமைகள் அல்லது பழங்குடி மொழிகளின் ''சமநிலே'' காரணமாக, முன்னுள் காலனியாதிக்க வாதிகளின் மொழியே சில நாடுகளில் தேசத்தின் மொழியாக வலுப்படுவதன் சாத்தியப்பாடு நிச்சயம் இருக்கும். இது முன் நாட்களில் லத்தீன் அமெரிக்க நாடுகளில் நிகழ்ந்துள்ளது. சில இடங்களில் அண்டையில் வாழும் மக்களின் மொழி ஆட்சி மொழியாகத் தேர்வு செய்யப்படுகிறது. எடுத்துக் காட்டாக உகாண்டாவில் 1973 கோடையில் நடைபெற்ற கருத்துவாக்கெடுப்புக்குப் பின்னர் ஆங்கிலத்துக்குப் பதில் ஸ்வாகிலி மொழி அரசு மொழியாகியது. இந்த மொழி உள்நாட்டு அரசியல் நோக்கு நிலேயில் இருந்து பார்த்தால் ஒரு நடுநிலேமையான மொழி மட்டுமின்றி கிழக்கு ஆப்பிரிக்க அண்டை அயல் நாடுகளில் விரிவாகப் பரவியிருக்கிறது.

தேசிய இனங்கள் பழங்குடி மக்களின் பொருளாதார ஒருங்கிணேவு இன்னமும் மிகப் பலவீனமாக இருந்த போதிலுங்கூட ஆப்பிரிக்காவில் பல இடங்களில் புதிய தேசங்கள் உருவகம் பெற்றதானது இன்னுமொரு அலாதி அம்சமாகும், மறுபுறம் மக்களின் அரும்பிவரும் தேசிய உணர்வு ஓர் அகவயக் காரணியாக முன்னணிக்கு வருகிறது. இந்த உணர்வு, இன சமுதாய கூட்டு என்பதைக் காட்டிலும் காலனி ஆதிக்கவாதிகளே எதிர்த்த போராட்டத்தில் சமுதாயத்துக்குத் தேவைப்படும் ஒற்றுமையிணேயும், ஒன்று சேர்ந்து தேசிய அரசு அதன் பொறியமைவு சேனே ஆகியவற்றை கட்டி உருவாக்குவதையும் அடிப்படையாகக் கொண்டிருந்தது. தேசிய அரசு என்பது தேசத்தின் உருவாக்கத்தில் ஒரு பிரதானமான, தீர்மானகரமான அம்சங்களில் ஒன்ருகும்; அதன் பொருளாதாரக் கொள்கை சிறப்பாயும் ஒரு முக்கியமான பாத்திரம் வகிக்கிறது.

வளர்ந்து வரும் முதலாளித்துவ சூழலில் தேசங்களின் உருவாக்கமானது, நாட்டின் வரலாற்றுக் கூறுகள், அரசியல் நிலேமை, மற்றும் வேறு பல காரணிகளேச் சார்ந்ததாக இருக்கும். எடுத்துக்காட்டாக மெக்சிகோவில் சுதேசி

மக்களுக்கும் பின்னால் வந்து குடியேறியவர்களுக்கும் இடையான சங்கமிப்பில் கணிசமான முன்னேற்றம் காணப்பட்டது, மறுபுறம் அண்டையிலுள்ள கவுடிமாலாவில் லத்தின் இனத்தவரும் இந்தியரும் இன்னமும் இரண்டு தனிப்பிரிந்த மிகவும் நெருக்கம் இல்லாத் தொடர்புமட்டுமே உடைய பிரிவுகளாக நீடிக்கின்றனர் 18 லட்சம்பேர் வரை வரும் இந்தியர்கள் மலைகள் சார்ந்த பீடபூமிகளுக்குத் தள்ளப்பட்டு நாட்டின் அரசியல் வாழ்வில் இருந்து மட்டு மன்றி பொருளாதார கலாசார வாழ்க்கையில் இருந்து உள்ளபடியே ஒதுக்கப்பட்டுக் கிடக்கின்றனர். அவர்கள் 23 இனப்பிரிவுகளைச் சேர்ந்தவர்கள், இவை ஒவ்வொன்றுக்கும் சொந்த மொழி, சொந்த வாழ்க்கை முறை மரபுகள் இத்தியாதி உள்ளன. அமெரிக்காவில் 800,000 இந்தியர் கள் மட்டுமே இருக்கிறார்கள், இவர்களில் மூன்றில் இரண்டு டங்குப்பேர் ஒதுக்கப்பட்ட பகுதிகளில் வசிக்கிறார்கள். நாட்டு வாழ்க்கையின் சகலதுறைகளில் இருந்தும் இவர்கள் முற்றாக வெளியேற்றப்பட்டு விட்டார்கள். இவர்களிடை 45 சதவிகிதம் பேருக்கு வேலை கிடையாது, குடும்ப வருவாய் நாட்டின் சராசரி வருவாயில் ஐந்தில் ஒரு பகுதியே. இவர்களில் 18 சதவிகிதம் பேரே செகண்டரி கல்வியை எட்டியவர்கள்.

தென் ஆப்பிரிக்கா, தெற்கு ரொடேஷியாவிலும் தேசிய ஒருமைப்பாட்டின் மிகவும் அலாதியான நடப்புக்கள் காட்சி தருகின்றன. இங்கு இன ஒதுக்கல் இனசங்காரத்தின் எல்லையை எட்டிவிட்டது. இனவெறி போலீஸ் அடக்கு முறைகளின் முன்னே சுதேசி மக்கள் தொகையினர் மத்தியில் ஒருபுறம் அதிகரித்து வரும் ஒற்றுமையும் மறுபுறம் பெரும் பான்மை கருப்பு நிறத்தவருக்கும் சிறுபான்மை வெள்ளை நிறத்தவருக்கும் இடையிலான விரிவடைந்து வரும் பிளவும் காணப்படுகின்றன. தென் ஆப்பிரிக்காவில் குடியேறிய வெள்ளை நிறத்தவர் (35 லட்சம் பேர்) சுதேசி மக்கள் (1 கோடி 35 லட்சம்) குடியேறிய ஆசியமக்கள் (5 லட்சம்) இவர்கள் ஒரு தேசமாக மணியுருப் பெறுவதற்கான எவ்விதச்

சுவடும் காணப்படவில்லை. நேர் மாறாக, இனவெறி அரசாங்கமானது இந்த நாட்டின் மெய்யான உரிமையாளர்களின் முன்னேற்றத்தைத் தடைப்படுத்தத் தன்னால் இயன்ற அனைத்தையும் செய்து வருகிறது. இவர்களுக்கு மிகவும் வளமற்றதான வெறும் 13 7 சதவிகித நிலம் ஒதுக்கப் பட்டுள்ளது. தென்னாப்பிரிக்காவைப் போலவே தெற்கு ரொடீஷியாவில் இருக்கும் இயான் ஸ்மித்தின் இனவெறி ஆட்சியும் உண்மையில் ஒரு வகையான பாசிசமேயாகும்.

இன்றைய நிலைமைகளில், ஆப்பிரிக்க ஆசிய நாடுகள் சிலவற்றிலான தேசங்களின் தொடக்கம், நிலப்பிரபுத்துவத்தின் மீதான முதலாளித்துவத்தின் வெற்றி என்று முழுமையாக இனங்கண்டுகொள்ள முடியாது. காலனி அமைப்பு ஒழிக்கப்பட்டது மூலம் தேசங்கள் தோன்றலாயின, காலனியமைப்பு அடிமைப்பட்டுக் கிடந்த மக்களின் அபிவிருத்தியை தடுத்து மட்டுப்படுத்தி வந்தது தெரிந்ததே. காலனி அமைப்பு என்பது முதலாளித்துவத்தின் துணைக் கிளைப்பேயானதால் புதிய தேசங்கள் பின்னது உண்மையில் மதிப்பிழந்து மங்கத் தொடங்கும்போதில் தோற்றமளிக்கின்றன. எனவே இளம் வளர்முக நாடுகளில் புதிதாக அமையும் எல்லாத் தேசங்களையும் முதலாளித்துவ தேசங்கள் என்று வருணிப்பது சரியல்ல. பல நாடுகளில் ஏகாதிபத்திய-எதிர்ப்பு அடிப்படையில் புதிய தேசங்கள் உருவாகியுள்ளன. ஏகாதிபத்தியத்திடம் இருந்து விடுதலை பெறுவது மக்களினங்களின் தேசிய ஒருமைப்பாட்டை சாதனையாக்க உதவுகிறது, அதோடு புதிய தேசங்களின் பரிணாமத்துக்கான புறவய நிலைமைகள் முதிர்ச்சியடையும் முறையில் பழங்குடி மக்கள் தேசிய இனங்களின் இணைப்பாக்கத்துக்கு இட்டுச் செல்கிறது. இந்த மக்களினங்களின் முன்னேற்றம் காலனி ஆதிக்கத்தால் செயற்கையாகத் தடுத்து மட்டுப்படுத்தப் பட்டது என்பது தெரிந்ததே.

இந்த நடப்பு மிகவும் சிக்கலானது, இயல்பாகவே முரண்பாடானது. இந்தியாவிலுள்ள நிலைமை தெட்டத்தெளிவான

உதாரணமாகும்: இங்கு முழு வளர்ச்சி பெற்றதான பெரிய தேசங்கள் மட்டுமின்றி, தேசங்களாக வலுப்படும் போக்கியல்புள்ள இன சமூகக் கூட்டுகளும் கூட வெகு தீவிரமான தன்வயமாக்கல் நடப்புக்கு இலக்காகி, ஓர் அரசு எனும் கட்டுக்கோப்புக்குள் மணியுருப் பெற்றுள்ளன, காலனி ஒடுக்கு முறையில் இருந்து விடுதலை பெற்ற நாடுகளில் புதிய தேசங்கள் அமையும் நடைமுறை இன்னும் முடிவுறவில்லை.

சில ஆப்பிரிக்க நாடுகளில் புதிய தேசங்கள் திட்டமான உருவம் பெறுவது அரைப் பிரபுத்துவ பழங்குடி உறவுகள் இன்னும் பரவலாக நிலவுவதன் காரணமாகத் தவக்கமடைந்துள்ளன. அவை சிலவற்றில் வன்முறை பழங்குடி மோதல்கள் தேசிய ஒருமைப்பாட்டைத் தடங்கல் செய்துள்ளன. உள்நாட்டு வெளிநாட்டுப் பிற்போக்கு சக்திகள் பழங்குடி சமய, சாதி மற்றும் இதர வேறுபாடுகளைத் தன் நலத்துக்குப் பயன்படுத்தி தேசங்கள் எதார்த்தமாயும் உருப்பெறுவதைத் தவக்கம் செய்ய முயல்கின்றன. உள்நாட்டு பிற்போக்கு சக்திகள் (நிலப்பிரபுக்கள், பழங்குடித் தலைவர் மற்றும் புரோகிதர்களின் ஒரு பகுதியினர்) இந்த முன்னேற்றமான நடப்பைத் தமது நலவுரிமைக்கு ஏற்பட்ட அபாயமாகக் கருதுகின்றனர்.

அரும்பி வரும் தேசங்களின் இனிமேலான அபிவிருத்திக்கான வாய்ப்புக்கள் அவற்றின் சமுதாயக் கட்டமைப்பையே பெருமளவுக்குச் சார்ந்திருக்கின்றன—பெரும்பாலான வளர்முக நாடுகளில் தொழிலாளி வர்க்கம் எண்ணிக்கையில் சிறிதாகவே இருக்கிறது. பொதுவாகவே காலனியாதிக்கவாதிகள் சாம்ராஜ்ய நாடுகளின் தன்னுணவத்தன்மை வாய்ந்த நலன்களுக்குத் தக்கபடி விடுதலைபெற்ற மக்களினங்களுக்கு மிகவும் குறுகிய தொழில்துறை அடித்தளத்தையே விட்டுச் செல்கின்றனர். இந்தத் தொழிலாளர்களும் பெரும்பாலும் விவசாயப் பாட்டாளிகளே—தோட்டத் தொழிலாளர், பண்ணைத் தொழிலாளர்களே. இவர்களில் பெரும்பாலோர் தேர்ச்சியில்லாதவர்கள். பெரும் பகுதியினர் எழுத்தறிவற்றவர்கள்—இந்த புறவய நிலைமைகள் காரணமாக

மிகப்பல வளர்முக நாடுகளிலான தொழிலாளி வர்க்கம் ஏகாதிபத்திய-எதிர்ப்பு தேசியப் போராட்டத்தின் தலைமை எனும் உரிய இடத்தை இன்னும் மேற்கொள்ளவில்லை.

ஒட்டு மொத்த மக்கள் தொகையில் சதவிகிதத்திலும், வகிக்கும் பாத்திரத்திலும் தொழிலாளி வர்க்கம் ஏற்றம் பெற்றுவரும் போக்கியல்பு எல்லா ஆகிய ஆப்பிரிக்க நாடுகளிலும் தெட்டத்தெளிவாகத் தெரிய வருகிறது. ஒப்பளவில் இது மெதுவாக இருந்தபோதிலும் தொழில்துறை போக்குவரத்துத் தகவல் போக்குவரத்து துறைகளின் வளர்ச்சியும், இயற்கைச் செல்வவளத்தின் விருத்தியும் பாட்டாளிகளின் எண்ணிக்கையைப் பெருக்க வைக்கும் தன்மையில் உள்ளன.

1969-ல் நடைபெற்ற கம்யூனிஸ்டு, தொழிலாளர் கட்சிகளின் சர்வதேச மாநாடு எண்ணிக்கைப் பெருக்கத்துடன்கூடவே "பல இளம் அரசுகளில் தொழிலாளிவர்க்கத்தின் சமுதாயப் பாத்திரமும் அரசியல் செயல்பாடும் அதிகரித்துள்ளது" என்பதை வலியுறுத்தியது. "ஆசியா, ஆப்பிரிக்கா நாடுகளின் இளம் பாட்டாளி வர்க்கத்துக்கும் சோஷலிஸ்டு நாடுகளிலும் முதலாளித்துவ அரசுகளிலுள்ள தொழிலாளி வர்க்கத்துக்கும் இடையிலான சர்வதேசப் பிணைப்புக்களின் முக்கியத்துவம் அதிகரித்து வருகிறது."*

இது மெய்நடப்புக்களால் உறுதி செய்யப்படுகிறது. எடுத்துக்காட்டாக, இஸ்ரேலி ஆக்கிரமிப்பை எதிர்த்தும், சில அரபு நாடுகளின் அகத்தே நிலவிய பிற்போக்கின் எதிர்ப்பைத் தகர்த்திடவுமான அரபு மக்களின் போராட்டத்தில் தொழிலாளி வர்க்கம் ஒரு செயலூக்கமுடைய சக்தியாக உள்ளது. தற்போது தேசியத் தொழிற்சங்கங்கள் ஆப்பிரிக்க மாகண்டம் முழுவதன் அளவுக்கு ஒன்று சேர்ந்து வருகின்றன.

தனது லாபங்களை பத்திரமாகத் திரட்டுவதில் ஆவல் கொண்டதான வளர்முக நாடுகளிலான தேசிய பூர்ஷ்வா

---

* 1969 மாஸ்கோவில் நடந்த கம்யூனிஸ்டு, தொழிலாளர் கட்சிகளின் சர்வதேச மாநாடு, பக். 29.

வர்க்கம், தேசியத் தொழில்துறை, வாணிகம், கைத் தொழில்கள் இவற்றின் தங்கு தடையற்ற வளர்ச்சியில் இயல்பாகவே அக்கறை கொண்டதாக இருக்கிறது இதனுல் இதில் பெரும்பான்மையானவை இத்தகைய வளர்ச்சியைத் தடுக்கும் அன்னிய அரசியல் அல்லது பொருளாதார ஆதிக்கத்தை எதிர்க்கின்றன. ஆயினும் அதே சமயம் தேசிய பூர்ஷுவா வர்க்கம் முதலாளித்துவ கோட்பாடுகள் மேம்பட்டு தொழிலாளர்களைச் சுரண்டும் தனது சுதந்திரம் உறுதி செய்யப்படுவதை விழைகின்றது. இந்த நிலைமையின் இருதலைப் போக்கும், இதன் உள்ளார்ந்த முரண்பாடுகளும் தேசிய பூர்ஷுவா வர்க்கத்தின் தனி லட்சணமாகும். ஆகவே தேசிய பூர்ஷுவாக்களின் புரட்சிகர ஆற்றலை முழுமையாக மறுத்திடுவதோ அல்லது தேசவிடுதலைப் போராட்டத்தை எப்போதும் தடங்கல் செய்துவரும் ஒரு பிற்போக்கு சக்தியாகச் சித்திரிப்பதோ தவறுகும் தேசிய பூர்ஷுவாக்கள் எல்லா சந்தர்ப்ப சூழல்களிலும் தேசிய நலன்களைக் காட்டிக் கொடுத்து, ஏகாதிபத்தியத்துடன் சமரசம் செய்து கொள்வார்கள் என்று கருதுவது பிழை யாகும். அதேபோல அந்த வர்க்கத்தின் புரட்சி ஆற்றலை மிகைப்படுத்துவதும், அது எப்போதும், எல்லாக் கட்டங் களிலும் ஏகாதிபத்தியத்தின் தலையீட்டை எதிர்த்து தேசிய நலன்களுக்காக முரணின்றிப் போராடி வருவது என்றோ, உழைக்கும் மக்கள் திரளினருடன் சேர்ந்து எப்போதும் முற்போக்கு சமூக பொருளாதார நடவடிக்கைகளை மேற் கொள்ளும் சக்தி வாய்ந்தது என்றோ மிகைப்படுத்துவதும் தப்பாகும்.

தேச விடுதலைப் புரட்சிகளின் பிரபலமான வெற்றி களும், காலனி அமைப்புத் தகர்வுறுவதும், ஆசியாவிலும் ஆப்பிரிக்காவிலும் பல டஜன் கணக்கான புதிய தேசிய அரசுகள அமைவதும், இவை சிலவற்றில் முற்போக்கான சமூக–பொருளாதார மாற்றங்களுடன் ஒன்று சேர்ந்து தேசிய பூர்ஷுவா வர்க்கத்தின் புரட்சி ஆற்றல் குறிதத ஒரு சில பிரமைகளை ஏற்படுத்தியுள்ளன, இந்த வர்க்கத்தைச்

சேர்ந்தவர்கள் புதிய அரசுகள் பலவற்றில் தலைமை மேற் கொண்டார்கள். எங்கெல்லாம் இந்த நிலைமை இருந்ததோ அங்கெல்லாம் தேசியவாதம் சித்தாந்தமாயும் அதிகார பூர்வமான அரசியல் போதனையாகவும் இடம் பெற்றது.

தேசியக் கொடியை வீசி வரும் விடுதலை இயக்கங்களின் முற்போக்குத் தன்மை, திட்டவட்டமான வரலாற்றுக் கோணத்தில் இருந்து நிர்ணயிக்கப்படும் என்பது லெனினியத்தின் அடிக்கோளாகும்.

''நிலப்பிரபுத்துவ உறக்கத்தில் இருந்து மக்கள் திரளினர் விழிப்படைவதும், எல்லாவகை தேசிய ஒடுச்கு முறைகளையும் எதிர்த்து, மக்களின் தேசத்தின் சர்வவுரிமைக் காகப் போராடுவதும் முற்போக்கானவை. இதனுல், தேசியப் பிரச்சினையின் எல்லா அம்சங்களிலும் மிகவும் உறுதியான முரணற்ற ஜனநாயகத்தன்மையை ஆதரித்து நிற்பது மார்க்சியவாதிகளின் கடப்பாடான கடமை''* என்று லெனின் சுட்டியுரைத்தார். ஆனுல் இங்கு புரட்சிகர இயக்கவியலின் விஞ்சமுடியாத வித்தகர் வலியுறுத்திய தாவது: இந்தப் பணி பெரியளவுக்கு எதிர்மறையான ஒன்றே. தேசியவாதத்தை ஆதரிப்பதில் இந்த எல்லை வரை தான் பாட்டாளி வர்க்கம் போகமுடியும், இதற்கு அப்பால் பூர்ஷுவா வர்க்கம், தேசிய வாதத்தை அரண்செய்யும் நேர்நிலை நடவடிக்கை தொடங்குகிறது."**

தேசிய பூர்ஷுவா வர்க்கத்தின் வர்க்கக் கொள்கை எப்போதும் ''தேசியத் தன்மை'' வாய்ந்தது என்று வியாக்யானம் செய்வது மார்க்சிய-லெனினிய உணர்வுக்கு ஒவ்வாததாகும் என்பது தெளிவு. எதார்த்தத்தில் இது ''தேசிய ஒற்றுமைக்கான போராட்டம்'' எனும் சாக்கில், சில வளர்முக நாடுகளிலுள்ள தேசிய பூர்ஷுவா வர்க்க அரசாங்கங்கள் கம்யூனிஸ்டுகளையும் இதர ஜனநாயக

---

* வி. இ. லெனின், ''நூல் திரட்டு'', தொகுதி 20, பக். 34.

** அதே நூல், பக். 34—35.

சக்திகளையும் கடுமையாக அடக்குவதை அறவே நியாயப் படுத்த முயல்கிறது. இந்தோனேஷியாவில் நடந்த துன்பியல் நிகழ்ச்சிகளும் சூடானில் கம்யூனிஸ்டுகளையும் இதர முற்போக்கு அமைப்புகளையும் எதிர்த்த பயங்கர நடவடிக் கைகளும் தேசியவாதக் கொடியின் கீழேயே நடத்தப் பட்டன. 1969 சர்வதேச மாநாட்டு அறிக்கை இந்தோ னேஷியாவின் சர்வாதிகார ராணுவ ஆட்சி தேசவிரோதக் கொள்கையை அமல் செய்து வருகிறது என்று சரியாகவே குறிப்பிட்டது.*

தேசிய பூர்ஷுவாக்கள் உள்ளிட்டு வர்க்கங்களின் பாத்திரத்தை மதிப்பிடுவதற்கான ஒரே சரியான கோட்பாடு வரலாற்றுக் கோட்பாடாகும். ஒரு சமுதாய அடுக்கினரின் புரட்சிகர அல்லது பிற்போக்கு ஆற்றலை அளவிட சம்பந்தப் பட்ட நாட்டின் வரலாற்று கட்டத்தையும் சமூக-பொருளாதாரத்தின் தரத்தையும் மக்கள் திரளினரின் செயல்பாடு மற்றும் அமைப்புத் திரட்சியின் அளவையும் உறுதியாக நிலைநாட்டுவது முதல் அவசியமாகும்.

ஒரு நாடு அன்னியரால் ஒடுக்கப்பட்டு, தேசிய சுதந்திரத்துக்காக ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப் போராடும் கட்டாயத்திற்குள்ளாகுமானால், அதன் பொருளாதார வளர்ச்சிக்குத் தடங்கல் விளைத்துப் பாழ் படுத்தும் நிலப்பிரபுத்துவ விட்டகுறைகளால் தொல்லைகளுக் காளாகுமானால் அந்த நிலையில் உழைக்கும் மக்கள் திரளினர் மட்டுமின்றி சுதந்திர தொழில் வளர்ச்சியை நம்பி நிற்கிற தேசிய பூர்ஷுவாக்களுங்கூட ஓரளவுக்குப் புரட்சிகரமான பங்கு வகிப்பது சாத்தியம். ஓர் அளவுக்கு அவர்கள் முக்கியமாயும் மக்கள் திரளினரின்—தொழிலாளி வர்க்கம் விவசாயி மக்களின் செயல் திறத்தைச் சார்ந்து இருந்த போதிலும் ஏகாதிபத்திய-எதிர்ப்பு நிலப்பிரபுத்துவ எதிர்ப்புப் போராட்டத்தில் கலந்து கொள்கிறார்கள். ஆனால்

* காண்க: **1969-ல் மாஸ்கோவில் நடந்த கம்யூனிஸ்டு, தொழிலாளர் கட்சிகளின் சர்வதேச மாநாடு,** பக். 53.

தேசியப் போராட்டத்தில் பங்கேற்கும் இந்தப் பூர்ஷுவா வர்க்கம், மக்கள் திரளினரின் செயல்பாட்டைக் கட்டுப் படுத்தவும் கண்காணிக்கவும் முயல்கிறது, தலைமைப் பாத்திரத்தைப் பறித்துக் கொண்டு, தேச விடுதலை, மேலும் விரும்பத்தகாத நிலப்பிரபுத்துவக் கட்டமைப்பு களின் ஒழிப்பு இவற்றின் பலன்களை ஒருதலைப்பட்சமாக அனுபவிக்க முண்டுகிறது. தேசிய சுய நிர்ணய உரிமை செயல்படுத்தப் படுவதற்கு முன்னரே, ஒடுக்கப்பட்ட நாடு களின் பூர்ஷுவா வர்க்கமானது, தேசிய இயக்கத்தை ஆதரித்துவரும் அதேபொழுதில், ஏகாதிபத்திய பூர்ஷுவா வர்க்கத்துடன், முழு ஒப்புதலுடன் எல்லா புரட்சிகர இயக்கங்களையும் புரட்சி வர்க்கங்களையும் எதிர்த்துப் போராடுகிறது''* என்று லெனின் வலியுறுத்தினர். ஆட்சி அதிகாரத்துக்கு வந்து தனது நோக்கங்களை எய்தியவுடன் இந்த தேசிய பூர்ஷுவா வர்க்கம் தனது சொந்த வர்க்க நலன்களை ''தேசம் முழுவதன் நலன்களாகக் காட்டி ஏய்க்க முயலும்.''

ஏகாதிபத்திய-எதிர்ப்புப் போராட்டம், முதலாவதாயும் முக்கியமாயும் தேசிய ஒடுக்குமுறைக்கு முடிவு கட்டுதல், தேசிய சுதந்திரத்தை மீட்டுப்பெறல் அல்லது வலுப்படுத் தலையே நோக்கமாகக் கொண்டது. இதற்கு எதிராக யாரும் வாதிட முடியாது.

நீண்டகாலம் நீடித்ததான காலனி ஒடுக்குமுறை, தேசிய உணர்வுகளை மிகவும் கடுமையாக உக்கிரப்படுத்து வதும், இளம் தேசிய அரசுகளின் தேசிய நலன்கள் அல்லது உரிமைகள் அவமதிக்கப்படின் உணர்ச்சிவயப்பட்ட எதிர் வினைகளை ஏற்படுத்துவதும் நிச்சயம். அன்னியச் சுரண்ட லாளர்களால் மதித்துத் துவைக்கப்பட்டதான தேசிய உரிமைகளை வலியுறுத்துவதிலான விருப்பம் ''அசாதாரணத் தன்மை'' கோரிய தேசிய உரிமை பாராட்டலில் ஒரு தேசம் இன்னொரு தேசத்தை எதிர்க்கும் விளைவை ஏற்படுத்தலாம்.

* வி. இ. லெனின், ''நூல் திரட்டு'', தொகுதி 31, பக். 242.

இதன் பலனுக, வளர்முக நாடுகளின் ஆதிபத்திய உரிமை களில் ஏகாதிபத்தியம் தொடர்ந்து தலையிடும் பின்னணியில் தேசிய ஒருமைப்பாட்டின் இயல்பான சட்டத்தால் ஒழுங்கியக்கம் செய்யப்பட்டதான நடைமுறை, ஒரு சில நிலைமைகளில்—பூர்ஷுவா வர்க்கம் சித்தாந்த ரீதியில் ஆதிக்கம் வகிக்கும்பட்சத்தில்—தேசியவாதத்திற்கு இட மளிக்கும்.

இதர சொத்துடைமை வர்க்கங்களைப் போலவே பூர்ஷுவா வர்க்கமும், வெளி ஏகாதிபத்தியத்தின் நிர்ப் பந்தத்தை எதிர்த்து எதார்த்தத்தில் ஓங்கிவரும் தேசிய கோபாவேசத்தைப் பயன்படுத்தி, இந்தக் கோபாவேசத்தை தேசியப் பாட்டையில் நெறியாண்மை செய்து தனது சொந்த நிலைகளைப் பலப்படுத்திக் கொள்வதில் அக்கறை கொண்டிருக்கிறது. இதன் வழி அதனுல் பெறமுடிவது என்னவென்ருல், முதலாவதாக தேசிய "ஒற்றுமை" சுரண்டுவோர் சுரண்டப்படுவோர் நலன்களின் ஒரு கற்பனை பொதுமை, இது மக்கள் திரளினரை சித்தாந்த முறையில் அடிமைப்படுத்தி வைத்திருக்க உதவுகிறது, இரண்டாவ தாக, ஏகாதிபத்திய ஏகபோகங்களுடனுன உறவுகளில் கூடுதல் பேரம் பேசும் வாய்ப்புக்கள், உள்நாட்டின் சுரண்டும் உயர்படியினருக்கு ஒப்பளவில் அதிக லாபகரமான நிபந் தனைகளை இச்சகம் பேசிப் பெறுவது சாத்தியமாகிறது.

குறிப்பிடத்தக்க கால அளவு சித்தாந்த அரசியல் தலைமை தேசிய பூர்ஷுவா வர்க்கத்தின் கரங்களில் நீடிக்கு மானுல், தேசத்தின் உருவாக்கம் மீதான செல்வாக்கு ஐயத் திற்கு இடமற்றது.

இடைத்தட்டு குட்டி பூர்ஷுவா அடுக்கினரும் அறிவுத் துறையினரும் தேசிய ஒருமைப்பாட்டுப் பணியில் முக்கிய பங்கு வகிக்கின்றனர். தேசிய மொழியின் மரபுகள் போன்ற தமது தேசிய கலாசார பாரம்பரியங்களை உறுதியாகப் பற்றி நிற்கும் இந்த உள்நாட்டு அறிவுத்துறையினர் வெளி நாட்டவரின் கலாசார ஏகபோகத்தில் இருந்து விடுதலையை

நாடுகின்றனர். இவர்கள் முன்னாள் சாம்ராஜ்ய நாட்டில் இருந்து பொழியும் சித்தாந்த நீரோட்டங்களை விமர்சிக்கின்றனர், சமுதாய மாற்றத்துக்கான புதிய அலாதியான சித்தாந்தக் கருத்தோட்டங்களை உருவாக்குகின்றன.

வளர்முக நாடுகளின் புரட்சிகர ஜனநாயக அடுக்கினைச் சேர்ந்த முற்போக்கு நபர்கள் ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப் போராடவும், சமூக முன்னேற்றத்துக்கும், விடுதலை இயக்கத்தில் முக்கிய பாத்திரம் வகிக்கவும் வேண்டி பல டஜன் வகைப்பட்ட கட்சிகளை நிறுவியுள்ளனர். அனைத்து தேசபக்த சக்திகள் முதலாவதாயும் மார்க்சிய-லெனினிய புரட்சிகர-ஜனநாயகக் கட்சிகளின் நெருக்கமான ஒத்துழைப்பும் கூட்டுப் போராட்டமும் இல்லாமல், ஏகாதிபத்திய எதிர்ப்பு முன்னணியின் ஒற்றுமையையும், தீவிரமான சமூக அரசியல் மாறுதல்கள் மூலமாக தேசவிடுதலைப் புரட்சியின் வெற்றிகரமான வளர்ச்சியையும் பெறுவது சாத்தியமல்ல என்பது நிச்சயம். **1969**-ல் மாஸ்கோவில் நடைபெற்ற கம்யூனிஸ்டு, தொழிலாளர் கட்சிகளின் மாநாடும் கூட சோஷலிஸ்டு மற்றும் வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளின் மார்க்சிய-லெனினியக் கட்சிகளுக்கும், ஆசிய ஆப்பிரிக்காவின் புரட்சிகர—ஜனநாயகக் கட்சிகளுக்கும் இடையிலான மிகவும் நெருக்கமான உறவுகளின் அவசியம் குறித்து கவனத்தை ஈர்த்தது. இந்த விஷயத்தில் சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சி ஓர் எடுத்துக் காட்டாகும். ஏனெனில் அது இத்தகைய இருபதுக்கும் மேற்பட்ட கட்சிகளுடன் தொடர்புகொண்டு இருக்கிறது.

சில இடங்களில், வேறுபட்டதும் எதிரானதுமான சித்தாந்த ஆக்கங்கள் இணையும்போதில், புரட்சிகர ஜனநாயக வாதிகள் நவீன முற்போக்குக் கருத்துக்களுடன் 'வழக்கிறந்ததான சமய மற்றும் தத்துவ ஞான கருத்துப் படிவங்களைக் கொண்ட சிக்கலான கலவையைச் செய்வதும் சாத்தியமாகிறது. அவர்கள் சித்தாந்தப் பதாகை என்ற முறையில் பெரும்பாலும் சமய வண்ணம் தீட்டியதான

பூர்ஷுவா அல்லது குட்டி பூர்ஷுவா வகைப்பட்ட தேசிய வாதத்தை உயர்த்திப் பிடிக்கின்றனர்.

வளர்முக நாடுகளிலான மக்கள் தொகை பிரதான மாயும் நாட்டுப் புறங்களில் வதிவதால், சமூக சுற்றுச்சூழல் தேசியவாத கருத்துக்களும் தப்பெண்ணங்களும் பரவு வதற்கு உகந்ததாக இருக்கிறது. ஏகாதிபத்திய வாதிகளின் தேசிய-எதிர்ப்புச் செயல்களால் விளைந்த முக்கியமாயும் முற்போக்கான தேசியக் கண்டன இயக்கம் பூர்ஷுவா செல்வாக்கு, மக்கள் திரளினரின் அரசியல் பக்குவமின்மை அல்லது பாட்டாளி வர்க்க முன்னணிப் படையின் மோசமான கல்விப் பணி காரணமாக பெரும்பாலும் தேசியவாத வண்ணத்தைப் பெறுகிறது.

புதிதாக விடுதலை பெற்ற மக்களின் தேசிய ஒருமைப்பாடு, தேச விடுதலை இயக்கத்தின் இன்றைய கட்டத்தின் தேசிய சமூக அம்சங்களின் தொடர்பாட்டில் ஏற்படும் மாறுதல்களுடன் கால அளவில் ஒத்திருந்தது. இந்தத் தொடர்பாடு பல காரணிகளைச் சார்ந்திருந்தது: மக்களின் அபிவிருத்தி, விடுதலைப் போராட்டத்தின் கட்டம், போராட்டத்துக்குத் தலைமை தாங்கும் வர்க்கங்கள் அடுக்குகள் இத்தியாதி.

அன்னிய ஒடுக்கு முறையை ஒழித்து அரசியல் சுதந்திரத்தைப் பெறுவதற்கான போராட்டத்தின் உச்சக் கட்டத்தில் எல்லா வர்க்கத்தினரும் அடுக்கினரும் பொதுவான தேசியக் கடமைகளால் ஒன்றிணைக்கப்பட்டனர். இதில் முக்கியமாக இருந்தது சுய நிர்ணய உரிமையினைப் பெறுவதும், தேசிய அரசை அமைப்பதுமேயாகும். பொதுவான தேசியக் குறிக்கோள் களுக்கான விடுதலைப் போராட்டம், தேசியவாதத்தின், ஜனநாயக மற்றும் பிற்போக்கு இயல்பின் சிக்கலான கலவையின் செல்வாக்குக்கு இலக்காகி உள்ளது: மக்களின் தேசிய உணர்வின் பெருக்கத்தின் பிரதிபலிப்பு, தேசிய பூர்ஷுவாக் களின் பழங்குடி கனவான்கள் மற்றும் பிரபுத்துவ மேற்குலத்தவர், புரட்சிகர-ஜனநாயக அறிவாளிகள் மற்றும்

உழைக்கும் மக்கள் திரளினரின் நலன்களை வெளிப்படுத்தும் கருத்துக்கள், வட்டார நிலைமைகளில் வளர்ந்த தேசிய வாதம், வெளியிலிருந்து கொண்டு வரப்பட்டதான தேசிய வாதம்.

தேசியவாதம் பிரத்தியேக தேசிய இயல்புகளால் மெய்ப்பிக்கப்பட வேண்டுவதில்லை என்பது நியாயமே. நிச்சயமாயும் ஒரு நாட்டின் உரிமைகளையும் நலன்களையும் ஏகாதிபத்திய ஏகபோகத்தை எதிர்த்துப் பாதுகாத்துவரும் அதன் தேசிய இயல்புகள், என்ன நடக்கிறது என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டுமானால் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டியவையாகும். ஆனால் அவற்றை பரமமானதாகவோ இதர மக்களுடனான நியாயமான ஒத்துழைப்பின் நலன்களுக்கும், உலகம் முழுதிலுமான ஏகாதிபத்திய எதிர்ப்பு சக்திகளின் ஒன்றுபட்ட போராட்டத்துக்கும் எதிரானதாகவோ கருதக்கூடாது.

காலனி அமைப்பின் சிதைவு உலகில் சக்திகளின் தொடர்பாட்டை மாற்றியுள்ளது. பல இடங்களில் சோஷலிஸ்டு நாடுகள் காலனி சாம்ராஜ்யத்தின் இடிபாடுகள் மீது கட்டியெழுப்பப்பட்ட புதிய சர்வவுரிமை அரசுகளுடன் ஐக்கிய முன்னணி அமைத்துள்ளன. சோஷலிஸ்டு நாடுகளைப் போலவே வளர்முக அரசுகளும் உலக சமாதானத்தை ஆதரித்து நிற்கின்றன, உலக மேலாதிக்கம் பெறவும் உலக அணு ஆயுதப் போரை மூட்டவும் ஏகாதிபத்திய வல்லரசுகள் வகுத்து வரும் சூழ்ச்சித் திட்டங்களை எதிர்த்து நிற்கின்றன. பல்வேறு வளர்முக நாடுகளில் பல்வகையான சமூக பொருளாதார அரசியல் நிலைமைகள் இருப்பது மெய்யே.

இருப்பினும், பல டஜன் கணக்கான ஆசிய ஆப்பிரிக்காவின் புதிய சர்வவுரிமை அரசுகள் ஐ. நா. மன்றத்திலும் வேறு இதரபல சர்வதேசிய அமைப்புகளிலும் உறுப்பினர்கள் ஆகியிருப்பதானது, ஏகாதிபத்தியத்தின் வீழ்ச்சிக்கும், தேச விடுதலை இயக்கத்தைத் திணறடிக்கச் செய்ய அது நடத்திய முயற்சியின் படுதோல்விக்கும் சான்று வகிக்கின்றன.

தேசிய வாதத்தில் ஜனநாயக அம்சம் பிற்போக்கு சக்திகளைப் பின்தள்ளியது போலவே, பொதுவான தேசிய நோக்கங்களுக்கான போராட்டத்தில் தேசிய சக்திகள் சமூக வர்க்க சக்திகளை விஞ்சி முன்நின்றன. இதனால்தான் மார்க்சிய-லெனினியக் கட்சிகள் உட்பட முற்போக்கு சக்திகள் எங்கெல்லாம் ஏற்கெனவே இருந்தனவோ அங்கு அவை தேசியவாதிகள் தலைமையிலான இயக்கங்களை, தாற்காலிகமாகவும், கறாராயும் நிர்ணயிக்கப்பட்ட வரம்புக் குள்ளும் என்ற போதிலும் ஆதரித்தன.

தேசிய அம்சங்கள் மேலோங்கி இருப்பினும் சமூக வர்க்க சக்திகளைப் புறக்கணித்துவிடலாகாது. அவை முக்கிய மானவை, காரணம் ஏகாதிபத்தியத்தை எதிர்த்த ஒடுக்கப் பட்ட மக்களினங்களின் போராட்டமானது அவசியமாயும் பேரளவிலும் பொதுவாக ஒடுக்குமுறையை எதிர்த்த ஒரு வர்க்கப் போராட்டமே. இது இந்த இயக்கத்தின் அளவு மக்களினங்களின் ஈடுபாடு, வர்க்க சக்திக்கு ஏறத்தாழ முக்கியமான இடம் தரப்பட்டதா எனும் இவற்றைப் பொருத்து இருக்கும். ஆனல் இது இந்தப் போராட்டத்தில் எப்போதுமே நிலவிவரும். அரசியல் சுதந்திரத்துக்குப் பின்னர், மிகவும் பின்தங்கிய நாடுகளில்கூட தீவிரமான வர்க்கப் பாகுபாடு காணப்படுகிறது, நாடு எந்த வளர்ச்சிப் பாதையைத் தேர்வு செய்யப் போகிறது என்பதை முடிவு செய்யவேண்டி இருப்பதால் சமூக அம்சங்கள் முன்னணிக்கு வருகின்றன. இது உண்மையிலேயே தேசியவாதம் பரிண மிப்பதை கட்டாயப்படுத்துகிறது, இதன் உள்ளடக்கம் வர்க்க சக்திகளின் தொடர்பாட்டினை சார்ந்ததாக இருக்கும்.

லெனின் முன்னறிந்து கூறியபடி, தேசிய பூர்ஷுவா வர்க்கந்தான் அதிகாரத்துக்கு வரும் நாடுகளில் தேசிய வாதத்துக்கான ''நேர்நிலை'' நடவடிக்கைகளைத் தொடங்கு கிறது. மறுபுறம் புரட்சிகர ஜனநாயக சக்திகள் உள்ளிட்ட தான முற்போக்கு சக்திகள் தேசியவாதத்தில் பொதுவான

ஜனநாயக உள்ளடக்கத்துக்கே முக்கியத்துவம் தருகின்றன, இவை தேசிய ஒருமைப்பாட்டை மேம்படுத்துவதிலும், நாடு விடுதலை அடைந்த பின்னர் தேசமாக அமைக்கப் படுவதிலும் தொடர்ந்து ஆக்கபூர்வமான பாத்திரம் வகிக்கின்றன.

வளர்முக நாடுகளில் தேசியவாதம் பரிணாமமடைந்து வருவதையும், மக்கள் முதலாளித்துவமற்ற பாதையில் மாறிச் செல்லும்போது, தேசியப் பிரச்சினையின் உள்ளடக் கத்தில் ஏற்படும் மாறுதல்களையும் நெருங்கிப் பார்ப்போம்.

தேசிய வாதத்தின் பரிணாமம்; முதலாவதாயும் முக்கிய மாயும் பொதுவான மக்களின் வளர்ச்சியின் போதான சமூக வர்க்க முரண்பாடுகள் கடுமையுறுவதன் கட்டாயத் தால், குறிப்பாயும் எந்த வழியில் செல்வது என்பதைத் தேர்ந்து கொள்ளும் நிலையில் ஏற்படுகிறது. இங்கு வளர்முக நாட்டில் சித்தாந்தமாயும், பொதுவான தேசியப் பிரச்சினைக்குத் தீர்வு, சமுதாயத்தின் மறு சீரமைப்பு இரண்டுக்குமான கொள்கை என்ற முறையிலும் தேசிய வாதம் பெரும்பாலும் தனது உள்ளடக்கத்தில் சமூக அம்சங் களுக்கு முதலிடம் தருகிறது. தேசியவாதத்தின் ஏற்பாளர் மத்தியில் ஒரு வர்க்கப்பாகுபாடு நிகழ்கிறது. சிலர் தேசிய வாதத்தின் பிற்போக்கு நிலைகளுக்கு முற்றாகப் பெயர்ந்து செல்கின்றனர், அதே சமயம் மற்றவர்கள் தேசியவாதத் திலான ஜனநாயக சக்திகளை தீவிரமான ஜனநாயக சமுதாய மாற்றங்களுடன் இணைத்திட முயல்கின்றனர்.

எடுத்துக்காட்டாக அரபு தேசியவாதம் குறிப்பாயும் எகிப்திய அரபுக் குடியரசில் கடந்த பத்தாண்டுகளாக மிகவும் முரண்பட்ட வழியில் வளர்ந்து வந்திருக்கிறது. தேசியவாதத்தின் பொதுவான ஜனநாயக உள்ளடக்கத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தியும், மக்கள் திரளின் நலன்களைத் தீவிரமாக ஆதரித்தும் வந்த வர்க்கங்களும் பகுதியினரும் நாட்டின் முற்போக்கான அபிவிருத்தியை உறுதி செய்யும் பொருட்டு ஒற்றுமையை நாடினர். பிரபுத்துவ சீமான்

களுடனும் தேசிய பூர்ஷுவா வர்க்கத்தின் வலதுசாரிப் பகுதியுடனும் இணைந்திருந்த சக்திகள் மறுபுறம் அரபு தேசியவாதத்தின் பிற்போக்கு உள்ளடக்கத்தை ஆதரித்து, நாடு முதலாளித்துவமற்ற பாதையை மேற்கொள்வதைத் தடுக்கும் நோக்கமுடன் அன்னிய ஏகாதிபத்தியங்களுடன் தொடர்புகொண்டன. வருந்தத்தக்க முறையில், இப்போதைக்கு அரபு தேசியத்தின் பிற்போக்கு உள்ளடக்கம் எகிப்திய அரபுக் குடியரசில் மேலோங்கி நிற்கிறது. எகிப்தியத் தலைவர்கள் இஸ்ரேலுடனும் அதன் புரவலர்களோடும் தனி பேர ஏற்பாட்டுக்கு ஒப்புக்கொண்டனர். அவர்கள் எடுத்த முடிவு, எகிப்திய மக்களின் மெய்யான நண்பர்களிடமிருந்து மறைத்து வைக்கப்பட்டு, ஆக்கிரமிப்பை எதிர்க்கும் அரபு நாடுகளுக்குத் தெரியாமல் செய்யப்பட்டது என்று 1976 மார்ச் 31-ந் தேதிய சோவியத் அரசாங்கத்தின் அறிக்கை கூறுகிறது. இது உண்மையில், பற்றுடல் செய்யப்பட்ட அரபுப் பிரதேசங்களை விடுவிப்பதற்குரிய போராட்ட முன்னணியில் இருந்து எகிப்தை விலக்கி வைத்தது.

தேசிய விடுதலை மண்டல நாடுகளில் தேசியவாதம் பரிணமித்ததன் தனிப்போக்கு என்னவென்றால், இதன் ஜனநாயகப் போக்கின் ஆதரவாளர்கள்கூட தேசிய அசாதாரணத் தன்மையையும் தமது நாட்டிற்கான மாகண்டம் முழுதுக்குமான ''தனிப்பாதை'' எனும் கருத்தையும் அடிக்கடி ஆதரித்து வந்தார்கள் என்பதே. இதன் ஆதரவாளர்கள் விரும்பினும் சரி விரும்பாவிடினும் சரி, இது நிச்சயமாயும் சுய ஒதுக்கத்துக்கும், ஏகாதிபத்திய நவீன காலனியாதிக்கத்தின் சூழ்ச்சித் திட்டங்களை எதிரிடுவதற்கு மிகவும் அவசியமாக இருக்கும் விடுதலைபெற்ற மக்களினங்களின் ஒற்றுமையைச் சீர்குலைப்பதற்கும் இட்டுச் செல்லும்.

சிறிய அளவில் இருக்கும் நாடுகளில் குறுகிய தேசியவாதம் பரப்பப்பட்டு வருகிறது என்பதை மனதில் கொள்ள வேண்டும். எடுத்துக்காட்டாக ஆப்பிரிக்காவில் புதிய தேசிய அரசுகள் ஐந்தில் ஒன்று பத்து லட்சம் பேருக்கும் குறைவான மக்கள் தொகையே கொண்டதாக இருக்கின்றன, மீதியில்

பாதி நாடுகளில் 10 லட்சம் முதல் 50 லட்சம் மக்களே வாழ்கின்றனர். இதன் பின்விளைவு அவற்றின் பின்தங்கிய நிலைமையுடன் துரிதமான வளர்ச்சிக்கு அத்தியாவசியமான மனித சக்தியின் கடுமையான பற்று குறையும் சேருகிறது. ஆகவே, பல நூற்றாண்டு காலமான அடிமைத்தனம், மட்டுப் படுத்தப்பட்ட வளர்ச்சி இவற்றால் வேதனையுறும் இந்த சிறிய தேசங்கள் பெரும்பாலும் நவீன காலனி ஆதிக்கவாதிகளுக்கு இரையாதல் அதிசயமல்ல.

குறுகிய தேசியவாதத்தின் ஆதரவாளர்கள் இதர நாடுகளில் உள்ள நிலைமைகள் பற்றியும் அவற்றில் ஏகாதிபத்திய வாதிகள் தொடுக்கும் கவிழ்ப்பு நடவடிக்கைகள் பற்றியும் கவலையற்றவர்களாய் ஏகாதிபத்தியவாதிகள் இஷ்டபடி செயல்பட இடமளிப்பதும் சரியல்ல. ஆப்பிரிக்காவின் சுதந்திரத்தின் உள்நாட்டு வெளிநாட்டு விரோதிகள் எண்ணற்ற ராணுவ அரசுக் கவிழ்ப்புகளைத் தூண்டி நடத்துவதற்கான காரணங்களில் இதுவும் துல்லியமான ஒன்றாகும். தேசிய அரசின் நிர்வாகத்திலும், அதன் சாதனைகளைப் பாதுகாப்பதிலும், மக்கள் திரளினர் முறையாக ஈடுபடுத்தப்படாத காலம்வரை, அன்னிய ஏகாதிபத்தியவாதிகளின் உள்நாட்டு பிற்போக்கு சக்திகளின் கவிழ்ப்பு நடவடிக்கையை ஒரு நாட்டின் உள்விவகாரம் என்று கருதக் கூடாது என்பது முற்றிலும் வெளிப்படை.

இதற்குப் பல பரிகார வழிகள் உள்ளன. எடுத்துக் காட்டாக தங்கனியாகாவும் ஜான்சிபாரும் சமத்துவ அடிப்படையில் இணைந்து ஒரு புதிய அரசான தான்சானியாவைப் படைத்தன, இதில் மக்களினங்கள் ஒவ்வொன்றும் தமது தேசிய அரசுத்துவத்தை நீடித்து வைத்திருந்தன. பிராந்திய கூட்டணிகள் அடிக்கடி ஏற்படுகின்றன, விடுதலை பெற்ற மக்களினங்கள் மத்தியில் பல்வேறு விதமான ஒத்துழைப்புக்கு இவை வகை செய்கின்றன. ஆனால் இவற்றுக்கு ஓர் ஏகாதிபத்திய-எதிர்ப்பு அடிப்படை இருந்து, இவற்றின் அபிவிருத்தியில் பொதுமக்கள் சேர்ந்து பங்கேற்றால் மட்டுமே இந்தக்

கூட்டுகள் திறம்படச் செயல்பட முடியும். இவை இல்லாவிடில் மக்கள் திரளினர் இடையிலும் இணைக்கப்பட்டுள்ள தனித்தனி அரசுகள் இடையிலும் அதிருப்தி ஏற்பட்டு மீண்டும் தனிமைக்கு ஒதுங்கிச் செல்லும் நிலை நேரும்.

தேசியவாதம், நாடுகளை முன்னேற்றப் பாதையில் இருந்து திசை திருப்புவதற்கான மிகவும் வெற்றி வாய்ப்புடைய சாதனம் என்று ஏகாதிபத்தியவாதிகள் கருதுவதை வரலாறு சுட்டுகிறது. ஆப்பிரிக்க ஒற்றுமைக்குப் பெரும் பணி புரிந்ததும், முதலாளித்துவமற்ற பாதையைக் கடைபிடித்ததுமான கனு அதன் முற்போக்கு ஆட்சி அன்னிய ஏகாதிபத்தியத்தாலும் உள்நாட்டுப் பிற்போக்கு சக்திகளாலும் தாக்கப்பட்ட சமயம் தன்னந் தனியாக விடப்பட்டது.

ஏகாதிபத்தியத்திடமிருந்து விடுதலை பெறும் இன்றைய கட்டத்தில் தேசிய அரசுகள் முன்னேற்றத்தின் கருவிகளாக இருக்க முடியாது எனும் கருத்து பிழையானது. இருப்பினும் இதுவே துல்லியமாயும் **ஆப்பிரிக்காவும் உலகமும்** எனும் சஞ்சிகையின் கருத்தோட்டமாக இருந்தது; ஏறுமுகமான பொருளாதார சர்வதேசியமயமாசகல் சகாப்தத்தில் தேசிய அரசு என்பது தற்காலத்துக்கு ஒவ்வாத ஒரு விஷயம் என்று அது வருணித்தது. தேசிய அரசு இன்னமும் சமூக முன்னேற்றத்திற்கான இயக்கு சக்தியே ஒரு மக்களின் வாழ்வில், தேசிய சர்வதேசிய நடப்புக்களின் தீவிர முனைப்பு மக்கள் திரளிடம் இருந்து அது பெறும் பலத்தையும் ஆதரவையும் பொருத்ததாக இருக்கும். தேசிய அரசுகள் குறுகிய தேசிய வாதத்தின் அடிப்படையில் நிர்மாணிக்கப்படலாகாது என்பது தெரிந்ததே. இளம் தேசிய அரசுகள் தமது தேசியவாதக் கொள்கையை மறுமதிப்பீடு செய்து மேலும் நெருக்கமான ஒற்றுமைக்குப் பாடுபட வேண்டும் என்று இந்தச் சஞ்சிகை சரியாகவே செப்புகிறது. மேலும் இந்த சந்தர்ப்பச் சூழல்களில் ஒற்றுமை ஏகாதிபத்தியம் மற்றும் உள்நாட்டு இடர்ப்பாடுகளை எதிரிடும் தேசிய அரசுகளிடையான உறவுகளுக்கு

மிகவும் பொருத்தமான லட்சணம் என்பது மட்டுமல்ல, அதோடு முன்னேற்றத்துக்கான ஒரு முக்கியமான சமூகக் காரணியுமாகும்.

முதலாளித்துவமற்ற வளர்ச்சிப் பாதை முன்னேற்றத்துக்கான ஒரு முக்கிய சாதனம், ஓரளவுக்கு தேசியப் பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்குரிய சாதனமும்கூட. இது தேசிய அபிவிருத்தி சம்பந்தப்பட்ட பிரச்சினைகளுக்குரிய தீர்வை உத்தரவாதம் செய்கிறது. காரணம் முதலாவதாயும் முக்கியமாயும் இது அன்னிய மூலதனத்தின் ஆதிக்கத்தையும் அதன் வலுக்கெடுக்கும் செல்வாக்கையும் ஒழித்துக் கட்டுகிறது. முக்கியமான சமூக-பொருளாதாரக் குறிக்கோள்களை அடைவதற்கு வேண்டி நாட்டு மக்களை ஒன்றிணைக்கிறது. முதலாளித்துவமற்ற பாதை பொருளாதாரத்தில் அரசுத் துறைக்கு வகை செய்கிறது, இதன் வழி தேசத்தின் தொழிலாளி வர்க்கத்தின் பெருக்கத்துக்கு உதவிசெய்கிறது, ஆகவே சமுதாயத்தில் இவர்களது பாத்திரம் உறுதியாக அதிகரித்து வருகிறது. மேலும் முதலாளித்துவமற்ற பாதை ஒரு சோஷலிஸ்டுத் திசையமைவை ஆதரிக்கிறது. இளம் தேசிய அரசுகளுக்கும் உலக சோஷலிஸ்டு மார்க்கெட்டுக்கும் இடையிலான பிணைப்புக்கள் படிப்படியாக விரிவடைதல் இன்றி இந்தத் திசையமைவு சாத்தியமல்ல. சோஷலிஸ்டு நாடுகளுடனான ஒத்துழைப்பு கேந்திரமான சமூக பொருளாதார பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண மிகப் பெருமளவு உதவுகிறது. மேலும் தேசிய ஒருமைப்பாட்டையும் பொதுவாக தேசிய உறவுகளையும் மேம்படுத்துகிறது.

ஆகவே, முதலாளித்துவமற்ற பாதை வளர்முக நாடுகளில் தேசிய, சர்வதேசிய நட்புக்களை தீவிரப்படுத்துகிறது என்பது தெளிவு. முன்னேற்றத்தின் பொதுவான நோக்கங்கள் ஒரு புறமும், சமுதாயம் பரவலாக ஜனநாயகமயமாகும் நடைமுறை மறுபுறமும், பல்வேறு இனப்பிரிவுகளின் ஒற்றுமைக்கும் தேசியஒருமைப்பாட்டுக்கும் தேசத்தின் உருவாக்கத்துக்கும் வழி சமைக்கின்றன. வேகமாக

அதிகரித்துவரும் தேசத்தின் தொழிலாளி வர்க்கம், சர்வ தேசத் தொழிலாளி வர்க்க இயக்கம், உலக சோஷலிஸ்டு அமைப்பு இவற்றின் செல்வாக்குக்கு இலக்காகி, தேசத்தின் உருவாக்கம், அதன் வடிவத் தோற்றம் சமுதாயக் கட்டமைப்பு மீது முன்னைவிட அதிக அளவில் செல்வாக்குச் செலுத்துகிறது. தேசிய அரசுத்துவத்தின் பாத்திரம் அதிகரிக்கிறது. அரசு ஆதரவு கோரி மக்கள் திரளைச் சார்ந்து நிற்கத் தொடங்குகிறது, மக்களோ தம் வகைக்கு, நாட்டின் ஆட்சி நிர்வாகத்தில் மேலும் அதிகமான பங்கு வகிக்க முன் வருகின்றனர். இந்த வழியில், அரசு ஒரு புதிய வாழ்வைக் கட்டியமைப்பதற்கான ஒரு கருவியாகி, விடுதலை பெற்ற மக்களை முன்னேற்றம், சோஷலிசம் எனும் பாதையில் இட்டுச்சென்று மாறுதல் கட்ட லட்சணமுடைய ஒரு தேசம் தோன்றுவதற்கு வகை செய்கிறது.

"மாறுதல் கட்ட-லட்சண தேசம்" எனும் கருத்துரு ஒப்பியலானது, முதலாளித்துவ, சோஷலிஸ்டு பாணி தேசங்கள் இடையே ஏதோ ஒரு மூன்றும் மாதிரி தேசம் இருக்கிறது என்று இதனுல் அர்த்தமல்ல. முன்னதில் இருந்து பின்னதன் வடிவுக்கு மாறிச்செல்லும் நடைமுறையில் இருக்கும் தேசங்களையே இது இனங்காட்டு கிறது.

பழையதும் வழக்கமானதுமான திட்டங்களுக்குள் பொருத்தப்பட முடியாத சிக்கலான புலப்பாடுகள் மூன்றும் உலகில் தோற்றமளிப்பதால் நமக்கு இந்தப் புதிய கருத்துரு தேவைப்படுகிறது. இந்த மாறுதல் கட்ட-லட்சண தேசங்களை, வெகு அண்மையில் மட்டுமே தோற்றமளித்துள்ள சமுதாய வளர்ச்சியிலான மாறுதல் கட்டத்திலான சமூக அரசியல் அம்சங்களுடன் தொடர்புடையனவாக உணர வேண்டும். சோஷலிஸ்டு மற்றும் முதலாளித்துவத் திசையமைவில் எதைத் தேர்வது என்பது இன்னமும் தத்துவார்த்த முறையிலும் அரசியல் ரீதியாயும் முடிவு செய்யப் படாத நிலைமையில், இந்த நாட்களில் தேசிய ஒருமைப்

பாட்டுக்கான முற்றும் மெய்யானதும் தன்மையில் புதியது மான நடைமுறைகள் இருப்பது கண்கூடு.

இந்தப் புதிய கருத்துரு இரண்டு சந்தர்ப்பங்களில் செய்தகைமையுடன் விளங்குகிறது.

முதலாவதாக, முழுமையாகவோ, அல்லது சாரத்திலோ அமைந்து விட்டதான தேசங்கள் முதிர்ச்சியடைந்த முதலாளித்துவ கட்டத்தை எட்டுவதற்கு முந்தியதான சந்தர்ப்பம். இது எடுத்துக் காட்டாக சிரியா, அல்ஜிரியா, எகிப்து தேசங்களுக்குப் பொருந்தும். இவை நாட்டில் முதலாளித்துவம் முதிர்ச்சியடையும் முன்பு சோஷலிஸ்டு திசையமைவைத் தேர்ந்து கொண்டதால், தேசங்கள் இடையிலான உறவுகளில் ஒரு சில மாற்றங்கள் ஏற்பட்டன, இவை தேசிய–ஜனநாயகப் புரட்சி முழுநிறைவு எய்துவதற்கு முன்னுல், பாட்டாளி வர்க்கப் புரட்சி வெற்றி பெறுவதற்கு முன் புதிய சமூக சாரத்தைப் புதிதாகப் பெற்றன.

இரண்டாவது சந்தர்ப்பம் ''மாறுதல் கட்ட லட்சண தேசம்'' எனும் கருத்துரு மேலும் ஒப்பியலாகப் பயன் படுத்தப்பட்டு, காலனியாதிக்கம் வீழ்த்தப்படுவதற்கு முன்னரே தேசங்கள் உருவகம் பெற்றதான ஆசிய ஆப்பிரிக்காவின் சோஷலிஸ்ட் திசையமைவுடையதான தேசங்களைக் குறிப்பதாகும். தேச விடுதலை இயக்கத்தில் துவங்கிய தேசிய ஒருமைப்பாட்டு நடப்புகள் வெகுதுவக்கத்தில் முதலாளித் துவத் தன்மை கொண்டதாக மட்டுமே இருந்தன. முதலாளித்துவமற்ற வளர்ச்சிப் பாதையின் பின்னணியில், முற்போக்கு சமூக, பொருளாதார மறு சீரமைப்பு வேக முற்றதோடு, இந்த நடப்புக்கள் மேலும் மேலும் முதலாளித் துவத் தன்மையிடமிருந்துவிலகிச்சென்றன. ஆனுல்இன்னமும் சிறிது காலத்துக்கு, உண்மையில் பாட்டாளி வர்க்கப் புரட்சி வெற்றியடையும் வரையில், அவை சோஷலிஸ்டுத் தன்மை கொண்டனவாக இரா. ஆயினும் இந்த நாடுகளில் தேசங்கள் முக்கியமாயும் உருவகம் பெறும் என்பது மிகவும் சாத்திய மானதே. சமுதாய சாரத்தில் இவை திட்டவட்டமாயும் மாறுதல் கட்ட-லட்சணமுடைய தேசங்களாகவே இருக்கும்.

அண்மை ஆண்டுகளில், சில வளர்முக நாடுகளின் ஆளும் கட்சிகளும், அரசாங்கங்களும் தேசம் எனும் தொடரை தமது நாட்டிலுள்ள வழக்கமாக இன அடிப் படையிலான பல்வகை மக்கள் தொகையினரை வருணிப் பதற்கே பயன்படுத்தத் தொடங்கியுள்ளன. ஏகாதிபத்திய-எதிர்ப்பு ஒற்றுமையின் அளவும், சமுதாய முன்னேற்றத்திற் கான போராட்டத்தில் காணப்பெறும் தேசிய, அரசியல் ஒற்றுமையின் வீச்சும் விடுதலை பெற்ற நாட்களில் இருந்ததை விட ஒப்பிடமுடியா அளவுக்கு உயர்தரமாக உள்ளன. மேலும், இந்த ஒற்றுமையின் பின்னே உள்ள பொருளாதாரக் காரணிகளின் முக்கியத்துவமும் அலாதித் தன்மையும் எப்படி இருந்தபோதிலும் (பல்வேறு உற்பத்திப் பாங்குகள், தனிச் சொத்துடைமை தொடர்ந்து இருப்ப துடன் கூடவே அரசுத்துறையின் பாத்திரம் அதிகரிப்பது, இளம் தேசிய அரசுகள் இடையில் பரஸ்பரம் அவற்றுக்கும் உலக சோஷலிஸ்டு மார்க்கெட்டுக்கு இடையிலும் பொரு ளாதார உறவுகள் விரிவடைதல்) துவக்க கட்டத்தில் தீர்மானகரமான பாத்திரம் அரசியல், சித்தாந்த காரணி களால்தான் இன்னமும் வகிக்கப்பட்டு வருகிறது.

மாறுதல் கட்ட-லட்சண தேசத்தின் சமுதாய சாரம் இயல்பாகவே இந்த சமூக உறவுகளின் முதிர்ச்சியைப் பொருத்ததாக இருக்கிறது. தெளிவான அரசியல் சித்தாந்த தத்துவார்த்தத் திசையமைவுடன் கூடிய தொழிலாளி வர்க்கத்தின் தலைமையின் கீழ் மட்டுமே ஒரு முதலாளித்துவ தேசம் சோஷலிஸ்டு தேசமாக மாறுதல் அடைவது சாத்தியம். இருப்பினும், சோஷலிஸ்டு திசையமைவை ஏற்ற நாடுகளில் முதலாளித்துவ அல்லது சோஷலிஸ்டு சமூகத்தின் பிரதான வர்க்கங்கள் தலைமை தாங்கவில்லை, மாறாக புரட்சிகர-ஜனநாயக அடுக்கினர் எனப்படுவோரே தலைமை தாங்குகின்றனர், இவர்களது சித்தாந்தமும் கொள்கையும் இவர்கள் சாரத்தில் குட்டி பூர்ஷுவா தன்மை கொண்டவர் களாதலின், கதம்பவாதமாகவும், முரண்பாடுடையதாகவும் இருக்கின்றன. அதே சமயம், அவசியமான சமூக-பொரு

ளாதார, சித்தாந்த அரசியல் முன் நிபந்தனைகள் பெரும் பாலும் இன்னும் ஏற்படாவிடினும் புரட்சிகர ஜனநாயக வாதிகள் உண்மையிலேயே சுதந்திரமான தேசிய முன்னேற் றத்துக்காக மனப்பூர்வமாக பாடுபடுவது வழக்கம். மாறுதல் கட்ட-லட்சண தேசத்தின் தன்மைகள் இன்னமும் உருவாகும் நிலைமையில் மட்டுமே இருக்கும்போது, இவற்றை பிரத்தியேகமான வடிவில் வரையறுத்து கூறுவது காலத்துக்கேற்ற செயலல்ல. இத்தகைய தேசங்கள் வழக்க மாயும் புரட்சிகர ஜனநாயகவாத பகுதிகளால் வழிநடத்தப் படுகின்றன, அதே போதில், தேசிய பூர்ஷுவாக்களின் செயற்பாடும் அவர்கள் தலைமைப் பாத்திரத்தைப் பறித்துக் கொள்வதற்கான வாய்ப்புக்களும் அறவே ஒரு வரம்புக்கு உட்பட்டவை. பொருளாதார அடித்தளம் பிரதானமாயும் அரசுத்துறையையும் அரும்பி வரும் கூட்டுறவு அமைப்பு களையும் கொண்டதாகும். சித்தாந்த அடித்தளம் ஏகாதி பத்திய-எதிர்ப்புத் தன்மையுடையது, தேசிய வாதத்தின் பலமான செல்வாக்குக்கு இலக்கானது, கற்பனாவாத சோஷலிசத்தின் பல்வேறு போதனைகளுடன் கூடிய ஜனநாயக நபர்கள் பின்னலமைப்பின் தாக்கம் பெற்றது, விஞ்ஞான சோஷலிசத்தின் தொடர்ந்து பெருகிவரும் செல்வாக்கின் வெளிப்பாடக விளங்குவது. நாம் ஏற்கெனவே கூறியபடி, தேசிய அரசே மாறுதல் கட்ட-லட்சண தேசங் களின் உருவாக்கத்துக்கான பிரதான கருவியாகும். இதன் அதிகாரபூர்வமான சித்தாந்தமும் தேசிய உணர்வின் கட்டு மானத்தை முன்கூட்டி நிர்ணயம் செய்கிறது.

புதிதாக விடுதலை பெற்ற, சோஷலிஸ்டு திசையமைவு டைய மக்களினங்களின் முன்னேற்றம், தேசிய ஒருமைப் பாட்டின் பிரதான அரசியல், சித்தாந்தக் கூறு தேசாபி மானமே அன்றி தேசியவாதமல்ல என்பதைப் புலப்படுத்து கிறது.

தேசிய ஒற்றுமையை அடைவதற்கான முயற்சிகள்- இந்தத் தொடர் தேசங்கள் இன்னமும் முழுமையாக உருவகம் பெறாத நாடுகள் விஷயத்தில் முற்றும் சம்பிரதாய

மானதே என்ற போதிலும் தேசிய-ஜனநாயகப் புரட்சிகளின் வெற்றிக்கு மிகவும் முக்கியமானவை, காரணம் இவை புரட்சியில் பங்கேற்கும் வாய்ப்பு உடைய உள்நாட்டு சக்திகளின் ஒற்றுமையை உறுதிப்படுத்துகின்றன. தேச விடுதலை இயக்கத்தின் முதலாவது கட்டத்தில், அன்னியர் ஆட்சியில் இருந்து சுதந்திரம் பெறுவதே இன்னமும் முக்கியமான குறிக்கோளாக இருக்கும் போதில், ஒற்றுமை தேசியவாதத்தின் அதிலும் முதன்மையாக அதன் ஜனநாயகக் கூறுகளின் அடிப்படையிலேயே பிரதானமாயும் உருவாக்கப்படுகிறது. இந்தக் கட்டத்தில் தேசியவாதத்தின் ஜனநாயகக் கூறுகளைவிடவும் அதன் பிற்போக்கு சாரம் வெகு குறைவாகவே உணரப்படுகிறது, அரசியல் விடுதலைக்கான போராட்டத்தில் இவையே சாரத்தில் சமூக ரீதியில் முரண்கூரான சக்திகளை துல்லியமாயும் ஒன்றிணைக்கின்றன.

தேச விடுதலை இயக்கத்தின் இரண்டாம் கட்டத்தில் நிலைமை மாறுகிறது, அப்பொழுது, தீவிரமான சமூக பொருளாதார அரசியல் மறுசீரமைப்பு மூலம் பெற்ற சாதனைகளை வலுப்படுத்துவது எனும் பணி முதலிடம் பெறுகிறது. இப்போது, பிற்போக்கு சக்திகள் ஒன்று, அதிகாரத்தில் இருந்து முற்றாக அகற்றப்பட வேண்டும்; அல்லது, குறைந்தபட்சம் முன்னேற்றத்தை தடுத்து மட்டுப்படுத்தும் அவற்றின் ஆற்றல் கட்டுப்படுத்தப்பட வேண்டும், என்றால் மட்டுமே முன்னேற்றம் சாத்தியம். இந்தக் கட்டத்தில் சோஷலிஸ்டுத் திசையமைவை எதிர்ப்பவர்கள் தேசியவாதத்தைப் பயன்படுத்த முயல்வார்கள், இதில் இவர்களது செல்வாக்கின் கீழ், இதன் பிற்போக்கு சக்திகள் ஜனநாயகக் கூறுகளை விஞ்சிச் செயல்படத் தொடங்கும், இது போராட்டத்தின் தர்க்கநியதி.

தேசிய வாதத்தின் உள்ளடக்கத்திலான மாறுதல்கள் முதலில் லேசுபாசாகவே தென்படக்கூடும், புரட்சிகர ஜனநாயக அடுக்கினர் இதை தொடர்ந்து பயன்படுத்துகின்றனர் (இதன் உள்ளடக்கத்திலான ஜனநாயகக் கூறுகளை இவர்கள் பயன்படுத்துகின்றனர் என்பது தெளிவு). ஆயினும்

தேசிய வாதத்தை மட்டுமே அடிப்படையாக்கிய ஒற்றுமை இதன்வழி இதன் உள்ளடக்கத்திலான ஜனநாயகக் கூறுகளையே கருதிச் செயல்பட்டாலும் சரி—அதிகளவுக்கு நம்புதற்கியலாததாகிறது. இறுதியாகக் கணித்துப் பார்க்கில் அறவே சாத்தியமற்றது. இதனால்தான் முதலாளித்துவ மற்ற பாதை எனும் கருத்து உறுதிபெறும் போதில், தேசிய ஜனநாயகக் கட்சிகள் தேசிய வாதத்தில் இருந்து பெயர்ந்து சென்று, நாட்டின் நல்ல சக்திகளை தேசபக்த அடிப்படையில் ஒன்றிணைக்கின்றன.

அரசியல் விடுதலைக்கான போராட்டத்தில் தனது ஜனநாயகச் சிறப்பியல்புகள் காரணமாக திட்டவட்டமாயும் ஆக்கபூர்வமான பாத்திரம் வகித்ததான தேசியவாதம், சோஷலிஸ்டு திசையமைவு நிலைமைகளில் முற்போக்கு சக்திகளை இனி ஒன்றிணைக்க இயலாதபடி போனதேன்?

தொடக்கத்தில், எந்த வடிவிலான தேசியவாதத்திலும் சரி, உள்ளார்ந்து கிடப்பதான அசாதாரணத் தன்மை தனி ஒதுக்கம், குறுமனப்பாங்கு இவை கொண்ட போக்கு பல் வகையான இனங்கள் நிலவும் பின்னணியில், வளர்முக நாடுகளில் வழக்கமாகத் தன்னை வெளிப்படுத்திக் கொள்கிறது. இந்த அடிப்படையில் மேலும் வலிமைபெறும் பழங்குடியினர் இயல்பு அதிகாரத்துக்குப் போராடும் பிரிவுகள் அல்லது வெளி விரோதிகளால் அடிக்கடி பயன் படுத்தப்படுகிறது. பிற்போக்கு தேசியவாதத்தின் இன்னொரு எதிர்மறை விளைவு என்னவென்றால், காலனியாதிக்கம் நவீன காலனியாதிக்கத்தின் மிச்ச சொச்சங்களை எதிர்த்துப் போராடும் போதில் வளர்முக நாடு காலனியாதிக்கவாதிகள் எந்த நாட்டின் பெயரால் செயல்பட்டார்களோ, தொடர்ந்து செயல்பட்டு வருகிறார்களோ, அந்த நாடுகளின் முற்போக்கு சக்திகளுடன் ஒத்துழைக்க மறுக்கின்றது, முன்னால் ஒடுக்கப்பட்ட மக்கள் வாழ்க்கை மீது இந்த முற்போக்கு சக்திகள் செலுத்திய ஆக்கபூர்வமான செல் வாக்கை வேருடன் களைய முயல்கிறது. இதற்கும் மேலாக, உள்நாட்டுப் பிற்போக்குச் சக்திகள் பேணி வளர்த்த தேசிய

அசாதாரணத்தன்மை மிகப்பெரிய தீம்பு விளைக்கிறது. காரணம், இது புதிதாக விடுதலை பெற்ற மக்களை உலகின் முற்போக்கு சக்திகளிடம் இருந்து, குறிப்பாயும் சோஷலிஸ்டு நாடுகளில் இருந்து தனி விலக்கம் செய்ய முயல்கிறது. தேசிய வாதத்தின் பிற்போக்கு உள்ளடக்கம் வர்க்க உணர்வுக்குத் தீங்கு செய்யும் தேசியவாத உணர்வுகளுக்கும் இதன் வழி கம்யூனிஸ்டு-எதிர்ப்புக்கும், தேசிய-ஜனநாயகப் புரட்சியினை சர்வதேசத் தொழிலாளி வர்க்க, கம்யூனிஸ்டு இயக்கத்தோடும் உலக சோஷலிஸ்டு அமைப்போடும் இயல்பாக கூட்டுச் சேருவதைச் சீர்குலைக்கவுமான வளமான பிறப்பிடமாகும்.

இதன் பின்விளைவாக, சோஷலிஸ்டு திசையமைவு என்பது தேசிய ஒற்றுமையின் ஒரு புதிய கருத்தோட்டத்தினைக் குறிக்கிறது, பிற்போக்கு சக்திகளின் குறுகிய தேசியக் கொள்கைகளை எதிர்த்த போராட்டத்தில் உருவகம் பெற்ற இது, பழையதை மறுசீரமைப்பதிலும் எல்லா முற்போக்கு சக்திகளும் அடங்கிய ஒரு புதிய தேசபக்த முன்னணியை அமைப்பதிலும் இன்னும் அதிகமான முக்கியத்துவம் பெற்றுத் திகழ்கிறது.

வளர்ச்சியுறுத சமுதாயக் கட்டமைப்பு, பெரும்பாலும் காணப்படுகிற வர்க்க சக்திகளின் ஸ்திரமற்ற தொடர்பாடு, சர்வதேச ஏகாதிபத்தியத்தின் இடைவிடாத சதித் திட்டங்கள் இவை காரணமாக முற்போக்கு சக்திகளை ஒருங்கு திரட்டவும், தேசிய ஜனநாயகப் புரட்சியை வெற்றிகரமாக நிறைவேற்றவும் தேசிய ஒருமைப்பாட்டு நடைமுறையை மேம்படுத்தவும் அதோடு மாறுதல் கட்ட-லட்சண தேசம் உருவாக்கப்படுவதை உறுதி செய்யவும் வேண்டி இத்தகைய முன்னணி இன்றியமையாததாகிறது.

தேசிய ஒற்றுமையின் ஒரு மேடை என்ற முறையில் தேசபக்தி முற்போக்கு சக்திகளுக்குப் பல முக்கியமான சாதகங்களை வழங்குகிறது. தனி ஒரு முன்னணியில் ஒன்றிணைவதை இது உத்தரவாதம் செய்வது மட்டுமின்றி அதோடு

கூடவே தேசங்கள் இடையேயும் தேசங்களின் அகத்தேயு மான மோதல்களுக்கு அப்பாற்பட்டும், பழங்குடியினர் இடையான பூசல்களைக் கடந்தும் முன்னேகிவரும் ஆற்றல் கொண்ட முற்போக்கு சக்திகளை ஊக்குவித்தும் வருகிறது. மெய்யான தேசபக்தி, முற்போக்கின் புற ஆதாரங்களை, அதிலும் முதலாவதாயும் முக்கியமாயும் உலக சோஷலிசத் துடன் சார்ந்து நிற்பதைச் சாத்தியமாக்குகிறது. இவை யாவும் தேசிய ஒருமைப்பாட்டுக்குப் பங்களிப்பு நல்கி, மாறுதல் கட்ட லட்சண தேசம் உருவாவதை வேகப் படுத்துகின்றன.

மாறுதல் கட்ட லட்சணமுள்ள தேசங்கள் ஒப்பளவில் ஒரு குறுகிய காலப் புலப்பாடே, ஆயினும் இவை நாட்டில் சோஷலிஸ்டு திசையமைவு வெற்றி அடைந்து, அரசுச் சொத்துடைமை வடிவில் சோஷலிசத்துக்கு கடந்து செல்லும் முன் நிபந்தனை என்ற முறையில் நம்பகமான பொருளாதார தளம் ஏற்படும் வரையில், இந்த அடிப் படையில் தேசத்தின் தொழிலாளி வர்க்கம் தோன்றித் தன்னை வலுப்படுத்திக் கொள்கிறவரையில், பல பத்தாண்டு களுக்கு இந்தப் புலப்பாடு நீடிக்கும். அப்போதுதான் மாறுதல் கட்ட லட்சண தேசங்கள் சோஷலிஸ்டு தேசங் களாகப் படிப்படியாக மாறுதல் அடைந்து வருவதற்கான வழிகளும் வடிவங்களும் இறுதியாகத் தெளிவாகத் தெரிய வரும். ஆனால் இதற்கு நேர் எதிரான விளைவும் சாத்தியமே. சோஷலிசம் மற்றும் முதலாளித்துவ சக்திகள் போராட் டத்தில் மோதிக் கொண்டிருக்கும் வரையில், தேசிய பூர்ஷுவா வர்க்கம் இதர பிற்போக்கு சக்திகளுடன் ஒன்று சேர்ந்தும், அன்னிய ஏகாதிபத்தியங்களின் ஆதரவுடனும் நாட்டின் முற்போக்கு வளர்ச்சியைத் தடுத்து நிறுத்துவதில் வெற்றி பெறலாம். அப்படியாயின், மலர்ந்துவரும் தேசம் முதலாளித்துவப் பாதையைப் பின்பற்றி ஒரு முதலாளித்துவ தேசமாகும்.

முதலாளித்துவமற்ற பாதை உலகின் வாழ்க்கைத் துறைகள் அனைத்திலும் பரவியுள்ள சர்வதேசிய மயமாக்கல்

இயக்கத்தின் செல்வாக்கு மேலும் அதிகரிப்பதை உறுதி செய்கிறது. ஏற்கெனவே வளர்முக நாடுகள் இதில் ஈடு பட்டு விட்டன. அமெரிக்கப் பிற்போக்கு சக்திகள் லத்தீன் அமெரிக்க மக்களின் உதவியுடன் வீரஞ்செறிந்த கியூபாவை நெரித்தழிக்கப் பல ஆண்டுகளாக முயன்று வந்தன. ஆனுல் எவ்வளவு முயன்றும் அவர்களால் உழைக்கும் மக்களின் ஒருமைப்பாடு எனும் மதிலை உடைக்க முடியவில்லை. பெரு நாட்டின் முற்போக்காளர் திடம் பெற்றதானது இந்த ஒருமைப்பாட்டை வலுப்படுத்தியுள்ளது, அதோடு இது லத்தீன் அமெரிக்கப் புரட்சியின் ஒரு புதிய முன்னேற்றத் தையும் குறிக்கிறது.

ஏகபோக மன்னர்களின் எதிர்ப்பு முயற்சிகளை மீறி ஆப்பிரிக்காவின் மக்களினங்கள் தமது ஒற்றுமையினை இறுக்கமாக்கி வருகின்றனர். ஆப்பிரிக்காவில் தேசிய, சர்வதேசிய நடப்புக்கள் மிகவும் கடினமான நிலைமைகளில், நிகழ்ந்துவந்த போதிலும், இந்த மாகண்டத்தைப் பூசலும் மோதலும் நிறைந்த களமாக்க ஏகாதிபத்திய வாதிகளால் இயலவில்லை. காலனியாதிக்க வாதிகளும் அவர்களது அடிவருடிகளும் உள்நாட்டுப் போர்களை ஜெய்ரே, நைஜிரியா மற்றும் சில நாடுகளில் தூண்டிவிட்டார்கள் என்பது மெய்யே. மிகப்பல மோதல்களும் எல்லைப்புறத் தகராறுகளும் சுமுகமாக தீர்க்கப்பட்டன. இதற்கான பெருமை ஆப்பிரிக்க ஒற்றுமை ஸ்தாபனத்துக்கே உரியது. இந்த அமைப்பு காலனியாதிக்க வாதிகளின் கடுமையான எதிர்ப்புக்கு இடையே நிறுவப்பட்டது, ஏகாதிபத்திய கவிழ்ப்பு வேலைகளை மீறி இது நல்ல பணி செய்து வருகிறது. ஆ.ஒ.ஸ். சார்பில் அமைக்கப்பட்ட, தென்னுப்பிரிக்க குடியரசு, ஜிம்பாப்வே மற்றும் நமிபியா மக்களினங்களின் தேசவிடுதலைப் போராட்ட சகாயக் கமிட்டி தனது முயற்சிகளை இருமடங் காக்கி வருகிறது.

1969-ல் நடைபெற்ற கம்யூனிஸ்டு, தொழிலாளர் கட்சிகளின் சர்வதேச மாநாடு அவதானித்ததாவது: ‘‘தேசிய அபிவிருத்தி, சமூக முன்னேற்றம் இவற்றுக்கான பணிகளை

நிறைவேற்றவும், நவீன காலனியாதிக்க வாதிகளின் சதித் திட்டங்களை முறியடிக்கவும் உரியதான வழி மக்களின் செயல்பாட்டை அதிகரிப்பது, பாட்டாளிவர்க்கம் விவசாயி மக்களின் பாத்திரத்தை மேம்படுத்துவது, உழைக்கும் இளைஞர் மாணவர் அறிவுத்துறையினர் நகரப்புற நடுத்தர அடுக்கினர் மற்றும் ஜனநாயக படையாளி வட்டம் சகல-தேசபக்த முற்போக்கு சக்திகளை அணிதிரட்டுவதும் ஆகும். இத்தகைய ஓர் ஒற்றுமையைத்தான் கம்யூனிஸ்டு, தொழிலாளர் கட்சிகள் கோருகின்றன.''*

இவையே இன்றைய தேச விடுதலை இயக்கத்திலும், வளர்முக நாடுகளின் மக்களின் வாழ்க்கையிலும் காணப்படும் தீவிரமான மாற்றங்கள். அவர்கள் தமது சொந்த அனுபவத்தில் இருந்தே உலக சோஷலிசம், தேசிய சமூக விடுதலைக்குச் சமராடும் எல்லாப் போராளிகளின் உண்மை நண்பனும் நம்பகமான நேச சக்தியுமாகும் என்பதை அறிந்து கொள்கிறார்கள். உலக சோஷலிஸ்டு அமைப்பின் பெருகி வரும் வலிமை, எல்லா இளம் தேசிய அரசுகளின் சுதந்திரமும் சுயாதீனமுமான முன்னேற்றத்துக்கும் ஆசிய, ஆப்பிரிக்க லத்தீன் அமெரிக்காவின் தேச விடுதலைப் போராட்டத்தின் வெற்றிக்கும் மெய்யான உறுதிப்பாடு ஆகும்.

* 1969-ல் மாஸ்கோவில் நடைபெற்ற கம்யூனிஸ்டு, தொழிலாளர் கட்சிகளின் சர்வதேச மாநாடு, பக். 29.

அத்தியாயம் பதின்மூன்று

தேசியப் பிரச்சினை மீதான சித்தாந்தப் போராட்டம்

1. தேசியப் பிரச்சினைக்கு இரு நேர் எதிரான அணுகு முறைகள்

தேசியப் பிரச்சினை மீதான இரண்டு சித்தாந்தங்களின் போராட்டத்தின் தன்மையை அறிந்து கொள்ள வேண்டுமாயின் சோஷலிசம் மற்றும் முதலாளித்துவத்தின் இரு நேர்விரோத வர்க்க சக்திகளின் மாறிவரும் தொடர்பாட்டை ஸ்தூலமாகப் பகுப்பாய்வு செய்து பரிசீலிப்பது அவசியம்.

புவிக்கோளத்தின் விரிந்து பரந்த ஒரு பகுதியில் சோஷலிசம் தன்னைத்தானே நிலைநாட்டிக் கொண்டு விட்ட நிலையில், பாட்டாளி வர்க்க சர்வதேசியம் சோஷலிஸ்டு நாடுகளின் அரசு சித்தாந்தமும் கொள்கையுமாகி விட்ட சூழலில், இரண்டு அமைப்புகளுக்கும் இடையிலான சித்தாந்தப் போராட்டத்தின் நிலைமைகளும் தன்மையும் தீவிரமாக மாறுதலடைந்து வருகின்றன.

சுதந்திர மக்களினங்களின் கூட்டுக் குடும்பத்தை கட்டியமைப்பது எனும் அசல் நடைமுறையே, பூர்ஷுவா வர்க்கத்துக்கு எதிரான சோஷலிஸ்டு சித்தாந்தத்தின் போராட்டத்துக்கு தீர்மானகரமாக உதவுகிறது. சோவியத் ஒன்றியத்துக்கும் இதர சோஷலிஸ்டு நாடுகளுக்கும் இடையிலான

புதுவடிவிலான உறவுகள், பல்வேறு இனங்கள் தேசிய இனங்களைச் சேர்ந்த மக்களினங்களின் பகைமையும் அவ நம்பிக்கையும் இல்லாத, உண்மையிலேயே மனித நேயத் தன்மை வாய்ந்த உறவுகளை அடிப்படையாக்கியவை, இது ஒடுக்குமுறையும் அடிமை முறையும் கொண்ட ஏகாதிபத்திய அமைப்பை அரித்தழிக்கிறது, உழைக்கும் மக்கள் திரளினரை புரட்சிகரமாக்குகிறது, சோஷலிசம் கம்யூனிசத்தின் வெற்றியில் அவர்களுக்கு நம்பிக்கை ஊட்டுகிறது.

முதலாளித்துவமற்ற திசையமைவைக் கொண்ட நாடுகளுடனும், ஏகாதிபத்தியம், காலனியாதிக்கம் ஆகியவற்றை எதிர்த்துப் போராடும் நாடுகளுடனும், சோவியத் ஒன்றியமும் இதர சோஷலிஸ்டு நாடுகளும் கொண்டுள்ள நட்புறவும் ஒத்துழைப்பும் பிரம்மாண்டமான சித்தாந்த வீச்சை ஏற்படுத்தி உள்ளன.

ஏகாதிபத்தியத்தையும், ஆதன் ஆக்கிரமிப்பு நவீன காலனி ஆதிக்கக் கொள்கையையும் எதிர்த்த சோஷலிஸ்டு அரசுகளின் அரசியல் செயற்பாடுகள், ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பை எதிர்த்தும் சுதந்திரத்துக்கும் தமது சொந்த எதிர்காலத்தை நிர்ணயித்துக் கொள்ளவும் போராடும் தேசபக்தர்களுக்கு அவை தரும் தன்னலமற்ற உதவி, இவை புரட்சிகர சக்திகளுக்கு கூடுதல் வலிமை தந்து பொதுவான ஏகாதிபத்திய-எதிர்ப்புப் போராட்டத்தில் அவற்றை ஒன்று சேர்க்கின்றன.

இது, மார்க்சிய-லெனினிய தத்துவத்தின் வளர்ச்சியை மேம்படுத்தும், சோஷலிசத்துக்குப் பகைமையான கருத்துக்களையும் தோரணைகளையும்—தேசியப்பிரச்சினை அடங்கலாக—எதிர்த்துச் சமராடியும் வரும் சோ. க. க. இதர மார்க்சிய-லெனினியக் கட்சிகளின் சித்தாந்தச் செயற்பாடுக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கிறது. சுதந்திரமான மக்களினங்களின் தேசிய உறவுகள் மீதும் அரசுகளின் விசேஷமாயும் சோஷலிசத்தை கட்டியமைத்து வருவனவும் ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப் போராடுவனவுமான அரசுகளின் பரஸ்பர உறவு குறித்தும் கடுமையான கருத்து மோதல்

ஏற்பட்டிருப்பதில் வியப்பில்லை. சோஷலிசத்துக்கும் முதலாளித்துவத்துக்கும் இடையிலான முரண்பாடுகளில் காணப்படும் மையமான கூறுகளில் இதுவும் ஒன்ருகும். சோவியத் ஒன்றியத்தின் 50 ஆவது ஆண்டு விழாவுக்கான தயாரிப்புகள் மீதான சோ. க. க. மத்தியக் கமிட்டியின் தீர்மானம் சுட்டிக் காட்டியதாவது: ''சோஷலிசத்துக்கும் முதலாளித்துவத்துக்கும் இடையிலேயும், மார்க்சிய-லெனினியத்துக்கும், பூர்ஷுவா மற்றும் திருத்தல் வாத சித்தாந்தங்களுக்கும் இடையிலும், நடைபெறும் போராட்டத்தின் ஒரு ஜீவாதாரமான அம்சமே தேசியப் பிரச்சினை. சோஷலிசத்தின் நிலைகளைப் பலவீனப்படுத்தலாம், சர்வ தேசக் கம்யூனிஸ்டு, தொழிலாளி வர்க்க இயக்கத்தின் அணிகளைப் பிளவுறுத்தலாம், தேசவிடுதலை இயக்கத்தை ஒடுக்கலாம் எனும் எதிர்பார்ப்புடன் ஏகாதிபத்தியவாதிகள் வெகு பரவலாக இனவெறியைத் தூண்டி விடுவதில் இறங்குகிருர்கள், தேசிய ஏதுக்களை வைத்து உழைக்கும் மக்களின் பல்வேறு பகுதிகளைப் பிரித்து வைக்க முயலுகிருர்கள்.''*

பகைமை சித்தாந்தத்தை எதிர்த்த போராட்டத்தில் கம்யூனிஸ்டுகள் என்றுமே தற்காப்பு நிலைக்கு செல்லுதல் கூடாது என்று லெனின் எமக்கு போதித்துள்ளார், மார்க்சிய-லெனினிய சித்தாந்தத்தின் மெய் இயல்பில் இருந்தே கிளைக்கும் அவர்களது கடமை எல்லா நேரங்களிலும் முன் முயற்சியை விடாது வைத்திருத்தலும் மோதும் தரப்புக்களின் நோக்கு நிலைகளின் முரண் தன்மையைக் குறைத்து மதிப்பிடும் முயற்சிகளை முறியடிப்பதும் ஆகும். கம்யூனிஸ்டு-விரோதத்தை எதிர்த்தும், பல்வேறு பூர்ஷுவா திருத்தல்வாதக் கருத்தோட்டங்களை எதிர்த்தும், தேசியவாதத்தை எதிர்த்தும், மார்க்சிய-லெனினிய கோட்பாடுகள் பாட்டாளி வர்க்க சர்வதேசியத்தின் புனிதத் தன்மைக்கு வேண்டியும் சோ. க. க. மற்றும்

---

* **சோவியத் சோஷலிஸ்டு குடியரசுகள் நிறுவப்பட்டதன் 50 ஆம் ஆண்டு விழாவை ஒட்டிய தயாரிப்புகள் மீதான சோ. க. க. ம.க. தீர்மானம்**, *பக். 15.*

இதர மார்க்சிய-லெனினியக் கட்சிகள் நடத்தும் போராட்டம் இந்த வழிகாட்டு நெறிக்கு ஒத்தது, தீவிர மானது, எதிர்த்தாக்குதல் தன்மையுடையதுமாகும்.

சோஷலிஸ்டு, கம்யூனிஸ்டு நிர்மாணப் பணியில் இருந்து அனுபவம் பெற்ற மார்க்சிய-லெனினிய வாதிகள், பாட்டாளி வர்க்க சர்வதேசியத்தின் போதனைகளை ஆக்க பூர்வ முறையில் முன் எடுத்துச் செல்கின்றனர், விஞ்ஞான கம்யூனிசத்தின் கருத்துக்களின் ஜீவ சக்தியையும் காலோசிதச் சிறப்பையும் மெய்ப்பித்துக் காட்டுகின்றனர்.ஆழ்ந்தஆராய்ச் சிகள் கம்யூனிஸ்டுக் கட்சியின் சித்தாந்த ஆயுதத்தை மேலும் கூர்படுத்தி லெனினிய-விரோதக் கருத்துக்களையும் தத்துவங் களையும் வென்று சமாளிக்க உதவும். புதிய மாறுதல்களின் அடிப்படையில் தொடர்ந்துபரிசீலனைக்கு இலக்காகும்முக்கிய விஷயங்கள் இதோ; ''லெனினியத்தின் சர்வதேசியத் தன்மை, சோஷலிஸ்டு இணைப்பாக்க கோட்பாடுகள், மக்களினங்கள் தொழிலாளி வர்க்கப் படைப் பிரிவுகளின் சர்வதேச ஒருமைப்பாட்டின் வடிவங்களும் முறைகளும், சோஷலிசத்தைப் பாதுகாப்பது முதல் சர்வதேசியக் கடமை, தேசியவாதத்தின் சாரமும் அதன் வெளிப்பாடுகளும், சோஷலிஸ்டு சுற்றுச் சூழலில் சர்வதேசிய, தேசிய அம்சங் களின் தொடர்பாடு, தேசியப் பிரச்சினைகளுக்கான வர்க்க அணுகுமுறை, தேசியப் பிரச்சினைக்குத் தீர்வுகாண் பதற்கான வழிகளும் முறைகளும். ஒவ்வொரு மார்க்சிய-லெனினியக் கட்சியின் அகத்தும் முனைப்பான தத்துவார்த்த செயல்பாடும், சர்வதேச கூட்டங்கள் மாநாடுகளில் விரிவான கூட்டு ஆராய்வும் நடைபெறுகின்றன. இதன் பலனாக, கூட்டான படைப்பாற்றல் அனுபவத்தால் செழுமையூட்டப் பட்டதான, பாட்டாளி வர்க்க சர்வதேசி யத்தின் பொதுமுறைகளும் கோட்பாடுகளும் உலகக் கம்யூனிஸ்டு இயக்கத்தின் பொதுக்கருத்து மேடையாக அமைகின்றன. இது அவற்றின் முக்கியத்துவத்தை மேலும் அதிகரித்து அவற்றை மேலும் திறனுடையதாக்குகிறது.

தேசியப் பிரச்சினை மீதான கம்யூனிஸ்டு-விரோத பூர்ஷுவா கருத்தோட்டங்களை எதிரிடும் போதில், கம்யூனிஸ்டுகள், பூர்ஷுவா தேசியத் தத்துவங்களின் வர்க்க சாரத்தைப் பகிரங்கப்படுத்துகிறார்கள், அவற்றின் தத்துவார்த்தப் பிழைபாட்டையும் சாமான்ய மக்கள் திரளினர் நலன்களுக்கு அவை பகையாக இருப்பதையும் காட்டுகிறார்கள்.

ஏகாதிபத்தியம் சமுதாய பலவந்தத்தின் அமைப்பு, தேசிய அடிமைத்தனத்தின் அமைப்பு எனும் அகல்விரிவான மெய்ப்படுத்திக் காட்டும் விமர்சனம் மிகவும் முக்கியமானது. முதலாளித்துவத்தின் ஜன-விரோத சாரத்தை அம்பலப் படுத்துவது, ஏகாதிபத்தியமும் அதன் சித்தாந்த வாதிகளும் செய்யும் சமாதான, விடுதலை விழைவு பிரகடனங்களுக்கும், ஏகாதிபத்தியக் கொள்கையின் நிஜ இயல்புக்கும் இடையிலான பச்சையான ஏறுமாறான தன்மையை எடுத்துக்காட்ட உதவுகிறது. முதலாளித்துவத்தின் ஆதரவாளர்களின் தத்துவங்களை அம்பலப்படுத்துவது, ஜனநாயகச் சொற்ஜாலத்துக்கும் ஏகாதிபத்தியக் கொள்கையின் மனிதத்தன்மையற்ற போக்குக்கும் இடையிலான அகாத பள்ளத்தை எடுத்துக் காட்டுதல் இவை மார்க்சிய-லெனினிய வாதிகளின் சித்தாந்த எதிர்ப்பின் பிரதானப் போக்குகளாகும். பூர்ஷுவா சித்தாந்தவாதிகள் எவ்வளவு கடுமையாக முயன்றாலும் சரி, அவர்களால் ஏகாதிபத்தியம் இப்படி இப்படி இருப்பதை என்றுமே மூடி மறைக்க இயலாது:

—ஆக்கிரமிப்புப் போர்களின் மூலாதாரம், சர்வதேச ஒத்துழைப்பின் விரோதி;

—மக்கள் விஷயத்தில் பசி, வறுமை, காலனியடிமைத் தனம் இன தேசியப் பாகுபாட்டை எடுத்துச்செல்வது;

—மக்களினங்கள் கடுமையாகப் போராடி வென்று பெற்ற சுதந்திரம், சுயாதீனத்தைப் பறிக்க முயல்வது, காலனி அடிமைத்தளைகளால் அவர்களைப் பிணைப்பது;

—மக்களினங்களின் தேசிய நலன்களில் குறுக்கிடுவது; மக்களை உன்னத லட்சியங்கள் எதுவும் இல்லாத ஒரு இருள் மயமான ஜீவிதத்துள் தள்ளுவது.

தேசியப் பிரச்சினை மீதான இந்த பூர்ஷுவா சித்தாந்த வாதிகளின் எந்தத் தத்துவார்த்த கருத்துக்கள் மார்க்சிய-லெனினியக் கட்சிகளின் சித்தாந்தப் பணிக்கு குறியிலக்காக இருக்கின்றன? இந்தக் கேள்விக்கு விடை அளிக்கும்முன் நாம் இன்றைய கம்யூனிச-விரோதம் மற்றும் தேசியப் பிரச்சினை தொடர்பான அதன் பிற்போக்கு செயல்பாட்டின் வடிவங்கள் குறித்து திட்டவட்டமான பகுப்பாய்வு செய்ய வேண்டுவது அவசியம். வேறு எந்தத் துறையையும்விட அதிகமாக தேசியப் பிரச்சினை விஷயத்தில் தான் நவீன முதலாளித்துவம் முனைப்பான, நம்பிக்கை தருவதான கருத்துக்களை, மக்களைக் கவர்ந்தீர்க்கும் கருத்துக்களை உருவாக்கும் திறனற்றுக் கிடக்கிறது என்பதும், அந்த சித்தாந்த ஆதாரங்கள் ஒன்று, அப்பட்டமாயும் பிற்போக்கான ஜன-விரோதத் தத்துவங்களாகவோ அல்லது நீண்டகால முன்பே பூர்ஷுவா வர்க்கம் காட்டிக் கொடுத்துள்ள பழைய லட்சியங்கள், கோஷங்கள் மீதான கற்பனைக் கோட்டையாகவோ இருந்து வந்துள்ளன என்பது தெளிவு.

இதுவும் இதர நவீன கால கம்யூனிஸ்டு-விரோதக் கருத்தோட்டங்களைப் போலவே, ஏகாதிபத்திய சித்தாந்தத்தின் தீர்க்கமான நெருக்கடிக்குத் தெளிவான சான்றாகும்.

கம்யூனிஸ்டு-விரோத சித்தாந்தவாதிகள் எத்தகைய வெறித்தனமான முயற்சிகளைச் செய்தாலுங்கூட, அவர்கள், தமது சித்தாந்த நிலைகளின் பலவீனத்தையோ, புதிய உலகின் எதார்த்தம் மூலம் முழுநிறைவேற்றம் பெற்ற சாதனைகள் மூலம், ஊர்ஜிதம் பெற்றுள்ள மார்க்சிய-லெனினிய போதனைகளை மறுதலிப்பதற்கான அவர்களது முயற்சிகளின் பயனற்ற தன்மையையோ மூடிமறைக்க இயலவில்லை.

சோவியத் ஒன்றியம் தனது 50 ஆம் ஆண்டுவிழாவைக் கொண்டாடியபோது, சமுதாயத்தால் கால காலமாகச் சமாளிக்கப்படவிருந்த மிகவும் கடினமான ஒரு பிரச்சினைக்கு, எல்லா பூர்ஷுவா ஜனநாயகங்களையும் தோற்கடித்துவிட்ட ஒரு பிரச்சினைக்கு வெற்றிகரமான தீர்வு கண்டுவிட்ட சோஷலிசத்தின் இந்த அறைகூவலை, எப்படி எதிர்கொள்வது என்று தம்மைத் தாமே கேட்டுக் கொண்டார்கள் பூர்ஷுவா சித்தாந்த வாதிகள்.

பாட்டாளி வர்க்க சர்வதேசியத்துக்கும், பூர்ஷுவா தேசிய வாதத்துக்கும் இடையிலான நூற்றுண்டுக் கால வாதத்தின் விளைவு என்ன என்பது முன்னமே தீர்மானிக்கப் பட்டுவிட்டது. மக்களினங்களின் வாழ்க்கை க தியில் ஏற்பட்ட மாறுதல்கள் மார்க்சிய-லெனினிய சித்தாந்தமான பாட்டாளி வர்க்க சர்வதேசியத்தின் ஜீவ சக்தியையும் இறுதி வெற்றியையும் பறை சாற்றுகின்றன. காரியங்களை எளிதாக்குவதோ, பகைமைச் செயல்களின் தீமைகளைக் குறைத்து மதிப்பிடுவதோ மக்களினங்கள் இடையிலான புது வடிவிலான உறவுகள் இப்போதுதான் தோற்றமளித்து வரும் கட்டத்தில் குறிப்பாயும் இவ்வாறு செய்வது நமக்கு நன்மை பயக்காது.

துல்லியமாயும் இந்த தேசிய வாதப் போக்கியல்புகள், குறிப்பாயும் சோவியத்-விரோத வடிவை மேற்கொள்ளும் போக்குகள் மீதுதான், பூர்ஷுவா சித்தாந்தவாதிகளும் பூர்ஷுவா பிரசாரமும்சோஷலிஸ்டு,கம்யூனிஸ்டுஇயக்கத்தை எதிர்த்த தமது போராட்டத்தில்அதிக நம்பிக்கை வைத்திருக்கிறார்கள்.

பூர்ஷுவா சித்தாந்தவாதிகளுடன் கூடவே வலது "இடது" திருத்தல்வாதிகளும் மார்க்சிய-லெனினியத்தையும் பாட்டாளி வர்க்க சர்வதேசியத்தையும் எதிர்க்கிறார்கள். மிகப் பல்வேறு வகையான கருத்தோட்டங்களும், துவக்க நிலைகளில் வேறுபாடுகளும் இருந்தபோதிலும் அவர்கள் எல்லோருமே, சர்வதேசியக் கோட்பாடுகளின் புரட்சிகர சாரத்தை நெரித்து அழித்து பூர்ஷுவா-தேசியவாத

கருத்துப் படிவங்களைக் கொண்டு மாற்றீடு செய்வதிலும், உலக சோஷலிசம் மற்றும் கம்யூனிஸ்டு இயக்கத்தைப் பிளவு படுத்துவதிலும் ஒரே நோக்கமுடன் செயல்படுகிறார்கள்.

உலகின் எந்தப் பகுதியிலேனும் நிகழும் தேசிய நடப்புக் களை நெருக்கமாகப் பரிசீலித்தால், தேசிய அம்சத்தின் புறநிலை வளர்ச்சியையும் செயற்கையான பூரிப்பையும் தொடர்ந்து, முதலாளித்துவ அமைப்பை அரித்தழிப்பதும் சோஷலிசம், தேச விடுதலை சக்திகளை வலுப்படுத்துவதுமான முக்கியமான சமுதாய நடப்புக்கள் அதிகரித்துவருதலைக் காணலாம். தேசிய, சமூக நடப்புக்களின் தொடர்பாடு களைப் புரிந்து கொள்வதால், வரலாற்றின் இனி வர விருக்கும் செல்வழியை சரி நுட்பமாயும் முன்னறிந்து கொள் வது சாத்தியமாகிறது. சோஷலிசம், கம்யூனிசத்தை நோக்கிய மக்களினங்களின் முன்னேற்ற வெள்ளத்தை தேசியவாதம் அணைபோட்டுத் தடுத்துவிடும் என்று ஏகாதி பத்திய வாதிகள் எதிர்ப்பார்ப்பது வீணே.

உழைக்கும் மக்கள் திரளினர் மேலும் ஆழமான சமூக வர்க்க உள்ளுணர்வைப் பெற்றிருக்கிறார்கள். தமது பெருகி வரும் தேசபக்தியுடன் ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப் போராடி வரும் எல்லா மக்களினங்களுடனுமான ஒருமைப் பாட்டையும் சேர்த்து இணைப்பது தேவை என்பதை மிகவும் போதபூர்வம் அறிந்திருக்கிறார்கள். பாட்டாளி வர்க்க சர்வதேசியம் பொதுவான வர்க்க நலன்களுக்கும், விடுதலை, சோஷலிசம்,கம்யூனிசம் ஆகியவற்றுக்கும் வேண்டி, பல்வேறு தேசங்களின் உழைக்கும் மக்கள் நடத்திவரும் போராட் டத்தின் பதாகையாக இருந்து வந்துள்ளது, இனிமேலும் எப்போதும் இருந்துவரும்.

ஏகாதிபத்தியத்தின் சித்தாந்த வாதிகள் தேசிய பிரச்சினை சம்பந்தமான வர்க்க அணுகுமுறையையும், சர்வதேசிய மோதல்கள் பூர்ஷுவா சமூக அமைப்பின் பகைமை இயல்பில் இருந்தே கிளைக்கின்றன எனும் கருத் தையும் அக்கணமே நிராகரிக்கிறார்கள், அவர்கள் தேசிய

வாதம் மானுட சமுதாயத்தின் ஊக்கு சக்தி என்று கருது கிறார்கள்.

சர்வதேச உறவுகள் பற்றிய பூர்ஷுவா சித்தாந்த வாதிகளின் கருத்துக்கள், இன்றைய சகாப்தம் வரையிலும் மகா வல்லரசுகளின் ஒரு பிரிவு உலகில் ஆதிக்கம் செலுத்தி வந்திருக்கிறது, அதே சமயம் இதர நாடுகள் அனைத்தும் மற்றும் மக்களினங்களும் பல்வேறு அளவில் அவர்களது கொள்கையின் இலக்குப் பொருளாக இருந்து வந்திருக் கிறார்கள் எனும் மெய்நடப்பால் பல்லாண்டுகளாக பீடிக்கப்பட்டு வந்திருக்கின்றன. ஏகாதிபத்தியத்தின் வன்மையும் அதிகாரமும், அதற்கு விருப்பமான வகையில் உலகப் படத்தை அமைக்கவும் மறு அமைப்புச் செய்யவும் விரயப்படுத்தும் போர்களைத் துவக்கவும், இதர மக்களை அடிமைப்படுத்தவும், சூறையாடவுமான ''உரிமையை'' அளித்தன. இதனால்தான், அரசுகள், மக்களினங்களுக்கு இடையிலான உறவுகள், பூர்ஷுவா சித்தாந்த வாதிகளால், உலகம் முழுவதிலும் அதிகாரக் கோல் பிடித்து வந்த மகா வல்லரசுகளின் தன்னிச்சைச் செயல்பாட்டின் துறை களாகச் சித்திரிக்கப்பட்டன.

சர்வதேசிய உறவுகள் துறையில் தேசியப் பிரச்சினை குறித்த பூர்ஷுவா கருத்துரு பரிணமித்ததானது, ஓரளவு பூர்ஷுவா சித்தாந்தத்தின் பொதுவான பரிணாமத்தைப் பிரதிபலிக்கிறது, இது மிகவும் பிற்போக்கானதாயும் கம்யூனிச-விரோதம் எனும் பலமான சாயம் இட்டப்பட்டும் காணப்படுகிறது. பூர்ஷுவா சித்தாந்த வாதிகள் உலகில் ஏற்பட்டு வரும் மகத்தான மாற்றங்களைப் புறக்கணிக்க முடியாது என்பதும், புதிய நிலைமைக்கு ஏற்பத் தமது கருத் தோட்டங்களைத் தாமே முயன்று தகவமைத்துக் கொள்ளும் கட்டாயம் ஏற்பட்டுள்ளது என்பதும் திண்ணம். அவர்கள் தமது கருத்துக்களை நவீனப்படுத்தி வருகிறார்கள். சோஷலிசம் மக்களினங்களின் நட்புறவு போன்ற

கருத்துக்களை எதிர்த்து மேலும் நயமான போராட்ட முறைகளைக் கையாளுகிறுர்கள்:

அமெரிக்க ஐக்கியநாடுகள் "மேலைய உலகின்" கொத் தளமாகி விட்டது என்பதும், அமெரிக்க ஏகபோகங்களில் பாத்திரம் பிரம்மாண்டமான அளவுக்கு அதிகரித்துவிட்டது என்பதுமான தகவல் பூர்ஷுவா கருத்துக்களின் பரிணமம் மீது பலமான விளைவை ஏற்படுத்தியுள்ளது.

கம்யூனிஸ்டு-விரோதம், உலக சோஷலிசத்தை எதிர்த்தும் புரட்சி இயக்கத்தை எதிர்த்தும் நிற்கும் ஏகாதி பத்தியத்தின் முக்கியமான அரசியல் சித்தாந்த ஆயுதமாகி விட்டது. இது நவீனப் படுத்தப்பட்ட குறு தேசிய வெறி போலிப் பொதுப்பற்று (காஸ்மோபாலிட்டனிசம்) மற்றும் தேசிய வாதக் கருத்தோட்டங்களால் தொடர்ந்து வலுவூட்டப்படுகிறது.

"மேலை நாடுகளின் கூட்டுக் குடும்பம்" மேம்படுத்தப் படும்போது "தேசியக் கருத்து" என்பது வழக்கமாக மட்டந் தட்டப்பட்டு இது பழைய வரலாற்றின் "தீமை யான பின்விளைவு" என்று சித்திரிக்கப்பட்டுவரும் வேடிக்கை நடப்பைக் காணலாம். இதர நாடுகளில் அமெரிக்க ஏகபோகங்களின் மேலாதிக்கத்தை எதிர்த்து நேரடி யாகவோ மறைமுகமாகவோ எழுந்துள்ள தேசிய வாதத்தை ஏகாதிபத்திய சித்தாந்தவாதிகள் தாக்குகிறுர்கள், ஆனுல் ஐரோப்பிய சோஷலிஸ்டு நாடுகள் எதிலாவது தேசிய வாதத்தின் வெளிப்பாடுகள் இடம்பெறும்போது தமது தோரணையை நேர் எதிராக்கிக் கொள்கின்றனர். இங்கு ஏகாதிபத்திய வாதிகள் தேசியவாதத்தை "விடுதலைப் போராட்டத்தின்" இணைபொருள் கருத்து என்று சித்திரிக் கிறுர்கள், சோஷலிஸ்டு நாடுகள் மீண்டும் முதலாளித்துவ அணிக்குள் திரும்புமோ என்பது பற்றிய தமது தேய்ந்து வரும் எதிர்பார்ப்பை இதோடு இணைக்கிறுர்கள். இத்தகைய "பன்மைவாதம்" தேசியப் பிரச்சினை மீதான பூர்ஷுவா தத்துவத்தின் கலவைத் தன்மைக்கு மட்டுமின்றி, கடுமை

யான வர்க்கத் தூண்டுதலாலான அகநிலைப் போக்கு மேலும் ஆயுதங்களைத் தேர்வதில் மனச்சாட்சியற்ற தன்மை இவற்றுக்கு சான்று பகரும்.

பூர்ஷுவா சித்தாந்தம் தனது கம்யூனிஸ்டு-விரோத திசையமைவில் தெட்டத்தெளிவாகச் செயல்படுகிறது. இது இயல்பாகவே தேசியப் பிரச்சினை மீதான அதன் கருத்துக் களுக்கும் பொருந்தும்.

தேசங்களின் இடையிலான புதிய உறவுகளின் பரிணாமத் தையும், சுதந்திரம், சம உரிமை இவை வென்று பெறப்படு வதையும் தவிர்க்க முடியாதபடி பின்தொடரும் முரண் பாடுகளை மிகைப்படுத்துவது மூலம், பூர்ஷுவா சித்தாந்த வாதிகள் தேசியப் பிரச்சினை மீதான தமது கருத்துக்களின்— தேசிய அம்சங்கள் சர்வதேசியக் கோட்பாடுகளுக்கு ஒவ்வாதவை, தேசிய உறவுகள் எப்போதுமே ஒரு பகைமை யான அடிக்நோக்கமுள்ள துறை, இயல்பான அகநிலைப் பட்ட காரணிகளின் மோதலின் விளைவு என்பதாகவும் எண்ணும் கருத்துப் படிவத்தின்—அடிப்படையை காப் பதற்கு முயல்கிறார்கள். இவ்வாறு செய்யும்போது அவர்கள் முதலாளித்துவத்தின் கீழும் சோஷலிசத்தின் கீழிலுமான தேசிய உறவுகளிடையிலான வித்தியாசங்களை பூசி மெழுகுகிறார்கள். இந்தக் காரணத்தால் அவர்கள் இணைப்பாக்கத்தின் சோஷலிஸ்டு மற்றும் முதலாளித்துவத் தன்மைகளிடையான எதிர்நிலையை மறுதலித்து ஒடுக்கும் தேசத்தின் தேசியவாதத்துக்கும் ஒடுக்கப்படும் தேசத்தின் தேசியவாதத்துக்கும் இடையிலான அடிப்படை வேறு பாட்டை இருட்டடிப்புச் செய்கிறார்கள்.

தேசியப் பிரச்சினை மீது மிகப் பலவகையான பூர்ஷுவா சிந்தனைப் போக்குகள் உள்ளன. இவை எவ்வளவுதான் வேறுபாடுடையனவாக இருந்தபோதிலும் பழைய போக்கு களைச் சுட்டி அறிவது எளிதே—இவற்றின் மீதே சுரண்டும் வர்க்கங்களின் கொள்கை இதுகாறும் சார்ந்து நின்றது—

ஆக அணித்தான கருத்தோட்டங்களை இனங் காண்பதும் எளிதே.

இனவெறி போக்குகளின் ஆதரவாளர்கள் உயிரினஞ் சார்ந்த அசமத்துவம் எனும் கருத்துப் படிவத்திலிருந்து துவங்கி "உயர்" இனங்களையும் "கீழ் இனங்களையும்" உருவாக்கிய இயற்கையே இன, தேசிய ஒடுக்குமுறையை நெறியாக்கம் செய்கிறது என்று வாதிக்கிறார்கள். இது தேசிய உறவுகள் பற்றிய எல்லா வகைக் கருத்தோட்டங்களிலும் வைத்து ஆகப் பிற்போக்குத் தன்மை வாய்ந்தது. துல்லியமாயும் இதன் "மனித இன வெறுப்பு" சாரம் காரணமாகவே பாசிஸ்டுகள் தமது பூண்டோடு அழிக்கும், அடிமைப் படுத்தும் கொள்கைக்கு இதை "தத்துவார்த்த" அடித்தளமாகப் பயன்படுத்தினர்.

பாசிசத்தின் படுதோல்விக்குப் பின்னர் ஒரு சித்தாந்தம் என்ற முறையில் இனவெறியின் பொதுவான செல்வாக்கு தெளிவாயும் குன்றிவந்தபோதிலும், தென்னுப்பிரிக்கா, அமெரிக்கா இதர முதலாளித்துவ நாடுகளிலுள்ள இதன் ஆதரவாளர்கள் பல்வேறு இன வெறிக் கருத்துப்படிவங்களை, முதலாவதாயும் இனவெறி தேசிய மோதல்கள் சீர்படுத்த முடியாதவை எனவும் தேசங்கள் இடையான உறவுகளில் பகைமை தவிர்க்க முடியாதது. கருத்தை நீட்டித்து வைக்க மூர்க்கமாக முயல்கிறார்கள். இதே மாதிரியில் தமது உரிமைகளுக்காக கருப்பு நிற மக்கள் நடத்தும் முன் என்னும் கண்டிராத வீச்சுடைய இயக்கத்தை இதர தேசங்கள் மீதான "இயல்பான" பகைமை உணர்வுகளின் "விலக்க முடியாத" வெடிப்பே என்று வருணிக்கிறார்கள். இன ஒதுக்கல்,இனப்பாகுபாட்டு அமைப்பைப் பேணி வைத்திருப்பதற்கும் இதே வாதங்கள் பயன்படுத்தப் படுகின்றன.

ஹிட்லர் பாணியில் இனவெறி சோதனைகளை ஆதரிப்போர் இப்போது சிலரே என்பது உண்மை. ஆனால் வெள்ளை, மஞ்சள் மற்றும் நீக்ரோ இனத்தவர்கள் படைத்துருவாக்கப் பட்டதாகக் கூறப்படும் நாகரிகங்கள் அடிப்படையில்

வித்தியாசமானவை என்றும், மக்களினங்களில் ஒருவரை ஒருவர் கண்ணுக்குப் புலனாகாத எல்லைக் கோடுகளால் பிரிக்கப்பட்டிருக்கிறார்கள் என்றும் வாதம் செய்யும் கருத்து இன்றும் பலவழிகளில் விளக்கப்படுகிறது. யுத்தப் பிற்கால கட்டத்தில் உடனடியாக ''தேசிய மரபுப்பண்பு'' பற்றிய பூர்ஷுவா கருத்தோட்டங்கள் பரவலாக இருந்தன. அமெரிக்கா, பிரிட்டன் இதர மேலைய நாடுகளில் மனிதஇன உளவியலாளர், சிறப்பு அமைப்புகள் தோன்றின, இவர்கள் தேசங்களின் உளவியல் பிழைபாடுகள்(அல்லது நற்பண்புகளை) பெரியளவில் ஆராயப் புகுந்தன. வெவ்வேறு தேசங்களைச் சேர்ந்த தனிநபர்களை உளவியல் பகுப்பாய்வு செய்தது மூலம் நிலைநாட்டப் பட்டதான இந்தக் கற்பனைத் தன்மைகள் பூர்ஷுவா உலகத்தின் அரசியல் மேற்கட்டு வரிசை, சம்பந்தப்பட்ட மக்களினங்களின் இடத்தை முன் நிர்ணயம் செய்தது. தேசிய மரபுப் பண்பு பற்றிய பிரச்சினை சரியாக ஆராயப்படவில்லை என்ற உண்மையை சாதகமாக எடுத்துக் கொண்டு, பூர்ஷுவா அறிஞர்கள் குறு தேசிய வெறித் தப்பெண்ணங்களையும் முதலாளித்துவ உலகில் பரவலாக இருக்கும் மாறுநிலை இயல்புகளையும் மக்களினங்களின் மெய்யான தன்மைகளாக அடிக்கடி சித்திரித்தார்கள். இதன் விளைவு இனவெறி கருத்துப் படிவங்கள் பல வேடங்களில் புதுப்பிக்கப்பட்டன. இவை ஏகாதிபத்திய ஆக்கிரமிப்புக்கு இலக்காகி விட்ட மக்களினங்களின் உளவியல் கீழ்நிலையை நிரூபிப்பதை மையமாக்கிச் செயல்பட்டது.

இனவெறியின் நேர்முகமும் மறைமுகமுமான மரபான வடிவங்கள் புதுப்பிக்கப் பட்டதுடன் கூடவே, ''வெள்ளைநிற எதிர்ப்பு'' இனவெறி வடிவங்களும், அண்மையில் தோற்ற மளித்துள்ளன. சில வெள்ளையரல்லாத தேசியவாதிகளும் குறுதேசிய வெறி சித்தாந்தவாதிகளும் ஏகாதிபத்திய ஒடுக்கு முறையை எதிர்த்து தேசிய விடுதலைக்காக் வெள்ளையரல்லாத மக்கள் நடத்தும் போராட்டத்தில் இனவெறிக் காரணிகளைத் திணிக்க முயல்கின்றனர். இது தேசிய உணர்வின் நியாயமான வளர்ச்சியைப் புரட்டி மெய்யான சமுதாய முரண்பாடு

களுக்குப் பதில் போலியான அல்லது மிகைப்படுத்தப்பட்ட தேசிய முரண்பாடுகளை மாற்றீடு செய்கிறது.

அதன் வடிவம் எதுவாக இருந்தபோதிலும் சரி, இனவெறி அனைத்து மக்களினங்களின் அடிப்படை நலன்களுக்குப் பகைமையான பிற்போக்கு சமுதாய சக்திகளின் சித்தாந்தமாகும். இனவெறி குறுதேசிய வெறி இவற்றின் ஒற்றுமைக்கான மிகவும் எடுப்பான உதாரணம் ஜியோனிசமாகும்—இது உலகப் பிற்போக்கின் ஆயுதமாக கம்யூனிச-விரோதத்தின் அதிரடிப் படையாக அரபு மக்கள் தேச விடுதலை இயக்கத்தின் எதிரியாக உலகம் முற்றுமுள்ள உழைக்கும் யூத மக்களின் பகைவனாக இருக்கிறது.

குறு தேசியவெறி என்பது பூர்ஷுவா சித்தாந்தத்திலான மிகவும் முக்கியமான போக்குகளில் ஒன்றாகும். தேசிய அசாதாரணத் தன்மை, உயர்தரம் எனும் கருத்துப் படிவத்தோடு குறுதேசிய வெறிக்கு இயல்பான, இதர தேசங்கள் பாலான அவமதிப்பும் சேர்ந்து, அது கடுமையான பிற்போக்கு ஏகாதிபத்தியக் கொள்கையின் சித்தாந்த அடிப்படையாகிறது.

மேற்கு ஜெர்மனியில் குறு தேசிய வெறியையும் பழி வெறியையும் புதுக்குவதற்கான முயற்சிகளை நாம் எக்காரணம் கொண்டும் காணாமல் இருக்க முடியாது. அவற்றை ஊக்குவிப்போர் "மகா சகாப்தம்" அல்லது "ஆரிய லட்சியம்" என்பதெல்லாம் பயன்படப் போவதில்லை என்பதை இயல்பாகவே அறிவார்கள். பொதுவாக அவர்கள் தமது ஆக்கிரமிப்பு பிரதேசப் பற்றுடல் பேராசைகளை "மேலை நாகரிகத்தைப்" பாதுகாப்பதற்கான "ஐக்கிய ஐரோப்பா" எனும் போலிப் பொதுப்பற்று வேடத்திலும், கம்யூனிஸ்டு ஆக்கிரமிப்பு எனும் கற்பனை "அச்சுறுத்தலை" எதிர்த்தும் நடத்துவதாக பாவனை செய்கிறார்கள். பலப் பிரயோகம் மூலம் ஜெர்மனியின் 1937-ம் ஆண்டு எல்லைகளை மீண்டும் பெறக் கனவு கண்டும் "வாழும் இடம்" என்ற கருத்தைப் பிரசாரம் செய்யவும் முயன்ற அதிதீவிர

பிற்போக்குப் பிரிவுகள், சோவியத்-ஜெ.ச.கு., போலந்து-ஜெ.ச.கு., செக்கோஸ்லோவாகியா-ஜெ.ச.கு உடன்படிக்கைகள் ஏற்பட்டதால் முறியடிக்கப்பட்டன. ஆயினும் "ஜெர்மனியின் தேசிய லட்சியம்" எனப்படும் சித்தாந்தம் ஏகாதிபத்தியப் பிரிவினர் மத்தியில் இன்னமும் நிலவுகிறது. பலப்பிரயோகத்தை வழிபடுதல், ஜெ.ச.கு பொருளாதார ஏற்றத்தைப் போற்றுதல் என்பவற்ருேடு இணைந்து இது ''நல்லதோர் [தேசிய உணர்வு'' ஏற்பட வேண்டும் எனும் கோரிக்கையை உருவாக்கியது. இது பழைய பேராசைகளின் ஐரோப்பாவின் பிரதான சக்தியாக பூர்ஷுவா ஜெர்மனி புதிய பாத்திரம் வகிக்க வேண்டும் என்ற கனவிற்கான ஒரு திரையேயாகும்.

ஜெர்மனி அறிஞரான வுல்ஃப் காங் ஹெய்செ எழுதுகிருர்: ''குறுதேசிய வெறி எனும் இந்த ஏகாதிபத்திய சாதுர்யமும் தேசிய சார்பு நிலை பற்றிய உண்மையான உணர்வை மிகைப் படுத்தலும் ஆதிக்கத்தை நீடித்து வைத்திருப்பதற்கான வசதியான சித்தாந்தத் தொடர்பாகச் செயல்படுகிறது. இது தியாகங்களுக்குத் தயாராக இருக்கும் அரசு போதத்தின் ஒரு வடிவமாகும், அதே சமயம் கம்யூனிஸ்டு-விரோதம் எதிர்மறையாக மட்டுமே இருக்க போலி பொதுப்பற்று (காஸ்மோபாலிடன்) வாதம் பகிரங்கமான அறிவாளிகளின் சித்தாந்தமாகத் தெரிகிறது.''*

ஒரு வகையில் அமெரிக்க ஏகாதிபத்திய சித்தாந்தத்தின் பரிணமம் மேற்கு ஜெர்மன் ஏகபோகங்களின் பேராசைகளை சித்தாந்த ரீதியில் ஆதாரப் படுத்திக் காட்டுவது போல இருக்கிறது. அமெரிக்காவில் தான் அட்லாந்திக் கூட்டணி எனும் காஸ்மோபாலிடன் கருத்துரு தோன்றி, 1960 ஆம் ஆண்டுகளின் துவக்கத்தில் அமெரிக்க விஸ்தரிப்பு திட்டத்தின்

---

* வுல்ஃப் காங் ஹெய்சே (1968-ல் மாஸ்கோவில் மொழி பெயர்த்து வெளியிடப்பட்டது,முன்னேற்றப் பதிப்பகம்) இந்த வாசம் ருஷ்ய மொழிப் பதிப்பில் 429-ம் பககததில் வெளியாகியுள்ளது.

பிரதான கருவியாக மாறியது, 1960 ஆம் ஆண்டுகளின் நடுப்பகுதிக்குள் இதன் பலவீனங்கள் மேலுக்கு வந்து இதற்கு மேலைய கூட்டணி உறுப்பினர் இடமிருந்துங்கூட எதிர்ப்பு எழுந்தது. இதன் விளைவாக மேலும் அதிக ஆக்கிரமிப்புத் தன்மையும் ராணுவ வெறிப் போக்கும் கொண்ட சக்திகள் மீண்டும் தேசிய வெறிப் பாதைக்குத் திரும்பி "அகண்ட தேசிய இனம்" எனும் கருத்தியல் எண்ணத்துக்கு பதில் நியாயமெனத் தோற்றும் திட்டமிடப்பட்ட தேசிய மதிப்புக் களின் ஆதரவாளர்களாகச் செயல்படுகின்றன.

அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் அயல்துறைக் கொள்கையை அமைப்பவர்கள் இந்தோசீனு மீது நடத்திய ஆக்கிரமிப்பை நியாயப்படுத்த "தேசிய நலன்கள்" என்றும் "ஆசியாவில் தனி லட்சியப் பணி" என்றும் வாதிட்டனர், இன்னும் வாதிடுகின்றனர். தேசத்தின் மிகப் பெரும் பான்மையினர் அக்கறை கொள்ளாத தமது சொந்த நாடுபிடி கம்யூனிஸ்டு-எதிர்ப்பு பேராசைகளை தேசிய நலன்கள் என்று சித்திரித்தனர். தென்கிழக்காசியாவிலான அமெரிக்காவின் லட்சியப்பணி பொருத்தவரை இதனை வெளிநாட்டிலும் உள்நாட்டிலும் இருந்த முற்போக்குப் பொதுமக்கள் எதிர்த் தார்கள், இன்றும் எதிர்க்கிறுர்கள்.

தேசத்தின் மெய்யான நலவாழ்வை விடவும் அதிகமாக நாடுபிடி விஸ்தரிப்புக்கு ஊக்கம் தருவதிலும் இந்த பகாசுரப் பசியை கட்டுப்படுத்த மறுப்பதிலும் அக்கறை காட்டிவரும் ஆளும் கும்பல்களின் நலனே இந்த "தேசிய நலன்கள்" எனும் பூர்ஷுவா கருத்துருவின் அடித்தளத்தில் இருக்கிறது. இத்தகைய ஒரு கருத்துருவைப் பரிசீலித்த அமெரிக்கப் பேராசிரியர் ஜேம்ஸ் பி.ஸ்பீர் என்பவர் இந்த சந்தர்ப்பத்தில் நமது கவனத்துக்குக் கொண்டு வந்துள்ள உண்மை என்ன வெனில் "இந்த தேசிய நலனுக்கு அறிவு பூர்வமான அல்லது சீரான உள்ளடக்கம் இருக்க முடியாது, இது வாஸ்தவத்தில் முக்கியமாயும் பொருளற்றது, சிந்தனை அற்றது. ஏனெனில்

இது அதிகாரத்திற்கான வேட்கையை சர்வதேசிய மட்டத்தில் வெளியிடுவதாகும்.''*

உள்நாட்டு அரசியலிலும் சர்வதேச உறவுகளிலும் ஏகாதிபத்தியத்தின் ஆழமாகப் பதிந்த பலப்பிரயோகம், இதர மக்களின் நலன்களைக் குறித்து நிந்தனை நிறைந்த சித்தாந்தங்களை தோற்றுவிக்கிறது. அயல்துறைக் கொள்கையிலான துர்ச்செயல்களையும், திட்டசித்தப் பேர்வழிகளின் திட்ட சித்தாந்தச் செயலையும் மெச்சிப் புகழ்கிறது.

பூர்ஷுவா சித்தாந்த வாதிகள் ஆளும் வர்க்கத்தின் குறு தேசிய வெறிப் பேராசைகளை தேசபக்தி என சித்திரித்து அதன் வழி முதலாளித்துவ நாடுகளிலுள்ள மக்களின் ஆதரவைப் பெறலாம் என்று நம்புகிறது. ஆயினும் தேசிய உணர்வுகளை அட்டூழியம் செய்து புரட்டும் குறுதேசிய வெறிக்கும் மக்கள் திரளினரின் தேச பக்திக்கும் இடை பொதுவான அம்சம் ஏதும் கிடையாது.

''தேசியத் தன்மதிப்பு''என்றும் ''நாட்டின் கௌரவம்'' என்றும் ஏகாதிபத்தியக் கொள்கைகளை ஆதரிக்கும் பூர்ஷுவா வர்க்கத்தின் பல்லவி பாடி வருவது, அவர்கள் புரியும் படு அபச்சாரம் காரணம் அவர்கள் இதர மக்களின் சாமான்ய உரிமைகளை மிதித்துத் துவைத்து இந்தத் ''தன்மதிப்பை'' கட்டுகின்றனர்; இந்த ''கௌரவத்தை'' பற்றி நிற்கின்றனர்.

மகா ருஷ்யர்களின் தேசியப் பெருமிதம் எனும் தமது கட்டுரையில் லெனின், மக்களினங்கள் இடையிலான உறவுகள் குறித்த சமத்துவக் கோட்பாட்டை ஒரு மாபெரும் தேசத்துக்கு இழிவைத் தரும் தனியுரிமைகள் குறித்த பிரபுத்துவக் கோட்பாட்டுக்கு எதிரிடையாக வைத்தார், மக்களை உரங்குலைத்தும், ஒடுக்கியும் இதர மக்களை ஒடுக்கு

---

* ஜேம்ஸ் பி. ஸ்பீர் II ''ஹான்ஸ் மார்க்கந்தாவும் உலக அரசும்'', உலக அரசியல், தொகுதி 20,ஜனவரி 1968, இதழ் 2, பக். 318.

மாறு ஊக்குவித்தும், செயல்பட்டு தனது மானக்கேட்டை போலியான, நியாய வேடமிட்ட தேசபக்த சொற்ஜாலத்தில் மறைத்துக் கொள்ளும் எதேச்சாதிகாரத்தை அவர் கோபா வேசத்துடன் கண்டித்தார்.* உண்மையான தேசியப் பெருமிதத்துக்கும் தேசியத் தற்பெருமை மற்றும் நாடு உமது என்பதனுல் புகழ்த்திக் கூறல் இவற்றுக்கும் பொது வான அம்சம் எதுவும் கிடையாது. மெய்யான தேசியப் பெருமிதம் என்பது சுதந்திரத்துக்கும் முன்னேற்றத்துக்கு மான உலகுதழுவிய போராட்டத்தில் உங்களது தேசத்தின் பங்களிப்புப் பற்றிய விசுவாச பூர்வமான மதிப்பீட்டையும், எல்லா தேசங்களின் சமத்துவத்தை நிபந்தனை இன்றி ஒப்புக் கொள்வதையும் உங்கள் நாட்டின் கொள்கை பற்றிய ஒரு வர்க்க மதிப்பீட்டினையும் அடிப்படையாக்கியதாகும்.

இந்தோசீனுவில் அமெரிக்க ஏகாதிபத்திய வாதிகள் நடத்திய கொலைகாரச் சாகசங்களை, அமெரிக்க கம்யூனிஸ்டு களும் முற்போக்காளர்களும் உலகின் இதர பாகங்களிலி ருந்து நேர்மையான மக்களுடன் சேர்ந்து கண்டனம் செய்த போது, அவர்கள் தமது தேசத்தின் மாபெரும் ஜனநாயக மரபுகள் மீதான மரியாதை காரணமாயும்; ஆக்கிரமிப்புக் கொள்கை,இனவெறி,கம்யூனிஸ்டு-விரோதம், ராணுவ வெறி ஆதிய அமெரிக்காவை இழிவுபடுத்தும் அனைத்தின் மீதுமான தமது வெறுப்பின் காரணமாயுமே அப்படிச் செயல் பட்டனர்.

இந்தக் குறுதேசிய வெறியினை கண்டனம் செய்வதை ''அமெரிக்கப் பண்புக்கு விளைத்த துரோகம்'' என்பதாக பிற்போக்கு அமெரிக்கப் பிரசாரம் சாட்டுகிறது. ஆனுல் யுத்த-எதிர்ப்பு நடவடிக்கைகள் நாட்டின் ஒளிமய எதிர் காலத்துக்குரிய செயற்பாடே தவிரத் துரோகச் செயல் அல்ல, என்பதை அமெரிக்காவில் மேலும் மேலும் அதிகமான மக்கள் ஒப்புக் கொண்டு வருகிறுர்கள்.

---

* காண்க வி. இ. லெனின், ''நூல் திரட்டு'', தொகுதி 21, பக். 104.

அமெரிக்க மார்க்சிய வாதிகளான பெட்டி கானெட்டும் வி. ஜே. ஜெரோமும் எழுதியதாவது: "மெய்யான தேச பக்தி என்பது ஒருவரது நாட்டின் பாத்திரம் குறித்துப் பெருமிதமடையும் தொடர்களில் எப்போதும் வெளி யிடாவது இல்லே. உண்மையான தேசபக்தன் அவமானம் நிறைந்து தலேகுனியும் தருணங்கள் ஒரு தேசத்தின் வாழ்வில் உறலாம்.''* வியத்நாமிய மக்களே எதிர்த்த தேசியவெறிப் பகைமைப் பிரசாரத்தை எதிர்த்து அமெரிக்க கம்யூனிஸ்டுகள் அம்பலப்படுத்தியதும், இந்த ஏகாதிபத்தியக் கொள்கையை எதிர்த்துச் செயல்படுமாறு மக்களே வேண்டிக் கொண்டதும், தேசிய, சர்வதேசியக் கடமையின் பாற்பட்ட செயல்களே யாகும். மேலும் அவர்கள் ஜெஃபர்சன், பெயின், லிங்கன் விட்மன் முதலியோரின் ஜனநாயக மரபுகளுக்கு மெய்ப் பற்றுடன் நடந்து கொண்டதற்கான சான்றுகளுமாகும்.

குறு தேசியவெறி பகைமை மோதல்கள், சமுசயம், வலிய சேதம் பலவீன தேசத்தை ஆள்வதன் சித்தம் இத்தகைய தன்மைகளே மக்களினங்களிடையான உறவுகளில் உள்ளார்ந்து கிடக்கும் பண்புக்கூறுகள் எனும் கருத்தின் மீது கட்டப்படுகிறது. இது போலித்தனமான "தேசிய நலன்களே'' நேர்மை, நீதி இவற்றுக்கு மேலானதாகக் கருதுகிறது.

ஏகாதிபத்தியத்தின் நாடு பிடி விஸ்தரிப்புக் கருத்துக் களின் இன்னொரு வடிவமே போலிப் பொதுப்பற்று எனப் படும் **காஸ்மோபாலிடனிசம்** இதன் ஆதரவாளர்கள் தேசிய அம்சங்களானவை தற்காலத்துக்கு ஒவ்வாதவைஎன்று கருது கிறார்கள். தேசிய இயக்கங்கள் பின்னேற்றமானவை எனக் காண்கிறார்கள். ''உலக குடியுரிமை'' ''உலக அரசு'' எனும் இவை எல்லா தேசிய மோதல்களுக்கும் முடிவு காணும் உயர் லட்சியங்கள் என்பதாக அவர்கள் பறைசாற்று கிறார்கள். இந்த நபர்கள் (அர்னுல்ட் டாயின்பி, ஹான்ஸ்

* பெட்டி கானெட், வி. ஜே. ஜெரோம் ''தேசபக்தி யும் தேசியப் பெருமிதமும் பற்றி'', **பொலிடிகல்** அஃபயர்ஸ், அக்டோபர் 1954, பக். 33.

மார்கெந்தாவ், ஜான் ஸ்டோயிசிங்கர் மற்றும் பிறர்) தேசிய வாதத்திற்கு எதிராக காஸ்மோபாலிட்டனிசத்தையும் தேசிய சூன்யவாதத்தையும் ஆதரிக்கிறுர்கள். ஆனுல் உண்மையில் தமது நாட்டின் ஏகபோக மூலதனத்தின் குறு தேசிய வெறி நலன்களையே ஊக்குவிக்கிறுர்கள்.

அண்மை ஆண்டுகளில் சோஷலிஸ்டு உலகில் தேசிய வாதத்தைக் கிளறிவிடத் தூண்டும் போக்கு பெருமளவு நிலவி வருகிறது. இது ஏகாதிபத்தியக் கொள்கையுடனும் அப்பட்டமான கம்யூனிச-விரோதத்துடனும் தெளிவாக இணைந்திருக்கிறது (ஸ்பிக்ரியு பிரெஜெஜின்ஸ்கி, ரிச்சர்ட் பைப்ஸ், ஜான்சி கேம்பெல், போரிஸ் மிஸ்னர், கார்ல் மெஹ்னர்ட் மற்றும் பிறர்).

உலகின் பல்வேறு பிராந்தியங்களிலான தேசியவாத வெளிப்பாடுகளை முதலாக்கி, ஏகாதிபத்திய சித்தாந்த வாதிகள் தேசிய வாதத்தின் ''எல்லாம் வல்ல'' தொற்று விஷத்தைப் பற்றிய கருத்தைப் பரப்புகிறுர்கள். இது நாடுகளின் சமுதாய அமைப்பு எதுவாக இருப்பினும் சரி, எல்லா நாடுகளையும் பீடித்திருப்பதாகக் கூறப்படுகிறது. அவர்கள் வேண்டுமென்றே ஒரு மருட்சியைச் சிருஷ்டித்து தேசியப் பகைமை மனித இயல்பிலேயே தோன்றியதாக வாதிடுகின்றனர்.

பெர்ட்ராம் டி வுல்ஃப் எழுதியுள்ள **மார்க்சியம் ஒரு போதனையின் வாழ்வில் நூற்ருண்டுகள்** எனும் நூலின் முதல் பாகத்தின் தலைப்பு ''தேசியமா அல்லது சர்வதேசியமா'' என்பதாகும். மார்க்சியத்தின் வேரோடிப்போன வைரியான இந்த நூலாசிரியர் மார்க்ஸ்-எங்கெல்சால் முன்வைக்கப்பட்டதும் லெனினுல் விரிவிளக்கம் செய்யப்பட்டதுமான பாட்டாளி வர்க்க சர்வதேசிய போதனை தேசியப் பிரச்சினையின் பன்முகத்தன்மையைக் குறைத்து மதிப்பிடுவதாயும், தேசிய வாதத்தை ''ஒழித்துவிட'' அளவுக்கு மீறி அவசரப்படுவதாயும் வாதம் செய்கிறுர்.

மார்க்சும் எங்கெல்சும் மிகையான பகுத்தறிவுடன் செயல்பட்டதாக நாம் நம்பவேண்டும் என்கிறுர் இவர். அவர்கள் தேசியவாதத்தின் சமூக-பொருளாதார விளைவு களைக்கண்டறிந்தார்கள். ஆனுல் அதன் உணர்ச்சிவயசக்தியைக் குறைத்து மதிப்பிட்டார்களாம். இதன் விளைவே வுல்ஃபின் கருத்துப்படி வரலாறு குறித்த பிழையான மார்க்சிய முன்னறிவித்தல். இன்றுள்ள சமுதாய அமைப்பைத் தகர்ப்பது மூலம் தேசிய மோதல்களையும் தேசிய வாதத்தை யும் தாஞகவே அகற்றி நீக்கலாம் என்று மார்க்சியவாதிகள் அனுமானித்ததாக அவர் சாதிக்கிருர். இருப்பினும், தேசங்களின் இயல்பு மாற்றவொண்ணுதது என்று அவர் வாதாடுகிருர். சோஷலிசத்தின் கீழும் மனிதன் இதர நாடுகள் தேசங்களின் உறுப்பினர்கள் விஷயத்தில், மனிதகுல வரலாற்றில் இதுவரை இருந்தது போலவே பகைமை, வெறுப்பு எனும் கண்மூடித்தனமான உணர்வுகளையே வெளியிடுகிருன் என்பதாக இந்த பூர்ஷுவா வரலாற்ருளர் செப்புகிருர். "தேசியப் பகைமை உணர்வுகளுக்கான மூல வேரை, மனித சமுதாயத்தின் வர்க்கக் கட்டமைப்பில் நாடிக்காண்பது மூலம் கம்யூனிஸ்டுகள் உளவியல், தார்மிக காரணிகளின் முக்கியத்துவத்தைப் புறக்கணிக்கிருர்கள், இவை தேசியப் பகைமை உணர்வுகளைப் படைப்பதிலும், குறிப்பாக மனிதனின் தீய பண்பின் ஒரு பகுதியான பகுத் தறிவற்ற தேசிய, இனப்பகைமை உணர்வுகளை உருவாக்கு வதிலும், மிகவும் தீர்மானகரமானவை"* என்பதாக வுல்ஃபின் கூட்டாளியான கொலாரஸ் என்பவர் எழுதுகிருர். "மனிதனின் தீய பண்பு" எனும் குறிப்பு முற்றிலும் போலி நியாயமான ஒரு கருத்துப்படிவமே, இதன் மீதே பிற்போக்கு சித்தாந்த வாதிகள் நம்பிக்கை வைத்திருந் தார்கள்.

அது அப்படி அல்ல, மார்க்சிய லெனினிய விஞ்ஞானம் தார்மிக உளவியல் நோக்குகள் சமுதாய வாழ்வில் பங்கு

---

* டபிள்யூ கொலாரஸ், **கம்யூனிசமும் காலனியாதிக் கமும்**, லண்டன், 1964, பக். 137.

வகிக்கின்றன என்பதை மறுப்பதில்லே. ஆனல் இது குறித்த ஒரு சமூக ரீதியான விளக்கத்தைத் தருகிறது. அப்படியிருக்க, பூர்ஷுவா சித்தாந்திகளோ ஏதோ மர்மமான தீர்க்க முடியாத ஒரு தீங்கு பற்றி ஓர் உள்ளார்ந்த பகைமை குறித்துப் பேசுகிருர்கள். இது வெவ்வேறு தேசங்களைச் சேர்ந்த மக்கள் சமாதானமாயும் நட்புறவுடனும் வாழ்வதைத் தடை செய்வதாக குற்றம் சாட்டுகிருர்கள். இத்தகைய பகுத்தறிவற்ற உணர்வுகளே ஒவ்வொரு நாடும் தன்னையே இந்தப் பிரபஞ்சத்தின் மையமாகக் கருதிக் கொள்ள நிரந்தரமாக விரும்புவதற்கும், இதர தேசங்களை கேவலமாயும் பகைமையுடனும் நடத்துவதற்கும் காரணமாக இருக்கிறது என்பதாக வாதமிடுகிருர்கள். மனித இன மையவாதம் என்று அறியப்படுவதான இத்தகைய விஷயமே, ஏகாதிபத்தியத்தால் தூண்டிவிடப்பட்டதான தேசிய அசாதாரணத் தன்மை மற்றும் பகைமையின் கூறுகள் நிலவுவதைப் பிரதிபலிக்கிறது, இவற்றைச் சுற்றியே பூர்ஷுவா சமுகவியலாளர்கள் ஒரு மருட்சியின் ஒளி வட்டத்தை உருவாக்க முயல்கிருர்கள்.

தேசிய உறவுகள் சம்பந்தமான மிகவும் பரவலான பூர்ஷுவா கருத்துரு என்னவெனில் ஒரு தேசத்தின் உறுப்பினர்கள் மற்றையோரிடமிருந்து விலகி வாழ்ந்திருக்கும் காலம் வரைக்கும் அவர்களது பகைமை முக்கியமாயும் தேசத்துக்கு வெளியே தோற்றமளிக்கிறது என்பதே. தேசங்களிடையான உறவுகள் அதிகரிக்குந் தோறும்—இது நவீன உலகின் நல்ல அம்சங்களில் ஒன்று—பல்வேறு தேசங்கள் இனங்களைச் சேர்ந்த நபர்கள் மிகவும் அடிக்கடி தொடர்பு கொள்வது சாத்தியமாகிறது. இது மனித இன மையவாத உணர்வுகளை மேலும் கடுமையாக்குகிறது என்பதாக பூர்ஷுவா சமுக இயலாளர்கள் உறுத்திச் சொல்கிருர்கள். சமுதாய நடப்புக்கள் மேலதிகமாயும் சர்வதேசிய மயமாககப்படுகின்றன எனும் உண்மை, பல்வேறு தேசங்கள் இடையிலான மேலும் முனைப்பான

தொடர்புகள் இன தேசிய மோதல்களை அதிகரிக்கும் எனும் முடிவுக்கு அவர்களை இட்டுச் செல்கின்றன.

சுருங்கக் கூறின் நாம் பூர்ஷுவா உளவியலை நம்பும் பட்சத்தில், மனித குலத்தின் எதிர்காலம் மிகவும் இருள டைந்ததாகவே இருக்கும்.

அழிந்து வரும் வர்க்கங்களின் சித்தாந்தவாதிகளின் லட்சணமான தோல்வி மனப்பான்மையில் தோய்ந்துகிடக் கும் இந்தக் கண்ணோட்டம், வர்க்கப் போராட்டத்திலும் மக்கள் திரளினரின் படைப்பாற்றல் செயற்பாட்டிலுமான புது மாதிரி சர்வதேச உறவுகளை நோக்கி ஏற்பட்டு வரும் முன்னேற்றத்தை இல்லாதாக்குகிறது. மேலும் இத்தகைய உறவுகள் பல்வேறுபட்ட மக்களினங்களின் இத்தகைய உறவுகள் மீதும், சமூக ஜீவிகள் என்ற முறையில் தனிநபர் கள் அவர்களது ஒழுக்கம் வழக்கங்கள் மீதும் அளப்பரிய செல்வாக்கு செலுத்துவதையும் அடியோடு ஒழிக்கும்.

ஆயினும், பல்வேறு தேசங்கள் தேசிய இனங்களை நட் புறவுடனும் சகோதரத்துவத்துடனும் ஒன்று சேர்ந்து வாழும்படி வகை செய்துள்ள, சோவியத் ஒன்றியத்தின் அனுபவம் உண்மையான எதிர்காலக் காட்சி பகைமை மற்றும் ஆவேசமான தேசிய உணர்வுகளில் இருந்து அறவே விடுபட்ட ஒன்றே என்பதைப் புலப்படுத்தியுள்ளது. நேர் மாறாக, மேலும் அதிக நெருக்கமான நட்புறவும், மேலும் அதிக நெருக்கமான சகோதரத்துவமும் நிலவும். இதை சோஷலிஸ்டு கூட்டுக் குடும்பத்தின் மக்களினங்கள் மத்தி யிலான உறவுகளும் சோஷலிஸ்டு நாடுகளுக்கும் தேசவிடுதலை இயக்கத்துக்கும் இடையிலான உறவுகளும் நிரூபித்துக் காட்டியுள்ளன.

ஏகாதிபத்தியம் சமூக தேசிய மோதல்களைத் தோற்று விக்கிறது. ஆனால் இவற்றில் ''முன்னதாக வகுத்தது'' என்பதாக எதுவும் கிடையாது.

தேசிய போதத்தின் பல்வேறு வெளிப்பாடுகளுக்கு இடையிலான பண்பு ரீதியான வேறுபாடுகளை மழுப்பி இருட்டடிப்புச் செய்ய பிற்போக்கு சித்தாந்த வாதிகள் ஆவலாக உள்ளனர். அவர்கள் தேசியப் பிரச்சினையை சமூகக் கட்டமைப்பிலிருந்து தனியே பிரிக்கிறார்கள். அவர்கள் கருத்தில், தேசிய உறவுகள் எந்த ஒரு புறவய விதிகளாலும் ஆளுமை செய்யப்படாத, அவற்றுக்குக் கட்டுப்படாத, சுதந்திரமான நடப்புகளாகும். அவர்களைப் பொருத்தவரை, அமெரிக்காவின் கருப்புநிற மக்கள் குடியுரிமைக்காக நடத்தும் போராட்டமும், இனவெறியர்களின் மிருகத்தனமான நடத்தையும் இன மோதல் எனும் கருத்தியலான ஒரு தலைப்பின் கீழ் வரும் நிகழ்வுகளே, அறியவொண்ணாத, பகுத்தறிவற்றதான உணர்வுகளின் விளைவு அல்லது பலனே.

தேசியப் பிரச்சினைக்கான பூர்ஷுவா அணுகுமுறையின் முறையியல் அடித்தளம் இதுவே. அது தனது ஆதரவாளர்கள், பகைமைகளால் பாழான முதலாளித்துவ சமுதாயத்தையும், சோஷலிசத்தின் கீழிலான அடிப்படையிலேயே வேறு மாதிரியான உறவுகளையும், ஒரே அளவுகோல் கொண்டு கணிப்பதற்கு இடமளிக்கிறது. இவ்வாறு செய்வதுமூலம் அவர்கள் சோஷலிஸ்டு உலகில் முதலாளித்துவத்தில் உள்ளார்ந்து கிடக்கும் தீமைகள் இருப்பதாகச் சாட்டி, இந்த விஷமத்தனமான வாதத்தைப் பயன்படுத்தி மார்க்சிய-லெனினியத்தை ''மறுதலிக்கின்றனர்.''

தேசங்கள் இடையிலான பூசலும் மோதலும் ஒன்று பரிகாரம் காண முடியாதது அல்லது சோஷலிசத்திலிருந்து தனி மாறுபட்ட அகண்ட தேசிய அமைப்பின் கட்டுக்கோப்புக்குள்ளேயே முழுமையாயும் சமாளித்து அகற்ற இயலுவது என்பதை நிருபிப்பதுதான் பூர்ஷுவா சித்தாந்த வாதிகளின் நோக்கம். பகைமைகள் மறைவுறுவது உற்பத்தி உறவுகளிலான மாற்றங்களின் விளைவாக அல்ல என்றும் மாறாக, விஞ்ஞான தொழில்நுட்பப் புரட்சியின்

காரணமாகவே எனவும் எடுத்துக்காட்ட அவர்கள் விரும்புகிறார்கள். பின்னது "ஒற்றை தொழில்துறை சமுதாயத்துக்கு" இட்டுச் செல்லும் என்று கருதுகிறார்கள். தேசிய தன்னலத்தை அகற்றுவது எனும் சாக்குப்போக்கில் அவர்கள் உண்மையில் நியாயமான தேசிய உரிமைகளை மறுதலித்து சர்வதேச ஏகபோகங்களின் காஸ்மோபாலிடன் அபிலாஷைகளை நியாயப்படுத்தும் போக்கையே ஆதரிக்கிறார்கள்.

ஆனால், சோஷலிசத்துக்கும் பாட்டாளி வர்க்க சர்வ தேசியத்துக்கும் எதிராக வேறு இதர "சர்வதேச மாடலை" முன்வைக்கச் செய்யும் சகல முயற்சிகளுக்கும் ஆதாரமில்லை.

பூர்ஷுவா தேசியவாதம் சுரண்டல் அமைப்பின்விளைவேயாகும். இது முதலாளித்துவ சமுதாயத்தின் வர்க்கப் பகைமைகளால் முடுக்கப்படுவது. இந்தப் பகைமைகள் ஒழிக்கப்படும்பட்சம் தேசியப் பகைமைகளுங்கூட படிப்படியாக மறைந்தொழியும். மார்க்சிய விரோதிகள் எப்படி உரிமை கொண்டாடிய போதிலும், வரலாறு **கம்யூனிஸ்டுக் கட்சி அறிக்கையின்** இந்த ஆராய்ச்சி உரையை செல்லுபடியாகாததாக்கவில்லை. ஆயினும் அது முழுமையாகவும் முடிவாகவும் செல்லுபடியாகாது ஆக்கியுள்ளது. மார்க்சியத்தை கொச்சைப்படுத்துவோரின் கருத்துப்படிவங்களையே, அவர்கள் சோஷலிஸ்டுப் புரட்சி எல்லா தேசியப் பிரச்சினைகளையும் தானாகவே தீர்த்துவிடும் என்று உரிமை பாராட்டுகிறார்கள். புதிய சமூக அமைப்பின் நிர்மாணம், மக்களினங்களிடையே உறும் சர்வதேசியவாதமும், மெய்யான மனித நேய உறவுகளும் பூர்ஷுவா தேசிய வாதம் அதன் பல்வேறு வெளிப்பாடுகள் அனைத்தையும் நெறிதிறம்பாது எதிர்ப்பது மூலம் வேரோடி நிற்கும் என்பதைப் புலப்படுத்திவிட்டது.

வர்க்க மற்றும் சர்வதேசிய உணர்வின் பெருக்கம் எவ்வளவு முரண்பாடுடையதாக இருந்த போதிலும் சரி,

இந்த வளர்ச்சியே, தேசியவாத ஊசலாட்டத்தைவிட, இன்றைய உலகு தழுவிய தொழிலாளி வர்க்க இயக்கத்தை இனங்காட்டுகிறது. இதை சோஷலிஸ்டு நாடுகள் மத்தியிலான சோதர ஒத்துழைப்புதிடமாக விரிவடைந்துவருவதும், சமுதாயத்தின் எல்லாத் துறைகளிலும் அவை வெற்றி பெற்று வருவதும் நிரூபித்துக் காட்டுகின்றன. உழைக்கும் மக்களின் பொது நலன்கள் மீதான உறுதிப்பாட்டை முதலாளித்துவ நாடுகளின் தொழிலாளி மக்கள் நடத்தி வரும் பிரம்மாண்டமான வர்க்கப் போராட்டங்கள் நிதர்சனப்படுத்திக் காட்டுகின்றன. பாட்டாளி வர்க்க சர்வதேசியத்தின் வல்லமை கம்யூனிஸ்டு, தொழிலாளர் கட்சிகளின் ஒருமைப்பாடு, பெருகிவரும் ஒற்றுமை ஆகியவற்றாலும், எல்லா தேசிய எல்லைகளையும் கடந்த, ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பையும், காலனியாதிக்கத்தையும் இன வெறியையும் எதிர்த்தும் உலக சமாதானத்தையும் பந்தோபஸ்தையும் ஆதரித்தும் நடைபெறும் உழைக்கும் மக்களின் மகத்தான இயக்கங்களாலும் வெளிப்படுத்தப் படுகிறது.

2. பாட்டாளி வர்க்க சர்வதேசியத்தின் வெல்லற்கரிய சக்தியும் இதனை விமர்சிப்போரின் உதவாக்கரைத்தனமும்

ஏகாதிபத்தியவாதிகள் சோஷலிசத்தைப் பொதுவாக நேருக்குநேர் இப்போதெல்லாம் தாக்குவதில்லை. அவர்கள் சோஷலிஸ்டு கூட்டுக் குடும்பத்தை உள்ளுக்குள் பழி தூற்றித் தகர்க்கவும், திருத்தல்வாத தேசியவாத நபர்களை ஊக்குவித்து அதன் ஒற்றுமையைப் பலவீனப் படுத்தவுமே முயல்கிறார்கள். வாய்ப்புக் கிட்டும்போதெல்லாம் உலகக் கம்யூனிஸ்டு இயக்கத்தின் இடர்ப்பாடுகளைப் பயன்படுத்தி பாட்டாளி வர்க்க சர்வதேசிய வாதத்தைத் தாக்குகிறார்கள். எனவே, இரு அமைப்புகளின் சித்தாந்தப் போராட்டம் கடுமையுறுவதும், இதில் முதலாவதாக பாட்டாளி வர்க்க சர்வதேசிய வாதத்துக்கும் பூர்ஷுவா தேசியவாதத்துக்கும்

இடையிலான போராட்டம் கடுமையுறுவது என்பது இந்தக் காலகட்டத்தின் தன்மைக்குறிப்பான இயல்பு ஆகும்.

தேசியவாதத்தைக் கிளறிவிட்டு பூர்ஷுவா பிரசாரம் சோவியத் ஒன்றியம் இதர சோஷலிஸ்டு நாடுகளின் மக்களினங்களிடம் சோஷலிசமும் சர்வதேசிய ஒருமைப் பாடும் அவர்களது தேசிய நலன்களுக்கு எதிரானது என்று வற்புறுத்தவும், வளர்முக நாடுகளில் இருக்கும் மக்களிடை சோஷலிஸ்டு, கம்யூனிஸ்டு நிர்மாணம் ஏற்படுத்தியுள்ள பிரம்மாண்டமான அனுகூலத் தாக்கத்தை மட்டுப்படுத்த வும், உலக சோஷலிஸ்டு நாடுகளுடன் சோதரக் கூட்டணியில் சேராதபடி அவர்களைத் திசை திருப்பவும், மேலை நாடுகளில் பாட்டாளி வர்க்கப் புரட்சிச் சடவேகத்தை சோர்வுபடுத்தவும் சமாதானம்,ஜனநாயகம்,சோஷலிசத்துக் கான அவர்களது போராட்டத்தை முடமாக்கவும் முயல் கிறது. சோவியத் சோஷலிஸ்டு குடியரசுகளின் ஒன்றியத்தின் 50 ஆம் ஆண்டு விழா சமயம், கம்யூனிஸ்டு விரோதப் பிரசாரம் பகிரங்கமாயும் பலமாக நடத்தப்பட்டது. சோவியத் ஒன்றியம் மற்றும் இதர சோஷலிஸ்டு நாடுகளி லான மக்களினங்கள் மத்தியில் நட்புறவும் சோதர ஒத்துழைப்பும் சீர்குலைக்கப்பட வேண்டும் என்ற முறையில் அதன் முயற்சிகள் ஒருமுகப்பட்டிருந்தன. தேசங்கள் தேசிய இனங்களின் உறவுகளிலான வளர்ச்சி குறித்த பொய்யான விளக்கமே உண்மையில் இன்றைய கம்யூனிச விரோதத்தின் குவிமையமாக இருக்கிறது.

தேசியப் பிரச்சினையில் பிரதான கம்யூனிஸ்டு-விரோதத் தின் தாக்குதல் கோணங்கள் பின்வருமாறு:

முதலாவதாக, தேசியப் பிரச்சினை குறித்த சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சியின் வேலைத் திட்டத்தைப் புரட்டுதல் செய்து, லெனினிய தேசியக் கொள்கையின் தத்துவார்த்த ஆதாரங்கள் குதர்க்கம் செய்யப்படுகின்றன. அக்டோபர் புரட்சிக்கு முன்னும் அதற்குப் பிந்திய காலகட்டத்திலும் போல்ஷிவிக்குகள் மேற்கொண்ட நிலைமை குறித்த

உண்மைகள் புரட்டப்பட்டுள்ளன. இதில் பிரதான அழுத்தம் தேசியப் பிரச்சினை புறக்கணிக்கப்பட்டது எனும் கற்பிதக் குற்றச்சாட்டும் தேசங்களின் உரிமைகளின் தீவிர ஆதரவாளர் தேசவிடுதலை இயக்கப் போராளி என்ற முறையில் லெனினது பாத்திரம் குறைத்து மதிப்பிடப் பட்டது, வரலாறு புரட்டப்பட்டது. சோவியத் ஒன்றியம் அமைக்கப்பட்டதன் முக்கியத்துவம் தவருகச் சித்திரிக்கப் பட்டது; தமது நோக்கங்களுக்கு ஏற்ப வரலாற்றைத் திருத்தி எழுதும் பூர்ஷ்வா சித்தாந்தவாதிகள் பல்வேறு தேசியவாத இயக்கங்கள் மீது கவனத்தை ஒருமுகப்படுத்து கிருர்கள். இந்தப் பின்னணியில் சோவியத் ஒன்றியம் அமைக்கப்பட்டதானது மக்களினங்களின் அபிலாஷை களுக்கு எதிரான நடவடிக்கை என்று சித்திரிக்கப்பட் டுள்ளது.

இரண்டாவதாக, சோவியத் ஒன்றியத்தில் தேசியப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட்டுவிட்டது என்பதை இந்த பிற்போக்கு சித்தாந்தவாதிகள் மறுதலிக்கிருர்கள். மேலும் சோவியத் கூட்டாட்சி முறை மீது சந்தேகங்களை எழுப்ப முயல்கிருர்கள், வேண்டுமென்றே தேசிய நலன்களையும் கூட்டாட்சி நலன்களையும் எதிரெதிரானவையாகக் காட்டு கிருர்கள். உண்மையிலேயே சுதந்திரமான மக்களினங்களின் உலகின் முதல் ஒன்றிய அரசு என்ற முறையில் சோவியத் ஒன்றியத்தின் அனுபவத்தை பரிசீலிக்காமல் மாருக அவர்கள் கற்பனை ஊகமான விவாதங்களில் இறங்கு கிருர்கள். எடுத்துக்காட்டாக அவர்கள் போடும் கேள்வி களில் ஒன்று, அமெரிக்காவிலுள்ள அரசுகளுக்கா அல்லது சோவியத் குடியரசுகளுக்கா எவற்றுக்கு அதிக சுதந்திரம்: இவ்வாறு கேட்கும்போது அவர்கள் அமெரிக்காவின் கட்டுக்கோப்பு தேசியப் பின்னணியில் நிர்மாணிக்கப்பட்ட தல்ல என்பதையும் கருப்புநிற மக்களுக்கும் போர்டோ ரீகன் மற்றும் தேசியச் சிறுபான்மையைச் சார்ந்த இதர மக்களினங்களுக்கும் உரிமைகள் தரப்படவில்லை எனும் உண்மையைப் புறக்கணித்து விடுகிருர்கள். இந்தக்

காரணத்தால் இதை தேசியப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் மாடல் என்று கருதுவதற்கு இடமே இல்லை:

மூன்ருவதாக, லெனினது சர்வதேசியக் கோட்பாட்டை முரணின்றி அனுசரிக்கும் சோஷலிசத்தின் கீழிலான புது வடிவிலான தேசிய உறவுகளை கம்யூனிஸ்டு-விரோதிகள், அடிப்படையாகவே நிலைமறுப்புச் செய்கிருர்கள், மேலும் முதலாளித்துவத்தில் இருப்பது போலவே சோஷலிசத்திலும் பகைமை, குறுதேசிய வெறி தேசியவாதம் இவை சம அளவில் உள்ளார்ந்து கிடக்கிறது என்று நிரூபிக்க முயல் கிருர்கள்.

நாலாவதாக, தேசங்கள் சங்கமித்து இணைவது சம்பந்த மான கொள்கையை ருஷ்ய மயமாக்கல் என்று இனங் காட்டுகிருர்கள்; கம்யூனிஸ்டுக் கட்சியின் கொள்கையை ருஷ்யாவின் ஜார் ஆட்சியின் காலனிக் கொள்கைக்கு ஒப்பிட்டுக் காட்டுகிருர்கள்.

ஐந்தாவதாக, தேசியத் தப்பெண்ணங்களை ஒழிப்பதற் கான கம்யூனிஸ்டுக் கட்சியின் முயற்சிகளை இந்த பூர்ஷுவா சித்தாந்த வாதிகள் எல்லா தேசிய அம்சங்களையும் அறவே அகற்றும் கொள்கையாகச் சித்திரிக்கிருர்கள்.

ஆருவதாக, சோவியத் அயல்துறைக் கொள்கையைப் புரட்டுதல் செய்து இதர நாடுகளுடனை சோவியத் ஒன்றியத்தின் உறவுகள் மேலாதிக்கம் மகா வல்லரசு தேசியவெறி அடிப்படையில் இருப்பதாகப் பழிசாட்டு கிருர்கள்.

மார்க்சோ லெனிளே தேசியப் பிரச்சினை குறித்து விசேஷமாக ஆராயவில்லை எனவும், இதை இரண்டாந்தர முக்கியத்துவமுடையதாகவே கருதி வந்தார்கள் என்றும் பூர்ஷுவா சித்தாந்த வாதிகள் வாதிடுகிருர்கள். லெனினும் தேசியப் பிரச்சினையும் எனும் தமது நூலில் அல்ஃபிரட் டி லோ எனும் ஆசிரியர் லெனின் வர்க்கப் போராட்டம் பற்றியும் பாட்டாளி வர்க்கம் ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்ற

வேண்டும் என்பது குறித்தும்தான் லெனின் அக்கறை கொண்டிருந்தார் என்று எழுதியுள்ளார். லெனின் ஒரு முற்றுமுர்வமுடைய காரியவாதி, அவருக்கு தேசிய அம்சம் என்பது ஒரு கருவி எனும் அளவில் மட்டுமே மதிப்புடையது எனவும் சித்திரிப்பதே இதன் நோக்கம்.

1966 செப்டம்பரில் எவியானில் நடந்த சமூகவியலாளர் உலகக் காங்கிரசில் அமெரிக்கப் பேராசிரியர் டட்ரியன் முன்வைத்த இதேபோன்ற ஒரு கருத்துரு பற்றி சோவியத் பிரதிநிதிகள் அறிந்து கொள்ள முடிந்தது. லெனின் மக்களினங்களின் தேசிய உணர்வுகளேயும் தேசங்களின் சுயநிர்ணய உரிமையையும் குறைத்து மதிப்பிட்டதாக இவர் வாதிட்டார். அவரது இந்த அபத்தமான ஆராய்ச்சியுரைக்கு மேலும் மதிப்புத் தரும் பொருட்டு அவர் தேசியப் பிரச்சினே பற்றிய லெனினது கோட்பாடுகளே குதர்க்கம் செய்யத் தயங்கவில்லே.

இதோ ஓர் எடுத்துக் காட்டு. தேசியப் பிரச்சினே சம்பந்தமான மார்க்சிய அணுகுமுறையை விளக்கிய லெனின் எழுதியதாவது: ''தொழிலாளர் பிரச்சினேயுடன் ஒப்பிடும் போதில் தேசியப் பிரச்சினேக்குத் தாழ்வான நிலேயே உள்ளது என்பதில் மார்க்சுக்கு எவ்வித ஐயப்பாடும் இருக்கவில்லே.''* இந்தத் தொடரை அதன் சந்தர்ப்பச் சூழலில் இருந்து தனிப் பிரித்துத் தமது ஆராய்ச்சியுரை ''சுயவிளக்கம்'' தருவதாக டட்ரியன் உரிமை கொண்டாடுகிருர், ஆனல் லெனினது கருத்தின் பொருளும் நோக்கமும் அடுத்த வாக்கியத்தில் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. இதை டட்ரியன் குறிப்பிடாது ஒதுக்கி விட்டார். ''விண்ணிலிருந்து மண்ணேப் போன்று தேசிய இயக்கங்களே அவரது தத்துவம் புறக்கணித்து விடவில்லே.''**

மார்க்சிய-லெனினியம் சம்பந்தப்பட்டவரை தேசியப் பிரச்சினே என்பது தன்னிலேயே பூரணமானதல்ல. தேசிய

* வி. இ. லெனின், ''நூல் திரட்டு'', தொகுதி 20, பக். 436.

** அதே நூல்.

சமூக அம்சங்கள் பரஸ்பரம் தொடர்பாடுடையவை. முதலாளித்துவம் வீழ்த்தப்பட்டு பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் நிறுவப்படும் வரையில் தேசியப் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாது. இந்த சமுதாய அடிப்படையில்தான் சோவியத் நாட்டில் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட்டது. தேசியப் பிரச்சினை பற்றி லெனின் எழுதியுள்ள பல நூல்களும் அக்டோபர் புரட்சிக்கு முன்னரும் பின்னருமான அவரது செயற்பாடுகளும் அவரது சக்தி அனைத்தும் அர்ப்பணிப்பு முழுமையும் ருஷ்யாவின் எல்லா மக்களினங்களின் சமூக தேசிய விமோசனத்தை சாதனையாக்கும் பணியிலேயே ஒருமுகப்படுத்தப்பட்டிருந்தன என்பதைப் புலப்படுத்துகின்றன.

ருஷ்யாவின் மக்களினங்களின் உரிமைப் பிரகடனம், உழைக்கும் மற்றும் சுரண்டப்படும் மக்களின் உரிமைகள் பிரகடனம் போன்ற வரலாற்றுச் சிறப்புடைய ஆவணங்களுக்குப் பின் இருந்த இயக்கும் சக்தி லெனினே ஆவார். இவை மக்களினங்களின் பரஸ்பர உறவுகளில் ஒரு புதிய சகாப்தத்தைக் கட்டியங் கூறியது.

அக்டோபர் புரட்சிக்குப் பிந்திய காலகட்டத்தில் லெனின், சோவியத் ருஷ்யாவில் இருந்த தேசங்கள் தேசிய இனங்கள் அனைத்தின் நலன்களிலும் ஆழ்ந்த அக்கறை தோற்றுவித்தார். அவர் தேசிய உறவுகளில் இன்றியமையாததாக இருக்கும் வெகுஜன உளவியல் குறித்து மிகவும் உச்சபட்சமான நயத்திறமும் ஆழ்ந்த புரிவும் வெளிப்படுத்தினார். அதே சமயம் அவர் தேசியவாதத்துக்கும் குறுதேசிய வெறிக்கும் எதிராக சமரசமற்ற போர் தொடுத்தார்.

கம்யூனிஸ்டுக் கட்சியின் செயற்பாடு லெனினது கோட்பாடுகளின்பாலான அதன் ஆழ்ந்த பற்றுறுதியைக் காட்டுகிறது: அது தேசியப் பிரச்சினைகளை அணுகுவதில் அளவிடற்கரிய கரிசனம் காட்டுகிறது, எல்லா தேசங்களின் நலன்களிலும் அவற்றின் ஒற்றுமையிலும் நட்புறவிலும் இடையறாத அக்கறை காட்டுகிறது, தேசிய உறவுகள்

துறையில் அவசரம், ஆணையிடுதல் மற்றும் பிழைபாடுகளை எதிர்த்து உடனுக்குடனும் உறுதியாகவும் செயல்படுகிறது. இன்றும் கூட சோவியத் ஒன்றியத்தில் லெனினது கோட்பாடுகள் மீறவொண்ணாத நியதிகளாக விளங்கு கின்றன. சோவியத் கம்யூனிஸ்டு கட்சியின் வேலைத்திட்டமும் சோ. க. க. 24 ஆவது 25 ஆவது காங்கிரசுகளின் தீர்மானங் களுமே இதற்கு அத்தாட்சி.

24 ஆவது காங்கிரசுக்கு சமர்ப்பிக்கப்பட்ட மத்தியக் கமிட்டியின் தீர்மானம் சோவியத் ஒன்றியத்தில் தேசங்கள் ஒன்று சேர்ந்து வருவதானது தேசிய இயல்புகளுக்கும் சோஷலிஸ்டு தேசியக் கலாசாரங்களுக்கும் மிகவும் முக்கியமான கவனம் செலுத்தப்படும் நிலைமைகளில் நடை பெற்று வருகிறது என்று கூறுகிறது. நமது ஒன்றியம் முழுவதன் பொது நலன்கள் விஷயத்திலும், அதன் உறுப்புக் குடியரசுகள் நலன்களிலும் இடையறாத கரிசனம் காட்டப் படுவது இந்தப் பிரச்சினை மீதான கட்சியின் கொள்கையின் சாரமாக அமையும்.

"சோவியத் சோஷலிஸ்டு குடியரசுகளின் ஒன்றியத்தைக் கட்சி தொடர்ந்து வலுப்படுத்தும்......"*

சோவியத் கம்யூனிஸ்டு கட்சி தேசங்களின் முழுமையான மலர்ச்சிக்கும் அவை கம்யூனிஸ்டு நிர்மாணத்தின் செல் வழியில் உறுதியாகச் சங்கமிப்பதற்கும் பாடுபட்டு வருகிறது.

சோவியத் ஒன்றியத்தில் தேசங்கள் மலர்ச்சியுற்று வருவதை ஒப்புக்கொள்ளும் அதேபோதில் பூர்ஷுவா சமூகவியலாளர் அவை சங்கமிப்பதன் எதார்த்தத் தன்மையை மறுதலிக்கிறார்கள். இது சோ. க. க. அறவே செயற்கையான கொள்கையே என விளக்கம் தருகிறார்கள். உண்மையில் வேரோட்டம் இல்லாத ஒரு நடப்பை இயக்கி விடுவதற்கான ஒரு திட்டமேஇது என்று குறை கூறுகிறார்கள்.

---

* சோ. க. க. 24 ஆவது காங்கிரஸ், பக். 92.

இதன் வழி அவர்கள் தமது அபிவிருத்தியை நோக்கி தேசங்கள் சங்கமிப்பதை எதிர்க்க முயல்கிறார்கள்.

தேசங்களின் மேலும் உள்ள சங்கமிப்பு என்பது கம்யூனிஸ்டு நிர்மாணத்தின் ஓர் அடிப்படையான விஷய மாகும். தேசங்களின் ஒற்றுமையையும் ஒத்திணைவையும் அரண் செய்வது மூலம், கட்சி கம்யூனிசத்தைத் திறம்படக் கட்டியமைப்பதற்கான மக்களினங்களின் முயற்சிகளை ஒன்றிணைக்கிறது. சோஷலிஸ்டு சுற்றுச் சூழலில் தேசங்கள் ஒன்று சேர்ந்து வரும் புறவய நடப்பு கம்யூனிஸ்டுக் கட்சியின் கொள்கையுடன் இசைவுடையதாகும்.

எனவே, பூர்ஷுவா சித்தாந்த வாதிகள் செய்ய முயல்வது என்னவெனில், தேசங்களின் சங்கமிப்பின் சாரத்தைக் குதர்க்கப்படுத்துவது மூலம் கட்சியின் கொள்கையை இழிவுபடுத்துவதேயாகும். கம்யூனிஸ்டுக் கட்சியின் தேசியக் கொள்கையின் தன்மையைப் புரட்டு வதற்காக அவர்கள் புறவய எதார்த்தத்தில் இயல்புகளைத் தேடி அலைகிறார்கள். இதர விஷயங்களுடன் கூடவே அவர்கள் கம்யூனிஸ்டு நிர்மாணம் தேசங்களிடையான தகவல் தொடர்பு மொழியாக ருஷ்ய மொழியின் பாத்திரம் எனும் பின்னணியில் அவர்கள் தேசிய மொழிகள் பிரச்சினையைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்த முனைகிறார்கள். அவர்களது நோக்கம் தெட்டத் தெளிவானது, காரணம் தமது சுதேசி மொழியுடன் கூடவே ருஷ்ய மொழியினைக் கற்றுக் கொள்ள வேண்டும் எனும் ஆர்வத்தையும் சோவியத் ஒன்றியத்தின் மக்களினங்கள் அனைத்தும் வெளிப்படுத்தி யுள்ளன; இம்மொழி, தேசங்கள் ஒன்று சேருவதையும் கலாசார மதிப்புக்களைப் பரஸ்பரம் பரிமாறிக் கொள் வதையும் பெருமளவு ஊக்குவிக்கிறது.

1970 ஆம் ஆண்டு ஜனக் கணக்கெடுப்பின்போது ருஷ்யரல்லாத 1 கோடி 30 லட்சம் பேர் தமது தாய்மொழி ருஷ்யன் என்று பதிவு செய்து கொண்டனர் எனும் விவரத்தை பூர்ஷுவா சமூகவியலாளர் சிக்கெனப் பிடித்துக்

கொண்டனர். அவர்களுக்கு இது தேசியத் தன்மை இழப்புக்கும் சோஷலிஸ்டு குடியரசுகளின் மக்களினங்கள் ருஷ்ய மயமாக்கப்படுவதற்குமான சாட்சியம் என்று கூறப் பட்டது. இந்த விஷமத்தனமான வியாக்யானத்தின் நோக்கம் சோவியத் ஒன்றியத்தின் மக்களினங்கள் மத்தியில் பூசலையும் பகைமையையும் கிளர்த்தி விடுவது என்பதே.

ஆனால் உண்மையில், இந்த 1 கோடி 30 லட்சம் பேரில் சரி பாதியினர் தமது குடியரசுகளுக்கு வெளியே வாழும் உக்ரேனியர், பிலோ ருஷ்யர்களும், தமது தேசிய அரசின் பரப்புக்கு வெளியே வாழ்கின்றவர்களான சில மல்தாவியர், அர்மீனியர், யூதர் இத்தியாதியருமே யாவர்:

வேறு சொற்களில் கூறிடின் ருஷ்யா அல்லது இதர மக்கள் மத்தியில் வாழும் ருஷ்யரல்லாத மக்கள் ருஷ்ய மொழியை இயல்பாகவே தமது தாய்மொழியாக ஏற்றுக் கொண்டிருந்தனர் என்பதே. இதனால் இந்த நபர்கள் தமது தேசிய அடையாள முத்திரை அல்லது போதத்தை ஒட்டிய சகல சின்னங்களையும் இழந்து விட்டார்கள் என்று அர்த்தமல்ல.

இந்தச் சித்திரத்தை முழுமை செய்ய மக்கள் தொகை யின் தேசிய இயைபு குறித்த புள்ளி விவரங்களையும் மொழி பற்றிய அதன் தோரணையையும் கவனிப்போம். 1970 ஜனக்கணக்குப்படி உக்ரேனியரில் 85.7 சதவிகிதத்தினரும் பிலோ ருஷ்யரில் 80.6 சதவிகிதத்தினரும் முறையே உக்ரேனிய, பிலோருஷ்ய மொழிகளே தம் தாய்மொழி என்பதாகப் பதிவு செய்து கொண்டிருந்தனர். இதனால் உக்ரேனியரோ பிலோருஷ்யரோ (சோவியத் ஒன்றியத்தின் இதர தேசிய இனத்தவர்களோ) ருஷ்ய மொழியைப் பயில் வதோ பயன்படுத்துவதோ எவ்விதத்திலும் தடைசெய்யப் படவில்லை. சோதர மக்களின் மொழியான இது நாட்டைப் புரட்சிகரமாக மாற்றியமைப்பதில் தலைசிறந்த பங்கு வகித் திருக்கிறது.

இந்த நடப்புக்களின் விரிவான முற்போக்கு முக்கியத்துவம் மறுக்க முடியாதது. இருப்பினும் கடந்த காலத்தில் ஜாராட்சி அமைப்பால் மிருகத்தனமாக ஒடுக்கப்பட்டு வந்த மக்களினங்கள் விஷயத்தில் தமது தேசிய மொழியையே தாய்மொழி என்று பதிவு செய்து கொண்டவர் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருகிறது. பஷ்கீர் மக்களை எடுத்துக் கொள்வோம். 1926-ல் இவர்களில் 54 சதவிகிதம் பேர் தமது தேசிய மொழியை தாய்மொழி என்று பதிவு செய்தனர், 1939-ல் இந்த சதவிகிதம் 58 ஆகவும் 1959-ல் இது 62 ஆகவும் 1970-ல் 66.2 சதவிகிதமாகவும் அதிகரித்தது. இயல்பாகவே தேசிய மொழிகளின்பால் இவர்கள் ஈர்க்கப்பட்டிருப்பதற்கு இது தெளிவான அத்தாட்சி. 1939 ஜனத்தொகை கணக்கெடுப்பில் உஸ்பெக் மொழி தமது சுதேசி மொழி என 97.8 சதவிகிதம் உஸ்பெக்குகள் பதிவு செய்து கொண்டனர். இது 1959-ல் 98.4 சதவிகிதமாயும் 1970-ல் 98.6 சதவிகிதமாயும் அதிகரித்தது. இதுவேதான் அசெர்பைஜானியர், அப்காசியர், காரகல்பகர் மற்றும் இதர தேசிய இனங்களைச் சேர்ந்தவர்களின் நிலையுமாகும். இதற்கும் மேலாக, சம்பந்தப்பட்ட தேசிய இனத்தை சாராத மக்கள் கணிசமாக உள்ளனர், இவர்கள் வசிக்கும் குடியரசின் அடிப்படை தேசிய இனத்தின் மொழி இவர்களது தாய்மொழியாகி விட்டது. இத்தகையோரிடை ருஷ்யரும் மற்றையோரும் உள்ளனர். எடுத்துக்காட்டாக உக்ரேனில் உக்ரேன் வமிசாவளியினர் அல்லாத ஆனால் உக்ரேன் மொழியைத் தாய்மொழியாக ஏற்றுக் கொண்ட நபர்கள் தொகை 1959-ல் மொத்தம் 4,90,000 ஆகும், பிலோருஷ்யாவில் இத்தகையோர் 2,76,000 பேரும் உஸ்பெகிஸ்தானில் 74,000 பேரும், லாத்வியாவில் 28,500 பேரும் இருந்தார்கள்.*

---

* காண்க. எ. எ. இசுபோவ், **சோவியத் ஒன்றியத்தின் மக்கள் தொகையின் தேசிய இயைபு 1959 ஜனக் கணக்கின் விளைவுகள்**, மாஸ்கோ, 1964, பக். 36, (ருஷ்ய மொழியில்).

ருஷ்ய மொழியைப் படிக்கவேண்டும் எனும் விருப்பம் பலமாக இருப்பது மெய்யே. இந்த விருப்பம் இன்னும் மேலும் அதிகரிக்கும். இது மொழிகள் விஷயத்தில் எவ்வித மான பலவந்தத்தையும் குறிக்கவில்லை. நேர்மாறாக, லெனின் முன்னறிந்து கூறியபடி, இந்த விருப்பம் சோஷலிஸ்டு அமைப்பின் அளப்பரிய ஜனநாயகப் பண்பு காரணமாக மேலும் வலுவடைந்துள்ளது, சமுதாயத்தின் வளர்ச்சி குறிப்பாயும் பொருளாதார அபிவிருத்தியின் தேவைகளால் மேலும் ஊக்குவிக்கப்படுகிறது. சோவியத் ஒன்றியத்தில் ருஷ்யமொழி முக்கியமானதாக இருப்பதற்குக் காரணம் ருஷ்யரல்லாத மக்கள் தொகையினர் ருஷ்ய மொழியை ஏற்றுக் கொண்டதல்ல. ருஷ்யமொழி முன்னை விட மிகவும் மகத்தான பாத்திரம் வகிக்கிறது. சிறப்பாயும் பல்வேறு மக்களினங்கள் இடையிலான தகவல் தொடர்பு மொழி என்ற முறையில் பிரதானமாயும் பெரும் பங்கு வகிக்கிறது. நாம் கண் முன் காண்பது இருமொழி ஏற்பாடு சர்வப் பொதுவாகி வருவதன் காட்சியைத்தான். இங்கு எந்த தேசிய இனத்தைச் சேர்ந்த நபராக இருப்பினும் அன்னவர் தமது தாய்மொழியிலும், ருஷ்யமொழியிலும் சிறந்த திறமைபெற்றுத் திகழ்கிறார்.

முன்னேற்றத்தைத் தகையும் தேசியவாதம் குறுதேசிய வெறியின் மீதமிச்சங்களை எதிர்த்து கம்யூனிஸ்டுக் கட்சி உறுதியான நடவடிக்கை எடுத்து வருகிறது. மறுபுறம் சோஷலிசத்தின் விரோதிகள் தேசிய உணர்வலைகளைக் கிளறி விடுகின்றனர். இவ்வாறு செய்வதன் மூலம் அவர்கள் தேசிய கௌரவம்பற்றிய மக்களின் பலமான உணர்வையும், தமது பொருளாதார, கலாசார முன்னேற்றம் குறித்த தேசியப் பெருமிதத்தையும் தன்னலத்துக்காகப் பயன் படுத்திக் கொள்ள முயல்கிறார்கள். தேசிய உணர்வுகளைக் கிளர்த்திவிட்டு அவர்கள் மக்கள் மனங்களில் இருந்து சோஷலிஸ்டு சர்வதேசிய போதத்தைக் கல்லியெறிய முயல் கிறார்கள். சோஷலிசம் தேசிய சின்னத்துக்கு எதிரி என்று

சாட்டியுரைத்து காலாவதியான பாணி, வழக்கங்களின் பேரில் போலித்தனமாகச் சித்திரிக்க முனைகிறார்கள்.

எல்லா மக்களும் தேசபக்த உணர்வில் சோஷலிஸ்டு தாயகம் சோவியத் மக்களின் மகத்தான சாதனைகளில் பெருமிதத்துடனும், சர்வதேசிய உணர்வுடனும், தேசிய வாதத்தை தேசியவெறி தேசிய குறுமனப்பான்மை இவற்றைச் சகியாத தன்மையிலும், எல்லா தேசங்கள், தேசிய இனங்கள்பால் மதிப்புடனும் இருக்குமாறு பயிற்று விக்கப்படவேண்டும் என்பதாக சோ. க. க. 25 ஆவது காங்கிரஸ் வலியுறுத்தியது. இது சோவியத் ஒன்றியத்தின் மக்களினங்கள் மேலும் திடமான ஒருமைப்பாட்டைச் சாதிக்கவும், கம்யூனிஸ்டு கண்ணோட்டத்தை உருவகப் படுத்திக் கொள்ளவும் மையமான முக்கியத்துவமுடைய தாகும்.

ஒவ்வொரு சோவியத் குடிமகனிலும் செவ்வையாக அமைந்திருக்கும் தேசியப் பெருமிதம் ஒரு முக்கியமான செல்வம். முதலாவதாக இது சோவியத் நாட்டுடனுன விசுவாசத்துடனும் ஒவ்வொரு மனிதனின் சர்வதேசியக் கடமையின்பாலான பற்றுறுதியுடனும் கலந்து இணைந்து விடுகிறது. ஆனால் ஒருவரது தேசத்தின் மீதான இயல்பான பாசம் மிகையாகப் பூரித்து, அது தேசியக் கட்டமைப் பினுள் தனிநபரை அடைத்து வைக்குமானால், சோவியத் ஒன்றியத்திலுள்ள எல்லா மக்களினங்களாலும் கட்டியமைக்கப் பட்டு வரும் கம்யூனிஸ்டு எதிர்காலத்தின் சாதனை எல்லையை மூடிவைத்து, இதர குடியரசுகளின், மக்களின் முயற்சிகளை புறக்கணிப்புச் செய்யுமானால், பின்னர் இது தேசியத் தற்பெருமையாகச் சீரழிந்து மெய்யான தேசபக்தியின் சின்னங்கள் எதுவுமற்றதாகக் காட்சி தரும்.

சோஷலிசம் சிறிதும் பெரிதுமான சகல மக்களினங் களின் கௌரவத்தையும் மேம்படுத்தியுள்ளது. தேசிய உணர்வுகளுக்கு அது புதிய உள்ளடக்கத்தைத் தந்திருக் கிறது. ஆனால் சோஷலிஸ்டு சுற்றுச் சூழலில் தேசிய அம்சம் மக்களைப் பிரிவினை செய்வது கிடையாது. கம்யூனிஸ்டுகள்

மக்களை அவர்களது தேசிய வமிசாவளியை வைத்து என்றுமே பாகுபடுத்துவது இல்லை. சோவியத் மக்கள் தமது பொதுக் குடும்பம் குறித்துப் பெருமிதம் கொள்கிறார்கள். அக்டோபர் புரட்சியின் சாதனைகள் சோஷலிஸ்டு வாழ்க்கை முறையைப் பிரதிநிதித்துவப் படுத்தும் அனைத்தையும் பற்றிப் பெருமைப் படுகிறார்கள். இந்த சர்வ—சோவியத் உணர்வு நாட்டிலுள்ள எல்லா தேசங்கள், தேசிய இனங்களாலும் பகிர்ந்து கொள்ளப்படுகிறது. லியனித் பிரெஷ்நேவ் வருணித்தது போன்று சோவியத் குடிமகனின் சகல தேசியப் பெருமிதமாக கருதப்படும் இது சோவியத் மக்களின் விரிவான மன்விதானம் சர்வதேச சகோதரத்துவ லட்சியங்களின்பாலான அவர்களது பற்றுறுதி ஆகிய வற்றுக்கு அத்தாட்சியாக விளங்குகிறது.

"ஒரு தேசம் இன்னொரு தேசத்தின் மேல் கொள்ளும் ஆணவம் மிகுந்த மேலாதிக்க உணர்வு, தேசிய இன அசாதாரணத் தன்மை எனும் பைத்தியக்காரத் தனமான கருத்து ஒருபுறமிருக்க, சோவியத் மக்களுக்கு அன்னியமானது, வெறுக்கத்தக்கது" என்று லியனித் பிரெஷ்நேவ் சோவியத் ஒன்றியத்தின் 50 ஆம் ஆண்டுவிழா மீதான தமது அறிக்கையில் கூறினார். சோவியத் மக்கள் சர்வதேசிய வாதிகள். இவ்வாறுதான் அவர்கள் கட்சியாலும் முழுமையான எதார்த்த நிகழ்வுகளாலும் பயிற்றுவிக்கப் பட்டிருக்கிறார்கள். ஆனால் தேசிய இனம் அல்லது மொழி எதுவாயினும் எல்லா சோவியத் மக்களும் மனிதகுல வரலாற்றில் ஒரு புதிய சகாப்தத்தை முரசு கொட்டிக் கொண்டு வந்துள்ள தமது தாயகம் பற்றிப் பெருமிதம் கொள்கின்றனர். கம்யூனிஸ்டுகளின் தலைமையில் ஒரு புதிய, உண்மையிலேயே நீதியான, சுதந்திரமான சமூக அமைப்பை நிறுவி, பல மக்களினங்களின் தகர்க்கவொண்ணாத சோதர ஒன்றியத்தைப் படைத்தளித்த லட்சோப லட்சம் மக்களின் உத்வேகம் தரும் உழைப்புக் குறித்துப் பெருமிதமடைகின்றனர்.

தேசியப் பகைமையை வளர்த்து, மக்களை இழிவுபடுத்தி, அபத்தமான தப்பெண்ணங்கள், மூடநம்பிக்கைகளுக்கு இலக்காக்கும் எதையும் எதிர்த்து சோஷலிசம் செயல்படுகிறது. மற்றவற்றுடன் கூடவே, அது பிரபுத்துவ ஒழுக்க முறை குடும்பக் கொடுங்கோன்மை இத்தியாதிகளை வேருடன் களைகிறது. சோஷலிஸ்டு வழக்கங்கள் பழைய வழக்கங்களை மாற்றீடு செய்கின்றன. சோ. க. க.-யின் தேசியக் கொள்கை பற்றிய ஒரு கட்டுரையில் கம்யூனிஸ்டு எதிர்ப்பாளர் அல்ஃபிரெட் டி.லோ ஒவ்வொரு தேசத்தின் கலாசார செல்வங்களும் ''சோஷலிசம்'', ''சர்வதேசியம்.''* எனும் கடலால் கபளிகரம் செய்யப்படுவதாயும் புகார் செய்கிறார். ஆனால் அவர் மெய்யான தேசிய மதிப்புக்களைக் குறிப்பிடவில்லை. மாறாக பழைய சுரண்டும் முறையையே சுற்பிதம் செய்து கூறுகிறார். மெய்யான மதிப்புக்களின் பெருக்கத்தை கம்யூனிஸ்டுக் கட்சி எல்லா வழிகளிலும் ஊக்குவிக்கிறது.

இது உலக கலாசாரத்தின் எதிர்காலத்தை நம்முன் கொண்டு வருகிறது, சர்வதேசியக் கலாசாரத்துக்கான அடித்தளங்கள் ஏற்கெனவே போடப்பட்டுவிட்டன. இது தேசியமல்லாத கலாசாரமன்று. இது பல்வேறு மக்களினங்களின் அருமையான கலாசார சாதனைகளை உருவகப்படுத்தி அந்த அருமையான சாதனைகளைத் துல்லியமாயும் தொகுப்பாய்வு செய்கிறது.

சர்வதேசக் கலாசாரம் என்பது அவசியமாயும் இணைப்பாக்கம் செய்யப்பட்ட கலாசாரம். எனவே ஒரு திட்டமான கலாசாரமாகவே இருக்கும் என்று பூர்ஷுவா சித்தாந்த வாதிகள் சாதிக்கிறார்கள். கம்யூனிசம் மக்களினங்களின் அகவள வாழ்க்கையை குன்றச் செய்கிறது என்று வாதிடுகிறார்கள், ஆனால் அவர்கள் கூற்றுக்கு ஆதாரம் இல்லை.

சர்வதேச பூர்ஷுவா வர்க்கம் வீழ்த்தப்படுவதால் ''எல்லா வகைப்பட்ட தேசிய பாகப்பிரிவுகளும் வீழ்ச்சியுறும் போக்கு மிகப்பெருமளவுக்கு வேகப்படும். இது அகவள

*ருஷ்யன் ரெவ்யூ, ஜனவரி 1963, பக். 17.

வாழ்க்கையின் செல்வம் பல்வகைத் தன்மை சித்தாந்தப் போக்குகள், போக்கியல்புகள் சாயல்கள், என்ற பொருளில் மனிதவர்க்கம் பல லட்சம் மடங்கு பாகுபடுத்தப்படுவது குறையாது, மாருக அதிகரிக்கவே செய்யும்''* என்று லெனின் கூறியுள்ளார். எதிர்கால சர்வதேசக் கலாசாரம் பல்வித மாய் கம்யூனிஸ்டு சமுதாய உறுப்பினர்களின் முனைப்பான வாழ்க்கையைப் பிரதிபலிக்கும். பல்வேறு தேசியக் கலாசாரங்களின் சாதனைகள் அனைத்து மக்களினங்களின் சொத்தாகிவிடும்.

தேசியத் தனி இயல்புகள் குறிப்பாயும் கலாசாரத் துறையிலானவை ஒழிக்கப்படுதல் என்பதை இயக்கவியல் முறையில் புரிந்துகொள்ள வேண்டும். கலாசாரங்களின் எதிர்கால தொகுப்பாய்வு என்பது மிகவும் பயனுடைய நடப்பாகும். ஆயினும் தேசங்களின் ஒன்றிணைவு எனும் கட்சியின் கோஷம் நிகழ்காலத்தைக் குறித்ததல்ல என்பதை நாம் நினைவில்கொள்ள வேண்டும். உலகம் முழுதும் கம்யூனிசம் வெற்றிவாகை சூடுவதை ஒட்டி தேசங்களின் ஒன்றிணைவு இயல்பாகவே நடந்தேறும் என்பதையும் இதுவே இறுதி லட்சியம் என்பதையும் மார்க்சிய வாதிகள் மறந்து விடமட்டார்கள் என்பது உண்மை, ஆனல் தேசியப் பிரச்சினைகள் குறித்த அவர்களது அணுகுமுறை விஞ்ஞான ரீதியில் இருப்பதால் அவர்கள் இந்த நடப்பைப் பலவந்த மாக இடித்துத் தூண்ட என்றுமே கருதமாட்டார்கள்.

சோஷலிசம் தேசியத் தனி இயல்புகளை அகற்றுவது கிடையாது, அவற்றை நிரந்தரமாக்குவதும் இல்லை. தேசியத் தனி இயல்புகள் ஒரு மக்களை இன்னெரு மக்கள் எதிர்ப்ப தற்கோ பகைமையைப் பரப்புவதற்கோ இனிப் பயன்படுத்த முடியாத ஒரு நிலைமையை உண்டாக்குகிறது.

தேசியவாதத்தின் மீதமிச்சங்களை எதிர்த்த கம்யூனிஸ்டுக் கட்சியின் நடவடிக்கைகளைச் சிக்கெனப் பிடித்துக் கொண்டு

---

* வி. இ. லெனின், ''நூல் திரட்டு'', தொகுதி 21, பக். 274.

பூர்ஷுவா சித்தாந்தவாதிகள், சோஷலிசமும் கம்யூனிசமும் தேசியத் தனி இயல்புகளை பலவந்தமாக அழித்து நீக்கிவிடும் எனும் முடிவுக்கு வருகிறார்கள். பழைய தேசிய இயல்புகளால் விரட்டியடிக்கப்படுகின்றன என்று அவர்கள் சாதிக்கிறார்கள். தேசிய இயல்புகளையும் பழமையையும் ஒன்றாகக் காட்டுகிறார்கள். ஒவ்வொரு மக்களின் கலாசாரத்திலும் பேணி வளர்த்து அபிவிருத்தி செய்ய வேண்டிய மதிப்பு மிகுந்த அம்சங்கள் இடம் பெற்றுள்ளன என்பது மெய்யே. தேசியம் எனும் காரணத்தால் மார்க்சியவாதிகள் பழமையைப் பிடித்துக் கொண்டு நிற்க மாட்டார்கள்; நிகழ் காலத்தில் எது எழுச்சியுற்று வருகிறது, எதிர்காலத்தில் எழுச்சியுறப் போவது யாது என்பது குறித்த தெளிவான கண்ணோட்டம் அவர்கள் வசம் இருக்கிறது.

சோஷலிசத்தை தேசிய மரபுகளுக்கு எதிராக வைக்கும் சோவியத் விரோத முயற்சிகளை நாம் காண்கிறோம். எடுத்துக் காட்டாக அமெரிக்கப் பேராசிரியரான ராபர்ட் எஸ். சலிவண்ட் என்பவர் நவீன நகரம் என்பது சோவியத் நாட்டு மக்களின் தேசியப் பண்புக்கு இசைந்துவராத ஒன்று என்றும் இதற்குக் காரணம் ஏதோ ஒரு மாயையான சக்தி அவர்களை பழைய பாணி கிராமத்துடன் பிணைத்து வைத்திருப்பதாயும் நிரூபிக்க முயல்கிறார்.* ஆயினும் சோஷலிசம் சோவியத் ஒன்றியத்திலுள்ள நகரங்களுக்கும் கிராமங்களுக்கும் புதிய வாழ்வை கொண்டு வந்து விட்டது, பழங்காலத்து தந்தைவழி சமுதாய முறை அறியாமை போன்று தேசியவாதிகளால் லட்சியமாக்கிக் காட்டப்படும் அனைத்துக்கும் முடிவுகட்டி மக்களின் கலாசார அமைப்பை முழுமையாக மாற்றி விட்டது என்பதை எவராவது மறுக்க முடியுமா? சோஷலிசம் நகரவாசிகள் மற்றும் நாட்டுப் புறத்தோரின் நலன்களை நாட்டிலுள்ள எல்லா தோங்களின்

* காண்க. **கம்யூனிசத்தின் பிரச்சினைகள்**, வாஷிங்டன், செப்டம்பர்-அக்டோபர் 1967, தொகுதி 16, பக். 47—48.

நலன்களைக் கலவை செய்தோ ஒன்றிணைத்தோ அவர்களை சமூக முன்னேற்றப் பாதையில் இறக்கிவிடுகிறது.

சோவியத் மக்களுக்கு "தேசியம்'' என்பது பரந்த கருத்துரு. தேசியப் பழம் நூல்களை எடுத்துக் கொள்ளுங்கள். **இகோருக்கு விருந்திட்டவர், டேவிட் சாசுன்ஸ்கி** அல்லது **புலித்தோல் போர்த்த வீரன்** போன்ற தேசிய நூல்கள் அனைத்து சோவியத் மக்களின் பிதுரார்ஜித சொத்தாகி விட்டன, இவற்றை சோவியத் மக்கள் நெஞ்சார நேசிக்கிறார்கள். சோவியத் ஒன்றியத்தின் மக்களுக்கு இவை சிறப்பான கருத்துக்களைத் தருகின்றன. **புலித்தோல் போர்த்த வீரன்** மக்களினங்களிடையான நட்புறவை போற்றிப் புகழ்கிறது. **டேவிட் சாசுன்ஸ்கி** ஊக்கத்தையும் சமாதானத் பாராட்டுகிறது **இகோருக்கு விருந்திட்டவர்** தேசபக்தியையும் தீரத்தையும் மெச்சுகிறது. இந்தப் பண்புகளை சோஷலிசம் பயிற்றி வளர்க்கிறது, பிற்போக்கு தேசியப் பழக்கங்களை எதிர்க்கிறது.

சோவியத் ஒன்றியத்திலான தேசிய உறவுகளைத் தவறுகச் சித்திரிப்பதற்கும் அப்பால், கம்யூனிஸ்டு விரோத சித்தாந்த வாதிகள் சோஷலிஸ்டு கூட்டுக் குடும்பத்திலுள்ள நாடுகளின் இடையிலான உறவுகளைப் பற்றிய ஒரு பொய்யான காட்சியைத் தீட்டுகிறார்கள். குறிப்பாக அவற்றுக்கு இடையே ஆழமான பகைமை இருப்பதாகச் சாட்டுகிறார்கள். உயர் வளர்ச்சியடைந்த தொழில்வள அரசுகள் மற்றும் பொருளாதார முறையில் வளர்ச்சி குன்றிய அரசுகளும் எதிரெதிரான நலன்களைக் கொண்டிருப்பதால் இந்த விளைவு ஏற்பட்டதாகக் கூறுகிறார்கள். ''செல்வந்த'' நாடுகள் ''ஏழை'' நாடுகள் தொழில்வளம் பெறுவதை அனுமதிக்கவில்லை என்று நிரூபிக்க முயல்கிறார்கள். ஆனால் இது சம்பந்தமான புள்ளி விவரங்களைப் பார்த்தால் இத்தகைய கருத்துப்படிவத்துக்கு இடமே இல்லை என்பது தெரியவரும். 1950—1974 ஆம் ஆண்டுகளில் ஒட்டுமொத்த தொழில் துறை உற்பத்தி பல்கேரியாவில் 16 மடங்கும், ருமேனியாவில் 19 மடங்கும்,

மங்கோலியாவிலும் போலந்திலும் 10 மடங்கும், சோவியத் ஒன்றியத்தில் 9.2 மடங்கும், ஹங்கேரியில் 6.8 மடங்கும் செக்கோஸ்லோவாகியாவில் 6.5 மடங்கும் ஜெர்மன் ஜனநாயகக் குடியரசில் 6. 9 மடங்கும் அதிகரித்தது. இந்தப் பரஸ்பர பொருளாதார உதவிக் கவுன்சில் நாடுகளில் குறைந்த வளர்ச்சியடைந்தவற்றில் வளர்ச்சி விகிதம் அதிகமாக இருப்பதைப் புள்ளிகள் காட்டுகின்றன. பொருளாதார வளர்ச்சித் தரங்களைப் படிப் படியாக சமனப்படுத்தும் கொள்கை சோவியத் ஒன்றியம் இதர சோஷலிஸ்டு நாடுகளின் பொதுவான முயற்சிகளால் முரணின்றி அமல் செய்யப்படுகின்றன.

''மைய விலகு போக்குகள்'' நிச்சயம் சாதகமடையும் எனவும் சோஷலிஸ்டு நாடுகள் கண்டிப்பாயும் ''தேசியக் கம்யூனிசத்துக்கு'' கடந்து செல்லும் எனவும் பூர்ஷுவா சித்தாந்தவாதிகள் சாதிக்கிறார்கள். மார்க்சிய லெனினிய சித்தாந்தத்தின் ''சர்வப் பொதுவான தன்மை'' தேசியத் தனி இயல்புகளுக்கு ஒவ்வாதது எனவும் இது இந்த நாடுகள் தன்னியல்பாகவும் விலக்கிட முடியா வகையிலும் ''சர்வப் பொதுத் தன்மையில்'' இருந்து பிரிந்து தேசிய வாத நிலைகளை மேற்கொள்ளும்படி செய்யும் எனவும் அவர்கள் வாதிடுகிறார்கள்.

மார்க்சிய-லெனினியம் ஒரு சர்வதேசிய போதனை என்பதையும், அது சோஷலிசமும் கம்யூனிசமும் வெற்றி பெறுவதற்குரிய போராட்டத்தில் அனுஷ்டிக்க வேண்டிய பொது விதிகளை வகுத்து முன் வைக்கிறது என்பதையும் மறுக்க முடியாது. ஆனால் மார்க்சிய-லெனினியம் எனும் படைப்பாற்றல் போதனையின் மெய்யான சாரம் தேசிய அம்சங்கள் குறித்த ஒரு ஸ்தூலமான அணுகுமுறையையும் நெளிவு சுளிவையும் கோருகிறது. இவை இல்லாவிடில் விஞ்ஞான அடிப்படையிலான கொள்கை நிலவுதல் இயலாது. மார்க்சிய-லெனினியத்தால் வழி நடத்தப்படும் ஒவ்வொரு கட்சியும் தனது அனுபவச் செயற்பாட்டில் பொதுவும் பிரத்தியேகமுமான அம்சங்களை

எப்படிச் சரியாக இணைப்பது என்பதை முடிவு செய்கின்றன. இதையே "தேசிய கம்யூனிசத்தின்" ஆதரவாளர்கள் ஒத்துக் கொள்ள மறுக்கிறார்கள். "தேசியக் கம்யூனிசத்தின்" சாரம் உண்மையில் அது தேசியத் தனித்தன்மைகளை மதிக்கிறது என்பதல்ல. இவற்றைக் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டுவது விஞ்ஞானக் கம்யூனிசத்தின் கட்டாயமான நிபந்தனைதான். மாறாக இது சோஷலிஸ்டு நிர்மாணத்தின் பொதுவிதிகளையும், தொழிலாளி வர்க்கத்தின் சர்வதேசிய நலன்களையும் புறக்கணிக்கிறது, பொது நலனை தேசியத் தற்பெருமைக்கு கீழடக்க முயல்கிறது என்பதே.

கம்யூனிஸ்டு-விரோதப் பிரசாரம் சோவியத் மேலாதிக்கம் பற்றியும் சோஷலிஸ்டு நாடுகளில் அரசுரிமை மீறல்கள் குறித்தும் கட்டுக் கதைகளைத் தட்டி விடுகிறது. ஆனால் இது தேசியவாத உணர்வுகளை மூட்டிவிடும் உத்தேசத்துடனான அவதூறுப் பிரசாரமே

ஏகாதிபத்திய சித்தாந்தவாதிகள் முதன் முதலாக சோவியத் ஒன்றியம் இதர சோஷலிஸ்டு நாடுகளின் மக்களினங்களின் நட்புறவைத் தாக்குவதிலேயே குறியாக இருக்கிறார்கள். சோவியத் ஒன்றியத்தில் நடைபெற்ற சோஷலிஸ்டு நிர்மாணத்தின் வரலாற்று அனுபவம் உலகக் கம்யூனிஸ்டு இயக்கத்தின் வசம் கிட்டியுள்ளது என்பதையும் சோவியத் பொருளாதார ராணுவ வல்லமை உலக சோஷ லிஸ்டு அமைப்பின் புரட்சிகர ஆதாயங்களுக்கு ஒரு நம்பக மான கேடயம் என்பதும் அவர்களுக்குத் தெரியும். சோவியத் ஒன்றியம் பற்றிய நேர்தாக்கு பிரசாரம் பலன் தரவில்லை என்பதால் அவர்கள் மேலும் சுற்றி வளைத்த தந்திரங்களைக் கையாளத் தொடங்கியுள்ளனர். வெவ்வேறு நாடுகளில் புதிய சமுதாயம் கட்டியெழுப்பப்படுவதை அவர்கள் வேறு படுத்திக் காட்டி "தனியான சோஷலிஸ்டு அபிவிருத்தியை" ஆதரிப்பவர்கள் மீது புகழ்மாலை சூட்ட விரும்புகிறார்கள். சோவியத் ஒன்றியத்துடனான ஒத்துழைப்பை நிராகரிப்பவர் களுக்கும் கம்யூனிஸ்டுகள் இல்லாமல் சோஷலிசத்தைக்

கட்டிட உடன்படுவோருக்கும் ''உதவி'' தருவதாக வாக்களிக்கிறார்கள்.

சோஷலிஸ்டு நாடுகளை ''விடுதலை செய்வதற்கு'' அதாவது சோஷலிஸ்டு அமைப்பை பலப்பிரயோகம் மூலம் வீழ்த்துவதற்குப் பயன்படுத்தப்பட்ட பல்வேறு கோட்பாட்டு முறைகள் தோல்வியுற்றுவிட்டன என்பதை கம்யூனிஸ்டு-விரோதிகள் பொதுப்பட ஒத்துக் கொள்கின்றனர். இப்போது அவர்கள் சோஷலிஸ்டு நாடுகள் படிப்படியாக ''தேசிய கம்யூனிசத்துக்குப்'' பரிணமித்து வந்து சர்வதேசிய கடப்பாடுகளைக் கைவிட்டு விடும்படி செய்ய ஒரு ''பரிணும'' அல்லது ''அரிப்பு'' தத்துவத்தை முன்வைக்கிறார்கள். **தேசிய சர்வதேசிய பாணி கம்யூனிசம்** எனும் நூலின் ஆசிரியரான பேராசிரியர் எச். கார்டன் ஸ்கில்லிங் எழுதுவதாவது: சோஷலிஸ்டு நாடுகள் குறித்த மேலை நாடுகளின் தோரணை ''நுண்ணயமாயும் கட்டுக்குள்ளடங்கியதாகவும் இருத்தல் வேண்டும், ஆரவாரமான பிரசாரத்தையும் தலையீட்டு அச்சுறுத்தலையும் தவிர்த்ததாக இருக்க வேண்டும், கம்யூனிஸ்டு கூட்டணிக்கு உள்ளேயே தேசியக் கம்யூனிசம் சமாதான முறையில் பரிணமிப்பதை ஊக்குவிக்க வேண்டும்.''* இதே போன்ற ''பரிணும'' தத்துவத்தின் இன்னொரு ஆதரவாளரான அமெரிக்க சோவியத் இயலாளர் பிரெஷ்ஷின்ஸ்கி, சோஷலிஸ்டு அமைப்பின் பொருளாதாரத்தில் பெரும் குணமாற்றத்தை எதிர்பார்ப்பது வீண் எனவும் கவிழ்ப்பு நடவடிக்கைக்கு வேறு ஒரு முறை பற்றிய யோசனை தரவேண்டும் எனவும் கருதுகிறார். முதலில் சித்தாந்தத்திலும் கொள்கையிலும் மாறுதல் ஏற்பட வேண்டும், இதன்வழி சமூக பொருளாதார அமைப்பிலான மாறுதல் பின்தொடரும் என்று அவர் கூறுகிறார். அதற்கொத்த வகையில் கம்யூனிஸ்டு-விரோதிகள் குறிப்பிட்ட சோஷலிஸ்டு நாடுகளுக்கு ''அரசியல் பன்மை வாதம்'' எனும் கருத்தை உக்குவிக்க வேண்டும், சர்வதேசிய

* எச். கார்டன் ஸ்கில்லிங், **தேசிய சர்வதேசிய பாணி கம்யூனிசம்**, டோரண்டோ, *1964*, பக். *161*.

சோஷலிசத்தால் ''பன்மை மத்தியத்துவத்தை'' ஆதரிக்க வேண்டும் எனவும் பரிந்துரைக்கிறார்.

''சோஷலிசத்தைப் பாதுகாக்க வேண்டும் எனவும் வெறிபிடித்த தீமை சார்ந்த தேசிய வாதத்தை எதிர்த்துப் போராடும் கட்டாயம் ஏற்பட்டது''* என்று லெனின் கூறியது போன்ற தருணங்கள் தொழிலாளி வர்க்கத்தின் வரலாற்றில் பலமுறை ஏற்பட்டதுண்டு. இப்போது குட்டி பூர்ஷுவா உணர்ச்சிகளின் சடவேக வெள்ளம் தேசிய வாதத்தை எதிர்த்த போராட்டத்தை சிக்கலாக்கும் நிலைமையை உருவாக்கியுள்ளது. எல்லா நாடுகளிலுள்ள புரட்சியாளர்கள் மார்க்சிய-லெனினிய சர்வதேசியக் கோட்பாட்டு நிலையை, இரட்டை விழிப்புணர்வுடன் பற்றி நின்று, சர்வதேசத் தொழிலாளி வர்க்கத்தின் ஒற்றுமை சித்தாந்தப் பக்குவ நிலை இவை கொண்டு குறு தேசிய வெறியின் தாக்குதலை எதிர்த்துப் போராட வேண்டும்.

சோஷலிஸ்டு கூட்டுக் குடும்பத்தினைப் பிளவுறுத்த முயலும் ஏகாதிபத்தியத் திட்டங்களை எதிர்த்து சோதரக் கட்சிகள் ஒற்றுமை, புரட்சிகர விழிப்புணர்வு, உலகின் முதல் சோஷலிஸ்டு நாட்டுடன் விசுவாசமான நட்புறவு இவற்றைக் கொண்டு போராட வேண்டும். ஹங்கேரி சோஷலிஸ்டு தொழிலாளர் கட்சியின் அனுபவம் சர்வதேசிய, தேசிய குறிக்கோள்களை ஒரே சமயத்தில் நிறைவேற்ற வேண்டுமாயின் நாம் சோவியத் ஒன்றியத்தோடும், இதர சோஷலிஸ்டு நாடுகளோடும், சர்வதேசத் தொழிலாளி வர்க்கத்தோடும் ஒன்று சேர்ந்து நின்று முற்போக்குப் பாதையைப் பின்பற்ற வேண்டும் என்பதை புலப்படுத்துகிறது''** என்று இக்கட்சியின் முதற் செயலர் ஜானோஸ் காதர் கூறினார்.

---

* வி. இ. லெனின், ''நூல் திரட்டு'', தொகுதி 24, பக். 298.

** **மகத்தான அக்டோபர் மற்றும் உலகப் புரட்சி இயக்கம்**, மாஸ்கோ, 1967, பக். 172-173 (ரஷ்ய மொழியில்).

மார்க்சிய லெனினிய வாதிகள் தேசிய மதிப்புகள் குறித்து ஊகமாய் உத்தேசிக்க என்றுமே நினைத்துப் பார்க்க மாட்டார்கள்.

அரசுரிமை பற்றிய பிரச்சினை ஒரு தெளிவான உதாரணம். கம்யூனிஸ்டு-விரோத சித்தாந்தவாதிகள் இதை வைத்து ஜாலவித்தை செய்கிறார்கள். இரு சமுதாய அமைப்புகளிடையான கடுமையான போராட்டம் நேட்டோவின் கவிழ்ப்புச் சதிகள் எனும் பின்னணியில் சோஷலிஸ்டு கூட்டுக் குடும்பத்தைச் சேர்ந்த நாடுகளின் சுதந்திரத்துக்கும் முன்னேற்றத்துக்கும் நம்பகமான உத்தரவாதமாக விளங்கும் பாட்டாளி வர்க்க ஒருமைப்பாடு அரசுரிமையுடன் மோதுவதாக அவர்கள் எடுத்துக்காட்ட முயல்கிறார்கள். ஆனால் அரசுரிமையினை மீறுவதாக கம்யூனிஸ்டுகள் மீது குற்றம் சாட்டுக் கூக்குரல் எழுப்புவோர் யார்? இந்தோசீனாவில் அமெரிக்க ஆக்கிரமிப்பை நியாயப்படுத்தியவர்கள் தொடந்து இன வெறியையும் காலனியாதிக்கத்தையும் ஆதரித்து வருவோர், எப்போதும் அரசுரிமையையும் பொதுவாக தேசிய மதிப்புக்களையும் இழிவுபடுத்தி வந்தவர்கள் தான். எடுத்துக்காட்டாக இதே **தேசங்களின் வல்லமை** எனும் நூலில் ஜான் ஜி. ஸ்டோயிசிங்கர் கூறுவதைப் பாருங்கள். ''சர்வதேச உறவுகளில் நிலவும் அராஜகமான நிலைமைகளுக்கு வேறு எதையும்விடப் பொறுப்பாளியான தனி ஒரு காரணி அரசுரிமையே.''*

மார்க்சிய-லெனினிய வாதிகள் இதற்கு நேர் எதிரான அபிப்பிராயம் கொண்டிருக்கிறார்கள், அவர்கள் எல்லா நாடுகளின் அரசுரிமைக்கும் உச்சபட்ச மதிப்பளிக்க வேண்டும் என்று கருதுகிறார்கள். சோவியத் ஒன்றியம் சோஷலிஸ்டு நாடுகளின் சுயாதீனத்தை வலுப்படுத்தப் பெரும்பணி புரிந்துள்ளது நன்கறிந்ததே. 1941-1945 மாபெரும் தேசபக்தப் போரில் சோவியத் பெற்ற வெற்றியின் விளைவாகவே

---

* ஜான் ஜி. ஸ்டோயிசிங்கர், **தேசங்களின் வல்லமை, நமது காலத்தில் உலக அரசியல்**, நியூ யார்க், 1961, பக. 10.

இவற்றில் பல தமது அரசுரிமையைப் பெற்றன. சோஷலிசமும் அரசுரிமையும் பிரிக்கவொண்ணுதவை. சோஷலிசம் மட்டுமே மக்களினங்களின் அரசுரிமையை சாத்தியமான அளவு முழுமையாக உறுதி செய்கிறது. ''வரம்புக்குட்பட்ட அரசுரிமை'' எனும் பொய்க்கூற்று கம்யூனிஸ்டு-விரோத சித்தாந்த வாதிகளால் புனைவு செய்யப் பட்டதாகும். இயல்பாகவே இதனை மார்க்சிய-லெனினிய வாதிகள் நிராகரிக்கிறுர்கள்.

1969-ல் நடைபெற்ற கம்யூனிஸ்டு,தொழிலாளர் கட்சி களின் சர்வதேச மாநாட்டில் சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சியின் பொதுச் செயலர் லியனித் பிரெஷ்நேவும் சோதர சோஷலிஸ்டு நாடுகளின் பிரதிநிதிக் குழுக்களின் தலைவர் களும் இதை வலியுறுத்தியதோடு தேசியப் பிரச்சினைகள் குறித்த வர்க்க-சர்வதேசிய அணுகுமுறைக்கான லெனினிய அடிப்படை தத்துவக்கூறின் செல்தகைமையையும் வலியுறுத் திஞர்கள்.

மார்க்சிய-லெனினிய போதனைக் கோட்பாடான பாட்டாளி வர்க்க சர்வதேசியத்தைத் தாக்கும் பூர்ஷுவா சித்தாந்த வாதிகள், மக்களின் பெருகிவரும் தேசிய உணர்வை புரட்சிகர சக்திகளோடான அவர்களது ஒருமைப் பாட்டுக்கு எதிராக வைக்கின்றனர். மிச்சிகன் பல்கலைக் கழகப் பேராசிரியர் இ. பௌல்டிஸ் இருபதாம் நூற்ருண்டின் அறிபொருள் எனும் அவரது நூலில் அற்ப சொற்பமான சான்றுகூட இல்லாமலே—சர்வதேசப் பாட்டாளி வர்க்கம் எனும் கருத்துரு வெறும் கற்பனையாகி விட்டது எனவும் வர்க்கத் தன்மையற்றதான தேசிய உணர்வே இன்றுள்ள சமுதாயத்தில் ஆக வலிமை வாய்ந்த இயக்கு சக்தியாகத் திகழ்கிறது எனவும் அடித்துரைக்கிறுர்.* அவர் சர்வ தேசியத்தின்பாலான தொழிலாளி வர்க்கத்தின் விசுவாசத் தையும் உழைக்கும் மக்களின் தேசிய நலன்களையும், அவர்கள்

* கென்னெத். இ. பௌல்டிங், இருபதாம் நூற்ருண்டின் அறிபொருள். மகத்தான மாறுதல் கட்டம், நியூ யார்க், 1965, பக். 170.

தமது கறாரான வர்க்க அணுகுமுறையுடன் மெய்யான தேச பக்தியையும் சேர்த்து இணைத்து வைத்திருப்பதையும் எல்லாம் அவர் முழுமையாயும் புறக்கணிப்புச் செய்திருக்கிறார், மேலும் தேசியம் என்பதற்கு ஏகாதிபத்தியவாதிகள் தரும் அர்த்தம் மக்கள் மனங்களில் இன்னும் நிலவிவரும் காலாவதியான வழக்கங்கள், மூட நம்பிக்கைகளே தவிர மக்கள் திரளினரின் முற்போக்கு அபிலாஷைகள் அல்ல. பிரபல பிரட்டிஷ் பூர்ஷுவா வரலாற்றாசிரியரான அர்னால்ட் டாயின்பி **ருஷ்யப் புரட்சியின் தாக்கம் 1917—1967** எனும் தமது நூலில் ருஷ்யா மற்றும் மேலை நாடுகளின் பாட்டாளி வர்க்கம் ஆசிய ஆப்பிரிக்க நாடுகளின் ஒடுக்கப்பட்ட மக்கள் திரளினருடன் இயல்பான கூட்டணி அமைத்துக் கொள்ளும் எனும் லெனினது தத்துவத்தை மறுத்துரைக்க முயல்கிறார் அவர் தமது வாதத்தை இந்த மாகண்டங்களிலுள்ள மக்களினங்களின் வேறுபட்ட சமய மரபுகளைக் கொண்டு வகுத்துள்ளார்.*

மனிதகுல வரலாற்றில் சமயத்தின் பரிணாமத்துக்குத் தலையாய முக்கியத்துவம் தரும் டாயின்பி மேலை நாகரிகத்தில் இருந்து தோன்றியதான "கிறித்தவ சகோதரத்துவம்" எனும் கற்பனை கருத்துக்குச் சீடர்களைத் தேடியலைகிறார். ஆசிய ஆப்பிரிக்க லத்தீன் அமெரிக்க நாடுகளின் மக்கள் மேலைநாடுகளின் "கிறித்தவ" நாகரிகத்தை நோய் என வெறுக்கிறார்கள் என்பது முதலாளித்துவத்தின் பரிவாளர் மண்டைகளில் ஏறாது. இந்த நாகரிகம் பல நூற்றாண்டு களாக காலனியாதிக்கவாதிகள், நிறவெறியாளர் மற்றும் படையெடுப்பாளர்களுக்கு இடமளித்து வந்துள்ளது.

புதிய சமுதாய அமைப்பினைக் கட்டி எல்லா மக்களினங்களையும் ஒன்றாக வார்த்துருவாக்கியுள்ள சோவியத் ஒன்றியம் தேசிய சமயப் பூசல்களுக்கு முடிவு கட்டி ஏகாதி

---

* **ருஷ்யப் புரட்சியின் தாக்கம் 1917-1967. ருஷ்யாவுக்கு வெளியேயுள்ள உலகில் போல்ஷிவிசத்தின் செல்வாக்கு, லண்டன், *1967*, பக். 6.**

பத்தியத்தை எதிர்த்து தேசிய சுதந்திரத்துக்குப் பாடுபட்டு வரும் எல்லாப் போராளிகளுக்கும் ஓர் உத்வேகமூட்டும் உதாரணமாகத் திகழ்கிறது.ஒடுக்கப்பட்ட பல மக்களினங்கள் தேசியம், சமயம் எனும் பதாகையின் கீழ் ஏகபோகத்தை எதிர்த்துப் போராடிய போதிலும், சமுக, பொருளாதார நிகழ்வுகள் பற்றிய அவர்களது அனுபவம் அவர்களை தேசிய அசாதாரணத் தன்மை எனும் குறுகிய கட்டுக்கோப்பை உடைத்து வெளியேறி நமது காலத்தின் அனைத்துப் புரட்சிகர சக்திகளுடனுமான சோதரக் கூட்டணியை திடப்படுத்திக் கொள்ளுமாறு ஊக்குவிக்கிறது. அனைத்து மக்களினங்களின் சகோதரத்துவம் எனும் சோஷலிஸ்டு லட்சியம் மெய்யான தேசபக்தர்கள் அனைவரையும் வெற்றிகரமாக ஒன்று திரட்டி வருகிறது.

சோஷலிசம் எல்லாப் புரட்சிகர ஜனநாயக சக்திகளையும் அணி திரட்டியுள்ளது ஒன்று சேர்ந்து போராடும் பட்சத்தில் அவை ஏகாதிபத்தியத்தின் ஆக்கிரமிப்புத் திட்டங்களை தடுத் தடக்கி தேச விடுதலை இயக்கத்தை ஒடுக்கும் அவர்களது கொள்கைக்குக் கடிவாளமிட்டு, சமாதானம், பந்தோபஸ்தை உத்தரவாதம் செய்யுமளவு போதிய வல்லமையுடையவை. சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சியின் 24 ஆவது காங்கிரசில் ஏற்கப்பட்டு 25 ஆவது காங்கிரசில் விரிவாக்கம் செய்யப் பட்டதான சமாதானத் திட்டமும் அதன் வெற்றிகரமான அமலாக்கமும் பலமான அணி திரட்டும் திறன் பெற்றவை. உலகில் சமாதானம், தேசிய சுதந்திரம், சமுதாய முன்னேற்றம், ஏகாதிபத்தியத்தின் பயங்கரங்களிலிருந்து விடுபட்டு கட்டியமைக்கப்படும் புதிய சமுதாய அமைப்பு, இவை வெறும் ஆகாசக் கனவுகள் அல்ல. மாறுக,செயலாகக் கூடிய எதார்த்தமான லட்சியமேயாகும். மேலும் இவை உலகெங்குமுள்ள லட்சோபலட்சம் மக்களின் எதார்த்த நடைமுறை அனுபவமாகவும் விளங்குகிறது. மனிதகுலம் நெஞ்சார விழையும் முற்போக்கு லட்சியங்கள் நிறைவேற்றம் பெறுவது மக்கள் நலன்களுக்காகத் தீவிரமாக

உழைப்போரின் ஒன்றிணைந்த போராட்டத்தையே சார்ந்திருக்கிறது.

சோதர கம்யூனிஸ்டு, தொழிலாளர் கட்சிகளின் விடா முயற்சியான பிரயத்தனங்களும் அவற்றின் முரணற்ற சர்வ தேசியக் கொள்கையும் கம்யூனிஸ்டுகள் ஒற்றுமைக்காக நடத்தும் போராட்டத்துக்குப் பெரும் பங்களிக்கின்றன. லெனினியத்தின் சர்வதேசியத் தன்மையினை மறுத்துரைக்கவும் மார்க்சியத்தை லெனினியத்துக்கு எதிராக வைக்கவும் அண்மை ஆண்டுகளில் பூர்ஷுவா சித்தாந்த வாதிகளும் திருத்தல்வாதிகளும் செய்துவரும் முயற்சிகள் தோல்வியடைந்து விட்டன. சுதந்திரம், சோஷலிசத்துக்கு சமராடும் போராளிகளின் புதிய படைப்பிரிவுகள் உலகமெங்கும் லெனினியப் பதாகையின் கீழ் அணி திரள்கின்றன.

பதற்றத்தணிவுக்கான இன்றைய திருப்பம் கம்யூனிஸ்டு, தொழிலாளர் கட்சிகள் மேலதிகமான சித்தாந்த விழிப்புணர்வுடன் செயல்படுவதை அவசியமாக்கியுள்ளது. அவர்களது சித்தாந்தப் பணி மேலும் தீவிரமாகவும் உறுதிப்பாட்டுடனும் செய்யப்பட வேண்டும். ''கருத்துக்கள் மக்கள் மற்றும் தகவலின் சுதந்திரமான பெருக்கம்'' என்ற அறைகூவல்களைத் தன்னலத்துக்குப் பயன்படுத்தி கம்யூனிஸ்டு விரோத மையங்கள் கவிழ்ப்பு நடவடிக்கைகளுக்கு மேலதிகமான வாய்ப்பைப் பெற முண்டுகின்றன. சோஷலிஸ்டு அரசுகளில் பூர்ஷுவா சித்தாந்தத்தைப் பரப்ப முதலாளித்துவ சோஷலிஸ்டு நாடுகளிடை விரிவடைந்து வரும் ஒத்துழைப்பைப் பயன்படுத்துவது குறித்த தமது உத்தேசத்தை அவை மறக்கவில்லை. எனவே, மார்க்சிய லெனினிய வாதிகள் தமது சித்தாந்தப் பணிகளைத் தொடர்ந்து பயனுறுதியுடையதாகச் செய்து வருகிறார்கள். சமாதான சகவாழ்வு என்பது சித்தாந்தப் போரைத் தளர்த்துவதை எவ்வகையிலும் குறிக்காது, சித்தாந்த சமரசம் என்பது சாத்தியமல்ல. கற்பிதமான மெத்தனத்தையும் சித்தாந்த செயலின்மையையும் அகற்றுவதற்கு

விடா முயற்சியான காரியங்கள் தொடர்ந்து செய்யப்பட்டு வருகின்றன. முதலாளித்துவம் முற்ருக நிர்மூலமாக்கப் பட்டு, பூர்ஷுவா கருத்துக்களின் மீதமிச்சங்கள் வர்க்கங் களற்ற சமுதாயத்தை நிர்மாணிப்போர் மனங்களிலிருந்து களைந்தெறியப்படும் வரையில் பூர்ஷுவா சித்தாந்தத்தை எதிர்த்த போராட்டம் நீடிக்கும்.

ஆக்கிரமிப்புக் கொள்கையுடனுன ஏகாதிபத்தியம்நிலவும் காலம் வரை அது உலக சோஷலிஸ்டுக் கூட்டுக் குடும்பத்தை சீர்குலைக்க முனைந்து மக்களினங்களின் தேச விடுதலை இயக் கங்களை ஒடுக்கும் காலம் வரை ஒவ்வொரு புரட்சியாளரும் ஏகாதிபத்தியத்தை எதிர்க்கும் போராளிகளுடன் பாசறை யின் அந்தப் பக்கம் அணிவகுத்து நின்று சர்வதேச ஒருமைப் பாட்டுப் பதாகையினை உயர்த்திப் பிடிக்கவேண்டுவது அவர் களது கடமை என்பதை சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சியும் இதர சோதர மார்க்சிய-லெனினியக் கட்சிகளும் நன்ருக அறிந்துள்ளன. சர்வதேசியவாதத்தின்பாலான விசுவாசம் தான் ஏகாதிபத்திய வாதிகள் தேசிய வாதத்தைத் தூண்டி விடும் முயற்சியில் தோல்வியடைவார்கள் என்பதையும், சோஷலிசமும் கம்யூனிஸ்டு இயக்கமும் அனைத்து மக்களினங் களின் ஒளிமயமான வருங்காலத்துக்கான போராட்டத்தில் புதிய வெற்றிகளை ஈட்டித் தரும் என்பதற்கும் உத்தரவாத மாக விளங்குகிறது.

முடிவுரை

தேசங்கள், தேசிய இனங்கள் பிரச்சினை இன்றைக்கு மட்டுமின்றி மக்கள் இனங்களின் எதிர்காலத்திலும் உறவிருக்கும் ஒன்றாகும். மார்க்சிய-லெனினியம் அந்த எதிர்காலத்தினுள் ஊடுருவி வளர்ச்சிப் போக்குகளையும் தேசிய ,சர்வதேசிய இயக்கப் போக்குகளின் உள்ளடக்கங்களையும் முன்னறிந்து கொள்ள இயலுமாறு உதவுகிறது. விஞ்ஞானக் கம்யூனிசம் தேசிய இனங்கள் அரசு எனும் பிரச்சினைகளை "வரலாற்று அடிப்படையில், பழமையை விளக்குவது என்ற பொருளில் மட்டுமின்றி எதிர்காலம் பற்றிய துணிந்த முன்னறிவிப்பு, துணிவான நடைமுறைச் செயல்பாடு என்ற பொருளிலும் முன்வைக்கிறது"* என்பதாக லெனின் கூறியுள்ளார்.

தேசங்கள், தேசிய உறவுகள் வளர்ச்சியிலான மாறுதல் வாய்ப்புக்கள் மனிதன் முதலாளித்துவத்திலிருந்து சோஷலிசத்துக்கு மாறிச் செல்லும் நமது சகாப்தத்தின் முழு உள்ளடக்கத்திலும் முழுநிறைவாக விரவிக் கிடக்கிறது. லெனின் முன்னறிந்து கூறியபடி, வேகமுடுக்கப்பட்ட சமுதாய முன்னேற்றத்தின் பின்னணியில் இந்த மாறுதல் நிகழ்ந்து வருகிறது. தேசிய சர்வதேசிய இயக்கங்களின் வளர்ச்சியும் அதிக விரைவாக உள்ளது. தேசங்கள், தேசிய இனங்களின் பிரச்சினைக்கு இது ஓரளவு முக்கியத்துவம் கொடுத்த போதிலும், தேசிய அம்சத்துடனான சமூக அம்சத்தின் முக்கியத்துவத்தின் விகிதம் ஒப்பளவிவேயே

* வி இ லெனின், "நூல் திரட்டு", தொகுதி 21, பக். 72.

முந்திய காலகட்டங்களை விட அதிகமாக இருக்கிறது, முழு அளவில் அல்ல. சரிந்து வரும் முதலாளித்துவ உலகம் தனிப்பட்ட நாடுகளில், பிராந்தியங்களிலுங்கூட, தேசிய வாதம் குறுதேசிய வெறியின் சீர்குலைவு விளைவுகளை அதிகப் படுத்துவதில் வெற்றி பெறுவது முற்றிலும் சாத்தியமே. ஆனால் இந்த விளைவுகள் தற்காலிகமானதாகவே இருக்கும்.

உள்ளபடியே தேசிய வாதத்துக்கு எதிர்காலம் கிடையாது. சர்வதேசிய வாதத்தின் பாத்திரம் நிச்சயமாயும் அதிகரிக்கும், காரணம் அதில் சகலதுறை ஒத்துழைப்பையும் சோதர பரஸ்பர உதவியையும் அடிப்படையாக்கிய முன்னேற்றத்தின் ஏராளமான ஆதாரங்கள் இடம் பெற்றுள்ளன. உலகின் சமுதாய மாற்றம் தொடரும். தேசங்கள் தேசிய இனங்களின் பிரச்சினையின் உள்ளடக்கம் இந்த மாற்றத்தின் வேகத்துடன் கூடவே இதன் அடிப்படையிலேயே மாறுதலுறும். தேசியப் பிரச்சினையின் பங்கு சமுதாயப் பிரச்சினைக்கு ஊறுவிளைக்கும் அளவுக்குக் கட்டாயம் அதிகரிக்கும் எனும் பூர்ஷுவாக்களின் வாதத்துக்கு விஞ்ஞானபூர்வமாக எவ்வித ஆதாரமும் கிடையாது. உலக மக்கள் தொகையின் செம்பாதியினர் மத்தியில் தேசவிடுதலை இயக்கம் அதிவேகமாகப் பெருகியிருப்பதன் தொடர்பாக இப்போது தேசிய பிரச்சினைக்கு ஏற்பட்டுள்ள சற்றுப் பெரியளவிலான முக்கியத்துவமுங்கூட ஏற்கெனவே குன்றிவரத் தொடங்கிவிட்டது. தேச விடுதலையைப் பெற்றதன் பின்னர் ஆசிய ஆப்பிரிக்க மக்களினங்கள் தீவிரமான சமுதாயப் பரிகாரங்களின் அவசர அவசியத்தைப் புரிந்து கொள்ளத் தொடங்கியுள்ளார்கள். தேசியப் பிரச்சினையின் முக்கியத்துவத்தினை அவர்கள் மறுக்கவில்லை, ஆனால் எந்த வளர்ச்சிப் பாதையைத் தேர்ந்து கொள்வது, மனிதனை மனிதன், ஒரு மக்களை இன்னொரு மக்கள் சுரண்டுவதையும் ஒடுக்குவதையும் ஒழித்துக்கட்டும் ஒரு சமுதாய அரசு அமைப்பினை எப்படிக் கட்டுவது என்பதில் அவர்கள் ஒருமுகமாகச் சிந்தனை செலுத்தி வருகிறார்கள்.

சோஷலிஸ்டு சுற்றுச் சூழலில் தேசிய சர்வதேசிய நடப்புக்களின் உள்ளடக்கம், இப்போது இன்னமும் உருவாக்க அல்லது மாறிவரும் கட்டத்தில் உள்ளதான புதிய சோஷலிஸ்டு தேசங்கள் தேசிய இனங்களின் இறுதியான திடப்படுவதன் மீதும், அவற்றின் சகல துறை வளர்ச்சி, மலர்ச்சி, உறுதியான சங்கமிப்பு மீதுமே மையப்பட்டிருக்கிறது.

வளர்ச்சியடைந்த முதலாளித்துவ அரசுகளைச் சார்ந்த மக்களினங்களுக்கு முன்னறி எதிர் காலத்தில் தேசிய நடப்புக்களின் உள்ளடக்கத்திலான மையமான பிரச்சினை, பூர்ஷுவா வர்க்கமும் தொழிலாளி வர்க்கமும் மேலும் அதிகமாக தொடர்பற்றுப் போவதும், பாட்டாளி வர்க்க முன்னணிப் படையைச் சுற்றிலும் நேர்மையான எல்லா சக்திகளும் ஒன்று திரண்டு நிற்பதுமேயாகும். தேசவிடுதலை மண்டலத்தில் மையமான குறிக்கோள் தேசிய அரசுத்து வத்தையும் பொருளாதாரத்தையும் வலுப்படுத்தல், தேசிய ஒருமைப்பாட்டு இயக்கத்தைத் துவக்கிவைத்தல், சமுதாய முன்னேற்றத்தின் அவசியமான அம்சம் என்ற முறையில் தேசங்கள், தேசிய இனங்களை உருவாக்குதல் இவையே.

தேசிய நடப்புக்களின் பங்கு எவ்வளவு பெரிதாக இருந்தாலும் பரவாயில்லை, மனித குலத்தின் முன்னேற்றம் மிகப் பெருமளவுக்கு சர்வதேச நடப்புக்களின் அதிமேன்மையான பங்கினால்தான் நிர்ணயம் செய்யப்படுகிறது. உலக முதலாளித்துவ அமைப்பு நிலவும் காலம் வரை, இரு எதிரெதிரான அமைப்பு முறைகளுக்கு இடையிலான போராட்டம் தொடரும் வரை, சர்வதேசிய நடப்புக்கள் முழு அளவுக்கு வளர்ச்சியடைய முடியாது. ஆனால் ஏகாதிபத்தியத்தால் இந்தப் போக்கை மறித்திட இயலாது. இவை, சமுதாய முன்னேற்றத்தின் புறவயத் தேவைகள், விஞ்ஞான தொழில் நுட்பப் புரட்சியில் தேசங்கள், தேசிய இனங்களிடையேயான பிணைப்புக்களின் செழுமைப் பாடு, சமாதானம் சோதர பரஸ்பர உறவுகளுக்கான

மக்களினங்களின் வெல்லற்கரிய சித்தம் ஆகியவற்ருல் தூண்டிவிடப்படுகின்றன.

இரண்டு உலக அமைப்புகளின் மக்களினங்களின் மத்தியிலான வளர்ச்சிக் கட்டங்களிலான வேறுபாடு தேசியப் பிரச்சினையின் உள்ளடக்கத்திலும் பிரதிபலிக்கிறது. வளர்ச்சியடைந்த முதலாளித்துவ அரசுகள் மற்றும் வளர்முக அரசுகளினதன் மக்களினங்களுக்கு உடனடி எதிர்காலத்திலான முக்கியமான நோக்கம் தமது தேசிய வாழ்வை சோஷலிஸ்டு வழிகளில் மாற்றியமைத்துக் கொள்வதேயாகும். மறுபுறம், தேசியப் பிரச்சினைக்குத் தீர்வு கண்டுவிட்ட உலக சோஷலிஸ்டு கூட்டுக் குடும்ப நாடுகள் கம்யூனிஸ்டு நாளையை நோக்கிய வளர்ச்சிப் பிரச்சினைகளை ஏற்கெனவே சமாளிக்கத் தொடங்கி விட்டன.

எல்லா மக்களினங்களும் கம்யூனிசத்தைச் சென்றெய்தி சகலதுறை வளர்ச்சி சங்கமிப்பு எனும் திட்டவட்டமான காலகட்டத்தைக் கடந்து விடுவார்களாயின் எதிர் காலத்தில் தேசங்கள் சேர்ந்து இணைவது தவிர்க்கவொண்ணுததாகி விடும். இந்தக் காலகட்டம் எவ்வளவு நீடித்ததாக இருக்கும், உலகக் கம்யூனிசத்தின் அபிவிருத்தியில் எத்தகைய முதிர்ச்சிக் கட்டம் தாண்டப் பட்டிருக்கும் என்பதை இன்னமும் எவராலும் சொல்ல முடியாது.

எல்லா வளர்ச்சிக் கட்டங்கள் ஊடேயும் கடந்துசெல்லும் ஒவ்வொரு தேசமும், ''எல்லா தேசங்களும் எல்லா வேறுபட்ட பாதைகளும் கம்யூனிசத்தை கட்டாயம் சந்திக்கும் ஒரு முனைக்கு வந்தே தீரும்''* என்று எங்கெல்ஸ் சுட்டியுரைத்துள்ளார். ஆனல் இது வெகு தொலைவான எதிர் காலத்திய விவகாரம் எனக் கண்ட அவர் "சுத்த சிந்தனை எனும் சாதனம் வாயிலாக, கற்பனையின் உதவியுடனும் மெய்நடப்புக்கள் இல்லாத நிலையிலும் நமது தலைகளுக்குள்

---

* கா. மார்க்ஸ், பி. எங்கெல்ஸ், தேர்வு நூல்கள் (மூன்று தொகுதிகளில்), தொகுதி 3, பக் 393.

நிகழும் தேசிய இனங்களை ஒழிப்பதற்கான வகை முறையை"* எதிர்த்து அவர் எச்சரித்தார்.

மார்க்ஸ் எங்கெல்ஸ் ஆகியோர் கருத்துக்களை மேலும் திட்டவட்டமான முறையில் முன் வைத்த பெருமை லெனினுக்கே உரியது அவரது வாழ்க்கைப் பணி உலகப் புரட்சியின் வளர்ச்சி மற்றும் உலக சோஷலிசத்தின் தோற்றத்துடன் ஆரம்பமாகிறது. இது அவர் தேசிய, சர்வ தேசிய இயக்கங்களின் வளர்ச்சியின் பிரதான விதிகளை மேலும் தெளிவாக வரையறுக்கவும், கம்யூனிசத்தை நோக்கி தேசங்களும் தேசிய உறவுகளும் முன்னேகும் மிகவும் முக்கிய மான கட்டங்களைத் தோராயமாக உருவரை செய்யவும் இயலுமாறு உதவியது.

உலகத்தின் எதார்த்தங்கள் குறித்த மார்க்சிய-லெனினிய அணுகு முறை அன்றுடக் கடமைகளை நிர்ணயிப் பதோடு அடங்கி விடுவதில்லை. இதற்கு இந்தக் கடமைகளை நிறைவேற்றுவதற்குரிய கட்டங்கள் வழிமுறைகள் குறித்த தெளிவான அறிவும் தேவை. இதுவே தேசங்கள் தேசிய உறவுகளின் எதிர்காலம் சம்பந்தமான லெனினது அணுகு முறையாக இருந்தது. சமுதாய வளர்ச்சியின் சில போக் கியல்புகள் இன்னமும் ஆரம்பநிலையில் இருந்த போதிலும், அவர் அவற்றைத் தத்துவ உருவில் கருத்துவடிவம் தந்தது மட்டும் அன்றி (தீர்வு காண்பதற்கு உரிய காலவரையறை ஏற்படாத கடமைகளை நிறைவேற்றுவதில் அமிதமான அவசரம் கூடாது என்று எச்சரித்ததோடு) தமது முடிவுகளை நடைமுறை இலக்குகளாகவும் அவர் உருவாக்கி முன்வைத் தார்.

நிலப்பிரபுத்துவம் சிதைவுறும் போதில் தேசங்கள் உருவாக்கம் பெறுவது தொட்டு, முதலாளித்துவத்தின் தோற்றம் தேசங்கள் தவிர்க்க முடியா வகையில் ஒன்றிணைவது வரை நீடித்த மாறுதல் காலகட்டம் உள்ளது. இந்தக் காலகட்டம் முழுவதிலும் தேசங்கள், தேசிய இனங்

* மார்க்ஸ், எங்கெல்ஸ், "நூல்கள்", தொகுதி2, பக். 612.

களின் வளர்ச்சியிலான முக்கியமான குறிக்கோள்கள் சோஷலிஸ்டு நிலைமைகளில் தேசங்கள் மலர்ச்சியுற்று சங்க மிப்பதன் வாயிலாக எட்டப்படும்.

லெனின் கண்டது போன்று, சோஷலிசத்தின் கீழ் தேசியப் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கான பிரதான குறிக்கோள் உண்மையில் அதற்கான முன்நிபந்தனை எல்லா ஒடுக்கப்பட்ட மக்களினங்களின் முழுமையான விடுதலையாகும். இங்கு முழுமையான என்ற தொடரின் பொருளில் தேசிய ஒடுக்குமுறையும் அசமத்துவமும் ஒழிக்கப்படுதல், சுயநிர்ணய உரிமை வழங்கப்படுதல், தேசிய அரசு உருவாக்கம் விரும்பிய சமுதாய அமைப்பு முறையினைத் தேர்ந்து கொள்ளல் இவை அடங்கும். இத்தகையதான சுய நிர்ணய உரிமை சோஷலிசத்தின் கீழில் மட்டுமே கருதிப் பார்க்கமுடியும். அதன் கீழ் தேசிய அரசு உழைக்கும் மக்களின் கண்காணிப்பில் முன்னேற்றத்துக்குரிய கருவியாகிறது. இதனால்தான் லெனின் "இத்தகைய அரசை நிறுவும் உரிமை இன்றி தேசங்கள் முழுமையாகவும் சுயவிருப்பமான நல்லிணக்கத்துடன் கலந்திணைவதற்கான பாதை இருக்க முடியாது"* என்று கூறினார்.

அனைத்து மக்களினங்களின் முழுமையான விடுதலை, இதன் பின்விளைவாக வளர்ச்சிக்கான பூரண சுதந்திரம் இவை அடுத்துவரும் இரட்டைப் பணிகளுக்குப் பாதை சமைக்கிறது: தேசங்களின் மலர்ச்சியும் சங்கமமும் இந்தக் குறிக்கோளை லெனின் தாம் கண்டறிந்து வகுத்து முன்வைத்த தேசங்கள் தேசிய உறவுகள் சம்பந்தமான சோஷலிசத்தின் பிரதான விதியை அடிப்படையாக வைத்து உருவரை செய்தார், இந்த விதி சோஷலிஸ்டு தேசங்கள் தேசிய இனங்கள் தோன்றும் தருணம் முதல் முதிர்ச்சியடைந்த கம்யூனிசத்தின் கட்டத்தில் அவை உதிர்ந்து மறையும் தருணம் வரையிலும் இயங்கி வரும்.

---

* வி. இ. லெனின் "நூல் திரட்டு", தொகுதி 23, பக். 75.

தேசங்களின் மலர்ச்சியும் சங்கமமும் சமுதாய வளர்ச்சியின் புறநிலைவிதிகளின் வெளிப்பாட்டை விடவும் அதிகமான ஒரு சாதனையாகும். இவை திட்டமிட்ட மனித செயற்பாட்டின், அதிலும் முதலாவதாக தொழிலாளி வர்க்கம் மற்றும் அதன் கட்சியின் செயற்பாட்டின் பலனாகும். ருஷ்யாவின் அக்டோபர் புரட்சித் தறுவாயில், பாட்டாளி வர்க்கக் கட்சி எல்லா தேசங்களின் தொழிலாளர் உழைக்கும் மக்களின் சுதந்திரமான சோதர ஒன்றியத்தின் அடிப்படையில் தேசங்களை ஒன்றுசேர்த்து மேலும் சங்கமிக்கச் செய்ய நாடுகிறது என்று லெனின் வலியுறுத்திக் கூறினார். சோஷலிசம் வெற்றியடைந்த பின்னர் இது இருமடங்கு அவசியமாயிற்று, சோஷலிசம் தேசங்கள் சங்கமித்து கலந்திணைவதை மிகப் பெருமளவுக்கு வேகப்படுத்துகிறது என்று லெனின் கூறினார்.

நடைமுறை அனுபவத்தில் இந்த மலர்ச்சியுறலும் சங்கமிப்பும் முதிர்ச்சி அளவில் வேறுபடும் பல கட்டங்களைக் கடந்து செல்வதைக் காணலாம். **தேசங்களின் பரிபூர்ண ஒற்றுமை** எனும் பிரச்சினையை சிறப்பாயும் லெனின் ஆழ்ந்து அலசி ஆராய்ந்தார். கட்சியின் 7 ஆவது காங்கிரசுக்காக நகல் செய்யப்பட்ட கட்சி வேலைத்திட்டத்தில் அவர் உழைக்கும் மக்களின் **போதபூர்வமான** நெருக்கமான ஒற்றுமைக்கு ஓர் இடைமாற்றமாக அவர்கள் **சுயவிருப்பமாகவே** தேசிய பூசல்களில் இருந்து விடுபடும்போதில் தேசங்களின் கூட்டாட்சியை* நிறுவும்படி வற்புறுத்தினார். இந்த நூலில் இன்னொரு இடத்தில் இந்தக் கூட்டாட்சி "சுயவிருப்பமான ஒன்றிணைவுக்கு மாறிச் செல்லும் கட்டம்"** என்று வருணிக்கப்பட்டுள்ளது. வேலைத்திட்டத்திலேயே, இந்தக் கூட்டாட்சி "முழுமையான ஒற்றுமை நோக்கிய இடைப்பட்ட வடிவங்களில் ஒன்று"*** என்று சித்திரிக்கப்

---

* வி. இ. லெனின், "நூல் திரட்டு", தொகுதி 27, பக். 155.

** அதே நூல், பக். 158.

*** சோ.க.க. தீர்மானங்களும் முடிவுகளும், தொகுதி 2, பக். 45 (ருஷ்ய மொழியில்).

பட்டுள்ளது. கூட்டாட்சி குறித்த இதே மதிப்பீடு தேசிய காலனி பிரச்சினை பற்றிய லெனினது ஆராய்ச்சியுரையிலும் காணப்படுகிறது, இதை அவர் கம்யூனிஸ்டு அகிலத்தின் 2 ஆம் காங்கிரசுக்காக உருவரை செய்தார்.*

லெனினைப் பொருத்தவரை முழுமையான ஒற்றுமை என்பது தேசங்களின் சங்கமிப்பில் ஒரு சுதந்திரமான உயர் முக்கியத்துவமுடைய கட்டமாகும், இதனை அவர் தேசிய அரசுகளை கட்டுவது தொடர்பாக மட்டும் குறிப்பிடவில்லை. 1916 ஜூலையிலேயே அவர் "ஆகச் சொற்பமான தேசியப் பூசலும் ஆகக் குறைந்த தேசிய அவநம்பிக்கையும் கூட நடைமுறையில் ஒழித்தக்கற்றப்பட்டு தேசங்கள் வேகமாகச் சேரும்படிஈர்க்கப்பட்டு ஒன்றிணைவதன்"** தவிர்க்கமுடியாத காலகட்டம் பற்றிக் குறிப்பிட்டார். இதனை நாம் தேசங்கள் தமது சங்கமிப்பு நிகழ்ச்சிப் போக்கில் முழுமையான ஒற்றுமை காணும் கட்டத்தின் உள்ளடக்கமாக எடுத்துக் கொள்ளலாம். இந்தக் காலகட்டத்தையே சற்று முன்னால் "உயர் ஒற்றுமை மட்டத்தில் அனைத்து தேசங்களின் இணைப்பு"*** பற்றி அவர் குறிப்பிட்ட போதில் லெனின் மனதில் கொண்டிருந்தார் என்பது கண்கூடு.

லெனினுடைய நூல்களை வைத்து நிர்ணயிக்கும் போதில், பல்தேசிய இன நாடுகளில் தேசங்களின் முழுமையான ஒற்றுமை, உயர் மட்டத்திலான சோஷலிஸ்டு உற்பத்தி மற்றும் சமுதாயம் ஜனநாயகமய மாக்கப்படுவது மூலம் ஏற்படும்.**** உலக சோஷலிசத்தின் கட்டுக் கோப்புக்குள் எல்லா பொருளாதார அரசியல் அகவளத் துறைகளிலும் சர்வதேசிய மயமாக்கல் எனும் சர்வப் பொதுவான நிகழ்ச்சி மேலும் உறுதியாக மேம்படுத்தப்படுவதற்கு முன்னுரிமை வழங்கப்படும்.

---

* வி. இ. லெனின், "நூல் திரட்டு", தொகுதி 31, பக். 146.

** அதே நூல், தொகுதி 22, பக். 325.

*** அதே நூல், தொகுதி 20, பக். 34.

**** அதே நூல், தொகுதி 22, பக். 325.

சர்வப்பொதுவான சர்வதேசிய மயமாக்கலின் பிரதான அம்சங்களின் ஒன்று ஒற்றை சோஷலிஸ்டு உலகப் பொருளாதாரத்தை அமைப்பதாகும். ஒரு முழுமையான உலகளாவிய பொருளாதாரத்தை நோக்கிய போக்கு முதலாளித்துவத்தின் கீழிலுங்கூட தெளிவாக உரைப் படுகிறது என்று லெனின் அடித்துக் கூறினார். ஆனால் உலகளாவிய அளவில் சோஷலிசம் வெற்றி பெற்றால் ஒழிய இது தோற்றமளிக்காது.

சர்வப்பொது சர்வதேசிய மயமாக்கலின் இரண்டாவது அம்சம், தனி ஒரு சர்வதேசியக் கலாசாரம் பரிணமிப்பது ஆகும். ஆயினும் தேசங்களின் முழுமையான ஒற்றுமை சாதனையாகும் வரையில் சர்வதேசியக் கலாசாரம் இன்னமும் உருவாக்க கட்டத்தில்தான் இருக்கும், நிறைவாக்க வடிவத்தை எட்டாது என்பதில் ஐயத்திற்கு இடமில்லை.

தேசங்களின் முழுமையான ஒற்றுமைக் காலகட்டம் பற்றிய லெனினது கருத்து சோ. க. க. யின் புதிய வேலைத் திட்டத்தில் பிரத்தியேகமான முறையில் விரிவாக்கம் செய்யப் பட்டுள்ளது. அது கூறுவதாவது: ''கம்யூனிஸ்டு நிர்மாணம் என்பது சோவியத் ஒன்றியத்தில் தேசிய உறவுகளின் வளர்ச்சியில் ஒரு புதிய கட்டமாக அமைகிறது. இதில் தேசங்கள் முழுமையான ஒற்றுமை சாதனையாகும் வரையில் மேலும் நெருக்கமாகச் சேர்ந்து வரும்.''* இந்த ஒற்றுமைக்கான பாதை, கம்யூனிசத்தின் பொருளாயத தொழில்நுட்ப அடித்தளத்தைச் சேர்ந்து நிர்மாணிப்பதன் ஊடேயும், பொருளாயத கலாசார செல்வங்களை மேலும் அதிக முனைப்பாகப் பரிவர்த்தனை செய்துகொள்வதன் வர்க்கங்களுக்கு இடையிலான எல்லைக் கோடுகளை அகற்றி நீக்குவதன் வழியிலும், கலாசாரம் சீலர் மற்றும் வாழ்க்கை பாணியில் கம்யூனிஸ்டு இயல்புகளை அபிவிருத்தி செய்து கொள்ளும் வகையிலும் கடந்து செல்கிறது

சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சியின் வேலைத்திட்டம், தேசங்களின் முழுமையான ஒற்றுமையை மக்களினங்கள்

* கம்யூனிசத்துக்கான பாதை, பக். 559.

தன்வயமாக்கப்படுதல் அல்லது கலந்து சேர்தல் என்ற வகையில் கருதிப் பார்க்கவில்லை, மாறாக அவற்றின் சக்தி மலர்ச்சியுறுதல்,மேலதிகமான பரஸ்பர நம்பிக்கை நட்புறவு, அவற்றின் கலாசாரம், பரஸ்பரம் செழுமையுறல் எனும் அடிப்படையிலேயே கருதிப் பார்க்கிறது. சோ.க.க. வேலைத் திட்டம் கூறுவதாவது: ''சோவியத் ஒன்றியத்தில் கம்யூனிசம் வெற்றி பெற்றதோடு தேசங்கள் மேலும் நெருக்கமாக ஒன்று சேரும், அவற்றின் பொருளாதார சித்தாந்த ஒற்றுமை அதிகரிக்கும்,அவற்றின் அகவளக் கட்டமைப்பில் பொதுவாகக் காணப்படும் கம்யூனிஸ்டு தனிக்கூறுகள் வளம் பெறும். ஆயினும் தேசியத் தனித்தன்மைகள் குறிப்பாயும் மொழித் தனித்தன்மைகள் அகற்றி நீக்குவது வர்க்க வேறுபாடுகளை ஒழிப்பதை விடவும் பெருமளவு நீடித்த நிகழ்ச்சிப் போக்கு ஆகும்.''*

பல்தேசிய இன சோவியத் ஒன்றியத்தில் சோஷலிஸ்டு கம்யூனிஸ்டு நிர்மாணத்தின் தத்துவமும் நடைமுறையும் தேசங்கள், தேசிய உறவுகள் பற்றிய மார்க்சிய-லெனினிய போதனைக்குப் புதிய அறுதியுரைகளைச் சேர்த்துள்ளன. இவற்றில் மிகவும் முக்கியமான ஒன்று தேசங்கள் இணைவதன் பாதையின் ஊடே உலகின் மக்களினங்கள் முதலில் பல்தேசிய இன நாடுகளின் கட்டமைப்புக்குள் பின்னர் மண்டல சமூகக் கூட்டுகளாக, இறுதியாக உலகம் முழுதுக்குமான ஒற்றை சர்வதேசிய சமுதாயமாக, சர்வதேசிய சமுதாய கூட்டு களின் ஒரு கட்டத்தைத் தவிர்க்க முடியாதபடி கடந்தே தீர வேண்டும்.

லெனினது நூல்களில் இருந்தும் சோ. க. க. வேலைத் திட்டத்தில் இருந்தும் காணக் கூடியதான தேசங்களின் முழுமையான ஒற்றுமைக் காலகட்டம் பற்றிய மேற்குறித்த வருணனையைத் தொடர்ந்து இந்தக் காலகட்டத்தில் அடையப் பெற்ற தேசங்களின் மலர்ச்சியும் சங்கமிப்பும் உடனடி இணைப்புக்கு இன்னும் போதுமானதல்ல. தேசியப் பூசல் கிஞ்சிற்றும் இல்லாமை, தேசிய அவநம்பிக்கை அற்ப

* அதே நூல், பக். 560.

சொற்பமே என்று லெனின் சுட்டியபடி தேசங்களின் முழுமையான ஒற்றுமைக் காலகட்டம் முனைப்பாக எடுத்துக் காட்டப்படுமானால், தேசங்கள் படிப்படியாகச் சங்கமிப்பது எனும் கட்டம், வேகமான சங்கமிப்பு எனும் கட்டத்திற்கு இடம் தரும் கட்டம் தொடரும் என்பது தெளிவு, இதன் அடிப்படையில் ஏற்கெனவே ஒற்றை சர்வதேசிய சமுதாயத் தின் கட்டமைப்பில் தேசங்களின் **இணைவு** எனும் நிகழ்ச்சிப் போக்கு துவங்குகிறது.

மக்களினங்கள் நாடுகள் இடையிலான தேசிய, அரசு வேறுபாடுகள் ''இன்னும் நீண்ட காலத்துக்கு, உலகளாவிய அளவில் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் நிலை நாட்டப் பட்டதற்குப் பின்வரும் கூட, தொடர்ந்து நிலவும்''* என்பதை லெனின் உறுதியாகக் கண்டார்.

சோஷலிஸ்டு உலகம் கம்யூனிஸ்டு, தொழிலாளி வர்க்க இயக்கத்துக்கு பிரம்மாண்டமான வரலாற்றுச் சிறப்புடைய அனுபவத்தை அளித்துள்ளது. கம்யூனிஸ்டுகள் தொழி லாளர் அனைத்து உழைக்கும் மக்கள் "உலக சோஷலிஸ்டு அமைப்பு தேசங்களின் நன்கு இணைந்த குடும்பமாக இருத் தல் வேண்டும், ஒன்றுசேர்ந்து புதிய சமுதாயத்தைக் கட்டியும் காத்தும் நிற்கவேண்டும், அனுபவம் அறிவு கொண்டு ஒன்றை ஒன்று பரஸ்பரம் செழுமைப்படுத்திக் கொள்ள வேண்டும், இந்தக் குடும்பம் வலிமையும் ஒற்று மையும் கொண்டதாய் விளங்கி உலக மக்கள் இதனை சுதந்திர தேசங்களின் உலகக் குடும்பத்தின் முன்மாதிரி யாகக் கருதவேண்டும் எனவும் விரும்புகிறார்கள்.''**

தேசங்கள், தேசிய உறவுகளின் அபிவிருத்தி மீதான லெனினது போதனை, கடந்த காலம் நிகழ்காலத்தின்

---

* வி. இ. லெனின், ''நூல் திரட்டு'', தொகுதி 31, பக். 92.

** லி. இ. பிரெஷ்நேவ், **லெனின் வழியைப் பின்பற்றி'** தொகுதி 3, பக். 338.

விளக்கம் என்ற முறையிலும், எதிர் காலத்தின் முன்னறிவிப்பு என்ற முறையிலும் உச்சபட்ச முக்கியத்துவமுடையது. நவீன உலகின் தேசிய, சர்வதேசிய நடப்புக்களின் நடைமுறைக்கு மிகவும் முக்கியமானது, லெனினது கருத்துக்கள் காலத்தின் சோதனையை வென்றவை, வரப் போகும் ஆண்டுகள் லெனினது போதனைக்குப் புதிய சான்றுகளை வழங்கும் அதன் அபிவிருத்தியையும் காணும்.